3 1761 08945677 6

Presented to the

LIBRARIES *of the*

UNIVERSITY OF TORONTO

by

François Gros

60/=

உ

கணபதி துணை.

இந்நூலச்சிட்டவரின் கருத்து.

சாக்ஷாத் பரப்பிரம சொரூபியாகிய சிவபெருமானது திருவிளையாடல்கள் அனந்தமுளது, அவைகளில் அறுபத்து நான்கு கலைக்கியானத்தி லொன்றான சோதிட சாஸ்திர மென்பது திரிகால வர்த்தமானங்களைத் தெரிவிக்கத்தக்கது இந்தச்சோதிடமென்னுங் கருவியாலறிந்து எதிர்காலத்தில் வரும்பலன்களுக்குத்தக்க முயற்சியுடன் பழவினைகளை யறிந்துபரிகாரம் பண்ணித் துர்க்காலங்களை விலக்கிக்கொள்ள இதுவே கண்ணாடியாயிருப்பதால் இதற்கு விதிவிலக்கென முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதை மகரிஷிகளால் பற்பல சாஸ்திரங்களாக வடமொழியிலியற்றியிருப்பதைக் கடவுளினருளைக்கைக்கொண்டு கற்றுணர்ந்த பெரியோர்கள் அநேக நூற்றாண்டுக்குமுன் சிற்சில நூல்களாகத் தென்மொழியிற் செப்பியிருக்கின்றார்கள். அவைகளை வைத்திருக்கும் புண்ணியவான்கள் தாங்களும் பாராமல் பிறருக்குங் கொடாமல் தெரிந்தாலும் சொல்லாமல் ஏடுகளையெல்லாம் வீடுகளில் ஒரு மூலையிற் கட்டிப் போட்டு நாடும் எலிகளுக்கும், சாடும் கரையான்களுக்கும், சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர பார்த்துப்பயனடைபவர்களுக்குக் கொடுக்கிறதில்லை. இதனாலன்றோ நமது இந்து சாஸ்திரங்களெல்லாம் தென் நாட்டில் மேன்மையடையாமற் றாழ்மையடைகிறது.

இப்போது முன்னூலாய் விளங்குகிற குமாரசாமியம் சாதகசிந்தாமணி-சாதக அலங்காரம்-சாதக சூடாமணி-சாதக கணிதாமிர்தம் சாதகபாரிஜாதம்-துய்யகேரளம்-மணிகண்டகேரளம் சூடாமணி உள்ளமுடையான்-வீமேசுர உள்ளமுடையான்-சோதிட குணகரம்-சோதிடக் களஞ்சியம்-விதான மாலை-சரசோதிமாலை-நவரத்தின மாலை-தாண்டவமாலை-சந்திரகாவியம்-முதலிய பழைய சாஸ்திரங்களில் அவ்வவர்க்குரிய காரகம்-ஸ்தானம்-சம்பந்தம்-ஐவகைப்பெலம்-சட்வர்க்கம்-தசவர்க்கம்-சமயம்-பருவம் காலம் - அஷ்டவர்க்கம்-மகாதிசை-காலச் சக்கர திசை முதலிய விபரங்களை யெல்லாம் தெரிந்து தன் அபிப்பிராயமுங் கலந்தே பலன்களைச்சொல்லும்படி ஏற்பட்டிருக்கிறது. இவ்வித சாஸ்திரங்களிலும் திட்டமான பலன்களைச் சொல்லவில்லை.

தற்சமயம் செய்யுள்ரூபமாகவும், வசனரூபமாகவும் இருக்கிறசாதகத்திறவுகோல்-சாதகசாராம்சம்-சாதகரத்னாகரம்-சாதகரகசியம்-சுந்தரசேகரம்-தியாகராஜசேகரம்-சிற்றம்பலசேகரம் சோதிடப் பிரமாண்டசேகரம்-சோதிடப்பிரபஞ்சசேகரம்-கோட்டூரசிந்தாமணி-பாலசிக்ஷை-பலதிரட்டுகோர்வை-சோதிட மர்மசாஸ்திரம்முதலிய பற்பலநூற்கள் அவ்வவ்வாசாரியர்கருத்துக்கமைந்தவண்ணம் அதிலிருந்ததை இதிலும், இதிலிருந்ததை அதிலும், சூரியனுக்கேழிற் சுக்கிரன் புதனிருந்ததாய் பலன்சொல்லியும் பிரட்டித்திரட்டி யுருட்டி யுருவாக்கி அச்சிட்டு வெளிவளிவந்த சாஸ்திரங்களிலுந் திட்டமான பலன்களை எழுதவில்லை.

சத்தரிஷி வாக்கியம்-கௌசிக சிந்தாமணி-வதிஷ்ட சிந்தாமணி-நந்தி-காக்கேயர்-குரு-சுகர்-புகர்-மதி-நாடியென்னும் நாடிக்கிரந்தங்களில் ஒவ்வொரு சாதகத்திற்கும் இராசி அம்சத்தில் நவக்கிரகங்களைச் சொல்லியும், மகாதிசையிருப்புங் கண்டு அறுபது எழுபது பாட்டுவரை எழுதி மகாரிஷிகள் பெயரைக்கொடுத்திருக்கிற சுருதிகளைப்பார்த்தால் அதினுண்மை அவர்களுக்கே நன்குவிளங்கும், இராசிச்சக்கரத்தில் கிரகங்கள் சுற்றிவருவது. 1378376101960704 இவ்வளவுதொகையாகிறது. அதிலும் நவாம்சம் பார்த்தால் (12405384917646336) இவ்வளவு தொகையாகிறது. அதிலும் சாதகம் ஒன்றுக்குக் குறைந்தபக்ஷம் சராசரி 30 பாட்டு வீதம் பார்த்தாலும் (372161547529390080) இத்தனை பாட்டு ஆகிறது. இவ்வளவு பாட்டுகளை ஒருமனிதனுடையவாழ்நாள் பூராவிலும் பார்க்கமுடியுமா முடியாது. இதையறியாது சில ஜனங்கள் நம்பிக்கைபாராட்டி மயங்குகிறார்கள்.

இந்தச்சங்கராச்சாரியார் சோதிடத்தில் காரகம்-ஸ்தானம் திருட்டி-சம்பந்தம்-இருப்பிடம் முதலியவைகளை அந்தந்தக்காரகங்களுக்கு ஏற்படுத்திச்சொல்வதினால்-லக்கனமும் இன்ன லக்கனமெனத்தெரியவந்து சகோதரம்-களத்திரம்-புத்திரர்களின்சங்கையும், அவை கிடைக்குங் காலமும், மாதுர் பிதிர் கருமத்தையும், கிருஷி-வர்த்தகம்-உத்தியோகம் முதலிய தொழில்களையும், கல்விமுதலியயோகங்களையும், இன்னின்ன ரோகம் அணுகுமென்பதையும், ஆயுள் வருடம் இத்தனை யென்பதையும், அவை அவைகளுக்குரிய பழவினைபரிகாரங்களையும் ஒருவாறுதிட்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

முன்னோர்களா லியற்றிய சோதிட சாஸ்திரங்களை கல்கத்தாவில் அநேக பிரபுக்கள்சேர்ந்து ஒருசங்கம் ஏற்படுத்தி பற்பலசாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்து வடமொழியிலும் ஆங்கிலேயபாஷையிலும், மாறுபடுத்தாமல் அச்சிட்டு மென்மேலும் விருத்திசெய்து வருகிறார்கள். அதுபோல சில வருடத்துக்கு முன் இராமநாதபுரம் - சமஸ்தானம் மகாராஜ ராஜபூஜித மகாராஜா பாஸ்கர சேதுபதி அவர்கள் - வைத்தியத்தில் - ஆத்மரக்ஷாமிர்தமென்னும் வைத்திய சாரசங்கிரகம் அச்சிட்டிருக்கிறார்கள். பாலவனத்தம் ஜமீந்தா ரவர்களாகிய ம-ா-ா-ஸ்ரீ, மகா கனம் ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் மதுரைமாநகரில் செந்தமிழ்ச்சங்கமென ஒன்றேற்படுத்தியிருக்கின்றார்கள். இவர்களும் சோதிடசாஸ்திரங்களை விருத்திசெய்யக் கருதவேயில்லை.

முன்னூலாகும் சோதிட சாஸ்திரங்களை மாறுபடுத்தாமல் விருத்தி செய்யவேணுமென்ற எண்ணத்துடன், நட்பின்மிகுவாஞ்சையுள்ள நமது நேயர் - மதுரை, த. குப்புசாமி நாயுடுவைக் கொண்டு தாலபத்திரத்தி லிருந்ததை எடுத் தெழுதியனுப்ப பல சோதிடர்க ளுடைய அபிப்பிராயத்தின் படி 1895-ம்-வரு-த்தில் சங்கராச்சாரியர் சோதிடம் ஆயுட் பாவகமும்-1908-ம்-வரு-த்தில் மேற்படி புத்திரபாவகமும் அச்சிடலாயினேன். மற்ற பாவகங்கள் இதுவரை அச்சிடாதிருந்ததை 1910-ம்-வரு-த்தில், எட்டயபுரம் சமஸ்தானம் மகாராஜ ராஜ ராஜ பூஜிதமகா கனம் மகாராஜா அவர்களும், ம-ா-ா-ஸ்ரீ பென்ஷன்டிப்டி கலெக்டரவர்களும் மேற்படி சமஸ்தானம் திவானவர்களுமான மகா கனம் ஆனரபில் டி-சண்முகம்பிள்ளை அவர்களும், வேப்பிலை பட்டிசத்திரத்துக்கு முகாம் வந்திருக்கும்போது என்னிட மிருந்த இச்சாஸ்திரத்தையெடுத்து வரும்படி உத்தரவுசெய்து கண்ணுற்று ஒருமுறை யெல்லாம் படித்துப்பார்த்து சந்தோஷத்துடன் சோதிடத்தில் மிக அருமையான சாஸ்திரமிதுவென பரோபகாரமாய்சகலரும் பார்த்துப் பயனடையும் வண்ணம் இதை அச்சிட்டு வெளிப்படுத்தும்படியாயும், அதற்குரிய செலவுக்குச் சமஸ்தானத்தி லிருந்து பொருளுதவி செய்வதாயும் உத்தரவு செய்தது மன்றி திருவெண்காட்டில் சிவ பெருமான் தெரிசனைக்கு வந்திருக்கும்போதும் உத்தரவுசெய்தார்கள். ஈதறிந்து மகாராஜ ராஜ ராஜ பூஜித மகா ராஜா அவர்களின் சகோ

தரர் மகாராஜ ராஜ பூஜித மகாசனம் தங்கமகாராஜா அவர்களும் இச்சாஸ்திரம் அச்சியற்றுவது அவசிய மெனவும், அதற்குரிய செலவுக்குப் பொருளுதவுவோமெனவும் அச்சிட்டு வெளிப்படுத்தும்படிக்கு உத்தரவுசெய்தார்கள்.

இப்பெருங் கருணையைப்பெற்று இப்போது யோகபாவகம்—மாதுர்பாவகம்-பிதிர்பாவகம் - சகோதரபாவகம் - களத்திரபாவகம்-இவைகளை முன்பழைய ஏட்டுப்பிரதியிலிருந்தபடியே அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கிறேன். ஆயினும் கற்றுத்தெளிந்த கவிவல்லோர்க்கு இந்நூலில் ஆங்காங்கு சிலதவறுகள் தோன்றினும் அதை எம்மீது தயவுவைத்துத் திருத்தி வாசித்துக்கொள்ளும்படி மிகவும் வேண்டிக் கொள்கிறேன்.

நிலைகொண்டமகமேருவரையடுத்தகாகமும்பொன்
நிறம்பெற்றாற்போல்
அலைகொண்டபாற்கடலைச்சார்ந்தநதியெல்லாம்பா
லாகினாற்போல்
கலைகொண்டபெரியகுழாத்தடைதலுங்கட்கடைபடுமக்
காட்சியாலென்
றலைகொண்டபுன்சொல்லும்நன்சொல்லாய்ப்பிறங்கிக்கத்
தக்கதாமால்.

ஏட்டுப்பிரதியானாலும், ஏட்டிலிருந்து காயிதத்தி லெடுத்தெழுதிய பிரதியானாலும் முந்நூலாயுள்ள சோதிட சாஸ்திரங்கள் வைத்திருக்கும்புண்ணியவான்கள் பரோபகாரமாக எமக்கனுப்பினால் அவர்கள்பேருடன் அச்சிட்டுப்பத்துப் புஸ்தகமும் அவர்களுக்கு அனுப்புகிறேன் அதனால் உலகமுள்ளளவும் அவர்களுக்குப்புகழும் கீர்த்தியும் புண்ணியமும் உண்டாகத் தக்கதே.

இப்புஸ்தகங்களை கனதனவான்கள் அன்புடன் வாங்கி அருமையாய்வாசித்து வந்தால் உலகில் சோதிட சாஸ்திரங்கள் விருத்தியடைவதோடு எமக்கும் அச்சிட்டுக்கொண்டுவர ஊக்கமுமுண்டாகும்.

இங்ஙனம்
எம். சுப்பிரமணிய பிள்ளை.
சோதிடம்-நடுவப்பட்டி
சாத்தூர்போஸ்டு.

உ

பரமபதிதுணை.

உலோககுருவாகிய

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சங்கராச்சாரியம் பன்னீராயிரத்தில்

யோகபாவகம்.

பாயிரம்.

கடவுள் வணக்கம்

விநாயகர்.

நேசத்தடியர் நினைந்துருகி நின்றிட்ட
வாசத்தளைகஉக்க மாட்டாது—பாசத்
திருகோட்டு முக்கட் சிவபெருமா னீந்த
வொருகோட்டு நால்வா யுவா.

சுப்பிரமணியர்.

துங்கமத கும்பவுயர் தும்பிமுகு னெம்பிசீர்
தங்குஞெகி ழஞ்சிறுச தங்கைகள்பு லம்பவே
மங்கையுமை கண்குளிர வந்துலவு கின்றதா
ளங்கைமலர் கொண்டுமிகு மன்புடனி றைஞ்சுவாம்.

கடவுள்.

ஒன்றிரண்டு மூன்றுதலை யுருவுடையா யருவுடையா யுலக
மீது, நின்றிரங்கு நான்குதலை யஞ்சுதலை யறுதலையு நேசம்பூ
ண்டு, நன்றிதனி லெழுதலையு ஞானமெட்டுத் தலையுமருணல்லோ
ர்போற்றும், பொன்றிகழு நின்னடிக்கொன் பதுபத்துத் தலைவ
ணக்கம் புரிந்திட்டேனே.

கங்காபரமேஸ்வரி.

உலகெலாம் நிறைந்துநின்ற வோங்கொளிர் கங்கைவையத்
தலகிலாவுயிர்களெய்து மருந்துயரகற்ற வேண்டி
நலவருளுருவங் கொண்டு நடுவமாநகர மென்னும்
தலமிசைத் தவஞ்செய்வான்போற் சமைந்தவள் சரணம்போற்றி.

அத்தமே நடுவிற்பட்டி யரும்பதியதனில் நாளும்
ஒத்தநாலெட்டாக்கூறு முயரறம் விளங்கச்செய்து
சித்தமாசகன்ற நல்லோர் தெளிவுளக் கோவில்வாழும்
சத்திரமா கங்கைபாதம் தலைமிசைச் சூடிவாழ்வோம்.

கண்ணன்.

ஏழிரண்டென்னும் புவனங்காத்தளிப்போ னெழில்வசு தேவன்றன் மைந்தன், வீழியங்கனிவாய்க் கொடியழன் மகட்குமெனிறுகி லளித்தபைங்கொண்ட, ருழிருங்கூந்தற் பூதனையுயிரைச் சவட்டினோன் றவாநலமுண்டோன், பாழியம்புயத்துச்சேதிபற்றுணித்த பண்ணவன்மலரடி பணிவாம்.

சரஸ்வதி.

செங்கண்மா லருளினாலே செகந்தரில் மனுவுக்கெல்லாம்
இங்கிதமாகநல்ல சோதிடமியம்ப வேண்டித்
திங்களி னிறத்தையொத்த தேவியாய்வந்துதித்த
பங்கயமுகத்தாள்பால சரஸ்வதி பாதங்காப்பாம்.

ஆக்கியோனும் அச்சிடுவித்தோனும்.

நன்புவியிடத்துமிக்க நடுவமாநகரில்வாழும்
துன்பில்சானவியைப்போற்றுஞ் சுப்பிரமணியபிள்ளை
இன்புறுசங்கராச்சாரி யியம்புசோதிடநூற்செய்யு
ளன்புறுதமிழைக்கொண்டே அச்சினிற்பதித்தானம்மா.

நூல்.

மாதிடப்பாகம்வைத்த வரனுமைக்கோர் காலத்திற்
காதிடத்துபதேசித்த கணிதநூற் சாரந்தன்னைச்
சோதிடச்சங்கராசாரி சொற்பன்னீ ராயிரத்தில்
ஓதிடயோகபாகத் துண்மையை யுரைசெய்வோமே.

வேறு.

வருமெனவேமதிதனக்கு நாலிற்பொன்னன்
வந்திடவேயிருபேரும் சுபர்வீடாகத்
தருமெனவேமறைதனக்கு முன்னும்பின்னுஞ்
சார்சுபர்கள்வீடாகிச் சுபர்வந்துற்றால்
பெருமுதலேதோன்றிடுஞ்சேய் வருநாள்தொட்டுப்
பெற்றிடுவன்வெகுநிதியங் கனவான்தந்தை
திருவுடனேசாதகற்குச் செல்வம்பூமி
சேர்க்கைபலமுயற்சிகளுஞ் சீர்த்திமேலாம். (க)

மேல்மொழியால்மதிதனக்கு நாலிற்பொன்னன்
விளங்கிடவேயிருபேரும் பவர்வீடாகத்
தூலமதாய்மறைதனக்கு முன்பின்தீக்கோள்
தோன்றிடவேஅதற்கதிபன் மறைவதானால்
பாலகன்தோன்றிடுமுதலே செல்வப்பூமி
பாழ்படுமேபிதாதனக்குப் பருவமாதே
சாலவெனத்தோன்றிடுவன் செல்வப்பூமி
சாருமெனச்சமபலனுய்த் தரிக்குஞ்செப்பே. (உ)

செப்பிடவேமதிதனக்கு ஏழிற்பொன்னன்
சேர்ந்திடவேயிருபேரும் சுபர்வீடாகக்
கப்பிடவேமறையினுக்கு முன்னும்பின்னும்
கலந்திடவேசுபர்தனிக்கச் சுபர்வீடானால்
ஒப்பிடவேதோன்றிடுஞ்சேய் வருநாள்தொட்டு
உரைத்தனர்கள்பிதாவினுக்குச் சிவிகையோகம்
இப்படியிற்றோன்றிடுஞ்சேய்க் குயர்ச்சிபூமி
இயங்கியதால்யாவருக்கு மேலாங்கூரே. (௩)

கூருமெனமதிதனக்கு ஏழிற்பொன்னன்
குறுகிடவேயிருபேரும் பவர்வீடாகச்
சாருமெனமதிதனக்கு முன்பின்தீக்கோள்
தனித்திடவேமறைதனக்கு முன்பின்தீக்கோள்
சீருடனேவருமாகில் வருஞ்சேய்தந்தை
சேர்ந்திடுவன்பரதேசம் சேய்பொன்னுண்டில்
கூறினர்கள்தப்பாது கெணிதமாகக்
குறித்தனர்கள்சேய்தனக்குக் குறுகுஞ்செல்வம். (ச)

குறுகுமெனமதிதனக்குக் கருமந்தன்னிற்
குருவரினுமதிகுருவுஞ் சுபர்வீடாக
வருமறையோன்முன்பின்னும் சுபர்வீடாக
வருஞ்சுபர்களதிற்சேரப் பவர்நோக்கில்லா
கருவுடனுள்வரும்போதே கனவான்தந்தை
காட்டுமெனவெகுநிதியாய்க் கனகஞ்சேரும்
வருநிதியாய்ச்செய்தனக்கு அறைந்தார்பூமி
வாகனயோகனுக வருமென்றோதே. (ஒ)

ஓதிடுவன்மதிதனக்குக் கருமந்தன்னில்
உயர்வுடனேகுருவாகி யுயிர்க்கோள்தானும்
தீதெனவேபவர்வீடாய் வருமேயாகச்
செப்பிடவேமறைதனக்கு முன்பின்தீக்கோள்
நீதியுடன்வருமாகில் வருஞ்சேய்தோன்றும்
நேர்ந்திடுமன்னோன்றந்தை ஊர்வீட்டேகச்
சேதமெனப்பரதேசம் செல்வானந்தச்
சேய்மரணமன்றுடனே செப்பலாகும். (சு)

சுக்கிரனும்வருமுயிருக் குபயக்கோளாய்த்
தோன்றுமொன்பான்கோளாகி யுபயமேறத்
தக்கதெனப்புகர்தனையே மறைநோக்குற்றுற்
சாருமிந்தத்திசைபலன்போல் வேறொன்றில்லை
தொக்குமெனப்புகர்திசைநாள் முதலேதொட்டுச்
சூழுமிந்தத்திசைமுடிவு முயற்சிமேலாய்
திக்குநரவாகனமும் தனமுமாகத்
திகழும்வெகுபுகழோடு சீர்த்திசேரும். (எ)

சேருமெனமுன்னுரைத்த கோளன்றன்னைச்
செப்புமறைநோக்காதாற் பவர்நோக்குற்றால்
சாருபுகர்திசைமுதலே வருமுற்பாதி
தானுமிந்தப்பாதியினிற் பாதிமட்டும்
சீருடனேவருமரசர் தயவுசேரும்
சிறந்ததனமற்பமென வருகுமென்றே
கூறினர்கள் பாதியின்மேல் முயற்சிகாட்டுங்
குணமேலாம்சமபலனைக் குறிக்குமென்றே. (அ)

ஈன்றெனவேமுன்னுரைத்த திசைமுற்பாதி
பிசையுமிந்தப்பலனெனவே கெணிதஞ்செப்பு,
நன்றெனவேபாதியின்மேல் முய்ற்சிசேரும்
நவின்றனர்கள்வளருதனம் பூமிகாலி
துன்றுமனந்துயரமிலான் தனம்வந்தெய்துந்
தோன்றுதிசைமுடிவுவரை தவறுதாகும்
வென்றெனவேபுகர்திசைநாள் முடிவிற்கஷ்டம்
விளங்கிடுமேவருந்துயரம் பீடையேற்பன். (கூ)

மறைமனையிற்கேதுமதி கரியனோடு
வந்திடவேவுயிர்தனக்கு மறையாதாக
விரைவுடனேயிவர்கள்தனை மறைமால்மாந்சி
வெய்யவன்பாம்புடன்கூடி நோக்குமானால்
குறைவுவருங்கொடிதிசையிற் பதிவிட்டேகுங்
குறுத்தனர்களற்பமென முயற்சிகாட்டும்
அறையுமெனவருந்துயரம் மனதுவேறாய்
அறிந்தனர்கள் திசைமுடிவு தவறுதென்னே. (கo)

கேதுயிர்க்குநவமதிலே தனிக்கஅந்தக்
கேந்திரத்தோன்மறைமனையிற் றனிக்குமாகில்
தீதுடனேகேதுதனைப் பவர்நோக்குற்றால்
திசைவந்தநாள்முதலே உத்தியோகம்
ஓதுடனேவருஞ்சமமாய்ப் பலன்தானெய்தும்
உரைத்தனர்கள்திசைமுடிவு முயற்சிசேரும்
வேதுடனேமனத்துயரம் சலனமுள்ளான்
மேவுதிசைமுடிவுவரை தவறுதென்னே. (கக)

வருமுயிருக்குபயமதிற் கொடியோனேக
வருமுபயோன்சுபருடனே கரிவீடாகத்
தருவுபயக்கோளனையும் உபையம்வந்த
தனிற்கொடியோன்றனையுமறை நோக்குமானால்
அருமறைநூற்படிவிதியாற் கொடிநாள்தொட்டு
அறைந்தனர்கள்வருமுயற்சி மேலாமின்பம்
கருதுமெனவருஞ்சிவிகை அரசரின்பங்
கருதுதிசைமுடிவுவரை தவறுதாகும். (கஉ)

ஆகுமெனமுன்னுரைத்த கொடியோன்றன்னை
ஆசான்நோக்காதாகிப் பவர்நோக்குற்றால்
வாகுகொடிதிசையதனி லூக்கமில்லான்
வழங்குமதிற்குதிரையுடன் புதல்வர்சேரும்
பாகுகொடியோன்திசையில் முயற்சிமேலாம்
பாக்கியமும்வருஞ்சிவிகை தவறாதாகும்
சோகுகொடிதிசைபலனைக் கெணிதமாய்ந்தோர்
சொல்லுமொருவாக்கியத்தி னுண்மைபாரே. (கங)

மாலுயிர்க்கொன்பான்கோளா யாறின்கோளும்
வருமுயிர்க்காறதில்மதிசே யலரியோடு
சீலமுடன்தரித்திடவே வளருஞ்சேய்க்குச்
செப்பியமால்திசைமுதலே முயற்சிசேரும்
கோலவிழிமாதெனவே கிருபையுண்டாம்
குறித்தனர்கள்வருந்தனங்க ளதிகவின்பம்
சாலிவெனவருமரசர் தயவுண்டாகும்
தப்பியமால்திசைதனதிற் பாதிமேலாய். (கச)

பாதியின்மேல்வருந்தனங்க ளழிவுகாட்டும்
பகருமதில்மனக்கவலை வளருமென்றே
ஓதுமெனக்கேதுவப காரந்தன்னில்
உரைத்தனர்கள்வருமுயற்சி தனங்களின்பம்
நீதியுடனரசர்புகழ் கீர்த்தியேற்பன்
நேருமதிற்றனச்செலவு சலனங்காட்டும்
சீதமுடன்வரும்புகர்தன் நாளிலின்பஞ்
சேருதனம்பூமிகன்று காலிகூரே. (கரு)

கூருமெனச்சூரியனுள் வரினுந்திங்கள்
குறுகுமபகாரம்வரை முயற்சியில்லான்
சாருமெனவருந்தனங்கள் பூமிசேதம்
சஞ்சலநோயரசர்வெகு கோபமுண்டாம்
பாருமரவோன்முதலே அருணன்மட்டும்
பகர்தனங்கள்பூமிகன்று காலியின்பம்
சீருடனேஅரசர்புகழ் முயற்சிமேலாஞ்
செப்புசப்ரதூங்குமஞ்சம் வளருமென்றே. (கரு)

என்றெனவேலன்பான்கோ ளாறின்கோளை
யிறையவன்நோக்கிடுமாகி விசையுமுன்சொல்
கன்றுபாற்பசுபூமி பொருளுங்கீர்த்தி
காசினியாளரசர்புகழ் வரினுமாறில்
துன்றியதோரொன்பான்கோ ளாறின்கோளைத்
தோன்றுமறைநோக்காரேல் தொலையுமுன்சொல்
நன்றெனவேமால்திசைவந் திடினுமாகில்
ராஜர்புகழ்வருந்தனங்கள் முயற்சிசெய்பே. (கஎ)

செப்புமெனமால்திசைதன் தனதிலின்பம்
சேருதனம்கன்றுபசு விருத்திலாபம்
ஒப்புமெனவருந்திசையில் தனதின்போக்கில்
உரைத்தனர்கள் தனச்செலவு அரசர்கோபம்
தப்புமெனவருமுயற்சி தொலையுங்கஷ்டம்
சாரும்வெகுமனக்கவலை வரினுமன்றே
துப்பிதழாய்மால்திசைதான் வருமுற்பாதி
தோன்றும்வரைதொழில்முடக்கம் சொல்லுமாதே. ()

மாதேகேள்பூமிபதி காலிசெல்வம்
மாயுமெனமனக்கவலை யதிகமாகும்
சீதமுடன்மால்திசையிற் பாதிவந்தால்
சேய்தனக்குக்காலிகன்று தனங்களின்பம்
நீதியுடனரசர்புகழ் தொழிலுமேலாம்
நேர்ந்திடுமேபூமிபதி யதிகசெல்வம்
ஓதுமெனவருந்தனங்கள் குறையிலாதான்
உரைத்தனர்கள்பணமுடிப்பு முயற்சியுண்டாம். (கசு)

மதிமகனும்வருமுயிரோன் கருமனுகி
வருமுயிர்க்குக்கேந்திரமாய்த் தனிக்குமானால்
சதிருடனேமதிமகன்நாள் முதலேயின்பம்
சாருதனம்வருந்தொழிலுஞ் சமமேன்றோது
விதியுடனேவருந்திசையில் அரவின்போக்கில்
விளங்குமெனவருமுயற்சி தனங்கள்சேரும்
அதிபதியாய்வருமெனவே கெணிதமாக
அறைந்தனர்கள்கரியபகா ரத்திற்றுஞ்சும். (உ0)

சுங்கனிரண்டாங்கோளாய் மதியினோடு
தோன்றுயிருக்காறதனிற் சுபர்கள்நோக்கா
தங்குமிக்கோள் தனக்கெனவே லாபந்தன்னிற்
சாருயிர்க்கோள்மால்கருமன் வளருமானால்
துங்கமுடன்மால்தீசைதன் பாதிமேலாய்த்
தோன்றுமெனவேதவழி சமமாய்க்காட்டும்
பொங்குகொடியோன்றிசையிற் பாதிமேலாய்
போற்றுமெனவேதாந்தம் புனிதமாதே. (உக)

மாதேகேள்வரும்புகரோன் நாள்வந்துற்றால்
வருமயக்கம்ஆசைவரும் கோபமாயும்
நீதியுடன்ஞானவழி தெரியுமேலோர்
நிலைபெறவேஅன்னம்வெருப் பாகுமென்றே
சீதமுடன்வேதமொழி மனதிற்கொள்வன்
செப்பியதோரன்னைவெருப் பாகுமென்றே
வாதம்வரும்பொருள்மயக்க மில்லானுவன்
வருமிதுவேதப்பாது கெணிதவாய்மை. (உஉ)

வருமதியன்கரியவனோ டேகவ்வில்லம்
வரும்புகராப்வருமறையோ டேகவக்கோள்
இருமதிவீடாகமதி புகர்வீடாக
இருந்தவர்க்குக்கருமமுடன் கவலைகாட்டும்
பெருமுருகாயாசசன்னி யாசியாவன்
பிறங்குவேதாந்தமது பெலத்துக்காட்டும்
இருகும்விதிகடக்கமதிக் கில்லைமன்னோய்
இவன்சிலநாள்காயாசத் திரப்பனென்னே. (உங)

வேறு.

பூவையேகருமநாதன் பொன்னவனுகியாறில்
மேவிடவாரோன்மூன்றில் விளங்கிடமூன்றோனுச்சம்
பாவிகளுடன்சேரானுற் பகர்வயதிருபத்தேழில்
ஏகுவன்கெங்கால்தான மிவன்றனக்குதவுமென்றே. (உச)

என்றனர்கெணிதமாக இயம்பினர்தோன்றுஞ்சேய்க்கு
நன்றெனவெகுதனங்கள் நாடுவன் அறங்கள்சேரும்

ஒன்றியகெங்காஸ்தானம் ஓங்கிடும்பெலமதாக
வென்றிதன்பதிவேந்தெய்த விதித்தனரிருபத்தெட்டில். (உரு)

வேறு.

ஆரனுமொன்பான்கோளா யுபயக்கோளாய்
அமரவுயிர்க்காரூன்கோ ரூட்னென்ருகிப்
பாருயிர்க்குமறையாம லிவர்கள்சேரப்
பகரிவருக்குபயமதிற் புகர்கேதாகச்
சாருடலொன்பான்கோளட் டமத்தில்மாந்தி
சந்திரன்பாம்புடன்கூடித் தரிக்குமானல்
கூருமெனத்தோன்றியசேய் பலனைமேலோர்
குறித்தனர்கள்வெகுதிரமாய்த் தரணிமாதே. (உசு)

மாதேகேளொன்பான்கோள் தனக்கிரண்டோன்
வருந்திசையிலரவுடநாள் பாதிதன்னில்
ஓதிடுவன்வருமுயற்சி தனங்கள்பூமி
உதவிடுமேவருஞ்சமமா யோங்குமின்பம்
நீதியுடன்பொருள்வரவு பெலமென்ருேத
நேருயிருக்காரூன்கோள் திசையிற்பாதி
வேதமுடன்பாதியெனப் பாதிதன்னில்
விளங்கிடுமேஅதில்முயற்சி தொலையுமென்றே. (உஎ)

என்றெனவேஒன்பான்கோள் தனக்கோரெட்டி
லிருந்திடுஞ்சந்திரன்றிசையிற் பலனைச்செப்பு
வென்றுமக்கோள்திசைவரும்முன் பாதிதன்னில்
விளங்கிடுமேபலன்சமமே அலைச்சல்துக்கம்
துன்றுமனம்வெகுதுயரம் தேககஷ்டம்
தோன்றுமெனப்பின்திசைபின் னதனிற்கஷ்டம்
நன்றெனவேதிசைமதிநாள் முயற்சியில்லான்
நான்கொன்பான்திசைப்பலனைத் திரட்டிச்செப்பே. ()

செப்பிடுவாயொன்பான்கோள் திசையிற்பாம்பு
சேருமபகாரமுடி வதனிலின்பம்
ஒப்பிடவேதொழிலூக்கந் தனங்கள்பூமி
யுடன்கன்றுகாலிசம முதவுமென்ருர்

தப்பில்லாதொன்பான்கோள் திசையின்மட்டும்
சாருமெனவருமுயற்சி பொருள்வந்தெய்தும்
துப்பிதழாய்அரவுதிசை தனதிற்றுஞ்சும்
தோன்றரவுதிசைமறையி லிலாபஞ்சேரும். (உசு)

சுங்கன்மனை தனிலரவு தனிக்கச்சுங்கன்
தோன்றுமரவுடன்கூடி மறையாதாகச்
சங்கையுடனிவர்களுடன் மறையோனேகித்
தரித்திடவேஅலதுவிழிப் பார்வையானல்
துங்கமுடன்வருமரவு முதலேமேலாய்த்
தோன்றுமெனப்பொருள்வரவு சிவிகையின்பம்
தங்குமதிக்ஷேத்திரங்கள் கன்றுகாலி
சாருஞ்சப்பிரமஞ்சம் வளருமென்றே. (ரo)

என்றெனவேவெகுபுகழோ னரசரின்பம்
இணங்கியதோர்வருமுயற்சி யரவுமட்டும்
நன்றெனவேவளருமெனக் கெணிதமென்று
நவின்றனர்களிதுதவறு தெனவென்றேது
துன்றுரகமுடன்புகரோன் தரிக்கப்பொன்னன்
தோய்ந்திடவேஅலதுவிழிப் பார்வையில்லா
வென்றதென அரவுவரு முதலேபாதி
விளங்கியசேய்தந்தையர்தன் முயற்சிகூரே. (ரக)

கூருமெனப்பாதிவரை முயற்சியின்பம்
குருபியதோர்பூமிதனம் வரினுமாகும்
சீருடனேபாதியின்மே லூக்கஞ்சேய்க்குச்
சேர்ந்திடுமேசமமதுவாய்த் தனங்கள்சேரும்
சாருமெனப்பாதியின்மேற் பாதிமேலாய்த்
தனித்தொழிலால் வருந்தனங்கள்பூமிகாலி
சேருமெனவெகுபிலமாய்க் கீர்த்தியேற்பன்
செப்பியதோர்வருமுயற்சி மேலாமென்றே. (ரஉ)

சுதியாகவருமகரம் ஆரலாகிச்
சாருபுகர்மாந்தியுடன் கூடியொன்றாய்
விதியாகவுயிர்தனக்கு லாபந்தன்னில்
விளங்கிடவேமறையவன்நோக் கிடினுமானல்

அதிபதியாய்வருங்கருமன் முதலேமேலாய்
அறைந்தனர்கள்வருமுயற்சி தனங்கள்பூமி
துதியாகவெகுபுகழோன் கீர்த்தியேற்பன்
தோன்றுதிசைமுடிவுவரை தவறுதென்றே. (ஙங)

வேறு.

வாக்கினிற்செவ்வா யிருந்திடவந்த வாக்கினோனுதையகேந்திரமாய்த், தீர்க்கமாய்ச்சுபரோ டாகிடில்வேண திரவியமவன்றனக்குதவும், நோக்குறிலதுவு முடனழிவாகும் நுவலுமோர்முப்பதாண்ட தன்மேல், தாக்கியோரறுப தளவுமிப்பலனுய்ச் சாதகன்தனக்கதி மேலாம் (ஙச)

மேலுரையின்பப் பொருள்கள் வந்துதவும் விதிநிரியாணமுள்ளளவும், சாலவும்பொருள்கை தட்டிடாதெனவும் சாற்றிடுமிரண்டதிற்பாவர், மாலவிருக்கி லிவர்களிலொருவர் வரிலவர் வீடதேயானற், சாலமாமுப்பத் தொன்றின்மேலதிக தனமுடையோனெனச் சாற்றே. (ஙரு)

பத்தினிற்குருவு மதியனேடிருக்கிற் பரிந்தவர்கேந்திர மதனில், நித்தமாய்ச்சுபரும் பாவருங்கூடில் நெடியமாலதற்குக்கேந்திரத்திற், சத்தியுமிருக்கிற் பொன்னவர்வீட்டிற் றனித்திடச் சாதகன் யோகம், சித்தமாயுரைநீர்ச் சாரலுமுயற்சி சேர்ந்திடுமென்றுரை திறமாய். (ஙசு)

திறமுடன்தனவா னுகியேவாழ்வன் சேர்சென்மநாள்முதலெனவும், நிறமுடன்வயதோ ரிருபத்திரண்டில் நிதிதனவானுடன்பூமி, துறவுடையோனுய்க் கனகமுமுதவும் தோன்றியே யிய்பவன் யார்க்கும், பிறைநுதல்மாதே பாக்கியவானும் பொன்நிரியாணமுள் வரையே. (ஙஎ)

தனத்தினுக்குடையோன் தினகரனுகிச் சாருகேந்திரத்தினிற் சுபரோ, டெனத்துடனிருக்கி லவர்கள் கேந்திரத்தி லேறவச்சுபருமே தனத்தில், முனத்துயிரதனி லவற்குவாக்கழில்முயங்கிடப் பாவருந்தோயக், கனத்தபூஷணத்தா யுரைத்திடுபிதாவாற் கனநிதியோ னெனவறையே. (ஙஅ)

ஈசன்வீடதனி லீசனுமிருந்தா லெழிற்புகர் மாலொருவீ டால், நேசமாயுயிர்க்கு மறைந்திடாதாகில் நிலைபெறுஞ்சிவிகை யிலென்றும், பாசமாய்ப்பாவர் சேர்ந்திடிற்றவறும் பதிபுகர்மால வர் வீடால், வாசமாயொன்று யிருந்தவன்றனக்கு வந்திடுஞ்சிறி துர்ாள் சிவிகை. (ரகூ)

மால்மதிகுருவு முதயகேந்திரத்தில் மாந்தியுமப்படித்தோ ன்றில், நீலனுமறையா திருந்திடிற்பூமி நேர்புகழுங்கன நிதியா ய்த், தூலமட்டமத்தோ னதிசுபராகத் தோயவுங் கேந்திர மல வேல், பாலனமெர்ழியாய் தனசமபலனும் பாக்கியம் பூமியும் பகரே. (சO)

வே று.

நேரிழைதனிலேதோன்ற நேர்ந்திரண்டெட்டுநாலிற்
சூரியன்மாலாய்த்தோன்றிற் றொகுத்தவர்க்கோரேழெட்டிற்
சார்குருமதியுமாகிற் சமனிருந்திட்டபேர்க்குப்
பார்நிதிபுதையலாகப் பலித்திடுமென்றுகூறே. (சக)

பாம்புதான்சட்டமத்திற் பதிந்துமேதனிப்பாராகிற்
றும்பயவாக்குவாக்கிற் சார்ந்திடச்சனியனென்றாய்ப்
பாம்பவரிருந்தவீட்டிற் பதியக்கேந்திரத்தில்நன்றாய்
ஏம்பியசுபரேயாகி லிருப்பவன்வகையைக்கேளே. (சஉ)

வகையொருகாலத்தின்மேல் வருநிதிபூமிக்குள் ளாம்
துகையந்தப்பாம்பினோடு தோன்றியபாவர்சேர்ந்தால்
செகமதுமுன்போற்கோட்கள் சேரினுநிதியிராது
பகமுளவயதுமட்டும் பலித்திடாதெனவும்சொல்லே. (சங)

வே று.

'வாக்கினுக்குடையோன் மதியதாகிடினும் வளர்குருவாகி லுமவரும், தாக்கியபாவர்வீட்டினிலெய்திற் றரித்திரமெய்திடா தெனவும், நோக்கிடும்பாக்ய சாலியாய்வாழும் நுவல்நிரியாண முள் வரையும், தாக்குமத்தான மதனிலேபாவர் சார்பலன் பல னினிச் சாற்றே. (சச)

நாலினிற்பருதி மாலுடன்புகரும் நண்ணிடச் சென்னமத தனில், நீலனுமிருக்கில் மூன்றினிற்சேயும் நேர்ந்திடப் பாவர்த ன்னுடனே, பாலனைமொழியாய் வயதுமோரொன்றிற் பகர்பிதா பகையெழு துன்பம், சீலமாய்ப்பூமி காலியுங்கெடுதல் சேர்ந்திடு மென்றுநீ செப்பே. (சரு)

வேறு.

பொன்னவனுடனேபாம்பு புரிந்திடவவர்க்கோர்நாலில்
நன்னயமாந்திகூடில் நவின்றவர்க்கோர்நாலேழில்,
இன்னமும்பிறையும்சேயு மிருந்திடப்பாவரோடே
அன்னவன் தனக்கோர்முப்பத் தஞ்சின்மேலறைநீமாதே. (சசு)

மாதவளாலேயின்பம் வரும்நிதிசேருமென்பர்
பாதவிழ்ப்பூமியாலும் பகரலாந்தனவானுகும்
சேதமொன்றில்லானுகும் சேர்வயதெழுபதுக்கும்
நீதமாயின்னூல்பார்த்து நிகழ்த்திடுநீணிலத்தே. (சஎ)

வேறு.

பகருமிடம்நான்கதனிற் கேந்திரத்தாற்
பாவக்கோளில்லாதாற் சுபர்வீடாகில்
அகமுயிராமிலக்கனத்திற் சுபரும்நின்றால்
அச்சுபருக்கவ்வீடு சுகமேயாகில்
தகரலவன்சிங்கம்நே ரிழையிற்றோன்றிற்
றான்சென்னமரணமட்டும் பலனேயாகும்
ஜெகமகிழவுரைத்திடுநீ யேழாந்தானம்
சிவனுணைகேந்திரத்தாற் பாவர்சேர. (சஅ)

சேருமதிற்றனிப்பாவர் கூடுவாரேல்
சேய்வேதன்றனக்குபகை யில்லாதாகிற்
பாரதனில்யோகமிரு பதுவேயானுற்
பகர்முப்பத்தஞ்சினின்மேற் பலனதாகும்
வீரமுடன்குடும்பரட்சை யுடையோனுவன்
வேணதனவானுகும் ஞானம்பூசை
தீரமுடன்புரிபவனும் பிற்பிறப்பிற்
சிவயோகியாகியிவன் ஜெனிப்பானென்னே. (சகூ)

குருவுடனேபோககன்மன் தரிக்கத்தானன்
கொடும்பாவர்உதயகேந்திரத்திலானால்
வருமுயிரோனதிற்கூட மாந்திசென்மம்
வந்திடிகிலவன்ஞான பூசையாவன்
அருவுருவாஞ்சடாச்சரத்துக் கிருபையுள்ளான்
அவன்யோகந்தனவானாய் வாழ்ந்துபின்னும்
வரிவிழியாய்பிற்பிறப்பில் ஞானியாவன்
வகுத்துரைநீயாகமசாஸ் திரங்கள்வல்லன். (௩0)

ஈராறிற்புகர்தனித்தே யிருக்கநட்பால்
ஏந்திழையேயவற்குப்பன் னென்றுந்தானம்
பாராரம்புலியிருந்தாற் சென்மக்கோளன்
பரிசுபாற்கேந்திரத்தி லேகுவானேல்
சீராயெல்லவர்வீட்டிற் சுபரோடேகச்
சேயனுக்குமரணமட்டுஞ் சிவிகையோகம்
நேராகவிதிற்பாவர் கூடுவாரேல்
நிசமுப்பத்தஞ்சதின்மேல் மரணமட்டே. (௩௧)

புகர்வீட்டிற்குருவிருக்கப் புகர்கரிவீடேகப்
புந்திவீடதிற்கரியோன் புகழ்ந்திருப்பானாகில்
செகடகமரிமீனம் சேயிழையில்தோன்றிற்
செகமாளுமரசர்மனச் செயலுடையோனவன்
வகைதனவானீரொன்பா னதின்மேலாய்முயற்சி
வருபலதுயிருபதின்மேற் பஞ்சமமுள்ளாகத்
துகைமுப்பத்தெட்டின்மேற் சிவிகைபரியேற்றம்
சொற்றவருதிந்நூலின் சுவையறியாயனமே. (௩௨)

ஆரலவன்வீடாக நீலனவன்வீடாய்
அம்புலியும்பருதிபுக ரவன்வீட்டிலிருந்தால்
வாரணியுந்தனத்தாளே உயிர்க்குமறையாதால்
வரும்பவருஞ்சேராதா லவன்றரிக்கும்நாள்தொட்
டேரமனுதனுவரையும் குபேரனெனப்புகல்வர்
இவன்சிவிகைகேந்திறைவ னதிற்பாவர்சேர்ந்து
நேருயிர்க்குயிதிலொருவர் மறைந்திடுவாராகில்
நிஷ்பலமாம்பாக்கியமும் வானமட்டுறவே. (௩௩)

மட்டுறவாஞ்செனனமுதற் பாக்கியவர்ஞகும்
வளர்பூமிகாலிபலி கிடுமவனுக்கதிகம்
மட்டுறுமட்டும்நடத்தும் ஆடையன்னந்தவரு
வளர்வாகனப்பரிக்ஷை பலித்திடாதெனவும்
கட்டழகியுறுமாகி லுடன்கெடுதலாகும்
கனவாழ்வுதனமுதவும் கருமுதல்தொட்டாக
விட்டயன்றன்விதிமுறையே கோர்த்துரைத்தநூலாம்
விரிகடல்சூழுலகமதில் விரித்துரைநீயணங்கே. (நுச)

வேறு.

ஆரலும்புகர்வீடேக அருணனுமருக்கனேடு
சேரிடஞ்சுபர்வீடாகத் திங்களுங்குருவும்பாம்புஞ்
சாரிடம்பிலமாய்த்தோன்றச் சற்குருபார்வைசுங்கன்
நேரவேதனிப்பாஞகில் நிதிபதிக்கதிகவாழ்வோன். (நுடு)

சூரியன்காரிபூமன் சுங்கன்மால்தனிப்பாஞகிற்
சீரியவிதியாற்பாம்பு சேர்ந்திடப்பதினென்ருஞல்
வீரியத்துடனேபூவில் விளங்கிடுஞ்சாதகற்குப்
பாரியாற்றனமுண்டாகும் பகர்ந்தனர்கெணிதநூலோர். (நுசு)

சுங்கனுங்குருவீடேகத் துணிவுடனருணன்சேரச்
சங்கையாயிராரேனுந் தனத்தினுக்கதிபனேடும்
இங்கிதமாகப்பொன்ன னில்லமேசேர்வாஞகிற்
பங்கமில்லாமற்சொல்வன் பகர்மொழியார்க்குமேலாம். (நுஎ)

சுங்கனும்பொன்னுமொன்ருய்த் தோன்றிடவுயிர்க்குப்பத்திற்
சங்கையாயுயிர்க்குமூன்றிற் றனித்திடவஞ்சோனுக
மங்கைதானத்தோனேடு மால்பரிபாம்போடுற்ருற்
பங்கமில்லாமற்சொல்வேன் பகர்மொழியார்க்குமேலாம். (நுஅ)

வாக்கினேன்குருதியோடும் வருமிடம்பருதிவீடாய்த்
தாக்கியவத்தானத்தோன் சசிமகன்புகாகேதோடு
தீர்க்கமாயோர்வீடேகிச் சேரிடம்மறையாதாகிற்
பாக்கியம்பூமிகீர்த்திப் பதிமதியமைச்சன்போலாம். (நுகூ

வேறு.

ஆரலுடன்மாந்திமதி யுயிர்க்குமூன்றில்
அமர்ந்திடவேஅவன்றனக்கு நாலொன்பானில்
பாருயிரோன்நாலினுக்கோள் கரிபொன்வெள்ளி
பகலவனுமுடன்கூடித் தரிக்குமானால்
சாருமெனப்பூமிபதி வளருங்காலி
சார்ந்திடுமேசமமெனவே யீரொன்பான்மேல்
சேருமெனப்பிலமாகுந் தரணிதன்னிற்
செப்பினர்கள் தப்பாது கெணிதவாய்மை. (சூ0)

கரியவனுபயக்கோளாய்க் கருதிடந்தன்வீடாகச்
சரியுடன்மறைமாலொன்றாய்ச் சாரிடம்புகர்மால்வீடாய்
வருமக்கோளதனையாரல் வருவிழிப்பார்வையானால்
இருநிதிசுபமாய்ச்செல்வ மிசைவுடன்தமிழ்க்கள்சேரும். (சூக)

வேறு.

மாதேகேள்வருங்கருமன் மறையோனாகி
வருமுயிர்க்கோள் மாலுடன்பான்கரியனோடு
நீதியுடனுயிர்தனக்கொன் பதனிலேகி
நின்றிடவேஅதற்குடையோன் றனக்குமிக்கோள்
வேதமுடன்மூன்றதுவாய் வளருமானால்
விளங்கியசேயவன்றனக்கு மறையன்நாளில்
ஓதியமால்வரினுமுதற் பூமிகாலி
உதவுமின்பம்பலன்சமமாய் வாழ்வுகூறே. (சூஉ)

வாழ்வுறவேமால்வருநாள் அபகாரத்தே
வருமதுநாள்முதல்மதிவந் திடினுமட்டும்
சூழ்வுபலவாணிபங்கள் பூமிகாலி
தோன்றுதனம்லாபமதாய் வளருமென்றே
தாழ்வுவராதாரல்வரு முதலேபாம்பு
சாருமபகாரம்வரை முயற்சிமேலாம்
காழ்தனமுங்காலிபதி பூமிசெல்வம்
காவலனுயயல்நாட்டில் வரினுமாதே. (சூஎ)

வேறு.

மதிமகன் தனக்கீராறினிலிரண்டேன் வரும்புகர்மாந்திலக்
கேனக்கோள், சதிருடன்தரிக்க உயிர்க்கிவர்மறையாச் சாரிடம்
மறையன் நோக்கிடுமாம், பதிதனம்பூமி க்ஷேத்திரம்பிலமாய்ப்
பகர்ந்தனர் மால்திசையதனிற், கெதிபெறவிருப்பன் கவலையே
யுள்ளான் கெணிதநூல் மொழிவழிசெப்பே. (கூச)

செப்பிடுமொழிகேள் செலுத்துதன்மையினுன் செல்வியே
யேகமென்றுரையே, தப்பியவெகுபேர் புகழ்ந்திடயோகம் சார்ந்
திடுமால்திசையதனில், ஒப்பியபடியே பொய்சொலான் குணவா
னுளமகிழ் நெடியதேகமுமாம், கப்பியும்பொருளு மேழையர்க்
கீய்வன் காளைதன்சாதகபலனே. (கூரு)

வேறு.

அஞ்சுடையோன்வரும்புகராய் வியத்தின்கோளாய்
அமரவுயிர்நாலலது ஏழுபத்தாய்த்
தஞ்சமுடனிவர்கள் தனை மறைநோக்குற்றால்
சாருதிசைவருமுதலே வருமுற்பாதி
செஞ்சொல்நுதல்விழியணங்கே தொழில்கள்மேலாம்
சேருதனம்வருஞ்சிவிகை வளருமின்பம்
விஞ்சையுடன்பருதியின்மேல் முயற்சியில்லான்
விளங்குமெனவருமலைச்சல் கெணிதஞ்செப்பே. (கூகூ)

செப்புமெனமுன்னுரைத்த புகரோன்றானும்
சேருயிர்க்குமூன்றலது ஆறெட்டேகித்
தப்புமெனப்பவருடனே தரிக்குமானுற்
சாருபுகர்திசைமுதலே தனதுமட்டும்
துப்பிதழாய்வரும்லாபம் சமனுஞ்செல்வந்
தோன்றுதனமற்பமென வரினுமாகும்
இப்படிக்கோள்பரிமுதலே முயற்சிகாட்டும்
இன்பமதில்வருந்தனங்கள் சமமேலந்தம். (ச

மேலெனலாந்தொழிலதனிற் றனங்கள்சேரும்
விளங்குபுகர்திசைபாதி வளருமின்பம்
சீலமுடன்பிற்பாதி புகர்காளற்பம்
சேர்ந்தாலுமதுபோல முயற்சிகாட்டும்

தூலமுடன்வருந்தனங்க ளதுபோலாகுந்
தோன்றுபுகர்திசைமுடிவு வரினுமென்றே
சாலமறையோர்கள்மொழி யிதுவென்றோத்து
சாஸ்திரமாகமப்படியே கெணிதஞ்செப்பே. (சுஅ)

மந்தனுபயக்கோளரிய் மூன்றின்கோளாய்
வருமுயிர்க்குமூன்றதனிற் றனிக்குமாகில்
விந்தையுடனிக்கோளைப் பவர்நோக்கில்லா
விளங்கிடவேதோன்றியசேய் தனக்குயோகம்
வந்தாவிக்குப்பதிபன் திசைநாள்தொட்டு
வளருதனம்பூமிபதி காலியின்பம்
சிந்தையுடன்வெகுபுகழோன் வளருங்கீர்த்தி
சேருதனம்வெகுசிலவோன் குறைவிலாதான். (சுகூ)

குறைவுவரவளருமதி பூமிசேருங்
குறித்தனர்களிராசனெனக் குபேரவாழ்வோன்
துறையுடனேஉபயதிபன் திசையினந்தி
துலங்கும்வரையிதுதவறு தாகுமென்றே
அறையுமெனமுன்னுரைத்த வுபயக்கோளை
அரும்பவர்கள்நோக்கிடினு மழியுமுன்சொல்
முறையுடனேவுபயதிபன் றிசைவந்தேற்கின்
மொழிந்தனர்கள்வெகுபீடை வரினுமாதே. (எ0)

மாதெனவேவருந்தனது பாதிமட்டும்
வகுத்தனர்கள்வருந்துயரங் காலிலச்சம்
சீதமுடன்வெகுசலனம் காதுமந்தம்
செப்பினர்கள் தனச்சிலவு அரசர்கோபம்
நீதியுடன்வருந்தனது பாதிமேலாய்
நேருமந்தச்சூலைவரும் பீடைபோக்கும்
ஓதினர்களதுமுதலே அறத்தின் மிக்கோன்
உதவுமறைவேதியற்குப் பொருள்களீய்வன். (எக)

ஈயுமனம்வெகுஅறிவு ராஜயோகன்
இயம்பினர்கள்வெகுபூமி தனம்வந்தெய்தும்
தூயமனம்வெகுபெரியோர் கிருபையேற்பன்
தோன்றுபுகழ்வெகுகீர்த்தி வளருமின்பம்

நேயமுடனுபயதிபன் றிசைநாட்பாதி
நேர்ந்திடுமேமுன்னுரைத்த பலன்களெல்லாம்
யீயமனம்பாதியின்மேல் சுபமதாகும்
இருநிதிசேத்திரம்பூமி குறைவிலாதான். (ஏஉ)

மறையவனும்உயிர்தனக்கு நாலேழோனாய்
வளருமிடம்புகர்மனையாய்த் தனிக்குமாகில்
நிறைவுடனேமறையிருந்தோன் ஆட்சியுச்சம்
நின்றிடவேஉயிர்தனக்கு மறையாதானால்
அறையுமெனமறைவருநாள் முதலேதொட்டு
அந்தியநாள்வரைமுழுதுஞ் சிவிகையோகன்
குறைவுவராவளருதனம் பூமிகாலி
கொள்ளுமெனவருமரசர் தயவுசேரும். (எங)

கூருமென்மறையிருந்தோன் பகைநீசத்திற்
சேர்ந்திடவேஉடனொருகோள் தரியாதானால்
சாருமெனமறைதனதி லுத்தியோகம்
தான்சேரும்சமமாகத் தனம்வந்தெய்தும்
கூருமெனவருமுழப்பு சிலநாளுண்டு
குறித்தனர்கள்காரிபுத்தி யூக்கம்போக்கும்
சீருடனேகாரிபுத்தி பாதிமேலாய்ச்
சேர்ந்திடுமேவருமுயற்சி சமமென்றோதே. (எச)

ஓதுமெனமறைநாலில் முயற்சிபோக்கும்
உறையுமந்தமால்பாதி யூக்கங்காட்டும்
சீதமுடன்மறைமுதலே வருமுன்பாதி
செப்புமிந்தவகைபோலே தொழிலுஞ்சேரும்
வேதமுடன்பாதியின்மே லுத்தியோகம்
விளங்குதனம்பூமிபதி காலியின்பம்
நீதமுடன்வருந்திசைநாள் முழுதுமிந்த
நேருடன்போலாமெனவே வரினுமாதே. (எரு)

வேதமாய்வருமரவு புகர்மதியோடொன்றாய்
விளங்குமறையோன்வீடாய்த் தரித்திடக்கேந்திரமாய்
சீதமாயிக்கோட்கள் சேர்ந்திடும்வீடதிபன்
சேருயிர்க்குமறையாமல் ஆட்சியுச்சம்வருகில்

நீதமாய்வருமரவு திசைவருகிற்றனதில்
நின்றிடுமேஉற்றதுக்கம் வெகுசலனமலைச்சல்
ஓதியதோர்மனத்துயர முரைத்தனர்களரவு
உறையுமந்தன்றன்துவகை கணிதநூல்மொழியால். ()

மொழியாகத்தனதுவ்ரை யிதுபலனுமென்று
மொழிந்தனர்கள்வருமரவு திசைமுதலேமறையோன்
வழியாகவெகுசுகவான் சேர்ந்திடுமேமுயற்சி
மாநிதியும் வாகனமும் சேத்திரமும்வருமாம்
கழிவாகவருமரவு திசைவருமுற்பாதி
கலியாணமனக்களிப்புக் காதலுமுண்டாகும்
செழியவேபிற்பாதி யுத்தியோகநன்மை
சிறப்பாகும்வேளாண்மைச் செட்டுலாபமுமே. (எஎ)

குருவீட்டிற்குருவிருக்க மாந்தியுமீராறில்
குறுகிடவுமாறதனிற் சூரியனுமிருந்தால்
வருமுயிரோன்சுபராகிப் புகர்வீட்டிற்றரிக்க
வ்ரும்புகருங்கூடிடவுங் காரியவன்வீடாய்
அருமாரலவன்வீடாய்ப் பாம்புயிரீராறில்
அமரவவன்கெஜமேலாய் அம்பாரியேறி
வரும்ராஜராஜனுமாம் புகழுடையோனுக
வருநிதியுங்குபேரனுக்கு ஒப்பென்வுமுரையே. (எஅ)

மதியுயிரோனுகிக்கேந் திரத்தினிலேவாழ்க
மதிதனக்கேயிரண்டதனில் வாக்கோனுமிருக்கத்
துதியாரல்கேந்திரத்திற் புதனுமவன்வீடாய்த்
தோன்றலதுசூரியன்றன் வீடதுவேயாகி
அதிகுருவுக்கீராறில் மாந்தியிருந்திடவும்
அவர்தனக்குயீராறிற் காரியுஞ்சேர்ந்திடுமால்
விதிமுறையாற்குருவதனிற் றிசையாள்வனவற்கு
வேந்தனுடபட்டமுநன் றாய்விதிக்கலாமே. (எகூ)

வேறு.

கரியவன்றிசைமுற்பாதி கருத்தெலாம்பிலத்தப்பாகுந்
துரிதமாய்ப்பிணிநோயுண்டாஞ் சொல்மொழிமறைவதாகும்
புரிமுதலதிகசெல்வம்பாதியிற் செலுத்தவல்லான்
புரிகுமலுயிரோன்வந்தாற் புத்தியும்பிலத்தப்பாமே. (அப)

புகருடன் அருணன்வெய்யோன் பொருந்திடமறையாதாகிற்
புகர்திசைபலனுண்டாகும் புகழ்தனமுயற்சிமேலாய்ப்
புகர்மறுத்திருப்பனாகிற் புகர்பலனற்பமாகும்
புகரிலேபொருந்துநோக்கம் புகர்செயமுயற்சியுண்டே. (அக)

சந்திரனுயிர்க்குப்பத்திற் றனித்திடவக்கோள்தானும்
விந்தையாய்ப்புகர்மாலோடு விளங்குகேந்திரமேயானுற்
சிந்தையாயதற்குநாதன் தீயகோளுடனேசேர்ந்து
வந்துயிர்தனக்கொன்பானல் வரும்பலன்மொழியென்றேதே.

ஓதினருயிரோன்றனு முயர்கடுங்கோளோடேகி
நீதமாயுயிர்க்குமூன்றில் நின்றிடப்பிலமாவானல்
வேதமாய்முப்பத்தொன்றில் விதித்தனர்மதிவந்துற்றால்
சாதகன்றனக்குயோகம் சாற்றினரதிகவாழ்வோன். (அங)

மதியையுஞ்சுபர்கள்நோக்க மந்தனுமதனைநோக்க
விதியுடன்தகரிற்சேர மென்விழிகுருதியோடு
சதியுடனிருப்பதானற் றரணியில்வந்தசேய்க்கு
விதியுடன்மரணமட்டும் விளங்கவேயிரப்பன்மாதோ. (அச)

அஞ்சினேன்சுபரோடேகி அமர்ந்திடஅட்டமத்திற்
றஞ்சமாயுயிர்க்கீராறிற் றனித்திடப்பாக்கியத்தோன்
விஞ்சையாய்த்தனத்திற்பாம்பு விரைவுடன்தனிப்பானுகில்
அஞ்சினேனிறைவன்பாம்பு அறைந்தனர்பலனென்றேதே. ()

ஓதிடுஞ்சாதகற்கு வுரைத்தனரரவுநாளில்
வேதமாய் அற்பயோகம் விதித்தனர்கெணிதனுலோர்
நீதமாய்க்குருவந்துற்றால் நேர்ந்திடும்பூமிசெல்வம்
மாதவளாலேயுண்டாம் வகுத்தனர்பலனென்றேதே. (அசு)

குருவுடன்கடுங்கோளொன்றாய்க் குறுகிடக்குருவின்வீட்டில்
வருமுறைதனக்கொன்பானும் வந்திடப்பஞ்சமத்திற்
சுருதியாய்த்தோன்றுஞ்சேய்க்குத்தொகுத்திடுங்குருவந்துற்றால்
கருதியேஅதிகயோகங் கருத்துடன்வளருமாதே. (அஎ)

மாதவர்மொழியென்றேதே வந்திடுஞ்சாதகற்கு
வேதமாய்க்கரிநாட்பாதி விதித்தனர்கீர்த்திவானும்
போதவேசெல்வனுகப் புரட்டினர்கணிதமாய்ந்தோர்
சாதகன்மரணமட்டுஞ் சாற்றினரதிகவாழ்வோன். (அஅ)

மால்புகர்பரியோடொன்றாய் வருமிடஞ்சேய்வீடாகச்
சாலவேஅக்கோள்நீசஞ் சார்ந்திடுமதிக்குப்பத்திற்
றூலமாயிவர்கடன்னைத் துணிவுடன்குருநோக்குற்றால்
மாலவன்றிசைநாள்மட்டும் வகுத்தனர்முயற்சிமேலாம். (அகூ)

வேறு.

நாலினுக்குடையோன் சுபர்கள்வீடதனில் நல்கிடமால்புக
ருடனே, சாலவேபாவர் தரித்திடவதனிற் சாரிடமறைவிலா
தாகி, யேலவேகாரி பூமிதானத்தை யிசைவுடன்நோக்கிடதா
னால், தூலமாய்க்குருதி ஆட்சிநட்பானற் றுணிவுடன்சாதகன்
பலனே. (கூ0)

வேறு.

அஞ்சினோன் திசைவிட்டேகி அம்புலிதிசைவந்துற்றால்
மிஞ்சவேபூமிசேரும் விதித்தனர்கிரகம்ரெண்டாம்
தஞ்சமாயக்கோள் தானுஞ் சாரிடமறையாதாகில்
விஞ்சவேபூமிசேரும் விதித்தனர்தரணிமாதே. (கூக)

வேறு.

நாலினுக்குடையோன் கேந்திரகோணம் நல்கிடவதனிலே
பாவர், கோலமாயுயிரோன் நிலமகன்மறைந்து கொடும்பகைநீச
நட்பானால், மாலவன்றனக்குப் பூமிக்ஷேத்திரங்கள் வரவரநாச
மென்றுரைத்தார், சாலவேவுயிரோன் பூமிதானத்தோன் சார்ந்
திடவுச்ச மாட்சியினால். (கூஉ)

வேறு.

வரவரவுயர்ந்தவாழ்வோன் வாகனம்பூமிகாலி
திரமுடன்வருவதாகும் செப்பலாமெண்ணான்கொன்றில்
விரவுடன்புகழ்தன்யோகம் விதித்தனரியம்பமாதோ
பரவிதமானயோகன் பண்புடனிருப்பன்பாலன். (கூங)

வேறு.

நாலினுக் குடையோன் குருதிவீடதனில் நல்கிடத்தனித்
திடுமானால், தூலமாய்க்கோ ளுச்சவீடதனிற்றோன்றிடத்தனித்
திடுமானால், பாலகன்றனக்கு முப்பதுமேலாய்ப் பகர்ந்தனர்பூமி
க்ஷேத்திரங்கள், சாலவேயதிகம் வருமெனமொழிந்தார் சாத
கன் பலன்வெகுதிறமாம். (கூசு)

நாலினுக்குடையோன் குருதியோடேகி நல்கிட வுதயகேந்திரத்திற், சாலவேஅக்கோ ளஞ்சின்கோளுடனே சாரிடங்குருதிவீடுற்றால், பாலகன்றனக்குப் பூமிக்ஷேத்திரங்கள் பகர்ந்தனர் குருதியால்வாழ்வோன், தூலமாய்நாலோன் மறைந்துபோய்ப் பகையாற் றுஞ்சிடும்பூமியென்றுரையே. (கூரு)

வேறு.

ஓதுயிர்தனக்குநான்கி லுயர்வுடன்குருவந்துற்றால்
வேதமாய்ப்பாம்புநாளில் விதித்தனர்முயற்சியற்பம்
போதவேகுருநாள்வந்தாற் புகழ்தனமுயற்சிமேலாம்
சாதகன்றனக்குயோகஞ் சாற்றினர்மறைநாள்மட்டும். (கூகூ)

வேறு.

சதியாகமறைதனக்குக் கருமந்தன்னிற்
சகிபுகர்மால்காரியுட னிலர்களொன்றாய்
விதியாகப்பவர்வீடாய்ப் பவர்நோக்கில்லா
விளங்கியசேயவன்றனக்கு முயற்சிசேரும்
மதியாகக்காரிதிசை யதனிற்பொன்னன்
வந்திடும்போததிகபலன் சமமதாகும்
அதிபதியாய்மால்தனதில் தொழில்கள்மேலாய்
அறைந்தனர்பாக்கியம் பூமியுதவிடுமுற்பாதி. (கூஎ)

சுக்கிரன்றன்வீடதுவாய் அரவுகூடத்
தோன்றிடவேஅவர்க்கதில்நா லதனில்நாலோன்
தக்கதெனவுதயமதாய்ப் பகையிலேறித்
தரித்திடவேஉடனெவர்கள் தரியாதாகத்
தொக்குமிந்தக்கோள் தனக்கு நாலிற்பாவர்
தோய்ந்திடவேதோன்றியசேய் தனக்குப்பூமி
மைக்கருங்கண்விழியணங்கே அரவுநாளில்
வரும்புகர்வந்திடுமதனில் வளருமாதே. (கூஅ)

மாதேகேள்வரும்புகர்நாட் பாதிப்போக்கில்
வளருதந்தைமனையதனிற் கிரகமொன்று
ஓதுமெனவருந்துணையாற் பகைவந்தெய்தும்
உதவுமெனவருங்கிரகம் பிலமென்றோது

நீதியுடன் வருங்கிரக முதலேபூமி
நேர்ந்திடுமேவெகுபிலமாய் வளருமின்பம்
சோதிடநூற்படியெனவே கெணிதமாய்ந்தோர்
சொல்லினர்களிதுதவறு தெனவென்றோதே (கூகூ)

மாதேகள்மதிதன்க்கு நாலிற்பொன்னன்
வந்திடவேபொன்னனையும் பவர்நோக்குற்றால்
நீதியுடன்மால்கரிசேய் மதிக்குக்கேந்த்ரம்
நின்றிடவேசுபர்வீடாய்த் தரிக்குமானால்
ஓதுமெனவெகுதனத்தோ னிருபத்தேழ்மேல்
உதவிடுமேவேதாந்தம் புனிதனண்பன்
வேதமுடன்வெகுஅறிவு மனுநூற்சாரம்
வேண்டியதோர்சிவதலங்க ளனேகங்கிட்டும். (க00)

சூரியன்நாலாங்கோளாய் தனக்கோளோடு
தொல்மதிவீடதில்வளர மதிக்கோளாகிச்
சாருமறைகேதுடனே தரிக்கஅந்தச்
சாருயிர்க்குநாலாங்கோ ளதனேப்பொன்னன்
கூருமெனவக்கிரனும் நோக்குமானால்
குருகுமெனநாலாங்கோள் திசைநாட்பாதி
சீருடனேசமமதுவாய் முயற்சிசேரும்
செப்புமெனப்பாதியின்மேல் தொழில்தான்மேலாம் ()

சந்திரனும்லாபக்கோ ளாகியெட்டிற்
சாரவதற்குடையோனும் உடன்வந்தெய்தி
விந்தையுடன்மாந்திமறை அருணன்நோக்க்
விளங்குபதினோராங்கோள் திசைமுற்பாதி
சிந்தையுடன்வருந்தனங்க ளதிகஞ்சேரும்
சேரும்வகைவாணிபத்தாற் பூமியின்பம்
வந்திடும்பின்பாதியின்மேற் றனங்கள்பூமி
வளருமெனவாணிபமே வளருமென்றே. (கஉஉ)

சந்திரன்மூன்றுங்கோளால் நீசமேறச்
சற்குருகேதுடன்கூடித் தரிக்கவக்கோள்
விந்தையுடன்சொந்தமனை யதனிலேகி
விளங்குமோருகோளுடனே தரியாதாகச்

சுந்தரமாய்மதிதனையே கரிசேய்பாம்பு
சுக்கிரனும்நோக்கிடுமால் சோமன்செய்கை
சிந்தையுடன்திசைதனதி லலைச்சல்பீடை
சேருமுற்றதுக்கமென வரினுமானே. (கoஙு)

மானேகேள்மதிதனதின் மேலாய்நாளில்
வருமூக்கம்மேலாகுந் தனம்வந்தெய்தும்
தேனெனக்கேள்பாதிவரை தொழிலிலின்பம்
சேர்ந்திடுமேபாதியின்மேல் முயற்சிமேலாம்
யானைபரிவாகனமுஞ் சிவிகையோகம்
அருந்தனமும்பூமிபதி காலியுள்ளோன்
ஆனுமதிதிசைநாளின் முடிவுமட்டும்
அதியோகம்வெகுநூலாற் றிரட்டிச்சொன்னேன். ()

மந்தனும்நாலாங்கோளா யஞ்சின்கோளாய்
வரவிக்கோளுச்சமுறப் பவர்கள்சேரச்
சிந்தையுடன்கருமனுக்கு யிவர்களஞ்சாய்ச்
சேர்ந்திடவேதோன்றியசேய் தனக்குயோகம்
மந்தன்வருந்திசைமுதலே முயற்சிகாட்டும்
வருந்தனங்கள்பூமிபதி காலிசேரும்
விந்தையுடன்வருமரசர் தயவுமுண்டாம்
விளங்குபுகழ்குடும்பகர்த்த னதிகவாழ்வோன். (கoஙு)

வாழ்வெனவேவருமுயற்சி வளருமின்பம்
வகுத்தனர்கள்வருந்திசைமுற் பாதிமட்டும்
தாழ்விலைபிற்பாதியின்மேல் தொழில்கள்மேலாம்
தனம்சிவிகைவாகனங்கள் வளருமென்றே
கூழ்நாலாங்கோளனுட திசையின்மட்டும்
குறித்தனர்கள் தவறாதே தரணிமீதில்
ஊழ்வலியாற்கரிமறைந்து பகைநீசத்தி
லுறக்கருமக்கோளனுக்கே மறையுமானால். (கoசு)

மூன்றுடையோன்மறையோனாய் ஆறின்கோளும்
முயங்கிடவேஉச்சம்வரப் பவர்கள்சேரத்
தோன்றுமெனக்கருமனுக்கு மிவர்கள்ரெண்டாய்த்
துலங்கிடவேமூன்றுடையோன் திசையின்செய்கை,

ஊன்றுதனம்பூமிபதி காலியின்பம்
உற்றதிசைமுடிவுவரை யுதவாதென்றே
மூன்றுடையோன்திசையினந்தி முயற்சியுற்பம்
மொழிந்தனர்கள்மறையன்வழி யதனில்வாழ்வன். ()

வேறு.

மதிமகனுயிருக் காறிருகோளாய் வருநவமதுக்குடையோ
னுய்ச், சதிகுடன்கரிவீ டதில்வரவொருகோள் தரித்திடப்பாவ
ரேயாகில், விதியுடனவர்க ளிருந்திடுங்கோளன் விளங்கிடுமுச்ச
மாட்சியதாய், அதிபதியாக மறையவன்ருனும் அருணனைக்கரி
யையும் நோக்கும். (கஙஅ)

நோக்கிடமாலோன் திசைவருந்தனதில் நோக்கிடவருமெ
னமுயற்சி, தாக்கியபாதிதனம்பதிபூமி சார்ந்திடும் அரசரலின்
பம், தீர்க்கமாய்ப்பாதி முயற்சிமேலாகும் செப்பியசிவிகைவந்
திடுமாம், தூக்கியதூங்கு சப்பிரமஞ்சம் சுகமுறும்புதன்திசை
முடிவும். (கஙகூ)

வேறு.

ஓதிடவேஅரவுடனே மாந்தியொன்ருய்
உதயம்வரவக்கோளைக் குருநோக்குற்ருல்
நீதியுடனரவுதிசை தனதிற்ருெட்டு
நேர்ந்திடுமேதொழிலதனு லரசரின்பம்
போதமெனப்பதியுயர்ச்சி பூமிகீர்த்தி
புகழ்பேரலேவருமுயற்சி யதிகமேலாம்
சாதகமாமரனுணை தப்பாதென்று
சாற்றினர்பாம்பின்திசைநா ளுயர்ச்சிகூறே. (கஙஙஙு)

வேறு.

மதிமகன்புகர்வீடேக மந்தனுஞ்சசியில்நிற்கச்
சதியுடன்மதிசேயோடு சாரிடம்சனிவீடாக
விதியுடனுயிர்க்குநாதன் வெய்யவன்மாந்தியோடு
அதிகமாயுயிர்க்கீராறில் அமர்ந்திடவருவதானுல். (கஙகக)

வருவதுமொழிந்தார்மேலோர் வயதுதன்விபரஞ்சொல்வேன்
அறுபதோடெட்டேயாகும் அறிவித்தார்கணிதநூலோர்

தருதுடன்கருமந்தன்னிற் றரித்திடப்புகர்பாம்பானல்
குருகிடுமதன்கீழ்பத்து குறித்தனர்சாதகற்கே. (ககஉ)

வேறு.

சாதகன்றனக்குக் குருகரியருணன் தங்கியதிசைகளின் பலனை, வேதமாங்கெணித நூல்வழியாக விளங்கிடும்க்ஷேத்திரம் பூமி, ஆதலாற்பெலமாய் மரணநாள்வரையும் அணுகிடும்அதிக பாக்கியனுய்ப், போதவேவருமென் ருேதினருலகிற் புண்ணிய சாதகன்பலனை. (ககங)

வேறு.

சதியாகவுயிர்தனக்கு மூன்றிலாரல்
சசிமகன்பானுடனரவு தரிக்குமாகில்
விதியாகஅதற்குடையோ னதனிலாகி
விளங்கிடவேதோன்றியசேய் தனக்குயோகம்
துதிபெறவேபானுகுரு திசையிலின்பந்
தோன்றுமற்பமாகவெனப் பலன்கள்சேரும்
அதிபதியாயரவுதிசை முதலேமாலோன்
அறையுமபகாரமுதற் பலனைச்செப்பே (ககச)

செப்புமெனவருமுயற்சி பலன்களின்பம்
சேருமற்பமாகவென வரினுமென்றே
தப்பியதோர்கேதுஅப காரந்தொட்டுத்
தனிமுயற்சிவருந்தனங்க ளதிகவின்பம்
ஒப்பிடவந்திடுமுயற்சி யரவுமட்டும்
உரைத்தனர்கள் தவருதே தரணிமீதில்
துப்பிதழாய்மால்திசைவந் திடினுமானல்
தோன்றியசேய்மனத்துயர முயற்சியில்லான். (ககரு)

வருமுயிருக்குபயமதில் மறையோனுச்சம்
வரவவன்றன்னுடனெருகோள் சுபரேசேரத்
தருதுமெனமுயிர்க்குபயோ னுயிர்க்குநாலிற்
றரித்திடவேஅலதுயிரிற் சாருமானல்
வருதுமிக்கோள்தனைப்பவர்கள் நோக்குமாகில்
வந்திடுஞ்சேயவன்றனக்குத் தனங்களின்பம்
கருதுமறையோன்திசையின் முதலேபூமி
காலிதனம்வாணிபங்கள் சமமென்ருேதே (ককঙ)

ஓதுமென அரசர்பகை மொழிசொல்வஞ்சம்
உரையுமொழிமக்கனமா யுரைக்கலாகும்
நீதியுடன்வருந்தனங்க ளீயான்போக்கு
நேர்வதனமஇருவித்தனம் கனிந்தசொல்லன்
சீதமுடன்வரும்லபிகள் யேகமாகும்
சேய்தனக்குவரும்லாபஞ் சமமென்றோது
கோதில்குணமனத்துயரங் கவலையுள்ளோன்
குறித்தனர்களிதுமறையோன் கூறுமாதே. (ककल)

மாதேகேள்மறைமுதலே முயற்சிசெட்டு
வருந்தனங்கைகூடும்வெகு புகழுண்டாகும்
நீதியுடன்வரும்பூமி விளையுமின்பம்
நேர்மொழியேநிகழ்த்திடுவ னலைச்சல்காட்டும்
சீதமுடன்மறைதிசையிற் கரியன்வந்தால்
செப்புமெனவருமுயற்சி யதிகமாகும்
ஓதுமெனவருந்தனங்கள் செலவுகாட்டும்
உரைத்தனர்கள்வருந்துரகம் சேருமென்றே. (ककअ)

சேருமெனமறைதிசையில் ராகுநாளிற்
றிகழ்பலன்கள்பூமிதனம் முயற்சிகாலி
சாருமதில்மாதுவரும் பீடைகாட்டும்
தப்பியதோர்கேதுவரு நாளிற்கஷ்டம்
சீருடனேதாளாண்மை மேலாமின்பம்
சேர்ந்தாலும்சமமாகத் துயரங்காட்டும்
கூருபுகர்நாளதனிற் றெழில்கள்மேலாம்
குறித்தனர்கள்வருந்தனங்கள் சமமதாக்கும். (ककक)

தாக்குமெனவருமலரி நாளிலின்பஞ்
சாருமதிவரைமுடிவு தனங்கைகூடும்
தீர்க்கமுடன்வருமுயற்சி பூமிசெல்வஞ்
சேர்ந்திடுமேயாவருக்குங் கனமென்றோது
போக்குயருமாரல்வரு முதலேராகு
பொருந்துமபகாரம்வரை முயற்சியில்லான்
தூக்குமனம்வெகுதுயரம் பீடைகாட்டும்
தோய்ந்துமறையோன்திசைநாட் பலனென்றோதே. ()

வேதமாய்வருங்கருமன் கரியனாகி
விளங்கிடவேலாபக்கோ ளுடனொன்றாகிச்
சீதமுடனுயிர்தனக்கஞ் சதனிலேகச்
சேர்ந்திடவேபாக்கியத்தோன் நோக்குமாகில்
ஓதுமெனச்சனிதிசைநாள் முதலேபாம்பு
உதவுமபகாரம்வரை தொழிலுமில்லான்
நீதியுடன்மறையனப காரம்வந்தால்
நேர்ந்திடுமேவருமுயற்சி வளருமின்னே. (கஉக)

மின்னேகேள்வருமுயற்சி சமமதாக
விளங்குமதில்வருந்தனங்கள் பூமியின்பம்
துன்னுமற்பமாகவென வரினுமென்று
சொல்லினர்சோதிடசாஸ் திரங்களாக
மன்னுகரிதிசையில்மறை நாளின்போக்கில்
வரும்பொருளுஞ்சேதம்வருஞ் சலனங்காட்டும்
சொன்னதொருபந்துவகை தாரம்பீடை
தோன்றிடுமேகரிதிசையின் பலனென்றோதே. (கஉஉ)

வருமுயிர்க்குமூன்றுங்கோள் மாலதாகி
வருமுயிர்க்கோள் தனத்தினுக்கோ ளாறேழெட்டோன்
தருதுமிக்கோளுடனுயிர்க்கொன் பதனிலேகித்
தரித்திடவேஅதற்குடையோன் றனக்குப்பன்னோன்
கருதுமிக்கோள் தரித்திடவே வருஞ்சேய்யோகம்
கருதியமால்திசையதனிற் புகர்வந்துற்றால்
திருமகள்சேர்ந்திடுமெனவே முயற்சிமேலாம்
செப்பினர்களரசர்புகழ் தனங்கள்சேரும். (கஉங)

சேருமெனமால்திசைநாள் புகரின்தொட்டு
செப்புமறையோனபகா ரங்கள்நாளும்
பாருயிரில்வருமுயற்சி கீர்த்திசெல்வம்
பகர்தனங்கள்க்ஷேத்திரங்கள் விருத்தியாகும்
சாருமின்பம்மனதுகுறை யில்லானவன்
சாரும்வெகுபேர்கள்புகழ் கீர்த்தியேற்பன்
கூறினர்களிவன்திசையில் மதியன்நாளிற்
குறித்தனர்களுபயமெனக் கிரகஞ்செப்பே. (கஉச)

செப்புமெனவருங்கிரகம் பிதாவூரல்ல
சேருமெனவெகுபிலமாய் வளருமென்றே
துப்பிதழாய்மால்திசையிற் கரியன்வந்தால்
துஞ்சிடுமேவருமுயற்சி அரசர்கோபம்
தப்பியதோர்தனச்சிலவு பூமிசேதம்
சாருமதில்வெகுதுயர மலைச்சல்காட்டும்
ஒப்பிடவந்திடுமருணன் திசையின்செய்கை
உரைத்தனர்களிதுதவறு தெனவென்றேதே. (௧௨௫)

சந்திரனுமுயிர்தனக்குக் கருமனுகிச்
சாருயிருக்கிரண்டதனில் நீசமேறி
வந்திடவேஅதற்குடையோன் தனக்குமிக்கோள்
மறையாமற்றேன்றியசேய் தனக்குயோகம்
விந்தையுடன்மதிவருநாள் முதலேதொட்டு
விளங்கிடவேபொன்னனப காரமட்டும்
சிந்தையுடன்வருமுயற்சி யில்லானுவன்
சேருதுன்பமுற்றதுக்கந் தனங்கள்சேதம். (௧௨௬)

சேதமெனப்பூமிதனம் அழிவுகாட்டும்
சேயலைச்சல்மனத்துயரந் தாரம்பீடை
சீதமுடன்மதிதிசையிற் கரிநாள்தொட்டு
செங்கதிரோன்முடிவுமப காரமட்டும்
ஓதுமெனவருமுயற்சி தனங்களின்பம்
உதவுசமமாகவெனத் தரணிதன்னில்
நீதியுடன்வரும்பதிக்ஷத் திரங்கள்சேரும்
நேர்மதிவந்திடுந்திசைதன் பலனென்றேதே. (௧௨௭)

ஆரலுயிர்க்கோளவனு யுபயக்கோளும்
அமர்ந்திடவேஅட்டமமாய் வருகவிக்கோள்
சாருமிக்கோளிருந்திடும்வீ டதிபனுக்குத்
தங்கியவீராறதுவாய்த் தரிக்குமானால்
திருமெனஆரல்வரு முதலேதொட்டுத்
தினகரனுள்பாதிவரை முயற்சியில்லான்
சேருதனம்பூமிபதி காலிசேதம்
செப்பியசேய்வருமலைச்ச லதிகக்ஷடம். (௧௨௮)

கஷ்டமெனப்பாதியின்மே லாரல்மட்டும்
கருதியசேயவன்றனக்குத் தனங்கள்பூமி
திட்டமுடன்வாணிபத்தாற் பொருளுஞ்சேரும்
செப்புமெனத்துயரமிலா னதிகவின்பம்
சட்டமுடன்மனைவியினு லதிகபாக்யம்
சாருமெனவருங்குறையில் லாமல்வாழ்வன்
மட்டிடுஞ்சேய்திசைபலனைக் கெணிதநூலோர்
வகுத்தனர்கள்வெகுபரலாற் றிரட்டிச்சொன்னேம். ()

வேறு.

வருமுயிர்க்கோளன் மனைபுகராகி வருமுயிர்க் கொன்பதி லேகித், தருதுமொன்பானுந் தரித்திடவதனிற் சாருமெட்டேன்பரியுடனே, கருதுமிக்கோட்க ளிருந்திடத்தோன்றுங் கருதியசேயவன்றனக்கு,அருமறைப்படியால் புகர்திசைப்பலனையறைந்தனர் கெணிதவாக்கியமாம். (௧௩௦)

வாக்கியப்படியால் புகர்முதல்மறையோன் வருமபகாரநாள்வரையும், தாக்கியமுயற்சி சார்ந்திடுஞ்சிலநாள் தப்பிடுமதுபிலமில்லால், தூக்கியபுகரோன் திசையினிற்கரியிற் றோன்றியபாதிநாளதனில், தீர்க்கமாமூக்கம் அரசர்சந்தோஷம் சேர்ந்திடும் வருந்தனம்செப்பே. (௧௩௧)

செப்பியபுகரோன் கரியனுட்பாதி சேர்ந்திடும்புகர்திசைமுடிவும், தப்பிடாதெனவே தனில்வருமேலாய்ச் சார்ந்திடுமுயற்சி சந்தோஷம், துப்பிதழாய்கேள் தோன்றிடுந்தன்னங்கள் சுகமனுபவித்திடுமெனவே, இப்படிமீது வளர்ந்திடுங்கீர்த்தி யிசைந்திடும் புகர்திசைப்பலனே. (௧௩௨)

வேறு.

சூரியனும்லாபக்கோ ளாகிமாலும்
தொல்புகரோன்தன்னுடனே கூடியொன்றுய்ப்
பாருயிர்க்கொன்பானதனிற் றரிக்கவந்த
பாலனந்தச்சீலனுக்குப் பருதிவந்தாற்
சாருமெனவருமுயற்சி யதிககீர்த்தி
தனம்பதிக்ஷேத்திரம்பூமி காலியின்பம்
கூருமெனப்பாதிவரை வளருமென்றே
குறித்தனர்கள் பாதிவரும் பலனைச்சொல்லே. (௧௩௩)

சொல்லுமெனவருமூக்கம் போக்கதாகும்
தோன்றுதுணையால்வருத்த மனதிற்பீடை
செல்லுதனம்பூமியின்பம் நாசங்காட்டும்
சேயலைச்சல்தேகமதில் நோயுண்டாகும்
அல்லல்வருமனத்துயரந் தாரம்பீடை
அதிற்பொருள்கள்வெகுபிலமா யழியுமென்றே
வெல்லுமறையோன்பகைகள் வளருமென்று
விதித்தனர்கள் சூரியநாட் பலனைக்கூறே. (கஙச)

மந்தனும்லக்கனக்கோளாய்த் தனத்தின்கோளும்
வரும்புகர்தன்மாந்தியுட னுயிர்க்கஞ்சாகி
வந்திடவேஅதற்குடையோ னதனிலொன்றாய்
வளர்ந்திடவேதோன்றியசேய் தன்க்குயோகம்
சிந்தையுடன்மந்தன்வரு முதலேபாதி
சேருதனம்வாணிபங்கள் முயற்சிகாட்டும்
விந்தையுடன்பாதியின்மேல் முயற்சியின்பம்
விளங்குசமமாகுமென வளருமென்றே. (கஙரு)

என்றுமொருவருமுயற்சி தனங்களின்பம்
இருந்திடுஞ்சேத்திரம்பதிகள் சமமதாகுங்
துன்றுமரவோன்வளரு மறையின்பாதி
தோன்றியநாளபகாரம் வரையிற்றுன்பம்
வென்றுதனம்சேதம்வரு மலைச்சல்கஷ்டம்
விளங்குதுக்கமாகவென வரினுமாகும்
நன்றுகநிதிசையிலந்தி முயற்சிசேரும்
ராஜர்புகழ்கீர்த்திபெற வளருமென்றே. (கஙசு)

மாந்தியுடன்வருங்கொடியோ னுதயமேற
வருமுபயோன்கேந்திரமாய்த் தனிக்குமாகில்
சார்ந்திடுமேவருங்கொடியோன் முதலேயின்பம்
சாருதனம்வருமுயற்சி பாதிகாட்டும்
சேர்ந்திடுமேபாதிபதிற் றொழிலுமில்லான்
செப்பினர்கள்வேதாந்த வழியிற்செல்வன்
தேர்ந்துமனம்வெகுகவலை மனதுவேறும்
செப்பினர்களிதுதவறு தெனவென்றேதே. (கஙஎ

சூரியனுமாறிருகோ ளதிபனுகித்
தோன்றுயிர்க்கீரஞ்சலது அஞ்சிலேகிப்
பாருயிர்க்கோள திபனுக்கு முன்சொல்கோளண்
பகர்ந்திடவேஉபயமதாய் மறைநோக்குற்றால்
சாருமெனச்சூரியனுள் முதலேஞானி
சகலகலைவேதாந்தப் புனிதனுகிச்
சீருடனேமேலோர்கள் கிருபையேற்பன்
சேருமிடம்வெகுபதிகள் தெரிந்துசொல்வன். (கஙஅ)

தெரியுமெனஞானவழி தெளிவுகாட்டும்
செகதலத்தோர்வருமயக்கம் மனதிற்கொள்ளான்
பெரியவேதாந்தநெறி தவறுவண்ணம்
பேசியசாஸ்திரமறிவு தரிக்குமென்றே
பரிதிதிசைநாள்முடிவு தப்பாதென்று
பகர்ந்தனர்கள்வருங்கெணிதர் பத்தும்வண்மை
கரியுடனேமுன்னுரைத்த பரிதிபோனுற்
கருத்துளசொல்தெரிந்திடாக் கவலையுள்ளோன். ()

சந்திரனும்லாபக்கோ ளாகியாறிற்
றரித்திடவேஉடனொருகோள் சுபர்கள்சேர
வந்திடவிக்கோள் தனக்கு மூன்றிலாலல்
வந்திடவேதோன்றியசேய் வரினுஞ்செய்கை
சிந்தைகளிகூர்ந்திடவே தெளிவிற்செல்வன்
சேருமையோன்வருங்கிருபைமேலோர்வாசம்
விந்தையுடன்ஞானவழி முடிவுகாட்டும்
விளங்குமெனவெகுபதிகள் கடந்துபோகும். (கசo)

போகுமெனவெகுதுயர மனதிற்கொள்ளும்
பொன்றிடுமேஉடனுடனே தெளிவுகாட்டும்
தாகுமதிசேய்திசைநாள் முடிவுமேலோர்
சாருமெனப்பாதமருள் கிருபைகொள்வன்
பாகமுடன்மதியுடனே புகர்பொன்சேர்ந்தாற்
பகர்சப்ரதூங்குமஞ்சம் சிவிகையோகம்
வாகுபெருகோபம்வருமசடனுவன்
வருமதிநாள்திசைபலனை வகுக்கலாமே. (கசக)

சேயவனுமட்டமத்தோன் மூன்றோனாகிச்
சேருயிர்க்குஅட்டமமாய் வரினுமாகத்
தூயதொருலக்கனக்கோள் தனக்குஅஞ்சிற்
றோன்றிடவேமுன்னுரைத்த கோளன்வந்தால்
மாயமெனஞானவழி அருள்வந்தெய்தும்
வருமயக்கம்ஒருதினமும் வையானுவன்
நேயமுறவருமனது சுத்தம்பார்க்கும்
நேருவழிகடந்திடுவ னிலைபெற்றோனே. (௧௪௨)

வேறு.

நாலினோன்சுபரா யுச்சவீடதனில் நல்கிடஆரல்நோக்கிடு மாம், சீலமாயாரல் சேரிடம்சொந்தம் சேர்ந்திடத் தனித்திடுமா னாற், சாலவேவரினும் பூமிக்ஷேத்திரங்கள் சார்ந்திடுமற்புமாய்வ ளரும், நாலினோன்பவரா யுச்சமாய்வருமால், நாடிடுமதிகக்ஷேத் திரங்கள். (௧௪௩)

வேறு.

வருமுயிருக்குபயமதி லரவுசேர
வருமுபயோன்பானுமா லிவர்களோடு
தருதுமெனவுயிர்க்கதுநா லதனிலெகித்
தரித்திடவேசுபர்பவர்கள் நோக்காதானால்
கருதுமெனஏகலபி திறமென்றோது
கருதினர்கள்வளருமின்பம் யோகஞ்செப்ப
அருமறைநூற்படிவிதியா லரவுநாளில்
அறைந்தனர்கள்மறையனப காரம்வந்தால். (௧௪௪)

வந்திடுமேவருமுயற்சி தனங்களின்பம்
வருமரசர்வெகுதயவு புகழுண்டாகும்
சிந்தையுடன்வரும்பதிகள் பூமிசேரும்
செப்பினர்களிதுதவறு தரவுமட்டும்
விந்தையுடன்மறையனஞ்சுக் குடையோனெட்டோன்
விளங்குமித்தானக்கோளாய் வரினுமானால்
முந்துமறையோன்திசையில் முயற்சியில்லான்
மொழிந்தனர்கள்பூமியினு லதிகவாழ்வன். (௧ ௫)

சதியாகவுயிர்தனக்குக் கருமந்தன்னில்
தரித்திடவேஅரவுவர மறையன்நோக்க
விதியாகஅரவிருந்தோ னலரியோடு
விளங்குயிர்க்குமூன்றலது ஆறிலானால்
மதியேகேள்வருமரவு திசையிற்காரி
வருமபகாரத்தில்வரு முயற்சியின்பம்
அதிபதியாய்வருந்தனங்கள் பூமிசேரும்
அறைந்தனர்களிதுதவரு தெனவென்றோதே. (கசசு)

ஓதுமெனக்காரியப காரமட்டும்
உரைத்தனர்கள்வருமுயற்சி பூமியின்பம்
சீதமுடன்மால்கொடியோ னபகாரத்திற்
சேதம்வருந்தொழில்முடக்கம் மனதுகஷ்டம்
நீதியுடன்புகர்வருகி லூக்கமுண்டாம்
நேருமபகாரம்வரை முயற்சியின்பம்
ஆதவன்றன்னுடையவப காரந்தொட்டு
அரவினபகாரம்வரை முயற்சியில்லான். (கசஎ)

வருமுயிர்க்கஞ்சாங்கோளன் ஆட்சியுச்சம்
வந்திடவேமறையவனும் நோக்குமானால்
தருதுமெனஅஞ்சாங்கோள் முதலேமேலாய்
சாருசப்ரதூங்குமஞ்சந் தொழிலுங்கிட்டும்:
கருதுபுகழ்வந்தனங்கள் சிவிகையின்பம்
காணுமஞ்சோன்திசைமுடிவு வருமென்றோது
வருமுயிர்க்கஞ்சாங்கோளன் பகைநீசத்தில்
வரவவர்தன்னுடன்பவர்கள் கூடுமாகில். (கசஅ)

கூடுமெனமறையவனும் நோக்காதானாற்
குருகுமஞ்சோன்திசைமுடிவு முயற்சியில்லான்
சூடுமனத்துயரம்வரு மலைச்சல்துக்கம்
தொல்மனைவிட்டேகிடுமே தனமில்லாதான்
நீடுமஞ்சோனுடன்பவர்கள் சுபர்கள்சேர்ந்தால்
நேர்திசைநாள்முடிவுவரை முயற்சியற்பம்
கூடுமஞ்சோன்தானமதைக் குருநோக்குற்றால்
கொடுத்திடுமேமுன்னுரைத்த பலன்களெல்லாம். (கசகூ)

மதியுயிர்க்குநாலோனு யாட்சியுச்சம்
வந்திடவேமறையோனும் நோக்குமானுற்
சதிருடனேமதிவருநாள் முதலேசெல்வம்
சாருபதிவாணிபத்தா லதிகவின்பம்
விதியுடனேவளருதனம் விளைவுபூமி
விளங்குமதிதிசைமுடிவு தனம்வந்தெய்தும்
மதியுயிர்க்குநாலோனுய்ப் பகைநீசத்தில்
வந்திடவேமதிமறையும் நோக்கானுகில். (கரு0)

நோக்கானுய்த்தோன்றுமதி திசையின்செய்கை
நுவலுசமமாகவென வளருமின்பந்
தாக்குமெனப்பாதியின்மேல் முயற்சியற்பம்
சாருதனம்அற்பமென வளருமென்றே
தீர்க்கமுடன்மதியுடனே சுபக்கோள்சேர்ந்தால்
சேருசம்மாகவென முயற்சிகாட்டும்
போக்குமதிவருந்தனங்கள் பூமியின்பம்
புகழ்வளரும்பாவர்களும் விரும்புமென்றே. (கருக)

வேதமாய்வருமுயர்க்கோ ளாரலாகி
விளங்குமிடமாட்சியுச்சம் மறைநோக்குற்ருல்
ஓதுமெனவுயிர்க்கதிபன் திசைநாள்தொட்டு
ஓங்கிவருமுயற்சியெலா மதிகவின்பம்
சீதமுடன்வருஞ்சிவிகை தனங்கள்பூமி
சேர்ந்திடுமேவுயிர்க்கதிபன் திசைநாள்மட்டும்
வேதமாயுயிர்க்கதிபன் சமமாமென்றே
விளங்கியபெண்மாலுடனே சேருமானுல். (கருஉ)

சேருமெனத்தோன்றுயிர்க்கோள் திசைமுற்பாதி
சேர்ந்திடுநாள்வரைமுயற்சி யில்லானுகும்
சாருமெனப்பாதியின்மேல் தொழிலுண்டாகும்
தனம்வளருமின்பசம பலனென்ருேது
கூருமெனப்பாதிவரை முயற்சிசேருங்
குறுகுமுன்கோளுடனரவு தரிக்குமானுற்
சீருடனேவருமூக்க மில்லானுகும்
சேயலைச்சல்மனத்துயரம் பீடைகாட்டும். (கருங)

காட்டுமெனவருமுயிர்க்கோட் கருமக்கோட்கு
கருதுமிடம்சட்டாட்ட வியத்திற்போனாற்
சூட்டுமந்தவருமுயிர்க்கோள் திசைநாள்மட்டும்
தோன்றிடதால்வருமுயற்சி யிலானுகும்
நீட்டுமந்தக்கோள்திசையில் முடிவிலற்பம்
நேர்ந்திடுமேவருமுயற்சி தனஞ்சேராது
சாட்டுமனம்வெகுகவலை யலைச்சல்பீடை
சார்ந்திடுமேதப்பாது தரணிமாதே. (௧௫)

சந்திரனும்வருமுபயக் கோளனுகிச்
சாருமிடம்மறைமனையாய்த் தனிக்குமாகில்
வந்துமக்கோள்பவருடனே புகர்வீடேகி
வந்திடவேமதிதனையே பவர்நோக்குற்றுற்
சிந்தையுடன்மதிமுதலே முயற்சியுண்டாம்
சேருதனம்பூமிபதி காலியின்பம்
விந்தையுடன்மதிவரையுந் தவருதாகும்
விதித்தனர்கள்சமமெனவே வளருமென்றே. (௧௫௫)

மதியுயிர்க்குப்பதினோராங் கோளதாகி
வரினுமிடம்மறைவீடாய் மறையுஞ்சேரச்
சதிருடனேமதிமறையப் பவர்நோக்குற்றுற்
சாருமதிதனதுவரை பீடையேற்பன்
விதியுடனேமதிதிசையி லாரல்புத்தி
விளங்கும்வரைவருமலைச்சல் முயற்சியில்லான்
அதிபதியாய்மதிதிசையி லரவோன்வந்தால்
அறைந்தனர்கள்வருமரசர் தயவுசேரும். (௧௫௬)

சேருமெனவருமுயற்சி மேலாமின்பம்
செப்புநரவாகனமும் புகழுமேற்பன்
சாருதனம்பூமிபதி அதிகமுண்டாம்
தான்சப்ரதூங்குமஞ்சம் வரினுமின்பம்
கூருமதிதிசைவரையுந் தவருதாகும்
குறித்தனர்கள்மலைமகள்மே லாணையென்று
பாருலகிற்பிறந்திடுஞ்சேய் யோகமென்று
பலகணிதநூற்படியே திரட்டியோதே. (௧௫௭)

சுக்கிரனும்வருமுயிர்க்கோ னாறின்கோளாய்த்
தோன்றுயிரிற்பவருடனே தனிக்குமாகில்
தொக்குமிக்கோளதுன்றனையே மதிபொன்கேது
தோன்றுவிழிப்பார்வையினால் நோக்குமானால்
தக்கதெனப்புகர்வரினு முதலேபொன்னன்
சாருபுத்திமுடிவுவரை சமனும்யோகம்
மைக்கருங்கண்விழியணங்கே புகரிற்பத்தோன்
வள்ளுமபகாரமுதல் முயற்சிமேலாம். (கரிஅ)

மேலெனவேவருமுயற்சி தனங்கள்பூமி
விளங்கிடுமேவரும்புகழும் கீர்த்தியேற்பன்
சீலமுடன்புகர்திசைநாள் முடிவுமட்டும்
செப்பினர்கள் தவறுதே தாணிமீதிற்
றூலமுடன்வருமுயிர்க்கோள் சரியனோடு
தோன்றுயிர்க்குக்கூறுமதில் வளருமானால்
சாலவெனவரும்புகரோன் திசைநாள்மட்டும்
சாருமெனவருஞ்சிவிகை யோகனுவன். (கரிசு)

சத்தமக்கோள்வருங்குருதி யாகிமோக்ஷத்
தானமதிற்றரித்திடவே அக்கோளோடு
சித்தமுடனிவன்றனையே பவர்நோக்குற்றால்
சேருமிந்தக்கோள்திசைநாள் வரையுஞ்செய்கை
வித்தகமாய்ப்பாதிவரை முயற்சியில்லான்
விதித்தனர்கள்பாதிவரை வரினுஞ்செய்கை
நித்தமுடன்வாணிபத்தாற் றனம்வந்தெய்தும்
நேர்திசைநாள்முடிவுவரை தவறுதென்றே. (கசூ0)

வருமுயிர்க்கோள்மறையோனுய் நாளின்கோளாய்
வருமுதயகேந்திரத்திற் றனிக்குமாகில்
தருதுமிக்கோள்சசிதனக்கு நாலிலானால்
சாருயிர்க்கோள்திசைதனதிற் சலனங்காட்டும்
அருமறைதூற்படிவிதியாற் றனதிற்பாதி
அதுமுதலேதிசைமுடிவும் வளருங்கீர்த்தி
இருநிதிக்ஷேத்திரம்பூமி நிகரிலாதா
னிவன்ராஜராஜனெனக் கெணிதஞ்செய்பே. (கசுக)

செப்புமெனவெகுயோகன் பின்னும்பூமி
சேரும்நிதிக்குடையவனென் றோதுமென்றே
இப்புவியில்வெகுபுகழோ னறத்தில்மிக்கோன்
இலங்குசிம்மாதனத்தரசன் மறைசொல்லேற்பன்
தப்பியதோர்வெகுஅரச குறவுசேரும்
சாஸ்திரநூல்வெகுஅறிவு மனதிற்கொள்ளும்
துப்பிதழாயிதுதவறு தெனவென்றோதி
சொல்லினர்கள்வெகுபரலாற் றிரட்டிப்பார்த்தே. ()

சூரியன்மூன்றுங்கோளாய்ப் புகர்மாலோடு
தோன்றுயிர்க்காறதில்வளர அதற்குநாதன்
பாருயிர்க்குநாலலது கருமமானுற்
பகருயிர்க்குமூன்றுங்கோள் திசைநான்வந்தால்
சிருட்டனேபாதிவுரை முயற்சியில்லான்
சேருமந்தப்பாதியின்மேல் முயற்சிகாட்டும்
கூருதனம்பூமிபதி சமனுமென்று
குறித்தனர்களிதுதவறு தெனவென்றோதே. (௧௬௩)

சேயுயிர்க்குமூன்றோனு பெட்டின்கோளாய்த்
தினகரன்பாம்புடன்கரியன் புகரினோடு
சாயுமிடமுயிரலது கருமமாதல்
தரித்திடவேயிவர்கள் தனைப் பலர்நோக்குற்றால்
தூயதொருசேய்வருநாட் பாதிமட்டும்
தோன்றுமட்டும்முயற்சியிலான் பாதிமேலாய்த்
தியமனம்வரும்பெரியோர் கிருபையேற்பன்
செல்லுமனம்வேதாந்தம் சிலநான்கற்பன். (௧௬௪)

சரியாகவுயிர்தனக்கு மூன்றிற்கேது
தனித்திடவேமூன்றுடையோன் புகரேயாகி
விதியாகவருமுயிர்க்குக் கருமந்தன்னில்
விளங்கிடவேகேதுதனை மறைமால்பாம்பு
அதிபதியாய்வருமலரி யிவர்கள்நோக்கும்
அறையுமெனக்கேதுதிசை பாதிமட்டும்
துதிபெறவேவருமுயற்சி சமனுமின்பம்
தோன்றுதனம்பூமிபதி காலிசேரும். (௧௬௫)

சேருமெனப்பாதியின்மேல் முயற்சியில்லான்
திகழுமதிதனம்பூமி யழிவுகாட்டும்
கூருமென்மறுதேசந் தன்னிற்போக்கும்
குறுகியதோர்வருந்துயரம் பீடையேற்பன்
சாருகொடிபாதிவரை சலனமுள்ளோன்
சாருமந்தக்கொடிதனையே மறைநோக்குற்றால்
சீருடனேகொடிதிசைநாள் முடிவுமட்டும்
செப்புமெனவருஞ்சிவிகை யோகனுவன். (கசுசு)

சுங்கனுமஞ்சாங்கோளாய்ப் பரிமாலோடு
தோன்றுயிர்க்காறதில்வளரத் தோன்றுமாறேன்
சங்கையுடனுயிரினுக்கு நாலிலேகித்
தனித்திடவேயிவர்கள் தனைச் சுப்ர்நோக்கில்லா
தங்குமெனப்புகர்முதலே திசையிற்பொன்னன்
சாருமபகாரம்வரை தொழிலுமில்லான்
துங்கமுடன்காரியப காரப்போக்கில்
தோன்றிடுமேவருமுயற்சி நாளென்றேதே. (கசுஎ)

ஓதுமெனவருமரசர் தயவுசேரும்
உதவுமெனவருமுயற்சி சமனுமின்பம்
நீதியுடன்வீருந்தனங்கள் பூமிகாலி
நேர்ந்திடுமேசமமதுவாய் வளருமென்றே
சீதமுடன்வரும்புகருங் கீர்த்தியேற்பன்
செப்பியதோர்புகர்முடிவில் முயற்சிதுஞ்சும்
வேதமுடன்வருமலைச்சல் பீடையேற்பன்
விதித்தனர்கள்புகர்திசைநாட் பலனென்றேதே (கசுஅ)

சூரியனுமாறிருகோ ளதிபனுகித்
தோன்றுதயகேந்திரத்தி லுதயக்கோளும்
சாருமறைமாந்தியர வுடனென்றுகித்
தரித்திடவேசுபர்பாவர் நோக்குமானுல்
கூருமெனச்சூரியநாள் முதலேயந்தி
குறுகும்வரைபூமிபதி காலியின்பம்
சீருடனேவாணிபங்கள் சூறைவிலாதான்
செப்பினர்களாகமநூல் வழியாமென்றே. (கசுக

மானுயிர்க்குமூன்றோ.யாறின்கேளாய்
வருமுயிருக்குபயமதிற் புகர்பானோடு
சீலமுடன்தரித்திடவே யிவர்கள்தன்னைச்
சேருமவர்நோக்கிடா தாகுமானால்
சாலவெனமால்முதலே தொழிலுண்டாகும்
சாருதனம்பூமிபதி சமமாய்க்காட்டும்
தூலமுடன்பாதியின்மேல் முயற்சியில்லான்
தோன்றுதனம்பூமிபதி யழிவுகாட்டும். (கஎ0)

மந்தனுயிரின்கோளா யுபயக்கோளாய்
வளருமிடம்பாக்கியவீ டதனிலேறச்
சிந்தையுடனென்பான்கோ ளுதயமேறித்
தினகரனஞ்சோனுடனே தரிக்குமாகில்
விந்தையுடனிவர்கள் தனைச் சுபர்நோக்கில்லா
விளங்குயிர்க்கோள்திசைமுதலே முயற்சிமேலாம்
வந்திடுமேபூமிதனம் அதிகவின்பம்
வகுத்தனர்கள் திசைமுடிவு தவறுதென்றே. (கஎக)

கேதுயிர்க்கேழதனில்வளர் கரியனோடு
கேந்திரத்தோன்வருமுயிருக் குபயமேறி
நீதியுடன்சூரியன்மா னுடனென்றாகி
நின்றிடவேயிவர்கள் மதி கேந்த்ரமானால்
சீதமுடன்கேதுவரு முதலேதொட்டு
சேருதிசைமுடிவுவரை முயற்சியின்பம்
ஓதினர்கள்வருந்தனங்கள் பூமிகாலி
உதவிடுமேதவறுதவ றுதென்றோதே. (கஎஉ)

அரவுமுயிர்க்குபயமதிற் கருமனோடு
அமர்ந்திடவேஅரவிருந்த கிரகநாதன்
திரமுடனேமதியாக அலரிவீட்டிற்
சேர்ந்திடவேவுடனெவர்கள் தரியாதானால்
பரவுமந்தஅரவுதனைப் பவர்கள்நேரக்கப்
பாலனுக்குப்பாம்புமுதல் முயற்சிமேலாம்
வரமுடனேபூமிதனம் கீர்த்திசெல்வம்
வந்திடுமேபாதிவரை தவறுதென்றே. (கஎங)

ஆறுடையோன்லாபக்கோ ளாரலாகி
அட்டமசட்டமதானம் பவர்களோடு
கூறுமிவனிருந்திடுங்கோள் தனக்கிரண்டாய்க்
குறுகிடவேயிவர்த்னையே பவர்நோக்குற்றால்
மீறுமென ஆறுடையோன் திசைமுற்பாதி
விளங்குமற்பமீாகவென முயற்சிகாட்டும்.
ஊறும்பிற்பாதியின்மேல் முயற்சியில்லான்
உற்றமனம்வெகுதுயரம் பீடையுள்ளோன். (௧௭௪)

மந்தனுயிர்க்காறோ யேழின்கோளாய்
வரினுமிடமுச்சமதாய்த் தனிக்குமானால்
சிந்தையுடன்மந்தன்வருங் கிரகநாதன்
சேருயிர்க்காறட்டமத்தி லிருக்குமாகில்
சுந்தரமாய்க்கரிதனையே மறைநோக்குற்றால்
தோன்றுகரிதிசைவருகி லரசர்கோபம்
விந்தையுடன்மனத்துயரம் பீடைகாட்டும்
விதித்தனர்கள்முயற்சியற்பம் வளருமாதே. (௧௭௫)

மாதேகேள்வருந்தனது மேலாமின்பம்
வகுத்தனர்கள்வருமுயற்சி சமனுமென்றே
நீதியுடன்வளருதனம் சமமாய்க்காட்டும்
நேருதிசைபாதிவரை சமனுஞ்செல்வம்
ஓதுமெனப்பாதியின்மேல் முயற்சிமேலாம்
உரைத்தனர்கள்வளருதனம் பூமிசேரும்
வேதமுடன்வருங்கீர்த்தி புகழ்வந்தெய்தும்
விதித்தனர்கள்கரிவரையுந் தவறுதென்றே. (௧௭௬)

ஆர்லிரண்டாங்கோளா யேழின்கோளாய்
அமருதயகேந்திரத்திற் றனிக்குமாகில்
சாருமிக்கோளிருந்திடும்வீ டதிபன்றானும்
சாருயிர்க்குப்பஞ்சமதில் ரவிமாலோடு
கூருசுபர்பவர்நோக்க வந்திரண்டான்
குருதிசைநாள்வரமுதலே முயற்சிதுஞ்சும்
சீருடனேகாரிதிசை வந்ததானாற்
சேய்தனக்குயோகமெனச் செப்பலாமே. (௧௭௭)

மாதேகேள்வருமுயிர்க்குக் கருமநாதன்
வருமரவுகரியுடன்சே யலரிசுங்கன்
சீதமுடன் தரித்திடவே அதற்குநாதன்
சேருயிர்க்கொன்பானலது உயிரிலேக
வேதமுடன்வருமரவு கரிக்குப்பத்தில்
விளங்குமந்தக்கிரகதிபன் சுபர்களோடு
நீதியுடன் தரித்திடவே யரவுவந்த
நேர்திசைநாள்வருமுதலே மனதுவேறும். (௧௭௮)

வேறுமனமேழுடன்நா லேகத்திங்கள்
விளங்குவரைவெகுசலனந் தேகஞ்சிந்தை
கூறுமெனஞானவழி மனதிற்கோபன்
குறித்தனர்கள்வேதாந்தம் புனிதனுவான்
சீருடனேமாதுமைந்தர் வேறதாக்குஞ்
செப்புமெனக்காயாசம் செலுத்தவல்லான்
சாருமெனவரும்பதிவிட் டேகிப்போவன்
சாருபெரியோர்களருள் கிருபைதங்கும். (௧௭௯)

தங்குமெனப்பாம்புதிசை மறையன்புத்தி
சாரும்வகையிதுதவறு தாகுமென்றே,
துங்கமுடன்காரியப காரம்வந்தால்
தோன்றிடுமேவாதசித்தி யமுதுகொள்ளான்
பொங்குமனம்வெகுஅறிவு ஞானசித்தி
போற்றுபெரியோர்கள்சித்தி ஞானியாவன்
சங்கையுடன்வெகுபதிகள் கடந்துசெல்வன்
சாருமெனஞானவழி யறிந்துசெல்லும். (௧௮௦)

செல்லுமனம்வருமுபயோன் கிருபையேற்பன்
செகதலத்தோர்வருமயக்க மனதிற்கொள்வன்
வெல்லுமனம்வருந்துயர மில்லாதுவன்
விளங்கியதோர்வெகுஞர்னி கிருபையேற்பன்
சொல்லுமொழிவெகுஅறிவு தெளிந்துஞானந்
தோன்றிடுமேகாரியப காரம்பாதி
அல்லலில்லான்வரும்பெரியோர் கிருபைகொண்டு
அருள்சுரந்தகெங்கையதிற் றேகம்போக்கும். (௧௮௧)

வருமுயிர்க்குக்கருமமதிற் கருமநாதன்
மதிமகனாய்வந்திடமே அதனிற்பாம்பு
தருதுமெனக்கூடிடவே பவர்நோக்கில்லா
சார்ந்திடுஞ்சேய்வயதிருவே ழொன்றின்மேலாய்
அருமறைநூற்படியெனவே வேடங்காட்டும்
அறைந்தனர்கள் தமுதலே அனேகஞானம்
கருதுமெனஞானவழிக் கிருபையேற்பன்
காசினியோர்வருமயக்கந் தெளிந்துவேறும். (கஅஉ)

வேறுமனைமாதுதுணை புதல்வர்தந்தை
விளங்குமன்னைசுற்றமில்லா மயக்கமில்லான்
சாருபெரியோர்களருள் கிருபைகொள்ளும்
சாஸ்திரநூல்வேதாந்தம் புனிதனுவன்
கூருமெனஞானவழி தெரிந்துசொல்வன்
கொள்ளுமனம்யோகமொடு வாதசித்தி
சீருடனேவரும்பெரியோன் கயிலைநாதன்
சேருமன்பன்வெகுஅறிவாய்த் தெளிந்துவாழ்வன். ()

வாழ்வெனவேஒருதினமு மயக்கமில்லான்
வாதசித்தியாலிவனை யுலகத்துள்ளோர்
சூழுறவேவெகுமனிதர் கூடிநிற்பார்
தோன்றுமந்தமனிதருக்கு வாதங்காட்டான்
ஊழ்விதியால்மால்திசையின் முடிவிற்றானே
உரைத்தனராமிவன்றேக மழிந்துபோகும்
தாழ்வுகெங்கையானதிலே தேகம்போகும்
சாஸ்திரநூலாகமமாய்ச் சாற்றுவாயே. (கஅச)

மாலவனுமுயிர்க்கோளாய்க் கருமனாகி
வருமுதயகேந்திரமாய் மாந்திபாம்பு
சீலமுடன்மறையலரி யுடனொன்றாகச்
சேர்ந்திடவேதிங்களுங்கோ ளாகுமானால்
தூலமுடன்மால்திசைநாள் முதலேபாகி
தோன்றும்வரைவாணிபத்தால் தனம்வந்தெய்தும்
சாலவெனவரும்சமமாய் வளருமின்பம்
சாற்றுதிசையிதின்மேலாய்க் கணிதம்செப்பே. (கஅஎ)

செப்புமெனப்பாதியின்மேல் வளருமின்பம்
சேரும்வழிவாணிபத்தாற் றனம்வந்தெய்தும்
ஒப்பிடவேவருமலைச்சல் பீடைகாட்டும்
உரைத்தனர்கள் தனச்சிலவு வளருமென்றே
தப்பியதோர்மாலுடனே யொருகாளில்லா
சாருதிசைவரைமுழுது மேலாம்யோகம்
துப்பிதழாய்வருஞ்சிவிகை தவறுதாகும்
சோதிடநூற்படியாகத் துணிந்துசொல்லே. (கஅசு)

மதிமகனுமுயிர்க்கோளாய்க் கருமனுகி
வருமுயிர்க்கொன்பதுவதனிற் றனிக்குமாகில்
சதிருடனேமதிமகன்போ யேகுநாதன்
சாருபவருடன்கூடி மறையாதானுல்
விதியுடனேமதிமகனுள் முதலேயந்தி
விளங்கும்வரைமுயற்சியில்லான் குறைவிலாதான்
அதிபதியாய்மதிமகனுள் திசையின்செய்கை
அடைந்தனர்களாகமநூல் வழியாமென்றே. (கஅஎ)

சூரியனுமாறிருவீ டதிபனுகிச்
சுக்கிரன்பாம்புடன்காரி யிவர்களோடு
பாருயிர்க்குக்கருமமதிற் றரிக்கவக்கோள்
பதியுமனைநாதனுமே யுயிர்க்கொன்பானில்
கூருமெக்கோளில்லமதாய்த் தரிக்குமானுற்
குறித்தனர்கள்சூரியனுள் திசையின்செய்கை
சாருமெனச்சூரியநாள் முதலேபாதி
சார்ந்திடுமேவருமுயற்சி சமமென்றேதே. (கஅஅ)

ஓதுமெனவருமலைச்சல் தேகபீடை
உதவுமனம்வெகுகவலை பொருள்கள்சேதம்
சீதமுடனுற்றதுக்கம் தாரம்கோபம்
சேர்ந்திடுமேசூரியநாள் திசையிலாரல்
வேதமுடன்சூரியநாள் திசையிற்றிங்கள்
விளங்கியஆறெட்டைந்திற் பிதாவின்செல்வம்
நீதியுடனுதவுமென அதிகபாக்யம்
நேர்ந்திடுமேதப்பாது கெணிதநூலால். (கூஅக)

நூலெனவேசூரியனுள் பாதிமேலாய்
நுவலுமனம்வரினுமின்பந் தனதிலிக்கோள்
சீலமுடன்வருமுயற்சி யில்லானுவன்
செப்பினர்கள்வருந்தனங்கள் குறைவிலாதான்
சாலவெனமுன்னுரைத்த கோட்களோடு
சசிமகன்சேர்ந்திடுமாகிற் சாற்றுமுன்சொல்
தூலமுடன்சேய்க்குதவா தெனவென்றோது
சூரியநாள்திசைமுடிவுந் தோன்றுந்துன்பம். (ककO)

சதியாகவருமரவு முயிர்க்கஞ்சாகித்
தரித்திடவேயரவிருந்த கிரகநாதன்
விதியாகவுயிர்தனக்கு நாலதாகி
விளங்கிடவேயெக்கோட்கள் தரியாதாகத்
துதிபெறவேவருமரவு அதனைப்பொன்னன்
தோன்றுவிழிப்பார்வையினால் நோக்குமானால்
ஆதிபதியாய்வருமரவு திசைவந்தெய்தும்
அதுமுதலேபாதிவரை பலனைக்கேளே. (ककक)

கேளெனவேவளருதனம் சமமென்றோது
கீர்த்திசமந்தாழ்வுவரான் வாழ்வின்மிக்கோன்
சூழுறவேபாதியின்மே லரவுஅந்தி
தோன்றும்வரைகீர்த்திபுகழ் வளருஞ்செல்வம்
வாழ்வுடனேவெகுபுகழோன் ரத்னமிக்கோன்
வளருதனம்வெகுசுகவா னதிகபிடை
நீழுமனம்வெகுசலனம் வரினும்வேத
நிலைபெரியோரருள்கிருபை சலனம்போக்கும். (ककऽ)

ஏட்டுடையோன்வரும்புகரா யுயிரின்கோளாய்
ஏகுமில்லம்வக்கிரன்வீ டாகவக்கோள்
திட்டமுடனென்பான்கோ ளுடனென்றுகிச்
சேருயிர்க்குப்பஞ்சமமாய் மறைநோக்குற்றால்
சட்டமுடன்வரும்புகரோன் திசைநாள்தொட்டுச்
சாருமுன்புபாதிவரை தரணிமீதிற்
கட்டியநல்வருஞ்சிவிகை அரசரின்பங்
கருதுபுகழ்வருந்தனங்கள் வளருமாதே. (ककऽ

மாதேகேள்பாதியின்மேல் முயற்சியில்லான்
வளருதனம்பூமிபதி யழிவுகாட்டும்
வேதமுடன்வ்ருமலைச்சல் தேகபீடை
விதித்தனர்கள்வருஞ்சலனம் ஊர்விட்டேகும்
சீதமுடன்மறுதேசம் சிலநாள்வாழ்வன்
சேருமந்தப்பதிதனிலே தனம்வந்தெய்தும்
ஓதினர்கள் தனபதியாம் புகரின்போக்கில்
உரைத்தனர்கள்வளருமனை யதனில்வாழ்வோன். (கசுச)

சூரியனுமிரண்டாங்கோ ளுச்சமேறித்
தோன்றுமொருசுபருடனே கூடியொன்றாய்க்
கூரியதோர்வருங்கருமக் கோளனுக்குக்
குறித்தபின்கோள்நாலதனிற் றரிக்குமானால்
சாருமெனச்சூரியனுள் முதலேதொட்டு
தனிமுயற்சிமேலான தனங்கள்பூமி
சேருமெனவெகுபேர்கள் வளருமென்று
செப்பினர்கள்சூரியனுள் வரையுமென்றே. (கசுரு)

நாளெனவேசூரியனு மறைந்துநீசம்
நல்கியொருகோளுடனே தரிக்குமாகிற்
சூழறவேகருமனுக்கே யிவர்கள்ரண்டாய்த்
தோன்றிடவேசூரியநாட் பாதிமட்டும்
தாழ்வுதனம்வருமூக்கஞ் சமமென்றோத
சாருமதிபாதியின்மேற் றனங்கள்சேரும்
வாழ்வுபதிவருமுயற்சி லாபங்காட்டும்
வரும்பரிநாள்திசைப்பலனை வகுக்கலாமே. (கசுசு)

ஆரனுமேழாங்கோளாய் வியத்தின்கோளாய்
அமர்ந்திடந்தன்வீடதுவா யலரியோடு
சீருடனேமதிதனக்கு நாலிலானால்
செப்பியதோராரால்திசைப் பலனைக்கூறு
சாருதனஞ்சமமதுவாய் வரினுமின்பம்
சார்ந்திடுமேவெகுசுபர்கள் கீர்த்தியில்லான்
பாருலகில்வருந்தந்தை யோகத்தாலே
பகர்ந்திடுமேசேய்திசைநாள் முழுதுமின்பம். (கசுஎ)

வருமுயிர்க்குமூன்றதினு லரவோனேக
வளருமந்தவீட்டிடையோன் மறைகேதோடு
தருமுயிர்க்கொள்பானதனிற் றரிக்குமில்லம்
சாருபவர்வீடாகிச் சுபர்நோக்கில்லாக்
கருமமெனமுன்னுரைத்த அரவோன்றன்னைக்
கரிமதிபொன்சேப்கொடியோன் நோக்குமானால்
அருமறைநூற்படிவிதியா லரவோன்நாளில்
அதுமுதல்முற்பாதிவரைப் பலனைச்செப்பே. (கூஅ)

செப்புமெனவளருதந்தை யோகத்தாலே
செல்வனென்றுபாருலகிற் புகழ்ந்துநிற்பார்
முப்பிடிபின்பாதிமுத லரவுஅந்தி
முடிவுவரைவெகுதனவா னதிகயோகன்
தப்பியதோர்வரும்பதிக்ஷேத் திரங்கள்பூமி
சார்ந்திடுமேவெகுபுகழோன் ராஜகோபம்
துப்பிதழாய்தனச்சிலவு வாழ்வில்மிக்கோன்
சோதிடமாயிதுகெணித வாக்கென்றேதே. (கூகூ)

ஆறிருகோளிலாபக்கோள் கரியனாகி
ஆட்சியுச்சந்தரித்திடவே புகரொன்றாகப்
பாருயிர்க்தோள்தனக்கிவர்கள் கருமமாதல்
பகருமவர்க்குபயமதாய் வளருமானால்
சாருமெனக்கரிதிசைவந் தேற்கிற்பீடை
சார்ந்திடுமேவெகுசலனம் தனங்கள்சேதம்
கூருமுற்றதுக்கம்வருந் திசைவந்தேற்கக்
குறுகிடுநாள்தனதுவரும் பாதிமட்டும். (உ0ப)

பாதியின்மேற்சமமதுவாய்த் தனம்வந்தெய்தும்
பகருமனம்வெகுசலனம் பீடைகாட்டும்
போதமுடன்முன்திசையில் மால்வந்துற்ற
போதுதிசைபாதிவரை குறைவிலாதான்
வேதமுடன்வளருதனம் பூமியின்பம்
விளங்கிடுமேவாணிபத்தால் வளருஞ்செல்வம்
ஓதுமெனப்பாதியின்மேல் முன்போலென்று
உரைத்தனர்கள்குறைவுவரு கரிநாட்செய்கை. (உ0க)

மதிமகனுமேழோனுய்க் கருமக்கோளாய்
மதியுடனென்றுகியதோ ரில்லமேகிச்
சதிருடனேவுயிர்தனக்கு மறையாதாகித்
தரித்திடவேமாந்திமறை சேய்நோக்குற்றால்
அதிபதியாய்மதிமகனுள் முதலேமேலோர்
அறைந்தனர்கள்வருமுயற்சி தனங்கள்பூமி
விதியுடனேவருங்கீர்த்தி அதிகயின்பம்
விளங்கிடுமேபாதிவரை தவறுதாகும். (௨௦௨)

தாகுமெனப்பாதியின்மேல் அரசர்கோபஞ்
சார்ந்திடுமேவருமுயற்சி துலையுமென்றே
யேகுதனம்பூமிபதி தவறுதாகும்
இன்பமனுபவிப்பனெனக் கெணிதக்கூறு
வேதமுடன்வருங்கவலை வளருமாயுள்
விளங்குமரிவையர்மோக னுயுட்போகும்
பாகமுடன்திசைமுடிவி லலைச்சல்பீடை
பகருதனம்வெகுசெலவு சலனமுள்ளோன். (௨௦௩)

மாதேகேள்வருமுயிர்க்கோள் நாலின்கோளன்
வருங்குருவாய்மாந்தியுட னுதயமேறச்
சீதமுடன்மதிதனக்கு மறையனேழாய்ச்
சேர்ந்திடவேதோன்றியசேய் தனக்குயோகம்
வேதமுடன்மறைமுதலே மதிநாள்புத்தி
விளங்குவரைமுயற்சியிலான் சமத்தில்வாழ்வன்
ஓதுமெனஆரல்புத்தி யதனிற்பொன்னன்
உதவுதிசைவரைமுடிவு முயற்சிசேரும். (௨௦௪)

கரியுபயக்கோளனுமாய் மூன்றின்கோளாய்
கதிரவன்றன்னுடன்கூடி யுயிர்க்கெட்டேகச்
சரியுடனிக்கோள்வளரு மதிபன்றுனும்
சாருமிக்கோள்தனக்கெனவே மறையுமானுல்
விரிகுழல்சேர்கரிவருநாள் முதலேபாதி
விளங்குதனம்பூமிசமச் செட்டுலாபம்
துரிதமுடன்பாதியினில் முயற்சியில்லான்
தோன்றுதிசைமுடிவுவரை சமமாம்யோகம். (௨௦௫)

ஆறிருகோள் பஞ்சமக்கோ ளர்ரலாகி
அமருயிர்க்கு ஆரலது யெட்டிலேகச்
சாருமிக்கோள் தனைச்சுபர்கள் நோக்காதானுல்
சாருமிந்தத்திசைமுதலே முடிவுமட்டும்
சிருடனே தந்தையரால் வளருமின்பஞ்
செப்புநரவாகனமுஞ் சுகமுங்காட்டுங்
கூருமுனிதிசைமுடிவிற் பிடையுண்டாங்
குறித்தனர்களாயுள்தவ ருதென்றேதே. (உ0சு)

அட்டமத்தோன்லாபக்கோள் மறையனுகி
அமருமிடம்நீசமதாய் மதிகேதோடு
திட்டமுடன்தரித்திடவே யிவர்கள்வந்த
சேருமில்லோன்கேந்திரமா யிருவர்வந்தால்
சட்டமுடன்மறைதிசைநாள் முதலேயோகம்
சார்ந்திடுமேவெகுபுகழோன் தனங்கள்பூமி
தட்டுவராமன்னனென்று கெணிதமாய்ந்தோர்
சாற்றுமவர்வெகுசுகவான் கீர்த்திசெப்பே. (உ0எ)

செப்புமெனப்பாதியின்மேல் முன்போலென்று
சேர்ந்திடுமேவெகுதனவான் குறைவிலாதான்
தப்பியதோர்மாதரினுல் வளரும்பீடை
சார்ந்திடுமேவெகுபிலமாய்ச் சலனங்காட்டும்
லுப்பிடவேதனச்சிலவு வரினுந்துன்பம்
உரைத்தனர்களுயிரழியுந் தவருதென்று
துப்பிதழாய்சோதிடநூ லாய்ந்தமேலோர்
சொல்லினர்களாகமநூற் படியென்றேதே. (உ0அ)

மாதேகேள்மூன்றுடையோ னுகியாரேன்
மறையோனுய்மாந்தியுட னுபயமேறச்
சீதமுடன்மறைவரினுங் கிரகநாதன்
சேருபுகர்கொடியுடனே கரிவீடுற்றுல்
ஓதுமெனமறையவனுள் முதலேபாதி
யுரைத்தனர்கள்வருஞ்சமமாய்த் தனம்வந்தெய்தும்
வேதமுடன்பாதியின்மேல் முன்போலென்று
விதித்தனர்கள் தவருதே தரணிமீதில். (உ0கூ)

ஆறிருகோள்வருமுயிர்க்கோள் கரியனுகி
அமருயிருக்குபயனெடு கூடுமாகிற்
கூறுசுபர்நோக்காமற் பவர்நோக்குற்றால்
குறித்தனர்கள் கரிவருநாள் முதலேபாதி
சேருதனம்பூமிபதி சமனுமென்று
செப்பினர்கள் தாழ்வுவரை குறைவிலாதான்
பாருலகிற்பாதியின்மேல் முன்போலென்று
பகர்ந்தனர்களாகமநூ ல்றிந்தமேலோர். (உ௧0

மந்தனும்நாலாங்கோளா யஞ்சின்கோளாய்
வருமுயிர்க்குக்கருமமதிற் றனிக்குமாகிற்
சிந்தையுடனேயிக்கோள் மதிசேய்நோக்கச்
செப்பியநாலஞ்சாங்கோள் திசையின்செய்கை
விந்தையுடன்திசைமுதலே பாதிமட்டும்
விதித்தனர்கள்சமமதுவாய் தனம்வந்தெய்தும்
வந்துமிக்கோள்பாதியின்மேல் முன்போலென்று
வகுத்தனர்கள்கணிதவித மாய்ந்தமேலோர். (உ௧௧)

மாலவனுமுயிர்க்கோளாய்க் கருமனுகி
வருமுயிர்க்கொன்பானதனிற் றனிக்குமாகிற்
சீலமுடன்மாலிருந்த வீட்டுநாதன்
சேருபவருடன்கூடி மறையாதானுல்
நூலமுடன்மால்வருநாள் முதலேபாதி
தோன்றுவரைமுயற்சியிலான் சமத்தில்வாழ்வோன்
சாலவெனப்பாதியின்மேல் தொழிலுமற்பம்
சார்ந்திடுமேசமபலனுய் வளருமென்றே. (உ௧௨)

மதிவீட்டிற்குருவிருக்கப் புகருச்சமானுல்
வரும்புகருமுயிற்குமறை யாதிடத்திலிருக்கில்
மதிமகனுஞ்சேர்ந்திடமுப் பத்தெட்டின்மேலாய்
மரணமட்டும்சிவிகைதன வானுகக்கொடுக்கும்
மதிமகனுமிருந்திடத்தி லாரனுமேசேர்ந்தால்
வருஞ்சிவிகையிவன்றனக்கு உதவாதென்றறைநீ
குதிரைமுதல்தனமுதவு முன்போலத்தாங்கும்
கோதையரேகண்டுரைநீ குருவிருந்தபுலனே. (உ௧௩)

வேறு.

சந்திரன்தனக்குநாலே மொன்பதில்மறையோன்சார
அந்தணனுடனேவெள்ளி யமர்ந்திடப்பாவர்சேர்ந்தால்
வந்தவன்சுபரில்லாகில் வருநிதிகுபேரன்போலச்
சுந்தரவதனத்தாளே சொல்லிடுதவறுவாழ்வே. (உகச)

பாம்புடன்குருவுமொன்பான் பதிந்திடக்குருவீடாகில்
ஆம்பலக்கனத்தின்கோள னதிககேந்திரத்திலானால்
எம்புறுமுப்பத்தஞ்சி லிவன்கனயோகசாலி
தாம்படுமளவும்யோகந் தவறிடாதென்றுகூறே. (உகஎ)

சட்டியுற்பனமாம்ராகு சார்குருவுயிரிற்றுவப்
பட்டதுநட்புற்றாலும் பகரக்கோள்மறையாதாகில்
அட்டலட்சிமியாயோக மவன்சென்மமரணமட்டுங்
கட்டிடுஞ்சிவிகையின்பங் கருதுவன்றனவானென்றே. (உகசு)

குருவுயிராகக்குருவின்மூன்றதனிற் கூறியயுகர்தரித்திருக்க
வருபுகர்முன்னால்மதிதனித்திடுமால் வளர்புகர்பின்பருதியுமோ
டருணனுமேகஅரசனுக்கமைச்ச னாகுவனவன்புகழுடையோன்
கரியின்மேலேறித்திசையதிகாரம் கருதுவன்நிதிபுதைத்திடுமால்.

ஆலமுன்சொன்னதானத் தால்சேர்ந்திவெனுகில்
சேலனவமைச்சயோகம் செல்வமுந்தவறுதென்பர்
ஓலமும்புகழுங்கீர்த்தி யுயர்தனம்பூமியுண்டாம்
சீலவானெனப்பேரெய்துஞ் சேர்ந்திடுஞ்சிவிகையென்றே. ()

கன்னிநாலதுவேயாகக் குளாமதிசேயுங்கூட
மன்னுயிர்குருவுற்றாலும் மற்றொருகோளில்லாதால்
நன்மையும்பூமிமேலாம் நற்றனஞ்சிவிகைகாட்டும்
அன்னியர்பொருளுண்டாகு மதிகமுண்டயலார்பூமி. (உகஙு)

வேறு

காரியுங்கேதுடன்கூடி வாக்கில்நிற்கக்
கருதுயிரில்மாந்திதனித் திருப்பானுகில்
நேரவற்குப்பின்னாரல் தனிப்பானுகில்
நேருயிரோன்பவர்வீடே யேகினாலும்

பாரவற்குமுன்யோகங் கொடுக்குமென்பர்
பகர்நாற்பத்தஞ்சுபய மதுவுந்துஞ்சும்
வீரமுளதரித்திரம்வந் துதவுமென்று
விளம்பினர்கணிதநூ லாய்ந்தமேலோர் (உஉ0)

உயிர்தனக்குப்பத்திற்பாம் புறுமேயாகில்
ஓதுமிடங்குருவீடா யிருந்திட்டாலும்
பயிலுமவன்றிசையதிக பலனும்பின்னும்
பலமுயற்சிதனயோக சாலியாவன்
செயதனமுமழிவாகும் ராகுபின்னுற்
சேர்ந்திடும்பிற்பாதியந்தி யத்திலாதல்
கயதனமும்கிரகம்வே ருகுமென்பர்
காட்டுபொருளழியாது கருதுமானே. (உஉக)

மானேகேள்குருவுயிர்க்கு மறையுமாகில்
வருங்குருவும்பகையாகப் பவரோடெய்தால்
ஏனமவன்திசையினில்முற் பாதிமட்டும்
இயல்புதனமழியாதென் றியம்பலாகுந்
தானபலன்பிற்பாதி யேற்குங்காலை
தனமழிவுமுயற்சியொழிந் திடுமாம்பின்னும்
வானினமும்பூமியுங்கா லியுமுண்டாகும்
வரும்பூமிபலன்கொடுக்கும் வாழ்த்துமண்மேல். (உஉஉ)

கரிமூன்றிற்குருவோடே யேகுமாகிற்
கரிபலவீடிருந்திடுகிற் கரியன்தன்னில்
வரும்பூமிஅன்னியரா லுதவுமென்பர்
மரணதிசையதிற்பூமி வாழ்வுண்டாகும்
புரிகுழலாய்தரித்திரங்க ளுதவாதென்றும்
புரிந்திடுநீசனிதிசையிற் கிரகம்வாழ்வன்
கருகுழலாய்கரிநாலா மிடமேயானுற்
கருதுமிடம்சூரியனுங் கருதிச்சொல்லே. (உஉ௩)

வேறு

சந்திரனுபயநட்பாய்ச் சார்ந்திடலாரலோடால்
வந்தவன்றனக்கோர்நாலஞ் சால்புகர்மால்பாம்பெய்தால்
தந்திடுமுயிர்க்குக்கேந்த்ரம் சற்குருவிருப்பானுகில்
இந்திடம்பவர்சேராதா லிவன்தியோகமென்றே. (உஉச)

என்றிடுமரசர்மிக்கோ ரிணை தனபதியாம்பின்னும்
மன்றினில்வழக்குவித்தை வளர்ந்தவனுடையோனுவன்
சென்றிடும்பூமிகாலி திரவியத்தளவின்மேலாம்
இன்றுவாகனங்களியாவு மெய்திடுமென்றுசொல்வாம். (உஉரு)

சொல்லிடுதனத்தின்மிக்கோன் துணிவுடனுற்குமீய்வன்
வல்லியேமரணமட்டும் வருந்தனமழியாதென்பர்
சொல்குருமறைவராகிற் றோன்றதிற்பாவருற்றால்
அல்லிருங்குழலாய்கேளா யதின்பலனறிகுவாயே. (உஉசு)

ஆமதியோகமஞ்ச மற்பமேதனவானுவன்
சேமவாகனங்களெய்துஞ் சிதறிடுஞ்சிலநாளென்பர்
ஏமிடுபூமிகாலி யியற்றிடுமுதாரியாவன்
சாமசாஸ்திரங்களாய்வன் சாதகன்தவத்தின்மிக்கோன். (உஉஎ)

வேறு.

மதிதனத்தோனுகவரில் லேகியாரல்
வந்திடத்தானதற்கிரண்டு நான்குமேழில்
துதிபெருபார்ப்பான்தனிக்க வத்தானத்தோன்
சூரியரால்மாலாதாற் பவர்வீடெய்தாற்
பதிபெருமுப்பதின்மேலாய்த் தனமும்யோகம்
பலத்ததனமழிவாகு மரணமட்டும்
விதிவழியாமிக்கணிதமொழிப் படியேயாய்ந்து
விரித்துரைத்தார்மேலோரு முலகத்தோர்க்கே. (உஉஅ)

வேறு.

சந்திரனுரலோடே சாரிடம்மறையாதஞ்சில்
வந்திடப்பாம்புசுத்த மாகிடச்சுபர்வீடாக
விந்தைநாற்பதின்மேலொன்றின் மேலதாய்ச்சதாசிவத்தைத்
தந்திரமனதிற்பூசை சாற்றுவனதிகவாழ்வே. (உஉகூ)

வேறு.

மாந்திபனிரண்டாக யோகனதிற்சேர
மாந்திதனக்கிரண்டுநான் கேழதனில்மதியன்
சேர்ந்திடவுமவற்கிரண்டு நான்கதனிற்காரி
திரந்தரிக்கவவன்சென்ன பாக்கியவானுகும்

பாந்தமுளவயதொன்று தன்னுள்ளாகப்
பகர்பூமிகாலியுடன் சேர்க்கைகள் வந்துதவும்
காந்தினியும்வதனமதி நேராளேகேண்மின்
கருதியயாகமத்தின்முறை கற்றறிந்தோரறைந்தார். (௧)

அறைந்திடுநீயிரவுதவி ரத்துதயசயனத்
தருங்காலம்போசனனும் வயதைம்பதின்மேற்
குறைந்திடாப்பொருளுதவுங் கொடுப்பவனேயாகும்
கோளேழோன்சூரியனோ டிருந்திடிகிலவற்கு
வருந்துதயமதிமாலுங் குருவிருப்பாராகில்
வருங்குருவும்நட்பாட்சி யுச்சமதாகிடுமால்
இருந்தவற்குப்புகர்மறையா திருந்திடவும்புகர்க்கு
எழிற்சேய்முன்பின்னு லிருந்திடுவன்பலனே. (உ௩௧)

வேறு.

குருவுக்குவாக்கி லாரலும்புகருங் கொடியனுமிருந்திடிலவற்கு, வருகணக்கனுமே மறைந்திடாதேகில் மாலவர்க்கிரண்டு நான்கேழிற், பருதியுமிருக்க நாற்பதின்மேலாய்ப் பத்தினிலிரண்டினுட்பதியில், இருநிதியெடுப்பன் தானமூன்றதின்மேற்செப்பிடுகயல்விழிக்கண்ணாய். (உ௩உ)

வேறு.

கரிபுகருங்குருவீட்டி லுயிர்க்காறேயாகிக்
கருதுகுருலாபத்தே யொன்பதனிற்சேயோ
டரியுறவுந்துலையுயிராய்ப் பாம்பிருக்குமாகில்
அவன்தனத்துக்கதிபதியா மரசரின்பனுகும்
புரிகுழலாய்த்தாலமுப்பத் தஞ்சின்மேலாகும்
பொருள்சிவிகையமச்சனென யிரங்காதேவாழ்வன்
அரியோனுமமைச்சன்பல முடையோனுமெனவும்
அறைந்திடுநீதனமிருப்போ டாசனமுந்தவறார். (உ௩௩)

வேறு.

கரிமதிமாந்தி குருவின்வீடேகிக் கரிதனக்கைந்தினிற்குருவாற், பரிதிமுன்பின்னு லிருந்திடிலதிக பாக்கியவானெனப்பகர்

வாம், புரிகுழற்பாம்பீ ராறிலுற்றாலும் புகழ்ந்திடுதாலமுப்பது வாம், பிரியமாய்முன்னோ ருரைத்தனரதுவும் பெயர்நிரியாண முன்னழிவாம். (உகச)

அஞ்சின்கோள்மாலா யருக்கனுஞ்சேயோ டமரவுமஞ்சிட ங்கரியாய், வஞ்சியேடியிர்நின் றிடம்வரைசுத்த மாகிடச்சதுர யில்லதுவுந், துஞ்சிடாதரவு மொன்பதிலிருக்கத் தொல்புகழு ரைப்பதற்கெளிதாம், வஞ்சியேயரச னமச்சனென்னுரைப்பாம் வருதனமவ்வளவாமே. (உகரு)

வேறு.

அரிவீட்டிற்பருதியுடன் மாந்தியெய்தா
லரிமுன்மால்பின்பாம்பு யிருக்குமாகிற்
கரியோனுந்தன்வீடால் முன்பின்பாங்கர்
கருதிடவும்பகருயிர்க்கு மறையுமானாற்
பெருகுதனவானாகும் பூர்வீகத்திற்
பின்னழிந்துதரித்திரத்தைப் பிதற்றுமென்பர்
வரும்வழிமாதேகேளா யோகமில்லான்
வயதறுபத்தஞ்சதின்மேல் நட்டபலனாமே. (உகக)

சொல்லுமதிக்கேழதனிற் குருவுற்றாலுஞ்
சொற்குருவும்பகைநீச மாகுமானால்
வல்லமதியுடன்பாவ ரேகுமாகில்
வருமதியனுயிர்க்குமறைந் திடுவானாகிற்
செல்வனென்னத்தனயோகங் கொடுக்குமென்பர்
திகழ்பொருளுஞ்செட்டுபலித் திடுமாந்துங்க
வல்லிநல்லாய்பொருளடக்க முடையனுவன்
வரும்லோபித்தனம்பயிற்றும் வடிவின்மானே. (உகஎ)

வல்லியரேதேள்வீட்டிற் குருவுற்றாலும்
வருமுயிருக்கொன்பான்பன் னென்றேயாதல்
எல்லையவன்றிசையபகா ரத்தினுள்ளாய்
இயல்புதனமழிவாகுந் துயரமுண்டாம்
சொல்லுமதுகடந்துமவன் றிசைதன்மட்டுஞ்
சொற்பூமிகனயோக முயற்சியுண்டாம்
வல்லிபொருளழியாதென் றியம்பலாகும்
வாணிபஞ்செட்டுடன்பலிக்கும் வகுத்தவல்லாய். ()

வேறு.

அருந்திடமுதயதானத் துடையவுனாலாக
இருந்திடங்கரியுற்றாலு மிவர்தனக்குபயத்தானன்
பெருந்துயர்மறையானுகிற் பேரிடம்புவரில்லாதால்
அருந்தனவானுமென்று அறைந்திடுமவனிமிக்கோய். ()

அவனியிற்புகழுங்கீர்த்தி யதிதனமுடையோனுகிப்
புவனவாகனங்களெய்தும் பொற்புறுபூமியோட்டால்
கவனமுங்கொடுப்போனுவன் கருதறம்புரியுமென்றுஞ்
சிவதவமுணர்ந்தோர்சொன்னார் சேயினுக்குபயத்தானன். ()

தானெனச்சென்மத்துக்குத் தருமறைந்திடுமேயாகில்
ஏனமாம்பாவர்சேரி லியலற்பத்தனவானுகும்
கானவாணிபங்கள்செட்டு கருதுவனொருவர்க்கியான்
மானினங்குழலினுலே வருந்தனமழியாதென்றே. (உசக)

அழிவுறுவானும்பின்னு மவன்வயதைம்பதுக்குந்
தெளிவுறவதன்மேல்மிக்க திரவியம்நாசஞ்சொல்லும்
வழிதனம்படுத்துமென்பா மவன்றிசையலைச்சல்காட்டும்
அழிவொருவாரம்ரெண்டு அமர்ந்திடுமென்றுசொல்லே. (உசஉ)

சொல்லதின்மேலாமிக்க துணையுறத்தனமும்பூமி
எல்லிடுமரணமட்டு மியலன்னமாடைதட்டான்
இல்லறவாழ்க்கையாவ னிவன்வயதெழுபத்தொன்பான்
வல்லிகேள்சகடாம்வாழ்வு வருவதுநிசமென்றாதே. (உசங)

வேறு.

காரியுயிர்கேந்திரமாய்ச் சேயோடுற்றால்
காரிபகைசேயுநட்போ டுச்சமானுல்
பார்வயதுநாற்பதின்மே லுபயமட்டும்
பகர்பூமிஅதிலாபம் பலிக்குமென்பர்
வாரியதிசயமாகப் பலனுண்டாகும்
மரணதிசையிற்பூமி லாபமாமால்
வீரகரியுச்சம்நட்பா யிருக்குமானுல்
விளங்குபயிர்பூமிபலி யாதென்றாதே. உஙச)

வேறு.

அரசனுமவரில்லத்தி லமர்க்கேந்திரமேயாகில்
விரைசெறியவர்க்கோர்நாலில் வீபத்துதனிப்பாராகில்
திரமுளபொன்னனுக்குச் சேரவீராரோனாறில்
வரமுளஞானிசேரில மந்திவந்துற்றாற்கேளே. (உசரு)

கேள்வயிதீரெட்டின்மேற் கேடிலாவாழ்வுமெய்தும்
வாள்விழிமாதேமன்னர் மதிப்புடன்யோகந்தங்கும்
நீள்புவியறிவுமேலாய் நேர்ந்திடுந்தனவானுகும்
தாழ்வன்றிச்சிவிகையோகந் தரிப்பனும்மரணமட்டே. (உசசு)

மீட்டுடன்மதிவேறாக வாழ்ந்திடுமுன்போற்கோட்கள்
திட்டமாயிருப்பராகிற் சேரிருபதின்மேல்நாலில்
விட்டிடுமுயற்சியுண்டாம் வியனுடன்தனமோடற்பம்
கட்டியதனவானுகுங் கன்றுவாகனமும்நீக்கே. (உசஎ)

வேறு.

வாக்கினுக்குடையோன் சேயதாய்நாலேழ் வந்திடிலவர்க்குக்கேந்திரத்திற், றாக்கியகுருவும் நின்றிடப்பூமி சார்ந்திடுமிருபதுமஞ்சில், நோக்கியசதுர மாமதின்மேலாய் நுவலலாம்பூமியிற்கெடுதல், தாக்கிடுமுபய மதனின்மேற்பலனைத் தந்திடும்பூமியுந் தயவாய். (உசஅ)

வேறு.

உயிர்தனக்குடையநாத னுவந்தவஞ்சொன்பான்தன்னில்
இயனுடனிருக்கவல்லா லிசைந்தமோனுடனேபாரில்
தயிரியவானுய்த்தந்தை சற்குருகீர்த்திமானுய்
அயிலுடைமுருகன்பாத மன்புடன்போற்றுவானே. (உசகூ)

வேறு.

வாக்கினுக்குடையோ னுதயகேந்திரத்தில் வளர்சனியாப்க்குருவுடனே, நோக்கிடிலவற்கு நிலவுகேந்திரத்தி னுருவாற்பாக்கியமுதவுப, தாக்கியசெனன நாள்முதல்மரணந் தயங்கியகாலமுள்வரையும், வாக்கினிற்பாவர் வேறுறுமாகில் வருவதேயழிந்திடும்வயமாய். (உகுஂ)

வேறு.

மால்குருவுமொருவீட்டி லொருபாவருடனே
வந்திடவத்தானமதுக் குடையோனும்பவராய்
சீலமுடன்பஞ்சமமே ழொன்பானிற்றரித்தால்
சேருமவன்றனக்குயிரோ ஞென்பானின்மேலாய்ச்
சாலமுடனரசரின்ப முயற்சியவர்க்குதவும்
தனவாழ்வுபூமியுடன் கொடுக்குமெனப்பகர்வாய்
பாலனையமொழியாளே வுயிரளவுந்தனமும்
பதிமீதிற்றட்டிடா தென்றுமிகப்பகரே. (உ௫௧)

வேறு.

அன்னமேதனத்தில் மதியனின்றிடுகிலவனுடன்மாந்தியுஞ்
சேர்ந்தால், பின்னையோருயிர்க்குச்சதுரமததனிற் பீதகன்வெள்
ளியாயிருக்கில், அன்னவன்றனக்குப் பூமியிற்போக மறைந்திடுந்
தனமதிலாகுங், கன்னல்நன்மொழியாய் மரணமட்டதுவுங் களை
த்திடா தேன்றிடுகருவாய். (உ௫உ)

மாலவன்ரவிசேய் ராகுடன்கூடி வந்துகேந்திரமதிலிருக்க,
நீலனுங்குருவுந் தனமுடன்லாபம் நின்றிடப்புகர்மதி கேந்த்ரம்,
தூலமாய்வயது நாற்பதிற்சிவிகை துலங்கிய பிரமசன்யாசம்,
பாலனுக்கறுபத் தெட்டதாம்வயதிற் பரகெதிமோட்சமு மடை
வன். (உ௫௩)

வேறு.

அப்புரமத்தானத்துக் கதிபனுமத்தானத்தில்
செப்புநட்பாட்சியுச்ச கேந்திரகோணஞ்சேரில்
தப்பிலாத்தனமுமிபூமி சாஸ்திரவேதஞானம்
இப்புவியதனிலியாரும் வணங்கச்சன்யாசியாவன். (உ௫௪)

வாசமாமெட்டூராறில் மதிகுருசகடமாகத்
தேசமாம்விடைமீன்நண்டு சிலைகுருமதியேதோன்ற
ஆசமாம்மாந்திநின்ற அதிபதிகேந்த்ரஞ்சேரில்
நாசமாஞ்சகோதரங்கள் நாற்பதுவயதிலாமே. (உ௫௫)

ஆமெனச்சயனபோக மதிகமாந்தொழிலிலாபம்
ஓமெனயோகஞானம் உற்பனங்கெவுனந்தீர்த்தம்
தாமெனத்தாரம்வேந்தர் தனம்பொருள்வந்துசேரும்
நாமெனப் பூமிக்ஷேத்திரம் நற்கீர்த்திபலவுண்டாமே. (உ௫௬)

வேறு.

மதிபுகர்கேந்த்ரம் வாக்கினுக்குடையோன் மந்தனோடாட்சி பெற்றிருக்கத், துதிதனம்பெருகும் சுந்தரதேகன் சொல்லினால் யாவரும்வணங்கும், நிதிதிருசிவிகை லெட்சுமிசுமுகன் நிறைந்த வெண்சாமரமுடனே, விதியுடனிந்தப் படிவருமென்று மேதினி யாவர்க்கும்விள்ளே. (உருஎ)

கருமபஞ்சமத்தோ னுயிரினில்மறைந்து கதிர்மகன் சசியை யுங்கருதத், தருமனும்புகரும் ஆட்சியாயுச்சம் சனிதிசைபுகர்க திருணில், வருமமாய்ப்பிதிர்க்குக் கருமமுஞ்செய்வன் வயதுமு ப்பானுடனுறில், பிரமசன்யாசம் சிவிகைசாமரமும் பிரபல கீர்த்தியும்வருமே. (உருஅ)

புகர்கதிர்லாபம் கேந்திரம்பணிமால் புனிதமாய்ப்பொன்ன வன்பார்க்கச், சிகரகோபுரங்கள் திருப்பணிகூடம் செய்துடன் முடிக்கவும்வல்லன், தகரமால்கேந்த்ரந் தருமனும்பார்க்கச் சக லமானவற்குமேகுருவாம், நிகரிலாவிஷ்ணு பூசையும்நேமம் நெடு கலும் சிந்தையினினிதாம். (உருகூ)

செப்பியபூமிக் கதிபனுங்கேந்த்ரம் செய்திடச்சுகத்தினுக்கு டையோன், நட்புடனுட்சி யுச்சமுஞ்சேர ராகுவும்பத்தினில் வாழ, இப்புவியதனில் யாவரும்பணிய எண்டிசைபுகழ்வதாற்ற னமும், ஒப்பிலாப்பூமி யாடையாபரணம் யோகசன்யாசியா யுதி ப்பன். (உகூ0)

மன்னியமதியும் பானுவுஞ்சனியும் மறைந்துதானங்களிலி ருக்க, இன்னிலம்புகழக் கதிர்மகன்திசையி லினியசேய் ராகுவி னூணில்; அன்னியபதசந் தன்னிலும்வாச மதிகமாய்த்தனம் பொருள்சேரும், உன்னியவயது நாற்பதுவரையும் யோகசன் யாசியாயுதிப்பன். (உகூக)

அருக்கனும்புகரும் அம்புவிதனக்கே அமர்ந்திடவொன்ப தாயுயிரில், வெருககொள வுயிர்ரான் நீசமாய்த்தோன்ற வெண் மதிதனக்குப் பஞ்சமமாய்த், தருக்கியசனியும் நாலினிற்றனிக் கச் சாற்றினர்புகர்திசை முதலாய்ப், பெருக்கமாமுயற்சி கிரக வாகனமும் பிரபலனுகவேயிருப்பன். (உகூஉ)

இருப்பனுமிரவி திசைதனில்மாதா வெய்திடுஞ் சிசுக்களுந் தோன்றி, மரிப்பர்கள்மதிநா ளதனிலேதந்தை மரணமாம்பலன்களுமதிகம், விருப்பமாய்க்கல்வி புராணகேள்விகளும் வேண்டுவன் மனதறிவுடையன், செருக்கினால்மதியிற், குருவினிற்பலன்கள் செப்புவாய்மேன்மை பெற்றிருப்பன். (உ௬௫)

வாக்கினில்மாலு மதிக்குப்பத்திடமாய் வந்திடவாக்கின் கோள்நீசம், தாக்கியேசெவ்வாய் ஸ்ரவதில்வந்தால் தந்தையர் செல்வமுமுடையான், நாக்கினாற்சொன்ன மொழியெல்லாம்நயமாய் நவின்றனர்பெரியவர்தானும், ஆக்கமாம்பூமி அதிகமாய்விளங்கு மைந்தினிலிருந்தவன் திசையில். (உ௬௬)

வேறு.

சுங்கன்மனைதனிலரவு தனிக்கவக்கோள்
தோன்றுபவருடன்கூடி மறைவிடேகச்
சங்கையுடன்வருமரவு முயிர்க்குநாலாய்த்
தரித்திடவேகருமனுக்கு மறையுமானால்
துங்கமுடன்வருமரவு முதலேபாதி
தோன்றியசேயவன்றனக்கு முயற்சிமேலாம்
பங்கமிலாவருந்தனங்கள் பூமியின்பம்
பகர்ந்தனர்கள்யாவரினு மதிகவாழ்வோன். (உ௬௫)

வாழ்வெனவேபாதியின்மே லலைச்சல்காட்டும்
வருந்தனங்களுற்றதுக்க மனதிற்பீடை
சூழுறவேஅரசர்பயம் பொருள்கள்சேதம்
தோன்றுபதிக்ஷேத்திரங்க ளழிவுகாட்டும்
தாழ்வெனவேராகுதிசை முடிவிற்றூரம்
சாய்ந்திடுமேஅதுவழியாய்த் தனங்கள்சேதம்
நீழுமனமந்தியமில் லாதுவாழ்வன்
நேர்திசைநாள் வருமம்பலனைப்பலனென்றோதே. (உ௬௭)

சதியாகவருமரவு முச்சமேறிச்
சாருயிர்க்குமறையாமல் மறைநேர்க்குற்றால்
விதியாகஅரவுமுதல் முயற்சிமேலாம்
விளங்குதனம்வரும்பதிக்ஷேத் திரங்களின்பம்

கெதிபெறவேவருஞ்சிவிகை அரசரின்பம்
கீர்த்திசப்ரதூங்குமஞ்சம் அரவுமட்டும்
சதியாகவருமரவு பகைநீசத்திற்
சாருயிர்க்குமறைந்திடவே குருநோக்கில்லா. (உகள)

குருநோக்கார்தோன்றியதோர் அரவுவந்தால்
குறித்தனர்கள்வருமுயற்சி தனங்கள்பூமி
தருமனதுவளருமின்பஞ் சமமென்றோதி
சாருமெனவருந்திசைமுற் பாதிமட்டும்
அருமறையோர்விதிப்படியே பாதிமேலாய்
அறைந்தனர்கள்வருமுயற்சி லாபமின்பம்
வருந்தனங்கள்பூமிபதி வளருமென்று
வகுத்தனர்கள்பாதிவரை தவறுதென்றே. (உகஅ)

சனியன்மனைதனிலரவு தனிக்கவக்கோள்
சாருயிர்க்கேந்திரமாகித் தரிக்கவக்கோள்
புனிதமுடன்பவர்வீடாய் வளரஅக்கோள்
பொன்னுடன்மால்வீடதனில் வளருமாகில்
இனிதமுடனுயிர்க்கதிபன் கதிர்பொன்வெள்ளி
யிவர்களிலேயெவராகி லிரண்டஞ்சேழாய்ச்
சனியரவுநோக்கிடதால் வளரும்பாம்பு
தங்கியபொன்சனிவளருந் திசையிற்சாரும். (உகக)

சாருமெனஅரவுதிசை யதனிலின்பம்
சார்ந்திடுமேபலன்தனங்கள் தரிக்கலாகும்
சேருமதிமுயற்சியிலான் திசையிற்கஷ்டம்
செப்பியபொன்திசையதனில் முயற்சிகஷ்டம்
சாருலகில்மிகவலைச்சல் செல்வந்தானுந்
தங்கிடதாலித்திசையிற் பாதிசாரும்
கூரியமுன்திசைபாதி யதனின்மேலாய்க்
குறுகிமணஞ்சேர்ந்திடும்வீ டதனில்வாழ்வன். (உஎ0)

மாதெனவேலக்கனமா யுதிக்கவக்கோள்
வருமதிக்குக்கேந்திரமா யொன்றேழ்பத்தில்
நீதியுடன்புகர்சீ மில்லாதுகில்
நின்றிடுங்கோள்திசையதனில் முயற்சியேற்கும்

திடவன்வருமுயற்சி சமமேயாகும்
உறையுமதில்வரும்பாக்ய முதவுமாதே
வேதமாய்மதியுயிர்க்கோள் தனிக்கப்பன்னேன்
விளங்குமனை தனிற்புகர்கே துடன்வந்துற்றால். (உ௭௧)

வந்திடவேகேதுவரு மதனிற்சேய்க்கு
வருமலைச்சல்முயற்சிசமம் வரினுமாகும்
சிந்தையுடன்திசைவளரும் வருமுன்பாதி
செப்பிடுவன்வருமுயற்சி சமமென்றோது
விந்தையுடன்பாதியின்மேல் முயற்சிமேலாம்
விளங்கிடுமேஅவன்திசைநாள் முடிவிலாகும்
சுந்தரமாய்ப்புகர்வரினு மாட்சியுச்சம்
தோன்றியநாள்திசைபலனைக் கெணிதஞ்செப்பே. ()

செப்புமெனப்புகர்முடிவுஞ் சிவிகையின்பஞ்
சேருமதில்வெகுபூமி தனங்கள்சேரும்
தப்பியதோரரசர்புகழ் கீர்த்திசெல்வஞ்
சாருமதில்வெகுபேர்கள் புகழ்தன்யேற்பன்
ஒப்பவந்திடும்புகரோன் பகைநீசங்கள்
உற்றிடவேஅவன்திசைநாள் முடியமட்டும்
இப்புவியில்வருமுயற்சி சமமதாக
உரைத்தனர்களாகமநூல் தெரிந்தபேர்கள். (உ௭௩)

வேறு.

புகருமேமூன்றினுச்சம் பொருந்திடவதற்குநாலிற்
றகரிலான்கொடியோனாரோன் சாரவேயிருப்பானாகில்
நிகரிலாத்தனவானவன் நீதமாய்முப்பத்தெட்டில்
தவறுவதில்லையென்றார் தாரத்தால்யோகஞ்செப்பே. (உ௭௪)

யோகமேஅவளாலாகும் ஓழியுமேஐம்பத்தெட்டிற்
பாகமாய்மனவிசொந்தம் பகரலாம்பதினாலாறில்
போகமேஅனுபவிப்பன் புத்திரன்நாலாய்த்தோன்றும்
வேகமாயிருப்பன்சொன்னேன் விஷத்தினாலவன்றன்யாக்கை. ()

வேறு.

மேஷவங்கிஷத்திற் புதனுடன்குளிகன் விளங்கிடக்காரியும், பொன்னும், வாசமாயுயிர்க்குச் சிங்கஅங்கிஷமாய் வந்திடநால

தாயிருக்கில், பாசமாமதியும் சேயுமேசெம்பொ னங்கிஷம்பதிந் திடப்புகரும், ஆசையாமுயிரோன் காரிவீடதனி லங்கிஷமாக வேவந்தால் (உஎச)

வந்திடுஞ்சேய்க்குமனவியரிரண்டாய் வகுத்தனர்புகர்திசை யதனில், தந்திடுங்கதிரோன் மதிசெவ்வாய்திசையுந் தருவது வாணிபம்பூமி, முந்தியகிரகஞ் சகடமும்பிலமாய் மோசமில்வாழ் ந்திடவல்லன், சிந்தையில்ஞானத் துடன்சிவபூசை செய்திட அதிகமாந்தனங்கள். (உஎஎ)

ஏழினிற்புகரு மிருந்திடவுயிரோ னிணங்கியவொன்பதில் நீசம், தாழ்விலாக்குடும்பன் பஞ்சமன்மாந்தி தன்னுடன்நாலிற் கேந்திரமாய், வாழ்வுடன்மதியு மறைந்திடவுயிர்க்கு வாளரா சனிபுதனஞ்சிற், கோள்குருதிசையிற் கொடுத்திடுமேன்மைகூறி டுமங்களசுபமாய். (உஎஅ)

வேறு.

செனித்திடுமொன்றில்வெய்யோன் திங்கள்மூன்றினிலேகாரி
இனித்தசற்குருவுங்கேது மிருந்திடப்பத்தைப்பார்க்கத்
தனித்திடப்பத்தில்ராகு சார்ந்திடக்காரிவீடாய்
மனுக்குலத்தரசனாலே வாழுவன்முயற்சிமேலாய். (உஎகூ)

வாழுவனட்டமத்தோன் வருந்திசையதனிற்கஷ்டம்
தாழுவன்வித்தைபுத்தி சார்ந்திடுங்குணவான்யார்க்கும்
ஆளுவன்கரியிற்பாதி அணுகிடில்முயற்சிகாட்டும்
தாழ்விலைபுதநாள் தன்னிற் சார்ந்திடும்பலன்களெல்லாம். (உஅ0)

வேறு.

மாதேகேள்வருமுயிரோன் புகராய்ச்சென்மம்
வரவவற்குஏழதனில் மதியேவாழ
ஆதாரமுயிர்தனக்கு ஐந்திற்பொன்னன்
அணுகிடவேராகுடனே குணமாய்க்காரி
நீதியுடன்வீடதுவாய் நிற்கவன்னோன்
நின்றிடவேகுருவீடாய் முறையவந்தால்
சீதமுடன்புகர்திசையில் முயற்சிகாட்டும்
செல்வம்பிதிர்தனமுடனே சிறப்பாய்வாழ்வன். (உஅக)

மாதேகேளேழாங்கோள் மதியாய்லாபம்
வந்திடவேநீசமுடன் மாலோன்நாலில்
நீதியுடன்சேய்மனையா யதனிலேகி,
நின்றிடவேகருமனுக்கு மறையுமானால்
ஓதியவொன்பான்கோளன் திசைநாள்தொட்டு
உறுதிபுகர்பாதிவரை பொருளும்பூமி
சீதமுடன்சமமதுவாய்ப் பிதாவின்செல்வம்
சேருமவர்திசைபாதி பிலமென்றோதே. (உ அஉ)

மாதேகேள்வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோனக்கோள்தான் மதிக்குப்பத்தில்
கோதாய்கேளுயிரதனிற் காரிநிற்கக்
குளிர்மதிக்குஅஞ்சதனில் வெய்யோன்புந்தி
நீதியுடன்குளிக்னுமே வாக்கிற்புக்க
நின்றிடமேரூபர்வீடாய் வந்தசேய்க்கு
வேதன்விதிதவறுது ஆயுள்தீர்க்கம்
விதித்தனர்களறுபதென மூன்றுஞ்சேரே. (உ அங)

சேரவேவயதுரைத்தே னின்னங்கேளு
தேகமதுகருப்புடனே வெளுப்புமாகும்
பார்தனிலேயோகமுள்ளான் முயற்சிபூமி
பாக்கியமும்பெருகிவரும் பவுசுமுள்ளான்
தாரமுமேவாலிபமாய்த் தோன்றுந்தையல்
தான்கோபிசமமதுவாந் தேகமாகும்
கோரமுடனவள்தனக்கு மார்பிற்பிடை
கொடுத்ததனால்முப்பதுநாள் குறையுந்தேகம். (உ அச)

வேறு.

துலாத்தினிற்புகரா யிரண்டில்மாலவனாய்ச் சூரியன்சேய்
உன்மூன்றில், நிலாவுடனேழில் நின்றிடப்பொன்னன் நிகரிலாக்
காரிவீடாகக், குலத்துடனரவு கூடிடக்காரி குருவுடனாறினில்
மறையத், தலத்தினிற்கொடியோ னிலாபமாமாந்தி தங்கியவிய
த்தினில் வருமாம். (உ அடு)

வருமெனக்குழவி வளர்த்தியாஞ்சிகப்பி மான்நிறம்போல,
வேயிருப்பள், பெருவதுவித்தை கணக்குடன் வழக்காய்ப்பேச

வன் கீர்த்திமானுவன், தருவதுமுயற்சிபூமியுங்கிரகந் தனமுடன் வரவரப்பெருகும், சுருதியாய்மறையோர் தனக்குமேநல்லன் சோர்விலாப்போக போக்கியனும். (உஅசு)

மேடலக்கனத்தில் மதியுடனரவும் விளங்கிடப்பத்தினிற் புகர்சேய், நாடிடக்குருவுங் கூடிடக்கரிமால் நவின்றனரிரவியோ டில்லம், கூடிடக்குளிகன் நாலிலேகுறுகக் கொடியவனேழினிலா கப், பாடினர்கெணித நூலினுற்பலன்கள் பாலகன்றனக்குமே யென்றார். (உஅஎ)

பாலகன்றனக்கு ஆயுளுந்தீர்க்கம் பகர்வதுஅரவுநாள்வரை யிற், சாலவேகருமம்மூன்றுமேயாகுந் தையலரேகமாம்போகன், மேலவர்தார மனேகமுஞ்சேர்வன் வேதியர்முதலினோர் பகை யாம், தூலமாம்வளர்த்தி கோபியனழகன் சொல்லினுற் பயமு டன்நயமாம். (உஅஅ)

இரவியும்புகருங் கேதுடன்மதிக்கு யிருந்திடக்கேந்திரம் நாலிற், பரவியவுயிரோன் நாலின்கோள்குருவாய்ப் பதிந்திடம் மேஷமாமைந்தில், கரவிலாப்பத்தோன் மறைந்திடவெட்டிற்கா ரியுநாலிற் கேந்திரமாய்த், திரமுடன்குசனும் ஏழினில்மதியுஞ் சேர்ந்திடவுச்சமாய் மறைந்தால். (உஅகூ)

மறைந்திடுமாந்தி பன்னிரண்டதனில் வந்திடப்பிறந்தசாத கர்க்கு, நிறைந்திடுமாயுள் தீர்க்கமாங்குருவில் நேர்ந்திடும் பிதாவு டகருமம், குறைந்திடாமுயற்சி கூடிடும்பிலமாய்க் கொடுத்தி டுங்குழந்தையுந் தோன்றும், அறைந்திடுமன்னை கருமமுங்குரு விலாகிடும்பலனெலாமுதவும். (உகூ0)

வேறு.

மதியுயிர்க்கு மறைந்திடச்சேயவன்
நிதிதனத்துடை யோன்மறைகேந்திரம்
பதியுயிருக் கிரண்டினிற்கேதுடன்
துதிபெருமங்கை தோன்றிடச்சொல்லினோம். (உகூக)

சொல்லினோமுயிர் தன்னுடன்பத்தின்கோள்
நல்லகோளுடன் நாலினிற்றோன்றிடில்
வல்லமங்கை மருவுதல்தன்னிலே
அல்லவத்தன மாகவேசேர்ந்திடும். (உகூஉ)

மாலவன்தனக் கொன்பதில்மந்தனுய்
நீலவன்றனக் கிரண்டினிற்பொன்னவன்
சாலுயிர்தனக் கஞ்சினேனேழினில்
வேலவன்பதம் வேண்டினுல்யோகமாம். (உ௯௩)

வேறு.

பன்னிரண்டதனி லமர்ந்திடச்சசியும் பதிந்திடப்புகரின்வீ
டாகிப், பின்னிடமன்றிப் புகருமேழோனுய்ப் பிறங்கிடுமுயிரிற்
சேய்வீடால், அன்னியசாதி போகபோக்கியனும் அந்தணன்கரி
திசையாகும், புண்ணியஞ்செய்வன் பொருளின்மேலாசை புனி
தனுர்க்கடுத்த மாஞ்செலவன். (உ௯௪)

கடுத்தமாஞ்செலவன் காரிகைதன்மேற் கைப்பொருள்கொ
டுத்திடான்போகம், தொடுத்தகாரியத்தன் செயமுளான்வஞ்சன்
சோர்விலாவார்த்தை மேற்பிரியன், அடுத்தவர்க்கன்பன் அச
ஞ்சலமுடையன் அந்தணர்தெய்வபத்தியினும், நடுத்தரமானவ
யதுமேசிசுக்கள் நாசமென்றுரைத்தனர் பெரியோர். (உ௯௫)

வேறு.

அட்டமத்தி லமர்ந்திடச்சந்திரன்
திட்டமாய்ச்சேயுங் கேதுமொன்றுகிடச்
சட்டமாய்ராகும் நாலிற்றனித்திடில்
ஒட்டலாக வுரைத்தனர்யோகமாம். (உ௯௬)

வேறு.

பஞ்சமன்மாலாய் நாலின்கோளுடனே பதிந்திடமதிக்கிர
ண்டினிலே, தஞ்சமாயேழோன் சேயுமேபார்க்கச் சற்குருபருதி
க்கஞ்சிடமாய், விஞ்சையாங்கருமன் பாக்கியனுயிரோன் விளங்
கிடக்கேதுடனுயிரில், சஞ்சலமான குளிகனுமிரண்டிற் சார்ந்தி
டப்பிறந்த சாதகற்கே. (உ௯௭)

சாதகன்றனக்கு கிரகமும்பூமி சார்ந்திடும் சகடவாகனமும்
வேதமாய்ப்புகரோன் திசையினில்மாலோன் விளங்கிடிலதிகமா
ம்பலன்கள், போதவேவருமென் றோதினர்புதல்வர் புரிந்திடுந்
தோஷமே பிலமாய், ஓதினர்பெரியோ ரரவுடன்சாப முதவிடுந்
தெய்வத்தாற்பீடை. (உ௯௮)

பிடைகாதலிக்குப் பிதிர்வழியதனாற் பெருத்திடும்விரோத த்தாலிப்போ, நாடவேநீசம் வாதையும்பிரேத நாட்டமுந்துஷ்ட தேவதையும், தேடவேவரினுஞ் சிசுவுக்குத்தோஷம் செப்பினார் நிவிர்த்தியாற்றீரச், சாடையில்மாயன் சாந்தியுஞ்செய்து தாயெனுந்தேவியை வணங்கே. (உகூகூ)

வணங்கவேசோம் வாரத்தில்விரதம் வருடம்மூன்றினுக்கு மேயிருவர், இணங்கியேயிருந்து இளநீராவின்பா லினியதேன்களபமுங்கூட்டி, மணங்கொளத்தேவி சிவனுக்குஞ்சூட்டி மருவிலாவில்வவர்ச்சனையும், கணங்களில்நந்தி தன்னையுங்கூட்டிக் கருதியேசெய்திட விதிப்பாய். (கூ00)

விதிப்பதுஆவின் நெய்யுடன்விளக்கு வெண்மரைநூலினுலமைத்து, மதிப்பதுஅனநெய் வேத்தியமுதலாய் வகையுடன்செய்து நீமுடித்துத், துதிப்பதுகதிரோன் வாரத்திற்பொங்கல்சோர்வறச் செய்துமேபின்னும், பதிப்பதுகந்தன் காங்கெயன்வேலோன் பதமலர்பணிந்திடப் போமே. (கூ0க)

மோவதால்முன்சொல் பாவங்களெல்லாம் பொடிபடத்தீர்ந்திடும்பின்னே, ஆவலாய்மனவி துதிகையாற்சிசுக்க ளாண்பெண்ணு மமைந்தனர்பிலமாய், காவலாய்க்கருமச் சந்ததிதீர்க்கங் காட்டினார் பெரியவர்நூலால், ஏவலாங்காரி நாளிலேவிரத மிருந்துதான் விஷ்ணுவைத்துதியே. (கூ0உ)

வேறு.

மதிதனக்குக்கேந்திரத்திற் பொன்னவனுமரவும்
வந்திடவேஅவர்க்கேழி லுயிரின்கோள்கேதும்
பதியுடனேமதிதனக்கு நாலிற்கேந்திரமாய்ப்
பதிந்திடவேபாக்கியன்மால் காரிவீடாகில்
துதிபெறவேகாரியுந்தான் பாக்கியன்மால்வீடாய்த்
தோன்றிடவேஅரவுதிசை பாக்கியனுளந்தி
விதியுடனேஅற்பமுடன் முயற்சியினற்போவன்
விளங்குபுகர்தனில்மேன்மை வேண்டிடுவன் திரமாய். ()

திரமாகும்ராகுதிசை பாதியின்மேற்பலனும்
சிறப்பாகவரவரவே சேர்ந்திடுமென்றுரைத்தார்
புரவலனுங்குருதிசையி லந்தணர்விரோதம்
பொருந்திடினும்வருந்திடினுஞ் சமமாமென்பர்

பரமாகும்முயற்சியுளான், பாவையற்கேயன்பன்
பலித்திடுமேபூமியினாற் பலனதிகமாகும்
உரமாகக்கரிதிசையிற் பாக்கியங்கள்பெருகும்
உற்றசெல்வங்கிரகமுமாய்ச் செப்பினர்கள்பெரியோர்.()

வேறு.

மதியுயிர்க்கோளன் மாலவனாகி வந்திடஅவற்குமேலாபம்,
துதிபெறஅவர்க்குக் கருமனும்புகரும் தோன்றிடவொன்பதாய்
வரினும், கெதிபெறவிருப்பன் மாலவனாளிற் கீர்த்தியுந்தனங்க
ளுங்கிரகம், விதியுடன்முயற்சி யாகிடுமென்றே விதித்தனர்தமி
ழறிந்தோர்கள். (கூ0கு)

வேறு.

திரவியத்தானத்தோனுஞ் சேர்ந்திடவிலக்கனத்தில்
வரமுடன்கேந்திரத்தில் வளர்குருவிருந்தால்யோகம்
பரவியவினைகள் துன்பம் பாழ்படவொழியுந்தானே
திரவியத்தோனும்வேறாய்ச் செல்வமுமொழியுமென்னே. (கூ0சு)

வேறு.

அருக்கன்வெள்ளி சனியுமாக அஞ்சுநாலிற் றோன்றிட
வெருக்கொள்பாவர் நீசமாக விளங்கியேழில் நின்றிடச்
சுருக்கமாக அற்பயோகம் சொல்லலாகும் யேகமாய்
இருப்பனென்று கெணிதமாக யிந்தயோகம் உரைசெய்தார். ()

மதியுமஞ்சு புகருமாறு மந்தனோடு குளிகனும்
சதியதாக அட்டமத்திற் சார்ந்திருந்த யோகமே
அதியமான வயதுநாலு அஞ்சுரெட்டி யானதிற்
பதியுமான சிவிகைமஞ்சம் பகரலாகும் யோகமே. (கூ0அ)

வேறு.

அஞ்சினுக்குடையோன்வீட்டி லமர்ந்திடக்குருவேயானால்
தஞ்சமாமொன்றுநான்கு கேந்திரம்சனியேயானால்
வஞ்சியாரலேயோக வானெனஅவளாலாகும்
குஞ்சரத்துடனேயாவன் கோளிலாதிருப்பானாகும். (கூ0கூ)

ஏழினுக்குடையோனுட்சி யிருந்திடஅரவஞ்சேர்ந்தால்
பாழ்படவொழியுஞ்செல்வம் பகரலாம்மனவியாலே

தாழ்விலாத்தனவானுகும் சாற்றினார்முப்பத்தேழில்
ஊழ்விதிப்படியால்மேலோ ருரைத்தனர்கெணிதநூலால். (௩௧௦)

வேறு.

வாக்கினில்மதியும் நட்பதாயிருக்க வளருமவ்வீட்டுடைநாதன், தீர்க்கமாயொன்று நாலிலேயேழு திரமுடன்பத்தினிலிருந்தால், வாக்கினுற்சொன்ன மொழிதவறாது வழக்கெலாந்தீர்த்திடவல்லன், பாக்கியனவன் பகையிலாதிருப்பன் பான்மையாமவனுடலயதே. (௩௧௧)

வேறு.

வாக்கினில்மறையோனுச்ச மாகஅவ்வுடையநாதன்
தீர்க்கமாயாட்சியுச்சம் சேரிடம்பிலமாவானுல்
பாக்கியம்பூமிகீர்த்தி பதிமதிஅமைச்சன்போலாம்
வாக்கினேன்வேறதானுல் வரும்பலனெல்லாமாய்வே. (௩௧௨)

மாயவர்க்கதனிற்பாம்பு வரஅக்கோள்மாறினின்றுல்
தீயதாஞ்சபலரோகம் சேரவர்க்கதுமேலாகா
ஆயமுப்பதனின்மேலாய் அற்பமாமுயற்சிசெல்வஞ்
சேயுறும்பலமாமென்று செப்பிடுமறையோனுக்கே. (௩௧௩)

புகருடன்பாவர்சேரா திருக்கினுமறையானேனும்
புகர்திசைபலனுண்டாகும் புகழதன்முயற்சியுண்டாம்
புகர்மறைந்திருப்பானுகிற் புகர்பலன்அற்பமாகும்
புகரிலேபொருந்தும்நோக்கம் புகழ்செயமுயற்சியுண்டே. ()

சேயுடனிரவியாகச் சேர்ந்தவர்க்கிரண்டிற்புந்தி
மாயிறைவீடுசுத்தம் வரவெட்டில்மதிகேதாகத்
தாய்வழிப்பகையுண்டாகும் தந்தையாற்செல்வஞ்சுத்தம்
நாயகியாலேவாழ்வன் நாடினார்கெணிதநூலோர், (௩௧௫)

வேறு

வெய்யவனும்புந்தியுடன் கன்னியிலேயிருக்க
மேதினியிலுதித்திடுஞ்சேய் குணங்கடனையுரைப்பேன்
பைய்வேகேந்திரத்திற் பொன்னவனுஞ்சுங்கன்
பான்மையாயவற்கிரண்டு நாலினிலேகேதும்

மையாரும்விழியாளே யிப்படியேயிருந்தால்
வாகனயோகனசாலி வழக்குரைப்போனுவன்
வையமெலாந்தனக்குநிக ரில்லையெனமதிக்க
மதித்தனர்கள்கெணிதவித நூலதனையாய்ந்தோர். ()

வேறு.

மீனலக்கனத்தில் வேந்தனுமிருக்க விளங்கிடச்சந்திரனல வன், பானுவுந்தானு மேடமாய்த்தோன்றப் பார்க்கவன்பாண்டி யிலேற, ஆனதோர்மந்த னுட்சியிலிருக்க அவர்பலன் கெணித நூல்விதித்தார், ஞானமாமரவு வாக்கிலேசேர நவின்றனரையிரு வயதில். (௩௧௭)

ராசயோக்கியனும் ஞானகாரகனும் நல்மொழிவசனமேயு டையான், வாசவன்யோகம்யிருந்தரசாள்வன் வழக்குகள்மதித் திடவுரைப்பன், தேசமேமுதலாய் திசைகளும்ஆள்வன் செல்வ னுந்தனமெலாஞ் செலுத்தும், பூசையிலதிகம் யாவருமதிக்கப் புண்ணியசெல்வனுமிருப்பன். (௩௧௮)

குருவுடன்திங்கள் கோளிலாவீட்டிற் குறித்திடக்கேந்தி ரம்நாலிற், சுருதியாய்ச்சுங்கன் அவற்குமேயிரண்டிற் சூரியன் சனியிருப்பானல், உறுதியாய்க்கெணித பலன்களைவகுத்து ஓதி னர் பெரியவர்தாமும், இருதியாலவன்றன் யோகமேமதிக்க யின்னிலத்தவர்க்கொப்புமரிதே. (௩௧௯)

வாக்கினிற்புந்தி யுச்சமாயிருக்க வசமுடன்சேயுமேயிருந் தால், தீர்க்கமாயவற்கு வாக்குமேகுழறும் தீவுசொல்மொழிவ னென்றுரைப்பாய், நாக்கினிற்சொல்லும் வாக்கியமெல்லாம் நவி லுதற்கிசைவிலாதொப்பாம், பாக்கியவானுய்ப் பாரினிலிருந்தும் பயனிலை கணிதநூற்பாரே. (௩௨௦)

பத்தினிற்குளிக னதற்குடையோனும் பான்மையாய் நட்பு விடதனில், மத்திபமாக வொன்றுநான்கேழில் வளர்குருராகுவு மிருந்தால், சத்தியமாகக் கெணிதநூல்விதித்தோன் தனபலன் சொல்லவென்றுரைத்தார், முத்தியாயவற்கு வரும்பலனற்பம் மொழிந்தது மிப்படியதனுல். (௩௨௧)

துலாத்தினிற்சேயும் புந்தியுமாகச் சூரியனவருடன்கூடப் பிலத்துடனவருக் கொன்றுநான்கேழிற் பிலமுடன்மதியுமே

தனிக்கக், கலக்கமில்லாத யோகனேயாவன் காரியனமச்சற்கு நிகராய்த், தலத்துடனிருந்தும் யோகனேயாவன் சாற்றினாரிவ னிலையுரைத்தார். (௩௨௨)

உரைத்தனர்பெரியோ ருயிர்க்குளோன்வீட்டி லொழுங் குடனிவரிருந்தாலும், வரைத்ததுவயதோ ரறுபதுமுன்று வாலி பப்பிதிர்கர்மமுடையோன், கரைத்துமேயொளிப்ப னிருபதுநா லிற்காதலி அவனுடன்சேர்வள், விரைத்தது அவன்தன் மொழி தவறாது வேந்தற்கு மொப்பிலாவிரலோன். (௩௨௩)

வேறு.

மான்புகர்கன்னிநீசம் வருமுடன்பலன்தான்வைத்தே
தேன்மொழிவெய்யோன்நீசம் துலாத்தினிற்புந்திகூட
வான்பரிநட்பதாகில் வளருகேந்திரத்தில்மந்தன்
தானிருப்பதுவேமேஷம் நீசமாயிருக்குமாகில் (௩௨௪)

அவருடபலன்தான்சொல்வேன் ஐங்கரன்பிதாவந்தாலும்
தவறிடாப்பலன்களெல்லாஞ் சாற்றிடுபதிமூன்றெட்டிற்
பவர்வரச்சுபரேசுங்கன் பார்க்கவன்திசையில்யோகம்
தவறிடாதென்றுயோக சாலியான்சிவிகையோகம். (௩௨௫)

கன்னிலக்கனமாய்த்தோன்றக் கரியவன்மாந்தியோடு
இன்னிதமாகவாக்கி லிசைவுடனிருப்பனாகில்
மன்னனாய்ச்சொல்லலாகும் மந்திரிதனிப்பானாகிற்
சொன்னதுகோளானாவன் துணிவுடன்கோட்கள்சேர்ந்தால். (௩௨௬)

கொண்டலக்கனமேதோன்றக் குளிகனுமதனிற்சேரப்
புண்டரீகன்றான்சுங்கன் புந்தியும்பகைநட்பாக்
மண்டலத்ததிபன்யோக மதிக்கலாங்கெணிதவாக்காற்
கொண்டலக்கனத்தில்மாந்தி கூடிடவில்லையானால். (௩௨௭)

மாந்தியும்வேறுவானால் வரும்பலனெல்லாமாயும்
சாந்தமாயவன்தன்யோகம் சாற்றினாரற்பமாகும்
ஆய்ந்ததோர்கெணிதவாக்கா லறிவினாலுரைத்தார்மேலோர்
பாந்தமாயிருப்பானாகும் பகையிலைபாரிலென்றார். (௩௨௮)

சிங்கலக்கனத்திற்றோன்றத் திங்களுமதனிற்சேரச்
சிங்கையாய்க்குருவுஞ்சுங்கன் சந்திருடனிருப்பானாகில்

மங்கையர்யோகமாகும் மாந்தியுமேழிற்சேர்ந்தால்
பங்கமில்லாமலாவன் பாக்கியமதிகமாகும். (௩௨௬)

வேறு.

வெள்ளிபுந்தியிரவிதிங்கள் வியாழனோடுகரியனும்
நள்ளிபாண்டிசியம்யாழில் நாடிநிற்பராகினும்
தள்ளொணாக்குருவுமந்தன் சாரிலுச்சமாகினால்
வெள்ளிமால்வரைக்குமே மேவிநிற்குமரசனும். (௩௩௦)

மந்திரிபுதன்வீடாக மாலவன்குருவீடாகச்
சந்திரனேழிற்சேர சனியுமேகுருவீடானால்
தந்திரத்துடனேமேலோர் சாற்றினார்கெணிதவாக்கால்
மந்திரிநாலில்வந்த வகும்பலன்கெடுதியுண்டாம். (௩௩௧)

மதிமகன்குருவீடேக மாந்தியுமவ்வீடானால்
பதிதனம்பூமிகீர்த்தி பலவிதமாகச்சேரும்
சதியுடனிருப்பன்யோக சாலியென்றுரைக்கலாகும்
விதிமுறையாலேமேலோர் விதித்தனர்கெணிதநூலால். (௩௩௨)

செல்வத்தானத்திற்பாவர் சேர்ந்திடவிரண்டெட்டாறிற்
செல்வத்தானத்தோன்ஆட்சி சேரிடம்பாவர்சேர்ந்தால்
செல்வத்தானத்தோன்நீசஞ் சேரிடம்பகையேயானால்
செல்வத்தானத்தோன்நட்பாய் சேரிடஞ்சுபரேசேர்ந்தால். ()

மதிமகன்அருக்கனோடு மந்திரிவீட்டிற்சேரச்
சதியுடனக்கோள்தானும் சாரவேமாரிநின்றால்
பதிதனம்பூமிசெல்வம் பகரலாமதிகமாகுங்
கெதிபெறவிருப்பானுகும் கேசரியோகமுண்டாம். (௩௩௪)

பார்க்கவன்நிதிவீடேகப் பகர்குருமாறிநின்றால்
தீர்க்கமாய்லாபபோகம் செல்வமுமதிகமாகும்
மூர்க்கமாயிருப்பன்யார்க்கும் முடிவுநாள்தொலையுமட்டும்
மார்க்கமாய்மாந்தியாலே வருநிதிசிலவுண்டாகும். (௩௩௫)

மதியுமேகரிவீடேக மந்தனும்மாறிநின்றால்
பதிதனயோகம்பூமி பாக்கியமதிகமாகும்
துதிபெறஅரசர்யோகன் சொல்மொழிபெலமிலாதான்
மதிகரிதிலசயில்யோகம் வரவரவுயர்ந்தவாழ்வே. (௩௩௬)

இடபலக்கனமேதோன்ற இரவிபொன்னதனிற்சேரத்
திடமுடன்தனத்திற்சுங்கன் சேயுடனிருப்பதாகச்
சகடவீடதனிற்காரி தன்கலையுயிரிற்சேர்ந்தால்
படவரவுயர்ந்தயோகன் பாக்கியம்நிகரிலாதான். (௩௩௭)

பொன்னவன்தனத்திலேகப் புந்தியும்புகரும்நாலில்
இன்னிலக்குடையோன்வீட்டி லிரவியேதனிப்பானுகில்
மன்னுயிருப்பனுகும் மந்திரிவீட்டிற்சேயோன்
தன்னிலேயிருப்பானுகிற் சாற்றலாமற்பவாழ்வோன். (௩௩௮)

பொன்னவன்மூன்றிற்சேரப் புத்திரத்தானம்பாம்பு
அன்னவனதற்குநாதன் ஆறிரண்டதனிற்சேர
மன்னவனுகச்சொல்வன் மதியுமேதன்வீடானுல்
அன்னவன்வேருவானு லவர்பலனற்பமாமே. (௩௩௯)

நாலினிற்செவ்வாயுச்சம் நல்கிடவதற்குநாதன்
மாலவன்வீட்டிற்போனுல் வாகனயோகனுவன்
சீலமாய்ப்புகர்வீடானுற் சிவிகையுமவர்க்குண்டாகும்
கோலமாயிருக்கவல்லன் குடும்பத்துக்கதிகவாழ்வன். (௩௪௦)

அஞ்சினிற்கிழவன்போனு லன்னையர்வழியில்வாழ்வோன்
அஞ்சினிற்புந்திபோனு லமைச்சனென்றுரைக்கலாகும்
அஞ்சினிலரவம்போனு லவர்பலன்கெடுதியுண்டாம்
அஞ்சினிற்குருவும்போனு லந்தணர்வழியால்வாழ்வன். (௩௪௧)

வாக்கினிற்கதிபன்நாலில் வந்திடவதற்குநாதன்
தீர்க்கமாயிருப்பானுகிற்றிரவியம்நிகரில்லாதான்
போக்குடன்மொழியவல்லன் புத்தியிலதிகமாவன்
பாக்கியத்ததிபனெட்டிற் பதிந்திடப்பாவர்பார்த்தால். (௩௪௨)

வாகனம்பூமிகாலி வருநிதியற்பமாகும்
ஏகனென்றுரைக்கவாகு மிவன்மொழிமேலதாகும்
போகமுங்குறைவிலாதான் புத்தியிலதிகமாவன்
ஆகமகணிதநூலோ ரவர்பலனிதனைச்சொன்னுர். (௩௪௩)

பாக்கியத்தானமந்தன் பதியுமேயிருப்பதாகப்
பாக்கியத்தானந்தன்னைப் பார்க்கவனிறைவன்பார்வை
பாக்கியத்தானநாதன் பத்துநாலெட்டிற்போனுல்
பாக்கியமதிகமாகும் பாக்கியத்ததிபனுண்டில். (௩௪௪)

கரியவன்திசைமுற்பாதி கருத்தெலாம்பெலத்தவற்குத்
துரிதமாய்ப்பிணிநோயுண்டாம் சொல்மொழிமறைவதாகும்
பரிமுதலதிகசெல்வம் பாதிதன்செலுத்தவல்லான்
புரிகுழலுயிரோன்வந்தாற் புத்தியும்பெலத்தப்பாகும். (௩௪௫)

பாக்கியத்தானந்தன்னிற் பார்க்கவனுச்சமானாற்
பாக்கியத்ததிபன்றானும் பாவரோடிணங்காதுகிற்
பாக்கியத்ததிபன்றன்னைப் பாவர்கள்நோக்காரேனும்
பாக்கியமதிகமாகும் பார்க்கவன்திசையிலென்றார். (௩௪௬)

பாக்கியத்தானந்தன்னிற் பார்க்கவனுட்சியாகப்
பாக்கியத்தானநாதன் பாவரோடிருப்பானாகிற்
பாக்கியனில்லந்தன்னிற் பாவர்கள்நோக்காரென்னிற்
பாக்கியமதிகமாகும் புண்புடன்மனைவியாலே. (௩௪௭)

பாக்கியத்தானந்தன்னிற் பார்க்கவன்பகைநட்பாகப்
பாக்கியத்தானநாதன் பகைநட்பாயிருப்பானாகில்
பாக்கியநாதன்றன்னைப் பாவர்கள்பார்வையானால்
பாக்கியங்கெடுதியுண்டாம் பலவிதமாகப்போமே. (௩௪௮)

பாக்கியத்தானந்தன்னிற் பார்க்கவன்நீசமானாற்
பாக்கியத்தானநாதன் பத்துநாலெட்டிற்போகப்
பாக்கியத்தானந்தன்னைப் பாவிகள்நோக்கினாலும்
பாக்கியமற்பமாகும் பலபிணியவனைச்சேரும். (௩௪௯)

பாக்கியத்தானந்தன்னிற் பகர்குருவாட்சியாகப்
பாக்கியத்தானநாதன் பார்க்கவனோடுசேர்ந்தாற்
பாக்கியத்தானந்தன்னைப் பானுவும்பார்வையானாற்
பாக்கியமற்பமாகும் பண்புடன்மனைவிடங்கம் (௩௫௦)

பாக்கியத்தானம்பொன்னன் பகைநட்பாயிருக்குமாகில்
பாக்கியத்தானநாதன் பகலவன்வீட்டிற்சேர்ந்தால்
பாக்கியத்ததிபன்றன்னைப் பங்கயன்பார்வையானால்
பாக்கியஞ்செலவுண்டாகும் பாக்கியந்தன்னால்நோக்க. (௩௫௧)

பாக்கியத்தானந்திங்கள் பதியுமேயிருப்பதாகப்
பாக்கியத்ததிபநாதன் பார்க்கவனில்லமாகப்
பாக்கியத்ததிபன்றன்னைப் பளிங்குதான்பார்வையுற்றால்
பாக்கியம்நிகரிலாதான் பாலகன்மதிபோல்ரூபன். (௩௫௨)

பாக்கியத்ததிபன்திங்கள் பார்க்கவனதனிற்சேரப்
பாக்கியத்தானநாதன் பத்துமூன்றஞ்சிலேறப்
பாக்கியந்தன்னைத்தானும் பாவர்கள்நோக்கினாலும்
பாக்கியங்கெடுதியுண்டாம் பாலகன்மாதராலே. (கருங)

பாக்கியத்தானநாதன் பதியுமேயிருப்பதாகப்
பாக்கியத்தானந்தன்னைப் பார்க்கவனிறைவன்பார்வை
பாக்கியத்தானநாதன் பத்துநாலெட்டிற்போனாற்
பாக்கியமதிகமாகும் பாக்கியத்ததிபனாண்டில். (கருச)

ஒன்பதாந்தானந்தன்னி லுயர்குருவுச்சமாக
ஒன்பதாந்தானந்தன்னை யொழுங்குடனருணன்பார்த்தால்
ஒன்பதாந்தானமுன்பின் னேங்கநற்சுபர்கள்நின்றால்
ஒன்பதாந்தானத்தாலே உற்றிடுஞ்செல்வந்தானே. (கருரு)

குருவுடன்றிசையில்யோகம் குபேரனுக்கொப்பதாகும்
வருநிதிபூமிகாலி வாகனம்சிவிகையோகம்
பருதிகண்டதுபோல்நீங்கும் பாலகன்வினைகளெல்லாம்
சுருதியாயிந்தயோகம் சொல்லினர்கெணிதநூலால். (கருசு)

வேறு.

மதியுயிர்க்கு விளங்கிடமாலவன்
சதியுடன்வரச் சற்குருநீசமாய்
விதியுடன்வரு முச்சமும்வெய்யவன்
கெதிபெறத்தனி கேசரியோகமாம். (கருஎ)

யோகமாக வுயர்வுடனேதினர்
ஏகனென்று யிசைவுடன்சாற்றவே
போகமேல்வர விப்படியேவுரை
சோகமாகத் துணிவுடனேதினர். (கருஅ)

ஓதினர்மறை யானவன்நாலினில்
வேதமாக விதித்தனர்யோகமாம்
போதவேவரும் பூமியும்பாக்கியம்
ஓதினரெனச் சாதகன்யோகமே. (கருகூ)

வேறு.

பொன்னவனீராறுகப் பொன்னவர்க்கொன்பான்றானும்
நின்னயலேனுற்றால் நின்னுடன்சுபரிலாதாற்

கன்மமேசேய்வீடாகக் கருதுமீராறின்மேலாய்
நன்னயக்கெங்காஸ்நானம் நவின்றிடுமென்றுசொல்லே. ()

கன்னிலக்கனமேதோன்றக் கதிர்மதியீராறுனல்
இன்னிலம்பிறந்தசேய்க்கு யிருவிழிநாசங்காட்டும்
சொன்னசொல்யார்க்குமேலாம் துணிவுடன்பிலமாய்வாழ்வன்
பின்னையுமிரவிமட்டும் பெருமைநற்குடும்பமாமே. (ரு சுக)

வேறு.

மதிவீட்டில்மதியிருக்கக் கேந்திரத்திற்பொன்னன்
வரவவற்குத்தோன்றிடமே ஏழதனிற்சுங்கன்
சதியாகஅவர்க்கிரண்டிற் றரித்திடவேபூமன்
சனிகுளிகன்தன்வீட்டிற் சார்ந்துமேயிருக்க
விதிமுறையாலுயிர்க்கிரண்டிற் சூரியன்மாலாக
விளங்கியுதோர்மதிமகனுந் தன்வீடானல்
கெதிபெறவேதரணிதனி லுநித்திடுநாள்மரணம்
கேசரியாம்யோகமென வுரைத்தார்மேலோர். (ரு சுஉ)

வருநிதிகள்புகழுடையோன் குடும்பவழியோகன்
வரஅவற்குவெகுநிதிகள் வரவரவேபிலமாம்
கருவழிபால்திசையாள்வன் வேந்தர்குணசாலி
கரிபரிகள்வெகுபாக்யம் நிகரில்லாவாழ்வோன்
தருவுயிரோன்கனசாலி யிறக்கும்நாள்வரைக்குங்
கனயோகசாலிநிதி களுக்குடையோனுவன்
பெருவிதமாயேகமென வுரைத்தார்மேலோர்
பேணிடுவன்பெண்பதுநால் பெற்றிடுமேவயது. (ரு சுரு)

வேறு.

பார்க்கவன்தீக்கோளோடு பகர்ந்திடயிருப்பதானல்
மார்க்கமாய்ப்பூமிகாலி வருநிதிசெல்வம்மைந்தர்
ஏர்க்கவேயற்பமாகு மிசையுடன்மொழிந்தார்மேலோர்
பார்க்கவனன்னேன்பொன்னன் பகர்ந்திடவருவதானல். ()

வருவதுபலன்தான்மேலோர் வகுத்தனரிருபத்தொன்றில்
கருதினர்சிவிகையோகம் காட்டினர்தரணிமாதே
இருநிதிக்குடும்பயோகன் யாவர்க்கும்அதிகவாழ்வோன்
பெருகுடன் அருணன்வெள்ளி பிலத்துடன்வருவதானல். ()

மதிமகன் திசையிற்செல்வம் வருவதுஅதிகமாகும்
துதிபெருகுடும்பயோகன் சொல்மொழிபெலமிலாதான்
பதிதனந்துணைகள்வித்தை பாழ்படவொழியலாகும்
சதிருடன்வெள்ளிமாந்தி சாரிடம்பகையதானால். (ருசுசு)

வேறு.

சூரியனும்பூமனுமாய் மேடமதிற்றோன்றச்
சுங்கனுந்தன்வீடதுவாய்ச் சுபருடனேதனிக்கக்
காரியுந்தன்வீடதுவாய்த் தரித்திடவேபொன்னன்
கடகமதில்மதியுடனே கேந்த்ரதிரிகோணம்
வாரிநுதல்கோதையுடன் தானமதில்மாந்தி
வரஅவர்க்குவெகுநிதிகள் வரவரவேவருமால்
பாரிவரும்நாள்முதலே கனயோகசாலி
பாக்யமுதல்க்ஷேத்திரமும் வரவரவேபெருகும். (ருசுஎ)

பெருகுமதிற்றரணிதனிற் பிறந்திடவேசேய்க்குப்
பெருவிதமாயதியோகம் பேசினார்பெரியோர்
குருவின்றன்திசைதனிலே சிவிகைமுதல்வருகும்
குறித்தனர்களன்னைதனைக் கொன்றிடுவனஞ்சில்
வருமுயிர்தன்துணைகள்பெலன் மாயுமெனவுரைத்தார்
வருஞ்சேய்க்குலம்பதிலே மாய்ந்திடுமேதந்தை
பெருகுபுகழ்மரணமது வருமுயிர்தானுரைத்தார்
பேணிடுவனறுபதுநால் பேசினர்கள்பெரியோர். ()

வேறு.

நிலமகன்றானுஞ்சுபர்கள்வீடாகி நெடிதுடன்பாபருஞ்சுபரும்
பிலமுடனொன்றாய்த்தரித்திடவதனைப் பீதகன்றானுமேநோக்கப்
பலமுடன்பூமிகாலிக்ஷேத்திரங்கள் பகர்ந்தனரற்பமென்றுரையே
நிலமகன்றானுமுச்சமாயுயிரில் நேர்ந்திடவெழிற்சுபர்வருமால்.

வேறு.

வருமுயிர்க்கு வகுத்தனர்பூமியு
மிருபிதிக்கிடை யில்லமும்க்ஷேத்திரம்
கருவழிப்படு நாள்முதலானதோர்
பெருகுமென்பது பேசினர்மேலவர். (ருஎ0)

வேறு.

மதியுமேபாவரில்லம் வருமுயிர்த்தானந்தன்னைச்
சதியுடன்சுபர்கள்நோக்கச் சசியையுஞ்சுபர்பார்த்தாலும்
பதிமதியுடனேவெய்யோன் பகர்ந்திடவிருப்பதானால்
விதியுடன்பிறக்குமைந்தன் விளங்கியமறையோன்சேயாம். ()

கரியவன்சசியுமொன்றாய்க் கலந்திடவிருப்பதானால்
பரியகீழ்சாதியென்று பகரலாங்கெணிதநூலால்
தெரியுடன்குருதிசேர்ந்தாற் சிறுவனும்வணிகர்சாதி
துரிதமாபரவஞ்சேர்ந்தால் துணிவுடன்புலையன்சேயாம்.(கஎஉ)

குருவுமேமதிவீடேகக் குளிர்மதியதனிற்சேர
வருமதற்கதனில்வெய்யோன் வந்திடப்புகர்மால்தானும்
தருவிடைதனிலேசேரத் தரணியிற்பிறக்குஞ்சேய்க்கு
இருநீதிசெனுத்தவல்ல னிராசர்கோன்பட்டமுண்டாம்.(கஎகூ)

பொன்னவன்தன்வீடாகப் புகழ்மதியதனிற்சேரக்
கன்னியிலருணனைக் கரியவன்புகர்வீடேகப்
பொன்னவன்வீட்டிற்சுங்கன் பொருந்திடப்பூமன்றானும்
இன்னதேளதனிற்சேர்ந்தா லிராஜனென்றுரைக்கலாமே. ()

பத்துநாலஞ்சிற்றாயைப் பாழ்படவொழிப்பன்றந்தை
சுத்தியாயிருப்பன்யார்க்கும் தோத்திரப்பிரியனுவன்
எத்திசைபுகழேயுள்ளா னினியசொல்லுரைக்கலாகும்
சத்தியந்தவறான்மாதே தரணியிலதிகவாழ்வோன். (கஎகூ)

அதிகமாயிருக்கவல்லன் அன்னவன்றனக்குத்தாரம்
விதியுடனேகமாகும் வித்தையிலதிகமாவன்
சதியுடன்தந்தைகர்மந் தானுமேஉதவான்மாதே
கெதிபெறவிருக்கவல்லன் கேசரியோகமாவன். (கஎசு)

குருவுமேமதிவீடேகக் குருதியும்பருதியோடு
வருமுயிர்தனிலேசேர மதிமகன்தன்வீடாகத்
தருமுயிர்க்கிரண்டிற்சுங்கன் தரித்திடச்சசியுமாட்சி
பருதியும்நோக்கமந்தன் பார்க்கவனில்லஞ்சேர்ந்தால். (கஎஎ)

சேர்ந்திடவுதிக்குஞ்சேய்க்குச் செப்பினர்பதினெட்டாறில்
நேர்ந்திடுஞ்சிவிகையோகம் நெறிதவறாமல்வாழ்வன்
சாந்தமாயிருக்கவல்லன் தரணியிலதிகவாழ்வோன்
பாந்தமாய்மொழிபவல்லன் பகர்மொழியினிவாய்ச்சொல்வன்.()

புந்தியுந்தன்வீடாகப் பொன்னவன்பருதியோடு
விந்தையாயுயிர்க்கீராறில் விளங்கிடவருவதானாற்
சிந்தையோடிருப்பன்யோகன் திரமுடனதிகவாய்மை
முந்தவேயழகில்ரூபன் மொழிவிதிதவறுன்மாதோ. (௩௭௧)

பொன்னவன்நாலோனாகப் புந்தியுமருக்கன்சுங்கன்
அன்னவனுடனேசேர்ந்து அமர்ந்திடச்சுபர்வீடாக
நன்னயத்துடனேயாரல் நாடிடப்பாவர்வீடால்
மன்னவன்றனக்குப்பூமி வரவரவளருமாதோ. (௩௮0)

குருதியுமீராறுகக் குளிகனும்நாலிற்சேரப்
பருதியும்அருணன்றானும் பார்க்கவன்றனக்கிரண்டில்
உறுதியாயிருப்பாராகில் உதித்திடுஞ்சேய்க்குப்பூமி
வருவதுஅதிகமாகும் வரும்பகைதானேமாயும். (௩௮௧)

வாக்கினிலிறைவன்நீசம் வந்திடப்பஞ்சமத்தில்
தீர்க்கமாய்மதிமால்வெய்யோன் சேர்ந்திடவதனுக்கேழில்
வாக்கினோன்வருவதானால் வாகனம்பூமிகாலி
பாக்கியமதிகயோகம் பகர்ந்தனர்தரணிமாதோ. (௩௮௨)

மதிமகன்வெள்ளிதிங்கள் மந்தனுமருக்கன்மாந்தி
சதியுடன்பிதிர்த்தானத்திற் சார்ந்திடவுதிக்குஞ்சேய்க்கு
விதியுடன்தந்தைசெல்வம் விளங்கவேநாசங்காட்டும்
பதிநிதிபூமிசெல்வம் பாழ்படவொழியுமென்னே. (௩௮௩)

மதியுமேகரிவீடேக வக்கிரனதனிற்சேர
விதியுடன்காரிதானும் விளங்கிடமாறிநின்றால்
பதிதனம்பூமியோகம் பாக்கியமதிகமாகும்
மதிகரிதிக்சயில்யோகம் வரவரமேன்மையாமே. (௩௮௪)

மதிமகன்புகர்வீடேக மழையின்கோளரவந்தானும்
விதியுடன்மால்வீடேக வெய்யவன்தனக்கீராறில்
மதிமகன்வருவதானால் மங்கையால்வருநாள்தொட்டு
நிதிபதிபூமிகீர்த்தி நிகழ்த்தினர்தரணிமாதோ. (௩௮௫)

பத்தினுக்குடையோனோடு பார்க்கவன்மதிபொன்கேது
சித்தியாய்க்கேந்திரத்திற் றிரமுடன்வருவதானால்
வித்தைகளற்பமாகும் விளம்பினர்கெணிதனூலோர்
முத்தியாயார்க்குமேலாய் மொழிவசமுரைப்பன்மாதோ. ()

மாதவர்மொழியால்மேலோர் வகுத்தனாதிகயோகம்
நீதமாய்நாற்பத்தஞ்சில் நேர்ந்திடுந்தனவான்யாவன்
போதவேகுடும்பயோகன் புத்தியாலதிகவாழ்வோன்
வேதமாயுரைத்தாரென்று விதித்தனர்கெணிதநூலோர்.(௩அஎ)

வேறு.

சூரியனே மூங்கோள ஞகிநீசம்
தோன்றுபகையாகிடவே மறையாதாகச்
சாருமிந்தக்கோளுடனே புகர்மால்பாம்பு
தரித்திடவேபாவர்சுபர் நோக்குமானால்
கூருமெனச்சூரியநாள் முதலேபாதி
கொள்ளுமெனவருமுயற்சி யின்பங்காட்டும்
சீருடன்பின்பாதிமுதல் முயற்சியின்பம்
சேருதனம்பூமிபதி சமத்தின்மேலாம். (௩அஅ)

மேடுலனவேபாதிவரை தனம்வந்தெய்தும்
விளங்கியதோர்வருமலைச்சல் பீடைகாட்டும்
சீலமுடனுற்றதுக்கம் பொருள்கள்சேதம்
சேருபதிபூமியினு லழியுண்டாகும்
கோலமுடன்தனம்வளரும் சமத்தின்மேலாம்
குறித்தனர்களிதுதவரு தெனவென்றோது
தூலமுடன்சூரியனும் பகைநீசத்தில்
தோன்றிடமுன்கோளுடனே வுடன்வந்துற்றால். ()

சந்திரனுமாறுங்கோ ளாகியேகுஞ்
சாருமிடமறைமனையா யுடன்சேயுற்றால்
வந்துமிக்கோள்தனைமறையோன் நோக்குமானால்
வருமதிநாள்திசைமுதலே பாதிமட்டும்
சிந்தையுடன்வருமுயற்சி தனங்கள்பூமி
செப்புமெனவாணிபங்கள் வளருமென்றே
விந்தையுடன்பாதியின்மேல் முயற்சியில்லான்
விளங்குமெனப்பூமிதனிற் சமமாய்வாழ்வன். (௩௯0)

வாழ்வெனவேபூமியின்பம் லாபங்காட்டும்
வளருதனமற்பமெனத் தரிக்குமென்றே
தாழ்வுவருதெனவெனவே, வரினுமின்பஞ்
சாருமெனக்காலிபதி சாருமென்றே

சூழுறவிக்கோள் திசையின் மால்வந்துற்றால்
தோன்றியசேயவன்றனக்குக் காலிற்சூலை
ஏழுடநாள் திங்கள்வரை சூலைசேரும்
ஏகுதிங்கள்தொலையுமெனச் சூலையொக்கும். (ருகூக)

ஆரலுமூன்றுங்கோளெட் டொன்பான்கோளாய்
அம்புலிதான்கூடியொன்றாய் மறைவீடேகச்
சாருமிக்கோளுயிர்க்குபயம் பதினொன்றாகித்
தரித்திடவேசுபர்களுட பார்வையாலுல
பாருயிர்மூன்றுங்கோளன் திசைமுற்பாதி
பகர்முயற்சிவருந்தனங்கள் சேருதாகும்
கூரியபின்பாதிமுதல் முயற்சிகாட்டும்
குறித்தனர்கள்வருந்தனங்கள் சமமாஞ்செப்பு. (ருகூஉ)

செப்புமெனப்பூமியினாற் பலன்சேருது
சேருமொருவாணிபத்தாற் புகழுண்டாகுந்
தப்புமந்தமூன்றுங்கோள் திசையிற்பாதி
சாருமந்தத்திசைமுடிவு தவறுதென்றே
முப்படிகோளுடன்கரியன் மால்வந்துற்றால்
முன்னுரைத்தபலன்குறையும் பீடையுள்ளோன்
துப்பிதழாய்வெகுதுயர மலைச்சலுள்ளோன்
தோன்றுமிடம்பகையாகும் பொருள்கள்சேதம். ()

சுக்கிரன்நாலாங்கோளாய் நாலிலேகித்
தோன்றிடமால்சூரியன்பாம் புடனொன்றாகித்
தக்கதென ஆரலுக்கு மூன்றுறெட்டிற்
றரித்திடவேதோன்றியசேய் தனக்குமேலோர்
தொக்குமெனத்தந்தையராற் கிரகமொன்று
தோன்றிடவேசேய்தனக்கு மதிநாள்பாம்பில்
மைக்கருங்கண்ணாரணங்கே கிரகமொன்று
வகுத்தனர்களிதுதவறு தெனவென்றாதே. (ருகூச)

வேறு.

குருவுமேமால்வீடேகக் குளிகனுமதனிற்சேர
வருநிதிக்குடையோன்றானும் வளருகேந்திரமாய்நின்றால்
பருதியோன்திசையில்யோகம் பகரலாமதிகவாழ்வோன்
கருதியேவுரைத்தார்மேலோர் காசினியதனிலென்றார். (ருகுரு)

சுங்கனுமருக்கனோடு துணிவுடன்மதிவீடேகச்
சங்கையாயதற்குநாதன் சாரவேமாறிநின்றால்
மங்களசுபத்தனவன் மந்திரிமதிவீடானால்
இங்கிதமாகவாக்கி லிறையவனிருப்பதானால். (௩௬௬)

இறையவன்வாக்கிற்சேர எட்டுடனறீராறிற்
பிறையவனிருப்பதானாற் பிதற்றலாஞ்சகடமென்றார்
மறையவனோடுசேர்ந்தால் வருநிதிகணக்கிலாதான்
குறைவிலாதிருப்பனவன் குடும்பத்துக்கதிபனவன். (௩௬௭)

வேறு.

இறையவன்புகரு மருக்கனும்புந்தி யிருந்தவீடதனிலேபா
வர், திறமுடனிருக்க மந்தனுமுயிரிற் சேர்ந்திடப் பாவர்களில்
லம், மறையவன்திசையில் வாகனயோகன் வஞ்சியாற்றனமெ
லாம்செலுத்தும், குறைவிலாதிருப்பன் கெணிதநூல் விதியாற்
குறித்தனர்பெரியவர், தானும். (௩௬அ)

வேறு.

குருவுமேபுதன்வீடேகக் குளிகனுமதனிற்சேர
வருமுயிர்சுபரேயாக வாக்கினேனருக்கனைத்
தருமுயிர்க்கஞ்சில்நாதன் சற்குருபுகர்சேயானால்
இருநிதிசிலவுண்டாகு மிசைவுடன்மொழியவல்லன். (௩௬௮)

குருவுமேபார்வைமந்தன் கொடியவனதனிற் சேர
வருநிதிபாக்கியத்தான் வந்திடத்திறைவன் பார்வை
சரியுடனதற்குநாதன் சாரிடமுட்சமானால்
இருநிதிபூமிகாலி யிசைவுடனதிக வாழ்வோன். (௩00)

வெள்ளிசே யருக்கன்புந்தி விளங்கிடப் பிலமாவானால்
நள்ளியிற்றிங்கள்பாம்பு நாடிட வதனைப்பாவர்
தள்ளுற நோக்காதன்றித் தமனியன் நோக்கவந்த
பிள்ளையின்யோகஞ் சொல்வேன் பீதகன்திசையி லென்னே. (

மதிமகனுட்சமாக வாக்கினேன் காரியோடு
சதிருடனிருக்கத்திங்கள் சற்குரு வீட்டிலேக
அதிகமாயதற்குநாதன் அருணன்வீ டதனிற்சேர்ந்தால்
கெதிபெறவிருக்கவல்லன் கெடுவித மானவாக்கான். (௩0௨).

கரியவன் தனத்திலேகக் கலைமறையஞ்சிற்றேன்ற
வருமுயிர்சுபரேயாக வாக்கினேன் மதிவீடானாற்
கரியவன் றிசைவிட்டேகிக் கண்ணுடைக்கதிபன்வந்தால்
இருநிதிசெலுத்தவல்லா னியாவர்க்கு மதிகவாழ்வோன். ()

மதியையுஞ் சுபர்நோக்காமல் வக்கிரனதனை நோக்க
விதியுடன் தகரிற்சோமன் விளங்கிய குருதியோடு
சதியுட னிருப்பதானாற் றரணியில் வந்தசேய்க்குப்
பதியில் மரணமட்டும் பயனிலையிரப்பான் மாதே. (சஅச)

குருதியுந்தனத்திலுச்சங் குளிர்மதிகாரியோடும்
பருதியும்நாலிற் சேரப் பார்க்கவனாரல் வீடாய்
வருமுயிர்க்கதிபன்றானும் வக்கிரன்றன்னைநோக்க
இருநிதிபூமிகாலி யிசைவுடனதிகமாமே. (சஅரு)

அதிகமாய்ப் பூமிசேரும் ஆறிருபத்துயெட்டிற்
கெதிபெறவிருப்பானாகுங் கிளைவழிதாங்கவல்லன்
சதிருடன்பிரியனாவன் தரணியிலதிகவாழ்வோன்
பதிதனில்வருநாள் தொட்டுப் பகையிலை பாரிலென்றார். ()

சுங்கனுங்கேதுமாகச் சூரியனில்லஞ்சேர
மங்கலன்வீடுசுத்தம் வக்கிரன் சுபர்வீடாகப்
பங்கமாம்பூமிதானம் பார்க்கவனில்லமானால்
தங்குவதில்லைபூமி தரணியிற் பிறக்குஞ்சேய்க்கு. (சஅஎ)

அருக்கனுங் குருவீடேக அவனுட யில்லந்தன்னைச்
சுருக்கமாய்ப் பாவர்பார்த்தாற் றுணிவுடன் தந்தைசெல்வம்
இருக்கவே யொழியலாகும் பெவர்க்குமே யீயானாகும்
தருக்குடன் பிறர்களாலே சாற்றலாம் பலனைத்தானே. (சஅஅ)

வேறு

சுக்கிரன்நா லுடையோனாய் மாந்திசேயும்
தோன்றுமிவை மறைமனையாய் மறைநோக்குற்றால்
தக்கதெனச் சுக்கிரன்நாள் முதலேபூமி
சாருதனம் சேத்திரங்கள் வளருமென்றே
திக்குமென வளருதந்தை கவலையுள்ளோன்
சேர்திசைநாள் முடிவுவரை தந்தைசெல்வம்
மைக்கருங்கண் ணாரணங்கே வளருமென்று
வகுத்தனர்க ளாகமசாஸ் திரங்களாலே. (சஅகூ)

மாதேகே ளேழாங்கோ ளலரியாக
மாலுடன்கே துடன்கூடி வளருமில்லம்
நீதியுடன் கருமன்மனை யதனிலேகி
நின்றிடவே கருமனுக்கு மறையுமானால்
ஓதியவே ழாங்கோளன் திசைநாள்தொட்டு
உரையுமவர் நாள்முடிவும் பூமிசெல்வம்
சீதமுடன் சமமதுவாய்ப் பிதாவின்செல்வம்
சேரும்வகை யாற்றனவான் வாழ்வுசாற்றே. (சக0)

அரவுயிர்க்கு நாலதனிற் றனிக்கவந்த
அரவிருந்த நாதனுமே அமருமில்லம்
வரவுடனே சுபர்வீடாய்ச் சுபர்களோடு
வாழுமர வுக்கெனவே மறையாதானால்
அரவுவருந் திசைமுதலே பாதிமட்டும்
அறைந்தனர்கள் வருமுயற்சி தனமேலாகும்
விரவுமெளப் பாதியின்மேல் முயற்சியில்லான்
மேவுசம மாகவென வாழ்வுசாற்றே. (சகக).

வேறு.

ஆடுதேள் தன்னிற் செவ்வாய் அங்கிஷ யோகமாகும்
தேடுபெண் வீணையில்லிற் றேர்ப்பாகன் புத்ரயோசம்
கூடுவில் மீனமாகிற் குருவுஞ்சா மரையோகந்தான்
சூடிய விடைதுலாத்திற் சுக்கிரனிருந்தாற் சொல்வேன். ()

சொல்லுவேன் நாலிற்சீவன் தோன்றமா ளவயோகந்தான்
வெல்லவே யானைசேனை வெண்குடை பரிசுகாலாள்
மெல்லியர் மிஞ்சும்பூமி விளங்கும்யா ளடுமைகாலி
வல்லதோ ரில்லமோடு வாகனத் துடையனுவன். (சகங)

ஆனதோர் மகரகும்ப மதிற்சனி யிருக்கச்சோமன்
யீனமா யாறிலெட்டி லிருந்திடச் சகடயோகம்
கானமார் பூமிமாடு கன்றுகா லாளுமற்று
ஊனமாய்ப் பிறர்தூஷிக்க வுலகினி லிருந்துவாழ்வன். (சகச)

வேறு.

மதியுயிர்தனக்குக் கருமகேந்திரத்தில் மதிமகன்கவிசுடர் வரினும், சதியுடனுயிரில் மாந்திசேய்தரிக்கச் சந்திரனரவுடன்

வாக்கிற், றுதிபெருமறையோன் மறைந்திடவுச்சந் தோன்றிட வேழினிற்காரி, விதியுடன்வரினும் வயதுமுப்பதின்மேல் விளங் குவன் முயற்சிகளுடனே. (சகரு)

தனத்தினுக்குடையோன் சந்திரனுடனே சார்ந்திடஆட்சி பாயுயிரில்,மனத்திடமாக மூன்றின்கோள் மழைக்கோள் மருவி டக் கன்மகேந்திரமாய், இனத்துடன்செவ்வா யிருந்திடநாலி லிரவியுமாலுடன்லாபம், கனத்துடன்முயற்சி யதிகமாய்க்கொடு க்குங் கனகன்மாதிசையின் முற்பாதி. (சகரு)

குருதிசைபாதி யதனில்மேலாகக் கூடிடுந்தனங்களுஞ்செல வும், வருவதுபெண்கள் மங்களமுடனே வாய்த்திடும்பூமியுஞ் சேரும், இருநிதிக்குடையோன் கருமங்கள்திரமா யெய்திடுந் தனச்செலவுண்டாம், பெருவதுநல்ல கீர்த்தியும்யோகம் பெருத் திடுங்காரிநாள் தனிலே. (சகஎ)

மகரலக்கினத்தில் மதியுடன்கரியும் வந்திடப்பஞ்சமன்குரு வும், நிகரிலாக்கரும மதனிலேதரிக்க நிகழ்த்தினு ரட்டமன்மா லும், தகரினோன்வீட்டிற் றரித்திடச்செவ்வாய்சந்திரன்தனக்கு நாலதனிற், பகர்வதுவயது பத்துமாறதன்மேற் பலித்திடும்பிதா வுடயோகம். (சகஅ)

யோகமுமிகுதி முயற்சியுந்தனங்க ளோதினுர் பூமிவாகனமும் ஏகமாயிருப்பன் பெண்களுந்திரமா யெய்திடுந்தாயிரண்டாகும் போகமுமிகுதி பொருந்துவனுலகிற் புத்திரனேகமாயிருப்பன் பாகமாப்பெண்கர் பலித்திடுமுயற்சிபாக்கியனிவன்வருமுதலாய்

இவன்வருமுயிருக் கெய்தியவாறி லிருந்திடவாரலே தரிக் கில், நவமனதக்குளிகன் மூன்றினிலிருந்து நாடிடக்கேதுவுமறை யில்,சிவம்பெருமனத்தன் தேகமுஞ்சிவப்பன் செய்திடும்பூசையி லுபயன், தவம்பெருமனதிற் சஞ்சலமுடையன் தரித்திடுங்கன் டத்தில் மருவும். (சஉ0)

கெங்காஸ்நானம்.

பத்தினிலிரவி யரவுடன்கூடிப் பதிந்திடவிருந்திடுஞ்சேய்க் குச், சித்தியாங்கங்கா யாத்திரைசெய்வன் செகத்தினில் யாவரு மதிக்கச், சுத்தியாயிருப்ப னிந்துசேய்பத்திற் றுணிந்திடமீன

மாய்வரினும், முத்தியாங்கங்காயாத்திரையுடனே மொழிந்தனர் நிச்சயம்பிலமாய். (சஉக)

அரவுடனுயிரோ னிலக்கனந்தன்னி லமர்ந்திடக்கங்கையி ன்தீர்த்தம், விரவுடன்கொடுக்கும் நவமதிலஞ்சில் விளங்கியநா லுகோள்தரிக்கில், திரமுடன்மோட்ச மாகுவனுலகிற் சித்தர் போலிருந்துமே வாழ்வன், குறைவிலாதிருப்பன் கோடிகாலத் துங்குளிர்மதியுயிரின்கோள்பத்தில். (சஉஉ)

சன்னியாசம்.

பத்தினில்முக்கோள்கூடிற் பகர்வதுசன்னியாசம்
பத்தினிலிருகோள்சேரிற் பார்தனிற்றவசியாவன்
பத்தினிலொருகோள்நிற்கப் பரமஞானியுமாய்ப்பின்னும்
முத்தியேசேர்வானென்று முறைதெரிந்துரைக்கலுற்றார். ()

வேறு.

பாக்கியத்தில் வீரியத்தோ னிருக்கத்தன்னைப்
பகர்வெள்ளி குருபுதனும் பார்க்கநிற்க
யோக்கியமாய்ச் சிவதலத்தில் ஞானியாகி
உலகுமெய்க்க மடபதியா யிருப்பனென்று
தீர்க்கமுடன் புவனிதனி லரியவேண்டிச்
செப்பினோ மிதையறிந்தே யுலகிலார்க்கும்
மார்க்கமுடன் பலாபலன்க ளறிந்துநீயும்
அவனிதனி லியாவருக்கு மறிவிப்பாயே. (சஉச)

தவவேடம்

பாக்கியத்திலஞ்சுடையோன் மாலாய்த்தோன்றப்
பனிமதியுங்குருசனியும் பார்க்கநிற்கில்
யோக்கியமாய்மாலுடைய பதத்தைச்சேர
உலகுதனில்மடபதியாய் வாழ்வனென்றே
ஆக்கமுடனஞ்சுபத்து மால்வீடாக
அதிலரவுதரிக்கவருங் குழவிக்கெல்லாந்
தீர்க்கமுடன்வேடம்வரும் புவனிதன்னிற்
றிரமுடன்வாகனமுடனே செல்வமுள்ளோன். (சஉரு)

யோகம்.

சுங்கனும்நாலுடையோனாய்ப் பதினொன்கோளுந்
தோன்றுதிங்கள்மாந்தியர வுடனொன்றுகிச்
சங்கையுடன்கருமனுக்கு யிவர்கள்நாலாய்த்
தரித்திடவேவுயிர்க்கிவர்கள் மறையாதானாற்
பொங்குபுகர்நாள்முதலே சிவிகையோகம்
புகழரசர்வெகுதயவு தனங்கள்பூமி
தங்குபரிசப்ரமஞ்ச மதிகவின்பம்
சாரும்வெகுபோர்கள்புகழ் கீர்த்திகொள்ளும் (சஉசு)

கொள்ளுமெனப்புகர்திசைநாள் வரையும்யோகம்
குறித்தனர்கள்மேலவர்கள் கூறும்வண்ணம்
தள்ளுபுகர்மாந்திமதி யரவுபன்னோன்
சாருமிக்கோளுயிர்க்குபய மதனிலேகித்
தெள்ளுமெனவருங்கருமக் கோளனுக்குச்
சேருமிக்கோள்மறையுமெனில் முயற்சியற்பம்
துள்ளுதனம்பூமிபதி காலியின்பந்
தோன்றுமற்பமாகவென வளருமென்றே. (சஉஎ)

தேசாந்திரம்.

ஈரைந்திலிந்துநாத னெட்டுடனாறிலுள்ளோன்
தேறியேநிற்குமாகிற்றேசாந்த்ரமிவனேபோவன்
கூறியபன்னிரண்டோ னெட்டினுக்குடையோனேடே
சாறியசெவ்வாய்கூடி லிவனுந்தேசாந்த்ரம்போவன். (சஉஅ)

தினகரனோடேலக்கி னேசனும்நீசனுகிக்
கனமிலாப்பகைவர்கூடக் காசினியதனிற்சேய்க்கு
மனமொடுபிலமுமில்லை வந்ததோதேகமற்பம்
இனமதில்வேசியில்ல மிருந்தவனுலகில்வாழ்வன். (சஉகூ)

சொல்லியமாதற்கேழிற் றோன்றிடவாறோன்வந்தால்
அல்லலிற்புகரினோடே அணுகிடவந்தாலுந்தான்
புல்லிலக்கனத்துக்கேழோ னுடன்கூடிப்புகுந்தானேனும்
மெல்லியல்பலபேரோடு மேவுவள்வேசையாக. (சஙூ0)

பொன்னவனுயிர்க்கொன்பானிற் பொருந்திடவஞ்சோனுக
அன்னவன்றனக்கேஅஞ்சிலரவதிற்கேதுசேரிற்

சொன்னதுபுதல்வர்தோஷந் தோன்றிடுங்காரியெட்டில்
முன்னிற்கக்காரிநாளில் முயற்சியுந்தனமுமுள்ளான். (சஙக)

வேறு

பத்தினிலுயிரோன் காரிவீடாகப் பாக்கியன்காரியாயிரண்டில், வெத்தியாம்நாலோ னைந்தின்கோளுடனே மேவிடவந்தசாதகற்குப், புத்தியில்விவேகன் புனிதமாங்கோபி பூமியுங்கிரகமுந்தனமும், சித்தியாய்நாலோன் திசைமுதலாகச் சேர்ந்திடு மதிகமாய் விளங்கும். (சஙஉ)

வேறு.

சூரியன்பன் னோராங்கோ ளாகிமாலும்
தோன்றுபுக ருடன்கூடிக் கரிவீடேறச்
சாருமிக்கோ ளிருந்திடும்வீ டதிபன்றானுஞ்
சரர்ந்துபவ ருடன்கூடி மறையுமாகிற்
சீருடனே பதினொன்கோ ளதனைப்பொன்னன்
சேருமதி மாந்திகரி நோக்குமானால்
கூறுமெனச்சூரியன்நாள் பாதிமட்டுங்
குறித்தனர்கள் முயற்சியில்லான் தரணிமாதே. (சஙங)

மாதேகேள் பாதியின்மேல் முயற்சிகாட்டும்
வளருதனம் பூமிபதி காலியின்பம்
சீதமுடன் அற்பமென வளருமென்று
செப்பினர்கள் பாதியந்தி பீடையேற்பன்
ஓதுமென வருகுமே காங்கைரோகம்
உரைத்தனர்கள் தேகமெலி வாகும்பித்தம்
நீதியுட னன்னம்வெறுப் பாகுமென்று
நிகழ்த்தினர்க ளாகமதுல் தெரிந்தமேலோர். (சஙச)

மதியுயிர்க்கு வருங்கருமனுகிப்பொன்னும்
மாந்தியுட னுயிர்தனக்குப் பதினொன்றேகச்
சதிருடனே மதியிருந்த கிரகநாதன்
சாருயிர்க்கு மறையாமற் றரிக்குமானால்
விதியுடனே மதிவருநாள் முதலேமேலாம்
விதித்தனர்கள் வளருதனம் பூமியின்பம்
கெதிபெறவே வளர்புகழுங் கீர்த்தியேற்பன்
கிருபையுள மதிவரையு முயற்சியுள்ளான். (சஙரு)

வேறு.

மதியுயிர் மறைவதாக மதிதனக் கீரா றெட்டில்
அதிபதிகுருவே'யெய்தா லவர்சுபர் வீடானுலும்
துதிபெரும் பகைநீ சத்திற் றோன்றிடவுபயகோளன்
விதிபெரு சுபராற் சென்ற விடம்பகையுறுமால்செப்பே. (சஙசு)

செப்பியதுணைவர் நாசஞ் சேரலாமலது துன்பம்
தப்பல கஷ்டமாகுஞ் சாருமீ ரொன்பான்மேலாய்
கப்பமாம்வாழ்வு பின்னுங் கடன்ருணமச்ச முண்டாம்
துப்பிதழ் வாயினுளே சொல்மனத்துயருண்டாமால். (சஙஎ)

ஆமிதுவரசரின்பம் அருந்திகழ் முயற்சி காட்டும்
நேமமாய்ப் பொருளுண் டாகும் நேருடனழிவாம்பின்னுங்
காமமேவிளைக்கு மாதே காட்டுமுப் பதின்மேலாக
மாமதிதனமுங் கீர்த்தி வரும்புகழாகுங் காணே. (சஙஅ)

காணுமுப் பதின்மே லஞ்சிற் கருதியபொருளுண்டாகுந்
தோணியமுயற்சி மேலாய்த் தோய்ந்திடுமதிகவாழ்வாம்
வேணுறு கிரகம்வேறாய் மேவிடுமாண மட்டும்
மாணுறு பொருள்கை தட்டாமகவுடனிருக்கு மென்றே. (சஙகூ)

செப்பலாம்லாபத்தானத் ததிபனு மத்தானத்தில்
ஒப்புடனுட்சி யுச்சங் கேந்திர கோணஞ்சேர்ந்தால்
தப்பிலாத் தனமும்பூமி சாஸ்திர வேதஞானம்
இப்புவி யோர்கள்போற்ற விருப்பன்சன்யாசியோகம். (சசo)

வேறு.

பத்தினிலுயிரோன் காரிவீடாகப் பாக்கியன்காரியாயிரண்டில், வெத்தியாய் நாலோன் அஞ்சின்கோளுடனே விளங்கிடவந்தசாதகற்குப், புத்தியில்விவேகன் புனிதமாங்கோபிபூமியுங்கிரகமுந்தனமும், சித்தியாம் நாலோன் திசைமுதலாகச் சேர்ந்திடுமதிகமாய்விளங்கும். (சசக)

வேறு.

புகருடன்குருவுமாகப் பொருந்தவே-வாக்கில்நின்றால்
நகர்பதிவிவிகையோகம் நாடெலாம்புகழேயுள்ளான்
தகருளோன்வாக்குநாதன் சதிருடனிருப்பானுகிற்
பகர்மொழிபொய்யிலாதான் பாக்கியம்நிகரிலாதான். (சசஉ)

குருவுமேதன்வீடாகக் குருவுமேபெலமதாகப்
பருதியுந்தகரிற்றோன்றப் பார்க்கவனுச்சமாக
இருநிதியாலேசெல்வ னியாவர்க்கும்பிரியனுவன்
கருதியேயுரைத்தார்மேலோர் கருதுடன்தரணிமாதே. (சசங)

புந்தியுந்தன்வீடாகப் பொன்னவன்பருதியோடு
விந்தையாயுயிர்க்கீராறில் விளங்கிடவருவஷானுல்
சிந்தையோடிருப்பன்யோகந் திரமுடனதிகவாய்மை
முந்தவேஅழகில்ரூபன் மொழிந்தசொற்றவருன்மாதோ. ()

பொன்னவன் தனத்திலேகப் புந்தியும்புகரும்நாலில்
இன்னிலக்குடையோன்வீட்டி லிரவியேதனிப்பானுகில்
மன்னனுயிருப்பானுகும் மந்திரிவீட்டிற்சேயோன்
தன்னிலேயிருப்பானுகிற் சாற்றலாமற்பவாழ்வோன். (சசரு)

வணிக்கலக்கனமேதோன்ற மந்தனும்புந்திவெய்யோன்
துணிவுடன்தனத்திற்சேரச் சூரியன்வீட்டிற்பொன்னன்
கெணிதமாயிருக்கச்சீவன் கேளவன்தன்னைப்பார்த்தால்
மணிகளின்பலன்தானற்பம் மதித்தனர்மேலோர்தாமும். (சசசு)

புகருமேபுகர்வீடாகப் புந்தியுமதனிற்சேரத்
தகருடனிரண்டுளோனுஞ் சற்குருபுகரேயானுல்
நகர்பதிபூமிபாக்யம் நாயகியாலேவுண்டாம்
பகரலாமிந்தயோகம் பத்தஞ்சுவயதின்மேலாய். (சசஎ)

வேறு

மகரலக்கனத்தில் மதியுடன்சேயும் வளர்குருகேந்திரமிருந்து, தகரினிற்பானு வுச்சமாயிருக்கச் சனியுமேநாலினிற்றோன்றப், பகரநூல்வல்லோர் யோகமேவகுத்தார் பன்னிரண்டஞ்சு மேல்வயதில், மகபதிபோலத் தனமெலாஞ்செலுத்தும் வயதுமே ஐம்பதுவரைக்கும். (சுசஅ)

வேறு.

மதியுடன்பாவர்சேர வளருகேந்திரத்தில்மந்தன்
விதிமுறைதவருமாலும் விளங்கிடப்பிதிர்த்தானத்திற்
சதிருடனிருக்கநாலிற் சார்ந்திடுமரவமேழில்
பதியவேயிருப்பாராகிற் பகருவோங்கெணிதநூலால் (சசகூ)

கெணிதநூற்படியேசொன்னேன் கேசரியோகங்கிட்டும்
வணிதமாயவர்க்கிரண்டில் மாய்ந்திடும்பதிமூன்றஞ்சிற்
கெணிதமாயொழியுஞ்சொன்னேன் கேடுவந்துதவுமப்பால்
மணியமேயவர்க்குத்தாரம் வாய்மையாயிருபத்தஞ்சில். (சரு0)

மார்க்கவன்சேயுமாகப் பகர்ந்திடவவருக்கேழிற்
றீர்க்கமாயிலக்கனத்திற் றிரவியகாரணுக
வாக்குறவவற்குமூன்றில் வருவதுமரவமானால்
காக்கவேதந்தையோகங் கழறினர்கெணிதநூலோர். (சருக)

பாலகன்வயதோரேட்டிற் பாக்கியயோகம்பூமி
சாலவேஅவற்குத்தாரஞ் சாற்றினரேகமாகும்
நூலறிவிதமாய்சசொன்னேன் துணுக்கமாயவற்குவித்தை
வேலனுங்குமரன்பாதம் வேண்டுவன்மனதுவஞ்சி (சருஉ)

வஞ்சிவேளதனைப்போற்றி வளர்குருகடாட்சமாக
விஞ்சையாமந்திரங்கள் வேதநூற்படியேசெய்வன்
தஞ்சமாய்ப்புண்ணியங்கள் சார்ந்திடச்செய்யவல்லன்
அஞ்சவேகுடும்பந்தன்னை யாதரிப்பானுமாவன் (சருங)

வேறு.

மிதுனலக்கனத்தில் விளங்கிடக்குருவும் வெய்யவன்றானு
மேசேரக், கருதிடச்சோம னலவனிற்றோன்றக் காரியுமதன்கிர
கத்திற், பதிவதாயிருக்க வொன்றுநான்கேழிற் பத்தினிற்சார்ந்
திடக்கேது, விதிதவறாது கெணிதநூலாய்ந்தோர் விளங்கிடவிப்
பலனுரைப்பார். (சருச)

வேறு.

பாரதனுக்குட்பாக்கியயோகப் பலனுடனமச்சற்குநிகராய்
வாரணக்கூட்டம்விளங்கிடமவற்றைவைப்புலிவரும்பகைபோலச்
சாரவேயொழியுஞ்சகலயோக்கியனுந் தாரணிதன்னிலேயிருந்து
நேரவேவயது ஐம்பதுமூன்று நிகழ்வரைபலனெலாமுறுமே. ()

பருதியுஞ்சேயும் மதியுமேபுந்தி பான்மையாய்ப் புகருமேயாகத்
தருதியாயவர்க ளவரவர்வீட்டிற் சார்ந்திடமந்தனுங்கேதும்
சுருதியாய்நட்புமுச்சமுமாகித் துலங்கவேயாட்சி யானுலும்
கருதியேயிருந்தாலிவர்பலனுரைக்கக் கணிதநூலாய்ந்தவர்தாமே.

ஆய்ந்ததோர்பலன்ருன் கெணிதநூற்பார்த்து அறைந்திடு
மையஞ்சுவயதில், வாய்ந்ததோர்வாக்கு வெகுதனஞ்சேரும் வன
ப்புறுஞ்சிவிகை யோகமுமாம், சாய்ந்திடப்பருதி யிருளதுபோ
லச்சார்பகையவற்குமே யொழியும்,மாய்ந்திடவவருக் கறுபதுவ
யது வையகமதனிலே யென்ருர். (௪௫௮)

வேறு.

மான்புகர்கன்னிநீசம் வருமுடன்பலன்ருன்வைத்த
தோன்றிடுவெய்யோனீசந் துலாத்தினிற்புந்திகூட
வான்பரிநட்பதாகில் வளருங்கேந்திரத்தில்மந்தன்
தானிருபதியில்நேசந் தான்நீசமிருக்குமாகில். (௪௫அ)

அவருடபலன்தான்சொல்லங் காரகன்பிதாவந்தாலும்
பவருடன்பலன்களெல்லாம் பகர்ந்திடும்பதிமூன்றெட்டிற்
கவரவேசுபராய்ச்சுங்கன் காண்கவிதிசையில்யோகம்
தவறிடாதென்றுயோக சாலியான்சிவிகையோகம். (௪௫௯)

வேறு.

பொன்னவனேடு புந்தியுஞ்சேயும் புகருமே அஞ்கினிற்ருே
ன்றத், தன்னிகரில்லாக் காரியுங்குளிகன்,சாரவேயேழினிற்ருே
ன்ற, இன்னிலத்தவற்கு வெகுநிதியுதவு மியம்பினர்கெணிதநூ
லாய்ந்தோர், அன்னியசாதி பகையுமேவுண்டா மவர்பலனப்படி
யதனுல். (௪௫௦)

வாக்கிடந்தானே சுத்தமாயிருக்க,வரமுடனதற்குடை நா
தன், பாக்கியத்தானம் வீட்டினிற்ருேன்றப்பாவருமுன்பின்னே
யிருக்கத், தீர்க்கமாயவர்தன் யோகமேமதிக்கச்செகத்தினிலொ
ருவற்குநிகராய்த், தாக்கினேமென்று கெணிதநூலாய்ந்தோர்
சாற்றினரவருடபலனை. (௪௫௧)

வேறு.

புகருமேகரிவீடேகப் புந்தியுங்குருவுஞ்சேயுந்
தகரிலாப்பாம்புமாகச் சார்ந்திடவவருக்கேழில்
நிகரிலாக்கொடியோன்ருனும் நின்றிடவவற்குமூன்றிற்
சுகமுடன்மாந்திநின்ருற் சொல்லினர்கணிதமேலோர். (௪௫௨)

மேலவர்மொழிதான்சொல்வேன் விளங்கிடவவன்றன்யோகம்
சாலவேபதினேழெட்டிற் சாற்றினரற்பமாகும்

நூலறிவிதமாய்ச்சொன்னேம் நுணுக்கஞ்சஞ்சலமேயாவன்
ஞாலமாமனவிசொல்வேன் நாடினார்சொந்தமப்பால். (௪௬௩)

குருவுமேவெய்யோன்வீட்டிற் கூடிடநட்பாய்த்தோன்றப்
பிருகுமேதன்வீடாகப் பிலத்துடனிலக்கினத்திற்
புருதியும்பாம்புஞ்சேர்ந்தாற் பகரலாமவன்றன்யோகம்
உறுதியாயிருபத்தொன்றி லோதினர்கெணிதவாக்கால். (௪௬௪)

மதியுமேகரிவீடேக மந்தனுமாறிநின்றாற்
பதிதனம்பூமியோகம் பாக்கியமதிகமாகும்
துதிபெறவரசர்யோகன் சொல்மொழிபிலமிலாதான்
மதிகரிதிசையில்யோகம் வரவரவுயர்ந்தவாழ்வே. (௪௬௫)

ஏழினுக்குடையோனாரை லிருக்கும்வீடதனில்வெய்யோன்
தாழ்விலாவாட்சியானாற் றான்வரும்யோகஞ்சொல்வேன்
யாழுவீடதனில்மூன்று பாலமாம்கனகமாரி
வாழ்வுடனெட்டுநாலு வயதினிக்பூமிக்குள்ளே. (௪௬௬)

வேறு.

வாக்கினிற்குளிகன் றானுமேநட்பாய் வரவதற்குடையநாத னுமே, தீர்க்கமாயாட்சி யுச்சமாயிருந்தாற் றீதிலாதவன்பலன் சொல்வேன், பாக்கியஞ்செல்வம் வித்தைகள் முதலாய்ப் பாழ்பட வொழியுமேயென்று, நாக்கினாலுரைத்தேன் கெணிதநூல் வகையை நல்லதென்றெப்பினார் பெரியோர். (௪௬௭)

பத்தினாயிரோன் பானுகோளுடனே பதிந்திடக்குருவுமேபார்க்கச், சித்தியாமஞ்சோன் மாலவன்மாந்திசேர்ந்திடலாபமாய்வரினும், வெத்தியாங்காரி திசையினிற்புகரோன் விளங்கிடிற்பூமியுந்தனமும், நத்தியபுதல்வர் தன்னுடன்விளங்க நவின்றனர்பெரியவர் தாமே. (௪௬௮)

வேறு.

மதியீரோனுகிக்கேந் திரத்தில்வாழ
மதிதனக்குவாக்கதனி லிரண்டோன்நிற்கத்
துதியாரல்கேந்திரத்தில் மானுமவன்வீடால்
தோன்றலதுசூரியன்றன் வீடதுவேயாகில்

அதிகுருவுக் கீராறில் மாந்தியிருப்பாரேல்
அவன்றனக்குயிராறிற் காரியுஞ்சேர்ந்திடுமால்
விதிமுறையாய்க்குருவதனிற் றிசையாள்வனவற்கு
வேந்தனுடபட்டமுநன் றாய்விளங்குந்தானே. (சகூ)

வேறு.

விஞ்சையாய்மந்திரங்கள் வேதநூற்படியேசெய்வன்
தஞ்சமாய்ப்புண்ணியங்கள் சார்ந்திடச்செய்யவல்லன்
வஞ்சிவேளதனைப்போற்றி வளர்குருகடாக்ஷமாக
அஞ்சவேகுடும்பந்தன்னை ஆதரிப்பானுமாவன். (சஎ0)

வேறு.

மதிமகன்சேயு மிரவமுமருக்கன் வளர்பகை ஆட்சியாயிருந்தால், சதிருடனிருப்பன் தனக்குமுன்பிறந்தோன் தரணியிலிருப்பதுநாசம், விதிமுறையாலே கெணிதநூலுரைத்தார் வித்தைகளற்பமதாகும், அதிகமாயிருப்பன் முப்பதுமிரண்டி லவனுட யோகமே வுரைத்தார். (சஎக)

ஏழினுக்குடையோன் நீசவீடதிலே யிருந்திட வக்கிரகத்தோன், பாழ்படவொழியும் பருதியும்பாம்பும் பான்மையாயிருப்பதேயானல், ஊழ்விதிப்படியாற் கெணிதநூற்பார்த்து உரைத்தனர் பெரியவர்தானும், சூழ்விதிப்படியால் நவின்றனர்மேலோர் சொல்லினர்மாதுவின் கருமம். (சஎஉ)

பத்துநாலெட்டு மிருபதுமாறிற் பான்மையாய்க்கருமமேமுடிப்பன், சுத்தியாயிருப்பன் கெருவியுமாவன் சோதிடவகையெலாம் படிப்பன் பத்தியாயிருப்பன் பாடிடவாக்கான் வகர்மொழிவளமுட னுரைப்பன், மத்திபமான வாழ்க்கையே யுடையன் மனோவியு மொன்றெனமதியே. (சஎங)

வேறு.

மதியுமஞ்சுவருஞ் சுபர்பார்க்கினும்
சதியதாகத் தரணிவருமுயிர்
அதியமான அரிவையாற்சேயவன்
விதியதாக விளங்குவன்நாசமாய். (சஎச)

வேறு.

மனைவியாமூன்றேயாகும் மாதுவின்வழியிலொன்று
அனைய்வள்நாசங்காட்டும் அன்னியரிரண்டுசொல்வேன்
ஷினையுடனெடுக்கும்மொன்று விதித்தனர்கெணிதவாக்கால்
மனைவியுமொன்றுவாழும் மங்கையாலதிகயோகம். (சஎடு)

சுங்கனுமீராறுகத் துணிவுளவலவன்காரி
தங்கிடக்கூடமாந்தி தன்னுடனுட்சியாகில்
யிங்கிதமாகப்பேசு மிணங்கியவாக்கில்மாலும்
பொங்கியகுருவுங்கூடிற் பொருந்தியபலன்மேலாகும். (சஎசு)

புகருமேநீசமாகிப் புந்திவீடதனிற்சேரத்
தகரினிற்கொடியோன்மேவ தானக்கோள்நீசமாகப்
புகரின்வீடதனைமாந்தி பொருந்தவேநோக்காதாகிற்
பகர்மொழிபிலமதாகும் பதிதனிற்பிறக்குஞ்சேய்க்கு. (சஎஎ)

வாகனம்பூமிகாலி வருந்துணைநாசங்காட்டும்
ஏகமென்றுரைக்கலாகு மினியசொல்மொழியவல்லன்
போகமுங்குறைந்துகாட்டும் புத்தியாற்பிலமாய்வாழ்வன்
பாகமாய்மனவியாலே பகரலாமிவன்றன்யோகம். (சஎஅ)

சேயவன்மதியைநோக்கச் சேயுடன்சுபர்கள்சேர்ந்தால்
தாயையுந்தமரைப்பேணுந் தரணியிலதிகவாழ்வோன்
தீயவனோடுசேயுந் திருந்தியொன்றுகுமாகிற்
றாயையுந்தமரைப்பேணன் தையலும்பேணன்மாதே. (சஎகூ)

வேறு.

புகருடன்மதியுங் கருமகேந்திரத்திற் புனிதமாயிருந்திட
வன்னோன், தகவுளவுயிர்க்கு நாலிலேதனிக்கச் சற்குருவுயிரின்
கோளுடனே, நிகரிலாப்பாக்ய மதனிலேயிருக்க நிகழ்த்தினுரைந்
தினிலரவால், செகமதிலதிக பாக்கியமாவன் சேய்திசைகடந்து
மேல்வருமாம். (சஅ0)

வேறு.

வருவதுஅரசர்திசைதனிலரசர் மதியினுல்முயற்சியுமுடையன்
தருவதுநீசவித்தையாலாகும் சாதகன்லோபியாம்வரிசை
பெருவதுதேகன்யாவருக்கும் நயத்தன்பேசியயிருபதுநாலில்
வருவதுநீசராசனுல்முயற்சி மகிழ்ந்திடவதிகமாய்விளங்கும். ()

பஞ்சமன்கருமநாதன் பனிமதிதனக்குஅஞ்சில்
விஞ்சையாய்க்குருவின்வீட்டில் விளங்கியவுச்சமாகத்
தஞ்சமாய்மதிக்குப்பத்திற் றனித்திடச்செவ்வாய்நிற்கக்
குஞ்சரம்போலேவாழ்வன் கோதையர்தனக்குஅன்பன். (சஅச)

நாலினோன்மதிவீடேக நாலினிற்றீக்கோள்மேவச்
சாலவேநாலோனோடு தரித்திடச்சுபர்வந்துற்றுத்
தூலமாய்முக்கோள்தன்னைத் துணிவுடன்பாவர்நோக்க
ஏலவேபூமிகாலி யிருநிதிகிரகம்நாசம். (சஅரு)

மதியுமேகரிவீடேக வக்கிரன்தகரிற்சேர
விதியுடன்காரிதானும் விளங்கிடமகரம்நின்றுற்
பதிதனம்யோகம்பூமி பாக்கியமதிகமாகும்
மதிகரிதிசைவந்துற்றால் வரவரப்பெருகுந்தானே. (சஅசு)

வேறு.

சுக்கிரன்மால்மர்ந்தியுட னுயிர்க்கஞ்சேகித்
தோன்றிடவே அஞ்சாங்கோள் நாலின்கோளும்
தக்கதெனவுதயமதிற் பவர்களோடு
தரித்திடவேமதிதனக்கு மறையாதானால்
தொக்குமெனவுயிரினுக்கு நாலின்கோளன்
தோன்றுதிசைநாள்புகரின் போக்கிற்றந்தை
மைக்கருங்கண்மாதரசே மனையிரண்டு
வருங்கிரகம்வெகுபிலமாய் வரினுமாதே. (சஅஎ)

பெருகுமிந்தத்தரணியதிற் பிறந்தசேய்க்குப்
பிரபலமுங்கீர்த்திபுக ழதிகயோகம்
குருவினுடதிசையதனி லரவுதோன்றிற்
கொடுத்திடுவன் முயற்சிதனம் பூமிவீடு
வருமுயிரிற்சனிசெவ்வா யிருக்கமாந்தி
மதியினுடவில்லமதிற் புகர்மால்வெய்யோன்
தருகுவதாலிவன்றகப்பன் கஷ்டத்தோடு
சஞ்சலமாங்குடும்பத்திற் றயங்குவானே. (சஅஅ)

வேறு.

ஒன்பதுக் குடையோன் மேகந்திரமதனி லுற்றிடப்பானு,
டன்கூடிச், செம்பொன்மால்மதியுஞ் சுங்கனுமொன்றாய்ச் சேரி

டமைந்திடமாகில், வம்புகள்மொழியான்வழக்கறவல்லன் வயது பத்தெட்டுடனிரண்டில், இன்பமாயோக ஞகியேயெவற்கு மேந் திழைதனக்குமேநல்லன். (சஅகூ)

வேறு.

மதிதனக்குக் கேந்திரத்திற் குருவேநிற்க
மந்தனுக்குக் கேந்திரத்திற் புகரும்வந்தால்
நிதிக்குடையோன் புகர்தனக்கு நாலிற்செவ்வாய்
நின்றிடவே வுயிர்தனக்கு நாலோஞேடு
துதிபெறவே அஞ்சாரேன் பத்தில்நிற்கச்
சோமனுடனிலக்கனத்தோன் மறையவந்தாற்
கெதிபெறவே யிருந்திடுவன் புவனமீதிற்
கெணித்திடுவ னிருபதின்மே லதிகமாக. (சகூ0)

மதிதனக்குக் கேந்திரத்தி லுயிர்கருமன்நிற்க
மந்தனுக்கு நாலதனில் மால்புகர்சேய்கேது
நிதிக்குடையோன் சேய்தனக்கு யேழுதனிலரவு
நின்றிடவே மாந்தியுடன் மாலவன்வீடானல்
துதிபெறுவ னிரவிமதி காரியில்லந்
தோன்றிடவே வருஞ்சேய்க்குச் சொல்வயதீரேழிற்
கெதிபெறவே யிருந்திடுவன் கேசரியாம்யோகன்
கீர்த்தியினல் மேன்மைபெருஞ் சன்யாசியிவனே. (சகூக)

பெருமையென வுரைத்தார்கள் பெரியோர்கள்மொழியால்
பேருலதிற் சிவிகைகுடை சாமரங்களுடனே
திறமையுள புத்தியினற் சுமுகன்வெகுதனவான்
செப்பரிய தீரத்திற் றெரிசனங்களுடையோன்
அருமைஅபி மானியுல கோரனைத்தும்போற்ற
அந்தமுறுங்கனயோக சாலியெனுந்தீரன்
வருமைபெரு மரவினுட திசைதனிலேமாலூண்
வந்திடுநாள் சன்யாசி யோகமுமுள்ளவனே. (சகூஉ)

வேறு.

தப்பிலாலாபத்தானத் ததிபனுமத்தானத்தில்
லப்பிலாஆட்சியுச்சங் கேந்திரகோணஞ்சேர்ந்தால்
நப்பிலாத்தனமும்பூமி சாஸ்திரவேதஞானம்
இப்புவியதனி லுள்ளோர் வணங்கச்சன்யாசியாவன். (சகூங)

மதிமகன் புகர்சேய் தனுவினிற்கேதும் வந்திடக் கருமகேந்திரமாய், நிதிபெருமிரண்டிற் கருமனுமுயிரோன் நின்றிடச்சேயின்வீடாகித், துதிபெருமரவு மாந்தியுமொன்றாய்த் துலங்கிடமாலவனில்லாய், விதியுடன்வயதீ ரேழினில்யோகம் விதித்தனர்தவத்தின்வேடம். (சகூச),

வேறு.

மந்தனும்நாலாங்கோளாய் மாந்தியோடிருக்கநாலில்
விந்தையாய்க்குருவுஞ்சேயும் விளங்கிடக்கேதுவோடும்
முந்தவேபாக்கியத்தில் மொழிந்தமால்வீடாய்வந்தால்
சுந்தரம்போலவாழ்வன் தொல்புவியதனிலென்றார். (சகூரு)

அரவுதன்திசைமால்மந்தன் அந்தணன்முதலோரூணில்
விரவுடன்முயற்சிசெல்வம் வெண்கலந்தானியங்கள்
தரமுளமகவின்பேறு தையலுமதனாற்றோன்ற
திரமுறைப்படியேமூன்று திசையினுமுயற்சிமேலாம். (சகூசு)

வேறு.

மதிதனக்குக் கேந்திரத்திற் புகர்குருவாய்நிற்க
மந்தனுக்குக் கேந்திரத்தி லிரவிகுசன்மால்தான்
நிதிதனக்குக் கேந்திரத்தில் மதியரவுங்கேதும்
நின்றிடவே வருஞ்சேய்க்கு நிகழ்த்திநேங்கேளாய்
பதிதனிலே போகமிலான் பாக்கியமேயுடையன்
பகரலாம் புத்திரற்குத் தோஷமெனவுரைத்தார்
கெதிபெறவே யிருந்திடுவன் கேசரியாம்யோகன்
கீர்த்தியினால் மேன்மையுள கெருவிதனுவானே. (சகூ.)

வேறு.

இவனியலிலக்கினத்தோ னிந்துவீடதற்குப்பத்திற்
கவனமாயிருக்கவன்னேன் கருமனுய்வாழப்பத்தில்
வினவியபுகர்சேய்மாலும் விளங்கிடக்கேதுகூடில்
மனவியரில்லாயோகன் மன்னனுய்வாழ்வன்தானே. (சகூஅ)

நாலினிற்புகர்மால்மந்தன் நல்கிடவதற்குநாதன்
மாலவன்வீட்டிற்போனால் வாகனயோகனுவன்.
சீலமாய்ப்புகர்வீடானாற் சிவிகையுமவர்க்குண்டாகும்
கோலமாயிருக்கவல்லன் குடும்பத்துக்கதிபனுவன். (சகூகூ)

மந்தனும்புகரும்புந்தி மந்திரிவீட்டிலேகச்
சிந்தையாயதற்குநாதன் சேரிடம்புதன்வீடானால்
சுந்தரத்துடனேவெள்ளி தோன்றியதிசையிற்செல்வம்
விந்தையாயதிகமாகும் வெகுநிதிக்குடையோனவன். (நoo)

வாக்கினுக்கதிபன்நாலில் வந்திடவதற்குநாதன்
தீர்க்கமாயிருப்பானுகிற் றிரவியம்நிகரிலாதான்
போக்குடன்மொழியவல்லன் புத்தியிலதிகமாவோன்
பாக்கியத்ததிபன்நாலிற் பதிந்திடச்சுபரேபார்த்தால். (நoக)

வாகனம்பூமிகாலி வருநிதியதிகமாகும்
யோகனுயிருப்பானுகும் யுக்தியுமதிகவித்தை
போகமுங்குறையிலாதான் புத்தியிலெவர்க்குமேலாம்
ஆகமத்துடனேவேந்த ரனுசரிப்புடையோன்றுனே. (நoஉ)

இந்துவுந்தனக்குநாலா மிடத்துளோனெட்டிற்போக
விந்தையாயைந்தோன்ராகு விளங்கிடவாக்கிற்போகச்
சொந்தமாங்கடகவீட்டிற் சோமன்றன்மகனேபோகிற்
கந்தகேள்குமரனுணை கருதினர்வேடம்வாங்க. (நoங)

வேடமேஅரவுநாளில் விளங்கியகணக்கனுணில்
கூடவேவருமென்றேதி குறித்தனர்தமிழையாய்ந்தோர்
பாடவேவாக்குமுள்ளோன் பாவையர்க்கன்பனுகும்
சாடவேபாக்கியங்கள் சாற்றினர்புவனமீதே. (நoச)

சிவிக்கின்றவுயர்ந்தபத்தோன் திகழ்பிலவீனமாகிக்
கவிக்கின்றவாக்கோன்வீட்டிற் கலந்திடக்கேதுவோடே
தவிக்கின்றசன்னியாசஞ் சாருவான்சசிசேயேழாற்
குவிக்கின்றகொங்கைமாரைக் கூடுவனிவனேயென்றார். (நoஞ)

பத்தினுக்குடை யோனும்பருதியுஞ்
சித்தியாகிய நாலிற்சிறந்திட
வித்தைகல்வி விளங்கியமாதுரால்
புத்தியாகிப் புனிதமாய்வாழுவன். (நoசு)

பஞ்சமத்திற் புகருடன்மாலவன்
விஞ்சையாகிய வேதியன்கருமனுய்
வஞ்சிதானத்திற் கேதுவும்வாழ்ந்திடத்
தஞ்சமாகத்தரணியில் யோகனும் (நoஎ)

வேறு.

யோகமாக வுரைத்தனர் பத்தையும்
உண்மையாக வுதயனும் பொன்னவன்
வேகமாகவிளங்கியே நோக்கிடில்
வேந்தரால்மிகச் சீவனஞ்செய்வனும்
பாகமாக வுயிரி லரவுடன்
பனிக்கதிர்வரு மாந்தியுஞ் சேயுடன்
தாகமாகத் தகரினிற் றோன்றிடச்
சந்ததிக்கொரு தோஷமேசாற்றினர். (௫o௮)

வேறு.

வாக்கினிலுயிரோன் மதியுடன்மாலும் வந்திட வாக்கினோ
ஞட்சி, பாக்கியகருமநட்டமாதிபனும் பருதிவீடதனிலேகே
தும், தாக்கிடவக்கோ ளிடபகேந்திரத்திற் றனித்திடவுயிரினில்
வாழ்கில், வாக்கினோன்திசையி லதிகமாம்யோகம் வரவரவுயர்ந்
திடும்விதியால். (௫o௯)

விதியினுல்யோகம் விதித்தனர்பெரியோர் வேந்தரால்முயற்
சியுமுடையோன், மதியினுலநேக யோக்கியமாவன் மங்கையர்
போக போக்கியமுங், கெதிபெறவிருப்பன் கேடுமேசெய்யான்
கீர்த்தியும் புகழுமேவுடையன், துதிபெருமரசர் தமக்குமே
நயத்தன் சொல்நயம் பொருள்நய முடையோன். (௫க0)

மதியுடன்கேது முயிர்க்குநாலதனில் மறைந்திடப்புகருயி
ரோனும், நிதிதனைச்செவ்வா யாட்சியாய்நோக்க நீலனும்பாக்கிய
மதனிற், கெதிபெருமேழோன் பருதியோடாச்சி கேந்திரம்பிறை
க்குமேழ்வரவே, பதியினில்யோகம் அற்பமாய்வாழ்வன்பாவை
யர்பாலகன்வருமே. (௫கக)

கும்பலக்கனத்திற் பருதியுமாலுங்குளிகனுஞ் சனியுமைந்த
தனில், தம்பமாமெட்டி லிரண்டினோனிருக்கச் சார்ந்தவர்க்கத
னிலேகருமன், வம்பிலாப்புகரும் லாபத்திற்றனிக்க வளர்மதியே
ழினிலிருக்கிற், செம்பொனுங்கேது மூன்றினிலரவுசெல்வமர்ந்
தானத்தில்வந்தால். (௫கஉ)

வேறு.

பாலகன்மனவியோகமுமற்பம் பாக்கியம்பூருவமொழியும்
சாலவேபுகரிலிரவியிற்றூரந் தங்கிடுஞ்சமனுடன்வாழ்வன்

கோலமாயயலூர்வாசமேவுடையன் கோதையர்கலவியிலதிகம்
வேலவனருளாலாயுளுந்தீர்க்கம் விதித்ததுஅரவுநாள்வரைக்கும்

வந்திடுஞ்சேய்க்குவயதுமேதீர்க்கம் வளர்மதியிருந்திடுநாதன்
தந்திடுமனவிதிசைவரும்நாளிற் றந்தைக்குத்தோஷமேவுடையன்
முந்தியபிதாவைவிட்டுமேபோவன் மொழிவதுபாக்கியமற்பம்
சிந்தியமனமுமேழையாம்வஞ்சன் செப்பியவித்தைகள்சமனும்.()

வேறு.

ஏழினோனுயிரோன் புகருடன்பருதி யீரைந்தோன்பாக்கிய
னுடனே, தாழ்விலாவுயிர்க்கு லாபமேசேரச் சந்திரனுச்சனும்ம
றையில், மாலவன்வீட்டி லரவமேதரிக்க மதிக்குநாலதனிலேசெ
வ்வாய், கோலமாய்நாலிற் காரியுங்கேதுங் குறுகிடப்பிறந்திடுஞ்
சேய்க்கு. (ருகடு)

பிறந்திடுஞ்சேய்க்கு அரவுநாளதனிற் பெருகிடுமுயற்சியுமே
லாய், நிறைந்திடுமுயிரோன் திசையிலுமதிகம்நின்றிடுங்காரிதன்
திசையில், மறைந்திடாயோகம் வாகனமுதலாய் வளர்ந்திடுமதி
கபாக்கியங்கள், குறைந்திடாதிருக்கு மரணமாம்வரைக்குங்
கோதையர்போகமும் பிலமாம். (ருகசு)

பஞ்சமாதிபனுங் கேதுடனுயிரிற் பதிந்திடப்பானுவுமஞ்
சாய், விஞ்சையாயுச்ச மாகவேவரினும் விதித்தனர் கருமங்கள்
முடிக்கக், கொஞ்சியபிதிரைக் கொன்றிடுஞ்சேய்நாள் குறுகிய
அரவினினுதவும், மிஞ்சவேதிசைநாள் வேந்தராலிலாபம் விளங்
கியபாலகன் றனக்கே. (ருகஎ)

பொன்னவன்காரி யரவுடன்மதிக்குப் புனிதமாய்க் கேந்தி
ரமிருக்க, நன்னயமான வாக்கின்கோள்மதியாய் நாடிடவிரவியு
ங்கூட, அன்னையின்தான மனுவழியமர வையஞ்சுவயதிலேயோ
கம், முன்னநூல்விதியால் வாகனம்பூமி முயற்சியாலதிகமாய்ச்
சாற்றே. (ருகஅ)

வேறு.

சாற்றியவுயிரோனெட்டோன் தனித்திடவாறிலுச்சம்
ஏற்றியகருமமூன்றி லிருந்திடக்குருவீடாக
மாற்றியபுகரோன்மந்தன் மதிக்குநாலேழில்நின்றால்
நாற்றிசைபோற்றயோகம் நண்ணிடுமிவனுக்கென்றார். (ருகஙு)

சந்திரன்றனக்குநாலு சற்குருவீடாய்ச்சுங்கன்
சுந்தரத்துடனேவுச்சந் தோன்றிடவுயிர்க்கெட்டோனாய்
வந்திடப்பிறந்தசேய்க்கு வகுத்தனர்சிவீகையோகம்
தந்திடுமேன்மையான சகலபாக்கியமுந்தானே. (௫உo)

சந்திரன்குளிகனென்றாய்ச் சதிருடன்மறையவாக்கில்
முந்தியவுயிரோனோடு மோகமாய்க்கதிரோன்கூடிப்
பந்தமாய்ச்செவ்வாய்வீட்டிற் பதிந்திடப்பிறந்தசேய்க்குப்
புந்தியிற்கோபியாகப் பொருந்திடுமூர்க்கனுமே. (௫உக)

கூடியவுயிரோனேழோன் குறுகிடவஞ்சோனோடும்
நீடியவாக்கினோடே நின்றிடச்செவ்வாயாகில்
நாடியபத்தில்மாந்தி நண்ணச்சன்யாசியாவன்
தேடியசிவனேயென்றுசெப்பினர் கலைவல்லோர்கள். (௫உஉ)

சத்துருதானநாதன் சந்திரனுகிநாலிற்
பத்தினைப்பார்க்கவந்தாற் பாலகன்றனக்குமுத்தி
சித்தியாமேழுசென்மஞ் செனித்திடுமதனின்மேலே
எத்திசைபுகழுமோட்ச மிவனுக்கேயாகுமென்பர். (௫உங)

கலந்தநான்குடையோனைந்தாய்க் காணவொன்பானுங்கேந்த்ர
தலந்திரிகோணஞ்சேரச் சார்ந்தசாதகற்குநன்மை
துலங்கியகுதிரையானை துரகதமதனுல்லாபம்
இலங்கியதேசந்தன்னி லிவன்பிரபலத்தனுமே. (௫உச)

வேறு.

பத்தினிலரவு மேழின்கோளுடனே பதிந்திடப்பானுமால்குளிகன், சித்தியாய்மதிக்குச் சத்தமந்தோன்றிற் சேய்சனியுயிரினிற்றரிக்க, மெத்தவேஅரவு திசைதனிற்புகர்நாள் மேவிடில்வேந்தரால் முயற்சி, சித்தியாமெழுத்து வேலையாமரசர் சேவகன்யோசனையுடையோன். (௫உரு)

பருதியுமுயிரோன் மாலுடன்சுங்கன் பதிந்திடமதியுடனிரண்டாய், நிதியினிலிருக்க வுயிரினிற்கேது நின்றிடநாலினிற்சனியாய்ச், சுருதியாமைந்தோன் மூன்றினிற்றோன்றச் சோமன்வீடதிற் செவ்வாய்மாந்தி, வருவதுகுடத்தி லரவுமேயிருக்கில் வாய்ந்திடு மிரவிநாள்தோன்றும். (௫உசு)

தோன்றியகுழவி தனக்குமொன்பதின்கோள் சோமன்வீடதனிலேசம், கீன்றியமாந்திதன்னுடன்கூடக் கீழ்மகன்நாலி

னில்நின்றால், ஊன்றிடும்பலன்கள் பிதாவுக்குமதிக முற்றிடுஞ் சகோதரமுடனே, யீன்றிடுமரவுகுருதிசைவந்தா லெய்தியபலன் கள்மேலாமே. (௫௨௭)

வேறு.

நாலின்கோள்புகர்வீடாகி நாலினிற்றீக்கோள்நிற்கில்
மாலவன்வீடுநாலாய் வந்திடவதற்குநாலில்
தூலமாய்த்தன்மகன்மன் தோன்றிடப்பாம்புசேரில்
ஏலவேபுரவியேறி யிடுப்பினிற்காயந்தோன்றும். (௫௨௮)

வேறு.

தோன்றிடுங்கருமன்திசைதனிற்புகர்நாள் சொல்லியநாலின் கோளுணில், தான்றிடும்புரவிதவறியேவீழ்ந்து தயங்கிடுமிடுப்பு டன்காலில், ஊன்றிடும்வடுக்களுறுதியாம்பலன்க ளுதவிடுமெனச் சிலர்மொழிய, ஆன்றசற்குணத்தா லவனியில்வாழ்வனுண்டுமுப் பத்துநாலதனில். (௫௨௯)

மதிமகனேழோன் கருமனுமாகி வந்திடப்பாக்கியன் செவ் வாய், துதிபெருங்காரிவீடதுமூன்றாய்ச் சுங்கனும்நாலதிற்றோ ன்ற, விதியுடனுயிரிற் பொன்னவனுட்சி மேவிடப்பாம்புமொன் றானால், பதிதனில்யோக பாக்கியம்பூமி பலித்ததுமேன்மையாய் விளங்கும். (௫௩௦)

விளங்கியசேய்க்குக் கருமகேந்திரத்தில் விதித்தனரிரண்டி ன்கோளுடனே, களங்கமில்மாந்திகலந்திடமதியுங்கதிரவன்வீட் டினிற்றரித்தால், வளங்களாம்புரவிவாகனச்சகடம் வாழ்ந்திடுங் குடும்பகோமானும், தளங்களுஞ்சிவிகைதுரகதமுடனே சாற்றி னார்கெணிதநூலாய்ந்தோர். (௫௩௧)

வேறு.

கலைதெரிந்துரைக்கும்வாக்கோன் கதிர்புதன்தனக்கீராறில் நிலைசெவ்வாயுடனேகூடி நின்றிடம்பிறைக்கஞ்சாகிப் பிலமுடனிலக்கினத்தோன் பெருகியொன்பதினுலுச்சம் துலைதனில்வரினும்யோகம் சொல்வதுவேடமாக. (௫௩௨)

வேடமாங்காரிநாளில் விளங்குமாண்டீராறுக்கும் நாடவேதிரியின்வாழ்க்கை நண்ணுவனிதன்மேல்வேடம் சாடவேமனஸ்தாபங்கள் தையலாளதனுற்றோன்றுந் தேடவேபுவனமீதிற் செப்பினார்கலைவல்லோரே. (௫௩௩)

வல்லவர்பெரியோர்பாதம் வணங்கியேயிருப்பன்கோபி
சொல்வதுபிலத்தப்பாகும் சோம்பல்வஞ்சனைசஞ்சாரன்
நில்லெனுங்கொடூரசிந்தை நீக்கியேசிவனைநோக்கல்
நல்லவன்மூன்றுசென்மம் நாடிச்சன்யாசியாமே. (நுகச)

நாடியகிரகமூன்றும் நண்ணிடமதிக்காருகிற்
றேடியஅஞ்சில்ராகு சேர்ந்திடநிலவுக்கெட்டிற்
கூடியபுகருங்கேதுங் கொடியதோர்செவ்வாய்பார்க்கில்
வாடியமனமும்வேறாய் வகுத்தனர்புவனமீதில். (நுகரு)

பஞ்சமாதிபனும்பருதியுமாலும் பதிந்திடக்கார்விடதனில்
விஞ்சையாயுயிர்க்குநாலினிற்சுங்கன் விளங்கிடவுச்சமேயானல்
தஞ்சமாய்க்குருவுமரவுடன்தனுசிற்றரித்திடவுதயகேந்திரமாய்
மிஞ்சவேகாரிமாந்தியும்பத்தில் வித்தையிற்சசியிருந்திடவே. ()

ஆடிடும்வஸ்துதானியம்பூமி யநேகமாம்பொருளெலாஞ்சேரும்
வாடிடுமனமுங்குழவியினலே வகுத்தனர்சிவிகைவாகனமும்
நாடிடும்புரவிசகடமுமேன்மை நண்ணிடுங்கெசமுமேயாகும்
தேடிடுமனதிலன்பனுய்த்தெய்வ பத்தியிற்சிந்தனையுடையோன்.

வேறு.

பொன்னவன்கருமனுகியேமதிக்குப் புனிதமாயிருந்திடக்
குடும்பம், அன்னவன்குருவீடதனிலேயிருக்க அருக்கனுஞ்சேர்
ந்திடக்கருமம், முன்னமேஅரவுதிசைதனிற்புகர்நாள் முடிந்திடு
மதிகமாமுயற்சி, தன்னவனுகயிருப்பனுங்கருமம் சார்ந்திடுமரவு
தன்திசையில். (நுகஅ)

அரவுதன்திசையி லன்னையைப்பிதாவை அனுப்புவனந்தக
ணூர்க்கு, வரவுடன்செலவும் வகுத்தனர்பெரியோர் வஞ்சமில்
பூமியுங்கிரகம், புரவியும்வாய்க்கும் பொருட்பலசேரும் ,புகழு
டன்வாழ்ந்திடவல்லன், திரமுளமனைவி தனக்குஅட்டமத்திற்
சிதனுந்தரித்திடவந்தால். (நுகக),

வந்திடுமனவிதனக்குமேழதனில் வக்கிரங்குருவுமேஆட்சி;
தந்திடுஞ்சேயும் சனியுமேபார்க்கிற் சாற்றினுர்கெணிதநூலாய்ந்
தோர், முந்திடுமனவியொன்றுமேயாகும்மோசமாமங்களமிரண்
டாய், வந்திடப்பிறந்தமனவியர்தனக்கு வாய்த்திடுங்கணவனெ
ன்றியம்பே. (நுகo),

பொன்னவன்வாக்கைப் புதனையும்நோக்கிற் பொருந்துவா
ன்வாக்கினில்வித்தை, நின்னயமாகப்பாடிடும்வாக்கன் நெஞ்சி
னிற்கபடமேயில்லான், சொன்னசொற்பிலமா யாவர்க்கும்நயத்
தன் சோமனைக்குருவுமேபார்த்தால், அன்னைசொற் கேட்பன்
கோபியுமாவன் அன்புளமனைவிக்குப்பிரியன். (நுசக)

வேறு.

கரியவன்சேய்வீடேகச் கணக்கனுமருக்கனோடு
பரியவன்றனக்கிரண்டிற் பகர்ந்திடப்புகரேயானல்
விரிவுளஅட்டமத்தோன் விளங்கிடவுயிரிற்பொன்னன்
சரிவுளநோக்கமானற் சாற்றினருதித்தசேய்க்கு. (நுசஉ)

உதித்திடுஞ்சேய்க்குத்தேக மொளியுமேகாரிநாளில்
விதித்திடுமரவிற்போகும் வேந்தரால்முயற்சியுண்டாம்
மதித்திடவல்லனவன் வக்கிரன்லாபமானல்
துதித்திடுமரவுநாளில் துலங்கியேவருவன்மாதோ. (நுசங)

சரராசியாகச்சென்மம் சார்ந்திடப்பின்னுந்திங்கள்
திரராசியல்லாற்சென்ம நாதனும்வியத்திற்சேரில்
வரும்ராசிசென்மவோரை நாதனைமருவநோக்கக்
குருவுரைகேட்கவல்லன் குலங்களுமுன்னுட்பங்கம் (நுசச)

பங்கமாய்நீசனுகிப பத்தியாய்ச்சிவனைமுன்னுள்
சங்கையாய்த்துதித்துவந்தான் சாதகனதன்பின்னுலே
செங்கையாற்பொருளைமுன்னுள் திருடியேபூமிவாரி
வங்கமுமேறியெல்லா மதிவலம்வருவதானன். (நுசடு)

மதிவலம்வருகப்பத்தில் மால்கதிரிருக்கப்பொன்னும்
சதியுடன்நோக்கவந்த சாதகன்றனக்குமுத்தி
விதியுடனுரைப்போமுன்னுள் வேந்தரால்முயற்சியாகும்
பதிதனிற்சிவனைநாட்டிப் படித்தரம்வைப்பானுகில். (நுசசு)

வைத்திடுஞ்சேய்க்குமோட்சம் வகுத்தனர்பெரியோர்தானும்
சித்தியாமடுத்தசென்மம் செல்வனுய்ப்பிறந்துஞானம்
பத்தியாயிருந்துநல்ல பரமனைவேண்டிமோட்ச
முத்தியாமென்றுமேலோர் மொழிந்தனர்கணிதநூலால். (நுசஎ)

மங்கைதானத்திற்பாம்பு வந்திடச்சேயும்பார்க்கச்
சங்கையாயக்கோள்தானும் சற்குருவீட்டிற்சேரப்

பங்கமாம்பத்தோன்காரி பத்திடந்தரிப்பானுகில்
மங்கையர்வருநாள்தொட்டு வளருமேபாக்கியங்கள். (௫௪அ)

வேறு.

பூமிதானத்தோ னுச்சமாய்மறைந்து புந்தியின்றனக்குயே
முதனிற், றுமிதமில்லா தைந்தின்கோளுச்சம் சார்ந்திடக்குருவு
மேபார்க்கிற், காமனுமழகன்கடிதுடன்வளர்த்தி கருத்திடுந்தே
கமாயிருப்பன், நாமமாய்வயதுநாற்பதுமேலே நவின்றனர்யோக
மேஅதிகம். (௫௪௯)

நாலினிற்புகரும் புந்தியுந்தரிக்க நவின்றனரொன்பதுக்கு
டையோன், ஏலவேயுயிரோன் தன்னுடன்கூடி யிருந்திடக்குடு
ம்பமாய்த் தரிக்கில். மாலவன்றனக்கு ஒன்பதிலரவும் வந்திடம
திக்குப்பத்தினிலே, கோலமாய்ப்புகரும் புதனுமேயிருந்தாற்கு
றித்தனர் முப்பதுமிரண்டில். (௫௫௦)

முப்பதுமிரண்டி லரவுநாள்புகரில் மோசமில்புந்தி நாளத
னில், தப்பிடாச்சகடம் புரவியுமுபற்சி தாண்டிடும்நீசனுலாகும்
இப்படியிரவி யிந்துசேய்முதலா யிணங்கியே அதிகமாம் பலன்
கள், தப்புவதில்லை கெணிதநூலாய்ந்தோர் சாற்றினுரிப்படிப்பல
ன்கள். (௫௫௧)

கன்னிலக்கனத்திற் சேயுமேயிருக்கக் கதிரவன்மாலுடன்பு
கரும், தன்னிகரில்லாத் தேளினிற்றேன்றச் சுந்திரன்தனத்தினி
ல்வரினும், மின்னியவுயிர்க்கு நாலின்கோள்குருவாய் விருட்சிக
ந்தன்னிலேவந்தால், முன்னஞ்சோதிடநூ லாய்ந்தநற்பலன்கள்
மோகமாய்ச் செப்பினர்பெரியோர். (௫௫௨)

செப்பினர்பெரியோ ருயிர்க்குநாலதனிற் சேர்ந்திடக்காரி
யேயானுல், ஒப்பிலாக்கீர்த்தி பாக்கியனுவ னெழிந்திடும்பிதிர்த
னமெல்லாம், தப்பிதமில்லை காரிவீடதனிற் றங்கியஅரவுமே தரி
த்தால், அப்பினிற்கயன மச்சுதன்நிறம்போ லாகிடுந்தேகமேவு
டையன். (௫௫௩)

தேகமுஞ்சமனுய் வளர்த்தியுஞ்சமனுய்ச் செப்பினுர்கலைய
றிந்தோர்கள், பாகமாம்நயனம் அரையினிற்சிரசிற் பகர்ந்தனர்
மருவடையாளம், வேகமாய்வயது பத்துடன்நாலில் விளங்கிடும்
யோகமேவுடையன், ஆகமத்துடனே குருதிசையதனி லலைந்திடு
ங்கவர்டமேயதிகம். (௫௫௪)

சூரியன்நவத்தோன்பத்தோன் தோன்றியவுயிரோன்நால்வர்
வேதியன்தனக்கஞ்சாகி விரைவுடன்செவ்வாய்பார்க்கிற்
காரியுங்நாலிற்றோன்றிக் கருமத்தையுயிரைநோக்கில்
பாரினிற்குருநாள் தன்னிற் பாக்கியன்பொசிப்பிற்போமே. ()

போவதுதந்தையாகும் புண்ணியமில்லான்சீலன்
ஆவதுபொருளுமற்பம் அன்னையர்வழியிற்கன்மம்
காதலாய்ச்செய்வானுகுங் கஷ்டமேஅனுபவிப்பன்
மாதுவின்வழியிற்பாக்யம் வந்திடுங்கரிநாள் தன்னில். (ருருசு)

வேறு.

புகருடன்மாலுங் கருமகேந்திற் புனிதமாயிரண்டின்கோள்
கேதும், தகரினிலுயிரோன் தனித்திடவேழிற் சந்திரனிருந்தவீ
ட்டுடையோன், நிகரிலாச்செல்வஞ் சிவிகைவாகனமும் நேர்ந்தி
டுஞ்சாமரமுடனே, செகமெலாம்பணியச் சிவனருள்பெற்ற தீட்
சதனிவனெனச் செப்பே. (ருருஅ)

செப்பிடுமுயிர்க்குக் கருமனுங்குருவாய்ச் சேயுடவீடதாயி
ரண்டில், ஒப்பிடக்கீர்த்தி வித்தைகள் திரமா யுரைத்திடவல்லவ
னுகித், சப்பிலாஞானஞ் சார்ந்திடவல்லன் தயிரியன்சமவளர்த்
தியனும், துப்பிதழ்வாயாள் போகமில்லாதான் சொல்வதுநயவ
ஞ்சசீலன். (ருருகூ)

ஏழினேன்புரா யிரவிமாலுடனே யிருந்திடப்பாக்கிய மத
னில், தாழ்விலாதரவுங் கூடியேயிருக்கச் சந்திரன்வீட்டினிற்கு
ருவும், கோள்குசனுயிரோன்பத்தினிலுச்சங்குருகிடிலவன்திசை
யதனில், ஏலவேமணநா ளாகிடுமென்றே இசைத்தனர்கெணித
நூலாய்ந்தோர். (ருகூ0)

வேறு.

கலந்தநான்குடையோன்மூன்றுய்க் காரியேநாலிற்றோன்றித்
தலந்திரிகோணத்தொன்பான் சாமியெட்டேழிலுச்சம்
துலங்கியவெய்யோனேடு துணிந்திடப்பிறந்தசேயன்
இலங்கியசிவிகையானை யேறிடுமரசனுமே. (ருருக)

இரவியுமதியுங் காரிவீடதனி லிருந்திடவைந்தைநோக்குற்றுல்
பரவியகருமன் குசனின்வீடாகப் பாக்கியன்புகர்சிகிமாலும்
நிரவியகருமமதனிலேநிற்கில் நிகழ்த்தினர்முந்தியசென்மந்
திரமுடன்நல்லசாதியிற்பிறந்துசீறிதுநாள்யாகங்கள்முடித்தான்.

வேறு.

முடித்திடத்தேவி பூசையைவேண்டி முழக்கமாய்ச் செய்திடும்போது, திடத்துளம்நில்லா மயங்கினனதனால் தேவியும்பின்னுமேபிறக்க, நடத்தினளிந்த சென்மத்தில்நல்ல கருமங்கள் செய்திடுமோகில், திடத்துடன்மோட்சங் கொடுத்திடுமென்றுசெப்பினர்கலையறிந்தோர்கள். (௫௬)

பத்தின்கோளிரண்டோன் பஞ்சமன்நாலோன் பதிந்திடவுயிரினில்மேவச், சித்தியாங்குருவும் நோக்கிடுமோகிற் செபதபமுயற்சியிலதிகம், பத்தியாங்கோபி சாந்தகம்பின்னும் பயமற்பம் மெய்யதாய்விளங்கும், எத்திசையோரும் புகழ்ந்திடக்கீர்த்தியெய்திடும் புண்ணியமனமாம். (௫௭)

லாக்குத்தானத்தோன் கேதுடனெட்டில் வந்திடப்பருதி வீடாகத், தாக்கியவொன்பா னிரவிராகுடனே சார்ந்திடவிரண்டினிற்றரித்தாற், பாக்கியத்தானமதனிலேகுருவாய்ப்பதிந்திடப் பிறந்தசாதகற்கு, ஆக்கமாம்பூமி கிரகவாகனமு மதிகமாய்விளங்கிடவுரைத்தார். (௫௮)

உரைத்தனர்பெரியோ ருயிரினிலஞ்சோ னுண்மையாய்ப்பத்தின்கோளுடனே. திரத்துடன்குளிகன் கூடவேயிருந்தாற் செப்பினர் மால்திசைமுதலாய், நிறைத்தனர்முயற்சி பூமியுந்தனங்கள் கோர்ந்திடும் வரவரவுயரும், மறைத்தனரிரவி வீட்டினிலிருந்தோன் வந்திடிற் கேதுவிற்போமே. (௫௯)

போவதுதந்தை பொன்னவன்பொசிப்பிற் புகழ்தனங்கீர்த்தியுமுடையன், ஆவதுகருமம் புகர்திசையதனி லநேகமாய்ப்பலன்கள்பெற் றிடுவன், சாவதுவரைக்குங் குறைவிலாதிருப்பன் தாய்கர்மம்புகர்திசையதனில், மாய்வதுசெவ்வாய்பொசிப்பினிற் பெரியோர் மதித்தனர்கெணிதநூலதனால். (௬௦)

மதியுயிர்க்கோளன் மறைந்திடவாக்காய் மாந்தியுமுயிர்க்கிரண்டினிலே, துதிபெருமக்கோள் கேதுடனஞ்சிற் றோன்றிடக் கருமனுமறையில், விதியுடனஞ்சோன்காரியுமதியும் விளங்கிடப் பானுவும்நாலிற், கெதிபெறவிருப்பன்முப்பதுநாலிற் கெணித்தனர்முயற்சிமேலாகும். (௬௧)

கெணித்தனர்பெரியோர் வாகனமுதலாய்க் கெருவிதனுகி யேயிருப்பன், பணித்தனருலகிற் பாவையர்போகம் பலித்திடுந் தாசியர்முதலாய், துணித்தனரன்னைதனக்குமேரோகந் துஞ்சிட மெலிந்திடும்படியே, தணித்திடும்பூமிதனங்களுந்தந்தை தனநிதி மங்களமிச்சை. (நுசுகூ)

வேறு.

இச்சையாய்மூன்றில்நாலோ னிருந்திடப்புகருங்கூடப்
பச்சைமால்வீட்டில்மூன்றோன் பதிந்திடமறையதாகக்
கச்சணிமுலையாய்கேளாய் கருதுவானன்னதானம்
நிச்சயமறையன்வந்தால் நிலவரமுபயஞ்செய்வன். (நுஎ0)

நிலவரமாகமூன்றோன் நின்றிடச்சுபர்களாகி
மலைவுடன்மறையில்மங்கை வாய்த்திடுஞ்சொல்மேலாகும்
குலமுடன்நல்லன்கோபி குறித்தபோசனங்கள்யாவும்
நலமுறுஞ்சுகத்தோடுண்பான் நாலுரெண்டுடனேகூடி. (நுஎக)

கூடிடமூன்றிற்சுங்கன் குறுகிடப்பணிகள்காதில்
நாடிடச்சிகப்புநீலம் நலமுடன்வயிரம்பச்சை
தேடிடஅணிவன்மூன்றோன் சேர்வதும்புதன்வீடாகிற்
பாடிடக்குரலினோசை பனிமதிகுளிர்ச்சிபோலாம். (நுஎஉ)

வேறு.

மாலவனுட்சிமறைந்திடவுச்சம் வளர்குருமதிக்குகேந்திர மாய், ஏலவேகரியும்பஞ்சமமதனி லிருந்திடவேழின்கோள்மறை யிற், கோலமாய்க்குடும்பன்மதியுயிர்தனக்குக் கூடிடக்கருமகேந் திரமாய்ச், சாலவேமதிநாள் வருமுதலாகச் சாற்றினுர்பலபல விதமாய். (நுஎங)

விதவிதமாக வருமெனவுரைத்தார் விதித்தனர் மாதுவுமிர ண்டாம், பதமுடன்துணைவர்பத்துடன்றோன்றும் பகர்வதுமில் முடனுரும், நிதிபெருதனவானுகியசுமுகன் நேர்ந்திடும்பூமிவாக னமும், துதிபெருயோகன் தருமவான்நல்ல சுமுகனுயிருந்திட வல்லவன். (நுஎச)

நாலினோன்செவ்வாய் மதியுடன்மறைந்து நண்ணிடமாலவ ன்வீடாய்க், கோலினிற்புகருங் கூடிடப்பத்தாய்க் குருவுடனர

வுமஞ்சதனிற், ருழ்விலாதாயிற் ருயற்குக்கருமம் சார்ந்திடும்வித்தைமூன்ருகும், வாழ்வதுபூமி கிரகவாகனமும் வரவரப்பெருகிடுமென்ருர். (ருஎடு)

வேறு.

சுகிபெருமஞ்சோன்பத்தோன் சுக்கிரன்மாந்திநாலில்
மகிமையாம்நாலின்கோளன் வாக்கினிற்கேதுவோடு
மிகுதிநான்கதிலேநிற்கில் வெள்குடைசாமரங்கள்
தகுதியாயிவனைச்சூழச் சார்ந்தபல்லக்கில்வாழ்வாம். (ருஎசு)

வேறு.

ஏழினேன்செவ்வா யாகியேஅஞ்சி லிருந்திடவிரவிமால்புகரும், தாழ்விலாக்குருவும் நோக்கிடவந்தாற் சாதகன்மூன்றின் கோள்திசையிற்,கோள்புகருயிரோன் பொசிப்பினிலன்னுள்கூடிடும்போக போக்கியங்கள், வாழ்வதுபிறரில் தாசியர்முதலாய் வாழுவானெனச்சிலர்மொழிவார். (ருஎஎ)

வாழ்ந்திடுங்கரியில் மனவிரண்டாக வஞ்சியர்சேதமாம்போகம், தாழ்ந்திடுந்தாசி போகபோக்கியமும் தராதிபன் நேசம்வந்துதவும், ஆழ்ந்திடுமுயற்சி யணுகிடுமன்னை யையாண்டுபத்தினிற்கரியிற், ருழ்ந்திடும்படியே கணிதநூல்விதியைச் சாற்றினர் பெரியவர்தாமே. (ருஎஅ)

காரகன்மந்தன் மாந்தியுமுயிரிற் கலந்திடவாறின்கோளேழில், வாரமாயேழோ னரவுடனஞ்சில் வாழ்ந்திடப்புகரின்வீடாகத், தாரமும்புகரிற் றனதுநாளதனிற் சார்ந்திடுங்கோபியுமாவன், தூலமாந்தாசி போகபோக்கியமுஞ் சொல்லினேங் கெணிதநூல் விதியால். (ருஎகூ)

வாக்கினிற்சேயுந் தனித்திடமதியும் மந்தனுமறைந்திடநாலிற், ருக்கியபுகரும் மாந்தியுமரவுந் தனித்திடிற்சோதர மற்பம், ஆக்கமாம்வித்தை மூன்றுமேயாகும் அன்னையுந்துஞ்சிடுங் கரியில், நோக்கமாய்ப்பூமி வாகனங்கிரகம் நுண்மையிலதிகமாய்விளங்கும். (ருஅ0)

நாலினிற்கரியாய் நாலின்கோள்பத்தில் நண்ணிடச்சேயுமே கூடக், கோலினேன்குளிகன் லாப்பமாய்நிற்கிற் கொடுத்திடுந்தா

யிரண்டாகும், மாலவனிரவி யொன்பதிற்றரிக்கில் மதியுமேகேந் திரம்வரினும், ஏலவேஅரவும் ஆறுமீராறி லிருந்திடப்பிறந்தசா தகற்கே. (ருஅக)

சாதகன்றனக்கு வரும்பலனெல்லாஞ் சாற்றினுர்கெணித தூலாய்ந்தோர், வேதமாய்மாலோன் திசைதனில்வித்தை விளங் கிடுமரசரால்தயவாம், போதவேகொடியோன் திசைதனிற்கஷ் டம் பொருந்திடு மலைச்சலாய்ப்போகும், காதலாய்ப்புகரோன் திசைதனிற்கனகம் கனம்பெருமுயற்சிவாகனமாம். (ருஅஉ)

வாகனங்கிரகம் பூமியும்புரவி வாய்த்திடுஞ் சிவிகையுஞ்சக டம், ஆகமத்துடனே கொடுத்திடும்புகரில் அன்னையர்வழியினுற் கிலேசம், பாகமாய்க்கொடுக்கும் பானுவின்றிசையிற் பகையினு ற்றனச்சிலவுடையோன், வேகமாய்ப்பீடை விளங்கிடுங்கண்டம் மேலெனுமுடன் வரவிதித்தார். (ருஅங)

நற்பிதுர்கா ரகனுமாலதிலேயேக
நன்மதியோன் கரியோனு முயிர்நாலாக
ஊற்பிதுராந் தந்தைதனை யீன்றதந்தை
உலகில்மிகத்தரித்திரத்தை யுடையனென்பர்
விற்பனனுந் தந்தையதி யோகனுவன்
விளங்குமவன் துணைதரித்தி ரத்தைக்காட்டுங்
கற்புடையாய் செப்புதனத் துடையமாதே
கணிதவல்லோர் சொன்னமொழிகண்டுகொள்ளே. ()

அரவிருந்தவீட்டுடையோ னம்புலிக்கீராறில்
அமர்ந்திடக்கேதுடன்கூடிக் கேந்த்ரதிரிகோணம்
விரவுமந்தவீட்டினுக்கோ னம்புலிக்கேழாகி
விளங்கிடவேவுயிர்தனக்கு லாபமதாய்ச்சேரில்
வரவுதனம்பூமியுடன் கிரகவாகனமும்
வாய்த்திடுமேபுரவியுடன் சகடமெனலாகும்
அரசர்தயவுடன்கீர்த்தி யபிமானமுடையன்
அல்லலிலான்மரணமட்டு மதிகபாக்கியனே. (ருஅகு)

அதிநீலனுயிரின்கோ ளிரண்டனையுமெட்டோன்
அன்புடனேநோக்கிடவே அங்கிஷலககனமும்
பதியுடன்கோலாகிடவக் கோள்தனைப்பசெவ்வாய்
பார்வைபெறப்பொன்னவனும் பத்தினிலேவரினும்

துதிபெறவேயிருந்திடுவ னுயுளந்திகாலந்
துலங்கிடவோர்மாதமுன்னே தோன்றிடுமேகாந்தல்
அதிபலமாம்வாய்வுமேற் கொள்கையிலேசீலன்
ஆயாசமந்தியமாய் முடியுமெனலாமே. (கூஅசு)

வேறு.

ஓரைந்துதனக்குப்பத்தி லுறைந்திடமதிபொன்சுங்கன்
யீரைந்திற்புதனின்றாலு மியல்பதாய்நோக்கினாலும்
சேரும்பொன்மிகவுமுள்ளான் செப்பிடிலீயான்வஞ்சன்
வாருந்துமுலையாய்வாவி யோகமேவகுக்கலாமே. (ருஅஎ)

இலக்கனமுதலாய்நேரே யிரவிபொன்காரிசுங்கன்
நிலப்பிலாக்குளிகன்செவ்வாய் நிலவுடன்மாலோன்கேது
பிலத்திடவுச்சகேந்த்ரம் பிறங்கிடநிற்கினேனும்
தலத்தினிற்கிரகம்பூமி சந்ததிமுயற்சியுள்ளான். (ருஅஅ)

உள்ளவன்சீமான்வேந்த ருறவுளான்முயற்சிக்காளன்
அள்ளையில்மனத்தன்காமி அஞ்சிடானெவர்க்குமன்பன்
தெள்ளுறவித்தைமேன்மை செயமுளான்தெய்வபத்தி
யுள்ளவனுயிரோன்நாளி லுதவிடுமுயற்சிகாட்டும். (ருஅகூ)

நிலமுடையொன்பான்கன்மன் நேசமாய்ப்பத்திலேகத்
தலமுடைநாலில்லக்ன சம்பந்தங்கரியாய்நிற்க
குலமுடைமறையோன்சென்ம ராசியைக்குறித்துநோக்கப்
பலமுடையரசராலே பணிகளும்பவுசுமாமே. (ருகூ0)

பவுசுடையொன்பான்நான்கோன் பாக்கியச்சுபரைக்கூடிற்
புவியினிற்பெலவானாகப் பொருந்துவன்முயற்சியுள்ளான் [ம்
நவிலுமொன்பதைப்பொன்நோக்க நான்கினுக்குடையோன்றானு
கவியெனும்புகர்பொன்வீடேல் கவிக்குமேற்கன்னிகேளே. ()

கலந்தவர்சுபர்வீடாகக் காரணவொன்பான்கேந்த்ரத்
தலந்திரிகோணமாகச் சார்ந்தசாதகற்குநன்மை
துலங்கியகுதிரைவண்டி துரகதவாகனங்கள்
இலங்கியதேசமெல்லா மிவன்பிரபலவானுவன், (ருகூஉ)

வேறு.

வில்லினிற்காரி அரவுடன்மாந்தி விளங்கிடப்புகருமஞ்சா
கச், சொல்லியவுயிரோன் மூன்றினிலாகச் சோமன்மால்சிகியுட

னேழாய், எல்லெனுமிரவி யாறினில்மறைய யீறினிற்சேயிருந்தி டினும், வல்லெனுமாயுள் காரிநாள்வரைக்கும் வாழ்க்கையும்வள ருமென்றுன்னே. (நுகூக)

உன்னியேவளருங் கையுடன்காலும் உறமுளான்தரமுளா ன்கபடன், மன்னிடுமதிகக்காமியன்வஞ்ச மனமுளான்சுருண்டிடு ரோமன், அன்னியசாதிபொருளுமேயுடையன் அந்தணர்பிதாவு டன்வழக்கன், சொன்னதுகேளான் கோபியன்விரோதன் சொல் லினர்சமனுடனிறமாய். (நுகூச)

தக்கபத்துடையோன்வெய்யோன் தன்னவாங்கிஷத்திற்சேயும்
முக்கியஞ்சிகியினோடு முழங்குபாக்கியனுமொன்றாய்த்
திக்கெனுங்காரிவீடாய்ச் சேர்ந்திடபானுராகும்
மிக்கெனும்பொன்னுற்றாலும் விளைபொருளதனால்வாழ்வன். ()

வாழ்வதுகாரி திசைமுழுவதுமேவளர்ந்திடும்பூமியுங்கிரகம், தாழ்விலாத்தனமுஞ் சகடவாகனமுந் தந்திடும்வாணியமுத லாய், ஆள்வது அடுமை கன்றுகாலியுந்தா னதிகமாய்விளங்கிடும் பிலமாய், நாளெனும்புதனிற் பாதிதன்வரைக்கும் நலமெலாஞ் செலுத்திடவல்லன். (நுகூரு)

வேறு.

வாழ்வதுகறுப்புவெள்ளை வாணிபமதனுற்சற்றே
தாழ்விலாச்சகடத்தாலுந் தங்கிடும்தனமுண்டாகும்
கோளிலைச்செட்டினாலுங் கூடிடுந்தனங்களுண்டாம்
ஆழ்வதுவயதுநாற்பத் திரண்டினிலதிகமாகும். (நுகூஎ)

வேறு.

மதியுயிர்தனக்குக் கருமகேந்திரத்தில் மாந்தியுங்குருவுமே நிற்கிற், சதிருடனஞ்சோன் மதிக்குநாலாகத் தரித்திடப்புகர்க ரிமாலும், விதியுடனரவு உயிர்க்குலாபமுமாய் விளங்கிடவாணி பம்பூமி, கெதிபெறவிருப்பன் தனமுடன்கிரகங்கிடைத்திடுமைம் பதுமேலாய். (நுகூஅ)

புஞ்சமனிரவி கேதுடனுயிர்க்குப் பதிந்திடநாலிற் கேந்திர மாய், விஞ்சையாய்மதிக்குக்கருமகேந்திரத்தில் விளங்கிடப்பாக் கியகருமன், தஞ்சமாயுயிரோன் பொன்னவனுடனே சார்ந்திட

நீசபங்கமுமாய், அஞ்சவேவரினுமுப்பதஞ்சதனி லாசரின்முய
ற்சியால்லாழ்வன். (நுகூ)

வேறு.

சூரியனுமுயிரோனாய்ச் சேய்புகர்வீடேகச்
சுங்கனுமால்வெள்ளியுடன் தொல்புகரில்லாகக்
காரியுந்தான்கேதுடனே மதியனுமொன்றாகக்
கதிரவன்மால்குருவீடாய் வந்திடுவதானால்
சீருடனேவுதித்துவளர் சேயினுடவயதைச்
செப்பினர்களெண்பதொன்றாய்ச்சேருமுயிர்தனக்குப்
பாரிலுதித்ததுமுதலா யந்தியநாள்வரைக்கும்
பகர்சிவிகையோகமுமுண் டாகுமெனவோதே. (சூ00)

ஓதினர்கள்மேலோர்கள் உரைத்தமொழியெனவே
ஒன்றுபத்துநாலதிலே உதவிடுமேதாரம்
வேதமுடனிருபதஞ்சிற் றாய்மரணங்காட்டும்
விளங்குமிருபத்திரட்டி விதித்தனர்கள் தந்தை
சேதமெனவுரைத்தார்கள் மேலவர்கள்மொழியாற்
சேய்வயதுயிருபதொன்றிற்சேதமென்றார்தாரம்
நீதமுடன்பிறந்துவருஞ் சேயுடன்றன்பலனை
நிகழ்த்தினர்கள்கணிதமுறை யாய்ந்தபெரியோர்கள். ()

மாதேகேளிருவீடு மோர்வீடாக
வரவவர்க்குமுன்பின்னுஞ் சுபர்கள்நிற்கக்
கோதேகேளிருவீடுஞ் சுபரில்லாயக்
கோளனுமேகேந்திரமாய்ச் சுபர்வீடுற்றால்
வேதாகேள்தோன்றிடுஞ்சேய் வருநாள்தொட்டு
வெகுநிதிக்ஷேத்திரமாக விளங்குந்தந்தை
மாதேகேளிருவீடும் பவர்வீடாகி
வரினுமக்கோள்பவரோடு மறையுமாகில். (சூ02)

மறையுமெனத்தோன்றிடுஞ்சேய் பலன்களெல்லாம்
வருஞ்சமனுயுதவிடுமே மாதேதந்தை
முறையுடனேபாக்கியமே சமனும்பூமி
மொழிந்தனர்கள்வயதுயிரு பதின்மேற்செல்வம்
குறைவுவருசமபலனு யறைந்தார்மேலோர்
குறிப்பறிசாதகர்தமக்கிவ் விதியென்றோது

மறைபதிசேய்திசைவருமால் பலன்மேலாகும்
வகுத்தனர்பாக்கியங்கள் மிகவருவதாமே. (சுஙங)

வேறு.

மதியுயிர்க்கோளன்பஞ்சமமதனில் வக்கிரனுச்சமாயாறில்
துதிபெருமஞ்சோன்மதிக்குமீராறிற் றோன்றிடக்காரியுமாந்தி
விதியுடனிர்துக்கொன்பதில்வரினும் வெய்யவனரவுமாலுடனே
கதிபெறும்நிலவுக்கிரண்டினிலிருக்க கணித்தனர்சாதகன்பலனை.

சாதகன்றனக்குக்குருதிசைபீடை சார்ந்திடுங்கஷ்டமாயிருப்பன்
போதவேசனியில்வித்தையுமேன்மைபொருந்துவன்பாதிமேலாக
நீதமாய்முயற்சிவரவரவதிகம் நிகழ்த்தினர்மாலவன்திசையில்
வேதமாயரசர்தயவுடன்முயற்சி விளங்கிடுங்கிரகவாகனமும். (

வேறு.

ஆறிருகோள்மறையவனாய் மூன்றின்கோளும்
அமரவுயிர்கேந்திரத்தில் நீசமேறக்
கூறுபவருடன்கூடித் தரிக்கவிக்கோள்
குருவுமிவரிருந்திடுங்கோள் தனக்குவக்கோள்
சாருமனையொன்பதுவாய்த் தரிக்குமாகிற்
சார்ந்திடும்பொன்திசைபலனைத் திரட்டியோது
சீருடனேவருந்தனங்கள் பூமியின்பம்
சேருமற்பமாகுமெனக் கணிதஞ்செப்பே. (சுஙசு)

நாலினுக்கோள்பவனாகிச் சுபரினில்லம்
நல்கிடவேஉடன்மறையுந் தரிக்கவஞ்சேழ்
நீலனுடன்மாந்தியுமாய்க் கேதொன்றாகி
நின்றிடநற்றோன்மதாய் வளருமானால்
சீலமெனப்பிதாவளருங் கிரகம்நாசம்
செப்பியசேய்பூமியற்பந் தரணிதன்னில்
தூலமுடன்நாற்பதிரண் டதனிலுள்ளாய்த்
தோன்றிடுதன்கிரகமென வளருமென்றே. (சுஙஎ

வேறு.

நாலினோன்மாலாயுயிரின்கோளுடனே நல்கிடக்கரியன்வீடா
கத், தூலமாய்க்கரியன் மறைந்திட ஆட்சி தோன்றிடவோர்பவர்

தரிக்க, மாலவன்றனக்கு மூன்றினில்மதியும் வக்கிரனுட்சிபெற்றிடுமால், சீலமாய்வளருங் கிரகம்விட்டேகுஞ் சேயவன்நாளில் வந்திடுமே. (சு0அ)

வந்திடுமன்னை வரும்வழிபிலமாய் வகுத்தனர்சேய்திசைமுடிவிற், சிந்தையாய்வளருங் கிரகம்வந்திடுமாம்செப்பியசேயவன் றனக்கு, விந்தையாயரவு திசைவருந்தனதில் விளங்கியபாதியில் வளருஞ், சுந்தரவிழியா யற்பமாய்ப்பூமி தோன்றிடும்பாம்புதன் திசையில். (சு0சு)

வேறு.

நாலினிற்கரி நல்கிடநாலினோன்
சீலமாமதி சேயுடன்சேரிடம்
தூலமாமைந்திற் றோன்றமனையினுற்
பாலனைப்பறி வந்திடுமொன்றினில். (சுக0)

வேறு.

நாலினோன்சுபராய்ச் சுபர்கள்வீடதனில் நல்கிடச்சுபர்கள் நோக்கிடவே, சீலமாய்நாலோன் சேரும்வீடதிபன் சேர்ந்திடம் உட்சகேந்திரமாய், சாலவேஅதிகப் பூமிக்ஷேத்திரங்கள் சார்ந்திடுங்கிரகநால்பிலமாம், தூலமாய்வளருந் தோன்றியநாலோன் சுபரதாய்த்தோன்றிடுமனைகள். (சுகக)

மனைபவமாகி வந்திடநாலோன் வளர்ந்திடச்சுபர்கள்நோக்கிடவே, வினவிடுமதற்கு அதிபனுமறைந்து விளங்கிடப்பார்வர் சேர்ந்திருக்கில், அனையவன்றனக்குக் கிரகமொன்றுகும் அறைந்திடப்பூமிக்ஷேத்திரங்கள், மனவியர்வருமேல் வகுத்தனர்சமமாய் வந்திடும்பாக்கியந்தானே. (சுகஉ)

வேறு.

மதியுயிர்க்குஉபயமதிற் றனிக்கவக்கோள்
மறையவன்றன்வீடதனிற் சுபர்களோடு
சதிருடனேஉயிர்தனக்கு மறைதாயாகித்
தரித்திடவேயிவர்கள் தனைச் சுபர்கள்நோக்க
மதிமகனும்பானுடனே பவர்கள்வீடாய்
வந்திடவேமதிக்கிவர்கள் மறையாதானால்
பதிநிதிக்ஷேத்திரம்பூமி சிவிகையின்பம்
பகருமேகணிதசாஸ்திரங்களெல்லாம். (சுகங)

ஓதுமெனவேதாந்தங் கெணிதங்கேள்வி
உரைத்திடுவேனுலகிலெவர்க் கொப்பிலாதான்
சீதமுடனுபயமதி லாவுதிங்கள்
சேர்ந்திடவேதோன்றியசேய் தனக்குமேலோர்
சாதகமாய்முன்னுரைத்த வகைகளெல்லாம்
தானெழியுஞ்சாதகருக் குதவாதாகும்
நீதியுடன்பதினிதிசேஷத் திரங்களின்பம்
சேர்ந்திடுமேசமமதுவாய்த் தமிழுஞ்சேரும். (சுகச)

வேறு.

வாக்கினுக்குடையோனுச்சம் மறைந்திடமாந்திசோத
தீர்க்கமாயஞ்சோன்வாக்கிற் சேர்ந்திடப்பிறக்குமாகில்
தாக்கியஅருணனுட்சி யுச்சமாய்த்தனிப்பானுனல்
பாக்கியந்தமிழ்கள் பூமி பகர்ந்தனர்சமமதாக. (சுகஙி)

புந்தியுமுயிர்க்கிரண்டிற் பொருந்திடவிரண்டினிகோளன்
சந்திரனுடனொன்றுகித் தரித்திடச்சுபர்கள்நோக்கா
வந்திடுஞ்சேய்க்குப்பூமி வகுத்தனர்சமமதாகும்
விந்தையாய்த்தனங்கள்சேரும் விதித்தனர்மறைவதாக. ()

நாலினோன்பவரோடொன்றாய் நண்ணிடமால்வீடாகச்
சாலவேவக்கோளொன்பான் தானவீடதனிற்காரி
மூலமாய்மதிமால்சுங்கன் தோன்றிடமறையாதானுல்
மாலவன்திசைநாள்வந்தால் வகுத்தனர்கிரகம்ரண்டாய். (சுகஎ)

வேறு.

சுக்கிரனும்நாலின்கோ ளாகியாட்சி
தோன்றிடவே தேர்பாகனதனிற்சேரத்
தக்குமெனஅவர்தனையே கரியன்நோக்குஞ்
சாதகன்றன்மணம்வழியால் தனங்கள்சேரும்
தொக்குமெனவுயிர்க்கதிபன் திசைவந்துற்றால்
தோன்றிடுஞ்சேயவன்றனக்கு வளரும்பூமி
மிக்கவதில்வரும்படியு மதிகசெல்வம்
விளங்கிடுவன்வருந்துணையால் விரோதங்காட்டும். ()

மதிதனக்கட்டமமதனில் வருமுயிர்க்கொன்பான்கோள்
வளரவுச்சமாகிடவே வக்கிரன்நோக்கிடுமாம்

சதிருடனென்பான்மனையிற் சந்திரன்பானுடனே
தரித்திடவேயவர்க்குபயந் தனித்திடக்கோள் பெலமாய்
அதிபதியாய்மதிதனக்கஞ் சதிலுயிரோன்மறைய
அவர்தனக்கீராறதனி லாவுவருஞ்சேய்க்கு
துதிபுகர்பான்தொல்மதிநாள் தோன்றுதிசைபலனைச்
சொல்லுமெனப்பூமிசமந் தோன்றிடுமேமாதே. (சுகக)

மாதேகேள்வருமுயிர்க்கோள் வருந்திசைநாள்முழுதும்
வரும்பதிக்ஷேத்திரம்பூமி வருஞ்சமயேயாகும்
ஓதுமெனமனத்துயர முதவியநாட்பாதி
உறையுமதிபொருட்செலவு உதவுமெனப்பெலமாம்
நீதியுடன்வரும்பதிக்ஷேத் திரம்பூமிதனங்கள்
நேர்ந்துசமமாகவென நின்றிடும்நூல்மொழியால்
சீதமுடனிராகதனிற் றினகரன்நாள்முதலே
செப்பினர்கள்வெகுபலனும் க்ஷேத்திரம்வந்திடுமே. ()

வேறு.

நாலினேன்சுபராய்ப் பவர்மனைபெலமாய் நல்கிடப்பாம்பு மத்துடனே, சீலமாயுயிரோன் சேயுடனென்றுய்ச் சேர்ந்திடவுச்சமாய்வருமால், சாலவேபூமி அதிகக்ஷேத்திரமாய்ச்சார்ந்திடுங் கிரகமூன்றென்னும், சூலமாய்வளரும் பூமியேபெலமாய்த் தோன்றிடுஞ்சாதகன் பலனே. (சுஉக)

வேறு.

வருமுயிர்க்குக்கருமமதிற் கருமநாதன்
மதிமகனுய்வந்திடவே அதனிற்பாம்பு
தருதுமெனக்கூடிடவே பவர்நோக்கில்லா
சார்ந்திடுஞ்சேய்வயதிருவே ஒன்றின்மேலாய்
அருமறைநூற்படியெனவே வேடங்காட்டும்
அறைந்தனர்கள துமுதலே அநேகஞானம்
கருதுமெனஞானவழிக் கிருபையேற்பன்
காசினியோர்வருமயக்கந் தெளிந்துவேறும். (சுஉஉ)

வேறுமனைமாதுதுணை மக்கள்தந்தை
விளங்குமன்னைசுற்றமிலான் மயக்கமில்லான்
சாருபெரியோர்களருட் கிருபையேற்குஞ்
சாஸ்திரநூல்வேதாந்த புனிதனவன்.

கூறுமெனஞானவழி தெரிந்துசொல்வன்
கொள்ளுவோர்பிரமிக்க வாதசித்தி
சீருடனேவரும்பெரியோன் கயிலைநாதன்
சேருமின்பன்சாருமன்பன் தெளிந்தவாழ்வே. (சுஉங)

வாழ்வெனவேஒருதினமும் மயக்கமில்லான்
வாதசித்தியாலிவனை யுலகத்துள்ளோர்
சூழ்றவேவெகுமனிதர் கூடிநிற்பர்
தோன்றுமந்தமனிதருக்கு வாதங்காட்டான்
ஊழ்விதியாற்றிசைமுடிவில் ஞானமார்க்கம்
உறையும்வழியாலவன்ற னுள்ளம்பொங்கும்
தாழ்வுகெங்காநதியதனிற் றேகம்போக்கும்
சாஸ்திரநூலாகமமாய் சாருவாயே. (சுஉச)

வேறு.

சதுரமதுடையோன் சுபருடன்கூடிச் சதுரமதிருந்திடவவற்குப், பதியமுன்பின்னும் பாவரேதரிக்கிற் பயித்தியமாதருக்குதவும், நிதியதிற்சுபரு மிருந்திடிற்சிலநாள் நின்றிடுமென்றிடுநிசமாய், அதிசெயந்தனது கிரகமோரிருபத் தஞ்சின்மேலழிந்திடுமழகாய். (சுஉரு)

அழகுடனிருபத் தஞ்சுமேலஞ்சு மாயிடுங்காலமுள் வரையும், சளமுடனலைச்ச லெய்திடுங்கிரகந் தரித்திடாதெனவுரையதன்மேல், சளமதுநீங்கிப் பொருள்கள்வந்துதவும் சார்ந்திடுங்கிரகம்வேறாக, அழகுடனிருக்குமென்றனர்மேலோ ரறைந்தனர் தமிழினாற்றனியே. (சுஉசு)

தனியனுமுன்சொற் றுனமாமதனிற் சண்டனு மிருந்திடிற் பெற்ற, இனிதனும்பிதாவின் பகையுறுமென்று மிதிற்சுபர் பாவருங்கூடில், நனிதமாம்பிதாவின் மரணகாலத்தில் நண்ணிடும் பலதுயரென்றே, புனிதமாயுரைத்த நூல்தனைத்தமியேன் புகட்டினேன் புவியுளோ ரெவர்க்கும். (சுஉஎ)

நாலினுக்குடையோன் சுபரதாய்லாபம் நல்கிடவீட்டினிற் சுபரோ, சாலிடாதிருக்கிற் சுபக்கிரகத்தன் சார்ந்திடுஞ்சதுரமாங்கிரகம், ஏலவேபாவி யதனிலேயிருக்கி லியற்றுவன் கிரகம்ரெண்டுடனே, தூலமாய்ப்பாம்பு மாந்தியுங்கூடிற் றொகுத்திடு மன்னியகிரகம். (சுஉஅ)

லக்கனமுதயகேந்திரமதனில் நற்சுபரிருவருமேகத்
தக்கவனுடனேபாவருஞ்சேரச் சனியனுஞ்சென்னமதஞ்சிற்
பக்குவஞ்சென்னக்குருவுறும்போதே பலன்தரும்தூதனக்கிரகம்
புக்குளமடவாய்வாக்கியமதனாற்புரிந்தனர்மூன்றுளோர்புவிக்கே.

காரியுதயங்கைகாலிற் கடுப்புக்கபடன்மனவீம்பு
பாரிலரியாசனவசனம் பகருந்தனமுங்கடன்படுதல் (உ)
ஊரிலரசர்புகழுடையோ னுண்டல்தீர்க்காயுள்மூர்க்கன்
சேரும்பெருமைஅழுக்கடைந்த தேகன்சபலச்சிந்தையனே.

வேறு.

அன்புகொடுத் திடும்பாரிக் கோளுயிர்நாலேக
அமரக்கா ரகனுயிர்க்கு மறையாதாகிற்
பின்பேழி லேழாங்கோள் முன்போலெய்தாற்
பேசுமித்தா னத்திலரா யிருந்திட்டாலும்
துன்பமிலாப் பானுமுதல் மீனளவுந்தோன்றிற்
றெகுத்திடும் பாரியினுலும் பொருளுமுள்ளோன்
இன்பமுள்ள மாதாகுந் தீர்க்கமாக
யிவனிருக்குமனையிலிருந் தியற்றுங்கன்மம். (சுருக)

சூரியனுஞ் சேய்வீட்டில் மாலோடேகத்
தோன்றுமுயிர்தனக்கோளு மீராறஞ்சில்
நாரியரே சதுரமதிற் பாவர்நின்றால்
நன்றவர்க்குநட்பாட்சி யுச்சமாகில்
வீரியமா யவன்முன்பின் னுலேபாவர்
விளங்கிடவும் வாலிபமீ ராறினுள்ளாய்ப்
பாரில்புகழ் தனையீன்ற பிதாவூர்விட்டுப்
பதிந்திடுவன் யேகமன தாகுமென்றே. (சுருஉ)

பகர்ந்திடுநீதேசாதி தேசஞ்செல்லும்
பகர்வயதீ ரொன்பானுட் பிதாவும்போமால்
இகழ்ந்தவன்றன் கருமமிவற்குதவாதென்பர்
ஏந்திழையேமாதர்பகை தனையுண்டாக்கும்
உகந்தசென்மங் கன்னிமுதற் சதுரமாகி
லுற்றவட்கே இப்பலன்கள் தவருதென்பர்
ஜெகந்தனிலே யிவன்வயது ஐம்பத்தஞ்சிற்
சேரும்யம லோகமவ னீன்றமாதே. (சுருங)

மதிமாலுங்குருவுமொரு வீடாகமதியன்
வளரிடத்தோன்சுபராக மறையாதேயிருந்தால்
மதியனின்முன் பின்னுலும் புகரிருக்கிலவற்கு
வருந்தனமும்வாகனமும் பூமியுடன்தருமாம்
மதியனுடன்சேராம லந்தவிடத்துள்ளோன்
வரும்பாவராதிடலும் வருந்தயவுமுடையோன்
மதிபதியாமரணமட்டுந் தரித்திரமெய்யாது
மைக்குழலாய்முப்பதின்மேல் மூன்றில்பிதா வொழியும்.

வேறு.

ன்மாலோடாறிற் ரேன்றிடச்சுபர்களோடே
நிகருமக்கோளன் சார்ந்திடமறைவராகில்
யசெனனந்தொட்டு அலைச்சலாற்றுன்பமெய்தும்
ர்வயதீராறுக்குட் பலனிவையென்னலாமே. (சுகூரு)

ஆமதின்மேலாயின்பம் அரும்பிதாவலைச்சல்காட்டும்
நேமமன்னியதேசத்தில் நேருவனென்றுசொல்வர்
காமனைவென்றமானே களரிருபதின்மேலஞ்சில்
ஏமனுமுபயந்தன்னுள் ளெடுப்பனும்பிதாவின்கர்மம். (சுகூசு)

மதியுயிர்மறையாதாக மதிதனக்கீராறெட்டில்
அதிபெருகுருவேயெய்தா லவர்சுபர்வீடானுலும்
துதிபெருபகைசேத்திற் ரேன்றிடவுபயக்கோளன்
விதிபெருசுபராய்ச்சென்ற விடம்பகையுறுமால்செப்பே.(சுகூஎ)

செப்பியதுணைவர்நாசஞ் சேரலாமலதுதுன்பம்
கப்பியக்ஷ்டமாகுங் கருதுமீரொன்பான்மேலாய்
உப்பியவாழ்வுபின்னு முளருணமலைச்சலுண்டாம்
துப்பிதழ்வாயினுளே சொல்மனத்துயருண்டாமே. (சுகூஅ)

ஆமிதுவுரசரின்பம் அரும்புகழ்முயற்சிகாட்டும்
நேமமாய்ப்பொருளுண்டாகும் நேருடனழிவாம்பின்னும்
காமநூல்விளைக்குமாதே காட்டுமுப்பதுக்குமேலாய்
மாமதிதனமுங்கீர்த்தி வரும்புகழாகுங்காணே. (சுகூகூ)

காணுமுப்பதின்மேலஞ்சிற் கருதியபொருளுண்டாகும்
தோணியமுயற்சிமேலாய்த் தோன்றிடுமதிகவாழ்வாய்
வேணுறுகிரகம்வேறாய் மேவிடுமரணமட்டும்
ஆணுறும்பொருள்கைதட்டா தளவுடனிருக்குமென்றே. (சுசஅ

வேறு.

நாலினிற்பாம்பு குருவிருந்திடுகில் நாலினோன் சுபரத
பருதி, தூலவன்காலில்மாய்ந்திடமூன்று தொகுக்குமோர
ராறிற், சீலமாய்ச்சுபரோடிருந்திடிற்செனித்த சேய்தனக்கி
டுவொன்றதனிற், சாலவக்கினியாற் கிரகம்போமெனவே
னர் சாதகன்றனக்கே.

கடகமாயுதிக்க வவற்குமுன் பின்னுங் கருதியபா
டில், விடகரிமாந்தி யுதித்திடிற்சேய்தான் விளங்கியபுத
ச்செனிக்கும், தடமுலக்கனத்துக் குதயகேந்திரத்திற் ப
பாவருஞ்சுபரால், திடமுளபலனு மென்றறிநூலைத் தெளிந்து
பின்னுரைத்திடுவாய். (சுச

வேறு.

அல்லிருகுழலாய்நாலி லரவுசேர்ந்திடுவனுகில்
வல்லியத்தானத்தோனு முயிரினின்மறையுமானுற்
சொல்லியபருதிசேர்ந்தாற் செனித்திடஞ்சுத்தப்பாழாம்
சொல்லுமுப்பதின்மேலஞ்சிற் தொகுப்பவன்கிரகம்வேறாய். ()

காரியுயிர் கேந்திரமாய்ச் சேயோடுற்றுற்
காரிபகை சேயுநட்போ டுச்சமானுற்
பார்வயது நாற்பதின்மே லுபயமட்டுள்
பகர்பூமி அதிலாபம் பலிக்குமென்பர்
வாரியதிபூமிமிகப் பலனுண்டாகும்
மரணதிசையதிற்பூமி லாபம்போமால்
நேர்காரி யுச்சநட்பா யிருக்குமானுற்
நிகர்பூமிபலியாது சேல்வேற்கண்ணாய். (சுசச)

வேறு.

இல்லுடையோனும்புகரதாய்வேறு யிணைசுபரோடிருந்தாலும்
வல்லபூர்வீககிரகமுஞ்சொந்தம் வாழ்ந்திடும்நூதனமிரண்டும்
அல்லல்சேர்பருதியதிலிருந்திடுகி லாதியாங்கிரகமு நாசம்
புல்லரிதனத்தாய் முப்பதினைந்திற் புரிந்திடும்நூதனகிரகம். ()

நாலினிலார லிருந்திடவந்த நாலினேன்சூரியன்காலிற்
றூலமாயிருக்கிலவருடன்சுபரும்தோன்றிடவுதித்தவன்றனக்குக்
காலபூர்வீகத்தாலணுவேனுங் கருதிடாப்பூமுதற்பொருளும்
ஆலசாதகனுல்வரும்பொருள்பூமி யாகிடுமென்றிடுமடவாய். ()

வேறு.

பாந்தளுடன் மாந்திசது ரத்திலேகப்
பாம்பிருந்த விடத்தோனு முயிர்க்குக்கேந்த்ரம்
சேர்ந்திடவு.மத்தானத் துடையநாதன்
செப்பிடவே சனியாதல் சண்டனுதல்
நர்ந்தவிட முயிர்க்குமறை யாதிருந்தால்
நேருமவன் செனித்தவிடஞ் சுத்தப்பாழாம்
ந்திழையே யிருபதின்மே லேகந்தன்னுள்
எழில்கிரகம் நூதனமா யெடுப்பன்மேலாய். (சுசஎ)

வேறு.

மதிபுகர்கேந்த்ரம் வாக்கினுக்குடையோன் மந்தனோடாட்சி பெற்றிருக்கத், துதிதனம்பெருகும் சுந்தரதேகன் சொல்லினுல் யாவரும்வணங்கும், நிதிபதிசிவிகை லெட்சுமிசுமுகன் நிறைந்த வெண்சாமரமுடனே, விதியுடனிந்தப் படிவருமென்று மேதினி யோர் தமக்குரையே. (சுசஅ)

வேறு.

சந்திரன் கேந்திரத்திற் சனிதிரி கோணமாட்சி
வந்தலக்கனக் குடும்பன் லாபனுங்கேந்திரிக்க
விந்தையாய்ச் சந்தானத்தோ னுச்சமாயாட்சிமேவ
இந்திரன் வாழ்வுபெற்றே யிருப்பனுற்பத்திரண்டே. (சுசக)

வாக்கினிற் குருதிசுங்கன் வந்திடவதற்கு நாதன்
தீர்க்கமா யுச்சமானுற் றேசத்துக் கதிபனுவன்
பாக்கியம் நிகரொனுது பலவிதத்தொழிற்கும் வல்லன்
காக்கினேன் மறைவானுகில் வஞ்சகத் துவசனுவன். (சுடு0)

பன்னிரண்டுடையோன்நின்ற பதியவனெட்டில்நீசந்
தன்னிலேநிற்கஅந்தத் தானத்தோன்கேந்த்ரகோணம்
உன்னிதமாயிருக்க வுலகையாளிராஜனென்றே
இன்னிலம்பிறந்தசேய்க்கு இயம்பினர்கணிதநூலோர். (சுடுக,

வேறு.

அட்டமாதிபனு முயிர்க்குளோன்றானும் ஆரலாய்ப்பருதி வீடதனில், திட்டமாயிருக்கக் காரியுமேழிற் சேர்ந்திடவுச்சமாய்ப்பத்திற், சட்டமாய்க்குருவும் நீசமாய்த்தோன்றச் சந்திரன்ம றைந்திடவந்தால், மட்டிலாவயது புகர்தினசவரைக்கும் மன்னனாய் வாழ்ந்திடவல்லன். (சுகூஉ)

பெண்ஜாதக யோகபாவகம்.

குருவுடனே மதியுமொன்ரு யிருக்கப்பாவர்
குளிகனுமே ரவிபுகர்பின் சுபர்வீடாக
நிருபனெனுங் குருமதிக்கு அஞ்சாறெட்டில்
நீள்சுபரும் பாவர்களும் வருவதாகிற்
கருவுதித்த நாள்முதலாய்க் கனவாழ்வெய்தும்
கணவனுமுன் தரித்திரனாய்க் காட்டுமென்றே
விரிகுழற்பைந் தொடியேகேள் வருமயோகத்தை
விளம்பினர்தொல் லுலகமதில் நூலையாய்ந்தோர். ()

ஆய்ந்திடுமே மணமுதலே சமமென்ரேது
அதிகமுறும் வயதிருப தின்மேலொன்றில்
வேய்ந்திடுமே நற்பூமி முயற்சியோகம்
வெகுதனமும் வாழ்வுகள்வந் துதவுமென்பர்
காய்ந்திடுவே டனைவென்ரேய் கேளாயின்னும்
கருணைபுரி வயதறுப தின்மேலஞ்சிற்
சாய்ந்திடுமே வருங்கெடுதி யரவுமந்தத்
தனிப்பருதி கண்டிருடபோற் சாயுமென்னே. (சுகூச)

அட்டமத்தில் மதியுடனே குருவுங்கூடி
அவர்தனக்குக் கேந்திரத்திற் சுபரேநிற்கில்
திட்டமதாய்ப் பருதிசென்மந் தரிப்பாராகிற்
சேர்ந்தவருக் கிரண்டுநான் கேழுபத்தில்
நிட்டைபுரி மாலிருக்க மாதுதோன்றில்
நேர்ந்தவய தவனுக்கீ ரொன்பான்மேலாய்க்
கட்டியநற் கணவனுக்குச் சிவிகையோகம்
காட்டுமெனக் கீண்டுரைத்தார் கணிதமாய்ந்தோர். ()

வேறு.

கன்னியர்தோன் றுங்காலங் கட்செவியா றுற்றாலும்
உன்னியேவியத்திற்கேது வுடனொருபவரில்லாமற்
சென்மமட்டமத்தின்மிக்க சிகண்டிசன்மதியுற்றாலும்
வன்மமாம்ஜெனனந்தொட்டு வரவரவுயர்ந்தவாழ்வே (கூருசு)

கும்பலக்கனமேதோன்றச் குளிர்மதியுதனிற்கூட
வம்பிலாச்சுங்கன்கேது வளமுடனிரண்டிலேகச்
செம்பொனுற்கிரிகையோகம் சேருமேகணவனுற்கு
நம்புதலுண்டாஞ்சொன்னேன் நவின்றனர்கணிதநூலோர். ()

நாலினுக்குடையோன்றானும் நட்பாட்சியுச்சமாகிப்
பால்வணச்சுங்கன்பார்க்கப் பகலவன்பகைவீடாக
வாலிபவயதுபத்தேழ் வயதினில்வேசையாவள்
சாலவேதன்னூர்விட்டுத் தையலாள்வாழ்வாளென்னே. (கூருஅ)

புகரவன்குருவீடேகப் பொன்னவன்புகர்வீடாக
நகரதிபதியாம்யோகம் நாயகன்றனக்குண்டாகும்
பகரகிதிசைவிட்டப்பாற் பார்குருதிசைவந்தேற்கச்
சகரதில்நிதியுண்டென்று சாற்றினர்கணிதவாக்கால். (கூருகூ)

யோகபாவகம்

முற்றிற்று.

கணபதி துணை.

உலோக குரு

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

சோதிடம் பன்னீராயிரத்தில்

மாதுர் பாவகம்.

இஃது,

எட்டயபுரம் சமஸ்தானம் மகாராஜ ராஜ ராஜபூஜித

மகாராஜா அவர்கள்

கனிஷ்ட சகோதரர்

மகாராஜ ராஜபூஜித

தங்கமகாராஜா அவர்கள்

பொருளுதவிகொண்டு,

சோதிடம்

M. சுப்பிரமணியபிள்ளையால்

சென்னை சூளை:

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1913.

Registered Copy Right.

கோள்டன் பிரஸ், மதராஸ். என். சி.

உ

தண்டபாணி துணை.

மாதுர் பாவகம்.

நூன்முகம்.

ஸ்ரீமத் அகண்டபரிபூரண சச்சிதானந்த சாக்ஷாத் பரப்பிரம சொரூபராகிய உமாமகேஸ்வரன், உமாமகேஸ்வரிக்கு உபதேசித்த சோதிடமானது உலகப்பிரசித்தமே. அதை அந்தணர் முனிவர்கள் கந்தவேளை வந்தனைபுரிந்து சிந்தைகளித்துச் செந்தமிழ்தனால் விந்தையாய்ப்பாடிய விநோதமநேகம், அவைகளிற் சிலசாஸ்திரம் அச்சிலிட்டு வெளிவந்ததும், சிலசாஸ்திரம் அச்சிலிடாமலும் வெளிவராமலும் இருக்கிறது. அக்குறையைக் குறைக்க நமதெண்ணம்.

இதுவிற்க என்னிடமிருந்த ஏட்டுப்பிரதியி லொன்றாகிய ஆதி உலோககுரு சங்கராச்சாரிய சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய சோதிட சங்கராச்சாரியம் பன்னீராயிரத்தை அச்சிடக்கருதி நமது நேயர் மதுரை த. குப்புசாமிநாயுடுவைத் தருவித்துக் தாலபத்திரத்தி லிருந்ததைக் காயிதத்தில் வரைந்து ஒருவாறு சீர்திருத்தி 1895-ம் ஷுத்தில் ஆயுட் பாவகமும், 1908-ம் ஷுத்தில் புத்திர பாவகமும், அச்சிட்டு வெளிப்படுத்தினேன். மற்ற பாவகங்களை இப்பொழுது எட்டயபுரம் சமஸ்தானம் மகாராஜராஜ ராஜபூஜித் மகாராஜா அவர்களாலும், அவர்கள் சகோதரர் மகாராஜராஜபூஜித தங்கமகாராஜா அவர்களாலும், கிடைத்த பொருளுதவியைக் கொண்டு அச்சிடலாயினேன். அவைகளிலொன்றாகிய இந்த மாதுர்பாவகத்தைச் சோதிட சாஸ்திரங்கற்ற புண்ணியவான்கள் அவசியம் வாங்கி வாசிக்கவேண்டுமென்பது எமதுகருத்து ஒவ்வொரு ஜாதகத்தின் மாதுர்பாவகத்தைத் திட்டமாய்ச் சொல்லும் இப்புத்தகத்தை வாங்கிப் பார்த்தால் அதனுண்மை விளங்கும்.

இங்ஙனம்,

எம். சுப்பிரமணியபிள்ளை,

சோதிடம் நடுவப்பட்டி,

சாத்தூர் போஸ்ட்.

உ

கெங்காபரமேஸ்வரி துணை.

விளம்பரம்.

இதுவரை அச்சிடாத அருமையான அடியிற்கண்ட சோதிட சாஸ்திரங்கள் இப்பொழுது என்னால் ரிஜிஸ்தர்செய்து அச்சிடப் பெற்றிருப்பதால், என்னுடைய அனுமதியன்றி யாரும் அச்சிடக்கூடாது.

இப்புஸ்தகங்கள் வேண்டியவர்கள் அடியிற்கண்டவிலாசத்திற்குத் தெரிவித்தால், வி. பி. மூலமா யனுப்பக்கூடும்.

சங்கராச்சாரிய சுவாமிகள்

அருளிச்செய்த சோதிடம்.

மாதுர்பாவகம்	1-க்கு	0	12	0
பிதிர்பாவகம்	1-க்கு	0	12	0
சகோதரபாவகம்	1-க்கு	0	8	0
களத்திரபாவகம்	1-க்கு	1	0	0
புத்திரபாவகம்	1-க்கு	0	12	0
யோகபாவகம்	1-க்கு	1	0	0
ஆயுட்பாவகம்	1-க்கு	1	0	0
இவ்வேழுபாவகமும் கலிகோ பயிண்டு ஒரே கட்டடம்	1-க்கு	5	0	0
ஜாதக சந்திரிகாஎன்னும் சந்திரகாவியம் நூதனவுரை	1-க்கு	0	8	0
சுந்தரானந்தர்சூத்தில் கெற்பசிந்தாமணிருதுநூல்	1-க்கு	0	12	0

வி-பி-சார்ஜ் பிரத்தியேகம்.

இப்புத்தகங்கள் சோதிடர்களுக்கு மிகவும் உபயோகமுள்ளது.

இங்ஙனம்,

எம். சுப்பிரமணியபிள்ளை,

சோதிடம் நடுவப்பட்டி,

சாத்தூர் போஸ்டு.

வ

பரமபதிதுணை.

உலோககுருவாகிய

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சங்கராச்சாரியம் பன்னீராயிரத்தில்

மாதுர்பாவகம்.

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

விநாயகர்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

குருமதங் கிக்கோர் குமரனாய்த் தனது
குளிர்மலர்ச் சேவடி நினைவோர்
கருமதங் கரைக்குங் கருணைவான் முகிலாய்க்
காண்டரு மறைநெறி கலந்து
வருமதங் களுக்குத் தலைவனாய் மனமெய்
வாக்குமூன் றினுக்குமெட் டாத
பெருமதங் கவிழ்க்குங் குஞ்சர வதனப்
பிள்ளைதா டலைக்கணி பெறுவாம்.

சுப்பிரமணியர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பெருமையினுஞ் சிறுமையினுஞ் சமனிலையா யுலகநிலை பெயர்ந்தபோதுங், கருமையிலா வெண்மைதிகழ் கருத்துடையா ரருத்தியுறு கனிவுக்கேற்ப, வொருமயின்மே லிருமயில்கொண் டொருமுகமா யாறுமுகத் தொளிகுலாவ, வருமயிலா னிருமையிலான் வனசமலர்ச் சேவடிகள் வணக்கஞ்செய்வாம்.

சரஸ்வதி.

வெள்ளைநிறத் தஞ்சுகத்தை வெண்டாளப் பூண்மயிலை விரிஞ்சநாவி, னுள்ளிருந்த ரத்தினத்தை யும்பரெலாந் தொழற்கரிய வொருத்திதன்னைக், கள்ளமிலா வடியருளக் கமலமதை யகலாத கலையினாளைத், தெள்ளுதமி ழுதவுமென்றன் றிருத்தாயை யனுதினமுஞ் சிந்தைசெய்வாம்.

நூல்.

பூதலத் துதித்தமேலோர் புகன்றமா சோதிடத்தைக்
காதலாய்க் கருத்துட்கொண்டு கணபதி பாதம்போற்றிச்
சாதக பாகமாகுஞ் சங்கராச் சாரியத்தில்
மாதுரு பாவகத்தை வகுத்தன னறிவுளோர்க்கே. (க)

மந்தனுமெட்டினோனும் வளருகேந்திரத்திலேறச்
சந்திரனுயிரோனுகிச் சாரிடம்பெலமதானுல்
வந்திலக்கினத்துக்கஞ்சோன் வருமிடமுதயமானுற்
சிந்தையாய்மாலோன்நாளிற் செத்திடுந்தாயென்றோதே. (உ)

சதுரதானத்தோன்சுபருடன்கூடிச் சதுரமதிருந்திடவவற்குப் பதியமுன்பின்னும்பாவரேதரிக்கிற் பயித்தியமாதருக்குதவும் நிதியதிற்சுபருமிருந்திடிற்சிலநாள் நின்றிடுமென்றிடுநிசமாய் அதிசயந்தனதுகிரகமோரிருபத் தஞ்சின்மேலழிந்திடுமழுக்காய்.

அழுக்குடனிருபத்தஞ்சின்மேல்வயதஞ் சாகிடுங்காலமுள்ளளவும், சழக்குடனலைச்ச லெய்திடுங்கிரகந் தரித்திடாதெனவுரையதன்மேல், முழக்கமும்பொருளுஞ் சிலதுவந்துதவும்முடிந்திடுங்கிரகம்வேறாக, வழக்குடனிருக்கு மென்றனர்மேலோர் வகுத்தனர்தமிழினுற்றனியன். (ச)

தனியன்முன்சொன்ன தானமற்றதனிற் றரணியுமிருந்திடிற்பெற்ற, இனியனும்பிதாவின் பகையுறுமென்று மிதிற்சுபர் யாவருங்கூடில், துனிபிதாவுந்தான் மரணகாலத்திற் றுன்பமேயடைகுவனெனவே, கனிவதாய்க்கணித நூற்படிதமியேன் காட்டினன்புவியிலுள்ளோர்க்கே. (ரு)

ஈரைந்தில்மாந்தியொன்று யிருக்கவத்தானத்தோனும்
பார்சென்மமைந்தேழ்மூன்றிற் பருதியுஞ்சுபரேயாக
நேர்மதியொன்றுநாளில் நின்றிடச்சுபர்கள்நோக்கப்
பாரெண்ணஞ்சதின்மேல்மூன்றிற் பயந்ததாயிறந்துபோமே. (சு)

போமதிச்சாதகற்குப் பொலிவொருவயதுபத்திற்
றூமதமதன்முன்னுகத் தந்தையுஞ்சமனூரேகும்
காமமேவிளைக்குமாதே கருதிப்பார்த்துலகத்தோர்க்குச்
சாமசாரத்தினுலுந் தக்கவாறுரைப்பாய்நீயே. (எ)

தாயினுக்குடையோன்சுபரதாய்நின்றத் தானமதிருந்திடிற்
சுபரோ, டேயவும்பாவரிருக்கவும்விதியா லீன்றகாரகனுமேசெ
ன்ம, மாயகேந்திரத்திற் றனித்திடச்சேய்க்கு வயதுதான்முப்ப
தின்மேலே, நேயமாயோரேழ் தன்னிலேமாதா நிலைநிரியாணமெ
ன்றுரையே. (அ)

நாலினின்மதியுங் குருதியும்பாம்பும் நல்கிட வவர்க்குமே
லாக்கிற், சீலமாய்க்காரி யுதித்திடச்செனனம் சிங்கநண்டரிவை
யுமானுற், பாலனுக்கிருபத் தெட்டதாம்வயதிற் பலித்திடுந்திங்க
ளிற்றுயும், சாலவேபிதாவு மொன்றின்பின்னென்றுய்ச் சண்ட
னூர் சார்ந்திடுமென்னே. (கூ)

ஏயியல்புடனவ் வீட்டினில்மாந்தி யிருந்திட விதன்றுனே
ராண்டுள், தாயுமிப்படியேதந்தையுஞ்சாயுஞ் சப்தமவீட்டினில்
வேறு, தீயருமிருக்கிற் பின்னிரண்டாண்டுட் சென்றிடுஞ்செல்வ
மதாக, ஆயவேயிவைக்கு மொருபலனென்றே அறைந்திடுசாத
கன்றனக்கே. (கo)

வேறு.

சேய்வீட்டில்மதியிருக்கக் கரிவீட்டிற்பருதி
சேரவுமேமதியாரல் பாம்பொன்றுய்க்கூடத்
தாயோனும்பாவருமா யுயிர்க்கோளன்சுபராய்த்
தாக்குசென்மந்தனக்கொருபன்னோரங்கோள் மறையில்
காயந்தாயிருபதின்மே லாரல்தனிலெடுக்கும்
கண்டுபா ரதன்மேல்முப் பானுக்குட்பிதாவும்
சாயுமெனவுரைத்தனர்கள் கணிதநூற்படியே
சாற்றினுர்வேதசாஸ் திரங்கற்றுேரே. (கக)

அருக்கனுயிர்தனிற்றுவ வம்புலிநாலேழில்
அமரவித்தானத்தோர்கள் பவர்பகையுஞ்சுகமா
யிருக்கவரியோன்பகையா லுயிர்க்குமறையாதால்
ஏந்திழையேநாலாங்கோள் நட்பாட்சியுச்சம்

தருக்கவனுந்தனித்திடவு மவன்றனக்கோர்நாலோன்
றருமனிவ ரவன்றனக்கு மறையாதாகி
இருக்கப்பத்தொன்பானென் பானதனிற்றுயை
யெடுக்குமதன்மேலேழிற் செனித்தபிதாவொழியும். ()

வேறு.

மாதுர்தானத்துநாதன் மறையவன்வீட்டிலேக
நீதமாய்ப்புகர்மால்வெய்யோன் நின்றிடக்கேதுவோடு
வேதமாயக்கோள்தானும் விளங்குமோரில்லமானால்
மாதுர்தன்கருமஞ்செய்வன் வயதொருமுப்பத்தெட்டில். (கங)

வேறு.

சந்திரனுமாந்தியுட னுயிர்தனக்கீராறிற்
றனித்திடவேயீராறோன் தங்கியகேந்திரமாய்
வந்துயிர்க்குநாலாங்கோள் மறையனில்லம்
வரப்பின்னுமுச்சமதாய்த் தரிக்கமானும்
விந்தையுடனொன்றாகி வளருமானால்
மேதினியிற்சேயன்னை யொழியுந்திங்கள்
பிந்திடுநாட்பாதியினில் மரணமென்று
பேசினர்கணிதமொழி பிறங்கத்தானே. (கச)

வேறு.

மதியுமேவுயிரிற்சேர மாதுர்தானத்துநாதன்
சதிருடனருக்கன்வீட்டிற் றரித்திடப்பாலரோடே
அதிகமாயதற்குநாதன் ஆறுமொன்பதனிற்சேர்ந்தாற்
பதிதனில்மாதுர்கர்மம் பலித்திடுமுப்பத்தொன்றில். (கரு)

மதிமகன்நாலோனாகி வக்கிரனோடுசேர்ந்து
ததியெனவுயிருக்கெட்டிற் றங்கிடமதிவந்துற்றால்
விதியுடனிருபத்தாறில் விதித்தனர்மாதுர்கர்மஞ்
சதியுடன்முடிக்கவல்லன் சாற்றினர்கணிதமாய்ந்தோர். (கரு)

மதியுமேகுருவீடேக மந்திரியக்கோள்பார்வை
விதியுடன்மாதுர்தானம் வெய்யவனில்லமானால்
அதிகமாயத்தானத்தோ னம்புலிவீட்டிற்சேரச்
சதியுடன்முப்பத்தஞ்சிற் சாற்றினரன்னைசாவாம். (கஎ)

சந்திரனுயிர்க்குநாலிற் றரித்திடத்தையல்நாதன்
சுந்தரத்துடனேசுங்கன் சூரியனில்லஞ்சேர்ந்தால்
மைந்தன்றன்வயதோரேழில் மாய்த்திடும்பெற்றதாயை
புந்தியம்புலியினோடு பொல்லாதபாவர்சேர்ந்தால். (கஅ)

மதிமகன்றிசையிற்ருயை மாய்த்திடுமதுதப்பாது
கதியுயிர்ச்சுபர்களாகக் கவிபகைநீசமுற்றுச்
சதியுடன்சட்டாட்டங்கள் தனிப்பவக்கோட்கள்சேர்ந்தால்
விதியுடன்மரணமீன்ருள் விளங்குமஞ்சேழிற்சாவாம். (கக)

நாலினுக்குடையோ னுதயகேந்திரத்தில் நல்கிடப் பாம்பு வந் துதிக்கச், சீலமாய்மதியு மூன்றிலாறெட்டிற் றிகழ்பனி ரண்டினிற்சேரச், சாலவேபாம்பு திசைவிடுமுன்னே சதிருடன் தாய் தனைக்கொல்லும், ஏலவேபொன்னன் திசைவருநாளி லிவன் றனக் கரசர்கள் பகையே. (உ0)

மதிமகனுயிரோனுகி மாதுர்தன்தானஞ்சேரச்
சதியுடனதற்குநாதன் சாரிடமறையாதாகில்
விதியுடன்மதியுங்காரி விளங்குமோரில்லமானுற்
பதிதனிலஞ்சுக்குள்ளாய்ப் பாலகன்மாதாசாவாம். (உக)

மாதுருதானந்தன்னில் வந்திடக்கருமநாதன்
வேதமாநான்குநாதன் விளங்கிடப்பாவரோடு
நீதமாயுயிர்க்கீராறில் நின்றிடச்சுபர்வீடானுல்
சேதந்தாயாரேன்னாளிற் றிகழ்கரிவந்தபோதே. (உஉ)

மாதுருதானநாதன் மறையவன்வீட்டிலேக
நீதமாய்மதிபாம்போடு நின்றிடம்நீசமுற்ருல்
வேதமாய்ப்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனரிருமூன்றுள்ளாய்
மாதுருகருமஞ்செய்ய வகுத்தனர்கணிதமாய்ந்தோர். (உங)

சந்திரன்புகர்வீடேகத் தானக்கோள்மறைவதாக
வந்துயிர்தனக்குநாலோன் மறைந்திடப்பவர்வீடுற்ருல்
சிந்தையாய்ப்பிறக்குஞ்சேய்க்குத் திரமுடனிருநாலானுல்
விந்தையாயன்னைநாசம் விதித்தனர்தரணிமீதே. (உச)

மாதுருதானநாதன் மதியொடுமறையாதாக
நீதமாய்ப்பருதிசுங்கன் நின்றிடவுயிர்க்குநாலில்
வேதமாயிருப்பதானுல் விதித்தனரீரெட்டேழில்
மாதுருகருமஞ்செய்ய வகுத்தனர்தரணிமாதோ. (உரு)

மாதுருதானநாதன் மறையவன்வீட்டிலேக
நீதமாயவர்க்கொன்பானில் நின்றிடமதிவந்துற்று
வேதமாயிக்கோள்தன்னை விதியுடன்சுபர்கள்நோக்கில்
மாதுருகருமஞ்செய்ய வகுத்தனரீரைந்துள்ளாய். (உசு)

மாதுருதானநாதன் மதியொடுபவர்கள்சேர்ந்து
நீதமாயுயிர்க்குப்பத்தில் நின்றிடச்சுபர்வீடாக
வேதமாய்மால்வெய்யோனும் விளங்குமோரில்லமானால்
மாதுருகருமஞ்செய்ய வகுத்தனர்வயதீரஞ்சில். (உஎ)

மாதுருதானந்தன்னில் வந்திடப்பவர்வந்துற்றால்
நீதமாயக்கோள்பத்தில் நின்றிடக்கொடுங்கோளோடு
வேதமாய்ப்பிறக்குஞ்சேய்க்கு விரைவுடனிருமூன்றுள்ளாய்
மாதுருகருமஞ்செய்ய வகுத்தனர்கெணிதநூலோர். (உஅ)

நாலினுக்குடையோன் பருதிமாலுடனே நல்கியச் சுபர்கள் வீட்டிருக்கச், சாலவேமதியு மரவமுமொன்றாய்ச் சாரிடஞ் சொந்தவீடாகத், தூலமாயுதிக்குஞ் சாதகன்றனக்குத் துணிவுடன் நாற்பதஞ்சதனிற், காலனூர்மாதா யேகுவளென்றே கணித்தனர் சோதிடவழியே. (உகூ)

மதியுமேகரிவீடாக மந்தனும்மதிவீடேகச்
சதியுடனதனிற்பொன்னன் தரித்திடப்பாவரோடு
விதியுடனுயிர்க்குநாலில் வெய்யவன்புகர்வந்துற்றால்
பதிதனில்முப்பத்தாறுட் பகர்ந்தனரன்னைசாவாம். (௩0)

சந்திரன்சிகியினோடு சாரிடமறைவதாக
வந்துயிர்தனக்குநாலோன் வருமிடம்பவர்வீடானால்
சிந்தையாயுதிக்குஞ்சேய்க்குத் திறமுடன்மதிவந்துற்றால்
வந்திடுங்கருமமென்று வகுத்தனர்தரணிமாதோ. (௩க)

சந்திரன்கரிவீடேகத் தானக்கோளதனிலாக
வந்துயிர்தனக்குநாலோன் வக்கிரனோடுசேர்ந்து
சிந்தையாயுயிருக்கேழிற் சேரிடஞ்சுபர்வீடானால்
முந்தியேதாயைஅஞ்சில் முடித்திடுங்கருமமாதோ. (௩உ)

சந்திரனுயிர்க்குநாலிற் றரித்திடநாலினோடு
விந்தையாயவருக்காறில் விளங்கிடக்கரிசேயானால்
வந்திடுஞ்சாதகர்க்கு வகுத்தனர்கணிதமாய்ந்தோர்
சிந்தையாந்தாயுஞ்சேயும் செத்திடும்பிறந்தவன்றே. (௩௩)

சந்திரன்கரிவீடேகத் தானக்கோள் மறையாமற்றான்
வந்துயிர்தனக்குநாலோன் வளருகேந்திரத்திலேற
விந்தையாயிறைவன்வெய்யோன் விளங்கிடப்புதனுஞ்சேரச்
சிந்தையாயீராறென்றிற் செத்திடுந்தாயென்றோதே. (௩௪)

ஓதிடுங்கணிதநூலோ ருரைத்தனர்சாதகற்கு
வேதமாய்நான்குநாதன் விரைவுடன்மறைவதானாற்
சேதமாம்பெற்றவன்னை செகத்தினிலோராண்டுக்குள்
நீதமாயொழியுமென்று நிகழ்த்தினர்கணிதநூலோர். (௩௫)

தேய்பிறைமால்வீடாகத் தினகரனதனிற்சேர
வாயுயிர்தனக்குநாலோன் மறைந்திடப்பவர்வீடுற்றால்
தாய்கருமங்கள்செய்யச் சாற்றினரிரண்டாண்டுக்குள்
தூய்பிறைவளருமாகிற் றொடுத்திடுமிருபத்தஞ்சில். (௩௬)

நாலினுக்குடையோன்கேதுடன்கூடி நல்கிடச்சுபமிலாதிடுகில்
நீலனுமவருக்கேழினில்மதியோன் நின்றிடப்பவர்மனைவருகச்[ல்
சாலவேவுதிக்குஞ்சாத்கன்றனக்குச்சாற்றினர்நாலுமொன்றஞ்சி
பாலகன்றாயும்நாசமாமென்று பகர்ந்தனர்கணிதநூலாய்ந்தோர்.

சந்திரன்பருதிவீட்டிற் றரித்திடப்பாவர்பார்க்க
வந்துயிர்தனக்குநாலோன் மறைந்திடச்சுபர்வீடாகச்
சிந்தையாயுயிர்க்குநாலிற் றீயகோள்நிற்பாராகில்
சுந்தரத்துடனேதாயார் துஞ்சிடுமதிவந்துற்றால். (௩௮)

மதிகரிபூம னுதயகேந்திரத்தில் வந்திடமுன்பினுங் கொடியர், சதிருளநான்கி லிரவிமால்பொன்னன் சார்ந்திடப்பாவர் நோக்கிடவே, பதிதனிற்பிறக்குஞ் சாத்கன்றனக்குப் பகர்வயதஞ்செழுமூன்றில், விதியுடன்மாதா யிறந்திடுமென்றே விதித்தனர் கணிதநூலாய்ந்தோர். (௩௯)

தேய்பிறைகுருதியோடு சேரிடந்தீக்கோளில்லம்
தாயுடைத்தானம்வெய்யோன் றரித்திடவக்கோள்தானும்
சேய்புகர்மால்வீடானாற் செப்பினர்முப்பத்தேழில்
மாயுமென்றுரைத்தாரன்னை வளர்பிறையாகுமாகில். (௪௦)

வளர்பிறைபிறக்குஞ்சேய்க்கு வகுத்தனர்நாற்பத்தொன்றுள்
களவுகள்மிகவேசெய்வள் கடினமாயுரைக்கவல்லள்
அளவிலாப்பொருள்பொன்சேத மன்னையாலதிகமாகும்
பழவினையாலேதுன்பம் பகரலாந்தரணிமீதே. (௪௧)

மதியுமேயுயிரிற்சேர மாதுர்தன்தானநாதன்
சதியுடனருக்கன்வீட்டிற் றரித்திடக்குருதிமாந்தி
விதியுடன்பருதியோடு விளங்கவொன்றுமாகில்
அதிகமாம்நாற்பத்தொன்றி லன்னையர்கருமஞ்செய்வன். (சஉ)

சேயவன்மதியைநோக்கச் சேயுடன்சுபர்கள்சேரத்
தாயையுந்தமரைப்பேணித் தரணியிலிருந்துவாழ்வன்
தீயவனோடுசேயுஞ் சேர்ந்துதானிருப்பானாகில்
தாயையுந்தமரைப்பேணுன் தையலும்பேணுள்மாதே. (சங)

சந்திரன்சேய்வீடாயத் தானக்கோள்மாலோடேக
வந்துயிர்தனக்குநாலோன் வருமிடமறையாதாகில்
தந்திரத்துடனேயெட்டிற் றுயுயிர்நாசங்காட்டும்
விந்தையாய்க்கணிதநூலோர் விதித்தனர்தரணிமாதோ. (சச)

மாதவர்மொழியென்றோதி வகுத்தனர்சாதகற்கு
நீதமாய்மதியுநாலோன் நின்றிடமோர்வீடானால்
வேதமாய்ப்பிறக்குஞ்சேய்க்கு விதித்தன்றோராண்டுக்குள்
மாதுருகருமஞ்செய்ய வகுத்தனர்கணிதநூலோர். (சரு)

மாதுருதானந்தன்னில் வந்திடக்கரிசேய்மாந்தி
நீதமாய்மதிமால்பொன்னன் நின்றிடமாதுர்த்தானம்
வேதமாய்ப்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனரிருபத்தொன்பான்
சேதமாய்த்தாயைக்கொல்லத் திறமுடன்கணிதஞ்செப்பே. ()

செப்பியமதிமால்பொன்னன் சேரிடம்மறைவதாகத்
துப்பியமுக்கோளோடு தோன்றிடப்பவர்வந்துற்றால்
இப்படிப்பிறக்குஞ்சேயை யீன்றவளிரண்டாண்டுக்குள்
தப்புவதில்லைநாசம் சாற்றினர்கணிதநூலோர். (சஎ)

மாதுருதானநாதன் வளருகேந்திரத்திலேறி
ஓதிடுங்கரிபொன்றிங்க ளுயர்வுடன்பகைநட்பானாற்
சேதமாம்வயதுமூன்றிற் செத்திடுந்தாயென்றோது
வேதமாய்க்கரிபொன்திங்கள் விரைவுடன்நீசமானால். (சஅ)

விரைவுடன்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனரிருநால்மூன்றில்
நிரைவுடன்மாதுர்நாசம் நிகழ்த்தினர்கணிதநூலோர்
வரையுளமதிபொன்காரி வசிப்பதோரில்லமானால்
தரையிற்சேய்பிறந்தவன்றே சாவுதாய்தனக்கென்றோதே. (சகூ)

சந்திரனுயிர்க்குநாலிற் றரித்திடப்பாவர்நோக்க
வந்துயிர்தனக்குநாலோன் வருமிடங்கரிவீடானுல்
சுந்தரத்துடனேதோன்றுந் துணிவுடன்சாதகற்குச்
சிந்தையாய்வயதுமூன்றிற் செத்திடுந்தாயென்றேதே. (ரு0)

மாதுருதானந்தன்னில் வளமுளசசிவந்துற்றுல்
வேதமாயக்கோள்காரி விளங்குகேந்திரமேயானுல்
நீதமாய்ப்பிறக்குஞ்சேய்க்கு நிகழ்த்தினுர்வயதோரேழிற்
சேதந்தாயென்றுரைத்தார் செகமதிற்கணிதமாய்ந்தோர். (ருக)

மாதுருதானநாதன் மறையவனுடனென்றுகி
நீதமாயுயிர்க்குப்பத்தில் நின்றிடப்பவர்வீடாக
வேதமாயுயிர்க்கோளாறில் விளங்கிடமதிவந்துற்றுல்
சேதமாமறைநாள்வந்தாற் செத்திடுந்தாயென்றேதே. (ருஉ)

மாதுருதானந்தன்னில் வரும்பிறைதனிக்கவக்கோள்
வேதமாய்ப்பாவரோடு விரைவுடன்புகர்வீடுற்றுல்
சீதமாமதிநாட்பொன்னன் சேரபகாரந்தன்னில்
சாதகன்றன்னையீன்ற தாய்க்குநற்கருமஞ்செய்வன். (ருங)

சந்திரனுரல்வீட்டிற் றனித்திடவதனின்கோளன்
விந்தையாய்நாலினேனும் வெய்யவன்புகர்பொன்னேடு
சிந்துயிர்தனக்கீர்மூன்றிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
வந்திடும்நாற்பத்தஞ்சில் மாய்ந்திடுந்தாயென்றேதே. (ருச)

சந்திரன்குருவோடொன்றுய்ச் சாரிடமறையாதாகில்
வந்திடுமுயிர்க்குநாலோன் வளருகேந்திரத்திலேற
விந்தையாயக்கோளோடு விளங்கிடச்சுபர்வந்துற்றுல்
அந்தணன்திசையிலன்னை யவனிவிட்டகலுவாளே. (ருரு)

மாதுருதானந்தன்னில் வந்திடக்கரிமால்கேது
வேதமாய்மதியுமந்த வீட்டினிற்றரிக்குமாகில்
நீதமாய்த்தோன்றுஞ்சேய்க்கு நிகழ்த்தினுரிருபத்தொன்றில்
சேதமாந்தாயென்றிந்தச் செகமதிற்கணிதமாய்ந்தோர். (ருசு)

சந்திரன்மால்வீடாகத் தானக்கோள்மறையோடொன்றுய்
வந்துயிர்தனக்குமுன்பின் வந்திடச்சுபர்கள்நோக்கில்
சிந்தையாய்மதிக்குப்பத்திற் சேர்ந்திடப்புகர்வந்துற்றுல்
மைந்தனுக்கிருநாலாறில் மாய்ந்திடுந்தாயென்றேதே. (ருஎ)

ஓதிடுமுயிர்க்குப்பத்தி லுயர்வுடன்மதிபாம்பாக
நீதமாய்நாலின்நாதன் நின்றிடமறைவதானால்
வாதமாயிருநால்பத்தில் வகுத்தனர்தாயைக்கொல்ல
வேதனாற்படைக்குஞ்சேய்க்கு விதித்தனர்தாணிமீதே. (நுஅ)

சந்திரன்குருதிகேது சற்குருவுடனொன்றாகி
வந்துயிர்தனக்கோரேழில் வளர்ந்திடப்பவர்நோக்குற்றால்
சிந்தையாய்வளருஞ்சேய்க்குச் செப்பினர்தாயைக்கொல்லச்
சந்திரன்றிசைமுற்பாதி சாய்ந்திடுந்தாணிமாதோ. (நுகூ)

மாதவர்மொழியால்மேலோர் வகுத்தனர்கணிதநூலால்
வேதமாய்மதியோடொன்றாய் விளங்கிடக்குருதிசேர்ந்தால்
ஓதினாரவுநாளி லுயர்வுள திசைமுற்பாதி
சேதமென்றுரைத்தாரன்னை செப்பினர்பிறக்குஞ்சேய்க்கே. ()

வேறு.

சந்திரனுதயகேந்திரமாகித் தனித்திடப்பவர்மனைவருமால்
வந்துயிர்தனக்குநாலினிற்பருதி மதிமகனுடன்வரவக்கோள்
சுந்தரப்படியேகொடியகோளுடனே தோன்றிடக்காரிவீடானால்
மந்திரிதிசையிலன்னை துஞ்சிடவே வருதுகைவெள்ளிமால்குருதி.

குருதிதேர்ப்பாகன் பிருகுமிக்கோட்கள் கூடியொன்றாய் ழதி வீட்டில், ஊருதியோடிருக்கப் பருதிபொன்திங்கள் மறைய வக்கோள்தனைப் பவர்கள், கருதியேநோக்கப் பிறந்திடுஞ்சேய்க் குக் கதிர்மதிமால்துகை வயதால், சுருதியாந்தாயுந் துஞ்சிடு மென்றே தெரிகுத்தனர் கணிதநூலோர்கள். (சுஉ)

வேறு.

சந்திரனுயிர்க்குமூன்றிற் றனித்திடவத்தானத்தோன்
வந்துயிர்தனக்கொன்பானில் வந்திடமால்சேயோடு
விந்தையாய்ப்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனர்குருதிநாளில்
மைந்தனைப்பெற்றமாதா மாய்ந்திடுந்தாணிமாதோ. (சுஙூ)

நாலுமேழஞ்சுக்குள்ளாய் நாட்டியவிறைவன்நாளிற்
சாலவேபுகரோனாணிற் சாற்றினார்மாதர்நாசம்
ஏலவேமதியுஞ்சேயு மிருந்திடமோர்வீடானால்
தாலமாய்வகுத்தாரொன்றிற் றுஞ்சிடும்மாதுர்கர்மம். (சுச)

வேறு.

நாலினிற்காரி. தனித்திடநாலோன் நாடுமில் மறைந்திடா
தாகிற், சாலவேமதியு முயிர்க்குமுன்பின்னுற் றனித்திடப் பிற
ந்தசா தகற்குத், தூலமாய்வயது பத்துமாறுக்குள் துஞ்சிடு
மன்னையென் றுரைபின், நாலினுக்குடையோன் மறைந்திட வரு
மால் நாலினிற் றுய்மர ணமுமே. (சுரு)

மரணமுமென்றே வகுத்தனர்கணிதர் மகிவருசாதகன் றன
க்குக், கிரணமாமதியும் நாலினோனுடனே கெம்பியே மறைந்தி
ருந் திடவே, கரணமாம்வயதோ ரிரண்டுநாலொன்றிற் காலனா
கேகுவ ளன்னை, இரணியனழலோன் தரணியின்மகனு மிந்து
வுஞ் சேயின்வீ டுற்றால். (சுசு)

சேயிலந்தனிலிக் கோட்களொன்றுகச் சேர்ந்திடப் பிறந்த
சாதகற்கு, ஆயுளொன்றுரைக்க வைம்பதுவயதி லன்னையுந்
துஞ்சிட லாகும், தூயமாமதியுங் காரிமாலுடனே தோன்றிடு
மில்லமொன் றுனால், ஆயதோர்வயது அஞ்சுநாலொன்றில்
அறைந்தன ரன்னை துஞ் சிடவே. (சுஎ)

வேறு.

சந்திரன்குருதியோடு சாரிடம்பருதிவீடால்
வந்துயிர்தனக்குநாலோன் மதிமகன்புகர்கேதோடு
சிந்தையாயருணன்வீட்டிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
சுந்தரத்துடனே அன்னை துஞ்சிடும்புகர்நாள்வந்தால். (சுஅ)

சந்திரன்பருதிசுங்கன் சாரிடமோர்வீடாக
வந்துயிர்தனக்குநாலோன் மறையவன்கேதோடேகிச்
சிந்தையாயருணன்வீட்டிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குச்
சுந்தரத்துடனே அன்னை துஞ்சிடுமுப்பத்தொன்றில். (சுகூ)

மாதுருதானந்தன்னில் வந்திடப்பருதிகேது
வேதமாயக்கோள் தானும் விரைவுடனுயிர்க்குமூன்றில்
நீதமாய்மதியினோடு நின்றிடச்சுபர்வீடானால்
பேதமோவயதோரெட்டிற் பெற்றதாய்மரணமாமே. (எ0)

வேறு.

நாலினிற்காரிதனித்திடநாலோன் நண்ணலாமுதயகேந்திரத்திற்
றூலமாய்ப்பருதிவெள்ளிகேதோடு தோன்றிடக்கேந்திரத்துறு
ஏலவேகுருதிமதியுடன்கூடி யிருந்திடமறைந்திடுமாகிற் [மால்
சாலவேவயதுஅஞ்சுமூன்றுள்ளாய்தரணியில்மாதுர்துஞ்சிடுமே.

மதிமகன்பருதி குருதிகேதோடு வருமிடமுதயகேந் திரமாய்ச், சதியுடனுயிர்க்கு நாலினோனுடனே சந்திரன் மந்திரிவரவே, விதியுடனிக்கோ ளில்லமொன்றாகி விளங்கிடப்பிறந்த சாதகற்குப், பதியிற்சேய்வயதோ ரிரண்டுநாலொன்றிற் பகர்ந்தன ரன்னைதுஞ் சிடுமே. (எஉ)

வேறு.

சூரியனுயிர்க்குநாலிற் றோன்றிடநாலின்கோளன்
சாரமம்புலியினோடு சாரிடமோர்வீடாகச்
சேருமக்கோட்கடானும் சேரிடமறையாதாகில்
ஆருயிரெட்டுக்குள்ளா யழிந்திடுந்தாயென்றோதே. (எங)

மதியுமேவுயிரிற்சேர வாக்கினோன்குசன்வீடேக
அதிகமாயதற்குநாத னட்டமந்தன்னிற்சேர்ந்தால்
விதிமுறைப்படியேமைந்தன் விரைவுடனிருமூன்றொன்றிற்
சதியுடன்கருமஞ்செய்வன் தரணியிற்றாய்க்குத்தானே. (எச)

மாதுருதானநாதன் வக்கிரன்வீட்டிற்சேர
நீதமாய்மதியுஞ்சுங்கன் நின்றிடஞ்சுபர்வீடானால்
சேதமாமாதுர்கர்மஞ் செய்குவன்முப்பத்தொன்றில்
பூதலத்துதிக்குஞ்சேய்க்குப் புகன்றனர்கணிதநூலோர். (எரு)

சந்திரன்சேமாகச் சற்குருவதனிற்சேரச்
சுந்தரவுயிர்க்குநான்காய்த் தோன்றுமில்புகர்வீடானால்
மைந்தனுக்கிருபத்தேழு வயதினிலன்னைகர்மம்
வந்திடுமுலகிலென்று வழுத்தினர்கணிதவல்லோர். (எசு)

மாதுருதானம்பாவர் வந்திடவதற்குநாதன்
பேதமாயருணன்வீட்டிற் பிறங்கிடப்பாவரோடு
நீதமாயிருக்கவெட்டில் நிலவுநற்புகருஞ்சேர்ந்தால்
சாதகன்றாய்க்குக்கர்மஞ் சாற்றினர்முப்பத்தேழில். (எஎ)

சந்திரன்மாலோடேகிச் சாரிடமோர்வீடாக
விந்தையாயேழின்கோளன் விரைவுடன்மறையாதா * ய
நந்தையிலுதிக்குஞ்சேய்க்கு நாலுமோரரண்டுதன்னில்
வந்திடுந்தாய்க்குகர்மம் வகுத்தனர் தரணிமீதே. (எஅ)

மதிமகன்பிறையோடேகி வருமிடம்மறைவதாகச்
சதியுடனுயிர்க்குநாலோன் சாரிடம்பருதிவீடால்
விதியுடன்நாலிற்றீக்கோள் விரைவுடன்வளருமாகில்
மதிதருதுகையாயன்னை மாய்ந்திடுந்தரணிமாதோ. (எகூ)

சந்திரனருணனோடு சாரிடங்காரிவீடாய்
வந்துயிர்தனக்குநாலோன் வருமிடம்பவர்வீடுற்றால்
சந்ததிபுவியிலீன்ற தாய்க்கிருநாலோராண்டு
வந்திடக்கருமமென்று வகுத்தனர்கணிதமாய்ந்தோர். (அ0)

மாலவன்நாலின்கோளும் வலியலக்கினத்தின்கோளும்
சாலவேவுயிர்க்குமூன்றிற் றரித்திடப்பாவர்பார்க்க
ஏலவேயிருநாலொன்றி லிரண்டினோன்றிசைவந்துற்றால்
தூலமாய்மாதுர்கர்மந் தொடுத்திடுந்தரணிமாதோ. (அக)

மாதுருதானநாதன் வளருகேந்திரத்திலேற
நீதமாய்மதியினோடு நின்றிடமோர்வீடானால்
சாதகன்வயதுபத்திற் றாய்க்குநற்கருமஞ்செய்யப்
பூதலத்துதித்தானென்று புகன்றனர்கணிதநூலால். (அஉ)

சந்திர † னெல்வீடாயத் தானக்கோள்மறைந்திருக்க
வந்துயிர்தனக்குநாலோன் மதிமகனுடனொன்றாகிச்
சிந்தையாய்ப்புகர்வீடேகிற் றிசைபுகர்யருதியூனில்
மைந்தனைப்பெற்றவன்னை மரணமென்றுரைக்கலாமே. (அங)

நாலினிற்கொடியோர்மேவ நாலினோன்மதிவீடேகச்
சீலமாய்மாந்திதிங்கள் சேரிடங்கரிவீடானால்
கோலமாமரணமன்னை குறித்தனர்கரிநாட்பாம்பில்
நாலினிற்சுபரேநின்றால் நாலினோன்தனதிற்றுஞ்சும். (அச)

---

* அநந்தை - பூமி. † எல் - சூரியன்.

வேறு.

சூரியனும்நாலின்கோள் காரியில்லந்
தோன்றவவர்நாலதனி லரவுதிங்கள்
சாரவவரிருந்திடுங்கோள் மறையனில்லந்
தானிருக்கவுடன்புகருந் தரிக்குமாகிற்
பாரதனிற்றோன்றியசே யின்றவன்னை
பாழ்படுமேபுகர்வருநா ளதனிற்றானே
சூரியனும்நாலின்கோள் மறைவீடானால்
தோன்றியதாய்கருமமதுக் குதவான்மாதோ. (அரு)

மதியுடனேவுயிரிற்சேய் மூன்றின்கோளும்
வரவுயிர்க்குநாலோனு முடனொன்றாகிச்
சதியுடனேவுயிரலது கருமமேழிற்
றரித்திடவேயிவர்கடனைச் சுபர்கள்நோக்க
விதியுடனேவுயிர்தனக்கு நாலினோன்றன்
வீடுசுத்தமாகவுமுன் பின்னுஞ்சுத்தம்
பதியுடனேதோன்றிடுஞ்சே யின்றவன்னை
பாரிலோராண்டதனுள் நாசமோதே. (அசு)

ஓதுமெனவுயிர்தனக்கு மாதுர்த்தான
முரைத்திடுங்கோள்சுபராகி யுறையுமில்லஞ்
சீதமுடன்மதிகிரக மலதுபானு
செப்பியவீடதுவாகத் தனிக்குமாகில்
நீதியுடன்மேதினியிற் பிறக்குஞ்சேய்க்கு
நேர்ந்திடுந்தாய்புகர்திசைநாள் முடிவிற்றுஞ்சும்
ஆதிசங்க ராச்சாரி சோதிடத்தி
லறைந்தமொழிதப்பாதிங் கறிந்துபாரே. (அஎ)

நாலினோன்மாலாகிக் கரியின்வீட்டில்
நண்ணிடவேகரியவனும் பாம்புமொன்றாய்ச்
சீலமுடனுயிர்தனக்கு நாலிற்கேது
சேர்ந்திடவேமுன்பின்னுஞ் சுத்தமாக
நாலுடையோனிருந்தவீ டதற்குப்பன்னோன்
நாடிடுமத்தானமதில் மழைக்கோள்திங்கள்
தூலமுடன்தோன்றியசே யின்றாள்தன்னைச்
சூரியனிற்சோமனாண் தொலைக்குமென்னே. (அஅ)

வேறு.

மாதுருதானந்தன்னில் வந்திடவாரல்திங்கள்
வேதமாய்த்தரிக்கவக்கோள் விளங்கிடச்சேய்வீடுற்றால்
சீதமாய்மதிக்கிரண்டிற் சேர்ந்திடப்பாம்புவந்தால்
ஓதினருயிரோன்நாளி லொழிந்திடுமாவியன்னை. (அக)

குருதியுமுயிர்க்குநாலிற் குறுகிடவதற்குநாதன்
பருதிமாலுடனென்றுகிப் பகரிடமூன்றுறெட்டாய்ச்
சுருதியாயுயிர்க்கிரண்டிற் றோன்றிடமதிவந்துற்றால்
கருதியேமூவேழொன்றிற் கருமந்தாய்தனக்குச்செய்வன். (கூ0)

கோதையேநாலிற்பூமன் குறுகிடநாலின்நாதன்
சீதமார்மதிபாம்போடு சேரிடங்கரிவீடானால்
நாதமார்சாதகற்கு நாலினேன்திசைநாள்வெள்ளி
போதபகாரந்தன்னிற் பொன்றுவளன்னைமானே. (கக)

மானுமேநாலோன்றிங்கள் வருமரவுடனென்றுகித்
தானுமேகரியன்வீட்டிற் சாரவக்கரியன்றானும்
பானுவீடதனில்நின்றுற் பகர்ந்தமுன்னாளிற்றாய்சாம்
ஆனுமேகரிகேதானு லடர்கரிகேதில்மாயும். (கூஉ)

மதிமகனுயிர்க்குநாலில் வந்திடமாதுர்நாதன்
விதியுடன்புகர்பொன்மாந்தி விளங்கிடவக்கோளொன்றாய்ச்
சதிருடனுபயந்தன்னிற் சார்ந்துசந்திரனோடானால்
துதிபுகர்மதியூண்நாளிற் றுஞ்சிடுமன்னைதானே. (கூங)

மதிமகன்பிறையோடேகி வருமிடமறையாதாகிற்
சதிருடனுயிர்க்குநாலோன் சாரிடம்புந்திவீடேல்
பதியதிற்றோன்றுஞ்சேயைப் பயந்தவள்கருமஞ்செய்ய
விதியுடனிருபத்தாறில் விளம்பினர்கணிதமாய்ந்தோர். (கூச)

சந்திரன்புகர்வீடாயத் தானக்கோள்மறைவதாக
வந்துயிர்தனக்குநாலோன் வருமிடமுயிர்க்கீராறிற்
சிந்தையாய்த்தோன்றுஞ்சேய்க்குத் திரமுடனீராறென்றிற்
சுந்தரத்துடனேஅன்னை துஞ்சுவள்தரணிமீதே. (கூரு)

நாலினேன்சேய்வீடேக நாலினிற்றீக்கோள்மேவச்
சாலவேவுயிர்க்கீராறிற் றனித்திடமதிவந்துற்றால்
தூலமாய்முக்கோள் தன்னைத் துணிவுடன்பாவர்பார்க்க
மால்மதிதுகையாமன்னை மாய்ந்திடுந்தரணிமாதே. (கூள்)

மாதுருத்தானந்தன்னில் வாய்ப்புடன்பவர்வந்தெய்த
வேதமாயக்கோள்நீசம் விரைவுடன்பாவரோடு
போதவேயுயிர்க்கீராறிற் புந்தியில்மதிவந்துற்றால்
டாதுருகருமஞ்செய்ய வகுத்தனர்வயதொன்றிற்றான். (கூஎ)

மாலவன்பருதிசுங்கன் வளருமிக்கோட்களொன்றாய்ச்
சாலவேயுயிர்க்குநாலிற் றரித்திடநாலின்கோளன்
ஏலவேகொடியவன்னோ டிருந்திடம்பருதிவீடேல்
தூலமாயிருநாலொன்றிற் றுஞ்சிடுந்தாயென்றோதே. (கூஅ)

வேறு.

காரிமால்குருதி யுதயகேந்திரத்திற் கருத்துடன் சுபமிலா
தாகிற், சீருடன்நாலோ னம்புலியுடனே சேரிடங்காரீவீ டுற்
றால், பாரிற்சேய்வயது அஞ்சுநாலொன்றிற் பாழ்படுமன்னைதான்
மதியே, காரிமால்குருதி விரைந்திடவருமேற் கருமந்தாய்க்
கொருவய தென்னே. (கூகூ)

வேறு.

சந்திரன்மால் தொல்புகரோன் பவர்மனைவந்திடவே
சற்குருகே துடன்நாலோன் சார்ந்திடக்கேந் திரமால்
மைந்தனிவன் பிறந்திடுமாண் டிருபான்நாலில்
வரமாதா வுயிர்விடுவாள் வகுத்திடுநூல்மொழியால்
சிந்தையிலக் கினந்தனிலே வெள்ளிமதி யருணன்
சேர்ந்திடவே சுபர்மனையாச் சுத்தம்வர முன்பின்
விந்தையுடன் பிறந்திடுசேய் வயதுமுப்பத் தெட்டில்
விதித்தனர்தாய் மரணமென விளம்புவர்மே லோரே. ()

மேலவரும் நவக்கிரக சாரவழிப் படியே
விதித்தனர்கள் சோதிடநூற் கணிதமொழி யாலே
சாலவுயிர்க் காறதனில் மால்மதிசேய் சுங்கன்
தரித்திடவே கடுங்கோட்கள் நோக்கிடவே வருமால்
பாலன்வய தஞ்சின்மே லொன்றஞ்சே முதனிற்
பகர்ந்தனர்கள் பயந்தவளின் மரணகரு மத்தைத்
தாலமதிற் றான்செய்ய தர்மதர்மத் துக்குத்
தக்கபடி யனுபவிப்பர் தரணியிலுள் ளோரே. (கoக)

வேறு.

தேய்பிறைதேளிற்சேரத் தேளினேன்மறையாதாகில்
வாயுயிர்தனக்குநாலோன் மறைந்திடப்பவர்வீடுற்றால்
வீயுமேயிருநாலேழில் விரைவுடன்மாதுர்தானும்
தூய்பிறைவளருமாகிற் றொடுத்திடுமிருபத்தொன்றில். (கo௨)

மதியுடன்பவக்கோள்சேர்ந்து வளருகேந்திரத்திலேகச்
சதியுடனுயிர்க்குநாலோன் சாரிடம்மறைவதாகி
இதியுடன்முக்கோள் தன்னை யேழின்கோள்நோக்குமானுற்
பதியுடன்முப்பத்தஞ்சிற் பயந்தவள் துஞ்சுவாளே. (கo௩)

வேறு.

நாலினுக்குடையோன் பவர்மனைசேர நாலினிற்பவர்தனித்திடவே, சீலவம்புலியுஞ் சுபருடன்கூடிச் சிறந்திடக்கேந்திரத்துறுமால், பாலகன்றனக்கு வயதுநாற்பதுமேற் பயந்தவள்வியந்துயிர்விடுவள், நாலினேன்சுபராய் மறைந்திடவதன்மேல் நாளுதான் மாதுர்துஞ்சிடுமே. (கo௪)

வேறு.

சந்திரனுதயமேறித் தரித்திடவுதயநாதன்
சிந்தையாய்ச்சுபரோடொன்றாய்ச் சேரிடமறையாதாகில்
விந்தையாயுயிர்க்குநாலில் விளங்கிடக்கரிகேதானால்
வந்திடுந்தாயைக்கொல்ல வகுத்தனர்பாம்பிற்பாதி. (கo௫)

சந்திரன்குருவோடொன்றாய்ச் சாரிடம்மறையாதாகில்
வந்திடுமுயிர்க்குநாலோன் வரும்பவருடனொன்றாகி
விந்தையாயுயிர்க்குப்பத்தில் விளங்கிடப்பிறந்தசேய்க்குச்
சிந்தையாயிருபத்தொன்றிற் செத்திடும்தாயென்றோதே. (கo௬)

சந்திரன்சுபரோடொன்றாய்ச் சாரிடம்மறையாதாக
வந்துயிர்தனக்குநாலோன் வரும்பவருடனொன்றாகிச்
சிந்தையாய்மதிமால்வீடாய்ச் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குச்
சுந்தரத்துடனேஅன்னை துஞ்சிடும்ராகில்முன்போல். (கo௭)

சந்திரனுதயமேறித் தரித்திடப்பாவரோடு
வந்திடுமுயிர்க்குநாலோன் வக்கிரன்பரியோடொன்றாய்
மந்தன்வீடதனிற்சேர மந்தனும்பெலமாவானால்
சிந்தையாய்மறைநாளன்னை செத்திடுந்திசையிற்பாதி. (கo௮)

சந்திரன்குருகேதோடு சாரிடம்மறையாதாக
வந்துயிர்தனக்குநாலோன் மதிமகனுடனொன்றாகி
விந்தையோரில்லந்தன்னில் விளங்கிடப்பவர்நோக்குற்றால்
சிந்தையாய்க்கரிநாளன்னை செத்திடும்வயதுநாளுள். (கஙசு)

வேறு.

சூரியன்மா லுடன்பாம்பு மதிபொன்னோனுஞ்
சுகமாகத் தோன்றுமிட முதயமானால்
சீருடனே வுயிர்தனக்கு நாலின்கோளன்
சேரிடங்கேந் திரமாகிப் பவனென்பானால்
பாருலகிற் சாதகனைப் பயந்தமாதா
பாழ்படுவ ளேழுதனி லுதவான்யாலன்
சூரியன்மால்வேறாகிப் பவர்வீடானாற்
றுஞ்சிடுந்தாய் பொன்வருகில் துலைப்பானென்னே. (கக0)

வேறு.

சந்திரனுயிர்க்குநாலோன் சற்குருசேயோடொன்றாய்
வந்துயிர்தனக்குப்பத்தில் வளர்ந்திடச்சேய்வீடானால்
சிந்தையாயுதித்தவன்றே செத்திடுந்தாயென்றோது
சந்திரன்குருவோடொன்றாய்ச் சாரிடங்கரிவீடானால். (கக1)

சாரிடங்கரிவீடாகத் தரித்திடப்பிறந்தசேய்க்குக்
கூறினர்பாம்புநாளிற் குறித்தனர்திசைபிற்பாதி
பேருடன்புவியிலோங்கப் பெற்றுதாலாட்டிப்பின்னர்
சீருடன்வரும்போதன்னை செத்திடுந்தரணிமாதோ. (கக2)

சந்திரனுயிற்குமூன்றிற் றனித்திடப்பவர்வீடாக
வந்துயிர்தனக்குநாலோன் வரும்பவருடனொன்றாகிச்
சிந்தையாய்மறைவீடாகிச் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குச்
சுந்தரத்துடனேஅன்னை துஞ்சிடுமதிநாள்வந்தால். (கக3)

சந்திரன்நாலினோனுஞ் சாரிடங்கரிவீடாக
வந்துமக்கோளன்றானும் வருமுயிர்தனக்கஞ்சானால்
சிந்தையாய்த்தோன்றுஞ்சேய்க்குச் செப்பினீராறுக்குள்
சுந்தரத்துடனேஅன்னை துஞ்சிடுந்தரணிமாதோ. (கக4)

வேதமாங்கணிதமார்க்க விபரமுன்னோர்கள்சொன்ன
நீதமாம்நாலோனோடு நிட்டுரப்பவர்வந்துற்றால்
பேதமாம்பெற்றதாயும் பிறந்தவன்றிறந்துபோகும்
ஆதலால்கிரகசார மறிந்துணர்ந்தோதுவாயே. (ककரு)

சந்திரன்நாலினோனுஞ் சாரிடங்கரிவீடாக
வந்திடுமக்கோளோடு மாந்தியுங்கேதுஞ்சேரச்
சிந்தையாய்மதிக்கேழ்தன்னிற் சேர்ந்திடக்கரிபாம்பானால்
சுந்தரத்துடனேஅன்னை துஞ்சிடுமறைநாள்வந்தால். (ककசு)

சந்திரன்மால்வீடாயத் தானக்கோள்குருவோடொன்றாப்
வந்துயிர்தனக்குமுன்பின் வரச்சுபர்வீடதாக
இந்துமாவிக்குநாலோ னிலங்கிடம்மறையாதானாற்
சிந்தையுயிரேழாறிற் செத்திடுந்தாபென்றோதே. (ककள)

சந்திரன்சேய்வீடாயத் தானக்கோள்காரியில்லம்
உந்திலக்கினத்துநாலி, லுற்றிடக்கொடியோனாக
விந்தைமாதுருதன்நாதன் விளங்குயிர்தனில்வந்துற்றால்
சிந்தையாய்க்கொடிநாளன்னை செத்திடுந்தரணிமாதே. (ककஅ)

சந்திரன்சேய்வீடாயத் தானக்கோள்மறைவதாக
வந்துயிர்தனக்குநாலோன் வருமிடந்தன்வீ டானால்
விந்தையாய்த்தோன்றுஞ்சேய்க்கு விதித்தனர்பருதிவந்தால்
மைந்தன்தாய்கொல்லுமென்று வகுத்தனர்கணிதமாய்ந்தோர்.()

வேறு.

சந்திரன்மால் பொன்னவனோடோர்வீடேகித்
தரித்திடக்கேந் திரமாகிச் சுபர்நோக்கில்லா
வந்திடவே சுபர்வீடாய்த் தரிக்கப்பாம்பு
வருமுயிர்க்கு நாலாகிப் பவர்நோக்குற்றால்
சிந்தையுடன் மால்மதிபொன் துகைநாளன்னை
செத்திடுமென் றோதினர்கள் கணிதநூலோர்
புந்திமதிபொன்னவனு மறைவதாகிப்
புக்குமனை சுபமாகித் தரிக்குமாதே. (கஉ0)

மாதேகேள் பொன்னவன்றன் திசைமுற்பாதி
வருமதனிற் றாய்மரணம் வகுத்தார்நூலோர்

ஓதுமுயிர் தனிற்குருதி பருதியொன்று
யுறைந்திடவே அவன்றனக்கு நாலாந்தானம்
நீதியுடன் சுபர்வீடாய்ச் சுபர்கள்நோக்கி
நின்றிடவு மதிற்பாவர் தனிக்குமானால்
ஓதிடுஞ்சே யவன்றனக்குத் துதிகையில்லம்
உரைத்தனர்சேத் திரம்பூமி யுதவிமேலோர். (கஉக)

மேலவர்நூற் படியாக வளரும்பூமி
விளங்கிடும்பாம் பதின்திசைநா ளதிகமாகும்
தூலமுடன் மறைதிசைமுன் வருமுற்பாதி
துஞ்சிடுமே பலன்சமனு யுதவுஞ்சேய்க்குச்
சாலவே மறைதிசையில் வரும்பிற்பாதி
சார்ந்திடுஞ்சேத் திரம்பூமி பலன்மேலுண்டாம்
நீலனுட திசையதனில் வருமுற்பாதி
நேர்ந்திடும்சேத் திரம்பூமி யதிகமாமே. (கஉஉ)

அதிகமெனத் தோன்றியசேய் பலனைமேலோர்
ஆகமசாஸ் திரப்படியே அறையக்கேண்மோ
விதியுடனே பொன்மதிமா லிவர்களொன்றாய்
விளங்குமிட மீராறி லிருக்கவக்கோள்
சதிருடனே ஆட்சியுச்சந் தனிக்கமால்பொன்
சசிதனையே சுபர்நோக்கத் தரணிமீதிற்
றுதிபெறமுன் னுரைத்தபலன் வளருமாதுர்
துஞ்சிடுமே தப்பாது கணிதங்கூறே. (கஉங)

கூறுமென்ப் பொன்மதிமால் மறைந்துசேருங்
கோட்களுமே நீசபகை நட்பதாகிச்
சேருமெனப் பொன்மதிமா லிவர்கடன்னைச்
செருக்குடனே பவர்நோக்க வளருஞ்சேய்க்குச்
சாருமெனப் பாம்புதிசை முடிவிற்றுன்பம்
சமபலனே அத்திசையிற் சசிவந்துற்றால்
பாருமெனப் பொன்திசையிற் சேயினன்னை
பாழ்படும்பின் சமபலனுண் டாகுந்தானே. (கஉச)

வேறு.

நாலினோன்சேய்வீடேக நாலினிற்றீக்கோள்மேவச்
சாலவேநாலோனோடு சசிபுகர்பருதிவந்தால்

தூலமாய்வருஞ்சேயன்னை துஞ்சிடும்வயதோரொன்றிற்
பாலகன்கருமந்தன்னைப் பகர்ந்தனருதவான்மாதோ. (கஉரு)

மாதவர்மொழியால்நாலோன் வருமிடமாட்சியுச்சம்
வேதமாய்த்தனிக்குமாகில் விளங்கியசேயினன்னை
நீதமாய்வயதோரஞ்சில் நிக்ஷயமரணமென்றே
ஓதினர்கணிதநூலோ ருலகினிற்சாதகற்கே (கஉசு)

நாலினோன்பரிவீடேக நாலினிற்சசிவந்தெய்தச்
சாலவேநாலோனோடு சார்ந்திடப்பவர்வந்துற்றால்
ஏலவேமதியைப்பொன்ன னிருவிழிநோக்குமானால்
தூலமாய்மறைநாளன்னை துஞ்சிடுமருணன்வந்தால். (கஉஎ)

நாலினோன்மதிமூன்றோனும் நல்கியோர்வீடதாகிச்
சாலவேயுயிர்க்கிரண்டிற் றரித்திடச்சுபர்நோக்கில்லா
தூலமாய்நாலோன்றானுந் துணிவுடன்யாழ்வீடானால்
கோலமாய்மறைநாள்வந்தாற் கொன்றிடுந்தாயென்றோதே. ()

சந்திரனுதயமேறித் தரித்திடப்புகர்சேயோடு
வந்திடும்நாலின்கோளன் வருமிடம்மறையாதாகில்
விந்தையாய்நாலோன்றன்னை விரைவுடன்பவர்நோக்குற்றால்
சுந்தரப்படியாலன்னை துஞ்சிடும்பாம்பின்சேயில். (கஉகூ)

சந்திரன்மால்வீடாயத் தானக்கோள்சேய்வீடாகி
வந்திடவக்கோளோடு வக்கிரன்குருகேதென்றாழ்
விந்தையாயிவர்களொன்றாய் விளங்கிடமறையாதானால்
சுந்தரப்படியாலன்னை துஞ்சிடுங்கரிநாள்வந்தால். (கஙஐ)

சந்திரன்நாலோனோடு சாரிடஞ்சேய்வீடாக
வந்துயிர்தனக்குநாலில் வரும்புகர்தனிக்குமானால்
சிந்தையாய்வருஞ்சேயன்னை செத்திடுங்கணிதமாக
விந்தையாய்ப்புகர்நாட்பாதி விதித்தனர்தரணிமீதே. (கஙக)

நாலினோன்மதியோடொன்றாய் நண்ணலுமறையாதாகி
நீலனுநாலோனோடு நின்றிடச்சுபர்வீடானால்
தூலமாய்த்தோன்றுஞ்சேய்க்குத் துணிவுடனீரெட்டுள்ளாய்ப்
பாலகன்றாயைக்கொல்லப் பகர்ந்தனர்கணிதமாய்ந்தோர். ()

சந்திரன்பாம்போடொன்றாய்ச் சாரிடங்குருவீடாக
வந்துமக்கோளனோடு வக்கிரன்நாலோனொன்றாய்ச்

சிந்தையாயுயிர்க்கிராறிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குச்
சுந்தரப்படியாலன்னை துஞ்சிடும்புகர்நாள்வந்தால். (கஙஙட)

புந்திசேய்நாலோனொன்றாய்ப் பொருந்திடமுயிர்க்கிராறில்
வந்திடச்சுபர்வீடாகி மதிக்குக்கேந்திரம்வந்துற்றால்
சந்திரன்பாம்போடொன்றாய்ச் சாரிடம்மறைவதானாற்
சிந்தையாயரவிலன்னை செத்திடுமதிநாள்வந்தால். (கஙச)

மதிமகன்பருதியொன்றாய் வருமிடங்குருவீடாகச்
சதியுடன்மதிசேய்வீட்டிற் றனித்திடப்பிறந்தசேய்க்கு
விதியுடனாலோன்நாளில் விளங்கியதிசைமுற்பாதி
சதியுடன்வரும்போ தன்னை சாய்ந்திடுந்தரணிமீதே. (கஙஞ)

மதிமகன்புகர்சேய்நாலோன் வருமிடமுதயமேறிச்
சதிருடன்மதிபாம்போடு சாரிடம்புந்திவீடாய்ப்
பதிதனில்வருஞ்சேயன்னை பகர்ந்தனர்பாம்பின்காலம்
* விதுவருமபகாரத்தில் வீதலாந்தரணிமீதே (கஙசு)

இறையவனுயிர்க்குநாலி லிருந்திடவக்கோள்தானும்
விரைவுடன்புகர்மாலோடு விளங்கிடமால்வீடாகப்
பிறையுடன்பாம்புமொன்றாய்ப் பிறங்கிடமுயிர்முன்வந்தாற்
குறைவுடன்தாயைக்கொல்லக் குறித்தனர்பாம்பிற்சோமன். ()

சந்திரன்நாலோன்சேயுஞ் சாரிடஞ்சேய்வீடாக
வந்துயிர்தனக்குநாலில் வருங்கரிதனிக்குமாகிற்
சிந்தையாய்த்தோன்றுஞ்சேய்க்குச் செப்பிடுபுகர்நாட்போக்கிற்
சுந்தரத்துடனே அன்னை துஞ்சிடுந்தரணிமாதே. (கஙஅ)

சந்திரன்சேய்வீடாயத் தானக்கோள்கரிவீடாக
வந்துயிர்தனக்குநாலில் மதிமகன்தனிப்பானாகிற்
சுந்தரத்துடனே அன்னை துஞ்சிடுங்கணிதமாகச்
சிந்தையாயிருபத்தொன்றிற் செத்திடுந்தரணிமாதே. (கஙக)

மாதுருதானநாதன் வரும்பவருடனொன்றாகி
வேதமாலிக்கோளாகி விளங்கிடப்பவர்வீடாக
ஓதிடுமுயிருமாறி ஓயர்வுடன்மதிபானுற்றால்
மாதுருகருமஞ்செய்ய வகுத்தனர்மால்நாள்போக்கில். (கசஂ)

---

* விது - சந்திரன்.

நாலினோன்கிரியோடொன்றாய் நணுகிடவுயிர்க்காறுகத
தூலமாயுயிரோன்திங்கள் துணிவுடன்சேய்வீடுற்றாற்
சாலவேவருஞ்சேயன்னை சாய்ந்திடுங்கணிதமாகக்
கோலமாயீரேழுஞ்சிற் குறித்தனர்தரணிமாதோ. (கசத)

சந்திரனுயிர்க்கோளாகித் தரித்திடப்பரியோடொன்றாய்
வந்திடச்சுபர்வீடாகி வருஞ்சுபர்நோக்காதாகிற்
சிந்தையாய்நாலோனுறிற் சேர்ந்திடக்கரிநாளுற்றால்
சுந்தரத்துடனேஅன்னை துஞ்சிடுமாலோன்வந்தால் (கசஉ)

சந்திரன்நாலினோனுஞ் சாரிடம்மறைக்கோளாக
வந்துயிர்தனக்குநாலில் வருங்கரிதனிக்குமானால்
விந்தையாய்ப்புகர்நாள்வந்தால் விளங்கியதிசையிற்பாதி
வந்திடும்போதுஅன்னை மாய்ந்திடுந்தரணிமாதே. (கசங)

சந்திரன்குருவீடாய்த் தானக்கோளுதயமேற
வந்துயிர்தனக்குநாலோன் வருமிடம்மறையுமானால்
சிந்தையாய்வருஞ்சேயன்னை செத்திடுங்கணிதமாகச்
சந்திரன்திசையிற்காரி தன்னுடவபகாரத்தில். (கசச)

சந்திரன்புகர்வீடாயத் தானக்கோள்மறையோடொன்றாய்
வந்திலக்கினத்துக்கஞ்சில் வளர்ந்திடநாலோனோடு
விந்தையாய்முக்கோடன்னை விளங்கிடப்பவர்நோக்குற்றால்
சிந்தையாய்மறைநாள்வந்தாற் செத்திடுந்தாயென்றோதே. ()

ஓதிடும்நாலோன்பொன்னு முறைந்தவீடதிபன்றானும்
வேதமாய்ப்பவரோடொன்றாய் விளங்கிடவுயிர்க்காறுற்றால்
போதவேவருஞ்சேயன்னை பொன்றிடுங்கணிதமாக
ஓதினாரவுநாளி * லுயர்திசைஅபகாரத்தில். (கசசு)

சந்திரன்குருமால்நாலோன் சாருமிக்கோட்களொன்றாய்
வந்துயிர்தனக்கீராறில் வந்திடச்சுபர்வீடாக
விந்தையாயுயிர்க்குநாலில் விளங்கிடச்சுபர்வந்துற்றால்
சிந்தையாய்வருஞ்சேயன்னை செத்திடுங்குருநாட்பாதி. (கசஎ)

மதிமகன்மதிசேய்நாலோன் வருமிடங்கோட்களொன்றாய்ச்
சதியுடனுயிர்க்கீராறிற் றரித்திடநாலிற்பாம்பு

---

* உயர்திசை - சுக்கிரதிசை.

விதியுடன்தனிக்கப்பூவில் விளங்குஞ்சேயின்றவன்னை
பதிதனில்மரணங்காட்டப் பகர்ந்தனர்வயதோரொன்றில். ()

சந்திரன்நாலோன்பொன்னுஞ் சாரிடமுயிர்க்கீராறில்
வந்திடச்சுபர்நோக்கில்லா வளர்ந்திடநாலிற்பாம்பு
விந்தையாய்த்தனிக்கப்பொன்னன் விளங்குமத்திசைமுற்பாதி
சிந்தையாய்வரும்போதன்னை செத்திடுந்தரணிமாதோ. (கசகூ)

மதிமகன்மதியோடொன்றாய் வருமிடம்மறையாதாகிற்
சதியுடனுயிர்க்குநாலிற் சற்குருமாந்தியொன்றாய்
விதியுடன்மதிக்குப்பத்தில் விளங்கிடப்பிறந்தசேய்க்குப்
பதிதனில்நாற்பத்தஞ்சிற் பகர்ந்தனரன்னைநாசம். (கடு0)

சந்திரன்புகரெல்கேது சசிமகனிக்கோளொன்றாய்
வந்துயிர்தனக்கீராறில் வந்திடச்சுபர்கள்நோக்க
விந்தையாயுயிர்க்குநாலோன் விளங்கிடமறையாதானால்
சிந்தையால்வருஞ்சேயன்னை செத்திடுமுப்பத்தெட்டில். (கடுக)

சந்திரன்பருதிசுங்கன் சசிமகன்கேதோடொன்றாய்
வந்திடஞ்சுபர்வீடாகி மறைந்திடச்சுபர்கள்நோக்க
விந்தையாய்நாலோன்றானும் விளங்கிடமதிவீடேகில்
சிந்தையாய்மால்நாளன்னை செத்திடும்புகர்வந்துற்றால். (கடுஉ)

சந்திரனுயிர்க்குநாலிற் றனித்திடநாலின்கோளன்
மந்திரிபுகர்மால்காரி வருமிக்கோளுடனொன்றாகிச்
சிந்தையாயுயிர்க்கஞ்சாகிச் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
வந்திடுஞ்சேய்நாள்போக்கில் மாய்ந்திடுந்தாயென்றோதே. ()

நாலினோன்புகர்கேதோடு நணுகிடங்குருவீடாகச்
சாலவேமதிசேய்வீட்டிற் சார்ந்திடப்பவர்வந்துற்றால்
தூலமாய்வருஞ்சேயன்னை துஞ்சிடும்புகர்பிற்பாதி
போலவேநாலிற்செப்பப் புகட்டினர்கணிதமாய்ந்தோர். (கடுச)

சந்திரன்சேய்வீடாயத் தானக்கோள்புகரோடொன்றாய்
வந்துயிர்தனக்கிரண்டில் வளர்ந்திடச்சுபர்கள்நோக்க
விந்தையாய்நாலோனுச்சம் விளங்கிடத்தனிப்பானாகில்
சிந்தையாய்மதிநாள்வந்தாற் செத்திடுந்தாயென்றோதே. (கடுரு)

சந்திரன்நாலினோனுஞ் சாரிடமுயிர்க்குநாலில்
வந்திடச்சுபர்வீடாகில் வளர்ந்திடப்பவர்நோக்குற்றால்
சிந்தையாய்வருஞ்சேயன்னை செத்திடுங்கணிதமாக
முந்தியபரிநாள்வந்தால் மொழிந்தனர்தரணிமாதோ. (கருசு)

சந்திரன்கரிவீடாயத் தானக்கோளுயிர்க்குநாலில்
வந்திடச்சுபரில்லாமல் வரும்பவர்தரிக்கவக்கோள்
சிந்தையாய்ச்சுபரோடொன்றாய்ச் சேரிடமறையாதானால்
சுந்தரப்படியாலன்னை துஞ்சிடுமதிநாட்போக்கில். (கருஎ)

சந்திரன்மால்வீடாயத் தானக்கோளிரவியொன்றாய்
வந்திடவுயிர்க்குநாலில் வருமதற்குடையநாதன்
விந்தையாயுயிர்க்கெட்டாக விளங்கிடப்பிறந்தசேய்க்குச்
சிந்தையாய்க்கரிநாள்வந்தால் செத்திடுந்தாயென்றோதே. ()

மாதுருதானநாதன் மறைந்திடச்சுபர்கள்வீட்டிற்
போதவேஅட்டமத்திற் புந்தியுஞ்சசிவந்துற்றால்
வேதமாய்முப்பதுக்குள் விதித்தனர்மாதுர்நாசம்
நீதமாமதியுமுச்சம் நின்றிடத்தனிப்பானுகில். (கருகூ)

தனித்திடமதியுமெட்டிற் றரித்திடுஞ்சாதகற்கு
இனித்திடக்குருநாள்பாம்பு ஏற்றிடுங்காலந்தன்னில்
நனித்திடமனமுயர்ரி நடைபலவலைச்சல்துன்பம்
அனைத்துடனன்னைநாசம் அறைந்தனர்கணித்நூலோர். (கசுஂ)

நாலினோன்பரிவீடேக நாலினிற்றீக்கோளமேவச்
சாலவேயுயிர்க்கஞ்சான தானத்தில்மதிவந்துற்றால்
சீலமார்குமுதநண்பன் திசையிற்சேய்புத்திதன்னில்
பாலனைப்பயந்தாள்சாவு பகர்ந்தனர்தரணிமாதோ. (கசுஙு)

சந்திரன்மாலில்லாயத் தானக்கோள்புகரெல்நாலோன்
வந்திடுமிக்கோளொன்றாய் வருமிடமறையாதாகில்
சிந்தையாய்வருஞ்சேயன்னை செத்திடுங்கணிதமாக
மந்திரிதிசையிற்காரி வருமபகாரமாதே. (கசுஉ)

வேறு.

சந்திரன்பருதி நாலின்கோளுடனே தரித்திடச்சேய்புகர் வீடால், வந்திடுமக்கோள் சுபமிலாதாகில் வருமிடங்கேந்திரம் வரவே, சிந்தையாயிருபத் தாறினில்மாதா செத்திடுமென்றுரை

ப்பார்கள், விந்தையாய்மதியும் நாளின்கோள் மறைந்தால் விதித் தன ரிரண்டினிற்றுஞ்சும். (கசுங)

வேறு.

சந்திரனுங்கரிவீடாய் மறையவக்கோள்
சாருமிடம்பஞ்சமமாய் வளரநாலோன்
வந்திடவேவுடனதனிற் றனிக்கவக்கோள்
மறைந்திடவேபவர்மனையாய்ப் பவர்கள்சேர
விந்தையுடன்தோன்றியசா தகற்குமாதா
வீதல்விதித்தனர்சேய்தா னுதவான்மாதோ
சந்திரனுமாட்சியதாய் மறையுமாகில்
தாயுடன்சேய்மாய்ந்திடுவன் தரணிமீதே. (கசுஞ)

மதிமகனுங்கேந்திரமாய்க் காரியில்லம்
வந்திடவேஅதற்குடையோன் மறைந்தேஆட்சி
சதிருடனேசேய்மதியு முடனொன்றுகித்
தரித்திடவேசுபர்நோக்கத் தரணிமீதில்
துதிபெறவேபாம்புதிசை குருவிலன்னை
துஞ்சிடுமேகணிதவிதிப் படியென்றோது
விதியுடனேவுயிர்நாலோன் மறைந்துநீசம்
விளங்கிடுமால்தாய்மரணம் விளம்புமொன்றில். (கசுஙு)

சந்திரனுங்கரிவீடாய்த் தனிக்கக்காரி
சார்ந்திடவேசேயுமொன்று யுயிர்க்குநாலில்
வந்திடவேசுபர்நோக்க வளருஞ்சேய்க்கு
மாய்ந்திடுமேதாய்மரணம் மதிநாள்போக்கில்
சிந்தையுடன்கரிமதிசே யிவர்களொன்றுய்ச்
சேர்ந்திடவேயீறு தானம்வந்தால்
சுந்தரமாய்த்தோன்றியசேய் வளர்க்குமன்னை
துஞ்சிடுமென்றோர்வயதிற் றரணிமீதே. (கசுஞ)

சந்திரன்சேய்மாந்தியுட னோர்வீடேகித்
தரித்திடவேஅதற்குடையோன் சாருமில்லம்
வந்திடவேபலமாகித் தரிக்கக்காரி
மந்திரிமால்வெள்ளியுட னுயிர்க்குநாலோன்

விந்தையுடனொன்றாகி யீராறெட்டின்
மேலாறுபதினொன்றில் வளருமானால்
சிந்தையுடன்தோன்றியசேய் வளர்க்குமன்னை
செத்திடுமேசூரியநாள் முடிவில்மாதே. (கசுஎ)

மாதேகேள்சந்திரன்சேய் மாந்தியொன்றாய்
வந்திடவேவுயிர்தனக்கு மூன்றாறெட்டில்
நீதியுடன்பவர்வீடாய்ச் சுபர்கள்நோக்கி
நின்றிடவேதோன்றியசே யின்றவன்னை
ஓதிடுவன்புகர்திசைநாள் முடிவில்மாயு
முரைத்தனர்கள்தப்பாது கணிதவாய்மை
வேதன்விதிப்படியெனவே நிசமென்றோதி
விதித்தனர்சோதிடமுணர்ந்த மேலோர்தாமே. (கசுஅ)

சந்திரனும்பரிவீடாய்த் தனிக்கவக்கோள்
சசிமகன்சேய்நாலினுக்கோ ளுடனொன்றாகி
வந்திடவேமதிகேந்த்ரந் தரிக்கவிக்கோள்
வளருயிர்க்குமறையாம லிருக்குமானால்
சிந்தையுடன்றோன்றிடுஞ்சேய் வளர்க்குமன்னை
செத்திடுமேசேயவனுள் தனதில்மாதே
சந்திரனும்நீசனுமாய் மறையுமாகிற்
சாய்ந்திடுமோராண்டுதனில் மரணமன்னை. (கசுகூ)

சந்திரனுங்கேந்திரமாய்த் தனிக்கவக்கோள்
சாருயிர்கேந்திரமடையச் சுபர்கள்சேர
வந்துயிர்நாற்கோளனுமே சுபரதாகி
மறைந்திடவேமாந்திகரி யுடனொன்றாகச்
சிந்தையுடனதற்குடையோன் நீசமெய்திச்
சேர்ந்திடத்தானோர்பாவர் தனிக்குமானால்
மைந்தனுக்குநாலிரட்டி வயதுதன்னில்
மாதாவும்போதாமை மாய்வாளோதே. (கசுஉ)

ஓதுமெனக்கேந்திரத்தி லுறையுந்திங்கள்
உயிர்தனக்குமூன்றதனில் மறைந்துநீசம்
நீதியுடனோர்சுபர்கள் தனிக்கவிக்கோள்
நேர்ந்திடும்வீ டதிபனுமேநீசனோடு

போதுமெனவிலக்கினத்துக் குபயந்தன்னிற்
பொருந்திடுஞ்சேய்தனையீன்ற மாதாவுக்கு
வேதன்விதிதவறும லருணன்நாளில்
விளங்கிடுமம்புலியதனில் மரணங்காட்டும். (கஎசு)

மாந்திகரியுடன்கூடி யுயிர்க்குநாலில்
வரவிவர்களிருந்திடுங்கோ ளதிபன்றானும்
சேர்ந்தவிடமாட்சியுச்ச மாகப்பாவர்
சேரவிவருடன்கூடி யிருக்குமானால்
தோய்ந்திடுமிக்கோடனக்கு மூன்றுநெட்டிற்
றொல்மதிவந்திடுமாகி லீன்றவன்னை
மாய்ந்திடுமேபுகர்திசையில் வளரும்பாதி
வருமதியில்நாசமென வகுத்தார்மேலோர். (கஎஉ)

சந்திரன்தன்னுடன்பாம்பு மறையில்லத்திற்
சாரவேசல்லியனுஞ் சசிக்காறுகச்
சிந்தையுடன்நாலாங்கோள் பவரதாகிச்
சேரிடங்கேந்திரமாகித் தனிக்குமானால்
வந்திடுஞ்சேய்மாதுருயி ரழியுந்திங்கள்
வருந்திசைநாட்பாதியெனக் கணிதமோது
சந்திரன்றன்னுடன்பாம்பு மறையுமானாற்
சார்ந்திடுந்தாயுபயதிங்கள் தனதிற்றுஞ்சும். (கஎகூ)

நாலுடையோன்கேந்திரத்தில் நீசமேறி
நல்கிடத்தன்னுடனரவு கரிவந்தெய்தச்
சிலமுடனுபயமதில் வளருந்திங்கள்
சேரவவருடன்பவர்கள் தரிக்குமாகில்
காலன்வாழுலகமதிற் சேரவன்னை
கணக்கன்வருந்திசையதனில் வருமுற்பாதி
தூலமுடன்நாலினுக்கோ ளாட்சியுச்சம்
தோன்றிடுந்தாயோர்வயதி லழியுமென்னே. (கஎச)

என்னவேநாலாங்கோள் நீசமெய்தி
யிருந்திடுங்கோளதிபனுமே ஏகுமில்லம்
துன்னவேபவர்வீடாய் மதிக்கெட்டானாற்
றோன்றிடுந்தாயேமுடனே மூபுயந்திங்கள்

பின்னவேபொன்றுமெனக் கணிதமாய்ந்தோர்
பேசினர்கள்நாலினுக்கோ ளுபயமெய்தும்
மன்னவேஅதற்குடையோன் மறையுமானால்
மாதாவுமுபயதிங்க ளழியுமென்னே. (கஎரு)

சந்திரனும்புகர்வீடாய் மறைந்தேவுச்சம்
சாரவக்கோள்கேந்திரமா யுதயமேற
வந்துயிர்க்குநாலாங்கோள் மாந்தியோடு
வருமுயிர்க்குக்கேந்திரமாய்ப் பவர்கள்நோக்குஞ்
சிந்தையுடன்தோன்றியசேய் வளருமன்னை
செத்திடுமேநாலாங்கோள் திசைவந்துற்றால்
சுந்தரமாயுயிர்தனக்குக் கருமநாளிற்
றுஞ்சிடுமேதப்பாது கணிதமாய்ந்தோர். (கஎசு)

ஆய்ந்திடவேமதியுடனே அரவுசேர
அதற்குடையோனவர்தனக்கா றெட்டாறிற்
பாய்ந்திடவேசுபர்வீடாய்த் தனிக்கவிக்கோள்
பாருயிர்க்குநாலாங்கோள் தனக்குப்பத்திற்
றோய்ந்திடவேதோன்றிடுஞ்சேய் வளருமன்னை
துஞ்சிடுமேவஞ்சமதாய்த் தரணிமீதில்
வாய்ந்திடுநாலாங்கோளன் தனக்கொன்பானும்
வந்திடுநாளந்தமதில் வகுக்கலாமே. (கஎஎ)

நாலினுக்கோள்கேந்திரத்தி லாரல்வீட்டில்
நல்கிடமால்காரிபரி யுடனொன்றாகச்
சிலமுடனிவர்கடனக் குபயந்தன்னிற்
றிங்களுடன்மாந்தியொன்றாய்த் தரிக்குமாகிற்
கோலமதாயன்னையுயி ரழியுமென்றே
குறித்தனர்சேய் திசைபரியிற்கருமமாகும்
நாலின்கோள்கேந்திரமாய்ப் பானும்புந்தி
நல்லுயிர்க்கோள் தனைக்கூடி யிருந்தாலுந்தான். (கஎஅ)

வேறு.

நாலினிலருணன் தரித்திடவதனில் நல்கிடவோர்பவரொன்றாய்ச்
சீலமாய்க்கோள்சேரிடமுயிரோன் சேர்ந்திடமாந்தியுமதனில்
சீலனுமதியும்நெடியபாம்புடனே நின்றிடவோர்மனைமறைந்தால்
நாலனாருருக்கேகிடுமென்னை கூருதியமறைதிசைமுடிவில். (கஎகூ)

சந்திரனுயிர்க்கீராறிற் றரித்திடவாரல்சேர
வந்துயிர்நாலின்கோளன் மதிமகனுடனென்றுகிச்
சிந்தையாயுயிர்க்குநாலிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
விந்தையாய்நாசமன்னே விதித்தனரெழுநான்கொன்றில். (கஅ0)

சந்திரன்குருவீடாயத் தானக்கோள்மறைவதாக
வந்துயிர்தனக்குநாலோன் வருமனையாட்சியுச்சம்
விந்தையாயிவர்களோடு விண்மணிபுகரும்வந்தால்
சந்திரன்றிசைநாளன்னே சாய்ந்திடுமதிமுற்பாதி. (கஅக)

நாலினேன்ப்வராய்ச் சுபருடன்கூடி நல்கிடவுதயகேந்திரத்திற், சீலமாயிவர்க்கு நாலுமேழ்பத்திற் சேர்ந்திடத்திங்கள்வந்திடுகெத், தூலமாயக்கோள் மறைந்திடாதிடுகிற் றோன்றியசாதகன்றனக்கு, நீலன்வந்திடுநாளதனிலேஅன்னை நேர்ந்துயிர்விடுவளென்றுரையே. (கஅஉ)

நாலினேன்சுபனுய்க் காரிவீடதனில் நல்கிடச்சுபர்கள்நோக்கிடுமால், சீலமாய்மதியுஞ் சேயுடனென்றுய்ச் சேரிடமுயிர்பன்னேனுற்றுற், சாலவேஅரவு திசையின்முற்பாதி தன்னிலும்பாதிநாள்வரவே, பாலனைப்பயந்து வளர்த்திடுமன்னை பாழ்படுமென்றனர் மேலோர். (கஅங)

நாலினேன்மதியாய்க்கேந்திரமதனில் நல்கிடத்தனித்திடுமாகில்
சீலமாயுயிர்க்குநாலினிலரவு சேர்ந்திடப்பாவர்நோக்கிடுமாம்
சாலவேமதிக்குநாலினிற்பாவர் சார்ந்திடத்தோன்றியசேய்க்குக்
கோலமாருண்டிலன்னையினுவி குறுகியேநமபுரஞ்சாரும். (கஅச)

நாலினுக்குடையோன்நாலில் நல்கிடஆட்சியுச்சம்
சீலமாய்மறையில்லத்தே சேர்ந்திடமதிவந்தெய்தத்
தூலமாயக்கோள்மாந்தி தோன்றுயிர்தனில்வந்துற்றால்
கோலமாம்நாசமன்னே குறித்தனர்மதிநாட்கேதில். (கஅரு)

வேறு.

மதியுயிருக்குபயமதிற் றனிக்கவந்த
மதியிருந்தவீடுடையோன் மறையுமாகிற்
சதிரிலக்கினந்தனக்கு நாலின்கோளன்
சாருமனைமறைந்திடவே சுபர்வீடானல்

விதியுடனேமதிவளருந் தனக்கேழ்கோளன்.
விளங்குதிசைவருமதனிற் றநயனன்னை
துதிபெறவேமதிதனக்கு நாலிலெக்கோள்
தோன்றுமவர்நாள்பாதி மரணங்காட்டும். (௧௮௬)

சந்திரனுங்கேந்திரமா யுயிர்க்குநாலிற்
றனித்திடவேஅதற்குடையோன் சாருமில்லம்
சிந்தையுடன்பரிமனையா மலதுதிங்கள்
செப்பியகோள்வீடதனிற் பரிசேய்பாம்பு
வந்திடவேயிவர்கடனைப் பவர்கள்நோக்க
மாநிலத்தில்வருஞ்சேயை யீன்றவன்னை
விந்தையுடன்சந்திரற்கு நாலாங்கோளன்
விளங்கியநாள் திசைதனதி லழியுமென்னே. (௧௮௭)

மதியுயிர்க்குநாலதனிற் றனிக்கநாலோன்
மார்த்தாண்டன்காரிகுரு கூடியொன்றாய்
விதியுடனேவுயிர்தனக்கொன் பானிலேகி
விளங்கிடவேஒன்பதின்கோள் மதிக்குநாலிற்
சதிருடனேதனித்திடவே தநயனன்னை
சற்குருதன்திசையதனி லாரலூணில்
கதிபெறவேஅன்னியதே சத்திலேகும்
காலையிலேகாளையிவன் கருமஞ்செய்வன். (௧௮௮)

சந்திரன்பொன்கேதுடனே கரிவீடாயத்
தானக்கோளுயிரதனிற் றானேநிற்கப்
பந்துநாலாங்கோளன் மறைந்தேவுச்சம்
பண்பாகவோர்பவர்கள் தரிக்குமாகிற்
சிந்தையுடன்சுகத்தான மதனில்மாந்தி
சேர்ந்திடவேதோன்றியசே யீன்றவன்னை
மைந்தன்வயதேழதனில் மாய்வாளென்று
வகுத்தனர்களாகமநூ லாய்ந்தமேலோர். (௧௮௯)

நாலுடையோன்மறையோனு யுதயந்தன்னில்
நல்கிடவேஎக்கோட்கள் சேராதாகச்
சீலமுடன்மால்மனையில் மதிவந்தேகத்
திகழுமந்தமதியிருந்த கிரகநாதன்

தூலமுடன்புகர்பருதி யுடனென்றுகித்
தொல்கரிவீடதில்வளரத் தரிக்குமானால்
சாலவேமதிதனக்கு நாலின்கோளன்
சாருதிசைரவிம்திநாள் சாவாளன்னை. (௧௧0)

கேதுயிர்க்குநாலதனிற் றனிக்கவந்தக்
கேதிருந்தவீடதிபன் மறையகைச்
சீதமதியுடனென்றுய்க் கூடியேழிற்
சிறந்திடவேயவர்பார்க்கச் சுபர்நோக்கில்லா
நீதமுடன்நிசாகரனுக் காறின்கோளன்
நேர்திசைநாள்பாம்பவகா ரத்திலன்னை
வீதலெருமையூர்தி புரம்போமென்று
விதித்தனரவ்வாக்கியத்தைத் திரட்டிச்செப்பே. (௧௧௧)

பாம்புயிர்க்கோளுடன்சேர்ந்து மால்வீடாகிப்
பவருடனேமறைந்திடவே பவர்நோக்குற்றால்
வீம்புடனே இலக்கினத்துக் காறுன்றனும்
மிகச்சுபராய்மறையாமற் பவர்வீடானால்
தேம்பியதாய்விஷரோகம் மறைநாள்வந்தாற்
சேர்ந்திடுமோராண்டுவரை செகமேற்சேய்க்குச்
சோம்பலகிபயமரவு திசையல்லோனூண்
சொற்றனரந்தியமதனிற் சுகமிலைதுற்பலமே. (௧௧௨)

அரவுயிர்க்குநால்காகிச் சுபர்வீடாக
அக்கோளுங்குளிகனொடு பவர்வீடேக
வரவிலக்கினந்தனக்குப் பன்னென்றன்னில்
மதிதனிக்கச்சுபர்வீடாய்ப் பவர்நோக்குற்றால்
திரமுடன்தோன்றிடுஞ்சேய்க்கு மால்குருநாளன்னை
'செத்திடுமென்றோதினர்கள் தனதூண் தன்னில்
அரவுயிர்க்கஞ்சாகிடவே பவர்வீடானால்
அஞ்சிரண்டுநாலேழி லழியுமன்னை. (௧௧௩)

வேறு.

சந்திரன்மாந்தியோடு சாரிலக்கினத்திலெய்த
வந்துயிர்நாலாங்கோளன் மறைந்திடச்சுபர்வீடானால்
சிந்தையாய்வருஞ்சேயன்னை செத்திடுமிருநாலுக்குள்
சந்திரன்மறையவுச்சம் சாய்ந்திடும்வியதேழ்பத்தில். (௧௧௪)

நாலினோனுயிர்க்கீராறில் நல்கிடச்சுபர்வீடாகத்
தூலமாய்மதிபொன்கேது தோன்றிடஞ்சேய்வீடானல்
சாலவேபுகர்நாளன்னை சாய்ந்திடுமதிவந்துற்றால்
நாலினோனுதயம்வந்தால் நாலுமேழ்வயதிற்செப்பே. (௧௬௫)

சூரியனுயிர்க்குநாலிற் றோன்றிடவக்கோள்தானும்
சாரிடந்தன்வீடாகித் தரித்திடச்சுபர்வந்துற்றால்
கூறினருயிரிற்பொன்னன் குளிர்மதிகொடியோன்வந்தால்
சீருடன்வருஞ்சேயன்னை செத்திடும்பிறந்தவன்றே. (௧௬௬)

வேறு.

நாலுடையோன்கேந்திரத்தி லுச்சமேற
நண்ணிடவேதினகரனுஞ் சேய்வீடாகச்
சீலமுடனம்புலியும் புந்திவீடாய்
சேர்ந்துயிர்க்குமறையகவி மதிக்குநாலாய்த்
தாலமதில்வருஞ்சேய்க்குச் சண்டன்நாளிற்
றானே அந்தியங்கவியூ ணதனிலன்னை
காலனூரேகுவளென் றுரைத்தார்மேலோர்
கணிதநூலதுதவறு தெனவென்றோதே. (௧௬௭)

நாலுடையோன்கேந்திரத்தி லுச்சமேறி
நல்கிடவேஞ்பவர்க ளுடன்வந்தெய்தச்
சீலமுடன்வருமதியும் மால்வீடேகிச்
சேர்ந்திடவேஉயிர்தனக்கு மறைவதானல்
நீலன்வருந்திசையதுநாள் தனதுவந்தால்
நேர்ந்திடுமேகோலமுடன் வளருமன்னை
தூலமுடன்நாசமெனக் கணிதநூலோர்
சொல்லினர்களதுதவறு தெனவென்றோதே. (௧௬௮)

சந்திரனுமாந்தியுடன் மேதையில்லஞ்
சார்ந்திடக்கேந்திரம்வளரப் பவர்கள்நோக்க
வந்துயிர்க்குநாலதனிற் கரியனேக
வருமதற்குநாதனுமே வளருமில்லஞ்
சந்திரன்வீடலதுமறை வீட்டிலேகச்
சாருமவருடனொருகோள் சேருமானற்
சிந்தையுடன்வயதிருபத் தேழொன்றேழிற்
சேயதனையீன்றவன்னை சேதமாதே. (௧௬௯)

மாதெனவேசந்திரன்சே ரதிபன்றானும்
மதியுயிர்க்காறட்டமமீ ராறுதானம்
ஓதுமிறைவீடதனிற் றரிக்கவக்கோ
ளுடனரவுசேயுடனே மறையுமானால்
வேதமொழிப்படியரவு திசையிலாரல்
விளங்குமவர்நாள்முடிவில் மரணமன்னை
சோதிடநூலாய்ந்தபெரி யோர்களித்தைச்
சொல்லினர்சாஸ்திரவிதியாற் கணிதமோதே. (௨௦௦)

சந்திரனுமறையாமற் சுபர்வீடானால்
தரித்திடவேஅதற்குடையோன் சாருமில்லம்
வந்திடவேசுபரில்மா லிரவிமாந்தி
வரவுயிர்க்குநாலோனும் வருங்கோளொன்றாய்
மந்திரிதன்கேந்திரமாய் வளருஞ்சேய்க்கு
வகுத்தனர்நூற்படியாகக் கணிதமாய்ந்தோர்
சிந்தையுடனன்னையுயிர் குருமுற்பாதி
சேர்ந்திடுநாள்வரும்போது சேதமாமே. (௨௦௧)

வேறு.

சந்திரன்மாந்தியோடு சாரிலக்கினத்திலெய்த
வந்துயிர்நாலாங்கோளன் மறைந்திடச்சுபர்வீடானால்
சிந்தையாய்வருஞ்சேயன்னை செத்திடுமிருநாலுக்குள்
சந்திரன்மறையவுச்சம் சாய்ந்திடும்வயதேழ்பத்தில். (௨௦௨)

தேய்பிறைதேளிற்சேரத் தேளினோன் தன்வீடாகத்
தூயதோருயிர்க்குநாலோன் றோன்றிடப்பவரோடொன்றாய்ச்
சேயவன்றனக்கீராறிற் சேர்ந்திடச்சுபர்வீடானால்
மாயுமென்றுரைத்தாரன்னை வரும்புகர்கரிவந்துற்றால். (௨௦௩)

சந்திரன்புகரோடொன்றாய்ச் சாரிடங்கரிவீடாகில்
வந்திடச்சுபர்நோக்கில்லா மறைந்திடநாலிற்பாம்பு
விந்தையாயதற்குநாதன் விளங்கிடச்சுபர்வீடானால்
சுந்தரப்படியாலன்னை துஞ்சிடுங்குருநாட்கேதில். (௨௦௪)

புந்தியெல்நாலோனொன்றாய்ப் பொருந்திடவுதயமேறி
வந்திடவக்கோள்நாலில் வளர்ந்திடச்சுபரில்லாமற்
சிந்தையாயுயிருக்காறிற் சேர்ந்திடமதிவந்துற்றால்
சுந்தரப்படியாலன்னை துஞ்சிடுமதிநாள்முன்னில். (௨௦௫)

மாலவன்புகரோடொன்றாய் வருமிடமுயிர்க்குநாலிற்
சாலவேஅக்கோள்தானுஞ் சாரிடம்புகர்வீடாகச்
சீலமாய்க்குளிகன்வந்து சேரிடங்கரிவீடானாற்
றூலமாய்மறைநாள்ன்னை துஞ்சிடுமதிவந்துற்றால். (உ0சு)

சுந்திரன்கரிவீடாயத் தானக்கோளாட்சியுச்சம்
வந்திடப்பவரோடொன்றாய் மறைந்திடச்சுடமிலாதால்
விந்தையாய்நாலோன்றானும் விளங்கிடவுயிர்க்குமுன்பின்
சிந்தையாயிருமூன்றுள்ளே செத்திடுந்தாயென்றோதே. (உ0எ)

வேறு.

கரியுயிரில்மாந்தியுடன் புகரொன்றாகிக்
கருதுமிக்கோள்மறைதனக்கு மறையாதாகில்
வருமுயிரோன்பவனாகிப் பரிசேயொன்றாய்
வந்திடந்தானிரண்டாறு பன்னொன்றாகச்
சரியுடனேவுயிர்தனக்கு நாலிற்பொன்னன்
தனித்திடவேவருமன்னை தரணிமீதிற்
குருகிடுமீரொன்பதுவா மெனவென்றோதி
குறித்தனர்நூற்படியாகக் கணிதஞ்செப்பே. (உ0அ)

மறையவன்மாலைந்தின்கோள் புகரெல்லொன்றாய்
வந்திடக்கேந்திரமாகி யுதயந்தன்னில்
விரைவுடனேபவர்வீடாய்த் தரிக்கவந்த
விளங்கியசேயவன்றனக்குப் புதல்வராறு
முறையுடனேவருமன்னை யிருமூன்றென்று
மொழிந்தனர்நூற் படியாகத்தரணிமீதிற்
குறையுடன்மாலஞ்சின்கோள் சுபர்நோக்காரேல்
குறுகிடச்சேயிரண்டென்று நான்குமாதே. (உ0கூ)

மதியுயிர்க்குநாலதனிற் றனிக்கவக்கோள்
வருமிடம்பொன்வீடதுவா யிருக்கமாந்தி
சதியுடனேபாம்பலரி யுடனொன்றாகித்
தனித்திடவேயிவர்கள்வரு மதிபனுச்சம்
விதியுடனேயெக்கோட்கள் சேராதானால்
விளங்கியசேய்தாய்கருமமேற்கானுகுந்
துதிபெறவேநாலாங்கோள் சேருநாதன்
தோன்றுமனைநீசபகை வரினுமானால். (உக0)

வரினுமிவர்மதிகேந்த்ரந் தரிக்குமானால்
வந்திடுஞ்சேயன்னையுயி ரழியும்நாலோன்
சரியுடன்வந்திடுந்திசையில் மதியின்போக்கிற்
சாய்ந்திடுமென்றோதினர்கள் கணிதமாக
விரிகுழல்சேர்நாலாங்கோ ளலரிபாம்பு
விளங்குமிக்கோளோர்மனையா மறையுமானால்
கரிவருநாள் திங்சயதனில் மரணமன்னை
கருதுமெனவாகமநூற் றெரியச்சொல்லே. (உகக)

வேறு.

நாலினோன்கரிவீடேக நாலினிற்கரிவந்தெய்தச்
சாலவேவொன்றேழ்பத்திற் றனித்திடமதிவந்துற்றால்
றாலமாய்ப்புகர்நாளன்னை துஞ்சிடுந்தனதிலென்று
சீலமாய்க்கணிதமாய்ந்தோர் செப்பினார்வளருஞ்சேய்க்கு. ()

மந்திரிநாலோனாகி வருமிடந்தன்வீடாகச்
சந்திரனிவர்க்கேழாகித் தனித்திடப்பிறந்தசேய்க்குச்
சுந்தரத்துடனேஅன்னை துஞ்சிடுமுப்பத்தஞ்சில்
முந்தியகணிதநூலால் மொழிந்தனர்மூதோராய்ந்தே. (உகங)

ஆய்ந்திடமதியுஞ்சேரு மதிபனும்பகைநீசங்கள்
வாய்ந்திடஞ்சுபர்களும்பா வருமிருவிழியால்நோக்கச்
சாய்ந்திடம்நாலோன்றானுந் தனித்திடப்பாவர்பார்த்தால்
மாய்ந்திடுமீன்றவன்றே மாதுருகருமஞ்செய்வன். (உகச)

நாலினிற்கொடியோனேக நாலினோன்புகரோடொன்றாய்ச்
சாலவேவுயிர்க்கிரண்டிற் றரித்திடச்சுபர்வீடாகிச்
சீலமாயாரல்திங்கள் சேரிடமறையுமானால்
தூலமாய்வருஞ்சேயன்னை துஞ்சிடுமரவிற்கேதில். (உகரு)

நாலினோன்புகர்வீடேக நாலினிற்பரிமாலாகச்
சீலமாய்நாலோன்றானும் சேருந்தானத்துநாதன்
தூலமாய்மதியோடொன்றாய்த் தொடர்ந்துயிர்தனக்காறுற்றால்
கோலமில்லாமலன்னை குறித்திடுமரவின்போக்கில். (உகரு)

வேறு.

நாலுடையோன்புந்தியர வுடனொன்றாகி
நல்கிடநாலொன்பதுவாய்த் தரிக்குமாகிற்

சீலமுடன்மதியுயிரிற் றனிக்கவக்கோள்
சேரிடமீராறல்லா துபயமானால்
தூலமுடன்மதியிருக்கு மதிபன்நாளிற்
றோன்றுமரவுடனபகா ரத்திலன்னை
கோலமுடன்மங்கலத்தோ டிறக்குமென்றே
குறித்தனர்களாகமசாஸ் திரங்கற்றோரே. (௨௧௭)

நாலுடையோன்சுபராக மாந்திசேயும்
நல்கிடவேமறையன்மனை யதனிலேகச்
சீலமுடன்மதியுமுயிர்க் கேழில்நிற்கச்
சேருமதியிருந்ததிபன் மால்கேதோடு
தூலமிலக்கினந்தனக்குக் கருமந்தன்னிற்
றோன்றிடவேவுயிர்க்கதுநா லதனிற்பாவர்
தாலமதிற்றோன்றியதோர் தநயனன்னை
சாய்ந்திடுமேமதியிருந்தோன் திசையிற்பாதி. (௨௧௮)

மதியுடன்சேய்மாந்தியுமே கூடியொன்றாய்
வருமுயிருக்காறெட்டுப் பனிரண்டாகச்
சதியுடன்நாலாங்கோளன் பவரதாகிச்
சாராவிக்குபயமதிற் சார்ந்தேநிற்க
விதியுடனவ்வீட்டதிப னெவனோஅன்னோன்
விளங்குமவர்திசைதனதில் முடிவிலன்னை
கதிபெறவேகாலனூ ரேகுமென்று
கணித்தனர்கள்சோதிடநூ லாய்ந்தமேலோர். (௨௧௯)

வருமுயிர்க்குநாலதனிற் கொடியோனேக
வளருமந்தநாலாங்கோள் மாந்திமானுந்
தருமுயிருக்குபயமதிற் றரிக்கப்பாவர்
சாந்தசுபர்நோக்கிடவே சுபர்வீடாகக்
குருதியுடன்மதிகூடி மறைந்துபாவர்
கோலமனையாகிடவே வரினுமானால்
அருமறைநூற்படிவிதியாற் பாலனன்னை
யழிந்திடுமம்புலிதிசையந் தியத்திற்செப்பே. (௨௨௦)

சந்திரனும்நாலாங்கோ ளாகியேகுஞ்
சாருமனைபவர்வீடாய்த் தனிக்குமானால்
வந்திடவேமதியிருந்தோன் கரிவீடேக
வருங்கரியுமாந்தியுமே கூடிநிற்க

விந்தையுடன்மதிதனையே கரிசேய்வெய்யோன்
விளங்குவிழிப்பார்வையினால் நோக்குமானாற்
சிந்தையுடன்தோன்றியசேய் வளருமன்னை
செத்திடுமங்கலத்துடனே யிறக்குநாளே. (உஉக)

நாளெனவேமதிவீட்டோன் திசையிற்பத்தோன்
நாடிவருமபகாரப் போக்கில்மாயுஞ்
சூளுறவேதோன்றியதாய் துணைவரில்லம்
தோன்றுமதிற்சேர்ந்திடுவன் சோமன்நாளில்
வாழ்வுடனேமதிதனக்கு நாலின்கோளன்
வந்ததிசைநாள்முடிவில் மாறுமில்லந்
தாழ்வுவருதெனவிளையும் பூமியின்பஞ்
சார்ந்திடுமேவெகுபிலமென் றோதுமென்றே. (உஉஉ)

சந்திரனுங்குருவுடனே மாலின்வீட்டிற்
றரித்திடவேஅதற்குடையோன் சுபர்களோடு
சிந்தையுடனுயிர்தனக்கஞ் சதனிலேகிச்
சேர்ந்திடத்தானக்கோளைச் சுபர்கள்நோக்க
விந்தையுடன்நாலாங்கோ ளுச்சமேறி
விளங்கிடவுந்தோன்றியசேய் வரினுமன்னை
சந்திரற்குநாலதிபன் திசைவந்தேற்கிற்
சாய்ந்திடுமங்கலத்துடனே நாசங்காட்டும். (உஉங)

சந்திரனுங்குருவுடனே மால்வீடேகித்
தரித்திடவேஅதற்குடையோன் பவர்களோடு
வந்துயிர்க்குப்பஞ்சமமாய்த் தரிக்கநாலோன்
வருமுயிரினுச்சமதாய்த் தனிக்குமானால்
சிந்தையுடன்மதிதனக்கு நாலின்கோளன்
சேர்திசைநாள்மதிவரவே செகத்திலன்னை
சுந்தரமங்கலத்துடனே நாசமென்று
சொல்லினர்கள்சோதிடனூ லாய்ந்தமேலோர். (உஉச)

வருமுயிர்க்குநாலதனி லரவோனேக
வளருமந்தக்கிரகதிபன் மாலோடொன்றாய்த்
தருமுயிருக்கட்டமமாய்த் தரிக்கமுன்பின்
தனிப்பவர்வீடாகிடவே சுபர்நோக்கில்லா

பெருமுயிர்க்குநாலதிபன் றனக்குநாலிற்
பிறைவருகத்தோன்றியசேய் வரினுமன்னை
சருமுயிர்க்குச்சதுர்வீடன் றனக்குநாலோன்
சார்திசைநாள் தனதந்தி நாசங்காட்டும். (௨௨௫)

மதிமகனும்வருமுயிர்க்கு நாலோனாகி
வருமழைக்கோள்பரிதியுடன் மறைய்வந்த
விதியுடனேவிக்கோட்க ளிருந்தநாதன்
விளங்காவிக்கிரிரண்டிற் றனிக்குமானால்
சதிருடனேமறைமனையில் மதிவந்தெய்தித்
தனித்திடவேதோன்றியசே யீன்றவன்னை
அதிபதியாய்வயதிருபத் தேழ்பத்தொன்றில்
அழிந்திடுமங்கலத்துடனே அவனிமீதே. (௨௨௬)

சந்திரனுஞ்செங்கதிரோன் வீடுதன்னிற்
சாரவதற்பதிபனுமே சேருமில்லஞ்
சிந்தையுடன்சேய்மனையிற் றனிக்கநாலோன்
சேர்ந்துபுகருடன்கூடி வரினுமாகில்
விந்தையுடனுயிர்க்கதுநா லதனில்மாந்தி
விளங்கிடவேதோன்றியசே யுதவியன்னை
வந்திடுமேவயதிருபத் தெட்டுமூன்றில்
மாய்ந்துவிடுந்தப்பாது கணிதவாக்கால். (௨௨௭)

வேறு.

நாலினோன்மாலோடொன்றாய் நல்கிடமதிவீடேகச்
சீலமாய்மதிதேளேகிச் செப்பியபொன்கேதோடு
சாலவேவுயிர்க்குக்கோளன் சாரிடமறையாதானால்
தாலமீதன்னை துஞ்சும் சாமனில்மதிநாள் வந்தால். (௨௨௮)

நாலினி,ம்குருதியேக நாலினோன்மாலதாகிச்
சாலவேபரியோடொன்றாய்ச் சாரிடம்புகர்வீடுற்றால்
சீலமாமதியுமீனஞ் சேர்ந்திடமறைசேய்பார்த்தால்
கோலமில்லாமலன்னை குறுகிடும்புகர்நாள்சேயில். (௨௨௯)

ஆரனும்நாலிலேகி யமர்ந்திடநாலின்கோளன்
சீருடன்மாந்தியோடு திகழிலக்கினத்தில்நிற்கப்
பாருயிர்க்கேழிலிந்து பண்டிதனோடுசேர்ந்தால்
வாரிசூழுலகிலன்னை மாய்ந்திடும்வயதுநாலில். (௨௩௦)

மாதுருதானந்தன்னில் வந்திடப்பருதிகேது
வேதமாயத்தானத்தோன் விளங்குமம்புலியினோடு
நீதமாயுயிர்க்கீராறில் நின்றிடச்சுபர்வீடானால்
பூதலந்தன்னிலன்னை பொன்றுவள்வயதுநாலில். (உ௩௪)

வேறு.

மதிவீட்டில்மதியிருக்க அவர்முன்பின்னும்
வரும்பாவர்சேரவதிற் பாம்புகூட
முதியோனுமதிதனக்கு மறைவராகில்
முன்னுயிர்க்குநாலின்கோள் பாவராகிப்
பதிமீதிற்பாவருடன் பாவரானாற்
பாலனுக்குப்பஞ்சவய துள்ளாயேகத்
துதிபெருமாதுருவிழக்கும் நாலாங்கோளன்
தொகுத்தவகைநீசமதாற் சொல்லுமாதே. (உ௩உ)

சதுர்க்கோளன்றன்வீட்டி லிருப்பாரானால்
சாருமீராறுண்டிற் றுயைப்போக்கும்
பதிவாகப்பத்தாங்கோள் நாலாங்கோளும்
பருதிமதிபாம்புடனே ரில்லம்புக்க
மிதுனமதிற்றோன்றியிக்கோள் மறையுமாகில்
மேவுஞ்சேய்வயதுதிங்க ளீராறுள்ளே
அதிசயமாய்ப்பெற்றுவளர்த் தெடுத்தமாதா
அந்தகன்றன்னுலகமதி லாக்குங்காலே. (உ௩௩)

வேறு.

அம்புலியோர்பத்தாக வம்புலியிருந்தகோளன்
வெம்பியசனியேயாகில் விளங்குயிர்மறைவரானால்
நம்புபத்தானகோட்கு நலமிலாதிருக்குமாகில்
அம்புவிதனிலேமாதா அலைச்சலுங்கேடுமாமே. (உ௩௪)

கேடுறுமுப்பத்தஞ்சு கிளருமுன்னுபயந்தன்னுட்
டேடியமாதாதன்னை சிவபுரத்தனுப்புமென்பாய்
நாடியபொருளுங்கேடாம் நகரைவிட்டலைக்குமென்றும்
கூடியதுன்பமெய்துங் கொற்றவேற்கொடியகண்ணாய். (உ௩௫)

சந்திரன்சுபர்வீடாகச் சந்திரன்றனக்குப்பத்தில்
அந்தணனவரில்லாக வமர்ந்திடஞ்சுத்தமானால்

சந்திரனுடனேபாவர் சாரினுஞ்சாதகற்கு
வந்திடுமிருபதின்மேல் வளர்த்திடுந்தாயும்போமே. (உகூசு)

வில்லதிற்றோன்றிப்பாம்பு மேவிடவத்தானக்கோள்
எல்லியும்வியனோடேக இளமதியிருந்தவீட்டிற்
செல்லுமங்காரகன்சேர்ந் திடச்சுபரில்லாதாகில்
வல்லிகேளீரஞ்சுள்ளே மாய்த்திடுமன்னைதன்னை. (உகூஎ)

வேறு.

சூரியன்மாலுயிர்க்குநா லதனிலிருந்திடவே
சூரியன்முன்பின்மதியுஞ் சுபர்தனித்தேநிற்கில்
பாரொன்றில்மாந்தியுற வத்தானத்துடையோன்
பஞ்சமமேழதிற்பாவர் வீடதனிலிருந்தால்
நேரிடுஞ்சேய்நாற்பதுடன் மேல்மூன்றுகூட்டி
நின்றதன்மேலொருமூன்றுள் மாதுர்பிதிரெடுக்குஞ்
சேருமிதில்மூன்மாதா செத்திடுமென்றறைவாய்
சேயுயிர்க்குமறைந்திடவும் வேண்டுமெனச்செப்பே. ()

வேறு.

சந்திரன்சேய்வீடேகச் சந்திரனிருந்தவீட்டோன்
வந்துமேமறையப்பின்னும் வருமுயிர்மாந்திசேர்ந்தால்
விந்தையாமிருபத்தொன்பான் மேல்வயதஞ்சினுள்ளாய்
மந்தமாய்மகனைப்பெற்ற மாதுருக்கூனமென்றே. (உகூகூ)

என்றொருகருமமென்ன வெனிலதையியம்பக்கேளாய்
மன்றலாங்கானகத்து வழிவரும்போதன்னைக்குச்
சென்றிடுஞ்சோரராலே செவியதிலங்கவீனம்
நன்றிதைத்தவிர்க்கவேண்டில் நற்றமிழதனாற்சொல்வாம்.(உசo)

சொல்லக்கேளேழுவாரம் துர்க்கையாலயத்துக்கேகி
வல்லிபூசனைக்குத்தேன்பால் மற்றுசெவ்வந்தியாரம்
மெல்லியர்செவியைப்போல வெள்ளியாற்செய்துவைத்துத்
தல்லியைப்போற்றிசெய்யச் சகலதோஷங்கள்போமே. (உசக)

இந்துவுஞ்சேயோடேக இமகரன்பகைபெற்றாலும்
வந்தசேயுச்சமானால் வருமுயிர்க்கொருநாலாங்கோள்
சந்திரகேந்திரத்திற் சாரினும்பாம்புற்றாலும்
அந்தகனூர்க்குத்தாயை யனுப்புவன்முப்பத்தொன்றில்.(உசஉ)

வேறு.

அஞ்சினில்மதியும் நின்றிடவவற்கே ராறினிற்குருவுடன் பாம்பு, எஞ்சுலக்கினமீ ராறினிற்காரி யெய்திடச்சென்ம சுத்தம தால், வஞ்சியேகணித நூன்முறைப்படியே வருடமுமொன்றி னிற் சேய்தாய், துஞ்சிடுவாளென் றுரைத்தனர்மேலோர் தோ ன்றுதொல் லுலகமுள்வரையே. (உசரு)

கடகமதுதிக்கிலிலக்கினநாதன் கருதுபஞ்சமத்தினிற்றனித்துத் தொடர்க்வன்கனகசரீரமாமவற்குத்தோன்றுமோராறினிற்பாவர் பெடமுடனிருக்கிற்பெற்றிடுமாதைப் பேணியோரறுபதுநாளிற் சடவுடனரவுதீண்டிடுமெனவே சாற்றிடுமுதலவள் தனக்கே. ()

வேறு.

சாரவில்மீன்மிதுனகன்னி தோன்றுமானால்
தண்மதிமூன்றுறதனில் மாந்தியோடு
பாரமதியிருந்தவில்லோ னுயிர்க்கிராறிற்
பதிந்தவிடம்பவர்வீடாய் மதியோனுக்கு
நேருமுன்பின்னாரல்தனித் திருப்பானாகில்
நீழுயிரிற்சூரியன்பாம் புடனெய்தாலும்
தாரணியிற்சேய்செனித்த நாளீரெட்டுள்
தநயனும்பால்குடியாமல் மாய்ப்பான்தாயை. (உசரு)

ஆறுங்கோளோன்பான்கோள் குருவாய்நாலில்
அமரவுயிரதனிற்பாம் பிருப்பதானால்
வீறுகவட்டமத்தோன் கரியாயாரல்
விளங்கிரண்டுமூன்றிலுற வவற்குக்கேந்த்ரம்
வாறுகக்குளிகன்பின் சுத்தமில்லா
வருமவன்தாயன்னியனை விரும்புமேகம்
சீறுகமத்தியபா னத்துடையோனவன்
செப்பியதோரவன்யோக சாலியெனச்செப்பே. (உசசு)

வேறு.

கார்செரிகுழலாய்மூன்றிற் கருதியமதியுற்றாலும்
நேர்மதியிருந்தயில்லோன் நீடுசூரியனைக்கூடிச்
சேரவும்பவர்வீடாகச் சேரொருபவருற்றாலும்
ஏர்புகழுதையமாறோ டேகவுமாதுர்துஞ்சும். (உசஎ)

அம்புலிமூன்றுந்தானத் தமரமீன்மிதுனந்தோன்றில்
அம்புலிக்கடுத்தயில்லத் தரவுசேர்ந்திடுவனுகில்
அம்புலியிருந்தயில்லோ னருக்கனேடுறையுமானுல்
அம்புலியாணைபத்துவயதின்மேலன்னைநாசம். (உசஅ)

மதியுமேவுச்சமாக மாதுருதானந்தன்னிற்
சதியுடன்மாந்திநின்றுற் றுய்வழிநாசங்காட்டும்
அதிகமாமோகனுவன் அன்னையர்வழியிற்றுரம்
விதியுடன்முடிக்கவல்லன் மேலவர்மொழியென்றேதே. ()

வேறு.

மாதுர்காரகனும்பாம்புடன்கூடி வளர்ந்திடமாதுருக்கோளும்
தீதரவாறெட்டுறினிலரசர் சேர்ந்திடத்தினகரன்நீசம்
மாதுகேள்வயதீராறின்மேலேகம் வந்திடும்வயதினிலன்னை [ய்.
சாதல்நூற்படியேதுகர்த்திடுமெனவே சாற்றிடுதரணியிற்றயவா

நாலினிற்கரியுந்தனித்திடமதிக்கு நாலின்கோளிரண்டதிலி
ருக்கில், ஏலவேகருமன்புகருடனுயிரி லிருந்திடமதியுடனரவா
ய்த், தூலமாஞ்சீவன்நீசமாய்க்கரியைத் துணிவுடன்பார்த்திடு
மாகில்,கோலமாய்ப்புகர்நாள தனிலேகொடியோன் கூடிடில்மாது
ரின்கருமம். (உருக)

நாலினேன்கரியாய்மாலவன்வீட்டில் நண்ணிடச்சேயையும்
பார்க்கிற், கோலினேனுயிரோ ஞகியேமதிக்குக் கூடிடவிரவிமா
லோடு, மாலவன்றனக்கோரைந்துபத்தினிலே மதியுடன்சேய்த
னித்திடினும், தூலமாய்க்குசநாள தனிலேஅன்னை துஞ்சிடுமெ
னச்சிலர்மொழிந்தார். (உருஉ)

வேறு.

சந்திரன்மால்தொல்புகரோனேர்கிரகமுற்றுத்
தனித்திடவேசுபர்வீடாய் நாலிற்கேது
வந்துயிர்க்குக்கருமனுடன் குருவுங்கூடி
வளர்மதிக்குமூன்றினிலே தரிக்கவக்கோள்
சிந்தையுடனுயிர்தனிலே சுபர்வீடாகிச்
சேர்ந்திருக்கக்கருமமதி லரவேநின்றுல்
வந்திடுமேதாய்கரும மிதனிற்றேன்றும்
வயதுடனைம்பதுநாளாய் வகுத்தார்மேலோர். (உருரு)

வேறு.

நாலினேன்செவ்வாய்கேதுடன்குளிகன்நண்ணிடமுச்சகேந்திரமாய்க், கோலினேன்புகரு மிரவியுமஞ்சிற் குறுகிடநாலினில் மாலாய், மாலவனிருந்த வீட்டின்கோளுயிரில்வந்திடமாந்தியுஞ் சேரிற், றாலமாய்க்கருமன்திசையினிலரவு தோன்றிடில்மாதுரு கருமம். (உருச)

வேறு.

மாதுருதானத்தோனும் வளர்பிறைமாந்தியோடு
ஆதரவாயிரண்டிலமர்ந்திடப் பத்தோன்பார்க்க
ஓதியபுகர்மால்வெய்யோ னுறைந்திடம்மறைவதானால்
சாதகன்வயதீராறிற் சாய்ந்திடும்பெலமாய்மாதா. (உருரு)

மாதுருதானந்தன்னில் வந்திடமதியோன்வெய்யோன்
நீதமாயக்கோள்வாக்கில் நின்றிடக்காரிதானும்
வேதமாயுயிரில்நின்றால் விதித்தனரிருபதுக்குட்
சேதமாய்த்தாயும்போகச் செப்பினர்கணிதநூலால். (உருசு)

பொன்னவன்றன்வீடாகப் புகருமேஅதனிற்சேர
அன்னவன்றனக்கிரண்டோ னுட்சிநட்பானுற்சொல்வேன்
இன்னிலத்துடனேகோட்க ளிசைவுடன்வந்தசேய்க்கு
அன்னையர்கருமஞ்சொல்ல அரவினிற்போமென்றாரே. (உருஎ)

தேய்பிறையேழிற்சேரத் தேளினேன்பாம்போடேக
வாயிலக்கினத்துமுன்பின் மாசுணம்வரநாலோனும்
ஆயபானுவினேடேக அஞ்சினில்மாதாசாவாம்
தூய்பிறைவளருமாகிற் சொல்லுமுப்பதின்மேலஞ்சே. (உருஅ)

சந்திரன்குருவோடொன்றாய்ச் சாரிடங்காரிவீடாய்
வந்துயிர்தனக்குநாலோன் மதிமகன்பாம்போடேகி
விந்தையாயேழிலேதான் விளங்கிடப்பிறந்தசேய்க்குச்
சிந்தையாய்க்குசநாளன்னை செத்திடுங்கரிவந்துற்றால். (உருகூ)

கேதிலக்கனமாய்த்தோன்றக் கேள்வனும்ஆரல்தானுந்
தீதிலாநட்பதாகித் திரிகோணம்பெறுவதானால்
மாதுருகருமஞ்சொல்வேன் வயதொருமுப்பத்தொன்றில்
நீதமாயுரைத்தார்மேலோர் நிகரிலாதிருப்பனவன். (உகூ0)

வேறு.

பிறையுடன் கிரகம்பீதகனிருக்கப் பெலத்துடனிலக்கினந்
தன்னிற், றுறைதவறாத துற்சனன்றானுந் துணிவுடன் நின்றிடுஞ்
சேய்க்கு, மறையவர்மொழியாற் கணிதநூற்பார்த்து வகுத்தனர்
மாதுருகருமம், விரைவுடனெடுக்கு மிருபதோரிரண்டில் விளம்
பினர் தரணியின்மீதே. (உசுக)

வேறு.

அட்டமத்திற்குளிகனொடு புகருமாக
அவர்க்கிரண்டுநான்கதனிற் கொடியபாவி
திட்டமதாய்மாலருக்கன் நீசம்நட்புச்
சேர்ந்தவர்க்குப்பதினொன்றிற் பாம்புதிங்கள்
சட்டமுடனிவ்விதமாய்க் கோட்கள்நின்றால்
தனித்தனியேகணிதமொழி வகுத்தார்மேலோர்
திட்டமுடன்றாய்தந்தை கருமஞ்சொல்வேன்
திரமாகஅவன்வயது தெரிந்துசொல்லே. (உசுஉ)

சொல்மொழியாலவன்வயது பத்தேழின்மேல்
துணிவுடனேயிருபதுக்குள் துலைக்குமன்னை
வெல்விதியாலிக்கருமம் நடக்குமப்பால்
விதியுடனேஅன்னியத்திற் றாரம்வாய்க்கும்
நல்மொழியான்வஞ்சகத்தான் மக்கனமாய்ச்சொல்வன்
நாயகியாலவன்றனக்கு நாசமெனக்காட்டும்
செல்வகுணத்தனவானும் யிருப்பதுவேயாகும்
தீதில்லாப்பான்மொழிகேள் சேல்விழிபெண்ணமுதே.()

வேறு.

பத்தி னுக்குடை யோனும் பருதியுஞ்
சத்தி யேயாகிச் சார்ந்திட நீசமாய்
வித்தி யாற்கரி வீடுபா ழாகிட
மத்தி பத்துடன் மாய்வது சொல்லினோம். (உசுச)

அஞ்சி ரண்டு வயதினி லன்னையும்
வஞ்சி யற்கு வயதுமூன் றெட்டிலும்
பஞ்சி னிற்படு தீயது போலவே
விஞ்சை யாக விளையுங் கருமமே. (உசுரு)

வேறு.

ஏழினுக்குடையோன் நீசவீடதனி லிருந்திட வக்கிரகத்தோன், பாழ்புடவேழிற் பருதியும்பாம்பும் பான்மையாயிருப்பதேயானல், ஊழ்விதிப்படியாற் கணிதநூற்பார்த்தே வுரைத்தனர்பெரியவர்தானும், சூழ்விதியாலேநவின்றனர்மேலோர் சொல்லினர் மாதுருகருமம். (உசுசு)

பத்துநாலெட்டு யிருபதுஆறிற் பான்மையாய்க் கருமமே முடிப்பன், சுத்தியாயிருப்ப னிருவிதநாவன் சோதிடவகையெலாம்படிப்பன், பத்தியாயிருப்பன் பாடிடும்வாக்கன் பழமொழி வசனமு முரைப்பன், மத்திபமான வாழ்க்கையுமுடையன் மனைவியுமொன்றென வழுத்தே. (உசுஎ)

வேறு.

அட்டமத்திற்கரியிருக்கக் கேந்திரத்திற்கேது
அவ்வீட்டுக் குடையோனு மாட்சியாயிருக்க
நட்டமுடனிலக்கினத்தில் நாடிடவேபாம்பு
நவில்வீணைமாந்தியொடு தீயவனுமாகச்
சட்டமுடனதற்குடையோன் பதினொன்றிற்சாரத்
தனிப்பானுற்றுய்கருமஞ் சாற்றலாம்பத்தில்
திட்டமதாய்விதியோடு தினகரனுஞ்சேர்ந்தால்
செப்பலாங்கருமபலன் சேல்விழிமின்னுளே. (உசுஅ)

வேறு.

சந்திரன்நீசமாயத் தானத்தோன்மறைவதாக
வந்துயிர்தனக்குநாலோன் வருமிடம்மறையாதாகிற்
சிந்தையாற்புகர்நாளன்னை செத்திடுமென்றுர் நூலோர்
விந்தையத்திசைமுற்பாதி விதித்தனர்தரணிமாதோ. (உசுகூ)

மாதுருத்தானம்பாவர் வந்திடவத்தானத்தோன்
நீதமாயுயிரிற்சேர்ந்து நின்றிடஞ்சுபர்வீடாக
வேதமாய்த்தனத்தோனஞ்சோன் மேவிடஞ்சுபர்வீடானல்
சேதமாமன்னைகர்மஞ் செய்குவன்பதினேழுக்குள். (உஎ0)

மாதுருதானநாதன் வளருகேந்திரமாய்த்தோன்ற
நீதமாய்ப்புகர்மால்வெய்யோன் நின்றிடச்சுபர்வீடாக
வேதமாய்மதியுமஞ்சில் விரைவுடன்வருவதானல்
மாதுருகருமஞ்செய்வன் வகுத்தனர்மூப்பத்தெட்டில். (உஎக)

மாதுருத்தானங்கேது வந்திடவதற்குநாதன்
நீதமாயாரல்வீட்டில் நின்றிடவத்னில்வெய்யோன்
வேதமாய்மாந்தியோடு விளங்கிடமதியுஞ்சேயும்
ஓதுயிர்தனக்குமூன்றி லுயர்வுடன்வருவதாகில். (உஎஉ)

வருவதுமொழிந்தார்மேலோர் வகுத்தனரன்னைகர்மம்
இருபதுபதினெட்டானு லிசைவுடன்கருமஞ்செய்வன்
பெருமையுங்கீர்த்தியோகம் பிறங்குநற்குடும்பவாழ்வு
வருநலமிருபத்தஞ்சு வயதினில்மேன்மையாமே. (உஎங)

மதியுயிரதனிற்சேர வருமதற்குடையநாதன்
சதியுடனுயிர்க்குமூன்றிற் றரித்திடப்பாவரோடு
விதியுடன்நாலினுதன் விளங்கிடமறைவதானுல்
பதிதனிற்றுயைக்கொல்லப் பகர்ந்தனர்நாற்பத்தெட்டில். ()

எட்டுநாற்புதுவேயாக இறந்திடுந்தரணிமாதோ
திட்டமாயுயிர்க்குநாலிற் றினகரனருணனோடுஞ்
சட்டமாய்க்கரியோன்மாந்தி சாரிடம்பெலமதானுற்
றிட்டமாய்த்தாயைக்கொல்லச் செப்பினுர்கரிமுற்பாதி. (உஎரு)

வாகனத்தானத்தோனும் மந்தனுங்குருவீடாகப்
பாகமாயவற்குமூன்றிற் பாவருமிருப்பரானுல்
ஏகமாய்த்தாயிருப்ப ளிறையவன்நீசமுற்றுற்
சோகமாயிருபத்தேழிற் றொடுத்திடுமன்னைநாசம். (உஎசு)

சோமனுமுயிரிற்சேரச் சூரியன்புதல்வனோடு
நேமமாய்க்கருமத்தானம் நின்றிடநயனப்பார்வை
மாமதிகுருதியானுல் வயதுமைம்பதின்மேல்மாதா
தாமிதத்துடனேசாவாம் தனிப்பிறைதேயுமானுல். (உஎஎ)

சந்திரன்குருவீடாகத் தானக்கோள்சேய்வீடேக
வந்துயிர்நாலாங்கோளன் வரும்பரிவுடனென்றுகிச்
சிந்தையாயிரண்டில்நிற்கச் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
விந்தையாய்மதிநாளன்னை விதித்தனர்தனதிற்றுஞ்சும். (உஎஅ)

வேறு.

சந்திரனுங்கேந்திரமாய்ப் பவர்கள்வீடாய்ச்
சார்ந்திடவேஅதற்குடையோன் சாருமில்லம்

சிந்தையுடன்கேந்திரமாய்க் கரிசேய்வீடாய்ச்
சேரவுடன்பருதியும்நா லோனுமுற்றால்
விந்தையுடன்தோன்றியசேய் தனக்குமாதா
விளங்கிவருங்கருமமுமூன் றென்றதாகும்
சந்திரனுஞ்சுபர்மனையாய் மால்வீடேகித்
தரித்திடவேஅதற்குடையோன் மூன்றுறெட்டில். ()

எட்டெனவே யீராறுதானமாகி
யிருந்திடவேவுடனுயிர்க்கு நாலொன்பானுந்
திட்டமுடன்தங்கிடவே சுபர்வீடாகிச்
சேர்ந்திடவுந்தோன்றியசேய் வரினுமன்னை
சட்டமுடன்மதிதனக்கு நாலிலெக்கோள்
தரித்திடவேஅவர்திசைநா ளதனில்மேவும்
மட்டுமபகாரம்வரும் போக்கிற்சேதம்
வருங்கருமமிவன்றனக்குண் டாகுமென்னே. (உஅ0)

வேறு.

சந்திரன்புகர்வீடாயத் தானக்கோள்மறையாதாகில்
வந்துயிர்தனக்குநாலோன் வருமிடங்குருவீடாக
விந்தையாயக்கோள்தானும் விரைவுடன்பவரோடுற்றால்
சிந்தையாமுப்பத்தெட்டிற் செத்திடுந்தாயென்றோதே. (உஅக)

நாலினோன்மாலோடேகி நண்ணிடச்சுபர்வீடாகச்
சாலவேயக்கோள்தானுந் தனித்திடமறையாதாகில்
ஏலவேவுயிர்க்கொன்பானி லிருந்திடமதிவந்துற்றால்
தூலமாய்முப்பத்தஞ்சுள் துஞ்சிடுந்தாயென்றோதே. (உஅஉ)

மதிமகன்நாலோனாகி வரும்பவருடனேகூடிச்
சதியுடனுயிர்க்குப்பத்திற் றரித்திடப்பவர்கள்நோக்க
விதியுடனருணன்வீட்டில் விளங்கிடப்பிறைவந்துற்றால்
மதிவருந்திசையிலன்னை மாய்ந்திடுந்தரணிமீதே (உஅங)

நாலினோன்மால்வீடேக நாலினிற்சுபர்கள்மேவச்
சாலவேசசியும்பொன்னுந் தரித்திடமறையாதாகில்
ஏலவேகரிநாட்பொன்ன னிசைவுடனபகாரத்திற்
பாலகன்றாயைக்கொல்லப் பகர்ந்தனர்கணிதநூலோர். (உஅச)

வேறு.

சந்திரன்மால்தொல்புகரோ னோர்வீடேகித்
தரித்திடமுன்வரவுருகிற் சுபரில்லானால்
வந்துமுயிர்மாலதிலே குருதிமேவ
வருமிடமேபவர்வீடாய்ச் சுபர்நோக்காலும்
அந்தமுடன்தோன்றிவருஞ் சேயினுண்டு
அப்பிடுநாலேழினிலே அன்னைதுஞ்சும்
சந்திரன்மால்புகரோனு மோர்வீடாகச்
சாருமிடம்பவரில்மறை சாதகற்கே. (உஅநி)

சாதகன்றன்வயதொன்றோ டிரண்டிலன்னை
சாய்ந்திடுமக்கருமத்துக் குதவானின்னோன்
வேதமொழிப்படியாகக் குருதிமாலும்
வெய்யவனுஞ்சசியுமொரு சுபர்வீடுற்றால்
நீதமுடனவன்வயதொன் றதிலேமாதா
நிலையாதுமலையாது கருமஞ்செய்வன்
பூதலத்திற்சாதகற்கிப் பலனுமென்றே
புகன்றனர்சோதிடநூலாய்ந் தோர்கடானே. (உஅசு)

சந்திரனுங்கரிவீடா யுயிர்க்குநாலோன்
தானமதிற்றனித்திடவே சாருநாதன்
வந்தவிடஞ்சுபர்வீடாய் வளரப்பாம்பு
வந்திடவேவுடன்கூடி மறைக்குநாலாய்ச்
சிந்தையுடன்றோன்றிடவே வுயிர்க்குநாலோன்
சேரவுமம்புலிகேந்த்ரம் வளருமாகிற்
புந்திதிசைவருமதனில் வளருமன்னை
பொன்றிடுமேதப்பாது திசைமுற்பாதி. (உஅஎ)

சந்திரன்றன்வீடதுவாய்த் தனிக்கவந்தச்
சந்திரற்குநாலதனிற் றரிக்கப்பாவர்
வந்திடவேஅதற்குடையோன் நீசமேறி
வரவவர்தன்னுடன்கேது சேருமானால்
சிந்தையுடனுயிர்தனக்கு நாலின்நாதன்
சேரிடம்நாலொன்பதுபன் னொன்றதாகில்
விந்தையுடன்தோன்றியசேய் வளருமன்னை
விளங்குசிகியிற்பாதி யதனில்நாசம். (உஅஅ)

சந்திரனோடரவிருக்க வவற்குநாலிற்
சனியிருக்கவாட்சியினி லுயிர்க்குமூன்றாய்
வந்திலக்கினந்தனக்கு நாலிற்செவ்வாய்
மால்புக்குமாந்தியுடன் பார்க்கவந்தால்
சிந்தையுடன்குருகேது மதிக்கேழாகில்
தினகரனுமதிவீடாய்ச் செனித்தசேய்க்கு
விந்தையுடனரவுதிசை செவ்வாய்புத்தி
விளங்குநாளன்னையுயிர் விஷத்தாற்கண்டம். (உஅகூ)

வேறு.

சந்திரனுதயமேறித் தனித்திடவுதயநாதன்
புந்திவீடாகவக்கோள் புகர்பரியுடனொன்றாகிச்
சிந்தையாயுயிர்க்குநாலிற் சேர்ந்திடநாலோன்நீசம்
வந்திடவருஞ்சேயன்னை மாய்ந்திடும்பாம்புநாள்முன். (உகூ0)

சந்திரன்புகர்வீடாயத் தானக்கோளுயிரில்நீசம்
வந்திடப்பானுகேது வருமிடம்புதன்வீடேக்
விந்தையாய்நாலோன்பொன்னும் விளங்கிடநாசமானால்
சிந்தையாயரவுநாளிற் செத்திடும்புகரிற்றாயும். (உகூக)

மாதுருதானத்தோனும் வந்திடக்கரியாயேழில்
தீதுறுமரவுஞ்சோமன் சேர்ந்திடவுயிர்க்கிரண்டாய்
வாதுடன்புகருமானும் வந்திடப்பானுவோடு
சாதுவாம்புகரிற்றிங்கள் சார்ந்திடிலன்னைநாசம். (உகூஉ)

பெலமெனும்நான்கோன்பத்தோன் பேணியவேழோன்மூவர்
தலமெனுமதிவீடாயத் தானக்கோள்சேயினோடு
குலமெனுஞ்சேய்க்கிரண்டிற் கூடிடப்பிறந்தோர்க்கெல்லாம்
பலமெனுந்தாயிரண்டாய்ப் பகரலாங்கணிதநூலால். (உகூங)

வேறு.

நாலினிற்செவ்வாய்கேதுடன்தரிக்க நாலின்கோளிரவிவீடாக
ஏலவேமதியுமாலவன்வீடா யிருந்திடப்பாம்புமேபத்தில் [தாற்
தூலமாய்ச்சுடரோன்றானுமப்பத்திற்றோன்றிடக்குளிகனுந்தரித்
சாலவேநாலோன்திசையினிற்சசியே சார்ந்திடமாதுரின்கருமம்.

சந்திரன்றனக்குநாலின்கோளிரவி தன்னுடன்பஞ்சமன்கரு மன், வந்திடவுயிர்க்குப் பாக்கியமிருக்க மாதுரு தனக்குமே

பீடை, முந்தியபானு திசைதனிலாகும் மொழிந்தனர் மாதுரு வழியில், சந்திரன்திசையிற் சஞ்சலமுண்டாம் தீரணியிற்பிறந்த சேய் தனக்கே. (உகரு)

வேறு.

நாலின்கோள்சுபராகச் சுபரோடேசேர்ந்து
நண்ணிடவுமத்தானத் துக்குடையோன்சுபராய்ச்
சீலம்தாயிருந்திடுகிற் சூரியனுமுதயஞ்
சேர்ந்தபகைநீசமிலா திருந்திடுகிலவற்குப்
பாலனையமொழியாளே முப்பதின்மேலஞ்சிற்
பகர்தாயுந்தந்தையுமே ஒன்றுகவெடுக்கும்
ஏலவதிலொருவர்பகை யுறுமாகிலவற்கு
யிருந்தவரிலதன்மேலஞ் சாகுமெனவறையே. (உகசு)

வேறு.

மாதவன்றனக்குப் பத்தினேன்மாலாய் வந்திடவாக்குமூன்றதனில், தீதவன்பருதி வாக்குமுன்பின்னுற் சேர்ந்திடச்சோமனெட்டெய்தில், நாதமாய்ச்செனித்தோன் றிங்களிற்பிதாவும் நல்கிய மாதுருகருமஞ், சேதமாமெனவே வுரைத்திடட்டமத்திற் சேயிருந்திடிலவனோடாம். (உகஎ)

வேறு.

பூவையேநாலாங்கோளன் புந்தியிந்திரவியொன்றாய்த்
தாவியவுயிர்க்காறெட்டிற் றரித்திடச்சுபர்நோக்கில்லா
கூவியேவருஞ்சேயன்னை குறுகிடுங்கணிதமாக
ஏவியவயதுமுப்பத் தெட்டுமேலஞ்சுள்மாயும். (உகஅ)

மதிமகன்நாலோனாகி மதிபுகர்பதியோடொன்றாய்ச்
சதிருடனுதயந்தன்னிற் றங்கிடமறையோனோடும்
விதியுடன்றோன்றுமன்னை விதித்தனர்கணிதமாகப்
பதிதனில்வயதுமுப்பத் தொன்றுமுன்பாழாமன்னை. (உகஙு)

நாலின்கோள்மாலும் மாந்தியு மூன்றில் நண்ணிடக்குருவு மேவுயிரில், மாலவன்றனக்கு மூன்றினிற்புகராய் வந்திடிற் றாயிரண்டாகும், தூலமாயிரவி தன்னுடன்பாம்பு தோன்றவே ராகுவில்மால்நாள், ஏலவேவரினுமரவினிற்குருவு மெய்திடில்மாதுருகருமம். (ருஂ)

வேறு.

சந்திரனுமறையாமற் சுபர்வீடாகித்
தரித்திடவேவுடன்சுபர்கள் தரியாதாகில்
வந்துயிர்க்குநாலத்தனிற் பரிமாலொன்றாய்
வளர்ந்திடவேஅதற்குடையோன் மறையுமானால்
சிந்தையுடன்வருமாதா தரணிமீதிற்
செத்திடுநாள்புகர்மதிபொன் றுகையென்றேதே
சந்திரனுமறைந்திடவே சுபர்நோக்கில்லாச்
சாதகற்குவரும்வயது சதிராய்ச்செப்பே. (௫௦௧)

செப்பிடவேவரும்வயது பத்தேழெட்டிற்
சேர்ந்திடுநாட்டுகையிரட்டி வயதுள்ளாக
இப்படியிற்றோன்றிடுஞ்சேய் தனக்குமேலோர்
இயம்புமொழிமாதுருயிர் மோசமாகத்
துப்பிதழாய்சந்திரனும் நாலோனொன்றாய்த்
தோன்றுமவர்பவர்வீடாய்ப் பவர்நோக்குற்றால்
தப்பிடுமேஅன்னையுயிர்வயதே ழொன்றிற்
சாய்ந்துவிடுங்கணிதமிது தப்பாதென்னே. (௫௦௨)

வேறு.

ஏழினிற்கேது விருந்திடவந்த வேழினோன் சூரியனிடமாய்த், தாழிடமூன்று டெட்டுமீராறிற் சாருவராகிலும் வேட்டல், வாழுமீரொன்பான் வயதின்மேல் மணமும் வந்திடுந் திவ்விய மாதா, சூழவேழுப்பத் தஞ்சின்மேலாகத் துஞ்சிடுமென்றனர் மேலோர். (௫௦௩)

சந்திரன்குருவோடொன்றாய்ச் சார்ந்திடக்காரிவீடால்
வந்துயிர்தனக்குநாலோன் மாந்தியோடிருக்கச்செவ்வாய்
சிந்தையாய்ப்பார்க்கவந்த சேய்க்குமேஅன்னைகர்மம்
விந்தையாயுதவானென்று விளம்பினர்கணிதநூலோர். (௫௦௪)

வேறு.

நாலினோன்கரியாய் மதிக்குமேமறைந்து நண்ணிடக்கேது மாந்தியுமாய், ஏலவேசெவ்வா யேழதாயிந்துக் கிருந்திடக்கர்ம கேந்திரத்திற், கோலெனும்புகரோ னுயிரதாய்மதிக்குக் குறுகிட நாலினிற்றோன்றச், சீலமாய்ச்செனிக்குஞ் சாதகன் றனக்குச் சிறந்ததா யிரண்டதுவாகும். (௫௦௫)

நாலினோன்கரியா யுயிர்க்கிரண்டினிலே நண்ணிடப்பாவர் வீடாகிக், கோலெனுமுயிரிற் சேயுடனரவாய்க் குளிர்மதிகாரி வீடாக, மாலவனிரவி மதிக்குக்கேந்திரமாய் வந்திடப்பிருகுமொன்பதனில், ஏலவேஅரவு திசைதனிற்புகர்நா ளிணங்கிடில்மாதுருகருமம். (ரு0சு)

மாதுருகரும முரைத்தனர் பெரியோர் மாய்ந்திடுஞ்சுவர் விழுந்ததினால், ஏதுவாய்ப்போகும் பிதாவுடகரும மேற்பது பின்னென விசைப்பாய், கேதுவின்றிசையிற் கெடுதியாம்பலன்கள் கெணித்தனர் பெரியவர்நூலாற், சாதுவாம்புத்தி யோக்கியமாகுஞ் சனிதிசை பெலமென வுரைத்தார். (ரு0எ)

சந்திரன்நாலா மிடத்துளோன்மாலுந் தரணியிலுயிர்க்குநாலதனில், விந்தையாய்மதியு மிறையவன்வீட்டில் விளங்கியே மறைந்திடச் சுங்கன், பந்தமாம்செவ்வாய் பருதியுமொன்றாய்ப் பகர்ந்திட வஞ்சிலில்வரினுஞ், சொந்தமாயொன்பான் றிசைதனிலவனூண் சொன்னது மாதுருகருமம். (ரு0அ)

மதிதருமாலுங்காரியுமுயிர்க்கு மறைந்திடவுச்சமாயாறில் [தில்
துதிதருமுயிரோன்காரிவீடதனிற்றோன்றிடமதிக்குக்கேந்திரத்
நிதிதருலாபனரவுடன்மால்வீ டதனிலேநின்றிடவரினும்
கதிதருமதிநாள் திசைதனிற்கருமங்கணித்தனர்மாதுருதனக்கே.

நாலினோன்சேயா யுயிர்க்கிரண்டினிலே நண்ணிடப்பானுமால்புகரும், நூலமாயுயிர்க்கு நாலினிற்றோன்றச் சோமனுமாறினில்மறைந்தால், ஏலவேகுருவும் பாம்புடன்புதன்வீ டிணங்கிடிற் குருதிசையதனிற், சாலவேதாயைக் கொன்றிடுமென்று சாற்றினர்கணிதநூ லாய்ந்தோர். (ரு0)

ஆந்ததோர்பலன்கள் குருதிசையதனி லதிகமாமுயற்சியுமுடையன், சாந்தமாங்காரி நிறத்தினன்பருத்த தாட்டிகன் வயதுமூவெட்டில், வேந்தனுள்வரினுங் குழவியேதோன்றி விளங்கிட மறைந்திடுமென்று, பாந்தமாய்ப்பெரியோர் நூலினால்வகுத்த படியெனுந்தோஷத்தால் வகுத்தார். (ரு0ரு)

வேறு.

கேதிலக்கினமாய்த்தோன்றக் கெணித்தனரிரவிசோமன்
தீதிலாநாலிற்சேரத் திரிகோணமதனில்நாலோன்

வேதியனரவுமந்தன் விளங்கிடமதிக்குநாலில்
மாதுருகருமஞ்சொல்ல வகுத்தனர்முப்பத்தொன்றில். (ருகஉ)

மாதுருதானத்தோனும் மறைந்திடமதியும்நீசம்
மாதுருதானந்தன்னில் மந்தனுமரவும்பொன்னும்
மாதுருதானந்தன்னில் மாந்தியுங்கூடவாழ்ந்தால்
மாதுருதானம்நின்ற மதிகதிரதனிற்போமே. (ருகரு)

போமெனுந்தாயார்நாளிதான் புகர்திசையந்தியத்திற்
சாமென்றூலிற்சொன்னார் தப்பினுலிரவிநாளில்
ஆமெனநிக்ஷயத்தா லறைந்தனர்பலன்களெல்லாம்
க்ஷேமமாயிருக்குமென்று செப்பினர்தமிழையாய்ந்தோர். ()

சந்திரன்றனக்குநாலா மிடத்துளோன்சனியாய்வாழ
விந்தைசேர்தகரில்வெய்யோன் வேதியன்குளிகனேடு
முந்தியவுயிர்க்குநாலோன் மோசமாய்மறையவந்தாற்
றொந்தமாய்க்கதிரோன்நாளிற் றோன்றிடுமன்னைகர்மம். (ருகரு)

வேறு.

நாலவன்றனுஞ்சோமன்வீடேக நறைகொடிசேயின்வீடாக [ம்
மாலவன்வாக்கோன்மதிக்குமேமறைய வளர்குருமனையதாவரினு
சாலவன்கர்மனுயிர்மதிவீடாய்ச் சார்ந்திடநீசமுற்றிடினும் [ல்ல.
வேலவனருளாற்றோன்றிடுஞ்சேய்க்கு விதித்ததுதாய்தனைக்கொ

கொல்வனும்பத்து நாலுமூன்றினிலே குறித்ததுகணிதநூல்
முன்னே, செல்வனுங்கிலேச மாதுருவழியிற் செத்திடுமெனச்
சிலர் மொழிந்தார், நல்வனுங்குருவு முயிரையேநோக்க நாடிநற்
றமிழறிவித்தத்தாற், சொல்வதுவேறே தாய்முலையுண்டு சுகமென
வாழுவன் புவியில். (ருகஎ)

நாலினேன்மதியாய்க் காரிவீடதனில் நண்ணிடப் புகரு
டன்கருமன், ஏலவேழ்தனக்கு காரியேமதிவீ டிருந்திடநாலி
னிற்றோன்றித், தூலமாயரவு திசைதனிலன்னை துஞ்சிடுங்கரு
மமு முடிப்பன், சாலவேகுழவி தோன்றிடும்புவியிற் றரித்திடா
தெனச்சிலர் மொழிந்தார். (ருகஅ)

சந்திரன்றனக்கு நாலினேன்சேயாய்த் தரித்திடப்பாம்புமே
லாபம், விந்தைசேருயிர்க்கு நாலின்கோள்கரியாய் விளங்கிடக்
கருமனும்மாலும், சொந்தமாயொன்றிற் றோன்றிடப்பிறந்தாற்

சொல்லினேம் மாதுருகருமம், முந்தவேமதியிற் கருமனுட்பொ
சிப்பில் முடிந்திடுங் கணிதநூற்படியே. (ருகக)

நாலினேன்கரியாய் மதிக்குமேழதனில் நண்ணிடக்கருமகே
ந்திரத்திற், கோலினேனிருக்கக் குடும்பனுமறையக் குருவுமேம
திக்குநாலதனில், மாலவன்மறைந்து தனித்திடமதியும் வந்திட
லாபத்திற் கதிரோன், நூலமாய்வரினுந் துஞ்சிடுந்தாயைச்
சொல்லினர் மதிதிசையன்றி. (ருஉ0)

புதனினனரவுநாலாய்ப் பொருந்திடவன்னேன்நீசம்
கதம்பெருமதிக்குநாலாய்க் கணித்திடவுயிரில்மாந்தி
இதங்குருநோக்கநான்கை யிந்துவுமறையமாலில்
மதம்பெருபுகரிலன்னை மாய்குவள்சமனுய்வாழ்வன். (ருஉக)

நாலவன்புகருமிரண்டதிலிருக்க நாலினேனிருந்திடுங்கோளன்
மாலவன்மதியும்மூன்றினில்மருவ மந்தனுமரவுமேயாகக்
கோலமாய்க்கருமமதனிலேகுருவுங் குளிகனுங்கூடிடவுயிரில்
ஏலவேசெவ்வாயிருந்திடிலன்னை யெடுபடுமைம்பதுவயதில். ()

நாலவன்புகராய்ச்சேயுடன்மாலும்நண்ணிடக்கருமகேந்திரத்தில்
நூலமாயுயிரினுயிரின்கோள் தனிக்கச்சோமனும்நீசவங்கிசத்தில்
மாலவனுடனேவந்திடக்குருவும் மந்தன்வீடதனிலேநீசம்
ஏலவேவரினும்புகர்திசைகுருநா ளெய்திடுமென்னையின்கருமம். ()

நாலினேனுயிரில் நண்ணிடக்குருவும் நன்மதியுடன்புகர்
வீடாய்க், கோலினேன்மறையக் குசனுமேநீசங் குறுகிடக்கரியு
மேயெட்டிற், றூலமாய்மதிக்குமெட்டினிற்சிகியுந் தோன்றிடப்
பிறந்தசாதகற்கு, மாலவன்றனக்கு எட்டின்கோள்திசையில்
வந்திடுமன்னைதன் கருமம். (ருஉச)

மாதுருகருமம் வகுத்தனர்வயது வந்திடுமுப்பதோ ரெட்
டில், ஓதுவனன்னேன் றிசையினிலொன்பா னுதவிடுமதிக்கு
மேவரினும், சாதிவன்றந்தை சாய்ந்திடும்புகரிற் சாற்றினர்கணித
நூல்விதியாற், போதவேவருமென் றேதினுர்விதியைப் பொன்
னவன்றனக்குமே பத்தில். (ருஉரு)

மாதுருதானத்தோனும் மதிக்குக்கேந்திரமாய்த்தோன்ற
நீதமாய்ப்புகர்கேதோடு நின்றிடமதிக்கீராறில்

வேதமாய்மதியுமஞ்சில் விளங்கிடவருவதானால்
மாதுருகருமந்தானும் வகுத்தனர்மதிவந்துற்றால். (ருஉசு)

நாலினோன்மதியோடொன்றாய் நல்கியேமறையநாலில்
நீலனுந்தனிக்கச்சுங்கன் நின்றிடமாலினோடுந்
தூலமாய்த்தோன்றுஞ்சேய்க்குத் துணிவுடனையாறெட்டிற்
பாலகன்றாயைக்கொல்லப் பகர்ந்தனர்கணிதமாய்ந்தோர். ()

வேறு.

மதியிலக்கினத்துக் கட்டமன்கரியாய் வந்திடக்கேதுடன்
நாலிற், றுதிபெருமதிக்கு முன்பினிற்பாவர் தோன்றிடக்கரியுமே
பார்க்கிற், சதிருடனுயிர்க்கு நாலினோன்றன்னைச் சத்துருநோக்
கிடவந்தால், விதியுடனுயிரோன் திசைதனிலெட்டோன் மேவி
டிலன்னைதன்மரணம். (ருஉஅ)

நாலினிற் காரி நண்ணிடமதியும் நலமிலாநீசமாய்ப் பத்திற்,
கோலினோன்செவ்வாய் கூடிடமூன்றிற் குணமிலாப்பாம்புமே
தரிக்க, மாலவனிரவி யுயிரினில்வந்தால் வாய்த்திடும்வயதுநாலி
னுக்குள், தூலமாயன்னை துஞ்சிடுமென்று சொல்லினர் பெரி
யவர்தாமே. (ருஉகூ)

ஒன்பதுக்குடையோன் சேயுடனுச்ச முதித்திடவிரவிமால்
சேரில், இன்பமாய்ப்புகரிற் சேய்வரிற்பிதாவு மிணங்கியே மடிந்
திடும்பெலமாய், அன்பனுங்கோபி அன்னியதார மாசையிற்
பிரியமாய்த்திரிவன், நன்புதாமுண்டாம் நாரியர்பிரியன் நண்ணி
னார் தாயிரண்டாக. (ருஉ0)

நாலினில்மாலோன் மாலுடன்கேது நண்ணிடமதிக்குக்கேந்
திரமாய், மாலவன்றனக்குஎழினிலரவும் மதியுடன்கருமகேந்திர
மாய்க், கோலினிற்செவ்வாய் குறுகிடநாலைக் கொடுஞ்சனிநோக்
கிடவந்தால், ஏலவேகுருநா ளதனிலேபாவ மெய்திடில் மாதுரு
கருமம். (ருஉக)

வேறு.

கதிரவன்காரியோடு கலந்திடமூன்றோன்மாந்தி
நிதிதனமுடையோனோடு நின்றிடத்தகரில்நாலாய்
மதியுமேலாபஞ்சேர வந்திடப்பிறந்தசேய்க்குத்
துதிபெருந்தாயிரண்டாய்ச் சொல்லினர்தமிழ்வல்லோரே. ()

மதியுமேகாரிவீடாய் வந்திடவக்கோள் தானும்
விதியுடன்மால்வீடாக விளங்கிடக்குருவும்ராகும்
சதியுடனுயிரிற்சேரச் சந்திரன்றனக்குநாலோன்
கெதிபெறமூன்றிற்சேரிற் கெணித்தனரன்னைகர்மம். (ரகூ0)

அன்னையர்கருமஞ்செய்வன் ஐந்துநான்கிரண்டுதிங்கள்
பின்னையும்பிதாவின்கர்மம் பெலத்திடுமரவுநாளிற்
சொன்னதுகரிவந்துற்றுற் றோன்றிடுந்திறமதாக
நன்னயத்துடனேசொல்ல நவின்றனர்கணிதநூலால். (ரகூக)

பூவையேநாலாங்கோளன் புந்தியெல்லிந்தோடொன்றாய்த்
தாவியேவுயிர்க்காறெட்டிற் றரித்திடச்சுபர்நோக்காரேல்
கூவியேவருஞ்சேயன்னை குறுகிடுங்கணிதமாக
மேவியேவயதுமுப்பத் தெட்டுடனஞ்சில்மாயும். (ரகூஉ)

வீட்டினியல்பை விளம்பல்.

வேறு.

நாலினுக்குடையோன்நாலினிற்சுபராய்நல்கிடவீட்டினிற்சுபரும்
சீலமாயிருக்கிற்சுயகிரகத்தன் சேர்ந்திடுஞ்சதுரமாங்கிரகம்
ஏலவேபருதியதனிலேயிருக்கி லியற்றுவனிரண்டுநற்கிரகம்
தூலமாய்ப்பாம்புமாந்தியுங்கூடிற் றொடுத்திடுமன்னியகிரகம். ()

லக்கனமுதய கேந்திரமதனில் நற்சுபரிருவரு மிருக்கத்.
தக்கவனுடனே பாவருங்கூடச் சனியனும்சென்மத்தி லுறவே,
அக்கணமிவனுங் கருவரும்போதே அணுகிடும்நூதன கிரகம்,
மைக்கருங்குழலாய் பாக்கியமதனுல் வளர்ந்திடு மென்றனர்
மேலோர். (ரகூச)

வேறு.

நாலினேன் பவனுகிச் சுபரினில்லம்
நல்கிடவே வுடன்மறையுந் தரிக்கவஞ்சேழ்
நீலனுடன் மாந்தியுமாய்க் கேதொன்றுக
நின்றிடநால் தானமதாய் வளருமானுல்
சீலமுட னவர்திசையி லிரண்டாமில்லம்
திருவுடனே வாழ்ந்திருப்ப னந்தியத்திற்
றுலமதி லுற்றமனே யிரண்டும்விட்டுத்
தனியனு யயலில்லஞ் சாருவானே. (ரகூரு)

நாலினேன்மாலா யுயிரின்கோளுடனே நண்ணலுங்கரியன் வீடாகத், தூலமாய்க்காரிமறைந்திடவாட்சி தோன்றிடமோர்ப வர்தரிக்க, மாலவன்றனக்குமூன்றினில்மதியும்வக்கிரனுட்சிபெற் றிடவும், சீலமாய்வளரு முயிரின்வீட்டுடையோன் சேயவன் நா சில்வந்திடுமாம். (நகசு)

வந்திடுமன்னை வரும்வழிபெலமாய் வகுத்தனர் சேய்திசை முடியிற், சிந்தையாய்வளருங் குருதிவந்திடுமாம் செப்பியசேய வன்றனக்கு, விந்தையாயரவு திசைவருமதனில் விளங்கியபாதி யில்வளருஞ், சுந்தரவிழியா யற்பமாய்ப்பூமி தோன்றிடும்பாம்பு தன்திசையில். (நகஎ)

நாலினேன்சுபராய்ச்சுபர்கள்வீடதனில் நல்கிடச்சுபர்கள் நோக்கிடவே, சீலமாய்நாலோன்சேரும்வீட்டதிபன் சேர்ந்திட வுச்சகேந்திரமாய்ச். சாலவேயதிக பூமிக்ஷேத்திரங்கள் சார்ந்தி டுங்கிரகம் நால்பெலமாய், நாலினேன்சுபனுய் நல்கிடப்பவமாய் நாடியச்சுபர்கள் நோக்கிடதால். (நகஅ)

மனைபவமாகி வந்திடநாலோன் வளரிடம்சுபர்கள் நோக் காதால், வினையுடனதனுக்கதிபனுமறைந்து விளங்கிடப்பாவர் சேர்ந்திருக்க, அனையவன்றனக்குக்கிரகமொன்ருகும் அதுவலாற் பூமிசேத்திரங்கள், மனைவியர்வருமேல் வகுத்தனர்சமமாய் வந் திடும்வாக்கியப்படியே. (நகஙு)

வேறு.

அரவுமதி யுடன்சேர்ந்து சுபர்வீடாகி
யமர்ந்திடங்கேந் திரமாகிப் பவர்நோக்குற்ருல்
வரமுடன்மால் புகர்பூமன் மாலோனென்ருய்
வரமதிக்குக் கேந்திரமாய்ச் சுபர்வீடானுல்
திரமுடன்தோன் றிடுஞ்சேய்க்குக் கிரகமொன்று
சேர்ந்திடுமே பாம்பதனிற் றனதுபுத்தி
குருவருநாள் திசைதனதிற் கிரகமொன்று
குறித்தனர்நூற் படியாக வருமென்றேதே. (நகச0)

வேறு.

நாலினேன்பவரோடொன்ருய் நல்கியேமால்வீடாகச்
சாலவேஅக்கோளொன்பான் தானவீடதனிற்காரி

தூலமாய்மதிமால்சுங்கன் தோன்றிடமறையாதானால்
மாலவன்திசைநாள்வந்தால் வகுத்தனரிரண்டுவீடாம். (௩௪௧)

வேறு.

நாலினோன்சுபராய்ப்பவர்மனைபெலமாய் நல்கிடப்பாம்புமத்துடனே, சீலமாயுயிரோன் சேயுடனொன்றாய்ச் சேர்ந்திடவுச்சமாயிருக்கச், சாலவேபூமியதிகசேத்திரங்கள் சார்ந்திடுங்கிரகமூன்றும், சூலமாய்வளரும்பூமியேபெலமாய்த் தோன்றிடுஞ்சாதகன்பலனே. (௩௪௨)

வேறு.

மதிமகனுங் கேந்திரமாய்க் குருவீடேகி
வரும்பவர்க ளுடன்சேர்ந்து சுபரில்லாமற்
சதிருடனே சுக்கிரனுக் கிரண்டேழஞ்சிற்
றரித்திடவே மதிதனக்குப் புகர்நாலாக
விதியுடனே மறைதனக்கு நாலில்நாலோன்
விளங்கிடவே வுடன்குருதி வளருமானால்
பதிவருஞ்சேத் திரம்பூமி கிரகமூன்று
பகர்ந்தனர்நூற் படியாகக் கணிதஞ்சொல்லே. (௩௪௩)

சொல்லியதோர் புகர்திசையிற் கரிநாள்வந்தால்
தோன்றியசே யவன்றனக்கு வளரும்பூமி
அல்லல்வரும் மனக்கவலை பொருள்கள்சேதம்
அறைந்தனர்நூற் படியாகக் கணிதவாய்மை
வல்லபமாங் கரிபருதி துயரம்நீங்கும்
வளருஞ்சேத் திரம்பூமி யதிகமாகும்
செல்வமதாய் வாழ்ந்திடுவன் மனவியாலே
சேய்தனக்கு வரும்பலனைச் செப்புமாதே. (௩௪௪)

வேறு.

நாலினிற்பாம்பு குருவிருந்திடுகில் நாலினோன்சுபரதாய்ப் பருதி, மூலமாங்காலில்மாய்ந்திடத்தொகுக்கும்மூன்றுமோராறிலீராறிற், சீலமாய்ச்சுபரோடிருந்திடிற்செனித்தசேய்தன்க்கானவோராண்டிற், சாலவக்கினியாற்கிரகம்போமென்றே சாற்றினர் சாதகன்றனக்கே. (௩௪௫)

வேறு.

அல்லிருங்குழலாய்நாலி லரவுசேர்ந்திடுவதானல்
வல்லியத்தானத்தோனும் வருமிடம்மறைவதாகச்
செல்லுநற்பருதிகூடிற் செனித்தவீடதுவும்பாழாம்
சொல்லுமுப்பதின்மேலஞ்சிற் றொடுத்திடுங்கிரகமுண்டாம். ()

வேறு

இல்லுடையோனும் சுபரதாய்மற்றோ ரிணைசுப ரோடிருந்திடுகிற், சொல்லபூர்விகத்தின் கிரகமுஞ்சேய்க்குச் சொந்தமாம் நூதனமிரண்டு, அல்லல்சேர்பருதி யதிலிருந்திடுகி லாதியாங் கிரகமும்நாசம், வல்லரியிடையாய் முப்பதினைந்தில் வந்திடும் நூதனகிரகம். (௩௪௭)

வேறு.

நாலினிலாரலிருந்திடவந்த நாலினேன்சூரியன்காலிற்
றூலமாயிருக்கிலவருடன்சுபருந்தோன்றிடவுதித்தவன்றனக்குக்
காலபூர்விகத்தாலனுவளவேனுங் கருதிடாய்பூமுதற்பொருளும்
சாலசாதகனுல்வரும்பொருள்பூமிசார்ந்திடுமென்றனர்மேலோர்.

வேறு.

பாம்புடனே மாந்திசது ரத்திலேறப்
பாம்பிருந்த வீட்டோனுங் கேந்திரிக்க
நாம்புகல்வோம் அத்தானத் துபையநாதன்
நல்லசேய் சனியாதல் பருதியாதல்
வீம்புடனே வுயிர்க்குமறை யாதிருந்தால்
வீணுகுஞ் செனித்தவிடம் சுத்தப்பாழாம்
தாம்பலமா யிருபதின்மே லாகச்சேயன்
சார்ந்தில்லம் நூதனமா யெடுப்பான்தானே. (௩௪௯)

சுக்கிரன்பத் தாங்கோளா யைந்திலாகத்
தோன்றப்பா னுடன்கூடி மதிக்கேழாகத்
தக்கதென ஆரலுக்கு நாலேழ்தன்னிற்
சசிமகனுங் குருவுடனே யரவுங்கூடில்
தொக்குமெனத் தந்தையுட கிரகந்தன்னிற்
றோன்றியசே யவன்தனதிற் புகர்நாள்வந்தால்
மைக்கருங்கண் விழியணங்கே கிரகமொன்று
வளர்ந்திடுமே பூமிமண முயற்சியாகும். (௩௫௦)

வேறு.

நாலினுக்குடையோன் கேந்திரகோணம் நல்கிடவிரவியு
மரவும், கோலலக்கினத்தோன் நிலமகனுகிக் குறுகிடவஞ்சினில்
வருக, மாலவனுயிர்க்கு லாபமாய்க்குருவும் வந்திடவாட்சியாய்
வரினும், சாலவேயிரண்டோன் திசையினில்நாலோன் சார்ந்திடிற்
கிரவமும்பூமி (௩௫௧)

பூமியுந்தனமும்புகழுடன்முயற்சி பொருந்தவேமாத்தனும்
பிலமாம், தாமிலமிலாபபலன்களும்மேன்மை தங்கிடும்வரவரப்
பெருகும், காமியன்கடுத்தன் கருப்பினற்றேகங் கலந்திடுமருவு
மேயுடையன், நேமமாய்வளர்த்திசமனுடனுக நிகழ்த்தினுர்வஞ்
சகன்கோபி. (௩௫௨)

மூன்றினிற்குளிகன் தனித்திடவந்த மூன்றின்கோள்புகருட
னஞ்சிற், ருேன்றிடக்கரியும் பார்த்திடச்செவ்வாய் சுகமுடன்
காரிவீடாகில், ஊன்றிடுங்கரிநாள தனிலேசேயற் குறும்வயதிரு
பதோரேழில், ஆன்றிடுங்கிரகம்பூமியுந்தனங்க ளகன்றிடும்வேறு
வேருக. (௩௫௩)

வேறு.

நாலினேன்மதிவீடேக நாலினிற்றீக்கோள்சேரச்
சாலவேநாலோனேடு தரித்திடச்சுபரோடானல்
தூலமாய்முக்கோள் தன்னைத் துணிவுடன்பவர்நோக்குற்ருல்
ஏலவேகிரகம்பூமி யிருநிதிகாலிநாசம். (௩௫௪)

குருவுமேசேய்வீடேகக் குளிகனுமதனிற்சேர
வருமுயிர்தனக்கிரண்டில் வக்கிரன்பரிதியோடு
சுருதியாயிருப்பானுகிற் றுணிவுடன்பிறக்குஞ்சேய்க்கு
கருதினரில்லமூன்ருய்க் கணக்குடனுரைத்தார்மாதோ. (௩௫௫)

இல்லமேதோன்றுமூன்ரு மிறையவன்ருனுஞ்சுங்கன்
இல்லமேபார்வையானு லிறையவன்பகையுண்டாகும்
இல்லமேகணிதநூலோ ரினிவுடன்மறையோனுலே
இல்லமேயுரைத்தார்மேலோரிறைபகையொழியுமாதோ. (௩௫௬)

வேறு.

சுக்கிரன்நா லாங்கோளாய் நாலிலேகத்
தோன்றியமால்சூரியன்பாம்புடனென்ருகித்
தக்கதென ஆரலுக்கு மூன்ருறெட்டிற்
றரித்திடவேதோன்றியசேய் தனக்குமேலோர்

தொக்குமெனத் தந்தையராற் கிரகமொன்று
தோன்றியசே யவன்றனக்கு மதிநாள்பாம்பில்
மைக்கருங்கண் ணாரணங்கே கிரகமொன்று
வகுத்தனக ளிதுதவறு தெனவென்றோதே. (கருஎ)

சுக்கிரன்மால்மாந்தியுட னுயிர்க்கஞ்சாகித்
தோன்றிடவே அஞ்சாங்கோள் நாலின்கோளும்
தக்கதெனவுதயமதிற் பவர்களோடு
தரித்திடவேமதிதனக்கு மறையாதானால்
தொக்குமெனவுயிர்தனக்கு நாலின்கோளன்
தோன்றுதிசைநாளதனிற் புகரேபார்க்கில்
மைக்கருங்கண் ணாரமுதே மனையிரண்டு
வருங்கிரகம்வெகுபிலமாய் வரினுமாதே. (கருஅ)

சுக்கிரன்நாலாங்கோளாய் மறைந்துநீசம்
தோன்றிடவேயுடனொருகோள் தரியாதாகத்
தக்கதெனச்சுக்கிரன்சேர்ந் திடினும்நாதன்
சாருயிர்கேந்திரமதனிற் பரிசேயுற்றால்
இக்கரவுதிசைபுகரிற்கிரகம்ரெண்டு லிரண்டில்லந்தான்
இசைந்திடுமே வுடன்துணைவர்பிரிவுகாட்டும்
தொக்குமந்தக்கிரகம்வரு முதலேபூமி
தோன்றுபதிசேத்திரங்கள் பூமிசேரும். (கருகூ)

வேறு.

அறலகிசெவ்வாயாதல் அருக்கனுஞ்சனியுமாதல்
திறலொடுபகைத்துநாலாம் வீட்டினிற்சேரமுன்னாள்
குறைவிலாதிருந்தவீடு கூடுமூன்றாண்டினுள்ளே
நிறைபெருச்சாளியாலும் நேருதீயாலும்வாதை. (கசூ0)

வேறு.

சுக்கிரன்றன்வீடதுவே நாலாய்த்தோன்றிச்
சோமன்மாலிரவியுடன் மைந்தன்சேரில்
தக்குமெனப்பொன்னவனு மஞ்சிலாகச்
சாற்றினாரதற்கெட்டி லரவுவாழ்ந்தால்

தொக்குமெனலாபமதில் நின்றேன்நாளிற்
சோமன்மகன்பொசிப்பிலவன் போக்கிற்றந்தை
மைக்கருங்கண்ணாரணங்கே மனையில்நல்ல
வருங்கிரகம்வெகுபிலமாய் வளருமாதே. (ருசுக)

செப்புமெனக்களங்கன்றனக் காறின்கோளன்
சேர்திசைமுன்பாதியந்தக் கிரகம்பெண்டும்
இப்படியில்வெகுபெலமாங் கன்றுகாலி
எழில்கிரகம்பூமிதன மதிகஞ்சேரும்
துப்பிதழாய்முன்னுரைத்த திசையிற்சுங்கன்
தோன்றுமபகாரம்வரக் கிரகமொன்று
எப்படியும்நூதனமாய்ச் சேருமென்றே
இசைதானர்சோதிடமாய்ந்த மேலோரம்மா. (ருசுஉ)

வித்தையி னியல்பை விளம்பல்.

வேறு.

வெள்ளியுமாலுமொன்றாய் விளங்கிடவவரெல்வீடேல்
வள்ளல்சேர்வித்தைநல்கும் வளஞ்சுயபாஷையல்லால்
விள்ளலாம்பின்னும்வேறோர் வித்தைலக்கினத்திலானல்
உள்ளதுவாக்குநாலே ழொன்பதும்பன்னென்றேனும். (ருசுங)

வேறு.

புந்தி வாக்கிற் பொருந்திட வோர்சுபர்
வந்தி டத்திவர் வாழுமதிபனும்
புந்தி சுங்கன் பொருந்து மனையினுற்
சிந்தை யாய்லபி சேர்ந்திடும் மூன்றதே. (ருசுச)

வேறு.

வர்க்கினேன்வீட்டிற்பாவர் வந்திடவதற்குநாதன்
தீர்க்கமாயிருப்பானுகிற் றிரமுடன்வித்தையுண்டாம்
போக்குடன்மொழியவல்லன் புத்தியிலமைச்சனுகும்
வாக்கினேன்மறைவானுகில் வரும்வித்தையற்பமாகும். (ருசுரு)

வாக்கினுக்குடையோன்றானும் மறைவிலாதிருப்பானுகில்
தீர்க்கமாயுரைப்பன்யார்க்குந் திரமுடன்மொழியவல்லான்

வாக்கினேன்மறைந்துமந்தன் மாந்தியோடிருப்பானுகில்
தீர்க்கமாமொழியிலாதான் செப்பினுர்மந்தவாக்கான். (நசுசு)

வேறு.

வாக்கினுக்குடையோ னுதயகேந்திரத்தில் வந்திடப்பாவர்
கள்வீடால், தீர்க்கமாயவருக் கேழுமொன்பதனிற் றினகரன்
மால்புகர்வரினும், பர்க்கியத்ததிபன் திசைவரும்நாளிற் பகர்ந்த
னர்பிறந்திடுஞ்சேய்க்கு, வாக்கினுலுரைக்குஞ் சொல்லுமேபெரி
தாம் வந்திடும்பலவிதநூல்கள். (நசுஎ)

வேறு.

மதிமகனீருருக வாக்குத்தானத்தைப்பொன்னன்
சதியுடன்நோக்கவாக்கோன் சாரிடம்மறைவதானுல்
விதியுடன்வித்தைசேரும் விளங்குவதில்லைமாதே
மதிமகன்பிலவானுல் வரும்வித்தையதிகமாமே. (நசுஅ)

மாலவனேடிவெய்யோன் வந்திடமறைவதானுல்
பாலகன்றனக்குவித்தை பயனிலைதாணிமீது
கோலமில்லாதனுவன் கொடுவிதமொழியிலாதான்
சாலவேவித்தையேற்குந் தாணியில்மறைவதாகும். (நசுகூ)

வேறு.

மதிமகன்வாக்கினேனும் வருமிடஞ்சுபர்வீடாகச்
சதியுடனிக்கோடன்னைச் சாரவேமாந்திநோக்க
விதியுடனக்கோடானும் விளங்கிடமறைவதானுல்
பதிதனிற்பிறக்குஞ்சேய்க்குப் பகர்மொழிதெத்துமாதோ. ()

வாக்கினுக்குடையோனுச்சம் வந்திடக்கடுங்கோளோடு
தீர்க்கமாய்க்காரிவாக்கிற் சேர்ந்திடத்தனிப்பானுகில்
பாக்கியம்பூமிகீர்த்தி பதிமதிவித்தையுண்டாம்
வாக்கினேன்மறைவானுகில் வரும்பலனற்பமாகும். (நஎக)

இறையவனீருரேனு மிருந்திடங்கரியோன்வீடால்
மறையவன்கிரகந்தன்னில் மால்புகருயிரோன்வந்தால்
விரைவுடன்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனர்குருவந்துற்றுல்
குறைவிலாதிருப்பானுகுங் குடும்பத்துக்கதிகவாழ்வோன். ()

மதியொடுகடுங்கோள்வெய்யோன் வருமிடமறையாதாகில்
சதியுடனவற்கீராறிற் சசிமகன்புகர்சேயுற்றால்
விதியுடனுதிக்குஞ்சேய்க்கு விதித்தனர்வித்தையற்பம்
கெதிபெறவுரைக்கவல்லான் கெடுவிதமானவாக்கான். (௩௪௩)

மதிமகனஞ்சோனாகி வருமிடமறையாதாகில்
விதியுடனுயிர்க்கிரண்டில் விளங்கிடத்தீக்கோளானால்
பதிதனிற்பிறக்குஞ்சேய்க்குப் பகர்மொழிவஞ்சமாகும்
சதிருடன்மொழியவல்லான் சாற்றினர்கணிதமாய்ந்தோர். ()

வேறு.

மதிமகனீராறேனும் வந்திடவுயிர்க்கிரண்டில்
விதியுடனக்கோடானும் விரைவுடன்மறைவதானால்
பதிதனிற்பிறக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனரதிகவித்தை
சதியுடன்வருவதாகும் சாற்றினர்மந்தவாக்கான். (௩௭௫)

வேறு.

சிங்கலக்கனமாய்த்தோன்றித் தினகரனதனிற்சேரப்
பங்கமில்லாமலேதோர்ப் பாகனுந்தனத்திலேக
மங்களவாக்கோனாகி மந்திரமுறைகளெல்லாம்
இங்கிதமாகப்பேசு மியல்புளோன்கணிதஞ்சொல்வன். (௩௭௬)

தனத்தினில்மாந்திநிற்கச் சகலமுஞ்செலவாய்ப்போகும்
தனத்தினிற்கரியுஞ்சேரச் சஞ்சலமுடையோனவன்
தனத்தினிற்செவ்வாய்கூடத் தரணியிலதிகவாழ்வோன்
தனத்தினிற்குருவும்புக்கத் தனமென்றும்வழங்குங்கையன். ()

தனத்தினிற்பாவியோடு சற்குருவிருப்பானாகில்
வினைத்துயர்குடும்பந்தன்னால் வித்தையைமறக்கவல்லன்
மனத்தினிற்கவலையுள்ளான் வாக்குமேஅதிகமில்லான்
தனத்தினிற்குருவும்புந்தி சார்ந்துடனிருப்பானாகில். (௩௭௮)

செல்வமுமுயர்ந்தவாழ்வோன் செகமெலாம்புகழும்நாதன்
வெல்விதிப்படியாயார்க்கும் வித்தையிலதிகமாவன்
சொல்லதோயினிமையாகத் துணிவுடன்மொழியவல்லன்
வல்வினைப்பயனீதென்று வழக்கெலாந்தீர்ப்பன்மாதோ. (௩௭௯)

வேறு.

மதிமகனும் புகரவனு மொன்றாய்க்கூடி
வந்திடக்கேந் திரமாகிப் பவர்வீடாகச்
சதியுடனே வுயிர்க்கோளன் தனக்குநாலிற்
சற்குருசேய் வாக்குடையோன் தரிப்பானாகில்
விதியுடனே ஆகமசாத் திரநூலோதி
விளங்கிடுவ னிப்புவியில் மேன்மையாகக்
கெதிபெறவே வாழ்வனென வுரைத்தார்மேலோர்
கிளிமொழியே கேள்கெணித மொழிதப்பாதே. (ரு அ0)

மதிமகனும்பாம்புடனே ரில்லமாகி
வருமிடங்கேந்திரமாகிச் சுபர்வீடுற்றால்
சதியுடனேவுயிர்க்கோளன் பாவரோடு
சாருமிடஞ்சுபர்மனையாய் மறையாதாகில்
விதியுடனீரஞ்சோனும் குருவோடேகி
விளங்கிடவேமறையாமற் பவர்வீடானால்
கெதிபெறநூல்கல்விபல கற்பனென்று
கெணிதமொழிதப்பாம லுரைத்தார்மேலோர். (ரு அக)

மதிமகனும்பாம்போனுங் கூடியொன்றாய்
வருமிடங்கேந்திரமாகிப் பவர்வீடுற்றால்
சதியுடனீரஞ்சோனும் வாக்கினோனும்
சாருமனைபவராக மறைவதானால்
விதிமுறையாலாகமசாஸ் திரநூலாய்ந்தே
மேன்மையாந்தோத்திரங்கள் விரும்பிச்சொல்வன்
பதிநிதிசேத்திரமாக வளருமென்று
பகர்ந்தனர்களிருபதின்மேற் பலனென்றோதே. (ரு அஉ)

வேறு.

மாலவன்பருதியோடு வருமிடங்குருவீடாகச்
சாலவேஅவர்க்கீராறிற் சற்குருசேய்கேதானால்
பாலகன்றனக்குவித்தை பகர்ந்தனரற்பமாகும்
தூலமாயுயிரோன்வந்தால் தோன்றுங்கிரகமொன்றே. (ரு அங)

மதிமகன்வாக்கினோனும் வருமிடமோர்வீடாகிச்
சதிருடனுயிர்க்கிரண்டிற் றரித்திடவஞ்சோனுச்சம்

விதியுடன்தோன்றுஞ்சேய்க்கு விதித்தனரதிகவித்தை
கதிபெறவுரைக்கவல்லான் கணிதநூலுணர்வான்மாதோ.(ரு அச)

சந்திரனிரண்டோன்பாம்பு சாரிடம்புந்திவீடாய்
வந்திடவக்கோளஞ்சோன் வக்கிரனுதயமேறச்
சிந்தையாய்மதிக்குமூன்றிற் சேர்ந்திடக்குருவந்துற்றால்
விந்தையாய்வருஞ்சேய்வித்தை விதித்தனர்மறைவாமற்பம். ()

வேறு.

வறையவனுமிலக்கினத்துக் குபயந்தன்னில்
வரவவற்குநாதனுமே மாலினோடு
விரைவுடனேஓர்மனையில் மறையாப்புந்தி
விளங்குமுச்சமாட்சியதாய் வரினுமாகில்
அறையுமெனவருந்தனங்கள் முயற்சிசெல்வம்
ஆகமசாஸ்திரவிதிகள் கணிதவித்தை
முறையுடன்நூல்வேதாந்தம் லபிகள்நாலு
மொழிந்திடுவன்வெகுதிறவா னறிந்துபாரே. (ரு அசு)

மதிமகனுங்கேந்திரமா யாட்சியுச்சம்
வளர்ந்திடவேவுடன்புகர்பா னிவர்களொன்றாய்ச்
சதிருடனேமதிதனக்கு நாலேழ்பத்தில்
தரித்திடவேகொடியபவ ருயிர்க்கிரண்டிற்
றுதிபெறவேசுபர்நோக்கத் தனிக்கவக்கோள்
தோன்றிடவேமறையாம லாட்சியுச்சம்,
விதியுடனேதோன்றியசேய் தனக்குவித்தை
விளங்கிடுமேஆகமநூல் தெரியவல்லான். (ரு அஎ)

தெரியுமெனவாகமநூற் கணிதஞானம்
சேர்ந்திடுமேகவிமொழிக ளுணருந்தீரன்
சுரிகுழாயிரண்டோனும் பகைநீசத்திற்
றோன்றிடவேசுபர்நோக்கா வளருமானால்
சரியுடனேமுன்னுரைத்த விதிகளெல்லாஞ்
சாராதுமறைவாகுந் தரணிமீது
விரியுமெனவிவன்மொழிக ளதிகமென்று
விளம்பினர்கள் தப்பாது கணிதமாய்ந்தோர். (ரு அஅ)

வேறு.

வாக்கினேன்பவனுய்க் கேந்திரமதனில் வளர்ந்திடமதிகரியுடனே, தாக்கிடுமிக்கோள் சாமனுக்கிறிற் றரித்திடவவர்தனைச் சுபர்கள், போக்குடன்விழியால் நோக்கிடாதெனவே பொருந்திய சாதகன்றனக்குத், தீர்க்கமாய்வித்தை வந்திடாதெனவே சேர்ந்திடுஞ் சமமதாயுரையே. (௩அகூ)

வாக்கினேன்சுபராய் சுபருடனென்ருய் வருமனைசுபமதாய்ச்சுபர்கள், போக்குடன்விழியால் நோக்கிடவருணன் பொருந்துகேந் திரஞ்சுபர்வீடாய்ப், பாக்கியமதிகம் வரும்லபிநாலு பகர்ந்தனர் கெணிதசோதிடனும், வாக்கினேன்சுபராய்ப் பவருடன்பவர்கள் வருமனை தரித்திட மாலோன். (௩கூ0)

மாலவன்வளரும் வருமனைபவமாய் வந்திடமாலவன் தனையும், சீலமாய்வளரு மிரண்டினேன் தனையுஞ் செப்பியசுபர்கள் நோக்கிடுமேல், சாலவேவளருஞ சேயவன்றனக்குத் தங்கிடுஞ் சமமதாய்த் தனங்கள், பாலகன்றனக்கு அற்பமாம் வித்தை பகர்ந்தனர் கெணிதவாக்கியமாம். (௩கூக)

வேறு.

வாக்கின்கோள்கேந்திரமாய் மறையனில்லம்
வளரவக்கோள்மாந்தியுட னுதயந்தன்னில்
தீர்க்கமுடன்தரித்திடவெ அதனின்கோளன்
சேரிடங்கேந்திரம்வளர ஆட்சியுச்சம்
தாக்குமெனவுயிரதனுக் குபயஞ்சுத்தம்
சார்ந்திடுஞ்சேயவன்றனக்கு லபிநாலாகும்
பாக்கியமேநிகரில்லான் தரணிவாழ்வன்
பகருமெனவாகமசாஸ் திரங்கள்சேரும். (௩கூஉ)

சேருமெனச்சோதிடநூற் கணிதவித்தை
செப்பிடுவன்பலபொருள்வே தாந்தமாய்வன்
கூருமெனவுயிரதனுக் குபயந்தன்னிற்
கொடியபவர்தரித்திடவே குறுகுஞ்சேய்க்குச்
சாருமெனமுன்னுரைத்த விதிகளெல்லாஞ்
சார்ந்திடுவன்மறைவாகுந் தரணிதன்னில்
ஆறிருநாலிரட்டியின்மே லரசரின்பம்
அமருமதிற்பாக்கியமு முயற்சிமேலாம். (௩கூஙு)

வேறு.

மதிமகனிரண்டோனுகி வளருகேந்திரத்திலேற
விதியுடனஞ்சோன்பொன்னும் விரைவுடனுயிர்க்கஞ்சாகிச்
சதிருடன்சுபர்கள்நோக்கித் தரித்திடப்பிறந்தசேய்க்கு
மதிவிதிப்படியால்வேத வழியினிலாய்வான்மர்தோ. (௩௯௪)

வேறு.

வாக்கினிலரவு தனித்திடவாக்கோன் வருங்கரியுடன்மறை
வீடாய்த், தீர்க்கமாயதன்கோள் தினகரனுடன்மால் சேர்ந்திட
மதிக்கிவர் மறையா, பாக்கியஞ்சமமாய் வரும்பதிபூமி பகர்ந்த
னர்கணிதநூ லாய்ந்தோர், தாக்கிடும்லபிக ளேகமாய்வளருஞ்
சார்ந்திடுந் தமிழ்மொழிசேர்க்கும். (௩௯௫)

அஞ்சின்கோள்மாலு முபயக்கோள்குருவும் அமர்ந்திட
வுயிரின்கோ ளொன்றாய்த், தஞ்சமாயுயிருக் குபயபஞ்சமமாய்த்
தரித்திடச் சாதகன்றனக்கு, அஞ்சவேலபிகள் நாலெனச்சொ
ல்வ ராகமசாஸ்திரவேதம், தஞ்சமாய்வருமென் றோதினர்பெல
மாய்ச் சார்ந்திடுங்கணித சோதிடனும். (௩௯௬)

வேறு.

மதிமகனுயிரோனுகி வருமுபயத்திற்சேரத்
துதிபெறவக்கோள்மாந்தி தோன்றிடம்மறையதாக
விதியுடனதனைப்பொன்னன் விழியினுல்நோக்கவெய்யோன்
சதிருடன்மழைக்கோளோடு சாரிடமுதயமேறி. (௩௯௭)

ஏறினேன்சுபர்கள்வீடா யிருந்திடப்பிறந்தசேய்க்குச்
சீருடன்லபியிரண்டு சேர்ந்திடுங்கரியநாளில்
மாறியவுயிர்க்கோள்வந்தால் வருவதுலபிகள்மூன்று
கூறினர்கெணிதங்கேள்வி குறித்தனர்நூல்வல்லோரே. (௩௯௮)

வாக்கினுக்குடையகோளும் மழையின்கோளுடனென்றாகி,
ஏக்கமாமறையோன்வீட்டி லிருந்திடமதியுநீசம்
போக்கிலாச்சனிமால்பானு பொருந்திடஞ்சசிக்குமூன்றேல்
பாக்கியமதிகபூமி பலன்தரும்சமமாம்வித்தை. (௩௯௯)

வேறு.

மாந்திமறைசேய்புகரோ னிவர்களொன்றாய்
வருமுயிருக்குபயமதிற் றரிக்கவக்கோள்
சார்ந்திடுஞ்சேய்வீடதுவாய்த் தனிக்கமுன்பின்
தங்கிடவேபார்வக்கோள் தரிக்குமானால்
சேர்ந்திடுஞ்சேயவன் றனக்குத் தமிழ்களற்பம்
செப்பினார்சேய் தனக்கு வளரும்பூமி
வர்ய்ந்தபுகரோன்திசையி லதிகசெல்வம்
வகுத்தனர்கள்பிலமெனவே வகுக்கலாகும். (௪00)

சந்திரனுமுயிரதனுக் குபயந்தன்னிற்
றனித்திடவேஉபயதிபன் சாருமில்லம்
புந்திமனதனில்வளர மறையாதாகப்
பொருந்துபயக்கோளதனை மறையன்நோக்கச்
சிந்தையுடன்மறையவன்மா லலரியொன்றாய்ச்
சேரிடமூன்றுறெட்டுத் தானஞ்சேர
விந்தையுடனுபயதிபன் கிரகந்தன்னை
விளங்கிடவேமறைநோக்கும் விளம்புமாதே. (௪0௧)

மாதேகேள்தோன்றியசேய் தனக்குத்தானே
வருமூன்றுலபியதனிற் றமிழில்ஞானம்
நீதியுடன்மனுநூல்கள் கேள்விசெல்வம்
நிறைகுறையிலாதெனவே நிகழ்த்தலோடு
வேதமறையோர்பழக்க மதிகமாகும்
வெகுசேத்திரம்பூமி விளைவுண்டாமென்
றோதினர்கள்சோதிடநூ லாய்ந்தமேலோர்
உண்மையிதுவொண்டொடியே யுவந்துபாரே. (௪0௨)

மாந்தியுடனுபயதிப னுதயந்தன்னில்
வந்திடவேவுபயமனை சுத்தமாகத்
தோய்ந்துயிர்க்கீராறதனில் மாலோன்நீசம்
தோன்றுமிக்கோளுடன்சுபர்கள் தரிக்குமாகிற்
சார்ந்துயிருக்குபயமதை மதியைமாலைச்
சற்குருநோக்கிடுமாகிற் றரணிதன்னிற்
சேர்ந்திடுஞ்சேயவன்றனக்கு லபிமுன்சேரும்
சிந்தைகஷ்டங்கபடவஞ்ச னதிகவாழ்வோன். (௪0௩)

புந்தியுடனஞ்சின்கோ ளுயிரின்கோளும்
பொருந்துமறையோனுடனே கூடியொன்றாய்
வந்துயிருக்கஞ்சலது பத்திலானால்,
மாநிலத்தில்வருஞ்சேய்க்கு லபிகளஞ்சு
சிந்தையுடன்சோதிடநூல் சாஸ்திரங்கள்
செப்பியவேதாந்தமெல்லாம் செலுத்துவோனும்
விந்தையுடனுகமநூல் பரதவித்தை
விளங்குகவிசேர்த்திடுத லுரைசொல்மேலாம். (சுஅச)

மேலெனவேயாவருக்கு மதிகயோகன்
விளங்குமதியோனுக அமுதவாக்கன்
சீலமறையோன்றயவு அழகில்ரூபன்
சேர்சிவபூசையுமாவான் தணிந்தபேச்சன்
கோலவிழிமாதுமையாள் பாதமன்பன்
கோபமிலான்யாவர்களும் வணங்கவேண்டுந்
தூலமுடன்தூங்குசப்ர மிருந்துவாழ்வன்
துக்கமொருநாளறியாத் தோன்றல்தானே. (சுஆரு)

வேறு.

வாக்கினுக்குடையோனேழில் வந்திடமதிக்குநாலாய்த்
தாக்கியவக்கோள்மாலுஞ் சற்குருகரிபானோடு
ஆக்கமொன்பதிலேயாகில் அருமையாஞ்சேய்க்குவித்தை
தீர்க்கமாம்லபியிரண்டாய்ச் செப்பினர்கணிதமாய்ந்தோர். ()

ஆய்ந்திடிலவன்சொல்சுத்தம் அறைந்தனர்கோபியாகும்
சாந்தமாம்பாரியோடு சட்டாட்டமொழியேசொல்வன்
வாய்ந்திடுங்கணிதநூல்கள் வந்திடுந்தவருதென்றும்
பாந்தமாயறிவன்ஞானம் படித்திடுங்கலைவல்லோனே. (சுஎ)

வேறு.

வாக்கினோன்பவரா யுயிருக்கெட்டதனில் வந்திடத்தனித்திடுமாகில், தீர்க்கமாய்வாக்கோ னிருந்திடுமதிபன் செப்பியுமால் பரியுடனே, தாக்கியமாலோன் வீடதிற்சாரத் தரணியிற்பிறந்த சாதகற்கு, வாக்கியப்படியே யிருலபிதோன்றும் வருமொருலபி மறைவாமே. (சுஅ)

வேறு.

அஞ்சினேன்றனக்கீராறி லாரல்மாலுபயக்கோளன்
தஞ்சமாய்த்தரிக்கவந்த சாதகன்றனக்குவித்தை
விஞ்சையாம்ல்பிகள்மூன்று விளங்கிடுங்கொடியவஞ்சன்
வஞ்சிசேர்கிருபையுள்ளான் வாய்த்தலட்சணத்தோன்கோபி. ()

வேறு.

'வருந்துவாக்குடையோன் மதியதாய் மறையோன் வருங்கிரகத்திலேதனிக்கப்,பொருந்துமால் புகர்பான்போதுயிர்தனக்குப் பொருந்திட மாறுமெட்டானால்,' அருந்தவமொழிகள் சமமதுவல்லா லன்னியலபிவரும் நாலில், வருந்தியேவளரும் லபிதனிற்றீர்க்கம் வரும்லபி யுபயமென்றுரையே. (சகo)

வேறு

மதிமகன்பரிகேதோடு வருமிடமுயிர்க்கிரண்டாய்ச்
சதியுடனக்கோள்மாலில் சார்ந்திடக்குளிகன்வந்தால்
விதியுடன்தோன்றுஞ்சேய்க்கு விதித்தனர்கணிதவித்தை
அதிகமாயுரைக்கவல்லன் அறைந்தனர்பருதிவந்தால். (சகக)

வேறு.

மதிமகனும்பானுகுரு மதிவீடேகி
வரினுமக்கோள்மறையாமற் குருநோக்குற்றால்
துதியாரல்காரியுடன் மாந்திவாக்கோன்
தோன்றிடமேவர்வீடாய் மால்முன்வந்தால்
சதியுடன்தோன்றிடுஞ்சேய்க்கு மனுநூல்கேள்வி
சாஸ்திரங்கள்கணிதவிதி தானேகற்பன்
விதியாகவுரைக்குமொழி மறைவயதுமேலாய்
விளம்பிடுவனெனக்கணித விதிமுறைகூறிடுமே. (சகஉ)

வேறு.

வாக்கினேன்மதிபொன்னோடு வருமிடம்மறையாதாகில்
தாக்கிடுமிக்கோள்மூன்றிற் சசிமகன்புகர்பான்வந்தால்
தீர்க்கமாய்மொழியில்லாதான் செப்பிடுமந்தவாக்கான்
பாக்கியம்பூமிகீர்த்தி பதிமதிவித்தையற்பம். (சகங)

வாக்கினேனுதயமேறி வந்திடமாந்திபானு
தீர்க்கமாயக்கோளோடு சேர்ந்திடவக்கோள் தன்னைத்
தாக்கியகரிபொன்நோக்குஞ் சாதகன்றனக்குவித்தை
தீர்க்கமாயுதவாதென்று செப்பினர்கணிதமாய்ந்தோர். (சகச)

வாக்கினேன்மால்பொன்னோடு மறைந்திடச்சுபர்நோக்கில்லா
தாக்கியவக்கோளஞ்சோன் சாரிடம்மதிவீடானற்
பாக்கியவானுயார்க்கும் பகர்மொழியதிகமாவன்
போக்கிலாதுரைசொல்வஞ்சன் புகல்சமனனவித்தை. (சகரு)

வாக்கினேனுயிர்க்கீராறில் வந்திடவக்கோள் தன்னைத்
தீர்க்கமாய்மதிபொன்நோக்கத் தினகரனருணனென்ருய்த்
தாக்கியமறையோன்வீட்டிற் சார்ந்திடப்பிறந்தசேய்க்கு
வாக்கினுலுரைசொல்மேலாய் வந்திடும்லபிகளெல்லாம். (சகசு)

புந்திபான்புகரோடொன்ருய்ப் பொருந்திடமறையாதாகில்
வந்துயிர்தனக்கிரண்டோன் மறைந்திடவக்கோளாட்சி
சிந்தையாய்ப்பரியோடொன்ருய்ச் சேரிடம்மறையாதானல்
விந்தையாய்வளருஞ்சேய்க்கு விதித்தனர்சமமாம்வித்தை. ()

வேறு.

வாக்கினேன்புகராய்ப் பவருடனென்ருய் மறைந்திடமாலுக்குமுன்பின், ருக்கியவக்கோள் சசிமகனுடனே சார்ந்திடப் பொன்னன்நோக் கிடுமால், பாக்கியம்பூமி பயிர்விளைவுண்டாம் பகர்மொழி வஞ்சமென்றுரையே, வாக்கினுலுரைசொல் வகுத்தனரதிகம் வந்திடுஞ்சோதிட விதியே. (சகஅ)

வேறு.

வாக்குடையோன்வருஞ்சுபராய் மறைவீடேகி
வந்திடவேமதிக்கிவன்றன் மறையாதாகத்
தாக்குமெனவாக்குடையோன் ருேன்றுநாதன்
சசிமகன்சேயுடன்கூடி மறையாதாகித்
தீர்க்கமுடன்குடும்பமதை மறையோன்நோக்கச்
செப்புமெனத்தோன்றியசேய் மனதுவஞ்சன்
வாக்கியநூற்படிவிதியா லேகவித்தை
வரினும்வெகுதிறமெனவே தணிந்தசொல்லான். (சகக)

சொல்லுமெனவருங்கவலை யதிநற்புத்தி
தோன்றிவளர்கீர்த்தியுளான் மனதுகஷ்டன்
செல்லுதனம்வருஞ்சமமாய் வளருமின்பஞ்
சேருதனமீறுகுண மொழிசொல்லேற்கும்
வெல்லுமெனவாக்குடையோன் மறைந்துபாவர்
விளங்குமனைதனில்வளரப் பவர்கள்சேரும்
நல்லகுணம்மந்தவுரை தனத்திற்செல்லும்
நன்மனவிசொல்குழறும் பெருமையில்லான். (சஉ0)

வருமுயிருக்குபயமதிற் கரியனேக
வருமுபயோன்சொந்தமனை யதனிலேறத்
தருதுயிர்க்கோளுடன்கூட மறையஞ்சோனும்
சாருமிக்கோளுயிர்தனக்கு லாபமுற்றால்
கருதுமெனத்தோன்றியசேய் தனக்குட்புத்தி
கண்டுமனதடக்கமுள கொடியவஞ்சம்
அருமறைநூற்படிவிதியால் வருமுன்கோபம்
ஆகமசாஸ்திரவிதிக ளறியவல்லன். (சஉக)

அறியவேசோதிடநூல் பரதவித்தை
யானுஞ்செப்புமொழி யதிகசொல்லன்
தெரியவேவுபயலபி வரினுமல்ல
தீரமிலான்மனதுகஷ்டஞ் சேரும்புத்தி
விரிகுழலாய்மங்கைமயல் வீண்சொல்மேலாம்
விதித்தனரிப்படியாகக் கணிதமாய்ந்தோர்
சரியுளமுன்கோளுடனே சனிதான்சேர்ந்தால்
சாருமிந்தவகையறிவான் மறதிகாட்டும். (சஉஉ)

வாக்குடையோன்வரும்பவராய் மாலோடொன்றாய்
வருமுயிர்க்குப்பஞ்சமமாய் மறையன்நோக்கத்
தீர்க்கமுடனுபயமதிற் கொடியோனேகச்
சேர்ந்திடவேளக்கோட்கள் தரியாதானால்
பாக்கியவான்வளருதனம் பூமிகீர்த்தி
பகருலபிமூன்றுதிறம் கொடியவஞ்சன்
தாக்குமெனவெகுமன்னர் தயவுசேரும்
சாஸ்திரநூன்மிக்கறிவு தரிக்குமென்னே. (சஉங)

வேறு.

கடலினைக்கயலைக் கணையையும்வென்ற கண்படைப்புடைய
பெண்ணமுதே, புடவியிலுபயமலவனேயாகப் பொங்குசூரியன்
புதனிருக்கிற், றிடமவர்முன்பின் புகர்குருதரிக்கிற் சேய்புதன்
வித்தையுற்பனமாம், அடல்புகழ்கணிதவாகமமாய்வன் அருமை
யாங் கணக்கனென்றுரையே. (சஉச)

வேறு.

சனிவீட்டில்மால்குருவுந் தனிப்பாராயத்
தானக்கோளவர்க்குக்கேந் திரமேயானல்
சனியவற்குச்சேருமில்லம் பகையதாகித்
தனித்திருக்கவெகுவித்தை யுதவுமென்பர்
சனிவீட்டில்வேறுமொரு பாவர்சேர்ந்தாற்
சாருமவன்றனக்கதிக வுபயவித்தை
சனியவனும்நீசமதா யிருப்பானுகில்
சாஸ்திரநூலாராய்ந்தும் பயனிலாதான். (சஉடு)

வேறு.

வாக்கினில்மதியும் பரியுடன்கரியும் வந்திடவாறின்கோட்
பத்தாய், நோக்கிடவுயிரைக் குருவுமேபார்க்கில் நுணுக்கமாம்
வித்தைமூன்றுகுந், தாக்கியவளர்த்தி சமநிறம்பொதுவாந்தையப்
லர் கலவியிற்பிரியன், ஆக்கமாமரசர் தயவினல்முயற்சி யதிக
மாய் விளங்கிடுங்காணே. (சஉசு)

வேறு.

வாக்கினேன்வீட்டிற்பாவர் வந்திடவதற்குநாதன்
தீர்க்கமாயிருப்பானுகிற் றிரமுடன்மொழியவல்லன்
வாக்கினேன்புந்திமந்தன் மறைந்திடவிருப்பதானல்
தீர்க்கமாமொழியில்லாதான் திறமுடனிருப்பதாகும். (சஉஎ)

பொன்னவனிவர்கடன்னைப் பொருந்தவேநோக்குமாகில்
அன்னவனுலேவித்தை அற்பமாயிருப்பதாகும்
கன்னியாற்றனவானுவன் காரகனேழிற்சேர்ந்தால்
அன்னவளாலேசெல்வ மதிகமென்றுரைக்கலாகும். (சஉஅ)

வேறு.

வாக்குடையோன்மறைந்துபகை வீட்டிற்சேர
வாக்கினிலேஅட்டமத்தோன் மருவப்பொன்னும்
நோக்கிடவேகுருகுசனுங் கர்மகேந்த்ரம்
நுண்மையுடன்புகரோனுங் காரிகேதும்
ஆக்கமுடனட்டமத்தி லிரவிமாந்தி
அமர்ந்திடவேமூன்றிடத்தி லரவேவந்தால்
தாக்குமெனமூன்றுலபி திறமாந்தந்தை
சாதுரியன்மதுரமொழி தமிழ்க்கேவல்லன். (சஉகூ)

வல்லவனுமிவன்வருநாள் முதலேயோகம்
வரவரவேபெருகிவரும் வளர்த்தியாவன்
செல்லதினுல்அரவுதிசை யதனில்நல்ல
சீவனமாம்முயற்சியுடன் திருந்தக்கேள்வி
சொல்லதிலேபடபடப்பாய்ப் பேசவல்லன்
சோம்பல்வஞ்சமில்லாதான் பின்னிற்சாது
அல்லலிலான்காமியனு மழகில்தேகம்
அனுசரிக்குங்கறப்புடனே அமைச்சனுவன். (சஙூ0)

வேறு.

மகரலக்கனத்திற் கொடியவன்செவ்வாய் மாந்தியுமுயிரின் கோள்மறையா, தகரினிற்புதனுந் தரித்திடச்சுக்கன் சார்ந்திடும்ருக்கனுமாட்சி, நிகரிலாக்குருவு மரவுடனேழில் நின்றிடச் சோமனும்நீசம், பகர்வதுநல்லன் வித்தையும்புத்தி பண்புடன் கோபியுமாவன். (சஙூக)

வித்தையிற்சமர்த்தன் வேந்தற்குப்பிரியன் மேதினிதன்னிலேதருமன், உத்தமனில்லான் போகமேஅதிக முலகினிற்கீர்த்திமானுவன், மத்திபன்பூமி கிரகவாகனமும் வாய்த்திடும்நாற்பத்தேழதனிற், சத்தியன்பொய்யன் சாதகன்வளர்த்தி சமனெனும் பொதுநிறமாவன். (சஙூஉ)

வாக்கினில்மதியும்நீசனுயிருக்க வாழ்வுடனக்கிரகத்தோன், நீர்க்கமாய்நட்பு பகையதாயிருந்தால் தீதிலாமொழிகளேப்பகர்வன், ஆக்கமேயெவர்க்கும் நிகரிலானுவ னவருடனுட்சியாயிருந்தால், தாக்கினேன்வாக்குத் தொனியுமேஅற்பம் சாற்றினுர்கெணிதநூல்விதியால். (சஙூங

மேடமாய்த்தோன்றி யிலக்கனமுதிப்ப விளங்கியகுருமதி வெய்யோன், வாடவேசிங்கங் கன்னிமீனத்தில் வளருகேந்திரத் திலேயிருந்தால், பாடவேவருகுங் கெணிதநூல்முதலாய்ப் பல வகைத் தொழில்களுமவற்கு, நாடினாலொன்று பழுதெனப்போ கா நல்லவனாகவேயிருப்பன். (சகூச)

வாக்குத்தானத்தோன் கொடியலன்செவ்வாய் வருமிடம் உச்சநட்பாகத், தீர்க்கமாயிருந்தாற் கொடியசொல்லுரைப்பான் தீயவன்போலவே யிருப்பான், போக்கிலானவன் புனிதவேளு டையான் புத்தியிலதிகமாமென்றே, தாக்கினாரென்று கணித நூல்வகையைச் சாற்றினர் பெரியவர்தானும். (சகூரு)

இப்படியோகம் வருமெனவுரைத்தா ரிதற்குமேற்றிசைபிரி யதனால், தப்பிலாத்தார மொழியுமேகருமன் றானுமேதபோத னர்போல, அப்படியிருந்து வெகுதலம்பார்த்து அருணைமாநதி யிலேயடைவன், தப்புவதில்லை யுரைத்தனர்நூலோர் சாற்றினர் பெரியவர்தாமே. (சகூசு)

வாக்கினில்மதியும் பகையதாயிருக்க வரமுடனதற்குடை நாதன், தீர்க்கமாயாட்சி யுட்சமதானாற் றீதிலாமொழிகளைப் பகர்வன், நாக்கினாற்சொன்ன சொற்றடுமாறும் நவின்றனர்கெ ணிதநூலாய்ந்தோர், பாக்கியம்பூமி க்ஷேத்திரமுதலாய் பலவித மாகவேபுரியும். (சகூஎ)

வாக்குத்தானத்திற் சுத்தமாயிருக்க வழங்குமத்தானநாத னுமே, பாக்கியத்தானவீட்டினிற்றோன்றப் பாவருமுன்பின்னே யிருக்கத், தீர்க்கமாயவர்தன் யோகமேமதிக்கச்செகத்தினிலெ வர்களும்நிகரோ, தாக்கினோமெனவே கெணிதநூலாய்ந்தோர் சாற்றினரவருடபலனை. (சகூஅ)

வேறு.

குளிகனுமீராறானாற் குறித்தனர்தனங்களற்பம்
அழிவுமேவுண்டாஞ்சொன்னே னானதோர்மனவியாலே
பழிகளும்வந்துதோன்றும் பாலகரதிகமாகும்
தெளிவுமேவுண்டாம்பின்னுஞ் சிறந்தனர்நாற்பத்தேழில். ()

மதியுமேபுதன்வீடாக மந்திரிசுங்கன்கேது
சதியுடனிருக்கவெய்யோன் தன்த்திலேபகையாய்த்தோன்ற
மதிமகன்சேயுந்தானும் மறையவன்வீட்டிற்சார்ந்தால்
விதிமுறையாலேமேலோர் விதித்தனர்கெணிதநூலால். (சசo)

விதிமுறையாலேசொல்வேன் விதித்தனரரவமேழிற்
சதியுடனிருக்கவவ்வில் சற்குருவில்லமானாற்
கெதிபெறவிருப்பனாகுங் கெணிதநூல்விதிகளெல்லாம்
மதியினாலுரைக்கவல்லன் மந்திரநெறிதப்பாதான். (சசக)

மந்தனுஞ்சேய்வீடேக மந்திரிநீசமாகச்
சுந்தரத்துடனெட்டோனுந் துணிவுடனிரண்டிற்சேர்ந்தால்
மந்திரமுடையோனவன் மாந்தியுங்குருவீடானால்
தந்திரமுடையோனவன் சாஸ்திரநெறிதப்பாதான். (சசஉ)

அருக்கனுட்சியுச்சமதா யமரக்குருவுமஞ்சேழில்
வெருக்கொள்பாவர்மூன்பின்னால் வித்தைக்கதிபன்றன்வீடா
யிருக்கக்கரியுமெட்டோனு மிரண்டேழெட்டிற்பிலமானாற்
சுருக்கத்துடனேகெணிதவகைசொல்லப்பிறப்பான்மன்னவனும்

பத்தினுக்குடையோன்மூன்றிற் பதிந்திடப்பத்தினோனும்
வித்தைகாரகனுங்கேதும் விளங்கிடமெட்டோனோடுஞ்
சத்தியாயுயிர்க்குமூன்றிற் றரித்திடச்சகடமென்றார்
வித்தைதானற்பமாகும் விதித்தனர்கணிதநூலோர். (சசச)

மேடலக்கனமேதான்ற மேதைசேய்ஆட்சிநட்பாய்க்
கூடிடவாக்கிற்சுங்கன் குளிகனுமதனிற்சேர்ந்தாற்
பாடிடவாக்கனென்று ப்கரலாம்பாப்பான்சேர்ந்தால்
நாடிடவேறுவானால் நலமிலைவித்தையற்பம். (சசஙு)

கன்னியிலருணனுச்சங் கலைமறைமதிவீடேக
அன்னவன்றனக்குநாலி லாரலுந்தனிக்கவக்கோள்
சொன்னதோருயிர்க்கீராறிற் சோமனும்பருதிசேர்ந்தால்
நன்னயத்துடனேவித்தை நவிலுவன்வியக்கத்தானே. (சசசு)

மதிமகன்றன்வீடாக வாக்கினோன்மறையாதாகிற்
சதியுடனஞ்சோன்றானுஞ் சாரிடமாட்சியாக
விதியுடனுயிர்க்குநாதன் விளங்கிடம்பிலமதானால்
அதிகநல்வித்தையுள்ளோ னாமெனவறிவாய்மாதே. (சசஎ)

வேறு.

வாக்குடையோன்கேந்திரத்தில் வருங்கேதோடு
வந்திடவேஅதற்குடையோன் காரிவாக்கிற்
றீர்க்கமுடன்மதியுடனே கூடியொன்றாய்ச்
சேர்ந்திடவேகேந்திரத்தில் மால்வந்தெய்த
தாக்குமெனப்பாவர்சுப ருடனொன்றாகித்
தரித்திடவேதோன்றியசேய் தனக்குவித்தை
போக்குசமம்யேகலபி மொழிசொல்மந்தம்
பொறுமையிலான்வருமையுளான் பூவின்மாதே. (சசஅ)

வேறு.

மதிமகனருக்கனோடு வாக்கிலேசேர்வானாகிற்
சதியுடன்வித்தையற்புந் தனமுமேபகையுண்டாகும்
கெதிபெறவிருக்கவல்லான் கெடுவிதமானவாக்கான்
பதிதனம்போகம்வோ'கும் பகரலாம்பதமிலாதான். (சசகூ)

மகரலக்கினமேதோன்ற மாந்தியுமதனிற்சேரத்
தகவுளவாக்குநாதன் சாரவேபுகர்வீடாகப்
பகர்மொழியதிகமாகும் பண்புடனருணன்றானும்
சுகமுடன்தன்வீடானாற் சோதிடவகைக்குவல்லன். (சநு0)

மேடலக்கினமேதோன்ற வெய்யவனதனிற்சேர
நாடிடவாக்கிற்றிங்கள் நல்கிடவவருக்காறிற்
கூடிடக்கரியுமாந்தி கொடியவனோடுசேர்ந்தாற்
பாடிடவாக்கானென்று பகரலாங்கெணிதநூலால். (சநுக)

வாக்கினுமஞ்சுமேழும் வருமெட்டும்பாவர்சேரத்
தீர்க்கமாயிவர்கடன்னைத் தினகரன்நோக்கிப்பார்த்தால்
போக்குடன்மொழியில்லாதான் புத்தியும்மட்டதாகும்
வாக்கினில்மறையோன்வந்தால் வகைதெரிந்துரைக்கவல்லன். ()

வாக்கினோன்வீட்டிற்பாவர் வந்திடவதற்குநாதன்
தீர்க்கமாயிருப்பானாகிற் றிரமுளவித்தையுண்டாம்
போக்குடன்மொழியவல்லன் புத்தியிற்சேடனாகும்
வாக்கினோன்மறைவானாகில் வரும்வித்தையற்பமாமே. (சநுங)

வாக்குத்தானத்தோன்செவ்வாய் வந்திடஅட்டமத்திற்
றீர்க்கமாய்வெய்யோன்றானுஞ் சேரவேயிருப்பதானால்

வாக்கினுலுரைக்குஞ்சொல்லை மறுத்திடார்மேலோரென்றூர்
பாக்கியநாசங்காட்டும் பலபலவிதத்தால்வாழ்வோன். (சநுச)

தனத்தினிற்குருவும்பத்தோன் சாமனுங்கூடிநிற்க
மனத்திடமாகநற்கோள் மருவியேஅவரைப்பார்க்க
இனத்துடன்யாகசாலை யியற்றியேவிநோதமான
சனத்துளசபையின்முன்னே தான்நிறைவேற்றுவானே. (சநுரு)

வேறு.

மதியுயிர்தனக்குப்பஞ்சமதனில் மாந்தியுங்குடும்பனுமறையுஞ்
சதியுடனுயிர்க்குக்கேந்திரம்நாலிற் றரித்திடப்புதன்கரியரவும்
விதியுடன்பருதிதனக்குமீராறில் விளங்கிடவித்துவானுகிப்
பதியினிற்சிறந்தபாடலும்பாடும் பாவலனிவனெனப்பகரே. ()

வேறு.

வாக்குடையோன் கேந்திரத்தில்நீசமேறி
வந்திடவேஉடன்மறையோன் றரிக்குமாகில்
தீர்க்கமுடன்மாலுயிரோன் மாந்தியோடு
சேருயிருக்கஞ்சல்லா துபயமானுல்
தாக்குமேமூன்றுலபி யதிகவித்தை
சார்ந்தாலும்பயனடையா னதிகபுத்தி
போக்கிலாக்குடும்பகர்த்தன் பொருள்களீவன்
புண்ணியவான்பொய்யுரையான் புடவிமீதே. (சநுஎ)

வேறு.

தனத்தினிற்பருதியானுற் றந்திரஞ்செய்யவல்லன்
தனத்தினிற்றிங்களானுற் சகலநூலறியவல்லன்
தனத்தினிற்செவ்வாயானுற் சல்லியமுணரவல்லன்
தனத்தினிற்புதனேயானுற் றமிழ்க்கலைதெரியவல்லன். (சநுஅ)

தனத்தினிற்குருவேயானுற் சதுர்மறையோதவல்லன்
தனத்தினிற்புகரேயானுற் சாஸ்திரம்படிக்கவல்லன்
தனத்தினிற்சனியேயானுற் சார்தெலுங்கறியவல்லன்
தனத்தினிற்கொடியனுனுற் றனங்களைமறைக்கவல்லன். (சநுகூ)

படமுளபாம்பிரண்டிற் பதிந்திடவன்னேன்சேரத்
திடமுளபாஷைநாலு தெரிந்துமேபிரசங்கிப்பன்
அடவுடனுறிலுள்ளோன் அரும்பவருடனேகூடிற்
சடவுடனெட்டிலேகச் சரீரமேற்சிரங்குண்டாமே. (சகூ0)

வேறு.

வாக்கினில்மாலும்புகருமேவுச்சம் வளர்குருகேந்திரமிருந்தால், தாக்கியவாக்கோன்பகையிலாதிருக்கச் சாற்றினார்வித்தைகள்திறமாய்ப், போக்கிலாவார்த்தை யுரைத்திடான்மெய்யன் புகழ்ந்தனர்தரணியிலெவர்க்கும், ஆக்கமாய்க்கவிதை பாடிடும் வாக்க னன்னிய பாஷையுமுதவும். (சசுக)

மதியுடன்குசனும் வாக்கினிற்றரிக்க மந்திரிநோக்க முண்டாக, விதியுடன்நாலோன் மாலவனாகி விளங்கிடம் மறைந்திட விரயம், பதியுடனிரவி சுங்கனுங்கூடப் பருதிவீடதனிலே வுயிரோன், துதிபெறவரினும் வித்தையுங்கற்பன் தோத்திரந்தமிழையேசொல்வன். (சசுஉ)

வாக்கினிற்கரியா யதற்குடையோனும் வரும்வித்தை தான நாதனுமே, தீர்க்கமாய்மதிக்கு லாபமாய்வரினும் செப்பினார் பொன்னவன் நோக்கில், ஆக்கமாம்வித்தை பாடிடுமருளால் அநேகமாம் பொருளெலா முணர்வன், நாக்கினாற்சொல்லு மொழியெலாம்நயமாம் நல்லவன் சபலவஞ்சகனும். (சசுங)

வாக்கினில்மதியும் புந்தியுமுச்ச மாய்வர வதற்குடையோனும், பாக்கியத்தானத் ததிபனுமதற்குப் பாவராய்முன்பினேயிருக்கத், தீர்க்கமாஞ்சேய்க்கு வாக்குமேகுழறும் தீயசொல் மொழிகளைச் செப்பும், நாக்கினிற்சொல்ல மொழிகளுமெல்லாம் நவிலுவர்க் கிசையிலாதொப்பாம். (சசுச)

கன்னிலக்கனத்திற் கதிரவன்புதனுங் கலந்திடயிருக்குமாதிந்த, அன்னியசாதிப் பொருள்களையவர்க்கு அதிகமாமந்தணர்வகையாம், தன்னிலேயிருப்பன் ஒருவற்குமீயான் சாற்றினார்கெணிதநூலாய்ந்தோர், இன்னிலத்தவர்க்குச்சாத்திரமுதலாயினமுடன்வருமென வுரைத்தார். (சசுரு)

வாக்குத்தானத்தோ னுச்சனாயிருக்க வக்கிரனதனிலேவளரத், தீர்க்கமாயுரைப்பன் மொழிதடுமாறுஞ் சிந்தையிற்கபடமேயுடையான், பாக்கியமதிக மறுபதுமேலாய்ப் பகர்ந்தனர்பெரியவர்தானும், தாக்கினோமென்று கெணிதநூல்விதியாற் சாற்றினாரறுபதோரெட்டுள். (சசுசு)

பொன்னவனோடுபுந்தியுமதியும் புகருமேஅஞ்சினிற்றோன்றத், தன்னிகரில்லாக் காரியுமேழிற் றனித்திடப்பானுசேய்நாவில், இன்னிலத்தவர்க்கு வெகுநிதியுதவு மிதுவலாற் கணிதநூலாய்ந்தோர், அன்னியசாதியுறவினாற்றனங்க ளவர்தனக்குதவுமென்றாரே. (சசுஎ)

வாக்கினில்மதியு மரவுமொன்றாகி மந்திரிதனக்குச் சட்ட மத்திற், றீர்க்கமாய்வாக்கோன் குருவுமேயாகிச் சேரிடம்மதி யின்வீடாகத், தாக்கியநாலோன் சனியனுயேழிற் றரித்திடச் சேயுநோக்குற்றால், நாக்கினல்மொழியும் வித்தைதான்மூன்ரு ய்நவின்றனர் மேலவர்தாமும். (சசுஅ)

வாக்கினேன்செவ்வா யாகியேஆறில் மறைந்திடப்பருதிவீ டானல், தீர்க்கமாய்வாக்கிற் கேதுவேயிருந்து தேய்பிறையரவு மேபார்க்கில், நாக்கினற்சொல்லும் வாக்கெலாம்பெலமாய் நல மனம்போலவேயிருப்பன், போக்கினில்வஞ்சன் பொய்யுடன்மெ ய்யும் புகழ்ந்துடனிசைக்க வல்லவனும். (சசுகூ)

வே று.

கருதியவாக்கோன்மாலுங் கனகன்வீடதனிற்சேர்ந்து
வருதியாம்புகர்கேதோடு வந்திடங்கருமமாகிப்
பருதிகேந்திரத்திற்கன்மன் பதிந்திடவாக்கிற்றேன்றில்
சுருதியாய்வேதஞானம் சொல்லியபாஷைநாலாம். (சஎ0)

வே று.

சந்திரனுயிரிற் சேயுடன்மாந்தி சார்ந்திடக் குருவுமேபார் க்க, வந்திடுநாலோன் மதிக்குமேலாபம் வசித்திடப் பானுவுங்கூ டிச், சிந்தையாயுயிரோன் கருமனுநோக்கச் செகத்தினிற்பிறந் திடும்சேய்க்குக், தந்தவேள்குமர னன்பினல்வித்தை கருத்தினி ற்றேன்றிடவல்லன். (சஎக)

வே று.

சந்திரன்குருவுமொன்ருய்ச் சார்ந்திடமால்வீடாகில்
மந்தனும்வாக்கோனுகி மறைந்திடமதிவீடுற்ருல்
சுந்தரச்சுங்கன்சேயுஞ் சொல்லுமீராறிலானல்
வந்திடுமிடையிற்கண்கள் மறைந்திடவருமென்ருரே. ()

வே று.

வாக்கினிலே அரவிருக்கக்கேந்திரத்தில்மாலும் வரிசையுட ன்வக்கிரனே டேபிருகுவீட்டில், தீர்க்கமுடன் அக்கோள்தான் நீசபங்கம்பெற்று சேர்ந்திடவேழிரவிமந்தன் பொன்னுடனே கூடிற், பாக்கியங்கள்சமமாகப் பாடிடவும்வாக்கான் பலதொழி லுங்கற்கவல்லான் பண்டிதனுமாவன், மூர்க்கமுளகோபியனும் விஷதத்தன்காமி மோகமுடன்பொருள்தேடிச் செலவழிப்பன் ருனே. (சஎங)

மதியுடனேபருதியுட னுயிர்க்குநாலில் வந்திடவேகுருகாரி யரவோடேகி, விதியுடனேவுயிர்தனக்கேழதனிற்றோன்ற விளங் கிடவேலக்கனத்திற் கேதுசேரில்,பதிதனிலேயோகமிலான் அய லூர்வாசம் பாக்கியங்கள்வாகனங்கள் பலிதமாகும், கெதிபெற வேயிருந்திடுவன்வித்தைநாலாம் கெணித்திடுவன்புவிதனிலேமதி போலாவன். (சஎச)

சென்மமதிற்சிகியிருக்க மதியுடனேகதிரோன் சேர்ந்திட வேகேந்திரங்கள் தீர்க்கமதாய்வரினும், நன்மைபெரும்புத்தியினி லுயிரோனுமிருந்தால் நாடதனிலிவன்தேகம் வெளுப்புடனேசிக ப்பன். கன்மமிலான்வித்தையினில் நாலுலபியுடையான் காரியத் தில்வல்லவனுங்கன்னியற்குமோகன், தன்மையுடன்தெய்வபத்தி யெவர்க்குமுபகாரி தாமெனவேவுரைத்தார்கள் நூலாய்ந்தபெரி யோர். (சஎரு)

வேறு.

வாக்கிடங்கருங்கோள்மந்தன் வந்திடப்பானுசுங்கன்
போக்கிடக்காரிவீட்டிற் புக்கிடக்கேதுமாந்தி
தாக்கிடப்புதனுமாறோன் சத்தமம்சனிவீடாகில்
நாக்கினுலிசைக்கவித்தை நாலுடன்படிப்பன்றானே. (சஎசு)

வில்லினிற்குருவுமாட்சி விளங்கிடப்பாம்போடொன்றாய்ச்
சொல்லியன்மாந்தியோடு துணிவுடன்கருமமாறுல்
நல்லதோர்பாக்குநேசன் நண்ணிடப்புதன்சேயோடு
மெல்லியேமரணமட்டும் வெகுநிதிக்குடையோன்றானே. (சஎஎ)

வேறு.

சந்திரன்பருதி சுங்கன்மாலுடனே தரித்திடவாக்கினில்வந் தால், விந்தையாம்வியத்திற் சேயுமேநீசம் விளங்கிடக்குளிகனு ங்கூடி, முந்தவேயுயிரிற் கேதுவாய்த்தரிக்கில் முனியினில்வெள் ளையுந்தோன்றும், கந்தவேளருளா லிரண்டினேன்மாலாய்க்கன் னியிலிருந்திடுஞ்சேய்க்கு. (சஎஅ)

சேய்க்குமேவித்தை மூன்றுமேயாகும் செப்பினுர்நாலினிற் கரியாய், போக்குடன்வார்த்தை பொய்யுமேயுடையன் பொருந் தியஅஞ்சின்கோள் மூன்றுல், வாய்க்குமேபணிக ளுடம்பினி லணைய வந்திடுஞ்சோதர முடையன், தாய்க்குமேரோகம் வரு மெனவுரைத்தார் சந்திரன்மூன்றின்கோள் திசையில். (சஎகூ)

பாக்கியனுயிரில் மாந்திதன்னுடனே பதிந்திட மாலவன்வீ டாய், வாக்கினேன்மதியும் மந்தனுங்குருவீ டதனிலேநவாங்கி ஷம்வந்தால், தாக்கியபுகருஞ் சேயுடனரவுந் தரித்திடநவாங்கி ஷமிருந்தால், போக்கினிலதிக யோகமாயிருப்பன் புத்தியுமேன் மையுமுடையன். (சஅ0)

வேறு.

கன்னிலக்கனத்தோனென்பான் கருமஞ்சேர்கருமன்வெய்யோ [ன்
உன்னியநான்கோனேமோன் வீட்டினிலுச்சநீசம்
புண்ணியமறையோன்பார்க்கப் பொருந்திடநாலிற்காரி
நண்ணிடப்பிறந்தசேய்க்கு நவின்றனர்கெணிதநூலால். (சஅக)

கெணிதநூற்படியேசொன்ன கிரகங்கள்நவாங்கிஷத்திற்
புனிதமாய்ப்புகர்பொன்னேடு பொருந்தியேதுலாத்திற்சேரில்
பணிகளாபரணம்நல்ல பாக்கியத்தனவானுகி
மனுநெற்குலத்துக்கெல்லாம் மன்னனுய்வாழ்வன்றுனே. (சஅஉ)

வேறு.

வாக்கினிற்செவ்வாய் கொடியகேதுடனே வருவதுகாரிவீ டாகில், தாக்கியவேமோன் தமமுடனெட்டிற் றரித்துடனிரண் டையும் பார்க்கிற், பாக்கியனஞ்சிற் பதிந்திடப்புதனுய்ப் பகர் வது காரியேழாகில், நாக்கினுற்சொல்லு மொழியெலாங்கொடு ரம் நயமுடன்கலந்துதான் வாழ்வன். (சஅங)

வாழ்வதுபுகரிற் பூமியுந்தனங்கள் வாய்த்திடும்யாத்திரை முதலாய், ஆள்வ்துகனகம் வாகனஞ்சகடம் அன்னையும்பிதா வையும்நீக்கும், கோள்மிகவரினும் நீங்கிடும்வாக்கிற் கொடுத்தி டும் வித்தைமந்திரங்கள், தாழ்விலாதிருக்குங் கோபியுமாகும் தயிரியன் வினையனுமாவன். (சஅச)

வேறு.

ஒப்பிலாவாக்கோன்றுனு முறைந்திடங்கதிர்சேய்மாலும்
செப்பமாமறையோன்பார்க்கச் சேரிடம்புந்திவீடாய்த்
தப்பிலாநாலிற்காரி சார்ந்திடஆட்சியானுல்
மெய்ப்பினுற்படிக்கவல்லன் வித்தையும்மூன்றென்றுேதே. ()

வேறு.

'மதிமகனுயிரோன் கருமனும்புகரும் மறைந்திடாக் கேது டன்லாபம், விதியுடன்மதிசே யுதயகேந்திரத்தில் விளங்கிட வஞ்சின்கோள் பார்க்கத், துதிபெரும்நாலோன் பொன்னவனு கிச் சோமனுக்கொன்பதாய் வரினும், கெதிபெரும்வித்தை தன் னையேவிரும்பிக் கெருவிதனுகியேயிருப்பன். (சஅசு

இருப்பதுமஞ்சி லரவுமேதரிக்க வேழினிற்காரியேவரினும், விருப்பமாயிரவி ஆட்சியாய்மறையில் விளங்கியோகியாய்வருவன், மருப்படாவித்தை வஞ்சகன்காமி மாலவனுச்சவங்கிஷமாய்ப், பொருப்புடன்றொடுத்த காரியசித்தி புண்ணியஞ்செய்ய வல்லவனும். (சஅஎ)

வல்லவன்கோபி மூர்க்கனும்பின்னில் வருந்தயவுடையவன் சிகப்பன், அல்லலில்மனத்தன் அருள்பெருங்கிருபைக் கன்பனு மசஞ்சலமில்லான், தொல்லையில்மோட்ச மாகுவன்முன்னுள் தொடுத்திடுங் கருமமேமுடிப்பன், நல்லவன்பிறவித் துன்பமே நீக்கி நாடிடச்சிவபதம்பெறுவன். (சஅஅ)

மதியுயிர்தனக்குப் பஞ்சமமதனில் மாந்தியுமரவுமேதரிக்கச், சூரியுடனுயிர்க்கு நாலிற்கேந்திரமாய்த் தரித்திடப்புதனுமேசாரில், விதியுடன்பருதி தனக்குமீராறில் விளங்கிடப்புகரிருந்திடினும், பதியினி லுலகில் வித்துவானுகிப் பாடிடமொழியவல்லவனும். (சஅகூ)

வல்லவனுகமதித்தனர்பெரியோர் வயதுநாற்பத்துடனிரண்டில், அல்லலிற்புகரோன் னவன்றிசைமுழுதும் அதிகமாய்ப்பலன்களுமுதவும், இல்லறமேன்மை கிரகவாகனமு மெய்திடுமேந்திழைமோகன் சொல்லெலாம்நயமாந் தோத்திரப்பிரியன் துலங்கியவித்தைமேலன்பன். (சகூ0)

வேறு.

கருதியவாக்கில்வாக்கோன் கலந்திடக்கருமனஞ்சோன்
பிருகுடன்நிற்கநாலிற் பிலத்திடமாலுமுச்சம்
பருகிடக்காரிபார்க்கிற் பாலகன்றனக்குவித்தை
பொருளுடன்மூன்றதாகப் புகழ்ந்தனர்புவியில்மாதே. (சகூக)

கரியவனுயிரோனுகியேதனிக்கக் கலைமறைசசியுடனிரவி [க்கு
துரியமாய்ப்புகர்வீடதனிலேசேர்ந்தாற் றோன்றிடும்பாலகன்றன
விரிகுழல்மாதேசேய்திசையதனில் விளங்கிடுமங்களமுடனே
அரிவையும்வருவளதுவலாற்செல்வ மமர்ந்திடும்புத்திமானுவன்,

மாலவனிரவிசேயுடனெட்டில் வந்திடக்குருவுமேவாக்கிற் [னில்
கோலமாய்க்கேதுமூன்றினில்மறையக் குளிகனும்பன்னிரண்டத
லவேவரினுமிங்கிதன்சுமுக னேந்திழைதனக்குமேஅன்பன்
தூலமாம்வித்தைவஞ்சகன்காமி சோம்பலுங்குணமிலாதிருப்பன்,

வேறு.

இருப்பனும்புகரிற்குருவினிற்கரியி லெய்திடும்வாணிபம்பூமி,
மருப்படாவளரும்மைந்தருந்தோன்றும் வாய்த்திடும்பிதிர்வழிக்
கருமம், வெருப்பனுஞ்சுற்றத் தாருடன்கோபி வேந்தராற்றனங்
கள்பெற்றிடுவன், பொருப்புடனிரவிதிசையினிற்கருமம் பொரு
ந்துவான் மாதுருதனக்கும். (சகூச)

வாக்கினிற்செவ்வாய் புகருடன்வரினும் வாக்கின்கோள்ம
றைந்திடநாலில், தாக்கியவுயிரோன் தனித்திடச்சசியுஞ் சனி
யையேநோக்கிடவந்தால், போக்கினில்வித்தை மூன்றுமேயாகப்
பொருந்துவன் கபடவஞ்சகனும், ஆக்கமாம்பூமி வாகனமுயற்சி
யழகுடன் புகர்திசைவருமால். (சகூரு)

வருவதுபுகர்நாள் தனதினில்மணமாய் வாய்த்திடும்மனவி
யிரண்டாம், பெறுவதுஆள்பெண் ணுறுமேயுடையன் பிசகிடும்
நாலுமேபோகும். தருவதுஆணும் பெண்ணுமேயிரண்டு தங்கி
டுஞ்சாபமேதீர்த்தால், மருவிலாச்சிகப்பன் வளர்த்தியுஞ்சமனுய்
வந்திடப்பிறந்தசேய்வாழும். (சகூசு)

வாக்கினேன்கரியாய் மாந்தியுங்கூடி வருமிடம்மூன்றினிலா
கத், தாக்கினேம்நாலோன் சற்குருவாகத் தனித்திடவுயிரைச்
சேய்பார்க்கில், நோக்கிடும்வித்தை மூன்றுடனொன்று நுணுக்க
மாயிருந்திடவல்லன், போக்குடன்கோபிபூமியுந்தனமும் பொரு
ந்திடும் பிதிர்வழியதனுல். (சகூஎ)

வேறு.

வாக்கினேனுதயந்தன்னில் வந்திடப்புகர்மால்வெய்யோன்
தீர்க்கமாய்வளரப்பொன்னன் திரமுடன்பார்க்குமாகிற்
பாக்கியம்பூமிகீர்த்தி பகர்ந்தனர்மாலோன்நாளில்
வாக்கியப்படியேசேரும் வகுத்தனர்லபிகள்மூன்று. (சகூஅ)

வேறு.

சூரியனுங்குடும்பமதற் குடையோனுகித் தோன்றிடம்பஞ்
சமமதனிற் றனித்துநிற்கப், பாரினிலேஅவர்தனக்கு யிராருகிப்
பதிந்திடும்வீடதிற்புகர்மால் வரினுமானுல், சாருமெனத்தோன்
றியசேய்தனக்குவித்தை சார்ந்திடுமேயேகமதாய்தமிழ்கடானும்
சீருடனேவருந்தமிழும் மறைவாமென்று செகந்தனிலேகணித
மொழி தெரிந்துசொல்லே. (சகூகூ)

வேறு.

அருந்திடமுயிர்க்கீராறி லமைந்திடச்சேயேயாகில்
இருந்திடஞ்சுபக்கோளில்லா திருந்திடவுயிரின்நாதன்
நரும்புகர்கூடுஞ்சேய்க்கு நாற்பதாண்டதன்மேலெட்டில்
வருந்தொருநயனதோஷம் வருமெனவறையலாமே. (நுoo)

அறைந்திதையொழிக்கவேண்டி லாரல்சேர்ந்திருந்தராசி
பிறந்திடும்ராசியல்லாற் பெயர்புகரிருந்தராசி
நிறைந்திடுந்திங்கடன்னில் நீள்புகர்வாரத்தன்று
விரைந்துகண்மலர்பொன்னாலே விஷ்ணுவுக்கரிச்சிவாரம். (நுoக)

வாரமாவதனாற்செய்து வருந்துகிட்டினன்கோவிற்குப்
பாரமாமலர்கொடுக்கிற் பனிபருதியைப்போலாகும்
கூரவுமதிலொன்றேனுங் குறைந்திடாதியற்றுமேனும்
சாரிதையறியாராகிற் சார்ந்திடும்நயனரோகம். (நுoஉ)

சொல்லதின்மேலாய்ழிக்க துணையற்பதனமும்பூமி
எல்லிடுமாண்டுமட்டு மியலன்னமாடைதட்டா
தில்லறவாழ்க்கையாவ னிவன்வயதெழுபத்தொன்பான்
வல்லிகேள்சகடாம்வாழ்வு வருவதுசிசமென்றோதே. (நுoங)

வேறு.

வாக்கினுக்குடையோ னுதயகேந்திரத்தில் வளர்சனியாய்க்
குருவுடனே, நோக்கிடிலவற்கு நிலவுகேந்திரத்தி லுறுவதாற்
பாக்கியமுதவுந், தாக்கியசெனன நாள்முதல்மரணந் தங்கிய
காலமுள்வரையும், வாக்கினிற்பாவர் வேறுறுவாரேல் வருவதே
யழிந்திடும் வயமாய். (நுoச)

வேறு.

குருவுமேவுயிரோனுகக் குளிகனும்பருதியோடு
வருமுயிர்தனக்கீராறில் மறைந்திடவாக்குநாதன்
தருமுயிர்க்கட்டமத்திற் றரித்திடவருவதானால்
யிருவிழிதனிலேவெள்ளை யிசைவுடன்வருவதாகும். (நுoஞ)

வருவதுமறைவதாகும் வாக்கினோன் திசையில்மாறும்
பெரும்புகழ்நாற்பத்தொன்றிற் பேணிடுந்தண்ணீராலே
வருவதுதத்தேயாகும் மாய்ந்திடுமறையோனாலே
தருதுடன்மொழிந்தார்மேலோர் சகலநூல்பெரியோர்வாய்மை,

நாலினுக்குடையோன்மூன்றில் நல்கிடவதனிற்புந்தி
நீலனுமாகச்சேர்ந்து நின்றிடச்சேய்வீடாகப்
பால்மொழிசுங்கனில்லம் பாழ்படவதனைப்பொன்னன்
கோல்விழிநயனப்பார்வை குருதியுந்தனித்துப்போனால். (ரு0எ)

பருத்ததோருடலினுதன் பகலவனுறினுள்ளோன்
குறித்துமோரிராசிதன்னிற் கூடிடப்பூனைக்கண்ணும்
எரித்திடும்பருதிசெவ்வா யெழில்குருமூன்றுள்ளோனுந்
திரத்துடனிருக்குமாகிற் றீக்கடைக்கண்ணனுவன். (ரு0அ)

இவருடன்புதனுங்கூடி யிருந்திடக்குட்டைதண்டன்
நவமதுக்குடையோனுவி நாதனும்பாவர்வீட்டில்
தவமதுசேஷ்டபாலன் ருனெனக்கீர்த்திவானாய்ப்
புவனியிற்பெரியோரெல்லாம் புகழ்ந்துமேவுரைக்கலுற்ருர். ()

வேறு.

உரைத்திடுநாலோ னிரவிசேய்மூன்ரே னுண்மையாய்வந்
திடுஞ்சேய்க்கு, மரித்தொருராசி தன்னிலேவந்தால் மாதுரும்
வேசையாய்ப்போவள், குறித்திடும்பெரியோர் கோதையர்மோ
கங் கூடிடுமதிபெலமாகச், சரித்திரத்துடனே பிறந்திடுஞ்சேயுந்
தான்சுடு சோறுமேயுண்பான். (ரு௧0)

அருக்கனும்புகருமொன்ரு யம்புலிவீட்டிலேகச்
சுருக்கமாய்க்கரியும்பாம்புந் துணிவுடன்புகர்வீடேகத்
தருக்குடன்மதியுமார்ப்பத் தன்கிரகத்திற்சேர
இருக்கும்வீடதனைவிற்போ னிசைவுடன்நயனப்பார்வை. ()

லக்கனத்ததிபனேடே நயனத்துக்கதிபன்கூடிச்
சுக்கிரன்பெலத்துநிற்கச் சொல்மொழியீனமாகும்
தக்கதாய்மாந்திநிற்கச் சாதகன்செனிக்கும்போது
மிக்கவேகண்போமென்று விளம்பினுர் நூல்வல்லாரே. (ரு௧உ)

ஏழிலெட்டராருறி லிந்துதீக்கோளைச்சேர்ந்து
வாழ்சுபர்நோக்கமற்று மதிக்குக்கேந்திரத்தில்நல்ல
கோள்கள் தானில்லையாற் குழவிக்குக்கண்போமென்று
தாழவுமுலகுதன்னிற் [illegible] ல் வரினுமா[illegible]
கலைவல்லோரே. (ரு௧௩)

மாதுல[illegible]வேக[illegible]

பு[illegible]ற்று.

கணபதிதுணை.

உலோககுரு

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

சோதிடம் பன்னீராயிரத்தில்

பிதிர்பாவகம்.

இஃது,

எட்டயபுரம் சமஸ்தானம் மகாராஜ ராஜ ராஜபூஜித

மகாராஜா அவர்கள்

கனிஷ்ட சகோதரர்

மகாராஜ ராஜபூஜித

தங்கமகாராஜா அவர்கள்

பொருளுதவிகொண்டு,

சோதிடம்

M. சுப்பிரமணியபிள்ளையால்

சென்னை சூளை:

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

பகமனுன்தி

ாரிக்

Registere... py Right.

கோளடன் பிரஸ், மதராஸ். என். சி.

கெங்காபரமேஸ்வரி துணை.

விளம்பரம்.

இதுவரை அச்சிடாத அருமையான அடியிற்கண்ட சோதிட சாஸ்திரங்கள் இப்பொழுது என்னால் ரிஜிஸ்தர்செய்து அச்சிடப் பெற்றிருப்பதால், என்னுடைய அனுமதியன்றியாரும் அச்சிடக் கூடாது.

இப்புஸ்தகங்கள் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்குத் தெரிவித்தால் வி-பி-மூலமா யனுப்பக்கூடும்.

சங்கராச்சார்ய சுவாமிகள்.

அருளிச்செய்த சோதிடம்.

மாதுர்பாவகம்	1-க்கு	0	12	0
பிதிர்பாவகம்	1-க்கு	0	12	0
சகோதரபாவகம்	1-க்கு	0	8	0
களத்திரபாவகம்	1-க்கு	1	0	0
புத்திரபாவகம்	1-க்கு	0	12	0
யோகபாவகம்	1-க்கு	1	0	0
ஆயுட்பாவகம்	1-க்கு	1	0	0
இவ்வேழுபாவகமும் கலிகோபயிண்டு ஒரேகட்டடம்	1-க்கு	5	0	0
ஜாதக சந்திரிகா என்னும் சந்திரகாவியம் நூதனவுரை	1-க்கு	0	8	0
சுந்தரானந்தர் சூத்-த்தில் கெற்பசிந்தாமணிருதுநூல்	1-க்கு	0	12	0

வி - பி - சார்ஜ் பிரத்தியேகம்.

இப்புத்தகங்கள் சோதிடர்களுக்கு மிகவும் உபயோகமுள்ளது.

இங்ஙனம்,

எம். சுப்பிரமணியபிள்ளை,

சோதிடம் நடுவப்பட்டி,

சாத்தூர் போஸ்ட்.

உ

பரமபதிதுணை.

உலோககுருவாகிய

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சங்கராச்சாரியம் பன்னீராயிரத்தில்

பிதிர்பாவகம்.

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

விநாயகர்.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்-உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

சுப்பிரமணியர்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேவர்குலப் பெருங் கமல மிடுக்க ணான
திமிர மகன் றனியோடு சிறந்து வாழ
மாவலிசே ரவுணர்குலக் குவளை வாடி
மண்ணிலிடைச் சுருங்கியிட வந்த பானு
தூவடிவேற் குமரேச னடிய னேன் புன்
சொல்லினுக்கு மிரங்கியருள் சுரக்கும் பெம்மான்
பூவடியா மிருபோது மூன்று போதும்
பூசைபுரிந் தன்பினொடு புகழ்ந்து வாழ்வாம்.

உமையவள்.

ஆதிபரம் பரையாகிச் சத்துச் சித்தோ
டானந்த மயமாகி யகண்ட மாகிச்
சோதி நிறை வடிவாகி மூலோங் காரச்
சுழி முனையின் கொழுந்தாகித் தோற்ற மான
வோதியபூ தாதிநிறை புவன மாகி
யுற்றசரா சரப்பொருளி னுண்மையாகிச்
சாதிகுலம் பிறப்பிறப்பு மூப்பொன் றில்லாச்
சத்திதுணைத் தாட்கமலந் தலைமேற் கொள்வாம்.

சரஸ்வதி.

உருமகளை அயனுவி லுறைமகளைப் பொறைமகளை
யுலகுக் கெல்லாங்
குருமகளை யன்பர்புகழ் குலமகளை மலர்மகளைக்
குணங்கொள் செல்வத்
திருமகளின் மருமகளை நிலமகட்குங் கலைமகளைச்
செல்லி வாய்ந்த
ஒருமகளை யெனக்கருள வருமகளைப் பெருமகளை
யுன்னல் செய்வாம்.

நூ ல்.

திங்களைச் சடையிற்சூடுஞ் சிவனருட் புதல்வனை
ஐங்கர னடியைப்போற்றி யவனரு ளகத்துட்கொண்டு
சங்கராச் சாரிபாடற் றுன்பனீ ராயிரத்தில்
இங்கிதப் பிதிரின்பாக மியம்புவோ மிகத்தினோர்க்கே.

பத்தில்வெண் மதிய னிருந்திட வவற்குப் பருதியுங் கேந்திர முறுமால், சித்தமாய்ச் சுபருங் கூடிடிற் சென்னம் சிங்கமா யலவனு யமர்ந்தால், உத்தவன் றனக்கோ ரிருபதுமிரண்டி லுயர் பிதா வதனையுங் கொல்லும், புத்திசேர் மாதே யறிந்துரைத் திடுநீ புவியினில் மானிடர் தமக்கே. (க)

கன்மத்தா னத்தில் நின்றிடக் குருதி காரிமுன் பின்னதா யிருக்கிற், சென்மித்த தல்லா லன்னியர் தமக்குச் சேர்ந்திடு மேகமாங் கருமம், வன்மித்துப்பாம்பு கூடிடிலஞ்சு வருகர்மமாந் திவந் திடுகில், இன்மையன் னியரி லெய்திடுமேழென் றியம்பின ராகம நூலோர். (உ)

வேறு.

பகையாகச் சூரியனுஞ் சுபருடனென் றாகப்
பருதியுடன் சேர்ந்தகோ ளவன்வீட்டிற்பாவர்
துகையேக மாகவவர் முன்பின்னுற் பாம்பு
தோய்ந்திடவும் பெற்றபிதிர் தமக்கொருதிங்களிலே
இகலாகக் கொடிதான கசரோகங் காட்டும்
இணையங்க வீனமுட னெய்திடுமல்லாது
செகமீதி லவனுயுள் தீர்க்கமதா மெனவே
சேயரிக்கண் ணுயுரைநீ சோதிடநூற் றேர்ந்தே. (௩)

நாலின்கோள் சுபராகச் சுபரோடேசேர்ந்து
நண்ணிடவு மத்தானத் துடையோருஞ் சுபராய்ச்
சீலமதாய்க் கூடிடவே சூரியனு மதியுஞ்
சேர்ந்தபகை நீசமில்லா திருந்திடிகி லவர்க்குப்
பாலனைய மொழியாளே முப்பதின்மே லைந்திற்
பகர்தாயுந் தந்தையுமே வொன்றாக வெடுக்கும்
மேலெனவே வொருவர்பகை யுறுமாகி லவர்க்கு
மேதினியி லதன்மேலஞ் சாகுமென வுரையே. (௪)

வேறு.

ஆதவன் றனக்குப் பத்துளோன்மாலா யமர்ந்திட வாக்கு
மூன் றதனில், தீதவன் பருதிய வர்க்கு முன்பின்னுற் சேர்ந்திட
மதியுமட் டமத்தில், நாதமாய்ச் செனித்தோன் றிங்களிற் பிதா
வும் நல்கிய மாதுரின் கருமஞ், சேதமா மெனவே வுரைத்திடட்
டமத்திற் சேயிருந் திடிலவ னோடாம். (௫)

வேறு.

சூரியனுஞ் சேய்வீட்டில் மாலோடேகத்
தோன்றுயிர்க்குச் சட்டம்விய மைந்திலாக
நேரிழையே நவமதனிற் பாவரேறி
நின்றவற்கு நட்பாட்சி யுச்சமாகில்
வீரியமா யவன்முன்னுற் பின்னுற்பாவர்
விளங்கிடவும் வாலிபமீ ராறுக்குள்ளாய்
பார்புகழத் தனையீன்ற பிதாவூர் விட்டுப்
பரமனருள் பெறநாடிச் செல்வான்றானே. (௬)

பகர்ந்திடுநீ தேசாதி தேசஞ் செல்லும்
பகர்வயதீ ரொன்பானுட் பிதாவும்போமால்
இகழ்ந்தவன்றன் கருமமிவற் குதவா தென்பர்
ஏந்திழையே மாதர்பகை தனையுண் டாக்கும்
உகந்தசென்மங் கன்னிமுதற் சதுரமாகில்
உத்தமமாம் சிலபலனிற் றவறுதென்பார்
செகந்தனிலே யிவன்வயதோ ரைம்பத்தஞ்சிற்
சேருமெம லோகமவ னீன்றமாதே. (எ)

வேறு.

பிதிருடைத்தானஞ்சுங்கன் பிறங்கிலமாகவக்கோள்
சதிருடன்பாவரோடு தரித்திடவதனிலாக
விதியுடன்கரிமால்வெய்யோன் விளங்குமோர்வீடதானால்
துதிபிதிர்நாற்பத்தொன்றிற் றுணிவுடன்கருமஞ்செய்வன். (அ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவெய்யோன்
சதிருடன்மதிமால்வெள்ளி சார்ந்திடப்பாவரோடு
விதியுடன்பருதிக்கொன்பான் வெய்யவன்வீடதானால்
துதிபிதிர்நாற்பத்தொன்றிற் றுணிவுடன்கருமமாதோ. (கூ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமஞ்சோன் சற்குருபுகர்மாலாக
விதிமுறைப்படியேவெய்யோன் விளங்கியபாவரோடு
மதியின்வீடதனிற்சேர்ந்தால் வகுத்தனர்தந்தைகர்மம். (கo)

தந்தைதாய்கருமஞ்செய்வன் சதிருடனிருபத்தேழு
விந்தையாயிரண்டுசென்றால் விதிமுறைப்படியேபோவன்
முந்தவேபிறந்தோன்கண்டம் முப்பதிலொன்றுதத்து
விந்தையாயொழியுந்தத்து மேலவர்மொழியென்றுதே. (கக)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்புந்தி
சதிருடனருக்கன்பூமன் சார்ந்திடவத்தானத்தோன்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவரோடிருப்பானாகில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனரிருபத்தேழில். (கஉ)

பிதிருடைத் தானம் பொன்னன் பேரில்ல மாக வக்கோள்
சதிருட் னருணன் வீட்டிற் றனித்திடச் சசியும் பாம்பும்
பதிபிதிர்க் குடையோ னோடும் பகர்ந்திட விருப்ப தானால்
துதிபிதிர் நாற்பத் தொன்றிற் றுணிவுடன் கருமஞ் செய்வன். ()

பருதியு மிடப மானுற் பகரலா மதன்கீ ழுஞ்சிற்
கருதியே துலைப்பான் தந்தை கருமமே வுரைத்தார் மேலோர்
குருதிவீ டதனில் வெய்யோன் குருகிடத் தனிப்பா னுகிற்
சுருதியா யதன்கீழ்ப் பத்துத் துணிவுடன் துலைப்பான் தந்தை)

பிதிருடைத் தானம் மந்தன் பேரில்ல மாகக் காரி
பதிதனிற் றனிக்கச் சுங்கன் பருதிசே யருண னோடு
சதிருட னிருப்ப தானுற் சாற்றினு ரிருபத் தேழிற்
பிதிருட கருமஞ் செய்யப் பிறந்தனன் தரணி மாதோ. (கரு)

பிதிருடைத் தானஞ் சுங்கன் பேரில்ல மாகப் புந்தி
சதிருட னுர லோடு தரித்திட வதனி லாக
விதியுடன் புகர்க்கி ராறில் வெய்யவன் மறைவ தானுல்
துதிபிதி ரொழியுங் கர்மந் தொகுத்தன ரருக்கன் வந்தால்.(கசு)

மதிமக்கன் பருதி கேது வருமிட மறைவீ டாக
விதியுடன் பிதிர்த்தா னத்தில் விளங்கிடக் கரும நாதன்
சதிருடன் புகர்பொன் மாந்தி சாருமோ ரில்ல மானுல்
துதிபிதிர் நாசங் காட்டுந் துணிவுட னீரெட் டேழில். (கஎ)

பிதிருடைத் தானம் மந்தன் பேரில்ல மாகப் பொன்னன்
சதிதனித் திடினு மக்கோள் சாரிடம் பாவ ரோடே
பதிபிதிர்க் குடையோன் வீட்டிற் பருதியு மானுஞ் சேர்ந்தால்
துதிபிதிர் முப்பத் தஞ்சிற் றுணிவுடன் நாசம் மாதோ. (கஅ)

மதிமக னுயிர்க்குப் பத்தில வந்திட வக்கோள் தானும்
சதியுடன் சுபராய்த் தோன்றித் தனித்திட மறையா தாகில்
விதியுடன் பிதிர்த்தா னத்தில் விளங்கிடப் பாவர் சேர்ந்தால்
மதியுடன் திசையிற் றந்தை மரணமென் றுரைத்தார் மேலோர்.

பிதிருடைத் தானம் வெய்யோன் பேரில்ல மாகப் பாம்பு
சதிதனித் திடினும் பத்தோன் சாரிடங் குருதி வீட்டில்
விதியுடன் கரிமால் வெய்யோன் விளங்கிடும் வீடதானுல்
துதிபிதிர் பலனஞ் சானுற் றுணிவுடன் கருமஞ் செய்வன். (உ0)

பிதிருடைத் தானங் காரி பேரில்ல மாக வக்கோள்
சதிருட னருக்கன் வீட்டிற் றரித்திடச் சசிபாம் போடு
கெதியுடன் பருதி பொன்னன் கேளவன் வீட்டில் வந்தால்
விதியுட னைம்பத் தெட்டில் விதித்தனர் தந்தை நாசம். (உக)

பிதிருடைத் தானம் வெள்ளி பேரில்ல மாக வக்கோள்
சதிருடன் பருதி யோடு சாரிடம் மறையா தாகில்
பதிபிதிர்க் குடையோன் வீடு பாரினிற் சுத்த மானால்
துதிபிதி ரிருநா லொன்றிற் றுணிவுடன் தந்தை நாசம். (உஉ)

பிதிருடைத் தானம் புந்தி பேரில்ல மாக வக்கோள்
சதிருடன் பாவரோடு தரித்திட வதனி லாக
விதியுடன் பருதி சுங்கன் விளங்கிடப் பவர்வீ டானால்
துதிபிதி ரொழியுங் கர்மந் தொகுத்தன ரிருபத் தொன்றில். ()

பிதிருடைத் தானம் புந்தி பேரில்ல மாக வக்கோள்
சதிருடன் சுபர்களோடு சாரிடம் மறையா தாகிற்
பதிபிதிர்க் குடையோன் றானும் பார்க்கவ னில்லஞ் சேர்ந்தால்
துதிபிதி ரொழியுங் கர்மந் தொகுத்திடா னிருமூன் றுள்ளாய்.

சந்திரன் பருதி கேது சாரிடம் மறையா தாகில்
வந்துயிர் தனக்கொன் பானில் மதிமகன் புசர்சே யுற்றால்
விந்தையா யக்கோள் தானும் விளங்கிடம் பவர்வீ டானால்
சிந்தையா யிருபத் தேழிற் செத்திடும் பிதாவென் றோதே. (உரு)

பிதிருடைத் தானஞ் சுங்கன் பேரில்ல மாக வக்கோள்
சதிருடன் மால்பா னோடே சாரிடஞ் சுபர்வீ டானால்
பதிபிதிர்க் குடையோ னில்லம் பாழ்பட விருப்ப தானால்
துதிபிதி ரீரெட் டாறிற் றுணிவுடன் நாசங் காட்டும். (உசு)

பிதிருடைத் தானஞ் சுங்கன் பேரில்ல மாகத் திங்கள்
சதிதனித் திடினு மக்கோள் சாரிட மறைவ தாக
விதியுட னருக்கன் மாலும் விளங்குமோ ரில்ல மானால்
துதிபிதிர் மூப்ப துக்குள் தொகுத்தனர் கரும மாதே. (உஎ)

பிதிருடைத் தானந் திங்கள் பேரில்ல மாக வக்கோள்
சதிருடன் பருதி வீட்டிற் றனித்திடப் பாவர் நோக்க
விதியுடன் புகர்மால் வெய்யோன் விளங்குகேந் திரமே யானால்
துதிபி திரொழியுங் கர்மந் தொகுத்திடு மருக்கன் நாளில். (உஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனருக்கனோடு சாரிடம்மறைவதாக
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தனிப்பதானால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்திடுங்குருதிநாளில். (உகூ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்புகர்மால்வெய்யோன் விளங்குமிக்கோட்களொன்றாய்
சதியுடன்பருதிவீட்டிற் சார்ந்திடப்பாவர்நோக்க [ச்
விதியுடனிருபத்தஞ்சில் விதித்தனர்தந்தைசாவாம். (௩௦)

மதிமகன்பருதிகேது மந்திரிபுகர்சேயொன்றாய்ச்
சதிருடன்பிதுர்தானத்திற் சாரிடம்மறையாதாகில்
விதியுடன்கிரணமாலி வீடுமேசுத்தமானால்
பதிதனில்வயதஞ்சாகப் பகர்ந்தனர்தந்தைநாசம். (௩௧)

தந்தையர்கிரகந்தன்னிற் சசிமகன்புகர்சேய்வெய்யோன்
வந்திடச்சுபர்கள்நோக்க மகிதனிற்பிறந்தசேய்க்கு
விந்தையாயிருந்தாலஞ்சில் விதித்தனர்பிதாவைக்கொல்லும்
மந்தனுங்கருமஞ்செய்ய வகுத்தனர்கணிதநூலோர். (௩௨)

பரிகரிபுகர்மால்கேது பகருமிக்கோட்களொன்றாய்
அரிதுடன்பிதிர்த்தானத்தி லமர்ந்திடச்சுபர்வீடுற்றால்
விரிகுழல்மாதேகேளாய் விதித்தனரிருநாலாறிற்
பிரியமாய்பிதாவைக்கொல்லப் பிறந்திடுந்தரணிமீதே. (௩௩)

பானுவுங்கேதுமாலும் பார்க்கவனோடுசேர்ந்தால்
ஆனதோரருக்கன்வீட்டி லமர்ந்திடமறையாதாகில்
ஏனமாய்ப்பிறக்குஞ்சேய்க்கு இசைவுடனீரேழொன்றிற்
பானுவின்றிசையிற்றந்தை பகர்ந்தனர்நாசமாதோ. (௩௪)

இரவியுங்குருவுங்கேது மிந்துவும்புகர்மாலோடு
திரமுடன்பிதிர்தானத்திற் சேர்ந்திடமறையாதாகில்
சுரமுடன்புகர்மால்ரெண்டு துகையெனவந்தபோது
விரைவுடன்வெள்ளிவந்தால் விதித்தனர்மரணந்தந்தை. (௩௫)

சூரியன்புந்திசுங்கன் சோமனும்பாம்பினோடு
காரியுமொன்றதாகக் கதிரவன்வீட்டிற்சேர்ந்தால்
வீரியமுடனேஐம்பத் தஞ்சினில்விதித்தார்தந்தை
காரிதான்வருநாள்கர்மங் கருத்துடனுதவான்மாதே. (௩௬)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடுங்குருவீடானால்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவருஞ்சுபருஞ்சேர்ந்தால்
துதிபிதிர்குருசேயாண்டு துகையென்னவொழியுங்கர்மம். (௩௭)

மதிமகன்பருதிசுங்கன் வருமிடம்பிதுர்த்தானத்திற்
சதியுடன்தான்நாதன் சாரிடம்பவர்வீடுற்றால்
விதியுடன்காரிசேயும் விளங்கிடச்சுபர்வீடானாற்
பதியுடன்ஒப்பத்தேழிற் பகர்ந்தனர்மரணந்தந்தை. (௩௮)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாம்போடேகிச் சாரிடஞ்சுபர்வீடுற்றால்
விதியுடன்புகர்மால்வெய்யோன் விளங்கிடப்பிதுர்த்தானத்திற்
சதியுடனிருப்பதானால் தந்தையர்நாசங்காட்டும். (௩௯)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாம்போடேகிச் சாரிடம்பவர்வீடுற்றால்
பதிபிதுர்க்குடையோனோடு பார்க்கவன்மாலொன்றானால்
துதிபிதுர்குருமாலாண்டு துகையெனநாசந்தந்தை. (௪0)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
விதியுடனுயிருக்காறில் விளங்கிடப்பெலமாவானால்
சதிருடன்மால்சேய்வெய்யோன் சாரிடமறைவதானால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொடுத்திடுமிருபத்தொன்பான். (௪௧)

பருதியுமதியுங் குருவுமாலுடனே பகர்ந்திடக் காரிமால் வீடால், குருதியும்பாம்பும் புகருடனொன்றாய்க் குறுகிடத்தானமொன்பதனாற், சுருதியாயுதிக்குஞ்சாதகன்வயதுதுணிவுடன் நாலுமேழொன்றிற், கருதியதந்தை நாசமென்றுரைக்கக் கருத்துடன்சாதகன் பலனே. (௪௨)

மாலவன்குருதிபுகருடன்பாம்பு வருமிடம்பருதிவீடானால், நீலனுங்குருவுங் கேதுமம்புலியும் நின்றிடத்தானுமொன் பதனால், தூல்மாய்ப்பிறக்குஞ் சாதகன்றனக்குத் துணிவுடன்நாலுமாறொன்றிற், பாலகன்றந்தை மரணமென்றுரைக்கப் பகர்ந்தனர் கணிதநூ லாய்ந்தோர். (௪௩)

அருக்கனுங்குருவு மம்புலிமாலு மருக்கன்வீடதனிலே வருமால், சுருக்கமாய்ப்புகருங் காரிசேயோடு துணிவுடன்கோட்களொன்றாகத், தருக்குடனொன்பான்தானம்வந்திடுமேல் சாற்றினாருதித்திடுஞ்சேய்க்கு, அருக்கன்மாலிரண்டு துகையெனத்தந்தையழிந்திடுஞ்சாதகன் பலனே. (௪௪)

நாலஞ்சுக்குடையோன் காரிமாலுடனே நல்கிடப்பானுவீ
டதனிற், சாலவேகுருவுங் கேதுசேயுடனே சாரிடங்கருமத்தா
னத்தில், ஏலவேவருமால் பிறந்திடும்பாலற் கெட்டுமாறெட்டி
னிற் றந்தை, தூலமாய்நாசம் வருமெனமேலோர் சொல்லினர்
சாதகன்றனக்கே. (சரு)

பருதிமால்வெள்ளியாரல் பாக்கியத்தானஞ்சேரக்
கருதியேஅருக்கன்வீட்டிற் கடும்பவர்தனிப்பதானால்
வருமுயிர்தனக்குமுப்பத் தேழினில்மரணந்தந்தை
யுறுதியாய்க்கருமமென்றே வுரைத்தனர்சாதகற்கே. (சசு)

பிதுருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனருக்கனோடு சாரிடம்புகர்வீடானால்
அதிபிதுர்க்குடையோன்வீட்டி லந்தணன்தனிப்பானுகில்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்திடுமீரேழொன்றில். (சஎ)

பிதுருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
விதியுடன்கரியனோடு விளங்குகேந்திரமேயாகச்
சதிருடன்பருதிவீட்டிற் சசிபுகர்வருவதானால்
விதியுடனருணன்நாளில் விதித்தனர்தந்தைநாசம். (சஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
பதிபிதுர்க்குடையோன்வீட்டிற் பகலவன்தனிப்பானுகில்
சதிருடன்குருசேயோடு சாரிடங்குசன்வீடுற்றால்
விதியுடன்பருதிநாளில் விதித்தனர்தந்தைசாவாம். (சகூ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
பதிபிதுர்க்குடையோனோடு பகலவன்வீட்டிலேகச்
சதிருடன்கருமந்தன்னிற் றனித்திடப்பவர்வந்துற்றால்
விதியுடன்முப்பத்தெட்டில் விதித்தனர்தந்தைநாசம். (ரு0)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்பானோடு சாரிடம்புகர்வீடானாற்
கெதியுடன்பருதிவீட்டிற் கேளவன்றனிப்பானுகில்
விதியுடன்சசிவந்துற்றால் விதித்தனர்தந்தைசாவாம். (ருக)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
கெதியுடன்கடுங்கோளோடு கேளவன்வீட்டிலேகப்
பதிபிதுர்க்குடையோனில்லிற் பானுசேய்புகர்வந்துற்றால்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனரிருபத்தெட்டில். (ருஉ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிபானோடு சாரிடங்குருவீடானற்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாம்புசேய்புகர்வந்துற்றால்
துதிபிதிர்கருமந்தன்னைத் தொகுத்தனர்கொடியோன்நாளில். ()

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிகேதோடு சாரிடம்மறைவதானால்
விதியுடன்பருதிவீட்டில் வெய்யவன்குருவந்துற்றால்
பதியுடனஞ்சேழொன்றிற் பாலகன்தந்தைசாவாம். (ருச)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்கேதோடு சாரிடஞ்சனிவீடுற்றுப்
பதிபிதுர்க்குடையோன்றானும் பகரிடமறைவதானால்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனர்கதிரோன்வந்தால். ()

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
விதியுடனரவமோடு மேவிடமால்வீடாகச்
சதிருடனருக்கன்பொன்னன் சாரிடம்மறையாதாகிற்
கெதிபெறவைம்பத்தொன்றிற் கிளர்ந்திடும்பிதாவென்றோதே. ()

சூரியன்சேய்வீடாகித் தோன்றிடவதற்குநாதன்
சாருயிர்தனக்கஞ்சாகித் தரித்திடப்பாம்பினோடு
கூறிறையொன்பான்கோளன் குறுகிடமறையாதாகிற்
சீருடன்பாம்பிற்றந்தை செத்திடுங்குசனாலுணில். (ருஎ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சசிவீடாகப்
பதிபிதுர்க்குடையோன்றானும் பார்க்கவன்வீட்டில்வந்தால்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனர்மால்வந்துற்றால். (ருஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவெய்யோன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடுற்றுப்
பதிபிதுர்க்குடையோன்வீடு பாழ்படவிருப்பதானால்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனருதவான்மாதோ. (ருகூ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமதனிலாக
விதியுடனருக்கன்கேது விளங்குகேந்திரமேயானற்
பதிதனில்வயதுமுப்பத் தஞ்சினிற்பாழாந்தந்தை. (கo)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமதனிலாக
விதியுடன்பருதிபொன்னன் விளங்கிடமறையாதானால்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனருதவான்மாதோ. (சுக)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்புகர்மாலோடு விளங்கிடப்பவர்வீடுற்றே
சதிருடன்காரியாறிற் சாரிடம்மறைவதானால்
பதிதனிலீராறொன்றிற் பகர்ந்தனர்தந்தைநாசம் (சுஉ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சசிமால்சுங்கன் சாரிடஞ்சுபர்வீடாக
விதியுடன்கருமந்தன்னில் விளங்கிடப்பவர்வந்துற்றால்
பதிதனிலொன்றஞ்சுக்குட் பகர்ந்தனர்தந்தைநாசம். (சுங)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிதனித்திடினும்பத்தோன் சாரிடமதனிலானாற்
பதிபிதுர்க்குடையேரன்வீட்டிற் பாவர்கள்வருவதானால்
துதிபிதுர்கருமந்தன்னைத் துணிவுடனுதவான்மாதோ. (சுச)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வந்துற்றால்
விதியுடன்கருமநாதன் விளங்கிடப்பெலமாவானாற்
பதிதனில்மூப்பத்தேழிற் பகர்ந்தனர்தந்தைநாசம். (சுரு)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குப்பத்திற் றனித்திடச்சுபர்கள்நோக்கா
பதிபிதுர்க்குடையோனில்லம் பகருஞ்சுத்தமமேயானால்
துதிபிதுரொழியுமென்றே தொகுத்தனருதித்தவன்றே. (சுசு)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிதனித்திடினுங்காரி சாரிடமவர்க்கேழானாற்
பதிதனிற்பிறக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்தந்தைநாசம்
விதியுடன்பிறந்தவன்றே விதித்தனருலகிலம்மா. (சுஎ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்காறிற் றரித்திடவவருக்கேழில்
விதியுடன்கரிசேயானால் விதித்தனர்கணிதநூலால்
பதிதனிலுதித்தவன்றே பகர்பிதாவெமனூர்வாசம். (சுஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிருடன்மதிசேயோடு சாரிடமவ்வீடாக
விதியுடன்பருதிசுங்கன் விளங்குகேந்திரமேயானல்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனரீரெட்டேழில். (சுகூ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
விதியுடன்புகர்கேதோடு விளங்கிடவீராருகச்
சதியுடனருக்கன்காரி சாரிடம்பெலமாவானல்
பதிதனிற்பதினுலுக்குட் பகர்ந்தனர்தந்தைநாசம். (எ0)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகப்புந்தி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சசிவீடாகி
விதியுடனட்டமத்தில் விளங்கிடப்புகரேயானல்
பதிதனிலிருநாலுக்குட் பகர்ந்தனர்தந்தைசாவாம். (எக)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்மறைவத்தானல்
விதியுடன்பிதுர்க்குநாதன் விளங்கிடச்சுபர்வீடுற்ருல்
துதிபிதுரிருமூன்றுள்ளாய்த் தொகுத்திடுந்தரணிமாதே. (எஉ)

புந்திசேய்கரிபானேடு புகர்மதிமால்வீடாக
வந்துயிர்தனக்கொன்பானில் வருஞ்சுபர்பவரோடானல்
விந்தையாய்ப்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனர்தந்தைகர்மம்
சிந்தையாயிருபத்தொன்றிற் செத்திடும்பிதாவென்ருேதே. ()

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்வீடேகித் தரித்திடமறையாதாகில்
விதியுடன்குருமால்வெய்யோன் விளங்குகேந்திரமேயானல்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனரிருபத்தஞ்சில். (எச)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடுற்ருல்
பதிபிதுர்க்குடையோன்ருனும் பார்க்கவன்வீட்டிற்சேர்ந்தால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனரிருநாலஞ்சில். (எடு)

பாக்கியத்தானம்பொன்னன் பதிதனிற்றிங்கள்மைந்தன்
பாக்கியத்தானநாதன் பாவரோடிருப்பானகிற்
பாக்கியத்துடனேபத்து வயதினிற்றந்தைசாவாம்
பாக்கியத்ததிபனேடு பாவர்கள்சேராதானல். (எசு)

பிதிர்தனத்துடையோன்ருனும்,பிதகன்வீட்டிற்சேரச்
சதிருடனதற்குநாதன் சாரவேஅருணன்வீடாய்க்
கதிரவன்வீட்டிற்பாம்பு கணக்கனும்வருவதானல்
துதிபிதுர்நாற்பத்தொன்றிற் றுணிவுடன்கருமஞ்செய்வன். ()

கரியவனருக்கன் மந்திரிபிருகு கணக்கனுங்கரியவன்வீடால் வருமதிக்குடையா னம்புலிமாந்தி மந்திரிவீட்டிலே சேர, அறுபதுவயதென்றுரைக்கலாமன்னை யையிரண்டாண்டிலேவொழிப்பான், தருதுடன்தந்தை கருமமேதொலைக்கச் சாற்றிநூர்முப்பதுமிரண்டில். (எஅ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்பாம்பு
சதிருடனருக்கன்வீட்டிற் றரித்திடக்காரிசங்கன்
மதிமகனுடனென்ருகி மந்திரிமனையிற்சேர்ந்தால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனர்முப்பத்தைந்தில். (எகூ)

அருக்கனுநீசமாக ஆரலுமவ்வீடாக
இருக்கும்வீடதுவேசுங்க னில்லமாயிருக்கவேழு
அருக்கன்வீடதுவேயாக அந்தணன்காரிசேர்ந்தால்
சுருக்கமாய்த்தந்தைகர்மந் தொலைக்கலாமிரண்டைந்தொன்றில்.

சந்திரன்பாம்போடேகிச் சாரிடம்பருதிவீடாய்
வந்துயிர்தனக்கீராறில் மதிமகன்குருதிவந்தால்
முந்தவேபிறக்குஞ்சேய்க்கு மொழிந்தனர்வயதிரண்டில்
விந்தையாய்த்தந்தைநாசம் விதித்தனர்தரணிமாதோ. (அக்)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்புந்தி
சதிருடனருக்கன்மைந்தன் சார்ந்திடவிருப்பதாகப்
பதிபிதுர்க்குடையோன்வீட்டிற் பாவர்களிருப்பதானல்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்திடான்முப்பத்தொன்றில். ()

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்காரி
சதிருடன்புகர்மால்வெய்யோன் சற்குருமதியினேடு
விதியுடனவ்வீடானல் விளங்கிடப்பிறந்தசேய்க்குப்
பதிதனில்வயதுதானைம் பத்தஞ்சிற்பாழாந்தந்தை. (அங)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாம்போடேகிச் சாரிடம்பருதிவீடாய்
விதியுடனருக்கன்புந்தி விளங்கிடமறைவதானல்
துதிபிதுரொழியுங்கர்மந் தொகுத்தனரோராண்டுள்ளாய். (அச)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிட்முதையமாக
விதியுடன்காரிவெய்யோன் விளங்கிடமாலோடுற்றால்
துதிபிதிரிறைவன் வந்தர்ற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (அடு)

மதிமகன்பருதிபொன்னன் வருமிடங்காரிவீடாய்ச்
சதியுயிர்க்கொன்பரன்மாலோன் சாரிடஞ்சேய்வீடுற்றால்
விதியுடன்பாம்புநாளில் விளங்குமால்புசிப்புவந்தால்
துதிபிதுர்நாசங்காட்டத் தோன்றிடும்பிறந்தசேய்க்கே. (அசு)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்குருகேதோடு தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்பருதிமாலும் விளங்குகேந்திரமேயானற்
றுதிபிதிரிருபத்தொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (அஎ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பருதிவீட்டிற் றரித்திடப்பாவரோடு
விதியுடனுயிர்க்குப்பத்தில் விரைவுடன்புகர்பொன்னுற்றால்
* துதிபிதுர்முப்பத்தாறிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (அஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்கேதோடு சாரிடங்காரிவீடாய்
விதியுடன்பருதியாறில் விளங்கிடப்பாவர்பார்த்தால்
துதிபிதிர்வயதுநூலுட் டுஞ்சிடுந்தரணிமாதோ. (அகூ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
மதிதனித்திடினுமக்கோள் வருமிடங்குருவீடாகப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பருதியும்புகர்சேயுற்றால்
விதியுடன்பிதாவின்கர்மம் விளங்குமோராண்டுக்குள்ளாய். ()

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதி டாய்
மதிமகன்பருதியோடு வளருகேந்திரமேயானால்
துதிபிதுர்வயதுநாற்பத் தொன்றினிற்றொலையுமாதோ. (கூக)

---

* துதிபிதிரிறைவன்நாளிற் றுஞ்சிடுமருக்கனூணில்—என்றும் சில ஏட்டுப்பிரதிகளி லிருக்கிறது.

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பருதியோடு சாரிடங்காரிவீடாய்
விதியுடன்வயதுநாலில் விதித்தனர்தந்தைநாசம்
பதிதனில்வளருஞ்சேய்க்குப் பகர்ந்தனர்தரணிமாதோ. (கூஉ)

மால்கரிபருதிபொன்னன் வருமிடம்பிதிர்த்தானத்திற்
சாலவேஅக்கோளஞ்சிற் றரித்திடப்பவர்வீடானுற்
றாலமாய்வளருஞ்சேய்க்குத் துணிவுடனிருநாலேழிற்
பாலனும்பிதாவின்கர்மம் பண்ணுவன்தரணிமாதோ. (கூங)

பரிகரிகுருதிகேது பகர்ந்திடப்பருதிவீட்டிற்
சரியுடனுயிர்க்கொன்பானுந் தரித்திடமவ்வீடானால்
துரிதமாய்வயதிரண்டிற் றுணிவுடன்பிதாவின்கர்மம்
விரிகுழலுமையாளாணை விதித்தனர்தரணிமாதோ. (கூச)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவெய்யோன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமருக்கன்வீட்டில்
விதியுடன்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனர்வயதோரேழிற்
றுதிபிதிரொழியுமென்றே தொகுத்தனர்கணிதநூலோர் (கூரு)

சூரியன்மாலோடாகித் தோன்றிடவுயிர்க்கிராறில்
ஒருயிர்தனக்குப்பத்தி லுயர்வுடன்சசிபாம்பானால்
பாரினில்வயதோரொன்றிற் பாழ்படும்பிதாவென்றோது
ஆரியனாணையாக அறைந்தனர்தரணிமாதோ (கூசு)

பருதிமால்கரியோடேகிப் பார்க்கவனில்லஞ்சேரக்
குருதியுங்குருவுங்கேது குருகிடப்பிதிர்த்தானத்திற்
கருதியேபிறக்குஞ்சேய்க்குக் கதிரவன்நாள்வந்துற்றால்
உறுதியாம்பிதாவைக்கொல்ல வுதித்தனன்தரணிமாதோ. (கூஎ)

மதிமகன்பருதிகேது வந்திடப்பிதுர்தானத்திற்
சதியுடனக்கோளெட்டிற் றரித்திடத்தனிப்பானுகிற்
பதிதனில்வயதோரேழிற் பகர்ந்தனர்பிதாவைக்கொல்ல
விதியுடனுதிக்குமென்று விதித்தனர்தரணிமாதோ. (கூஅ)

குருவுடன்காரிகேது குறுகிடப்பிதுர்த்தானத்தில்
வருமுயிர்தனக்குப்பத்தோன் வளருங்கேந்திரமேயானுற்
சுருதியாயருக்கன்சேந் தோன்றிடத்தனிப்பானுகிற்
கருதியேவயதுநாலிற் கருத்துடன்தந்தைநாசம். (கூகூ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
பதியுடனுயிர்க்கீராறிற் பதிந்திடவிறைவன்மாந்தி
விதியுடனிருப்பதானல் விதித்தனர்முப்பத்தொன்று
சதியுடன்மூன்றுஞ்சென்றுற் றந்தையர்நாசமாதோ. (கஎ)

வேறு.

பிதிருடைத்தானத்ததிபனுமருணன் பேரில்லமாகவேபிறங்கச்
சதிருடனக்கோள்பாவரோடிருக்கத் தந்தையின் தானமேசுத்தம்
அதிபதியந்தக்காரகன்றானு மஞ்சுநாலொன்பதிலிருந்தால்
துதிபிதிர்க்கருமந்துணிவுடன்செய்யச்சொல்லினரவனுடவயதோ

சொல்லிடும்வயதோ ரொன்பதுக்குடையோன் றோன்றிய திசைதனிலருக்கன், வெல்விதிப்படிநாள் வந்திடும்வயதில்விதித்தனர்தந்தைதுஞ்சிடவே, அல்லல்வந்தணுகுஞ் சஞ்சலமாதவறைந்தனர் சாதகன்றனக்குச், சொல்லினர்பெலமாய்ப் பூமிக்ஷேத்திரங்கள் தொகுத்திடுமரணநாள் வரையாம். (கஅ)

வேறு.

மதிமகன்வெள்ளிதிங்கள் மந்தனுமருக்கன்மாந்தி
சதியுடன்பிதிர்த்தானத்திற் சார்ந்திடவுதிக்குஞ்சேய்க்கு
விதியுடன்றந்தைசெல்வம் விளங்கவேநாசங்காட்டும்
பதிநிதிபூமிசெல்வம் பாழ்படவொழியுமாதோ. (கஙு)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பாவர்வீடால்
விதியுடன்மதிபொன்சுங்கன் விளங்கிடவதனிற்கோளன்
அதிகமாயருணனோடு அமர்ந்துடனிருப்பதானல். (கஎ)

தந்தையர்கருமஞ்சொல்வேன் சதிருடன்பதிமூன்றுறில்
விந்தையாய்நாசங்காட்டும் விதித்தனர்தாணிமாதோ
சிந்தையில்விசாரங்காணுஞ் சேதமென்றுரைத்தார்பூமி
முந்தவேபகையுண்டென்றே மொழிந்தனர்சணிதநூலோர். ()

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிர்தாய்க்காரியோடு சாரிடமறையாதாகில்
விதியுடன்பருதிமாலும் விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரீரொன்றேழிற் றொகுத்திடுங்கருமமாதோ. (கஅ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகத்திங்கள்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்மறைவதானால்
விதியுடன்தோன்றுஞ்சேய்க்கு விதித்தனர்மதிநாட்புந்தி
சதிருடனபகாரத்திற் சாய்ந்திடும்பிதாவென்றோதே. (கo௭)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குமுன்பின் தரித்திடப்பாவரோடு
மதிமகன்பருதிகூட வருமிடமறையாதாகில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்திடான்நாலேழஞ்சில். ()

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்மாலோடு சாரிடம்பவர்வீடாக
விதியுடன்முக்கோள்தானும் விளங்கிடவுயிர்க்கீராறிற்
பதிதனிற்பிதாவின்கர்மம் பாலகனுதவான்மாதோ. (கo௯)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனருக்கனோடு சாரிடமறைவதாகில்
விதியுடன்முக்கோள்நீசம் விளங்கிடச்சுபர்நோக்கானால்
துதிபிதிரேழாம்நாளிற் றுஞ்சிடுந்தாணிமாதோ. (கக0)

சூரியன்வீட்டில்மாந்திதோன்றிடக்கரிபொன்னோனும்
சாருமக்கோளன்மாறிச் சார்ந்திடவொன்பானோடு
சீருடன்வளரும்பாம்பிற் றிங்கள்வந்திடுகிற்றந்தை
ஆரியனணையாக அழிவனென்றுரைத்தார்மாதோ. (கக௧)

மாலுடன்காரிபானு வந்திடக்காரியில்லம்
தூலமாயுயிருக்கொன்பான் தோன்றிடச்சுபர்வீடானால்
பாலகன்வயதுபத்தே ழஞ்சினிற்பிதாவைக்கொல்லச்
சாலவேயுதிப்பனென்று சாற்றினர்கணிதநூலோர். (கக௨)

புந்தியும்பருதிகாரி பொருந்திடப்பானுவீடாய்
பந்திடுமுயிர்க்குப்பத்திற் பதிந்திடக்கொடியோன்வந்தால்
சிந்தையாயிருமூன்றுள்ளாய்ச் செப்பினர்பிதாவைக்கொல்ல
வந்திடுஞ்சிசுவென்றோத வகுத்தனர்தாணிமாதோ. (கக௩)

வேறு.

சந்திரன்மால் காரியுடன் புகரொன்றுகத்
தரித்திடக்கேந்திரமாகிச் சுபர்நோக்காலும்
வந்திடுமக்கோள்தனக்கீ ராறில்வெய்யோன்
வரவுமக்கோளதனையே சுபர்நோக்குற்றால்

சிந்தையாயிலக்கினத்துக் கொன்பான்கோளன்
சேரிடமேசுபர்வீடாய்ப் பவர்வீடுற்றால்
மந்தன்வருதிசைமுழுதில் மாதாதந்தை
மாய்ந்திடுமென்றோதினர்கள் தரணிமாதோ. (ககச)

வேறு.

பிதிருடைத்தானம்மந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றனித்திடவருணன்வீடாய்
விதியுடன்புகர்மால்கேது வெய்யவனுதயமானால்
மதிகுசன்துகையாற்றந்தை மாய்ந்திடுங்கணிதமாய்ந்தோர். ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்கஞ்சிற் றரித்திடப்பாவர்நோக்க
மதிமகன்புகரெல்கேது வருமிடம்மறைவதானால்
துதிபிதிர்வயதோரொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (ককঙ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மதியினோடு சாரிடமுதயமானால்
விதியுடன்புகர்மால்கேது வெய்யவனோர்வீடுற்றால்
துதிபிதிர்வயதுமூன்றிற் றுஞ்சிடுங்கணிதமாய்ந்தோர். (ককঞ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதியுடனுயிர்க்குப்பத்திற் றரித்திடப்பரிமாலோடு
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தனிப்பாராகில்
விதியுடன்வயதோரைந்தில் விதித்தனர்தந்தைநாசம். (ককঅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்காறிற் றனித்திடப்பாவர்நோக்க
மதியுடன்புகர்வெய்யோனும் வருமிடமறையாதாகில்
துதிபிதிர்முப்பத்தொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (ককঙ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்காறிற் றரித்திடமதியினோடு
விதியுடன்புகர்மால்கேது வெய்யவன்மறையாதாகில்
துதிபிதிர்வயதுபத்திற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (কঊ০)

மாலவன்பருதிகேது வன்புகரிக்கோளொன்றாய்ச்
சாலவேவுயிர்க்கிரண்டிற் றரித்திடப்பாவர்நோக்க
நீலனுங்கருமத்தோனும் நின்றிடமறையாதாகில்
தூலமாயிரெட்டொன்றிற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. ()

குருதிசேய்பருதிசோமன் கொடியவனுடனென்றாகி
வருமுயிர்தனக்கொன்பானில் வந்திடச்சுபர்வீடானால்
கருதியேபிறக்குஞ்சேய்க்குக் கதிரவன்திசையிற்பாதி
உறுதியாய்ப்பிதாவைக்கொல்ல வுதித்தனன்தரணிமீதே. ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவெள்ளி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமருக்கன்வீடால்
பதிபிதிர்க்குடையோன்றானும் பார்க்கவன்வீட்டில்வந்தால்
விதியுடன்பிதாவைக்கொல்ல விதித்தனர்குருநாட்பாதி. ()

பாதிநாள்வரினுமாகிற் பகர்ந்தனர்பிதாவைக்கொல்வன்
ஓதிடுமதிசேய்வெய்யோ னுயர்வுடன்கொடியனோடு
நீதமாய்ப்பிதிர்தானத்தில் நின்றிடப்பவர்வீடானால்
சேதமென்றுரைத்தார்தந்தை சேயுயிர்வயதோரெட்டில். ()

எட்டினிற்பிதாவின்கர்ம மெய்திடும்பிறந்தசேய்க்கு
மட்டிடும்பருதிபூமன் மந்திரிகாரியோடு
சட்டமாய்ப்பிதிர்த்தானத்திற் சார்ந்திடப்பவர்வீடுற்றால்
திட்டமாய்வயதோராறிற் செத்திடும்பிதாவென்றோதே. ()

ஓதுயிர்தனக்கொன்பானி லுயர்வுடன்பருதிபூமன்
பீதகன்காரிபுந்தி பெரும்பவருடனேசேர்ந்து
நீதமாய்ச்சுபர்வீடாகி நின்றிடவளருஞ்சேய்க்குச்
சேதமென்றுரைத்தார்தந்தை செப்பினர்வயதுமூன்றில். (கஉசு)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமவ்வீடாகிப்
பதிபிதிர்க்குடையோனுச்சம் பகர்ந்திடத்தனிப்பானாகில்
விதியுடன்வயதோர்நாற்பத் தஞ்சினில்விஷநோய்தந்தை. ()

தந்தையர்நாற்பத்தஞ்சிற் சாய்ந்திடும்பிறந்தசேய்க்குச்
சிந்தையாய்மதிமால்வெய்யோன் சிகியுடன்பெலமதானால்
விந்தைசேய்வயதீரெட்டில் மேவிடும்விஷத்தாற்றந்தை
வந்திடும்நாசமென்றே வகுத்தனர்கணிதநூலோர். (கஉஅ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகத்திங்கள்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்கரிவீடுற்றால்
பதிபிதிர்க்குடையோன்றானும் பகரிடம்பெலமதானால்
விதியுடன்வயதோரேழில் விளங்கிடும்பிதாவின்கர்மம். (கஉகூ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிமால்வெய்யோன் சார்ரிடஞ்சனிவீடானால்
விதியுடன்வயதுபத்து ரெட்டினில்விதித்தார்தந்தை
பதியதில்நாசமென்று பகர்ந்தனர்கணிதமாய்ந்தோர். (கஙO)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
பதிபிதிர்க்குடையோனோடு பகரிடஞ்சேய்வீடானால்
சதிருடன்பிறக்குஞ்சேய்க்குச் சாற்றினர்பிறந்தவன்றே
விதியுடன்பிதாவைக்கொல்ல விளங்கிடுந்தரணிமாதோ. (கஙக)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
அதிபவருடனொன்றாகி யமர்ந்திடக்கருமந்தன்னிற்
பதிபிதிர்க்குடையோன்றானும் பகரிடம்பெலமதானால்
சதிருடன்குருமாலாண்டு சாய்ந்திடும்பிதாவென்றோதே. (கஙஉ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்காரி
மதியுடனுசான்வெள்ளி வந்திடப்பருதிவீட்டில்
விதியுடன்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனர்மதிமாலாண்டு
சதியுடன்துகையாய்வந்தாற் சாய்ந்திடும்பிதாவென்றோதே. ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்புந்தி
விதியுடன்கரிபொன்மாந்தி வெய்யவனாரலோடு
சதியுடனிக்கோளொன்றாய்ச் சார்ந்திடக்குருவீடானால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனர்வயதாண்டொன்றில். ()

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றனித்திடப்பாவர்நோக்க
மதிமகன்பருதியொன்றாய் வருமிடம்மறைவதானால்
துதிபிதிரிருமூன்றஞ்சிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (கஙஙு)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவெய்யோன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சுபர்வீடாகப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவருஞ்சுபர்வந்துற்றால்
துதிபிதிரோராண்டுக்குள் துணிவுடன்கருமஞ்சொல்லே. ()

சூரியன்காரிபுந்தி துணிவுடன்பிதிர்த்தானத்தில்
வீரியனுடனேசேர வேவக்கோள்நீசமுற்றால்
பாரிற்சேய்வயதொன்பானிற் பாழ்படும்பிதாவின்கர்மம்
ஆரியனுணையாக வறைந்தனர்தரணிமீதே. (கஙஎ)

மதிமகன்பருதிபொன்னன் வந்திடப்பிதிர்த்தானத்திற்
சதியுடனக்கோளாட்சி சார்ந்திடப்பவர்வீடுற்றால்
விதியுடன்வயதோரஞ்சில் விதித்தனர்தந்தைகர்மம்
சதியுடன்சடையோனாணை சாற்றினர்தரணிமாதோ. (கஙஅ)

அருக்கனுஞ்சசியும்பொன்னு மமர்ந்திடப்பிதிர்த்தானத்திற்
சுருக்கமாயக்கோள்பத்திற் றோன்றிடப்பவர்வீடுற்றால்
தருக்குடனுதிக்குஞ்சேய்க்குச் சாற்றினர்பிதாவின்கர்மம்
அருக்கனர்வந்தபோதே அடைந்திடுந்தரணிமாதோ. (கஙக)

சந்திரன்பருதிபொன்னன் சாரிடம்பிதிர்த்தானத்தில்
விந்தையாயக்கோள்பத்தில் விடையதிற்றனிப்பானகில்
வந்தசேய்பிதாவின்கர்மம் வகுத்தனனீராறொன்றிற்
சிந்தையாயரன்மேலாணை திறமுடன்மொழிந்தார்மேலோர். ()

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாசப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடாக
மதியுடன்காரிவெய்யோன் வருமிடம்பெலமாவானால்
துதிபிதிர்மால்சேயாண்டு துகையதிலொழியுமென்னே. (கசக)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்மறையாதாகிற்
பதிபிதிர்க்குடையோன்றானும் பகரிடம்புகர்வீடுற்றால்
துதிபிதிரிரண்டாண்டுக்குள் துஞ்சிடுந்தரணிமீதே. (கசஉ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவெய்யோன்
சதிருடன்மால்சேயோடு தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்காரியுச்சம் விளங்கிடத்தனிப்பாரகில்
துதிபிதிர்பருதிதிங்கள் துகையதிலொழியுந்தந்தை. (கசங)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாவரோடு சாரிடமறைவதாக
விதியுடன்பருதிமாலும் விரைவுடன்சசிவீடுற்றால்
துதிபிதிர்வெள்ளியாண்டு துகையதிலொழியுமென்னே. (கசச)

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகச்சுங்கன்
சதிதனித்திடினுமைந்தோன் சாரிடம்பெலமாவானால்
பதிதனிற்பிறக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்புகர்மால்காரி
மதிதுகையாகுமானால் வகுத்தனர்தந்தைகர்மம். (கசரு)

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகவக்கோள்
விதியுடன்பருதிசுங்கன் விரைவுடன்மறைவதானால்
கெதியுடன்பிறக்குஞ்சேய்க்குக் கிட்டிடும்புகர்வந்துற்றால்
துதிபிதிர்நாசங்காட்டத் தோன்றிடுந்தரணிமாதோ. (கசசு)

பருதியும்புகரும்பொன்னன் பகர்ந்திடப்பிதிர்த்தானத்தில்
குருதியுங்கரியுமாகக் குறுகிடப்பருதிகூடிற்
கருதியேபிறக்குஞ்சேய்க்குக் கதிரவன்புகர்சேயாண்டு
சுருதியாய்வளருமாகிற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (கசஎ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பொன்னன்
சதிருடன்மால்சேயோடு தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்பருதிகாரி விளங்குகேந்திரமேயானால்
துதிபிதிர்க்குருதியாண்டிற் றுஞ்சிடுந்தரணிமீதே. (கசஅ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்வீடேகித் தனித்திடமறையாதாகில்
விதியுடன்கரிமால்வெய்யோன் விளங்கிடமறையுமானால்
துதிபிதிர்குருதிநாளிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (கசகூ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனரவமோடு சாரிடமறையாதாக
விதியுடன்பருதிசேய்மால் விரைவுடன்மறைவதானால்
துதிபிதிரீரேழுக்குள் துஞ்சிடுந்தரணிமாதோ. (கரு0)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினும்பொன்னன் சாரிடம்பவர்வீடாகப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பருதிமால்புகர்வந்துற்றால்
விதியுடன்முப்பத்தொன்றில் விதித்தனர்தந்தைநாசம். (கருக)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவெய்யோன்
சதிதனித்திடினும்பொன்னன் சாரிடஞ்சேய்வீடாக
மதியுடன்காரிவெய்யோன் வளருகேந்திரமேயானால்
பதிதனிற்பிறந்தவன்றே பகர்ந்தனர்தந்தைநாசம். (கருஉ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினும்பொன்னன் சாரிடம்பருதியில்லாய்க்
கெதியுடனருக்கன்மந்தன் கேளவன்மறையாதானால்
பதிதனில்வயதோரெட்டிற் பகர்ந்தனர்தந்தைநாசம். (கருங)

வேறு.

சூரியன்றன்வீடதுவா யருணனோடு
தோன்றிடவேசுபபவர்கள் நோக்குமாகில்
பாருயிர்க்கொன்பான்கோளன் மூன்றுறெட்டிற்
பகர்ந்திடவேவுடனொருகோள் தரியாதானால்
கூறுமெனத்தோன்றியசேய் வளருந்தந்தை
குறுகுமொன்பான்றிசைதனதில் மரணங்காட்டும்
சூரியனுமறைந்துபகை நீசமானால்
தோன்றியநாள்நாற்பதனிற் றொலையுந்தந்தை. (கருச)

சூரியனுமாலுடனே சேய்வீடேகத்
தோன்றியசேய்சுபருடனே மறையுமாகிற்
பாருயிர்க்கொன்பான்கோளன் மறையோடொன்றாய்ப்
பகருயிருக்குபயமதிற் றரிக்குமானால்
கூறுமெனமார்த்தாண்டன் றனக்கொன்பானின்
கோளன்வருந்திசையதனில் வளருந்தந்தை
சீருடனேவுயிர்தனக்குக் கருமனந்தி
செத்திடுமேயிதுதவறு தெனவென்றோதே. (கருரு)

மாலுயிர்க்கொன்பான்கோளாய்க் கரியனில்லம்
வந்திடவேகரியனென்ப தஞ்சிலேகச்
சீலமுடன்வருமருக்கன் மறையோனில்லம்
சேர்ந்திடவேமறையனுயிர்க் காறிலானால்
சாலவேவருமரவு திசையிற்காரி
சாருமபகாரமதிற் பார்திதன்னிற்
காலனுடபட்டணஞ்சென் றேகுந்தந்தை
கருதுமெனஆகமநூல் வழியென்றோதே. (கருசு)

வேறு.

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றரித்திடவலரிபாம்பு
விதியுடனிக்கோளொன்றாய் விளங்கிடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிர்கருமநாளிற் றுஞ்சிடுமரவுவந்தால். (கருஎ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சசிமகன்மாந்திகேது

விதியுடனிக்கோளோடு விளங்குயிர்க்குபயஞ்சேர்ந்தால்
துதிபிதிரிருபத்தேழிற் றுஞ்சிடுங்கருமமேற்பன். (கருஅ)
பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குமூன்றிற் றனித்திடச்சுபர்நோக்கில்லா
மதிமகன்பருதியோடு வருமிடம்மறையாதானல்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தோன்றிடுமீரேழ்பத்தில். (கருகூ)

வேறு.

மாந்திபுகருடனுயிர்க்கொன் பானிலேக
வருமதற்குநாதனுமே மறையுமாகில்
தேர்ந்துமதிவீடதனி லலரிகேது
சேர்ந்திடவேசுபர்பவர்கள் நோக்காதானல்
சேர்ந்துயிர்க்கொன்பான்கோளன் முடிவிற்றந்தை
செத்திடுமேயிதுதவறு தெனவென்றேது
மாந்திபுகர்கேதிரவி யோர்வீடானல்
வளருதந்தையவன்றனக்குக் கருமமேறுன். (கசூ0)
குருவுடன்பன்னகனுமுயிர்க் கொன்பான்தன்னிற்
குறுகவிவரிருந்திடுங்கோளதிபன்றுனும்
வருமனைகள்சுபர்வீடாய்ப் பவர்கள்சேர
வளருமக்கோள்மறைந்திடக்கே துடன்வெய்யோனும்
சரியுடனிக்கோள்தனக்குக் கருமந்தன்னிற்
சசிவருதச்சசிதிசையிற் றன்னையீன்றேன்
அருமறைநூற்படிவிதியா லருணன்நாளில்
அழிந்துயிருங்காலனுல கடையுமென்னே. (கசூக)
சூரியன்தன்னுடன்கேது மால்வீடேகத்
தோன்றியமால்பிதிர்த்தானந் தன்னிற்றேன்றப்
பாரிலக்கினக்கோளும் பாம்போடொன்றுய்ப்
பகருயிருக்குபயமதிற் றரிக்குமானல்
கூறிலிந்தச்சேயதனை யீன்றதந்தை
குறுகனலிதிசைபாதி மரணங்காட்டுஞ்
சூரியன்றன்னுடன்கேது மறைந்துநீசந்
தோன்றிடவேநாற்பதனிற் றெலையுந்தந்தை. (கசூஉ)

வேறு.

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சேய்வீடாகித் தனித்திடநீசமாக

விதியுடன்பருதியாட்சி விளங்கிடத்தனிப்பானுகில்
துதிபிதிர்மரணஞ்சோமன் தோன்றியதிசையின்போக்கில். ()

வேறு.

அட்டமத்திற்சூரியன்மால் தரிக்கவக்கோள்
அம்புலிவீடதனில்வர மாந்தியொன்றாய்த்
திட்டமுடன்கேந்திரமா யுதயமாகச்
சேர்ந்தவருக்கஞ்சதனிற் றனிக்கவொன்பான்
சட்டமுடனிவன்றனக்கு முன்பின்சுத்தம்
சாரவொன்பான்வீடதனிற் பவர்வந்துற்றால்
மட்டாருங்குழலாளே சேயின்தந்தை
மாயுமிரண்டாண்டதனுட் கணிதஞ்செப்பே. (கசுச)

வேறு.

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்வீடேகித் தனித்திடப்பவர்நோக்கில்லா
விதியுடன்தேளில்வெய்யோன் விளங்கிடத்தனிக்குமாகிற்
பதிதனில்மரணந்தந்தை பகர்ந்தனர்பருதிவந்தால் (கசுரு)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதிவீடாய்
விதியுடனிரவிமாலும் [illegible]கிடமறையுமானால்
துதிபிதிரீரேழெட்டிற் றுஞ்சிடுந்தரணிமீதே. (கசுசு)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகில்
விதியுடனட்டமத்தில் வெய்யவன்மால்வந்துற்றால்
துதிபிதிரிருபத்தஞ்சிற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (கசுஎ)

வேறு.

சூரியனும்மாலுடனே பிதிர்த்தானத்திற்
றோன்றிடவேபவரில்லம் வளருமாகிற்
காரிபவருடன்சேர்ந்து சுபர்வீடேகிக்
கருத்துடனேமதிமனையி லிருப்பதானால்
சீருடனேபிறந்திடுஞ்சேய் வயதஞ்சேழிற்
செத்திடுவனத்தனெனக் கணிதமோதும்
சூரியனுமாலுடனே மறைவதானாற்
றொகுத்திடுமைம்பதுவயதிற் றுஞ்சுந்தந்தை. (கசுஅ)

வேறு.

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிமாலோடு சாரிடம்மறையாதாகிற்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தனிப்பதானல்
விதியுடன்வயதிரண்டில் விதித்தனர்தந்தைநாசம் (கசுசு)

பிதிருடைத்தானமானல் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதிவீடால்
விதியுடன்கிரணமாலி விளங்குகேந்திரமேயானல்
பதிதனில்வயதோராண்டிற் பகர்ந்தனர்தந்தைகர்மம் (கஎ0)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்காரியோடு சாரிடமுயிரிற்சேர்ந்தால்
விதியுடன்வயதோரேழில் விளங்கிடுந்தந்தைகர்மம்
பதிதனிலுதிக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்கணிதநூலோர்.(கஎக)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதியுடனுயிர்க்குப்பத்திற் சசிதனித்திருக்குமாகில்
விதியுடன்பருதிபுந்தி விளங்கிடமறைந்துநின்ருல்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தொகுத்தனரிருபத்தாறில். (கஎஉ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுஞ்சுங்கன் சற்குருமறையாதாகில்
பதிபிதிர்க்குடையோன்ருனும் பார்க்கவனில்லஞ்சேர்ந்தால்
துதிபிதிரொழியுங்கருமந் தொகுத்திடானிருபத்தொன்றில். ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவன்னேன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதிவீடால்
விதியுடன்பானுபுந்தி விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனனிறைவன்வந்தால். ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்பருதிசோமன் விளங்குமிக்கோட்களொன்ருய்ச்
சதிருடனுயிர்க்குப்பத்திற் சார்ந்திடப்பவர்வீடானல்
பதிதனில்வயதுநாலிற் பகர்ந்தனர்பிதாவைக்கொல்ல. (கஎடு)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிருடன்பருதிவெள்ளி சற்குருவருணனேடு
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பதிந்துதான்வளருமாகில்
துதிபிதிர்கருமந்தன்னைத் துணிவுடன்செய்யான்மாதோ.(கஎசு)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகப்புந்தி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்கரிவீடாகப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாம்புசேய்மதிவந்துற்றால்
விதியுடன்விஷத்தாற்றந்தை வீதலாங்குருநாட்போனால். (கஎஎ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகத்திங்கள்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்வியத்திற்சேர
விதியுடன்கருமந்தன்னை விளங்கிடப்புகர்வந்துற்றால்
துதிபிதிர்புகர்நாள்தந்தை துஞ்சிடுமுலகிலம்மா. (கஎஅ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றனித்திடநீசவீடால்
பதிபிதிர்க்குடையோனுச்சம் பகர்ந்திடத்தனிப்பானுகில்
துதிபிதிர்கருமநாளிற் றுஞ்சிடுந்தனதுபோக்கில். (கஎகூ)

வேறு.

மந்தனுடன்கொடியபவர் பருதியில்லம்
வளரவக்கோளுயிர்க்குபய மதனிற்சேரச்
சிந்தையுடனிலக்கினத்துக் கொன்பான்கோளன்
சேரிடஞ்சட்டாட்டவியந் தனிக்குமானால்
வந்திடுஞ்சேய்தந்தையுயி ரழியும்பொன்னன்
வருந்திசையிற்கரிவருநா ளதனில்மாயும்
விந்தையுடனென்பான்கோள் மறையாதானால்
விளங்கியபொன்றிசைமுடிவில் மரணந்தந்தை. (கஅ0)

சுக்கிரனுங்கேந்திரமா யுயிர்க்கொன்பானுந்
தோன்றுமக்கோளொன்றாக மறையன்வீடால்
மிக்கதெனமால்பருதி கரியன்வீட்டில்
விளங்கிடவேசுபர்நோக்க விளங்குந்தந்தை
தொக்குமெனச்சூரியன்றன் றிசையிற்சுங்கன்
தோன்றியநாளபகாரம் மரணந்தந்தை
சுக்கிரனுமொன்பானு மறையுமானால்
தொல்புகர்வந்திடுந்தனதில் மரணந்தந்தை. (கஅக)

சுந்திரனுமிலக்கினத்துக் கொன்பானுகிச்
சாரிடங்கேந்திரமாகிச் சுபர்கள்சேரப்
புந்திமனைதனிலருக்கன் மாந்திமாலும்
பொருந்திசுபர்நோக்காமற் புகரொன்பானுய்

வந்திடவேபுகர்திசையில் மரணந்தந்தை
வகுத்தனர்கள்பாம்புடநாள் வருமுற்பாதி
சந்திரனும்பாவருடன் மறையுமானால்
சாய்ந்திடுஞ்சேய்தந்தையர்தன் கருமஞ்சேரான். (கஅஉ)

வேறு.

சூரியன் பிதிர்த்தானத்திற் றோன்றிடமாலோன்பானும்
காரிபுமொன்றாய்நிற்கக் கருதியசேய்தன்தந்தை
கூறினர்பரிநாள்வந்தாற் குறுகிடுமெமலோகத்திற்
சூரியன்வேறாவானாற் றுஞ்சிடுந்தனைப்பெற்றன்றே. (கஅங)

வேறு.

சனியவனுங் கேந்திரமாய்த் தனிக்கவொன்பான்
சாரவவ ருடனரவு தரிக்குமாகில்
இனிதமுட னுயிரதனிற் பருதிசுங்க
னிருந்திடவேயிவர்கடனைச் சுபர்கள்நோக்கக்
கனிவெனவே தோன்றியசேய் வளர்க்குந்தந்தை
கர்மமுமே கரிவருநாட் டிசையின்போக்கில்
சனியவன்ற னுடனரவு மறையுமானாற்
சாய்ந்திடுமே ஓர்வயதில் மரணந்தந்தை. (கஅச)

வேறு.

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனிரண்டாறெட்டிற் றரித்திடப்புகர்பொன்மாந்தி
விதியுடனிவர்களொன்றாய் விளங்கிடவலரிநீசம்
துதிபிதிருநாலொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (கஅரு)

மறையவன்பிதிர்த்தானத்தில் வந்திடவதற்குநாதன்
விரைவுடனிரண்டாறெட்டில் விளங்கவெச்சுபர்களேனும்
உறையநற்பருதியுச்ச மூர்ந்திடப்பாவர்சேர்ந்தால்
தரையிற்சேயின்றவத்தன் சாதலுமிருபத்தேழில். (கஅரூ)

சந்திரன்புகர்மாலொன்றாய்த் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
வந்திடவக்கோள்தானும் மறைந்திடச்சுபர்கள்நோக்கா
சிந்தையாய்க்கருமந்தன்னிற் றினகரனரவோடுற்றால்
விந்தையாய்ப்புகர்நாள்வந்தால் விதித்தனர்தந்தைநாசம். ()

ஆரல்கேந்திரத்திலாச அம்புலியொன்பானோடு
சாரவேசுபர்நோக்கில்லாத் தரித்திடப்பகையால்வெய்யோன்
பாரினில்வருஞ்சேய்தந்தை பாழ்படுங்கருமமேற்கான்
ஆரலுமறையுமானாலழிந்திடுமுபயநாளில். (கஅஅ)

சூரியன்மறைமாலொன்பான் றோன்றுமிக்கோட்களொன்றாய்ச்
சாரிடமொன்றேழ்பத்திற் றரித்திடப்பாவர்நோக்கா
பாரினில்வருஞ்சேய்தந்தை பாழ்படுமைம்பத்தொன்றிற்
சூரியன்மறைமாலொன்பான் றோன்றுமிக்கோட்கள்சேரும். ()

சேரிடமுயிர்க்காறெட்டிற் றிகழ்பனிரண்டுதன்னிற்
கூறினர்முக்கோள்தானுங் குறுகிடப்பிறந்தசேய்க்கு
ஆரியனாணையாக வறைந்தனர்பிதாவைக்கொல்லச்
சீருடனிருபத்தொன்றிற் செப்பினர்கணிதமாய்ந்தோர். (ககூ0)

வேறு.

சந்திரனுமிலக்கினத்துக் கொன்பானாகிச்
சனியுடனேசேய்கூடி யுதயமேறப்
புந்திமனைதனிலருக்கன் மாந்திமாலும்
பொருந்திசுபர் நோக்காமற் புகரொன்பானாய்
வந்திடவேபுகர்திசையில் மரணந்தந்தை
வகுத்தனர்கள் பாம்புநாள் வருமுற்பாதி
விந்தையுடன்புகர்திசையந் தியத்திற்றெத்து
விளங்கியதோர்பிதாமரணங் கணிதஞ்செப்பே. (ககூக)

வேறு.

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்புகர்வீடுற்றால்
விதியுடனருக்கன்மாலும் விரைவுடன்மறையாதாகில்
துதிபிதிர்கருமஞ்செப்பத் தோன்றிடும்வயதோரேழில். (ககூஉ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமால்வீடேகப்
பதிபிதிர்க்குடையோனோடு பார்க்கவன்மறையாதாகில்
விதியுடன்வயதோரைந்தில் விதித்தனர்தந்தைநாசம். (ககூங)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றரித்திடப்பாவர்நோக்க

விதியுடன்புகர்மால்வெய்யோன் விரைவுடன்மறைவதானால்
துதிபிதிர்மால்சேயாண்டு துகையெனவொழியுந்தந்தை. (ககூச)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பூமன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்மறைவீடாக
மதியுடனருக்கன்புந்தி வளருங்கேந்திரத்தில்வந்தாற்
றுதிபிதிர்மால்சேயாண்டு துகையெனவொழியுந்தந்தை. ()

சந்திரன்பருதிபூமன் சற்குருகாரியோடு
வந்துயிர்தனக்கொன்பானாய் வந்திடப்பவர்வீடாகச்
சிந்தையாய்ப்பிறக்குஞ்சேய்க்குத் திறமுடன்வயதோர்மூன்றிற்
சுந்தரத்துடனேதந்தை துஞ்சிடுந்தரணிமீதே. (ககூசு)

மதிமகன்பாம்போடேகி வருமிடம்மறையாதாகிற்
சதியுடனுயிர்க்கீராறிற் றனித்திடப்பருதிவந்தால்
பதிதனிற்றோன்றுஞ்சேய்க்குப் பகர்ந்தனரீறெட்டாறுள்
விதியுடன்பிதாவைக்கொல்ல விதித்தனர்கணிதமாய்ந்தோர். ()

சூரியனுயிர்க்கீராறிற் றோன்றிடவொன்பான்கோளன்
சாரிடஞ்சசிவீடேகித் தனித்திடச்சுபரோடானாற்
சீருடன்றோன்றுஞ்சேய்க்குச் செப்பினர்பிதாவின்கர்மம்
ஆரியனுணையாக வறைந்தனருதவான்மாதோ. (ககூஅ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகில்
விதியுடன்பருதிகேது விளங்கிடமறைவதானால்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுந்திசைமுன்பாதி. (ககூகூ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
மதிமகனிரவிகாரி வக்கிரன்கேதோடொன்றாய்
விதியுடன்புகர்மால்வீடாய் விளங்கிடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுங்குருதிவந்தால். (௨௦௦)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
விதியுடன்சுபரோடொன்றாய் விளங்கிடமறையாதாகிற்
பதிபிதிர்க்குடையோனுட்சி பகர்ந்திடப்பாவர்சேர்ந்தால்
சதிருடன்பிதாவைக்கொல்லச் சாற்றினர்கரிவந்துற்றால். (௨௦௧)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குமூன்றிற் றனித்திடச்சுபர்நோக்கில்லா
பதிபிதிர்க்குடையோனுறிற் பகர்ந்திடவுயிரோன்சேர்ந்தால்
விதியுடன்பிதாவைக்கொல்ல விதித்தனரீராறெட்டில். (௨௨)

சூரியன்மால்சேயொன்றாய்த் தோன்றிடச்சேய்வீடாகச்
சாருயிர்தனக்கொன்பான்கோள் தனித்திடப்பிதிர்த்தானத்திற்
சீருடன்கருமநாதன் சேரிடந்தன்வீடானால்
கூறினர்மறைநாள்தந்தை குறுகிடும்பருதிவந்தால். (௨௩)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
விதியுடனுயிர்க்குமூன்றில் மேவிடமுன்னோனோடு
சதியுடனஞ்சிற்பானு தரித்திடப்பவரோடானால்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தோன்றிடாதென்றுசொல்லே. ()

சூரியன்புகரோடொன்றாய்த் தோன்றிடமுதயமாகச்
சீருடன்மதியுமொன்பான் சேரிடமறைவதாகக்
கூறிடும்பிதிர்த்தானத்திற் குருதியுங்கேதுஞ்சேர்ந்தால்
மாறிடும்பாம்பிற்றந்தை மாய்ந்திடுங்காரிகாலம். (௨௫)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்கைந்திற் றரித்திடப்பவமில்லாதால்
விதியுடன்பரிமால்சேயும் விளங்கிடக்கரிவீடானால்
துதிபிதிர்கரிநாள்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமீதே. (௨௬)

மாதவர்மொழியாற்பாம்பு வருங்கருமத்தோனோடு
நீதமாயோர்வீடேகி நின்றிடமறையாதானால்
ஓதிடுங்கருமநாதன் றிசைதனிலுறையும்பாம்பிற்
சேதமென்றோதுந்தந்தை செப்பினர்நாசமாதோ. (௨௭)

சூரியன்மாலோடொன்றாய்த் தோன்றிடஞ்சசிவீடாகக்
காரியுமொன்பான்கோளுங் கருத்துடனோர்வீடுற்றாற்
சீருடன்றோன்றுஞ்சேய்க்குச் செப்பினரரவுநாளிற்
கூறினர்தவத்திற்றந்தை குறுகிடுந்தரணிமாதோ. (௨௮)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்குருவீடாகப்
பிதிர்தனக்குடையோன்வீட்டிற் பீதகன்தனிப்பானுகில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனரென்றுகூறே. (௨௯)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாவரோடு சாரிடமறையாதாகில்
விதியுடன்பருதிபூமன் விளங்குமோரில்லமானாற்
றுதிபிதிரிருநால்மூன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௧0)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சுபர்களோடு சாரிடம்மறைவதாகிற்
பதிபிதிர்க்குடையோனோடு பாவருஞ்சுபருஞ்சேர்ந்தால்
துதிபிதிரிருபத்தெட்டிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௧௧)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்சுபர்களோடு விளங்கிடமறையாதாகிற்
சதிருடனருக்களோடு தரித்திடச்சுபர்வந்துற்றால்
பதிதனில்முப்பத்தெட்டிற் பகர்ந்தனர்தந்தைநாசம். (௨௧௨)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடாக
விதியுடன்பருதியோர்வீ டதனிலேமறையாதானால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்திடான்பதினெட்டாண்டில்.

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடாக
விதியுடனலரிபூமன் விளங்குகேந்திரமேயானால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனர்வயதேழுக்குள். (௨௧௩)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகச்சுங்கன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமால்வீடாக
மதிமகன்பருதியோடு வருமிடமோர்வீடுற்றால்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடும்புந்தியூணில். (௨௧௪)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்காரி
சதிருடன்பாம்போடொன்றாய்த் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
மதிமகன்கிரணமாலி வருமிடமோர்வீடுற்றால்
விதியுடன்பிதாவைக்கொல்ல விதித்தனரிராகுநாளில். (௨௧௫)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றனித்திடப்பாவர்நோக்கப்
பதிபிதிர்க்குடையோனுட்சம் பகர்ந்திடச்சுபரில்லாதால்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுந்திசைவந்துற்றால். (௨௧௬)

சூரியன்வீட்டிற்காரி தோன்றிடப்பாம்போடொன்றாய்ச்
சாருமக்கோளனுச்சந் தனித்திடச்சுபர்நோக்கில்லாச்
சீருடனுயிருக்கொன்பான் சேரிடமறைவதானாற்
கூறினர்கரிநாள்போக்கிற் குறித்தனர்பிதாவின்கர்மம். (௨௧௮)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிருடன்குருவோடொன்றாய்த் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்பருதியொன்பான் விளங்கியேயோர்வீடுற்றால்
துதிபிதிர்மூன்றுண்டுள்ளாய்த் துஞ்சிடுந்தரணிமாதோ. (௨௧௯)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
மதிமகன்பரியோடொன்றாய் வருமிடம்புகர்வீடாகச்
சதிருடன்கரிக்கீராறிற் றரித்திடமுக்கோள்வந்தால்
விதியுடன்பிதாவின்கர்மம் விதித்தனனுதவான்மைந்தன். (௨௨௦)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பவர்வீடாகித் தனித்திடமறைவதாகப்
பதிபிதிர்க்குடையோனேழிற் பகர்ந்திடத்தனிப்பானாகில்
துதிபிதிர்புகர்நாள்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௨௧)

சூரியன்வீட்டிற்காரி தோன்றிடச்சுபரோடொன்றாய்ச்
சாருமக்கோள்பொன்வீட்டிற் றனித்திடச்சுபர்நோக்கில்லாச்
சீருடன்குளிகன்றிங்கள் சேரிடமுயிர்க்கொன்பானாற்
கூறினர்புகர்நாள்வந்தாற் குறித்தனர்பிதாவைக்கொல்வன். ()

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்கேதோடு சாரிடங்கரிவீடாகில்
விதியுடனுயிர்க்கிரண்டில் விளங்கிடச்சுபர்நோக்குற்றால்
துதிபிதிர்புகர்நாள்மாலிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௨௩)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்குருவும்பானுஞ் சாரிடமறையாதாகில்
விதியுடன்கரிசேய்மாந்தி விரைவுடன்பரிவீடுற்றால்
துதிபிதிர்மறையோனுண்டிற் றுஞ்சிடுங்காரிநாளில். (௨௨௪)

பிதிருடைதானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்மால்கேதோடு விளங்கிடக்கரிவீடாகச்
சதிருடனிக்கோள்தன்னைச் சற்குருநோக்காதாகில்
துதிபிதிர்புகர்நாள்மாலிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௨௫)

மாதவர்மொழியாற்புந்தி வரும்பரிகேதைமாந்தி
வேதமாய்விழியால்நோக்கில் விளங்கியசேய்தன்றந்தை
போதவேமனதிற்றுக்கம் பொருளழிவலைச்சல்சேதம்
ஓதினர்பெலமாய்நூலோ ருரைத்தனர்புகர்நாட்பாதி. (உஉசு)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்புகர்வீடாகி
விதியுடன்புகர்மாலொன்றாய் விளங்கிடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிர்பருதிவந்தாற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (உஉஎ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகச்சுங்கன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்குருவீடாக
விதியுடன்சருமநாதன் விளங்குகேந்திரமேயானால்
துதிபிதிர்வயதுமூன்றிற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (உஉஅ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்புகர்வீடாக
மதிமகன்சேயும்பாம்பும் வருமிடமறையாதானாற்
பதியிற்சேய்வயதுபத்திற் பகர்ந்தனர்பிதாவின்கர்மம். (உஉகூ)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சேய்வீடாக
விதியுடன்பரிமால்கேது விளங்கிடமறைவதானால்
துதிபிதிர்புகர்நாள்வந்தாற் றுஞ்சிடுந்திசைமுற்பாதி. (உகூ0)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகமந்தன்
சதிருடன்குளிகனொன்றாய்த் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
மதிமகனிரவிகேதும் வருமிடமுதயமானால்
துதிபிதிர்பருதிவந்தாற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. (உகூக)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாவரோடு சாரிடமறையாதாகில்
விதியுடன்பருதிமாலும் விரைவுடன்சுபர்வீடுற்றால்
பதிதனிற்பிதாவின்கர்மம் பாலகனுதவான்மாதோ. (உகூஉ)

ஆரலுமொன்பான்கோளு மம்புலிபுகரோடொன்றாய்
ஓருயிர்தனக்கிரண்டி லுறையவொன்பானும்பாம்பும்
சீருடன்பரிமால்மாந்தி சேரிலக்கினம்வந்துற்றால்
கூறினர்பாம்பின்போக்கிற் குறித்தனர்பிதாவின்கர்மம். (உகூங)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மதிசேயொன்றாய்ச் சாரிடமுதயமாக
விதியுடன்பரிமால்மாந்தி விரைவுடன்மறையுமாகில்
துதிபிதிர்குருநாள்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௫௪)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகிற்
பதிபிதிர்க்குடையோனோடு பானுவுஞ்சுபர்கள்சேர்ந்தால்
விதியுடன்புகர்வீடுற்றால் விதித்தனர்பிதாவின்கர்மம். (௨௫௫)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
விதியுடன்சுபர்வீடாக விளங்கிடச்சுபர்கள்நோக்கப்
பதிபிதிர்க்குடையோன்வெள்ளி பகர்மனைதனிப்பானுகிற்
சதிருடனரவின்போக்கிற் சாய்ந்திடும்பிதாவென்றோதே.(௨௫௬)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்மாலொன்றாய்ச் சாரிடமால்வீடாகப்
பதிபிதிர்க்குடையோன்பத்திற் பகர்ந்திடத்தனிப்பானுகில்
துதிபிதிர்மறையிற்சுங்கன் றோன்றியநாளில்நாசம். (௨௫௭)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகத்திங்கள்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்கரிவீடாகப்
பதிபிதிர்க்குடையோனீசம் பகர்ந்திடத்தனிப்பானுகில்
துதிபிதிர்குருதிவந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௫௮)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்றன்வீடாகித் தனித்திடப்பவர்நோக்குற்றால்
விதியுடன்பருதிசோமன் விளங்கிடமறைவதானால்
துதிபிதிர்மாலோன்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௫௯)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
விதியுடனுயிர்க்குநாலில் விளங்கிடத்தனிப்பானுகிற்
பதிபிதிர்க்குடையோனேழிற் பகர்ந்திடச்சுபரோடுற்றால்
துதிபிதிர்மாலோன்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௨௬௦)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குப்பத்திற் றனித்திடச்சுபர்வீடாக
மதியுடன்பருதியொன்றாய் வருமிடமறையாதானால்
விதியுடன்பிதாவைக்கொல்ல விதித்தனர்வயதோரைந்தில். ()

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கிரண்டிற் றரித்திடப்பவர்நோக்குற்றால்
பதிபிதுர்க்குடையோன்நீசம் பகர்ந்திடத்தனிப்பானுகில்
துதிபிதிர்கருமஞ்சொல்லத் தோன்றிடுமதிநாட்போக்கில். ()

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரியோடொன்றாய்ச் சாரிடம்மறையாதாகிற்
கதிரவனிரண்டாந்தானங் கலந்திடத்தனிப்பானுகில்
துதிபிதிர்கருமந்தன்னைச் சொல்லினரிருநாலைந்தில். (உசஈ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பருதியோடு சாரிடம்மறையுமாகில்
விதியுடன்மதிவீடாகி விளங்கிடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிர்கருமந்தன்னைத் துணிவுடனுதவான்மாதோ. (உசஉ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மறையோடொன்றாய்ச் சாரிடம்மால்வீடாக
விதியுடனக்கோளாறில் விளங்கிடப்பரிவந்துற்றால்
துதிபிதிரெட்டிற்றந்தை துஞ்சிடுந்தரணிமாதோ. (உசஊ)

சூரியன்சேயோடொன்றாய்த் தோன்றிடவுதயமேறச்
சாருயிர்க்கொன்பான்கோளன் சாரிடமுயிர்க்காறுற்றால்
சீருடன்வருஞ்சேய்தந்தை செத்திடுங்குருநாள்வந்தால்
ஆரியனுணையாக அறைந்திடுந்தரணிமாதோ. (உசஎ)

மாதவர்மொழியாற்செப்ப வகுத்தனர்கெணிதமாக
ஓதுயிர்தனக்கொன்பானி லுயர்குருபுந்திதிங்கள்
வேதமாய்விழியால்நோக்கில் விளங்குஞ்சேயீன்றதந்தை
போதலேதனவான்யார்க்கும் புகழ்பெறவளருமாதோ. (உசஏ)

சூரியன்பரம்பொடொன்றாய்த் தோன்றிடவுயிருக்காறிற்
சாரிடம்பரிவீடாகித் தரித்திடக்காரியொன்பான்
சீருடன்பிதிர்த்தானத்திற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குக்
கூறினர்வயதுநாற்பத் தொன்றினிற்குறுகுந்தந்தை. (உசஅ)

சூரியனுயிர்க்கீராறிற் றோன்றிடவொன்பான்கோளன்
சாரிடங்கரிவீடாகித் தரித்திடப்புகர்மாலொன்றாய்ச்
சீருடன்சுபர்நோக்காமற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குக்
கூறினர்மால்நாள்போக்கிற் குறுகிடும்பிதாவென்றோதே. (உசகூ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சேயோடொன்றாய்ச் சாரிடஞ்சுபர்வீடாகப்
பதிபிதுர்க்குடையோன்நாளிற் பகர்ந்திடக்கரிமாலுற்றால்
துதிபிதிர்புகர்நாட்போக்கிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (உ௫0)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சசிமகன்புகர்பான்கேது
விதியுடனிக்கோளொன்றாய் விளங்கிடமறையுமாகில்
துதிபிதிர்வயதீராறிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (உ௫௧)

மாதவர்மொழியாற்கேது மதிமகன்புகர்மால்திங்கள்
வேதமாயிக்கோளொன்றாய் விளங்கிடமுதயம்வந்தாற்
சேதமென்றுரைத்தார்தந்தை செத்திடும்வயதுமுப்பான்
ஓதிடுநாளிற்கர்ம முரைத்தனர்தரணிமாதோ. (உ௫௨)

மந்தனுங்குருமால்சுங்கன் வரும்பரியொன்பானென்றாய்
வந்துயிர்தனக்குநாலில் வளர்ந்திடச்சுபர்நோக்கில்லாச்
சிந்தையாய்வருஞ்சேய்தந்தை செத்திடுங்கணிதஞ்செப்ப
விந்தையாய்ப்புகர்நாள்வந்தால் விதித்தனன்தரணிமாதோ. ()

பிதிருடைத்தானம்மந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கேழாகித் தரித்திடமதியொன்றாக
விதியுடன்புகர்பான்கேது விரைவுடன்குருவீடுற்றால்
துதிபிதிர்மாலோன்நாளிற் றோன்றிடமுடிவில்மாயும் (உ௫௩)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பரிமாலோடு சாரிடம்புகர்வீடானால்
விதியுடன்தோன்றுஞ்சேய்க்கு விதித்தனர்பிதாவின்கர்மம்
பதிதனிலுதவானென்றே பகர்ந்தனர்கணிதமாய்ந்தோர்(உ௫௪)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகச்சுங்கன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்புகர்வீடாகப்
பதிபிதிர்க்குடையோன்றானும் பகரிடம்மறையாதானால்
துதிபிதிர்புகர்முற்பாதி துஞ்சிடுந்தரணிமாதோ. (உ௫௫)

மந்தனுமொன்பான்கோளும் மதிமகன்புகர்பொன்வெய்யோர்
வந்துமிக்கோட்களொன்றாய் வருமிடம்மறையாதாகில்
விந்தையாயுயிர்க்கொன்பானில் விளங்கிடப்பவர்வந்துற்றால்
சிந்தையாய்ப்புகர்நாள்சேயிற் செத்திடும்பிதாவென்றோதே. ()

மாலவன்புகர்பொன்பானு வக்கிரன்கேதோடொன்றாய்ச்
சாலவேவுயிர்க்கிராறிற் றரித்திடச்சுபர்வீடாக
ஏலவேபிதிர்த்தானத்தி லிந்துசுன்தரிக்குமாகிற்
றாலமாய்மால்நாட்பாம்பிற் றுஞ்சிடும்பிதாவென்றோதே.(உருஅ)

காரிசேய்மால்பொன்னொன்றாய்க் கதிரவன்வீட்டிலேகச்
சூரியன்புகர்கேதோடு தோன்றிடமுயிர்க்கொன்பானிற்
கூறினர்பிதாவைக்கொல்லக் குறித்தனரிருநாலஞ்சில்
ஆரியனுணையாக அறைந்தனர்தரணிமாதோ. (உருகூ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்பானோடு சாரிடமூன்றுறெட்டில்
விதியுடன்தரிக்கக்கோளை விளங்கியபவர்நோக்குற்றால்
துதிபிதிர்புகர்நாள்தந்தை துஞ்சிடுமருணன்வந்தால். (உசூ0)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சீமாகித் தரித்திடமூன்றுறுக
விதியுடன்பருதிசேயும் விளங்கிடமாலோடானால்
பதிதனிற்பிதாவின்கர்மம் பாலகனுதவான்மாதோ. (உசூக)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமதிவீடாக
விதியுடன்பருதிபுந்தி விளங்கிடவுயிர்க்கெட்டானால்
துதிபிதிர்கருமந்தன்னைத் துணிவுடனுதவான்மாதோ. (உசூஉ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பாம்போடொன்றாய்ச் சாரிடந்தன்வீடாக
விதியுடன்பிதிர்க்குநாதன் விளங்கிடமால்வீடுற்றால்
துதிபிதிர்மதிநாள்தந்தை துஞ்சிடுங்காரியூணில். (உசூங)

சூரியனொன்பான்கோளுந் தோன்றுயிர்தனக்கொன்பானிற்
சீருடன்சுபர்வீடாகிச் சேர்ந்திடப்பாவர்நோக்கக்
காரியும்பருதிவீட்டிற் கலந்திடப்பன்னோன்வீடால்
கூறியேவருஞ்சேய்தந்தை குறுகிடுமிருபத்தேழில். (உசூச)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
மதிமகன்பானுமொன்றாய் வருமிடம்மறையாதானால்
பதிபிறந்திடுஞ்சேய்தந்தை பாழ்படுமிரவுநாளில்
துதிபிதிர்பருதிவந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (உசூடு)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சேய்வீடாகி
விதியுடன்புகர்பாணென்றாய் விளங்கிடமறைக்காறுற்றால்
துதிபிதுர்க்கருமம்பொன்னன் தோன்றவன்தனதுபோக்கில். ()

சூரியன்றன்வீடதுவாய்க் கரிபொன்மாந்தி
தோன்றுமிக்கோள்மறைந்திடவே அதற்குநாதன்
சாருமுயிர்க்குபயமதிற் றரிக்கவக்கோள்
சாரவதற்குடையோனுஞ் சாருமில்லம்
பாருயிரிற்பாவருட னுயிர்க்கொன்பானும்
பதிந்திடப்பாருலக மதிலுதிக்குஞ்சேய்க்கு
காரிவருந்திசையதனிற் பருதிவந்தாற்
காரிகையேபிதாமரணங் கருமமென்றே. (உசுஎ)

என்றெனவேயிலக்கினத்துக் குபயந்தன்னி
லிருந்திடுமார்த்தாண்டனும்நீ:சமதாயாரல்
நன்றெனவேவுடன்கூடித் தரிக்குமாகில்
நலிந்திடுமாருங்கோளன் திசைவந்தெய்துந்
தொன்றெனவேவுயிர்தனக்குக் கருமநாதன்
தோன்றிடவந்தபகார முடிவிற்றந்தை
கொன்றுயிர்விட்டேகிடுமே நமலோகத்திற்
குறித்தனர்கள்வெகுசிசமென் றோதுமென்றே. (உசுஅ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சசிமகனரவோடொன்றாய்த்
துதிபெறக்கேந்திரத்திற் றோன்றிடப்பருதியுச்சம்
விதியுடன்நாசந்தந்தை விதித்தனர்மால்நாட்போக்கில். (உசுகூ)

சூரியன்மால்கேதோடு மூன்றுறெட்டிற்
றோன்றிடவேபவர்வீடாய்த் தரிக்கவிக்கோள்
காரியுடனொன்பான்கோள் புகரின்வீட்டிற்
கலந்திடக்கேந்திரமாகித் தரிக்குமாகிற்
பாருயிர்க்கொன்பான்மனையி லரவுபொன்னன்
பகரிருவரிருந்திடுங்கோள் தனக்கொன்பானிற்
கூறினர்களிக்கோட்கள் தனிக்குமாகிற்
கூறியநாட்டிசைமுடிவில் மரணந்தந்தை. (உஎ0)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றனித்திடப்பாவர்நோக்க
விதியுடனக்கோள்தானும் விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடும்பருதிவந்தால். (உஎக)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிசேயொன்ருய்ச் சாரிடங்காரிவீடால்
விதியுடன்பருதியஞ்சில் விளங்கிடச்சுபர்நோக்குற்ருல்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடும்பருதிவந்தால். உஎஉ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்பான்வெள்ளி சற்குருவுடனென்ருகி
விதியுடனுயிர்க்குப்பன்னேன் விளங்கிய தானம்வந்தால்
துதிபிதிர்வயதோரொன்றிற் றுஞ்சிடுங்கணிதமாய்ந்தோர். ()

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்பான்வெள்ளி சற்குருவுடனென்ருகி
விதியுடன்மூன்ருறெட்டு விளங்கிடப்பதினென்ருனல்
துதிபிதிர்புகர்நாள்வந்தாற் றுஞ்சிடுந்தனதிற்பாதி. (உஎச)

பாதியேமரணந்தந்தை பகர்ந்தனர்கணிதமாய்ந்தோர்
நீதியாய்ப்பிதாவூர்பூமி நேர்ந்திடும்புகர்நாள்மாலில்
வேதமாய்வளருந்தந்தை விளங்கியபதிவந்தெய்தும்
ஓதினருமையாளாணை யுரைத்தனர்தப்பாதென்றே. (உஎடு)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பொன்னன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்கரிவீடாக
விதியுடன்பிதிர்க்குநாதன் விளங்கிடமறையுமானல்
துதிபிதிர்குருநாள்வந்தாற் றுஞ்சிடுந்தரணிமாதோ (உஎஙு)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
மதியுடன்சேர்ந்தொன்ருகி வருமிடங்கரிவீடாகச்
சதிருடன்பருதிவெள்ளி சாரிடம்மறையாதானல்
விதியுடன்மரணந்தந்தை விதித்தனர்கரிநாள்போக்கில். (உஎஎ)

சூரியன்கரிமாலொன்ருய்த் தோன்றிடவுயிர்க்குநாலோன்
சீருடன்சுபர்நோக்காமற் சேர்ந்திடஞ்சுபர்வீடாகக்
கூரியவொன்பான்கோளன் குறுகிடம்நீசமானல்
ஆரியனுணைதந்தை யழிந்திடுமுதவான்பாலன். (உஎஅ)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்கரிவீடாக
விதியுடன்வெய்யோன்புந்தி விளங்கிடத்தனிப்பானுகில்
துதிபிதிர்கருமம்பாம்பு தோன்றியதிசையின்போக்கில். (உஎகூ)

வேறு.

மதிமகன்குருதி வரும்பரியுடனே வருமனையுயிர்ந்கொன்ப
தானுல், விதியுடனக்கோள் புகர்மனையதனில் விளங்கிடமறைந்
திடாதிடுகில், சதிருடன்புகரோன் வளருகேந்திரமாய்த் தனித்
திடக் குருமனையானுல், துதிபிதிர்கருமந் தோன்றிடுமதியிற் சுங்
கன்வந்திடுமபகாரம். (உஅ0)

வேறு.

மாலுடனேசூரியனும் புகரினில்லம்
வந்திடவேமால்பரிக்கு நாலஞ்சேழிற்
சீலமுடனென்பதுக்கு வளருங்கோளன்
சேர்ந்திடவேசுபர்களிலே வளருமாகில்
பாலனுதித்திடுமுன்னே கருமமெய்தும்
பதிந்திடுங்கோள்பாம்புமதி பன்னென்றுற்ருல்
காலனுமேகைக்கொள்வா னீன்ருேன்றன்னைக்
காரிதிசையரவுபுத்தி கண்டுகொள்ளே. (உஅக)

வேறு.

மதிமகன்பருதி வளரிடம்மறையாய் வழங்கியகோளனுக்
கஞ்சேழ், சதிருடனென்பான் றனித்திடமறையச் சார்ந்தவீடதி
பனுமறைந்தால், விதிவழியதனு லறையுமோர்வயதில் விளங்கிய
தந்தையுநாசம், பதிதனில்வளருஞ் சேயுமேயந்தம் பழகியகரு
மமேவுதவான். (உஅஉ)

புந்திசூரியனும் பொருந்துகேந்திரமாய்ப் பொருந்தியபுந்தி
சூரியற்கு, வந்துநாலஞ்சேழ் தானமாய்மறையோன் வளங்கிய
வொன்பதுக் குடையோன், விந்தையாயுடனென் ருகிடவுறை
யும் விளங்கியநாதனு மறைந்தாற், சிந்தையாய்வளருங் கரிதிசை
புகர்நாள் சேயவன் றந்தைசெத்திடுமாம். (உஅங)

சூரியன்காரி யொன்பதுக்குடையோன் றோன்றியகோட்க ளொன்றாகிக், காரிவீடதனிற் கலந்தவர்க்காறிற் கருதியபாம்பு வந்திடுமால், கூறிடவருஞ்சேய் தன்னையீன்றத்தன் குறுகிடுங் கூத்தனூரேகச், சீருடனரவு திசையில்முற்பாதி செப்பியபாதி யிற்பாதி. (உ.அச)

வேறு.

சூரியனுமறையாம லுயிர்க்கொன்பானிற்
றோன்றிடவேஅதற்குடையோன் சுபரதாகிச்
சாருமனைமறைந்திடவே வுடன்மால்பாம்பு
தரித்திடவேகரிமனையாய் வரினுமாகிற்
பாரதனிற்பிறந்திடுஞ்சேய் தந்தைகர்மம்
பகருவேன்கணிதநூற் படியதாக
ஆரியன்மேலாணையென வழியுமென்றே
அறைந்தனர்நாலொன்றுவரும் வயதில்மாதோ. (உ.அரு).

வேறு.

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமுன்பின் சாரவேதரியாதாக
மதிமகன்புகர்பான்திங்கள் வருமிக்கோளுதயம்வந்தால்
விதியுடன்மரணந்தந்தை விதித்தனர்கரிநாட்போக்கில். (உ.அசு)

வேறு.

சூரியனுமாதுடனே புகர்வீடாகத்
தோன்றுபுகர்கேந்திரத்தி லுதயமேறப்
பாருயிர்க்கொன்பான்வீடு பாழாய்நிற்கப்
பகரவதற்குடையோனும் பகையாய்நீசஞ்
சீருடனேயிவன்றனக்கே வுபயந்தன்னிற்
சேர்ந்திடக்கேதாகிடவே திகழுந்தந்தை
கூறினர்களிலக்கினக்கோள் திசையிற்கேது
குறுகியநாள்நாசமெனக் கெணிதமோதே. (உ.அஎ)

வேறு.

பிதிருடைத்தானமாமல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சுபர்களோடு சாரிடமறையன்வீடால்
மதிமகன்பருதியொன்றாய் வருமிடங்கரி டானால்
துதிபிதுர்பரிநாள்தந்தை துஞ்சிடுங்கருமநாளில். (உ.அஅ)

வேறு.

சூரியன்மாலொன்பான்கோள் கருமன்வெள்ளி
தோன்றுமிக்கோளோர்மனையாய்ச் சுபர்கள்வீடாய்ப்
பாருயிர்க்குமறையாமற் றரிக்கவிக்கோள்
பகராவிக்கொன்பானிற் சுத்தமானால்
கூறுபுகர்திசையதனிற் புகர்க்கொன்பானிற்
குறுகுமக்கோளபகார முதலேதந்தை
பாரதனில்வருஞ்சிவிகை யோகனுகப்
பகர்ந்தனர்கள்கணிதசோ திடநூலோரே. (உஅகூ)

நூலதனிற்பாலகனை யீன்றதந்தை
நுவல்வயதோரிருபத்தா றதனில்மாயும்
சீலமறைஆகமசாஸ் திரங்கள்நூலாற்
செப்பினர்களிதுதவறு தெனவென்றேது
நீலனுமொன்பான்கோளன் புகர்மால்வெய்யோன்
நேர்ந்துமிக்கோளோர்மனையாய் மறையுமானால்
காலனுடபட்டணஞ்சென் றேகுந்தந்தை
கருதியசேய்பிறந்திடுமன் றுடனென்றேதே. (உகூ0)

சூரியனீரஞ்சாங்கோ ளுடனொன்றுகித்
தோன்றுமதிவீடதனிற் றரிக்குமாகில்
பாருயிர்க்கொன்பான்வீடு புகரேயாகப்
பகருமொன்பான்கேந்திரமாய்ச் சுபர்வீடேகச்
சாராவிக்கொன்பதனி லாவுசேரத்
தப்பியதோர்சேயதனை யீன்றவுத்தன்
ஆரிருகோள்திசைமுடிவில் மரணங்காட்டும்
ஆரணங்கேகருமத்துக் குதவுவானே. (உகூக)

சூரியனுங்கரிமனையிற் றனிக்கவக்கோள்
தோன்றுயிர்க்கீரஞ்சாங்கோ ளுடனொன்றுகிச்
சாருயிர்க்கொன்பான்மனையிற் றரிக்கவொன்பான்
தானுமேசட்டாட்டத் தானஞ்சேர்ந்தால்
சீருடனேதோன்றிடுஞ்சேய் தன்னையீன்றேன்
தென்புலஞ்சேர்ந்திடும்விதியைக் கெணிதமாகக்
கூறினர்கள்வயதிருநா லுபயந்தன்னிற்
குறுகிடுமேவருங்கரும மேற்குமாதே. (உகூஉ)

மாதேகேள்வருமுயிர்க்கொன்பதனிற்கேது
வந்திடவேஅதற்குடையோன் மறைவீடேக
ஓதுமெனவொன்பான்கோள் தனக்கொன்பானில்
உயர்வுடன்மால்சூரியன்சே யரவுசேர்ந்தால்
நீதியுடனொன்பான்கோள் தனக்கெட்டோன்றன்
நேர்திசைவந்திடுந்தனதிற் சேயீன்றத்தன்
வேதமொழிப்படியெனவே மரணமென்று
விதித்தனர்களாகமசாத் திரங்கற்றோரே. (உகூங)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்புகர்பானோடு தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்கருமக்கோளன் விளங்கிடம்நீசமுற்றால்
துதிபிதிர்கருமன்நாளிற் றுஞ்சிடுந்தனதுபோக்கில். (உகூசு)

மாதுடன்பருதியொன்பான் வருமிக்கோளோர்வீடேகிச்
சீலமாய்ப்பிதிர்த்தானத்திற் சேயுடனரவுசேர்ந்தாற்
றூலமாய்வரினுந்தந்தை துஞ்சிடுமொன்பான்கோளன்
நீலன்வந்திடுநாட்போக்கில் நிகழ்த்தினர்கணிதமாய்ந்தோர். ()

காரிசேய்பருதியொன்பான் கருதுமிக்கோட்களொன்றாய்ச்
சீருடன்பிதிர்த்தானத்திற் சேர்ந்திடப்பவர்நோக்கில்லா
கூறிடவருஞ்சேய்தந்தை குறுகிடுமொன்பான்நாளில்
மாறியேபருதிவந்தால் மாய்ந்திடுந்தரணிமாதோ. (உகூசு)

வேறு.

பொன்னவன் புகர்மால்வெய்யோன் பொருந்துமொன்பானுமொன்றாய், மின்னியபிதிர்த்தானத்தில் விளங்கிடச்சுபர்நோக்கில்லா, அன்னமேதோன்றுஞ்சேய்க்கே அறைந்தனரொன்பான்நாளில், துன்னியபருதிவந்தாற் றுஞ்சிடும்பிதாவென்றோதே. ()

வேறு.

புந்தியுடன்சேய்புகரு மிவர்களொன்றாய்ப்
பொருந்துயிர்க்கொன்பான்கோளன் வீட்டிலேகி
வந்திடவேஅதற்குடையோன் கரியனில்லம்
வருங்கரியனிவருக்கே ழாகுமாகில்

விந்தையுடன்வருங்கொடியோன் பருதியோடு
விளங்குயிர்க்குமறையாமற் றரிக்குமானால்
சிந்தையுடன்பருதியா றிரட்டியொன்றிற்
செத்திடுமேவருந்தந்தை கருமமேறான். (உ௯அ)

ததியாகுமிலக்கினத்துக் கொன்பான்வீட்டிற்
றரித்திடமால்சூரியன்சே யரவுமொன்பான்
விதியாகவுடனிவர்கள் கூடியொன்றாய்
விளங்குமதிதனக்கெனவே மறையாதானால்
துதிபெறவேவொன்பான்கோள் தனக்கேயெட்டோன்
தோன்றுதிசையந்தியமாய் வரினுந்தந்தை
அதிபதியாய்மரணமென்று கெணிதமாய்ந்தோ
ரறைந்தனர்கள்வருங்கரும மேறான்மாதே. (உ௯௯)

வேறு.

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவெய்யோன்
சதிருடன்கரிமால்பத்தோன் சாருமிக்கோட்களொன்றாய்
விதியுடன்பிதிர்த்தானத்தில் விளங்கிடவொன்பான்கேந்த்ரம்
துதிபிதிர்கருமன்நாளிற் றுஞ்சிடுங்கரிநாட்போக்கில். (௩00)

வேறு.

சந்திரனும்புந்தியுடன் பிதிர்தானத்திற்
றரித்திடவேபிதிர்தானத் துடையநாதன்
வந்துபுகராகிமறை யோன்றன்வீட்டில்
வளருமொருகோளுடனே தரியாதாகச்
சிந்தையுடன்வரும்பருதி யீரஞ்சேகிச்
சேர்ந்திடவேதோன்றியசேய் வளருந்தந்தை
சுந்தரமாய்வயதிருவே முஞ்சின்மேலாய்த்
துஞ்சிடுமேதப்பாது கணிதமோதே. (௩0௧)

சூரியன்மால்வீடதனிற் றனிக்கவக்கோள்
தோன்றுயிர்க்கொன்பான்கோளன் கருமன்பாம்பு
சாருமிக்கோளொன்றாகி மறையாதாகி
தரித்திடவேயிவர்கடனை மறையோன்நோக்கச்
சீருடனேவொன்பான்கோள் திசையில்வெய்யோன்
சேர்ந்திடும்நாள்முடிவதனி லீன்றவத்தன்

பாருயிர்விட்டேகிடுமே எமலோகத்திற்
பகருமிதைக்கணிதவழி யறிந்துசெப்பே. (௩௦௨)

கரியுயிர்க்கொன்பான்கோளாய்க் கருமனோடு
கருதுதயகேந்திரத்திற் றரிக்குமாகில்
வருமுயிர்க்கீராறதனிற் பருதியுச்சம்
வந்திடவேஅதற்குடையோ னதனிற்சேர்ந்தால்
சரியுடன்தோன்றிடுஞ்சேயை யீன்றவத்தன்
தனக்குமேஇவன்கரும மேற்கானுகும்
தருமுயிர்க்காறதிற்பருதி நீசமானுற்
சார்ந்திடுஞ்சேயோர்வயதிற் சாயுந்தந்தை. (௩௦௩)

சூரியனுங்கேந்திரமாய் நீசமேறித்
தோன்றிடவேவுடனொருகோள் சுபர்கள்சேரச்
சாருமிக்கோளிருந்திடும்வீ டதிபன்றானுஞ்
சந்திரன்பாம்புடன்குளிகன் பரிவீடேகிக்
கூருமெனவொன்பான்கோ ளுதயமேறிக்
குறுகிடவேஉச்சமவர் தனிக்குமானால்
சூரியன்வந்திடுமதிபன் றிசையிலொன்பான்
றோன்றுமபகாரம்வரில் நாசந்தந்தை. (௩௦௪)

வேறு.

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சேய்வீடாக
விதியுடனதற்குநாதன் விளங்கிடவுடன்வந்துற்றால்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுமதிநாள்வந்தால். (௩௦௫)

வந்திடுங்கனவான்றந்தை வகுத்தனரதிநற்பூமி
சிந்தையாய்வருமென்றோதிச் செப்பினர்கணிதமாய்ந்தோர்
சுந்தரப்படியிப்பூவிற் றோன்றியசேய்க்குச்செல்வம்
வந்தநாள்முதலேதொட்டு வரவரவுயர்ந்தவாழ்வே. (௩௦௬)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மால்சேய்பானு சற்குருவுடனொன்றாகி
விதியுடனுயிர்க்குமூன்று றெட்டில்வீற்றிருக்குமானால்
துதிபிதிர்பதினாறுக்குள் துஞ்சிடுந்தரணிமாதோ. (௩௦௭

சூரியன்புகர்மால்சேய்பொன் தோன்றுமிக்கோட்களொன்றாய்ச்
சாருயிர்தனக்கீராறிற் றரித்திடச்சுபர்நோக்கில்லாச்
சீருடனொன்பான்கோளன் சேரிடமுயிர்க்கேழுற்றால்
கூறினர்வயதேழொன்றிற் குறுகிடும்பிதாவென்றோதே. (௩௦அ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
விதியுடனுயிர்க்கீராறில் விளங்கிடவக்கோள்தானும்
மதிமகன்புகர்பொன்பானும் வருமிடம்பன்னொன்றானால்
சதிருடன்பத்தேழொன்றிற் சாய்ந்திடும்பிதாவென்றோதே. ()

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சேயோடொன்றாய்ச் சாரிடங்கருமன்வீடாய்
விதியுடன்பிறந்தசேய்க்கு விளங்குநற்றந்தைதானும்
பதினில்வயதுமுப்பத் தாறினிற்பாழாமாதே. (௩௧௦)

மாதென்வலரியொன்பான் வக்கிரனுடனேகூடி
வேதமாய்க்கருமன்வீட்டில் விளங்கிடக்கருமன்றானும்
ஓதியபகைநீசங்க ளுதவியதானஞ்சேர்ந்தால்
சோதிடமாகத்தந்தை தோன்றியகருமமேற்கான். (௩௧௧)

வேறு.

சூரியனுங்கரியன்மனை யதனிலேகத்
தோன்றுகரியுயிர்க்கீரா றதனிற்போகப்
யாருயிர்க்கொன்பான்கோளன் மூன்றுறெட்டிற்
பகர்ந்திடவேவுடனொருகோள் சுபர்வந்துற்றால்
சூரியன்வந்திடுமதிபன் றிசையிலாரல்
தோன்றுமபகாரமதில் முடிவிற்றந்தை
கூறுமெமபுரமணுகுங் கணிதநூலாற்
குறித்தனர்களிதுமறையோன் கூறுமாதே. (௩௧உ)

மாதேகேள்வருந்தந்தை கிரகம்பூமி
வளருமற்பமாகவென வுதவாதென்றே
நீதியுடனுயிர்க்கதிபன் றிசையிற்காரி
நேருமபகாரமதிற் பாதிமேலாய்
சீதமுடனோர்கிரகம் பிதாவுமல்லாற்
சேர்ந்திடுமேஅதுபெலமில் லாமலாகும்
வேதமெனவருங்கொடியோன் திசையிற்சுங்கன்
விளங்குமிவர்நாள்வருகிற் கிரகமொன்றே. (௩௧௩)

வேறு.

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமாட்சியுச்சம்
விதியுடன்தனிக்கவந்த மேன்மையாம்சேய்தன்தந்தை
பதிதனில்நாசம்பாம்பு பகர்திசைநாளிற்கேது. (ஙகச)

வேறு.

மாதேகேள்வருமுயிருக் கொன்பான்நீசம்
வந்திடவேமால்குருதி யுடனொன்றாகச்
சீதமுடனுயிர்தனக்கீ ரஞ்சாங்கோளன்
சேரிரவிமாந்தியுடன் கூடியொன்றாய்
நீதியுடனுயிர்தனக்கெட் டலதுபன்னோன்
நேர்ந்திடுமித்தானம்வரப் பயந்ததந்தை
ஓதுமெனமொழிகபடன் கொடியசொல்லன்
ஒழிந்திடுநாட்கணிதமுறைப் படியேசெப்பே. (ஙகரு)

செப்புமெனச்செஞ்சுடரோ னேகுமில்லஞ்
சேருமவர்க்கீரஞ்சாங் கோளன்நாளில்
தப்பியதோர்திசைபுகரில் நாசந்தந்தை
தன்கருமந்தாரணியி லுதவுமென்றே
முற்படியேவருந்தந்தை கிரகம்பூமி
மொழிந்திடும்பாக்கியமெனவே நாசங்காட்டும்
துப்பிதழாயிதுதவறு தெனவென்றோதிச்
சோதிடசாஸ்திரப்படியே கணிதமோது. (ஙகசு

ஓதுமெனவொன்பான்கோ ளேகுநாதன்
உறையுமிடமாட்சியுச்சம் வளரமாந்தி
நீதியுடன்வருமலரி யிவர்களோடு
நேர்ந்திடுமொன்பான்றனக்கே உபயமானால்
வேதமுடன்தோன்றியசேய் வளருந்தந்தை
விளங்குமட்டமக்கோளன் றிசையிலம்மா
சீதமுடன்நாள்வருகில் மரணமெங்கு
செப்பினர்கள்சூரியன்றன் றுணைகூறே. (ஙகஎ

சூரியனுமாரல்மனை யதனிலேகத்
தோன்றுமதற்குடையோனுஞ் சோமனோடு

பாருயிர்க்காறட்டமமீ ராறிலேகிப்
பகர்ந்திடமுன்பின்புபாழ் வீடதாகச்
சாருயிர்க்கொன்பான்கோள னுதயமேறித்
தனித்திடவேதோன்றியசேய் தன்னையீன்றோன்
கூறுமெமபுரமடையக் கணிதநூலாற்
குறித்தனர்களிரவிக்கொன் பான்கோட்போக்கில். ()

மானுயிருக்கொன்பான்கோ ளுதயமேறி
வந்திடவேசுபர்வீடா யாகுமாகில்
சீலமுடன்பரியுடனே கருமனென்றுய்ச்
சேருமிடமிலக்கினத்துக் குபயமானல்
நூலமெனவரும்பருதி திசையிற்பத்தோன்
தோன்றுமபகாரம்வரி லீன்றவத்தன்
காலன்வருமுலகமதி லேகுமென்று
கருதியசோதிடவிதியாற் றிரட்டிச்சொல்லே. (ருகக)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சேயோடொன்றுய்ச் சாரிடங்கரிவீடேக
விதியுடன்பருதியாரல் விளங்கிடப்பிதிர்த்தானத்தில்
மதியுடன்மறைசேர்வானல் வருந்தந்தைகருமமேறுன். (ருஉ0)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கிரண்டிற் றனித்திடவவர்க்கிராறில்
மதிமகன்பருதிபாம்பு மாந்தியோடிவர்கள்சேர்ந்தால்
விதியுடன்றோன்றுமுன்னே விதித்தனர்தந்தைநாசம். (ருஉக)

தந்தையர்நாசங்காட்டுஞ் சார்ந்திடுஞ்செல்வம்பூமி
விந்தையாய்க்கிரகமெல்லாம் விதித்தனருதவாதாகும்
முந்தியபிதாவூரல்லால் மொழிந்தனர்சிலநாள்வேறுய்ச்.
சிந்தையாய்ப்புகர்நாட்பாதி சேர்ந்திடுங்கிரகஞ்சொந்தம். ()

வேறு.

சூரியனென்பான்கோளன் புகர்மாலோடு
தோன்றுயிருக்குபயமதிற் றரிக்குமாகில்
பாருயிர்க்கொன்பான்மனையி லொருகோளேகப்
பகருமொன்பான்மனைதனையே மறைநோக்குற்றுல்

சீருடனேவருந்தந்தை கிரகம்பூமி
சேர்தனமும்யோக்கியமாய் வளருமென்றே
சாருமெனத்தோன்றியசேய் தன்னையீன்றோன்
சார்ந்திடுமேவயதிருப துபயமேலாம். (௩௨௩)

வேறு.

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுதயமேறித் தனித்திடச்சுபர்வீடாக
விதியுடன்பரிமால்சுங்கன் விளங்கிடமறையுமானால்
அதிபிதிர்கருமஞ்செய்யத் தோன்றிடான்பிறந்தசேயாம். ()

வேறு.

சூரியன்வீடதிலுயிர்க்கொன் பான்கோளேகித்
தோன்றிடவேஅதற்குடையோன் தோன்றுமில்லங்
கூருமெனவுயிர்தனக்குப் பதினொன்றேகிக்
குறுகிடவேமால்குருவு மதனிற்சேர்ந்தாற்
சீருடன்றோன்றியசேயை யீன்றவத்தன்
தென்புலஞ்சேர்ந்திடும்விதியைக் கணிதஞ்செப்பக்
கூறினர்கள்வருமுயிர்க்குக் கருமந்தன்னிற்
குறுகிடவேபாம்புபுக ரஞ்சோன்நாளில். (௩௨௫)

நாளெனவேவருமரவு திசையிலொன்பான்
நல்குமிடமிருந்ததிப னளின்போக்கிற்
சூழறவேவருந்தந்தை நாசங்காட்டுந்
தோன்றியதோர்வருங்கரும மேறுன்சேயாம்
வாழ்வுடனேவொன்பான்கோ ளுடன்மால்வெய்யோன்
மறையுமொன்றுயிலக்கனத்தில் வரினுமானால்
தாழ்விலாமற்பிறந்த சேயின்றந்தை
சாய்ந்திடுவன்சேயுதித்த பொழுதின்மாதோ. (௩௨௬)

கரியுமுயிர்க்கோளாகிக் கருமனோடு
கருதுதயகேந்திரத்திற் றரிக்குமாகில்
வருமுயிர்க்கீராறதனிற் பருதியுச்சம்
வந்திடவேஅதற்குடையோ னதனிற்சேர்ந்தால்
தரையதனிற்றோன்றியசேய் தன்னையீன்றோன்
சார்ந்திடுவன்வயதிருப தேகமேலாய்த்
கருதுமெனவருங்கரும மேறுன்சேயுங்
கணிதமுறைதப்பாது சாற்றும்வண்ணம். (௩௨௭)

சந்திரன்மூன்றுங்கோளாய் மறைகேதோடு
சாருமிடங்கரிவீடாய்த் தரிக்குமாகிற்
சிந்தையுடனிக்கோட்க ளிருந்தநாதன்
சேருயிரிற்றனித்திடவே பவர்நோக்குற்றால்
வந்துயிர்க்குமூன்றுங்கோள் திசைநாள்மட்டும்
வளர்தந்தைசெல்வமதால் வாய்க்குமின்பம்
விந்தையுடன்மதிதனையே புகர்நோக்காரேல்
விளங்குதிசைமுடிவுவரை பீடையாமே. (ருஉஅ)

வேறு.

பிதிருடை..த்தானம்வெய்யோன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சனியுடனுயிர்க்கெட்டானால்
விதியுடன்கரிநாள்வெய்யோன் விளங்கபகாரம்வந்தால்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தொகுத்தனர்கணிதநூலால். (ருஉகூ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்குருவீடேகப்
பதிபிதிர்க்குடையோன்நீசம் பகர்ந்திடமாலோனானால்
துதிபிதிர்மாலோன்நாளிற் றுஞ்சிடுங்கரிநாட்பாதி. (ருருஓ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனிரவியொன்றாய்த் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடன்பருதிவீட்டில் விளங்கிடப்பவர்வந்துற்றால்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தோன்றிடான்பிறந்தசேயான். ()

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குப்பத்திற் றனித்திடச்சுபர்நோக்கில்லா
விதியுடன்பரிமாலொன்றாய் விளங்கிடமூன்றிலானால்
துதிபிதிர்பரிநாள்தந்தை துஞ்சிடுந்திசையினந்த்யம். (ருருஉ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குமூன்றிற் றனித்திடப்பிறந்தசேய்க்கு
விதியுடன்கணிதமாய்ந்தோர் விதித்தனர்தந்தைகர்மம்
பதிதனிலுதவானென்று பகர்ந்தனர்தரணிமாதோ. (ருருங)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்திக்கேழாகப்

பதிபிதிர்க்குடையோன்புந்தி பகருகேந்திரமேயானல்
துதிபிதிரீரேழொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௩௩௪)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
விதியுடனுதயமேறி விளங்கிடக்காரியோடு
சதிருடன்பிதிர்க்குநாதன் சாரிடங்கரிவீடானல்
துதிபிதிரருக்கனவந்தாற் றுஞ்சிடுந்திசைமுற்பாதி. (௩௩௫)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றனித்திடப்பவர்நோக்கில்லா
விதியுடன்பரிமால்சுங்கன் விரைவுடன்மதிவீடுற்றால்
துதிபிதிர்கரிநாள்வந்தாற் றுஞ்சிடுந்தனதில்மாதோ. (௩௩௬)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பரிமாலொன்றாய்ச் சார்ந்திடப்பிதிர்த்தானத்தில்
விதியுடனிக்கோள்தன்னை விளங்கியபவர்நோக்குற்றால்
துதிபுகர்திசையிற்றந்தை துஞ்சிடுங்காரியூனில். (௩௩௭)

மந்தனுமொன்பான்கோளும் வருமுயிர்தனக்குநாலில்
வந்திடவதற்குநாதன் வரும்பரிபுகரோடொன்றாய்ச்
சிந்தையாயுயிர்க்கிரண்டிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
விந்தையாய்க்கரிநாள்தந்தை விதித்தனர்நாசங்காட்டும். (௩௩௮)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சுபர்லீடேகித் தனித்திடமறையாதானல்
விதியுடன்பருதிபுந்தி விளங்குகேந்திரமேயாகில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனனீரஞ்சொன்றில். (௩௩௯)

சூரியன்மதிமால்சுங்கன் தோன்றுமிக்கோட்களொன்றாய்க்
காரிதன்வீட்டிற்சேரக் காரியுஞ்சேய்வீடுற்றால்
சீருடன்பாம்புநாளிற் றிரமுடன்மாலோன்வந்தால்
ஆரியனுணையாக வறைந்தனர்தந்தைநாசம். (௩௪௦)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்கெட்டிற் றனித்திடச்சுபமில்லாதால்
விதியுடன்பிதிர்த்தானத்தில் வெய்யவன்றனிப்பானுகில்
துதிபிதிர்கருமஞ்செய்யத் தோன்றிடும்முப்பத்தஞ்சில். (௩௪௧)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடங்குருதியில்லாய்

பதிபிதிர்க்குடையோன்ருனும் பகரிடமால்வீடானுல்
விதியுடன்வயதோரஞ்சில் விதித்தனர்தந்தைநாசம். (ருசஉ)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவெள்ளி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்புகர்வீடாக
பதிபிதிர்க்குடையோன்ருனும் பகரிடமதிவீடானுல்
துதிபிதிருபத்தஞ்சிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (ருசங)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்புந்தி
சதிருடன்காரியோடு தரித்திடப்பவக்கோள்நோக்கப்
பதிபிதிர்க்குடையோனேடு பார்க்கவன்சசிவந்துற்ருல்
விதியுடன்வயதுபத்தில் விதித்தனர்தந்தைநாசம். (ருசச)

வேறு.

"அரிபத்தாயவ்வீட்டுக் கதிபனுந்தான்
அவர்வீட்டிலிருந்திடவுந் துணையில்லாமல்
விரிகுழலாய்வேதன்மதி யீராறெய்தவ்
வேதன்மதிக்கீராறிற் கொடியோன்சேர்ந்தால்
தருசெனனஞ்சுத்தமதா யிருந்தபேர்க்குத்
தனங்காலிபூமிகளுங் கொடுக்குமல்லால்
கருமுதலாய்வயதிருப தின்மேலஞ்சுள்
காலனிடத்தனுப்புவன்பி தாவையென்றே. (ருசடு)

மதிமாலுங்குருவுமொரு வீடாகமதியன்
வளரிடத்தோன்சுபராக மறையாதேயிருந்தால்
மதியனின்றமுன்பின்னும் புகரிருக்கிலவற்கு
வருந்தனமும்வாகனமும் பூமியுடன்றருமாம்
மதியனுடன்பளிங்கவனுஞ் சேரவுமவ்வில்லோன்
வரும்பாவராகிடவும் வருந்தலவுமுடையோன்
மதிபகையாமரணமட்டுந் தரித்திரமெய்யாது
மைக்குழலாய்முப்பதின்மேல் மூன்றில்பிதாவொழியும்.

வேறு.

சூரியன்மாலோடாறிற் ருேன்றிடச்சுபர்களோடே
வீரதிகருமக்கோளன் விளங்கிடமறைவாராகில்
ஆரியசெனனந்தொட்டு அலைச்சலாற்றுன்பமெய்தும்
பாரினில்வயதீராறுள் பலனிவையென்னலாமே. (ருசஎ)

ஆமதின்மேலாயின்ப மரும்பிதாவலைச்சல்காட்டும்
நேமமன்னியதேசத்தில் நேருவனென்றுசொல்வாய்
காமனைசெயித்தமானே களறிருபதின்மேலஞ்சில்
ஏமனுமுதயந்தானு மெடுப்பனும்பிதாவின்கர்மம். (ருசஅ)

வேறு.

தந்தை காரகன் சனியுட னேகவுஞ் சனியன்
வந்த யிற்பகை யாகிடப் பாம்புதித் திடுமால்
விந்தை புத்திரன் வயதுமீ ராறினுட் பிதாவை
அந்த ரத்தினி லெடுத்திடு மென்றிடு மழகாய். (ருசகூ)

வேறு.

அட்டமத்தில்மாந்திசுடர் மாலெய்தாலும்
அட்டமத்தோனிக்கோட்கள் வீடெய்தாலும்
விட்டமதியட்டமத்தோ னிருந்தயில்லம்
விளங்குசுத்தம்வரமுன்பின் ரேன்றுமானால்
திட்டமுயிர்தனக்குநா லேழொன்பானாற்
சேர்ந்திடநாற்பத்தஞ்சிற் றந்தைபோக்காம்
கட்டம்பின்னேகமதுள் மாதுர்போமால்
காரகன்முன் நூலறிந்து கணித்தார்மேலோர். (ருடு0)

வேறு.

சூரியனுட்சியுச்சந் தோன்றிடக்குருவெய்தாலும்
பாருயிர்க்கொருநாலாகிற் பகலவனிருந்தவில்லோன்
நேருபஞ்சமமேழொன்பான் நின்றிடமறையோன்சேர்ந்தால்
கூருநாற்பதின்மேலெட்டிற் கொன்றிடும்பிதாவையென்பார். ()

என்புகூரியனும்வேரு யிருந்திடநீசமானால்
வன்பதமிருபதின்மேல் மாய்ந்திடும்பிதாவையென்பார்
தன்பகையாகுமானாற் றந்திடுமுப்பத்தொன்றில்
இன்பமோர்சதுரந்தன்னி லிமனிடத்தனுப்புந்தந்தை. (ருடுஉ)

மால்புகருடனேமிக்க வருந்துசூரியனுற்றாலும்
மாலவன்முன்பின்னாக வருங்கரியாரல்சேர்ந்தால்
மாலவனுயிர்க்குப்பன்னேன் ரூனமேபாம்புற்றாலும்
மாலதாய்ப்பிதாவுமிக்கோய் வருந்துகாயாசந்தோய்வன். (ருடுங)

சூரியனுறீருகிற் றோய்ந்திடப்புகர்மாலேகச்
சூரியனிருந்தவில்லோன் றொகுத்துயிர்மறையுமாக
நாரியேவுயிர்க்குநாலில் நாகமாம்பாம்பிருக்கில்
கூரியவிருபத்தொன்பாம் வயதினிற்பிதாவும்போமாம். (௩௫௪)

* பிதிர்புகர்வியத்தில்மேவப் ‡ பிதிரவன்பாவர்சேரக்
கதிரவனின்றராசிக் கதிபதிதிசையூண் தன்னில்
விதியுடன்பிதிர்க்குக்கர்மம் மேவுமுப்பத்திரண்டிற்
சதிருடன்முப்பத்தாறிற் சந்ததிபுதல்வருண்டாம். (௩௫௫)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சுபர்களோடு சாரிடம்பவர்வீடுற்றால்
விதியுடன்கரிமால்தானும் விளங்கிடமறைவதானால்
துதிபிதிர்பதினுறக்குட் டுணிவுடன்கருமமாதோ. (௩௫௬)

வேறு.

பிதிருடைத்தானங் காரியாய்ப்பத்தோன் பேரில்லமாகவே
அக்கோள், சதிருடனுயிர்க்கு நாலினிற்றோன்றச் சற்குருகேது
டன்தரித்தால், விதியுடனிரவி யுயிரினில்வருக விளங்கியபுகர்
மதிமாலுந், துதிபெறவாவிக் கிரண்டினிற்றோன்றச் சொல்லினுர்
பிதாவுடன்கருமம். (௩௫௭)

சொல்வதுகருமங் குருதிசையதனிற் றோன்றிடும்புகருடன்
பெலமாய், நல்மொழிவசத்தன் நயகுணசீலன் நாடினுர்பெரிய
வர்மொழியால், வெல்வதுபத்தி லரவுமேதனித்தால்வேந்தரால்
முயற்சிகள் பெலமாய்ச், சொல்வதுவயது நாற்பத்தெட்டதன்
மேற் றோன்றிடுமுயற்சிகளதிகம். (௩௫௮)

அதிகமாயிருப்ப னிரண்டின்கோட்டிசையி லந்தணன்பொ
சிப்பினிலாகுங், கெதிபெறக்கீர்த்தி வாகனங்கிரகங் கெணித்த
னர் வெகுபிரபலமாய்த், துதிபெருமரசர் தனமுடன்வாழ்வன்
சொல்லினுர் யாவரும்வணங்கும், விதியுடன்வாய்க்கும் பூமியுஞ்
சேரும் விளங்கியசாதகன் றனக்கே. (௩௫௯)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனிரவிசுங்கன் தன்னுடன்மறைவதானால்

* பிதா - ஒன்பதுக்குடையவன். † பிதிரவன் - சூரியன்.

விதியுடன்கரிமால்வீடாய் விளங்கிடச்சேய்நோக்குற்றால்
பதிதனிற்பிதாவின்கர்மம் பாலகனுதவான்மாதோ. (ருசுO)

ஒன்பதுக்குடையோன்றன்னோடுற்றிடுங்கிரகந்தன்னை
வன்பினாற்செவ்வாய்காரி வாக்குடன்நோக்கச்சோமன்
அன்பினாற்பத்திற்சேரி லறைந்தனர்புதனிற்காரி
இன்பமாய்வந்தபோதி லெய்திடும்பிதாவின்கர்மம். (ருசுக)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சுபர்வீடாகப்
பிதிர்தனக்குடையோன்புந்தி பீதகனதனிற்சேர்ந்தால்
விதியுடன்முப்பத்தொன்றில் விதித்தனர்தந்தைநாசம். (ருசுஉ)

பிதிருடைத்தானஞ்செவ்வாய் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சோமன்மாந்தி தன்னுடனுயிர்க்கிரண்டில்
விதியுடனிரவிமாலும் விளங்கிடமறையப்பொன்னன்
சதிருடன்நோக்கத்தந்தை சாய்ந்திடுபெலமென்றோதே. (ருசுங)

பிலமெனுஞ்சுங்கன்கூடிப் பிரீதியாயுயிர்க்கிராறில்
பலமுறவயதுநாலு பத்துடனிரண்டிற்போகுஞ்
சலமுடன்பெலமில்லாமற் சஞ்சலமாகப்பின்னே
குலமுடன்வந்துசேரக் குறித்தனர்தமிழையாய்ந்தோர். (ருசுச)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குமூன்றிற் றனித்திடப்புகரேநோக்க
விதியுடனிரவிமந்தன் விளங்கியராகும்பத்தில்
துதிபிதிருமூன்றஞ்சிற் றுஞ்சிடுமாவுபொன்னில். (ருசுடு)

வேறு.

ஒன்பதுக் குடையோன் கேந்திரமதனி லுதித்திடச்சோ
மனுங்கூட, இன்பமாய்க்கருமன் கேதுடன்லாப மிருந்திடக்
குருவுமேபார்க்க, அன்பிலாப்பாம்புங் குருவுடனஞ்சி லமர்ந்தி
டப்பிறந்த சாதகற்குத், துன்பமாயரவு திசையினில்மாலோன்
தோன்றிடப்பிதாவுடன் கருமம். (ருசுஎ)

வேறு.

லக்கினத்தில்மந்திரியும் புகருமாக
நட்பாட்சியுச்சமதிற் சனியுமாகப்
பக்கமுடன்சேய்கிரகம் பாழாய்த்தோன்றப்
பதினொன்றுக்குடையோனும் பகையேசேரச்

சக்கரைபோற்பிள்ளையுந்தான் பிறக்குஞ்சொன்னேன்
தன்வயதோரெட்டினுக்குட் டந்தைபோகும்
அக்கிரகம்விட்டுத்தான் வெளியேசேர
அயலூரிற்பிரவேச முரைத்தார்மேலோர். (௩௬௭)

வேறு.

மதியுமேதன்வீடாக மாந்தியுமதனிற்சேர
விதியுடன்மங்கைதானம் வீடுமேசுத்தமாக
அதிபதிக்குடையோன்வீட்டி லமர்ந்திடப்பாவர்சேர்ந்தால்
துதிபிதிர்கீர்த்திசெல்வம் சுத்தமென்றுரைத்தார்மேலோர். ()

வேறு.

சூரியன்மாலோன் மறைந்திடச்சுங்கன் தோன்றிடக்காரி
கேதுடனே, பாரினிலுயிரிற் பதிந்திடச்செவ்வாய் பாக்கியத்தா
னத்தைப்பார்க்கில், வீரியமில்லாக் கதிரையும்நோக்கில் விதித்த
னர் புகர்பரிமாலூண், சாருமேபிதாவின் கருமமேமுடிக்கச் சாற்
றினர் பெரியவாருளால். (௩௬௬)

ஏழினுக்குடையோன் முன்பினிற்பாவ ரிருந்திடக்கேந்திர
மதனில், ஆழ்வெயிற்றுனம் பாவராயிருக்க வதிபதியுச்சமாயிருந்
தால், ஊழ்விதிப்படியாய்க் கணிதநூலுரைத்தா ரொன்றிரண்
டானதோர்வயதிற், பாழ்படவொழிக்குந் தந்தையர்கருமம் பக
ரலாமவனுடயாக்கை. (௩௬௭)

சந்திரனேழிற்சற்குருகேது சார்ந்திடனிலமகன்கூடத், தந்
திரத்துடனே ஆட்சியாயுச்சஞ் சதிருடன்பகையதா யிருக்கில்,
அந்தரவிழியா னவனுடயோக மையஞ்சுவயதிலேசாற்ற, மந்திர
முடனே கெணிதநூல்விதித்தார் வாழிபப்பிதிர்கர்ம முடை
யோன். (௩௬௮)

வேறு.

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுங்காரி சற்குருவீடானாலும்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவராயிருமூன்றுள்ளாய்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்திடாரென்றுகூறே. (௩௬௯)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்காரிற் றரித்திடவுயிரோடோடு

விதியுடன்பரிமால்பாம்பு விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுங்காரிவந்தால். (ருஎரு)

மந்தனும்பாம்போடொன்ருய் வந்திடப்பிதிர்த்தானத்தில்
விந்தையாயக்கோள்நீசம் விளங்கிடச்சுபரோடாக
வந்துயிர்தனக்குப்பன்னென் றதனிலேமால்பான்வந்தாற்
றந்தையரரவுநாளிற் சாய்ந்திடுமறைவந்துற்ருல். (ருஎச)

வேறு.

சிங்கலக்கனத்திற் றினகரன்மாலுஞ் சேர்ந்திடவொன்று நான்கேழிற், பங்கமில்லாமற் சனியுமேயிருக்கப் பாக்கியத்ததிப னுங்கேதுஞ், சங்கையாயுச்ச மாட்சியாயிருந்தாற் சாலவேபதி னெட்டுவயதில், மங்கையரெடுக்குந் தந்தையர்கருமம் வகுத்த னர் முப்பதுமிரண்டில். (ருஎடு)

மறையவனுச்சம் விளங்கிடவுஞ்சில் மதிமகனிரவியும் புக ரும், நிறையுடன்நட்புப் பகையதாயிருக்கில் நிகழ்ந்திடுந் தந்தை யர்கருமந், துறையுடனவற்கு முப்பத்தேழொன்றிற் ருெலையுமே தந்தையரென்று, தறையினிற்கெணித சாத்திரம்பார்த்துச் சாற் றினரவருடபலனை. (ருஎசு)

வேறு.

பகலவன்கரிவீடேகப் பார்க்கவன்கொடிவீடாகத்
தகரிலாப்பாம்புசேயுஞ் சாரவேபகையினில்லம்
பகருடனைந்திரண்டு பத்தினிற்றந்தைசாவாம்
நகரதிலவற்குத்தாரம் நாசமாபொழியுமென்றே. (ருஎஎ)

வேறு.

துலையதிற்சேயு மாந்தியுமாகச் சூரியனவருடன்கூடப், பெ லத்துடனவருக் கொன்றுநான்கேழிற் பெலமுடன்மதிமக னிரு க்கக், கலக்கமில்லாத யோகனேயாவன் காரியனமைச்சர்க்கு நிகராய்த், தலத்துடனிருந்து வாழ்குவனென்றே சாதகன்நிலை யுரைத்தனரே. (ருஎஅ)

உரைத்தவர்பெரியோ ருயிர்க்குளோன்வீட்டி லுலோகிதச் சேயிருந்தாலும், வரைத்ததுஆறு பத்துமேமூன்று வாலிபப் பிதிர்கர்ம முடையோன், கரைத்துமேயொளிப்பா னிருப்துநா லிற் காதலியவனுடன் சேர்வாள், விரைத்ததுஅவன்றன் மொழி தவருது வேந்தற்குவொப்பலாம் விரலோன். (ருஎகூ)

லக்கினந்தன்னிற் குளிகனுமிருக்க நாலிலேயேழினுக்குடையோன், மக்கனமாக முன்பினிற்பாவர் வந்தவர்பகையதாயிருக்க, இக்கணமவர்க்கு வரும்பலனெல்லாம் யினமாயொழிந்திடுமதன்பின், பக்குவவயது இருபதுநாலிற் பான்மையாந் தந்தையையெடுக்கும். (ருஅ0)

மகரலக்கனத்தில் மந்திரிகேது வளமுட்னீசமாயிருக்கத், பகருதற்கரிய குளிகனுமூன்றிற் பங்குவும் நட்பதாய்த்தோன்றப், புகருடன்புந்தி மிதுனத்திற்சேரப் பூமனுஞ்சூரியன் பாம்பும், தகவிலாதிருக்கிற் றந்தையர்கருமஞ் சாற்றினார்நாலிரண்டதனில். (ருஅக)

வேறு.

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகத்தானுஞ்
சதிதனித்திடினுங்ஷாரி சந்திரனோடுசுங்கன்
பதிபிதிர்க்குடையோனோடு பருதிவீடதனிற்சேரச்
சதிருடன்றந்தைகர்மஞ் சாற்றினாரெட்டேழில். (ருஅஉ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகத்தானஞ்
சதிருடனதனில்வெய்யோன் சசிமகனோடுசேரப்
பதிபிதிர்க்குடையோனில்லம் பாம்புடனலவன்சாரில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்திடுமுப்பத்தஞ்சில். (ருஅங)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனருணனோடு தரித்திடக்கரிவீடாக
விதியுடன்பருதிவீட்டில் விரைவுடன்மதிவந்துற்றால்
துதிபிதிரிருபத்தெட்டிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (ருஅச)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்பாம்பு
சதிருடனதனிற்றோன்றச் சனியுமவ்விடத்திற்றாவப்
பதிபிதிர்க்குடையோன்றானும் பார்க்கவனருணனோடு
மதிமகனில்லஞ்சேர்ந்தால் மாயுமென்றுரைத்தார்தந்தை. ()

தந்தையர்நாற்பத்தொன்றிற் சதிருடன்நாசங்காட்டும்
விந்தையாய்க்கருமந்தானும் விதியுடனுதவான்மாதோ
சிந்தையில்விசாரமாகுந் தேறிடுமதியாலென்றார்
தந்தையர்செல்வம்நாசந் தரணிபிற்பிறக்குஞ்சேய்க்கு. (ருஅசு)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்பொன்னன்வீட்டிற் றனித்திடவதனிற்பொன்னன்
விதியுடன்நோக்கவந்த விளங்கியசேய்க்குக்கர்மஞ்
சதிருடன்முப்பத்தொன்றிற் றந்தையர்நாசமாதோ. (கூஅஎ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுஞ்செங்கன் சற்குருமறையாதாகிற்
பதிபிதிர்க்குடையோன்றானும் பார்க்கவனில்லஞ்சேர்ந்தால்
துதிபிதிரொழியுங்கர்மந் தொடுத்திடுமிருபத்தொன்றில். ()

பிதிருடைத்தானஞ்சுங்கன் சேரில்லமாகப்பாம்பு
சதிருடன்தனிக்கவக்கோள் சாரிடஞ்சுபர்வீடாகப்
அதிபிதிர்க்குடையோன்புந்தி யந்தணனதனிற்புக்க
விதியுடன்முப்பத்தொன்றில் விதித்தனர்தந்தைநாசம். (கூஅகூ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிமால்வெய்யோன் சாரிடஞ்சனிவீடாகில்
பதியிற்சேய்வயதெட்டாகப் பாழ்படுந்தந்தையாக்கை
விதியினால்நாசமென்று விளம்பினர்கணிதமாய்ந்தோர். (ருகூ0)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
பதிபிதிர்க்குடையோனோடு பகரிடஞ்சேய்வீடானால்
சதிருடனுதிக்குஞ்சேய்க்குச் சாற்றினர்பிறந்தவன்றே
விதியுடன்பிதாவைக்கொல்வன் விளங்கிடுந்தரணிமாதோ. ()

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமால்வீடேக
மதிமகன்புகர்பொன்வெய்யோன் வருமிக்கோளுதயந்தன்னில்
விதியுடன்பவர்வீடேகி விளங்கிடக்கருமங்கூறே. (ருகூஉ)

கூறிடுமரவுவந்தாற் குறித்தனர்கருமமொன்று
சீருடன்வருவதென்று செப்பினர்கணிதமாய்ந்தோர்
மாறியேயன்னோன்நாளில் வரும்புகரபகாரத்திற்
தாரணிமீதுகன்மந் தானொன்றுநடக்கும்பாரே. (ருகூரு)

வேறு.

அட்டமாதிபனு முயிர்க்குளோன்றானும் அருக்கனுமஞ்சி
னோன்றானும், கட்டமாங்கரிய னாட்சிநட்பாகக் கலந்துடனிருப்
பனேயானாற், சட்டமாயவன்ற னாக்கையுந்தொலையச் சாற்றினர

றுபதோராண்டிற், றிட்டமாய்நடக்கு மிதுதவறாது திறமுடன்
தந்தையர் கருமம். (௩௯௪)

வேறு.

சூரியன்மாலோடேகித் தோன்றிடவுயிர்க்கிராறில்
ஒருயிர்தனக்குப்பத்தி லுடுபதியுடன்பாம்புற்றால்
பாரிற்சேய்வயதோராண்டிற் பாழ்படுந்தந்தைகர்மம்
ஆரியனணையாக அறைந்தனர் தரணிமீதே. (௩௯௫)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகப்புந்தி
மதியுடனஞ்சொன்பானும் வக்கிரனரவமாந்தி
சதிருடன்மால்வீடானாற் சாற்றலாமுப்பத்தொன்றிற்
பிதிருடகருமஞ்செய்யப் பிறந்திடுந்தரணிமீதே. (௩௯௬)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்ருணன்பாம்பு சார்ந்துடனொன்றதாகப்
பதிபிதிர்க்குடையோனோடு பாண்டியனிருப்பதானால்
துதிபிதிரொழியுங்கன்மந் தொடுத்திடுமுப்பத்தொன்றில். ()

வேறு.

சூரியன்வீடதிற்புகர்கே துடனொன்றாகித்
தோன்றிடவேஅதற்குடையோன் றோன்றுமில்லம்
சாருமுயிர்க்குபயமதிற் சுபர்களோடு
தரித்திடவேயிவர்கடனைச் சுபர்கள்நோக்கா
பாருயிர்க்கொன்பான்மனையி லரவுசேரப்
பருமக்கோள்கேந்திரமாய்த் தனிக்குமானாற்
சீருடனேபுகர்திசைநா ளதனிற்றந்தை
செத்திடுமேகேதுடனாள் முடிவில்மாதே. (௩௯௭)

சூரியன்மால்கேதுடனே கருமனில்லந்
தோன்றிடவேகருமனொன்பா னக்கோள்மாந்தி
சாருயிர்க்கொன்பானலது பன்னொன்றான
தானத்திற்றானிருக்க மறையோன்நோக்கச்
சீருடனேதோன்றிடுஞ்சேய் தனக்குத்தந்தை
திரவியமும்பூமிகன்று காலிசேரும்
பாருலகிலுயிர்தனக்கொன் பான்கோள்நாளிற்
பகருதிசைமுடிவதனில் நாசங்காட்டும். (௩௯௮)

வேறு.

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவெய்யோன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதிவீடால்
விதிமுறைப்படிபேதந்தை வீந்திடுஞ்சேய்நாள்வந்தால்
பதியுமன்னியதேசத்திற் பகர்பிதுர்கருமமென்றே. (௪00)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவாரல்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பவர்வீடாக
விதியுடன்பருதிசீசம் விளங்கிடத்தனிப்பானுகில்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனரருக்கன்வந்தால். (௪0௧)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனருணனோடு தரித்திடக்சரிவீடேக
விதியுடன்பருதிவீட்டில் விரைவுடன்மதிவந்துற்றால்
துதிபிதிரிருபத்தெட்டிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (௪0௨)

மால்பரிபுகர்சேய்பொன்னன் வந்திடப்பிதுர்தானத்திற்
சாலவக்கோளனெட்டிற் றனித்திடப்பவர்வீடானால்
ஞாலமீதுதிக்குஞ்சேய்க்கு நற்குருவருநாட்பாதி
ஏலவீன்றோனைக்கொல்லு மென்றனர்கணிதநூலோர். (௪0௩)

சேய்புகரருக்கன்புந்தி சேர்ந்திடப்பிதிர்த்தானத்தில்
தூய்பிறைமறையோனோடு தோன்றிடவலரியில்ல
மாயுயிர்பிறக்குஞ்சேய்க்கு வயதொருபத்திலத்தன்
போய்விடுங்கருமஞ்செய்யப் புகன்றனர்கணிதமாய்ந்தோர். ()

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடனருக்கன்வீட்டிற் றுன்தனித்திடினுமானால்
விதியுடன்புகர்மால்கேது வெய்யவன்மறையாதாகில்
துதிபிதிர்மதிமாலாரற் றுகையெனவொழியுந்தந்தை. (௪0௫)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கிரண்டிற் றனித்திடச்சுபர்வீடாகப்
பதிபிதிர்க்குடையோன்றானும் பங்குதன்வீடேயாகில்
விதிபிதாகருமஞ்செய்ய விளம்பினர்முப்பத்தொன்றில். (௪0௬)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகநாலோன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகில்

பிதிர்பதிக்குடையோன்றானும் பிறங்கிடமறைவதானாற்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்திடும்புகர்நாட்கேதில். (சஎ)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருட..னுயிர்க்கீராறிற் றனித்திடப்பாவர்பார்க்க
விதிபிதிர்க்குடையநாதன் மேவநற்சேய்வீடுற்றாற்
பதிபிதாகருமஞ்சேய்க்குப் பகரொருவயதிலம்மா. (சஅ)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றனித்திடப்பாவர்பார்க்கப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தரியாராகில்
விதிபிதிர்க்கருமஞ்சேய்க்கு விளங்கிரண்டாண்டிலம்மா. (சகூ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றனித்திடச்சுபர்நோக்குற்றால்
பதியிற்சேய்வயதோரைந்திற் பயின்றவன்கருமஞ்செய்ய
விதிவருங்கணிதமாய்ந்து விளம்பினர்தரணிமீதே. (சகஅ)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடன்கரிகேதோடு சாரிடங்காரிவீடால்
விதியுடன்பருதியாறில் விளங்கிடப்பாவர்பார்த்தாற்
றுதிபிதிரொழியுங்கர்மஞ் சுதன்வயதொருநான்கென்னே. ()

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனிறைவனோடு சாரிடங்குருதிவீடாய்
விதியுடன்பிதிர்க்குநாதன் விரைவுடன்றன்வீடுற்றால்
துதிபிதிர்கருமம்பாரிற் றோன்றுஞ்சேய்வயதுமூன்றில். (சகஉ)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றனித்திடப்பாவாபார்க்கப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள்தனிக்குமாகில்
விதிசுதன்வயதுமொன்றில் விளம்பினர்தந்தைநாசம். (சகங)

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகவக்கோள்
விதியுடனிறைவனோடு விளங்குமம்புலிவீடாகப்
பதிபிதிர்க்குடையோன்றானும் பகரிடந்தன்வீடுற்றால்
துதிபிதிர்கருமஞ்செய்யத் துணிவுடனுதவான்மாதோ. (சகச)

மதிமகன்பருதியொன்பான் வரினுமிக்கோட்களொன்றாய்ச்
சதிருடனுயிர்க்குநாலிற் றரித்திடச்சேய்வீடாக

விதியுடனதற்குநாதன் விரைவுடன்பரிவீடுற்றால்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுந்திசையிற்பாதி. (சகடு)

வேறு.

சூரியனும்பண்டிதனு மோர்வீடேகித்
தோன்றிடத்கேந்திரமாகிச் சுபரில்லாகச்
சீருடனேவுயிர்தனக்கொன் பானின்கோளன்
சேரிடமால்வீடதுவாய்ச் சுபரில்லாமல்
வீரியமாய்ச்சூரியன்றன் மனையிற்பாம்பு
விளங்கிடவேசுபர்களதி லிருப்பாராகில்
ஆரியனுணைப்படியே மதிநாள் தந்தை
அழிந்திடுமத்திசைபாதி யதனிற்றானே. (சகசு)

சூரியனும்பொன்னுடனே பவர்வீடாகித்
தோன்றுமிடமறையாமற் சுபர்நோக்கில்லாக்
காரியுடன்பாவரதி லொன்பான்கோளுங்
கதிரவன்வீடதுவாகி மறையாதாகிற்
சீருடன்றோன்றிடுஞ்சேய்க்கு வயதுநாலிற்
செத்திடுமத்தன்றனக்குக் கருமஞ்செய்வன்
பாரதனிற்கணிதநூ லாய்ந்தமேலோர்
பகர்ந்தனர்சாதகற்குவரும் பலனைப்பாரே. (சகஎ)

வேறு.

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்மதிக்குப்பத்திற் சார்ந்திடச்சுபர்வீடாகக்
கதிரவன்புந்தியொன்றாய்க் கலந்திடமறைவீடானால்
விதியுடன்மறைநாள்தந்தை வீய்ந்திடுங்கரிவந்துற்றால். (சகஅ)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகவக்கோள்
கதிருடன்புந்திகேது கனகனுமுடனொன்றாகித்
துதிபவர்மனையிலேகித் தோன்றிடமறையாதானால்
பதியினில்நாசந்தந்தை பகர்ந்தனர்கரிமுற்பாதி. (சகக)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகச்சுங்கன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறைவதாக
விதியுடன்பருதிபுந்தி விளங்குகேந்திரமேயானால்
துதிபிதிர்புகர்நாள்தந்தை துஞ்சிடுங்கரிவந்துற்றால். (சஉ0)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகில்
மதிமகன்காமன்பானு மாந்தியும்புகர்வீடானால்
பதியினிற்குருநாள் தந்தை பாழ்படுங்காரிவந்தால். (சஉக)

வேறு.

சூரியன்மால்மாந்தியுடன் புகரொன்றாகித்
தோன்றுமிக்கோள் பவர்வீடாயுயிர்க்குநாலோன்
சீருடனேவொன்பானாய்த் தரிக்கவக்கோள்
சேருமிடம்மறையாமல் மதிக்குநாலாய்ப்
பாரினிலேசுபர்வீடாய்த் தனிக்கவந்த
பாலனுக்குச்சோதிடனா லாய்ந்தமேலோர்
ஆரியனாணைப்படியே வளருந்தந்தை
அழிந்திடுமேகரிதிசையிற் குருவூண்தன்னில். (சஉஉ)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனீசவீடாய்ச் சார்ந்திடப்புகரொன்றாகக்
கதிருடனுதிரனொன்றாய்க் கலந்திடச்சேய்வீடானால்
பதிதனிற்பிதாவின்கர்மம் பாலகனுதவான்மாதோ. (சஉங)

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகக்காரி
சதிதனித்திடினுமக்கோள் சாரிடஞ்சேய்வீடாக
விதியுடன்புகர்பானொன்றாய் விளங்கிடமறைக்காறுற்றால்
துதிபிதிர்கன்மம்பொன்னன் தோன்றபகாரப்போக்கில். (சஉச)

சூரியனருணனோடு தோன்றிடமுயிர்க்கெட்டாகச்
சாருயிர்தனக்கொன்பானிற் றரித்திடப்புகர்கேதானால்
சீருடனுதிக்குஞ்சேய்க்குத் திறவயதீரேழொன்றில்
ஆரியனாணையாக அறைந்தனர்தந்தைநாசம். (சஉ,டு)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகமந்தன்
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமறையாதாகில்
விதியுடனருக்கன்றானும் விரைவுடன்சுபர்வீடுற்றால்
பதியினிற்பருதிவந்தாற் பாழ்படுந்தந்தைமாதோ. (உசு)

பிதிருடைத்தானம்வெய்யோன் பேரில்லமாகச்சுங்கன்
விதியுடனுயிர்க்கொன்பானில் விரைவுடன்றனிக்குமாகில்

சதிருடனருக்கனேழிற் றரித்திடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிரிருபத்தாறிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (சஉஎ)

சந்திரன்பருதிசுங்கன் தரித்திடப்பிதிர்த்தானத்தில்
வந்துயிர்தனக்கொன்பானும் வளருகேந்திரமேயானல்
சுந்தரத்துடனேதோன்றுந் துணிவுடன்சாதகற்கு
வந்திடும்வயதோரேழில் வகுத்தனர்தந்தைநாசம். (சஉஅ)

மாலவன்குருதிபொன்னன் வந்திடப்பிதிர்த்தானத்திற்
சாலவேபருதியேழிற் றனித்திடப்பிறந்தசேய்க்கு
ஏலவேகாரிநாளி லிசைவுடன்பிதாவைக்கொல்லத்
தூலமாயுதிப்பானென்று சொல்லினர்சாதகற்கே. (சஉகூ)

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றனித்திடப்பாவர்நோக்க
விதியுடன்பருதியுச்சம் விளங்கிடப்பிறந்தசேய்க்குத்
துதிபிதிரைம்பத்தொன்றிற் றுஞ்சிடுந்தரணிமாதோ. (சஙO)

பிதிருடைத்தானமந்தன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிருக்காறிற் றரித்திடவுயிரினோடு
விதிபுதனலரிபாம்பு விளங்குகேந்திரமேயானல்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடுங்காரிவந்தால். (சஙக)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்குநாலிற் றரித்திடக்காரிவந்தால்
விதியுடன்பருதிபத்தோன் மேவிடம்மறையாதானல்
துதிபிதிரரவுநாளிற் றுஞ்சிடும்வெள்ளிவந்தால் (சஙஉ)

சூரியனிறைவனோடு தோன்றிடப்புகரில்லாகக்
சாருமக்கோளன்றனுந் தனித்திடப்பருதிவீடாய்ப்
பாரினிலுதிக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்மதிநாட்பாம்பில்
ஆரியனணையாக அறைந்தனர்தந்தைநாசம். (சஙங)

பரிதிபாதங்கிபொன்சேய் பார்க்கவனிக்கோளொன்றாய்த்
துரிதமாயுயிருக்காறிற் றோன்றிடப்பொன்சேய்வீடாய்ப்
பிரியமாயருணன்பாம்பு பிலமுடன்மறைவதானல்
கரிபரிதுகையிற்றந்தை காலனாரடைவனம்மா. (சஙச)

சூரியன்காரிபூமன் சுக்கிரன்குருவோடொன்றாய்ச்
சாரிலக்கனத்துக்காறிற் றரித்திடச்சேய்பொன்வீடாய்ச்

சீரிடமொன்பான்பாம்பு சேரிடங்கரிவீடானல்
சூரியன்குருமாலாண்டு துகையதிலொழியுந்தந்தை. (௪௫௫)

மாலவனிரவிகேது வருமிடம்பிதிர்த்தானத்திற்
சாலவேபருதிவீட்டிற் றரித்திடப்புகர்பான்வந்தால்
தூலமாய்த்தோன்றுஞ்சேய்க்குத் துணிவுடனீரேழொன்றில்
பாலனுண்டீரெட்டொன்றிற் பாழ்படுந்தந்தைமாதோ. (௪௫௬)

பிதிருடைத்தானம்வெள்ளி பேரில்லமாகப்பாம்பு
சதிதனித்திடினுமக்கோள் சாரிடமதிபொன்வீடால்
விதியுடன்பிதிர்க்குநாதன் விரைவுடன்மறையாதாகில்
துதிபிதிர்மால்சேயாண்டு துகையெனவொழியுந்தந்தை. (௪௫௭)

பிதிருடைத்தானந்திங்கள் பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கீராறிற் றனித்திடப்பாவர்நோக்கக்
கதிரவன்புந்திபாம்பு கலந்துகேந்திரமேயானல்
துதிபிதிர்நாலோன்நாளிற் றுஞ்சிடுங்கரியன்போக்கில். (௪௫௮)

பிதிருடைத்தானமாரல் பேரில்லமாகக்கேது
சதிதனித்திடினுமக்கோள் சாரிடம்பருதிவீடாய்
விதியுடனக்கோள்தானும் விரைவுடன்குருவீடுற்றால்
பதியதிற்சேயாண்டொன்றிற் பகர்ந்தனர்தந்தைநாசம். (௪௫௯)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடன்சுபர்கள்வீட்டிற் றனித்திடமறையாதாக
மதிமகன்பருதியோடு வருநவமதனிற்சேர்ந்தால்
துதிபிதிர்கருமநாளிற் றுஞ்சிடுமரணமாதோ. (௪௬௦)

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாகவக்கோள்
சதிருடனிரவிகேதுஞ் சார்ந்திடவுயிரில்நீசம்
விதியுடன்பத்திற்செவ்வாய் விளங்கிடக்குருவுநீசம்
துதிபிதிரொழியுங்கர்மந் தொகுத்தனரிருபத்தஞ்சில். (௪௬௧)

வேறு.

சூரியனுயிரிற்றோன்றிடவொன்பான் சுபருடன்பாவர்வீடேகிக், காரியுங்குளிகன்சேரிடம்பத்தாய்க் கருமனும்மதிமகன்வீட்டிற், சீரியருலகிற்செனித்தசேய் தனக்குத்திடமுடன்பிதிர்வழியதனில், ஆரியனணையமைந்திடுங்கருமம் அஞ்சுபேர்க்குதவுவன்மாதோ. (௪௬௨)

ஒன்பதுக்குடையோன் கேந்திரமதனிலுடுபதியுயிருக்கொன்பதனிற், பொன்புகரொன்றாய்ப் பொருந்திடவஞ்சிற் போந்த வெல்லாறிலேமறையப், பின்புமார்த்தாண்டன் வீட்டினிற்காரி பிறங்கிடப்பிறந்தசாதகற்கு, அன்பனுங்காரி திசைதனதூணில் அடர்ந்திடுந்தந்தைதன் கருமம். (சசங)

ஒன்பதுக்குடையோ னிரவிமால்ஞானி யுடுபதிதனக்குமீராறிற், பின்புபொன்னேகதிற் பிலத்திடப்பாம்பும் பிங்கலன்றனக்குமேழனில், இன்பமாய்க்கருமன் மதியுடன்நாலி லிருந்திடப் பிறந்தசாதகற்கு, அன்பனுங்கருமன் திசையரவதனி லடர்ந்திடும்பிதிருட கருமம். (சசச)

வேறு.

பிதிருடைத்தானம்புந்தி பேரில்லமாகவக்கோள்
சதிருடனுயிர்க்கிரண்டிற் றரித்திடப்பருதிமாலும்
பதிகரிவீடதாகிப் பதிந்திடப்புகரும்பத்தில்
துதிபிதிர்மாலோன்நாளிற் றுஞ்சிடுங்கரியன்போக்கில். (சசஙு)

வேறு.

நாலினோன்மதியு மிரவியுமாலும் நண்ணிடக்கேதுமொன்பதனிற், கோலினோனிருந்த வீட்டின்கோள்குருவாய்க் குறுகிடவஞ்சிற்சேய்பாக்கில், வாலிபமானவயதுபத்தினுக்குள் வந்திடுமிரண்டுநற்கருமம், சீலமாமிரவி மதிதிசைசேய்நாள் செப்பினார்வாணிபம்பூமி. (சசசு)

பூமியுந்தனமும் பொருந்துவன்முயற்சி போகமுமற்பமாங்காமி, தாமிதகுணத்தன் தயிரியன்வஞ்சன் தையலர்கலவிக்குப் பிரியன், நேமமாம்பத்தி யறிவுளான்கோபி நெஞ்சினிற்சபலமேயுடையன், காமனைவென்ற கன்னியேகேளாய் கணிதநூலறிஞரின்கருத்தே. (சசஎ)

பத்தின்கோளஞ்சோன் பாக்கியன்லாபன் பதிந்திடமுதயகேந்திரமாய், வெத்தியாமுயிரோன் கருமகேந்திரத்தில் விளங்கிட நாலினிற்கரியும், சுத்தியாயிருக்கச் சோமனுமறையத் தோன்றிடப்பிறந்த சாதகற்குச், சித்தியாமரசர் தயவினால்முயற்சி சேர்ந்திடவருமென வுரைத்தார். (சசஅ)

வருமென வுரைத்தார் வாக்கின்கோள்திசையில் மாய்ந்திடும் பிதாவுமேயாகும், குருவுமேயிருந்த வீட்டின்கோள்திசையிற்

கொடுத்திடுமங்களந்தாயார், தருகுவதில்லைகேதுவந்திடுகில் தன முடன்கிரகம்வாகனமும், பெருகிடும்புகர்நா ளதனிலேமுயற்சி பெலத்திடாதிருந்திடவல்லன். (௪௪௯)

வேறு.

பிதிருடைத்தானஞ்சுங்கன் பேரில்லமாய்ப்பிறங்கச்
சதிருடன்நாலில்வெய்யோன் சசிமகனோடுசாரப்
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாம்புடபதிவந்துற்றால்
துதியுதிரொழியுங்கர்மந் தொடுத்திடும்முப்பத்தஞ்சில். (௪௫0)

பிதிருடைத்தானம்பொன்னன் பேரில்லமாசவக்கோள்
சதிருடனருணனோடு தரித்திடச்சசியும்பாம்பும்
பதிபிதிர்க்குடையோனோடு பதிந்ததிலிருப்பதானால்
துதிபிதிர்நாற்பத்தொன்றிற் றுணிவுடன்கருமஞ்செய்வன். ()

வேறு.

பத்தி னுக்குடை யோனும் பருதியுஞ்
சத்தி யாகியே சார்ந்திடில் நீசமாய்
வித்தி யாக்கரி வீடுபா ழாகிட
மத்தி பத்தினில் மாய்வது சொல்லினோம். (௪௫௨)

அஞ்சி ரெண்டு வயதினிலன்னையும்
வஞ்சி யற்கு வயதுமூன் றெட்டிலும்
பஞ்சி னிற்படு தீயது போலவே
விஞ்சை யாக விளையுங் கருமமே. (௪௫௩)

வேறு.

விளங்கியகுழவி தனக்குமொன்பதனில் மேவியகுருசெவ் வாய்வரினும், களங்கமில்லைந்தோன்பொன்னவன்வீட்டிற் கருதி யேமறைந்திடவரினும், தளங்கியகருமன்காரியாய்மதிக்குத்தனி க்கவேழதனிலேகின்றால், துளங்கலாயரவுதிசையதிற்காரிதோன் றவீன்றத்தனும்நாசம். (௪௫௪)

நாலினோன்மந்த னாகியேவுயிர்க்கு நண்ணிடவேழினில்மரு வத், தாழ்விலாப்புகர்வீடாகியேஅக்கோள் தரித்திடப்பானுமா லோடு, வாழ்வெனுமதியும் அரவுடன்கூடி மந்தனுக்கட்டமஞ் சேர்ந்தால், மாலவன்வீட்டி லிருந்திடும்புகரில் மாய்ந்திடும்பிதி ருடன்மாதர். (௪௫௫)

வேறு.

சூரியனுயிர்க்கீராறிற் றோன்றிடவொன்பான்கோளன்
சாரிடம்மால்வீடாகித் தரித்திடச்சுங்கனோடும்
வீரியச்செவ்வாய்கேது வியாழனுமால்வீடுற்றால்
பாரினிற்பிதாவின்கர்மம் பகரலாமாவுநாளில். (சடுசு)

வேறு.

பருதியுடன்மதிகூடி யாவிக்கஞ்சிற்
பதிந்திடவேவொன்பதின்கோள் மறையச்சுங்கன்
குருதியுடவீடதனில் மறைந்துநிற்கக்
குசனரவுஉயிர்க்கோளாய்க் குலவக்கர்மன்
சுருதிமறையவனுகி மாந்தியோடு
தோன்றிடவேஅவன்றிசையிற் றந்தைசாவன்
பருதிதிசையிராகுபுத்தி தன்னிலிந்தப்
பாலனுடசோதரத்தைப் பழியாய்க்கொல்வன். (சடுஎ)

வேறு

சந்திரனுயிரோனட்டமமதனிற் றனித்திடவுயிரினிற்பருதி, வந்திடப்புகருங் கூடிடவாக்கில் மதிமகனிருந்திடக்குருவும், சிந்தியதகரிற் பகையினிற்றனிக்கச் சேயுமேமறைந்திடவுச்சம், முந்தியவுயிருக் கைந்தினிலரவு மோகமாய்க்கேதுவுந்தனுவில். ()

தனுவினுக்குடையோன் மறைந்திடக்குளிகன் தையலாள் தானத்தில்வரினும், மனுவினிற்பெரியோன் மாய்ந்திடுந்தந்தை வயதுபத்தெட்டிலேகருமம், அனுவதாயரவு திசையினிற்குருவி லமைந்திடிற் சோதரதோஷம், பனிமதிபோலே ஆயுளுந்தீர்க்கம் பகர்ந்தனர்பெரியவர் நூலால். (சடுகூ)

ஒன்பதிற்பருதி யிருந்திடவக்கோ ளுடுபதிதனக்குமைந்தினிலே, துன்பதாய்ச்சேய்வீடாகியேபகையாய்ச் சுரர்குருவீட்டினிற்காரி, யின்பமாயுயிரி லிருந்திடக்கேது மிணங்கிடச்சசியுமே தோன்றச், செம்பொன்வீடதனிலிருந்திடுங்காரி திசைதனிற்கருமங்கள் முடிப்பன். (சசுo)

முடிந்திடுஞ்சேய்க்கு வயதுமொன்பதுக்குள் மோசமாம்பிதாவையுங்கொல்வன், வடிந்திடுங்குருதி மூலரோகத்தால் வந்துடன் தீர்ந்திடுந்தாய்க்கு, மடிந்திடும்வரைக்கு மதிகபாக்கியங்கள்

வரவரவுயர்ந்திடும்பலன்கள், கடிந்திடுமற்ப ரோகமேவுடையன் கண்டத்தில் ரோகமுமாவன். (சசுக)

பருதியுஞ்சரத்திற் காரியுங்குளிகன் பதிந்திடமூன்றின் கோளுடனே, மிருதுவாங்கருமன் மறைந்திடவுச்சம் விளங்கிட மதிக்குப்பத்தினிலே, கருதியசெவ்வாய் பருதிவீடதனிற் கலந்திடப்பிறந்திடுஞ் சேய்க்குச், சுருதியாம்புகரிற் பிதாவையுங்கொல்வன் தோன்றிடுங் கருமத்துக்குதவான். (சசுஉ)

மாலவன்மறைந்தே ஆட்சியில்வரினும் வரும்பிதிர்காரகன், வாபம், கோலமாயொன்பா னட்டமனுடனே கூடியேபுகருடனிருக்கிற், றாலமாய்முன்னோன் றிசைதனிற்பிதாவுந் துஞ்சிடப்பிறையாலதிகம், ஏலவேயுதிரவியாதியுமிகுதி யெய்திடுங்கஷ்டமாயிருப்பன். (சசுங)

ஒன்பதுக்குடையோ னுட்சியில்மறைய வுரகமுமுயிரிலே செம்பொன், இன்பமால்வீட்டி லிருந்திடவனலி யிந்துவீடதற்குமூன்றினிலே, அன்பெனமொழியு மனுவழியஞ்சி லமர்ந்திட வந்திடுஞ்சேய்க்கு, செம்பொனார் திசையிற் றனதுநாளதனிற் செத்திடுந் தந்தையென்றியம்பே. (சசுச)

இயம்பினார்மேலோர் பிதிர்வழியதனு லெய்திடுங்கருமங்கள் மூன்றும், வயம்பெருங்கரிநாள் தனதிலுங்கருமம் வந்திடும்பெரியவரருளால், சுயம்பெருங்காரி தனதினிற்சுங்கன் தோன்றிடிற் சிவனுடபூசை, நயம்பெரும்படியே நாடினார்கெணிதர் நாயகிதன்னுடனுமே. (சசுரு)

வேறு.

சூரியன்மதிக்கீராறிற் றோன்றிடவுயிரோன்றானுஞ்
சாரிடஞ்சசிவீடாகித் தரித்திடவொன்பான்கோளன்
சீருடன்மறையத்தேளிற் றினகரனரவுமேஷம்
பாரினிலுதிக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்பிதாவின்கர்மம் ()

வேறு.

பிதிருடன்கரும மரவுநாளந்தி பெருகிடுமெல்லது குருவில், கதிர்மகனுளிற் கலந்திடுமணமுங் கருதினர்புராண கேள்விகளுந், துதியுடன்தனமும் பூசையும்பெருகுஞ் சொல்வதுதர்மசிந்தனையும், நிதியுடன்சுகமும் புரவியுங்குருவில் நின்றிடும்பெரியவர் மொழியால். (சசுஎ)

ஒன்பதுக்குடையோன் ஆட்சியாயுச்ச முறைந்திடவிரவி யுஞ்சனியும், இன்பபொன்னரவுஞ் சேர்ந்திடிலொன்பா னிருள் வலி கரியைநோக்குற்றால், அன்புடன்குருநாள் சேயலாலரவி லாகுமே யீன்றவன்கருமம்,முன்புதானிந்தக் கணிதநூல்விதியை மொழிந்தனர் பெரியவர்தாமே. (சகூஅ)

ஒன்பதுக்குடையோ னிரவியும்புகரும் ஒழிந்திடமறைந்தி டக்கரியும், அன்பினாலஞ்சோ னாகியேகுருவுக் கமர்ந்திடமூன்றி னிற்றரிக்கில், இன்பமாய்க்குருவுமேழினிற்றோன்ற விணங்கிடுங் கருமத்தில்மதியாய்ப், பின்புசேய்வயதுபத்துடனாறுள் பிதாவுட கன்மம்வந்திடுமே. (சகூகூ)

ஒன்பதுக்குடையோன் கேந்திரமதனி லுடுபதிபார்த்திட வஞ்சோன், செம்பொன்வீடதனிலரவுடன்சேரத் தினகரன்மாந் தியும்லாபம், அன்பினாற்கருமன்மாலவனுடனே அணுகிடப்புக ரும்வந்துற்றால், இன்பமாய்மால்நாளிரவியெய்திடுகி லியம்பினார் பிதாவுடகருமம். (சஎ0)

ஒன்பதுக்குடையோ னரவுடன்மூன்றி லுறைந்திடத்தினக ரன்நாலில், இன்பமாயக்கோள் காரியாயெட்டி லிருந்திடக்கரு மத்திற்குருவும், அம்புலிகேது முயிருக்கொன்பதனி லமர்ந்திட வந்தசாதகற்கு, வம்பனங்காரி திசையினிற்றனதில் வந்திடும் பிதாவுடகருமம். (சஎக)

வேறு

பிதிருடைத்தானத்தோனும் பீதகன்மாலுமொன்றாய்ச்
சதிருடன்நாலிற்றோன்றச் சந்திரன்றனக்கீராறாய்
மதிமகன்றனக்கீராறில் வந்திடப்பருதிசெவ்வாய்
துதிபெறவரினுங்கர்மந் தொடுத்திடும்முப்பத்தெட்டில் (சஎஉ)

தந்தையர்கருமஞ்செய்வன் சந்திரன்றனக்குமஞ்சோன்
விந்தையாய்ப்புகருமாலும் வியாழனுமதிக்குப்பின்னால்
சிந்தையாய்ப்புதல்வரென்றுஞ் செத்திடுமன்றைக்கேதான்
தந்தையர்சொல்லதாலே தரணியில்வாழ்வான்மாதோ. (சஎங)

வேறு.

ஒன்பதுக்குடையோன் கேதுடனஞ்சி லுதித்திடஅரவுமே பார்க்கச், செம்பொனும்பிறையுங் கருமனும்புகரும் சேர்ந்திடச்

சோமன்வீடாகில், அன்பினுலுயிரோன் றனச்குமீராறி லாதித் தன் மாந்தியுமறையில், இன்பமாயுயிரோன் றிசைவிடும்போது எய்திடும்பிதாவுடகருமம். (௪௧௪)

மாலவன்புகருங் கருமகேந்திரத்தில் வந்திடக்கரியுமே பார்க்கக், கோலமாயிரவி லாபமாய்வரினுங் குசனுமேமதியுடன் மறையத், தூலமாயரவும் பாக்கியன்றனக்குத் தோன்றிடநாலிற் கேந்திரமாய், ஏலவேவரினும் பிதாவுடகரும மெய்திடுமரவுநாள் தனதில். (௪௯௫)

வேறு.

பிதிருடைத்தானத்தோனும் பிருகுடனரவுகாரி
சதிருடனுயிருக்காறிற் சார்ந்திடவிரவிபொன்னும்
துதிபெருமஞ்சிலாகச் சோமனுமுயிரிற்சேர்ந்து
பதிபிதிர்க்குடையோன்வீட்டிற் பாவர்கள் தனிப்பானுகில். ()

தனித்திடப்பிறந்தசேய்க்குச் சாற்றினுர்கணிதநூலால்
தொனித்திடக்கருமஞ்சொல்லத் தொகுத்தனர்கருமந்தன்னில்
இனித்திடப்பிதிர்போமென்றே இயம்பினுரன்னைகர்மம்
செனித்திடக்காரிதன்னிற் செய்வனென்றுரைப்பார்மேலோர். ()

வேறு.

ஒன்பதுக்குடையோன் மாலவன்வீட்டி லுறைந்திடச்சேய் குருபாம்பும், இன்பமாய்ப்புகர்வீ டிருந்திடவிரவி யிணங்கிய மால்மதியுடனே, அன்புடனுயிருக் கொன்பதில்வரினு மவன் றனையீன்றவன் கருமம், துன்பமாய்மாலோன் திசையினிலரவு தோன்றிடில் முடிந்திடவருமாம். (௪௧அ)

வாக்கினில்மதியு மதற்குடையோனும் வக்கிரனரவுடன் பருதி, தாக்கியமதிக்கு ஆறினில்மறையச் சனியுமேநாலினில் வந்தால், பாக்கியனுடனே யிருந்திடுமாரல் பருதிநாள்பிதாவுமே போகும், ஆக்கமாய்க்குருவி லன்னையும்போக அமைத்தனர்பெரியவர் நூலால். (௪௧௧)

ஒன்பதுக்குடையோன் கேந்திரமதனி லுடுபதியரவுடன் பத்தில், இன்பமாயிரவி மாலுடன்கேது மிருந்திடப்புகருமே மறையச், செம்பொனுமுயிரோன் சேர்ந்திடிலஞ்சிற் செனித்திடவந்த சாதகற்குத், துன்பமாய்க்குருநாள் மதியினிற்பிதாவுந் துஞ்சிடுமெனச்சிலர் மொழிந்தார். (௪அ0)

வேறு.

சூரியன்சேய்தொல்புகரோன் சூரியன்வீடேகித்
தோன்றிடமுன்பவர்வருகி லுயிர்க்கோளன்பவரோ
காரிமதியுடன்சேர வுயிர்க்கோளனுடனே
கருதுமுக்கோடனைச்சுபர்கள் கண்விழிப்பார்வையினால்
சீருடன்சேய்பிறந்திடவோ ராண்டுதனிற்றந்தை
சேர்ந்திடுவன்பரதேசம் செப்புமெனவுரையே
பாரினிலேதந்தைபர தேசமது சேர்வர்
பகர்ந்தனர்கள்சேயொழியுங் குருசிவனாணை. (சஅக)

வேறு.

ஏழினிலரவ மிருந்திடவக்கோ ளிரவியோ டொன்பதாய்வரி
னுந், தாழ்விலாவுயிரோன் மதிக்குக்கேந்திரமாய்ச் சார்ந்திடப்
பொன்னவன் மறையில், வாழ்வதுவபது பதினைந்துமிரண்டில்
மனைவியர்வந்திடும் பிலமாய்த், தூலமாய்ப்புகரோன் திசையினி
லரவு தோன்றிடிற் பிதாவுடகருமம். (சஅஉ)

மதியுயிர்தனக்கோ ரிரண்டினிற்குருவாய் மந்தனுமூன்றி
னிற்சேர, விதியுடன்புகரும் நாலினிலிருக்க வெய்யவன்மால்குச
னரவும், துதிபெருமதிக்கு ஆறினிற்றனித்தாற் சோமனுள்முதற்
றிசையாகக், கெதிபெறவிருப்பன் பிதாவுமேதனக்கு தீர்க்கமுந்
தனமும் வாய்த்திடுமே. (சஅங)

தனமுடன்முயற்சி வாணிபமதனுற் றங்கிடும்பிரபலமாகும்,
குணமுடன் சேய்நாள் பாதிமேலாகக் கொடுத்திடுஞ்சாதகன்
றனக்கு, மணமுடனரவு திசையின்முற்பாதி வளர்ந்திடுஞ்சம
னுடன்வாழ்வன், கனமுடன்பாம்பு பாதியுங்குருவுங் கலந்திடு
மதிகபாக்கியமாம். (சஅச)

ஒன்பதுக்குடையோன் புகருடனுச்ச முடுபதிதனக்குமைந்
திடமாய்ச், செம்பொனுங்கேதுஞ் சேர்ந்திடவுயிரிற் றினகரன்
சேயுடன் சனியும், அன்பிலாதெட்டி லயர்ந்திடவந்தா லாகிடும்
பிதாவுடகருமம், இன்பமாய்நாலோன் திசையினிற்புகர்நா ளெ
ய்திடுமெனச்சிலர் மொழிந்தார். (சஅரு)

ஒன்பதுக்குடையோன் கேதுடன்மதிவீ டுறைந்திட விரவி
பொன்மாந்தி, இன்பமாய்க்கருமம் கேந்திரமதனி லிருந்திடமதி
யுமேமறைய, அன்பதுநாலோன் றிசையினிலன்னை யழிந்திடும்

பிதாவுடகருமம், இன்பமாங்குருவி லரவுநாளந்தி யெய்திடுங் கருமமேமுடிப்பான். (சஅசு)

வேறு.

சூரியனும்புகருடனே சேய்வீடேகத்
தோன்றிடவேஅதற்குடையோன் றோன்றுமில்லம்
சீருடனேசுபர்வீடா யுயிர்க்குநாலிற்
சேர்ந்திடவேராகுமதி யுயிர்க்கொன்பானுங்
கூறியதோரொன்றுகித் தரிக்கவக்கோள்
குறுகிடமேநீசபகை வளருமானால்
ஆரியனுணைப்படியே அழியுந்தந்தை
அரவுடனுள்திசைபாதி யறையுமுன்னால். (சஅஎ)

வெய்யவன்றன்னுடன்மதிமால் கரியோடேகி
விளங்குமிக்கோளதன்முன்பின் னுதிக்குமாகில்
மையமறையோனுயிர்க்கும் வெய்யோனுக்கும்
மறையாமலுயிர்ப்பவர்கள் சுபரில்லாதிடுமால்
வையகமீதீரைந்து சுத்தமதாகிடவே
வரும்வயதுநாற்பதின்மே லொன்றதனோடொன்றில்
உய்யபிதாவினையெடுக்கு மதன்மேலோர்மூன்றி
லுறுமாதர்தனைக்கால னிடத்தனுப்புமுறவாய். (சஅஅ)

வேறு

மந்தனுமொன்பானுகி வருமனையாட்சியுச்சம்
விந்தையாய்மதிமால்சுங்கன் வெய்யவனுடனென்றுகிச்
சிந்தையாயுதயந்தன்னிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
வந்திடுந்தனையீன்றையன் மாய்ந்திடுங்கரிநாட்போக்கில். (சஅகூ)

வேறு.

சூரியன்காரி வீட்டினிற் றோன்றிடக்
காரிதானுங் கருதுயிர்க் கொன்பதிற்
சாருமந்த அதிபனுஞ் சார்ந்திடப்
பாரினிற்பிதா பாழ்படும் பித்தமே. (சகூ0)

வேறு.

சூரியன்மாலுயிர்க்குநா லதனிலிருந்திடுமால்
சுடரோன்முன்பின்மதியுஞ் சுபர்தனித்தேயிடுகில்
பாருயிரில்மாந்தியுற வுயிர்த்தானத்துடையோன்
பஞ்சமமேழதிற்பாவிர் வீடதனிலிருந்தால்

நேரிடுவன்நாற்பதுடன் மேல்மூன்றுகூடி
நின்றதன்மேலொருமூன்றுள் மாதுர்பிதிரெடுக்குஞ்
சேருமதில்முன்மாது ரென்றேஅறைந்திடலாஞ்
சேயுயிர்க்குமறைந்திடவும் வேண்டுமெனச்செப்பே. ()

வேறு

தருமொன்பதிலரவெய்திடத் தானுதிபன்பவரால்
வருமாதவன்பிதுர்த்தானத்தை மருவப்பவருடனே
இருமூன்றினில்மும்மூன்றினி லீராறினிற்றந்தை
அருளாயுளுநசியுமென வமைத்தாரறிவுளரே. (சகூஉ)

வேறு

இரவிக்கெட்டிற்சனிசெவ்வா யிருக்கச்சுபர்கள்நோக்கமுறு
தருகியிருக்கப்பிதாமரணந் தபனன்நான்கேநின்றிடினும்
கரவிற்சனிசேய்நோக்கமுறக் கலந்துசனிசேய்கதிர்நடுவாய்
மருவிற்கதிர்சேய்சனிகூடில் மரிப்பன் தந்தையோராண்டில். ()

சரத்திலிரவிபாவருடன் தயங்கிநிற்கப்பிதாதனக்கு
உரத்தவிஷத்தாற்சத்திரத்தா லுதிரந்தன்னால்வருமரணம்
நிரத்தவெட்டிலிரவிநிற்க நிலத்தின்புதல்வன்நோக்கமுறப்
பொருத்தபகலிற்செனித்தார்க்குப் பூவேபிதாவுமிகமரிப்பன். ()

மாதாபிதாவை ஓட்டிவித்தல்.

கோட்டிற்பருதிசனிநிற்கக் குருதிகுருவில்நோக்கிடினும்
நாட்டிற்பகலேஜெனித்தார்க்கு நல்லதந்தைதேசமதில்
ஓட்டிவிடுமேதப்பாதிங் குதவாரவருக்கவர்தானும்
கோட்டிதனத்துமயிலணங்கே குறித்தார்தமிழ்நூல்வல்லோரே.

ஆட்டிலலவன்துலைமானு மதனிற்பருதிசனிசேயுங்
கூட்டிவருமேவக்கிரக்கோள் குலாவிநோக்கமுற்றதனால்
நீட்டிலிரவிற்செனிப்பார்க்கு நிலையாரன்னைதேசமதில்
ஓட்டிலிரந்தேவுண வுண்டே வுடலையிழப்பாளொண்டொடியே.

பிதிர்பாவகம் முற்றிற்று.

கணபதிதுணை.

உலோககுரு

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

சோதிடம் பன்னீராயிரத்தில்,

களத்திர பாவகம்.

இஃது,

எட்டயபுரம் சமஸ்தானம் மகாராஜ ராஜ ராஜபூஜித

மகாராஜா அவர்கள்

கனிஷ்ட சகோதரர்

மகாராஜ ராஜபூஜித

தங்கமகாராஜா அவர்கள்

பொருளுதவிகொண்டு,

சோதிடம்

M. சுப்பிரமணியபிள்ளையால்

சென்னை சூளை:

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1913.

Registered Copy Right.

கோல்டன் பிரஸ், மதராஸ். என். சி.

முருகன் துணை.

களத்திரபாவகம்

முகவுரை.

இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென, எனக்கு வெகுநாளெண்ணம். அதைச் சென்றவருடம் யான் திருவெண்காட்டுக்குப் போயிருக்கையில் ஆலயத்துட்சென்று சிவ பெருமானைத் தெரிசித்து,

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவெ லாம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்று திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பண்ணைச்செப்பி ஏற்றிப் போற்றித் துதித்திருக்கையில் உருவெளித் தோற்றம்போல் என்னுள்ளத்தில் நம் வள்ளல் கொடுப்பாரென மதித்தேன். அதுபோல் திருவெண்காடரைத் தெரிசிக்கவந்த வள்ளல் எட்டயபுரம் சமஸ்தானம் மகாராஜ ராஜராஜ பூஜித மகாராஜா அவர்கள் சமுகச் சன்னிதானத்தில் என தெண்ணத்தை அடியிற்கண்ட விவரப்படி மனுமூலமாய்த்தெரிவித்து அதன் மூலமாய்க் கிடைத்த பொருளுதவியைக் கொண்டு இச்சாஸ்திரத்தை அச்சிட்டு வெளிப்படுத்தலாயினேன். இப்புண்ணியத்தையும் புகழையுங் கைக்கொண்ட மாட்சிமைதங்கிய மகாராஜா அவர்களுக்குச் சந்தான விருத்தியும் தீர்க்காயுளும் களத்திர புத்திர பௌத்திர பரம்பரையாய் நீடூழிகாலம் வாழ்க வாழ்கவென இத்தமிழ் நாட்டிலுள்ள சோதிட அபிமானிகள் சகலரும் அவரவர்கள் உபாசனா மூர்த்திகளையுங் கந்தக்கடவுளையும் பிரார்த்திக்கும்படி யான் வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

எம். சுப்பிரமணியபிள்ளை,

சோதிடம் நடுவப்பட்டி,

சாத்தூர் போஸ்டு.

உ

முருகன்றுணை.

மகாராஜராஜ இராஜபூஜித மகாராஜராஜஸ்ரீ, மகாராஜா அவர்கள் சமுக சன்னிதானத்துக்கு.

அடியேன் சுப்பிரமணியபிள்ளை அநேகவணக்கமாய்த் தெரியப் படுத்திக்கொண்டமனு.

சோதிடசாஸ்திரத்திற் சிறப்புற்றோங்கிய சங்கராச்சாரியசுவாமிகள் பாடல் என்ற ஒருநூல் என்னிடமிருக்கிறது, அது இதுவரை அச்சில் வெளிப்படவில்லை. இந்தச் சாஸ்திரத்தைப் பார்த்துப் பயனடைய அனேக ஜனங்களுக்கு ஆசையுண்டு. ஆனால் இச்சாஸ்திரம் வைத்திருப்பவர்கள் தானும்பார்த்துப் பலனடைகிறதில்லை பிறருக்குக்கொடுத்துப் பலனைத் தெரிந்துகொள்ளுகிறதுமில்லை. இதனால் நம் இந்துக்களுடைய சாஸ்திரங்கள் கரையானுக்கும், நெருப்புக்கும், இரையாக்கி விடுகிறார்கள். அதனால் தனக்கும் பிறருக்கும் பிரயோசனமில்லாமற் போகின்றது. ஆங்கிலேயர்களோ? அப்படியல்ல. ஒரு சாஸ்திரம் தன்கையிலகப்பட்டால் அதை உடனே அச்சிட்டுப்புத்தகரூபமாய் எங்கும் பரவச்செய்து அதிலுள்ள பயனைக் கண்டுபிடிக்கும்வரை விடாமுயற்சியால் விருத்தியடைகிறார்கள். அதை உத்தேசித்தே யானும் 15-ஞுத்துக்கு முன் ஆயுட்பாவகமும் 2-ஞுத்துக்கு முன் புத்திரபாவகமும் அச்சிட்டு வெளிப்படுத்தினேன். மற்ற பாவகங்களைப் பிதிவிக்குப் பொருளுதவியில்லாததினால் அச்சிட்டு வெளிப்படுத்தக்கூடவில்லை.

இது விஷயத்தைப்பற்றி சமுகசன்னிதானத்தில் வேப்பிலைபட்டி சத்திரத்துக்கு விஜயஞ்செய்திருக்கும்போது மேற்படி சாஸ்திரங்களைப் பூராவும் படித்துப்பார்த்து முக்கியமானதென்றும், அநேக ஜனங்களுக் குபயோக முள்ளதென்றும், இதை அவசியம் அச்சிட்டு வெளிப்படுத்த வேணுமென்றும் அதன் செலவைச் சன்னிதானத்திலே கொடுப்பதாகவும் ஒருதிருவாக்குப் பிறந்தது. அந்தத் திருவாக்குக்கு எதிர்வாக் குண்டோவென்று எதிர்பார்த்தும் இதுவரை முடிவுபெறாமல் பாக்கியிலிருக்கிறது.

மகரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட பலசோதிட சாஸ்திரங்களில் இந்தச் சங்கராச்சாரிய சுவாமிகள் சோதிட சாஸ்திரமொன்றுயிருப்பதால் அதை பொன்னாட்டிலும் மற்றென்னாட்டிலும் தென்னாடே தமிழ் நாடெனச் சிறந்த இன் னந்நாட்டில் மகாராஜா அவர்களால் இந்நூல் வெளிவந்ததென எல்லோருங்கண்டு ஆனந்தங்கொண்டு சந்தோஷப்படும்படி சமுக சன்னிதானத்தில் பரிபூரண கிருபைசெய்து ஷி சாஸ்திரத்தை அச்சிட்டு வெளிப்படுத்தப் பொருளுதவி உத்தரவாக வேணுமென்று வணக்கமாய்ப் பிரார்த்திக்கின்றேன். ஊழியன்.

உ

பரமபதி துணை.

உலோககுருவாகிய

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சங்கராச்சாரியம் பன்னீராயிரத்தில்

கனத்திரபாவகம்.

விநாயகர் - துதி.

வெண்பா.

ஓத வினையகலு மோங்கு புகழ்பெருகுங்
காதற் பொருளனைத்துங் கைகூடுஞ்-சீதப்
பனிக்கோட்டு மாமலைமேற் பாரதப்போர் தீட்டுந்
தனிக்கோட்டு வாரணத்தின் றாள்.

இதுவுமது.

கடல்சூழும் வையகத்திற் கருத்தறியாச் சிறியேனைக் கருத்துட்புக்கே, அடல்சூழும் மாயையிருள் தேய்ந்தொழிய ஞானவொளியமைய நாட்டி, உடல்குளிரும்படி யெனக்குச்சிவபோகந் தந்தருளு முமையாள்பாகன், மடல்விரிபூங் கரக்கனிக்கா வவரைவலம் வருங்கரியை வணக்கஞ் செய்வாம்.

சுப்பிரமணியர்.

ஒருமயிலூருந்தீர னுண்மையிலசுரர் மாளப்
பொருமயிலெடுத்தவீரன் பொய்மையில் புலவர்க்கெல்லா
மருமையி லதிகசேனு பதிபதியாறென்றோதும்
பெருமையில் வாழுமெங்கள் பிரானெமைப்பிரியானம்மா.

கங்கா பரமேஸ்வரன்.

கண்ணகன் ஞாலந்தன்னிற் கடையனே னெடுத்த வெண்ணில்
நண்ணரும் பிறப்பினெல்லாம் நல்லுயிர்க்குயிராய் நின்றே
எண்ணருஞ் சிறப்பைநல்கி யியல்பெறும் வாழ்வையீயும்
பண்ணரும் நிம்பூர்கங்கா பரனடிமுடிமேல் வைப்பாம்.

காசிமுதற்சிவபெருமான் வாழ்தலங்கள்பலவற்றுட் கனக்
கத்தேர்ன்றும், பேசரியநடுவமாநகரினையே விரும்பியிறை பிறை
சேர்நெற்றிக், கூசுமெழிற்றிரிபதகைத் தேவியொடும்வாழ்தரவே
குலவும்பண்பால், நேசமொடுநினைந்தாலும் பவமொழியும்பயன்
சேரும் நினைவாய்நெஞ்சே.

கங்கா பரமேஸ்வரி.

உலகெலாம் நிறைந்துநின்ற வோங்கொளிர் கங்கைவையத்
தலகிலாவுயிர்க ளெய்து மருந்துய ரகற்றவேண்டி
நலவரு ளுருவங்கொண்டு நடுவமா நகரமென்னும்
தலமிசைத்தவஞ்செய்வாள்போற் சமைந்தவள் சரணம்போற்றி.

அத்தமேநடுவிற்பட்டி யரும்பதிய தனில் நாளும்
ஒத்தநாலெட்டாக்கூறும் உயரறம்விளங்கச்செய்து
சித்தமாசகன்றநல்லோர் தெளிவுளக்கோவில்வாழும்
சத்திமாகங்கைபாதம் தலைமிசைச்சூடிவாழ்வாம்.

சரஸ்வதி.

கரும்பங்கயம்போற்கண்மலருஞ் செம்பங்கயம்போற் கதிர்
முகமு, மிரும்பங்கயத்தா னரும்பேய்க்கு மிளமாமுலையுமேந்தி
வெள்ளை, யரும்பங்கயத்தா னகத்துறையு மனத்தையம்மாறிரு
வுந்தி, தரும்பங் கயத்தோனுவாளைத் தமியேனுளப்பங்கயத்தில்
வைப்பேன்.

ஆக்கியோனும் அச்சிடுவித்தோனும்.

நன்புவியிடத்துமிக்க நடுவமாநகரில்வாழும்
துன்பில்சானவியைப்போற்றுஞ் சுப்பிரமணியபிள்ளை
இன்புறுசங்கராச்சாரி யியம்புசோதிடநூற்செய்யு
ளன்புறுதமிழைக்கொண்டே அச்சினிற்பதித்தானம்மா.

நூல்.

புனிதராய்த்தவமியற்றிப் பூதலத்துருவாமிக்கோர்
மனிதராயுதித்தபேர்க்கு வகுத்தமாசோதிடத்தைத்
தனிமுதற்பொருளைப்போற்றுஞ் சங்கராச்சாரியத்திற்
கனிவுளகளத்ரபாவ கத்தையாமியம்புவோமே.

வேறு.

ஏழினேன் குருவாய் மாந்தியோடேகி யிருந்திடச் சந்தி
ரன் வீட்டிற், றுழ்விலாதேழி லாறினோ னிராகு தரித்திடச் சுங்
கனு மறைய, வாழ்வெனுமங்கை சொந்தமே யேனினு மதிமுக
மெழில்வளர் கற்பாம், ஊழ்விதிப்படியே ஏழினேன் திசையி
லுண்மையாய் மனவியர் வருமே. (க)

மனவிய ரிரண்டாய் வகுத்தனர் மேலோர் வகையெலா
மொழிந்திடவரினுங், கனகநாள் திசைபோய்க் காரிநாள்வந்தாற்
கலந்திடு மனவிரண்டாகும், இனமொடுமாதர் சேர்த்தியுமாகு
மிதுவலாற் பிறர்மனைகமனன், தனமெனுந்தாசி விஷயனுமங்கை
தரித்தநூலிழந்தவள் போகன். (உ)

ஏழினின்மாலா யிருந்திடவேழி லிரவிபொன் பிருகுடன்
கூடித், தாழ்விலாப்புகரும் நீசனுய்த்தோன்றிச் சந்திரன்றனக்
குமேமறையில், ஊழ்விதிப்படியே மனவிரண்டாக வுரைத்தனந்
பிறந்திடுஞ்சேய்க்கு, ஏழினிலிருந்தகுருதிசையதனி லெழி லுறு
மனவி வந்திடுமே. (௩)

ஏழ்தனில்மந்த னிருந்திடவக்கோ ளிந்துவீடதனிலேநீசம்,
தாழ்விலாக்கேதுங் கூடியேபுகர்க்குத் தரித்திடக் கருமகேந்திர
மாய்க், கோள்புகருயிரோ ஞகியேவுயிரிற் குறுகிடக்குருவுமே
பார்க்க, வாழ்வெனுமங்கை யிரண்டெனவகுக்க மறையவர்நூலி
னுல் மொழிந்தார். (௪)

மறையவர்மொழியா லந்தணன்திசையில் மந்தநாள்வந்திடு
நாளில், நிறைமதியூணின் மனவியரெடுக்கும் நேர்திசைமதிமகன்
வருநாள், குறைவிலாப்பெண்டீர் சேர்ந்திடமணமாய்க் குறித்
தனரதிகபாக்கியங்கள், முறைமுறைப்படியேவருமெனவுரைக்க
மொழிந்தனர் கணிதநூலதனுல். (௫)

வேறு.

காரியுமுயிருக்கேழிற் கலந்திடப்புகர்வீடாகி
மீறியேயிருக்கவுச்ச மிகுபெலமாகவன்னோன்
பாரினிலுயிர்க்குமூன்றிற் பதிந்திடமால்வீடுற்றூற்
காரிபோல்நிறமாய்த்தாரங் கருதினரிரண்டென்றோதே. (சு)

வேறு.

பத்தினில்மாந்தி பதிந்திடவன்னோன் பருதிக்குமூன்றினில்
மறையில், சித்தியாயன்னோன்கேதுடன்றோன்றிச் செனித்திடப்
பிறந்த சாதகர்க்குப், புத்திரர்தெத்தாம்புகழ்ந்திடவல்லன் புனி
தமாமனவிய ரிரண்டாம், சத்தியமாகக்கணிதநூலதனுற் சாற்றி
னர் கருமதோஷத்தால். (எ)

ஏழினோன்புகரா யிருந்திடமதிவீ டிணங்கியே யுயிர்க்கு
வொன்பதனில், தாழ்விலாதிரண்டோன் றனித்திடவிரண்டிற்
சந்திரன்றனக்குமே மறையில், கோள்புகர்க்கிரண்டி லரவுடன்
பரிதி குறுகிடக்குருவுமே நோக்க, வாழ்வெனுமரவின் திசை
மதியூணில் மனவியர்தோன்றிட வருமால். (அ)

மனவியர்வருநாள் முதலிலேயோகன் மங்களமாகுநா ளதி
கம், இனமறுமாதர் களின்சுகபோக னிணங்கிய ரோகமே வுடை
யன், சினமெனுமிரவு திசையினிற்பருதி சேர்ந்திடு நாளினிற்
பிடை, கனமெனுங்கருவி யாடியேதீரக் கருதினர் கணிதநூ
லாய்ந்தோர். (கூ)

பாகன்வீடேழோனேறிப் பதிந்திட வதற்குநாதன்
காகவாகனனுங்கார கனுமொன்றாய்க்கேந்திரிக்கிற்
போகமேஅதிகஞ்செய்வன் புகர்திசை மாலூண்தாரம்
யோகமாய் வருகுமென்றே வுரைத்தனர் தமிழ்வல்லோரே. (கo)

ஏழினில்மந்த னிருந்திடவக்கோ னிரவிதன் வீட்டினிற்
சேரத், தாழ்விலாப்புகரு மாலுடனீசந் தரித்திடமதிக்குக் கேந்
திரத்தில், வாழ்வெனுங்குருவு மதியுடன்சேர்ந்து மாலவன்வீட்
டினில்வசித்தால், ஏழினிலிருந்தமந்தனுள தனிலிணங்கிடமனைவி
வந்துதவும். (கக)

வேறு.

ஏழினேன்புகரேயாகி யிருந்திடவேழிற்றுனே
தாழ்விலாக்குருவுமந்தன் தன்னுடன்மதிவீடுற்றால்
ஊழ்விதிப்படியாற்றா முரைத்தனர்சாதகற்கு
ஏழினேன்திசையிற்பொன்ன னெய்திடில்மனவிசேரும். (கஉ)

மதியுமேகருமனுகி மந்திரியுடனேகூடி
விதியுடனுயிர்க்கொன்பானில் விளங்கிடப்புந்திவீடேல்
சதியுடனக்கோள்சுங்கன் தன்னுடமதிக்குநாலிற்
கெதிபெறவிருப்பானுகிற் கெணித்தனர்தமிழினுலே. (கங)

தமிழெனும்வித்தையோடு தையலரிருவருண்டாஞ்
சிமிழ்மூலைவேசைதன்பாற் சேர்ந்துமேதிரிவன்கண்டாய்
நிமிர்மதிமகன்நாள்வந்தால் நிதியுடன்சமனுய்வாழ்வன்
திமிர்மதிபுகருமாசான் சேருநாள்முயற்சிமேலாம். (கச)

வேறு.

ஏழினேன்செவ்வா யாகியேயுயிரி லிருந்திடவரவுடன்றே
ன்றத், தாழ்விலாதேழிற் பொன்னவன்கேதுந் தரித்திடமதி
மகன்வீட்டிற், கோளெனுமுயிரோ னிருந்திடப்புகராய்க் குளிர்
மதி மகனுமேலாபம், வாழ்வெனுமனவி குருதிசையதனில் மதி
மகனுளினில் வருமாம். (கரு)

ஏழினிலரவ மிருந்திடவக்கோ ளிந்துசேய் வீட்டினில்மறை
யத், தாழ்விலாப்புகரும் பானுசேயுடனே சந்திரன்றனக்குமே
மறையிற், கோளெனுமுயிரோ னிறையவன்வீட்டிற் குறுகிட
மதிதிசை வருநாள், வாழ்வெனும்புகரில் மணம்புரிமனவி வரு
மெனவகுத்தனர் மறையோர். (கசு)

வேறு.

ஏழினேன்பருதிகேது இணங்கியேயுயிர்க்குலாபம்
தாழ்விலாப்புகர்பொன்னேடு சந்திரன்றனக்குநாலாய்க்
கோளெனுமுயிரோன்செவ்வாய் குறுகிடப்புகரைநோக்கில்
ஊழ்விதிப்படியால்தார முரைத்திடிலிரண்டென்றேதே. (கஎ)

வேறு.

பருதியும்புகரும் மந்தனுஞ்சேயும் பகர்கலாநிதிக்குமட்ட மத்தில், நிருதியிற்குருவு மிருந்துமேநோக்கில் நேர்ந்திடுங்கதிர் திசைவருநாள், மருவியமனைவி வாய்த்திடும்போகம் மதிதிசை யதனிலேயென்றுஞ், சுருதியாய்க்குசனு ளதனிலேமாதர் துஞ்சி டுஞ் சோதரம்போமே. (கஅ)

ஏழினிற்காரி யிருந்திடவக்கோ ளிரண்டினிற் சுங்கன்கேது டனே, தாழ்விலாதெட்டி லரவுமேயிருக்கச் சசிமகன்பருதியுங் கூடிக், கோளெனுமுயிர்க்கு நாலினிற்றோன்றக் குசனுயிருச்ச மாய்வரினும், ஏழினிலிருந்த காரிதன்புதனி லிணங்கியமனைவி வந்திடுமே. (கக)

ஏழினேன்கரியாய்ப் புகருடன்மாலு மிருந்திடச்சந்திரன் வீடால், தாழ்விலாக்குடும்பந் தன்னிலேஅரவு தரித்திடக்கேது மேபார்க்கில், கோளெனுமுயிரோன் உயிரினிற்குறுகக் கோதை யர் மாய்ந்திடும்பலனை, ஊழ்விதிப்படியால் கேதுநாள்புகரிலுரை த்தனர் மனவியர்போமே. (உ0)

ஏழினேன்குருவாயுயிர்க்குநாலதனி லிணங்கியகேதுவுங்கூட
மாலவனிரவிதகரினின்மருவ மதியுடன்குசனுமேவரினும்
நீல்னும்புகர்க்குஏழினிற்றோன்ற நேத்திரமதனிலேமாந்தி
கோலமாய்வரினுமிரவிதன்திசையிற் கொடுப்பதுமங்களமாமே.

ஏழினேன்செவ்வா யுயிர்க்குமூன்றினிலே இருந்திடக்கரியு மேபார்க்க, வாழ்வெனுமேழி லாறினேன்குருவாய் வந்திடக் குளிகனும்பார்க்கில், தாழ்விலாத்தார மேகமாம்புகரில் தங்கிடுந் தாசிகள்விஷயம், மீளவேதிரிவ னின்பதுன்பமுமே விளங்கிடுங் கோபிவீரனுமே. (உஉ)

புந்தியும்பருதி மறைந்திடவுயிர்க்குப் புகர்சனியேழினிற் றோன்றச், சந்திரன்குளிகன் மறைந்திடவைந்திற் சர்ப்பமாமரவு தங்கிடினும், முந்தியகுருவும் மட்டமாதிபனுய் மோகமாய்க்கே துடன்லாபம், வந்திடப்பிறந்தோன் தாய்க்குமேதோஷம் வகுத் தனர் திங்கள்மூவஞ்சில். (உங)

அஞ்சினிற்பிடை பதிகமாய்வளர்ந்தே அன்னியர்மனையி னில்வாழ்வன், வஞ்சியர்தான நாதனுமுயிர்க்கு மறைவிலாதொ ண்பதினுச்சம், மிஞ்சிடவன்னோன் திசையினிற்பிதாவை மீறியே கொல்லுவனல்லால், கொஞ்சியமனவி யரவுநாளதனிற் குறித்த னர் சொந்தமாய்வருவள். (உச)

ஏழினோன்மாலாயிருந்திடவுயிருக் கிலங்கிருமுன்றினிலிருக் கத், தாழ்விலாப்புகரு முச்சனுய்நாலிற் சந்திரன் றனக் குமேமறையில், கோளெனு முயிரோன் மாந்தியுமொன்றாய்க் குளிர்மதி தனக்கைந்திலமர, வாழ்வெனுமங்கை சொந்தமாய் வருவள் மதிதிசையதனிலே யென்றார். (உரு)

ஏழினிலரவ மிருந்திடவக்கோ ளிணங்கியபொன்னவன் வீட்டிற், றாழ்விலாதிருக்கப் புகருமேலாபந் தனித்திடக்குரு வுமேநோக்கில், வாழ்வெனுமுயிரிற் கேதுடன்மதியு மறைந்திடா தேழ்தனைப்பார்க்க,, ஊழ்விதிப்படியால் காரிநாள்மதியிலுரைத் தனர் மனவிவந்திடுமே. (உசு)

ஏழினோன்கரியாய் மதிமகன்வீட்டி லிருந்திடப்புகர்புதனி ரவி, தாழ்விலாதுயிர்க்கு நாலினிற்றோன்றச் சந்திரன்மறைந்தி டச்செவ்வாய், ஏலவேயிவருங் குடும்பமாய்த்தரிக்கி லெய்திடு மரவுதன்திசையில், தூலமாய்மனவி தோன்றிடுமென்று சொல் லினர் கணிதநூல்விதியால். (உஎ)

ஏழினிற்சிகியு மிருந்திடவக்கோ ளிணங்கிய லாபத்தில் நீசம், தாழ்விலாப்புகரு மூன்றினிலுச்சந் தனித்திடமதிக்குமே ழுதனிற், கோளெனுமாறோன் குறுகியேபார்க்கிற் கோதையும் பிணியுடையவளாய், வாழ்வெனும் மனவி புகர்திசைவருநாள் வரைத்திடும் யோகமுமுடையன். (உஅ)

யோகமாம்வயது பன்னிரண்டஞ்சி லுறுதியாய்முயற்சியு முடையோன், வேகமாய்த்தாரம் பிறர்மனைபோகன் விளங்கிடும் மனவிரண்டாகும், தாகமாய்நீச வித்தையுமுடையன் தையலர் கலவியிலதிகம், பாகமாய்க்குருவு மிரவியுங்கரியும் பதிந்திடத் தகரினில்வந்தால். (உகூ)

வந்திடுஞ்சேய்க்குப் புதல்வர்தானத்தோன் மருவிலாக்குரு வின் டதனில், சிந்திடுஞ்சோமற் கைந்தினிற்றோன்றிற் செப்பி

ஞர் பாலரைந்தாகும், முந்தியமங்கை மூன்றுமேயுடையன் மோச மாய்ப் போய்விடுஞ்சிலது, தந்திடும்பால ரிரண்டுமேயாகுந் தரித்திடு மிரண்டெனச்சாற்றே. (௩0)

சாற்றியவைந்தி லாறினேன்மாலாய்த் தனித்திடமதியுமே பார்க்கில், ஏற்றியகுருவு மாந்தியுந்தகரி லிருந்திடப்புதல்வர்க்குத்தோஷம், ஆற்றியமாதர் சாபமேயுடையன் அரவத்தின்தோஷமுமதிகம், மாற்றியபுதல்வர் தனக்குமேதோஷம் மதித்தனர்கணிதநூ லாய்ந்தோர். (௩௧)

வேறு.

போகத்தானத்தோனுரேன் பொன்னவனரவங்கூடி
வேகத்தோடேழிற்ருனே விளங்கிடமதிக்கஞ்சாகத்
தாகத்தோடுயிரோனுறில் தனித்திடச்சனியேபார்க்கிற்
பாகத்தால்மனவிரண்டாய்ப் பலித்திடுமுறுதியென்ருர். (௩௨)

உறுதியாஞ்சாதகற்கு வோதினுர்கணிதநூலோர்
பருதிநாள்முதலேயோகம் பலித்திடும்மென்மேலாகச்
சுருதியாமரவுபாதி தோன்றிடும்ரணத்தாற்றுன்பம்
இறுதியின்காலந்தேர்ந்தோர் இயம்பினர்பலனிதாமே. (௩௩)

சத்தமத்தானந்தன்னிற் சனிகுருபணியுங்கூடிச்
சுத்தமாமிறைவன்வீட்டிற் ருேன்றிடமதிக்குநாலாய்
வித்தியாதானத்தோனும் விளங்கிடப்புகர்வீடானுல்
பத்தியாமரவுநாளிற் பதிந்திடும்மனவிசேர்வள். (௩௪)

சேரவேவயதுமூத்த சேயிழைதன்னைக்கூடிச்
சோரவேசெய்வானென்று சொற்றனர்கணிதநூலோர்
தீரவேஅரவிற்செவ்வாய் சேர்ந்திடிற்பலன்கைகூடும்
சாரவேமங்கைதன்னுற் றனங்கள்கைகூடுமென்ருர். (௩௫)

ஏழினேன்குருவாய்க் காரியுமரவோ டிணங்கியேஆட்சியில் வரினும், தாழ்விலாப்புகரும் நீசனுயுயிரிற்றரித்திட வட்டமாதிபனும், வாழ்வெனுமுயிரோன் பருதியுங்கூடி வளர்மதிவீட்டினிலிருந்தால், ஆழ்தலாமதிநா ளதனிலேகுருவு மமர்ந்திடின் மங்களமாகும். (௩௬)

வேறு.

ஏழினிற்காரிநிற்க இந்துவுங்குளிகனோடு
வாழுவன்மாலுஞ்சேயும் வந்திடவுயிரில்நீசம்
கோளுடன்மூன்றோனுட்சி குறுகிடமறைவாய்த்தோன்றில்
மீளுமால்துகையுமூன்றாய் விளங்கிடில்மணநாளாகும். (கள)

வேறு.

ஏழினோன்புகரும் பணியுடனுயிருக் கிரண்டினி லட்சியா
யிருக்கிற், றாழ்வுடனெட்டோன்சனியுடன்கூடிச்சந்திரன்றனக்
குமொன்பதனில், கோள்குருகேது அட்டமமதனிற் குறுகிடப்
பகையின்வீடுற்றால், மீளவேஅரவுதிசைதனில்மணநாள் விளங்கி
டும் பன்னிருவயதில். (கஅ)

ஏழினோன்கரியாய்மாலுட னுயிருக்கிரண்டினில் மதியுடன
ரவாய்த், தாழவிலாப்புகரும்சேயுடவீட்டிற் றனித்திடப்பஞ்ச
மன்கேதும், கோளிலாவுயிர்க்கு மறைந்திடவெட்டிற் குசன்கதிர்
மூன்றினிற்றரித்தால், வாழ்வெனுமனவி யிரண்டெனப் பூவில்
வகுத்தனர்கணித நூலாய்ந்தோர். (கக)

வகுத்தனர்பெரியோர் மதிமகன்திசையில் வாளராவரவி
னில்மனவி, பகுத்தறிவுடனே மாய்ந்திடும் பலன்கள் பாலகன்
யோகமேலுடையன், தொகுத்திடும்மனவி யநேகமாய்ப்போகந்
துஞ்சிடிலேகமாந்தாரம், மிகுத்திடும்பெரியோரெண்பதொன்றத
னில் வேகமாய்ப்போய்விடுமாவி. (சo)

ஆவியாமுயிருக் கட்டமந்தனிலே அந்தணன்கேதுவேதரித்
தாற், பாவியாமாறோ னரவுமேபார்க்கிற் பலித்திடுமதிமகன் கரி
யிற், றாவியேபோகுந்தப்பிடிற்கேதிற் றீக்கிடும்புகரினிலுயிரை,
நாவிபோல்விஷத்தால்மீறியேகொல்ல நவின்றனர்பெரியவர்மொ
ழியால். (சக)

ஏழினோன்புகராய்ப் பாக்கியமிருந்தே இணங்கிய காரியும்
பார்க்கிற், றாழ்விலாதேழி லரவுமேதரிக்கச் சசிமகன்பருதியும்
பத்தில், வாழுவான்மனவி மதிமகன்திசையில் வந்திடும்புகரினி
லென்று, கோளிலாமுயற்சி கொடுத்திடும்வயது குறைந்திடுமிரு
பதின்மேலாம். (சஉ)

ஏழினேன்புகரா யுயிரினுக்கிரண்டி லிருந்தது குருவின்வீ டாகத், தாழ்விலாதிரண்டோனேழினில்மாறித் தரித்திடப்பிறந் திடுஞ்சேய்க்குக், கோளெனுமுயிரோன் அரவுடன்லாபங் குறு கிடக்குருவுமே பார்க்கில், வாழ்வெனும்மனவி யுயிரின்கோள் திசையில் வந்திடுமிரவிநாள் வரையில். (சங)

இரவியுமாலுங் காரியுமுயிருக் காறினில் மறைந்திட வெட்டோன், பரவியாவிக்கு மூன்றினில்மதியும் பதிந்திடப் பாக்கியன்பார்க்க, நிரவியபத்தோன் பூமிதானத்தில் நின்றிடப் பிறந்த சாதகர்க்குத், திரமுடன்வயது காரிநாள்வரைக்கும் தீர்க்கமாயிருந்திட வல்லன். (சச)

ஏழினேன்கரியா யிரவிமாலுடனே இருந்தது காரியின் வீடாய்த், தாழ்விலாப்புகரும்நாலினிற்றரிக்கச் சந்திரன்றனக்கு மொன்பதனில், கோளெனுமரவு தரித்திடிலந்தக் கொடுமையாந் திசைதனில் மனவி, வாழ்வுடன்வாய்க்கும் அநேகமாம்பலன்கள் மத்திபஞ் சமனென்னவளரும். (சரு)

ஏழினேன்புகராய்ச் சரத்தினிலிருந்தே யிணங்கிட விரவி யும்புதனும், தாழ்விலாததற்கு மதியுமேயேழிற் சரத்தினிலிருந் திடவுயிரிற், கோளெனுங்காரி குசனுடனேழைக் குறிப்புடன் நோக்கவே வந்தால், வாழ்வெனுமனவி குருவுடதிசையில் மாய்ந் திடு மரவினிற்போமே. (சகூ)

வேறு.

ஏழினுக்குடையோனென்பா னிருந்திடவத்தானத்தோன்
வாழிடம்மால்வீடாகி மறைந்திடவெட்டோன்பார்க்கச்
சூழ்விதிப்படியாற்றூரம் சொல்லலாமிரண்டேயாகும்
வாழ்வதுவரபோகத்தால் மாய்ந்திடும்பிலமொன்றூமே. (சஎ)

புத்திரத்தானநாதன் பொன்னவன்தனக்குப்பத்திற்
சத்துருவீட்டிற்றூனே தனித்திடவுயிரோன்மாந்தி
தெத்திடும்பிள்ளையுண்டாம் சேர்வதுஅரவுநாளில்
பத்தியமனவிரெண்டாய்ப் பதிந்திடிற்பாலன்தோன்றும். (சஅ)

ஏழினேன்புகராய்க் காரிவீடதனி லிருந்திடவுயிரின்கோ ளுடனே, தாழ்விலாக்காரி புகருடவீட்டிற் றனித்திடவுயிர்க் கிரண்டாகக், கோள்குருவுயிர்க்கு நாலினிலுச்சங் குறுகியே

புகரை நோக்குற்றால், ஆளவேகுசனுள் திசைதனில் மணநா ளடைந்திடு மெனச்சிலர் மொழிந்தார். (சகூ)

ஏழினேன்காரி சேயுடவீட்டி லிருந்திடமதியுயிர் தனக்குத், தாழ்விலாதைந்தாய்த் தரித்திடப்புகருந் தங்கிடப்பருதி யோடாறாய், வாழமால்புகரை ஐந்தின்கோள்பார்க்க மங்கையர் தானத்தை யுயிரோன், மீளவேமதியும் நோக்கிடவந்தால் மேன்மையாங் களத்திரமுண்டாம். (ரு0)

யோகமாந்தாரம் மூன்றினிற்புகர்நா ளுறுதியாமூரகமூணுதிலே, வேகமாய்வயது பத்துடன்மூன்றில் விளங்கியமாலவன் பொசிப்பில், போகமுந்தாசி விஷயமும்நீசப் பூவையர்மயக்கமுமுள்ளான், தாகமாயெட்டோன் சேய்திசைதனிலுந் தனித்தனிமங்களம் வாய்க்கும். (ருக)

ஏழினேன்புகரும் சொந்தவீடதனி லிருந்திடவேழினில் மதியும், தாழ்விலாக்குடும்ப மதனிலேவுயிரோன் தரித்திடச் சேயுடனிருந்தால், சூழவேகாரி மாந்தியுமுயிரிற் றோன்றிடமதியினேக்குற்றால், வாழவேமனவி யிரண்டெனக்குறிப்பாய் வகுத்தனர் பெரியவர்தானும். (ருஉ)

குறித்தனர்பெரியோர் போகபோக்கியத்திற் கூசிடான்பிறர் மனைபோகன், தரித்திடுந்தாசி நீசசாதியிலுஞ் சார்ந்திடும்போகமேவுடையன், பெருத்திடுமிரவும் பகலுமேபாகும் பேசியவாக்குமேமதுரம், அருத்தமும்யார்க்கு முதவியுமுடையன் அரிவையர் தோன்றிடுமுன்னே. (ருங)

ஏழின்கோள்செவ்வா யரவுடன்மறைந்தே இருந்திடச்சொந்தவீடதனில், தாழ்விலாதுயிரிற் சந்திரன்மாந்தி தரித்திடப்புகருடன்குருவும், வாழ்வுமால்வீட்டில் மதிக்கிரண்டாக வந்திடச் சேயையு மொன்பான், ஆழவேநோக்கில் மனவிமூன்றாகு மரிவைய ரநேகமாம்போகம். (ருச)

போகமுமதிகம் பாரினிலாகும் பொருந்தியமங்களமொன்றும், வேகமாயிரண்டு தெத்துமேயுடையன் வேதியன்வாக்கினிலிருந்தால், தாகமாய்வித்தை சகலமுமுணர்வன் தையல்பொன்றிடுமரவில், ஆகமவித்தை அறிவினாலாகும் ஆசையால்ஞானமே அற்பம். (ருரு)

ஏழினோன்கரியாய்ப் புகருடவீட்டி லிருந்திடவேழினிற்பத் தோன், தாழ்விலாமாலுங் கூடியேமாறித் தரித்திடச்சந்திரற் கேழில், வாழ்வெனுங்காரிவந்திடில்மனவி வாய்த்திடுமிரண்டென வழுத்து, கோள்புகர்திசையிற் கூடிடும்மனவி குலமும்வேறாகியே வாய்க்கும். (ருசு)

குலமும்வேறாகி வருங்களத்திரந்தான் குணமிலாதிருந்தி டும்பின்னே, தலம்பிலமில்லாப் பாலனுந்தோன்றித் தரணியில் மடிந்திடுமென்றும், மலந்தனில்நீரும் மங்கைக்குத்திறமாம் வருந் தியநோயினாற் பிணிகள், நலமிலாதிருந்து மாய்ந்திடுமென்று நாடினார்கணிதநூ லாய்ந்தோர். (ருஎ)

ஏழினிலரவ மிருந்திடவேழோ னிணங்கிய புகர்குருவுட னே, தாழ்விலாப்பத்திற் றரித்திடவுயிரிற் றங்கிடக்கேதுவே தனிக்கில், கோள்புகரிருந்த வீட்டின்கோள் குசனுய்க் கூடிட விரண்டினிற் றனித்தால், மீள்வேமூன்றோன் திசைதனிற்காரி விளங்கிடில் மங்களம்வாய்க்கும். (ருஅ)

மங்களமால்நாள் கரியினிற்புகருண் மதித்தனர்வயதுமீ ரொன்பான், சங்கையாமாதம் பத்துடன்மூன்றிற் றையலர்மங் களமுடனே, இங்கிதமான போகபோக்கியங்க ளெய்திடுங்கே துவிலதிகம், கொங்கையாமாதர் தாசியுமூத்த கோதையர்கலவி யிற்பிரியன். (ருகூ)

பருதிசே யுயிரோ னாகியே யிருய்ப் பதிந்திடக் கேதுடன் மறையில், சுருதியாய்மறையோன் குடும்பனாயேழிற் றோன்றிட வுயிரையே பார்க்கக், கருதியேஅஞ்சோன் அட்டமனிரவி கலந் திடப்புகருடவீடால், வருவதுகருமன்பஞ்சமமதனில் வந்திடப் பிறந்தசாதகற்கு. (சூ0)

பிறந்திடுஞ்சேய்க்குப் பாக்கியன்புகராய்ப் பெலத்திடமேடத் தில்வரினும், குறைந்திடுமதியும் லாபமேசேரக் குளிகனுமுயிரி னிற் றரித்தால், நிறைந்திடுந்தேகங் கருப்புமேயுடையன் நெடி திலான்சமனுடல் வளர்த்தி, துறந்திடாமூர்க்கன் காமியன்கப டன்சோம்பல்வஞ் சனையுடன் திரிவன். (சூக)

வஞ்சகன்கேது திசைபுகரிரண்டும் வருவதேஆண்டு நாலி னுக்குட், டஞ்சமாய்ப்பிடை கடினமாயிருப்பன் தாயினுக்கதிக

ரோகமுமாம், அஞ்சிடான்கோபிஅன்னைதந்தையரை யன்புடன் சொல்லினல்வணங்கும், கொஞ்சியபுகர்நா ளதனிலே வித்தை கூடிடும் மங்களமுடனே. (சுஉ)

மங்களமுடனே போகபோக்கியங்கள் வளர்ந்திடும் மன விரண் டாகும், இங்கிதமான மனவியரிரண்டோ டிருந்துதான் வாழ்பவரெனினும், திங்களின்திசையி லந்தனனாணிற்றெரிவை யர் மங்களமிரண்டாய்ச், செங்கண்மாலருளாற் கிடைத்திடு மென்றே செப்பினர் பெரியவர்தாமே. (சுங)

வேறு.

நிலையிலேழுடையோன்மாலும் நின்றிடப்புகர்வீடேக
மலைவிலாவாக்கோனேழில் வந்திடமாந்திபார்க்கச்
சிலையுறும்பாவர்செவ்வாய் சேர்ந்திடமதிக்கேழாகில்
குலையுறுங்களத்திரங்கள் குறித்தனரிரண்டாய்ச்சேரும். (சுச)

ஏழினோ னறில், ஆறினோ னேழில் இருந்திடச் சேய்புகர் வருக், வாழ்வுளவைந்திற் சசிகுருபானு வாழ்ந்திட விலாபனோ டேகக், கோளிலாக்கேதுங் குளிகனும்வாக்காய்க் கூடிட லாபத் திற்கரியாய்த், தாழ்விலாப்புகரிற் சசிக்குநா லிருந்தோன் தன் னுடன் குருவினில் மணமாம். (சுரு)

மணமெனும் மங்கைதனக் கெட்டாமிடத்தோன்மதியுடன் நீசமாய்த் தரிக்கில், குணமிலாதாரோன் கூடிடிற்பாவங் குறித்த னர் மிகுதியாமேழில், உணவுபொன்னிருக்கிற் காரியுமெட்டி லுறைந்திடப்பிறந்திடும் பெண்ணே, மணமிவன்செய்ய வதித்த னர் பெரியோர் வாய்மையால் மொழிந்தனர் தமிழால். (சுசு)

ஏழினோன்குருவா யிரவியும்நாலி லிருந்திட வேழினிற்கே தும், தாழ்விலாப்புகரும் மாலுடனுயிர்க்குத் தரித்திட வஞ்சி னிற் றோன்றக், கோளுயிர்தனிலே குளிர்மதியரவுங் கூடிடப் பிறந்த சாதகர்க்கு, வாழவேஅரவு திசைதனில்மதிநாள் வந்திட மனவிசேர்ந்திடுவள். (சுஎ)

பஞ்சமன்புகரா யுயிரின்கோளுடனே பதிந்திடவாட்சி யாய்த் தரிக்கில், விஞ்சையாயாரோன் மாந்தியோடேகி விளங் கிட வரிசைநோக்குற்றால், தஞ்சமாயுயிரிற் குடும்பனுமரவுந் தரி த்திடக் காரியுமறையிற், கொஞ்சியபுதல்வர்தனக்குமேதோஷங் கோதையர் பிலமொன்றாய்க்கூறே (சுஅ)

பிலமெனுங்கோதை தனக்குப்பின் பிறந்தோன் பிசகிடுங் குருதிசையதனில், நலமிலைமுதியோர் சாபத்தால்வந்த நாரியர் தோஷமு மிகுதி, தலமெனுமரவ தோஷமுந்தரிக்கிற் சாற்றினுர் கணிதநூல் "விதியால், குலமுடன்தாயார் தனக்குமே கருமங்கூ டிடுங் கரிபுகர்மதியில். (சுகூ)

ஏழினிற்சிகியும் இருந்திடவக்கோ ளிணங்கிய கருமகேந் திரத்தில், தாழ்விலாப்புகரு மிரவியுமுயிர்க்குத் தரித்திடலாப மாய் மரல்சேய், கோளுயிர்தனக்கு மறைந்திடச்சனியுங் குளிர் மதி யரவுடனுயிரில், வாழவேவரினுங் கரிதிசையதனில் வாய்த் திடு மங்களமுடனே. (எ0)

மங்களமுடனே போகபோக்கியமும் வாய்த்திடும் மனவி ரண்டாகும், சங்கைதொத்தொன்று சார்ந்துவாழ்ந்திருக்கும் சனிமதியரவுமேயேழை, இங்கிதமாக நோக்கிடக்குருவையெட் டின்கோள் மாந்தியும் நோக்கில், நங்கையாமனவி தன்னையுநீக்கி நாரியாந் தொத்துடன் வாழ்வன். (எக)

வாழ்வதுமதிக்குக் கருமகேந்திரத்தில் வந்திடப்பொன்ன வன் நிற்கில், ஆள்வதுதாசி யிடத்தினிலாகு மதிகமாய்க்கிரகங் கள் முடிப்பன், தாழ்விலாத்தனங்கள் பூமியுஞ்சேரும் தைரியன் கீர்த்தியு முடையன், பாழ்படவொழிக்கும் புதல்வர்களில்லான் பலவிதத்தொழில்களு முடையன். (எஉ)

கரிதிசையதனில் மனவிரண்டாகுங் கால்தலை யரையினில் மருவும், பரிகளுஞ்சகட வாகனமுடைய பாக்கியன்கெருவியு மாவன், சரியுளகாயி சஞ்சலமுடையன் தையலார்சொற்படி நடப்பன், விரிகுழல்மாதுஞ் சமன்வளர்த்தியதாய் விதித்தனர் தரணியில் மாதோ. (எங)

ஏழினிலரவ மிருந்திடவக்கோ ளெட்டினில் மறைந்திடப் புகரும், தாழ்விலாவுயிரோ ளுகியேபத்திற் றனித்திடப்பானுவு மதியும், கோளுயிர்தனக்கு லாபமாய்வாக்கிற் குருவுமே தனித் திடில் மணநாள், வாழவேமதிதன் திசையினிற்கரிநாள் வணங் கியமனவி வாய்த்திடுவள். (எச)

ஏழினேன்மறைந்து மாலவன்வீட்டி லிருந்திடச்சேயுடன் கூடத், தாழ்விலாப்புகருங் கருமகேந்திரத்திற் றனித்திடப் பாம்புடன் குருவும், கோளுயிர்தனக்குப் பஞ்சமமதனிற் கூடி

டப்பானுமால் கரியும், வாழ்வதுநலமாய் வாய்த்திடுஞ்சேய்க்கு வந்திடுமேனவியு மென்னே. (எடு)

மனவியர்வருநா ளரவுதன்திசையில் வாய்த்திடுங்கரியலாற் புகரிற், கனம்பெருந்தாய ரிரண்டுமேயாகுங் கருதிய'துணைவரும் பெண்ணும், தனமுளான்பிதாவுங் கீர்த்திமானுகச் சாற்றின் ரிவன்வரு முதலாய், மணமுநற்கருத்தாய்க் குணமுமென் மொழியாய் மதித்தனர்பிரபல மாக. (எகூ)

ஏழினிலரவ மிருந்திடவக்கோ ளிரவிவீடதனிலே தனிக் கத், தாழ்விலாதுயிரோன் புகருமேயாகித் தனித்திடமாலவன் வீட்டிற், கோளுயிர்தனிலே கூடிடப்பானு கொடியவன் மாலு டன் தரிக்கில், வாழ்வதுமால்நாள் மனவிரண்டாக வகுத்தனர் பெரியவர் தாமே. (எஎ)

ஏழினேன்புகரா யிரவியுமுயிரி லிருந்திட விரண்டின்கோள் நீசம், தாழ்விலாதுயிரோன் சோமன்வீடதனிற் றனித்திடக் குருவுமே பார்க்க, வாழுமால்குடும்ப மதனிலேவருகில் மதியுட னரவுவந் துதித்தால், கோளதாம்புகர்நா ளதனிலேகுருவிற் கூடிடும்மங்களம் வருமாம். (எஅ)

மாலவனிரவி பஞ்சமமதனில் வந்திடப்புகருடன் மாந்தி, கோலமாயுயிர்க்கு நாலினிற்பொருந்தக் குசனுமே வாக்கினிற் றனிக்க, ஏலலக்கினத்தோன் கேதுடன்கூடி யிருந்திடக்குசனது வீடாய்த், தூலமாயுயிரோன் திசையினிற்புகர்நாள் துலங்கிய மங்களம் வருமே. (எகூ)

மங்களமேழோன் தன்னுடன்பருதி வாய்த்திடவாறின்கோ ளாகில், சங்கைகள்காணுப் போகபோக்கியவான் தாசியர்வேசி யர் முதலாய், நங்கையாமனவி குணமுடன்நலமாய் நாடுவள் கோபியு மாவள், இங்கிதமுடையா ளாகுமாங்குருவி லெய்திடு முயற்சியு முடையன். (அ0)

பஞ்சமமதனி லேழின்கோள்கரியாய்ப் பதிந்திடப் புகரு மேநீசம், தஞ்சமாய்க் குடும்பன் தமமுடன்மாலுஞ் சார்ந்திட நாலினில்நீசம், வஞ்சியர்தான நாதனைக்குருவும் வரிசையாய் நோக்கிடவந்தால், தஞ்சமாங்குருவில்நாலின்கோள் பொசிப்பிற் றையலர் சார்ந்திடுமிரண்டாம். (அக)

சார்ந்திடுமுயிருக் கொன்பதிற்குருவுந் தனித்திடக் கரும னும் பார்க்கத், தேர்ந்திடுங்கரியும் பஞ்சமமதனிற் றிங்களும் மறைந்திடப்புகரும், ஆர்ந்திடமூன்றில் நீசனுய்வருகி லமைத்த னர் குருதிசைமுதலாய்க், கார்ந்திடுமுயற்சி யற்பமாய்ப்பெருகு கநிதிசையாதி தன்வரைக்கும். (அஉ)

ஏழினிற்குருவு மிருந்திடவக்கோ ளிணங்கிடவுயிர்க்குமூன் றதனிற், றுழ்விலாப்புகரு முயிரின் கோளாகித் தரித்திடப்பா னுமாலாறுய், வாழ்வெனுமதியுங் கருமனுய்ப்பத்தில் வந்திட ஆட்சியாய்வரினும், ஊழ்விதிப்படியாற் புகர்திசைமதியி லுரைத் தனர் மனவி சேர்ந்திடுவள். (அங)

மனவியும் சொந்தமாகியே வருவள் வாய்த்திடுங் குணமு நன்மனமாம், இனமுடன்தாசி பிறர்மனைபோக ளிணங்கியமேற் குலம்விதவை, கனமுடன்வயது மூத்தவளோடு களிப்புடன் போகபோக்கியங்கள், தனமுடன்பேசுந் தையலர்க் கன்பன் சாருவன் வெகுபிரபலமாய். (அச)

ஏழினேன்செவ்வா யாகியேயுயிரி லிருந்திடப் புகருடன் கதிரோன், வாழமால்வீட்டின் மதிக்குப்பன்னிரண்டாய் மறைந் திடக்குருவுமே பார்க்கக், கோளதாம்புகரிற் கூடிடும்மனவி குறித்தன ரவன்தனதினிலும், மீளவேபுகரில் குடும்பனுளைந்தி விளங்கிடு மனவிரண்டுண்டே. (அரு)

மனவியரிரண்டாய் வகுத்திடுஞ்சேய்க்கு மதிக்குப்பத்தி னிற்சிகிவரினும், இனமுடன்வருநா ளதனிலேமுயற்சி யெய் திடும் புகர்திசையதனில், கனமுடன்தனங்கள் கருதுபோகங் கள் காரிகைபிறர்மனையுடனே, குணமுடன்முயற்சி கூடிடும்மதி நாள் கொடுத்திடுமதிகமாய் விளங்கும். (அசு)

அதிகமாய்விளங்கும் ஒன்பதுபத்தோன்அணுகிடும் நாளி னிற் பெலமாய், நிதியுடன்தனங்கள் கிரகவாகனங்கள் நின்றி டும் புரவியின்சகடம், துதிசெயுங்கீர்த்திபிதாவுடன்பூமி சேர் விலாத் தனங்களுமுடையன், கெதிபெறவிருப்பனிரவி நாளத னிற் கெணித்தனர் பூமியுஞ்சேர (அஎ)

பஞ்சமன்மாலாய் மதியுடன்மூன்றிற் பதிந்திடக்குருவுடன் மாந்தி, விஞ்சையாய்ப்பத்திற் காரிவீடாகி விளங்கிடவேழின்

கோளுயிரிற், றஞ்சமாமுதயன் நாலின்கோளுடனே சார்ந்திடப் பிறந்த சாதகற்கு, வஞ்சியரிரண்டு மதித்தனர்புதல்வர் வாய்த் திடுநாலுடன் தானே. (அஅ)

ஏழினேன்கரியாயரவுடனுயிரி லிருந்திடப்பாக்கியமதனிற் ரூழ்விலாவக்கோளேழினிற்றனிக்கச் சசிமகன்புகர்குசன்ருனும் கோளிலாதுயிர்க்குக்கர்மகேந்திரத்திற்கூடிடப்பிறந்தசாதகற்கு வாழவேவயதுமீரைந்துமூன்றில் வந்திடுமங்களமென்னே. (அகூ)

மங்களமுடனே போகபோக்கியங்கள் வருவதுகேது நாள் முதலாய்த், தங்கிடுந்தாசி பிறர்மனைபோகம் சார்ந்திடு மநேக மாய்ப்பலன்கள், இங்கிதமுடனே முயற்சியுந்தனங்க ளெய்தி டும் பலன்வெகு விதமாய், அங்கவர்மனவி வருமுதல்யோகம் அன்னியதேசமே வாசம். (கூ0)

ஏழினேன்குருவாய்ச் சேயுடன்பத்தி லிருந்திடவேழினில் மதியுந், தாழ்விலாப்புகரும் மாந்தியும்லாபந் தரித்திடக்கரும னும்பானும், வாழ்வுடன்மதிக்கு மூன்றினிற்றரிக்க மந்தனுங் குருவைநோக்குற்ருல், ஊழ்விதிப்படியா லுயிரின்கோள் திசையி லுரைத்தனர் காரிநாள்மணமாம். (கூக)

மணமெனுமங்கை யிரண்டெனமொழிய வகுத்தனர் சாத கன்றனக்கு, குணமுடன்புகர்நாளரவினிற்கோதை கூடிடுமிரண் டுமேயாகும், பணமுடன்பந்து சனமெலாந்துதிக்கப் பாரினிலதி கயோகமுமாம், எணமதிற்கபடன் வஞ்சகன்சிகப்பன் எழில்மதி சமமென வுரையே. (கூஉ)

உரைத்தனர்பெரியோ ருயிரின்கோள்மாலாய் ஒன்பதிற் பருதியோடேக, நிரைத்தனர்பத்தோன் திசையினிற் கருமம் நேர்ந்திடு மாண்டுமேயாகும், மறைத்திடக்காரி பஞ்சமாதிப ஞ்ய் மதிக்குக்கேந் திரந்தனில் வரினும், குறைத்திடப்புதல்வர் தோன்றிடுமுந்தி கோதையர்தனக்குமே யென்ருர். (கூங)

ஏழினிற்செவ்வா யிருந்திடவக்கோ ளிணங்கியகாரிவீ டதனிற், ரூழ்விலாப்புகரும் அரவுடன்பத்திற் றரித்திடவுயிரின் கோள்கேதும், வாழ்வுடனுயிர்க்கு வந்திடநாலில் வாக்கினிற் காரியுநீசம், சூழவேவரினுங் குருதிசையதனிற் ரேன்றிடுஞ்சே யினில் மணமாம். (கூச)

மணமுடனநேக மங்கையைக்கூட வல்லவனாகியே யிருப்பன், குணமுடன்விதவை போகமுங்கொடுக்குங் கோதையர்க்கன்பனாங்காமி, எணமுடன்நயத்த னிங்கிதவாக்கன் எய்திடுங் கோபியன்சீலன், பணமுடன்சிகப்பு வயிரமாலோகம் பற்றிடும் வாணிபனாமே. (கூடு)

ஏழினோன்குருவாய் மதியுடனஞ்சி லிருந்திடச் சேயுமே பார்க்கத், தாழ்விலாப்புகரும் அரவுடன்வெய்யோன் றன்னுடனாட்சியாய் மறையிற், கோளுயிரதனில் மதிமகன்தனிக்கக் குசனுடன்மாந்தியுங் குடும்பம், வாழவேவரினுங் குருதிசைகரிநாள் வந்திடுமங்களமென்னே. (கூசு)

மங்களமுடனே போகபோக்கியங்கள் வாய்த்திடுந்தாசியர் முதலாய்த், தங்கிடுமனைவி பிறர்மனைசேர்வன் சலிப்பிலாவிதவையின்போகம், இங்கிதமான சுமுகனாமெவர்க்கு மிஷ்டனாமிஷ்டர் மேற்பிரியன், மங்கையர்வருநாள் முதலிலேமுயற்சி வளர்ந்திடும் பின்சமங் கொடுக்கும். (கூஎ)

வேறு.

சந்திரனுங்கேந்திரமா யேழாந்தானம்
தனித்திடவேஅதற்குடையோன் சாருமில்லம்
வந்திடவேபுகர்வீடாய் வளரக்காரி
வருங்கொடியோன் மாந்தியுடன்கருமமேறச்
சிந்தையுடனுயிர்க்கோளன் பவராய்மாலும்
சேர்ந்திடவேஅரவுடனே சேயுங்கூடில்
விந்தையுடன்குருதிசையில் மணமாய்ப்பேசும்
விளங்குகரிதிசைவரினும் விவாகஞ்சேரும். (கூஅ)

சேருமெனவோர்மனவி குருநாள்தன்னில்
செப்பினதுதவறிவிடில் தீர்க்கமொன்றும்
கூறுமெனவருமனவி கரிநாள்வந்தால்
கொடுத்திடுமேபெலமாகக் கோதைவாழ்வள்
சாருமெனத்தையல்வருஞ் சொந்தமாகச்
சாற்றினரவன்றனக்கு நாலேழெட்டில்
சீருடனேசேயரவு கரிவந்துற்றால்
செப்பினர்கள்பாவமெனப் புதல்வர்தோஷம் (கூகூ)

பாவமெனச்சொல்லியசேய் தோன்றவேண்டிற்
பலித்திடுமேஆதித்த வார்நாளில்
பூவுடனேபொங்கலிட்டுத் தரையில்வைத்துப்
புருடன்மனையிருபேரும் புசிக்கவேண்டும்
கோவுடனேமறையோரைப் பூசித்தேதான்
குருவாரமதிற்றானே குணமாயன்னம்
ஆவலுடன்கொடுத்துவரிற் புதல்வர்தோன்றும்
அறைந்தனர்களேம்பதுக்குட் பெலமென்றேதே. (கூ00)

வேறு.

ஏழினிற்காரியிருந்திடவக்கோ ளிரவிசேய்வீட்டினில்மறையத், தாழ்விலாதுயிரோன் பஞ்சமமதனிற் றனித்திடச்சனியுமே பார்க்கக், கோளுயிர்தனிலே குளிகனுந்தரிக்கக் குடும்பனுமுச்சமாய்வீரினும், வாழவேஅரவு திசைதனில்மால்நாள் வாய்த்திடும் மங்களம்வருமே. (க0க)

மங்களமிரண்டாய் வகுத்தனர்பெரியோர் வாய்த்திடுங்குருதிசைகரியில், இங்கிதமாக மனைவியுஞ்சேர்வ ளெழிலுறுந்தேக நோயுடையன், சங்கையாம்பெண்கள் மயக்கத்தாலிவனுந் தாசியர் போகமுமுடையன், தங்கிடுமனவி யிரண்டுடன்வாழ்வன் தாழ்விலை யோகமுஞ்சமமாம். (க0உ)

வேறு.

ஆரலுமுயிரின்கோளாய் அஞ்சினில்மருவவன்னேன்
மீறியேஉச்சமாகி விளங்கிடச்சேயைப்பார்க்கில்
பாரினிற்கருமன்மாலும் பதிந்திடங்காரிவீடால்
நேரினிற்குமரன்பாதம் நேர்ந்திடில்நிவர்த்தியாமால். (க0ங)

நிவர்த்தியாங்கந்தன்றன்னை நெஞ்சினுள்நினையெந்நாளும்
இவர்த்தலாயறிவுகூட்டி யேற்றிடக்கருமம்போகும்
உவர்த்தலாயுளத்தில்நின்றால் ஊழ்வினைமிகவுண்டாகித்
தவர்த்தலாய்க்கொல்லுமென்று சாற்றினர்தமிழ்வல்லோரே. ()

வேறு.

ஏழினிலரவுமிரவியுந்தரிக்க வேழின்கோள்மதியுடன்நீசந்
தாழ்விலாப்புகரும்பாக்கியனுடனே தரித்திடவெட்டினில்மறை
வாழ்வதுமஞ்சிற்காரியாய்மதிக்கு வந்திடப்பொன்னவனாரூய்[ய
மீளவேமனவிமாலவன் திசையில் விளங்கிடுமிரண்டெனவுரையே.

ஏழினோன்குருவாய் மால்புகருடனே இருந்திடநாலிற்கேந் திரமாய்த், தாழ்விலாக்குடும்பன் சசிக்குமீராறிற் சார்ந்திடமதி யுமஞ்சாகில், வாழ்வுடனரவு யெட்டினிற்றனிக்க வந்திடமனைவி ரண்டாகும், மீளவேஅரவு திசைதனிற்கரிநாள் மேவநன்மங்க ளம்வருமே. (க0சு)

வருமுயிர் சேய்க்கு வகுத்தனர் மனவி மாய்ந்திடும் பாம்பு நாள் வரையில், தருமுயிர்க் கேழோன் திசைவருமதனிற் சார்ந் திடு மங்கையர் வருமாம், பெருமையிப்படியே உரைத்தனர்வாக் சிற் பிறங்கிடக் கொடியவன்மாந்தி, வருமதிதனக்கு வாக்கினிற் காரி வக்கிரன் பார்த்திடவந்தால். (க0எ)

முதிர்பிறைபெலமாய்ப் பவர்மனையாகி முன்பவர் பின்சுப ராகிற், சதிருடன்தோன்றுஞ் சாதகன்றனக்குச் சார்ந்திடுமங் கையரிரண்டு, விதியுடன்நிற்கக் கெணிதநூலதனல் விதித்தனர் கரிதிசையதனிற், பதிதனில்வருமாம்மங்கையர்மூன்றாய்ப் பகர்ந் தனர் கெணிதநூலாய்ந்தோர். (க0அ)

ஏழினில்ரவு தனித்திடவக்கோ ளிருந்திடமறைந்திடப் புக ரில், தாழ்விலாதுயிரோன் காரிகேதோடு சார்ந்திடவுதையகேந் திரத்தில், வாழுமாலிரவி மறைந்திடமதிக்கு வாக்கிலேதரித்திட வந்தாற், கோளதாமிரண்டோன் திசையினிற்குருநாள் கொடுத் திடுமங்கள மென்னே. (க0கூ)

மங்களமுடனே போகபோக்கியங்கள் வாய்த்திடு மனைவி யுஞ் சொந்தம், இங்கிதமாக விருந்திடிற்பிணிக ளெய்திடும் பீடையு முடையன், மங்கையர்வழியாற் பாக்கியம்பூமி வந்திடும் வளர்மனை வாழ்வன், சங்கையாந்தாசி பிறர்மனைபோகன் தைய லர் கலவியிற் பிரியன். (கக0)

ஏழினிற்குருவுந் தனித்திடவேழோ னிரவியுஞ் சோமனுங் கூடித், தாழ்விலாதுயிர்க்கு லாபமாய்வரினுஞ் சசிமகன்மறைந் திடப் புகரில், வாழ்வுறுமுயிரிற் சேயுமேதனிக்க மங்கையரவு நாள்புகருண், மாழையாமணநா ளாகிடு மென்றே வகுத்தனர் பெரியவர் பெலமாய். (கக)

பெலமெனுமனவி யிரண்டுமாய்ப் பெரியோர் பேசினர் குரு திசை யதனிற், குலமிலாக்கேதிற் களத்திரம்போகுங் கூடிடுமங்

கள மிரண்டாம், நலமுளான்கோபி வஞ்சகநயத்தன் நாடிடுங் கீர்த்தியு முள்ளான், தலமெனுங்கிரகம் பூமியுந்தனமுஞ் சார்ந் திடுஞ் சகடமு முடையன். (ककउ)

ஏழினேன்சுபராய்ப் பாவர்வீடேகி யிருந்திட மறைந்திடா திடுகில், வாழ்வுடனுயிரோன் சேய்புகருடனே வருமிடமறைய் வன் வீடாய்த், தாழ்வுடன்சோமற் கேழுமெட்டதனிற்றங்கிடப் பாவரும்வந்தால், ஊழ்விதிப்படியால் பாம்புநாள்கரிவந் துதித் திடில் மங்கையர் வருமாம். (ककऊ)

வருமுயிர்சேய்க்குவகுத்தனர்மனவிமாய்ந்திடும்பாம்புநாள் முடிவில், தருமுயிர்க்கோளோன் திசைவருமதனிற் சார்ந்திடு மங்கையர் பெலமாம், உறுதியிப்படியே உரைத்தனர்கணித குரு கனில்மனவியும்பெலக்கில், வருமுயிர்க்கெட்டோன் திசையினிற் றனதில் வந்திடுமனவி மாய்ந்திடுவள். (ककच)

ஏழினுக் குடையோன் கேதுட னஞ்சி லிருந்திடக் காரிவீ டாக, வாழ்வெனுமேழில் மதியுமேதனிக்க வந்திடவாக்கினிற் புகரும், தாழ்விலா துயிரோன் மதிக்குக்கேந்திரமாய்த் தனித் திடச்சனியுமே மறையில், ஊழ்விதிப்படியாற் காரிநாள்குருவி லுரைத்தனர் தாரம்வந்துதவும். (ककछ)

வேறு.

சூரியனேழாந்தானத் துடையராய் மதிமாலோடாய்ப்
பாரில்காரகனோடாட்சி யுச்சநட்பாகுமாகிற்
சேர்பிறைதனக்குவெள்ளி திசைமறையேதானுலும்
நேருமீரேழோடொன்றில் நிகழ்மணந்தாரமொன்றே. (ककज)

ஏழினேன்சுபராய்ப் பாவரோடேகி யிருந்திடமறைந்திட வருமால், வாழ்வுடன்பருதி புகருடன்கூடி வருமிடம்சுபமிலா திடுகில், தாழ்விலாக்குடும்பன் காரிகேதுடனே சாரிடங்கர்ம கேந்திரமாய், ஊழ்விதிப்படியா யேழின்கோள்திசையி லுரைத் தனர்மங்களம் வருமே. (कझ)

வருமுயிர்சேய்க்கு வகுத்தனர்மனவி மாய்ந்திடும் பாம்பி னில் மால்நாள், தருமுயிர்க்கதிபன் திசைவருமதனிற் சார்ந் திடும்பூமியுங் கிரகம், பெருமுயிர்தனக்கு நாலின்கோள்பத்திற்

பெலத்திடக்குருவுகே துடனுற், சுருதியாய்ச்சகடம் புரவிவா கனமுந் தோன்றிடுமெனச்சிலர் மொழிந்தார். (ககஅ)

புகர்மதிகரும னுயிர்க்கிரண்டிடமாய்ப் பொன்னவன்றன் னுடன்கூடில், தகரினேனுயிரிற் சார்ந்திடவுஞ்சிற் சனியுடன் கேதுமேதரித்தால், நிகரிலாவுயிரோ னுச்சகேந்திரத்தில்நின்றிட வேழைச்சேய் பார்க்கிற், பகர்வதுமுயிரோன் திசையினிற்பொ ன்னன் பதிந்திடில் மங்களம்வருமாம். (ককক)

மங்களமுடனே போகபோக்கியங்கள் வளர்ந்திடுமனைவிய ரிரண்டாம், இங்கிதமான தாசியும்விதவை யெய்திடும்வயதுமூத் தவளாய்த், தங்கிடுமனவி கறுப்பினில்வெளுப்பாய்ச் சாற்றலாங் கோபியுமாவள், சங்கையாய்மனது வஞ்சகமுடனே தையலர் வாய்த்திடுமென்றார். (கஉ0)

இரண்டைந்தோ ரெட்டிற்றீக்கோ ளிருந்திடவதனைநோ க்க, வரண்டகா ரகந்தானக்கோள் மறைந்தாட்சி யுச்சஞ்சேரில், திரண்டொரு மனவிரண்டாங் கேந்திரத்தவலமெய்தில், உருண் டபின்னென்றுண்டாகும் உடுக்கிடைப் பூங்கொம்பன்னுய். ()

ஏழினிற்கேதுமிருந்திடவக்கோ ளிந்துவாய்ச்சேயுடன்மறையிற் றுழ்விலாப்புகருங்கர்மகேந்திரத்திற்றரித்திடமானுடனுட்சி[க்கு கோளுயிர்தனக்கோரஞ்சினிற்குருவாய்க் கூடிடப்பிறந்தசாதகர் வாழவேமதிநாளதனிலேபுகரூண் வாய்த்திடுமங்களம்வருமே. ()

மங்களமுடனே போகபோக்கியங்கள் வளர்ந்திடுமனவி ரண்டாகும், சங்கையாந்தொத்துஞ் சார்ந்திடும்பெலமாய்த் தை யலர் மூன்றுமேவுடையன், இங்கிதன்சுமுக னேந்திழைமோக னெய்திடு மரவுநாள்கரியிற், பங்கமில்மனவி ஜலத்தினுல்மரணம் பகர்ந்தனர் கணிதநூலதனுல். (கஉங)

புகர்தனக்கேழிற் காரியேதரிக்கப் பொன்னவன்தனக்குமே ழுதனில், நிகரிலாயிரவி தனித்திடவுயிரில் நின்றிடஅரவுமேவரி னும், பகர்வதுவயது முப்பதுமூன்றிற் பலித்திடுங்களத்திரம் போகும், தகரினிலிருந்த சனியநாளதனிற் சார்ந்திடுமங்கள மிரண்டாம். (கஉச)

வேறு.

அட்டமத்தோன்காரிகுரு அரவுடனென்றாகி
யமர்ந்திடக்கேந்திரமேழா யவன்றனக்குநாலில்
திட்டமுடன்குடும்பனுமே குருவீடாய்த்தரிக்கத்
தினகரனும்புதனுடனே சேர்மதிக்காறுக
மட்டவிழ்சேரிலக்கனத்திற் கேதுவரின்மணநாள்
வாய்த்திடுமேமதிநாளில் மங்களந்தப்பாது
சட்டமுடன்மாதருயிர் நாற்பதனிற்கண்டம்
சாற்றினுர்சசிதிசைநா ளந்தியத்திற்போமே. (கஉரு)

ஓதினர்களுயிர்தனக்கு நாலதனிற்சுங்க
னுறைந்திடவேநீசமதா யுதித்திடுமாதருக்கு
வேதன்மொழிப்படியாகக் கணவன்றனக்கிவள்தான்
விளங்குமிரண்டுடன்மாதாய் விதித்தனர்கள்பெரியோர்
நீதியுடனுயிர்க்கிரண்டிற் சேய்நீசமாகி
நின்றிடவேமாந்தியுடன் நேரிழைசாதகற்கு
ஓதிடுவன்மாதருயிர் மூன்னுரைநாற்பதிலே
ஒழியுமெனப்பாதிபெல முரைத்தனர்நூல்விதியால். ()

ஏழினேனிருந்த வீட்டின்கோள்மாலா யிருந்திடப்புகர்கரி யரவும், தாழ்விலாதுயிருக் காறினில்மறையச் சசியுமே வுயி ரினிற்றேன்றக், கோள்குருபருதி யுயிருக்கைந்திடமாய்க் குறு கிடப் பிறந்தசா தகற்கு, வாழவேஅரவ மிருந்திடும்வீட்டில் வாய்த்திடுந்திசையிலே மணமாம். (கஉஎ)

மணமெனுமநேக மங்கையைக்கூட வல்லவனுகியே யிருப் பன், குணமெனுந்தார மூன்றுமேயுடையன் குருதிசையத னிலே யாகும், எணமுடன்தாசி பிறர்மனைபோகன் இணங்கிய பேர்க்குமே நல்லன், துணைவனுல்விரோத மாகியேயிருப்பன் சொல்வதும்வஞ்சகன் காமி. (கஉஅ)

காரியுமுயிர்க்குத் தனித்திடவக்கோள் கதிரவன்புகர்சிகி மாலும், பாரினிலுயிருக் கொன்பதிற்பதியப் பகர்ந்தனர் குரு வுமே பார்க்கில், வாரணிமுலையாள் கோளென வகுத்தோன் வயதுமேஐம்பதோ டாறும், நாரியர்தானும் புகர்திசையதனில் நண்ணிடுங்கரியினுல் மணமாம். (கஉகூ)

மணமெனுமங்கை வாய்த்திடுங்கோபி வம்புடன் கலகமே
யுடையாள், குணமிலாள்சொர்ரூபங் கொதித்திடுஞ் சிகப்பாங்
கோதையர்சமனுடன் வளர்த்தி, எணமிலாள் தனியே யிருந்திட
மனமா மெய்திடும்வஞ்சகங் கபடம், துணைவியாமனவி தோன்
றிடுமென்று சொல்லினுர்பெரியவர் தாமே. (கஙo)

ஏழினேன்செவ்வாய் குருவுடனரவு மிருந்திடப்பிருகுட
வீடால், தாழ்விலாமதிக்கே ஏழின்கோளிரவி சாரிடங்காரிவீ
டாக, வாழ்வுடனக்கோள் வாக்கினில்மருவில் வாய்த்திடுங்கேது
நா ளதனில், ஊழ்விதிப்படியா லிரண்டின்கோள் பொசிப்பி
லுண்மையாமனவிவந் திடுமே. (கஙக)

நாலின்கோள்மாலுங் கேதுவுமூன்றில் நண்ணிடக்குருவுமே
வுயிரில், மாலவன்றனக்கு மூன்றினிற்புகராய் வந்திடிற் ருயர்வீ
டாகும், தூலமாயிரவி தன்னுடனரவுந் தோன்றிடி லிராகுவில்
மணநாள், ஏலவேவரினு மங்களமுடைய னெய்திடுங்கருமமு
முடிப்பன். (கஙஉ)

முடிப்பதுபாம்பு திசையினில்நாலோன் முழங்கிடிலன்னை
யும் போகும், துடிப்பதுபாம்பிற் புகருமேவருகிற் சோர்விலை
முயற்சியுந் தோன்றும், நொடிப்பதுபாம்பு தனக்குமொன்பத
னில் நுணுக்கமாய்மதியுடன் சேயும், அடிப்பதுமரவு திசை
யினந்தியத்தி லாகுமேபிதாவுட கருமம். (கஙங)

அட்டமன்புகர்மால் காரியுமூன்றி லமர்ந்திடவக்கிர கத்
தோன், திட்டமாயெட்டிற் சேர்ந்திடமதியும்செம்பொன்வீடத
னிலே மறையில், மட்டிலாவயது முப்பதோரிரண்டில் மாய்த்
திடுந்தப்பினுற் பெலமே, சட்டமாய்ப்புகரிற் சந்திரன்வருநாள்
தரணியில்மணம்புரிந் திடுவன். (கஙச)

ஏழினேன்புகரு முயிரின்கோள்மதியு மிருந்திடங் காரிவீ
டாகத், தாழ்விலாக்குருவுங் கருமகேந்திரத்திற் றனித்திடப்
பானுவும் பார்க்க, வாழ்வதுசோமற் கைந்தின்கோளரவம வந்
திடவுயிர்க்குமூன் றிடமாய், ஆழ்ந்திடாதிருக்கிற் காரிநாள்
மாலோ னுர்ந்திடில்மங்களம் வருமே. (கஙரு)

மங்களமுடனே போகபோக்கியங்கள் வாய்த்திடு மனவியுஞ்
சிகப்பி, இங்கிதஞ்சமமா யெய்திடும்வளர்த்தி யேந்திழை யரை

யினில் முதுகில், சங்கையாஞ்சிரசில் மருவுடன்மச்சந் தங்கிடிற் செல்வியாய்வாழ்வள், நங்கையர்தனக்கு மச்சமில்மருவாய் நாடு மேபாக்கியஞ் சமமாய் (கஙசு)

ஏழினிலிரவி யரவுமால்சேயு மிருந்திடக் குருவுமே பார்க்கத், தாழ்விலாப்புகரோனுயிரினுக்கஞ்சாய்த் தனித்திடப்பிறந்த சாதகற்கு, வாழவேநாலோன் திசையினிற் குடும்பன் வந்திடில் மங்களம்வருமாம், சூழவேமனவியிரண்டுமேயாகச் சொல்லினர் குருதிசை யதனில். (கஙஎ)

ஏழினோன்புகரு மாந்தியுமதீவீ டிருந்திடக் குருகரியரவம், தாழ்விலாவுயிரிற் சார்ந்திடச்செவ்வாய் சசிமகன் வீடதாய்க்கேதும், கோளுயிருடனே கூடிடக்குருவில் கொடுத்திடும் மாலவன் பொசிப்பிற், சூழவேமணநா ளாகிடுமென்று சொல்லினர் மனவியுமிரண்டே. (கஙஅ)

மனவியரிரண்டாய் வகுத்திடுஞ்சேய்க்கு மங்களங்குருதிகையதனில், இனமுடன்சேரு மொன்றுதான்போகும் இருந்திடு மொன்றுதான் தீர்க்கம், குணமுளான்வஞ்சன் காமியன் கோபி கோதையர்க்கன்பனு யிருப்பன், மணமுளான் குருவில் கிரகமும்பூமி வாய்த்திடு முயற்சியு முடையன். (கஙகூ)

ஏழினிற்குருவும் ஆட்சியாய்த்தனிக்க இரவியுமந்தனும்மதியும், தாழ்விலாதுயிருக் கிரண்டினிற்சேரிற் சசிமகனுயிரிற் கேந்திரமாய், வாழ்புகரஞ்சோன் மறைந்திடவாட்சி வந்திடப்பிறந்த சாதகற்கு, ஊழ்விதிப்படியாற் காரிநாளதனி லுரைத்தனர் மங்கள முறுநாள். (கசஙு)

மங்களமிரண்டாய் வகுத்திடுஞ்சேய்க்கு வாக்கினிலைந்தினிலெட்டிற், சங்கமாய்ப்பாவ ரிருந்திடநோக்கிற் றையலர்சேதமாம்பின்னே, இங்கிதமான வுயிரின்கோள்புகரி லிணங்கிய மங்களம் வருமாம், பங்கமில்முயற்சி வரவரப்பெருகும் பகர்ந்தனர் பெரியவர் நூலால். (கசக)

வேறு.

சுக்கிரன்றன்னுடன்மறையோன் மதிவீடேகத்
தோன்றுமதிபுகர்வீட்டிற் பவரோடாகத்
தக்கரவுசூரியன்முன் பின்னுமேகத்
தமந்தனக்கீராறதுவே சுத்தமாகத்

திக்குமணமேகமுமா மணஞ்செய்பாரி
திறலுடனன்னியர்தனையே விரும்புமென்றுந்
தொக்குடன்சொல்லிதிலொருகோள் சேருமாலை
துய்யநெறிகற்புடையா ளென்றுசொல்லே. (கசஉ)

அனமேமால்வீடுதிக்க மாந்திமாலோன்
அமருபையுதானத்துக் குடையநாதன்
பினுமறையோனெடுமதிவீ டேகவக்கோள்
பிலனுபயமதிலுதிக்கக் கரியனோடு
கன்பருதியுயிருக்கி ராறிலேகக்
கழலையொடுரோகந்தன் பாரிபின்னுந்
தனமுறையஅன்னியரை விரும்பிப்போவள்
தான்சிலநாளுக்குச்சன் யாசியாமே. (கசஙு)

வே று.

எழினேன்கரியாய் மாலவன்வீட்டி லிருந்திடமாந்தியுஞ்சே ரக், கோவினேன்மதிக்கு மூன்றினிற்குறுகக் கொடியசேயுபிரை நோக்குற்றால், மீளவேயிரண்டோ னிரவிராகுடனே வீபத்துக் கிரண்டினில்வந்தால், ஊழ்விதிப்படியால்காரிநாள்மாலா ணுதித் திடில் மங்களம்வருமே. (கசச)

மங்களமுடனே போகபோக்கியங்கள் வாய்த்திடும்வளர்த் தியுஞ்சமனும், இங்கிதமான தேகமும்பொதுவா யிலங்கிடுங் கோபியாம் வஞ்சன், நங்கையர்பிறரின் மாதர்தன்போகன் நாரி யர்சொல்வழிநடப்பன், சங்கையாம்வித்தை மூன்றுமேசமமாய்ச் சார்ந்திடுநயகுண முடையோன். (கசரு)

எழினிலிரவி கேதுடனக்கோ ளிந்துவும்புகருடன் மறை யத், தாழ்விலாதுயிரிற் சனியுடனரவுஞ் சார்ந்திடப் புகரைச் சேய்பார்க்க, வாழவேஅரவு திசையினிற்புகர்நாள் வந்திடுமங்க ளமுடனே, சூழவேமனவி சமநிறம்பொதுவாய்த் தோன்றிடும் போக போக்கியனும். (கசசு)

போகமுமிகுதி பிறர்மனைபோகன் பொய்யுடன்கபடு வஞ்ச கனும், வேகமாயிரண்டுதாரமே யுடையன் விளங்கிய பாலருந் தோன்றும், தாகமாய்ப்பெண்ணுந் தரித்திடுந்தீர்க்கஞ் சாற்றி லாணிரண்டு பெண்மூன்றாய், ஆகமபுராணம் சோதிடமுணர்ந் தோ ரமைத்தனரவ்வழி பாரே. (கசஎ)

வேறு.

எழினுக்குடையோன்சுங்க னிருந்திடச்சுபர்வீடாக
வாழ்வுடன்மதிமால்வெய்யோன் வந்திடக்கேதுவோடே
தாழ்வுடனிக்கோள் தானுஞ் சாருமோரில்லமானால்
ஊழ்விதிப்படியாற்றூர முரைத்தனர்வெள்ளிவந்தால். (கசஅ)

வருவதுமொழிந்தார்மேலோர் வயதுதன்விபரஞ்சொல்வேன்
இருபதிற்சொந்தமாக இசைவுடன்மனவிசேரும்
பருதிதன்நிறம்போல்மங்கை பகர்ந்தனர்கெணிதநூலால்
மிருதுவாயுதிக்குஞ்சேய்க்கு விளம்பினர்மனைவிரண்டாம். ()

எழினுக்குடையோனேழி லிருந்திடவவர்க்கிராறிற்
றூழ்வுடனிரண்டோன்சுங்கன் சதிருடன்வருவதானால்
வாழ்வுதானிருபத்தொன்றில் வந்திடுஞ்சொந்தமாக
ஊழ்விதிப்படியாற்றூர முரைத்தனர்யோகமாதே. (கரு0)

குருவுமேதன்வீடாகக் குளிர்மதிகாரியோடு
வருமுயிர்தனிலேசேர மதிமகன்பெலமதானாற்
கருதியேயுதிக்குஞ்சேய்க்குக் களத்திரம்வருநாள்தொட்டுப்
பெருகிடுமதிகவாழ்வாய்ப் பீதகன்திசைமட்டுண்டாம். ()

வேறு.

எழினுக்குடையோன் புகருடன்கூடி யிருந்திடச் சந்திரன் வீட்டில், வாழ்வுடனேழில் மதிமகன்றனிக்க வக்கிரன்றன்னையே நோக்கத், தாழ்வுடனுதிக்குஞ் சாதகன்றனக்குச் சதிருடன்மங்கலம் வருநாள், ஊழ்விதிப்படியே பத்துடனிரட்டி யுரைத்தனர் மாதுவின் வழியால். (கரு௨)

வேறு.

எழினுக்குடையோன்றானு மிருக்கும்வீடதுவேசுங்கன்
வாழ்வுடனத்தானத்தோன் வளர்பகைபாவரோடே
சூழ்விதிப்படியாற்றூரஞ் சொல்லினரிரண்டேயாகும்
வாழ்வுடனிருவர்தாமும் மனையினிலிருந்துவாழ்வார். (கரு௩)

தாரமுமிரண்டேயாகுந் தரணியிற்பிறந்தசேய்க்குப்
பாரமாயிராறெட்டிற் பகரலாமனவிசேரும்
நேரிழையாளுஞ்சொந்தம் நேர்ந்திடுமவளாற்செல்வஞ்
சாரவேயவள்தன்மேனி சாற்றினர்புகர்பேலாகும். (கரு௪)

அஞ்சினுக்குடையோன்றானு மஞ்சுமீரஞ்சிற்றேன்ற
வஞ்சியரில்லந்தன்னில் மதியுமேதனிக்கவக்கோள்
குஞ்சரத்துடனேபுந்தி குருவுடன்சேர்வதாக
வஞ்சியரொன்றேயாகும் வரவரவதிகவாழ்வாம். (கருரு)

எழினேன்தமமோடேகி யிருந்திடவட்டமத்திற்
றாழ்வுடன்சேய்மாலோடு சாரிடமறைவதாகி
ஊழ்விதிப்படியேசுங்க னுதயனுமேழி லுற்றால்
வாழ்வுடனுதிக்குஞ்சேய்க்கு மங்கையர்பருதிபோலாம். (கருசு)

எழினுக்குடையோனஞ்சி லிருந்திடவதற்குநாதன்
வாழ்வுடனுச்சமாட்சி மறைவிலாதிருப்பானுகிற்
சூழ்விதிப்படியேதாரந் துணிவுடனேகமாகுந்
தாழ்வுடனக்கோள்தானுஞ் சட்டாட்டம்பகைநீசத்தால். ()

புகருடன்றீக்கோள்மேவப் பொருந்தவேழிடத்தோன்றன்னைப்
பகர்சனிபார்வையாகப் பாவக்கோள்முன்பின்நின்றால்
சுகர்மொழிமனவிரண்டைத் துணிவுடன்றொலைப்பானென்றும்
புகருடன்சுபர்கள்சேர்ந்தாற்பொருந்திடுந்தொத்தொன்றேதே.

சூரியனேழோனுகித் தோன்றிடமால்வீடாகச்
சாருமக்கோளன்றானுஞ் சசியொடுமறைவதாகக்
கூருயிர்தனக்கோரேழிற் கோள்பரிபுகர்வந்துற்றால்
ஈருடன்நாலோன்வந்தாற் சேர்ந்திடுந்தாரமொன்றே. (கருகூ)

வேறு

எழினுக்குடையோன் மாலுடன்சேர்ந்தே யேகுவன் வெள்ளிவீடாகத், தாழ்வுடன்வெள்ளி நீசமாய்த்தோன்றத் தன்னுடன் பாவர்வந்துதிக்க,'வாழ்வுடனரவமதியுடன்கூடி மங்கையர் தானம் வந்துதித்தால், சூழ்விதிப்படியால்மனவியர் போகந்தோன்றிடு மதிகமாய்ப்பலன்கள். (கசூ0)

வேறு.

அருக்கனும்புகர்வீடேக அருணனுமதனிலாக
இருக்கும்வீடதிபன்றானு மேகுவனருணன்வீடால்
சுருக்கமாயுதிக்குஞ்சேய்க்குச் சொல்லினீராறொன்றில்
அருக்கனுர்திசையிற்றார மன்புடன்வருவதாகும். (கசுக)

குருவுமேஉச்சமாகக் குளிர்மதிசுங்கன்வெய்யோன்
பருதிவீடதனிற்சேரப் பார்க்கவனில்லந்தன்னிற்
குருதியுஞ்சேர்வதானற் குறித்தனர்மனவியேகஞ்
சுருதியாய்மனவிசேருந் துணிவுடனீராறென்றில். (கசூஉ)

ஏழினுக்குடையோன்றானு மிருந்ததுசுபர்வீடாகத்
தாழ்வுடன்மதியுஞ்சுங்கன் சாரிடமீராறுகச்
சூழ்விதிப்படியால்மங்கை சுந்தரத்துடனேதானும்
ஏழுநாளொன்றுக்குள்ளா யிசைவுடன்மனைவிசேரும். (கசூஙு)

மனவியாலதிகபாக்கியம் வகுத்தனர்பெரியோர்தானும்
மனையவள்வழியாற்செல்வ மதிகமாயிருக்கலாகும்
வினைவுடன்மனவிகோபம் விதித்தனரவளாற்செல்வம்
மனவியர்வருநாள்தொட்டு வரவரவுயர்ந்தவாழ்வோன். (கசூச)

மந்தனுங்கேதுவேழில் வந்திடவதற்குநாதன்
விந்தையாயருணன்வீட்டில் விளங்கிடப்பாம்போடுற்றால்
தந்திடுமிரண்டோன்சுங்கன் சாரிடம்சசிவீடானால்
வந்திடுமனைவிரண்டில் மாய்ந்திடுமொன்றேயாகும். (கசூரு)

ஏழினோன்புகர்வீடேகி யிருந்திடஅட்டமத்தில்
தாழ்வுடன்குருபாம்போடு சாரிடமறைவதானால்
ஊழ்விதிப்படியாற்றாரம் உரைத்தனரரவுநாளில்
வாழ்வுடனுதிக்குஞ்சேய்க்கு மங்கையர்புந்திபோலாம். (கசூசூ)

மங்கையரிரண்டேயாக மதித்தனர்கணிதநூலோர்
சங்கையாயிறைவன்வந்தால் சதிருடனொன்றுதுஞ்சும்
பங்கமில்லாமலொன்று பகர்ந்தனரவளாற்செல்வம்
பொங்கிடுமென்றுநூலோர் புகழ்ந்தனர்பிறக்குஞ்சேய்க்கு. ()

பார்க்கவன்தேளிற்சேரப் பாவக்கோள்முன்பின்னைகத்
தீர்க்கமாயத்தானத்தோன் சேரிடம்பெலமாய்நிற்கப்
பார்க்கவனில்லந்தன்னிற் பானுவுஞ்சுபர்கள்சேர்ந்தால்
மார்க்கமாயுரைத்தார்மேலோர் மங்கையரேகமாகும். (கசூஅ)

ஏகமென்றுரைத்தார்மேலோர் இறையவன்நோக்கவந்தப்
பாகமாய்க்கர்மஸ்தானம் பார்வையாயிருப்பதானால்
தேகமேமனவிபொன்னன் தெளிவுதன்நிறம்போலாகும்
ஏகமென்றுரைக்கலாகும் இரவியுமருணன்சேர்ந்தால். (கசூகூ)

அஞ்சினுக்குடையோனோடு ஆறுநாலுயிரோன்சேர
வஞ்சியர்தானநாதன் மதிமகன்புகர்வீடாகக்
குஞ்சரத்துடனேவெய்யோன் குறுகிடத்தன்வீடானால்
வஞ்சியர்வருநாள்மேலோர் மதித்தனரிருபத்தஞ்சில். (௧௮0)

மதித்தனரிருபத்தஞ்சில் மனவியர்சொந்தமாகும்
விதித்தனரீறெட்டேழில் விரைவுடன்தாரஞ்சேரும்
கொதித்தனரெண்ணன்கொன்றில் கொடியரவிஷத்தாற்றத்து
உதித்திடுமிறக்கக்காட்டுமுயிர்தனைப்பெலமுண்டாக்கும்.(௧௮௧)

வேறு.

மதிதனக்குக்கேந்திரத்தி லுயிரோனுக
வரவவர்க்குமுன்பின்னில் தீக்கோள்மேவத்
ததியுடனேஉயிர்க்கஞ்சிற் சனிவீடாகச்
சதிருடனேசூரியன்மால் தீக்கோள்மேவ
விதியுடனேவருஞ்சேய்க்குக் கணவன்சொந்தம்
விதித்தனர்கள்வருங்கணவன் பதிமூன்றொன்றில்
நிதியாகவருங்கணவன் தனிப்பானேகம்
நீதியாய்த்தமிழாய்ந்தோர் மொழியென்றோதே. (௧௮௨)

வேறு.

மதிமகனோடுசுங்கன் மந்தன்வீடதனிற்சேரச்
சதியுடனக்கோள்தானுந் தனித்திடஅட்டமத்தில்
விதியுடன்பூமன்றானும் விளங்கியேழிடத்திற்சேர்ந்தால்
பதிதனிலுதிக்குஞ்சேய்க்குப் பகரலாம்மனவியேகம். (௧௮௩)

ஏழினோன்கரிமாலோடு இருந்திடஅருணன்வீட்டில்
தாழ்வுடனேழிற்சுங்கன் தரித்திடச்சுபர்களோடு
வாழவேயுதிக்குஞ்சேய்க்கு மனவியரிருவரென்று
ஊழ்விதிப்படியாலொன்று உண்மையாய்வருநாள்சொல்வன். ()

வருவதுவயதுபத்து அஞ்சுடன்மனவிசேரும்
இருபதிற்சொந்தமாக இசைவுடன்மனவியொன்று
பருதிதன்நிறம்போல்மங்கை பகரலாம்வளாற்செல்வம்
கருதியேயிருவர்தாமும் கருத்துடன்வாழுவாரே. (௧௮௫)

வேறு.

ஏழினுக்குடையோ னிரவிமால்புகரா யிருந்திடம்சுபர்பவ
ரில்லம், வாழவேயேழில் குருவுசேய்வரினும் வரவரமுன்புபின்
புகரோன், தாழ்வுடன்மறையச்சாதகன்றனக்குச்சுதிருடனெட்
டுநாலொன்றில், ஊழ்விதிப்படியாற் றாரமொன்றுதவும் உல
கினிலொன்றதா யுரையே. (௧௭௬)

ஏழினுக்குடையோன் காரிமால்புகரா யிருந்திடம்சுபமிலா
திடுகில், ஆழமாயேழி லரவுசூரியனோ டமர்ந்திடச்சுபர்கள்நோக்
கிடினும், வாழவேபிறக்குஞ் சேயுடவயதோ வகுத்தனரெட்டுமா
றஞ்சில், தாழ்விலாமனவி சொந்தமாய்வருமால் சாற்றினர்கெ
ணிதநூலாய்ந்தோர் (௧௭௭)

ஏழினுக்குடையோன் மால்புகருடனே இருந்திடயில்ல
மொன்றாக, வாழவேஅவர்க்கு ஏழினிற்குருசேய் வந்திடப்பிறந்
திடுஞ்சேய்க்கு, ஏழினோன்திசையில் தாரம்வந்துதவும் இசை
யுடனதிகமாய் வருமால், ஊழ்விதிப்படியால் மேலவருரைத்தார்
உதவியு மதிகமாம்பலன்கள். (௧௭௮)

வேறு.

ஏழினுக்குடையோனெட்டி லிருந்திடநீசமாக
வாழவேபுகர்சேய்பாம்பு வந்திடவதனிலாகத்
தாழ்வுடனுதிக்குஞ்சேய்க்குத் தாரம்வந்துற்றதெல்லாம்
ஊழ்விதிப்படியால்நாச முரைத்தனர்கெணிதநூலோர். (௧௭௯)

ஏழினுக்குடையோன்றானும் இருந்திடம்நீசவீடால்
தாழ்வுடன்சுங்கன்றானும் சட்டாட்டப்பகைநீசத்தால்
பேழ்வுடன்சுங்கன்றானும் பிறங்கியசுபர்வீடானால்
ஊழ்விதிப்படியாற்றாரம் உதவியுமில்லைத்தானே. (௧௮௦)

ஏழினில்மதிசேய்காரி யிருந்திடக்கடுங்கோளோடு
வாழவேயவர்க்கீராறில் மந்திரிபுகர்வந்துற்றால்
தாழ்வேயுதிக்குஞ்சேய்க்குத் தாரமுமீரொன்றாகும்
சூழவேவிதிப்படிக்குத் தொகுத்தனரீரேழஞ்சில். (௧௮௧)

அஞ்சிலேழெட்டிற்றீக்கோ ளமர்ந்திடச்சுபர்களோடு
விஞ்சையாய்ப்புகர்மால்நீசம் விளங்கிடும்சாதகற்கு
வஞ்சியர்நாலேயாகும் வந்திடும்நாசமூன்று
மிஞ்சவேஒன்றுவாழும் விதித்தனரிறைவன்வந்தால். (௧௮௨)

வேறு.

ஏழினுக்குடையோன் பாவரோடேகி யிருந்திடமால்புகர் வீடால், தாழ்வுடனஞ்சோன் புகருடன்பவராய்ச் சாரிடமில்ல மொன்றுனல், வாழ்வுடன்பாம்பு திசைபுகர்நாளில் வந்திடுமங்க ளம்வருநாள், ஊழ்விதிப்படியா லேகமாமனவி யுரைத்தனர்காரி சேய்போலாம். (கஅங)

காரிசேய்போல மங்கையர்சொந்தங் கருத்துடன்சாதகன் றனக்குச், சீருடன்மனவி மருவுடன்வருமால் செப்பிடுங்கணித நூல்விதியால், பாரிநாள்முதலே அதிகயோக்கியமாய்ப் பகர்ந்த னர்செல்வமென் றுரைக்கக், கூறினர்பெரியோர் கணிதநூல் விதியாய்க் குறித்தனர் சாதகன்பலனே. (கஅச)

ஏழினுக்குடையோன் குருவுசேய்புகரா யிருந்திடப்பவர் கள்வீடாகத், தாழ்வுடன்வெள்ளி பாவர்வீடதனிற் றனித்திட முனும்பினுங்கொடியோர், சூழுறவுயிருக்கஞ்சுமேழதனிற்றேன் றிடத் தீயகோள் வருமால், ஊழ்விதிப்படியால் தாரம்ரெண் டாக வுரைத்தனர் சாதகன்றனக்கே. (கஅரு)

சாதகன்றனக்கு வயதீரொன்பானிற் சாற்றலாந்தாரம்வந் துதவும், நீதமாய்வாழுங் குருவுநாள்வருநாள் நேர்ந்திடுமொன் றுதான்சேதம்,வேதமாய்மொழிந்தார்ஒன்றுதான்திறமாம்விதித் தனர் சூரிய னொளிபோல், மாதவள்வருமென் றேதினர்கெணி தர் வகுத்தனர் சாதகன்றனக்கே. (கஅசு)

ஏழினுக்குடையோன் வளருங்கேந்திரத்தி லிருந்திடப்பா வர்களுடனே, தாழ்வுடனவற்குப் பன்னிரண்டதனிற் றனித்தி டப்புகர்வருமானல், வாழ்வுடன்பிறக்குஞ்சாதகன்றனக்குவகுத் தனர் மாதுவின் வழியால், சூழ்விதிப்படியா லிருபதுநாலிற் றேன்றிடுந் தாரமென்றுரையே. (கஅஎ)

ஏழினுக்குடையோன் மால்புகருடனே இருந்திடஅட்டம மதனிற், றுழ்வுடனிக்கோள் தனையுமேபாவர் தன்விழிப்பார்வை யேயானல், ஊழ்விதிப்படியாற் பிறந்திடுஞ்சேயற் குரைத்தனர் மாதுவின்வழியால், வாழ்வுடன்வயதோ யிருபதாறுக்குள் வகுத் தனர் தாரமென்றுரையே. (கஅஅ)

வேறு.

சுங்கனுமேழஞ்சோனுந் துணிவுடனோர்வீடாகச்
சங்கையாயிக்கோள் தன்னைச் சற்குருநோக்குவாரேல்
மங்கையர்வருநாள்சொல்வேன் மதித்தனரிருபத்தொன்றில்
பங்கமில்லாமற்சேரும் பகர்ந்தனர்மனவிசொந்தம். (கஅகூ)

ஏழினுக்குடையோன் குருதிமால்புகரா யிருந்திடமில்ல மொன்றாக, வாழ்வுடனக்கோள் காரிபொன்வீடாய் வந்திடத் தனித்திடுமானால், தாழ்வுடனுயிர்க்கு நாலினிற்பாவர் தனித்திடப் பிறந்திடுஞ்சேய்க்கு, ஊழ்விதிப்படியாலேகமாமனவி யுரைத்தனர் பாம்புவந்துற்றால். (கஙூ0)

வேறு.

ஏழினுக்குடையோனேழி லிருந்திடமால்பானோடு
தாழ்வுடனுயிர்க்கிரண்டிற் சனிதனித்திடுமேயானால்
வாழவேபிறக்குஞ்சேய்க்கு வந்திடுமிரண்டுதாரம்
ஏழினோன் திசையிற்சேரு மியல்புடன்நாசமாதோ. (கஙூக)

மாதவர்மொழியென்றோதே வந்திடுஞ்சாதகர்க்கு
வேதமாமிருபத்தாறில் விதித்தனர்மனவிநாசம்
நீதமாயொன்றுவாழும் கெழ்வயதிருபத்தெட்டுள்
ஓதிடுமனவிவெய்யோ னொளிமதிநிறமென்றோதே (கஙூஉ)

மதிநிறமனவியாக வகுத்தனர்பிறக்குஞ்சேய்க்குச்
சதியுடன்மனவிகாமந் தங்கிடுமதிகமாகும்
விதியுடன்புருடனல்லால் வேறொருபுருடர்மோகம்
அதிகமாய்நோக்குமென்றே யறிஞ்ஞருமுரைத்தார்மாதோ. ()

ஏழினோன்புகரோடேகி யிருந்திடஞ்சுபர்வீடாக
வாழ்வுடனிரண்டேழெட்டில் வந்திடக்கடுங்கோளானால்
தாழ்வுடனிக்கோள் தன்னைச் சற்குருநோக்குவாரேல்
ஊழ்விதிப்படியாற்றூர முரைத்தனரிருவரென்றே. (கஙூச)

மாதவர்மொழியென்றோதே வகுத்தனர்பிறந்தசேய்க்கு
வேதமாய்மனவிசேரும் விதித்தனரீரெட்டேழிற்
சேதமென்றுரைத்தாரொன்று செப்பினரருணன்நாளில்
நீதமாயொன்றுவாழும் நிச்சயமுரைத்தார்மேலோர். (கஙூரு)

வேறு.

ஏழினுக்குடையோன் குருவுகேதுடனே இருந்திடவுதய கேந்திரத்தில், தாழ்வுடனுயிருக் கேழினிற்பாம்பு தரித்திடக் குருதியுமதனில், வாழவேபருதி மால்புகருடனே வருமிடம் மறைவிலாதானல், ஊழ்விதிப்படியா லருணநாள்வந்தா லுரைத் தனர் தாரமென்றேதே. (௧௧௬)

வேறு.

ஓதிடுங்கணிதநூலா லுரைத்தனர்சாதகற்கு
வேதமாயிரெட்டஞ்சுள் விதித்தனர்மனவியேகம்
மாதுதன்நிறமுஞ்செந்தீ வண்ணன்மாலொளிபோலாகும்
நீதமாமவளால்யோகம் நிச்சயமுரைக்கலாமே. (௧௧௭)

ஏழினேன்கரிசேயோடு இரவிமால்புகர்வீடானல்
சூழுறமுன்பின்தீக்கோள் தோன்றிடப்புகர்பொன்னேடு
தாழ்வுடனிக்கோள்தானுஞ் சட்டாட்டப்பகைநீசத்தில்
வாழ்வுடன்பிறக்குஞ்சேய்க்கு மங்கையர்மூன்றேயாகும்.(௧௧அ)

மங்கையர்மூன்றேயாகும் மதித்தனரீராறஞ்சிற்
சங்கையாயொன்றுசேருஞ் சாய்ந்திடுமிருபத்தெட்டில்
இங்கிதமிரண்டுவாழு மிசைத்தனர்மதியைப்போலத்
துங்கமாயிருக்குமென்றுசொல்லினர்கணிதமாய்ந்தோர்.(௧௧௧)

புருதியுமேழினேனும் பார்க்கவன்றானுமொன்றாய்க்
குருதிவீடதனிற்சேரக் குருதியுமவ்வீடானல்
கருதியேயுதிக்குஞ்சேய்க்குக் களத்திரம்பெலமாய்ச்சேருஞ்
சுருதியாயிருநாலஞ்சிற் றோன்றிடுமிரண்டேயாகும். (௨00)

மனவியரிருவராக மதித்தனர்கணிதநூலோர்
வினைவுடனென்றுமாளும் விதித்தனரிறைவன்வந்தால்
தனமுடனென்றுசாருஞ் சாற்றினர்முப்பத்தொன்றில்
அனையவளோராண்டுள்ளா யழிந்திடுந்தரணிமாதோ. (௨0௧)

வேறு.

ஏழினுக்குடையோன் காரியோடேகி யிருந்திடவுதயகேந் திரத்திற், றாழ்வுடனதனில் மாந்தியும்வருகச் சற்குருவெட்டி னிற்றரித்தால், வாழ்வுடன்பிறக்குஞ் சேயவன்றனக்கு வகுத்த னர் மங்கையரிருவர், சூழ்விதிப்படியா லொன்றுமாய்ந்திடுமாந் தொகுத்தனர் சாதகன்றனக்கே. (௨0௨)

சாதகன்றனக்கே தாரம்வந்துதவச் சாற்றினர்கணிதநூற் படியே, வேதமாய்வயது பத்துடனிரட்டி விதித்தனர்மங்கலம் வருமால், சேதமாமதுவு மிருபதோரெட்டிற் செத்திடும்மே லவர்மொழியால், ஓதினரொன்று பெலமதாயிருந்தே உதவிடும் வயதுமுப்பதின்மேல். (௨௫)

குருவுமேழோனும் குருதிகேதுடனே குறுகிடஅட்டமமதனில், வருமுயிர்சுபராய்ப் புகருடன்கூடி வந்திடக்கன்னியில் வசித்தாற், கருவினிலுதிக்குஞ் சாதகன்றனக்குக் களத்திரமங் கலம்வருமால், சுருதியின்வயது பத்துமூன்றஞ்சிற் றேன்றிடுந் தாரம்வந்துதவும். (௨௬)

உதவிடுஞ்சேய்க்கு மனவிமூன்றாக வுரைத்தனர்கணிதநூ லாய்ந்தோர், விதமுடனொன்று மிருபத்தோராறில் விஷமுடன் நாசமென்றிடுவாய், இதமுடன்மனவி யிரண்டுவாழ்ந்திடுமென் றிசைத்தனர் சாதகன்றனக்கு, சதமெனவுரைக்கத் தாரத்தாற் செல்வம் சாற்றினர்வெகுதிறமாக. (௨௭)

ஏழினுக்குடையோன் மால்குருவுடனே இருந்திடக்கேந்திரத்துறுமால்,- நீளமாம்புகரும் மதியுடன்கூடி நின்றிடக்காரி பொன்வீடால், வாழவேபிறக்குஞ் சாதகன்றனக்கு வந்திடும் வயதுமுப்பதுமேல், சூழுறமனவி வெகுதிறமாகத் தோன்றிடும் ஏகமாய்வளரும். (௨௮)

ஏழினுக்குடையோன் புந்தியுங்குளிக னிருந்திடப்பிருகுடன்வீடால், வாழ்வுடன்மங்கை காரகன்றானும் மாலவன்வீட்டினில்மறையத், தாழ்வுடனவனை மந்திரிபார்த்தாற் றையலுமேகமதாகும், ஊழ்விதிப்படியே மேலவர்மொழியா லுரைத்தனர்மனவிக்குரோகம். (௨௯)

மனவிக்குரோகம் வருமெனக்கணிதர் வகுத்தனர்சாதகன்றனக்கு, வினைப்படிபுகர்நாள் தனதினில்மணமும் விதித்தனரதிகயோக்கியமாய், அனையவள்மதிசே யருணனைப்போலுமமர்ந்திடுமிப் பலனாக, மனைவியர்வருமென் றுரைத்தனர் பெலமாய் வகுத்தனர் முந்திமாய்ந்திடவே, (௨௰)

சந்திரன்குருதி பாம்புமாலுடனே சார்ந்திட வுயிர்தனக்கேழில், வந்துமக்கோளன் புகருடன்கூடி மறைந்திடப்பவமிலா

திடுகில், சுந்தரப்படியால் வயதுமேழொன்றிற் றோன்றிடுமங்கையர்வருமால், விந்தையாய்மனவி யிருவரென்றுரைக்க விதித்தனரொன்று மாய்ந்திடுமாம். (உ0௬)

வேறு.

ஏழினேன்பவரோடேகி யிருந்திடச்சுபர்வீடாக
வாழ்வுடன்புகரும்பாம்பும் வருமிடமால்வீடானால்
தாழ்வுடனுதிக்குஞ்சேய்க்குச் சதிருடனிருபத்தைந்தில்
ஊழ்விதிப்படியேதாரம் உரைத்தனர்எகமாதோ. (உக0)

ஏழினேன்பரிமாலோடு இருந்திடமறையாதாகில்
சூழுறப்புகரும்பாம்புந் தோன்றிடச்சுபர்வீடானால்
வாழ்வுடன்பிறக்குஞ்சேய்க்கு வகுத்தனரிருபத்தேழில்
ஊழ்விதிப்படியாற்றாரம் உதவிடுந்தரணிமாதோ. (உகக)

மால்புகர்பருதியோடு வருமிடமுயிர்க்கோளாகி
நீலனுமேழினேனும் நின்றிடமறைவதானால்
எலவேபிறக்குஞ்சேய்க்கு யிசைவுடன்மனவிரண்டாம்
தூலமாயிருநாலேழிற் றோன்றிடுந்தரணிமாதோ. (உகஉ)

மாதவர்மொழி நூலாலே வகுத்தனர்கெணிதமாக
வேதமாயிருபத்தேழில் விதித்தனர்தாரந்துஞ்சும்
ஓதிடுமொன்றுசேரு முரைத்தனர்கரிவந்துற்றால்
நீதமாய்வளருமென்றே நிச்சயமுரைக்கலாமே. (உகங)

ஏழினேன்பவரோடேகி யிருந்திடக்குருதிவீடால்
வாழ்வுடன்புகர்மால்வெய்யோன் வரும்பவருடனேசேர்ந்து
தாழ்வுடனுயிர்க்கீராறிற் றரித்திடத்தோன்றுஞ்சேய்க்குச்
சூழுறவிதியாற்பாம்புதோன்றுமத்திசையில்மந்தன். (உகச)

மந்தன்வந்துற்றபோது வகுத்தனர்மனவிசேரும்
விந்தையாய்மனவியாலே விதித்தனரதிகசெல்வஞ்
சிந்தையாய்வருமென்றோதிச் செப்பினர்கணிதநூலோர்
முந்தவேமனவிசேத மொழிந்தனர்சாதகற்கு. (உகரு)

வேறு.

ஏழினேன்சுபராய்ப் பாவரோடேகி யிருந்திட மறைந்திடுமாகில், வாழ்வுடன்புகரோ னுயிர்க்குநாலதனில் வந்திடப்பீதகன் நோக்கச், சூழுறவிதியா லிரண்டினேன்பவராய்த் தோன்

றிடமறைந்திடு மாகில், ஊழ்விதிப்படியாற் புந்திநாள்வருமா
லுரைத்தனர் தாரமென்றுரையே. (உகசு)

வேறு.

ஏழினிற்கொடியோன்றானு மிருந்திடவத்தான்த்தோன்
வாழ்வுடன்புகரோடேகி வருமிடமறையாதாகிற்
சூழுறவிதியாற்பாம்பு தோன்றியதிசையிற்றூரம்
ஊழ்விதிப்படியாற்சேரு முரைத்தனர்சாதகற்கே. (உகஎ)

வேறு.

ஏழினிற்காரி தனித்திடவேழோ னிருந்திட முச்சமாட்சி
யினால், வாழ்வுடன்புகர்சேய் பாம்புடன்கூடி வருமிடஞ்சூரியன்
வீடால், சூழுறவிதியாற் பிறந்திடுஞ்சேய்க்குத் தோன்றியகேது
தன் திசையில், ஊழ்விதிப்படியால் வெள்ளிவந்துற்றா லுரைத்
தனர்மனவியு மேகம். (உகஅ)

வேறு.

குருதியும்பாம்புகாரி குறுகிடவுயிர்க்கேழாகப்
பருதியும்புகருங்கேதும் பகரிடமுதயமானாற்
சுருதியாயுதிக்குஞ்சேய்க்குத் தோன்றிடுமனவிநாலாங்
கருதியேவருநாள்மேலோர் கட்டினார்விதியென்றோதே. (உககூ)

விதியுடன்வயதெட்டேழில் விதித்தனர்மனவிசேரும்
சதிருடனிறைவன்வந்தாற் றூரமுமிருவராகும்
மதியுளாய்முப்பத்தொன்றில் வந்திடும்பாரியொன்று
அதிகமாய்வளருமென்றே அறைந்தனர்தரணிமாதோ. (உஉ0)

ஏழினோன்குருமாலோடங் கிருந்திடம்மறையாதாகிற்
சூழுறவட்டமத்திற் றோன்றிடமதிவந்துற்றால்
வாழ்வுடனேழோன்நாளில் மங்கையர்சொந்தமாகும்
ஊழ்விதிப்படியால்மேலோ ருரைத்தனர்சாதகற்கே. (உஉக)

ஏழினோன்குருமாலோடே யிருந்திடக்காரிவீடால்
தாழ்வுடனட்டமத்திற் றனித்திடப்புகர்வந்துற்றால்
வாழ்வுடன்பிறக்குஞ்சேய்க்கு வகுத்தனர்மனைவியேகம்
சூழுறவேழோன்நாளிற் றோன்றிடுமணமென்றோதே. (உஉஉ)

வேறு.

எழினுக்குடையோன் பருதிமானுடனே யிருந்திடமறைந் திடுமாகிற், றுழ்வுடனேழில் வெள்ளிவந்தேகித் தனித்திடமுன் பினும் பவராய், வாழ்வுடனுயிருக் கிரண்டினிற்கருங்கோள் வந் திடவெட்டின்கோ ளேழிற், சூழுறப்பிறந்த சாதகன்றனக்குச் சுகமிலாத்தாரம்வந் தொழியும். (உஉ௩)

எழினுக்குடையோன் பருதிமால்பாம்போ டிருந்திடப்பவர் மனையாகச், சூழுறவிதியால் வளருங்கேந்திரத்திற் றோன்றிட வெள்ளியோன் வந்தால், வாழ்வுடனுதிக்குஞ் சேயவன்வயது வகுத்தனரிருபத்தெட் டதனில், ஊழ்விதிப்படியாற் காரிசேய போல வுரைத்தனர்தாரமென் றுரையே. (உஉச)

வேறு.

எழினுக்குடையோனுட்சி யிருந்திடஅரவஞ்சேர்ந்தால்
பாழ்படவொழியுஞ்செல்வம் பகரலாமனைவியாலே
தாழ்விலாத்தனவானுவன் சாற்றினார்முப்பத்தேழில்
ஊழ்விதிப்படியேசார முணர்ந்திதையுரைத்தார்மேலோர். ()

மேலவர்மொழியாற்சுங்கன் விரைவுடன்குருவீடுற்றூற்
சாலவேதாரஞ்சேருஞ் சதிருடன்பாம்புநாளில்
தூலமாய்வெள்ளியூணில் தோன்றிமனைவிதானுஞ்
சீலமாய்வருமென்றோதிச் செப்பினார்கணிதமாய்ந்தோர். (உஉசு)

வேறு.

எழினுக்குடையோன் மாலவனுடனே யிருந்திடங்கேந்தி ரத்துறுமால், தாழ்வுடன்புகர்பொன்சேயுடன்கூடித் தரித்திடச் சுபமிலாதிடுகில், சூழுறவிதியாற் பத்துமூன்றுக்குட் டோன் றிடுமனைவி யன்னியமாய், ஊழ்விதிப்படியா லேகமாய்வருமென் றுரைத்தனர் சாதகன்றனக்கே. (உஉஎ)

மதிமகனலரி யிறையவனுடனே வருமிடமுயிர்தனக்கே ழாய்ச், சதிருடன்காரி அலவனிற்றோன்றித் தனித்திடமுன்பு பின்பவரால், விதியுடன்வளரும் பிறந்ததோர்சேய்க்கு விதித் தன ரேகமாய்த்தாரஞ், சதியுடன்வயது பத்துமேழஞ்சிற் சார்ந் திடுஞ் சொந்தமாய்வருமே. (உஉஅ)

காரிசேய்பொன்னுங் காரகனுடனே கதிரவன்வீட்டினில் மறையக், கூருமாயேழான் பவருடன்கூடிக் குறுகியேயுதய கேந்திரமாய்ச், சீருடன்தோன்றுஞ் சாதகன்றனக்குச் செப்பினர்மனைவிமூன்றுளனாய்ப்,பாரினிற்சிலநாள்வாழ்ந்துபின்மூன்று பாரியும் பலித்திடாதொழியும். (உஉ௬)

ஏழினுக்குடையோன் காரியாய்த்தோன்றி யிருந்திடங்கேந் திரத்துறுமால், தாழ்வுடன்புகரோன் தனித்திடமறையாய்ச் சார்ந்திடுஞ் சாதகன்றனக்கு, வாழ்வுடன்மனைவி காரிசேய்போல வுகுத்தனர் யேகமென்றுரைக்கச், சூழுறவிதியாற் பாம்புநாளுற் ருற் ருேன்றிடுமனைவி யன்னியமாம். (உ௩0)

ஏழினுக்குடையோன்மாலதாய்த்தோன்றி யிருந்திடமறைந் திடுமர்கிற், சூழுறவிதியால் வெள்ளியுஞ்சேயுந் தோன்றிடவே ழினில் வருமால், தாழ்வுடன்வளருஞ் சேயுயிர்தனக்குச் சாற்றி னர்மனைவிமூன்றுளனும், ஊழ்விதிப்படியாற் ருரமேநாசமுரைத் தனர் சாதகன்றனக்கே. (உ௩௧)

ஏழினுக்குடையோன் புகரதாய்த்தோன்றி யிரவிமால்கே துடனிருக்க, ஊழ்விதிப்படியா லிரண்டுமைந்ததனி லுயர்வுடன் பாவர்வந்துற்ருற், சூழ்விதியுடனே வயதுபத்ததனிற் ருேன்றி டுந்தாரமென் றுரையே வாழ்வுடன்மனவி நாலுமேயாக வகுத்த னர்சாதகன் றனக்கே. (உ௩உ)

ஏழினுக்குடையோன்காரிமாலுடனேயிருந்திடக்கேந்திரத் துறுமால், தாழ்வுடன்வெள்ளி நீசவீடதனிற் றனித்திடப்பிறந் தசா தகற்கே, ஊழ்விதிப்படியாய் வயதுமேயிருபத் தொன்றி னிற் ருரம்வந்துதவும், சூழுறவிதியா லன்னியந்தன்னில் சுந்தர மனவி வந்திடுமே. (உ௩௩)

ஏழினுக்குடையோன் காரியாய்ச்சுபர்வீ டிருந்திடவளரு கேந் திரமாய், வாழ்வுடன்புகரு மஞ்சின்கோளுடனே வருமிட மறைந்திடா திடுகிற், சூழுறவிதியா லஞ்சினேன்வந்தாற் ருேன் றிடுந்தாரமன் னியமாந், தாழ்வுடன்மனவி வருமெனக்கணிதஞ் சாற்றினுர்தரணியில் மாதோ. (உ௩௪)

ஏழினிலிறைவன் றனித்திடவேழோ னிருந்திடமறைந்திடா திடுகில், வாழ்வுடன்புகரும் பருதிமால்கொடியோன் வருமிட

முயிர்க்கிரண் டானற், சூழுறவிதியாற் பிறந்திடுஞ் சேய்க்குத் தோன்றியபுகர்திசை யதனில், ஊழ்விதிப்படியால் மாலவன்னளி லுதவிடுந்தாரமென் றுரையே. (உ௩௫)

ஏழினிற்காரி தனித்திடவேழோ னேகுவன்வெள்ளிவீ டதனிற், ரூழ்வுடன்புகர்மால் பருதிபொன்னுடனே சாரிடம்வளருகேந் திரமாய், வாழ்வுடன்பிறக்குஞ் சாதகன்றனக்கு வகுத்தனர்காரிநான் மறையூண், சூழுறவிதியா யேகமாமனைவி தோன்றிடுங்காரிமால் போலாம். (உ௩௬)

ஏழினுக்குடையோன் மாலவனுடனே இருந்திட வளருகேந் திரத்தில், வாழ்வுடன்காரி புகருடன்கூடி வருமிடமுதகேந் திரமாய்த், தாழ்வுடன்பொன்ன னுயிருக்கேழதனிற் றரித்திடப்பிறந்தசா தகற்கு, ஊழ்விதிப்படியே யேகமாமனவி யுரைத்தனர்பாம்புநாள் வருமால். (உ௩எ)

வருவதுவயது பத்துடனிரட்டி வந்திடும்பொன்னவ னூணில், தருவதுமனவி காரிசேய்போலச் சார்ந்திடுமன்னிய மதனிற், கருதியேவருமென் றுரைத்தனர்மேலோர் கருவழிநாள் முதற் றந்தை, பெருகிடுஞ்செல்வம் பூமிக்ஷேத்திரமாய்ப் பேணிடுஞ்சாதகன் றனக்கே. (உ௩அ)

ஏழினுக்குடையோன் புக்ருடன்கூடி யிருந்திட வளருகேந் திரமாய்ச், சூழுறவிதியா லிரண்டஞ்சேழதனிற் றோன்றிடப் பாவர்வந் திடுமால், வாழ்வுடன்மாலோன் திசைதனில் மறையோன் வந்திடுமூணினிற் ரூரம், ஊழ்விதிப்படியே ஏகமாமனவி யுரைத்தனர்சாதகன் றனக்கே. (உ௩௯)

சாதகன்றனக்கு மனவிவந்திடவே தனகனவாகனம் பூமி, பீதகன்திசையிற் சகலபாக்கியமும் பிரபலயோகமும் பிறங்கும், காதலியுடனே காமமோகத்தாற் கலந்துமேவுடலுயி ரொன்றாய் நீதமாய்ச்சுகித்து வாழ்வனென்றுலகில் நிகழ்த்தினர்கணிதநூற் படியே. (உ௪0)

ஏழினிற்பாம்பு தனித்திடவேழோ னிருந்திடமறைந்திலதானல், வாழ்வுடன்பருதி புகருடன்கொடியோன் மதிமகனுதயகேந் திரமாய்த், தாழ்வுடனேழோன் றனையுமேபாவர் தன்விழிப்பார்வையுற் றிடவே, சூழுறவிதியாற் ரூரமுமிரண்டாய்த் தோன்றிடுஞ்சாதகன் றனக்கே. (உ௪௧)

சாதன்றனக்குப் பத்துநாலேழிற் சார்ந்திடு மனவியர் மண நாள், வேதமாய்மதிநா ளதனிலேமனவி விதித்தனர் நாசமென் றுரையே, போதவேமதிநாள் காரிவந்திடுகிற் பொருந்திடுந் தார முங்கிடைக்கும், நீதமாய்க்கிடைத்த தாரமும்பெலமாய் நேர்ந் திடும் முந்திமாய்ந்திடுமே (உ௪உ)

வேறு.

ஏழினுக்குடையோனேழி லிருந்திடப்பவர்வீடாக
வாழ்வுடன்புகர்மால்கேது வருமிடமறையாதாகில்
தாழ்வுடனுதிக்குஞ்சேய்க்குத் தாரமுமிரண்டேயாகும்
ஊழ்விதிப்படியேயாக உரைத்தனர்சாதகற்கே. (உ௪௩)

ஏழினோன்குருபாம்பொன்று யிருந்திடக்காரிவீட்டில்
தாழ்வுடன்புகர்கேதோடு சாரிடமறைவதானாற்
சூழுறவிதியாற்றாரந் தோன்றிடும்நாலஞ்சுற்றால்
ஊழ்விதிப்படியாற்சேரு முரைத்தனர்மனவியேகம். (உ௪௪)

வேறு.

ஏழினுக்குடையோன் புகர்கரிரவிபொன் னிருந்திடவுதய கேந்திரமாய், வாழ்வுடனேழில் மதிதனித்திடவே வருமுயிர்சாத கன் றனக்கு, சூழுறவிதியால் நாலுமூன்றொன்றிற் றோன்றிடுந் தாரமொன்றாகும், ஏழினுக்குடையோன் புகர்கரிரவிபொன் னி ருந்திட மறைந்திட வருமால். (உ௪௫)

வருமுயிர் சேய்க்கு வகுத்தனர்மனவி வருமிடஞ் சொந்த மென்றுரையே, சரியுடன்புகர்நா ளதனிலேமணநாள் சார்ந்தி டும் பாம்புவந்திடுகில், விரிகுழல்மாதே மங்கையால் விரோதம் விதித்தனர் வயதுமுப்பதனில், துரிதமாயோராண் டன்னிய தேசந் தோன்றிடுஞ் சேயவன் மாதோ. (உ௪௬)

வேறு.

ஏழினோன்மால்வீடேகி யிருந்திடப்புகர்பாம்போடு
தாழ்வுடனிரண்டேழஞ்சிற் றரித்திடப்பாவர்வந்தால்
வாழ்வுடன்தோன்றுஞ்சேய்க்கு வகுத்தனர்மனவிரண்டாம்
ஊழ்விதியிதுவேயென்று முரைத்தனர்சாதகற்கே. (உ௪௭)

வேறு.

ஏழினுக்குடையோனுதயகேந்திரத்தி லிருந்திடப்பாவருஞ் சுபரும், தாழ்வுடனதனிற் றரித்திடுஞ் சேய்க்குச் சற்குருநிறம துபோல, வாழ்வுடன்மனவி சொந்தமாய்வருமால் வகுத்தன ரம் புலிதிசையில், ஊழ்விதிப்படியாற் றூரம்வந்துதவும் உரைத் தனர் சாதகன்பலனே. (உசஅ)

வேறு.

ஏழினுக்குடையோன்பொன்ன னிரவிமாலுடனேசேர்ந்து
வாழ்வுடனுயிர்க்குமுன்னல் வந்திடவக்கோள்தானும்
தாழ்வுடன்பாவரோடு தரித்திடச்சுபர்வீடானல்
ஊழ்விதிப்படியாற்றூர முரைத்தனரீரஞ்சுக்குள். (உசகூ)

வேறு.

ஏழினுக்குடையோன் புந்திகேதுடனே இறையவன்வீட்டி னிலேக, வாழ்வுடன் புகர்பொன் குளிகனேடேகி மறைந்திடப் பாவர் வீடாகத், தாழ்வுட னுதிக்குஞ் சாதகன்றனக்குத் தரணி யிற்பத்துநாலுக்குள், ஊழ்விதிப்படியாற் றூரம்வந்துதவுமுரைத் தனர் கணிதநூலாய்ந்தோர். (உருo)

ஏழினுக்குடையோன் காரிபாம்போடே இருந்திட வுதய கேந்திரத்தில், வாழ்வுடன்புகரும் பருதியும்மாலும் மறைந்திட மந்திரிவீடால், தாழ்வுடனுதிக்குஞ் சாதகன்றனக்குச் சதிரு டன் தாரமுமிரண்டாம், ஊழ்விதிப்படியே யிருவருமொன்று யுவந்துவாழ்ந்திடுவ னென்றுரையே. (உருக)

வேறு.

ஏழினுக்குடையோனேடே இரவியும்பாம்புமாகத்
தாழ்வுடன்புகர்வீடாகித் தரித்திடவக்கோள்தானும்
வாழ்வுடனுயிர்க்கீராறில் வந்திடுஞ்சாதகற்கு
ஊழ்விதிப்படியேதார முரைத்தனரிருவர்மாதே. (உருஉ)

மாதவர்மொழியென்றேதே மனவியரிருவர்தாமும்
வேதமோயீரெட்டாறில் விரைவுடன்மனவி சேர்ந்து
நீதமாயிருக்குமென்று நிச்சயமுரைத்தார்மேலோர்
ஓதிடுமனவிபாக முரைத்தனர்தரணிமீதே. (உருங)

ஏழினேன்பவரோடொன்று யிருந்திடவுயிர்க்குமுன்னால்
வாழ்வுடனக்கோள்பத்தில் வாழ்ந்திடப்பவரோடானால்
சூழுறவிதியாற்றூரந்தோன்றிடு மொன்றேயாக
ஊழ்விதிப்படியாற்சேரு முரைத்தனரரவின்போக்கில். ()

வேறு.

'ஏழினுக்குடையோன் காரிவீடதனி லிருந்திட மதிபுகர்ப
ருதி, சூழுறவுடனென் றுகியேமறையத் துணிவுடனெட்டிரண்
டஞ்சில், வாழ்வுடன் கடுங்கோள் தனித்திடவிருக்க வந்திடுஞ்
சாதகன்றனக்கு, ஊழ்விதிப்படியாற் றூரமுமிரண்டா யுரைத்
தனர் மேலவர் மொழியால். (உருரு)

மேலவர் மொழியா லிறையவன் திசையில் விரைவுடன்
வெள்ளியூணதனிற், சாலவேதாரம் அன்னியமாகச் சார்ந்திடுஞ்
சாதகன்றனக்குத், தூலமாய்க்காரி திசைவருமாகிற் றுஞ்சிடுந்
தாரமேபின்னும், ஏலவேமனவி காரியந்தியத்திலிசைவுடன் வரு
மென மொழியே. (உருசு)

வேறு.

ஏழினிலருணன்பாம்பு இருந்திடப்பாவர்வீடால்
வாழ்வுடன்கரிசேய்சுங்கன் வருமிடமறையாதாகில்
சூழுறவிதியாற்றூரம் தோன்றிடுமேழோன்நாளில்
ஊழ்விதிப்படியால்மேலோ ருரைத்தனர்சாதகற்கே. (உருஎ)

சாதகன்றனக்குமேலோர் சாற்றினர்மனவியாலே
வேதமாயிராஜயோகம் விதித்தனர்கணிதமாய்ந்தோர்
போதவேஆறேன்நாளிற் பொருந்தியபுகர்வந்துற்றால்
சேதமாமனவிநாசம் செப்பினர்சாதகற்கே. (உருஅ)

வேறு.

ஏழினிற்காரி தனித்திடவேழோ னிருந்திட வுச்சமாட்சிய
தாய், வாழ்வுடனால் பாம்புடன்கூடி வருமிடம் பஞ்சமமாகச்,
சூழுறவிதியாற் சொந்த வீடதனிற் றோன்றிடச் சுங்கன்வந்துற்
றால், தாழ்வுடன்ராகு திசைவருமதனிற் சார்ந்திடுந்தார மென்
றுரையே. (உருகூ)

வேறு.

ஏழினுக்குடையோனேழி லிருந்திடஆறேனோடு
தாழ்வுடனு யிருக்கெட்டிற் றனித்திடப்புகர்வந்துற்றால்

வாழ்வுடன்கேதுநாளில் வளர்திசைபாதியானல்
சூழுறவிதியாற்றீரம் தோன்றிடும்ஏகமாதோ. (உசு0)

ஏழினேன்சசிவீடேகி யிருந்திடத்தனக்கோளோடு
வாழ்வுடனக்கோள் தன்னை வளர்சனிநோக்குமாகில்
ஏழினேன் திசையிற்றீரம் இசைவுடன்றேன்றிவாழும்
ஊழ்விதிப்படியாமென்று முரைத்தனர்சாதகற்கே. (உசுக)

வேறு.

ஏழினுக்குடையோன் பவருடனென்று யிருந்திடவளரு கேந்திரமாய், வாழ்வுடன்காரி புகருடன்குளிகன் வருமிடங்கா ரிவீடுற்றால், சூழுறவிதியாற் பிறந்திடுஞ்சேய்க்குத் தோன்றிடுந் தாரமொன்றாகும், ஊழ்விதிப்படியாற்பத்துமாறெட்டி லுரைத் தனர் மனவியால் யோகம். (உசுஉ)

வேறு.

ஏழினேன்புகரோனாகி யிருந்திடவெட்டாறானல்
வாழ்வுடனிரண்டஞ்சேழில் வந்திடப்பவர்வந்துற்றாற்
சூழுறவிதியால்வந்து தோன்றியசாதகற்குத்
தாழ்வுடன்மனவிமூன்று சார்ந்திடுந்தரணிமாதோ. (உசுங)

மாதவர்மொழி நூலாலே வருமதிதிசையிற்றீரம்
வேதமாய்வருமென்றோதி விதித்தனர்கணிதநூலோர்
ஓதினர்பாம்புநாளி லுயர்வுடன்பருதிவந்தால்
நீதமாயிருவர்மங்கை நேரிடுஞ்சேதமொன்றே. (உசுச)

மந்தனுமேழின்கோளும் வளர்புகர்மதிமாலோடு
விந்தையாயிக்கோளொன்றாய் விளங்கிடமறையாதாகிற்
சிந்தையாற்றோன்றுஞ்சேய்க்குத் திறமுடன்குருநாள்வெள்ளி
வந்திடுமபகாரத்தில் வகுத்தனர்மனவிசேரும். (உசுரு)

சேருமென்றுரைத்தார்மேலோர் செப்பிடுமனவியாலே
கூறினர்பலன்களெல்லாங் குறித்தனர்சமனுமென்றார்
சீருடன்சாதகற்குச் சேர்ந்திடுமனவிமுந்திக்
கூறினர்நாசமென்றே குறித்தனர்கணிதநூலோர். (உசுசு)

ஏழினேன்மால்சேயோடங் கிருந்திடக்காரிவீடாய்
வாழ்வுடனபுகர்பொன்திங்கள் வருமிடமறையாதாகத்

தாழ்வுடன்தோன்றுஞ்சேய்க்குச் சார்ந்திடும்புகர்வந்துற்றால்
ஊழ்விதிப்படியால்மங்கை யுரைத்தனரேகமென்றே. (உசுஎ)

காரியுமேழின்கோளுங் கடும்பவருடனொன்றுகிச்
சாரிடம்புகர்வீடாகித் தரித்திடவதனிற்கோளன்
கூருயிர்தனக்குமூன்றிற் குறுகிடப்பிறந்தசேய்க்குச்
சீருடன்புகர்நாள்வந்தாற் சேர்ந்திடுந்தாரமொன்றே. (உசுஅ)

தாரமும் ஏகமாகச் சாற்றினர் கணிதநூலோர்
சாரமாயிரண்டேழஞ்சிற் றரித்திடத்தீக்கோள்சேர
ஒருயிர்தனக்கிரண்டில் உயர்வுடன்குருவந்துற்றால்
பாரமாமனவிரண்டாய்ப் பகர்ந்தனர்நாசமொன்றே. (உசுகூ)

ஏழினோன்புகரோடேகி யிருந்திடமறைவீடாகச்
சூழுதற்குடையோன்காரி தோன்றியகுளிகனோடு
வாழ்வுடன்புகர்க்கொன்பானில் வந்திடப்பிறந்தசேய்க்குத்
தாழ்வுடன்குருநாள்மங்கை சார்ந்திடும்பெலமென்றோதே. ()

ஓதியவேழாந்தான முயர்பவர்வீடேயானால்
வேதமங்கலமாய்முந்தி விதித்தனர்மனவிநாசம்
போதவேயேழாந்தானம் புகர்குருவீடேயானால்
சேதமாம்புருடர்முன்னுற் செத்திடுந்தரணிமாதே. (உஎக)

வேறு.

குருவுடனேமதியுமொன்று யுயிர்க்கேழாகிக்
குறுகிடவக்கோளனுமே பாம்போடொன்றாய்
வருமுயிருக்கொன்பதனிற் சுபமிலாதால்
வக்கிரனும்நாலின்கோள் மறையாதானால்
சரியுடனேராகுதிசை யதனிற்காரி
சார்ந்திடுஞ்சேயவன்றனக்கு மனவிசேரும்
விரிகுழல்பைந்தொடிமாதர் மரணமுந்தி
விதித்தனர்கள்கணிதமொழி தமிழாய்ந்தோர்கள். ()

வேறு.

ஏழினிற்பாம்பு தனித்திடவேழோ னிருந்திடவுயிருக்கீரா றில், வாழ்வுடனதனிற் கரியுடன்மாந்தி வந்திடமதிக்குக் கேந்திரமாய்த், தாழ்வுடனுயிரிற் புகருடனக்கோள் சார்ந்திடச்சாதகன்மணநாள், சூழுறவிதியாற் கரிதிசைமுடிவிற் றோன்றிடுமனவிமுன்சேதம். (உஎங)

சேதமாமனவி கணிதநூற்படியே செப்பினேஞ்சாதகன் றனக்கு, ஓதிடுமேழின் கோளர்வந்திடுகி லுறைந்திடுநாதனு முபயந், தீதுடன்பவர்கள் சேர்ந்திடவவற்குச் செப்பியபன்னி ரண்—தனில், வேதமாய்க்கொடியோன் புகருடன்கூடி விளங்கி டச்சுபர்மனை வந்தால். (உஎச)

வந்திடும்புகரோ னிருந்திடுங்கோளன் வருந்திசைநாளினிற் கேது, சிந்தையாய்வருநாள் பாதிமேற்புகரிற் செப்பியதாரம்வந் திடுமே, விந்தையாய்வரினும் தாரமேஜனனம் விளங்கிடும்சம னெனவருத்தம், முந்திமாய்ந்திடுமே கெணிதநூற்படியே மொழி ந்தனருலகினில் மேலோர். (உஎரு)

வேறு.

சந்திரனுங்கேந்திரமா யேழாந்தானம்
தனித்திடவேயதற்குடையோன் சாருமில்லம்
வந்திடவேமால்மதிவீ டாகவிக்கோள்
வரவவர்களுடன்பவர்கள் தரிக்குமாகிற்
சிந்தையுடனுபயமதிற் கொடியபாவர்
சேர்ந்திடவேஅவர்தனக்கு நாலஞ்சேழில்
விந்தையுடன்புகர்வளர வரினுஞ்சேய்க்கு
விதித்தனர்களுபயமென மனவிசேரும். (உஎசு)

சேருமெனவோர்மனவி புகர்தன்நாளிற்
செப்பினர்முற்பாதியின்மேல் மணஞ்செய்விக்கும்
கூறுமெனவருமனவி யொழியும்வெள்ளி
குறுகியநாள்திசைமுடிவில் மரணங்காட்டும்
சாருமெனவோர்மனவி யலரிநாளிற்
றந்திடுமென்றோதினர்கள் தரணிமீது
சீருடனேஅம்மனவி சொந்தமென்றே
செப்பினர்கள்கணிதமொழி திறத்தைப்பாரே. (உஎஎ)

வேறு.

ஏழி னிற்கரி யிந்துபரிவுடன்
தாழ வேவரச் சற்குருசுங்கனும்
வாழ வேஆரல் மதிமகனென்றதாய்ச்
சூழ வேவொன்று தோன்றிடுந்தாரமே. (உஎஅ)

வேறு.

ஏழினேன்சுபராய்க் கேதுபொன்னுடனே இருந்திடமூன்
றுபன்னொன்றாய், வாழ்வுடன்பவமாய் வந்திடவக்கோள் மறைந்
திடச்சுபர்கள் நோக்கில்லாத், தாழ்வுடன்புகரோன் சாரிடம்
பெலமாய்த் தனித்திடவுயிர்க்கு மூன்றுற்றால், சூழுறமனவி
தோன்றிடும்புகரிற் சொல்லினர் சேயுடநாளில். (உஎகூ)

ஏழினிற்பாம்பு தனித்திடவேழோ னிருந்திடவுச்சமாட்சி
யதாய், வாழ்வுடன்புகரோன் வருமிடம்பெலமாய் வளர்ந்திடப்
பாவர்நோக்கிடுமால், சூழுறவிதியா லிருபத்தேழொன்றிற் றோன்
றிடு மனைவிபொன் னிறமாய், ஊழ்விதிப்படியால் வருமெனக்
கணிதருரைத்தனர் சாதகன்றனக்கே. (உஅ0)

வேறு.

ஏழினேன்நாலேழ்பத்தி லிருந்திடச்சுபர்கள்நோக்க
வாழ்வுடன்புகர்மாலொன்றாய் வருமிடமதிக்கேழுற்றால்
சூழுறவிதியால்மங்கை தோன்றிடுமொன்றேயாகத்
தாழ்வுடனீராறொன்றிற் சார்ந்திடுமனவிகாரி. (உஅக)

ஏழினேனுயிர்க்கீராறி லிருந்திடவேழிற்றீக்கோள்
தாழ்வுடன்மூன்றுறெட்டுத் தானவீடதனிற்றங்கன்
சூழதாய்ப்பரிமாலொன்றாய்த் தோன்றிடப்பவர்நோக்குற்றால்
வாழ்வுடன்புகர்நாள்மங்கைவகுத்தனர்தனதில்மாதோ.(உஅஉ)

ஏழினுக்குடையோனேழி லிருந்திடப்பாவர்நோக்கச்
சூழதாய்ப்புகர்மால்வெய்யோன் தோன்றிடப்புகர்வீடானால்
வாழவேவருஞ்சேய்மங்கை வகுத்தனர்புகர்நாள்வெய்யோன்
தாழ்வுடனபகாரத்திற் சார்ந்திடுமனவியொன்றாய். (உஅங)

ஏழினேன்புகர்மால்வெய்யோ னிருந்திடவுயிர்க்கேழாக
வாழ்வுடனக்கோள்தன்னை வரும்பவர்நோக்குமாகிற்
சூழுறவிதியால்வந்து தோன்றியசேய்க்குமங்கை
ஊழ்விதிப்படியாற்கேது வுதவிடும்திசைநாள்மாலில். (உஅச)

மதிமகனேழின்கோளும் வரும்புகருடனொன்றாகிச்
சதிருடனுயிர்க்குநாலிற் றரித்திடமறையோன்வீட்டில்
விதியுடனரவுநாளில் விளங்கியபுகர்வந்துற்றால்
மதிநிறமனவியாக வந்திடுமன்னியத்தில். (உஅரு)

எழினோனுதயமேறி யிருந்திடக்காரிநோக்கத்
தாழ்வுடன்புகர்மால்வெய்யோன் சாரிடமிரண்டேழுஞ்சாய்
வாழுமித்தானந்தன்னில் வந்திடப்பிறந்தசேய்க்கு
ஊழ்விதிப்படியால்மங்கை யுரைத்தனர்குருநாள்மாதோ. ()

மாதவர்மொழியாற்பொன்னன் வருந்திசையதனில்வெள்ளி
வேதமாய்வருநாள்மங்கை விதித்தனரதிகமாக
ஓதினர்மனவிபொன்னன் ஒளிர்மதிநிறம்போலாக
நீதமாய்வருமென்றோதி நிகழ்த்தினர்கணிதநூலோர். (உஅஎ)

வேறு.

சூரியன்சேய்மால்மறையோ னுயிரின்கோளும்
சுகமாயெட்டுடையோனுங் கருமத்தோனும்
சீருடனேவுயிர்தனக்கு மூன்றேழ்பத்திற்
சேர்ந்திடவேகாரிவருங் கிரகநாதன்
கூறிடவேசுபர்வீடாய் மறையவந்த
கோதைவருமாயுள்விதி குறிக்கலாகும்
சூரியன்மால்சேய்புகரோன் மறைபாம்பாகத்
தோன்றியநாள்வரும்வயது சொல்லுமாதே. (உஅஅ)

வேறு.

எழினோன்கேதோடொன்று யிருந்திடப்புகர்க்கீராறில்
வாழவேவுயிர்க்கஞ்சேழில் மதிமகன்புகர்வந்துற்றால்
சூழுறவிதியாற்பாம்பு தோன்றியதிசையில்வெள்ளி
வாழ்வுடனபகாரத்தில் வகுத்தனர்மனவிசேரும். (உஅகூ)

சூரியனேழின்கோளுந் தோன்றியகேதோடொன்றாய்ச்
சாருயிரதனிற்காரி தரித்திடப்புகரேழுற்றால்
சீருடன்றோன்றுஞ்சேய்க்குச் செப்பினர்மனவியொன்றாய்க்
கூறினரரவுநாளிற் குறித்தனர்புகர்வந்துற்றால். (உகூ0)

வேறு.

எழினிற்காரி தரித்திடவேழோ னிருந்திடவுச்சமாட்சியி னால், வாழ்வுடனக்கோ ளுடன்புகரொன்றாய் வளர்ந்திடச்சுப மிலாதிடுகில், சூழுறவிதியாற் பிறந்திடுஞ்சேய்க்குத் தோன்றிடுந் தாரமுமிரண்டாம், ஊழ்விதிப்படியா லிருபதேழொன்றி லுத விடு மொன்றுமாய்ந்திடுமே. (உகூக)

ஏழினுக்குடையோன் கேந்திரமதனி லிருந்திடச்சுபமிலா
திடுகில், வாழ்வுடன்மாந்தி புகர்கரியுடனே வருமிடமுயிர்க்கி
ரண்டதனால், சூழுறவிதியாற் பிறந்திடுஞ்சேய்க்குத் தோன்றி
டுங் காரிபோல்மனவி, ஊழ்விதிப்பயனாற் பத்துமெட்டாறுள்
ளுரைத்தனர் கணிதநூன்மதியே. (உகூஉ)

மதியுளசேய்க்கு மனவியொன்றாக வகுத்தனர்மேலவர்மொ
ழியால், சதிருடனுயிருக்கேழினோன்பவரில் சார்ந்திடநோக்கிடு
மானால், பதிதனில்வளருஞ் சாதகன்றனக்குப் பகரிருதாரமென்
றுரையே, விதியுடன் தோன்றிச் சேதமாமதியில் விதித்தனரு
டன்வரும்பெலமாம். (உகூங)

வேறு.

சந்திரன்குருகேதொன்றாய்ச் சாரிடமேழதாக
வந்திடவதனிற்கோளன் வருமிடமீராறானால்
சிந்தையாலுயிரிற்சுங்கன் சேர்ந்திடப்பவரோடானால்
விந்தையாமனவியொன்றாய் விதித்தனரீரேழ்பத்துள். (உகூச)

சூரியனேழின்கோளுந் தோன்றிடமறையாதாகச்
சீருடன்மறையோன்சுங்கன் சேரிடஞ்சுபர்வீடாகில்
ஆறிரண்டெட்டுமஞ்சா மாண்டுபொன்நிறமாயொன்று
கூறினர்சாதகற்குக் குலமுளமனவியோதே. (உகூரு)

ஓதவேமனவிபொன்போ லுரைத்தனர்கணிதநூலோர்
வேதமாம்புகர்பொன்தன்னை விரைவுடன்பவர்நோக்குற்றால்
சேதமாமங்கையொன்று செப்பினாரவுநாளில்
நீதமாயுயிரோன்வந்தால் நிகழ்த்தினர்மனவியொன்றே. (உகூகூ)

ஏழினோன்மறையோடொன்றா யிருந்திடமூன்றுறெட்டில்
தாழ்வுடன்புகர்மால்கேது சாரிடங்கரிவீடுற்றால்
சூழுறவிதியால்வந்து தோன்றிடுஞ்சேய்க்குமங்கை
சொல்லினர்கள்தமிழாய்ந்த பெரியோர்தானே. ()

மந்தனுயிர்க்கேழ்தனிலே வருங்கேதோடு
வந்திடவேஅதற்குடையோன் புகரதாகிப்
புந்திபரியுடன்கூடி யுபயமேறப்
பொருந்துபயம்புகர்மனையாய் வளருமானுற்
சிந்தையுடன்வயதிருவே ழுஞ்சின்மேலாய்ச்
சேர்ந்திடுமேவோர்மனவி நிறம்பொன்காரி
விந்தையுடனிருபதஞ்சில் வருமுன்தாரம்
விதித்தனர்கள்நாசமெனக் கணிதம்செப்பு. (நுகரு)

செப்புமெனவிருபத்தா றதனில்மேலாய்
சேர்ந்திடுமேவோர்மனவி கரியன்மேலாம்
முற்படியேயிருமணமுஞ் சமனஞ்செல்வம்
மொழிந்தனர்கள்கொடியவஞ்சம் வருமுன்கோபி
தப்பியதோர்கற்புநெறி தவருதாகும்
சாஸ்திரமாய்வெகுபரலாற் றிரட்டிப்பார்த்துச்
செப்பினர்களாகமநூல் வழியாமென்று
ஜெகதலத்தோரிதையறியக் கணிதஞ்செப்பே. (நுகசு)

சந்திரனுமுயிர்தனக்கே ழதனிலேகச்
சாருமிக்கோள்புகராகி யுதயந்தன்னில்
விந்தையுடன்மாந்திமறை யுடனென்றுகி
விளங்கிடவேபவர்நோக்கா தாகுமாகிற்
சுந்தரஞ்சேர்விழியணங்கே யீராறஞ்சிற்
றேன்றுமெனவெகுபிலமாய் மனவியொன்று
சிந்தையுடன்கற்புநெறி தவறுளாகச்
சேர்ந்திடுமேஅந்தியத்தில் மனவியில்லான். (ருகஎ)

மதியுடனேவருங்கொடியோன் மறையனோடு
வருமுயிர்க்கேழ்தனில்வளர வதற்குநாதன்
சதிருடனேவருங்குருதி யாயீராறுந்
தானமதிற்றனித்திடவே சுபர்நோக்கில்லா
விதியுடனேவருமழைக்கோ ளரவுகூட
விளங்குதயகேந்திரத்தில் வளருமானால்
அதிபதியாயுபயமணம் வருவதென்றே
அறையன்னோன்மனவிவரும் நாளையோதே. (ருகஅ)

ஓதுமெனவரும்புகரோன் திசையில்நாலோ
னுற்றதோரபகார முதவுமொன்று
சீதமுடன்முன்திசையிற் கொடியோன்வந்தாற்
சேதம்வருமுன்மனவி நாசங்காட்டும்
வேதமுடன்நாலாங்கோள் தனதுவந்தால்
விளங்கிடுமேவோர்மனவி பெலமென்றோது
சோதிடமாயுபயமணங் கிடைக்குமென்று
சொல்லினர்களாகமநூல் துறந்தமேலோர். (ருகக)

சந்திரனுங்குருவுடனே மால்வீடேகித்
தரித்திடவேயதற்குடையோன் சுபர்களோடு
சிந்தையுடனுயிர்தனக்கஞ் சதனிலேகிச்
சேர்ந்திடவேஅக்கோளைச் சுபர்கள்நோக்க
விந்தையுடன்நாலாங்கோ ளுச்சமேறி
விளங்கிடவேதோன்றியசேய் வரினுமன்னை
சந்திரற்குநாலதிபன் திசைவந்தேற்கிற்
சாய்ந்திடுமங்கலத்துடனே நாசங்காட்டும். (ருஉ0)

ஏழுடையோன்மாலாகி யேழிலேகி
யிருந்திடவேவுடன்சுபர்கள் தரிக்குமாகில்

வாழ்வுபுகராட்சியதா யொருகோளில்லா
வந்திடவேவுயிர்தனக்கு மறையுமானால்
சூழுறவேவுயிர்க்கதிபன் திசையிற்சுங்கன்
தோன்றுமபகாரம்வரும் போக்கிற்றூரம்
ஊழ்விதிநூற்படியெனவே யேகமென்று
உரைத்தனர்கள்மதிநிறமாய்த் தவறுள்கற்பு. (ருஉக)

சுக்கிரனுங்கேந்திரமாய்க் கரியனில்லம்
தோன்றிடவேகரியவனும் நோக்குமாகில்
தக்கதனமேழுடையோன் பவரதாகிச்
சாருமொருகோளுடனே மறையுமானால்
திக்குமணமூன்றெனவே யேகதொத்து
சேர்ந்திடுமேதப்பாது கணிதமாக
மைக்கருங்கண்விழியணங்கே யேகதாரம்
மாய்ந்திடுமேதனக்குமுந்தி நாசங்காட்டும். (ருஉஉ)

வருமுயிருக்கேழரவு தனிக்கவேமோன்
மறையவனும்வருமிடந்தான் சேய்வீடாகத்
தருதுமதிற்றனித்திடவே அதற்குநாதன்
சாருமிடம்நீசபகை யாகுமாகிற்
கருதுமெனவுயிர்தனக்கீ ராறிற்சுங்கன்
காணவெக்கோளில்லாமற் றரிக்குமானால்
அருமறைநூற்படிவிதியாற் றோன்றுஞ்சேய்க்கு
அறைந்தனர்களுபயமணம் பெலமென்றோதே. (ருஉங)

எழுடையோன்மாலாகி யரவோடொன்றாய்
இருந்திடஞ்சேய்வீடதுவாய்த் தரிக்குமாகில்
தாழுயிர்க்கட்டமமதிலே புகர்வந்தேகித்
தரித்திடவேவுடன்கரியும் வளருமானால்
சூழுறவேமறைதிசைநாட் பாதிதன்னிற்
றோன்றிடுமேவோர்மனவி சமனஞ்செல்வம்
வாழ்வுடனேகரிதிசைவந் தேறப்புந்தி
மாய்ந்திடுமேமுன்மனவி யழியுமாதே. (ருஉச)

மாதேகேள்வருங்கரிநாள் தனதுபாதி
வளருமதிலோர்மனவி திறமென்றோது
நீதியுடன்மனவிவரும் முதலேசெல்வம்
நேர்ந்திடுமேவெகுபெலமாய்த் தனம்வந்தெய்தும்

ஓதுமெனவருமனவி தவருள்கற்பு
உரைத்தனர்கள்கரிமதியார் நிறமென்றோது
வேதமுடன்கணிதவிதி தெரிந்தமேலோர்
விதித்தனர்கள் தப்பாது தரணிமாதே. (ருஉரு)

மாதரையிற்றோன்றியசேய் விதவையின்பன்
வசமுமவன்மதன்கணையாற் றுயரஞ்சொல்லு
சீதமுடனேழுடையோன் குருதியாகிச்
சேருகரிபுகர்கொடியோ னுடனென்றாகி
வேதமுடனுயிர்தனக்கே முதனிலேக
விளங்குமெனத்தோன்றியசேய் தனக்குமங்கை
சோதிடநூல்மூன்றொன்று மனவிசேரும்
துஞ்சிடுமேமூன்றிலொன்று புலைப்பெண்மோகன். ()

ஏழுடையோன்சுக்கிரனுய்ப் புகர்கேதோடு
ஏகுமில்லங்கரிமனையா யிருக்குமானுல்
தாழ்வுடனேதோன்றியசேய் தனக்குத்தாரம்
சார்ந்திடுமேவுபயமதாந் தரணிமீது
வாழ்மனையாள்கவிதிசையிற் காரிபுத்தி
மணமாகும்கேதுவர மரணங்காட்டும்
சூழுறவேமறுவேட்டல் பின்னுலுண்டாம்
சுந்தரியோடந்தம்வரை சுகமுண்டாமே. (ருஉஎ)

மந்தனுயிர்க்கேழுதனிற் றனிக்கவேமோன்
வருமறையாயுச்சமுட னிருக்குமாகிற்
சிந்தையுடன்புகருடனே அரவொன்றாகிச்
சேருயிர்க்குமூன்றில்வரப் பவர்நோக்குற்றால்
விந்தையுடன்தோன்றியசேய் தனக்குமங்கை
விதித்தனர்களுபயமென வளருமென்றே
வந்துபுகர்க்கேழுதனிற் கொடியோனேக
வளருமக்கோள்திசைபுகரின் மணநாள்செப்பே. ()

செப்புமெனவோர்மனவி சமனஞ்செல்வம்
சேர்ந்திடுமேமால்மதிபோல் நிறமென்றோது
முற்படியேவருமனவி புகர்நாள்வந்தால்
மோசம்வருமோர்மனவி யுடன்வந்தெய்துந்
தப்பியதோர்வருமனவி கரிபோலாகுஞ்
சாருமங்கையிருவருமே தவறுண்டாகும்

இப்புவியிலறையிதுவே கணிதநூலென்
றியம்பினர்சோதிடமுணர்ந்த பெரியோர்தாமே.(கூஉசு)

வேறு.

போகத்துக்குடையோன்பாவர் புகலிரண்டஞ்சொன்பானில்
நாகத்தோடிருக்கவந்த நவிலுங்காரகனுஞ்சென்மந்
தாகொத்தகேந்திரத்திற் றனிச்சுபர்பாவரோடேல்
பாகொத்தமொழியாய்கேளாய் பகர்ந்திடுமேகதாரம். (கூஙூ)

வேறு.

ஏழின்கோள்மாலாகிப் பகலவனோடேகி
யிலங்குபுகரதிற்கூடத் துலைமீன்தோன்றி
யாழவவர்முன்பின்னு மாரலிருப்பானால்
அவன்றனக்குப்பத்துநா லதிற்காரிபாம்பு
சூழவேகரியிருந்த விடம்பவர்வீடானால்
தோன்றுமவன்மணமுடித்த தினங்களொருமூன்றும்
நாளதனிற்பாரிதனை யெமலோகத்தனுப்பும்
நண்டதனிற்செனித்தவன்றன் வகையினிமேலுரையே.

பொன்னவனுமேழான கோளதாகிப்
புகரோடுசேர்ந்திடவே சுபரதாக
வன்னபுகருடன்வேறு கோளிலாதால்
வரமுன்பின்பாவரில்லா திருக்குமாகிற்
சொன்னவர்க்குக் காதலியொன்றுகுமென்பர்
தொல்புகர்தன்னுடன்பாவர் கூடிப்பின்னும்
முன்னதிகபவர்களும்வந் துறையில்மிக்க
முடிபவருக்கொன்றுபோ மொன்றுந்தாரம். (கூஙஉ)

ஒன்றுக வவன்மரண காலமுன்னு
லுறுமுபய வாண்டினுக்குட் டாரந்துஞ்சும்
நன்றுகத் திறலுடையோன் வஞ்சனுகும்
நல்வசனம் கொடுமைபுரி பவனுஞ் சொல்லு
என்றுலுந் தனவானும் பூமிசேரும்
இயல்காலி யுதவாதென் றியற்று மேலாய்
நன்றுகும் புத்திரிமூன் றுகும்பின்னும்
நல்லுபய புருடரென நவிலலாமே. (கூஙங)

ஏழோனுங் காரகனு மோர்வீட்டிற் சுபனு
யிருக்கவவர்முன்பின்னுற் சுபரிருப்பாராகில்
வாழுயிரோன் சுபர்வீடா யேழவனுக்கேழோன்
வரும்போக காரகற்கு மறையாதேயிருந்தால்
வேளதனைவிரட்டிவென்ற மடமானேகேளாய்
விரும்பிடுமேஅன்னியமா மேகதாரம்
நாள்புனையுமேழதனிற் பாவருமேசேர்ந்து
நண்ணியவர்முன்பின்னும் பாவரிருந்தவற்கே. (௩௫)

காரகன்றன்னுடன்மாலு மாரல்சேரக்
கருதியதோரேழதனிற் பாவர்சேர்ந்தாற்
காரகனட்பாட்சியுச்சமேகுவாரால்
கருதிருபத்தொன்பதனில் மணத்தைக்காட்டும்
வாரணியுந்தனத்தாளே ஏகதாரம்
வருந்தனக்குமுன்னுலே வுபயந்தன்னுள்
பார்புகழும்மாதுதா னிறக்குமென்பர்
பதிந்தேழிற்பருதியிருப் பானுற்கேளே. (௩௬)

வேறு.

அன்னமேயேழிற் பாம்பிருந்திடவத் தானனும்பாவராகிடினுஞ், சொன்னகாரகனு மறைந்திடப்பருதி தோய்ந்திடமனவிரண்டாகும், பின்னுமத்தான மதிற்குருவெய்தாற் பெயருமுன்னவட்கொரு சேய்தான், நன்னயமாக வுதவிடுமலது நண்ணிடிற் காலனைநண்ணும். (௩௭)

வேறு.

ஓரேழிற்பாம்பிருக்க வட்டமத்திலார்
லொருசுபருங்கூடாம லிருந்திடுகிலவற்கு
வீருயிரிற்பாவர்தரித் திடுவரேயாகில்
வில்கடகமிதுனதுலை மீனமதிற்றோன்றில்
சீராரல்திசையதனிற் பாரியர்துன்மரணஞ்
சேருவதன்னுள்குளமா றுறலதுகூபம்
பாரரியவுரைத்தனன்யான் வேதநூலாலே
பழிகொடுக்குந்தப்பாது பாரதனத்தாளே. (௩௮)

வேறு.

கன்மமாமேழாங்கோளன் காண்கவச்சுபரேயாகி
இன்மையிற்சுபரிலானுல் ஏந்திழைகாரகன்றான்

நன்மையாம்பவர்வீடெய்தால் நலருடன்கோளிலாதால்
வன்மையாமதுவுங்குற்றம் வருகினுந்தாரமொன்றே. (நுகஅ)

உருகுமோரேழாந்தானத் துடையவன்குருவானாலும்
தருமுயிர்தனிப்பானுகிற் ருக்கியவேழுக்கேழோன்
இருமிடம்நட்புற்ருலு மெழிற்புகரெவ்வீடேனும்
ஒருவரில்லாதேயெய்தா லொன்றவன்ருரமென்றே. (நுகக)

வேறு.

ஆர்ணங்கேபோககா ரகநற்கோளா
யமர்ந்தவிடம்பஞ்சமமே ழொன்பானுகில்
நேர்சுபரோடிருந்திடுகி லேழுக்கேழோன்
நேருயிர்க்குமறையாமற் சுத்தமானுல்
பார்புகழவோரேழிற் கொடியபாவர்
பதிந்திடவீரொன்பான்மேல் மணத்தைக்காட்டும்
வாரணியுந்தனத்தாளே தாரந்தீர்க்கம்
வகுத்திடலாந்தனக்குமுன்னே ரஞ்சிற்போமாம். ()

வேறு.

ஒப்பியயேழாந்தானத் துடையவனுயிர்க்குநாலில்
செப்பியகுருவெய்தாலும் சேயுயிர்க்கேழுக்கேழோன்
அப்பிடம்பகையெய்தாலு மலதுமோரேழாந்தானம்
ஒப்புயிர்சுத்தமாகி வொருபத்தில்மணத்தைக்காட்டும். (நுசக)

காதலியேழாங்கோளன் கருதுமூன்றதனில்நின்ருல்
தீதுகாரகர்க்குமுன்பின் சேர்ந்திடப்பாவராகி
வேதனுமறைகிலந்த வியன்மதியோடுபாவர்
நாதமாய்ச்சேர்வானுகில் நலிந்திடுமுபயதாரம். (நுசஉ)

உபயவள் தனக்கோரேகம் உதவுபுத்திரனுண்டாகுஞ்
சபதவள் தீர்க்கமாயுள் சார்ந்திடுமென்றுசொல்வாம்
நிபதவளிரண்டாந்தாரம் நேர்ந்தவள் தனக்குப்பின்னும்
உபயமாலுடனேமாது உபயமென்றுதவுமென்றே. (நுசங)

வேறு

ஏழுவனும்புந்தியதாய்ச் சேயில்லமிருந்தா
லேழிற்காரகனுரல் பாம்புடனேசேர

வாள்விழியேயவர்க்குமுன்பின் சூரியனுமிருக்கில்
வளர்தாரம்பத்திருப தாகுமெனப்பகர்வர்
ஊழ்வினையொன்றுதவாது புத்திரக்கேடாகும்
உயருமனச்சஞ்சலத்தி லுடையோனேயாகும்
ஆளினமுந்தயவுடையோன் யாவருக்குமீவன்
அவன்சபலபுத்தியென வறைந்திடுநீமாதே. (நுச்ச)

அறைந்திடுநீயிரவுதவிர்த் துதயசயனத்தன்
அருங்காலம்போசனனு மவன்வயதைம்பதுமேல்
குறைந்திடாப்பொருளுதவுங் கொடுப்பவனேயாகுங்
கோளேழோன்சூரியனோ டிருந்திடிகிலவர்க்கு
வருந்துதயமட்டமமால் குருவிருப்பாராகில்
வருங்குருவும்நட்பாட்சி யுச்சமதேகிடுமால்
இருந்தவற்குப்புகர்மறையா திருந்திடவும்புகர்க்கு
எழுஞ்சேயுமுன்பின்னு லிருந்திடுவன்பலனே. (நுசரு)

வேறு.

ஏழினிற்கரிசேயுற்றா லேழின்கோள்பருதிகாலில்
வாழவுமேழின்கார கனுமவருடனேசேர்ந்தால்
ஏழினுக்கேழாந்தான னெவ்விடத்திருந்திட்டாலும்
வாள்விழியுபயமாதாய் வருமெனவகுக்கலாமே. (நுசசு)

வேறு.

ஏழின்கோள்சுபராகக் காரகனுஞ்சுபராய்
ஏறுமுயிர்தனக்குமறை யாதிருப்பாராகில்
ஏழினுக்கேழாந்தானத் துடையோனுமிவரோ
டேகிடவுமேழினுக்கேழ் தனிற்சுபரதாக
வாழவேயவன்றனக்கோர் தாரமெனவறைவாம்
வளரேழிற்றீயவருஞ் சேர்ந்திருப்பாராகில்
நாள்குறிக்கும்பருதியதிற் கூடிடவுமுன்போல்
நற்கோளுமுதித்திடவே அவற்குபயதாரம். (நுசஎ)

காதலிகாரகன்வீட்டிற் காரகனுமிருந்தால்
காதலிக்கோள்சுபராக மறையாதேகிடினும்
காதலியில்சுபரிருக்கப் பாவருமேசேர்ந்தால்
கருதுமிலக்கனந்தானும் பாவரில்லேயாகில்

காதலிக்குமுன்பின்னிற் பாவரிருந்தாலுங்
காரகன்றன்னுடன்பாம்பு சேர்ந்திடாதிடுகிற்
காதலியொன்றெனவறைநீ யவர்க்குமுன்னதாகக்
காசினியிலிறந்திடுமென் றறைந்திடுமேகணிதம். (நுசஅ)

வேறு.

அன்னமேயேழில் மால்புகரிருக்க அத்தலத்தோன்சுபராக, இன்னிலமுயிர்க்கு மறைந்திடாதேகி லிருந்தகோள் மறையுமே யாகில், நன்னயன்காரி யுதயகேந்திரத்தில் நயந்தனித் திருந்திட வவர்க்குக், கன்னிகேளேக தாரமென்றறைநீ காசினிதனிற்கயற் கண்ணாய். (நுசகூ)

வேறு.

களத்திரத்தானநாதன் கடுஞ்செவ்வாய்ராகுகேது
அழுத்தமாயிருந்தவில்லோ னவனுடதிசையிற்கேதூண்
சுழித்திடுமீராறெட்டிற் சுக்கிரனபகாரத்தில்
இளைத்திடுமனைவிகண்ட மென்றுதான்செப்பலாமே. (நுநுo)

வேறு.

சுக்கிரனுங்கேந்திரத்தில் நீசமேறித்
தோன்றவவருடனொருகோள் தரியாதாகத்
தக்கதெனவேழுடையோன் மறையோனுகிச்
சசிமகன்தன்மாந்தியுட னுபயஞ்சேர்ந்தால்
தொக்குமிந்தக்கோள்தனக்கு வேழிற்பாவர்
தோன்றவவருடனொருகோள் சுபர்களுற்றுத்
திக்குமிக்கோளிருவரிலே ப்வக்கோள்நாலிற்
சேருமுயிர்க்கேழாங்கோ ளுண்வந்துற்றால். (நுநுக)

வந்திடுமூண்பாதியின்மேல் மணத்தைச்சூட்டும்
வளருமணங்கற்புநெறி தவறுதாகுஞ்
சிந்தையுடன்வரும்பாரி கொடியவஞ்சம்
சேருமனம்வருங்கவலை யீவுகஷ்டம்
விந்தையுடன்மனவிதனை யீன்றதந்தை
விளங்குபதிசேத்திரத்தின் பூமியுள்ளோன்
சுந்தரமாயேகமன மையமில்லான்
தோகையராற்றனச்செலவு அழிவுகாட்டும். (நுநுஉ)

ஏழினுக்கோள்பாவருடன் மூன்றுறெட்டி
லிருந்திடவேசுபர்வீடாய்ச் சுபர்நோக்கில்லா
வாழ்வுடன்மால்சூரியன்பொன் புகரொன்றாகி
வந்திடக்கேந்திரமாகிப் பவர்பாராமற்
சூழுறநூற்படியாக அரவிற்பொன்னன்
தோன்றிடவந்தபகார மனவிசேரும்
ஊழ்விதியின்படியாக வரும்பெண்ணாலே
உரைத்தனர்பாக்கியம்பூமி யுதவுமாதே. (௫௫௯)

வேறு.

மாலவன்சசியினோடு வருமெட்டிற்பாவர்சேரப்
பால்வணச்சுங்கன்பார்க்கப் பகலவன்பகைவீடேகச்
சாலவேஅவன்றன்யோகஞ் சாற்றினர்மனவியேகம்
நூலறிவிதமாய்ச்சொன்னோம் நோயினாலவன்றன்யாக்கை. ()

அஞ்சினுக்குடையோன்வீட்டி லமர்ந்திடக்குருவேயானால்
தஞ்சமாமொன்றுநான்கு கேந்திரம்சனியேயானால்
வஞ்சியராலேயோக வானெனவழங்கலாகுங்
குஞ்சரத்துடனேயாவன் கோளிலாதிருப்பானாகும். (௫௫௬)

வேறு.

ஒன்பதுக்குடையோன் கேந்திரமதனி லொளிர்மதியானவ
னுச்சம், செம்பொன்மாலிரவி கூடிடநட்பு சேர்ந்பகை யுச்சமாட்
சியினால், வம்புமேமொழியான் வழக்கறவல்லன் வயதுபத்தெட்
டிலேதாரம், இன்பமாயஞ்சு மனவியர்கூட விருப்பனு மெழுபத்
தோரெட்டு. (௫௫௭)

வேறு.

ஏழினிற்பரிமால்பாம்பு இருந்திடவேழின்கோளன்
தாழ்வுடனுயிருக்கெட்டிற் றரித்திடக்குளிகனோடு
வாழ்வுடனுறிற்காரி வந்திடப்புகரோடானால்
சூழுறவிதியாற்றாரந் தோன்றிடுங்குருவந்துற்றால். (௫௫௮)

வந்திடுமனவிசொந்தம் வகுத்தனர்சாதகற்கு
முந்திடுமதுவுநாசம் மொழிந்தனர்கணிதநூலோர்
சிந்தையாலிரண்டேழுஞ்சிற் றீயகோள்வளருமாகில்
விந்தையாயிரண்டுதாரம் விதித்தனர்தரணிமீதே. (௫௫௯)

சேயுடனிரவியாகச் சேர்ந்தவாக்கிரண்டிற்புந்தி
யாயுறைவீடுசுத்தம் வரவெட்டில்மதியதாகத்
தாய்வழிபகையுண்டாகுந் தந்தையர்செல்வஞ்சுத்தம்
நாயகியாலேவாழ்வன் நாட்டினுர்கணிதநூலோர். (நுகூ)

சுங்கனேடிருக்கக்கேது துணிவுடனவற்கீராறிற்
சங்கையாய்க்குருவுங்காரி தனிப்பகை நட்பதானுல்
மங்கையரிரண்டேயாகும் வரமுடன்பலன்களற்பம்
இங்கிதமாகச்சொன்னு ரிவருடவயதுசாற்றே. (நுசுo)

சாற்றினுர்வயதுசொல்லச் சனியுடகிரகந்தன்னில்
ஏற்றவேகுளிகனுட்சி யிருந்திடத்தனமேசேதம்
நாற்றிசைபுகழ்மன்போல நன்மையாம்பகையதானுற்
சாற்றினுர்வயதுமுப்பத் தஞ்சுடனிருபதாமே. (நுசுக)

வேறு.

மந்தனேடு புந்திபானு மாகநாலிற் சேர்ந்திட
விந்தையாய வர்க்கீராறில் வெள்ளியுச்ச மாகவே
வந்ததுன்பம் வினைகளோடும் மங்கையேக முரைசெய்தார்
அந்தியான வயதுசொல்ல அஞ்சுபத்தீ ராறிலே. (நுசுஉ)

வேறு

பொன்னவனேடுவெள்ளி பொருந்திடவவற்குநாலில்
அன்னமாலருக்கன்சேயு மமர்ந்திடவிருப்பதானுல்
இன்னிலத்தவற்குத்தாரம் ஏகமாமென்றுசாற்று
சொன்னதுகேளானுவன் ரேகையராலேயோகம். (நுசுஙு)

இடபத்துக்குடையோனேடே யிருந்திடக்கேதுவெய்யோன்
தடவுடன்கரியுஞ்சேயும் சாரவேயிருப்பதானுல்
நடமுடன்கருமஞ்சொல்ல நவின்றனர்சாதகற்குத்
திடமுடனஞ்சுதாரம் செப்பினுர்கணிதநூலோர். (நுசுச)

வேறு.

மேடலக்கனத்தில்மதியுமேதோன்ற விளங்கிடமாந்தியும்பவரும்
நாடிடக்கரியுமவற்குமேபின்னுல் நாலிரண்டஞ்சிலேசுத்தங்
கூடிடவவருக்கிரண்டிலேசுங்கன் கொடியவர்சேயுடனிருந்தால்
ஓடிடுந்தாரமிரண்டுமேயென்ரு ருயர்வுடன்மூன்றுமேவுதவும். ()

சென்மலக்கனத்திற் றினகரன்மாலுஞ் சேர்ந்திடவொன்று நான்கேழிற், றன்மமாங்குளிகன் திங்களினோடு சார்ந்திடநட்ப தாயிருந்தால், வன்மையாம்ரோகங் களத்திரமிரண்டு வயதுமூன்றெட்டிலே கருமம், நன்மையாய்முடிக்கு மிதுதவறாது நவின்றனர் பெரியவர்தாமே. (நுசுசு)

வேறு.

பகலவன்கரிவீடாகப் பார்க்கவன்கொடிவீடேகத்
தகரிலாப்பாம்புஞ்சேயுஞ் சாரவேபகையதானல்
பகர்பத்தாண்டயமிரண்டிற் பாலகன்றந்தைசாவாம்
நகருலகவர்க்குத்தாரம் நாசமாயொழியுமென்னே. (நுசுஎ)

மதியுடன்பாவர்சேர வளருகேந்திரத்தில்மந்தன்
விதிமுறைதவறாமாலும் விளங்கிடப்பிதிர்த்தானத்தில்
சதியுடனிருக்கநாலிற் சார்ந்திடஅரவமேழிற்
கதியுடனிருப்பாராகிற் கழறினர்கெணிதநூலோர். (நுசுஅ)

கெணிதநூற்படியேசொன்னேன் கேசரியோகங்கிட்டும்
வனிதையரவற்கிரண்டு மாய்ந்திடும்பதிமூன்றஞ்சில்
கெணிதமாயொழியுஞ்சொன்னேன் கேடுவந்துதவுமப்பால்
பணிதமேயவற்குத்தாரம் பான்மையாமிருபத்தஞ்சில். (நுசுகூ)

வேறு.

சந்திரனறு தன்னுடன்கேது சார்ந்திட மூன்றினிற்சேயும், தந்திரத்துடனே பகைதனிலிருக்கத் தையலரநேகமா மொன்றும், மந்திரமுடையா னிருப்பதேயாவன் வாழ்வுடன்பாம்புமே மறையால், சுந்தரத்துடனே கணிதநூல்பார்த்துச் சொல்லினரிவருடபலனே. (நுஎ0)

பொன்னவனுச்ச கேந்திரமாகப் புகருடன் திங்களின்வீடால், மன்னவனுக யிவனுடகிரகம் மதியுமேவுச்சமா யிருந்தால், சொன்னசொலெவர்க்கு மதிகமேயாகும் தோத்திரப்பிரியனுயிருப்பன், மன்னவன்றனக்கு ஏகமேதாரம் மதித்தனர்பெரியவர் மொழியால். (நுஎக)

வேறு.

மதியுடன்பாம்புமாக மனவிதானத்திற்சேர
விதுவுடனதற்குநாதன் வியாழன்வீட்டினிலேயேற

அதிகமாய்ப்பாவர்தானு மமர்ந்திடவதனிலாக
மதிமகனோடுசுங்கன் மந்தனுமறைவதானல். (நுஎஉ)

தாரமுமேகமாகுந் தந்தையர்செல்வமற்பம்
நேர்விழிமனவியாலே நேர்ந்திடுமதிகசெல்வங்
கார்குழல்வருநாள்தொட்டுக் கதிருடனதிகவாழ்வோன்
சாரவேமனவியாலே சாற்றினர்பலனையென்ருர்: (நுஎங)

ஆறினுக்குடையோனுச்ச மவனுடன்கொடியோன்சேர்ந்தால்
நேரிழைதனக்குரோகம் நினவுசஞ்சலமேவுண்டாம்
ஈரிலாத்தனமேசேதம் இடுக்கமேயுடையனப்பால்
நேரிழையாலேதீரும் நிலமகன்தோஷந்தானே. (நுஎச)

மீனலக்கனமேதோன்ற விளங்கியகுருவும்நாலில்
ஆனதோர்சனியுமஞ்சி லவற்குப்பின்மாலாய்த்தோன்றப்
பானுவுஞ்சேயுமேழிற் பார்க்கவன்கேதுமெட்டாம்
மானிலம்பிறந்தசேய்க்கு மனவியரிரண்டேயாகும். (நுஎஙி)

சிங்கலக்கனமேதோன்றத் திங்களுமதனிற்சேரச்
சங்கையாய்க்குருவுஞ்சுங்கன் சதிருடனிருப்பானுகில்
மங்கையராலேயோகம் மாந்தியுமேழிற்சேர்ந்தால்
பங்கமில்லாமலாபன் பாக்கியமதிகமாகும். (நுஎசு)

புந்தியுநீசமாகப் புகருமேசேய்வீடானல்
வந்ததுதாரமெல்லாம் மாய்ந்திடுமென்ருர்மேலோர்
கொந்தளம்முடிக்குமங்கை கோதையாற்றனமுஞ்சேதம்
விந்தையாயுரைத்தார்தாமும் விதமுடன்கணிதநூலால். (நுஎஎ)

பொன்னவன்றன்வீடாகப் புந்திசேய்மந்தனேடுங்
கன்னியிற்சேர்வானுகிற் களத்திரயோகனுவன்
அன்னவளாலேசெல்வ மதிகமாம்யார்க்குமீய்வன்
மன்னனென்றுரைக்கலாகும் மனுநெறிதவருன்மாதோ. (நுஎஅ)

மங்கைதானத்திற்பாம்பு மந்தனுஞ்சேயுஞ்சேர்ந்தாற்
சங்கையாயுரைக்கலாகுந் தாரத்துக்கழிவுண்டாகும்
பங்கமாயுரைத்தார்மேலோர் பாம்புமேதனிப்பாராகில்
மங்கையாற்செல்வமுண்டாம் மனவிக்குரோகங்காட்டும். (நுஎகூ)

புகருமேபுகர்வீடாகப் புந்தியுமதனிற்சேரத்
தகருடனிரண்டேழோனுஞ் சற்குருபுகரேயானல்

நகர்பதிபூமிபாக்யம் நாயகியாலேவுண்டாம்
பகரலாமிந்தயோகம் பத்தஞ்சுவய்தின்மேலாய். (ரு அ0)

ஏழினுக்குடையோனோடு யிணங்கியபாவர்சேர்ந்தால்
வாழ்வுடன்மனவியாலே வரும்பலனற்பமாகுந்
தாழ்வுடனிருப்பானுகுந் தாரமும்பங்கமாகும்
ஏழினோன் தனிப்பானுகி லிருநிதியவளாலுண்டாம். (ரு அக)

களத்திரத்தானத்தோனுங் கருமத்தானத்தானோடு
வழக்குடன்லாபந்தன்னில் வந்திடமாந்திபானு
முளைத்திடவதற்குநாதன் மூன்றென்பான தனிற்சேர்ந்தால்
களத்திரத்தாலேசெல்வங் கருதலாங்கணிதநூலால். (ரு அஉ)

சூரிபன்சுங்கன்மாலுந் துணிவுடன்களத்திரஞ்சேர்
காரியுமுச்சமாகக் கலைமறைதன்வீடானல்
பாரியால்யோகவானுய்ப் பாக்கியமதிகமாகும்
வாரியாலிறப்பன்மேலோர் வகுத்தனர்பலனைத்தானே. (ரு அங)

முப்பதோடிருபத்தஞ்சில் முடியுமேஅவன்றன்யாக்கை
தப்புவதில்லையென்றூர் தாரத்தால்வினையுண்டாகும்
செப்பினுர்கணிதமாகச் சேரவேவொழித்தார்மேலோர்
அப்படியில்லையானல் மனையவளொழியுமப்பால். (ரு அச)

சிங்கலக்கனமேதோன்றத் தினகரன்செவ்வாய்புந்தி
சங்கையாய்க்குருவுங்கேதுஞ் சதிருடன்சேய்வீடாகப்
பங்கமில்லாமல்மந்தன் பதிதனிலிருப்பதானல்
மங்கையாற்றனவானுவன் மதித்தனர்கணிதநூலால். (ரு அரு)

மதிமகனேழின்கோளும் வரும்பவருடனேசேர்ந்து
சதியுடனுயிர்க்கிரண்டிற் றரித்திடப்பவர்வீடாக
அதிகமாயுயிரில்வெள்ளி யமர்ந்திடத்தனிப்பானுகில்
விதியுடனுறென்நாளில் விதித்தனர்மனவியேகம் (ரு அசு

மனவியரேகமாக வகுத்தனர்பிறக்குஞ்சேய்க்கு
வினையுடன்குடும்பநாதன் விளங்கிடவுயிர்க்கிராரூய்
மனைவியற்கதிபன்றன்னை வக்கிரன்கரிநோக்குற்றால்
அனையவன்றனக்குமங்கை யறைந்தனரிருவரோதே. (ரு அஎ)

ஓதிடுமனவியொன்றே வுரைத்தனர்பரிநாள்நாசம்
வேதமாய்ப்பின்னுமொன்று விதித்தனர்பரிநாட்சூள்ளாய்

நீதமாய்ப்பெலமென்றோதி நிச்சயமுரைத்தார்மேலோர்
போதவேயேழோனோடு புகர்கரிபரிவந்துற்றால். (நுஅஅ)

வந்திடுஞ்சேய்க்குமங்கை வகுத்தனர்மூன்றொன்றாகத்
தந்திடும்ரவியிலொன்று சாற்றினாரதனில்நாசம்
முந்திடுமதிநாள்மூன்று முடிந்திடுமதிநாட்குள்ளாய்
வந்திடுமனவிமூன்றும் மாய்ந்திடுங்குருதிவந்தால். (நுஅகூ)

வேறு.

ஏழினோன்சுபராய்ப் பாவரோடேகி யிருந்திட மறைந்திட வருமால், வாழ்வுடன்பருதி புகருடன்கூடிவருமிடஞ் சுபமிலாதிடுகில், தாழ்வுடனேழிற்குருவுங்கேதுடனே தரித்திடப்பிறந்த சாதகற்கு, ஊழ்விதிப்படியாலேகமாந்தார முரைத்தனர் பத்து மேழுள்ளாய். (நுகூ0)

வருமுயிர் சேய்க்கு வகுத்தனர்மனைவி மாய்ந்திடும்பாம்பு நாள்வரையில், தருமுயிர்க்கதிபன்றிசைவருமதனிற் சார்ந்திடும் மங்கையர்பெலமாம், அருதியிப்படியேவுரைத்தனர்கணித மறைந்தனர் மேல்மொழிப்படியால், வருமுயிர்தனக்கு மேழினிற்காரி வக்கிரன்புகர்கொடிமதியும். (நுகூக)

மதியுடன்பெலமாய்ப் பவர்மனையாகி வந்திடமுன்பினுஞ் சுபராய்ச், சதியுடன்றோன்றுஞ் சாதகன்றனக்குச் சார்ந்திடுமங்கையரெல்லாம், விதியுடனிறக்கக்கணிதநூல்விதியால் விதித்தன ரதிகமோகத்தாற், பதிதனில்வருமால் மங்கையர்சேரார் பகர்ந்தனர்மேல்மொழிப்படியால். (நுகூஉ)

வேறு.

ஏழினோன்மதிவீடேகி யிருந்திடவுயிரோனோடு
வாழ்வுடனேழோன்றன்னை வருங்குருநோக்குமாகிற்
சூழுறவிதியால்நாலோன் தோன்றியதனதிற்றூரம்
ஊழ்விதிப்படியாற்சேரு முரைத்தனரேகமாதே. (நுகூங)

மாதவர்மொழியால்மேலோர் வகுத்தனர்மனவியொன்றாய்
வேதமாய்க்குடும்பந்தன்னில் விளங்கிடக்குளிகனாலல்
ஓதிடுமனவிமுந்தி யுரைத்தனர்நாசங்காட்டும்
நீதமாய்விழியிற்பொன்னன் நின்றிடமனவிபின்னால். (நுகூச)

ஏழினுக்குடையோன்றானு மிருந்ததுபாவரில்லம்
ஏழினுக்குடையோன்றானு மிருந்ததுநீசவீடாய்த்
தாழ்வுடன்சுங்கன்றானுஞ் சட்டாட்டம்பகைநீசத்தால்
தாழ்வுடன்சுங்கன்றானுந் தங்கிடம்பவர்வீடானால். (௩௬௫)

தங்கியசுபர்வீடானாற் சதிருடன்றோன்றுஞ்சேய்க்கு
இங்கிதமாகத்தார மிசைவுடன்வருமென்றோது
தங்கியபவர்வீடானாற் சதிருடன்றோன்றுஞ்சேய்க்குப்
பங்கமாமனவியாகப் பகர்ந்தனர்கணிதநூலோர் (௩௬௬)

ஏழினுக்குடையோனோடு யிரவியேசேர்வதாகில்
தாழ்வுடனேழிற்சுங்கன் தரித்திடப்பாவரோடே
ஊழ்விதிப்படியால்மேலோ ருரைத்தனர்பிறக்குஞ்சேய்க்கு
வாழ்வுடன்பிரியமாக வந்திடும்பாரிதானே. (௩௬௭)

குருதியுமருக்கன்வீட்டிற் குறுகிடமாந்திமந்தன்
பருதியுமதனிற்சேரப் பார்க்கவன்மால்வீடானால்
கருதியேயுரைத்தார்மேலோர் கருத்துடன்வந்தசேய்க்குக்
குருவுதன்திசையிற்றாரங் கூடிடுமனவியேகம். (௩௬௮)

சத்தமத்தானத்தோனுஞ் சந்திரன்மகனும்ராகும்
புத்தியாந்தானந்தன்னிற் புனிதமாயிருக்கவேழிற்
சுத்தியாமாறோன்றிற்கச் சுக்கிரன்மறையவாறிற்
சித்தியாமரவுநாளிற் சேர்ந்திடும்பாரிதானே. (௩௬௯)

வேறு.

துணைவியாம்பலன்களுதவிடுஞ்சமஞ்யத் தோன்றிடும்வளர்த்தியுமுள்ளாள், அணையவள்தேகம்மாநிறம்போலா மரையினில் மருவடுவுடையாள், முனையுடன்கோபிசாந்தகமுடையாள் முகமலர்ந்திடுமெனவுரைத்தா, இணையறிவாக போகமேதுய்ப்பாளிசைந்திடுங்கலவிற்பிரியம். (௩௦௦)

வேறு.

சரியவனேழிற்சேரக் காரகன்மதியோடேகப்
பரியவனோடுபொன்னன் பாவர்வீடதனிற்சேரச்
சரியுடனக்கோள்தானுஞ் சாரிடந்தன்வீடானால்
விரிகுழல்மாதேகேளாய் விதிவழிபிறக்குஞ்சேய்க்கு (௩௦௧)

விதியுடன்பிறக்குஞ்சேய்க்கு விளங்கியமனவிரண்டாஞ்
சதியுடனொன்றுநாசம் தரணியிலொன்றுவாழும்
அதிகமில்பாரியாலே அற்பமென்றுரைத்தார்செல்வம்
பதிமுதல்நிதிகளற்பம் பகர்ந்தனர்மேலோர்தாமே. (சூoஉ)

ஏழினிற்கொடியோன்றானு மிருந்திடவத்தானத்தோன்
தாழ்வுடனட்டமத்திற் றரித்திடப்பவர்வீடானால்
வாழ்வுடன்புகரும்புந்தி மதியுமேமறையாதாகில்
ஊழ்விதிப்படியாற்றூர முரைத்தனரேகங்காட்டும். (சூoங)

மனவியரேகமாகும் மாதுர்தன்வழியிற்றூரம்
வினையுடன்முப்பத்தொன்றில் விதித்தனர்தரணிமீது
அனையவள்வழியாற்செல்வ மற்பமென்றுரைத்தார்மேலோர்
தனயனையளித்தநாதன் தன்னுடன்செல்வஞ்சுத்தம். (சூoச)

ஏழினுக்குடையோன்றானு மிரவிவீடதனிற்சேர
ஏழினுக்குடையோனோடு மிரவியுஞ்சேர்வதாக
ஏழினுக்குடையோனில்ல மிருந்திடப்பாவர்தானும்
ஏழஞ்சுவயதுக்குள்ளா யிசைவுடன்மனவிசேரும். (சூoரு)

மதிமகனுயிர்க்குநாலில் வந்திடவதனிற்பாவர்
சதியுடனக்கோள் தானுந் தனித்திடப்பாவர்வீடால்
விதியுடன்பிறக்குஞ்சேய்க்கு விளங்கியமனவியேகம்
அதிகவாழ்வுடையோனென்றே அறைந்தனர்கணிதநூலால். ()

ஏழினுக்குடையோனோடே யிரவிமால்சுங்கன்சேர்ந்து
வாழ்வுடனுயிர்க்குப்பத்தில் வந்திடவதனைமந்தன்
தாழ்வுடனோக்கவிந்தத் தரணியிலுதிக்குஞ்சேய்க்கு
ஊழ்விதிப்படியாற்றூர முரைத்தனரொன்றேயாகும். (சூoஎ)

மனவியர்வரும்நாட்சொல்வேன் மதித்தனர்கணிதநூலால்
வினவியேயீரஞ்சொன்றில் விளங்கிடுமந்தணூணில்
அனையவள்வருநாள்தொட்டு அதிகபாக்கியங்களுண்டாம்
மனையவள்மதிபொன்போல வகுத்தனாசொந்தமாமே. (சூoஅ)

ஏழினுக்குடையோனோடே யிரவியுஞ்சேர்வதாக
வாழ்வுடன்குருவுஞ்சுங்கன் மதியொடுஆரல்தானுந்
தாழ்வுடனுயிருக்காறிற் றரித்திடப்பாவர்வீடால்
ஏழறுவயதுக்குள்ளா யிசைவுடன்மனவிசேரும். (சூoகூ)

மனவியர்சேர்ந்துபின்னுல் மாய்ந்திடும்பதிமூன்றுக்குள்
வினையுடன்மனவிசேரும் விதித்தனரீராறஞ்சில்
அனையவள்நாசங்காட்டும் ஆறிருயிருபதானுல்
மனவியர்சொந்தங்காட்டும் வரமுடன்வயதுசாற்றே. (சுக0)

வரமுடன்மனவிசேரும் மதித்தனர்கணிதநூலோர்
திரமுடனிருபத்தஞ்சு யெட்டினிற்செப்பலாந்தீ
விரமுடனவளுநாசம் விதித்தனர்நாற்பத்தொன்றில்
மரமுடன்மனவியெல்லா மாய்ந்திடுமென்றார்மேலோர். (சுகக)

ஏழினுக்குடையோன்றானு மிருந்திடப்பாவர்வீடால்
வாழ்வுடன்புகர்பொன்கேது வருமிடம்மறையாதாகில்
தாழ்வுடனேழிற்பாம்பு தனித்திடவருவதானுல்
சூழ்விதிப்படியாற்றாரந் துணிவுடன்மறையோனுண்டில். (சுகஉ)

ஏழினுக்குடையோனேடு யிரவியுமதியுஞ்சேரத்
தாழ்வுடனதனைமந்தன் தன்விழிப்பார்வையாகச்
சூழ்விதிப்படியால்வெள்ளி துணிவுடன்மறைவதாகில்
வாழ்வுடனதனிற்கேது வந்திடவுதிக்குஞ்சேய்க்கு. (சுகங)

தாரமுமேகமாகத் தரணியில்வருநாட்சொல்வேன்
நேர்விழிசனிமால்போல நிகழ்ந்திடுந்தரணிமீதே
சேரவேயிருபதுக்குட் டிறமுடன்மனவிசேரும்
பாரமாமவளால்யோகம் பகர்ந்தனர்சாதகற்கே. (சுகச)

ஏழினுக்குடையோன்றானு மிருந்திடச்சுபர்வீடாகத்
தாழ்வுடன்புகரும்பாம்புந் தலமறைவிலாதிருக்கச்
சூழ்விதிப்படியாற்றாரந் துணிவுடன்பதின்மூன்றஞ்சில்
வாழ்வுடனிறைவனுளில் மனவியர்சொந்தமாகும். (சுகடு)

சொந்தமென்றுரைத்தார்மேலோர் துணிவுடன்மனையாள்தோ
விந்தையாற்சேருமென்று விதித்தனர்கெணிதவாக்கால் [ஷம்
கந்தவேள்குமரன்பாதங் கருதினுற்றோஷந்தீருஞ்
சுந்தரமுடனேமைந்தர் சொல்லலாம்பெண்ணென்றாமே (சுகசு)

வேறு.

காரிசேய்பொன்னுங் காரகனுடனே கதிரவன்வீட்டினில்
மறையா, கூறுமாயேழோன் பவருடன்கூடிக் குறுகியேவுதயகே
ந்திரமாய்ச், சீருடன்றோன்றுஞ் சாதகன்றனக்குச் செப்பினர்

மனவிமூன்றுடனும், வீரியமாகவந்திடுமெனவி விதித்தனர்மூன்று துஞ்சிடுமே. (சுகஎ)

மறையவன்புகரும் மாலுடவீட்டில் வந்திடப்பானுகேதுட னே, துறையெனுமுயிரிற் சேயுமேயிருந்து சொல்லியமனவிவீ டதனீ, நிறையுடன்நோக்கி நின்றிடவரவு நேர்திசைபுந்தியூ ணதனில், முறையுடன்றேன்றுஞ் சேய்க்குமேதாரம் முழுச் சிவப்பெனநிறமொழியே. (சுகஅ)

வேறு.

ஏழினேன்புகர்வீடேகி யிருந்திடமதிமால்மந்தன் வாழிடஞ்சுபர்வீடாகி வளர்புகர்மறைவதானுல் ஊழ்விதிப்படியாற்றுர முரைக்கலாங்கணிதவாக்கால் ஏழினேனரவுநாளி லிசைவுடன்மனவிசேரும். (சுகக)

மனவியர்வருநாள்தொட்டு வாகனயோகத்தோடு இனமொடுமாதர்சேர்த்தி யிணங்கியபோகமுண்டாம் குணமுடன்தெய்வபத்தி கோதையர்மகிழ்ச்சிகாட்டும் வினவியகல்விஞானம் வேதாந்தங்கேள்விமேவும். (சுஉ0)

மதிமகனேழின்கோளும் வரும்பவருடனேசேர்ந்து, சதியுடனுயிர்க்குமூன்றிற் றரித்திடப்பவர்வீடாக அதிகமாய்வெள்ளிமாந்தி யமர்ந்திடமதிக்கேழானுல் விதியுடன்மனவிரண்டாய் விதித்தனர்தாணிமீதில். (சுஉக)

மனவியர்வருநாட்சொல்வேன் வகுத்தனரரவுநாளிற் குணமெனுமனவிசேர்வள் குருதிசைமாலூண்போகுந் துணைவியாமிரண்டாம்பெண்டிர் சுந்தரக்கொடீரியாகிக் கனகநாளதனில்மாலூண் கருதியேவாய்க்குமென்றார். (சுஉஉ)

வேறு.

ஏழினுக்குடையோன் காரியேயாகி யிருந்திடச்சொந்தவீ டதனில், தாழ்விலாச்சுங்கன் மாலுடனிரவி சற்குருவீட்டினில் மறைய, வாழிடங்காரி தன்னையுமதிதான் மாபெலமாகவேநோ க்க, ஊழ்விதிப்படியாற் றேன்றிடுஞ்சேய்க்கு உத்தமகரிநிற மனவி. (சுஉங)

ஏழினிற்காரி சொந்தமாய்த்தனிக்க யிருநிதிக்குடையவன் மாலாய்த், தாழ்விலாவைந்திற் றரித்திடச்சுங்கன் தன்னுடன்

குருமதியோடு, மீளவேயிருந்தால் விளங்கியமனவி மீன்கொடி போல்நிறம் பொதுவாய், ஊழ்விதிப்படியா லிரண்டெனுமனவி யுண்மையாய் வருமெனமொழிந்தார். (சுஉச)

நாலினேன்செவ்வா யுச்சவீடதனில் நல்கிடவேழினேன் காமன், மாலவனிரவி காரிவீடதனில் வந்திடமதிக்குமேலாபஞ், சீலமாமதியு மைந்தின்கோளுடனே சேர்ந்திடப்பாக்கிய மிருந் தால், கோலமாந்தக்க பாக்கியனுவன் கோதையர் கலவியி லதிகன். (சுஉரு)

கோதையர்மனவி யிரண்டுதானென்னக் குறித்தனர்மதி திசைதனிலும், வாதையாமரவு திசைதனிலுந்தான் வாய்த்திடு மங்களமுடனே, காதலாயநேகம் பிறர்மனைபோகன் கருதிய காமத்தால்மயக்கன், சீதமாய்ச்சகடம் புரவியுஞ்சிவிகை செல் வனுயிருந்திடவல்லன். (சுஉசு)

ஏழினேன்புகரா யிருந்திடவுயிருக் கிரவிமால்தன்னுடன் கூடித், தாழ்விலாக்கன்னி லாபமாய்நிற்கச் சந்திரனரவுடன் தோன்ற, வாழ்வெனுமந்தன் மங்கைதானத்தில் வந்திடப்புகருக் கொன்பதனில், ஏழினேன்கூட விருந்திடுமிரவி யிணங்கிடில் மனவியர்வருமால். (சுஉஎ)

மனவியர்வருநாள் முதலினும்வாழ்வன் மங்கையர்போக போக்கியனும், இனமொடுமனவி தனதினில்வருவ ளிசைந்திடு மற்பமாஞ்சொரூபங், குணமெனுமழகிலிங்கிதமில்லாள் கோதை யர்வருமுதலிலாபந், தனமொடுமேன்மை முயற்சியுங்கூடச் சந் ததியற்பமாய் வாழ்வன். (சுஉஅ)

ஏழினேன்செவ்வாய் நீசனுய்ப்பத்தி லிருந்திடமதியுமேகூ டத், தாழ்விலாப்புகரும் நீசனுய்மறையச் சனிபிதிர்மதிமகன் சார, வாழ்வெனுமங்கை தானத்திற்கேது வந்திடச்சனியுமே பார்க்கிற், கோலமாயுயிரோன் புகர்திசைவருநாள் குறித்தனர் மனவிரண்டாகும். (சுஉகூ)

ஏழினிற்கேது மிருந்திடவக்கோ ளிந்துவீடதனிலே நீசந், தாழ்விலாச்சோமன் கூடிடவுயிரிற் சனியுடனரவு மாந்தியுமாய், மாலவனுடனே யிரவியுஞ்சுங்கன் மறைந்திடநீசமாய்ச் சேர்ந் தால், ஏலவேசோமன் சிசுவுடதிசையி லிணங்கிய அரவுநாள் மணமாம். (சுஙo)

மணமெனுமங்கை யனேகமாய்ச்சேர வல்லவனாகியேயிருப்பன், இனமொடுமாதர் சேர்த்தியுமாவன் இங்கிதச்சுமுகனாயெங்கும், கனமெனுங்கீர்த்தி பாக்கியமுடையன் களத்திரமூலமாய் வாழ்வன், குணமெனுந்தாசி விஷயனும்போகன் கோதையர்க் கன்பனாயிருப்பன். (சுஙக)

ஏழினோன்செவ்வா யாகியேபுகருக் கேழினிற்காரிவீடாகத், தாழ்விலாக்குடும்ப னாகியேவுயிர்க்குத் தனித்திடவஞ்சினிற்றோன்றக், கோள்புகருயிரோ னாகியேமதிக்குக் குறுகிடலாபமாய்ச் சேர்ந்தால், ஊழ்விதிப்படியே காரிநாள்புகரி லுரைத்தனர் மனவியொன்றாமே. (சுஙஉ)

வேறு.

ஏழினுக்குடையோன்செவ்வா யிலங்கிருமூன்றோன்கேதும்
வாழ்வுடனுயிர்க்கொன்பானில் வந்திடமால்வீடேகித்
தாழ்விலாச்சுங்கன்மாலுந் தரணியில்மறைவதானால்
ஊழ்விதிப்படியாற்றூர முரைத்தனரொன்றேயாகும். (சுஙங)

மனவியர்வருநாட்கொண்டே மதித்தனர்கெணிதநூலால்
அனையவளாலேயோக மதிகமாம்பாக்கியங்கள்
வினையுடனரவுநாளில் விளங்கியமந்தனூணில்
மனையவள்மதிபொன்போல வகுத்தனர்சொந்தமாகும். (சுஙச)

வேறு.

ஏழினோன்புகரா யிருந்திடமதிக்கு ஏழினிலுச்சமாயிருக்க, வாழிடங்குருவீ டாகியேஅக்கோள் வரக்கினிலரவுமாந் தியுமாய்த், தாழ்விலாதிருந்து சந்திரன்றனக்குத் தரித்திடநாலிற் கேந்திரமாய், ஊழ்விதிப்படியா லரவுதன்றிசையி லுண்மையாய் மனவியர்வருமாம். (சுஙரு)

மனைவியர்வருநாள் முதலிலேயோகன் மங்களமாகுநாளதிகம்
இனமிலாத்தூர தேசத்திற்போவன் இன்பமாமிராஜபூஜிதனுந்
தனமெனுமதிகம் நிகரிலாதாவன் தன்னரசாளவேவல்லன்
கனமெனுஞ்சிவிகை யோகனுமாவன் கரிபரிசூழ்ந்திடவருமால்.()

வேறு.

யோகத்துக்குடையோன்காரி யுவந்தபஞ்சமேழானாற்
போககாரகனுமெட்டு ராறினிற்புகுவராகிற்

வாகுளபருதிகாலில் வசித்திடப்பாவர்நோக்கில்
வேகத்தா லுபயமாதர் விளங்கிடுமென்றுசொல்லே. (சுகூஎ)

சொல்லிடுபாவர்நோக்கா திருப்பச்செஞ்சுடரோன்வேறேல்
நல்லதாமியாதுகுற்றம் நடக்கினுந்தாரமொன்றும்
வில்லுடன்கடகமாது விளங்கவித்தானமாகில்
வல்லநிக்கண்ணுய்பாவர் வந்துறிலுபயதாரம். (சுகூஅ)

வேறு.

ஏழினிற்கேது மிருந்திடவேழோ னிருந்திடமறைந்திடா நீசம், வாழ்வுடன்பருதி சேயுடனேகி வந்திடம்வளருகேந் திரமாய்த், தாழ்ந்திடுமேழோன் சரமிருந்திடுகிற் றங்கியசுபருட வீடால், சூழ்விதிப்படியாற் றூரமுமிரண்டாய்த் தோன்றிடுஞ் சாதகன்றனக்கே. (சுகூகூ)

சாதகன்றனக்குப் பத்துநாலெட்டிற் சார்ந்திடுமனைவியர் வருநாள், வேதமால்மதிநா ளதனிலேமனவி மெலிந்திடுங்கண்டம் வந்திடுமாம், போதவேமால்நாள் சேய்கடைஅரவிற் பொருந்திடுந்தாரமே பெலமாம், நீதியாய்வருமென் றோதினரதுவும் நேர்ந்திடுமுந்திமாய்ந்திடுமே. (சுசஅ)

வேறு.

கண்டகண்டசாதகருக் கிரண்டொன்றேழைக்
காரியுடன்சேயரவு கலந்துநோக்க
அண்டஅண்டத்தீக்கோட்க ளதனைப்பார்க்க
அரியவேழுக்குடையோன் மறைந்துபோக
ஒண்டஒண்டக்கொடியோர்க ளொன்றுய்க்கூட
ஒள்ளியோன்தேர்ப்பாக னுதயன்நின்றால்
கொண்டகொண்டபெண்டிழப்பன் குடும்பம்பாழாம்
குணமானகோள்நிலையின் பலனைக்கூறே. (சுசக)

சுக்கிரன்றன்வீடதுவா யாரல்சேரத்
தோன்றுமிவன்றனக்குப்ப மதனிற்பாவர்
தக்கமுடனுயிர்தனக்கு யீராறேனும்
சார்வாகஅஞ்சதனி லேழாங்கோளன்
மிக்கவதில்மாந்திகரி யுடனென்றுனல்
விளங்கியசேய்காமனம்பால் வேசைமாதர்

தொக்குவயதிருபதனி லதிகமோகன்
தோன்றுமறைசாதியுட்ன் விதவைசேர்வன். (சுசஉ)

வேறு.

ஏழிஞேனீராரேனு மிணங்கியபுகரோடொன்ருய்த்
தாழ்வுடனுயிர்க்கேழாகித் தரித்திடவதிற்சேயுற்ருல்
சூழுறும்விதியால்முந்தத் தோன்றிடும்விதவையின்பம்
வாழ்வுடன்மதபாணத்தால் வருந்துவன்தரணிமாதே. (சுசங)

மாதவர்மொழியால்மேலோர் வழுத்தியபுகர்தன்ஞேடு
நீதமாயுயிர்க்கேழாகி நின்றிடக்கரிவந்துற்ருல்
போதவேவளருஞ்சேய்க்குப் பொருந்தியமதவேள்பாணம்
ஓதினர்புலையன்மாதா யுறைந்திடுஞ்சாதிமோகன். (சுசச)

உறைந்திடுமேழோன்சுங்க னுயிருடனீராரேனுந்
துறந்திடுமுயிர்க்கோளாகித் தோன்றிடப்பாம்புசேர்ந்தால்
அறைந்தனரனேகம்பெண்க ளழிந்திடுமிவன்மோகத்தாற்
குறைந்திடுஞ்சாதிதன்னிற் கூடிடுமனேகமாதர். (சுசஙு)

மாதர்களனேகஞ்சேரும் வளங்கியவேழோன்சுங்கன்
வேதமாயீராரேனும் விளங்கியநாதனேடு
நீதமாமதிபான்பொன்னல் நின்றிடப்பிறந்தசேய்க்கு
ஓதிநாளனேகமேலா யுதவியசாதிசொல்வேன். (சுசசு)

உதவியஏழோன்சுங்க னுறைந்திடவீராரேனுஞ்
சதமெனவுயிர்க்கேழாகிச் சார்ந்திடமால்வந்துற்ருல்
விதமுடன்வேசைமாதர் விளங்கிடவநேகம்பேரை
மதன்விடுங்கணையாற்சேர்ந்து வருந்துவன்கெணிதக்கூறே. ()

கூறியவேழோன்சுங்கன் குறுகியவீராரேனும்
பாருயிர்தனக்கேழாகிப் பதிந்திடப்பிறந்தசேய்க்குப்
பாரினிற்பாரிசேராள் பலித்திடுமநேகம்பேரைச்
சாருவன்மனைவியோடு சார்ந்திடாஞெருகாலத்தும். (சுசஅ)

சார்ந்திடவேழோன்சுங்கன் சாருமிக்கோட்களொன்ருய்ச்
சேர்ந்திடுமுயிர்க்கேழாகிற் செகத்தினிற்பிறக்குஞ்சேய்க்கு
கூந்தலாளநேகமோகங் கொண்டிடுங்கணவனேடே
சாந்தமாயுயிர்க்கேழ்தன்னிற் றனித்திடப்புகர்வந்துற்ருல். ()

வந்திடப்பிறந்தசேய்க்கு வகுத்தனர்மனவிதானும்
விந்தையாய்ப்புருடனோடு மேவிடாள்சிலதுநாட்கள்
சிந்தையில்மயக்கங்காட்டும் செப்பியகாமசிந்தை
வந்திடுஞ்சிறிதுநாளில் வகுத்தனர்தரணிமாதே. (சுரு0)

வேறு.

மதிமகனுமாறிருகோள் நாதனுகி
வரும்பருதியுடனுகி வளருமில்லம்
சதிருடனேவுயிர்தனக்கு நாலதாகித்
தரித்திடவேஅதற்குவரு நாதன்வெள்ளி
விதியுடனேமாந்தியுடன் குடும்பந்தன்னில்
விளங்கிடவேவுயிர்க்கேழிற் குருதிதோன்ற
அதிபதியாமதற்குடையோ னரவுதிங்கள்
அமருமிடமீராறேன் தானம்வந்தால். (சுருக)

வந்திடவேசெகமதனிற் றேன்றுஞ்சேய்க்கு
வருமயக்கங்காமத்தாற் சிறுதுநாட்கள்
சிந்தையுடன்மோகவசனுகிச்செல்வன்
செப்பியதோரிவன்மயக்க மதிகமாகும்
விந்தையுடன்வேண்டியபேர் குறையுஞ்சாதி
விளங்கியபெண்ணிவன்மயக்க மிகவேசேரும்
சுந்தரமாய்த்தோன்றியதோ ரழகனுவன்
தொல்புவியிலிதுவழியைத் துறந்துசொல்லே. (சுருஉ)

வேறு.

சீருயிரதனில்வெள்ளி சேர்ந்திடத்தனித்தேவுச்சம்
கூரியலாரலேழிற் குறுகிடவலதுபார்க்கக்
காரியமதன்பாணத்தாற் கலந்திடும்வேசைமாதர்
வீரியகாமமோகன் விளங்கியவிதவையின்பம். (சுருங)

வேறு.

பருதிபுகர்வீடதனில் வருகக்காரி
பனிரண்டிலரவுடனே பதியச்செவ்வாய்
கருதிடவேஆட்சியினிற் றனிக்கமாலோன்
கலந்திடவேமதியுடனே குருநோக்குற்றுற்
சுருதிமறையாகமநூற் படியேயாயுள்
துஞ்சிடுமேபதினுறிற் றேன்றுஞ்சேய்க்குத்

தருதுடனேஆயுள்பெல மாகுமானாற்
சாதியிலேநீசர்குலந் தனிற்போவானே. (சுருச)

போவதிலேவஞ்சகனுங் காமிபாவி
புண்ணியர்க்குவிரோதியனும் பொருளிலாசை
யாவதிலேஅதிகமுள்ள கோபிமூர்க்கன்
அன்னைபிதாதனக்குத்தா னழகிலற்பன்
சாவதுவேசித்ரவதை தன்னாலாகும்
தரிதலியாந்திரிபோகந் தன்னில்மோகன்
பாவமுடன்பழையோர்கள் சாபத்தாலே
பலித்திடுமேஅரவுபுகர் திசையிற்பாரே. (சுருரு)

வேறு.

உயிரினிலுயிரோன்மாந்தியுமொன்ரு யுறைந்திடச்சேயுமே யாகிப், பயிரினில்மூன்ரேன் காரியாயேழிற் பதிந்திட வுயிரை யும்பார்க்கில், தயிரியன்காமி போகபோக்கியனுந் தையலர் வய துமூத்தவளை, வெயில்நிசியினிலும் வேசையைச்சேர்வன் வேண் டுவன்விதவையின்போகம். (சுருசு)

மதியுயிர்தனக்கு யேழினிலாக மறைபுகர்மாந்தியும்பார்க்க, விதியுடன்மதிக்கு லாபமாய்க்கேது வெய்யவன் மால்புகர் வீடா ய்த், துதிபெருஞ்சேயு மரவுமேலாபந் தோன்றிட மதிக்குமஞ் சாகக், கெதிபெறமுயற்சி சிவிகைவாகனமும் கெருவிதனுகவே யிருப்பன். (சுருஎ)

இருப்பனும்வளர்த்தி சிவந்திடுந்தேகன் இங்கிதன்வார்த் தையிற்சுமுகன், மருப்படாக்கபடன் வஞ்சகன்காமி வாய்த்தி டும் போகபோக்கியத்தில், விருப்பனுங்கன்னி வேசைமேற்பிரி யன் விளங்கிடா வயதுமூத்தவளுங், கருப்புடன்சிவப்பு மாத ரைக்கலந்து கைப்பொருள் கொடுத்திடுமற்பன். (சுருஅ)

அற்பமாய்ப்பிரம சாதியுமநேகம் ஆசைகொண்டுலாவியே திரிவன், விற்பமாபோகம்வேண்டிடான்வேந்தன் விளங்கியராகு வந்தியமாய், அற்புதத்தயவன் சஞ்சலமுடனே அறுமுகன்பூசை யும்ஞானம், சொற்பொருள்வித்தை யேகமுங்கிரகந் தேர்ந்திடும் வெகுபிரபலனுகி. (சுருகூ)

வந்ததுதார மன்னியராகும் மதித்தனர்மேலவர் மொழியால், விந்தையாயிரண்டு தாரம்வந்துதிக்கும் விதியுடனொருத்தி வாழ்ந்திடுவள், சிந்தையோடிருப்பன் வஞ்சகத்துவசன் திறமுடன்வாய்மொழி யுடையான், முந்திவாழ்ந்திடுத லற்பமென்று, ரைத்தார் மோகசஞ்சாரனேயாவன். (௬௬0)

வேறு.

பருதியுங்குருவீடேகப் பத்தினுக்குடையோன்றானுஞ்,
சுருதியாய்த்தனத்திலேறச் சுங்கனுங்கரியுமாலுங்
குருதிவீடதனிற்சேரக் குளிர்மதியரவமோடு
அருதியாயுயிருக்கேழி லமைந்துமேயிருப்பதானால். (௬௬௧)

மங்கையர்மூன்றேயாகும் வகுத்தனர்தரணிமீதிற்
சங்கையாயிரண்டுநாசஞ் சதிருடன்மைந்தனாலே
இங்கிதமாகவாழு மினிதுடனென்றேகாட்டும்
மங்கையராலேபாக்யம் வரவரவதிகமாமே. (௬௬௨)

வேறு.

ஏழினிற்சிகியு மிருந்திடில்வந்த வேழினோன்சூரிய னிடமாய்த், தாழ்வுடன்மூன்று றெட்டுமீராறிற் சாருவாராகிலுமாதை, வாழுமீரொன்பான் வயதின்மேல்மணத்தை வகுத்திடுந்திவ்விய மாதர், சூழ்வினைமுப்பத் தஞ்சின்மேல்மாது துஞ்சிடுமென்ற னர்திறமாய். (௬௬௩)

திறமுடன்மூன்றின் படியதாய்மறையிற் சேருமோரிருபத்தியிரண்டிற், குறையுளமாதை மணமுடித்திடுமாங் குலவியமுப்பதினாறில், நிறையுமோரேக மதனின்மேலாறு நேர்ந்திடுந்திங்களுள்ளளவிற், பிறைநுதல்மாதே யிறந்திடுமென்றே பேசுவர் புவியினிற்பெலமாய். (௬௬௪)

ஏழினிற்காரி யிருந்திடவெட்டி லியல்மதிகுருவிருந் திடிகில், ஆழவேகிரக மதனிலில்லாதா லன்னையுங் கற்புடைமாதாம், தாழ்விலாதென்று மங்கலந்தீர்க்கம் சாற்றலாமிருபதோ, டிரண்டில், சூழ்விதியதனால் நிதியுடையோனாய்ச் சொல்லலாந் துணிவுடன்கோதாய். (௬௬௫)

வேறு.

போகத்துக்குடையோன்காரி பொருந்தபஞ்சமமாயேழோன்
ஆ்ககாரகனும்மெட்டு ராறினில்மறைவராகிற்
பாகொத்தபருதிகாலிற் பதிந்திடப்பாவர்நோக்கில்
வேகத்தாலுபயமாதர் விளங்கிடுமென்றுசொல்லே. (சுசுக)

வேறு.

சூரியன்மாலாரல்பாம் போரேழிலானாற்
சொலுமத்தானத்ததிபன் பாவராய்த்தனித்தாற்
பாரேழின்காரகனும் பவர்வீட்டிற்றனிக்கிற்
பதிந்திடுமேழாங்கோளன் சுபராகவுயிர்க்கு
நேரிழைபஞ்சமமொன்பான் பன்னென்றேயாகில்
நேருமவன்வேசையின்ப மனுதினமுந்துய்ப்பன்
வாரதோர்தாரமொன்றே வகுத்திடலாம்பின்னும்
வளரேழின்காரகனும் சுபமில்லாயிடுமாம். (சுசுஎ)

அன்புகொடுத்திடும்பாரிக் கோளுயிர்நாலேக
அமர்ந்தகாரகனுயிர்க்கு மறையாதாகில்
பின்பேழிலுள்ளோன்கோள் மூன்போலெய்தால்
பேசுமித்தானத்திலரா யிருந்திட்டாலும்
துன்பமிலாரவிமுதல்மீ னளவுந்தோன்றில்
தொகுத்திடும்பாரியினுலும் பொருளுளோனும்
இன்பமுள்ளமாதற்குத் தீர்க்கமாக
இவனிருக்குமளவிருந்தே உதவிடுநற்கருமம். (சுசுஅ)

வேறு

உதவிடுஞ்சேய்க்கு மனவிமூன்ருக வுரைத்தனர்கெணிதநூ
லாய்ந்தோர், விதமுடனென்று மிருபத்தோராறில் விஷமுடன்
நாசமென்றிடுவாய், இதமுடன்மனவி யிரண்டுவாழ்ந்திடுமென்
றியம்பினர் சாதகன்றனக்கே, சதமெனவுரைத்தார் தாரத்தாற்
செல்வஞ் சாற்றினர் வெகுதிறமாக. (சுசுகூ)

ஏழினுக்குடையோன் நிலமகன்புகரா யிருந்திடங்குருகரி
வீடால், வாழ்வுடனக்கோள் சுபமிலாதாகில் வரும்புகர்தனக்கு

மொன்பதனுல், தாழ்வுடனக்கோள் தன்னுடன்சுபர்கள் தரித்திடப்பிறந்த சாதகற்குச், சூழுறவிதியால் மறையவன்றிசையிற் ருேன்றிடும் மங்கள மணநாள். (சுஎ0)

தாழ்விலாவேழிற் காரியுஞ்சசியுந் தகமைசேர் தரணிதன்னுடனே, நீள்குழலிருளைப் பழித்திடுமாதே நிறைந்தசற்குருவுடன்சுங்கன், வாழ்வுடனுரல் மதிமகனென்ருய் வந்திடச்சாதகன்றனக்கே, சூழுறவிதியால் மனவியொன்றிருந்துஞ் சுகமிலையென்றுதானேதே. (சுஎக)

வேறு.

ஓதிடரூபபங்க முரைத்தனர்மனவிதானும்
பேதமாயுரைசொல்முந்தும் பேசிடின்மனதுகஷ்டம்
நீதமாமில்லாள்கற்பு நிலையுளாளரவுவந்தால்
சேதமாய்ப்போகுமென்று செப்பினர்கணிதநூலோர். (சுஎஉ)

வேறு.

ஏழிணிலுயிரோன் புகருடனிணங்கி யிருந்திடக்காரியும் பார்க்கத், தாழ்விலாதேழோன் மதிமகனுகிச் சந்திரன்றனக்குக் கேந்திரத்தில், வாழ்வெனுமனவி மதிமகன்திசையில் வாய்த்திடும் புதல்வருண்டாகும், நூலறிவிதமாய்க்கெணிதநூற்பார்த்து நுகர்ந்தனர்பெரியவர் மொழியால். (சுஎங)

வேறு.

சுந்தரனுஞ்சுக்கிரனுங் குருவுங்கூடித்
தொல்மனவித்தானமதிற் சுகமாய்நின்ருல்
அந்தணர்தன்வீட்டினிலே காரிநின்று
அனுதினமும்பார்த்திடவே அருள்செய்தாக்கால்
சிந்தைதனில்நினைப்பதெலாம் போகமாகுஞ்
செய்திடுவன்கலவிகளைத் தீர்க்கமாகக்
கந்தமலர்க்குழலுமையா ளுண்மையாகக்
கணிதமுறைதனிலுரைத்தாள் கண்டுதேரே. (சுஎச)

தேரவேயின்னமொரு பலன்தான்சொல்வேன்
சேயிழையாமனவியற்கு முண்மைசெய்யான்
வீரமுடன்கோபியனும் பின்புருணப்படுவன்
வேதமறையோர்தேவ பத்திமிகவுண்டாம்

பாரமுடன்பொருளழிப்பான் புதனுட்கேது
பரிசகடவாகனமும் பருகிவாழும்
காரமுடன்புகர்திசைநாள் வந்தபோது
கடன்தீருங்காலிமிகுங் கருணையுண்டாம். (கூஎரு)

வேறு.

மதிமகனேழேன் கதிருடன்கூடி வருமுயிர்மீனமாய்மருவ, விதியுடன்சுங்கன் சேயுமத்துடனே விளங்கிடமதிக்கு அட்டமமாய்ச், சதியுடனுயிருக் கிரண்டுமைந்தேழிற் சார்ந்திடக்காரி நோக்குற்றுற், பதியுடன்றோன்றும் பாலகன்றனக்குப் பாவையர் மூன்றெனவறையே. (கூஎகூ)

ஏழினேன்சுபரா யுதயகேந்திரத்தி லிருந்திடச்சூரியனுடனே, வாழ்வுடன்புகரோன் வருமிடங்குருதி வளர்மனையாகிட வக்கோள், தாழ்வுடன்மறைந்துமிருந்திடுமவனைச் சற்குருநோக்கிடுமாகிற், சூழுறவிதியால்வயதுமேழொன்றிற் றோன்றிடுமனவி பொன்நிறமாம். (கூஎஎ)

வேறு.

என்றெனவேபுகரிருந்த கிரகநாதன்
ஏவுதிசைநாளதனி லேழின்கோளன்
துன்றுமபகாரம்வரில் மனவியொன்று
தோன்றிடுமேசமமதுவாய் நிறம்பொன்காரி
நன்றெனவேவரினுமண மரவுவந்தால்
நாசம்வருந்தப்பாது கணிதநூலால்
மன்றுளந்தநாளபகாரத்திலொன்று
மாய்ந்திடுமேமால்நிறம்பின் பெலமென்றேதே. (கூஎஅ)

வேறு.

போகத்தானத்தோன்சுங்கன் பொலிவுறவாகச்செவ்வாய்
நாகத்தினுடனேமாலும் நல்கிடப்பருதிசேரில்
வேகத்தாலோரெழுத்தால் விளங்குவன்பாரிமிக்க
ஆகத்துவேசைமாதர் யாரையுமருந்தப்போவன். (கூஎகூ)

பெண்களின் ஆயுட்பாவகம்.

உறையுமெனவுயிரதனில் மாந்திவெள்ளி
உறைந்திடவேமுன்பின்னுங் கொடியபாவர்
விரைவுடனேமுன்பாவ ராரலாக
விளங்கியகோளுடனெவர்கள் தரிக்குமாகில்
முறையுடனென்பானுடனே பாம்பதானுல்
மொழிந்தனர்கள்மனைவயது கணிதமேலோர்
அறையுமெனஅரவுதிசை யதனிற்பாதி
அதில்மரணந்தப்பாம லாகுந்தானே. (சுஅ0)

காரிமதியுடன்சேர்ந்து புகர்வீடேகக்
கருதுமக்கோள்மாலுயிர்க்கோள் வருமெட்டோனும்
பாருயிர்க்குமறையாமற் கரியன்வீடாற்
பகரிவர்க்குப்பின்பரிபாம் புடன்வந்தெய்தச்
சாருமெனவுயிரதுவே தெரிவையாகச்
சாருமதில்மாந்திவந்து தரிக்குமங்கை
கூரியதோராயுள்விதி கெணிதமாகக்
குறித்தமுப்பத்தாறதனில் மரணங்காட்டும். (சுஅக)

அட்டமத்திற்சூரியன்மால் கருமநாதன்
அமர்ந்திடவேஅதற்குடையோ னருணன்வீடாய்த்
திட்டமுடன்சேயுயிர்கோ ளுடனென்றுகிச்
சேர்ந்திடவேஉயிர்மதிக்கு மறையாதாகச்
சட்டமதாயுயிர்தனக்கு யீராறுன
தானமதிற்காரிவரத் தரணிமீதில்,
மட்டவிழ்சேர்மாதரென வயதுமேலோர்
வகுத்தனர்கள்மதிதிசைநாள் வரினும்பாதி. (சுஅஉ)

சதியாகஅட்டமத்தோன் தமமுடனேகூடிச்
சாருமிடஞ்சுபர்வீடாய்த் தரித்திடவேஉயிரோன்
விதியாகமதிமகனும் வெய்யவனுமாக
மேவிடவேமறைவீடாய் விதியுடனேவருகப்
பதியாகநீலனுமே ஆட்சியுச்சமானுற்
பாரதனிற்பிறந்துவரும் பாவையுடவயது
விதியாகப்பெரியோர்கள் கணிதமுறைப்படியே
விதித்தனர்களறுபதென மேதினியிற்றானே. (சுஅங)

வேறு.

கரியவன்குருவீடேகக் கலைமறைமதிவீடாக
வருமுயிர்க்கோளனெட்டோன் வருமிடமறையாதானுற்
சரியுடனஞ்சோன்பத்தோன் சாரிடஞ்சேய்வீடுற்றுற்
பதினனில்வயதுபத்தாய்ப் பகர்ந்தனர்வருமாதற்கே. (சுஅச)

வேறு.

சந்திரனுமறையாமற் சுபர்வீடாகித்
தரித்திடவேவுடன்சுபர்கள் தரியாதாகில்
வந்துயிர்க்குநாலதனிற் பரிமாலொன்றாய்
வழங்கிடவேஅதற்குடையோன் மறையுமானால்
சிந்தையுடன்வருமாதர் தரணிமீதிற்
சேர்ந்திடுநாள்புகர்மதிபொன் துகையென்றோதே
சந்திரனுமறைந்திடவே சுபர்நோக்கில்லா
தனித்திடவேவரும்வயது சதிராய்ச்செப்பே. (சுஅதி)

செப்பிடவேவரும்வயது பத்தேழெட்டிற்
சேர்ந்திடுநாள் துகையிரட்டி வயதுள்ளாக
இப்படியிற்சாதகற்குக் கணிதநூலோர்
இசைத்தனராங்கணவியுயிர் மோசமாகும்
துப்பிதழாய்சந்திரனும் நாலோனொன்றாய்த்
தோன்றுமவர்பவர்வீடாய்ப் பவர்நோக்குற்றால்
தப்பிடுமேமங்கையுயிர் வயதேழொன்றிற்
சாய்ந்திடுமேகணிதவிதந் தப்பாதென்றே. (சுஅசு)

வேறு.

அட்டமாதிபனுங் காரிகேதுடனே அமர்ந்திடமதிக்குஅட்டமமாய், நெட்டைமாலீறோன் புகர்பரியுடனே நின்றிடவுதயகேந்திரத்தில், மட்டிடுங்கருமத் ததிபனுஞ்சுபராய் வருமிடமுயிர்க்கு முன்வந்தால், திட்டமாய்வரும்பெண் வயதெனக்கணிதர் செப்புனரிரண்டு மொன்றெனவே. (சுஅஎ)

அட்டமத்தோன்சூரியனாய் மாலோடொன்றாய்
அமருயிர்க்கொன்பானலது ஆறிலேகச்
சட்டமுடனுயிர்க்கோளன் கரியனாகிச்
சாருயிர்க்குப்பதினோராந் தானந்தன்னில்

திட்டமுடன்வருங்கருமன் மறையோனோடு
சேருயிர்க்குக்கருமமது அலதஞ்சானல்
மட்டிடுஞ்சேயவன்றனக்கு வயதுகாரி
வருந்திசைமுன்பாதியந்தி கணிதங்கூறே. (ஈஅஅ)

அட்டமத்தோன்கேந்திரமா யாட்சியுச்சம்
அமர்ந்திடவேவுடனுயிரோ னதனிற்சேரத்
திட்டமுடன்கரிகரும னிவர்களொன்றாய்ச்
சேரிடங்கேந்திரமாகித் தரிக்குமானாற்
சட்டமுடனுயிர்க்கோளன் புகர்சேய்காரி
சாருமிக்கோளிவர்களிலே யெவரானாலும்
கட்டியநல்மாதருக்கு வயதுமேலோர்
கருதினர்கள்நாற்பதஞ் சிரட்டியோதே. (கஅகூ)

ஓதுமெனநாற்பதஞ் சிரட்டியாக
வுரைத்தனர்கள்வெகுபெலமாய்த் தரணிதன்னிற்
சீதமுடனுயிர்க்கோளன் ஆரலாகிச்
செப்பியவாறானகோ ளுடனொன்றாகி
வேதமுடனுயிர்தனக்கே யிரண்டாறெட்டு
விளங்கியதானத்தில்வர விளம்புமுன்சொல்
ஓதுமெனஆயுள் துகை யதனிற்பாதி
ஒழியுமெனமேலோர்க ளுரைசெய்தார்கள். (கூ0)

சூரியன்மால்சேய்மறையோ னுயிரின்கோளும்
தோன்றிடுமெட்டுடையோனுங் கருமத்தோனும்
சீருடனேவுயிர்தனக்கு மூன்றேழ்பத்திற்
சேர்ந்திடவேகாரிவருங் கிரகநாதன்
கூரிடவேசுபர்வீடாய் மறையவந்த
கோதைவரும்ஆயுள்விதி குறிக்கலாகும்
சூரியன்மால்சேய்புகரோன் மறைபாம்பானல்
தோன்றியநாள்வரும்வயது சொல்லுமாதே. (கூகூக)

சூரியனுமுயிரோனு மாட்சியுச்சந்
தோன்றிடவேவுடனொருகோள் தோன்றாதாகப்
பாருயிர்க்குநாலதனிற் கருமநாதன்
பகர்பாம்போடுடன்கூடித் தரிக்குமாகிற்

கூருயிர்க்குப்பதினொன்ரு ருயுள்நாதன்
குறுகிடவேஅட்டமத்தோ னுயிர்முன்வந்தால்
சீருடனேதோன்றிடுமா தாயுள்மேலோர்
செப்பினர்நாற்பதுவாகக் கணிதநாளே. (சுகூஉ)

நாளெனவேதோன்றியபெண் தனக்குஆயுள்
நாட்டினர்கள்பெலமாகத் தரணிதன்னிற்
சூழுறவேவுயிர்க்கோளன் பகைநீசங்கள்
தோன்றிடவுமுடனொருகோள் தரிக்குமாகில்
வாழ்வுடன்முன்சொல்லியதோ ராயுள் தன்னில்
மாய்ந்திடுமேழ்நால்வயது கழியுமென்று
ஊழ்விதிநூற்படியாகக் கணிதமென்றே
உரைத்தனர்களாகமநூ லோதுமேலோர். (சுகூங)

ஆரலுயிர்க்கோளாகி யருக்கனில்லம்
அமர்ந்திடவேயருக்கனும்பொன் னதனிற்சேரப்
பாருயிருக்குபயமதி லாயுள்நாதன்
பகரக்கேதுடன்கூடித் தரிக்குமாகிற்
சாருயிர்க்கட்டமமதனி லரவுசேரச்
சாருமெட்டோன்சுபருடனே மறையாதானுல்
கூரியமாதர்க்கெனவே கணிதநூலாற்
கொள்வயதைம்பத்தஞ்சில் மரணமோதே. (சுகூச)

சூரியன்மால்அட்டமத்திற் சேரவக்கோள்
தோன்றிடவேமூன்ருறிற் றனிக்குமானுல்
சீருயிரிற்பாம்புவர வுயிர்க்குநாதன்
திகழ்மதியனுகிடவே கரியன்வீட்டிற்
கூரியகேதுடன்கூடி மறையாதாகக்
குளிகனுடன்சேயவனுங் கருமன்வீடாய்ப்
பாருலகில்வருமாது தனக்குஆயுள்
பாருமெனநாற்பதஞ் சாறுமென்னே. (சுகூரு)

காரிமதியுடன்சேர்ந்து புகர்வீடேகக்
கருதுமக்கோள்மானுயிர்க்கோள் வருமெட்டோனும்
பாருயிற்குமறையாமற் கரியன்வீடால்
பகரிவற்குப்பின்பரிபாம் புடன்வந்தெய்தச்

சீருமெனவுயிரதுவே தெரிவையாகச்
சேருமதில்மாந்திவந்து தரிக்குமங்கை
கூரியதோராயுள்விதி கணிதமாகக்
குறித்தனர்முப்பத்தாறில் மரணங்காட்டும். (சுகூசு)

சூரியனுமுயிர்க்கோளா யாரலோடு
தோன்றிடங்கேந்திரமாகித் தரிக்குமானல்
காரிமனைதனிலரவு அருணனோடு
கருதிடவேகரிநீசந் தனிக்குமாகிற்
பாருயிர்க்குக்கருமமதில் மாந்தியெட்டோன்
பகரவக்கோள்சட்டாட்ட வியத்திற்போனல்
கூறினர்கள்மாதருயி ரழியுமாரல்
குறுகியநாள் திசைமுடிவில் மரணமோதே. (சுகூஎ)

வருமுயிரோன்சுபராகிக் கரியன்வீட்டில்
மறைந்திடவேகரியனுச்சந் தனிக்குமானல்
தருமுயிர்க்கேழ்தனிலரவு கருமநாதன்
சாரவவற்கேழதனில் மாந்திகேது
குறுகிடவேவுயிர்மிதுன மாகுமானற்
குலநலப்பெண்தனக்கெனவே வயதுநூலோர்
அருமறைநூற்படிவிதியா லைம்பதாயுள்
அறைந்தனர்களிதுதவரு தெனவென்றோதே. (சுகூஅ)

மாந்தியுயிர்தனிற்சேர வுயிர்க்குநாதன்
வருங்குருவாய்க் கேந்திரத்திற்புவர்களோடு
சேர்ந்திடவேஅவர்தனக்கே ழதனிற்பாம்பு
சேரவதுசுபர்வீடாய்த் தனிக்குமாகில்
தேர்ந்துயிர்க்கட்டமக்கோள னலரியில்லம்
சேரவுமேஅலரிகரி கருமநாதன்
சார்ந்திடஞ்சட்டாட்டவியந் தரிக்குமானற்
சாதகிதன்னுடவாயுள் நாற்பத்தெட்டே. (சுகூக)

அட்டமத்திற்சூரியன்சேய் கரியனென்றாய்
அமர்ந்திடவேயதற்குடையோ னருணனோடு
திட்டமுடன்கேந்திரமாய்ச் சுபர்கள்வீடாய்ச்
சேர்ந்திடவேயிவர்கள்தனைச் சுபர்கள்நோக்கா

சட்டமுடனுயிர்க்கோளன் மறையமாந்தி
சார்ந்திடவேவுயிர்தனுவாய்த் தோன்றுமானுற்
கட்டிடும்நல்மாதருக்கு வயதுமேலோர்
கருதினர்களிருபத்தில் மரணங்காட்டும். (எ0ப)

வேறு.

அட்டமந்தன்னிற்சுங்க னமர்ந்திடக்குருமாலோடு
திட்டமாயேழொன்பானிற் றிரமுடன்பவர்வந்துற்றால்
நெட்டைமால்திசையில்நாசம் நேர்ந்திடுங்கணவன்மாதோ
சட்டமாயறுபத்தேழாய்ச் சதிருடன்வயதென்றோதே. (எ0க)

ஓதிடுமுயிர்க்கோளோடு உயர்வுடன்கடுங்கோளுற்றாற்
சேதமென்றுரைத்தாரஞ்சு செப்பினர்கெணிதநூலோர்
போதவேகரிசேயுற்றாற் பொன்றிடுமதன்கீழ்பத்து
சாதகன்பலனைமேலோர் சாற்றினாரறிவினாலே. (எ0உ)

வேறு.

போக்குமதிமங்கலஞ்சூட் டிடுமெனவேகணிதர்
புகட்டினர்கள்பெலமாகப் பொருந்தியமாதருக்குத்
தீர்க்கமுடனட்டமத்தோன் சேர்ந்திடுவீடதிபன்
சேர்திசைநாள்புகரபகா ரத்தில்வருநாளிற்
றுக்கியமங்கையர்கணவன் சார்ந்திடுமேலான
தனிமுயற்சிவெகுபுகழோன் தனபதிசேத்திரனும்
பாக்கியனுமரசரின்பம் பல்சிவிகைசேரும்
பந்துஜனம்வெகுசுகவான் பகர்ந்தனர்மேலோர்கள். ()

மேல்மொழியாய்வருஞ்சிவிகை யோகமெனக்கணவன்
விளங்கிடுவன்வருமுயற்சி மேலெனவேவுரையே
மால்திசைநாள்முடிவுவரை வருமுயற்சிபெலமாய்
வந்திடுமேயின்பமென வருந்தனந்தட்டில்லான்
சீலமறைநூற்படியாய்ச் செப்பியமங்கையற்குச்
சேருமங்கலந்தீர்க்கம் செப்பினர்சாஸ்திரமாய்த்
தூலமுடன்மங்கலத்தோ டிறந்திடுமேயென்று
சொல்லினார்கள்பெலமாகத் தோன்றியமாதருக்கு. ()

கோதாய்கேளுயிர்தனக்கே மூரவுபொன்னன்
குறுகிடவேஅவர்தனக்கு நாலஞ்சேழில்
மாதேகேள்புகர்வளரப் புகருக்கெட்டோன்
வந்திடுவீடதிலுயிர்க்கு வருமெட்டாங்கோள்
வேதாகேள்தனித்திடவே உச்சமேற
விளங்குயிருக்குபயதிபன் மறையுமானுல்
கோதாய்கேளட்டமத்திற் சேருநாதன்
குறுகியநாள்திசையினிலே கணவன்சேரும். (எ௬)

சேருமெனவருங்கணவ னதிகசெல்வன்
செல்வாக்குக்கீர்த்திகளுஞ் சிறக்குங்கல்வி
பாருமெனப்பசிபொறுக்கான் பசுபாலுள்ளான்
பந்துசனச்சேர்க்கையுடன் பசித்தார்க்கன்னம்
தாருமெனச்செய்துவைப்பன் தயாளசிந்தை
தனபதிபோற்றன்பதியோ டிருந்துவாழ்ந்தே
சாருமெனமங்கலத்தோ டிறக்குமென்று
தையலற்குக்கணிதமதாற் சாற்றினுரே. (எ௦சு)

வேறு.

சந்திரனெட்டாங்கோளாய்ச் சாரிடமலரிவீடாய்
வந்திடவவற்குமூன்றேழ் வருமனையதனிற்சுங்கன்
சிந்தையாய்த்தனிக்குமாகிற் செகந்தனில்வருமாதற்கு
விந்தையாய்க்கணவன்சேரும் விதித்தனர்வருநாட்செப்பே. ()

செப்பியவுயிருக்கெட்டோன் சேர்திசையதனிற்சுங்கன்
முற்படிநாளில்வந்தால் மொழிந்தனர்மணநாளாகும்
தப்பியகணவன்யோகம் சமமதாய்வளரும்பூமி:
துப்பிதழாய்கேள்மங்கை தோன்றுமங்கலமாநாசம். (எ௦அ)

வேறு.

சதியாகவட்டமத்திற் றனித்திடவேயரவு
சாருமக்கோள்கேந்திரத்திற் றங்கிரவிபுகரும்
விதியாகவுயிர்க்கோளன் நீசமதாய்த்தரிக்க
விளங்கியகோளுபயமதிற் பவருடனென்றுக
மதியேழிற்கரிகருமத் தினில்வளரமாது
மங்களநாள்மாதுர்வழி வருங்கணவன்தனவான்
துதியாகப்புகர்திசையிற் றோன்றியநாளதனிற்
சுகமணம்வந்திடுமெனச்சொல் தோசைமியிலாளே. ()

மாதரெனவருங்கணவன் வருநிதிசேத்திரனாய்
வகுத்தனர்கள் கணிதமொழிப் படியெனவென்றுரைக்க
ஓதிடுவன் அரவுவருந் திசைதனதிற்கணவன்
ஒழிந்திடுவனிதுமொழிக ளோதினர்கள்பெரியோர்
நீதியுடன்வருமரவு திசைதனதில்மரணம்
நிகூயமென்றோதினர்கள் நேர்ந்திடுமாதருக்கு
வேதமதாயட்டமத்தில் மேவிடும்பொன்திங்கள் [ள்.
விளங்குமிக்கோள்தரித்திடவே விரும்பியபெண்மணநா

நாளெனவேதோன்றியபெண் தன்வயதுநாலோன்
நல்கியநாள்ராசமணம் நாடிடுவனதிகன்
சூழுறவேவருங்கணவன் தோன்றியபாக்கியனும்
தோகையரசாளுவதென் தொல்புவிவந்திடுமாம்
நீளுமணந்தோன்றியபெண் தந்தைநிதியோனாய்
நேர்ந்திடுவள்பாக்கியசேத் திரனாகவறைய
வாழ்வுடனேதோன்றியபெண் வரும்வயதுயெட்டேழ்
வருந்துகையில்ரெட்டியென மாய்ந்திடும்பெண்மாதே. ()

அட்டமத்தில்மதிதனிக்க அதற்குநாதன்
ஆரலுடன்மாலுயிர்க்கோள் கரியனோடு
திட்டமுடன்மறைந்திடா துயிரிற்பாம்பு
சேருயிருங்கரியாக வேழிலேறச்
சட்டமுடன்புகருடனே மறையனென்றாய்த்
தரித்திடவேயுயிர்மதிக்கு மறையாதானால்
கட்டிடுமால்மாதருக்குக் கணவன்சேரும்
கருதுமெனவீராறு உபயமோதே. (எகஉ)

ஓதுமெனஅட்டமத்தோன் திசைமுற்பாதி
உதவியநாள்பாதியின்மேற் கணவனாசம்
சேதமதாயதுமுதலே பிடையேற்குஞ்
செப்பியமாதர்க்கெனவே கணிதவாய்மை
வேதமாய்த்தோன்றுயிர்கள் மரணமென்று
விதித்தனர்முப்பதுநாலு வயதுசெப்பு
ஓதினர்களிதுதவறு தாகுமென்று
உலகதனிற்கணிதமொழிப் படியென்றோதே. (எகஙு)

மாதேகேள்வருங்கணவன் றனக்குப்பங்கம்
வகுத்தனர்கள்வஞ்சகனும் வரினு மாக
நீதியுடன்மனதுகஷ்டம் பொருகளீயான்
நேர்மொழிசொல்லானெனவே கணிதமோது
வேதமுடனுயிர்தனக்குக் கருமம்பாவர்
விளங்குயிர்க்குநாலதனிற் பவர்வந்துற்றால்
ஓதுமெனவிருபதுநால் வயதுதன்னில்
ஒழித்திடுமேமங்கலத்தோ டிறக்குமென்றே. (எகச)

காரியுடனுயிர்தனக்குப் பன்னோன்கோளுங்
கருதுமிக்கோள்மதிகேந்த்ரம் வளரநீசம்
கூரியதோர்சேய்புகரோன் வளருகேந்த்ரங்
குறுகிடவேமூன்றினுக்கோள் நீசமானால்
சீருடன்றோன்றியமாத ருடன்வந்தெய்துஞ்
செப்பியபெண்ணாசமெனக் கணிதமோது
வீரியமாயுடன்வரினுந் துணையுநாசம்
விளங்கியபெண்ணேகமெனக் கணிதங்கூறே. (எகரு)

வேறு.

மாந்தியுமூன்றிற்சேர வருமதற்குடையநாதன்
சார்ந்திடமால்வீடாகித் தனித்திடப்பன்னோனுட்சி
சேர்ந்துயிர்தனக்கீராறிற் றிகழ்மதிமால்சேயுற்றாற்
கூந்தலாளுடன் வந்தெய்துங் கோதையாம்பிறவிநாசம். (எகசு)

வேறு.

மதியுடனேகாரியுடன் மூன்றின்கோளன்
வருமிடமும்பவர்வீடாய் மறையாதாகிற்
சதியுடனேவுயிர்க்காறிற் குருதிமேவி
தரித்திடவேவுடன்கருங்கோள் வளருமாகிற்
பதிதனிலேவருமாது துணையென்றோதப்
பகர்ந்தனர்கள்மூன்றுடன்பெண் சேயாறுகும்
விதியுடனேவருமாது சேதம்ரெண்டு
விதித்தனர்கள்சேயொழியு மஞ்சென்றோதே. (எகஎ)

புந்தியுடன்சேய்பருதி பன்னென்கோளும்
பொருந்துமிடஞ்சுபர்வீடாய் சுபர்நோக்கில்லா
சிந்தையுடன்மூன்றினுக்கோள் வரினுமில்லஞ்
சேய்கரிமால்சூரியன்வீ டாகவந்தால்
விந்தையுடன்தோன்றிடுமா தருக்குமேலோர்
விதியுடனேஆகமநூற் படியாற்செப்ப
வந்திடுமேவுடன்வரினுந் துணைமாதெல்லாம்
மாய்ந்திடுமேதப்பாது கணிதமாய்ந்தோர். (எகஅ)

மாந்தியுடன்பாம்புமதி பன்னென்றன்னில்
வந்திடவேஅன்னேனுங் குருபானேடு
சார்ந்துயிர்க்குமூன்றதனிற் றரிக்கவிக்கோள்
தரித்திடும்வீடதிபனுமே மறையாதானாற்
சேர்ந்திடும்பெண்தனக்கெனவே யுடன்வந்தெய்துஞ்
சேருபயமாதெனவே தரணிவாழும்
சோர்ந்துயிர்க்குமூன்றுங்கோள் நீசம்வந்தால்
துஞ்சிடும்பெண்தனக்கெனவே முந்தியோதே. (எகக)

பெண்கள் ருதுஜாதகம்.

வேறு.

செய்யபெண்சாதகந்தான் செப்பிடலக்கினத்தில்
வெய்யவன்செவ்வாய்நிற்கில் விதவைதாரித்ரியாவள்
துய்யபொன்புந்திவெள்ளி தொடர்ந்துறில்விதவையென்பர்
தையலேயிராகுநிற்கிற் றநயரைப்பெற்றிழப்பள். (எஉ0)

உகந்தலக்கினத்திற்புந்தி யுச்சனுங்கூடிநிற்கிற்
சுகந்தனமுடையாளாகுஞ் சொல்லியபாவர்தானே
தகவுளவுச்சமாட்சி சார்ந்துநட்பாய்நின்றாலும்
பகருமோர்தோஷமில்லை பாவையர்தனக்குத்தானே. (எஉக)

வேறு.

இலக்கினஞ்சனியின் வீடதாய்வெள்ளி யிருஞ்சனிகூடியே நிற்கிற், பலப்படுமைந்திற் பாவரேயிருக்கப் பார்க்கினுமலடியென்றுரைப்பர், பெலப்படுந்தனுசு மீனமேயுதிக்கப் பெட்புறுகுருவிருந்தாக்காற், சொலப்படும்புத்ர பவுத்திரசெல்வஞ் சொந்தமாயனுபவிப்பளே. (எஉஉ)

வேறு.

கடகம்வின்மீனுதய மாகின்மைந்தர்க்காதல்
காதலனுக்காதல்மனத் தாபம்வருஞ்சிங்கம்
இடபம்விருச்சிகங்கன்னி யிலக்கினமேயாக
ஏற்றுமைந்திலிந்திருக்கி லற்பப்புத்ராளாம்
படருமொன்றேடேழெட்டிற் பாக்கியத்திற்பாவர்
பதிந்திருக்கிலெந்நேர முந்துக்கபலனும்
அடருமிந்தத்தானத்திற் சுபர்நிற்கின்மானே
அனுதினமுஞ்சந்தோஷ பலனுகுமென்னே. (எஉக)

வேறு.

அறைவிலக்கினத்தோன்றன்னையறிஞன்பொன்வெள்ளிபார்க்கிற்
குறைவிலாச்சுகமும்பொன்னுங் குவிந்திடுங்கோதைமார்க்கு
நிறைவிலக்கினத்திற்காரி நின்றிடிற்றரித்ரியாவள்
பிறைவிதுதானேநிற்கிற் பேதையற்பாயுளென்பர். (எஉச)

கிட்டுறுமுதயம்பாவக் கிரகங்களிருக்குங்காலை
தொட்டுறுநட்போடாட்சி சொலுமுச்சத்திருக்குமேனும்
மட்டுறுந்தோஷமில்லை வருமிரண்டாமிடத்திற்
றட்டுறுஞ்சனிசேய்ராகு சண்டனுந்தரித்ரியாமே. (எஉரு)

வெள்ளிபொன்புந்திவாக்கில் மேவிடிற்றனத்தையுள்ளாள்
பிள்ளைவெண்மதியும்நிற்கிற் பெண்ணினைப்பெறுவாளன்பாய்
வள்ளியமூன்றிற்பானு மதிபுதன்புகர்பொன்நிற்கிற்
றள்ளொணாப்பிள்ளையுண்டாந் தானியவிருத்தியாமே. (எஉசு)

ஒருமூன்றிற்சனிசேய்ராகு முறைந்திடிற்றுணைவரில்லை
அருநாலிற்கதிரோன்நிற்கி லற்பமாஞ்சுகமென்றேது
பொருதுசேய்நிற்கிலற்பப் புத்திராள்தாய்க்குத்தோஷம்
சருவியராகுநிற்கிற் றத்துண்டாமென்றுசொல்லே. (எஉஎ)

கூறியநாலிற்புந்தி குருவெள்ளிநிற்கிலேதான்
தேறியமகிழ்ச்சியோடு தேகவாரோக்யமுண்டாம்
மீறியவைந்திற்சேயும் வெயிலுறிற்பெற்றிழப்பள்
மாறியேபுந்திநிற்கின் மைந்தருந்தனமுமுண்டே. (எஉஅ)

அஞ்சினிற்கருங்கோள்காரி யமர்ந்திடின்மலடியாவள்
பிஞ்சுவெண்மதியும்நிற்கிற் பெண்தனைப்பெறுவளென்பர்
தஞ்சமாமாறிற்பானு சனிசெவ்வாய்தமமுஞ்சுங்கன்
வஞ்சமில்குருவும்நிற்கில் மைந்தரும்பகையுண்டாமே. (எஉகூ)

அம்புலியாறில்நிற்கி லழகுண்டாம்புந்திநிற்கிற்
றெம்புடனழிம்புண்டாகுஞ் சிகிநிற்கிற்றனமுமுண்டாம்
நம்பியவேழிற்காரி நண்ணில்வங்கொலையாற்சாவள்
வெம்பியசெவ்வாய்நிற்கில் விதவையென்றுரைப்பர்மாதே. ()

நீடியவேழிற்பொன்னன் நின்றிடச்சிறையிருப்பள்
சாடியபுந்திநிற்கிற் றனச்செலவிராகுநிற்கில்
நாடியபந்துநாசம் நண்ணியகதிரோன்நிற்கிற்
றேடியநோயிலாழ்வள் சேலரிக்கண்ணினளே. (எஙக)

உன்னும்வெண்மதியும்வெள்ளி யொற்றுசத்தமத்தில்நிற்கில்
மன்னுதேசாந்திரத்தில் மரணமேயாவளென்பர்
மின்னுறுமெட்டிற்புந்தி வேந்தனுமுவந்துநிற்கிற்
பன்னுறுகணவனோடே பகரனுமரணஞ்செய்வள். (எஙஉ)

வேறு.

பஞ்சமத்திற்குருவிருக்கவக்கோள்தான்கரியாய்ப்பாலனுயிர்தனி
லரவுதுளிகனுச்சமாக, விஞ்சையுடன்மாலவனும் இரவிபுகழுடனே
விளங்கியபொன்னவன்றனக்குஅட்டமத்தில்மறையில், தஞ்சமுடன்
கருமமதிற்சசிகுருதியிருந்தால்தரணிதனிற் புத்திரர்கள்தோன்றியே
மறிக்கும், விஞ்சையுடன்பிதிர்சாபமரவதோஷந்தான் விதித்தனர்கள்
நிவர்த்தியினுல்விளங்கிவரும்பின்னுல். (சகஅ)

வேறு.

பஞ்சமாதிபனுங்காரியாயுயிர்க்குப்பத்தினில்மருவிடவரினும்
விஞ்சையாயொன்பான்மதிமகனுகிவிளங்கிடுமிரவியுங்கூடித் [ந்தால்
தஞ்சமாயுயிர்க்குமறைந்திடச்செவ்வாய்தனித்துமேஐந்தினிற்சார்

குஞ்சரம்போலப்புதல்வரொன்றுடனேகோதையர்தோன்றியேமறிக்கும். (சகக)

புத்திரரனேகருரைத்தனர்பெரியோர்புனிதமாயுதித்திடுஞ்சேய்க்குச்
சத்தியாய்நாகதோஷமென்றுரைத்தாற்சதிருடனன்பதோர்நாலில்
எத்திசையெல்லாம்புகழ்ந்திடும்படியேஇனிதுளபுத்திரர்கிடைக்கும்
முத்தியாம்நாகதோஷமேதீர்க்கமோழிந்தனர்மறைபவர்நூலால். ()

அரவுடன்மாந்திமந்தனுமுயிரிலரிவையிற்புகருடன்ரவியும்
துரையுடன்மாலுங்கூடியேமறையிற்சோர்விலைப்புத்திரதோஷம்
நிறையுடன்மாதாஅந்தணர்தெய்வம்நேசமாய்ப்பூசிப்பதோடு
விரைவுடனரவுசாபமேதீர்த்தால்விளங்கிடும்பாலருண்டாகும். (சஉக)

வேறு.

பஞ்சமத்தில்மாந்தியுடன்புகரேகூடிப்பதிந்திடவேமதிதனக்குப்
பத்திற்சேர, விஞ்சைபெறுமக்கோள்தான்காரியாகிவிளங்கிடவே
புகர்வீடாய்மதிகேதோடு, தஞ்சமுடனுயிர்லாபங் குருவேசேர்ந்தாற்
றரணிதனிற்புத்திரர்களுண்டாம்பின்னுங்,கொஞ்சமுடனழிந்துவிடுந்
தோஷந்தீர்த்தாற்குழந்தைகளுமழியாமற்குலாவிவாழ்வர். (சஉஉ)

வேறு.

குருவுடனரவும்பிருகுடன்வீட்டிற்குறுகியேமறைந்திடவரினும்
நிருதியிலருணன்மாலுடன்கூடிநின்றிடமறைந்திடவரினும்
குருதியுமுயிர்க்குஅஞ்சினிற்றோன்றக்குளிகனுமதியுடனுயிரில்
வருவதுபுதல்வர்தனக்குமேதோஷம்வழுத்தினர்கணிதநூல்விதியே.()

பஞ்சமத்தோன்மாந்தியுடனுயிர்க்குநாலிற்பதிந்திடவேகுருசெவ்
வாய்கேதுவோடு,விஞ்சையுடன்மதிக்கிரண்டிலிருக்கவக்கோள்மேவிட
வேயிரவிபுகர்மாலோன்வீட்டிற், றஞ்சமுடன்குருவீட்டிலரவிரு
க்கச்சாற்றலாம்புத்திரர்கள்தரணிமீதிற், கொஞ்சமுடனிருந்தாலுமர
ணமாகுங்கோதையர்களிரண்டெனவேகுறித்தார்மேலோர். (சஉச)

வேறு.

பஞ்சமாதிபனும்பரிதியுங்கூடிப்பாவையேயுயிர்க்குநாலதனில்
விஞ்சையாயிருந்துகருமனும்ப்புகரும்விளங்கிடமேடமாய்ச்சேர்ந்து
தஞ்சமரியமாலோன்சேயுடன்கூடித்தரித்திடவுயிர்க்குஅஞ்சதனிற்
கொஞ்சமாய்ப்புதல்வர்தோன்றியே அழியுங்கோதையர்பல
மெனக்கூறே. (சஉகு)

வேறு.

பஞ்சமத்திற்புகரிருந்து அக்கோள் தான்குருவாய்ப்பாலனுயிர்க்கிர
ண்டினிலேபதிந்திடவேவரினுப், தஞ்சமுடனரவுடனேமாந்தியுந்தான்
கூடிச்சந்திரனுக்கஞ்சதனிற்றரித்திடச்சேய்மாலும், விஞ்சையுடனிர
வியுமேயக்கோளோடேகி விளங்கிடவேவருஞ்சேய்க்குவிதிக்கலாங்,
கேளு,கொஞ்சமாய்ப்புதல்வரும்பின்றோன்றிடவேவருமால்கோதைய
ரைப்பெற்றிழப்பன்கும்பனருளாலே. (சஉஉ)

வேறு.

புத்திரதானநாதன்பொன்னனுயுயிர்க்கிரண்டிற்
பத்தியாமரவுமாந்திபதிந்திடப்பிறந்தசேய்க்குப்
புத்திரதோஷமுண்டாம்புகழ்ந்தனர்மறையோனுலும்
அத்தியிற்றொடர்ந்தபாவம்அரவெனமொழிந்தார்மேலோர். (சஉஎ)

வேறு.

பஞ்சமத்திலரவிருக்கவக்கோள்தான்கரியாய்ப்பரிதிவீடதிற்கேது
குளிகனொடுங்கூடித், தஞ்சமுடனுயிர்தனக்குலாபமதிற்சேரச்சந்
திரனுங்குருவுடனேமறைந்திடச்சேய்பார்க்க, விஞ்சையுடன்மதிமக
ன்றன்வீடதனிற்செல்வாய் விளங்கிடவேவருமுயிரில்மாலோன்வந்
துற்றால், கொஞ்சமதாய்ப்புதல்வரொன்றுதோன்றிடவேவருகுங்
கோதையரும்பிலக்கவகைகுறித்தவர்கள்பெரியோர். (சஉஅ)

வேறு.

ஆரவுமுயிரிலாக ஆறின்கோளாகினுலும்
பாரமாம்பாம்புஈரா றெட்டினிற்பதிந்திட்டாலும்
நேருமாஞ்செல்வாய்விட்டு நெறியரவேற்குங்காலம்
கூறுமாமணிவியல்லாற் குழந்தைக்குந்தோஷஞ்செப்பே. (சஉகூ)

செப்பிடுமணிவிதோஷஞ் சேர்வதுமோராண்டுக்குள்
*ஒப்பிடுவொருவன்வைத்து ஒருவனேயிதுபோலேற்கிற்
றப்பிடுமாதுமன்னன் தானத்தோனொருவனுகச்
செப்பிடுங்குருவாயஞ்சிற் சேரமுன்றோஷம்போமால். (சஙூ)

இருவர்தஞ் சாதகத்துக் கேழிடங்காரகற்குத்
தருபலமாகத்தானே தனதஷ்டவர்க்கமேழிற்
பெருபலமாகுமஞ்சிற் பொன்னவன்றனைப்பேதிக்கிற்
பொருளுடனுயுட்டூர்க்கம் புதல்வருந்தீர்க்கமாதே. (சஙக)

தீர்க்கமாங்கந்தன்றன்னைத் திசைவிடுங்காலமுன்னே
சேர்க்கையாய்ரெண்டுபெண்டு சென்மநாடோறுங்கண்டு
ஆர்க்கமாயன்னதானம் அபிஷேகம்நெய்பாலோடு
தீர்க்கமாய்க்கொடுப்பிராகிற் றீர்ந்திடுந்தோஷமாதே. (சஙஉ)

புத்திரதானநாதன் புகர்கதிர்மதிசேயான
இத்தனைபேரைப்பொன்ன னேர்மையாய்நோக்காஞகிற்
புத்திரர்நாலெட்டுக்குட் பிறந்துதான்நாசமாகுஞ்
சத்தியம்பின்னுற்புத்ரர் தழைத்திடுந்தீர்க்கந்தானே. (சஙங)

புத்திரத்தானநாதன் புகர்வீட்டிற்கேதோடேக
இத்தலத்தோரைப்பொன்ன னிசைந்துமேநோக்கமாலுஞ்
சத்தியாய்க்கூடச்செவ்வாய் தரிததிடவஞ்சாய்வாழ
புத்திரர்நாலிரண்டிற் பிறந்திடுந்தீர்க்கந்தானே. (சஙச)

வேறு.

பஞ்சமாதிபனுங்காரியேயாகிப் பகலவன்றனக்குவழுதனிற்
றஞ்சமாய்க்குருவுமதியுடன்கூடித் தண்டினிற்சேய்குடம்பார்க்க
விஞ்சையாயுயிர்க்குக்கருமகேந்திரத்தில் விளங்கியகேதுவந்துற்றுற்
கொஞ்சமாய்ப்புதல்வர்தோன்றிடுஞ்சேய்க்குக்குமரவேல்தோஷமென்
றுரையே. (சஙஞ)

வேறு.

பஞ்சமத்திற்பரிதிமதியிருக்கவக்கோள்பதிந்திடவேகுசன்வீடாய்
மறையக்காரி, விஞ்சையுடன்புகரதனைப்பார்க்கச்செம்பொன்விளங்
கிடவேமதிவிட்டில்மாந்தியோடுந், தஞ்சமுடன்சனிசெவ்வாய்குரு
வைநோக்கத்தனிததிடவேலக்கினத்திற்கேதுசேர்ந்தாற், கொஞ்சிட
வேமதலைதனைப் பெற்றிழப்பன் குமரனருள் சாருமெனக்குறித்தார்
மேலோர். (சஙசு)

மேலவர்மொழியானுரைத்திடுஞ்சேய்க்குவேதியன்றனக்குஐந்தினிலே, பாலகன்றனநாதனுமறைந்தாற்பகரலாம்புத்திரதோஷம் கோலமாய்ப்பெரியோரரவுதன்தோஷங்குறித்தனர்மறையவர்மொழியாற், றாலமாய்வரினுஞ் சாபமேதீர்த்தாற் சுகம்பெருமைந்தருண்டாமே. (சகஎ)

வாழ்வெனும்பெரியோர்சாபமேதீர்க்கவகையுட்னமொழிந்தனர்நூலால்
தாழ்வில்லாவாரம்பிருகுதன்னளிற்றையலர்வேதியன்றனக்கு
மீளவேயன்னவஸ்திரமுதலாய்விளங்கிடவனுதினங்கொடுத்து
வாழவேதோஷந்தீரவேபெரியோர்மந்திரசாந்தியாற்போமே. (சகஅ)

போமெனுமரவுதோசமேதீர்த்துப்புனிதமாய்ச்சாடாட்சரந்தன்னை
நேமமாயெழுதிக்கட்டியேசெபித்தால்நீங்கிடும்பாவமேதீரும்
நாமமாய்க்கீர்த்திமைந்தரொன்றுகநன்மையாய்வாழ்ந்திடவல்லன்
தூமையாய்ப்புத்திவித்தைமூன்றுகத்துலங்கிடவல்லவனுவன். (ஙகக)

வேறு.

மந்தனுமரவுமொன்றாய்மந்திரிவீட்டிற்சேர
விந்தையாய்க்குசனுங்கேதுவிளங்கிடநோக்கவைந்தைச்
சுந்தரமறையோன்காரிவீட்டினிற்சோமனோடே
வந்திடப்பிறந்தசேய்க்குவகுத்தனர்புத்ரதோஷம். (சசஅ)

குருவுடன்மதியுங்காரிவீட்டினிலிருக்கக்கர்மன்
பரிதியாய்க்குருவைநோக்கப்பாலகன்பிறந்திறக்குஞ்
சுருதியாய்மறையோனளிற்சோமனுமுன்னோன்வந்தாற்
கருதியதோஷந்தீர்க்கக்காட்டினர்கணிதநூலோர். (சசக)

புத்திரதானநாதன்பொன்னனுய்க்காரிவீட்டில்
மித்திரருடனேகூடிமிகுந்திடவொன்பானோடு
புத்திரர்நாலெட்டுக்குள்பூத்திடாதெனவேயென்றுஞ்
சத்தியமாகநாகதோஷத்தாற்சாற்றினரே. (சசஉ)

உயிரினில்மாந்திநிற்கஒன்பதிலேழெட்டோனும்
நிருதியிற்பூமன்கேதுநின்றிடிற்பிரேதசாபங்
கருதியராகுகாரிகனகனில்லதனிற்சேர்ந்தால்
சுருதியாய்மறையோன்சாபந்தோஷமேவகுத்தார்மேலோர். (சசங)

வகுத்திடுஞ்சாபமெல்லாம்வகையுடன்நீர்ப்பானுகில்
தொகுத்திடும்புதல்வர்தோன்றுஞ்சொல்லியகுமரனுலே
மிகுத்திடுஞ்செல்வனுகவேண்டியகருமமெல்லாம்
பதுத்திடுமுன்னுட்செய்கபாவத்தால்வந்ததென்றூர். (சசச)

பாபமேபதிகமாகப்பகர்ந்தனர்பெரியோர்தாமும்
நேமமாய்மறையோன்சாபம்நீக்கியேசற்பசாந்தி
ஆகமத்துடனேதீர்த்துஅனுதினங்குமரன்பாதந்
தாகமாய்ப்பூசைசெய்தால்தவிர்ந்திடும்வினைகளெல்லாம். (சசரு)

வினைகளேதீர்க்கவின்னம்விளம்புவேனுண்மையாகப்
புனைகலிலிங்கம்வைத்துப்பூசிப்பாயிரைந்தாகத
துணையெனச்சர்ப்பசாந்திசொல்மனையாளோடொத்து
நனைமலர்த்திருவேசெய்பநாசமாந்தோஷந்தானே. (சசஙு)

வேறு.

பஞ்சமாதிபனுங்காரியாயுபிர்க்குப்பதிந்திடவிரண்டினிற்றோன்ற
விஞ்சையாயொன்பான்மதிமகனுகிவிளங்கிடஇரவியுமொன்றுய்த்
தஞ்சமாய்க்குருவுங்கேதுவுங்கூடித்தரித்திடமதிக்குமுன்றினிலே
வஞ்சியர்தானநாதனுமுயிரில்வந்திடப்பிறந்திடுஞ்சேய்க்கு. (சசஎ)

பிறந்திடுஞ்சேய்க்குஉயிரினிலரவும்பெருகிடவைந்தினிற்கர்மன்,
நிறைந்திடவரினும்யோகமேபுடையனிகழ்த்தினுர்புத்திரன்றனக்குக்
குறைந்திடாத்தோஷம்வகுத்தனர்பெரியோர்கோதையர்தோன்றிடு
முன்னே,மறைந்திடப்புதல்வர்தோன்றிடும்பினனுல்வயதுமுப்பத்து
மேலிரண்டில். (சசஅ)

குருவுடன்கேதுபரிதிசேய்வீட்டிற்குறுகிடச்சேயுமேபார்க்கக்
கருதியகாரிபாவர்வீடாகக்கருமனுமைந்தினிற்றோன்றில்
வருவதுபுதல்வர்தனக்குமேதோஷமவந்திடக்கணித்தனர்பெரியோர்
சுருதியாய்மறையோனரவுடன்றெய்வந் தோகையர்சாபமேசொன்
னேம். (சசகூ)

பஞ்சமத்திற்பரிதிபுகர்செவ்வாய்கூடிப்பதிந்திடவேயுயிர்தனக்கு
நாவிற்றுனே, விஞ்சையுடனென்பதின்கோள்மாலோனுடுவிளங்கி
டவேமதிதனக்குலாபஞ்சேரில், தஞ்சமுடனுபிரோனுங்குருவிடற்

ருற்சாற்றலாமவர்பலன்கள்தரணிமீதிற், கொஞ்சமுடன்புதல்வரும்
பின்றோன்றுமல்லாற்கோதையர்களதிகமெனக்குறித்தார்மேலோர்.

பஞ்சமாதிபனுங்காரிவீடதனிற்பதிந்திடச்சோமனுங்கேதும்
விஞ்சையாயொன்பான்மதிமகனுகிவிளங்கியஇரவியுங்கூடித்
தஞ்சமாயுயிர்க்குக்கேந்திரந்தோன்றிச்சாமியுமறைந்திடவரினுங்
கொஞ்சமாய்ப்புதல்வரிறந்திடாதிருக்குங்குறித்தனர்நாலெட்டின்மேலாய். (௪௫)

சந்திரன்பரிதியிறையவன்காரிசாரிடம்ஆடுதேள்கோலூர்ம்
வந்திடக்கன்னிமிதுனத்திலாகவளர்தனுவினிற்புகரரவும்
விந்தையாயிருக்கிற்புதல்வர்களெல்லாம் விளங்கிடாதெனவுரைத்தனர்கள், சிந்தையாய்ச்சிசுக்கள்தோன்றிடில்நாசஞ்சேதமில்லொன்றுடன்றிரமாம். (௪௬)

பொன்னவன்குருதிமதிக்குஅட்டமத்திற்பொருந்திடக்குளிகனும்பார்க்கிற், றன்னவன்காரியுயிர்ககுமேமறையிற்சந்ததிதோஷமென்றுரைத்தார், முன்னநூலாய்ந்தோர்மொழிந்தனர்சாபம்மொய்குழற்றோஷத்தாலென்றும், பின்னையும்பழையோரறைந்தனர்தெய்வம்பிசகியகர்மத்தால்நாசம். (௪௭)

பஞ்சமாதிபனும்பரிதியுமுயிர்க்குப்பத்தினில்மருவிடவுயிரோன்
விஞ்சையாங்குருவாயுயிரினிலாட்சிவிளங்கிடவட்டமன்பார்க்கத்
தஞ்சமாயுயிர்க்குஐந்தினிலரவுந்தரித்திடக்கருமனும்பாக்யங் {கூறே.
கொஞ்சமாய்ப்புதல்வர்தோன்றியேமறையுங்கோதையர்பலமெனக்

புத்திரத்தானமதனிலேயுயிரோன்பூமனுயிருந்திடக்குருவுஞ்
சத்துருதானவீட்டிலேமறையிற்சந்திரன்றனக்குமப்படியே
இத்தலத்தமர்ந்தோன்புகருடன்கேதுஇணங்கியேமூன்றினில்வரினும்
சித்தமாய்க்குருவீடதனிலேமாந்திசேர்ந்திடிற்புதல்வர்கள்தோஷம்.

வேறு.

பஞ்சமத்திற்பரிதிபுகர்மாலோனோடுபதிந்திடவேயக்கோள்தான்புகர்வீடாகித், தஞ்சமுடனொன்பதின்கோளரவுமொன்றாய்த் தரித்திடவேமதிதனக்குராருனல், விஞ்சையுடன்மதிக்கிரண்டிலாறோன்மேவ விளங்கிவருமுயிர்தனிலேமாந்திநிற்கக், கொஞ்சிடவேஉருந்தாயார்தோஷத்தாலுங்குறித்தரவவிஷத்தாலுமைந்தர்சாமே.(௪௮)

வேறு.

புத்திரத்தானநர்தன்பொன்னனுய்ப்புகர்வீடேகிச்
சத்துருபார்க்கவந்தத்தானத்தைச்செவ்வாய்நோக்கப்
பத்தியபிதிர்சாபத்தாற்பாலகன்றனக்குத்தோஷம்
புத்திரர்மிகவேதோன்றிப்போய்விடும்பூர்வசாபம். (சருள)

பூருவசத்துருக்கள்புண்ணியமறையோர்தேவர்
மீறியதோசத்தாலுமிக்கவேபுதல்வர்தோன்றிப்
பாரினில்மரணமாகும்பாவையர்பிறந்திறக்கும்
நாரியர்மனைவியற்கும்நலமிலாரோகமாமே. (சருஅ)

தோசமேமிகுதியாகத்தோன்றியசாதகற்கு
வாசனுமுயிர்க்குள்ளோனும்மாந்திபான்புகர்மாலோடு
பாசமாயைந்திற்றேன்றப்பகர்ந்தனர்சர்ப்பசாந்தி
ஆசையாய்த்தீர்ப்பானுகிலமர்ந்திடுந்தோஷம்போமே. (சருக)

வேறு.

பஞ்சமாதிபனுங்காரியாயரவம்பற்றிடினுயிர்க்குஎழதனில்
விஞ்சையாயேழோன்பொன்னவனுகிவிளங்கிடவஞ்சினில்மாறத்
தஞ்சமாய்க்கர்மமதனிலேசுங்கன்றனித்திடமதிமகன்மறையில் [றே
கொஞ்சமும்புதல்வர்பிறந்திடாரெனவே கோதையரிரண்டெனக்கூ.

கோதையேமனைவியிரண்டெனவுரைத்தார்கொடியசேய்மதிக்கு
ஏழதனிற், பாதகமானகேதுவேயுயிரிற்பதிந்திடக்கர்மத்திற்புகரால்,
வேகமாய்ப்புகர்நாள் திசையினில்முயற்சிவேண்டிடுங் களத்திரமுத
லாய், வாதையாந்தாசிவிஷபத்தாலதிகமங்கையர்போகமேகுறையும்.

பஞ்சமாதிபனும்பொன்னவனுகிப்பதிந்திடினுயிர்க்குமேகர்மம்
விஞ்சையாயிருக்கவொன்பதின்கோளன்விரையமாய்மறைந்திடநீசந்
தஞ்சமாய்க்குருவைச்சனியுமேநோக்கத்தனித்திடப்பரிதியுமாட்சி
சிங்கமாயுயிரிற்சோந்திடிற்பாலன்சேதமாங்கோதையர்திரமே.(சகூஉ)

வேறு.

அஞ்சினிற்பரிதிசுங்கனுஞ்செவ்வாயமர்ந்திடவுயிர்க்கிரண்டினிலே,
மிஞ்சிடக்குளிகன் வியாழனும்புதனும் வெள்ளிவீடதனிலேபோக,

வஞ்சியர் தானமதனிலேயரவுவர் திடப்பிறந்தசாதகற்குக், கொஞ்
சிடப்புதல்வர் தனக்குமேதோஷங்குறித்தனர்பலமெனக்கூறே. ()

வேறு.

பஞ்சமத்திலுயிரோனும்புகர்வீடாகிப்பதிந்திடவேயக்கோள்
தான்மறையாதன்னில், விஞ்சையுடன்பத்துண்டயோன் ஆட்சிதன்னி
ல்விளங்கிடவேஅட்டமத்தோனரவுங்கூடிற், றஞ்சமுடன்லாபமதிற்
குளிகனின்றுதனித்திடவேபஞ்சமத்தைச்சார்ந்துபார்க்கிற், கொ
ஞ்சிடவேவருங்குழவிதனக்குத்தோஷங் குறித்தனர்நள்நிவிர்த்தியி
னற்குணமாம்பாலன். (சகூச)

பாலகனுந்தோன்றிவிடுங்குருநாள்வந்தால்பாக்கியங்கள்மிகுதியு
டன்பலிதமாகுங், கோலமுடன்வருந்தனங்களரசர்நோக்கங்குறித்த
வபிமானமுடன்கோதைபோகம், சாலமுடன்விலைமாதர்தயவுக்கன்ப
ன்சாற்றினேங்கணிதநூலதனுற்றனே, மாலவனுள்குருதிசையிற்
கனகமானவாகனமும்யோகமுடன்வளருமாதே. (சகூரு)

வேறு.

பாலகன்றனக்குஅரவுநாளதனிற்பலித்திடுமரவினிற்குருநாள்
யேலவேவரினும்ஞானமாம்வேடமிசைந்திடுமென்றனர்பெரியோர்
தூலமாயெங்குந்திரிந்திடவல்லன்சோர்விலாயாத்திரைமுடிப்பன்
கோலமாய்ராசபூசிதமுடனேகுறைவறத்திரிந்தலைந்திடுவன். (சகூகூ)

பஞ்சமாதிபனுமரவுடன்புகர்வீடதனிலேபதிந்திடவரினும்
விஞ்சையாமிலாபமதனிலேகாரிவினங்கியேபார்த்திடவஞ்சைத்
தஞ்சமாய்ச்செவ்வாயவனுமேபார்க்கிற்றரணியிற்புத்திரதோஷம்
மிஞ்சியேவரினும்பிதிரிடசாபம்விரைவுடன்றீர்த்திடிற்போமே. ()

வேறு.

பஞ்சமாதிபனும்பத்திற்பதிந்திடவுச்சகேந்த்ரந்
தஞ்சமாய்க்கருமனேமோன்றனித்திடவேழிலாட்சி
விஞ்சையாயுயிரில்மாந்திவிளங்கியசாதகற்குக்
கொஞ்சியபுதல்வர்தோன்றுங்குளிர்மதிதோஷந்தீர்ந்தால். (சகூஅ)

தோசமுமிகுதியாகுஞ்சொல்லியமனைவிக்கேழிற்
பாசமாய்க்காரிகிற்கப்பற்றியேகுடும்பஞ்செல்வாய்

வாசமாயி ருக்கவாக்கில்மந்தனைப்பரிதிபார்க்கில்
நாசமாங்கற்பந்தோன் றிநாற்பதுநாளிற்போகும். (சகூகூ)

போகுமேமனைவியர்க்குப்பொருந்தியவுந்தியின்கீழ்
ஆகுமேசுரோணிதத்தாலணுகியவுபாதியாலே
சாகுமேகற்பமெல்லாந்தரித்திடும்சிகிதோஷத்தால்
வேகுமேகிருமியாலேவிநித்தனர்புத்ரதோஷம். (சஎ0)

தோஷமேதீர்க்கவென்றுற்சோமநாள்விரதநோம்பும்
நேகமாயிருந்துகொண்டுநிச்சயமசுவசாந்தி
வாசமாய்ச்செய்யமூன்றுவருஷத்திற்குழவிதோன்றுந்
தேசமேபுகழத்தீர்க்கஞ்செப்பினர்தமிழினாலே. (சஎக)

வேறு.

மகத்தானத்துக்குடையோன்புகர்வருங்காரியின்வீடாய்
மிகத்தான்குருமகத்தானத்தைமிகவுஞ்சனிசெவ்வாய்
சுகத்தானருன்பெறவேமிகச்சொன்னார்மகதோஷம்
முகத்தால்முழுவெண்டிங்களைமுடிமேலணிசடையான். (சஎஉ)

அங்காரகன்மகத்தானத்தைஅதிபன்றனைக்காரி
தங்காதலன்மிகவேயருள்சாரக்குருபார்வை
வெங்காதலின்சிசுதோன்றிடும்விளங்காமலேபோகும்
சிங்காசனமயில்வாகனச்செல்வன்றனைத்துதித்தால். (சஎங)

நவமாகியதானம்மதில்நன்றுகிடக்குவிகன்
தவமாகியபார்வையுறத்தானேகிவந்துற்றுற்
பவமாகியஇரவிசிகிபாலாகியரெண்டில்
அவமாகிடுமதிநாள்வரைஅன்பாகியபாலன். (சஎச)

பாலன்வருங்குசநாளினிற்பதியுஞ்சிவனருளால்
வேலன்றனைத்துதித்தால்மிகவேண்டும்பொருள்கூடுங்
கோலம்முடன்பிதிர்சாபத்திற்கொண்டகடும்பாவம்
ஞாலம்முடன்றொலைத்தால்மிகநன்றுகிடுஞ்சிசுக்கள். (சஎடு)

வேறு.

புத்திரத்தானந்தன்னிற்பொன்னவன்றனிக்கவன்னோன்
சத்துருதானனுகித்தரித்திடநீசமூன்றுய்ப்

புத்திரத்தானமைந்திற்பொருந்திட்வேழோனுச்சம்
பத்தியாய்ப்புகருஞ்சென்மம்பதிந்திடக்கருமந்தன்னில். (சஎசு)

கருமமாந்தானந்தன்னிற்கலந்திடக்குளிகன்ராகு
தருமமாய்ச்செவ்வாய்கேதுதரணியிலிருந்துபார்க்கில்
நருமலரெட்டோன்வெய்யோன்நாடிடக்காரிவிடாய்
வருவதுவுயிரோன்காரிவளர்மதிமகன்விடுற்றால். (சஎஎ)

உற்றிடுமகவுக்கானஒன்பதோனின்றவீட்டைச்
சுத்தியாய்க்காரிபார்க்கிற்றோன்றிடும்புதல்வர்தோஷம்
பத்திடுமுன்னுட்சென்மபாவத்தாற்குழவிக்காகச்
சுற்றிடும்வினைகளென்றுசொல்லினர்தமிழையாய்ந்தோர். (சஎஅ)

ஆய்ந்ததோர்பலன்றான்சொல்லஅன்னையர்சாபத்தாலுங்
காய்ந்ததோர்கணவன்முன்னுட்கருதியபாவத்தாலுஞ்
சாந்தமாய்ச்சற்பதோஷந்தங்கியபாவத்தாலுந்
தோய்ந்திடுங்குழவியென்றுசொல்லினர்தமிழ்வல்லோரே. (சஎகூ)

தமிழெனுமனைவியர்க்குத்தங்கியவுதரநோயால்
இமிழெனும்புழுக்கள்தங்கிஇருந்திடக்கற்பரோகந்
தமதமாங்கைகால்சந்துதங்கிடுமுதரநோயே
தமிழினுலறைந்தார்முன்னுட்சாற்றிடும்பாவத்தாலே. (சஅ0)

சாற்றியபாவத்தாலுந்தாயிடதோஷத்தாலும்
ஏத்தியகணவனோடேஇணங்கியபாவத்தாலும்
நாற்றிசைபுகழத்தோஷம்நாடினுருலகின்மீதிற்
பார்த்துமேதீர்ப்பானுகிற்பலித்திடுங்கருமமெல்லாம். (சஅக)

சந்திரன்றனக்குப்பத்திற்சனியதாயவர்க்குமெட்டில்
மிஞ்சியராகுகிற்கவிளங்கியஉயிர்க்குஅஞ்சில்
கொஞ்சியவாக்கொன்கேதுகுறுகிடச்செவ்வாயாரிற்
றஞ்சமாய்க்குருவைப்பார்க்கிற்சாற்றினர்புதல்வர்தோஷம். (சஅஉ)

பஞ்சமாதிபனும்பரிதியுமுயிர்க்குப்பதிந்திடமூன்றினில்வரினும்
விஞ்சையாயொன்பான்புகருடன்வீட்டில்விளங்கிடவிரவியைப்பார்க்
கத், தஞ்சமாயுயிரோன்மாலவன்மாந்திதரித்திடக்குடும்பத்தில்கின்

ரூல், கொஞ்சியபுதல்வர்புகர்திசையதனிற்குறுகியேமறைந்திடுமென்றார். (சஅக)

மறைந்திடும்புதல்வர்தனக்குமேதோஷம்வகுத்தனர்மறையவர் நூலால், நிறைந்திடுஞ்சென்னம்பத்தினிலரவாய்நின்றிடிலரவதோஷத்தாற், குறைந்திடும்புதல்வர்தோன்றியேமறையுங்கோதையர்தனக்கு அட்டமத்தில், மறைந்திடவொன்பான்சேயுடன்கூடிவந்திடிற்பாவமேமிகுதி. (சஅச)

வேறு.

மிகுதியாங்கருமம்பிதிர்வழியதனால்மேன்மையாய்த்தொடர்ந்திடும்படியே, தகுதியாய்மூன்றுசென்மமாய்த்தோன்றிச்சந்ததிதனக்குமேதோஷம், நிநதியாய்க்கருமமகற்றிடிற்றோஷம்நீங்கும்பரிதிநாள்விரதம், மிகுதியாயிருந்துசோமநாட்பொங்கல்வேண்டிடிற்றோஷங்கள்போமே. (சஅரு)

வேறு.

காரியமுமிரோனோடுகலந்திடலாபமாட்சி
மீரியபுத்ரனோடுவிளங்கிடமதிக்கீராறிற்
பாரினிற்பிறக்குஞ்சேய்க்குப்பகர்ந்ததுநான்கொன்பானில்
மீறியகுழவிதோன்றிவிளங்கிடாதழியுமென்றார். (சஅசு)

அழியுமேசிசுவுங்கோரையாகியேகருவாய்ப்போகுந்
தெளிவிலாக்கைகால்தேகஞ்சில்லெனக்குளிர்ச்சிகாட்டி
மெலிவினாற்றேகம்வற்றும்மெய்யுடல்வலியுந்தோன்றிப்
பழியிலாநிவிர்த்தியாகப்பாலித்தார்கணிதநூலோர். (சஅஎ)

வேறு.

மதியுடனுயிரோன்மறைந்திடக்கரியும்வக்கிரன்றன்னையேபார்க்கிற்
சதியுடனுயிரிற்கேதுவுங்குளிகன்றனித்திடவரவுமேயேழில்
விதியுடன்பத்திலிரவியுமாலும்விளங்கிடப்பிறந்தசாதகற்கு
மதிமகன்நாளிற்கதிரவன்றிசையில்வந்திடுஞ்சிசுவெனவுரையே. ()

உரைத்திடுஞ்சேய்க்குக்காரிநாள்புகரும்ஓதினார்கேதுவூணிரண்டும், நிரைத்திடுந்திட்டந்தாய்க்குமேரோகம்நின்றிடுஞ்சிரங்குடன்கழிச்சல், மறைத்திடுமஞ்சுவயதினிற்பிடைவைசூரிபோல்வந்துடன்

றீரும், குறைத்திடாவாக்கோன் பாக்கியமிருந்தாற்குணமுள்ளான் வித்
தைமேற்பிரியன். (௪௮௯)

அஞ்சினேன்குருவாய்ப்புகருடன்வீட்டிலணுகிடச்சேயுமேபா
ர்க்கில், வஞ்சியர்தானநாதனுங்கரியாய்வந்திடநாலிற்சேய்வீடாய்க்,
கொஞ்சிடுபுதல்வர்மூன்றுமேயாகுங்கோதையரிரண்டெனத்தோன்
றும், மிஞ்சிடப்புதல்வரொன்றுமேயாகுமேதினியதனிலேயென்றார்

என்றிடுஞ்சேய்க்குஏழினிலரவாயிலக்கினமதனிலேகேதும்
நின்றிடக்குருவுந்தனக்குமேயஞ்சில்நிகழ்த்திடுசாதகன்றனக்கும்,
பொன்றிடுங்குழவிசார்ப்பதோஷத்தாற்போய்விடும்மாதுவின்சாபம்
நின்றிடுமுன்னாள் ஸ்ரீவதையாலும்நேமமாயுரைத்தனர்பெரியோர். ()

உரைத்திடுஞ்சேய்க்குமூப்பதஞ்சினிலேஉண்மையாமனைவியராலே
நிரைத்திடுந்தனங்கள்நீங்கிடும்போகம்நின்றிடுமூலமாம்ரோகம்
மறைத்திடவளருமயக்கமுந்தோன்றும்வஞ்சனைகபடினாற்பிடை
உரைத்திடும்படியேவந்திடுந்தீரஓதினார்தமிழறிந்தவரே. (௪௯௨)

பஞ்சமாதிபனும்பரிதியாய்ப்பத்திற்பதிந்திடக்காரிவீடானால்
விஞ்சையாய்ப்புதனுங்கூடிடவியாழன்விரைந்துடன்பார்க்கவேவந்
தஞ்சமாய்க்குருவும்பாக்கியனுகச்சந்திரன்றனக்குமேழதனில் [தாற்
மிஞ்சியேவரினுமதிமகன்றிசையில்விளங்கிடுங்குழவியுந்தோன்றும்.()

விளங்கிடுங்குழவியரவுதன்னாளில்விதித்தனர்கணிதநூலதனாற்
றுலங்கிடுமணமும்புவியினிற்குருவிற்றொடுத்திடுங்கன்னியர்தனக்கும்
நலங்கள்முன்பவத்தாற்புத்திரதோஷம்நல்கிடும்விலகிடவேண்டில்
வளங்கிடுகன்மகாண்டத்திற்பத்தாம்வாக்கியவுரைப்படிசெய்யே. ()

வேறு.

பஞ்சமத்திற்செம்பாம்புஉயிரின்கோளுடனேபரிதிமதிமகனிருக்கப்
பாக்கியத்திற்செவ்வாய், தஞ்சமுடன்பொன்னவனுமதியுடனேமூன்
றாய்த் தரித்திடவேசேய்பார்க்கக்குடும்பமதில்மாந்தி, விஞ்சையுடன்
கருமனுமேகுசன்வீடாய்விளங்கவேதியற்குப் பாக்கியத்திலரவிருக்க
வரினுங், கொஞ்சிடவேவருங்குழவியேகமதுநிலைக்குங்கோதையருந்
தான்பிறந்துமடிந்திடுமென்றுரைத்தார். (௪௯௫)

வேறு.

பஞ்சமாதிபனுங்காரிவீடதனிற்பதிந்திடக்கருமனுங்கூடி [கத்
விஞ்சையாயுபிர்க்குஇரண்டினிலுச்சம்விளங்கிடவுபிரின்கோள்பார்க்
தஞ்சமாயுபிரிற்பாக்கியனரவுந்தரித்திடப்பிறந்தசாதகற்கு
வஞ்சகமானபுதல்வர்ரெண்டாகவளங்கிடுங்கனனியரொன்றே. ()

பஞ்சமாதிபனுமதிமகனரவும்பாக்கியமிருந்திடவன்னேன்
றஞ்சமாயுபிர்க்குநாலினிற்றனிக்கச்சந்திரன்றனக்குமேலாபம்
விஞ்சையாய்க்கர்மமதனிலேயுபிரோன்மேலிடப்புகருடன்றரித்தாற்
கொஞ்சவேபுதல்வர்மூன்றுமேயாகுங்கோதையரிரண்டெனக்கூறே.

வேறு.

குருவுமேஅட்டமத்திற்குறுகிடஉபிரோனோடு
வருவதுசொந்தமாகிவளர்குருவீட்டிற்கேது
கருதியேஅஞ்சாய்வாழக்கருமத்திற்காரிநின்றுற்
சுருதியாய்மைந்தரற்பஞ்சொல்லினர்கணிதநூலோர். (சகூஎ)

வேறு.

பஞ்சமாதிபனுமதிமகனரவும்பாக்கியமிருந்திடப்புகருந்
தஞ்சமாய்க்குருவும்நாலினிலுச்சந்தனித்திடச்சேயுமேபார்க்க
விஞ்சையாயுபிரோன்கருமகேந்திரத்தில்மேவிடயுபிரினில்மாந்தி
மிஞ்சவேவரினும்பாலனுந்தோன்றும்விளங்கியேமறைந்திடவருமாம்

கோதையேயஞ்சோன்சத்துருநாதன்கூடவேபரவுடன்புகரும்
வேதியனென்பான்குருவுமேயாகிவிளங்கிட அலவனிற்றோன்றிக்
காதலாயுபிரோன்கருமனும்பார்க்கிற்கருதினர்புதல்வர்க்குத்தோஷம்
போதவேபரவுதிசைதனிற்காரிபுசிப்பினிற்பாலர்க்குமோசம். ()

மோசமாய்ப்பாலர்தனக்குமேதோஷமுக்கியம்பூருவஜெனனம்
நாசமாய்ச்சர்ப்பவதையிவன்செய்தான்நாயகிதன்னுடன்கூடி
தோஷமாமைந்தில்மதியுமேதரிக்கிற்றோய்பிறையாகியேயிருந்தால்
வாசமாங்குசனும்நோக்கமாய்வந்தால்வளர்ந்திடும்பிதிர்வழிச்சாபம்.

பிதிர்வழிச்சாபமுயிர்வதையாகிப்பேசியபாவத்தைத்தீர்க்கச் [த்
சதிருடன்ஞானியந்தணர்தமக்குத்தானமுங்கொடுத்துப்பின்விதியாய்
துதிபெறவன்னம்வஸ்திரம்பூரிசோர்விலாக்கந்தவேள்தலத்தில்
மதியுடனேழுசிரசினில்நாகர்மத்தியில்வைத்திடச்சொல்வேன்.(ரு0உ)

வைத்திடலிங்கமொன்றுவகையுடன் அதனில்வைத்து
சத்திவேலுடனேதோன்றுஞ்சண்முகன்றனைத்துதித்து
மெய்த்திடுங்குளத்தின்பக்கம்வேம்புடனரசுஞ்சேர்ந்து
துய்த்திடுந்தலத்தில்வைக்கத்தோஷம்போங்குழவியொன்றே.(ரு0ரு)

வேறு.

பஞ்சமன்குளிகன்காரிவீடதனிற்பதிந்திடக்குருவுமேபார்க்கத்,
தஞ்சமாயொன்பான்மாலவனுகித்தனத்தினிலரவுடன்பரிதி, விஞ்சை
யாயிருக்கவொன்பதில்மூன்றோன்விளங்கிடப்பிறந்தசாதகற்குக், கொ
ஞ்சமாய்ப்புதல்வர்தனக்குமேதோஷங்குறித்தனர்பெரியவர்தாமே. ()

பொன்னவனைந்தின்கோளைப்புத்திராதிபனைச்செவ்வாய்
நன்னயமாகக்கூடிநண்ணினும்நோக்கினுலும்
முன்னநூல்முழுதுமாய்ந்தோர்மொழிந்தனர்சாதகற்குச்
சொன்னதுவுயிரில்மாந்திதோன்றிடப்பிறந்தாலுகில். (ரு0ரு)

பிறந்திடுஞ்சாதகற்குப்பெருத்திடப்புதல்வர்தோஷங்
குறைந்திடாத்தெய்வத்தாலுங்கோதையர்தோஷத்தாலும்
மறந்திடாப்பிதிர்சாபத்தால்மாண்டிடும்புதல்வர்தோன்றி
நிறைந்திடுந்தோஷந்தீர்த்தால்நேரிடும்புதல்வர்தானே. (ரு0ரு)

பஞ்சமன்மாலாய்க்கதிர்புகர்வீட்டிற்பதிந்திடச்சேயுமேயஞ்சில்
விஞ்சையாய்க்குருவுங்குடும்பனுயேழில்விளங்கிடயிரவிவீடாகத்
தஞ்சமாமதிக்குஅஞ்சினிலொன்பான்றரித்திடக்குருதிவீடதனிற்
கொஞ்சியபுதல்வர்தனக்குமேதோஷங்கோதையர்பலமதாயிடுமே. ()

கோதையர்பலமாபிரவிநாள்முதலாய்க்கொடுத்திடுமதிதிசைவரையில்
காதலாய்ப்பெண்ணுமாணுமாயஞ்சுகலந்திடுமதிலிரண்டேகுஞ்
சீதமாயாணுஞ்சேதமாம்பெண்ணுந்தீர்க்கமாயிருந்திடுமெனவே
போதவேயுரைத்தகணிதநூற்படியேபுகன்றனர்தமிழறிந்தோரோ.()

பஞ்சமன்நாலோனீசனுயேழிற்பதிந்திடப்பனிமதியரவுந்
தஞ்சமாய்நாலிற்றரித்திடவேமோன்சந்திரன்வீட்டினிற்கேதுந்
துஞ்சிடவுயிரிற்புகருமேதனிக்கச்சூரியன்மாலுடன்மறையில்
கொஞ்சியகுருவுங்குடந்தனைநோக்கக்கோதையர்தனக்குஐந்துடை
[யோன்.

கோதையர் தனக்குஅஞ்சின்கோள்குருவாய்க்குறுகிடவிரவிமாலோடு
பாதகமில்லாவிலாபத்திற்செவ்வாய்பரிதிவீடதனிலேவருகில்
ஆதரவுடனேகுருதிசையதனில்அட்டமன்புசிப்பினிற்சிசுக்கள்
வேதநூற்படியேதோன்றிடுமென்றுவிதித்தனர்கணிதநூலதனால். ()

சொல்லினர்பெரியோர்மாதுவின்கருமந்தோன்றிடுமதியிலும்ரவியில்
நல்லதாய்மனைவிதனக்குமேயிரண்டில்நாடிடவாரின்கோள்கரியாய்
வல்லபமாகப்புத்திரதோஷம்வந்திடுந்தீர்த்திடப்போகும்
மெல்லியேபூமிதனங்கள்நால்விதமுமெய்திடும்வரவரப்பெருக்கே. ()

பொன்னவனஞ்சாயரவுடன்றேன்றப்பூமனுமதியுடன்மறைய,
வன்னவன்புகராய்க்கர்மகேந்திரத்திலமர்ந்திடவிரவிமால்கரியுஞ், சொ
ன்னதுநவமாய்த்தோன்றிடுஞ்சேய்க்குச்சொல்வதாண்மூன் றுடனிர
ண்டாம்,நன்னயத்துடனேகுழவியின்றோஷம்நாட்டினார்கணிதநூல்
விதியால். (ருகஉ)

பஞ்சமன்மாலாயிரவிகேதோடும்பதிந்திடவுயிரினில்வரினும், விஞ்
சையாயொன்பான்காரியர்யாறில்விளங்கிடக்குருவுமொன்பதினில்,
தஞ்சமாயஞ்சைச்சசியுமேநோக்கச்சனிமகன்கருமகேந்திரமாய்க்,கொ
ஞ்சியபுதல்வரிரண்டுமேயாகுங்கோதையரொன்றெனமொழியே. ()

மதிஉயிர்தனக்குக்கருமனுங்குருவாய்மந்தன்வீடதனிலேவரினும்
விதியுடனுயிர்க்குக்கருமனுமறையவெய்யவன்மால்சிகியுயிரிற்
றுதிபெறவரினுங்குழவியின்றோஷஞ்சோர்விலைச்சர்ப்பதோஷத்தாற்
பதியினில்மாதர்வழியினிற்சிலதுபாவமுமிகுதியென்றனரே. (ருகச)

பஞ்சமன்குசனுயாறினில்மறையப்பத்தினிற்கேதுமேதனிக்கில்
விஞ்சையாயொன்பானொன்பதிற்றனிக்கவெண்மதிதனக்குமைந்தினி
லே, தஞ்சமாய்க்குடும்பன்மாலவனரவுஞ்சார்ந்திடச்சனியுமேயஞ்சிற்
கொஞ்சியபுதல்வர்நாலெனத்தோன்றுங்கோதையரொன்றெனக்கூறே

கோதையரொன்றும்பலமிலாதாகுங்கூடிடும்புதல்வர்நாலாக
வேதமாய்யிரில்மாந்தியேதனிக்கில்விளங்கிடும்புதல்வர்கள்மறையும்
காதலாங்காளிகோவிலிற்செபங்கள்கருத்துடன்விதிப்படிசெய்ய
நீதமாய்ப்புதல்வரஞ்சுமேதீர்க்கப்நிகழ்த்தினர்பெரியவர்தாமே(ருகசு)

அந்தணன் அரவுமஞ்சினிலாக அஞ்சின்கோள்காரியுங்குளிகன்
விந்தையாயுபிரிலிருந்திடச்செவ்வாய்வேதமாய்ப்பார்த்திடப்புகரை
வந்திடவிரவிமாலவன்கேதுவகையுடன்லாபமாய்ச்சேரில்
தொந்தமாய்க்குழவிதனக்குமேதோஷஞ்சொல்லினேங்கணித்தூல்,
[மொழியால்.

மேலவர்மொழியாற்கணிதநூல்பார்த்துவிதித்தனர்கேதுநாளதனிற்
சீலமாய்வித்தைபுத்தியும்பெரிதாய்ச்சினேகமாம்பிரபுக்களுடனே
தூலமாயற்பமுபற்சியதாகுந்துலங்கிடமறைந்திடும்புகரில்
கோலமாயரசர்தயவுடன்நல்லகுணங்களாய்லாபமும்பெருவன் (ருக்அ)

வேறு.

புத்திரதானநாதன்புகர்மதிமகன்சேயோடே
ஒத்திடுங்கருமமாகலன்பதுக்குடையோனீசம்
பற்றிடவஞ்சைவெய்யோன்பார்த்திடப்புதல்வர்மூன்றும்
ஒழ்ற்றியாம்பெண்கள்ரெண்டும்விளங்கிடும்புவியிற்றானே. (ருகக)

வேறு.

பிதிருடன்கருமமந்தியமதனிற்பிசகிடுமுதவிடானென்றும்
நிதிமதிக்குடையோன்மாந்தியுமொன்றாய்நின்றிடலாபமாயக்கோள்
பதிவதுகருமமதனிலேவருகிற்பாக்கியங்கிரகவாகனமும் [லோன்.
மதிபெறும்படியேகீர்த்தியுமேன்மைவாய்க்குமென்றுரைத்தனர்மே
பஞ்சமன்புகருமாலவனுடனேபதிவதுகருமகேந்திரமாய்
விஞ்சையாயொன்பான்மந்தன்வீடதனில்விளங்கிட அக்கிரகத்தோன்
றஞ்சமாயரவுஞ்சற்குருவீட்டிற்சார்ந்திடப்பிறந்தசாதகற்குக் [ம்
கொஞ்சியபுதல்வர்நாலுடன்கோதைகுறித்தனர்மூன்றுடன்தோன்று
பொன்னவன்றனக்குஐந்தினிலிரவிபொருந்திடமாந்தியும்வரினும்
அன்னவன்மதிக்குஅஞ்சைநோக்குற்றால்அழிந்திடும்பாலர்நாலாகும்
மன்னவன்றனக்குமதியுயிர்தன்னைமங்களச்சேயுமேபார்க்கிற்
சொன்னதுபாலரிரண்டுமேதீர்க்கஞ்சோர்லில்லைப்பெண்டிரமொன்றே

வேறு.

ஓதுயிருக்கிரண்டுடையோனென்பானோடுஉற்றிடவேமாந்தியுடன்
சோமன்வீடாய், நீதியுடனாலேழோன்செவ்வாயோடுநின்றிடமாலவ
ன்வீடாய்க்கர்மமிதில்,வேதியனுக்கெட்டாங்கோள்கரியாய்நாலில்விஷ

ங்கிடவேபுகர்திசையில்மால்நாள்வந்தால், சேதுதனிற்போய்வருவன் வழியில்லைமைந்தன்சேதமெனவறைந்தனர்கள்திறமாய்த்தானே. ()

திரமாகக்கிரகம்வருமுயற்சிமாற்றுஞ்சிரசினிலேவியாதியொரு பக்கந்தோன்றும்,உரமாகஅரசர்தயவுண்டாங்கீர்த்திஓங்குநரவாகனமு முறுதியாகும், பிரரூரிற்போய்வருவன்பிசகாவாக்கன்பெருத்திடுமே கிளைகூட்டம்பேதைக்டன்பன், மறவாதவறிவோன்சஞ்சலமுமாவன் வஞ்சகத்தன்காமியனுய்வாழ்வன்மாதே. (ருஉச)

வேறு.

புத்திரதானநாதன்புகர்கரிமதிசேயாக
இத்தலத்தொருநாலேழ்பத்தினிலிசையாகவந்தாற்
புத்திரர்நாலெட்டுக்குட்பிறந்திடுமுதவான்மாதே
சத்தியாய்ப்பின்னுற்புத்ரன்சார்ந்திடுந்தெத்தென்றேதே. (ருஉரு)

வேறு.

பஞ்சமன்மறையப்பொன்னவனுடனேபதிந்திடக்கேதுவுங்கூட
தஞ்சமாய்க்குடும்பன்ஏழினிற்சோத்தனத்தினிற்கரியுமேநீசம்
அஞ்சினேன்குருவைக்காரியும்பார்க்கில்அழிந்திடும்புதல்வர்கள்தோன்றிக்
கொஞ்சியவுயிரிற்குளிகனுந்தரித்தாற்கொடுத்திடும்புதல்வர்கள்தோ
[ஷம்

புத்திரதோஷமுரைத்தனர்பெரியோர் புனிதமாயிருந்திடுஞ்சேய்க்குச்
சத்தியாய்நாகதோஷமும்உரைத்தார்தையலர்பூத்திடும்போது
வெற்றியாம்முட்டைபோவதுசோரைமிகுந்திடிலந்தணர்சாபம்
பத்தியாய்த்தெய்வநிந்தனையுடனேபண்ணியபாவத்தாலாமே. (ருஉஎ)

வேறு.

பஞ்சமத்திற்கரியிருக்கஆட்சியாய்வரினும்பரிதியுடன்அறவேழிற்
பதிந்திடச்சேய்மதியும்,விஞ்சையுடன்கருமமதில்விளங்கிடவேகுருவும்
வெய்யவற்குவொன்பதனில்விதித்திடவேவரினும், தஞ்சமுடன்லாப
மதில்மாந்தியுமேதனிக்கத்தனதுயிரிற்கேதுடனேதரித்திடச்சேய்பார்
க்கிற், கொஞ்சிடவேவருங்குழவிஅஞ்சுடனேரெண்டிற்குறித்தனர்
கள்பலமூன்றுகூறினர்கள்பெரியோர். (ருஉஅ)

வேறு.

பஞ்சமனிரண்டோனுயிர்க்குவழுதனிற் பதிந்திடச்சேயுமேபார்க்கிற்
றஞ்சமாயுயிரிற்சேயுமேதனிக்கச்சசிபுகரிரவியும்லாபம்

விஞ்சையாய்க்காரிநீசமாயாறில்விளங்கிடப்பிறந்தசர்தகிற்குக்
கொஞ்சியபுதல்வர்நாலெனக்கோதைகொடுத்திடுமூன்றெனவறையே.

சேய்புக்கர்மாலுமந்தணன்வீடாய்ச்சேர்ந்திடவுயிர்க்குவழாக
ஞாயிறுதிங்கட்கேதுடனெட்டில்நண்ணிடக்காரிவீடாகிற்
றுயருமிரண்டாய்ச்சாற்றினர்கணிதர்தையலரிரண்டுமேயாகுந்
தூயவர்தெத்தாந்துலங்கிடுஞ்சேய்க்குச்சோர்வில்லைவித்தைமூன்றுகும்

பஞ்சமன்கரியாய்மறைந்திடஉயிர்க்குப்பன்னிரண்டதனிலேவருகத்
தஞ்சமாய்க்குருவுங்கேதுடனஞ்சிற்றரித்திடப்பாக்கியன்குடும்பங்
கொஞ்சியமதிக்குஅஞ்சினிலரவுங்குளிகனுங்கூடிடப்பிறந்தால்
வஞ்சியர்மூன்றுவந்திடும்பாலர்வகுத்தனரிரண்டெனவறையே. ()

அறைந்தனர்உயிரோன்றனக்குஅட்டமத்தில்அரவுடன்மாந்தியுமிரவி, நிறைந்திடும்மதிக்குஅஞ்சதாய்வாழ்கில்நிகழ்த்தலாம்புதல்வர்கள்தோஷம், மறைந்திடும்பாலரொன்றுதான்சேதம்மாதுமேநாசம்
ரெண்டாகுங், குறைந்திடாதிருக்கிற்றோஷமேதீர்த்தாற்கொடுத்திடும்
பலமெனவுரையே. (ருகஉ)

அஞ்சினோன்சுபராய்ப்பாவரோடேகியமர்ந்திடக்கருமகேந்திரததில்,
விஞ்சையாய்மதிக்குஅஞ்சினிற்செவ்வாய்விளங்கிடஆட்சியாய்மறையிற், றஞ்சமாய்மனைவிதானக்கோளிரவிசார்ந்திடமறைந்திடவந்தாற்,
கொஞ்சியபுதல்வரொன்றுநாற்கருமங்கூறினர்பெரியவர்தாமே. ()

அஞ்சினோன்குருவாய்க்கருமகேந்திரத்திலமர்ந்திடவரவுமாந்தியுமாய்த், தஞ்சமாயுயிர்க்குஅஞ்சினில்மதியாய்த்தரித்திடச்சேயுமேபார்க்கில், விஞ்சையாய்த்தோன்றுஞ்சாதகன்றனக்குவிதித்தனர்புதல்வர்மூன்றுகும்,அஞ்சவேகன்னிநாலுடன்பிறக்கஅறைந்தனர்தரணியில் மாதே. (ருகச)

பஞ்சமன்புகராயுயிர்க்கிரண்டினிலேபதிந்திடக்கருமனுமதியும்
விஞ்சையாயஞ்சிலட்டமனோன்பான்விளங்கிடக்கேதுமொன்றுகித்
தஞ்சமாயுயிரோனுட்சியாய்வரினுந்தரித்திடும்பாவருந்தோன்றி
அஞ்சவேயழியும்நாகதோஷத்தாலமைத்தனர்பெரியவர்தாமே. ()

அமைத்தனர்பெரியோரரவுடன்றோஷமானதாற்குழவிக்கேயாகச்
சமைத்தனர்சர்ப்பசாந்தியும்நாகர்தன்னையுஞ்சாத்திரப்படியே

அமைத்திடச்சுப்ரமண்யன்வாழ்தலத்திலர்ச்சனைபாலபிஷேகம்
சமக்கருளன்னோனருளினற்பாவமேகிடும்பாலருண்டாமே. (நுஈஈ)

வேறு.

மறைபவனுமுயிர்களஞ்சிற்றரிக்கவஞ்சோன்வருஞ்சுபராய்மாலு
டனேகருமமாக, விரைவுடனேஉயிர்தனிலேஅரவுநிற்கவெண்மதிக்கு
அஞ்சதனிற்காரிநின்றால், முறையுடன்றோன்றிடுஞ்சேய்க்குப்புதல்
வரஞ்சுமொழிந்தனர்பைந்தொடியாறுதோன்றுமென்றே, அறைகு
வாமரவுகரிதோஷத்தாலேபழிந்திடுமேஆண்மூன்றுமாதுமூன்றே. ()

மூன்றுடனேபுதல்வனொன்றுபலமாந்தோஷமுக்கியமாய்த்தீர்த்
துவிடில்மொழிந்தார்மேலோர், தோன்றிடுஞ்சேயதிற்சேதமேழதா
குந்துலங்கிடுமேபுதல்வரொன்றுபலமாமென்று, ஆண்டிடுவனரவுசு
ரிதோஷந்தீர்க்கவறைந்தனர்கள்கணிதநூலதனிலேதான், மீண்டிடு
வன்சிவபூசைசர்ப்பசாந்திவேதியற்குஅனனமிடவினையும்போமே. ()

வேறு.

சிறந்தவஞ்சதனிற்பொன்னன்தினகரனிரண்டுபேரும்
பிறந்தசாதகற்கேநிற்கப்பிசகியேயஞ்சோன்றானும்
மறைந்திடவாறிற்சேரமால்புகரவுங்கூடில்
அறைந்திடுங்குழவியில்லையாமென்றாரியம்புங்காலே. (நுஈக)

வேறு.

பொன்னவன்குளிகன்பவனாதிபனுய்ப்பொருந்திடக்காரிவீடதனில்
அன்னவனுறிலந்தணன்வீடாயமர்ந்திடஅரவுடன்மறைபிற்
சொன்னதுமந்தப்பவனநாதனுமாய்த்தோன்றிடக்குருவுமேயாகில்
முன்னவனருளாற்குழவியின்றோஷமுரைத்தனர்கணிதநூல்விதியால்.

ஆய்ந்ததோர்பலன்றான்கணிதநூல்விதியால்அறைந்தனர்குரு
திசையதனிற், சாந்தமாய்முயற்சிகிரகவாகனமுந்தந்திடுமங்களமுட
னே, பாந்தமாய்க்கொடுக்கும்பலித்திடுந்தனங்கள்பாலிக்குஞ்சங்கரன்
பூசை, வேந்தராற்பிரியமாகியேயிருந்துவிளங்குவன்சகடவாகனமே.

பஞ்சமன்குருவாய்ப்பஞ்சமமதனிற்பதிந்திடச்சேயுமேபார்க்க
விஞ்சையாயொன்பான்மதிமகனிரவிவிளங்கிடவெட்டினில்மறையத்

தஞ்சமாயுயிர்க்குப்பத்தினில்மாந்திசார்ந்திடச்சனியுமேபார்க்கில்
வஞ்சியரதிகந்தோன்றியேபுதல்வர்வாய்த்திடுந்தோசமுமதிகம். ()
வாய்த்திடுமாரல்சாபமும்பழையோர்வல்வினைப்பயன்களால்முன்னாள்
சாய்த்திடஉயிர்கள்வதையினாலிப்போசந்ததிதோஷமேவகுத்தார்
மாய்த்திடத்தோஷந்தீர்ந்திடவேண்டிமங்களவாரத்தில்விரதம்
தோய்த்திடவாவினெய்விளக்கேற்றிச்சுப்பிரமணியனைவணங்கே. ()
வணங்கியேசர்ப்பமைந்தலையுடனேயமைத்ததின்மத்தியிற்றானே
இணங்கியகந்தன்வேலுடனிலங்கஇச்சையாய்ச்செய்துயர்பூசை [ய்
பணமுடனன்னதானவஸ்திரமும்பார்ப்பனர்தனக்களித்திடவே
மணம்புரிபுதல்வர்தோன்றிடுமென்றுவழுத்தினர்கணிதநூலாய்ந்தோர்

வேறு.

அஞ்சினிற்குருவாயதற்குடையோனும்அந்தணன்றனக்குமேஎழா
வஞ்சியர்தானநாதனுங்கரியாய்மதியுடனில்லமேசேரில் [ப்
வெஞ்சினஅரவுமூன்றினிலிருந்தால்விளங்கிடும்பிதாவுடன்மாதா
கொஞ்சியவயதுமூன்றுடனஞ்சிற்கொண்டிடும்நமனெனக்கூறே. ()
மொழிந்தனர்பெரியோர்புதல்வியுமூன்றுமோசமில்பாலருந்தோன்றி
அழிந்திடுஞ்சிலதுஅந்தணர்சாபமமைந்திடுமிருபதுமுதலாய்
தெளிந்திடுமுயற்சியற்பமாய்ச்செல்வந்தினகரன்மதிவருநாளில்
பொழிந்திடுமுயற்சிவாணிபமுதலாய்ப்புகழ்பெறவிருந்திடவல்லன்.

வேறு.

மறையவனும்புகர்மாலுமோர்வீடேகிவருமிடங்கேந்திரமாகிச்சு
பர்வீடாக, விரைவுடனேஉயிர்தனக்குவஞ்சாங்கோளன்விளங்குமிட
ங்கரிமனையாய்மறையவாட்சி, முறையுடனேந்தாமிடத்தில்மதியேவா
ழ்கமொழிந்தனர்மாதுடன்நாலுபுதல்வர்நாலு, அறையுமெனப்பிறந்
திடவேயுரைத்தார்மேலோர்அதிலாறுதொலையுமென்றுஅறிந்துசொ
ல்லே. (நுசஎ)

சந்திரன்பஞ்சமத்தில்வரக்கரிவீடாகித்தனிக்கவக்கோள்மறைந்தி
டவேசேயும்பார்க்க, வந்தமறையோன்மனையில்ஆட்சியாகவரஅவர்க்
குஅஞ்சதனில்அரவுவாழ்க, மைந்தரவர்மூன்றுடனேயுபயமாகவகு
த்தனர்பெண்நாலுடனேவையமீது, சிந்தையுடனாரல்கரிதோஷத்தா
லேசெத்திடுமேஆண்மூன்றுமாதுமூன்றே. (நுசஅ)

வேறு

மதிஉயிர்தனக்குப்பஞ்சமனிரவிவந்திடமாலவன்விடாய்த் [க்கில்
துதிபெறுநாலோன்பாக்கியன்புகராய்த்தோன்றிடமுயிரதாய்த்தனி
விதியுடன்மதிக்குஇரண்டின்கோள்குருவாய்விளங்கிடவாட்சியாய்வ
ரினும்,பதியினிற்பாலர்அஞ்சுடன்பாவைபகர்ந்தனர்நாலெனவறையே

அறைந்தனர்பெரியோர்அஞ்சுடன்நாலில்அழிந்திடும்ஆறுமே
போகும், கரைந்திடாமூன்றும்பலத்திடுமதுகேள்கன்னியாமனைவிக்
கொன்பதனில், நிறைந்திடக்கேதுநின்றிடவன்னோனேசமாய்மதிக்கு
ஏழதனில், மறைந்திடாதவற்குவொன்பதில்மாந்திவந்திடிற்றோஷமே
வகுத்தார். (ருரு0)

வகுத்தனர்கணிதரரவிடசாபம்வாய்த்திடும்பிதாவழியதனிற்
றொகுத்தனர்மூன்னுட்சிசுவதையதனுற்றோன்றிடும்பாவமேமிகுதி
பகுத்தனரதனுற்குழவிக்கேதோஷம்பாலித்தார்பெரியவர்நூலாற்
செகத்தினில்முன்போற்பாபமேதீர்க்கச்செப்பினார்குழவியுந்தீர்க்கம்.

தீர்க்கமாய்க்கந்தன்றன்னையும்வணங்கிச்செய்வதுஐந்தலைநாகம்
நோக்கமாய்க்காளிநிர்த்தனமுடனேநுணுக்கமாய்ச்செய்துநீமுடித்து
ஆக்கமாயரசுவேம்புடன்நதிகள் ஆலயஞ்சேர்ந்திடுந்தலத்திற் [யால்.
போக்குடன்செய்துமுடித்திடவின்னம்புகலுவேன்கணிதநூல்விதி

விதியுடன்சர்ப்பசாந்தியுமன்னம்வேதியர்தனக்குமேஈய்ந்து
துதிபெறநந்திசிவனையுந்தொழுதுசோமவாரத்திலேவிரதஞ்
சதிபதியிருவர்தானுமேயிருந்துசண்முகங்கோட்டமாநெய்யாற்
சதவிளக்கேற்றத்தாமரைநூலாற்றான்விடுந்தோஷமென்றுரையே. ()

ஆய்ந்ததோர்பலன்றான்கணிதநூலதனுலறைந்தனர்சிசுவதைதீரப்
பாய்ந்தவெண்பசுவுங்கன்றுடன்வாங்கிப்பகர்ந்தனர்மண்டலம்பூசை
சாந்தமாய்ச்செய்துசந்ததியுடனேதானமாய்ச்சிவனுக்கேகொடுத்துத்
தேய்ந்திடுமதிநாளதனிலேஅன்னஞ்சிசுவுக்குக்கொடுத்திடத்தீரும். ()

தீருமேவருஷமூன்றுக்குச்செய்தாற்றீர்ந்திடும்பாவமேபோகும்
ஆருக்குந்தோஷமகன்றிடும்பெரியோரருளினாற்பாவமுந்தீரச்
சாருமேபலமாய்ச்சகலபாக்கியமுந்தந்திடுங்கீர்த்தியும்புகழுஞ்
சேருமேயென்றுகணிதநூல்விதியாற்செப்பினார்பெரியவர்தாமே. ()

பஞ்சமன்மூன்றிற்பதிந்திடவஞ்சிற்பவமிலாப்புகருமேதரிக்க
விஞ்சையாய்ப்புகருங்கருமனுமாகவிளங்கிடுஞ்சாதகன்றனக்குத்
தஞ்சமாயாண்பெண்டரித்திடும்நாலுசாற்றினார்தீர்க்கமதாக
அஞ்சிடான்காமி அசஞ்சலமுடையன் அன்னையர்பதையுமுள்ளவனே.

மதிஉயிர்தனக்குவொன்பதிற்குருவாய்வந்திடவுயிரின்கோள்பார்க்கச்
சதியுடனுயிர்க்குநாலினில்மாந்திதனித்திடக்காரிவிடாக
விதியுடன்மதிக்குஇரண்டினில்மாலாய்விளங்கிடவரவுநாளதனிற்
றுதிபெறும்படியேபிதிர்வழியதனுற்றோன்றிடுந்தெத்தெனவறையே

அறைந்தனர்பெரியோர்தெத்தினுற்றனங்களனேகமாய்க்கூடிநிம்
பலமாம்,மறைந்திடாத்தனத்தால்வாணிபலாபம்வளர்ந்திடும்பூமிசேத்
திரங்கள், குறைந்திடாவளருங்குருதிசையதனிற்கொடுத்திடுங்கிரக
முங்கரிமால், நிறைந்திடவாய்க்குந்தர்மமுநிலைக்கும்நேசமாயறிவு
ளோர்சேர்க்கை. (ருருஅ)

பஞ்சமன்புகராயேழினிலிருக்கப்பாவருமுயிரின்கோளுடனே
வஞ்சியர்தானநாதனுங்குருவாய்மந்தன்வீடதனிலேவருகில்
மிஞ்சவேகுடும்பன்இரவிகேதுடனேவிளங்கிடமறைந்திடவெட்டிற்
றஞ்சமாயுதிக்குஞ்சேயவன்றனக்குச்சதிருடன்புத்திரயோகம். ()

புத்திரயோகமுரைத்தனர்மேலோர்புனிதமாயுதித்திடுமைந்தர்
சத்தியாய்ப்பழையோர்சாபமுமுடையன்சதிருடன்இருபதுஎட்டில்
எத்திசையெல்லாம்புகழ்ந்திடவுதிக்கும்இதமுடன்மேலவர்மொழியால்
முத்தியாய்நாலுகன்னிவந்துதிக்கும்மோசமென்றுரைத்தனர்மூன்று.

வேறு.

பஞ்சமத்தோன்மறைந்திடவேயாட்சியாகிப்பதிந்திடவேயிரவி
புந்திகாரியோடும்,விஞ்சையுடனுயிர்க்கிரண்டாய்விளங்கப்பொன்னன்
வெண்மதிக்குஆறதனிலாட்சியாகத், தஞ்சமுடனுயிர்தனிலேமாலோ
னுட்சிசார்ந்திடவே குருசேயும்நோக்குமாகில், மிஞ்சிடவேவருஞ்
சேய்க்குப்புத்ரதோஷம்விலக்கவகைசொல்லினர்கள்மேலோர்மாதே.

சொல்வதுநெய்விளக்குடனேகணேசன்பாதந்தொழுதன்பாயோ
ராறுமுகவேலர்க்கு, நல்லவெள்ளைப்பசுவின்பாலிளநீராலுநாடியபி
ஷேகமுடனுவிகந்தம், வில்வமொடுமலர்மாலைசாத்திநின்றுவேதியரா
லர்ச்சனையாயிரத்தெட்டாகச், செல்வியொருமனதுகந்து ஸ்ரீயும்
ரீயைச்செய்மனதிற்றியானமுடன்பூசைபண்ணே. (ருசுஉ)

வேறு.

செய்வதுபுகர்நாட்சென்மவாரத்திற்சேயிழையாளுடன்விரதம்
வைபவமாகஇருந்துநோன்பன்றுவழுவிடாதறுகுடன்கொன்றை
பையவேதும்பைவில்வமோடரளிபகர்ந்திடுஞ்சுகந்தங்களனைத்தும்
ஐயமில்லாதுஅரன்றனக்கணிந்துஆவினெய்யொளியிடப்பவம்போம்.

வேறு.

போவதுதானுண்டுநாலினுக்குங்கந்தன்புண்ணியமாந்தலமதிலே
வாரந்தோறும்,ஆவதுசெய்வேதியர்க்குஅன்னமீய்ந்துஅருள்பெறவே
யபிஷேகஞ்சரியாய்ச்செய்யப், பாவனிடகண்டமும்போம்பாலன்றோ
ன்றப்பகர்ந்தனர்கள்கணிதநூலதனுன்மேலோர்,மேவிவருபுதல்வரிட
தோஷந்தீரவிதித்தபடிசர்ப்பத்தின்சாந்திசெய்யே. (ருசுச)

வேறு.

பரிதியுங்குசனுமுயிருக்காறதனிற்பதிந்திடவேழினி லுயிரோன்
சுருதியாய்மறையோனுகியேபுகருந்தோய்ந்திடக்காரியுமுயிரில்
நிருதியோனைந்தாய்த்தோன்றிடமதியும்நின்றிடஅட்டமமதனிற்
கருதியவரவுமொன்பதிற்சேரிற்காணுவாய்பிறந்தசேய்தெத்தாம். ()

பிறப்பனுந்தேகம்பெரிதெனவளரும்பேசிடுவார்த்தையிங்கிதனும்
இருப்பனுந்தாசிவிஷயமேயதிகஇங்கிதம்விரும்பிடுசுமுகன்
மருப்படாவார்த்தைபுத்திமானுவன்வரும்பிதிர்பாக்கியமில்லான்
சுருக்கிடுமற்பநேரமேகோபிசொல்லியதாயிரண்டாமே. (ருசுசு)

வேறு.

மறையவன்மால்வீடேகிவந்திடஅவர்க்குநாலில்
விரைவுடனஞ்சோன்வெய்யோன்விளங்கிடப்புகர்மாலோடு
முறையுடனிருக்கமைந்தர்மொழிந்தனர்நாலுகன்னி
அறைகிறேன்மூன்றுதன்னில்அழிந்திடும்நாலென்றேதே. (ருசுஎ)

வேறு.

பஞ்சமன்குருவாய்மாலவன்வீட்டிற்பதிந்திடக்கேதுமேபத்திற்
றஞ்சமாய்மதியும்பொன்னவன்றனக்குத்தரித்திடவிரண்டின்கோள்
விடாய்க், கொஞ்சியமதிக்குஅஞ்சின்கோள்மாந்திகூடியேஒன்பதாய்
வரினும், விஞ்சையாய்ப்பாலர்மூன்றுடன்பெண்கள்விதித்தனர்நாலெ
னஉரையே. (ருசுஅ)

பஞ்சமன் மாலாய்நாலின்கோளுடனேபதிந்திடஉயிருக்கொன்ப
தினில், விஞ்சையாயக்கோள்காரியாயிரண்டில்விளங்கிடக்குருவுமே
பார்க்கத், தஞ்சமாய்க்குருவுஞ்சேயரவுடனேசார்ந்திடப்பிறந்தசாதக
ற்கு, வஞ்சியர்நாலுவந்திடும்புதல்வர்வாய்த்திடுந்தோஷத்தாலழிவே
தோஷமாமரவசாபமாமனைவிதோன்றிடுமிலக்கினந்தனிலே
வாசமாமரவும்வந்திடச்செவ்வாய்வளர்மதிதனக்குஆறிடமாய்
நேசமாய்முன்னாளுயிர்வதையதனால்நேரிடுஞ்சர்ப்பதோஷத்தால் [ர்.
ஆசையாம்புதல்வர்தோன்றிடும்பாவமகன்றுமேவருமெனஉரைத்தா
மதிஉயிர்தனக்குஅஞ்சின்கோள்குருவாய்வாக்கினில்வந்திடக்கரியுந்
துதிபெறுமதியைநோக்கிடவரினுந்தோன்றிடுமைந்தர்கள்தோஷம்
பதியினிலாணும்பெண்ணுமாய்ப்பத்திற்பலித்திடும்நாலுமேபலமாம்
மதிகரியரவுதோஷமேதீர்த்தால்மைந்தர்கள்பலத்திடுமிரண்டே. ()
பலமெனஉயிர்க்குலாபத்திற்குளிகன்பற்றிடமாலவன்வீட்டை
நிலமுட்னிரவிதிசைதனில்முயற்சிநாடிடுமற்பமாய்வாழ்வன்
குலநலமுடையன்கொடுத்திடுமதியிற்கூடிடுமுயற்சியுஞ்சமமாய்
நிலமிலானயலூர்வாசமாய்த்தோன்றும்நெஞ்சறிவுடன்வளர்ந்திடுவான்

வேறு.

மதிமகனுஞ்சூரியனுமஞ்சின்கோளும்வருமிடங்கேந்திரமாகிவ
ளரலக்கோள், சதிருடனேஉயிர்க்கேழிற்றனித்துநீசஞ்சார்ந்திடவே
சேய்வீட்டிற்றனிக்கப்பொன்னன், விதியுடனேசுபர்நோக்காவிளங்
குஞ்சேய்க்குவிதித்தனர்பெண்அஞ்செனவேபுதல்வராறு, துதிபெற
வேசேய்கரியாற்புதல்வர்நாலுதுஞ்சிடுமேகன்னிஅஞ்சுதொலையுமா
தே. (ருஎகூ)

வேறு.

அஞ்சினுக்குடையோன்காரியவனுங்கேந்திரத்திலேகி
அஞ்சினுக்கஞ்சினோனுமதிசுபராய்வேறேக
அஞ்சுடனஞ்சுசுத்தமாகிடிலவட்குச்சேய்தான்
அஞ்சதில்ரெண்டுபெண்ணுமழகுபுத்திரர்மூன்றுமே. (ருஎச)

வேறு.

அஞ்சின்கோள்பாம்புடனேஉயிர்க்கொன்பானிலமர்ந்திடவேய
தற்குடையோனருக்கனோடு, தஞ்சமுடனுயிர்தனக்குமூன்றுபெட்டு

தரித்திடவேபஞ்சமமாய்மறைவந்துற்றால், விஞ்சையுடன்றோன்றிய பெண்டனக்குமைந்தர்விளங்கியதோர்மாதெனவேஉதயமாகும், அஞ்சின்கோள்நீசமதாய்வளருஞுசேய்பெண்அழிந்திடுமேதப்பாதுபுதல்வரொன்று. (ருஎரு)

மறையவனும்பஞ்சமமாய்த்தனிக்கவக்கோள்மாஉடனேசூரியனுமுடனொன்றாகி, விரைவுடனேகேந்திரமாய்ச்சுபர்நோக்கின்றிவிளங்கிடவேதோன்றியபெண்டனக்குமைந்தர், குறைவுடனேமாதிருவர்புதல்வர்மூன்றுகுறுகிடுமேதாணிதனிலுதயமாகும், அறையலாஞ்சேயவனாற்புதல்வர்ரெண்டுஅழிவதுடன்மாதிருவர்அகலுமாதே. ()

மதிமகனுஞ்சூரியனும்உயிர்க்கோன்பானும்வந்திடவேஉயிர்தனக்குஓன்பான்வீடாய்ச், சதிருடனேமறைநீசந்தனிக்கஅஞ்சோன்சாரிடமேஉதயம்வரத்தாணிமீதில், விதியுடனேதோன்றியபெண்தனக்குமேலோர்விளக்கியசாஸ்திரப்படியேகணிதவாய்மை, பதியதனிற்றோன்றிடவேபுதல்வர்மாதுபகர்ந்தனர்களொன்றெனவேதாணிமீதில்

காரியுடன்மூன்றின்கோள்பரிவீடேகிக்கருதுமிக்கோள்புகர்பத்திஞென்றோடு, பாருயிர்க்குமறையாமற்றரிக்கஇக்கோள்பகரவற்குமூன்றதனிற்சேய்வந்துற்றால், கூறிடவேவருமாதர்உடன்வந்தெய்தும்குறுகியபெண்மூன்றுபயம்ஆறுறுகும், சீருடனேமாந்திபதிஞென்றில்வந்தாற்செப்பியபெண்நாலழியும்மால்நாள்நாசம். (ருஎஅ)

மாஉடனேசூரியனும்உயிர்க்கொன்பானில்வந்திடவேமாலிருந்தோன்வளருமில்லம், தூலமுடன்கேந்திரமாய்ச்சுபரொன்றாகித்தோன்றிடவேஅஞ்சின்கோள்ஆட்சியுச்சம், சீலமுடன்குருவுடனேகொடியபாவர்சேர்ந்திடவேமால்மனையாய்ச்சேருமாதர், சாலவெனத்தோன்றிடுமேவரும்பெண்ரெண்டுசாய்ந்திடுமேமைந்தர்ரெண்டுநாசம்ஒன்று.

ஆரஅமஞ்சாங்கோளாயஞ்சிலேகி அமர்ந்திடவேயுடனொருகோள்தரியாதாகக், கூருயிர்க்கொன்பான்கோளன் அருணனோடுகூடிடக்கேந்திரமாகித்தரிக்குமாகிற், பாருயிர்க்கட்டமமதனில்மறையோனுச்சம்பதிந்திடவேதோன்றியபெண்தனக்குமைந்தர், சீருடனெரெண்டுஒன்றுதோன்றுமாதுசெப்பினர்களுபயமதாய்வரினுமானே. (ருஅ0)

மானேகேள் ஆல்வரும்பாவத்தாலேமாய்ந்திடுமேதோன்றுமைந்தர்மாதுசேதம்,தேனேகேள்வஞ்சியர்வேள்மனையிற்பெண்ணுஞ்செப்பியநாயகனுடனேகூடிஒன்றாய், ஆனதோர்வகதிங்கள்முடியுமட்டும் அந்தணரேழ்சேய்தனக்குஅமுதுசெய்தால், மான்விதியேஓர்புதல்வர் அழியாரென்றுவகுத்தனர்கள்சோதிடசாஸ்திரங்களாய்ந்தோர். ()

நூலெனவேதோன்றியதோர்பிதாவின்செல்வம்நுவல்கிரகஞ்சேய்க்குதவாதெனவென்றோது, சீவமுடன் அரவுதிசையதனிற்றிங்கள்சேருமபகாரம்வரிற்கிரகம்ஒன்று,தூலமுடன்வருங்கிரகம்பலமென்றோதிச்சொல்லியதோர்மாதர்வழியதனிற்செப்பு, சாலவெனமதியபகாரத்தின்போக்கிற்றங்தைசெல்வம்அற்பமெனச்சாருமென்றே. ()

கரிஉயிருக்கொன்பதினிற்றரிக்கஒன்பான்கருதியதோர்மாந்தியுடன்சுபர்வீடேகச், சரியுடனெஉயிர்க்குபயமதனிற்பொன்னன்தரித்திடவேதோன்றியபெண்தனக்குமைந்தர்,வருமுபயமாகவெனமாதுஒன்றுவகுத்தனர்கள் ஆரல்கரிபாவத்தாலே, குறுகிடுமான்ஒன்றுடனேமாதுஒன்றுகுறித்தனர்கவிதுதவறுதெனவுமோதே. (ருஅங)

வேறு.

அஞ்சினொன்புகர்சேயொன்றாய்அமர்ந்திடக்கரிவீடாக
விஞ்சையாய்அஞ்சிற்பாம்புவிளங்கிடவருமாதர்க்குக்
குஞ்சரத்துடனேபெண்சேய்குறித்தனர் அஞ்சாய்க்காட்டும்
அஞ்சவேபுதல்வர்தோன்றும்அழிந்திடாதிருக்குமென்றார். (ருஅச)

வேறு.

மறையவனும்உயிர்தனக்குஒன்பானுகிவரினுமிடமாட்சியுச்சந்தனிக்குமாகில், விரைவுடனேஉயிர்தனக்குஅஞ்சிற்சுங்கன்விளங்கிடவேகொடியோனும்தரிக்கவக்கோள், முறையுடனேமால்பரிதியுடனொன்றுகிமூன்றுடனே ஆறெட்டுள்வளருமானால், அறையுமவன்றோன்றியபெண்தனக்குமைந்தர் அறைந்தனர்கள்ஏகமென அறையுநூலே.()

மாதெனவேதோன்றியபெண்உபயரெட்டிவருமதிலொன்றுகுமெனக்கணிதமோது, நீதியுடன்ஆரல்கரிகொடியதோஷம்நேர்ந்துமிவர்பாவம்மதுஅதிகமாகும்,சேதமெனமாதிருவர்ஏகமாகுஞ்செப்பியதோர்மைந்தரென உபயரெட்டி, ஓதினர்கள்நாசமெனக்கணிதமாய்ந்தோர் உரைத்தனர்கள்சோதிடத்திற்றவறுதென்றார். (ருஅசு)

பஞ்சமத்தில்மால்புகரும்சேயுமொன்றாய்ப்பகரவிவரிருந்திடுங்கோள்திபன்றானும்,தஞ்சமுடன்மதியுடனொன்றாகிச்சுங்கன்றன்மனையிலிவர்கள்வரமறைபன்உச்சம், விஞ்சையுடன்றனித்திடவேவருமாதர்க்குவிளங்கிடுப்பெண்மூன்றெனலாம்புதல்வர்மூன்று, செஞ்சொல்நுதல்விழியணங்கேபுதல்வர்மூன்று சோந்திடுமேபெண்ணிரண்டுஞ்சேதமாமே. (ருஅஎ)

வேறு.

மால்கரிஉயிர்க்கொன்பானுமறைந்திடஆரல்வீடாய்
சாலவேஅக்கோளுச்சம்தரித்திடப்பாவர்நோக்கிற்
சீலமாயாட்சியாகச்சேர்ந்திடச்சுபர்கள்தானும்
தூலமாய்வருமாதர்க்குச்சொல்லினர்புதல்வாநாசம். (ருஅஅ)

வேறு.

மறையவனுங்கேந்திரமாய்ஆட்சியேறவரஅவர்களுடன்கொடியோன்தரிக்குமானால், விரைவுடனேஅஞ்சாங்கோள்தனிக்கூட்டம்விளங்குமவரிருந்திடுங்கோள்திபன்றானும்,முறையுடனேயொன்பான்கோள்அரவனோடுமுயன்றிடஎட்டார்வியத்திற்றரிக்குமானால்,அறையுமவண்தோன்றியபெண்தனக்குமைந்தர்அறைந்தனர்கள்நாசமெனக்கணிதவாய்மை. (ருஅகூ)

அஞ்சுடையோன்மாந்தியுடன்ஆட்சிஉச்சமமர்ந்திடவேஅவர்தனக்கஞ்சதனிற்பொன்னன், தஞ்சமுடனொன்பான்கோளுடனொன்றாகிச்சாருயிர்க்குஉபயமதிற்றரிக்குமானால், விஞ்சையுடன்உயிர்க்கஞ்சுசுத்தமானால்விளங்கியமாதர்க்குவருமாண்பெண்ணிரண்டு, செஞ்சொல்நுதல்விழியணங்கேஉயிர்க்குமுன்சொற்செப்பியபெண்மைந்தர்வரும்நாசங்காட்டும். (ருகூ0)

மைந்தருயிர்க்கொன்பதினிற்றனிக்கநீசம்வளருமக்கோள்கேந்திரமாயிவர்களோடு, விந்தையுடன்ஒன்றாகிப்பவர்கள்வீட்டில்விளங்கிடவேயிவர்தனக்குநாலஞ்சேழில், சிந்தையுடன்மாந்திமறைஉயிர்க்கஞ்சோனும்சேரவிவர்உயிர்தனக்குமறையாதானால்,வந்திடுமாதருக்கென்பாய்புதல்வரேழுவகுத்தனர்கள்நாசமதாந்தரணிமீதே. (ருகூக)

வேறு.

அன்னமேஒன்பான்கோளன்அட்டமந்தன்னிற்சேர
மின்னியஅஞ்சோனீசம்விளங்கிடக்கரியோடேக

பொன்னவன்மறையமாந்திபொருந்திடஒன்பான்றன்னில்
கன்னியர்தனக்குமைந்தர்கருத்துடன்தோன்றுதென்றே. (ருகூஉ)

வேறு.

குருஉயிரில்நீசமதாய்மாந்திபானுகுறுகிடஅஞ்சொன்பானுடன்
ஒன்றுக, வருமிவர்கள்மதிகேந்த்ரம்தரிக்குமானால்வந்திடுமாதர்க்கென்
வேமாதுமைந்தர், பெறுவதெல்லாம்உடன்உடனேநாசம்காட்டும்பிரி
யமுளமாதொன்றேநிலைக்கும்பாரில், அருமறைநூற்படியாகணித
மாய்ந்தோர்ஆகமசாஸ்திரப்படியேஅறியலாமே. (ருகூங)

அஞ்சின்கோளுடையவனும்ஆட்சிஉச்சமமர்ந்திடவேஅஞ்சொ
ன்பான்பாவராகத், தஞ்சமுடன்ஒன்பதினில்ஆரல்பானுதரித்திடவே
பஞ்சமத்திற்கரியனுக, விஞ்சையுடன்யிறைவன்பாம்புடன்ஒன்றுகி
விளங்கிடவேஆட்சிஉச்சம்தரிக்குமானால், வஞ்சியர்கள்தனக்கென
வேபுதல்வர்எட்டுவகுத்தனர்மாதிருமூன்றுதோன்றுந்துஞ்சும். ()

துஞ்சிடுமேஆரல்சரிபாம்பினாலேதோன்றியஆணிருமூன்றுமா
துநாலு, செஞ்சொல்நுதல்விழியணங்கேநாசமென்றுசெப்பினர்க
ளிதுதவறுதெனவேயோது, பஞ்சமத்தில்ஆரல்கரிஅரவுபொன்னன்
பகருமிக்கோளொன்றுனற்பகருமுன்சொல், வஞ்சியர்கள்மைந்தரெ
னநாசங்காட்டும்வகுத்தனர்கள்ஒருபுதல்வர்வளருமென்றே. (ருகூரு)

வேறு.

பஞ்சமாதிபனும்பொன்னும்பகர்சனிபரிமாலொன்றாய்
விஞ்சையாய்மூன்றுமாறும்பதினொன்றும்விளங்குமாகில்
தஞ்சமாய்த்தோன்றுமாதுதரணியிலிருபெண்மைந்தர்
விஞ்சையாய்மூன்றுதோன்றும்விளங்கிடும்புதல்வர்ஒன்று. (ருகூசு)

ஆரலுமொன்பான்வீட்டிலமர்ந்திடஅதற்குநாதன்
பாருயிர்தனக்குரெண்டிற்பதிந்திடப்பாவரோடு
சாருயிர்க்காறுதன்னிற்றனித்திடக்குருவந்துற்றால்
சீருடன்மாதருக்குச்செப்பினர்புதல்வர்நூலோர். (ருகூஎ)

நூலறிவிதமாய்ஆரல்நுண்ணிடைமகத்தானத்தில்
தூலமாய்த்தனிக்குமாகிற்றோன்றிடும்புதல்வர்தோசஞ்
சீலமாங்கருவிற்சேதம்செப்பினரதிகமென்று
கோலமாய்ச்செவ்வேள்பாதம்குறுகிடும்பதியில்மாதே. (ருகூஅ)

மாதவர்மொழியால்மங்கைவருந்தியகணவனோடு
நீதமாய்நாளாறெட்டில்நெறியுடன்விரதம்பூண்டு
வேதமாய்மதிநாள்சஷ்டிவிளங்கியகாலந்தன்னில்
சுந்தகமாகப்பொங்கைதன்னிலேமூழ்கிப்பின்னும். (ருகூக)

மூழ்கியமறையன்சேய்க்குமொழிந்திடுமுன்சொல்நாளில்
தாழ்வறக்கணகநாகம்சமைத்துடன்கொடுப்பானுகில்
சூழறவிதியால்மைந்தர்தோன்றிடுமேகரெட்டி
வாழ்வுடனிருபெண்தோன்றும்வகுத்தனர்நிசமென்றோதே. (சூ00)

வேறு.

பஞ்சமத்தில்உயிர்தனக்குஒன்பான்கோளும்பதிந்திடவேஆர
ஆடன்தரிக்கவஞ்சோன், தஞ்சமுடனுயிர்தனக்குஉபயந்தன்னில்
தரித்திடவேஉடன்மறையுந்தரிக்குமாகில், விஞ்சையுடன்மறைதனக்
குஅஞ்சுக்கஞ்சில்விளங்கியகேதுடன்குளிகனிருப்பதானல், வஞ்சியர்
தன்கேதெனவேபுதல்வர்ரெண்டு மாதுஒன்றுதோன்றிடுமேதரணிமா
தே. (சூ0க)

மாதேகேள்ஆரல்வருந்தோஷத்தாலேமாய்ந்திடுமாண்ஒன்றென
வேமாதுஒன்று, சேதம்வருந்தப்பாதுயிதுவென்றோதிச்செப்பினர்
கள்எனக்கணிதர்செலுத்தும்வாய்மை, ஓதியபஞ்சமமதனில்அரவு
சேர்ந்தால்ஒழிந்திடுமேதோன்றுதுபுதல்வர்மாது, சோதிடமாயிது
வெனவேகணிதமென்றுசொல்லினர்கள்தப்பாதுதரணிதன்னில். ()

வேறு.

மதிமகன்அஞ்சோன்பஞ்சமமதனில்வந்திடச்சுபர்மனையாகச்
சதியுடனெட்டோன்பொன்னுடன்கூடிச்சாரிடம்அட்டமமதனில்
விதியுடன்காரிமதியுடன்கூடிவிளங்கிடமறைவிலாதாகில்
பதிதனிற்புதல்வர்வகுத்தனர்கணிதர்பண்புடன்மாதர்கள்தமக்கு. ()

வேறு.

மாதர்கள்தமக்குப்புதல்வர்ரெண்டாகவகுத்தனர்கன்னிரெண்
டெனவே, வேதமாய்ப்புதல்வர்வெகுதிரமாகவிதித்தனர்கணிதநூல்
விதியால், போதவேஅஞ்சோன்பவருடன்வந்தாற்பொன்றிடுங்கன்னி
ரெண்டெனவே, சேதமாம்புதல்வர்ஒன்றுமேநாசஞ்செப்பினர்கன்
னியர்பலனே. (சூ0ச)

வேறு.

அஞ்சினேன்குருதியோடுஅமர்ந்திடமறைவதாகத்
தஞ்சமாயுயிர்க்குநாலிற்சசிரவிமால்பொன்வந்தால்,
விஞ்சையாய்ப்புதல்வர்ரெண்டுவிதித்தனர்கன்னிமூன்று
அஞ்சவேபிறக்குமென்றுஅறைந்தனர்வருமாதற்கு. (சுஒரு)

வருமுயிர்க்கஞ்சிற்பாம்புவந்திடப்பலமாவானால்
தருமமுன்னுரைத்தமைந்தன்சாய்ந்திடும்பாதியாகுஞ்,
சுருதியாய்க்கன்னிரெண்டுதுணிவுடன்நாசங்காட்டுங்
கருதியிப்பலனுமென்றுகருத்துடன்உரைத்தார்மேலோர். (சுஒசு)

வேறு.

மதிமகனும்புகர்கேதுமூன்றின்கோளும்வருமிடமேமறையாமற்
சுபர்வீடாகச், சதியுடனேஉயிர்தனிலேகுருதிமேவித்தனித்திடவே
சுபர்வீடாய்வருகுமானாற், பதிதனிலேவருமாதுதுணையென்றேதப்
பகர்ந்தனர்கள்நாலுடன்பெண்சேய்ரெண்டாகும், விதியுடனேவருங்
கன்னிசேதம்ரெண்டுவிதித்தனர்கள்கணிதமொழி நூலாய்ந்தோர்கள்.

அஞ்சின்கோள்பாவருடனுதயமேறிஅமர்ந்திடவேசுபர்வீடா
ய்ச்சுபர்நோக்கின்றேல், தஞ்சமுடனுயிர்தனக்குஅஞ்சோன்வீட்டிற்
றனித்திடவேபாம்புவரமறைநாலுற்றால், விஞ்சையுடன்றேன்றிடும்
பெண்தனக்குமைந்தர்விதித்தனர்நூற்படியாகப்புதல்வரொன்று,குஞ்
சரமாய்த்தோன்றிடுமேஉமையாளாணை ,குறித்தனர்கள்தவறுதுதர
ணிமாதே. (சுஒஅ)

மறையவன்றன்னுடன்பரிமால்குளிகன்வெள்ளிவரவிவர்கள்கே
ந்திரமாய்த்தரிக்குமாகில், முறையுடன்சேய்திங்கள்பதினொன்றின்
கோளன்முயன்றிடக்கேந்திரம்வளரமுன்பின்சுத்தம், விரைவுடன்
றேன்றிடுமாதருடன்வந்தெய்தும்விதித்தனர்பெண்ணொறனவே
ஆண்மூன்றாகும்,மறையவனுங்கேந்திரமாய்சீசமானால்மாய்ந்திடுமாண்
மூன்றெனலாம்மாதுநாலே. (சுஒகூ)

மந்தனுமைந்தான்கோளாய்மறையோன்வீட்டில்வந்திடவேயெக்
கோளுஞ்சேராதாக, வந்துயிர்க்கொன்பான்கோளன்புகராதாகிமறை
ந்திடவேஉடனொருகோள்வாராதாகில், சிந்தையுடன்சேய்மனையில்

மறையனேக்கச்சேருமறையோருடனேஒருகோள்செல்ல, சுந்தரமா யுயிர்க்கஞ்சிலரவோனேகத் தோன்றியகோளுடனொருகோளெய்தா தாகில். (சுகo)

ஆகுமெனத்தோன்றியபெண்தனக்குமைந்தர் அமர்ந்திடுமேசுந்த ரமாயேகமாகும், யோசுமுளான்றயாளகுணனுகுமென்றுஉரைத்தனர் கள்தப்பாதுகணிதவாய்மைத், தாகுமெனமுன்னுரைத்தகோள்க ளோடுசார்ந்திடவேயெக்கோளுஞ்சேருமானல், ஏகரெட்டிரெட் டியென்றுபுதல்வர்மாதுஇயம்பினர்கள்நாலுரெட்டியாகுமென்றே. ()

வேறு.

அஞ்சினுக்குடையோன்வெய்யவனேடுஅமர்ந்திடங்கேந்திரமாக
விஞ்சையாயிறைவன்புந்திபாம்போடுவிளங்கியமாந்தியோடேகிக்
குஞ்சரத்துடனேஅம்புலிவீட்டிற்குருகிடவிருப்பதேயானல்
வஞ்சியர்தனக்குமைந்தர்கள்அஞ்சுமங்கையர்நாலுமேவகுத்தார். ()

வகுத்தனர்மேலோர்மந்திரியுடனேமாலவன்பாம்புடன்குளிகன் [ஞ்
தொகுத்திடஒன்றுயிருப்பதேயானற்றுணிவுடன்பாலர்கள்பொன்று
செகுத்திடும்நாசம்கன்னியர்ரெண்டுசேதமென்றுரைத்தனர்மேலோர்
வகுத்ததின்படிமேமேலவர்மொழியால்மதித்தனர்தரணியில்மாதே.

வேறு.

அஞ்சினில்அருணன்பாம்புஅருங்கனுமதனிற்சேரத்
தஞ்சமாய்அதற்குநாதன்சற்குருவுடனொன்றாகி
விஞ்சையாயுயிர்க்கீராறில்விளங்கிடவருமாதர்க்கு
வஞ்சியர்நாலாமைந்தர்வகுத்தனர்மூன்றாய்ச்செப்பே. (சுகச)

செப்பிடுமுயிருக்காறிற்சேய்புகர்வளருமாகில்
முற்படிவரும்பெண்ரெண்டுமொழிந்தனர்புதல்வர்ரெண்டு
சர்ப்பதோஷத்தால்மாயுஞ்சாற்றினர்கணிதமாக
செப்புறழ்தனமாதர்க்குச்சேர்ந்திடுந்தரணிமீதே. (சுகரு)

வேறு.

ஆரலும்ஞன்பான்கோளாயாட்சிஉச்சமமர்ந்திடவேஅவர்தனக்
கேழுதனிலஞ்சோன்சாருமறையோன்,பரியாலுடனொன்றாகித்தரித்தி

உவேயுயிர்தனக்கஞ்சதனிற்கேதி, சேருமெனத்தோன்றியபெண்
தனக்குமைந்தர்சேருபயமேகமெனமாதுநாலாய்க், கூறினர்கள் ஆரல்
கொடிபாவத்தாலேகுறுகிடுமாண்ரெண்டுடனேமாதுநாலு. (சுகசு)

வேறு.

பஞ்சமத்திற்சிகியிருக்கஅக்கோள்தான்புகராய்ப்பரிதிமால்அர
வுடனேபதிந்திடவேலாபம், தஞ்சமாய்லாபனுமேஉயிர்தனிலேதனிக்
கச்சந்திரனுமாந்தியுடன்சாரிடங்கேந்திரமாய், விஞ்சையுடன்கருமனு
மேயேழதனில்ஆட்சிவிளங்கிடவேகாரிஉயிர்க்கொன்பதிலேதனித்
தால், வஞ்சியர்க்குவயதுரைப்பேன்நாற்பத்தெட்டினிலேவருத்தமு
டன்கண்டமதாய்வந்திடவேபலத்தால். (சுகஎ)

பெலத்திடவேவருந்தையல்காரிதிசைபாதிபேணிடுமேஆயுள்மி
குபெரியவர்நூல்மொழியால், கலக்கமுடன்சஞ்சலமுங்கனயோகபவு
சும்காரிகைதன்சிரசுஅரைகுய்யம்ஒன்றில்மருவும், குலத்தினிலேகல்
வழியர்ம்கோபியும்வஞ்சகனும்குணநலமாம் வளர்த்திசமன்கொடுக்கு
மெனச்சொல்வாம்,பெலத்திடுமேபொதுநிறமும்பெரியோர்கணன்பும்
பேணிடுவள்சிசுதனக்குப்பிழையென்றார்பெரியோர். (சுகஅ)

வேறு.

என்றனர்பெரியோர்பூர்வசெனனமெய்திடும்சிசுவதையதனால்
ஒன்றெனப்பாகனுயிர்வதையதனால்ஓதினர்சிசுவுக்குத்தோஷம்
நன்றெனஅரவுசாபமுங்கணவன்நாடியபாவமுமிகுதி
வென்றிடமுன்சொல்பாவமேதீர்த்தால்விளங்கிடும்மைந்தர்ஒன்றாகும்
ஒன்றுமேதீர்க்கம்மொழிந்தனர்பெரியோர்உதவிபெண்திரமுமொன்
றாகும், நன்றெனவயதுநாற்பத்தொன்பதினில்நாசமாம்புதல்வனாற்
கஷ்டம், உண்டென்பார்சிலதுபிறந்துதானிறக்கஓதினர்கணிதநூல
தனால், வென்றிடுங்கணவனிங்கிதன்சிவப்பன்விளங்கிடும்யோகமு
ள்ளவனே. (சுஉ0)

வேறு.

யோகமாம்அரசர்தயவினால்முயற்சிஉயர்ந்திடவரவரப்பெருகும்
ஆகமத்துடனேவித்தையில்மேன்மைஅழகிலான்அன்பிலாமனமாம்
போகபோக்கியனும்புண்ணியமனமும்பொருந்துவன்பாவமுமிகுதி
வேகமாய்ப்பாரிதனக்குமேவிரோதமேவியகணவனென்றுரையே. (1

உரைத்தனர்பெரியோர்சிசுவதைதீர் ஓதினர்சர்ப்பசாந்தியுஞ்செய்
நிறைத்திட அஞ்சுநாகரிலிங்கம்நேசமாய்ச்செய்துநீமுடித்துத்
துரைத்தனமானகணவனுமொன்றுப்ச் சொல்வதுசேதுவில்ஸ்நானம்
ம்றைத்திடாவார்மூன்றுக்குமிருந்துமணமுடன்தானங்கள்செய்யே.

செய்வதுதிலத்தால்ஓமசாந்தியுமேதிரமுடன்வளர்த்துநீமுடித்து
உய்வதுஅன்னதானமும்நெய்யாலுகந்திடக்கன்னிகாதானம்
பையவேசெய்துவந்திடத்தீரும்பாக்கியவானுமாம்பாவாய்
ஐயமில்தீர்க்கமாகிடுமென்றுஅறைந்தனர்பெரியவர்நூலால். (சுஉங)

கணபதிதுணை.

உலோககுரு

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

சோதிடம் பன்னீராயிரத்தில்

சகோதர பாவகம்.

இஃது,

எட்டயபுரம் சமஸ்தானம் மகாராஜ ராஜ ராஜபூஜித

மகாராஜா அவர்கள்

கனிஷ்ட சகோதரர்

மகாராஜ ராஜபூஜித

தங்கமகாராஜா அவர்கள்

பொருளுதவிகொண்டு,

சோதிடம்

M. சுப்பிரமணியபிள்ளையால்

சென்னை சூளை:

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1913.

Registered Copy Right.

கோள்டன் பிரஸ், மதராஸ். என். சி.

உ

பரமபதிதுணை.

உலோககுருவாகிய

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சங்கராச்சாரியம் பன்னீராயிரத்தில்

சகோதர பாவகம்.

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

விநாயகர்.

ஓதவினையகலு மோங்குபுகழ்பெருகுங்
காதற்பொருளனைத்துங் கைகூடுஞ்—சீதப்
பனிக்கோட்டுமாமலைமேற் பாரதப்போர்தீட்டுந்
தனிக்கோட்டு வாரணத்தின்றாள்.

சுப்பிரமணியர்.

குமரகுருபரனே குன்றெறிந்த வேலா
அமரர்சிறைமீட்டு மையனே—சமணர்
தனைக்கழுவிற் போட்ட சண்முகாயெந்தன்
மனக்கவலை தீர்த்தருளு வாய்.

சரஸ்பதி.

புத்தகமும்ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும்
வைத்தகமண்டலமும் வன்னிகையும்—முத்து
வடங்கொண்ட பூணினாள் வந்தென்மனத்தே
யிடங்கொண்டாள் நீங்கிற்றிடர்.

நூல்.

மாதிடப்பாகம்வைத்த வரனுமைக்கோர் காலத்திற்
காதிடத்துபதேசித்த கணிதநூற் சாரந்தன்னைச்
சோதிடச் சங்கராச்சாரி சொற்பனீராயிரத்தில்
ஓதிடப்பிறவிபாகத் துண்மையை யுரைசெய்வோமே.

வேறு.

துணைவரிற்சுபரேநிற்கிற் றுணைவர்தன்றுனத்தோனும்
வின்வியகுருதியாகி வியனுறப்பன்னென்றுறிற்
கனமுடன்மாந்திகூடிற் கருதுமோராறினோனும்
வனிதைகேள்கேந்த்ரமேறில் மாதுமூன்றுபயமாணே. (க

வேறு.

மூன்றினுக் குடையோன் பாவராயந்த மூன்றினிலிருந்
டப்பருதி, தோன்றிடத்துணைவர் யாவரும்நாசம் சொல்லலா
குருவதிலெய்தில், ஏன்றிடும்பெண்ணு மாணுமொவ்வொன்று
யிருந்திடுஞ் சகோதரத்துன்பம், ஈன்றிடுமென்றே அறையல
மிந்த யிடத்தினிற் சனியிருந்தாலே. (உ

மூன்றினுக்குடையோன் மாலவனாகி மூன்றினோன்கேந்தி
முற்றுல், தோன்றியவதனிற் பாவருஞ்சுபருஞ் சூழ்ந்திடமூன்
னில்மூன்றோன், ஊன்றிடம்சுபரா யிருந்திடத்தான முற்றவன
வன்சகோதரர்கள், மான்விழிமாது மூன்றுடன்புருடர் வருவத
மூபயமென்றறையே. (ங

வேறு

ஆரணங்கேதுணைவரின்கோளாரலாக
அவனுயிர்க்குமறையாக்கேந் திரமுற்றுலும்
பார்மூன்றில்மூன்றோனு மூன்றுங்கோட்குப்
பஞ்சமமேழொன்பானிற் பதிந்திட்டாலும்
நேரடிகள்மூன்றலது மூன்றிலாதல்
நேர்சுபர்களொருவர்தனித் திருப்பாராகிற்
பார்புகழ்மூன்றுணுடனே யுபயமாது
பலத்திடுமென்றறைந்திடுவாய் பாரில்மாதே (ச

பாவையரேயிக்கோட்க ளுடனேவேறு
பகைராகுகேதிவர்க ளொன்றாய்ச்சேரக்
காவடிகளிதிலொருசேய் குறையுமென்பர்
கடும்பாவர்பின்னுமதிற் சார்வாராகிற்
றீவரமாய்முன்போலே நீக்கிவாநீ
ஜெனனமதில்முன்னோர்கள் யாருற்றாலும்
பாவம்வருமென்றுலகில் நிற்காதேகிப்
பதியியமன்பாதமதிற் பணியுந்தானே. (ஞ)

வேறு.

மூன்றினுக்குடையோன் சென்மகேந்திரத்தில் முதுசுபர் கூடிடமூன்றில், ஊன்றியபாவ ரிருந்திடமூன்று முகந்தமுன்மாத ராய்த் தோன்றும், ஏன்றிடும்புருட ரிரண்டெனத்தரிக்கு மினியதோர் மூன்றினிற்சுபருந், தோன்றிடுமாகிற் றெகுத்தவாறெட்டுத் துணைவர்வந்துறுமெனச் சொல்லே. (சு)

மூன்றினுக்குடையோன் மாலதாய்ப்பானுமுயங்கவப்பானு வின்றனக்கு, மூன்றினோன்மறைவி லாறினோன்சுபராய் முழங்கிடப்பாம்புடனிருக்கில், ஆன்றிடுமீரெட் டுடன்சகோதரங்க ளமர்ந்திடும் ஏகமாமாது, தோன்றிடுமெல்லாற் சகலமுமழிவு தொடுத்திடுமிப்பலன் துணையே. (எ)

வேறு.

ஆதரவாய்த்துணைவரினிற் காரிசேர
அத்தான்த்தோன்பருதி காலில்மாயக்
கோதறவேமூன்றினுக்கு மூன்றுங்கோளன்
கொடியதோர்பவராகிப் பாம்போடெய்தக்
காதலியேமேடதுலை கடகந்தோன்றிற்
கருதியலக்கினமதனிற் பாவர்சேரச்
சேதமிலாத்துணைவர்தன்னோடுபயமாகுஞ்
சேரலதுவுறில்மரணஞ் செப்புமானே. (அ)

புகருடனேவுயிர்தனக்குப் பன்னோனொன்றாய்ப்
பொருந்திடக்கேந்திரமாகிப் பவர்வீடாகத்
தகரதிபன்சுபரில்லாச் சுபர்வீடாகிச்
சார்ந்திடவேமூன்றினுக்கோள் மறையாதானால்

சுகமொழியாய்தோன் றிடுஞ்சேய் துணைவர்மூன் று
சொல்லினர்பைந்தொடியாறு பார்வந்தெய்தும்
புகரும்பன்னோனுடனே பவர்வந்துற்றால்
பொன்றிடும்பெண்நாலெனவே துணைரெண்டோதே. ()

மாலோனும்உயிர்தனக்குப் பன்னோனென்றாய்
வருமிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாக
நீலனுடன்புகர்மூன்றோ னோர்வீடாகி
நின்றிடவேசுபர்வீடாய் மறையாதாகில்
தூலமுடனாரலுமே கரிவீடானால்
தோன்றிடுஞ்சேய்துணைவரஞ்சு பெண்நாலாகும்
மாலோனும்பவர்வீடாய் மறையுமானால்
மாய்ந்திடுமேவருந்துணைவர் மகிதலத்தே. (கo)

மதிமகனுமதியுடனே மூன்றோனென்றாய்
வருமிடமேசுபர்வீடாய் மறையாதாகில்
விதியுடன்பன்னென்றோனுஞ் சேயுமொன்றாய்
விளங்கிடவேபவர்வீடாய் மறையுமானால்
சதிருடன்தோன்றிடுஞ்சேய்க்குத் துணைவரொன்று
சார்ந்திடுமேபெலமாகத் தரணிதன்னில்
மதிமகன்வீடதனில்வரும் பொன்னன்மாந்தி
மறைந்திடவேவருந்துணைவர் மாயுமாதோ. (கக)

சூரியனுமதியுடனே மூன்றுனென்றாய்த்
தோன்றிடுங்கேந்திரமாகிச் சுபர்வீடாகப்
பேரிடவேவுயிர்தனக்குப் பன்னோன்சேயும்
பெலத்திடவேசுபர்வீடாயுயிர்க்கீராறில்
சீருடன்தோன்றிடுஞ்சேய்க்கு வரும்பெண்ணஞ்சு
செப்பினர்தன்றுணையிருவ ருடன்வந்தெய்துஞ்
சூரியன்வீடதனில்வருங் குளிகனுற்றால்
துஞ்சிடும்பெண்ணஞ்சென்னவே துறக்குமாதோ. (கஉ)

புந்தியுடன்மூன்றின்கோ ளோர்வீடாகிப்
பொருந்துமிடம்சுபர்வீடாய் மறையாதாகில்
வந்துயிர்க்குப்பன்னோனுங் கரியோடொன்றாய்
மறைந்திடவேசுபர்வீடாய்ச் சுபர்நோக்குற்றால்

சிந்தையுடன்றோன்றிடுஞ்சேய் துணைவரஞ்சு
செப்பினர்பெண்ணஞ்சென்வே தெரியநூலோர்
புந்தியுடன்மூன்றின்கோள் பவர்வீடானாற்
பொன்றிடுமேவுடன்வரினும் வருஞ்சேய்நாசம். (கரு)

மறையோனும்பதினோராங் கோளதாக
வருமிடஞ்சேய்வீடில்லாப் பவர்கள்சேர
விறையுமதற்குடையோனு மதிமூன்றோனும்
விளங்குயிர்க்கீராறலது உபயமானால்
முறையுடன்றோன்றிடுஞ்சேய்க்குத் துணைநாலொன்று
மொழிந்தனர்பின் பைந்தொடிநாலுபயமோது
துறையுமந்தமறைதனையே பவர்நோக்குற்றாற்
றுஞ்சிடுமாண்நாலெனவே மாதுமூன்றே. (கச)

மாதேகேள்புந்தியுடன் மூன்றோன்சேயும்
மந்திரிபான்முதுமகனும் பன்னோன்றானும்
ஓதுமுயிர்தனக்காறிற் பவர்வீடாகி
உதவிமதிதனக்கேழின் மறையாதானால்
நீதியுடன்றோன்றிடுஞ்சேய் துணைவரேழு
நேசமெனக்கன்னியுடன் மூன்றாய்ச்செப்பு
வேதன்மொழிப்படியாகக் கணிதநூலோர்
விதித்தனர்சாதகற்குமிது விளம்பென்றாரே. (கடு)

வேறு.

மந்தனும்பன்னோன்சேயும் வருமிடமறையாதாகில்
வந்துயிர்தனக்குமூன்னோன் வருமிடமதிவீடானால்
சிந்தையாய்த்துணைவரோதச் செப்பினரிருநாலாகும்
விந்தையாய்வரும்பெண்மூன்று விதித்தனர்தாணிமாதோ. (கசு)

மாதவர்மொழிநூலாலே வகுத்தனர்கணிதமாய்ந்தோர்
வேதமாய்ப்பன்னோன்றானும் விரைவுடன்பவர்வீடுற்றால்
சேதமாந்துணையென்றோதச் செப்பினரிருமூன்றாகும்
ஓதினர்வரும்பெண்ரெண்டு உயிருடன்நாசங்காட்டும். (கஎ)

வேறு.

கரியுடனேபன்னோனுங் கொடியகோளும்
கருதிடமேபுகர்வீடாய்க் கலக்கவக்கோள்
சரியுடனேமதிவீடாய்த் தரிக்கப்பொன்னன்
சார்ந்திடமுமொன்றாகச் சேரப்பாம்பு

வருமுயிருக்கிரண்டாகி யுடன்சேயானல்
வந்திடுநால்மூன்றெனவே துணையென்றேது
விரிகுழல்மங்கையர்மூன்று உடன்வந்தெய்தும்
மேதினியிற்கணிதநூல் விளம்புமேலோர். (கஅ)

மேலவருஞ்சொல்லியதோர் பன்னேன்கேது
விளங்கிடவேஅட்டமமால் மறையவக்கோள்
சீலமுடன்தோன்றியதோர் வரினுங்கோளன்
சேருமனைபலமாகி மறையுமானல்
தூலமுடன்வந்திடுமேழ் துணைபெண்மூன்றில்
துஞ்சிடுநாலொன்றுதுணை மாதுமூன்று
சாலவேமாயுமெனக் கணிதமாய்ந்தோர்
சாற்றினரிப்படிக்குத் தரணிமீதே. (கக)

வேறு

மதிமகனிலாபனென்றுப் வருமிடமால்வீடாக
விதியுடன்பன்னேன்வீட்டில் விளங்கிடக்கரிவந்துற்றால்
சதிருடன்மூன்றேன்சேயும் சாரிடமுயிர்க்காறுகில்
துதியுடன்முன்பின்நாசந் தோன்றிடுந்துணைவரொன்றே. (உ0)

வேறு.

புந்தியுமேவுயிர்தனக்கு மூன்றேனுகிப்
பொருந்துமிலக்கனந்தனக்கு மறைந்தேஆட்சி
வந்திடவேஓர்பவர்க ளுடனென்றுகி
வரவவற்குயிராறிற் புகர்சேயானல்
சிந்தையுடன்மூன்றுதுணை மாதுநாலு
செப்பினர்களாகமநூல் வழியென்றேது
புந்திமனைதனிற்கடுங்கோள் வளருமானல்
பொன்றிடும்பெண்மூன்றுதுணை யுபயமேகம். (உக)

வேறு.

மறையவன்மூன்றேனுகி வருமுயிர்தனக்குலாபன்
விரைவுளதானந்தன்னில் விளங்கிடப்பன்னேன்நீசம்
முறையுடன்மூன்றேன்றன்னை முதுமகன்விழிநோக்குற்றால்
அறைதுணைபெண்களெல்லா மழியுமாண்வளருமொன்றே.(உஉ)

வேறு.

மதிமகனுங்குருவீடாய்த் தரிக்கவெள்ளி
வந்திடவேசூரியனும் பதினொன்கோளும்
விதியுடனேஒன்றாகித் தனிக்கவக்கோள்
விளங்கியகேதுடன்மூன்றோன் வளருகேந்த்ரஞ்
சதிருடனேசேயரவு உயிர்க்குநாலிற்
சார்ந்திடவேமால்தனக்கு யீராறுற்றால்
பதிதனில்வந்தெய்திடுமே துணைபெண்நாசம்
பகருமெனவாகமநூற் படியென்றோதே. (உங)

வேறு.

சூரியன்பன்னோனாகித் தோன்றிடமுயிர்க்குமூன்றாஞ்
சீருடன்தானமாகிச் சேர்ந்திடமூன்றோனீறிற்
காரிசேய்மதியொன்றாகிக் கருதிடமறையாதாகிற்
கூறினர்வளருஞ்சேய்க்குக் குறித்தனர்துணைவரோதே. (உச)

ஓதினருலகந்தன்னி லுரைத்தனர் துணைவர்மூன்றும்
நீதமாயிருபெண்ணென்று நிகழ்த்தினர் கணிதநூலோர்
வேதமாய்மூன்றோன்வீட்டில் விளங்கிடக்கொடுங்கோள்வந்தால்
சேதமாந்துணைப்பெண்ணெல்லாஞ் செத்திடுந்தாணிமீதே. ()

வேறு.

சூரியன்மால்மூன்றின்கோள் சேய்பன்னோனும்
தோன்றுமிக்கோளோர்மனையா யுயிர்க்குமூன்றாய்ச்
சீரியஅட்டமமாயீ ராறுபன்னோன்
சேருமிந்தத்தானமதி லிவர்வந்துற்றால்
கூறினர்சேய்நால்துணைவர் மாதுமூன்று
கொள்ளுமெனத்தோன்றியசே யுடன்வந்தெய்தும்
வீரியமாயோர்துணைவர் மாதுமூன்று
விதித்தனரால்நாசமெனக் கணிதமோதே. (உசு)

வேறு.

சூரியன்சேய்மால்மூன்றோன் தோன்றுமிக்கோளொன்றாகச்
சாரிடம்மூன்றாறெட்டுத் தானமாய்வளரவிக்கோள்
கூறியபன்னோனுச்சங் குறுகிடத்துணைநாலொன்று
சீருடனிரண்டுபெண்கள் செனித்திடும்நாசம்பெண்ணே. (உஎ)

வேறு.

மதியுடனேபன்னேன்நா லேழுபத்தில்
வந்திடவேபதினென்றில் வளரப்பாம்பு
சதிருடன்சேய்மூன்றிலக்கோள் கொடியோன்மாந்தி
சாருமிடமறையாமல் மதிக்குப்பன்னேன்
துதிபெறவேதானமதில் வளரவந்த
தோன்றியசேய்மூன்றுதுணை மாதுநாலு
விதியுடனேதோன்றியதோர் துணைமாதெல்லாம்
விதித்தனரால்நாசமெனக் கணிதமோதே. (உ

மாலுடன்சேய்மூன்றினுக்கோ ளுயிர்பன்னேனும்
வளருமிக்கோள்மதிகேந்த்ர மூயிர்க்கொன்பானுய்ச்
சீலமுடனதற்குடையோ னுட்சியுச்சம்
சேர்ந்திடவேதோன்றியசேய் துணைரெண்டொன்று
கோலவிழிமாதரும்நா லுடன்வந்தெய்துங்
குறுகியசேயவன்றனக்குக் கணிதவாய்மை
தூலமுளமாதுடன்நால் துணையிரண்டு
துஞ்சிடுந்தப்பாதெனவே தரணிமீதே. (உ

வேறு.

மாந்திபன்னேனும்வருமனே பலமாய் வந்திடவதனின்கோ
மறையாய், சார்ந்துயிர்தனக்கு மூன்றினேன்சுபராய்ச் சாரிட
கேந்திரம்வருமால், எந்தியகுருதி யிலாபக்கோடனக்கு யிரு
திடமறைந்திடுமாகில், சேர்ந்திடுந்துணைவர் நாசமாமாது செத்
டுமோர்துணைமாதே. (ந

மந்தன்வீடதனில் வருமுயிர்மூன்றேன் மறைந்திடமந்
னும்புதனுல், சிந்தையாய்முன்பின் சுபர்வரப்பின்னிற்சேர்ந்திட
வோர்பவர்வருகச், சந்திரன்குருதி லாபக்கோளுடனே தரித்
டப்பன்னென்வீடுற்றுல், வந்திடுந்துணைப்பெண்நாசமாமெனவே
வகுத்தனர் பெலமதாய்மாதே. (ந

வேறு.

சந்திரன்பன்னேனுடனே உபயந்தன்னிற்
றரித்திடவேஉபயதிபன் சாரவொன்றுய்
வந்துயிர்க்குமூன்றினுக்கோள் வளரவுச்சம்
வருமதிபன்நீசம்வரச் சுபர்களோடு

சிந்தையுடனுயிர்தனக்கு மூன்றின்மூன்றின்
சேரவேவொருபாவர் தரிக்குமாகில்
வந்திடுஞ்சேயவன்றனக்கு முன்பின்நாசம்
வரவவன்தானேகனென வழுத்தலாமே. (கூஉ)

வேறு

சூரியன்மூன்றுனகித் தோன்றிடமூன்றுறெட்டிற்
சாருயிர்தனக்குப்பன்னேன் சாரிடம்நீசமெய்திச்
சீருடன்செம்பாம்பொன்றுய்ச் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குக்
கூறினர்துணைபெண்நாசம் குறித்தனரேகஞ்செப்பே. (கூகூ)

வேறு.

நீலனுமூன்றுனகி யாட்சியுச்சம்
நின்றிடவேவுடனெவர்கள் தரியாதாக
மாலவனுமுயிர்தனக்குப் பதினேன்கோளாய்
வளருமிடமதிபனுட யில்லமாகச்
சீலமுடனதற்குடையோன் பவர்களோடு
சேரிடம்ரெண்டாறெட்டுப் பதினேன்றுனல்
சாலவேவுடன்வரினுந் துணைவர்மாது
சாய்ந்திடுமேதனக்குமுந்தி மரணங்காட்டும். (கூச)

சூரியன்தன்னுடன்சுபர்கள் பன்னேன்றன்னில்
தோன்றப்பன்னேராங்கோள் தோன்றுமில்லஞ்
சாருயிர்க்கஞ்சொன்பதுவாய்த் தனிக்கமூன்றுேன்
சற்குருவீடதில்வளரப் பவர்கள்சேரப்
பாருயிர்க்குமூன்றதுவே சுத்தமாயப்
பதியவர்க்குமூன்றதனிற் பவர்வந்துற்றுல்
கூறியசேயுடன்வரினுந் துணைப்பெண்ணெல்லாங்
குறுகிடுமேதனக்குமுந்தி யழியுமாதே. (கூரு)

சுங்கனுமேமூன்றுனய் நாலதாகித்
தோன்றிடவேவுடன்மறைசேய் மாந்திசேரச்
சந்தையுடனுயிர்தனக்குப் பன்னேன்கோளன்
சாரிடங்கேந்திரம்வரா முன்பின்பாம்பு

தங்கிடவேவுயிர்தனக்கு மூன்றுபன்னேன்
தானமதிற்பாவருமே தரிக்குமாகில்
துங்கமுடன்தோன்றியதோர் துணைவர்மாது
துஞ்சிடுமேதனக்குமுந்தி நாசம்செப்பே. (௩௬)

மாலவனுமுயிர்தனக்கு மூன்றேனுகி
வளருமிடமூன்றெட்டுத் தானஞ்சேரச்
சீலமுடன்பதினென்றி லரவுதிங்கள்
சேர்ந்திடப்பன்னேராங்கோள் சேருமில்லம்
மாலவன்வீடலதுபரி வீடேயேகி
வரும்பவர்களுடனெவர்கள் தனிக்குமானல்
தூலமுடன்றனக்குமுந்தி துணைவர்மாது
துஞ்சிடுமேஓர்துணைவர் பெலமென்றேதே. (௩௭)

மந்தனுமூன்றேனுகி வளருமில்லம்
மதிமகன்வீடலதுபரி வீட்டிலேக
வந்துயிர்க்குப்பன்னேன்கோள் சுபரதாகி
வருமிடங்கேந்திரம்வளரத் தனிக்குமாகில்
விந்தையுடனுயிர்தனக்கு மூன்றுபன்னேன்
விளங்குமனைசுத்தமதாய் வரினுமானல்
முந்தியசேயுடன்வளராண் துணைவரொன்று
மொழிந்தனர்மாதிருமூன்று உடன்வந்தெய்தும். (௩௮)

எய்துமெனத்தோன்றியசேய் தனக்குமேலோர்
இசைகணிதவகைகடெரிந் துரைக்கலானர்
மெய்யுயிர்க்குலாபக்கோ ளுடனெக்கோட்கள்
விளங்கிடவேசுபராகி மறையாதானல்
மொய்குழலாயிருமூன்று துணைவரஞ்சு
மொழிந்தனர்களேகமுடன் நாசங்காட்டும்
பையரவுபன்னேன்கோ ளுடன்வந்துற்றல்
பார்விளங்குஞ்சேய்துணைமா தொழியுமுந்தி. (௩௯)

சுக்கிரனும்பன்னேன்கோ ளாகிச்சொந்தந்
தோன்றுமனைதனில்வளரச் சுபர்கள்நோக்கா
மிக்கதெனவுயிர்தனக்கு மூன்றேனேடு
வெய்யவனுந்தேர்ப்பாகன் விளங்குமில்லம்

தொக்குமிலக்கனந்தனக்கு மூன்றுறெட்டு
தோன்றிருவோர்தானமதில் நிற்குமானால்
மைக்கருங்கண்விழியணங்கே வுடன்வந்தெய்தும்
மாதர்துணைநாசமென மரணமுந்தி. (சo)

சூரியன்மூன்றுடையோனாய்ப் பன்னேன்கோளுந்
தோன்றியமாவரவுடனே யிவர்களொன்றாய்ப்
பாருயிர்க்குமூன்றலது யீராறெட்டிற்
பகருமித்தானத்தில்வரச் சுபர்நோக்கில்லா
கூறியசேயவன்றனக்குத் துணைவர்சுத்தம்
குறித்தனர்களேகமென வளருமென்றே
சீருடனேமூன்றுங்கோ ளரவுமால்சேய்
சேருமிக்கோளுயிர்தனக்கு உபயஞ்சேர. (சக)

சேருமெனவுபயரெட்டி யிரட்டியாண்தான்
செப்பினர்கள்மாதிருமூன் றுகுமென்றே
கூறுமெனவுயிர்தனக்கு மூன்றுசுத்தம்
குறுகுதற்குமூன்றதனிற் கொடியோன்வந்தால்
சீருடனுண்நாலெனவே மாதிரண்டு
சேதம்வருமிதுதவறு தெனவென்றோதி
ஆரியன்மேலாணையெனக் கணிதநூலை
ஆய்ந்தோர்களறைந்தனர்க ளவனிமீதே. (சஉ)

மானுயிர்க்குமூன்றோனாய் மறையோனில்லம்
வரவவர்தன்னுடன்புகர்சே யிவர்கள்சேரச்
சீலமுடன்மாலிருந்தோ னிலாபந்தன்னிற்
சேர்ந்திடவேபன்னேன்கோள் பரிவீடுற்றால்
கோலவிழிமாதுபய மிரட்டியாகுங்
குறித்தனர்கள்வருந்துணைவ ருபயமேகம்
தூலமுடன்தோன்றியசேய் தனக்குமுந்தி
துஞ்சிடும்பெண்நாலெனவே துணையிரண்டே. (சங)

மதிமகன்மூன்றுடையோனாய் மறைந்துநீசம்
வந்திடவேவுடனொருகோள் சுபரேயாகச்
சதிருடன்மூன்றும்வீடு சுத்தமாகச்
சாருமந்தவீட்டினுக்கு மூன்றின்கோளான்

விதியுடனேவுயிர்தனக்கு லாபந்தன்னில்
விளங்கிடவேஅதற்குடையோன் மறையாதானால்
அதிபதியாயோர்துணைவ ருடன்வந்தெய்தும்
ஆகமசாஸ்திரப்படியே பெலமென்றோதே. (சச)

மூன்றுடையோன்மறையவனு யேகுமில்லம்
மூன்றலதுநாலலது ஏழிலாகத்
தோன்றுயிர்க்குப்பன்னோன்கோள் பவரதாகித்
தொல்புகர்மாலுடனுயிர்க்குமறையாதானால்
மூன்றுதுணையுடன்வரினு மாதுநாலு
மொழிந்தனர்களிதுதவறு தெனவென்றோது
தோன்றுயிர்க்குமூன்றுசுத்தம் லாபங்கேது
துஞ்சிடுமேமாதுதுணை தனக்குமுந்தி. (சரு)

மந்தனுமூன்றுங்கோளாய்ப் பன்னோன்கோளும்
வருமிவர்களுயிர்தனக்கு மூன்றுறெட்டில்
வந்திடவேமிவர்களுக்கு முன்பின்பாவர்
வாய்த்திடவேதோன்றினபெண் தனக்குமேலோர்
விந்தையாயுடன்வரினுந் துணைவர்நாலு
விளங்கியபெண்ணுபயமொன்று வரினுமாகும்
சிந்தையுடன்மூன்றுசுத்தம் லாபஞ்சுத்தம்
சேதமெனவிரண்டுதுணை மாதுமூன்றே. (சசு)

மறைவுயிர்க்குமூன்றோனுய் நீசமேறி
வந்திடவேவுடனொருகோள் பவர்கள்சேர
விரைவுடனேவுயிர்தனக்குப் பதினோராங்கோள்
விளங்குயிர்க்காறெட்டுப்பன் னிரண்டிலேகி
முறையுமவருடன்மதிமா லலரிசேர்ந்தால்
மொழிந்திடுஞ்சேயவன்றனக்குத் துணைவர்மாது
உறையுமென்றாரரவாலே அழியுமென்று
ஓதினர்கள்கணிதமொழிப் படியாய்மேலோர். (சஎ)

சந்திரனுமுயிர்தனக்குப் பதினோராங்கோள்
சாருயிர்க்குக்கேந்திரமாய் மறையோன்வீடாய்
வந்திடவேஅதற்குடையோ னுயிர்க்குமூன்றில்
வாய்த்திடவுமுடன்கொடியோன் வளரமூன்றோன்

விந்தையுடன்மறைந்திடவே வரினுஞ்சேய்க்கு
விளங்குமெனவுடன்வரினுந் துணைமாதெல்லாஞ்
சிந்தையுடன்நாசமெனத் தனக்குமுந்தும்
செப்பினர்களிதுதவறு தெனவென்றேதே. (சஅ)

மாந்தியரவுடனுயிர்க்கு லாபந்தன்னில்
வந்திடவேபன்னோன்கோள் மறைமால்பானுஞ்
சார்ந்திடமுமேழொன்பான் மூன்றதாகித்
தரித்திடவேசுபர்பவர்கள் நோக்காதாகில்
ஆர்ந்துயிர்க்குமூன்றுங்கோள் மறையன்வீட்டி
லமர்ந்திடவேதோன்றியசேய் துணைவரொன்று
சேர்ந்திடும்பெண்ணிரண்டெனவே தரணிமீது
செப்பியபெண்நாசமெனத் துணைவர்மோசம். (சகூ)

மூன்றுடையோன்வரும்புகராய்ப் பன்னோன்கோளும்
மூன்றலதுஆறலது எட்டிலேகப்
போன்றுயிர்க்குப்பதினோரா மில்லந்தன்னிற்
பொன்னனிருந்திடக்குருதி தரிக்குமானால்
மூன்றுடனேவருந்துணைவர் மாதுமூன்று
மொழிந்தனர்களுடன்வரினுங் கணிதமாகத்
தோன்றுயிர்க்குமூன்றதிலே பவர்வந்துற்றால்
துஞ்சிடுமேவுபயதுணை மாதிரண்டே. (ரு0)

மாந்தியுடன்வருங்குருதி பதினொன்றேகி
வந்திடவேலாபக்கோ ளுயிர்க்குமூன்றிற்
சார்ந்திடவேமூன்றுங்கோள் புகரதாகிச்
சந்திரன்பாம்புடன்கூடி மறையாதானால்
வாய்ந்திடுஞ்சேயவன்றனக்குத் துணைவர்மாது
வகுத்தனர்கள்நாசமெனக் கணிதமாகத்
தோய்ந்திடுமேயேகமெனத் தனிப்பானென்று
சொல்லினர்கள்சோதிடநூ லாய்ந்தமேலோர். (ருக)

வேறு.

சூரியன்மூன்றேனொன்றாய்த் தோன்றிடவுயிர்க்கீராறிற்
சாரிடஞ்சுபர்வீடாகித் தரித்திடவக்கோள்தானும்

சீருடனுதயமேறிச் சேர்ந்திடமால்சேயுற்றால்
கூறினர்துணைவர்சுத்தங் குறித்தனர்வரும்பெண்செப்பே. (நுஉ)

செப்பிடும்பெண்ணிரண்டாய்ச் சேர்ந்திடுங்கணிதமாகத்
தப்பிடாதெனவேமூன்றிற் றனித்திடக்குளிகன்வந்தால்
இப்படிப்பிறக்குஞ்சேய்க்கு இசைத்தனர்வரும்பெண்நாசம்
துப்பிதழாய்கேள்மூன்றோன் தோன்றிடவுதயம்வந்தால். (நுங)

வேறு.

மதிஷ்டனேவுயிர்தனக்குப் பன்னோன்றானும்
வருமிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாகச்
சதியுடனேவுயிர்தனக்கு மூன்றோன்சேயுஞ்
சாருமனைசுபமாகிச் சுபர்வந்துற்றால்
விதியுடன்தோன்றிடுஞ்சேய்க்குத் துணைநாலொன்று
விதித்தனர்பெண்ணுடன்வரினு மிருநாலொன்று
மதியுடன்பன்னோனுமொன்றாய் மறையுமாகில்
மாய்ந்திடும்பெண்ணெனத்துணைவர் மூன்றாய்ச்செப்பே

வேறு.

குருதியுஞ்சசிபன்னோனுங் குறுகிடமறையாதாகில்
வருமுயிர்தனக்குமூன்றோன் வருமிடஞ்சுபர்வீடுற்றால்
சுருதியாய்த்தோன்றுஞ்சேய்க்குத் துணிவுடன்துணைவர்மூன்று
கருதியமாதுமூன்றே கருத்துடனுடன்வந்தெய்தும். (நுரு)

சூரியன்கரிமால்மூன்றோன் சுக்கிரன்மறையோடொன்றாய்ச்
சாரிடஞ்சுபர்வீடாகித் தரித்திடச்சுபர்நோக்கில்லாச்
சீருடன்பன்னோன்சேயுஞ் சேரிடம்மறையாதானாற்
கூறினரிருநாலொன்று குறித்தனர்தரணிமாதே. (நுசு)

மாதவர்மொழியால்மங்கை வருவதுவையமீது
வேதனுமிருமூன்றென்று விதித்தனர்கெணிதமாய்ந்தோர்
ஓதுயிர்தனக்குமேபன் னொன்றினிற்குளிகன்வந்தால்
சேதமாந்துணைமூன்றாகச் செப்பினரஞ்சுபெண்ணே. (நுஎ)

குருதியுமூன்றோன்கேதுங் குறுகிடமறையாதாகில்
வருமுயிர்தனக்குமேபன் னொன்றினிற்பவர்வந்துற்றால்

சுருதியுமுணர்ந்தமேலோர் சொல்லுவர் துணையாஞென்று
கருதியேவரும்பெண்ணைந்து கருத்துடன்வளருமாதே. (நுஅ)

மாதவர்மொழியாற்செப்ப வகுத்தனர்கணிதமாய்ந்தோர்
போதவேஅரவுமாந்தி பொருந்துமில்லுயிர்க்குமூன்றாய்
சீதமார்சுபர்வீடாகிச் சிறந்திடத்தோன்றுஞ்சேய்க்குச்
சேதமாந்துணைப்பெண்ணெல்லாஞ் செத்திடுந்தரணிமீதே. ()

மதிமகன்மூன்றின்கோளும் வருமிடங்கரிவீடேக
விதியுடனுயிர்க்குப்பன்னேன் விளங்குகேந்திரமேயாகுச்
சதிருடனுதயந்தன்னிற் றனித்திடச்சேய்வந்துற்றாற்
பதித்னில்வளருஞ்சேய்க்குப் பகர்ந்தனர் துணைவர்மாயும். (சூ0)

மாயுமென்றுரைத்தார்மேலோர் வரும்பரிவுயிர்க்குமூன்றில்
தீயதாய்த்தனிக்குமாகிற் செப்பினர்மங்கையொன்று
தூயதாய்விதவையாகித் தோன்றிடும்பெலமதாகச்
சேயுடன்கரிமால்சுங்கன் சேருமோரில்லம்வந்தால். (சூக)

வந்திடுமிக்கோள் தானும் வருமிடமுயிர்க்குமூன்றாய்
விந்தையாய்ப்பன்னென்றெட்டு விளங்கியதானந்தன்னிற்
சிந்தையாய்ச்சுபர்நோக்கில்லா திருந்திடப்பிறந்தசேய்க்கு
வந்திடுந்துணைவர்சுத்தம் வகுத்தனர்தரணிமீதே. (சூஉ)

வேறு.

மூன்றுடையோன்பவர்சுபராய்ப் பரிமாலோடு
முயங்கிடவுங்கேந்திரமாய்த் தரிக்குமாகில்
ஆன்றுயிர்க்குலாபக்கோள் மறையோனாகி
அமரப்பாம்புடன்கூடி யுதயஞ்சேர்ந்தால்
மூன்றுடனேயேகமெனத் துணைவர்தோன்றும்
மொழிந்தனர்பெண்யேகமென வுடன்வந்தெய்தும்
தோன்றுதயந்தனக்குமூன் றிந்துமாந்தி
தோன்றிடவேமூன்றுதுணை தொலையுமாதே. (சூங)

மறையோனுமுயிர்தனக்கு மூன்றோனாகி
வருமுயிர்க்குப்பதினென்றிற் றனிக்கவக்கோள்
விரைவுடனேவுயிர்தனக்கு மூன்றுறெட்டில்
விளங்கிடவேவுடனெவர்கள் தரியாதானால்

முறையுடன்வந்திடுஞ்சேய்க்குத் துணைவரஞ்சு
மொழிந்தனர்மாதுடன்மூன்றே வுடன்வந்தெய்தும்
மறையுடனேகொடும்பவர்கள் தனிக்குமானால்
மாய்ந்திடுமாண்மூன்றுடனே மாதிரண்டே. (சுச)

வேறு.

மதிமகன்வீட்டிற்பாம்பு மாந்தியுமதனிற்சேர்ந்தே
விதியுடனென்பான்றன்னில் விளங்கிடக்குருதியானால்
சதிருடன்பிறக்குஞ்சேய்க்குச் சாரிருதுணைவர்நாசம்
அதிகமாமிளையகன்னி யமர்ந்திடுந்தரணிமீதே. (சுரு)

குருதியும்புகர்வீடேகக் குளிர்மதிவீட்டிற்பாம்பு
சுருதியாய்த்தனிக்கவக்கோள் தோன்றிடநீலனோடு
வரும்ரவியதனிற்சேர்ந்தால் வருந்துணையிரண்டேயாகும்
கருதியமாதுமூன்றாய்க் கருத்துடனுதயங்காட்டும். (சுசு)

குருதியும்பதினென்றோனுங் குளிர்மதியுடனென்றாகிப்
பருதிமால்புகர்வீடானாற் பகரலாந்துணைவர்நாசங்
கருதிநல்லிறைவனாறிற் கதித்துமோரில்லமானால்
வருவதுகன்னியொன்றாய் வகுத்தனர்கணிதநூலோர். (சுஎ)

வேறு.

மாலவன்குருதி மிறையவன்புகரும் வருந்துணைத்தானம்வந்திடுகில், சாலவேகாரி யம்புலியுடனே சாரிடம்பாவர்களில்லம், தூலமாய்ப்பிறக்குஞ் சேயுடன்துணைவர் தொகுத்தனரொன்று மஞ்சதனால், மாலவன்குருதி யிறையவன்புகரும் வருமுயிர்க்கே ழினில்வருமால். (சுஅ)

வருந்துணைத்தானஞ் சுத்தமெய்திடலால் வருந்துணையொன்றிரண்டாகும், பொருந்திடுஞ்சுபர்கள் பாவரும்நோக்கப்பொற்புடன் பிறந்திடுஞ்சேய்க்கு, வருந்துணையொன்று வகுத்தனர் மேலோர் மாந்தியு மரவம்வந்திடுகில், இருந்திடும்பவராற் சுப மிலாதாகி லிரண்டுபெண் ணுண்டெனவியம்பே. (சுகூ)

குருவுஞ்சேய்மதியு முயிர்தனக்கேழிற் குறுகிடக்கடும்பவர் வரினும், வருமுயிர்தனக்கு மூன்றினென்கிரகம் வரும்பவர்சுப

ரிலாதிடுகில், கருதியேயுதிக்குஞ் சாதகன்றுணைவர் கருமனுமிவ
ன்பினும்நாசம், குருவுசேயரவ மேழினில்வருமால் கொடுத்திடுந்
துணைவர்கள்மூன்றும். (எ0)

வேறு.

குருதியுமூன்றினோனுங் குருவுடன்பவர்வீடாக
வருதியாய்த்துணைவரில்லம் வளமுடன்சுத்தமெய்தக்
கருதியேயுதிக்குஞ்சேய்க்குக் கருத்துடன்துணைவர்சுத்தம்
பருதிபோற்கன்னியொன்று பகர்ந்தனருடன்வந்தெய்தும்.(எக)

வேறு.

இறையவன்மதியு மரவமுமொன்று யிருந்தது பாவர்வீ
டாக, முறைவுயிர்த்துணைவன் வீடதிற்சுபர்கள் முன்பினும்பா
வர்களிருக்க, மறையவன்றனக்குப் பாக்கியம்நாலில் மால்குரு
பூமன்வந் துதித்தால், விரைவுடனொன்று வருந்துணையென்று
மேலவர்கணிதனூன் மொழியே. (எஉ)

குருதிமால்புகருங் குருவுங்கேதுடனே கூடியோரில்லம்வந்
திடினும், சுருதியாய்த்துணைவர் தானமேசுத்தந் தோன்றிடப்
பிறந்திடுஞ்சேய்க்குக், கருதியதுணைவர் நாலுமஞ்சாகக் கருத்து
டன்வருமென மொழிந்தார், குருதிமால்புகருங் குருவுமேமறை
ந்தாற் கொன்றிடுந் துணைவரென்றோதே. (எங)

வேறு.

பருதியுமாரலோடு பார்க்கவனில்லஞ்சேரச்
சுருதியாய்மூன்றின்கோளன் துணிவுடன்கொடுங்கோளோடு
வருமுயிர்தனக்கோரேழில் வந்திடச்சுபர்வீடானால்
கருதியேயுதிக்குஞ்சேய்க்குக் கருத்துடன்துணைவர்மூன்றும். ()

மூன்றுடன்துணைவர்தாமும் மொழிந்தனர்கன்னிரண்டாய்
யீன்றிடுந்துணைவர்நாச மென்றனர்கணிதனூலோர்
என்றதாய்ப்பதினொன்றோனு மிறையவனோடுசேர்ந்தால்
தோன்றியமாதிரண்டு துணிவுடன்பெலமதாகும். (எரு)

குருதியுமூன்றினோனுங் குருவுமேகரிவீடானால்
வருமுயிர்தனக்கோரஞ்சில் மதிமகன்பாம்போடுற்றால்

கருதியேபிறக்குஞ்சேய்க்குக் கருத்துடன் துணைவரஞ்சாம்
சுருதியாய்க்கன்னிரண்டாய்த் துணிவுடன்பிறக்குமாதே. (எசு)

குருதியுமூன்றினோனுங் குருவுநோய்முகனுமொன்றாய்
வருமிலக்கினத்துக்காறில் வந்திடக்குளிகன்றானுஞ்
சுருதியாயுயிர்க்குமூன்றிற் றுணிவுடன்தனிப்பானாகில்
வருவதுதுணைவர்நாசம் வகுத்தனர்யேகமாகும். (எஎ)

வேறு.

குருதியுமூன்றோன் காரிவீடதனிற் குறுகிடமுன்பினுஞ் சுத்தம், கருதியேமதியு முச்சவீடதனிற் கதித்துமேதனித்திடு மானால், வருமுயிர்தனக்குச் சோதரமொன்று வகுத்தனர்மாதிரண்டுடனே, உறுதியாய்வந்த சோதரத்துன்ப முரைத்தனர் கன்னியர்நாசம். (எஅ)

வேறு.

குருவுடன்மூன்றினோனுங் கொடியவனுடனேகூடி
வருமிலக்கினத்துக்காறில் வந்திடச்சுபர்வீடாகச்
சுருதியாய்மதியுஞ்சேயுந் துணிவுடன்மறையாதாகில்
பெருமுயிர்த்துணைவரொன்று பேசினர்கன்னியஞ்சாய் (எகூ)

குருதியும்புகர்வீடேகக் குளிகனுங்குருவீடாக
வருமிலக்கினத்திற்பொன்னன் வந்திடப்பவர்வீடுற்றால்
சுருதியாயுதிக்குஞ்சேய்க்குத் துணிவுடன் துணைவர்மூன்று
உறுதியாய்க்கன்னியொன்று யுதித்திடுந்தரணிமீதே. (அ0)

மாதவர்மொழியென்றோத வருந்துணைதானுஞ்சுத்தம்
வேதமாயிருப்பதானால் விரைவுடன்பிறந்தசேய்க்குச்
சேதமென்றுரையிரண்டு செப்பினர்துணைவராகும்
போதவேகன்னியொன்று பொன்றிடுந்தரணிமாதே. (அக)

குருதியுமூன்றினோனுங் குளிர்மதியுடனொன்றாகி
வருமிலக்கினத்துக்கெட்டில் வந்திடச்சுபர்வீடாகக்
கருதியகுருவுங்கேதுங் கலந்துமோரில்லமானால்
பெருகுநற்றுணைவரஞ்சு பெண்சகோதரியுமாறே. (அஉ)

வேறு.

மந்தனுமாலோ டேகியெவ்வீட்டில் வந்திடமூன்றின்கோ
ளுடனே, விந்தையாய்ச்சசிவீ டாகியேகுருவும் விளங்கிடமறை
ந்திடாதாகில், வந்திடுஞ்சேய்க்குத் துணைவரைந்தாக வகுத்த
னர் கன்னிமூன்றுடனே, சிந்தையாய்த்துணைவ ரிரண்டுதான்
நாசஞ் சேதமுங்கன்னியொன்றுமே. (அங)

கரியவனருணன் மூன்றினோனுடனே கலைமறைசுக்கிரன்வீ
டால், சரியுடன்பருதி சுபருடன்கூடிச் சாரிடங்கேந்திரத் துறு
மால், வருமுயிர்சேய்க்குத் துணைவரஞ்சாக வகுத்தனர்கன்னி
நாலுடனே, குறுகிடத்துணைவர் துஞ்சிடுமதனிற் குறித்தனர்
கன்னிமூன்றொழியும். (அச)

முதுமகன்மாலோன் மூன்றினோனுடனே மூன்றுமாறெட்
டினில்வருமால், சதிருடன்மாலோன் சுபருடனொன்றாய்ச் சாரி
டஞ்சுபர்மனைமறையால், விதியுடன்பிறக்குஞ் சோதரமைந்தாய்
விதித்தனர் கன்னிநாலுடனே, பதிதனில்வருமால் துணைவர்கள்
நாசம் பகர்ந்தனரொழியுமேகன்னி. (அடு)

பருதிமால்குருசேய் சுபர்கள்வீடதனிற் பதிந்திடச்சுபர்
கள்நோக்கிடுமால், கருதியேமூன்றோன் சுபர்களோடேகிக் கண
க்கன்வீ டதனிலேமறையச், சுருதியாய்ப்பிறக்குஞ் சாதகன்றன
க்குத் தோன்றிடுந் துணைவரைந்துடனே, உறுதியாமென்று
கணிதநூல்விதியா லோதினர் பெரியவர்மொழியால். (அசு)

மதிமகன்குருவு மூன்றின்கோளுடனே வருமிடங்கேந்திரத்
துறுமால், விதியுடன்குருதி வளருகேந்திரத்தில் மேவிடச்சுபர்
மனைவருமால், சதியுடன்பிறக்குஞ் சாதகன்றனக்குச் சாற்றினர்
துணைவரொன்றாகும், அதிகமாங்கன்னி நாலுடன்வருமா லமர்ந்
திடக் கன்னிரண்டொழியும். (அஎ)

குருவுமால்மூன்றோ னுயிரின்கோளுடனே குறுகிடக்கேந்
திரத்துறுமால், வருமிலக்கினத்துக் கேழினிற்குருதி வந்திடச்
சுபர்கள் நோக்கிடுமாம், சுருதியாயுதிக்குஞ் சாதகன்றனக்குத்
துணிவுடன் துணைவரொன்றாகுங், கருதியகன்னி யஞ்சதிற்க
ழிவு கன்னியுமூன்றுதானொழியும். (அஅ)

வேறு.

சூரியன்மால்பொன்னுடனே வுயிர்க்குநாலிற்
ரேன்றிடவேமூன்றின்கோள் சுபர்வீடாக
வீரியமாயுயிர்க்கேழிற் குருதிமேவ
விளங்குமிக்கோள்தனைப்பாவர் விழியால்நோக்கப்
பாருலகில்வருசேய்க்குத் துணைவரொன்று
பகர்ந்தனர்கள் கன்னியஞ்சு கொடுக்குமேனும்
நாரியரில்வருசேய்க்கு வுடன்வந்தெய்தும்
நாசமெனவிரண்டுடனே நாடிச்சொல்லே. (அகூ)

பீதகன்மால்மூன்றினுக்கோ ளோர்வீடாகிப்
பின்னுமுன்னுஞ்சுத்தமதாய்ச் சுபர்வீடாக
ஓதிடுஞ்சேய்பொன்னவன்றன் வீடதானால்
உயிர்கடுங்கோள்முன்பின்னு முடன்வந்தெய்தச்
சாதகன்றன்துணைவரைந்து கன்னிரண்டு
சாற்றினர்கள் கன்னியொன்று துணைவர்மூன்று
சேதமெனத்தெரிந்துரைத்தார் கணிதநூலோர்
திறமுடனேயிப்பலனைத் தெரிந்துசெப்பே. (கூ0)

புந்திபரிபொன்னுடனே வுயிர்க்குநாலிற்
பொருந்திடவேசுபர்வீடாய்ச் சுபர்நோக்காலும்
வந்துதயந்தனக்கேழிற் குருதிமேவ
வரவவற்குமுன்பின்னும் பவர்வீடானால்
விந்தையெனவருஞ்சேய்க்குத் துணைவரொன்று
விதித்தனர்கள் கன்னியைந்து வுடன்வந்தெய்தும்
சிந்தையுடன்தனைப்பாவர் சேயைநோக்கச்
சேதமெனக்கன்னிரண்டு செப்புமாதே. (கூக)

மாதேகேள்பெண்ணிரண்டு சேதமாக
வகுத்தனர்கள்வெகுதிறமாய்க் கணிதநூலோர்
கோதேகேள்பூமனுடன் கடுங்கோள்வந்தாற்
கொன்றிடுமேமூன்றுகன்னி பொருந்திடாதே
வேதமொழியிதுவெனவே யுரைத்தார்மேலோர்
விளங்குமுக்கோள்தனைச்சுபர்கள் நோக்காதானால்
நீதமாய்ப்பவர்வரினுங் கன்னியைந்து
நின்றிடுமேயிவ்வண்ணம் நிலையென்றேதே. (கூஉ)

வேறு.

குருதியுமால்வீடேகக் குளிகனுமதனிற்சேரப்
பருதியும்புகர்மால்கேது பகரிடஞ்சுபர்வீடானால்
கருதியேயுதிக்குஞ்சேய்க்குக் கருத்துடன் துணைவரைந்து
உறுதியாய்க்கன்னிநாலா யுடன்வரவுதிக்குமாதே. (கூரு)

வேறு.

மாலுடனேமூன்றினுக்கோள் பதினொன்கோளும்
மந்திரிபானுடன்கூடி யுதயந்தன்னிற்
சீலமுடனுயிர்தனக்கு முன்பின்னாறிற்
சேர்ந்திடவேசேய்துணைவ ரிரண்டொன்றாகும்
கோலவிழிப்பெண்ணேகே ளிரண்டுமங்கை
குறித்தனர்களாகமநூற் கணிதமாகத்
தூலமுடன்கேதுகரி யுயிர்க்குமூன்றிற்
றோன்றிடவேவருந்துணைபெண் நாசஞ்செப்பே. (கூச)

வேறு.

மதிமகன்பருதிசுங்கன் வந்திடச்சுபர்வீடாகப்
பதியுடன்குருதிபொன்னன் பகரிடம்மறையாதாகில்
விதியுடன்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனர்துணைவர்மூன்று
சதியுடன்கன்னியொன்று சாற்றினருடன்வந்தெய்தும். (கூரு)

பருதியும்புகர்மாலோடு பகரிடமறையாதாகில்
குருதியும்பவரிற்சேரக் குறித்தனர்முன்பின்சுத்தம்
கருதியேபிறக்குமாது கருத்துடன்கன்னியைந்து
சுருதியாணிரண்டதாகத் துணிவுடனுடன்வந்தெய்தும். (கூசு)

வந்திடுந்துணைவர்நாசம் வகுத்தனர்கணிதமாய்ந்தோர்
சிந்தையாமுக்கோளோடு தீயகோட்சேருமாகில்
விந்தையாய்த்துணைவரெல்லாம் விரைவுடன்நாசங்காட்டும்
முந்தவேதுணைவரொன்று மொழிந்தனர்வளருமாதோ. (கூஎ)

வேறு

சந்திரன்மால்ஆரல்பரி பதினொன்கோளுஞ்
சாருமிடஞ்சுபர்வீடா யுதயமாக
வந்திடுமிக்கோள்தனையே காரிநோக்க
வருஞ்சேய்க்குத்துணைவரிரு கன்னிரண்டாம்

விந்தையெனவுடன்வரினும் பெலமதாக
விதித்தனர்கள்கணிதமொழி நூலாய்ந்தோர்கள்
சிந்தையுடனுரல்பரி மால்வீடுற்றுற்
செத்திடுமேகன்னியொன்று துணையொன்றாகும். (கூஅ

சூரியன்மால்பாம்புடனே புகரொன்றாகித்
தோன்றுமிடமறையாமற் சுபர்வீடானல்
கூருயிர்க்குப்பன்னோனுஞ் சுபர்வீடேகிக்
குறுகிடமேமறையாமல் வளருமாகிற்
சீருடனேவருஞ்சேய்க்குத் துணைவரைந்து
செப்பிடவேகன்னியிரண் டுடன்வந்தெய்தும்
சூரியன்மால்புகர்பாம்பு மறையுமானுற்
றுஞ்சிடுமேயிரண்டுகன்னி துணைமூன்றாகும். (கூகூ)

மால்பருதியாரல்குரு வோர்வீடேகி
வளருமிடமறையாமற் புகர்வீடானல்
சாலவிலக்கினந்தனக்குப் பதினொன்கோளன்
சாருமிடமறையாமல் வளருமாகில்
தூலமதாய்வருஞ்சேய்க்குத் துணைவரேழு
தோன்றிடுமேகன்னியைந்து வுடன்வந்தெய்தும்
மால்பருதியாரல்குரு மறையுமாகில்
வருந்துணைவர்மூன்றொழியுங் கன்னிநாலு. (க00)

மதிமகனும்புகர்சேயுங் காரியோடு
வரினுமிடமறையாமற் சுபர்வீடானல்
சதியுடனேயுயிர்தனக்குப் பன்னோன்கோளன்
சாருமிடமறையாமற் சுபர்வீடுற்றுல்
விதியுடனேவருஞ்சேய்க்குத் துணைவர்மூன்று
விதித்தனர்கள்கன்னியிரண் டுடன்வந்தெய்தும்
மதிமகனும்புகர்சேயுங் காரியோடு
மறைந்திடவேமாதிரண்டு நாசங்காட்டும். (க0க)

குருதிபுகர்கரிமாலு மோர்வீடேகிக்
குறுகிடவேமதிவீடாய் வளருமாகிற்
பருதியுடனுயிர்தனக்குப் பதினொன்கோளன்
பண்புளலக்கினந்தனக்கு வியமதானல்

சுருதியுடன்வருஞ்சேய்க்குத் துணைவரெட்டு
தோன்றிடுமேதையலிரண் டுடன்வந்தெய்தும்
குருதிபுகர்கரிமாலும் பருதிவீட்டிற்
குறுகிடவேதுணைநாசம் இருமூன்றாகும். (க0உ)

வேறு.

மதிமகன்குருதி மூன்றினோனுடனே வருமிடஞ்சுபர்கள்வீ
டாகச், சதிருடனிக்கோள் தனையுமேசுபர்கள் தன்விழிப்பார்
வையேயானால், விதியுடன்பிறக்குஞ் சாதகன்றனக்கு விதித்த
னர்துணையிரண்டுடனே, கெதிபெறவிரண்டு கன்னியரிரண்டா
ய்க் கெணித்தனர் சாதகன்றனக்கே. (க0ங)

வேறு.

பருதியுடன்புகர்மாலுங் கொடுங்கோளோடு
பகரிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாகக்
குருதியுயிர்தனிற்சேரச் சுபர்வீடாகிக்
குறுகிடவேமுன்பின்னுஞ் சுபர்வீடானால்
கருதிவரும்பிறவிகன்னி நாலதாகும்
காசினியிற்பெலமாகக் கூடிவாழ்வர்
உறுதியிதுமாதர்துணை திறமாய்நூலோ
ருரைத்தனராணிரண்டுசேய் பெலமதாமே. (க0ச)

வேறு.

குருதியும்பதினொன்றோனுங் குறுகியோரில்லமாகச்
சுருதியாயுயிர்க்குமூன்றோன் றோன்றிடமறைவதானால்
கருதியேபிறக்குஞ்சேய்க்குக் கருத்துடன் துணைவரஞ்சாங்
குருதியுந்தனிப்பாராகிற் குறித்திடுந்துணைவர்நாசம். (க0ரு)

மதியுடன்குருதியோடு வருமிடம்பருதிவீடாய்ச்
சதியுடனுயிர்க்குப்பன்னோன் சாரிடமறையாதாகில்
விதியுடன்றோன்றுஞ்சேய்க்கு விதித்தனர்முன்னோர்நாசம்
அதிமையாய்ப்பின்னோனென்றென் றறைந்தனர்தரணிமீதே. ()

மதியுடன்மூன்றின்கோளன் மாந்தியுமோர்வீடேகிச்
சதியுமாவினுக்குநாலிற் றரித்திடவுயிர்க்குப்பன்னோன்

விதியுடன்மால்சேயோடு விரைவுடன்குருவீடானால்
பதிதனிற்றோன்றுஞ்சேய்க்குப் பகர்ந்தனர்துணைவர்நாசம். ()

வருந்துணைநாசங்காட்டும் வகுத்தனர்பிறந்தசேய்க்கு
இருந்திடுந்துணைவர்மூன்று மிறையவன்மதிவீடானால்
தருந்துணைத்தானந்தன்னிற் சசிமகன்புகர்வந்துற்றால்
வருந்துணையொன்றுசேதம் வகுத்தனர்தரணிமாதே. (க0அ)

மாதவர்மொழிநூலாலே வளர்ந்திடக்குருதிமூன்றோன்
வேதமாயோர்வீடாக வெய்யவனுயிர்க்குப்பன்னோன்
நீதமாய்ச்சுபர்வீடுற்றால் நிகழுமாணிரண்டுநாலு
ஓதிடுங்கன்னியாறு யுலகினிலுடன்வந்தெய்தும். (கூ0கூ)

வந்திடுங்குருதிமூன்றோன் மாலவனோர்வீடாகத்
தந்திடுமுயிர்க்குப்பன்னோன் சாரிடம்பகைவந்துற்றால்
முந்தவேபிறக்குஞ்சேய்க்கு மூன்றுடன்துணைவராகும்
மந்தனுங்குருதியோடு வளர்பகைமறையுமாகில். (கக0)

குருதியுமிறைவன்வீட்டிற் குறுகிடவதற்குநாதன்
வருமிலக்கினத்துக்கெட்டில் வந்திடத்தீக்கோளோடு
தருமுயிர்தனக்கோரைந்திற் றனித்திடமூன்றோன்வந்தால்
சுருதியாய்த்துணைவர்நாலு தோன்றிடுமிருவர்கன்னி. (கக்க)

சந்திரன்மூன்றோனுகிச் சாரிடம்புதன்வீடாக
வந்துயிர்தனக்குப்பன்னோன் வருமிடங்குருதிவீடால்
விந்தையாயதற்குநாதன் விரைவுடன்குருவீடுற்றால்
சுந்தரத்துடனேகன்னி தோன்றிடுமிருவர்மாதே. (கக2)

மாதவர்கணிதநூலால் வகுத்தனர்துணைவர்நாலு
வேதமாயுடன்பிறந்தார் விதித்தனர்சாதகற்குப்
போதவேயிறைவனோடு பொருந்திடப்பவர்வந்துற்றால்
சேதமாந்துணையிரண்டு செத்திடுங்கன்னிரண்டே. (கக்ங)

மதிமகன்மூன்றின்கோளும் வளருகேந்திரத்திலேறச்
சதியுடனுயிர்க்குப்பன்னோன் சாரிடம்மறையாதாகில்
விதியுடன்குருவும்நீசம் விளங்கிடப்பிறந்தசேய்க்கு
அதிகமாந்துணைவரேழோ டமர்ந்திடுங்கன்னிநாலே. (கக்ச)

நாலினோன்மூன்றின்கோளும் நல்கிடவோர்வீடாகத்
தூலமாய்க்குருதிமூன்றிற் றோன்றிடவுயிர்க்குப்பன்னோன்

சால்வேவுதயமாகத் தரித்திடுஞ்சாதகற்கு
ஏலவேதுணைவரொன்றோ டிரண்டெனக்கன்னிமாதோ. (ககரு)

மதிமகன்மூன்றின்கோளன் மந்திரிபரியோடொன்றாய்ச்
சதியுடனுயிர்க்குமூன்றிற் றரித்திடப்பவர்வீடாக
விதியுடன்குருதிசுங்கன் விரைவுடன்சுபர்வீடுற்றாற்
பதிதனில்வளருஞ்சேய்க்குப் பகர்ந்தனரேகஞ்செப்பே. (ককঙ)

செப்பிடுமூன்றோன்பொன்னன் சேரிடம்மறையாதானால்
இப்படிபிறக்குஞ்சேய்க்கு இசைத்தனர்துணைவரெல்லாம்
தப்பிடுநாசமென்று சாற்றினர்கணிதனூலோர்
கப்பிடுமூன்றோன்பொன்னன் கலந்திடமுதயம்வந்தால். (ককঙ)

வந்திடுந்துணைவரேழு வகுத்தனர்கன்னிநாலு
சிந்தையாயுடன்வந்தேகிச் சேர்ந்திடும்பெலமென்றோதே
முந்தவேஅக்கோள்நீச மொழிந்திடப்பிறந்தசேய்க்கு
விந்தையாய்த்துணைவரொன்று விதித்தனர்பெலமென்றோதே. ()

வேறு.

பொன்னவன்மால்பாம்பொடுசேய் மூன்றின்கோளும்
பொருந்திடவேமறையாமற் சுபர்வீடாக
மின்னுயிர்க்குப்பதினொன்றோன் கொடியோன்மேவ
விளங்கிடுஞ்சாதகற்குவருந் துணைவரைந்தாம்
நன்னயபைந்தொடியிரண்டா முடன்வந்தேகி
நல்கிடுமென்றோதினர்கள் பெலமொன்றாகப்
பொன்னவன்பானுயிர்க்குமுன்பின் வந்தானுகிற்
பொன்றிடுமேபெண்ணொன்று துணையஞ்சோதே.(ককঙ)

வேறு.

ஓதிடுமுயிரின்கோள னுயர்வுடன்வளருமாகில்
வேதமாய்த்துணைவர்நாலு விதித்தனர்கன்னிநாலாம்
ஓதினர்பெலமென்றோதி யுரைத்தனர்சாதகற்கு
நீதமாயிருக்குமென்று நிச்சயந்தெரியச்சொல்லே. (কঙ০)

குருதியும்பதினொன்றோனுங் குறுகிடமறையாதானால்
வருமுயிர்சாதகற்கு வகுத்தனர்துணைவர்நாசம்

சுருதியாயுயிர்க்குப்பன்னேன் றோன்றிடக்கரியோடுற்றால்
கருதியதுணைவரொன்று கருத்துடன்பெலமென்றோதே. (கஉக)

மந்தனும்பதினொன்றோனும் வக்கிரன்புகர்பொன்னோடு
விந்தையாய்ச்சுபர்வீடேகி விளங்கிடப்பிறந்தசேய்க்கு
வந்திடுந்துணைவராறு வகுத்தனர்மாதுமூன்றாஞ்
சிந்தையாய்மறையுமாகிற் செத்திடுஞ்சேய்பெண்ணஞ்சே. ()

சுருதியும்மூன்றின்கோளுங் குளிர்மதிபுகரோடொன்றாய்
வருமுயிர்தனக்குமுன்பின் வந்திடப்பிறந்தசேய்க்குச்
சுருதியாயேகமாகத் தோன்றிடும்பிறந்தசேயாங்
குருதியுமூன்றோன்சுங்கன் குறுகிடப்பொன்வீடுற்றால். (கஉங)

உத்ததோர்சாதகற்கு வுயிர்த்துணையுள்ளோரெல்லாம்
செத்திடுமென்றுநூலோர் செப்பினர்தரணிமீது
சத்தியாயக்கோளாறிற் றரித்திடப்பிறந்தசேய்க்குச்
சுத்தியாய்த்துணைவரொன்று தோன்றிடுந்தரணிமாதே. (கஉச)

நாலினோன்மூன்றின்கோளும் நலமுடனோர்வீடேகிச்
சாலவேவுயிர்க்குமூன்றிற் றரித்திடப்பிறந்தசேய்க்குத்
தூலமாய்த்துணைவர்மூன்று தோன்றிடுங்கன்னிநாலாய்
நாலினோன்மூன்றின்கோளும் நல்கியேயுயிரில்வந்தால். (கஉடு)

வந்திடுஞ்சேய்க்குக்கன்னி வகுத்தனரிருமூன்றாகச்
சிந்தையாய்த்துணைவர்நாலு சேர்ந்திடுந்தரணிமீது
விந்தையாயக்கோளஞ்சில் விளங்கிடப்பிறந்தசேய்க்குச்
சுந்தரத்துடனேகன்னி தோன்றிடுமிருவர்மாதே. (கஉசு)

மாலவன்குருதிபொன்னன் வன்புகரிக்கோளொன்றாய்ச்
சாலவேயுயிர்க்குமூன்றிற் றரித்திடப்பிறந்தசேய்க்கு
ஏலவேதுணைவரேழோ டெழிலுறுங்கன்னிமூன்று
தூலமாயுதித்திட்டாலும் சொல்லுவேனதனிற்சேதம். (கஉஎ)

சேதமாங்காலனூர்க்குச் சென்றிடுந்துணைவரொன்று
மீதமாங்கன்னிமூன்று விதித்தனர்நாசமாகப்
போதமிச்சாதகற்குப் பொருந்தியதுணைவராறு
ஓதினர்பெலமதாக வுரைத்தனர்கணிதநூலோர். (கஉஅ)

குருவுடன்மாந்தியோடு குறுகிடக்காரிவீடாய்
வருமுயிர்தனக்குப்பன்னோன் வருமிடம்புதன்வீடுற்றால்
சுருதியாய்த்தோன்றுஞ்சேய்க்குத் துணிவுடன் துணைவர்நாலு
கருதியகன்னியஞ்சாய்க் கருத்துடன்தோன்றுமாதே. (கஉகூ)

மாதவர்மொழிநூலாலே வருமுயிர்மூன்றின்கோளன்
வேதமாய்ப்பாவரோடு விளங்கிடநீசமானாற்
போத்வேதுணைவர்மூன்று பொன்றிடுந்தரணிமீது
ஓதினர்கன்னியஞ்சு முயர்வுடன்நாசங்காட்டும். (கஙஏ)

மந்தனுமூன்றின்கோளும் வருமிடஞ்சேய்வீடாகச்
சிந்தையாயுயிர்க்குப்பன்னோன் சேரிடமறையாதாகில்
விந்தையாயாறின்கோளன் விரைவுடன்மதிவீடுற்றால்
வந்திடுந்துணைவரெல்லாம் மாய்ந்திடுங்கன்னியொன்றே. (கஙக)

வேறு.

மாலவன்குருதி பருதிபொன்னோடு வருமிடம்வளருகேந்திரமாய்ச், சாலவேவுயிரோன் மூன்றினோனுடனேசாரிடம்வளருகேந்திரமாய், ஏலவேதோன்றுஞ் சாதகன்றனக்கு இசையுடன் துணைவரேழாகும், கோலமாம்பெண்ணே அஞ்சுடன் செப்பக் குறுகிடுங் கன்னிமூன்றெழியும். (கஙஉ)

மதியுடன்பருதி மூன்றினோனுடனே வருமிடம்புதன்புகர்வீடாய்ச், சதியுடன்குருதி யிறையவனுடனே சாரிடம்வளருகேந்திரமாம், விதியுடன்றோன்றுஞ் சாதகன்றனக்கு விதித்தனர் சகோதரத்துன்பம், அதிபதியாகக் கன்னிநாலுடனே அமர்ந்திடுந்தரணியில்மாதே. (கஙங)

வேறு

மந்தனுங்குருதியோடு வளருகேந்திரத்திலேக
வந்துயிர்தனக்குமூன்றோன் வருமிடம்மறைவதானாற்
சிந்தையாய்த்தோன்றுஞ்சேய்க்குச் செப்பினர்துணைவரொன்று
சுந்தரத்துடனேகன்னி தோன்றிடுமேகமாமே. (கஙச)

வேறு.

மாலோனும்சேய்புகருங் குருவீடேகி
வரவவர்முன்பின்கடுங்கோள் மறையாதாகில்
நீலனும்பொன்மூன்றின்கோள் மூன்றிற்சேர்
நின்றிடுமேபவர்வீடாய் மறைவதானால்

தூலமுடன்வருஞ்சேய்க்குத் துணையஞ்சாகத்
தோன்றிடுமேயிரண்டுகன்னி துகையதாக
மாலோனுஞ்சேய்புகரும் புதன்வீடானல்
வருந்துணைவர்நாசமென வகுத்தார்நூலோர். (கஙரு)

குருவுடன்மால்சேய்புகரும் பவர்வீடாகிக்
குறுகிடவேமுன்பின்னும் பவர்வந்துற்றால்
வருமுயிர்க்சோள்மூன்றினுக்கோள் மூன்றிற்சேர
வரவவர்க்குமுன்பின்னுஞ் சுத்தமானல்
பெருமையுளசாதகற்குத் துணைவரெட்டு
பெண்ணிரண்டுசொற்றினர்கள் கெணிதமாய்ந்தோர்
வருந்துணைவரஞ்சுடனே நாசங்காட்ட
வகுத்தனர்கள்வேதமொழி வளருமாதே. (கஙசு)

வேறு.

மதிமகன்மூன்றின்கோளும் வக்கிரனுடனென்றுகிச்
சதிருடன்பாவர்வீடாய்த் தரித்திடமறைவதானல்
விதியுடனேகமாக விளங்கிடும்பிறந்தசேயாம்
மதிமகன்மூன்றின்கோளும் வக்கிரன்மறையாதாகில். (கஙஎ)

மறைவிலாவளருஞ்சேய்க்கு வகுத்தனர்முன்பின்நாசம்
விரைவுடன்முக்கோள்தானும் விளங்கிடங்குருவீடானல்
முறையுடன்துணைவரேழு மொழிந்தனர்வஞ்சியஞ்சாய்க்
குறைவிலாதிருப்பதாகுங் குறித்தனர்பிறந்தசேய்க்கு. (கஙஅ)

வேறு.

முதுமகன்மாலோன் மூன்றின்கோளுடனே மூன்றுறிலெட்டினில்வருமால், சதியுடனுர லுயிர்க்குப்பன்னேனு சார்ந்தவரோர்மனைமறைய, விதியுடன்பிறக்குஞ் சோதரரைந்தாய் விதித்தனர் கன்னிநாலுடனே, பதிதனில்வருமால் துணைவர்கள்நாசம் பகர்ந்தனர் சாதகன்றனக்கே. (கஙக)

சாதகன்றனக்குச் சோதரர்நாசம் சாற்றினுர்கணிதநூல் விதியால், ஓதிடும்பன்னேன் பலருடன்பவர்வீ டுறைந்திடப்பவர்கள் பார்வையினுற், சேதமுன்னுரைத்த கன்னியர்நாலும் செகந்தனிற் செத்திடுமின்னும், வேதமாய்ப்பன்னேன் சுபருடன்சுபரில் விளங்கிடச்சுபர்கள் நோக்கிடுமால். (கசo)

மாலதாய்க்கணிதர் வகுத்தனர்நாலு மங்கையர்வெகுதிற
மாகச், சாலவேவுயிர்க்கு மூன்றினேன்பன்னேன் சாரிடமில்ல
மொன்றுகித், தூலமாயக்கோள் மறைவிலாதாகிச் சுபமுடனிவர்
கள்நோக்கிடவே, ஏலவேதோன்றுஞ் சாதகன்றனக்கு யிருந்தி
டார் சோதரர்நர்சம். (கசக)

குருதியும்பாம்புங் குருவும்பன்னேனுங் குளிர்மதியோர்
மனைம்றையால், அருமையாமுயிர்க்குப் பத்துமொன்றதனிலமர்
ந்திட மாந்திவந்திடவே, சுருதியிப்படியாய்ப் பிறந்திடுஞ்சேய்க்
குத் தோன்றிடார் சோதரரேகம், குருதியுமுயிரிற் குருவுமுன்
பின்னுற் குறுகிடச்சுபர்கள் நோக்கிடுமால். (கசஉ)

நோக்கிடுஞ்சேய்க்கு வருந்துணைநாசம் நூல்மொழிபோ
வெனவுரையே, தாக்கியகுருதி சுபருடவீடாய்த் தரித்திடப்பவர்
கள்நோக்கிடவே, தீர்க்கமுமிரண்டா மிரண்டுடன்போக்கிற் சேர்
ந்திடுமுன்சமபலனும், போக்குடன்குருதி பொருந்திடச்சொந்
தம் புகர்மதிகுருவு நேரிடுமால். (கசஙு)

வேறு

குருதியுமூன்றேன்பன்னேன் கொடியகோளுடனென்றுகி
வருமுயிர்தனக்கீராறில் வந்திடப்பிறந்தசேய்க்குச்
சுருதியாயேகமாகத் தோன்றிடுந்தரணிமீது
கருதியமதிபொன்கேது காணகேந்திரம்வந்துற்றால். (கசச)

வந்திடுஞ்சேய்க்குநூலோர் வகுத்தனர்துணைவரெல்லாஞ்
சிந்தையாய்நாசங்காட்டுஞ் செப்பினர்கணிதமாக
விந்தையாய்மதிபொன்னாரல் விரைவுடனேர்வீடுற்றால்
வந்திடுந்துணைவரேழு வகுத்தனர்கன்னியஞ்சாய். (கசரு)

சூரியன்பாம்புமால்சேய் தோன்றுமிக்கோட்களொன்றாய்ச்
சாருயிர்தனக்குநாலிற் றரித்திடப்பிறந்தசேய்க்குச்
சீருடற்பிறப்பனேகஞ் செப்பினர்கணிதநூலோர்
சூரியன்பாம்புமால்சேய் துணிவுடன்மறைவதானால். (கசசு)

மறைவதாய்ப்பிறக்குஞ்சேய்க்கு வகுத்தனர்துணைவரெல்லாம்
விரைவுடன்நாசங்காட்டும் விதித்தனர்தரணிமாதே
முறையுடன்குருதிபன்னேன் மூன்றினேனேர்வீடுற்றால்
விரைவுடன்துணைவரஞ்சு விதித்தனர்கன்னிநாலாய். (கசஎ)

வேறு.

சூரியனுமுயிர்தனக்கு மூன்றின்கோளும்
தோன்றிடவேசுபர்வீடாய் மதிக்கஞ்சாகச்
சீருடனேவுயிர்தனக்குப் பன்னேன்சேயுஞ்
சேரிடங்கேந்திரமாகிப் புதற்கீராறில்
கூரிலக்கினந்தனக்கு மூன்றுறெட்டிற்
குறுகிடக்தேதுடன்றனித்தாற் பிறக்குஞ்சேய்க்கு
ஆரியனுணைப்படியே வுடன்வந்தெய்தும்
அறைந்தனர்மாதுடன் துணைவ ரைந்துநாசம். (கசஅ)

வேறு.

ஆரலும்புதன்வீடேக வங்குளோன்புகரோடொன்றாய்ச்
சாரிடமுயிர்க்கிரண்டிற் றரிக்கவாவிக்குப்பன்னேன்
சீருடன்பாம்போடொன்றாய்ச் சேரிடமுயிர்க்கஞ்சானால்
கூறினர்பிறக்குஞ்சேய்க்குக் குறித்தனர்துணைவர்நாசம். (கசகூ)

வேறு.

கரியுடனேமாந்திபுகர் பதினொன்றேனுங்
கருதுமிக்கோள்மறையாமற் சுபர்வீடாகச்
சரியுடனேவுயிர்தனக்கு மூன்றுறெட்டிற்
றனித்திடவேயவ்வில்லஞ் சுபர்வீடானால்
பிரியமுள துணைவர்பெல மிருமூன்றொன்று
பேசினர்கள்மாதுடனே இரண்டொன்றாகும்
வரிசையுள ஜீவனுக்குப் பன்னேன்மூன்றில்
வந்திருக்கவச்சேய்க்குத் துணைவர்நாசம். (கரு0)

மதிமகனும்பரியுடனே மூன்றேன்பன்னேன்
வரினுமிக்கோளோர்வீடாய் மறையுமாகிற்
சதியுடனேவுயிர்தனக்கு மூன்றேன்வீட்டிற்
றனித்திடப்பாம்பதிற்சேரப் பவர்வீடானால்
பதியினுதித்திடுஞ்சேய்க்குத் துணைவரெல்லாம்
பலியாகமாயுமென வுரைத்தார்நூலோர்
மதியுடன்பொன்னவன்மூன்றேன் மறையாதானால்
வந்திடுமாதுடனொன்று வளருமாதே. (கருக)

குருவுடன்சேய்மூன்றோனு மோர்வீடேகிக்
குறுகிடவேசுபர்வீடாய் மூன்றுறெட்டிற்
சரியிலக்கினந்தனக்குப் பன்னோறிற்
றனித்திடவேவருஞ்சேய்க்குத் துணைவர்நாசம்
வருமாவிக்குப்பன்னோன் மூன்றோன்சேயும்
மறைந்திடவேசுபர்வீடாய்த் துணைவர்சுத்தம்
தருமுயிர்க்குப்பன்னோனு மூன்றோன்சேயுஞ்
சாரிடங்கேந்திரஞ்சுபர்வீ டாகவந்தால். (கரு௨)

வந்திடுஞ்சேயவன்றனக்குத் துணைவரேழு
வகுத்தனரஞ்சாரணங்கு வுடன்வந்தெய்துஞ்
சிந்தையுடனுயிர்தனக்குப் பன்னோன்நீசஞ்
சேரிடங்கேந்திரமாகிப் பவர்வீடுற்றால்
விந்தைமிகவுடன்வரினுஞ் சேய்நால்மாது
விளங்கிடுமிப்படியாக வுரைக்குமாதே
சுந்தரமாய்நிலமகனுஞ் சுபர்வீடாகித்
தோன்றிடுமக்கோளனுமே மறையுமானால். (கரு௩)

புந்தியாதவன்குளிகன் பதினொன்றோனும்
பொருந்திடங்கேந்திரமாகிப் பவர்வீடாகச்
சிந்திலக்கினந்தனக்கு மூன்றோன்சேயுந்
திங்களுடனொன்றாகி யுயிர்மூன்வந்தால்
விந்தைமிகத்தோன்றிடுஞ்சேய் துணைவராறு
விளங்கிடும்பெண்ணிரண்டொன்றே வுடன்வந்தெய்தும்
முந்திடுமூன்றுமிடத்திற் பவர்வந்துற்றால்
முடிந்திடுஞ்சேய்நாலெனவே முன்னோர்சொன்னார். ()

மதியுடனேபுகர்பன்னோன் கோள்ன்றானும்
வருமிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாகச்
சதியுடனேவுயிர்தனக்கு மூன்றோன்சேயுஞ்
சாரிடமேபவர்வீடாய் மறையுமாகில்
பதியிலுதித்திடுஞ்சேய்க்குத் துணைவரேழு
பகர்ந்தனர்பெண்ணுடன்வரினு மிருநாலாகும்
மதியுடனேபுகர்பன்னோன் மூன்றோன்சேயும்
வருமிடங்கேந்திரமாகி யுதயம்வந்தால். (கரு௫)

வந்திடுஞ்சாதகன்றனக்குத் துணைவரஞ்சு
வாய்த்திடும்பெண்மூன்றெனவே வகுத்தார்நூலோர்
சிந்தையுடனுயிர்தனக்கு மூன்றேன்பன்னேன்
சேயுமேமதிவீட்டிற் சேருமாகில்
மைந்தனிவனுடன்பிறந்த துணைவர்நாலு
மாதர்களுமிரண்டொன்று வந்தாலுந்தான்
அந்தமதிலாணிரண்டு பெண்ணுமொன்றாய்
அவனியதிலிருந்திடுமென் றறைந்தார்மாதோ. (கருசு)

குருதிபுகர்மதியுடனே பன்னேன்றானும்
குறுகிடவேசுபர்வீடா யுதயமேறப்
பருதியுடன்மூன்றேனுங் குளிகனோடு
பகரிடமேபவர்வீடா யுயிர்க்குமூன்றிற்
சுருதியுடன்வருமாகிற் றுணைவரஞ்சு
தோன்றிடும்பெண்நாலெனவே தொகுக்கலாகும்
குருதியுடன்புகர்மதியும் பன்னேன்றானுங்
குறுகிடவேமறையுமெனத் துணைவர்சேதம். (கருஎ)

சேதமெனத்துணைவரைந்து நாசங்காட்டுஞ்
செப்புமெனவருங்கன்னி யிரண்டுமாயும்
ஓதிடுவர்கணிதமொழிப் படியாய்மேலோர்
உண்மையாயுல்கதனிற் பிறந்தசேய்க்கு
நீதியுடனுயிர்தனக்கு மூன்றேன்சேயும்
நின்றிடங்கேந்திரமாகிச் சுபர்வீடுற்றால்
வேதமொழிப்படியாக வருஞ்சேயொன்று
விளங்கிடுமேமாதுடனே யிருவர்சேதம். (கருஅ)

பரியுடன்மால்சேய்பன்னேன் மூன்றினேனும்
பகரிடங்கேந்திரமாகச் சுபர்வீடாகக்
கரியுடனேமாந்தியொன்று யோர்வீடேகிக்
கருதுமிக்கோள்பவர்வீடாய்ப் பன்னேன்றானால்
வரியுடன்தோன்றிடுஞ்சேய்க்குத் துணைவரெட்டு
வாழ்ந்திடும்பெண்ணறெனவே தரிக்கலாகும்
கரியுடனேகுளிகனுமங் கலனுஞ்சேர்ந்தால்
கருத்துடன்பெண்பெலமாகு மாணிரண்டே. (கருகூ)

வேறு.

சந்திரன்பன்னோகிச் சாரிடம்புந்திவீடாய்
வந்திடவக்கோள்பானும் வருமிடம்பதினொன்றாகச்
சிந்தையாய்க்குருதிமூன்றோன் சேரிடமறைவீடுற்றால்
பைந்தொடிதுணைப்பெண்நாசம் பகுத்தனர் துணைவரொன்றே.()

வேறு.

மதியுடன்சேய்பன்னோனு மோர்வீடேகி
வருமிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாகச்
சதியுடன்பொன்மூன்றோனும் பவரிலாமற்
சாரிடமேமறையாமற் சுபர்வீடுற்றால்
விதியுடன்தோன்றிடுஞ்சேய்க்குத் துணையிரண்டாய்
விதித்தனராரணங்குமூன் றுடன்வந்தெய்தும்
மதியுடன்சேய்பன்னோனு மோர்வீடாகி
வரினுமிடம்பவர்வீடாய் வளருமாதே. (கசுக)

மாதேகேளுடன்வரினுந் துணைப்பெண்நாசம்
வகுத்தனர்நூற்கணிதவழிப் படியென்றோதே
கோதேகேள்மதியுடன்சேய் பன்னோன்றன்னைக்
குருநோக்கவருஞ்சேய்க்கு வுடற்பெண்ணொன்றாய்
வேதாகமப்படியே பெலமென்றோத
விதித்தனரால்முக்கோளைப் பவர்நோக்குற்றால்
ஓதிடுவன்சாதகற்குப் பெண்தானொன்று
உதவிடாதெனவுடலு மொழியுந்தெற்கில். (கசுஉ)

குருதியுமாண்டளப்பானு மூன்றோனோடு
குறுகிடங்கேந்திரமாகச் சுபர்வீடாகி
வருமுயிர்க்குப்பன்னோனுஞ் சுபரேயாக
வரினுமிடம்பவர்வீடாய் மறையுமாகில்
அருமையுறுந்துணையிருவர் மாதுமூன்று
அமர்ந்தாலும்பெலமாக வளருமாதே
குருவுடனேமங்கலனும் மூன்றோன்றானுங்
குறுகிடமேபவர்வீடேல் துணைவர்நாசம். (கசுங)

வேறு.

மதிமகன்பதினோராங்கோள் வக்கிரனோர்வீடாகித்
ததியிலக்கினத்துக்கீறிற் றரித்திடச்சுபர்நோக்கில்லா

விதியுடனுயிர்க்குமூன்றில் விளங்கிடமதிபாம்பாகிற்
பதிதனில்வளருஞ்சேய்க்குப் பகர்ந்தனர்துணைவர்சுத்தம். ()

மறையவன்மூன்றோனுகி மறைந்திடமால்வீடேக
விரைவுடன்பன்னேன்சேயும் விளங்குயிர்தனக்குமுன்பின்
முறையுடனிருக்கமேலோர் மொழிந்தனருபயமாது
திறமுடன்துணைவரொன்று சேரவாழ்ந்திருக்குஞ்சேய்க்கு. ()

சேயவன்றனக்குநூலோர் செப்பினர்கணிதமாக
தீயதாய்ப்பன்னேன்சேயுஞ் சேரிடமுயிர்மூன்சார
ஆயவனேடுயெக்கோ ளமர்ந்திடாதிருப்பதானல்
சேயவன்றனக்குமுந்தி செத்திடுந்துணைமாதெல்லாம். (கசுசு)

புந்திசேய்பன்னேன்மூன்றேன் பொருந்திடமால்வீடாக
வந்துமக்கோட்கடன்னை வருஞ்சுபர்நோக்காதானல்
சிந்தையாய்த்துணைவரஞ்சு சேர்ந்திடுமாதுமூன்றுய்
வந்திடுந்துணைவரெல்லா மாய்ந்திடுந்தரணிமாதே. (கசுஎ)

வேறு.

மந்தனுஞ்சேய்மூன்றேனு மோர்வீடாகி
வருஞ்சுபர்வீடாகியக்கோள் மறையாதாகிற்
சிந்தையுடனுயிர்தனக்குப் பன்னேன்பாம்பு
சேரிடங்கேந்திரமாகிப் பவர்வீடுற்றுல்
வந்திடுஞ்சேயவன்றனக்குத் துணைமூன்றுக
வகுத்தனர்பெண்ணுடன்வரினு மிருநாலாகும்
விந்தையுடன்வருஞ்சேய்க்குத் துணைப்பெண்மூன்று
விதித்தனர்மாய்ந்திடுமெனவே கணிதநூலோர். (கசுஅ)

மந்தனுஞ்சேய்மூன்றேனு மோர்வீடாகி
வந்திடக்கேந்திரமாகிச் சுபர்வீடாகச்
சிந்தையுடனுயிர்தனக்குப் பன்னேன்றுனும்
சேரிடமேமால்வீடாய்ச் சுபரோடுற்றுல்
வந்திடுஞ்சேயவன்றனக்குத் துணையொன்றுக
வகுத்தனர்களுடன்வரினும் வரும்பெண்ணஞ்சு
மந்தனுஞ்சேய்மூன்றேனு மோர்வீடாகி
வந்திடவேபவர்வீடாய் மறையாதானல். (கசுகூ)

மறையாமற்பவர்வீடாய்த் தரிக்கவிக்கோள்
மதிதனக்குக்கேந்திரமாய் மதிநோக்குற்றால்
விரைவுடன்றோன்றிடுஞ்சேய்க்கு வுடன்வந்துற்ற
மெல்லியரும்நாசமென விதித்தார்நூலோர்
முறையுடனேவுயிர்தனக்குப் பன்னோன்சேயும்
முதுமகன்வீடாகியிக்கோள் மறையாதாகில்
குறையுடன்தோன்றிடுஞ்சேய்க்குத் துணைநால்செப்பக்
குறித்தனர்நூல்மொழியாகத் தரணிமாதே. (கசுசு)

சூரியனும்பன்னோனும் மூன்றோன்சேயும்
தோன்றிடங்கேந்திரமாகி யுதயம்வந்தால்
கூறினரிக்கோள்தனையே சுபர்நோக்கில்லா
குறுகிடுஞ்சேயவன்றனக்குத் துணைவர்மூன்று
சீருடனவ்விதந்தெரிவை மூன்றுமேலோர்
தேர்ந்தாய்ந்தகணிதவிதி தெரியச்சொல்ல
சூரியனும்பன்னோனு மூன்றோன்சேயும்
தோன்றிடும்வீடாதிபனே சுபராய்வந்தால். (கஎக)

வந்திடவிக்கோட்களுமே சுபர்வீடாகி
வருஞ்சுபர்கள்நோக்காமற் பவர்நோக்குற்றால்
சிந்தையுடன்சூரியனுமூன்றோன்பன்னோன்
சேருமிக்கோள்வரும்வீட்டுக் கதிபன்றானும்
வந்துதானுயிர்தனக்கு மீராறாகி
வந்திடவேசுபர்வீடாய்ச் சுபர்வந்துற்றால்
விந்தையுடன்வருந்துணைவர் நாசமாக
விதித்தனர்பெண்மாய்ந்திடுமே தரணிமீதே. (கஎஉ)

குருவுடன்மால்காரிபரி புகர்பன்னோனுங்
கூடியிக்கோள்மறையாமற் சுபர்வீடாக
வருமுயிர்க்குமூன்றினுக்கோள் சுபராய்நாலில்
வந்திடவேபவர்மனையாய் மறைக்கீராறில்
தருமாவிக்காறிற்சேய் தனிக்கத்தோன்றுஞ்
சாதகன்வந்துடன்வரினுந் துணையிரண்டாம்
வருமுயிர்க்குமூன்றினிலே கடுங்கோள்வந்தால்
மாய்ந்திடுமுன்னுடன்வரினுந் துணையென்றோதே. ()

சூரியன்மால்சேய்மறையும் பன்னேன்கேதுந்
தோன்றிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாகத்
சாரமூன்றேன்சுபராய்ப் பொன்னன்வீடு
தனித்திடவேசுபர்நோக்க வுயிர்க்கஞ்சானால்
சீருடன்தோன்றிடுஞ்சேய்க்குக் கணிதமாய்ந்தோர்
செப்பினர்நூற்படியாக யோகஞ்செப்பே
சூரியன்மால்திசைமறையும் பன்னேன்கேதுந்
தோன்றிடங்கேந்திரமாகிப் பவர்மனைவந்திடவே. ()

வந்திடவேபூவிற்சேய்க் குடன்வந்துற்ற
வருந்துணைப்பெண்நாசமென வகுத்தார்நூலோர்
சிந்தையுடன்பன்னேனுஞ் சேய்பொன்கேதுஞ்
சேரிடங்கேந்திரமாகிச் சுபர்வீடானால்
விந்தையுடன்தோன்றிடுஞ்சேய் துணைநால்மாது
விதித்தனரஞ்சதுவாக விளம்புமேலோர்
முந்தியவிக்கோட்கடனைக் கரிநோக்குற்றால்
முன்னுறத்தோன்றிடுந்துணைவர் நாசமாதே. (கஎந்)

வேறு.

மந்தனும்பன்னேனென்றாய் வருமுயிர்தனக்கேழாகச்
சிந்தையாய்ப்புகர்பொன்மூன்றேன் சேரிடம்பவர்வீடாக
விந்தையாய்க்குருதியாட்சி விளங்கிடப்பிறந்தசேய்க்கு
வந்திடுந்துணைப்பெண்ணெல்லாம் மாய்ந்திடுந்தரணிமாதே. ()

வேறு.

சூரியன்மால்மூன்றின்கோ ளோர்வீடாகித்
தோன்றிடங்கேந்திரமாகிச் சுபரில்லாகச்
சீருடனேபுகர்பாம்பு பன்னேன்சேயுந்
தினகரன்வீடதுவாகி யுயிர்க்குமூன்றாய்ச்
சாரிடமேவருந்துணைவ ராணென்றாகும்
தையலிரண்டதுவாகத் தரிக்கமாந்தி
கூரிடவேவருந்துணைவர் நாசமொன்று
குறித்தனர்நூற்படியாகக் கணிதமாய்ந்தோர். (கஎஎ)

மதிமகனும்பன்னேனு முயிரின்கோளும்
வருமிடமேமறையாமற் பவர்வீடாகச்
சதியுடனேவுயிர்தனக்கு மூன்றேன்வீட்டிற்
றனித்திடவேசேய்வருகி லதற்குநாதன்

விதியுடனேசுபரோடு மறையாதாகில்
விளங்கியசாதகற்குவருந் துணைநாலஞ்சு
பதிதனில்வந்தேகிடுமே வரும்பெண்மூன்று
பகர்ந்தனர்நூற்படியாக வளருமன்றே. (கஎஅ)

வருமெனவேசாதகற்குத் துணைவர்மேலோர்
வகுத்தனர்கள்பெலமாக வளருமாதே
தருமுயிர்க்குமூன்றதிபன் மறைந்துபாவர்
தன்மனையாயுடன்சுபர்கள் தரிக்குமானால்
குறுகிடும்பெண்மூன்றெனவே துணையஞ்சொன்று
குறித்தனரால்சேதமெனக் கணிதமாய்ந்தோர்
கருதியநூற்படியாகத் தரணிமீதிற்
கருத்துடன்சாதகற்குவருந் துணையாற்சேதம். ()

குருதியுடன்கொடும்பாவர் சுபர்வீடாகிக்
குறுகிடமூன்றுறெட்டுப் பன்னொன்றுகச்
சுருதியுடன்கரிமதிமால் மூன்றேனொன்றும்
தோன்றிடங்கேந்திரமாகிச் சுபர்நோக்கில்லா
கருதிடுஞ்சேயவன்றனக்குத் துணைநாலொன்றாய்க்
கருத்துடன்பெண்ணிரண்டெனவே வுடன்வந்தெய்தும்
குருதிதனைச்சுபர்நோக்காத் துணையிரண்டு
குறுகிடும்பெண்ணிரண்டெனவே நாசங்காட்டும். ()

சூரியன்மால்மாந்தியுடன் புகர்பன்னோனுந்
தோன்றுமிடம்நாலேழு பன்னொன்றுகச்
சீருடனேயிக்கோளைச் சுபர்கள்நோக்கச்
சேயுயிருக்கீராறிற் றனிக்குமானால்
கூரிடவேவருஞ்சேய்க்குத் துணையேழ்ரெண்டு
குறித்தனர்பெண்நாலெனவே கணிதமாகச்
சாருயிர்க்குமூன்றதிலே சேய்பாம்பானாற்
சாய்ந்திடும்பெண்ணிரண்டெனவே துணையாறுகும். ()

மாலுடனேமூன்றினுக்கோள் சுபர்வீடாகி
வந்திடவேஅதற்குடையோன் மறைந்துநீசம்
சீலமுடனுயிர்தனக்குப் பன்னோன்சேயுஞ்
சேரிடமேவுயிர்தனக்குப் பன்னொன்றானால்

தூலமாய்த்தோன்றிடுஞ்சேய் துணையஞ்சாகச்
சொல்லினர்மாதுடனிரண்டு வளருமாதே
கோலமதாய்ப்பன்னோனைச் சுபர்நோக்கில்லாக்
கோதைகளிற்பெண்மூன்று குறுகுந்தானே. (கஅஉ)

சூரியன்மால்காரியுடன் புகர்பொன்மூன்றோன்
தோன்றுமிக்கோளோர்மனையா யுயிர்க்குப்பன்னோன்
கூரியதோர்தீனமதில் வளரவக்கோள்
குளிர்மதிசேய்மாந்தியுட னுயிர்க்குமூன்றாய்ச்
சீரியவத்தானமதில் மறையுஞ்சேய்க்குச்
செப்பிடக்கேளோர்துணைவர் மாதிரண்டு
ஆரியனுணைப்படியே வுடன்வந்தெய்தும்
ஆனாலுமோர்துணைவர் மாதிரண்டே. (கஅங)

மூன்றுடையோன்பவராகிப் பன்னோன்றன்னில்
முயன்றிடவேவுடன்குளிகன் புகரொன்றாகத்
தோன்றுமிக்கோளிருந்திடும்வீ டதிபன்றானுந்
தொடர்ந்துசபராகிடவே மால்வீடுற்றால்
மூன்றுடன்மூன்றாணங்கு துணைவர்மூன்று
மொழிந்திடுஞ்சேயுடன்வளருங் கணிதமாகத்
தோன்றுமேபன்னோன்கோள் மூன்றோன்நோக்கத்
துஞ்சிடுமேமூன்றுதுணை மாதராறே. (கஅச)

வருமுயிர்க்குமூன்றிற்சேய் தனிக்கமூன்றோன்
வருமொருகோள்நீசனொடு மறையாதாகத்
தருமுயிர்க்குப்பன்னோனுஞ் சுபரதாகிச்
சந்திரன்பாம்புடன்குளிக னிவர்களோடு
வருமுயிர்க்குமுன்பலது பின்பிலானால்
வருந்துணைவர்நாசமென யேகஞ்சேரும்
அருமறைநூல்விதிப்படியா லாரல்நாளில்
அழிந்திடுமேஓர்துணைவ ருதவாதன்றே. (கஅரு)

காரியுடன்மூன்றினுக்கோள் மறைந்துபாவர்
கடுமனையாய்மதிதனக்கு மறையாதாகிற்
சூரியன்மால்வருமுயிர்க்குப் பதினொன்கோளன்
தோன்றுமிக்கோளுயிர்தனக்கு மறையுமானால்

கூரிடுஞ்சேயவன் றனக்குத் துணைநால்மாது
குணமாயிப்படிமீது வுடன்வந்தெய்துஞ்
சீருடனேகாரிதனைச் சேய்நோக்குற்றாற்
செத்திடும்பெண்மூன்றெனவே துணைவர்மூன்றே. ()

சந்திரனுங்கேதுடனே மூன்றின்கோளுஞ்
சாரிடமூன்றாறெட்டுப் பன்னொன்றாகச்
சுந்தரமாயுயிர்தனக்குப் பதினொன்கோளன்
தோன்றுமனைசுபமாகி யுயிர்க்கீராறில்
வந்திடவேசுபர்நோக்கால் வளருஞ்சேய்க்கு
வருந்துணைவர்நாசமென வஞ்சியொன்று
விந்தையுடனுடன்வரினுங் கணிதமாய்ந்தோர்
விதித்தனர்நூற்படியாகத் தரணிமாதே. (கஅஎ)

மாதுடனேமூன்றின்கோள் பதினொன்கோளும்
வருமிடமேபவர்வீடாய்ச் சுபர்நோக்கில்லாச்
சீலமுடனிக்கோட்கள் வரினுமில்லஞ்
சேர்ந்திடமூன்றாறெட்டுப் பன்னொன்றாகத்
தூலமதாயுயிர்தனக்கு யிரண்டாறெட்டிற்
றோன்றிடவேசேய்வருகிற் சுபர்வீடானால்
சாலவெனவருந்துணைவ ரிரண்டாங்கன்னி
சார்ந்திடுமேயிருமூன்று தரணிமாதே. (கஅஅ)

கரியுடனேவுயிர்தனக்குப் பதினொன்கோளன்
கருதுமிடமுயிர்தனக்கு மூன்றாறெட்டு
வருமிடமேசுபர்வீடாய்ச் சுபர்கள்நோக்க
வரினுமக்கோள்மூன்றின்கோ ளுயிர்முன்னாகச்
சரியுடனேமதிதனக்குச் சேயோனறிற்
சார்ந்திடநால்மாதெனவே துணைநாலாகும்
விரிகுழல்சேர்மூன்றதிலே சேய்பாம்பானால்
விதித்தனர்பெண் துணைவரெலாம் நாசமாதோ. (கஅகூ)

காரியுடன்மூன்றின்கோள் சேய்வீடேகக்
கருதுமக்கோளுயிர்தனக்கு மறையாதாகிற்
சூரியனோடுடன்கலந்து சுபர்கள்நோக்கச்,
சுந்தரமாமுயிர்தனக்குப் பதினொன்கோளன்

தேரியமால்கூடியா விக்குநாலிற்
சேர்ந்திடுஞ்சேபவன் றனக்குத் துணையஞ்சொன்று
கூறினர்பெண்ணறெனவே தரணிமீதிற்
குறித்தனரிப்படியாக வருமென்றேதே. (கக0)

ஓதிடுவனுயிர்தனக்கு மூன்றிற்பாம்பு
உறைந்திடுவேபவர்வீடாய்த் தனிக்குமாகிற்
சேதம்வருந்துணைநாலு வரும்பெண்மூன்று
செத்திடுமூன்றேதினர்கள் கணிதமாக
நீதியுடன்பாம்புடனே கரிவந்துற்றால்
நேர்ந்திடும்பெண்நாசமென் வுரைக்குமேலோர்
சோதிடநூற்படியாகச் சேய்வந்துற்றால்
துஞ்சிடும்பெண் துணையுடனே துலையுமாதே. (கக்க)

மாலுடன்சேய்சூரியன்பொன் புகரொன்றாகி
வந்திடக்கேந்திரமாகிச் சுபர்வீடாகச்
சீலமுடனுயிர்தனக்குப் பதினென்கோளன்
சேரிடங்கேந்திரமாகிச் சுபர்வீடுற்றால்
சாலவெனத்தோன்றிடுஞ்சேய் துணைவரொன்று
சார்ந்திடும்பெண்நாலெனவே வுடன்வந்தெய்துந்
தூலமுடன்பன்னேனு முயிர்க்கெட்டானால்
துஞ்சிடும்பெண்ணிரண்டெனவே தரணிமாதோ.(கக்உ)

மறையவன்மால்சேய்பருதி புகரொன்றாகி
வரினுமிடமுயிர்தனக்கு இரண்டாறெட்டில்
விரைவுடனேபவர்வீடாய்த் தரிக்கப்பன்னேன்
விளங்குதிரிகோணமதால் வளருமாகில்
முறையுடன்றோன்றிடுஞ்சேய்க்குத் துணைமூன்றென்று
மொழிந்தனர்கள்பெண்ணிருமூன் றுடன்வந்தெய்தும்
குறையுடனேகாரியினாற் றுணைமூன்றாகக்
குறுகிடும்பெண்மூன்றெனவே குறித்தார்மேலோர். ()

சூரியன்மால்மூன்றின்கோள் புகர்பன்னேனுந்
தோன்றுமிக்கோள் கேந்திரமாய்பவர்நோக்கில்லாச்
சாரிடமேபவர்வீடாய்த் தனிக்கவிக்கோள்
சாதகன்றான்வருந்துணைவ ரிரண்டொன்றாகும்

சீருடனேதோன்றும்பெண் ணிருமூன்றொன்று
செப்பினர்நூற்படியாகக் கெணிதமார்க்கம்
கூறிடமூன்றதிற்கேது வருகுமாகில்
குறுகிடும்பெண்நாலெனவே துணையிரண்டே. (ककच)

குருவுடன்மால்மூன்றின்கோள் பரியொன்பானுங்
கூடியிக்கோளுயிர்தனக்கு மூன்றுறெட்டில்
வருமிடமேபவர்வீடாய்த் தரிக்கப்பன்னேன்
வளருயிர்மூன்றதுவாகி மறையுமானல்
அருமறைநூற்படிவிதியாற் றுணையிரண்டோ
டம்புவியிற்பெண்நாலொன் றறையுமாதே
தருமுயிர்ப்பன்னேன்மனையில் மதிவந்துற்றால்
சாய்ந்திடும்பெண்மூன்றெனவே துணையென்றோதே. ()

மதிமகன்சேய்புகர்மறையோன் பதினொன்கோளும்
வருமுயிர்மூன்றின்கோளு முடனொன்றாகிச்
சதிருளஜீவன்றனக்குப் பன்னேன்வீட்டிற்
றரித்திடவேபவராகிப் பவர்நோக்கில்லா
விதியுடன்வந்திடுமாகிற் றுணைநால்மாது
விளங்கிடுநால்மூன்றெனவே வுடன்வந்தெய்தும்
அதிபதிநூற்படியாக வரும்பெண்சேதம்
அறைந்தனர்மூன்றதுவாகித் துணைநாலோதே. (ककछ)

வேறு.

திரன்மூன்றோனுகிச் சாரிடமுயிர்க்கெட்டாக
ந்திடவக்கோள்தானும் மதிமகன்புகர்பான்சேயுஞ்
தையாயுயிர்க்கீராறிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
ந்தையாய்த்துணைவர்சுத்தம் விதித்தனர்தரணிமாதோ.(ककञ)

ந்தனுமூன்றோனொன்றாய் வருமிடமுயிர்க்கீராறில்
ந்திடவக்கோள்தானும் மதிமகன்புகர்பான்பொன்னும்
ந்தையாயுயிர்க்கஞ்சாகி விளங்கிடப்பிறந்தசேய்க்குச்
ந்தையாய்த்துணைவரொன்று செப்பினருடன்வந்தெய்தும். ()

வேறு.

மாலுடனேசூரியன்பொன் புகர்பன்னேனும்
வந்திடக்கேந்திரமாகி யுதயமேற
நீலனுங்கேதுடன்கூடி வுயிர்க்குமூன்றில்
நின்றிடவேசுபர்வீடாய்த் தரிக்கச்செவ்வாய்

தூலவிலக்கினந்தனக்கு இரண்டாறெட்டிற்
றோன்றிடவேதோன்றிடுஞ்சேய் துணைப்பெண்ணெல்லாந்
தாலமதில்நாசமெனக் கணிதவாய்மை
சாற்றினர்களோர்துணைவர் வளருமாதே. (கக்கூ)

மந்தனுடன்கொடும்பவர்க ளிலாபந்தன்னில்
வந்திடவேஅதற்குடையோன் மாந்திபானும்
விந்தையுடனுயிர்தனக்கு மூன்றின்கோளன்
விளங்குமிக்கோளோர்மனையா விக்கொன்பானில்
வந்திடவேஅதற்குடையோன் புகரின்வீட்டில்
வாய்த்திடத்தோன்றிடுஞ்சேய்க்குத்துணைப்பெண்ணெல்
சிந்தையுடன்நாசமெனக் கணிதமாய்ந்தோர் [லாஞ்
செப்பினர்கள்தப்பாது தரணிமீதே. (உ00)

வேறு.

சூரியன்மூன்றோனுகித் தொல்புகருடனேகூடிப்
பாருயிரதனிற்சேரப் பகலவன்தனக்கீராறிற்
கூரியபதினென்கோளன் குறுகிடப்பன்னேன்மூன்றிற்
சீருடன்சுபர்கள்சேரச் செப்பினர்துணைவரோதே. (உ0க)

ஓதிடுந்துணைவரஞ்சா யுரைத்தனர்மாசிரண்டாய்
நீதியாய்வருமென்றோதி நிட்சயமுரைக்கலாகும்
வேதமாய்ப்பன்னேன்மூன்றில் விளங்கிடஞ்சுத்தமானல்
சேதமாந்துணைமாதெல்லாஞ் செத்திடுந்தனக்குமுந்தி. (உ0உ)

சந்திரன்புதல்வன்பொன்னுஞ் சாரிடம்பன்னேன்றன்னில்
வந்திடவக்கோள்நீசம் வளர்ந்திடமறைவதாகில்
விந்தையாய்மூன்றோனுட்சி விளங்கிடப்பிறந்தசேய்க்குச்
சிந்தையாய்த்துணைவர்நாசஞ் செப்பினரேகஞ்சேயாம். (உ0ங)

வேறு.

மாந்தியுடனிலாபக்கோ ளலரியொன்றாய்
வருமிடங்கேந்திரமாகிப் பவர்கள்வீடாய்ச்
சேர்ந்துயிர்க்குமூன்றாங்கோள் மறைந்தேவுச்சஞ்
சேரவவருடன்பவர்கள் சுபர்களொன்றாய்ச்

சார்ந்திடுஞ்சேயவன்றனக்குத் துணைவரேழு
தப்பியபெண்ணஞ்சென்வே வுடன்வந்தெய்தும்
மாந்தியுடன்பன்னோன்கோ ளலரியொன்றாய்
வருமுயிர்க்கெட்டாறுபதி னொன்றில்வந்தால். (௨௦௪)

வந்திடவேசுபர்வீடாய்த் தனிக்கமூன்றோன்
வக்கிரனம்புலியுடனே வுதயமேறச்
சிந்தையுடன்றோன்றியசே யேகமாகச்
செப்பினர்கள்கணிதமொழிப் படியென்றோது
விந்தையுடன்மூன்றுங்கோள் குமுதநண்பன்
விளங்குமிக்கோள்பன்னோன்கோ ளலரிமாந்தி
வந்திடவேபதினொன்றிற் றரிக்குமானால்
வருந்துணைவர்நாலிரண்டு மாதெட்டாமே. (௨௦௫)

சந்திரன்பாம்புடன்குளிகன் பன்னோன்றன்னில்
தரித்திடவேஅதற்குடையோன் பவர்களோடு
வந்திடஞ்சேய்வீடதுவாய்த் தரிக்கவக்கோள்
வரும்பரிமாலுடன்கூடி யுயிர்க்குமூன்றில்
விந்தையுடன்தரித்திடும்பெண் ணுடன்வந்தெய்தும்
விளங்கியவாணிரண்டோடு பெண்தானொன்று
சிந்தையுடனேவரினு மப்பெண்ணொன்று
செத்திடுமென்றோதினர்கள் தனக்குமுந்தி. (௨௦௬)

மதியுயிர்க்குப்பன்னோன்கோ ளாட்சியுச்சம்
வளரவவருடன்சுபர்கள் வசிக்குமானால்
விதியுடனேவுயிர்தனக்கு மூன்றோனுச்சம்
விளங்கிடவேவுடன்சுபர்கள் தரிக்குமாகில்
சதிருடனேபதியதனி லுதிக்குஞ்சேய்க்குச்
சார்ந்திடும்பெண்ணுபயமாண் துணையிரண்டு
மதியுடனேவுடன்பவர்கள் சேருமானால்
மாய்ந்திடுமாணிரண்டோடு மாதிரண்டே. (௨௦௭)

தினகரனுமுயிர்தனக்கு மூன்றிற்சேரச்
செப்பியதோரிவனிருக்கு மதிபனுச்சம்
புனைமணிசேருயிர்தனக்குப் பன்னோன்கோளன்
பொருந்துமிடமாட்சியுச்சந் தரிக்கப்பாவர்

வினையுடனொன்றுகிடவே சாதகற்கு
விளங்குமெனவுடன்வளருந் துணைவரஞ்சு
முனையுளமாதிருவரென வுடன்வந்தெய்தும்
மொழிந்தனராண்நாலெனவே நாசமாதோ. (உ0

வேறு.

ஆரலுமூன்றோனாகி யமர்ந்திடம்மறைந்தேவுச்சஞ்
சாரவருடனேசுங்கன் தரித்திடப்பவக்கோள்சேரச்
சீருடனுயிரில்மால்பான் செப்பியபதினொன்கோளும்
கூறினரொன்றுய்நிற்குங் கோதையர்பலனைச்செப்பே.

செப்பியதுணைவர்மாது சேர்ந்திடுமுடன்வந்தெய்தும்
முற்படிநாசமொன்று மொழிந்தனர்தரணிமாதோ
துப்பிதழாய்கேள்மூன்றோன் தொல்புகர்கேதோடொன்றுய்த
தப்பியமூன்றிற்சேர்ந்தாற் சகோதரந்தோன்றுதன்றே. (உக

வேறு.

சுங்கனுடன்மூன்றின்கோள் புகரினில்லந்
தோன்றவலற்காறினிலே பதினொன்கோளன்
தங்கியமால்கரிபரிதி யுடனொன்றுகிச்
சாருயிர்க்குக்கேந்திரமாய் வளருமானல்
மங்கைசகோதாரதனில் மாதுநாலு
வகுத்தனராண்மூன்றெனவே கணிதமோது
துங்கமதாய்மாதிருவ ரேகஞ்சேதந்
தோன்றியவாண்சேதமெனக் கணிதஞ்செப்பே. (உக

பதினொன்றோன்கேந்திரத்தில் நீசனோடு
பகரவர்களுபயமதி லுயிர்க்குமூன்றோன்
துதிபெறவேலக்கனக்கோள் கரியனோடு
தோன்றிடவேதோன்றியசே யுடன்வந்தெய்தும்
விதியுடனுணிரண்டெனவே உபயமாது
விளங்கிடுமேகணிதவிதிப் படியென்றோது
பதினொன்றோன்மறைந்திடவே நீசனோடு
பகரவ்வருடன்துணைபெண் நாசமுந்தி. (உக

மூன்றுடையோன் சூரியனுயாரலோடு
முதுமகன்தன்வீடதனிற் றரிக்கமுன்பின்
தோன்றுசுபராகிடவே புகர்மாலுக்குத்
தொல்லுயிர்முன்பதினென்று சுத்தமானல்
மூன்றுதுணையிரட்டியென ஆண்தானுகும்
மொழிந்தனர்மாதுடனேகம் வளருமென்றே
யீன்றிடுந்தாய்தனக்குமுந்தி யஞ்சாண்சேதம்
ஏகமெனமாதொன்று சேதமுந்தி. (உகங)

மாலவன்மூன்றுடையோனு மலரியோடு
வருமிடங்கேந்திரமாகித் தரிக்குமாகிற்
சிலமுடன்பன்னேன்கோள் மறையன்வீட்டிற்
சேரவவருடன்பவர்கள் தரியாதானல்
கோலவிழிமாதொருவ ராண்மூன்றுகுங்
குறித்தனர்மாதுடனெனவே கணிதமோது
மாலிரவிமூன்றுடையோன் மறையுமானல்
மாய்ந்திடுமாணிரண்டோடு பெண்ணுமொன்றே. ()

சூரியன்றுன்மாந்தியுடன் பன்னென்கோளன்
தோன்றுயிர்க்கோரேழதனிற் றுலங்குமாகில்
பாருயிர்க்குமூன்றுங்கோ ளாரல்பொன்னும்
பகரிவர்கேந்திரமாகித் தரிக்குமானல்
கூருலகிற்றேன்றிடுஞ்சேயுடன்வந்தெய்துங்
குறித்தனர்பெண்ணஞ்செனநால் துணைவர்நாலோன்
சூரியன்றுன்மாந்தியுடன் பதினென்கோளன்
தோன்றிடமூன்றெட்டுபதி னென்றுவந்தால். (உகரு)

வந்திடவித்தானமதிற் றரிக்கவிக்கோள்
வருமதிக்குக்கேந்திரமாய் வளருமானல்
சிந்தையுடன்தோன்றிடுஞ்சே யுடன்வந்தெய்தும்
செப்பியஆண்மாதரெலாந் தனக்குமுந்தி
விந்தையுடன்நாசமெனக் கணிதமாய்ந்தோர்
விதித்தனர்களிதுதவறு தெனவென்றேது
சுந்தரமாய்ஆகமநூல் விதியாமென்று
சொல்லினர்கள்வாக்கியநூல் திரட்டிப்பார்த்தோர். ()

கரியனுமூன்றுங்கோளாய் மூன்றுறெட்டிற்
கருதியமாலுடன்சேயுந் தரிக்குமாகிற்
சரியுடனேபன்னோன்கோள் பவர்களில்லஞ்
சாரவவரிருந்திடுங்கோள் மறையுமானால்
விரிகுழல்பைந்தொடிமாத ருடன்வந்தெய்தும்
விதித்தனரோராணெனவே தரணிமீதில்
வருமூன்றிற்சுத்தமதா யிருக்குமானால்
மாய்ந்திடுமாண்ஆகமநூல் வழியென்றோதே. (உகஎ)

மந்தனுமூன்றோனாகி யாறெட்டிறில்
வளருமித்தானத்தில்வர வாரல்பானும்
விந்தையுடனென்றுகிச் சுபர்கள்நோக்கி
விளங்குயிர்க்குப்பன்னோனும் பவர்கள்வீட்டில்
வந்திடவேபகையாகித் தனிக்குமானால்
வந்திடும்பெண்தனக்கெனவே துணைவர்மாது
சிந்தையுடன்நாசமெனக் கணிதமாய்ந்தோர்
செப்பினர்களிதுநிசமென் றோதுமென்றே. (உகூஅ)

வேறு.

குருதியுமூன்றோனாகிக் குறுகியபானோடொன்றாய்
வருமுயிர்தனக்குமூன்றில் வந்திடப்பன்னோன்கோளன்
தருமிலக்கினத்துக்கொன்பான் தானமேதனிக்குமானால்
வருவதுதுணைவர்மாது மாய்ந்திடும்எ கஞ்செப்பே. (உகக)

வேறு.

மாலவனும்பாம்புபதி னொன்றின்கோளன்
வருமிடமூன்றுறுதனிற் றரிக்குமாகிற்
சீலமுடனுயிர்மூன்றின் கோளன்றானும்
சேருமிடம்அட்டமமீ ராறிலுற்றால்
தூலமுடனேவளரு மாதுநாலு
தோன்றியஆண்மூன்றெனவே கணிதமோது
காலனுரேகுமாண் மூன்றினோடு
கருதியபெண்ணுபயமென நாசங்காட்டும். (உஉ0)

மந்தனுமூன்றுங்கோளாய்க் கேதினோடு
வருமுயிர்க்கேழுதனில்வரப் பவர்கள்நோக்கச்
சிந்தையுடன்பதினொன்றோன் மாலதாகிச்
சீதகனும்பரியுடனே கரிவீடேற

விந்தையிலக்கினந்தனக்கீ ராறிலாரல்
விளங்கிடவேபன்னோன்கோ ளதனைப்பொன்னன்
வந்துமதிமாந்திகரி நோக்குமானால்
வந்திடுஞ்சாதகற்குவருந் துணைவரஞ்சே. (உஉக)

அஞ்செனவேமாதிருமூன் றுடன்வந்தெய்தும்
அறையுமிந்தத்துணைமாது பெலமென்றோது
விஞ்சையுடன்லாபக்கோள் மூன்றின்கோளன்
விளங்குபுகர்தினகரன்கே துடனொன்றாகித்
தஞ்சமுடனுயிர்தனக்குப் பதினொன்றாகச்
சாருமெனில்முன்னுரைத்த துணைவர்மாது
துஞ்சிடுமேதப்பாது கணிதமென்று
சொல்லினர்களாகமநூ லாய்ந்தமேலோர். (உஉஉ)

மந்தன்மனைதனிலுயிர்க்கு மூன்றின்கோளன்
,மறைந்திடவேகொடியபவ ரவனைநோக்கச்
சிந்தைப்பதினோராங்கோள் நீசமேறிச்
சேர்ந்திடவேவுடனொருகோள் தரியாதானால்
வந்திடுஞ்சேயுடன்வரினுந் துணைநாலொன்று
வகுத்தனர்கள்மாதொருவ ளுடன்வந்தெய்தும்
விந்தைபதினோராங்கோள் மூன்றினோடு
மேவபவர்தரித்திடவே துணைப்பெண்மூந்தும். (உஉங)

மந்தனுமூன்றாங்கோளாய் மூன்றிலேக
வருமதற்குமூன்றதிலே ஒருகோளேகச்
சிந்தைபதினோராங்கோள் புகரதாகித்
தினகரன்றன்னுடன்கூடி யுபயமேற
விந்தையுடன்வருங்குருதி மறைந்துநீசம்
விளங்கிடவேகொடியபவர் பதினொன்றானால்
வந்திடுஞ்சேயுடன்வரினுந் துணைநாலொன்று
மாதிருவர்தோன்றுமெனக் கணிதமோது. (உஉச)

ஓதுமெனமூன்றுதுணை மாதிரண்டு
ஒழிந்திடுமேதனக்குமுந்தி மரணஞ்செப்பு
சீதமுடன்மூன்றுடையோன் பதினொன்கோளன்
தினகரன்மால்சேய்கொடியோ னிவர்க்டானும்

வேதமுடன்மூன்றலது பதினொன்றுனல்
விளங்கிடுஞ்சேய்ஏகமென வளருமென்றே
சோதிடநூல்தேர்ந்தவர்கள் கணிதமொன்று
சொல்லினர்கள்மேதினியிற் சுருதிபார்த்தே. (உஉரு)

சூரியனும்பதினொன்கோ ளாகிமாலுந்
தொல்புகருங்கூடியொன்றுய்க் கரிவீடேறச்
சாருமிக்கோளிருந்திடும்வீ டதிபன்றுனுஞ்
சாருயிர்க்குப்பவருடனே மறையுமாகிற்
பாருயிர்க்குமூன்றுங்கோள் பதினொன்றேகிப்
பகருமதிமாந்தியுடன் தரிக்குமானல்
கூருயிரில்வருங்குருதி தனிக்கவந்த
குறுகியசேயுடன்வரினுந் துணைவர்செப்பே. (உஉசு)

செப்புமெனநாலுதுணை மாதுநாலு
சேர்ந்திடுமேதப்பாது கணிதவாய்மை
தப்பியதோர்பன்னேன்கோ ளதனைக்காரி
சாரும்விழிப்பார்வையினல் நோக்குமானல்
முற்படியேவுடன்வரினுந் துணைவர்மாது
மொழிந்தனர்கள்நாசமெனக் கணிதமாகத்
துப்பிதழாய்ஏகமதாய்த் தனிப்பனென்று
சொல்லினர்களாகமநூல் துறந்தமேலோர். (உஉஎ)

மாதேகேள்வருமுயிர்க்குப் பன்னேன்றன்னில்
வருங்கொடியோன்தனித்திடவே பதினொன்கோளன்
சீதமுடன்புகராகிப் பரிமாலோடு
சேருயிர்க்கீராறலது வுபயமாக
வேதமுடன்வருங்கரியன் மூன்றின்கோளாய்
விளங்குயிருக்கட்டமமா யலதுமூன்றில்
ஓதுமெனப்புகர்மனையிற் குருதியேகில்
ஒத்துயிர்க்குமறைந்திடவே உடன்வந்தெய்தும். (உஉஅ)

வந்திடவேயேழுதுணை மாதொன்றுக
வகுத்தனர்கள்வெகுபெலமாய்த் திரட்டிப்பார்த்துச்
சிந்தையுடன்மூன்றுதுணை வரும்பெண்ணொன்று
செத்திடுமேசர்ப்பமதாற் றரணிமீது

விந்தையுடன்மூன்றுடையோன் வியத்திலேகி
விளங்குபதினோராங்கோளுடன்வந்துற்றால்
சுந்தரமாயேகமெனத் தழைப்பானென்று
சொல்லினர்கள் கணிததமி ழாய்ந்தமேலோர். (உஉகூ)

சந்திரனும்பதினென்கோ ளாகியேகுஞ்
சாருமிடம்பவர்மனையாய்க் கரிகேதோடு
வந்துயிர்க்குமறையாமற் றரிக்கமுன்பின்
வளருமிடம்பவர்வீடா யிருக்குமானால்
சிந்தையுடன்மூன்றுங்கோள் பகைநீசத்திற்
சேர்ந்திடவேதோன்றியசேய் துணைமாதெல்லாம்
விந்தையுடன் தனக்குமுந்தி நாசமென்று
விதித்தனர்களாகமசாஸ் திரத்தின் நூலால். (உகூ0)

சூரியனும்பதினென்கோ ளாகியேகுந்
தோன்றுமிடமறைந்திடவே அதற்குநாதன்
பாருயிர்க்குமூன்றோனாய்ச் சுபர்களோடு
பானுவுக்குக்கருமமல தொன்பதாகக்
கூறுமெனவருங்குருதி அருணனோடு
குறுகுமிடம்பவர்வீடாய்த் தரிக்கமூன்றில்
சீருடனேமாந்திவரத் தோன்றுஞ்சேய்க்குச்
செப்பினர்களுடன் துணைவர் துகையைச்சொல்லே. ()

சொல்லுமாணஞ்சு துணை பெண்ணுமஞ்சு
தோன்றிடுமேதப்பாது கணிதமாகச்
செல்லுமெனமூன்றுதுணை மாதுமூன்று
செத்திடுமேதனக்குமுந்தி நாசங்காட்டும்
வெல்லுமெனமூன்றுங்கோள் பதினென்கோளும்
விளங்குயிர்க்குக்கேந்திரபாய் வளருமானாற்
சொல்லுமெனஏகமதா யுதிப்பனென்று
சொல்லினர்கள்சோதிடநூற் படியென்றோதே. (உகூஉ)

சுங்கனுமூன்றுங்கோளா யுதயமேறித்
தோன்றுமுயிர்க்கோளுடனே தரிக்குமாகிற்
சங்கைபதினோராங்கோள் மாலதாகிச்
சனியுடனேசேயனுமே வுபயஞ்சேர்ந்தால்

தங்குமெனத்தோன்றியசே யுடன்வந்தெய்தும்
தன்துணைவர்நாலொன்று மாதிரண்டு
பங்கமுடன்நாலுதுணை மாதிரண்டு
பாழ்படுமேதனக்குமுந்தி நாசமோது. (உ௩௩)

பதினொன்கோள்மாலோனுய் நீசமேறிப்
பகருயிர்க்குமூன்ருங்கோள் கொடியனேடு
சதிருடனேவுயிர்தனக்கு வியத்திலாதல்
சாருமொன்பான்தானமதாய்த் தரிக்குமாகில்
விதியிலக்கினந்தனக்கு மூன்றிற்பாம்பு
விளங்கிடவேதோன்றியசே யுடன்வந்தெய்தும்
அதிபதியாய்மாதிருவர் வரினுமொன்று
அறைந்தனர்கள்தப்பாதே கணிதநூலோர். (உ௩௪)

சனியுயிர்க்குமூன்ருேனு யாட்சியேறித்
தனித்திடவேசுபர்நோக்கா தாகுமாகிற்
புனிதமுடன்பதினொன்கோள் புகரதாகிப்
புந்திபரியுடன்கூடி யுபயமேற
இனிதுடனேவருங்குருதி யாறெட்டாகி
யிருந்திடவேயெக்கோட்கள் சேராதானுல்
கனிவுடனேதோன்றியசே யுடன்வந்தெய்துங்
காரிகையும்மூன்றுபய துணையென்ருேதே. (உ௩௫)

ஓதுமெனவுயிர்தனக்கு மூன்றின்மூன்றில்
உற்றவக்கோள்தனித்திடவே சுபர்நோக்குற்ருல்
நீதமுடனுண்மூன்று பெண்தானென்று
நிச்சயமாய்நாசமெனத் திரட்டியோது
சீதமுடன்மூன்றினுக்கு மூன்றைப்பாவர்
சேரும்விழிப்பார்வையினுல் நோக்குமானுற்
சேதமெனவுடன்வரினு மங்கையொன்று
செத்திடுமேதனக்குமுந்தி நாசங்காட்டும். (உ௩௬)

பதினொன்கோள்மறையோனுய் நீசமேறிப்
பகருயிர்க்குமூன்ருங்கோள் கொடியனேடு
சதிருடனேவுயிர்தனக்கு மறையாதாகித்
தரித்திடவேசுபர்நோக்கா தாகுமாகில்

விதியுடனேவருங்கரியன் மறைந்தேஆட்சி
விளங்கிடவேவுடனொருகோள் வரினுமானால்
அதிபதியாயுடன்வரினு முபயமாது
அழிந்திடுமேவோர்மாது தனக்குமுந்தி. (உகஎ)

வருமுயிர்க்குமூன்றதனிற் கொடியோனேக
வளருயிர்க்குமூன்றுங்கோள் கரியனாகித்
தருமாவிக்கட்டமத்திற் பரியோடொன்றாய்த்
தரித்திடவேபதினொன்கோள் மறையுமானால்
அருமறைநூற்படிவிதியா லுடன்வந்தெய்தும்
அறைந்தனர்களுபயதுணை மாதுமொன்று
குறுகிடுமேதப்பாம லுபயமாது
குறித்தனர்கள் கணிதமொழிப் படியால்நூலோர். ()

ஆரலுடன்மாந்தியொன்றாய்ப் பருதியோடு
அமர்ந்திடவேஅதற்குடையோன் கரியனாகிப்
பாருயிர்க்குமூன்றதனிற் றனிக்கமூன்றோன்
பகருமனைக்கேழாகி மதிபாம்பொன்றாய்ச்
சாருயிர்க்குக்கருமமது உயிரிலானாற்
சார்ந்திடுஞ்சேயுடன்வரினுந் துணைப்பெண்நாசம்
சீருடனேயேகமெனத் தனிப்பனென்று
செப்பினர்களாகமநூல் தேர்ந்தநூலோர். (உகக)

காதலியேமூன்றதனுக் குடையமேகாளன்
கருதியபாவருமாகிச் சுபரோடேகில்
வேதனதிற்றரித்திடினு மத்தானத்தோன்
விளங்கியபாவருமாகி யவர்முன்பின்னால்
தீதவர்களிருந்திடவுஞ் சுபர்கள்சேர்ந்தால்
தேளாடுமிதுனதுலை தோன்றினோர்க்கு
ஆதரவாய்த்துணைவர்களு மாறேழெட்டு
அமருமதில்மரணம்போக் கிருப்பைச்சொல்லே. (உசO)

சொல்லுசகோதரமரண காலமுன்னாற்
றோன்றுபயமாதுடனே யேக்மாது
அல்லலிலாதிருக்குமெனப் பவத்தானத்தி
லதிபாம்புகூடிடவு மத்தானத்தோன்

மெல்லிநல்லாயட்டமத்தோன் வீரியத்தில்
விளங்குமுன்போலில்லதனிற் றோன்றுவாரால்
கொல்லுமேயவன்றுணைவ ரெவருற்றாலுங்
கோளரிமுன்மதயானைக் கூட்டம்போலாம். (உசக)

ஒருமூன்றோன்சுபராகச் சூரியன்காலெய்த
ஒருமூன்றில்மூன்றோனு மறைந்திடுவனுகில்
வருதுணைவர்நாசமென்ப ரதிற்புகர்மால்குருவும்
வந்திடுகிலாணுபய மாதுமூன்றாகும்
தருதுணைவராமெனவவ் வணமலதுமரணஞ்
சாற்றிடலாந்தன்முன்னு லாண்துணைவரிறக்குங்
திருவருளாலெனதுகுரு தேசிகனுமுரைத்தார்
தேர்ந்ததனைத்தமிழதனுற் றெரியவுரைத்தனனே. ()

அரவுகரிசூரியன்மூன் றிருக்கத்தானக்கோள்
அவனுயிர்க்குமறைந்திடுகிற் சேய்துணைவரெல்லாம்
பருதிகண்டவிருளதுபோ லென்றுரைக்கலாகும்
பலமாகவிருந்தாலு மேகதுணையெய்தும்
கருவயதீராறினுக்கு ளத்துணைவரிறக்குங்
காசினியில்றுபதுக்கு அவனிருப்பனென்றே
புருவசிலைதனைப்பழிக்கு மடமானேகேளாய்
பொங்குகடற்சூழுலகந் தனிலறைவாய்மானே. (உசங)

வேறு

வெள்ளிமூன்றதனிற் றரித்திடவரினும் வெள்ளியொன் பவனுமேயாகில், தெள்ளியபருதி சேர்ந்திடிலஞ்சோன் செப்புயிர் மறைந்திடுஞ்சேய்க்கு, அள்ளியதுணைவ ராறிருந்தாலு மனைத்துமே நாசமாய்ப்போகும், விள்ளுமித்தானத் தொருசுபரிருக்கில் விளங்கியதுணைவ ரொன்றுமால். (உசச)

ஆமவன்றனக்கு முன்னதாலிறக்கு மலதவன்பின்னரையாண்டாஞ், சேமமாமூன்றிற் குருவிருந்திடுமால் செப்புமம்மூன்றினில்மூன்றில், சாமனுமிருக்கிற் சுபர்களில்லாதால் தன்னுயிரான்மறையாலுஞ், சாமசாஸ்திரத்தா லுரைத்தனர்மேலோர் தந்துணை யஞ்செனவுரையே. (உசரு)

வேறு.

சொல்லுமூன்றுடையநாதன் சூரியன்மறைவதாகி
வல்லியேமாந்தியுற்றே வந்திடக்காரிமூன்றில்
இல்லொருதுணையில்லாது ஏங்கியேயிறக்குமென்பார்
சொல்துணையதனுற்றுன்பந் தொகுத்திடுந்தனக்குமுன்போம்.()

துணையின்கோளாரலாகத் தோன்றியமதியோடெய்தால்
இணைசுபமாகினுலு மிவனுயிர்க்கைந்தோன்வீடால்
பணைசுபர்பாம்போடேகிப் பதிங்கிலோரேகமாகுந்
துணையிவன்றன்னேடேகந் தோன்றிடுந்துடியின்மன்னேய். ()

வேறு.

சூரியன்மூன்றி லிருந்திடவந்தத் துணைவர்தானட்ட மத்துடையோன், சூரியனுடனே யிருந்திடவேறு சுபரதிலேயிருந்தாலும், சூரியன்கண்ட பனியதுபோலத் தோயுமாஞ்சோதரரெல்லாம், சூரியன்றனைப்போற் சாதகனொருவன் துணையிலாதிருந்து வாழுவனே. (உசஅ)

வேறு

ஒருமூன்றுமறுமூன்றும் பாவராக
ஒருமூன்றேன்சுபராகப் பாம்போடேக
வருமூன்றில்மூன்றேனுந் தனிப்பானுகில்
வாய்மையுளசோதரர்கள் நாசஞ்சொல்லு
இருமூன்றில்மூன்றேன்சே ரிடம்நட்பானுல்
இயல்வனமுன்பின்சுத்த மிருந்திட்டாலும்
வரும்பலன்முன்போலாகு மென்றுமேலாய்
வகுத்திடுநீமூன்றினுக்கு மூன்றுந்தானம். (உசகூ)

வேறு.

துணையினிலிருந்தகோட்கள் தொகுத்துச்சமாகுமானுல்
இணையுறுபவருற்றுலு மிருந்திடநாதன்சென்மம்
அணைமறைந்திடுவனுகி லவன்றுணைதீர்க்கமாகுந்
துணையினைப்பிரிந்துவாழ்வன் துணையினுற்பகையுண்டாமே. ()

வேறு.

வருதிரிதிகையில் மதியுடன்பாம்பு வந்திடத்திரிதிகைக்குடையோன், பருதிதன்காலி லிருந்திடவேறு பதிசுபரேகிடிற்ற

ணிக்கக், கருவுடனொன்பான் றுணைவரோடிருப்பான் காலனூர் புகுந்ததுபோகச், சுருதியாயேக மாதுடனிரண்டு துணைவரும்பு ருடராய்த் தொகுப்பார். (உருக)

மூன்றினோன்சுபராய் மூன்றினில்மூன்றோன் முதுசுபராயி ருந்தாலும், தோன்றியவுயிரோன் பாவராகிடினுந் துணையுயிர்க் குடையவன்மறைய, ஆன்றிடுந்துணைவர் சதுரமதாகு மவனியி லிறப்பதுபோக, ஈன்றொருமாதோ டாடவர்மூன்று மிருந்திடுமெ ன்றனரியல்பாய். (உருஉ)

மூன்றின்கோள்மதியா யிரண்டின்கோளுடனே முக்கியபுக ரிருந்திடினுஞ், சான்றநற்சேய்க்கு லாபமேகுசனுந் தரணிதன்வீ ட்டினிற்குருவும், ஆன்றிடுங்கருமன் கேதுடன்நாலி லமர்ந்திட விரவியுமுயிரிற், றோன்றிடப்பிறந்த சாதகன்றனக்குத் துணைவ ருமூன்றென மொழிந்தார். (உருங)

மொழிந்தனர்பெரியோ ராவிக்கிராறில் முனிவனுமாந்தியுந் தரிக்கில், அழிந்திடுந்துணைவர் பெண்ணுமேதீர்க்க மாறிரண் டொன்றிலேவிதவை, கழிந்திடுமொன்று நாலுதிங்களிலே காரி யுமுயிரை நோக்குற்றால், மொழிந்தனர்குருவிற் சோதரநாசம் மோசமாய்ப்போய் விடுமென்றார். (உருச)

மதிமகன்சேயும் அரவமுமருக்கன் வளர்பகையாட்சியாயி ருந்தால், சதிருடனிருப்பன் தனக்குமுன்பிறந்தோன் தரணியி லிருப்பதுநாசம், விதிமுறையாலே கணிதநூலுரைத்தார் வித் தைகளற்பம தாகும், அதிகமாமுப்பத் திரண்டதன்மேலே அவ னுடயோகமே வுரைத்தார். (உருரு)

வேறு.

மந்தனுஞ்சேய்வீடேக வக்கிரன்தன்வீடாகச்
சிந்தையாய்மதியுமந்தன் சேயுடன்வீட்டிற்சேர்ந்தால்
முந்தவேமறந்தார்நாசம் முன்பினும்பெலமிலாதால்
வந்தவன்றானும்வாழ்வன் வருந்துணையொன்றுவாழும். (உருசு)

வேறு.

சந்திரன்குருதி யிறையவன்பொன்னோன் சாருயிர்மூன்றின் கோளுடனே, வந்திலக்கினத்துக் காறெட்டுமூன்றில் மறைந்தி டச்சுபமிலாதிடுகில், விந்தையாய்த்தோன்றுஞ் சாதகன்றனக்கு

விதித்தனர் மூன்றிருதுணையாந், தந்திடுமிறைவன் மூன்றினேன்
பன்னேன் சாரிடங்காரிவீடுற்றால். (உருஎ)

உற்றிடுஞ்சேய்க்கு வந்திடுந்துணைவ ருயர்வுடன்நாசமென்
றுரையே, சத்தியத்துடனே கணிதநூல்விதியாற் சாற்றினார்மே
லவர்மொழியால், சித்தியாங்குருவு முயிர்க்குமூன்றேனுஞ் சேரி
டமுதயம்வந்துற்றால், ஒத்திடுந்துணைவர் வெகுதிறமாக வுலகி
னில்மூன்றிருந்திடுமே. (உருஅ)

வேறு

சூரியன்பன்னேனென்றாய்த் தோன்றிடமால்வீடேக்
காரிசேய்புகர்கேதோடு கருகிடமுயிர்மூன்றுற்றால்
கூறிடுஞ்சாதகற்குக் குறித்தனர்துணைப்பெண்நாசம்
ஆரியனணையாக வறைந்தனர்தரணிமீதே. (உருகூ)

வேறு.

மதியுடன்பருதி புகருடன்லாபம் வந்திடச்சேயிரண்டா
கில், விதியுடன்குருவும் பாவனையெட்டில் விளங்கிடச்சேயையும்
பார்த்தால், துதிபெருந்துணையிற் புருடர்நாலாகத் தோன்றிடு
மாதுமூன்றுடனே, கெதிபெறவிருப்பன் பூமியுந்தனமுங் கீர்த்
தியும்வல்லபமுண்டே. (உசூ0)

வேறு.

கும்பலக்கினமேதோன்றக் குருவுடன்பாவர்சேர
அம்புலிமாந்தியோடு அரிவையிலிருப்பதானால்
நம்பியரவற்குநாலு நங்கையரொன்றேயாகும்
எம்பியரிரண்டேயாக வியம்பினர்கணிதநூலோர். (உசூக)

கரியவன்கேதுமாகக் கதிர்புகர்மால்வீடேகப்
பரியவனில்லந்தன்னிற் பார்க்கவன்மதிபொன்னால்
சரியுடனிருப்பதானாற் றரணியிலுதிக்குஞ்சேய்க்குத்
துரிதமாய்த்துணைவர்நாசந் துணிவுடன்கன்னியொன்றும். ()

மதியுமேமூன்றிற்சேர வக்கிரன்மறையமந்தன்
விதியுடனட்டமத்தில் மேவிடவருவதானால்
பதிதனிற்பிறக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்துணைவர்நாசஞ்
சதியுடனேகமாகத் தரணியிலிருப்பன்மாதோ. (உசூங)

குருதியும்புகர்வீடேகக் கொடியவன்கரியனோடு
வருநிதிதனத்திலேக மழைக்கோளன்மந்தன்வீட்டிற்
சுருதியாயிவர்கடன்னைத் துணிவுடன்சுபர்கள்பார்த்தால்
வருமுயிர்த்துணைகளற்பம் மதித்தனரிரண்டுவாழும். (உகூச)

வேறு.

மூன்றினிலிரவி யிருந்திடச்செவ்வாய் முக்கியமாந்தியோ
டுயிரிற், றோன்றிடநாலோன் கருமனுந்தனத்தோன் சொல்லிய
கேதுடன்வரினும், ஆன்றநற்பெண்ணு மாணுமஞ்சதனி லழிந்
திடுமிரண்டுமேபிலமாய், மூன்றுளவாணும் பெண்ணுமேயென்று
முடித்தனர் பெரியவர்தாமே. (உகூரு)

வேறு.

மானுயிர்க்குப்பதினோராங் கோளதாக
வருமனையுங்கேந்திரமாய்ப் பவர்கள்வீடாய்ச்
சீலமூளஜீவனுக்கு மூன்றிற்பாம்பு
சேர்ந்திடவேமூன்றுடையோன் மறைவீடுற்றால்
சாலவெனவருந்துணைவ ருபயமேகஞ்
சார்ந்திடுமேமாதிரண்டு தோன்றுமென்றே
தூலமெனவுடன்வரினுந் துணைவர்மாது
துஞ்சிடுமேபாம்புவருந் தோஷத்தாலே. (உகூகூ)

வேறு.

மாதுருதானத்தோனும் வளருமூன்றுடையகோளும்
ஆதித்தனுடனேகூடி யணுகிடப்புகரோடேகில்
வாதிக்குஞ்சோதரங்கள் வந்துடன்சேதமாகும்
பேதிக்குந்துணைவியொன்று பெலமெனச்செப்பலாமே. (உகூஎ)

சகோதரபாவகம் முற்றிற்று.

உ

பரமபதிதுணை.

உலோககுரு.

ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சோதிட சங்கராச்சாரியம், கஉதல்

ஆயுட்பாவகம்.

இஃது

குலசேகரமாநகரம் மடாதீனகர்த்தரவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ
கணபதியானந்த சுவாமிகள் மாணுக்கரும்
எட்டியாபுரம்சமஸ்தானம்நடுவப்பட்டிகர்னம்
முத்துக்குமாருபிள்ளை அவர்கள்குமாரருமான சோதிடம்
M. சுப்பிரமணியபிள்ளை அவர்களாலும்
மதுரை
த - குப்புசாமிநாயுடு அவர்களாலும்
சீர்திருத்தி

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்
S. முத்தயபிள்ளை அவர்களாலும்
நடுவப்பட்டி சோதிடம்
M சுப்பிரமணியபிள்ளை அவர்களாலும்

சென்னை சூளை.

பி-வே-நமசிவாய முதலியாரது
நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1906.

REGISTERED-COPYRIGHT.

இரண்டாம்பதிப்பு காப்பி 1000.

தமரன்துணை.

நூன்முகம்.

உலகத்திலுள்ள சகலத்திராட்குள், சோதிட முணர்ந்த புண்ணியவான்களுக்கு மாதிடமாக வழுத்தியதாவது !

இப்பூமியின்கண் எழுவகைப்பிறப்பு நால்வகைத் தோற்றம், எண்பத்து நான்குலட்சம் யோனிபேதங்களில் மானிடஜென்மமாகப்பிறப்பது அரிது! அரிது.!!

இப்பிறவிதப்பினல் எப்பிறவிவாய்க்குமோயென்றுதாயுமான சுவாமிகளும், தெய்வத்தா லாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக்கூலிதரும்-என்று திருவள்ளுவரும்; திருவுளம்பற்றினர்கள். நமக்குநேரிடும் நன்மை தீமை திரிகாலவர்த்தமானமுந் தெரிந்து கொள்ளும்பொருட்டே மேலோர்கள் விதிவிலக்கென்னும் சோதிடசாஸ்திரம் உண்டுபண்ணி யிருக்கின்றார்கள். இதைமுன்னிட்டு மார்க்கண்டேயர் முதலானமஹான்களும் பின்வருங்காலமிருத்தையறிந்து விதியை விலக்கிக்கொண்டார்களல்லவா ?

இச்சோதிடம் ஆதியில் சங்கரன்உமைக்குபதேசிக்க அதைச் சித்துபுருடாளாகிய சிலபேர்கள்பலவாறுகச்சொல்ல அதைத்திரட்டிச் சாரதம்பாள் கிருபைபெற்ற ஆதிஉலோககுரு சங்கராச்சாரிய சுவாமிகள் **12000** செய்யுட்களாகச் சாற்றியதை பல இடங்களிற் சில பாகமிருந்தும் சில பாகமில்லாம லிருப்பதால் ஜாதகங்களுக்குப் பலன்சொல்ல யேதுவில்லாம லிருந்தது. இப்பொழுது வழங்கிவருகிற சாதகசிந்தாமணி குமாரசுவாமியம் முதலான சிறு நூற்களைப்போலும், கௌசிகசிந்தாமணிசுகர்நாடி முதலானபெரு நூற்களைப்போலும் ஒருவாறு செய்யுட்கள்சிறுத்தும், பெருத்தும் சொல்லவில்லை. உள்ளபடி இச்சங்கராச்சாரியத்தில் ஆயுள் வித்தை சகோதரம்-மாதுர்-புத்திரர்-சத்ரு-களத்திரம்-ரோகம் - பிதுர்யோகம் - பாக்கியம் - சயனம் - பதவி முதலானதுகளைப்பற்றி, பஞ்சகிரகமுதல் தசக்கிரகம்வரையமைத்து அதற்குத் திட்டமாகப்பலன்

கள் சொல்லியும் இடைகளில் வரும் அவமிருத்துக்களுக்குப் பரிகாரம், முன் ஜென்மத்திற்செய்த பழவினை விபரத்தையுங் குறிப்பாக ஒருசெய்யுள் அல்லது இரண்டு செய்யுளிற் சொல்லப்பட்டிருக்கிறது.

இச்சாஸ்திரம் இப்பொழுது சம்பூரணமாகக் கவிராஜபண்டிதர் பரம்பரை குலசேகரமாநகரம் மடாதீன கர்த்தரவர்களாகிய வேம்பத்தூர் ஸ்ரீலஸ்ரீ கணபதியானந்த சுவாமிகளால் எங்களில் சுப்பிரமணியபிள்ளைக்கு அருளியதை உலகோபகாரமாக யாவருங்கண்டு ஆனந்திக்கும்படி மதுரை, த - குப்புசாமிநாயுடு அவர்களால் சீர்திருத்தி முதலாவது பிரதானமான ஆயுட்பாவகமட்டும் அச்சிட்டிருக்கிறது. மற்ற பாவகங்களெல்லாம் பின்னால் வெளியிடக்கூடும். இப்புத்தகம் வேண்டுபவர்கள் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். மற்ற பாவகங்கள் தேவையுள்ளவர்கள் முன்னேக்கூட்டித் தெரிவிக்கக் கோருகிறோம்.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகல கனவான்களுக்கும், அச்சுக்கூடத் ததிபருக்கும், அறிவிப்பது யாதெனில்.—இந்த சங்கராச்சாரியர் சோதிடம் பன்னீராயிரத்தில் (ஆயுட்பாவகம்) என்னும் சாஸ்திரத்தை அடியிற் கையொப்பமிட்டிருக்கிற எங்களால் அச்சிட்டு ரிஜிஸ்தர் செய்திருப்பதால் ஷை புஸ்தகத்தை எங்களிருவர்களுடைய அனுமதியன்றி யாராமொருவர் அச்சிடுவரேல் 1867ஆல் த்து 25-வது ஆக்ட்டு 20 - வது பிரிவு 6-வது உட்பிரிவின் விதிப்படி நாங்கள் கோரும் நஷ்டத்திற்கும் பினல்கோடு செக்ஷன் குற்றத்திற்கும் உத்திரவாதிகளாக வேண்டுமென்பதைக் கவனிக்கக்கோருகிறோம் எங்களிருவருடைய ஸீலும் வைக்கப்பட்டிருக்கிறது.

இதன்விலை ரூபாய். 1 4 0 வி-பி-சார்ஜ் 0 3 0

இப்படிக்கு,

☞ S, முத்தயப்பிள்ளை,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்.

☞ M, சுப்பிரமணியபிள்ளை,

நடுவப்பட்டி சோதிடம்.

உ

பரமபதிதுணை.

உலோககுரு

ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சோதிடசாஸ்திரம் பன்னீராயிரத்தில்,

ஆயுட்பாவகம்.

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

ஓதியபெரியோர் வாக்கா லுரைத்திடும் நூல்கடனனை
மேதினிதனிலே நன்றாய் விளங்கிடச் செய்யுளாகச்
சோதிடப்பலன்க ளெல்லாம் தொகுத்துயான் விளம்புதற்கு
ஆதியின்மூலமான ஐங்கரன் காப்ப தாமே. (*)

செங்கண்மா லருளினாலே செகந்தனில் மனுவுக்கெல்லாம்
இங்கித மாகநல்ல சோதிட மியம்பவேண்டித்
திங்களின் நிறத்தையொத்த தேவியாய் வந்துதித்த
பங்கய முகத்தாள்பால சரஸ்வதி பாதங்காப்பாம். (*)

அவனியிற் பெரியோர்தங்க ளனுக்கிர கத்தால்யானும்
புவனியின் மனுவுக்கெல்லாம் புகழ்ந்துசோ திடத்தைச்சொல்லச்
சிவனருள் மைந்தனை செந்தில்வே லவன்முன்வந்த
குவலையம் புகழுமொற்றைக் கொம்பனுங்காப்பதாமே. (*)

அண்டம்வாழ் முனிவர்தங்த ளனுக்கிர கத்தால்யானும்
மண்டலந் தன்னில்யார்க்கும் வருமிகழ் செல்காலங்கள்
உண்டிடுங் கனவுஞ்சாவும் யோகமும் ரோகம்யாவும்
வண்டணி குழலாய்மிக்க பலன்வகுத் துறைக்கலுற்றேன் (*)

பொன்னவ னிரவிசெவ்வாய் புந்தியும் பிறையுஞ்சுங்கன்
தன்னோடு காரிராகு சனிமகன் கேதின்னோர்கள்
முன்னிவர் வேதநூலால் மொழிந்திடும் பலன்களெல்லாஞ்
சொன்னது தவறுதென்று தொடங்கினன் சங்கரன்றான். (*)

பாயிரம் - முற்றுப்பெற்றது.

உ

பரமபதிதனை.

உலோககுரு.

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சோதிடசாஸ்திரம் பன்னீராயிரத்தில்,

ஆயுட்பாவகம்.

சாரதாம்பாள்முன்னிற்க.

அட்டமத்திற் குருவிருக்கக் கேந்திரத்தில்வெய்யோன்
அவர்வீட்டிற் கரியிருக்க அஞ்சினோன் ருனுந்
திட்டமதா யாட்சியுச்ச மிருப்பாராகிற்
றிறமானகணிதநூற் செலுத்தும்வகை சொல்வேன்
சட்டமுடன் வயதிருபத் தஞ்சுமேலாய்ச்
சாலியவாகனயோகஞ் சாற்றலாம்பாரு
இட்டமதா யவன்வயது அறுபதெனச்சொல்வேன்
இப்படியே உரைத்தார்கள் பெரியோர்கடானும். (க)

வேறு.

குருவுசுங்கன் மந்தனோடு கோளிலாத வீட்டினிற்
பரிதிதிங்கள் புந்திபார்வை பகரலாகும் யோகமாம்
உறுதியான வாசவன்றன் யோகமாக வுரைசெய்தார்
அறுதியாக யெழுபதெட்டு அஞ்சிரண்டி லொழியுமே. (உ)

வேறு.

புகர்வீட்டிற் கரியிருக்கக்கேந்திரத்திற் சுங்கன்
புந்திசெய்வெய்யோனுஞ் சவுரிவீடேகத்
தகவிலாக் குளிகனுமே லக்கினத்தில் நீசம்
தான்கணிதநூலதனை வகையாகச்சொல்வேன்

பகரமுடன் வயதுமுப்பத் தஞ்சிரண்டிற்றானும்
பாக்கியங்கள் புத்திரர்கள் பலிக்கும்பாரு
தகருவனுக்கிடையில்லை யென்றுரைத்தார் மேலோர்
சாற்றினாரவன்வயது யெழுபத்தஞ்சாமே. (ரு)

வேறு.

அஞ்சுமேயெழுபதாக அறைந்தனர்சாதகர்க்கு
மிஞ்சவே உயிற்றீக்கோள் விளங்கிடவளருமாகில்
தஞ்சமாயறுபதாகச் சாற்றினார் கணிதநூலில்
அஞ்சவேச்னியன்வந்தா லறைந்தனரன்பதாயுள். (சு)

வேறு.

பன்னிரண்டுக் குடையோனுங் குளிகனோடு
பார்க்கவனுமாயிருந்த பலன்றான்சொல்வேன்
இன்னிலத்தில் அவர்தமக்கு மனைவிரெண்டாம்
இயம்பினோங் கணிதவகைப் படியேசொன்னோம்
மன்னாபுகழ் தமிழ்க்கரசன் வழக்கில்வல்லன்
மனைவிரெண்டு வாழ்ந்திடுவாள் மதியார்சொன்னோம்
துன்னிதமா யவன்வயது உறைத்தார்மேலோர்
துணிவுடனே யெழுபதனிற் றொலையுமாக்கை. (டு)

வேறு.

வெய்யவ னோடுபுந்தி விளங்கிடத் தனுவிற்றோன்ற
பையவேகேந்திரத்திற் பதிவுடன் மதியேநிற்க
வையமேயிருக்கநூலோர் வகுத்தன ரறுபத்தேழு
தையலாள்யேகமாகச் சாற்றினா ரவளால்யோகம். (சூ)

யோகமே யவளாலென்று வோதினார் கணிதநூலோர்
போகமே அனுபவிப்பான்புத்திர னாறதாகும்
வாகன யோகசாலி வயதுமுப்பதுமேலப்பால்
பாகமாய் மனவியாலே பாக்கிய மதிகமாமே. (எ)

அஞ்சினிற் சேயுமாக அவற்குநா லதனிற்சுத்தம்
விஞ்சையாய் மகரந்தன்னில் விளங்கிட மதியுமந்தன்
குஞ்சரத் துடனேநிற்கக் குறித்தனர் கணிதநூலோர்
வஞ்ச மில்லாமற்சொல்ல மதித்தனரெழுபத்தஞ்சு. (அ)

கரிய்வன் குருவீடேகக் கலைமறைபிலமாவானுல்
வருமெட்டோ னுயிர்க்குளோனும் வளருகேந்திரமேயானுல்
தருவுயிர்க் கஞ்சோன்ருனுஞ் சற்குரு புகர்மாலானுல்
பெருமறு பதின்மேலெட்டுப் பேணிடும் வயதென்றேதே. (கூ)

ஓதுயிர்க் கோளான்காரி உயிர்க்கெட்டோனிருந்தயில்லங்
கேதுசூரியனுங்கூடிற் கிளத்திடும் அஞ்சுதள்ளி
நீதமா யுய்யுமென்று நிச்சய முரைத்தார்மேலோர்
ஓதரச் சேய்சேர்ந்தாலுமொழிந்திடு மதன்கீழ்பத்தே. (கo)

மகரலெக்கினத்தில் மதியுடன்சேயும் வளர்குரு கேந்திரமி ருந்தால், தகவிலாப்புந்தி உச்சமாயிருக்கச் சனியுமே யேழினிற் ருேன்றப், பகருடன்கணித யோகமேவகுத்தார் பண்ணிரண்டஞ் சுமேவயதில், மகபதிபோலத் தனமெலாஞ்செலுத்தும் !வயதுமே அன்பதுவரைக்கும். (கக)

புகருமே மூன்றிலுச்சம் பொருந்திட வவற்குநாலில்
தகரிலான் கொடியோன்வானேன் சாரவே யிருப்பானுகில்
நிகரிலா தனவானுவன் நீதமாய் முப்பத்தெட்டில்
தகருவ தில்லையென்ருர் தாரத்தால் யோகஞ்சாற்றே. (கஉ)

யோகமே அவளாலாகும் ஒழியுமே ஐம்பத்தெட்டிற்
பாகமாய் மனவிசொந்தம் பகரலாம் பதினுலாறில்
போகமே அனுபவிப்பான் புத்திரன் நாலாய்த்தோன்றும்
வேகமா யிருப்பான்சொன்னேன் விஷத்தினு லவன்றன்யாக்கை()

கரிவுடன் புந்திவெய்யோன் கலந்திட வவற்குமூன்றில்
இறுதியாய் குருவுங்கேது மிருந்திடு மானுர்சொல்வேன்
உறுதியாய்மேலோர்தாமும் உரைத்திடு மொழியினுலே
சுருதியாமவன்றன்யாக்கை சோர்தலா மறுபத்தஞ்சில். (கச)

கரியவுன் உச்சமாகக் கலந்திடு மவற்குயெட்டில்
இறுதியாய் வாகனத்தோன் யிசைவிலாவுச்சமாக
அறுதியா யவற்குச்சொன்னே னறுபது அஞ்சிரண்டு
உறுதியாமென்றுசொன்னு ருண்மையாய்க் கணிதநூலோர். (கரு)

குருவுடன்வாகனத்தோன் கூடிடப்பாவற்சேரு
வருநிதிக் குடையோன்ருனும் வளருகேந் திரமானுலுஞ்
சுருதியா யவற்கிரண்டிதாரமாய்ச் சொன்னுர்மேலோர்
உறுதியே அவன்றன்யாக்கை ஒழியுமே யெழுபத்தெட்டில். (கசு)

மிதுனலெக்கினத்தில்விளங்கிடக்குருவும்வெய்யவன்ருனுமேசேறக்
கதுமெனத்திங்க ளலவனிற்றேன்றக் காரியுந் தன்கிரகத்திற்
சதியுடனிருக்க வொன்றுநான்கேழிற் பத்தினிற் சார்ந்திடக்கேது
விதிமுறை தவருகணிதநூலாய்ந்தோர்விளங்கிடயிப்பலனுரைப்பார்

பார்தனிலிருந்து பாக்கியபோகம் பான்மையா யமைச்சற்கு
நிகராய், வாரணக்கூட்டம் விளங்கிடயிந்த வயப்புலி வரும்பகை
போலச், சாரவேவொழியுஞ் சகலபோக்கியனுந் தாரணிதன்னிலே
யிருந்து, மீரவேவயதுஐம்பதுமூன்று மிரண்டினி லிப்பலனுக.

பரிதியுஞ்சேயும் மதியுமேபுந்தி பான்மையாய் புகருமேயாக,
அறுதியாயவர்கள் அவரவர்வீட்டி லமைந்திட மந்தனுங்கேதுஞ்,
சுருதியாய்நட்பு உச்சமதாகிற் றுய்யவே ஆட்சியானுலும், இறுதி
யாயிருந்தா லவர்பலனுரைக்க யியம்பினேங்கணிதநூலாய்ந்தோர்.

ஆய்ந்ததோர் பலன்தான் கணிதநூல்பார்த்து அறைந்திட
அய்யஞ்சுவயதிற், சாந்தமாயவற்கு வெகுதனஞ்சேருஞ் சாரவே
சிவிகையோகமுமாம், வாய்ந்திடப்பரிதியிருளதுபோலவரும்பகை
அவற்குமே ஒழியுங், காந்தமாயவற்கு அறுபதுவயது காசினி யத
னிலே யென்ருர். (உ0)

மூனினுக்குடையோன் முன்பினிற்பாவர் மொழிந்திட வொ
ன்றுநான்கேழிற்,ருணுவமாக யிருக்குமதாகிற்சற்குருவிடுதன்பா
ழாய்,வானுவயோகன்வஞ்சகனுவன்வரும்பலன்அற்பமாமென்று,
சேணிதமாக உறைத்தன ரவர்க்குச் செப்பிடஐம்பதுவயதே.(உக)

வேறு.

இரவியுங் குருவுமாக யிருந்திட யெட்டில்நாலில்
வரமுடன் சனியுஞ்சேயும்வரும்பகையில்லையானுல்
தரணியி லிருந்துயார்க்குஞ் சாலவேதன்மஞ்செய்வன்
கரணியா யவன்றன்யாக்கை கட்டினு ரெழுபத்தஞ்சே. (உஉ)

எழுபதும் அஞ்சுஞ்சொன்னோம் யிப்படிக் கிரகமில்லா
வழுவுடன் சனிவீடேகில் மாயவே கேதானுனும்
பழுதிலாவயது அஞ்சு பத்துடன் நாலுதள்ளி
விழுதியாய் மாயுமென்று மேவினர் கணிதநூலோர். (உங)

வேறு.

லக்கினந்தன்னிற் குருவுமேயிருக்க நாலிலே யிரவியும்புந்தி
பக்குவமாக அவற்குமேயேழிற் பான்மையுரிய் மந்தனுமாகத்
தக்குவதில்லை யவருடவயது சாற்றினோங் கணிதநூலாய்ந்தே
மக்கனத்துடனே அறுபதுமிரண்டு வயதுமே யிப்படியதனுல். ()

வாக்குத்தானத்தோன் உச்சமாயிருக்க வளமுடன் சேயுமே
யிருந்தால், தீர்க்கமாயுரைப்பன் மொழிதடுமாறுஞ் செய்வது கவ
டமேயுடையான், பாக்கியமதிகம் அறுபதுமேலாய்ப் பகர்ந்தனர்
பெரியவர்தானுந், தாக்கினோமென்று கணிதநூல்விதியாற் சாற்றி
னுரறுபதோரெட்டு. (உரு)

மகரலெக்கினத்தில் வளர்பகைஅருக்கன் வாக்கிளேகொடிய
வன்வெள்ளி, தகவிலாநட்பு மாகவேயிருக்கச் சற்குரு வீட்டினிற்
சேயும், புகருடவீட்டில் மாந்தியு நிற்கப் புந்தியுங் கரிகுருவீடாற்,
றகவதுமில்லை கணிதநூல்விதியாற் சாற்றினர் முப்பது ரெண்டில்.

முப்பதுரெண்டில் விதிமுறைப்படியால் மூட்டினர் கணித
நூல்வகைகள், தப்புவதில்லை சகலபோக்கியனுஞ் சாற்றினர் விதி
முறைப்படியே, இப்படியிருப்பன் யெழுபதுவரைக்கும் யிசைவி
லாச் செல்வமே உடையன்,செப்பினோ மனவி யிரண்டதுமொழிந்
தார் சேதமில் லாமலேயிருப்பள். (உஎ)

வேறு.

கரியவன் றன்வீடாகக் கலந்திட வவற்குயெட்டில்
உறுதியாய் மதியேசேர்ந்தால் உரைக்கலா மெழுபத்தெட்டு
இறுதியா யிருப்பார்தாமும் யிருந்தது பகையேயானுல்
சுருதியாய்க் கணிதம்பார்த்துச் சொல்லினு ரறுபத்தொன்று.(உஅ)

வேறு.

அட்டமாதிபனு முயிர்க்குளோன்றுனும் ஆரல்வீட்தனிலே
நிற்கத், திட்டமாய்ப்புகரு மதனிலேசேரச் சேயவன் றுனுமேத

னத்தில், மட்டவிழ்மனவி தானத்துக்கதிபன் வந்திட மந்திரிவீட்டிற், சட்டமாய்ப்பிறக்குந் தரணியிற்சேய்க்குச் சதிருட னெழுபதுவயது. (உகூ)

வேறு.

மதிமக னுயிரிற்சேர வருமெட்டுக் குடையோன்றானுஞ்
சதிருடன் புகர்வீடேகச் சனியுமே சுபர்வீடாக
விதியுடன் கருமத்தோனும் விளங்குகேந் திரமாய்நின்றால்
அதிகமா யிருக்கவல்லன் அவன்வய தெழுபத்தொன்றே. (ரு0)

அதிகமா யிருப்பானுகும் ஆறிரு யெட்டுச்சென்றாற்
சதிருடன் கணிதநூல்கள் சகலமும் உணர்வானுகும்
மதியுட னிறம்போல்மங்கை வருவது யிரேழானால்
கெதிபெற யிருப்பானுகும் கெடுவிதத்தொழிற்குவல்லன். (ரக)

கரியவன் கொதியோனுங் கலந்திடச் சுங்கன்வீட்டிற்
பரியவன் சேயுமாகப் பார்க்கவன் முன்பின்நின்றால்
விரிகுழற் றானத்தோனும் விதிப்படி ஆட்சியானால்
துரிதமா யவன்றன்யாக்கை சொல்லலாம் அறுபத்தேழு. (ரஉ)

குளிகனு மீராறானாற் குறித்தனர் தனங்களற்பம்
அழிவுமே உண்டாஞ்சொன்னே னனதோர் மனவியாலே
பழிகளும் வந்துதோன்றும் பாலக னதிகமாகுந்
இழிவுட னேமனூர்க்கு ஏகுவாம் நாற்பத்தேழில். (ரரு)

அட்டமத்துக்குடையோனுங் குருவுமாக அவறகொன்று நாலினிலேஅரவமாகத்,துட்டமுடன்கொடியோனுங்கரியுமாகத், துரிதமுடன் குருவீடா யிருப்பரால், சட்டமுடன் வயதுமுப்பத் தஞ்சுக்கப்பால், சாற்றினர்திரவியங்கள் ,சகலமுமேவருகுந்,திட்டமுடன் யிப்படியே யெண்பதுமேல்வரைக்குஞ் செல்வகுண தனவானாய்க் சேர்க்கலாந்தேனே. (ரச)

கரியவன் புகர்வீடாகக் கணக்கனுங் குருவீடேகப்
பரியுஞ் சனிவீடேகிப் பார்க்கவன் பிலமாவானால்
உறுதியா யுயிர்க்குள்ளோனும் உயர்வுடன் நீசமானால்
சுருதியா யவன்றன்யாக்கை சொல்லலா மறுபத்தொன்று. (ரரு)

கரியவன் றன்வீடாகக் கதிரவன் ஆட்சியாக
வருநிதிக் குடையோனெட்டோன் வளருகேந் திரமாய்நின்றால்
உறுதியா யுயிர்க்குள்ளோனும் ஒன்பதஞ் சதனிற்சார்ந்தாற்
சுருதியா யெழுபத்தஞ்சு துணிவுடன் வயதுசாற்றே. (௩௬)

வேறு.

அட்டமத்துக் குடையோனும்உயிர்க்குள்ளோனும்அஞ்சுரெண்டுக் குடையோனும் ஆறினோனுந், திட்டமுடன் லெக்கினமாயிரண்டு அஞ்சிற் றிறமான யிராறிலிருப்பாராகில்,நிட்டைபுரிமாலிருந்த வீட்டில்மாந்தி நின்றிடவும் பாவர்களுஞ் சேர்வாராகிற், சட்டமதாயிறப்பளவுஞ் செல்வநாதன் சாற்றலாம் யெழுபதுமே சரியென்றார்கள் (௩௭)

வேறு.

அட்டமத் ததிப்பன்வாக்கி லமர்ந்திட அஞ்சினோனுங்
திட்டமாயுயிற்சேர்ந்தாற் றிறமுட னறுபானுகுஞ்
சட்டமா யுயிர்க்குள்ளோனுஞ் சற்குரு காரியானால்
இட்டமா யைம்பத்தஞ்சு இரண்டினிற் றொலையும்யாக்கை. (௩௮)

வேறு.

மதிவீட்டின் மதியிருக்க அரவுடனேதானும்
மாலவனும் பொன்னவனும் மாந்தியுமேதரிக்கச்
சதியாக அவர்க்கிரண்டு நாலினிலேசுங்கன்
தரித்திடவும் அவற்காறிற் சனிபரிதியிருந்தால்
விதிமுறையா யிப்படியே மண்ணில்வருஞ் சேய்க்கு
விதிக்கலாம் வெகுபாக்யம் வேந்தர்முதல்நிகராம்
அதிபதியா யிறப்பளவுஞ் செல்வகுணயோகன்
அவன்வயது தெரிந்துரைத்தா ரைம்பத்தஞ்சொன்றில். ()

வேறு.

எட்டினுக் குடையோனீச மிருந்திடச்சனியுமெட்டிற்
றிட்டமா யுயிர்க்குள்ளோனுஞ் சேயுடன்வீட்டிற் சேர்ந்தாற்
சட்டமா யுரைக்கலாகுந் தரணியில் வந்தசேய்க்குத்
திட்டமா யைம்பத்தொன்று திறமுடன் வயதுசாற்றே. (௪0)

மனைவிய ரொன்றேயாகும் மங்கையா லதிகபாக்யம்
அனையவ ளாலேசேரும் அந்தணர் பகையுண்டாகும்
வினையுட னிருப்பானாகும் விதிக்கலாம் மங்கைமோகன்
அனையவன் பின்னோன்நாசம் அறிவித்தார் கணிதநூலோர். (சக)

வேறு.

அட்டமாதிபனும் உயிர்க்குளோன்றானும் அருணன்வீ டத னிலேசேரத், திட்டமாயஞ்சோன் கரியுமேபுந்தி தினகரன்றானுமே யாகச், சட்டமாயுயிரிற்றரித்திட அஞ்சிற்சந்திரன் மந்திரிபார்வை, திட்டமாயொழிக்குங் கணிதநூல்விதியாற் செப்பினா ரெழுபதுவ யதில். (சஉ)

வேறு.

கரியவன் குருவீடேகக் கலைமறை பிலமாவானால்
வருமெட்டோ னுயிர்க்குளோனும் வருஞ்சுபர் வீடானாலுர்
தருமுயிர்க் கஞ்சோன்றானுஞ் சற்குரு புகர்மாலானால்
பெருமறு பதின்மேலேழாய்ப் பேணிடும் வயதென்றோதே. (சங)

ஓதுயிர் தனிலேகேது உயிர்க்குளோன் றனக்குப்பத்திற்
சேதமாம் வெள்ளிசேயுஞ் சேர்ந்திடி லாயுலொட்டு
நீதமா யறுபதாகும் நிச்சய முரைத்தார் மேலோர்
வேதமாய்க் கணிதநூலால் விதித்தனர் பெரியோர்மாதே. (சச)

வேறு.

அட்டமாதிபனும் அருணனும்புகரும் அந்தணன் வீட்டினிலி ருக்கத் திட்டமாயுயிரோன் கேந்திரமாகத் திறமுடன் அஞ்சினுக் குடையோன், சட்டமாய்மந்த னில்லமேசேர்ந்தாற் சாற்றலா மவ னுடையவயது, திட்டமாய்நடக்கும் முப்பதுரெட்டி யிரண்டினிற் றொலையுமேதேகம். (சரு)

தொலைந்திடுந்தேகங் கணிதநூல்விதியாற் றோன்றிய சேயவன் றனக்கு, அலைந்திடுங்கரிமால் புகர்மறைந்திடவே அந்தவீடதிபனு ம்மாந்தி, குலைந்துயிர்தனக்கு மறைந்திடச்சுபமாய்க் குறிகிட முன் தொகைவயதிற், றொலைந்திடும் நாலேழஞ்சுடன் வயது துஞ்சிடுங், கணிதநூல் விதியால். (சசு)

அட்டமாதிபனும் அருக்கனும்புகரும் அஞ்சினோன் றானு
மொன்றாகித், திட்டமாயுயர்க்குஅஞ்சுவொன்பதினிற் சோ[illegible]ச்
சுபர்கள்வீடாகிச், சட்டமாயுயிரோன் காரியோடேகிச் சார்ந்திடமூ
ன்றுமாறெட்டிற், றிட்டமாய்வயது ஐம்பத்தெட்டேழாய்ச்செப்பி
னர் சாதகன்றனக்கு. (சஎ)

சாதகன்றனக்குக் கணிதநூல்விதியாற் சாற்றினர் மேலவர்
மொழியால், வேதமீரஞ்சோன் பாவராய்த்தோன்றி விளங்கிடவொ
ன்றுநாலேழாய்ப், போதமுன்னுரைத்த அதுபதஞ்சதிலே பொன்
றிடும் யேழெனவுரையே, நீதமாய் வயது வெகுதிறமுரக நிகழ்த்தி
னர் கணிதநூல்விதியால். (சஅ)

விதியுடனுயிர்க்கு வரும்பிணிநாசம் விதித்தனர் கணிதநூலா
ய்ந்தோர், சதியுடன்வயது முப்பதொன்றதிலே சாற்றினரரவுதத்
துண்டாம், விதியுடன்தத்து நாசமென்றுரைக்க விதித்தனர் மேல
வர்மொழியாற், பதிதனில்வந்த சாதகன்திறமாய்ப் பகர்ந்தனர் கு
டும்பயோக்கியமாம். (சகூ)

குடும்பயோக்கியமாய்ப்பிறந்திடுஞ்சேய்க்குக் குருவுபின்கொ
டியகோள்வருமால், வடுவுநோய்காட்டுஞ்சூரியன்திசையில் வந்திடு
ஞ்சாதகன்வருத்தம், விடுமெனவுரைத்தாரிரவிநாட்பாதி விரைவுட
ன்போமெனவகுத்தார், முடுகிடும் இறைவன் கேதுடன்வந்தால்
முத்திடுங் கெடுவிதரோகம். (கு0)

வேறு.

கரியவன் சேய்வீடேகக் கலைமறை பிலமாவானுல்
வருமெட்டோ னுயிர்க்கோடானும் மறைந்திடப் பவர்வீடாகத்
தருமுயிர்க் கஞ்சோன்றானுஞ் சார்ந்திட மறையாதானுற்
சரியுட னோராண்டுக்குள் சாய்ந்திடுஞ் சிசுவென்றோதே. (கூக)

மதிமக னுயிரோனுகி வளருகேந் திரத்திலேற
விதியுடன் காரிசுங்கன் வெய்யவன் மறைவதாகச்
சதியுடன் பாவரோடு சற்குரு மறையாதாகில்
பதிதனில் வயதிரண்டாய்ப் பகர்ந்தனர் கணிதமாய்ந்தோர். (கூஉ)

வேறு.

காரிசேய்மாலும் அட்டமாதிபனுங் கருதுகேந்திரந்தனில் வ
ருமால், கூருயிர்க்கோளன் கொடியகோளுடனேகுருகிடமால்மதி

வீடாய்ச், சீருடன்சேய்க்கு,வயதறுபதுவாய்ச் செப்பினர்விதிப்ப டிகணிதங், காரிமால்கருமத் தோன்மறைந்திடுமால் கருதினர் வய து ஐம்பதுவாம். (௫௩)

பதியுமே வயது உரைத்திடுஞ்சேய்க்குப் பகர்ந்தனர்பூமிபாக் கியங்கள், சதியுடன்சமனுய்த்தோன்றிடும்பலனைச் சாற்றினர் விதி ப்படி கணிதம், விதியுடன் மறையோன் திசைதனிற் பூமிவிளங்கிடும் அதிகக்ஷேத்திரமாய், பதிநிதிவுயர்ச்சி யுரைத்தனர் மறைநாள் பக ர்ந்தனர் சுதகன்பலனை. (௫௪)

வேறு.

மதிமகன் பரிபாம்போடு வளருகேந் திரத்திலேறச்
சதிருட னுயிரோன்நீசஞ் சார்ந்திடச் சுபர்களோடு
விதியுட னுயிரிற்பொன்னன் விளங்கிடக் காரிநீசம்
பதிதனி லறுபத்தஞ்சாய்ப் பகர்ந்தனர் வயதென்றேதே. (௫௫)

ஓதிடுங் கரிமால்நாளில் உயர்வுடன் சமனும்யோகம்
வேதமாய்ச் சகடமென்று விதித்தனர் கணிதநூலோர்
போதவே கரிநாள்மட்டும் புகழ்பெற வளரும்யோகம்
நீதமாய் மாலோன்நாளில் நேர்ந்திடு முயற்சிமேலாம். (௫௬)

மேலவர் மொழியால் மாலோன் விளங்கிய திசையிற்பொன்னன்
சாலவே நாளில்யோகஞ் சார்ந்திடும் அரசர்கோபம்
நீலன்வந் துற்றபோது நேர்ந்திடு முயற்சிமேலாம்
மாலவன் திசைவிட்டேகி வருங்கொடி திசைநாள்வந்தால். (௫௭)

வந்திடுங் கேதுநாளில் வகுத்தனர் பூமிசெல்வஞ்
சிந்தையாய்ச் சிவிகை யோகஞ் சேர்ந்திடுங் கொடிநாள்மட்டுஞ்
சுந்தரத் துடனேவாழ்வன் சொல்லிகினர் கணிதநூலால்
விந்தையாய்ப் புகர்நாள்வந்தால்விதித்தனர்சமனும் யோகம்.(௫அ)

விதியுடன் சமனும்யோகம் விதித்தனர் பிறக்குஞ்சேய்க்கு
சதியுடன் கொடியோன்றன்னைச் சதிருடன் சேய்நோக்குற்றால்
பதிநிதி வுயர்ச்சிசெல்வம் பாழ்படுங் கொடிநாள்மட்டும்
மதிமகன் திசைநாட்போல வகுத்தனர் கணிதநூலால். (௫௯)

மதிமகன் காரியோடு வளருகேந் திரத்திலேறச்
சதியுடன் அதனிற்பாவர் தரித்திட அட்டமத்தோன்
விதியுடனுயிர்க்கு ஆறில் விளங்கிடத் தனிப்பானுகிற்
பதிதனில் ஐம்பத்தாறுய்ப் பகர்ந்தனர் வயதென்றேதே. (சூ0)

ஓதிடுஞ் சேய்க்குயோகம் உரைத்தனர் சமனும்பூமி
வேதமாய் வருமென்றேதி விதித்தனர் கணிதநூலோர்
ஓதிடும் பிதிர்த்தானத்தி லுயர்வுடன் புகர்பாம்பானல்
சாதகன் பிதாவூர்விட்டுச் சார்ந்திடுந் தெத்தென்றேதே. (சுக)

மந்தனும் யீராறுக வக்கிரன் புகர்வீடாகச்
சந்திரன் யெட்டினேனுஞ் சாரிட மறையாதாகில்
வந்துயிர்க் கோளன்றுனும் வருமிடம் மறைவதானல்
சிந்தையா யைம்பத்தஞ்சாய்ச் செப்பிடும் வயதென்றேதே. (சுஉ)

ஓதுயிர் தனக்குப்பத்தி லுயர்வுடன் கடுங்கோளேற
வேதமாய் அக்கோள்தானும் விளங்கிடப் பவர்களோடு
போதவே பவர்வீடுற்றுற் பொன்றிடும் ஒன்பதாக
நீதமாய் வயதென்றேதி நிகழ்த்தினர் கணிதமாய்ந்தோர். (சுங)

வேறு.

அட்டமத்துக் குடையோனும் உயிர்க்குள்ளோனும்
அஞ்சிரண்டுக் குடையோனும் ஆறினேனுந்
திட்டமுடன் பத்தோனு மீராறேனுந்
சிறப்புடனே முதுமகனும் பிலவானுனல்
சட்டதமாய்க் கேந்திரங்கள் திரிகோணத்திற்
சார்ந்திடவே யிருப்பதினல் வயதுநூறு
திட்டமுடன் யிருபதுமே செலுத்தவல்லன்
திறமுடனே யிவர்களிலே பிலத்தைப்பாரே. (சுச)

அட்டமத்தோ னுயிர்க்குள்ளோன் பகைநீசங்கள்
அவரில்லந் தீக்கோட்க ளிருப்பதானுர்
திட்டமுடன் அவன்வயது உரைத்தார்மேலோர்
திறமுடனே முன்னுரைத்த வயதிற்பாதி

சட்டமுடன் நடக்குமென வுரைக்கலாகுஞ்
சகலநூ லறிந்தவர்கள் மொழியென்றார்கள்
திட்டமுடன் யீரஞ்சோன் கரியன்றானுந்
திறமுடனே யிவர்களிலே பிலத்தைப்பாரே. (சுரு)

வேறு.

கரியவன் ஆட்சிஉட்சமதாகக் கருமத்தோன்குருபுகர்மாலாய், வருமெட்டுக்குடையோ னுயிர்க்குளோனிரவி வளருகேந் திரத்தி னிலிருந்தால், அறுபதுபத்து அஞ்சுநால்தனி லழிவிலாதிருப்பதெ ன்றுரைத்தார், வருமுயிர்மறைந்தால் மதித்தனர்வயதுமாய்ந்திடும் முப்பதொன்பதுவே. (சுசு)

வேறு.

கரியவன்யெட்டிற் புகருடன்குளிகன் கண்ணுடைத் ததிபனு மாக, வருமெட்டுக்குடையோ னுயிர்க்குளோன்றானும் வளருகேந் திரத்திலேயிருந்தால், தருமுயிர்க்கஞ்சோன் அருக்கன் மாலானால் தரணிபில்வருமுயிர்சேய்க்கு, வெருவிதமான அறுபது வொன்றில் விதித்தனர் கணிதநூலாய்ந்தோர். (சுஎ)

வேறு.

அட்டமத்தோ னீராறேன் அஞ்சோன் வெய்யோன்
ஆறஞ்சிற் பிலமானா லறிந்தோர்மேலோர்
திட்டமுட னுயிரோனுந் திரிகோணத்திற்
றிங்களுடன் அரவமதி லிருப்பாராகில்
நிட்டைபுரி மதிமகனும் உயிரோனானால்
நிறமுடனே அவன்வயது தெரிந்தார் மேலோர்
சட்டமதா யுயிர்சாற்ற மொழியென்றேது
தரணிதனில் அறுபதுக்குள் தரித்திடாதே. (சுஅ)

வேறு.

கரியவன் புகர்வீடேகக் கலைமறை மறையாதாகில்
வருமெட்டோ னீராறேனும் மந்தன்வீ டதனிற்சேரத்
தருமுயிர் சுபரேயாகச் சாரிடம் பகைநட்பானால்
பெருவய துரைத்தார் மேலோர் பேணிடு மெழுபத்தஞ்சே. (சுகூ)

எழுபது அஞ்சுசாற்ற யிறையவன்மறைவதானால்
பழுதுடன்அதன்கீழ்பத்து பகரலாங் கணிதநூலால்

விழுதுமென் றுரைத்தார்மேலோர் விதிமுறைப்படி யேசொன்னார்
பழுதிலா திருக்குந்தேகம் பார்தனிலறுபத்தஞ்சே. (எ0)

வேறு

மதிவீட்டில் மதியிருக்கக் கேந்திரத்திற் பொன்னன்
வரவவற்கு நாலேழி லொன்றினிலேசுங்கன்
ததியாக அவர்க்கிரண்டிற் றரித்திடவேபூமன்
சனிகுளிகன் றன்வீட்டிற் சார்ந்துமவரிருக்க
விதிமுறையா லுயிர்க்கிரண்டிற் சூரியன்மாலாக''
விளங்கிடவே மதிமகனுந் தன்வீடேயானாற்
கெதிபெறவே தரணிதனி லுதிர்த்திடு நாள்முதலாங்
கேசரியாம் யோகமெனத் தெரிந்துரைத்தார்மேலோர். ()

வருநிதிகள் புகழுடையோன் குடும்பவழியோகன்
வரவவற்குப் பெருநிதிகள் வரவரவேவருமால்
கருவழியாற் றிசையாள்வன் வேந்தர்குண சாலி
கரிபரிகள் வெகுபாக்யம் நிகரில்பெருவாழ்வோன்
தருமுயிரோன் கனசாலியிறக்கு நாள்வரைக்குந்
தனயோகன் நிதிக்குடையன் தனங்களிடுங்கையன்
பெருவிதமா யோகமென வுரைத்தார்கள்மேலோர்
பேணிடுவா யெண்பதுநால் பேசிடுமேவயது. (எஉ)

சதியாக அட்டமத்தோன் புகருடனேகூடித்
தரித்திடவே அவர்க்காறு சற்குருவீடானால்
விதியாக உயிர்க்குள்ளோன் கேந்திரங்களுச்சம்
விளங்கிடவே பிலமாகச் சுபரோடேவுதிக்க
மதிகுருவுங் கேந்திரங்கள் திரிகோணம்வருமால்
வருமெட்டிற் றீக்கோள்கள் மதிமகன்வீடானாற்
கதிபெறவே உதித்திடுவன் மரணமது வரைக்குங்
கணிதமதால் யெண்பதுநால் வயதுபிலமாமே. (எங)

பிலமாக வயதுரைத்தார் பெரியோர்கள் மொழியால்
பெருவிதமால் உயிர்க்கதிபன் பிலத்தப்பாய்த் தனிக்கப்
பலவிதமாய்க் கேந்திரங்க ளுச்சமிலாதிருக்கப்
பார்க்கவன்மால் பிறைவீடாற் பகர்ந்திடவேபிருந்தால்

கலவிதமாய் முன்னுரைத்த யெண்பதுநால்தனிலே
கழியுமெனப் பதினான்கி லொழியுமென வுரைத்தார்
பிலமுடனே அட்டமத்தோன் பத்தோனும் மறைந்தாற்
பேணிடுமேஅதிற்பாதி பெரியவர்கள்மொழியால். ()

இதுவுமது.

விதியாக அட்டமத்தோன் கேந்த்ரதிரிகோணம்
விளங்கிடவே சுபரோடே மறையாமற்றனிக்கச்
சதியாகி அவற்கிரண்டு சற்குருவீடானால்
தனிப்பாவரதிற்சேர சற்குருமால்மறைய
மதியோடு உயிர்நாதன் கேந்திரத்தில் வருமால்
வருஞ்சேய்க்குத் தரணிதனில் வயதுரைத்தார்மேலோர்
அதிவிதியால் மரணமது தொலையுமென வுரைத்தார்
ஐம்பதுநால் ஒன்றுதனி லதிற்போகுந்தேகம். (எரு)

இதுவுமது.

அட்டமத்தோன் மறைந்துபகை நீசமொடுசேர
அதிற்பாவ ருடன்சேர்ந்து சுபரோடேஉதிக்க
நிட்டைபுரி அருணனுயிர் பாவருடன்சேர்ந்து
நின்றிடவே திங்கள்திரி கோணமதில் வருமால்
திட்டமதாய்க் காரியுந்தான் நீசபகையாகி
சேரிடமே தீக்கோட்க ளில்லமதாயிருந்தால்
எட்டிரண்டு வயதுரைத்தார் கணிதமெனும்விதியால்
இயல்புடனே தெரிந்தவிதம் மொழியெனவே பெரியோர்.

வேறு.

அருக்கனும் புகர்வீடேக அருணனு மதனிற்சேர
இருக்கும்வீ டதிபனுரல் இல்லமே யிருப்பதாகச்
சுருக்கமாய்க் கரியுமாந்தி துணிவுடன் அதனிற்சேர்ந்தால்
இருக்கும்நா ளுரைத்தார் மேலோர்யிசைவுடன் அறுபத்தொன்று.

குருவுமே மால்வீடாகக் கொடியவன் குருவீடேக
வருமுயிர் தனிலேமந்தன் வளர்பகை யிருப்பதாகத்
தருவுயிர்க் கஞ்சோன்றானுஞ் சந்திரன் அருணனுல்
கருதினர் வயதுநாற்பத் தஞ்சுமே கருதலாகும். (எஅ)

வேறு.

அட்டமாதிபனு மஞ்சினேனென்றாய் அமர்ந்திட அஞ்சுநா
ளுயிராய்த், திட்டமாயுயிரோன் காரிசேய்சுபர்கள் சேரிடம் யில்ல
மொன்றாஞ்ற், சட்டமா யுதிக்குஞ் சாதகன்வயதைச் சாற்றினு
ரறுபதொன் றேழாய், அட்டமந்தனிலே கேதுசூரியனு லறைந்த
னர் ஐம்பதொன்றாறே. (எகூ)

ஆறுடன்வயது ஐம்பதொன்றாக அறைந்தனர் சாதகன் றனக்
குச், சீருடன்கரிமால் திசைதனிற்சமனாய் சேர்ந்திடுங் அதிகபாக்
கியங்கள், சாருயிர்தனக்கு அஞ்சினேன் திசைமுன் தனச்சிலவுடன்
மனக்கிலேசம், கூறினர்கணிதர் மால்திசைபாதி குறித்தன ருயர்ச்
சிபாக்கியங்கள். (அ0)

அட்டமாதிபனுங் கேதுடனுயிரோன் அருணனும் அஞ்சினில்
வருகத், திட்டமாயஞ்சோன் காரியோடேகிச் சேர்ந்திடத் திங்க
ளின்வீடால், சட்டமாயுதிக்குஞ் சேயுடவயது சாற்றினர் அறுப
தொன்றாகத், திட்டமாயிருக்குங் கணிதல்நூல்விதியாற் றிறமுடன்
சாதகன்றனக்கே. (அக)

சாதகன்றனக்கு வயதுமிப்படியே சாற்றினர் கணிதநூல்விதி
யால், ஓதிடுமுயிர்க்குப் பத்தின்கோள் நீசம் உயர்வுடன் சுபமிலா
திருக்கில், வேதமாய் வயது அறுபத்தொன் றதனில் விதித்தனர்
பத்துமூன்றொழியும், நீதமாயுரைக்கக் கணிதநூல்விதியால் நிச்சய
மாமெனவுரையே. (அஉ)

உரையெனக்கணிதஞ் சாதகன்றனக்கு உயர்வுடன் புகதிசை
யதனில், விரைவுடன்சமனாய் முனனுரைபாதி விளங்கிடுஞ் செல்வ
மென்றுரையாய், குரைவிலாதிருக்கும் பாதியேமறைந்தாற் குறி
த்தனர் பூமிக்ஷேத்திரங்கள், விரைவுடன்வருமென் றோதினர் பில
மாய் விதித்தனர் சாதகன்பலனை. (அங)

கூ0

அட்டமாதிபனுங் காரியுமோர்வீ டமர்ந்திடப் பவமிலாதிருக்
கில், திட்டமாயுயிரோன் காரிவீடதனிற் சேர்ந்திடஆரல் சூரிய
னால், சட்டமாயிறைவன் சொந்தவீடதனிற் சார்ந்திடப் பிறந்தசா

தகர்க்குத், திட்டமாய்வயது ஐம்பதுநாலாய்ச் செப்பினர் தரணி யில்மாதே. (அச)

மாதவர்மொழியாற் பிறந்திடுஞ்சேய்க்கு வகுத்தனர் நூல்வி திப்படியால், ஓதினருயிரிற் கொடியவன்மதியும் உறைந்திடப் பத் தூராலொழியும், நீதமாய்வயது வெகுதிறமாக நிச்சய மாமெனவு ரையே, வேதமாய்ப்பாம்பு குருவுடனுதித்தால் விதித்தனர் மூன் றிரண்டொழியும். (அகு)

வேறு.

மதிமகன் புகர்பானோடு மறைந்திடச் சுபமிலாதால்
சதியுட னுயிர்க்கோள்நீசஞ் சார்ந்திடப் பாவரோடு
விதியுட னெட்டோன்காரி விளங்கிடப் பிலமாவானல்
பதிதனிற் புகர்மால்காரி பரிதொகை வயதென்றோதே. (அசு)

ஓதிடுங் கரியன்றானு முயர்வுடன் மறைவதானல்
வேதமுன் னுரையால்நாசம் விதித்தன ரிருபத்தொன்றில்
நீதமா யுய்யுமென்று நிச்சய முரைத்தார் மேலோர்
ஓதிடும் உயிர்க்குயெட்டி லுயர்வுடன் பவர்வந்துற்றால். (அஎ)

வந்திடுஞ் சேய்க்குஆயுள் வகுத்தனர் குருநாள்ரெட்டி
தந்திடு மென்றுமேலோர் சாற்றினர் கணிதநூலால்
முந்திடு முயிர்க்குப்பத்தில் முயன்றிடக் கொடியோன்வந்தால்
மைந்தனுக் காயுள்வேதன் வகுத்தது மிருபத்தெட்டாய். (அஅ)

வேறு.

அட்டமாதிபனு மருணனும்புகரும் அமர்ந்திடச்சேய்புகர் வீ டால், திட்டமாயுயிரோ னுயிர்க்குமுன்பின்னிற் சேர்ந்திடப்பாவர் நோக்கிடுமால், சட்டமாயுதிக்குஞ் சாதகன்வயது சாற்றினு ரன்ப தொன்றாக, அட்டமாதிபனு மருணனுமறைய அறைந்தனர் முன் னுரைபாதி. (அகூ)

வேறு.

கரியவன் நீசமாகக் கலைமறை பாவரோடே
வருமெட்டோன் நீசமாகி வக்கிர னோடுசேர்ந்தால்
தருமுயிர் நாசங்காட்டுஞ் சகலநூ லாய்ந்துசொன்னர்
இருபது ரெண்டுக்குள்ளாய் யாக்கையே தொலையுமென்றார். (கo)

அஞ்சினுக் குடையோனோடு அட்டமா திபனுஞ்சேர
விஞ்சையா யுயிரிற்பாவர் விளங்கிட யிருப்பதானால்
தஞ்சமாய் முப்பத்தொன்றிற் சார்ந்திடும் விஷத்தாற்றத்து
மஞ்சுபோ லொழியலாகும் மன்னவன் பிலமாய்வாழ்வோன். ()

வேறு.

சதியாக அட்டமத்தோ னுயிரோனுகச் சாருமிடஞ் சுபர்வீ டாய்த் தனிப்பானுகில், விதியாக மதிமகனுங் குருவுமொன்ருய் விளங்குமிடஞ் சசிவீடாய்த் தரிக்கஅக்கோள், சதியாகக் கேந்தி ரங்க ளுச்சமாட்சி கனிதநட்புச் சுபர்வீடா யிருப்பதாகச், சதியா கக் காரியுந்தா னுபிரிற்சேர்ந்தால் தரணிதனி லவன்வயது யெண் பத்தொன்ரும். (கூஉ)

கரியவனும் உயிர்தனக்குப் பதினென்ருகக்
கதிருடனே மாந்தியொடு குருதிசேர்ந்தாற்
பரியவன்தா னில்லமதா யிருப்பதாகப்
பகரமுடன் முன்னுரைத்த வயதுநாசம்
முரியுமிரு பத்தொன்று மொழிந்தார்மேலோர்
முதுமகனு மாரல்பரி யோடுசேர்ந்தால்
சரியுடனே அறுபதனில் ஒழியுமஞ்சு
சாற்றினுர் கணிதவிதிப் படியென்ருேதே. (கூங)

ஒதுமெனக் காரியொடு குருதிசேர்ந்தால்
உள்ளபடி வயதுஐம்பத் தொன்ருமென்ருர்
நீதியுடன் காரியுந்தான் றனிப்பானுகில்
நிகழ்த்தினர்க ளவன்வயது நாற்பத்தொன்று
சேதமுட னீராருய்க் காரியோடு
தினகரன்மால் புகருடனே யிருப்பதானுல்
வேதமா யவன்வயது நாற்பத்தொன்று
விளங்குமெனத் தெரிந்துரைத்தார் கணிதநூலால். (கூச)

வேறு.

மதிமகன்பரிதி உயிரின்கோளுடனே வந்திடப் புகரின்வீடா கி, நிதிதனக் கதிபன் சேயுடன்கூடி நின்றிட அட்டமந் தன்னில், சதியுட்னுயிர்க்குப் பத்தினில்மாந்தி தனித்திட மதியுமேபார்க்கிற், கெதிபெற வயது அரவுபொன் மந்தன் கேதுவின் புகர்தொகை சேரே. (கூரு)

அட்டமாதிபனு மருணனுமருக்கன் ஆரல்வீ டதனிலே நிற்க்த், திட்டமாயுயிரோன் நீசமாய்த்தோன்றிச் சேரிலத்தானத்துக் கதிபன், மட்டவிழ்மனவி காரகன்தானும் வந்திடத் தனித்திடுமானல், திட்டமாயுதிக்குஞ்சேயவன்றனக்குத் திறமுடனெழுபதோர் வயது. (கூசு)

வேறு.

மதிமக னுயிரோனுகி வளருகேந் திரமாய்த்தோன்ற
சுதியுடன சனியுமேழிற் றரித்திடச் சுபர்வீடாக
விதியுட னட்டமத்தோன் விளங்கிய உயிர்க்கிரண்டில்
சதிதனித் திடினுமானுற் யரணியி லுதிக்குஞ்சேய்க்கு. (கூஎ)

வருவது விபரஞ்சொல்வேன் வகுத்தனர் கணிதநூலால்
அறுபது பதிமூன்றுக அவன்வய துரைத்தார்மேலோர்
கருதியே அட்டமத்துக் கதிபனேடரவஞ்சேர்ந்தால்
வருவது மூன்றுநாசம் வகுத்தன ரெழுபதாமே. (கூஅ)

எழுபதென் றுரைத்தார்மேலோர் யெட்டினிற்கொடியோன் போனல்,பழுதெனவுரைத்தார் பத்துப்பதிதனிற் பிறக்குஞ்சேய்க்கு,வழுவிலா திருப்பானுகும் மதித்தனர் மேலோர்தாமும்,முழு முதலெவர்க்குமேலாய் மொழிதவறுதமைந்தன். (கூகூ)

வேறு.

அட்டமத்திற் குருவிருக்கக் கேந்திரத்திற்றிங்கள்
அருணனெடுசுங்கனுந்தா னமர்ந்திடவேபத்தில்
திட்டமதாயுயிரோனுந் தன்வீடேயாகச்
சேர்ந்தவற்குயீராறிற்சேய்பரிதியானுற்
சட்டமுடன் காரியுந்தான் தேள்தனிலேதனிக்கச்
சதிருடனே தரணிதனிற் பிறந்துவருஞ்சேய்க்குத்
திட்டமுடன் வயதுரைத்தார் கணிதவிதிப்படியே
தெளிந்தாய்ந்த பெரியோர்கள் திறமறுபத்தெட்டே. ()

வேறு.

மிதுனலக்கினமேதோன்ற விளங்கிட அத்தானத்தோர்
சதியுட னருக்கன்சுங்கன் சனிமதிமார்ந்தியோடு
விதியுடன் காரியில்லம் விளங்கிடஉயிரிற்பாவர்
அதிகமா யிருப்பதானுல் அவன்வய துரைத்தார்மேலோர். (கoகூ)

மேலவர்மொழிதான்யார்க்கும் விளங்கிடக்கணிதநூலால்
சாலவேஅவன்றன்தேகம் சாற்றினுற் அன்பத்தஞ்சில்
நூலறிவிதமாய்ப்போகும் நோயினு லவன்றன்யாக்கை
கோலமில் லாமல்வாழ்வன் குடும்பத்திற் சகடவாழ்வோன்.(க0உ)

மதிமகன்தன்வீடாக மந்திரி சுங்கன் வெய்யோன்
சதியுட னுயிர்க்குப்பத்திற் றரித்திட வதனைமைந்தன்
விதியுடன் நோக்கவெட்டோன் விளங்கிட யிராறுரனுல்
பதிதனிற் புறக்குஞ்சேய்க்குப் பகர்ந்தன ரெழுபத்தஞ்சு. (கஙூ)

குருதியும் பாவர்வீட்டிற்குறிகிட வத்தானத்தோன்
பரிதிவீ டதனிற்சேரப் பாவர்கள் முன்பின்றேன்ற
வருமுயிர் தனிலேபொன்னன் வந்திடச்சுபர்வீடாகக்
கருதியே யிருப்பானுகிற் கருத்துடன் வயதுயெட்டே. (க0ச)

அட்டமாதிபனு மாலுடன்புகரும் ஆரல்வீ டதனிலேசேரத்
திட்டமாயுயிரோன் நீசமாயிருக்கச் சேரிடந்தானத்துக்கதிபன், ம
ட்டவிழ்களத்ர காரகத்தானும் வந்திட மிருப்பதேயானுல், சட்ட
மாய்ச்செனிக்குஞ்சேயவன்றனக்குத் தரணியிலறுபதோர்வயது.

அட்டமா திபனும்பொன்னும் ஆறலுஞ் சசியுமொன்றுய்த்
திட்டமா யுயிர்க்குஆறிற் சேர்ந்திடப்பாவர்வீடால்
சட்டமாய்க் கரியுங்கேதுஞ் சாரிடஞ் சுபர்வீடானுல்
திட்டமா யுதிக்குஞ்சேய்க்குத் திரமுடன்அறுபத்தொன்று.(க0சு)

கரியவன் புசர்வீடேகக் கலைமறை சுங்கன்கேது
வருமுயிர் தனிலேசேர வருமெட்டுக் குடையோன்றுனுந்
தருமுயிர் தனக்குமூன்றில்தனித்திட வருவதாகில்
சுருதியா யுதிக்குஞ்சேய்க்குத் துணிவுடன்ருபத்தெட்டே. (க0எ)

வேறு

அட்டமாதிபனு மருணனுமருக்கன் ஆரல்வீடதனிலேசேரத்
திட்டமாயுயிரோன் ஆட்சியாத்தோன்றத் திறமுடன் வெள்ளி
யுங்கேதுஞ்,சட்டமா யுயிர்க்கு ஆறினில்மறையச் சனியுமேவெள்
ளிவீடானுல், திட்டமாயுதிக்குஞ் சேயவன்றனக்குத் திறமுடன்
அறுபதோரெட்டு. (க0அ)

வேறு.

கரியவன் சேய்வீடேகக் கணக்கனும் புகருமாகப்
பரியவன் தனக்குரெண்டிற் பகர்ந்திட வுயிர்க்குநாளில்
விரிகுழ லட்டமத்தோன் மேவிட அரவமோடு
சரியுடன் மறைவதானாற் றரணியி லுதிக்குஞ்சேய்க்கு. (கஅகூ)

உதித்திடுஞ் சேய்க்குத்தேகம் உயர்வுடன் பெழுபத்தஞ்சாம்
விதித்தனர் வயதென்றோதி விளம்பினர் கணிதநூலால்
மதித்திட அட்டமத்தில் வக்கிரன் வருவதானால்
கொதித்திடும் வயதுநாசங் குறிகிடும் பதிமூன்றாமே. (ககஅ)

பத்துமூன் றெழியு*மாதே பதிதனிற் பிறக்குஞ்சேய்க்கு
சத்தியா யறுபத்தொன்று சதிருடன் ஒன்றுசேரு
மத்திபத் துடனே பத்தில் மதியொடு குளிகன்சேர்ந்தால்
உத்திடு மொன்றுநாசம் உயர்வுடன் அருபத்தொன்று. (ககக)

அருபது ஒன்றேயாக அறிவித்தார் கணிதநூலோர்
மருவுடன் காரியோடு மந்திரி கொடியன்சேர்ந்தால்
பருகிடும் அதன்கீழ்பத்து பகர்ந்தனர் தரணிமீதே
கருவுடன் உயிர்நீராலே கருதினர் மாயுமாதே. (ககஉ)

அட்டமந் தன்னிற்சுங்கன் அமர்ந்திட வதனிற்பாம்பு
திட்டமா யதற்குநாதன் சேரிடந் தன்வீடாகச்
சட்டமாய்க் கரியும்பொன்னன் தன்மனை சேர்வதாகத்
திட்டமா யுயிரோன்றானுஞ் சேரிடஞ்சுபரோடானால். (ককங)

திட்டமா யுதிக்குஞ்சேய்க்குத் திறமுடன் வயதுசாற்ற
மட்டவிழ் மனவியாலே மாய்ந்திடு மேலோர்வாய்மை
சட்டமாய் அருணனுண்டிற் சாய்ந்திடுந் திசைமுன்பாதி
திட்டமாய் மரணமாவான் செப்பினா ரறுபத்தொன்றே. (ককச)

மதிமகன் புகர்வீடேக மந்தனுஞ் சசியில்நிற்கச்
சதியுடன்மதிசேயோடு சாரிடஞ் சனிவீடாக

---

* மாதே-என்பது கன்னிலக்கினமாக எட்டிற் செவ்வாய் நிற்க.

விதியுட னுயிர்க்குநாதன் வெய்யவன்மாந்தியோடு
அதிகமா யுயிர்க்கீராறில் அமர்ந்திட வருவதானல். (ககரு)

வருவது மொழிந்தார்மேலோர் வயதுதன் விபரஞ்சொல்வேன்
அறுபது யெட்டேயாகும் அறிவித்தார் கணிதநூலோர்
தருதுடன் கருமந்தன்னிற் றரித்திடப்புகர் பாம்பானல்
குருகிடுமதன்கீழ்பத்து குறித்தனர் தரணிமாதே. (ககசு)

அட்டமா திபனும்பொன்னும் அமர்ந்திடப் பாவர்வீடால்
திட்டமாய் லக்கினேசன் தினகரன் அருணனோடு
சட்டமாயுயிர்க்கு அஞ்சில் தரித்திடச் சனியுமுச்சந்
திட்டமாய் நடக்குஞ்சேய்க்குத் திறமுடன் வயதுசாற்றே. (ககஎ)

திறமுடன் வயதுசாற்றச் செப்பினர் கணிதநூலால்
வரமுட னெழுபத்தொன்றாய் மதித்தனர் பெரியோர்வாய்மை
விரவுடன் மந்தனோடு விளங்கிய மதியும்பாம்புந்
திறமுடன் வருவதானற் சேதமென்று ரைத்தார்பத்து. (ககஅ)

வேறு.

அட்டமாதிபனும் அருக்கனும்புகரும் அமர்ந்திடப் பாவர்வீடாகத், திட்டமா யுயிரோன்கேந்திரமாகச்சேர்ந்திடத் தானத்துக் கதிபன், சட்டமாய்க் கரியும் விழிதனில்வந்தாற் றரணியிலுதித்திடுஞ்சேய்க்குத், திட்டமாய்வயது மொழிந்தனர் மேலோர் திறமுடன் அறுபதோரொன்று. (ககக)

அட்டமாதிபனும் பிறையுடன்புகரும் அமர்ந்திட வுதையகேந்திரத்தில், திட்டமாயுயிரோன் ஆரல்வீடதனிற் சேர்ந்திட ஆரலுங்குருவுஞ், சட்டமாய்க்கேது தரித்திடுமானற் றரணியிற் பிறந்திடுஞ்சேய்க்குத், திட்டமாய்அறுபான் மூன்றுடன்செப்பத் திறமுடன் கணிதநூல்வாய்மை. (கஉ0)

கரியவன்உயிரோ னுகியே தனிக்கக் கலைமறைகுருதிகே துடனே, துரிதமா யருணன் வீடினிற் சேரத்தோன்றிடும்பாலகன்றனக்கு, விரிகுழல்மாதே உரையுமுன்வயது விசிறிடும் மூன்றுமே விதித்தார், சரியுடன் அறுபான்வயதுதன்வரைக்குந்தந்திடுஞ்செல்வனுமாதே. (கஉக)

மதிமகனுயிரோன் உதயகேந்திரத்தில் வந்திட மாந்தியு மதனில், விதியுடன்காரி பஞ்சமாதிபனும் விளங்கிய அம்புலியுடனே, சதியுடனுயிர்க்கு அஞ்சிரண்டேழிற் றரித்திட யெட்டினேன்ம றைந்தால், பதிதனில்வயது யெழுபதுரெண்டாய்ப் பகர்ந்தனர்சா தகன்றனக்கு. (கஉஉ)

சாதகன்றனக்கு வயதுமிப்படியே சாற்றினுர் கணித நூலாய் ந்தோர், வேதமாய்க்காரி தனதுநாள்தனில் விதித்தனர் வேடம்வந் துதவும், ஓதினுர்பிலமாய்ச் சாஸ்திரவிதியால் உரைத்தனர் அதிக போக்கியமாய், போதவேவருமென் றோதினுர்கணிதம் புகட்டினுர் மேலவர்மொழியால். (கஉஊ)

வேறு.

அட்டமத்தோன் பரிதியுடன் உயிர்க்குமூன்றில்
அமர்ந்திடவே அக்கோளு மறைவிலுச்சந்
திட்டமுடன் உயிர்க்கோளுஞ் சசிவீடேறிச்
சேர்ந்திடவே அக்கோளும் பிருகுங்கேதும்
நட்டமில்லா லக்கினகேந் திரத்திலேக
நளினகுரு தன்வீட்டி லரவஞ்சேரத்
துட்டனிவன் இருபத்தொன் றெட்டிற்கண்டம்
சொல்கடந்தா லவன்வயது ஐம்பத்தொன்றே. (கஉச)

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி வளரு மெட்டோன் மதிக்குநா லதனிலுச்சஞ், சீதமுடன் காரியுமே மறையோனேடு சேர்ந்திடவே யுயிர்தனக்கு யேழிற்றுனே, ஓதுமென வுயிர்தனக்குக் கருமநாதன் உயிர்மதியாய்ச் சுபர்மனையாய் மறைவதானுல், வேதமுடன் மறையோனு ளரவுமந்தன் விதித்தனராமிவர் தொகையை வயதென்றேதே. (கஉரு)

வேறு.

இரவியும்புதனும் இருந்திடவுயிரில் இறையவன் கேந்திரமே வி, சரந்தனிற்புகரோ னட்டமாதிபனுய்த் தரித்திடச் சேயுமத்துட னே, விரவுடன்காரி மாந்தியும்பத்தில் விளங்கிட மறையவன்பார்க் கப், பரமுடன்புகர்மால் கரியுடன்தொகைநாள் பாலகன்வய தென மொழியே. (கஉசு)

வேறு.

மாலவன் திங்களோடு மறைந்திடப் பவர்கள்சேரு
பாலொளி சுங்கன்மாந்தி பரிதியு முயிரிற்சேரச்
சாலவே அக்கோள்தானுந் தனித்திடப் பத்திற்றானே
நூலறிவிதமாய்ச் சொன்னோம் நூறலே அறுபத்தொன்றே. ()

வேறு.

மதிமகனும் உயிரோனுய்க் கருமனுமேயாகி
வந்திடவே கரிசசியும் புகர்வீட்டிலேகி
விதியுடனே அட்டமத்தோன் மாலுயிரிற்சேர்ந்து
விளங்கியபொன் ரவிகேது புகருடனேகூடிச்
சதிருடனே கேந்திரத்திற் றரித்துமேயிருக்கச்
சாதகர்க்கு வயதுமொரு அறுபதுமேயாகும்
பதியுடனே பாக்கியங்கள் சமபலமாய்ச்சேரும்
பாவையர்க்குப் பிரியமுளன் பண்புடையோன்றானே. ()

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் மாலுடனே மாந்தியோடு
சீதமுடன் கரியன்மனை யதனிலேகச்
சேருகரி யுச்சம்வரப் பவர்களோடு
ஓதுமென உயிர்தனக்குக் கருமநாதன்
உறையுமிடஞ் சுபர்மனையாய் மறையாதானுல்
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
விதித்தனரைம் பதுநாலு திறமென்றேதே. (கஉகூ)

வேறு.

அட்டமாதிபனுங் கதிரவன்மதியும் அமர்ந்திடவுயிர்க்குமூன்றினிலே, திட்டமாயுயிரோன் சேயுமேயாகிச் சேர்ந்திடப் பிருகுவீடதனிற், சட்டமாய்க்காரி குருவுடன்வீட்டிற் றரித்திடத் தானக்கோள் பார்க்கத், திட்டமாய்வயது மூன்றினிற்றப்பில் திறமுடன் ஐம்பது நாலாம். (கஙo)

மாதவர்மொழியாற் பிறந்திடுஞ்சேய்க்குவகுத்தனர்பிதிர்க்குமேதாரம், ஓதினர்மூன்று யுயிர்க்குநாலதனில் உறைந்திடப் பாவு

ருஞ்சேர்ந்தால், நீதமாய்வயது ஒன்றினில்நாலேழ் நிச்சயம் வந்தி
டுங்கிலேசம், வேதமாய்ப்பாம்பு நீலன்வீடதனில் விளங்கிட மூன்
றில்ரெண்டொழியும். (கஙக)

வேறு.

பஞ்சமத்தோன் மதியுடனே உயிரோனோடு
பகர்ந்திடவே உயிர்தனக்கு நாலிலேக
விஞ்சையுடன் இரவியுமே அக்கோளோடு
விளங்கிடவே அட்டமத்திற் சேயேநிற்கத்
தஞ்சமுடன் பொன்னவனுங் கேதோடேகித்
தரித்திடவுங் பிறைதனக்கு விழியிற்சேர்ந்தால்
கொஞ்சமுடன் வயதுரைப்பேன் சொல்லக்கேளு
கோதையே ஐம்பதுநால் குறையாதென்றே. (கஙஉ)

குறையாத வயதுசொன்னோ மிப்பாற்கேளு
குணமுடனே அவன்யோகங் குணத்தைச் சொல்வேன்
நிறையாகும் ராகுவுட திசைநாள்வந்தால்
நிச்சயமாய் அரசரபி மானம் உண்டாம்
மறையாத முயற்சியொடு மைந்தருண்டாம்
மங்களங்கள் மிகுந்துவரும் வரிசைதங்குந்
துரையாக மரணமட்டும் அதிகபாக்கியஞ்
சொல்லலாங் கணிதவகை தன்னாலாமே. (கஙங)

பஞ்சமத்தோன் குருவுடனே மால்வீடேறிப்
பதிந்திடவு மவர்க்கேழிற் செவ்வாய்காரி
தஞ்சமுட னிருந்திடவே குருவும்பார்க்கத்
தனித்திடவே அட்டமத்தோன் காரிவீட்டில்
விஞ்சையெனும் மாலிரவி உயிர்க்கிரண்டில்
விளங்கிடவும் ராகலவன் தேளில்மாந்தி
மிஞ்சிடவே வருஞ்சேய்க்கு உரைத்தார்மேலோர்
மிகுந்தபலன் ஐம்பதுக்குள் வொன்பான்சேரே. (கஙச)

சேரவே வயதுரைத்தே னப்பாகேளு
சேய்தனக்கு வொன்றிரண்டு மூன்றுமாண்டில்
பார்தனிலே பீடையுடன் அரிட்டஞ்சொல்வேன்
பாதகஞ்சேர் பிதிர்வழியாந் தோஷத்தாலே

கார்மேக வண்ணனிற முடைத்தான்பாதங்
கதிரவனார் தன்பாதங் கருத்திலுன்னி
தாரணியிற் சாந்திசெய்து அரிட்டந்தீர்த்தால்
சாற்றலா மவன்வயது தீர்க்கமென்றார். (கஙடு)

வேறு.

மால்வன் சுங்கன்கேது மார்த்தாண்ட னுடனேகூடிச்
சீலமா யுயிர்க்குரெண்டிற் சேய்புகர் வீட்டில்நிற்கக்
கோலமா யுயிரோன்காரி கொடுமையா மாறிற்சேரத்
தூலமாய் வயதுசாற்றச் சொல்லினு ரைம்பத்தேழு. (கஙசு)

அட்டமாதிபனும் அம்புலிமாலும் ஆனதோர் பிருகுமொன்றாகிச், சட்டமாயுயிர்க்குப் பஞ்சமமதனிற் சார்ந்திடக் குருவின்வீடானால், மட்டிலாக்காரி மதிக்குமூன்றதனில் மந்தனைச்சேயுநோக்குற்றால், திட்டமாய்வயது உரைத்தனர்மேலோர் செகத்தினிலெழுபதோடொன்று. (கஙஎ)

வேறு.

அட்டமத்தோன் குருவாகி யுயிர்க்கஞ்சேகி
யவர்தனக்கு நாலதனில் ரவிமால்சுங்கன்
திட்டமதாய் மதிஉயிரிற் றனித்தேநிற்கச்
சேய்கிரகங் களிற்பொன்னன் மதியைநோக்கச்
சட்டமதாய்க் காரியில்லந் தனிப்பானாகிற்
சாற்றலா மவன்வயது தரணிமீதில்
நட்டமில்லாக் காரியுடன் சுங்கன்மாலும்
நலமான ரவிதொகையும் வயதென்றேதே. (கஙஅ)

மதிமகனு முயிரோனுய்க் கருமனுமேயாகி
வந்திடவே புகர்வீட்டில் வெய்யவன் பொன்னோடு
விதியுடனே காரியுந்தான் பஞ்சமத்திலாட்சி
விளங்கிடவே அட்டமத்திற் சேயாட்சியாகில்
சதியுடனே உயிர்க்கிரண்டோன் லக்கினத்தில்நீசஞ்
சார்ந்திடவே கருமமதி லரவேயானுற்
பதிதனிலே பிறந்திடுவன் சேய்திசையிலாகும்
பலித்திடுமா மரவுதுரு கரிமாலிற்பேறுமே. (கஙகூ)

வேறு.

அட்டமாதிபனும் அரவுடனஞ்சி லமர்ந்திட வேழின்கோளு டனே, திட்டமாயுயிரோ ளுட்சியாய்மறையத் தினகரன் மாலவன் வீடாய்ச், சட்டமாய்க்கருமன் உயிர்க்கிரண்டினிலே தனித்திடக் காரியுமறையில், திட்டமாய்ப் பிறக்குஞ் சாதகன்றனக்குச் செப்பி னு ரைம்பத்தஞ்சாக. (கசo)

இடபலக்கினத்தில் மதியுடன்மாந்தி யிணங்கிட பெட்டின் கோளுயிரோன், திடமுடனுயிர்க்கு இரண்டினிற்சேரத் திங்கள் வீடதனிலேகருமன், கடகவீடதனிற் கதிரவன்புதனுங் கலந்திடப் பிறந்தசாதகற்குத், திடமுடன்வயது காரிநாள்வரைக்குஞ் செப்பி னுர் கணிதநூலாய்ந்தோர். (கசக)

மாலவன்புகருங் கருமனுமுயிர்க்கு வந்திடலாபமாய்க்குருவு ம், ஏழினேனரவும் புகருடன்வீட்டி லிருந்திடக் காரியொன்பதனி ல், ஏலவேவுயிரோன் காரிவீடதனி லிருந்துதான்குருவை நோக்கு ற்றுல், பாலகன்வயது இரண்டின்கோள்திசையிற் பார்க்கவன்பொ சிப்பினிற் றுஞ்சும். (கசஉ)

தஞ்சிடாப்புகரிற் பீடையால்மெலிந்து தோகையர்வழக்கினு ற்றனங்கள், மிஞ்சிடச்சிலவாய் வந்துதான் தீர்ந்தால் வேகமாய்காரி நாள்பாதி, தஞ்சமாய்வயதுதீர்க்கமாமென்று சாற்றினுர்கணிதநூ லாய்ந்தோர், அஞ்சவேகுருவில் காரிநாளதனில் அன்னையர்துஞ்சி டுஞ்சேயில். (கசஙு)

பஞ்சமனெட்டோன் பொன்னவனுகிப் பதிந்திட மதியுடன் பாக்யம், விஞ்சையாம்மதிக்கு அட்டமன்புகரும் விளங்கிடக்காரி யோடாறில், தஞ்சமாயுயிரோன் காரிவீடதனிற் றரித்திட லாப னேடேழாய், அஞ்சவேவரினும் ஆயுளுந்தீர்க்க மறைந்தனர்யெழு பதோடொன்றுய். (கசச)

வேறு.

அட்டமத்திற் கேதுநிற்க வக்கோள்தானும்
ஆதித்தன் புகருடனே லாபஞ்சேரத்
திட்டமதாய்க் காரியுந்தா னுயிர்க்குயேழிற்
சேர்ந்திடவே புகர்வீடாய்ச் சேயேபார்க்கச்

சட்டமதா யுயிர்க்கிரண்டேரன் குருவாய்த்தானுஞ்
சந்திரன்றன் வீடதனிற் றனிப்பானுகிற்
றிட்டமதா யவன்வயது செப்பக்கேளு
சேய்புகர்மால் மந்தன்மதி தொகையென்றேதே. (கசடு)

அட்டமத்தோன் கரியாகியுயிர்க்கீராறில் அமர்ந்திடவே அக்கோள்தான் ஆறிலேகச், சட்டமதாய் மாலுயிரோ னுகிநாலிற்றனித்திடவே ஆட்சியுச்சஞ்சாரிற்கர்மன், நட்டமில்லாக் குருவாகிமாந்தியோடு நண்ணிடவே சேய்பார்க்க வுச்சமானல்,திட்டமதாயவன் வயது செப்பக்கேளு சேயரவு மால்குருவுந் திறமென்றார்கள். ()

வேறு.

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் அக்கோள்தான் மாலோடேழிற்
சீதமுடன் காரியுந்தான் சேய்வீடாகிச்
செனித்திடுஞ்சே யுயிரினுக்குப் பத்திற்செவ்வாய்
ஓதுமென வுயிர்தனக்கு இரண்டில்மூன்றே
னுதித்திடவே அட்டமத்தை மூழுநோக்குற்றால்
வேதனுட திசைதனிலே பிறக்குஞ்சேய்க்கு
விதித்தனர்கள் நாலாண்டு அரிட்டஞ்சொல்லே. (கசஎ)

சொல்லுதற்கு நாலின்கோள் கரியாயேழிற்
றேன்றிடவே அவர்தமக்கு மூன்றில்ராகு
வெல்லுதற்கு நவமிமதி யுடனேகூடி
வேதியற்கு அட்டமத்தில் விளங்க வெய்யோன்
புல்கிடவே ஆறதனிற் பொன்னன்வீட்டிற்
பொருந்திடவே லக்கினத்தில் மாந்தியானல்
நல்கிடவே குருதிசையில் அரிட்டமாகும்
நாலஞ்சோன் திசைமுதலே பிலமாய் வாழ்வன். (கசஅ)

வாழுவான் மிதுனநவாங் கிஷந்தனக்கும்
வளருமதிதனக்கிரண்டிற் கரியோன்பொன்னுந்
தேளுடையோன் மால்வீடங் கிஷத்திற்சேரச்
செனித்திடவே பிறந்தபிள்ளை தனக்கே ஐந்தில்

கோளுடனே அரவிருக்க முன்னுள்சென்மங்
குணங்களில்லாக் கீழ்சாதி யிவனுமென்று
மீளுதற்குச் சிவனருளைப் பற்றிமீண்டான்
மேவினு லிச்செனனம் விதிக்கச்செய்தார். (கசகூ)

விதித்தார்கள் பேரியோர்கள் உலகுதன்னில்
வேதியனுர் குலத்தினிலே பிறக்கச்செய்தார்
மதித்தார்க ளிவன்பகலிற் செனித்ததாலே
மாதாவின் பிதாவுடனே தோஷமாகும்
பதித்தீர்கள் முன்னுளின் பயன்களாலே
பகர்ந்தார்க ளின்னுளிற் றோஷந்தீர்த்தால்
கொதித்தார்பின் குழந்தைதனைப் பிலக்கவேண்டி
கோவுடனே நந்தியுட பூசையாலே. (கரு௦)

மாதரசே கேளுபிரோன் புகரேயாகி
வளருமெட்டோன்மாந்தியுட னுயிர்க்கஞ்சேகிச்
சீதமுடன் கரியன்மனை யதனிற்சேரச்
சேருகரி புகர்வீட்டில் மதிகேதோடும்
ஓதுமென வுயிர்தனிலேசெவ்வாய்நிற்க
ஒளிமதிக்குக் கேந்திரத்திற் குருவேசேர
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
விதித்தனரா மைம்பதுக்கு ளொன்பான்சேரே. (கருக)

சேரவே வயதுரைத்தே னின்னங்கேளு சேயுயிரிற்புகர்வீடாய்நிற்க அக்கோள், காரியுடன் வீடதனில் மாந்தியோடுகருதிடவே குருநோக்கக் கனமாய்நின்றால், பார்தனிலே அரவினுட திசையிற் பத்தோன் பனிமதினுள் வருங்காலம் பகரக்கேளு, சீருடனே மனவியரு முண்டாம்பின்னும், சீவனமுமுயற்சிகளுஞ் சிறப்பாய் வாழ்வான். (கருஉ)

வேறு.

அட்டமாதிபனும் புகருடன் குளிகன் அருணன்வீடதினிலே சேரத், திட்டமாயுயிரோன் காரிவீடதனிற் றிங்களும் அரவுமேமறையச், சட்டமாய்க்காரி யில்லமாய்ச்சேர்ந்தால் தரணியிற் பிறந்த சாதகற்குத், திட்டமாய்வயது ஐம்பத்தெட்டேழிற் சேதமே வொன்பதுபோகும். (கருங)

வேறு.

மாதேகேள்வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் மாலுடனே இரவியோடுஞ்
சீதமுடன் மதிக்கஞ்சாய் மால்வீடேகிச்
சேருகரி மாந்தியுட னுயிர்க்குநாலில்
ஓதுமென வுயிர்தனக்குக் கருமநாதன்
உறையுமிடஞ் சுபர்மனையாய் மறைவதானால்
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
வியாழன்மால் கரிசுங்கன் தொகையைப்பாரே. (கருச)

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் அக்கோள்தான் மதிக்குலாபங்
கோதாய்கேள் உயிர்தனிலே மதியும்மாந்தி
குறிகிடவே அட்டமத்தில் மூன்றோன்றாகும்
நீதமாயுயிர்தனக்கு நாலோன்காரி
நின்றிடவே மதியினுட வீட்டிற்சார்ந்தால்
வேதன்மொழிப்படியெனவே வயதுமேலோர்
வியாழன்மால் காரிசிகி புகரிற்பாதி. (கருரு)

வேறு.

அட்டமாதிபனு முயிர்க்குளோன்றானு மருக்கனுங் கருமனு மொன்றாய்த், திட்டமாயுயிர்க்கு காரிவீடதனிற் சேரிட மூன்றிட மாகச், சட்டமாய்க்காரி புகருடன்வீட்டிற் றனித்திட வுச்சமாய் மறைந்தால், திட்டமாம்வயது யெழுபதுவரைக்குஞ் செல்வனுயி ருந்திடவல்லவன். (கருசு)

அட்டமத்தோன்புகராகி உயிர்க்கிராறில் அமர்ந்திடவே அக் கோள்தா னறிலேகச், சட்டமதாய்க் குருவுயிரோ னுகிநாலில் தனி த்திடவே ஆறுடையோன் நீசமாக, நட்டமில்லாக் குருதியுச்சங்கு ளிகன்சேர்ந்து நண்ணிடவே சந்திரனுமாட்சியானால்,திட்ட மதாய வன்வயது செப்பக்கேளு சேயரவுகுருதிசையேதிறமென்றார்கள்()

அட்டமாதிபனு முயிர்க்கு ளோன்றானும் அருக்கனும்மாலு மொன்றாகித், திட்டமாயுயிர்க்கு யேழினிற் றோன்றிச் சேரிடம்மா

லின் வீடானுற், சட்டமாய்க்காரி மதிமகன்வீட்டிற் றனித்திடவ ந்திடுஞ்சேய்க்குத், திட்டமாய்வயது ஐம்பதெட்டேழதாய்ச் செப் பினுர்தரணியில்மாதே. (கடுஅ)

அட்டமத்தோன் புகராரல் அருணனோடு அந்தனன் வீடதிற் கேது கருமமீதில், திட்டமதா யுயிரோனுங் கருமனுகிச் சேந்திட வே ஆரல்வீ டதனில்வாழ்க, நட்டமில்லாக் காரியுமே லாபனுகி நண்ணிடவே மதிமகன்றன்னில்லஞ்சேர்ந்தால், திட்டமதாய்வயது ஸ்ரப்பே னைம்பத்தொன்றில் சேரவிருமூன்றுடனேதிறமிதாமே. ()

மாதரசே கேளுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோ னக்கேளாய் மதிக்குப்பத்திற்
சீதமுடன் மதியரவு கரிவீடேகச்
சேருகரி உயிர்க்சோளாய் நீசந்தோன்றக்
கோதையரே உயிர்தனக்குக் கருமமீதில்
குசன்சிகியும் மதிவீடாய்த் தோன்றுஞ்சேய்க்குப்
பாதகமில் பரிதிமதி புகரோன்மந்தன்
பானுதிசை தொகைபாதி வயதென்றேதே. (கசுய)

வேறு

மதிமகனும் உயிரோனுய்க் கருமனுமேயாகி
வந்திடவே குருவீட்டிற் புகர்சனியுங்கூடி
விதியுடனே அட்டமத்தோன் சேயாகிமதிக்கு
விளங்கிடவே யேழதனிற் கேதுடனேசேரில்
சதியுடனே கேந்திரத்திற் பொன்னவனுஞ்சேர்ந்து
சாதகனுங் கருமமதாய்த் தனித்திடவேவரினும்
பதியுடனே அவன்வயது உரைத்தார்கள்மேலோர்
பரிதிபுகர் மால்சனியாய்ப் பகரலாம்பாவாய். (கசுக)

மதிவீட்டிற் குருவிருந்து மந்தனுடன்சேர்ந்து
மதிதனக்குக் கேந்திரத்தி லுச்சனுமேயாக
விதியுடனே அட்டமத்தோன் அரவுடனேதோன்றி
விளங்கிடவே உயிர்தனக்கு அஞ்சதனிலேகக்
கதிருடனே மதிகூடிக் கனகனுக்குப்பத்திற்
கலந்திடச்சே யட்டமத்தில் மால்வீடாய்த்தோன்றிற்
கெதிபெறவே யிருந்திடுவன் ஆயுள்மிகத்தீர்க்கன்
கெணித்தார்க ளன்பதுடனென்பதுயேழஞ்சே. (கசுஉ)

வேறு.

அட்டமாதிபனும் காரியாயுயிர்க்கு அமர்ந்திட மூன்றினில்வ
ரினுங், திட்டமாயுயிரோன் இறையவன்வீட்டிற் சேர்ந்திட மறைந்
திடவரினுள், சட்டமாய்க்கருமன் பரிதியும்புகருஞ்சார்ந்திட அஞ்
சினிற்றோன்றைத், திட்டமாய்வயது ஐப்பத்தெட்டேழிற் செப்பி
னார் பின்னுமென்றொகையாய். (கசுரு)

வேறு.

மதிமகன் அட்டமத்தோன் வளர்கர்ம கேந்திரத்திற்
சதிருட னுபிரோன்காரி தனித்திட மறைந்து ஆட்சி
விதியுடன் கர்மன்செவ்வாய் விளங்கிடப் புகர்பொன்னேக்கப்
பதிதனி லாயுள்தீர்க்கம் பரிதிநாள் சனிசேய்போமே. (கசுச)

வேறு.

அட்டமத்தோன் குருவாகி உயிர்க்கஞ்சேகி
அழர்ந்திடவே அக்கோள்தான் மாலாய்ப்பத்தில்
திட்டமதாய்க் காரியுட வீட்டிற்சேர
சேருகரி குருவீடாய் மதிக்கெட்டாகிச்
சட்டமதா யிரவிபுகர் குசனுங்கூடித்
தரித்திடவே உயிர்தனக்கு லாபஞ்சேர்ந்தால்
திட்டமதாய் வயதுரைப்பே னப்பாகேளு
சேயரவு மால்பிருகு ரவியுஞ்சேரே. (கசுரு)

ஆரலுயிர் உதித்திடுஞ்சே யவர்வீடாக
ஆரலிருந் திடத்தோன்கேந் திரமுற்றாலும்
பாராயுட் காரகனும் முன்போல் தோன்றப்
பகருபஞ்ச மத்தோனுஞ் சுபரேயாகி
நேருயிர்க்கு மறையாம லெட்டாங்கோளன்
நெடுஞ்சுபரோ டிருந்திடச்சேய் பார்க்கவந்தால்
கார்குழலே அவன்வயது ஐம்பத்தொன்றுங்
கருத்திதுசொல் லாகமத்தைக் கருதுமாதே. (கசுசு)

வேறு.

அட்டமாதிபனுங் காரியாயாட்சி அமர்ந்திடப் பத்தினோன்
குருவாய்த், திட்டமாயுயிர்க்கு நாலிலேதோன்றத் தினகரன் கூட

வே அஞ்சோன், சட்டமாய்ப் புகராய் மாலுடன்கூடி சனியுமே பார்த்திடவ்ரினும், மட்டிலாவயது ஐம்பத்தெட்டேழில் மதிமகன் திசையினிற் போமே. (௧௬௭)

புகருடன் ஆரல் கேதுடன்மாலும் புனிதமாய்க்கர்மகேந்திரத்தில், தகரினிலுயிரோன் கருமனுய்வாழ்கச் சனியுமே மாலவன் வீடால், நிகரிலாயோகன் கீர்த்தியுமதிகம் நிகழ்த்தினுர் குருதிசை யதனிற், றுகிர்நிறமான புகர்வரும்நாளிற் றுன்பமாய் மாய்ந்திடு மென்ருர். (௧௬௮)

இரவியுங்கேது மெட்டினிலிருக்க யின்பவா யுயிர்க்குளோன் ருனும், விரவியஏழிற் சந்திரன்புகரும் விளங்கிட வுயிர்க்கிரண்டி னிலே, பரவியகுருவும் அரவுமேதரிக்கப் பகர்ந்தனர் உயிர்க்குமே லாபம, நிகரிலாக்காரி யிருந்திடவயது நேசமாய் அறுபதும்ரெ ண்டும். (௧௬௯)

நேசமாங்குருவுக் கட்டமந்தன்னில் நீலனுய்ப் புதனிருந்திடி னும், வாசமாம்யோகன் சிவிகைவாகனமும் வரிசையும் புகழுமே யுடையன், நாசமாம்மனவி யோகமேயில்லான் நாரியர்கலவியிலதி கம், பாசமாயிருப்பன் அனேகமாந்தனங்கள் பதிந்திடும் ஒருதற்கு மீயான். (௧௭௦)

பஞ்சமாதிபனும் உயிர்க்குளோன்ருனும் பனிமதி யுடனுமே கூடி, விஞ்சையாவுபிர்க்கு இரண்டினிற்றேன்ற விளங்கிய குருகரி சிகியுந், தஞ்சமாயுயிர்க்கு நாலினிற்றரிக்கத் தானத்தோ னுயிரினி ல்வரினும், கொஞ்சிய அரவு கர்மகேந்திரத்திற் குசனுமே லாபம் வந்துதித்தால். (௧௭௧)

உதித்திடுஞ்சேய்க்கு உயிர்க்குயிராறில் ஒளிவிலா மாந்திவந் திடுனும் விதித்திடும்வயது அறுபதுமேலாம் மேன்மையாங் கரிதி சையதனிற், குறித்திடுமுயற்சி வரவரமேலாங் கோதையர் மங்க ளந்தோன்றுங், கதித்திடும்பிடரி சுரிபிளவையினுற் கடினமாய்த் தோன்றியே மறையும். (௧௭௨)

மறைவிலாமறையோன் திசையினிற்கஷ்டம் வந்திடும் பிதா வையுங் கொல்வன், முறைபிலாச்சனியில் முந்தியும்பீடை மோச

மில் மங்கையர் தோன்றும், நிறைமதிமகனுள் திசையினிற்றனதில் நிச்சயம் புதல்வர் வந்துதிக்குங், குறையிலாமுயற்சி தீர்க்கமும் வாய்குங் குறித்தனர் கணிதநூலாய்ந்தோர். (௧௭௩)

பஞ்சமாதிபனும் உயிர்க்குளோன்றானும் பரிதியும்மதியுடன் உயிர்க்குத், தஞ்சமாயேழி லிருந்திடவக்கோள் தரித்திடக் கேது டன்நாலில், விஞ்சையாங்காரி அட்டமாதிபனுய் விளங்கிட வுயிர்க் குஆறதனில், அஞ்சவேகர்ம கேந்திரமதனில் அரவுடனிருந்திடுஞ் சேய்க்கு. (௧௭௪)

இருந்திடுஞ்சேய்க்கு மூன்றினிற்செவ்வாய் ஏகமாய் தனித்தி டவரினும், வருந்தியகுளிகன் தகரினில்லாபம் வந்திடப் பிறந்திடு ஞ்சேய்க்குத், திருந்தியவயது இருபதுரெண்டிற் சேதமாம் பின்னு மூன்றினிலே, மருந்தினுற்கொடூரம் வாய்த்திடுந்தப்பில் வயதுமே தீர்க்கமாமென்றார். (௧௭௫)

தீர்க்கமாய்வயது மொழிந்தனர்பெரியோர் திறமுடன்புகர்தி சையதனில், மார்க்கமாய்த்தாரந் தோன்றிடும்பருதி வந்திடில் மன வியும்மாயும், ஆக்கமாய்ச்செல்வம் சமனுடன்வாழ்வன் அன்னையர் பிதாவையுங்கொல்வன், தாக்கியசமர்த்தன் வஞ்சகன்சீலன் தரணி யில்மதித்திடவல்லன். (௧௭௬)

அட்டமாதிபனும் உயிர்குளோன்றானும் அருணனும் பரிதியு மொன்றாய்த், திட்டமாயுயிர்க்கு ஆறிலேமறையச் செப்பிய கர்ம கேந்திரத்திற், சட்டமாய்மதியுந் தனித்திடஆட்சி சனியுமே மதி மகன்வீடால், திட்டமாய்வயது மதிமகன்முதலாய்ச் செப்பினர் குசன்திசைபோமே. (௧௭௭)

அட்டமாதிபனுங் கருமனும் அரவும் அந்தணன் வீட்டினிலி ருக்கத், திட்டமாயுயிரோன் அஞ்சினிற்றரிக்கச் சேயுடன் வீட்டி னிற்புகரும், சட்டமாய்மதியு மிரவியுமொன்றாய் சசிமகன் வீட் டினிற்றரித்தால், திட்டமாய்வயது குசன்முதல்நீலன் சேருமே தொகைதனைச்சாற்றே. (௧௭௮)

சாற்றியமைந்தன் பிறந்திடும்போது சசிக்குநால் பத்தினில் சர்ப்பம், வாய்த்திடுமதிக்கு அட்டமம்மாந்தி வந்திடஆரலும்மூன்

ருல், தோற்றியவயது அற்பமாய்வளருஞ் சொல்லிய சித்திரை நாளாய், வாய்த்திடுமாகில் தோஷமே அதிகம்மாய்ந்திடும்நிவர்த்தி யாற்றீரும். (௧௭௬)

சிங்கலக்கினத்திற் சேயுமேதனிக்கத் தினகரன்மாந்தியுமிரண்டிற், பங்கமில்லாத சனிபுகர்மாலும் பனிமதி நாலினிலரவுந், தங்கிடவுபிர்க்கு அட்டமாதிபனுஞ் சனியுட வீட்டினிற்கேதும், பொங்கியசெவ்வாய் வீட்டினில்மதியும் பொருந்திய ஆட்சியில் மறைந்தால். (௧௭0)

மறைந்திடாவயது அறுபதுவொன்றாய் வகுத்தனர் புகர்திசைவரைக்குங், குறைந்திடாச்செல்வம் பூமிக்ஷேத்திரங்கள் குறைவிலாச் சமனுடன்வாழ்வன், நிறைந்திடாக்கேது திசையிலேகஷ்டம் நேர்ந்திடுங்கர்மங்கள் முடிப்பன், கரைந்திடஉதவி யாகியகர்மங் களத்திரந் தனக்குமேகாட்டும். (௧௭௧)

வேறு.

அட்டமத்திற் குருவிருக்க அக்கோள்தானும்
ஆரலாய்ப் பரிதிவீ டதனிலேதனிக்கத்
திட்டமுடன் காரியுந்தான் கருமனுமேயாகிச்
சேயுயிர்க்கு ஆறதனில் மறைந்திடவே உயிரிற்
சட்டமுடன் மதியிருக்கப் பஞ்சமத்தோன்புகரும்
சசிதனக்கு மூன்றதனிற் றரித்திடவேவரினும்
மட்டுடனே யுகர்திசைநாள் முதலாகக்குருவில்
மாய்ந்திடுமாம் புதனிலென வகுத்தனராம்பெரியோர். ()

வேறு.

பஞ்சமாதிபனுங் காரியாயுயிரிற் பதிந்திடமாந்தியுமொன்றாய் விஞ்சையாமக்கோள் ஆரலாய்க்கேதும்விளங்கிடக்கரும கேந்திரத்தில், வஞ்சியர்தான நாதனும்மாலும் மறைந்திட இரவியுமொன்றாய்த், தஞ்சமாயொன்பான் சோமனுயெட்டிற் றனித்திட மறைந்திடவந்தால். (௧௭௩)

வந்திடுஞ்சேய்க்கு உயிர்க்குநாலதனில் வாளரா யிருந்திடவரினுந், தந்திடும்வயது ஐம்பதுநாலில் தத்துடன் கண்டமாய்விடினு

ம், மூந்தியாகு திசையிலேகஷ்டம் முடிந்திடு மாதுருதனக்கும் பந்தமாய்ரோகந் தோன்றிடும்பிலமாய் பாலகன்வயதெழுபதுவே.

யெழுபதுவயது உரைத்தனர்பெரியோர் இசைந்திடுங் குருதி சையதனிற், பழுதில்லாமுயற்சி களத்திரம்பூமி பாலகன் தோன்றி டும்பிலமாய், முழுவதும்நடக்குங்காரியம் முன்போல் மோசமில்ல ந்தணராலே, வழுவிலாத்தனங்கள் மங்கையர்முதலாய் வாழ்ந்திடும் புகழ்ந்திடவல்லன். (கஅடு)

வேறு.

அட்டமத்திற் கரியிருக்கக் கேந்திரத்திற்சுங்கன்
அவ்வீட்டுக் குடையோனும் ஆட்சியாயுயிரில்
திட்டமுடன் கதிரோனு மீராறோனுந்
திறமுடனே இரண்டைந்திற் சேரவுச்சம்
சட்டமதாய்க் கருமனுமே மறையெட்டோன்
சசிஅரவோ டேகிடவே உயிர்க்கொன்பானில்
திட்டமதா யவன்வயது பத்துடனேரெட்டி
சேரவொரு மூன்றினிலே பெருக்கிடவேதொகையாம். ()

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் அக்கோள்தான் மதிக்கஞ்சேகிச்
சீதமுடன் கரியன்மனை யதனிற்கர்மன்
சேர்ந்திடவே உயிர்தனிலே ரெண்டோன்றாகும்
கோதாய்கேள் பஞ்சமத்தோன் காரியாகி
குளிர்மதிக்கிக் கர்மமதிற் றனிப்பானுகில்
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
வியாழன்மால் காரிமதி சிகியுஞ்சேரே. (கஅஎ)

வேறு.

அட்டமாதிபனும் அரவுடனுயிர்க்கு அமர்ந்திட மூன்றினில் வரினுந், திட்டமாயுயிரோன் மாலுடன்புகருஞ் சேர்ந்திட மதிக்கு மேலாபஞ், சட்டமாய்க்காரி லாபமேசேரத் தரணியிற்பிறந்திடுஞ் சேய்க்குத், திட்டமாய் வயதுஐம்பதுயெட்டிற் சேதமாய்ப்போய விடுமென்றார். (கஅஅ)

மிதுனலக்கினத்திற் கேதுவேயிருக்க மேன்மையா யைந்தினி ற்புதனும், இதமுடன்கருமன் பொன்னவனுகி யிருந்திடக்காரியும

ரவும், விதியுடனுயிர்க்கு யேழினிற்றோன்ற விளங்கிய புகர்மறைந் திடவே, சதுர்முகனுரைத்த படியெனவயது சனிபுதன் அரவுட தொகையாம். (கஅகூ)

மாலவனுயிரோன் அட்டமமதனில் வந்திட இரவியுங்கூடில், தூலமாய்க்காரி சசியுடன்வீட்டிற் றுணிந்திடக் கருமனுமேழில்,ஏ லவேபுகருங் கர்மகேந்திரத்தி லிருந்திட, உச்சமாய்த்தரித்தால், கோலமாய்வயது குருதிசைகடந்தாற் கொன்றிடுமெனச்சிலர்மொ ழிந்தார். (ககூ0)

வேறு.

ஓதுமெனக் காரியுடன் அட்டமத்தோன்மாலும்
உறைந்திடவே உயிர்தனக்கு மறைந்திடவேவரினும்
நீதியுடன் உயிரோனுங் காரிவீடதனில்
நின்றிடவுந் தனித்திருக்க மூன்றிடமேயாகில்
சேதமுட னுயிர்தனிலே சேயுடனேகேது
தினகரன்மால் குருவீடாய்ச் செனித்திடவேவரினும்
வேதமா யவன்வயது யெழுபதுடன் ஒன்றாய்
விளங்குமெனத் தெரிந்துரைத்தார் பெரியோர்கள்மொழியால். ()

வேறு.

மகரலக்கினத்தில் அரவுமேயிருக்க மந்திரி யிரவியுமுயிரோ ன், தகரினில்மாந்தி தன்னுடன்தரிக்கச் சாற்றினேங் கருமனும்மூ ன்றாய், நிகரிலாக்கர்ம னுச்சனாய்வரினும் நின்றிடி லட்டமஞ்செவ் வாய், மகபதிபோல தனமெல்லாஞ்செலுத்தும் வயதுமே ஐம்ப தோடைந்தாம். (ககூஉ)

வேறு.

சந்திரன் றனக்குப்பத்திற் றரித்திட இரவிசுங்கன்
வந்திடக் கேதுமாந்தி வளர்குரு புதனும்யேழில்
சுந்தரத் துடனேகாரி தோன்றிட அரவோடானால்
சொந்தம் யிரவிகாரி சோமனுள் மூவெட்டாமே. (ககூங)

ஆகுமே அரவுநாளில் அந்தணன் கரியோனாணில்
போகுமே புகர்நாள்வந்தால் புண்ணிய மனைவிசேர்வள்
வேகுமே செவ்வாய்சேர்ந்தால் வேசையின் போகனுவன்
ஆகுமே புதனுள்தன்னில் அரசரால் முயற்சியுண்டே. (ககூச)

வேறு.

அட்டமாதிபனும் புகருடனுயிரில் அமர்ந்திடக்காரிவீடாகத் திட்டமாய்க்கர்மன் ஆட்சியாய்ப்பத்திற் சேர்ந்திட லாபத்தினுயி ரோன், சட்டமாய்க்குருவும் நாலினிற் றனிக்கச் சாற்றினே ரிவ னுடவயதைத்திட்டமாய்ச்சொல்வேன் அரவுடதிசையிற்சேதமாய் ப்போய்விடுமென்றார். (௧௧௬)

அட்டமாதிபனுங் காரியாயுயிர்க்கு அமர்ந்திடக்குடும்பத்திற் றனிக்கில், திட்டமாயுயிரோன் இரவியோடெட்டிற சேர்ந்திட மதி க்குவொன்பதனிற்,சட்டமாய்க்கர்மன் ஆட்சியாய்ப்பத்தில் தனித் திடப் புகருமே உச்சந், திட்டமாய்வரினுங் குருதிசைவரைக்குஞ் செப்பினார் ஆயுளைத்திறமாய். (௧௧௭)

அட்டமாதிபனு முயிர்க்குளோன்றானும் ஆரலாய்ப்புகருடவீ ட்டில், திட்டமாயாறோன் மாந்தியுங்கூடத்தினகரன் மதிக்குமைந் தினிலே, சட்டமாய்க்காரி கருமனும்மறையில் சாற்றினு ரிவனுட வயதைத், திட்டமாய்ச்சொல்ல ஐம்பதுநாலிற் சேதமாந்தப்பிடிற் றீறமாம். (௧௧௮)

திறமெனும்வயது புகர்திசைபாதி செப்பினார் தமிழ்மொழிய தனால், நிறமெனுமேழிற் குருவிருந்திடினும் நின்றிடப் புகருடன் கேதும், முறைமுறைப்படியே காரிநாளதனில் முந்தியதாரமே உ தவும், சரந்தனிற்புகரும் மறைந்திடாதிருந்தால் தரணியில் மனவி ரெண்டாகும். (௧௧௯)

அட்டமாதிபனுங் காரியுங்கர்மன் அந்தணன் தனக்குயேழத னிற், றிட்டமாயுயிரா யிருந்திட அக்கோள் சேயுடன் அரவுடன் லாபம், இட்டமாய்க்குடும்ப னேழினிற் றனிக்கி லெய்திய புகரு மேயிரண்டால், மட்டிலாவயது மதிமகன் திசையில் மாய்த்திடும் பாதிமேலாக. (௧௧௰)

இரவியும்மாலும் புகருடனுயிர்க்கு யிரண்டினி லிருந்திட வக் கோள், திரவியனாகி மூன்றினிற்றனிக்கில் சேய்புகர் வீட்டினில் மறைய, நிரவியயுயிரிற் பொன்னவனுக்ஷிநின்றிட அட்டமன்கர்மம் பரவியவயது முப்பது அஞ்சிற்பதிவது திங்கள் மூன்றினிலே. ()

பதிவதுஉதர வியாதியாற்சீவன் பாய்ந்திடும்புவிதனிற் போகும், விதிவதுதப்பில் வெய்யவன் தொகைநாள் வேண்டியே சேர்ந்திடும் பிலமாய், கெதிபெறியிருப்பன் கேசரியோகன் கெணித்தனர் சிவிகை வாகனமும் நிதியொடுபூமி கரிபரிமுதலாய் நிலையிலாச்செல்வவானுவான். (உ0க)

வேறு.

ஆரலு முயிரோனுகி அட்டமா திபனுமாகி
பாரமாம்புகரோன்கூடிப் பதிந்திடப் பரிதிவீடாய்
நேருமே யுயிர்க்குப்பத்தில் நின்றிடச் சனியாயாட்சி
பாரினிற் பிறந்தசேய்க்குப் பகர்ந்தது ஆயுட்கேளே. (உ0உ)

வேறு.

கேளப்பா காரிதிசை பாதித்தன்னிற்
கெணித்திடுவன் புகர்திசைநாள் வரைக்கு மாயுள்
வாளப்பா மதிமகன்றன் திசையிற்றூரம்
வந்திடுமே வித்தையுடன் போகம் புத்திரன்
நாளப்பா முயற்சிகளும் அற்பமாக
நாடிடுவன் தலம்பேத்தி யாகிவாழ்வன்
கேளப்பா அட்டமத்திற் கேதுநிற்கில்
குவலயத்திற் செல்வமெல்லாஞ் சமனுமென்றூர். (உ0ங)

வேறு.

அட்டமாதிபனும் உயிரின்கோளுடனே அந்தணன் வீட்டினிலமையத், திட்டமாயன்னேன் கூடியேயிருக்கத் திங்களின் வீட்டினிற் கரியாய்ச், சட்டமாய்க்கர்ம மதனிலேபுகரும் சசியுடன்தரித்திடவந்தால், திட்டமாய்வயது மதிகுசன் அரவுஞ் சேர்ந்திடுங்குருதிசைவரைக்கும். (உ0ச

வேறு.

குருவுமே மால்வீடேகக் கொடியசேய் குருவீடாக
வருமுயிர் தனக்குமூன்றில் மந்தனுந் தனிப்பானுகில்
தருமுயிர்க் கஞ்சில்நாதன் சந்திரன் அருக்கனுனல்
கருதின வயதுநாற்பத் தஞ்சுமே கருதலாகும். (உ0டு)

கருதலாம் அஞ்சோன்மாலும் கருமத்தா னத்தில்மேவிச்
சுருதியா மறையோன்செவ்வாய் சோமனைப் பார்க்கவந்தால்

மருவிய் தானம்யேழில் வாளரா வுறினுஞ்சேபைக்
கருதினுர் நாற்பத்தஞ்சு கடந்ததாற் பிலமென்ருர்கள். (உ0சு)

வேறு.

பாக்கியனுபிரில் மாந்தியுமுடனே பதிந்திட மாலவன்வீடாய்
வாக்கினேன் மதியும் மந்தனுங்குருவீ டதனிலே நவாங்கிஷம்வந்
தால், தாக்கியபுகருஞ் சேயுடன்அரவுந் தரித்திட, நவாங்கிஷமிருந்
தால், போக்கினிலதிக யோகமாயிருப்பன் புத்தியு மேன்மையுமு
டையன். (உ0எ)

அட்டமாதிபனு முயிர்க்குளோன்ருனும் ஆரலாய்ப் புகருட
னுச்சந், திட்டமாய்க்கர்மன் காரியாய்மதிக்குச்சேர்ந்திடப்பாக்கிய
மிருந்தால், சட்டமாய்மதிக்கு யெட்டின்கோள்குசனுய்ச் சார்ந்தி
டக்காரிவீடானுல், திட்டமாய்வயது பரிதிநாள்முதலாய்ச்சேர்ந்திடு
நரிதிசைபாதி. (உ0எ)

வேறு.

அட்டமத்திற் குருவிருக்கக் கதிரோனேடு
அந்தணனு மாட்சிதனி லமையக்காரி
திட்டமதாய்க் கருமமதிற் றனிக்கக்கேந்திரஞ்
சேயாட்சி பாக்கியத்திற் றிடமாய்ப்புந்தி
சட்டமுடன் காரியுட வீடேழாகத்
தரித்திடவே புகருடனே சசிக்குக்கேந்திரந்
திட்டமுடன் வருங்குழவி தனக்கு ஆயுள்
தீர்க்கமுடன் அறுபதுநா லஞ்சிற்போமே. (உ0கூ)

வேறு.

உயிரின்கோள் மூன்ருேன் பஞ்சமன்புகர்வீ டுற்றிடக்குருவு
மேபார்க்கத், தயிரியன்யெட்டோன் காரியாயாறிற் றனித்திடக்
குசனுமேயெட்டிற், பரிதிவீடதனில் அரவுமேதரிக்கப் பத்தின்
கோள் கேந்திரமிருந்தால், கருதினர்வயது பத்துநாலிரெண்டிற் க
டந்திடும் புகர்திசைதனிலே. (உ0௧)

கடந்திடும்புகரிற் கேதுநாளதனிற் கருவியாம் பீடையால் வி
பாதி, தொடர்ந்திடிற்கொல்லும் அல்லதுபெரியோர் சொல்வது

பல்னினுற்ருரம், விடந்தரும்நோயால்மாய்ந்திடுமென்றுவிதித்தனர் தமிழறிந்தோர்கள், நடந்திடும்படியே கணிதநூல்விதியைநாடினர் பெரியவர்தானும். (உகக)

அட்டமாதிபனு முயிர்க்குளோன்ருனும் ஆரலாம்பத்தினிலு ச்சம், திட்டமாய்க்கர்மன் காரியாய்மதிக்குச் சேர்ந்திடப்பத்தினி லிருந்தால், சட்டமாய்மதிக்கு யெட்டின்கோள்குருவாய்ச் சார்ந்தி டச்சோமன் வீடானல், திட்டமாய்வயது பரிதிநாள் முதலாய்ச் சேர்ந்திடுங் கரிதிசைபாதி. (உகஉ)

வேறு.

ஆறுயிர் வீடதனிற் பரிதிதிங்கள் அமர்ந்திடவே புகர்மந்த னிருக்கப்பொன்னன், நேராக நோக்கிடவே யுயிரோனேழாய்நின் றிடவும் புகர்வீடாய் அக்கோள்கேந்திரம், பாராயுட் காரகனும்மு ன்போல்கிற்கப் பகருபஞ்ச மத்தோனு முயிரிற்றேன்றில், கார்கு ழலா யவன்வயது யெண்பத்தொன்ருங் கருதியசொல் லாகமத்தை கருதுமாதே. (உகங)

வேறு.

அட்டமாதிபனுங் காரிவீடதனில் அமர்ந்திட மாலுடன் அர வந், திட்டமாயுயிரோன்காரியாய்மதிக்குச்சேர்ந்திட இரண்டினிற் கேதுஞ், சட்டமாய்க்கர்மன்பஞ்சமனுடனே தனித்திடமாந்தியோ டுயிரில், திட்டமாய்வரினும் ஆயுளுந்தீர்க்கஞ் செப்பினுர்புகர்திசை வரைக்கும். (உகச)

இரவியுங்குருவும் உயிர்க்குநாலதனில் இருந்திடச்சனியுமேயெ ட்டில், வரமுடன்சேயுங் குளிகனும்லாபம் வருமுயிர் மதியுடன்அ ரவுந், தரணிபிறுபிர்க்கு அஞ்சினிற்புகர்மால் தரித்திட அன்பது நாலிற், றிரமிலைகண்டந் தீர்ந்திடில்வயது செப்பினுர் மால்திசைவ ரைக்கும். (உகரு)

அட்டமன்கரியாய் மதியுடனரவும் அமர்ந்திட உயிரிற்கேந்தி ரமாய்த், திட்டமாய்க்கருமன் பொன்னனுய்ப்பத்திற் சேர்ந்திடக் குளிகனும்பார்க்கச், சட்டமாயுயிரோன் ஆறின்கோளுடனேசார்ந் திட இரவியுமுச்சம், திட்டமாய்வரினு மாயுளுந்தீர்க்கஞ்செப்பினு ரெழுபது வரைக்கும். (உகரு)

ஏழுபதுவரைக்குஞ் சொல்லியசேய்க்கு யேழினிற் கேதுவுந் தரிக்கில் பழுதிலாவயது அறுபதிற்கண்டம் பகர்வது பீடையாற் றீர்க்கம், மழுகையிற்றரித்தொன் மகனெனுங்கணேசன் வல்லபை தன்னுடனிருக்கும், முழுமதிதரித்தோன் குமரனைத்துதிக்க மோ சமில் தீர்ந்திடும்பிலமாய். (உகஎ)

பிலமெனுஞ்சென்ம நாள்புகர்வாரம் பெருகிய சதுர்த்தியின் தோறும். நலமுடன்நெய்யில் விளக்கிடவேண்டும்நறுமலர்பாலொ டுஇளநீர், குலமுடன்துதிக்கில் கொடுவினையகலுங் கூடிடும்ஆயுளுந் தீர்க்கம், தலமுடன்தீர்த்த தானமும் அன்னந் தயங்கிடா தளித்தி டவேண்டும். (உகஅ)

மதியுயிர்தனக்கு அஞ்சின்கோளஞ்சாய் வரவவற்கஞ்சினிற்புகராய் விதியுடன்புகரும் பஞ்சமனாகி விளங்கிட நாலினில்மாந்தி சதியுடனுயிர்க்கு இரண்டுமேழஞ்சிற் றரித்திடப்பாவிகளிருந்தாற் பதிதனில்வயது அற்பமாம்பானு திசைவரை கடந்திடிற் றீர்க்கம்.

அட்டமன்வாக்கி லமர்ந்திடச்குருவீடாகியே அருக்கனும்புக ரும், திட்டமாயுயிரிற் சேர்ந்திடச் செவ்வாய் திங்கள்வீடதனிலே நீசம், சட்டமாய்க்காரி தனதுவீடதனிற் சார்ந்திடச் சசியுடன்அர வந், திட்டமாய்வரினு மிரண்டின்கோள் நீசம் சேர்ந்திடப் பிறந்த சாதகற்கு. (உஉ0)

பிறந்திடுஞ்சேய்க்கு நாற்பத்தெட்டதனிற் பெருகிடுங் கஷ்ட மாய்க்கண்டம், நிறைந்திடுமாகில் மயங்கிடும்படியே நின்றிடும் பல ன்களுமதிகங், குறைந்திடாவயது ஆறுயெட்டதனிற் குறிகிடாப் பிலத்திடுமாகில், அறைந்திடும்படியே ஐம்பதெட்டதனில் அழிந்தி டுமெனச்சிலர் மொழிந்தார். (உஉக)

அட்டமன்கரியாய்ப்புகருடன்மாந்தி அமர்ந்திட உயிரிற்கேந் திரமாய், திட்டமாயக்கோ ளிரவிகேதோடு சேர்ந்திட யிலாபமாய் வரினுஞ், சட்டமாய்க்கர்மன் அரவுடனஞ்சிற் சார்ந்திடமதிகுசன் தனிக்கில், திட்டமாய்வயது இரவிமால்மதியுஞ் சேர்ந்திடும் புகர் தொகைசேயில். (உஉஉ)

அட்டமன்மாந்தி கர்மகேந்திரத்தி லந்தணனுகியேதரிக்கத்
திட்டமாயுயிரோன் இரவியுமிரண்டிற் சேர்ந்திட மாலவன்வீடாய்,
சட்டமாய்க்காரி அரவுடன்மதிக்குச் சார்ந்திட நாலிற்கேந்திரமாய்
மட்டிலாவயது மாலவன்முதலாய் மாய்த்திடுஞ் சேய்திசைதனிலே

அட்டமாதிபனுங் காரியுமரவு மஞ்சினி லமர்ந்திடவரினுந் தி
ட்டமாயுயிரோன் மதியுடனில்லஞ் சேர்ந்திடக் கர்மனுமுச்சஞ், ச
ட்டமாய்க்குருவும் மாந்தியும்நாலிற்சார்ந்திட யெட்டைநோக்குற்
றால், திட்டமாயெட்டோன் திசையினில்மரணஞ் செப்பினர் தமி
முறிந்தோர்கள். (உஉச)

செப்பினர்பெரியோ ருயிர்க்கு ஒன்பதின்கோள் சேர்ந்திடப்
புகரின்வீடாக, ஒப்பினர்புகரு மவற்குமெட்டதிலே உடைந்திட
ஆட்சியாய் வரினும், மெப்பினற்கந்தன் கிருபையுமுள்ளன் மேதி
னி தன்னிலேவாழ்வன், தப்பிலாவாக்கன் தயிரியன் நல்லன் சமன்
வளர்த்தியு நிறஞ்சிகப்பன். (உஉரு)

வேறு.

அட்டமத்தில் மதியிருக்கக் கேந்திரத்திலக்கோள்
அரவுடனே குருவீடா யமர்ந்திடச்சேய்பார்க்கத்
திட்டமதாய் உயிர்க்கதிபன் கேதுடனேநாலிற்
றிங்கள்தனக் கேழினிலே சேர்ந்திடவேகரியும்
சட்டமதாய் உயிர்தனிலே மாந்தியுமேதனிக்கில்
தையலர்தன் தானபதிற் சார்ந்திடச் சேய்வரினுந்
திட்டமதாய் வயதுரைப்பேன் நாற்பதினிற்கண்டந்
தீர்ந்திடிலோ ஆயுள்வெகு தீர்க்கமெனச்செப்பே. (உஉசு)

சூரியனும் உயிரோனும் புகர்வீடேகித்
தோன்றிடவே அக்கோளுஞ் சகிக்கஞ்சாகிக்
காரியுமே குருவீடாய் நாலிற்கேந்திரம்
கருதுமெட்டோன் பவராகிச் சுபரோடேகில்
சீருடனே யெட்டாங்கோள் குருவும்பத்திற்
சேரிடமே மதிதனக்கும் நாலாய்ச்சேரில்
கூறுமென வுயிர்தனக்கு மதியேழாகிற்
கொடுத்திடுமைம் பதுஆயுள் நாலுங்கூட்டே. (உஉஎ)

வேறு.

அட்டமாதிபனுங்காரியாயெட்டில் அமர்ந்திட ஆட்சியாய்வரி
னுந், திட்டமாயுயிரோன் ஆட்சியாயுயிரிற் சேர்ந்திடக் கருமனும
தியுஞ், சட்டமாய்அஞ்சிற் சார்ந்திட அன்னோன்தரித்திட இரவிரா
குடனே, திட்டமாய்வரினும் ஐம்பதோடாறுய்ச் செப்பினுர் சாத
கன்றனக்கே. (உஉஅ)

சாதகன்றனக்கு அரவுதன்திசையிற் சாற்றினுர் வித்தையுமு
யற்சி, வேதமாய்ச்சமனுய் வருமெனமேலோர் விதித்தனர் குருதி
சையதனில், ஓதிடுமணநாள்முயற்சியுந்தனங்கள் உதித்திடுஞ்சமனு
டன்சிலவாம், போதவேகரியில் வளர்ந்திடும்பிலமாய்ப் புகழ்தனம்
கீர்த்தியும்பூமி. (உஉகூ)

மதிமகன்ஆரல் உயிரின்கோளரவும் வருமிடஞ் சுபர்மனையா
கச். சதியுடன்நாலோன் அஞ்சுநாலேழாய்த் தரித்திடப் புகருடன்
வீடாய், விதியுடன்காரி பாவரோடேகிவிளங்கிட ஆட்சியானுலும்,
பதிதனில்வயது அறுபத்தொன்றுகப்பகர்ந்தனர்சாதகன்றனக்கே.

வேறு.

சந்திரனுங் கேந்திரமா யேழாந்தானந் தனித்திடவே அதற்
குடையோன் சாருமில்லம், வந்திடவே புகர்வீடாய் வளரக்காரி
வருங்கொடியோன்மாந்தியுடன்கர்மமேறச், சிந்தையுடன்உயிரின்
கோள் பவராய்மாலுஞ் சேர்ந்திடவே அரவுடனே சேயுங்கூடில்
விந்தையுடன் குருதிசையில் மரணம்பேசும் விளங்குகரி திசைவரி
னும் விவாகஞ்சேரும். (உஙக)

வேறு.

அட்டமாதிபனும் இராகுடன்மூன்றி லமர்ந்திடக் கேதுமே
பார்க்கச், சட்டமாயுயிரோன் காரிவீடதனிற் றனித்திடப் புகர்பு
தன்யெட்டால், திட்டமாய்க்காரி மாலவன்வீட்டிற் சேர்ந்திடச்
சேய்மதிகேளாய், அட்டமந்தனிலே யிருந்திடும்புகர்நாள் அணு
கிடி லழிந்திடுந்தேகம். (உஙஉ)

அழிந்திடுந்தேகம் அன்பதோரெட்டில் ஐநான்கு மூன்றினில்
மணமாம், கழிந்திடும்பிதாவுங் காரிநாளதனிற் கருதிய பலனெலா

மற்பம், நெழிந்திடுங்கேது திசைவுரிற்பலன்கள் நேர்ந்திடுஞ் சம னெனமுயற்சி. பொழிந்திடும்புகரிற் புண்ணியம்வேண்டும் புத்திர தோஷமுமுரைத்தார். (உ௩௩)

வேறு

சந்திரனுஞ் சீரணமாய் மால்வீடேறிச்
சார்ந்திடவே சேய்பார்க்கத் தையல்நாதன்
முந்தியகேந் திரங்கள்தனில் லாபமாறில்
மூறிடவே லக்கினத்திற் பவருண்டாகில்
வந்தசனி புகர்வீடா யேழில்மூன்று
வருமுயிரைப் பார்த்திடமெண் ணுங்கிற்றுயாம்
அந்தவகை யறிந்திடவே யிடமுண்டானால்
அட்டவர்க்க முடன்பார்த்து அடைவாய்சொல்லே. ()

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் அக்கோள்தான் மாலோடாகிக்
கோதாய்கேள் உயிர்தனிலே கொடியோன்நிற்கக்
குளிர்மதிக்கு அட்டமத்திற் காரிநின்றால்
சீதமுடன் கருமனுமே மதியாயாட்சி
சேயுடனே தரித்திடவே மூன்றிலாறோன்
வேதன்மொழிப் படியெனவே வயதுமேலோர்
விதித்தனர்கள் ஐம்பதுடன் நாலுங்கூட்டே. (உ௩௫)

அட்டமத்திற் கரியிருக்கக் கேந்திரத்திற் பொன்னன்
அவற்குயெட்டில் மதிபுகர்சே யமர்ந்திடவேமாந்தி
திட்டமுடன் உயிர்தனிலே சேர்ந்திடவேமாலோன்
திங்களுக்குலாபமதிற் செப்பின ராகுடனே
சட்டமுடன் தோன்றிடவே வருஞ்சேய்க்குஆயுள்
சாற்றினர் ஐம்பதினிற் கண்டமெனயுரைத்தார்
திட்டமுடன்சிரசுஅரை முதுகினிலேபிளவை
சேர்ந்திடவே வருஞ்சேய்க்குச் செப்பினர்கள்பெரியோர்.

செப்பினர்கள் கருவியன்றி தீர்ந்திடுமேயாகில்
செல்லுபுகர் திசையிரவி நாள்வரையி லாயுள்

ஒப்பினர்கள் வித்தைதிறம், வஞ்சகனுங்காமி
ஓங்கியநல் லறிவுடையன் சமநிறமேயாவன்
துப்பிதழ்வா யுடையான்றன் போகபோக்கியனுஞ்
சொல்நயத்தன் வினோதமுடன் கோபிசமன்வளர்த்தி
மெய்ப்புடைய விவகாரன் சஞ்சலத்தன் தீர்க்கன்
விபசாயன் முயற்சிதனம்விரும்பிடுவன்மாதே. (உஙஎ)

சதியாக அட்டமத்தோன் குருவாயஞ்சிற்
றனித்திடவே சேய்பார்க்க மாலோன்வீடாய்
விதியாக உயிர்க்குள்ளோன் யெட்டிற்சேர
விளங்கிடவே கர்மனுடன் கேதும்நாலாய்
மதிகுருவுங் கேந்திரங்கள் திரிகோணங்கள்
வரவுபிரில் மாந்தியுமே புகர்வீடாகில்
கதிபெறவே யிருந்திடுவன் மரணமதுவரைக்கும்
கணித்தனர்க ளாயுளறு பத்துடனே அஞ்சாய். (உஙஅ)

வேறு.

வருகின்ற மதிபோய்க்காரி மனையிலேவாழ வைந்தோன்
பொருகின்ற யிரவியோடே போந்திட மறையஆறில்
தருகின்ற அஞ்சிற்பொன்னன் சார்ந்திட மால்வீடானல்
வருகின்ற புதல்வர்தெத்தாய் வகுத்திடக் கருமஞ்செய்யும்.

வேறு.

அட்டமத்தோன் மறைந்துபகை வீடதாக அதிலிரவி மதியுடனே கேதுங்கூடத், திட்டமதாயுயிரோனும் புகர்சேயோடுசேர்ந்திடமே, குருவீடாய் மதிக்கிராறில், சட்டமதாய்க் கருமனுமே உயிர்க்கோள்பானிற் சார்ந்திடவே வருஞ்சேய்க்கு சாற்றக்கேளு திட்டமதாய் வயதுரைப்பேன் ஐம்பத்தைந்திற் சேரயிருமூன்றுடனே திறமென்றார்கள். (உசo)

வேறு.

அட்டமாதிபனும் இரவியுஞ் சசியுமமர்ந்திட உயிர்க்கிரண்டினிலே, திட்டமாயுயிரில்மாலவனுட்சிசேர்ந்திடக்கருமனுமேழாய்ச் சட்டமாய்ச்செவ்வாய்க் கருமகேந்திரத்தில் தனித்திடப் புகருமே மறையில், மட்டிலாவயது புகர்திசைவரைக்கும் மதித்தனர் பெரியவர் நூலால். (உசக)

மதித்தனர்பெரியோர் உயிர்க்குமூன்றினிலேவந்திடராகுவே தரிக்கில், விதித்தனர்மாந்தி கேதுடன்காரி வீட்டினில் விளக்கிடவ ந்தால், துதித்தனர்வித்தைமூன்றுமேயுடையனசொல்நயம் பொரு ள்நயமுடையவன், பதித்தனர்மாலோன், திசையினில்முயற்சிபகர் ந்தனர்வரவரப் பொருதும். (உசஉ)

பொருதுமேகேது திசையினிற்கதிரோன் புசிப்பினிற் பீடை யாமுயற்சி, தருகிடாமறையுஞ் சந்ததிபோகுந் தனச்சில வாகிடத் தீரும், மருவிலாத்தேகன் மாநிறம்போலாம் வளர்த்தியுஞ்சமனுட ன்வாழ்வன், பெருமையுமரசர் தயவினால்முயற்சி பெற்றிடும் புகர் திசைபிலமாம். (உசங)

வேறு.

மதிமகனும் உயிரோனுய்க் கருமனுமேயாகி
வருமிடம்கேந் திரமாகிப் புகர்சனியொன்றாக
விதியுடனே கருமத்திற் பொன்னவன்கேந்திரமாய்
வெய்யவன்மூன் றிடமாக வுளங்கியசாதகற்குத்
துதிபெருகு மதியரவந் தோன்றிடயீராறிற்
சோர்வில்லா அட்டமத்தோன் கேதுடனுறுகில்
மதிமகன் வீடறில்மாந்தி உயிராகத்தோன்ற
மந்தனுடன் கேதுமேஷாங் கிஷமாய்வந்தால். (உசக)

வந்திடவே புகர்மாந்தி ரிஷபஅங்கிஷமாய்
வளர்மிதுனங் கிஷம்புந்தி மதிகடகமாகில்
முந்தியசேய் அரவுடன்கோ லங்கிஷமேயாக
முறைமையுடன் இரவிகுரு மகரஅங்கிஷமாய்ச்
சொந்தமதாய்த் தோன்றியசேய் தனக்குஆயுள்
சோர்வில்லாக்கேதுதிசைமுதலரவுவரையில்
விந்தையுடன் விளங்கிடுவன் வளர்த்தியனுஞ்சிகப்பன்
வேந்தரால் முயற்சியுளன் வித்தையில் வல்லவனும். ()

வல்லவனும் புகர்திசையில் மாலவன் றன்பொசிப்பில்
வந்திடுமே மங்களமும் போகபோக்கியமும்
அல்லவில்லான் காமியனும் அழகுடையன்சுமுகன்
அசஞ்சலத்தன்வஞ்சகனும் அரசருக்குமோசம்

நல்லவன்போ லிருந்திடுவன் வேசையுடன்விதனவ
நலமில்லாக் கன்னியர்பின் நீசஸ்திரிபோகன்
தொல்லையுடன் பகல்நிசியும் வயதுமூத்தவளுஞ்
சோர்வில்லாப் பிரமசா தியினும் போய்த்தொடுவன். ()

தொட்டிடுவன் போகபோக்கி யத்தினிலேபிலவான்
சோம்பலிலான் புகர்திசையிற் றோன்றிடுமேமுயற்சி
மட்டுடனே சமனாக வாய்த்திடுமேமதியில்
வாகனமும் கீர்த்தியுடன் வடதிசையிலாகும்,
வட்டமிலா மதிபாதி மேலாகப்பலன்கேள்
வளர்ந்திடுமே கிரகமொன்று வாகனமும்புரவி
திட்டமுடன் சேய்திசையிற் சிவிகைவாகனமும்
சிறப்புடனே முயற்சியினுற் றிறமாகவருமே. (உசஎ)

வருவதுசேய் திசையினிலே அரவுநாளதனில்
வாய்த்திடுமே பிதிர்கர்மம் வந்திடவே கணித்தார்
தருவதுசேய் திசையதனில் வெள்ளியுடலுனில்
சாய்ந்திடுமா தாமாணம் தப்பாதென்றார்கள்
பெருவதுசேய் திசையுமதிற் சிவபூசைமுதலாய்ப்
பெற்றிடுவன் பேரான முயற்சியினுற்கீர்த்தி
அருமைபெரு அரசருடன் அசஞ்சலமில்லாமல்
அழகுடனே அனுதினமும் அபிமானமுடையோன். ()

வேறு.

மகரலெக்கினத்திற் கேதுவேதரிக்க மந்தன்மா லிரவிசுக்கிர னும், நிகரிலாவுபிர்க்கு மூன்றினில்நிற்க நேசமாய்க்குருவு மட்டம த்திற், தகரினோனறிற் சார்ந்திடச்சசியும்தையலாயுபிர்க்குயீராறிற் பகர்வதுவயது முப்பதுரெண்டிற் பாக்கியம் பீடையுங்கண்டம். ()

வேறு.

கண்டமாமதிக்கு ஏழெட்டிற்பாவர் கலந்திடப் பாவரும்பா ர்க்க, உண்டெனுமிரவி திசைவிட்டுமதியு முதித்திடும் வேளையிற்பீ டை, அண்டிடுமதற்கு ஆண்டுஅஞ்சினுக்கு அமைத்தனர்புகருடன் விரதம், சென்றிடபிருந்து குகனையுந்துதித்தால் செப்பினு ரன்ப தெட்டாக. (உரு0)

அட்டமன்குருவாய் அரவுடன்மாந்தி அமர்ந்திடக் கர்மகேந்திரமாய்த், திட்டமாயுபிரோன்காரியுமிரண்டாய் சேர்ந்திடக்கருமனுங்கேதுஞ், சட்டமாயுயிர்க்கு நாலிற்கேந்திரமாய்த்தரித்திடப் பிறந்த சாதகற்குத், திட்டாய்வயது ஐம்பத்தெட்டிரண்டாய் செப்பினர் சாதகன்றனக்கே. (உருக)

சாதகன்றனக்கு வயதமிப்படியே சாற்றினர்கணித நூல்விதியால், வேதமாயரவு திசைதனிற்புகர்நாள் விளங்கிடில் மாதரால் வருத்தம், போதவேவளரும் மயக்கத்தாற்பிடை பொன்றிடும்படியெனவருமாம், ஓதினர்கணிதர் உயிர்க்கிரண்டுடையோன் உரைந்திடப் புகருடவீடால். (உருஉ)

புகருடவீடாய் மாலுமேதரிக்கப் பொன்னவன் றனக்குயேழுடையோன், நிகரிலாலாப மதனிலேசேர நீலனும் மதிக்குகேந்திரமாய், தகரினேன்பார்க்கிற் சாற்றினர்தமிழால்தையலர்தோன்றிடும்பிலமாய், புகரினேன்திசையில் யேழின்கோள் பொசிப்பிற் புகழ்ந்திடும் மங்களம்வருமே. (உருங.)

மங்களமுடனே போகபோக்கியமும் வளர்ந்திடுந்தாசியர்முதலாய், இங்கிதமான போகமுமுடையன் யெய்திடும் வளர்த்தியன் சுமுகன், சங்கையாந்தலையில் அரையினில்முதுகிற் சாற்றினர் மருவுடன்மச்சந், தங்கவேகீர்த்தி பூமியுந்தனமுந் தரித்திடும் வெகுபிரபலமாய். (உருச)

அட்டமாதிபனும் அறுக்கனும்புகரும் அட்டமமதனிலே தரிக்கத், திட்டமாயுயிரோன் ஆரலாயாறிற் சேந்திட ஆச்சியாய்வரினுஞ், சட்டமாய்க்காரி அஞ்சின்கோள்கேதுஞ் சாய்ந்திட மாந்தியுங்கருமந், திட்டமாய்வரினும் அன்பதெட்டேழாய்ச் செப்பினர் சாதகன்றனக்கே. (உருரு)

சாதகன்றனக்குக் கணிதநூல்விதியாற் சாற்றினு ரன்பதோடாறில், வேதமாயரவு திசைதனிலெட்டோன் மேவிடிற் கண்டமாய்விதித்தார், போதனுமுரைத்த கண்டமேவிடுகிற் பொன்றிடான் முன்னுரைப்படியே, நீதமாய்வயது வெகுதிறமாக நிகழ்த்தினர் கணிதநூலாய்ந்தோர். (உருரு)

வேறு

மாதேகே ளுயிரோனும் மதிமகனுயேழில்
வந்திடவே இரவிகுசன் குருவீடாய்ச்சேரக்
கோதாய்கே ளுயிர்தனிலே குடும்பனுமேதரிக்கக்
குளிகனுடன் அட்டமத்தோன் குருகிடஅஞ்சதனில்
நீதமுடன் கருமனுமே மதிக்குமூன்றிடமாய்
நிற்கவெட்டிற் பஞ்சமத்தோன் காரிவ்டாகில்
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
வியாழன்மால் காரிகிசி தொகையென்றேதே. (உருஎ)

ஓதிடுவன் புகர்தனக்கு மூன்றில்ராகு
உறைந்திடவே அவற்கேழிற் கொடியோன்நின்றால்
பாதிசிகி தொகையதிலே தள்ளிநின்றால்
பாலகன்றன் வயதெனவே பகர்ந்தார்மேலோர்
நீதியுடன் குருதிசையி லுயிரோன்நாலில்
நேர்ந்திடுமே மங்கலநாள் நிற்கிற்சுங்கன்
பாதியினில் வருமணநா ளாகுமென்று
பகர்ந்தனர்பெண் சொந்தமதா யாகும்பாரே. (உருஅ)

சொந்தமுடன் மங்கலநா ளாகுமாறேன்
றேன்றிடவே யிரவிபுத னுடனேழாகி
வந்திடவே புகர்மறையச் சனியேபார்க்க
வாய்த்திடுமா மனவிரெண்டாய் வகுத்தார்மேலோர்
சிந்தைதனிற் காரியுடன் குளிகன்சேரில்
திருந்திடவே போகபோக் கியங்கள்செய்வன்
மூந்தியதோர் சகோதரங்கள் தீர்க்கமாக
மொழிந்தனர்கள் கீர்த்திதனம்பிலமென்றேதே. (உருகூ)

மாதேகேள் வருமுயிரோன் மாலாய்நாலில்
வந்திடவே கேந்திரமா யாட்சிஉச்சம்
கோதாய்கே ளுயிர்தனிலே ஆறேன்நிற்கக்
குளிர்மதிக்குக் கேந்திரத்தி லெட்டோன்கேதுஞ்
சீதமுடன் கருமன்மதி புகரஞ்சோனுஞ்
சேர்ந்திடவே அட்டமத்தைப் பொன்சேய்நோக்கில்
வேதன்விதிப்படியெனவே வயதுமேலோர்
விதித்தனர்கள் ஐம்பதுடன் ஒன்றுங்கூட்டே. (உகூ0)

காரியுயிர்க் கோளாகி நாலில்நீசங்
கருதிடவே அக்கோளன் மதியினோடும்
பாருயிர்க்கு யீராறில் மறையச்செம்பொன்
பஞ்சமத்திற் றனித்திடவே யெட்டோன்லாபம்
கூறியசந் திரன்றனக்கு யெட்டிற்கேது
குறிகிடவே கர்மமதிற் புகர்மால்நின்றால்
பாருயிர்விட் டேகிடுமே ஐம்பத்தெட்டிற்
பகர்ந்தனர்பொன் னவன்திசையில் மதிவந்துற்றால். ()

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் அக்கோள்தான் மதிக்காறாகி
நீதமதாய் மாலரவு காரியோடு
நின்றிடவே கரிவீட்டில் இரவிபொன்னும்
கோதாய்கே ளுயிர்தனிலே மதியேநிற்கக்
குசன்றனக்கு நாலினிலே கொடியோன்சேர்ந்தால்
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
விதித்தனர்கள் அன்பதுநால் பிலமென்றேதே. (உசுஉ)

வேறு.

அட்டமன்குருவாய் அரவுடன்செவ்வாய் ஆறினிற் புகரின்வீடாகத், திட்டமாயக்கோ ளுபிரின்கோளாகிச் சேர்ந்திடக் காரிவீடதனிற், சட்டமாய்க்காரி இரண்டினிற்றனிக்கச் சசிமகனிரவிஒன்பதனில், திட்டமாய்வரினும் ஆயுளுந்தீர்க்கஞ் செப்பினு ரன்பதெட்டாக. (உசுங)

அன்பதுமெட்டாய் அறைந்திடுஞ்சேய்க்கு அந்தணன்வீட்டினில்மதியால், இன்பமாய்க்குளிக னிருந்திடவுயிரில் யெய்திடும் வளர்த்தியன்கறுப்பன், அன்பனுயிருப்பன் யாவர்க்குஞ்சுமுகன் அருள்பெரும் வித்தையிற்பிரியன், துன்பமில்மனத்தன் சோர்விலாத்தனமுஞ் சொல்லினுர்பெரியோர்தாமே. (உசுங)

சந்திரன்நாலோன்அரவுடன்கூடித் தரித்திடக்குருவின்வீடாகி, வந்திடஅக்கோள் வாக்கினில்மருவ லக்கிரன் இரவிமால்மறையச், சொந்தமாயெட்டோன் காரியாயஞ்சிற் றேன்றிட வந்தசாதகற்கு, முந்தவேஆயுள் மாலவன்முதலாய் முடிந்திடுஞ் சேய்திசை வரையில். (உசுரு)

வேறு.

கும்பலக் கினமேதோன்றக் குசலஞ்சி லுயிரிற்காரி
அம்புலி இரவிபொன்னும் அமர்ந்திட நாலதாக
நம்பிய புகரோன்வாக்கில் நண்ணிடச் சிகிமால்மூன்றாய்
வம்பிலாத் துலாத்தில்ராகும் வந்திடக் குளிகன்சொல்வேன். ()

சொல்வது காரிவீடாய்த் தோன்றிட வருஞ்சேயாயுள்
வெல்வது இரண்டோன்நாலில் விதித்தன ரைம்பத்தொன்றாய்
அல்லலின் மனத்தன்காமி அரசரால் முயற்சியுள்ளோன்
நல்லவன் கற்பான்வித்தை நங்கையால் வாழ்வுமுண்டாம். (உகூஎ)

வேறு.

அட்டமன்மதியுங் கேதுடன்ஆறி லமர்ந்திடப் புகருடன்அரவுந், திட்டமாயுயிர்க்கு மறைந்திடச்செவ்வாய்தினகரன்மாலுடனுயிரில், சட்டமாய்க்குருவும் வாக்கினில்மருவச்சனிமகன்லாபமாய்வரினும், மட்டிலாவயது அறுபதுஒன்றில் மாய்ந்திடு மெனச்சிலர் மொழிந்தார். (உகூஅ)

அட்டமனிரவு காரிவீடதனி லந்தண னுயிர்க்குயிராறிர்,திட்டமாய்க்காரி தனித்திடநாலிற் சேய்புகர் வாக்கினில்மருவச்,சட்டமாய்மதியு மாந்தியும்பத்திற் சார்ந்திடசேமாய்வரினும்,திட்டமாம் வயது ஐம்பதுரெண்டாய்ச் சேர்ந்திடுந் திங்களாறாகும். (உகூகூ)

அட்டமனுயிரி லமர்ந்திடஅக்கோள் அருணனும் வாக்கினில் மருவத், திட்டமாய்ப்புகர்சேய் காரிகேதுடனே திங்கள்நா லதனிலேசேரச், சட்டமாய்ராகும் மாந்தியுந்தகரில் சார்ந்திடப் பிறந்த சாதகற்கு, மட்டிலாவயது சேய்திசைபுகர்நாள் மரணமென் றுரைத்தனர்பெரியோர். (உஎ0)

வேறு.

மதியுடனே உயிரோனும் அரவுமொன்றாய்
மங்கைத்தா னத்தில்வர அக்கோள் கேதும்
விதியுடனே உயிர்தனிலே விளங்கக்காரி
வேதியனுக் கொன்பதனில் இரவிமாலும்
பதியுடனே கரிவீடாய் லாபமாகப்
பாக்கியனும் பன்னிரண்டிற் பதியேஆட்சி

சதியுடன்மூன் றினில்மாந்தி சாய்ந்தசேய்க்குத்
தரணிதனில் ஆயுள்விதி சாற்றக்கேளே. (உஎக)

சாற்றினேங் குருதிசைநாள் முதலேசுங்கன்
சாருதிசை வரைஅதனிற் கரிமாலூணில்
வேற்றுமையாய் அரைமுதுரு சிரசில்வேதை
விளங்கிய்தூற் பீடையினால் மரணஞ்சொன்னோம்
பார்த்திபனு மழகுடையான் அனைவோர்க்கன்பன்
பகர்ந்தனர்நல் லறிவுடையன் பாகைமோகன்
கோத்திரம்நல் வழியாகுஞ் கொடுரசிந்தை
கோபியன்பின் தயவுடைய குணமுள்ளானே. (உஎஉ)

வேறு.

குணமுள்ள வளர்த்தியனும் பொதுநிறமுமாவன்
கோதையர்மேற் பிரியமுளன் போகபோக்கியனும்
மணமுள்ளான் புதன்திசையில் ஒன்றுங்கேது
வாய்த்திடுநாள் புகர்ஒன்றும் மங்களமும்ரெண்டாம்
இனமில்லாத்திரிமோகன் இங்கிதவஞ்சகனும்
யெய்திடுமாலவன்திசையில் யேந்திளமேற்பகையாய்த்
தனமுடையதாசியிடம் சாந்திடுவன்முயற்சி
தருசமனுய்ப்பலனுதவுஞ் சாற்றினேங்கேளே. (உஎங)

தருசமனுய் வரும்வயது நாற்பத்தஞ்சினின்மேல்
சகடவா கனமுடனே சார்ந்திடும் நல்யோகம்
வருமுயற்சி சத்திரிய சாதியிடமாக
வடகீழின் திசையதனில் வாய்த்திடுமே பிலமாய்ச்
சுருதிமறை ஆகமநூற் படியாகச்சொன்னோம்
தோன்றிடுமே கிரகமொன்று சொல்வயதன்பதிலே
திருவளரும் புகர்திசையிற் சிவிகைவாகனமுஞ்
சேர்ந்திடுமே பாற்பாக்கியஞ் செப்பினேம்பூமி. (உஎச)

வேறு.

அட்டமனிரவி பாக்கியமதனில் அமர்ந்திடக் குருகரிகேதுந்,
திட்டமாய்க்கர்ம கேந்திரமதனிற் சேர்ந்திட யேழின்கோள்நீசஞ்
சட்டமாயுயிரோன் யேழினிற்சேரச் சந்திரன் வாக்கினிற் றரித்தா

ல், திட்டமாயுயிரில் மாந்தியுந்தனிக்கத் திறமுடன் அரவுநாள் வந்தால். (உஎடு)

வந்திடுஞ்சேய்க்குப் புகர்திசைமுதலாய் வளர்ந்திடுங் குருதிசைமால்நாள், தந்திடுமரணம் தீர்க்கமாம்ஆயுள் சாற்றினர் புகர்திசைமால்நாள்,சொந்தமாய்மனைவிதோன்றிடுமனமாய்ச்சொல்லினர் கணித்தாலதனால், விந்தையாய்வளர்த்தி சமமுடன்றிறமாய் விளங்குவன்வித்தையால்மேன்மை. (உஎகூ)

மேன்மையி லதிகன் பாடிடும்வாக்கன்வேந்தராற்பிரியமுள்ளவனும், நேமமாய்ப் பெரியோர்யாவர்க்கும்பிரியன்நெஞ்சினிற்கோபியாம்வஞ்சன், தாமிதகுணத்தன் சகலவல்லவனுந் தயிரியன் போகபோக்கியனும், ஆண்மையால்மூர்க்கன் அரசரால்மேன்மை அறிவெலாந்தெரிந்திட வல்லன். (உஎஎ)

அட்டமன்மாலாய்க் கருமனுஞ்சசிவீடமர்ந்திடக்குருகரிகேதுந், திட்டமாயுயிர்க்குக் கருமகேந்திரத்திற்சேர்ந்திடயுயிரின்கோளேழிற், சட்டமாய்க்காரி வீட்டினிலரவுந் தனித்திடப் பிறந்திடுஞ்சேய்க்குத், திட்டமாய்வயது ஆறுபத்திரண்டாய்ச் செப்பினர் பெரியவர்தாமே. (உஎஅ)

செப்பினர்பெரியோ ராறுபத்திரண்டிற் சேதமில் பீடையால்விடுகில், தப்பிதமில்லாக் குருவினில்மாலோன் சார்ந்திடில் மரணமுமுடையன், மெய்ப்புடன்யேழோன் திசையினிலாவு மேவிடிற்பிதாவுடன்கர்மம், செப்பினர்வாக்கில் மதியுமேயிருந்தாற் றெளிந்திடும் வித்தைவல்லவனும். (உஎகூ)

அட்டமன்குருவா யுயிரின்கோளுடனே யஞ்சினிலமர்ந்திடக் கருமன், திட்டமாயுயிர்க்கு யேழினிற் றனிக்கத் திங்களும்ராகுடன்பத்திற், சட்டமாயிரவிமாலவன்கேதும் சார்ந்திட நாலிற்கேந்திரமாய்த், திட்டமாயுதிக்குஞ் சாதகன்றனக்குத் திறமுட னறுபதோர்வயது. (உஅ0)

சாதகன்றனக்கு வுபிரினில்மாந்தி சார்ந்திடப் பிறந்திடுஞ்சேய்க்கு, வேதமாய்வளர்த்தி சமநிறமுடையன் வித்தைமூன்றுடைய

வன்கோபி, போதவேபூமி க்ஷேத்திரமுடையன் புண்ணிய மனமு ளான்கபடன், சீதமாய்நயத்தன் காமியன்மயக்கன்சேவகத்தொழி லினில்வல்லன். (உஅக)

வல்லவன் தீர்க்கன் வழக்கினில்வல்லன்வாய்த்திடும்வாணிபம் பூமி, அல்லலைநினைத்தன் ஆசையாற்போகி அழகுமே அற்பமுமு டையன், தொல்லையில்மனத்தன் தோத்திரப்பிரியன் சுகமுளான் ச கடவாகனமாம், நல்லவ னரசர் தயவினால்முயற்சி நாடுவன்காரிநா ள்முதலாய். (உஅஉ)

அட்டமாதிபனுங் காரியுமுபிரோன் அஞ்சினோன் தானுமொ ன்றாகத், திட்டமாய்வளருங் கேந்திரம்வருமாற் சேரிடம்உச்சமாட் சியினால், சட்டமாயுதிக்குஞ் சாதகன்றனக்குச்சதிருடன்பெண்பத் தஞ்சாயுள், அட்டமாதிபனுங் காரியுமறைந்தா லன்பத்தஞ்சாயுளா ய்வகுத்தார். (உஅங)

அஞ்சினோன்உயிரோன் மறைந்திடப்பகையாய் ஆரல்மால் சூரியன் வீடால், தஞ்சமாயெட்டோன்நீலனும்பகையாய்ச் சார்ந்தி டப் பாவர்வீடானால், மிஞ்சவேபிறக்குஞ் சாதகன்மரணம் விதித் தனர் பத்துஅஞ்சதனில், துஞ்சிடுமென்று கணிதநூல்விதியாற் றோன்றிடுஞ் சாதகன்பலனே. (உஅச)

வேறு.

அட்டமந் தன்னிற்செவ்வாய் அமர்ந்திட அதற்குநாதன்
திட்டமா யுபிரோனுகிச் சேரிடந் தனிப்பானுகிற்
சட்டமாய்க் கரியும்பத்தில் தனித்திடுஞ் சாதகற்குத்
திட்டமாய் யெழுபத்தொன்றாய்த் திரமுடன் வயதென்றோதே. ()

எட்டினோன் உயிர்க்குள்ளோனு மிரவியு மீரஞ்சோனும்
சட்டமாய் மதிவீடேகித் தரித்திடப் பாவர்நோக்க
அட்டமந் தன்னிற்காரி அமர்ந்திடச் சுபர்வீடானால்
திட்டமாயெழுபத்தெட்டாய்த் திரமுடன் வயதென்றோதே. ()

ஓதுபிர் தனக்குயெட்டி லுயர்வுடன் காரியோடு
போதவே தீக்கோள்மேவப் பொருந்திடுஞ் சாதகற்கு
நீதமா யெழுபத்தஞ்சாய் நிச்சய முரைக்கலாகும்
வேதமா யுபிரோன்காரி விளங்குமோரில்லமானால். (உஅஎ)

வேதமா யுதிக்குஞ்சேய்க்கு விதித்தனர் அறுபத்தேழு
நீதமா யிருப்பனென்று நிச்சய முரைக்கலாகும்
ஓதுயிர்க் காரிசுங்கன் உயிர்தனக் கீராறுனல்
சாதகன் வயதைநூலோர் சாற்றினர் முப்பத்தொன்றாய். (உஅஅ)

மதிமகன் உயிரோனுகி வக்கிர னேடுசேர்ந்து
சதியுடன் சுபர்வீடாகித் தரித்திட மறையாதாசில்
விதியுடன் காவிஅஞ்சோன் விளங்குகேந் திரமேயானல்
பதிதனிற் பிறக்குஞ்சேய்க்குப் பகர்வய தறுபத்தஞ்சே. (உஅகூ)

அறுபது அஞ்சுசொல்வேன் அஞ்சினேன் காரியோடு
வெருவுடன் பாவர்சேர்ந்தால் விதித்தனர் அறுபதாகும்
மருவிலா திருப்பன்மாதே மதித்தனா கணிதவாக்கால்
கருவுட னுரல்சேர்ந்தாற் கருத்துடன் நாற்பத்தொன்றே. (உகூ0)

அட்டமா திபனுங்கேதும் அம்புலி வீட்டிலேகத்
திட்டமா யுயிரிற்காரி சேர்ந்திடச் சுபர்சளோடு
நிட்டைமால் பரிதிபொன்னன் நின்றிடஞ் சுபர்வீடானல்
சட்டமா யெழுபத்தொன்றும் சதிருடன் வயதென்றேதே. ()

ஓதுயிர் தனக்குஅஞ்சில் உயர்வுடன் மதிபாம்பானல்
வேதமாய் அறுபத்தஞ்சாய்விதித்தனர் தரணிமீதே
நீதமாயிருப்பனென்று நிச்சய முரைக்கலாகுங்
போதவே பஞ்சமத்திற் பொன்னவன் வருவதானல். (உகூஉ)

வருவது வயதுநாசம் வகுத்தனர் அறுபத்தொன்று
தருமுயிர்க் கஞ்சில்மால்பொன் தரித்திட வளருஞ்சேய்க்குச்
சுருதியா யிருபத்தொன்றில் துணிவுடன் நாசங்காட்டும்
உறுதியே யென்றுமேலோர் ஓதினர் கணிதநூலால். (உகூங)

அட்டமந் தன்னிற்பாம்பு அமர்ந்திட அதற்குநாதன்
திட்டமா யுயிரோனுகிச்சேரிடஞ் சுபர்வீடாகச்
சட்டமாய்க் காரிகேது சாரிடம் புகர்வீடானல்
திட்டமாய் அறுபத்தெட்டாய்த் திரமுடன் வயதென்றேதே ()

வேறு.

அட்டமாதிபனு மருக்கனுங்கேது மஞ்சினேன் ருனுமொன் ருகத், திட்டமாயிறைவன் வீட்டினிற்றரிக்கத் திறமுடன் காரியு முயிரோன், சட்டமாய்வளருங் கேந்திரமாகிச் சாரிடம்சுபர்கள்வீ டானுற், றிட்டமாயுதிக்குஞ் சாதகன்வயது திறமுடன் அறுபது நாலே. (உகூரு)

வேறு.

மாலவன் குருவீடேக மந்திரி பிலமாவானுல்
நீலனும் மதியுமொன்ருய் நின்றிடஞ் சுபர்வீடானுல்
சாலவே அட்டமத்தோன் தனித்திட அஞ்சொன்பானுல்
தூலமாய் அறுபத்தொன்ருய்த் துனிவுடன் வயதென்ருேதே. ()

ஓதுயிர் தனக்குஅஞ்சில் வுயர்வுடன் தீக்கோள்மேவச்
சேதமென் றுரைத்தாரஞ்சு செப்பினுர் கணிதநூலோர்
வேதமா யுயிர்க்குயெட்டில் வெய்யவன் வருவதானுல்
ஓதிடும் வயதுஅன்பத் தொன்பதென் றுரைக்கலாகும். (உகூரு)

கரியவன் குருவீடேகத் கலைமறை உயிரிற்ருேன்ற
வருமெட்டோ னேமோன்பத்தோன் மால்புகர் யில்லஞ்சேரத்
தருமுயிர்க் கஞ்சினுதன் சற்குருபுகரிலானுல்
பெருமறு பதின்மேலெட்டுப் பேணிடும் வய்தென்ருேதே. (உகூஅ)

அட்டமந் தன்னிற்சேயும் அமர்ந்திட அதற்குநாதன்
திட்டமா யுயிரோனுகிச் சேரிட மதனிலாகச்
சட்டமாய்க் காரிஅஞ்சோன் சாரிடமீராருனுல்
திட்டமாய் முப்பத்தெட்டாய்த் திறமுடன்வயதென்ருேதே. ()

வேறு.

கரியவனுச்சமாட்சியதாகக்கருமத்தோன் புகர்மறைமாலாம், வருமெட்டுக்குடையோன் உயிர்க்குளோன்ருனும் வளருகேந்தி ரத்தினிலிருந்தால், அறுபதுபத்து அஞ்சுநாலொன்றி லழிவிலாதி ருப்பனென்றுரைத்தார், வருமுயிர்மறைந்தால் மதித்தனர்வயது மாய்ந்திடு முப்பதுதள்ளே. (ரூ00)

அட்டமாதிபனும் ஆரனுமுயிரோன் அமர்ந்திட அட்டமந் தன்னில், திட்டமாயஞ்சோன் காரியுந் துளிகன் சேரிடம் சுபர்கள்

வீடாகச், சட்டமாய்மதியும் மந்தன்வீடதனிற் றனித்திடுஞ் சாதக
ன்றனக்குத், திட்டமாய் வயது ஐம்பதுநாலாய்ச் செப்பினர் கணி
தநூலாய்ந்தோர். (ரூ0க)

அட்டமாதிபனு முடவனுயெட்டி லமர்ந்திட ஆட்சி நட்பாக
த், திட்டமாயுயிரோன் உதயகேந்திரத்திற் சேர்ந்திட முன்பினும்
பாவர், சட்டமாயிருக்கக் கருமனுமதியுஞ் சார்ந்திட அஞ்சினேன்
மறைந்தாற், றிட்டமாயுதிக்குஞ் சேயவன்றனக்குத் திறமுடன்
அன்பத்தோரெட்டாம். (ரூ0உ)

துலாத்தினில்மதியு மாந்தியுமுயிராய்த் தோன்றிட யெட்டின்
கோள்நீசம், பிலத்துடன்வெய்யோன் மாலவன்கூடி பிருகுடன் ம
றைந்திடயிரார், கலக்கமில்லாத காரியும்பத்தில் கருதியவாக்கினிற்
கொடியோன், பிலக்கவேவரினும் ஆயுளுந்தீர்க்கம் பேசினரொன்
பதோரெட்டு. (ரூ0ரு)

அட்டமாதிபனும் அட்டமந்தன்னி லமர்ந்திட ஆட்சிநட்பா
கத், திட்டமாயுயிரோன் உதயகேந்திரத்திற் சேர்ந்திட முன்பி
னுஞ் சுபர்கள், சட்டமாயிருக்கக் காரியுமாட்சி சார்ந்திட அஞ்சி
னேன்பிலமாய்த், திட்டமாயுதிக்குஞ் சாதகன் வயது செப்பினர்
யெண்பத்தெட்டாக. (ரூ0ச)

வேறு.

மதிதனக்குக் கேந்திரத்தில் உயிர்கருமன்நிற்க
மந்தனுக்கு யேழதனில் மாலவன்சேய் கேதும்
நிதிக்குடைய சேய்தனக்கு யேழதனிலரவு
நின்றிடவே மாந்தியுடன் மாலவன்வீடானல்
துதிபெருகு மிரவிமதி காரிவீடதனிற்
றோன்றிடவே வருஞ்சேய்க்குத் தொல்வயதீரேழிற்
கெதிபெறவே யிருந்திடுவன் கேசரியாம்யோகன்
கீர்த்தியினர் மேன்மைபெரு சன்யாசியிவனே. (ரூ0டு)

வேறு.

அட்டமாதிபனும் பாவர்களுடனே அருணன்வீடதனிலேசே
ரத், திட்டமாயுயிரோன் காரியோடேகிச் சேரிடஞ் சுபர்கள் டா

கச். சட்டமாய்மதியு முயிர்தனக்கஞ்சில் தனித்திடுஞ் சாதகன்றன
க்குத், திட்டமாய்வயது அறுபத்தஞ்சாகச் செப்பினார்கணிதநூலா
ய்ந்தோர். (ரூoசு)

வேறு.

அட்டமந் தன்னிற்செவ்வாய் அமர்ந்திட அருக்கனோடு
திட்டமாய் அதற்குநாதன் சேர்ந்திடச் சுபர்கள்வீடால்
சட்டமாய் யுபிரோன்றானுந் தனித்திட மதிவீடானால்
திட்டமாய் யுதிக்குஞ்சேய்க்குத் திறமுட னறுபத்தெட்டே. ()

அட்டமாதிபனுங் கேதுடன்கூடி அருணன்வீ டதனிலேசேர
த், திட்டமாயுபிரோன் காரியோடேகிச் சேர்ந்திடப்பாவர்கள்வீட்
டிற், சட்டமாய் அஞ்சோன் சொந்தவீடதனிற் றனித்திடப்பாவர்
கள் நோக்கத், திட்டமாய்வயது அறுபதுயேழாய்ச் செப்பினார்
சாதகன்றனக்கு. (ரூoஅ)

சாதகன்றனக்கு மேலவர்மொழியாற் சாற்றினார் கணிதநூல்
விதியால், நீதமாயுயிர்க்கு அட்டமமதனில் நேர்ந்திட ஆரல்சூரிய
னால், வேதமாயுபிரிற் பாம்புடனுதிக்க விதித்தன ரறுபதுயேழிற்,
சேதமென் றுரைத்தார் பத்துடன்ரெண்டு செப்பினார்கணிதநூலா
ய்ந்தோர். (ரூoகூ)

அட்டமாதிபனு மந்தனுமுயிரோன் அஞ்சினோன் றானுமொ
ன்றாகித், திட்டமாய்ப்பாவர் வீடதில்மறைந்து சேர்ந்திடப் பாவர்
கள்நோக்க, நிட்டைமால் வீட்டிற் பாம்புடன்சுபராய் நின்றிடுஞ்சா
தகன்றனக்குத், திட்டமாய்மரணம் பத்துடனஞ்சாய் செப்பினார்
கணிதநூலாய்ந்தோர். (ரூகo)

அட்டமாதிபனும் மாலுடன்கூடி அமர்ந்திட உதயகேந்திரத்
தில், சட்டமாயுபிரோன் மந்தனோடேகச் சாரிட மந்தன்வீடாகத்,
திட்டமாயஞ்சோன்பத்தினோ னொன்றாய்ச் சேர்ந்திடப்பொன்னவ
ன்வீட்டிற், சட்டமாயுதிக்குஞ் சேயவன்றனக்குச் சாற்றினா ரன்ப
து வயதாய். (ரூகக)

அட்டமாதிபனுஞ் சூரியனுடனே அமர்ந்திட அட்டமந்தன்
னிற், றிட்டமாயஞ்சோன் காரியுமுயிரோன்சேருமோரில்லமேயா

னுல், கிட்டைமால்வீட்டிற் பாவர்கள்சேரநின்றிடுஞ்சாதகன்றனக்குச், சட்டமாய்வயது யிருபத்தஞ்சாகச் சாற்றினுர்க்ணிதநூலாய்ந்தோர். (ருகஉ)

வேறு.

மாலவன் குருதிபொன்னன் வருமுயி ரோனுமொன்ருய்ச்
சாலவே உயிர்க்கிராறிற் றறித்திடப் பாவர்வீடால்
ஏலவே காரியுச்சம் யிருந்திடுஞ் சாதகற்குத்
தூலமாய் அஞ்சுஒன்றிற் றுணிவுடன் மரணங்காட்டும். (ருகரு)

வேறு.

மீனமாய்த்தோன்றி லக்கினமுதிப்ப விளங்கிய லக்கினநாதன் ஆனதோர்மந்தன் அஞ்சுயெட்டோனும் அமர்ந்திட வுதையகேந்திரத்தால். பானுவுங்குருதி பாம்புடன்கூடிப் பார்க்கவ னில்லமாய்வருமால், சாதகிதனக்கு யெழுபதுயெட்டாய்ச் சாற்றினுர் கணிதநூலாய்ந்தோர். (ருகச)

வேறு.

அட்டமந்தன்னிற் பொன்ன னமர்ந்திடச் சுபர்வீடாகத்
திட்டமா யுயிரோன்காரி சேருமோரில்லமானுல்
சட்டமாய் மதியுமந்தன் சாரிடமீராருனுல்
திட்டமா யுதிக்குஞ்சேய்க்குத் திறமுடன் முப்பத்தொன்றே. ()

வேறு.

காரியவன் யீராருகக் கலைமறை யுதனிற்சேர
வருமுயிர் சுபரேயாக வந்திட அட்டமத்தில்
தருமுயிர்க் கஞ்சினுதன் சற்குரு மாலேயானுல்
பெருதுடன் வயதுமுப்பத் தஞ்சுடன் ஒன்றேயாகும்.(ருகசு)

வேறு.

அட்டமாதிபனுங் காரியுமுயிரோன் அஞ்சினேன்பத்துமூன்ருேனுக், திட்டாமாயிக்கோள் ஒன்றுநாலேழிற் சேர்ந்திட யில்லமொன்ருனுல், சட்டமாய்ப்பிறக்குஞ் சாதகன்றனக்குச் சதிருடன் யெழுபதோர்வயது, அட்டமந்தன்னிற் பாம்புசேயுற்ருல் ஐயஞ்சுரெட்டிப்பதாயுள். (ருகஎ)

அட்டமாதிபனுங் காரியுமுயிரோன் அஞ்சினேனீரஞ்சோனருக்கன், திட்டமாயிக்கோ ளில்லமொன்ருகச்சேர்ந்திடமறைவிலா

தாகிற். சட்டமாயுதிக்குஞ் சாதகன்றனக்குச் சாற்றினு ரெழுபதா ய்வயது, அட்டமந்தன்னிலே தீயகோள்வந்தால் அறுபத்தாமென வாயுள் (ருகஅ)

குருவுடன்கேதும் புகருடவீட்டிற் கூடியே மறைந்திடயெட் டாய். வருமுயிர்தனக்கு யெட்டின்கோள்சேயும் மறைந்திடஅருக் கன்வீடாகத். தருமுயிர்தனக்கு யேழினிலாரேன் றன்னுடன் மா லவன்றருக. மருவுடன்காரி ஒன்பதிற் றனிக்க மாய்ந்திடு மெழுப தஞ்சினிலே. (ருகரு)

குருவுடன்புகரு மதியுமாலோடு கூடியோ ரில்லமேயாக,வரு முயிர்தனக்கு யேழுஆறதனில் வந்திடக்காரியுமறைந்தால், தருமு யிர்தனிலே ஆறல்சூரியனுற் சார்ந்திடப் பிறந்திடுஞ்சேய்க்கு,மருவு மூன்றாக வந்திடவயது வகுத்தன ரஞ்சுபத்தேழாய். (ருஉ0)

காரிமால்குளிகன் சூரியன்புகருங்கதிரவன்வீட்டினில்வருகக் கோரினுலேழி லஞ்சினேன்வருகக் குருதியு மவருடனுனல், காரி யோனுளில் சூரியன்வந்தாற் கருத்துடன் மரணமென்றுறைத்தார், நாரியிக்கோட்கள் யில்லமூன்றுனல் நவின்றனர்நாலுஅஞ்சாயுள்.()

வேறு.

மாலவன் குருவீடேகமந்திரி நீசமாக
நீலனு மதனிற்சேரநெடியகோ ளுயிரிலாகச்
சாலவே யெட்டோனஞ்சிற் றரித்திடுஞ் சாதகற்குத்
தூலமாய்ப் பதினெட்டானுற் றுணிவுடன் மரணங்காட்டும்.

வேறு.

பீதகன்மால் சேய்புகரும் சூரியன்வீடேகிப்
பின்முன்னுஞ் சுத்தமதாய்ப் பெரும்பாவர்நோக்கச்
சீதகமாய்க் காரியுயிர்தனிற்சேரப்பாவர்
தினகரனுந் திங்களுமோரில்லமதாய் வரினும்
சாதகன்றன் வயதுரையே யென்பதுமூன்றாகச்
சனிபரிதி யுடன்சேரிற் றரித்திடு மென்பதனுற்
பீதகன்மால் சேய்புகரும் மறைந்துபகைசேர்ந்தாற்
பெரும்வயதோ ரன்பத்தொன் றாய்மரணமாமே. (ருஉரு)

காரியுயிர்க் கேழாகக் கேந்திரமெய்திடினுங்
கருதுமஞ்சோன் யெட்டோனுங் கடும்பாவருடனே
வீரியமாய்ப் பவர்வீடாய்த் தரித்திடவே அக்கோள்
வெய்பவன்மால் சசிவீடால் விளங்கிடவே மறையோன்
கூருமதா யுடன்வரினுங் கோள்வயதோர்யேழுங்
குருதிதொகை யெனவுரைத்தார் கோள்வயதுமேலோர்
காரியுபிரோனோடு கடும்பாவர்வரினும்
கருத்துடனே அறுபதொன்றிற் காட்டுமெனமரணம். (ரு)

காரியுபிர் தனிற்சேரப் பவர்வீடாய்த்தொடுகில்,
கருதுமெட்டோ னஞ்சோனுங் காரியுடன்வருமால்
நாரிபிக்கோ ளாட்சியுச்சம் யெய்திடினும்வளரும்
நன்மதிக்கு மறையாமல் வருஞ்சேய்க்குவயது
கூருமதா யெழுபதொன்று உரைத்தனர்கள்பெரியோர்
கொடுமுக்கோள் மறைந்துபகை நீசம்வராதிடினும்
வீரியமாய் வருஞ்சேய்க்கு ஐம்பத்தொன்றாக
விளங்குமிக்கோ ளுடன்சுபராய் விதித்தன ரன்பதுவாம்.

வேறு.

மதிமகன்பரிதி உயிர்க்குளோ னுடனே வருமிடம் சுபர்மனை யாகச், சதியுடனெட்டோன் அஞ்சுநாலேழாய்த் தரித்திடப்பாவர் வீடாக, விதியுடன்காரி பாவரோடேகி விளங்கிட மால்மதிவீடால் பதிதனில்வயது அறுபதொன்றாகப் பகர்ந்தனர் சாதகன்றனக்கு.

அட்டமாதிபனும் புகருடனுபிரோன்அருணனுமில்லமொன் றாகத், திட்டமாய்ப்பரிதி வளருங்கேந்திரத்திற் சேர்ந்திடப் பாவ ருஞ்சுபருஞ், சட்டமாய்க்காரி யிரவிமால்வீடாய்த் தனித்திடுஞ்சா தகன்றனக்குத், திட்டமாய்வயது அறுபது நாலாய்ச் செப்பினர் கணிதநூலாய்ந்தோர். (ரு உஎ)

அட்டமாதிபனும் புகருடன்பரிதி அமர்ந்திடக்கேந்திரம்வரு மால், திட்டமாயுபிரோன் கொடியகோளுடனேசேரிடமுச்சமாட் சியினால், சட்டமாய்க்காரி சுபர்கள்வீடதனிற் றனித்திடப் பிறந்தி டுஞ்சேய்க்குத், திட்டமாய்வயது யெழுபத்தஞ்சாகச் செப்பினர் கணிதநூலாய்ந்தோர். (ரு உஅ)

சோதிடவகையா லஞ்சினேனுடனே துணிவுடன் பாம்புவந் துற்றால், நீதமாய் வயது அறுபத்தஞ்சாக நிச்சயமாமென வுரைத் தார், போதவேயெட்டோன் மறைந்திடுமானாற் பொன்றிடு மைம் பதோர்வயது சாதகன்றனக்கு வயதுயிப்படியே சாற்றினார்கணித நூல்விதியால். (௩௨௬)

வேறு.

அட்டமத்தோன் கரியோடுபவர்கள்சேர்ந்து அருணன்மதிக ரிவீடாய் அமைவதானால், திட்டமுடன் அஞ்சுபத்தோன் உயிரோ னோடு சேர்ந்து இக்கோள் சேய்வீடாய்த் தரிக்குமாகில், கட்டிடுந்த ன் வருமுயிர்க்குவயதுஒன்பான் கருத்துடனே அஞ்சுரெண்டு யிரு ப்பன்மாதோ, அட்டமத்தோன் காரியோடு சுபர்கள்சேர்ந்தால் அன்பதெட்டு நாற்பதென அழியுந்தேகம். (௩௩௦)

கரியவன் உயிரோன் புகருபாம்போடுகதிரவன் வீட்டினில்வ ருமால், சதியுடன்யெட்டோன் குருவுகேதுடனே சாரிடம் பவர்டி னையாகில், விதியுடனஞ்சோன் பாவர்களுடனே விளங்கிட யில்ல மொன்றானால், பதிதனில் வயது அறுபதொன்றுகப்பகர்ந்தனர்சா தகன்றனக்கே. (௩௩௧)

குருவுடன்காரி யெட்டுமஞ்சோனுங் குளிர்மதி வீட்டினில் வ ருமால், வருமுயிர்க்கோளன் பத்தினோனுடனே வளருகேந் திரந் தனில்வந்தால், தருமுயிர் சேய்க்குப் பத்துநால்ரெட்டி சாற்றினர் கெணிதநூலாய்ந்தோர், குருவுடன்காரியெட்டு அஞ்சோனுங்குரு வுசேய்வீட்டினில்வருமால். (௩௩௨)

வருமுயிர்சேய்க்கு வகுத்திட்டார் வயது மதித்தனர் முன்னு ரைபாதி, உறுதியென்றுரைத்தார் கணிதநூல்விதியா லோதிடுஞ் சாதகன்றனக்குத், தருமுயிர்க்கதிபன் பத்தினோன்றானுஞ்சாரிடம் மறைந்துபோயிருந்தால், குறிகிடும்வயது முன்னதிற்பாதி குறித் தனர் கணிதநூலாய்ந்தோர். (௩௩௩)

காரிமால்குருதி வெள்ளிபொன்னோடு கதிரவன் வீட்டினிலே க, நாரியிக்கோட்கள் தானமேசுத்தம் நல்மதி வீடுபாழானால், கூரி டவுதிக்குஞ் சாதகன்வயதோ குறித்தனர் பிருபத்தொன்றாகக், கா ரிமால்குருதி வெள்ளிபொன்னோடு காரிசேய் வீட்டினில் வந்தால்

வந்திடுமுயிர்க்கு வகுத்தனர்வயது மால்பரிவெள்ளி பொன் தொகையாந், தந்திடும்வயது பத்துஆறதனிற் சர்ப்பமாய்நெடுவி தத்தத்து, விந்தையாய்வருமாய் மாய்ந்திடுமெனவே விதித்தனர் கணிதநூலாய்ந்தோர், சிந்தையாய்வயது யிருபதாறதனிற் செத்தி டுந் தந்தையர்கருமம். (௩௩௫)

வேறு.

மாலவன் குருவீடேக மந்திரி மால்வீடாகச்
சாலவே யெட்டோன்காரி சாரிடம் பிலமாவானல்
எலவே உயிரோனஞ்சோ னிருந்திடம் பவர்வீடானல்
தூலமாய்வயதுமுப்பத் தஞ்சுடன் றொலையுந்தேகம். (௩௩௬)

வேறு.

அட்டமாதிபனுங் காரிபத்தோனும் அருணனுஞ்சூரியனென் றாய், நிட்டைமால்வீடாய்த் தரித்திடமறையால் * நிருபனுந்தானு மொன்றானல், திட்டமாய்வளருஞ் சாதகன்வயதைச் செப்பலா மெழுபத்தொன்றஞ்சாய், அட்டமாதிபனுங் காரிபத்தோனும் அருணனுஞ்சூரியன்மறைந்தால். (௩௩௭)

மறைந்திடவருமோ சாதகன்வயதை வகுத்தனர் முன்னுரை பாதி, குறைந்திடுமெனவே கணிதநூலாய்ந்தோர் குறித்தனரிப்ப டியாக, மறைந்திடுங்கோளோ டுயிரின்கோள்வந்தால் மாய்ந்திடும் நாலுயேழதனல், குறைந்திடுமெனவே மேலவர்மொழியால் குறி த்தனர்சாதகன்பலனே. (௩௩௮)

அட்டமாதிபனும் முதுமகனுயிரோன் அஞ்சுபத்தோனுமே ஒன்றாய்த், திட்டமாயுயிர்க்கு ஒன்றுநாலேழுஞ் சேரிடம்பவர்மனை யானல், சட்டமாயுதிக்குஞ் சாதகன்வயது சதிருடன்நாற்பதோ ரொன்று, அட்டமாதிபனு ந் முதுமகனென்றாய் அம்புலிவீட்டினி ல்வந்தால். (௩௩௯)

வந்திடுஞ்சேய்க்கு வகுத்தனர்வயது மால்பரி யானவன்றொ கையாய்த், தந்திடுமென்று கணிதநூல்விதியாற் சாற்றினரிப்பல

* நிருபன் லக்கினாதிபதி.

ஞகும், முந்தவேஉயிரோ னஞ்சுபத்தோனும் முதுமகன் வீட்டி னில்வருமால், விந்தையாய்வயது யெட்டு ஆறென்றாய் விதித்தனர் சாதகன்பலனே. (சுசo)

வேறு.

அட்டமத்திற் புகருடனே அருணனோடு அருக்கனுமே தான் கூடிச் சுபர்வீடாகத், திட்டமுடன் உயிர்க்கோளன் காரியோடுசே ரிடமே பிலமாக மறையாதாகில், நிட்டைபுரி கருமத்தோன்சுபரே யாகி நின்றயிடம் பிலமாக உதிப்பதானல், திட்டமுடன் றரணி தனிற் பிறக்குஞ்சேய்க்குத் திறமுடனே யெண்பதுநாள் வயதுசா ற்றே. (சுசக)

சாற்றிடவே கருமத்தோன் பகைநீசங்கள் சட்டாட்டந் தீக் கோட்களில்லமானல், ஏற்றமுடனுயிர்க்கதிபன் அரவமோடுஇருந் தயிடஞ் சுபர்வீடா யிருப்பதானல், மாற்றமுடன் முன்னுரைத்த வயதில்நாசம் மாயுமெனயிருபதுநால் வகுத்தார்மேலோர், தேற் றமுட னட்டமத்தோன் பகைநீசங்கள் சேருமிடந்தீக்கோட்களில் லமானல். (சுசஉ)

மாயுமெனப்பெரியோர்கள் மொழியென்றேதுமாய்ந்திடுமே முன்னுரைத்த வயதிற்பாதி, தேய்பிறையாய் உயிரோனுய்ப் பிற க்குஞ்சேய்க்குத் திறத்தப்பாய்ப்பதினுலி லிறப்பான்பாரு, தாய்வ ழியா லவன்றனக்கு மனவிசேருந் தந்தையர்தாய்கருமத்துக் குத வானப்பா, சாயகமே யுயிர்க்கதிபன் பிலத்தப்பானல் சாற்றலாந் தரணிதனி லிறப்பான்மாதே. (சுசங)

வேறு.

அட்டமாதிபனும் அருணனும்பொன்னு மாறினேன் றானு மொன்றாகத், திட்டமாயுயிர்க்கு ஒன்றுநாலேழிற் றிடமுடன் பத் தினில்வருமால், சட்டமாயுயிரோன் காரியுமஞ்சோன் சாரிடம்பா வர்வீடானல், திட்டமாயுதிக்குஞ் சாதகன்வயதோர் செப்பினுர் முப்பத்தொன்றதனல். (சுசச)

வேறு.

அட்டமா திபனும்பொன்னு மருணனுங் குசன்வீடேகத்
திட்டமா யுயிரோன்காரி சேரிடம் பிலமாவானல்

சட்டமாய் மதியஞ்சோனுஞ் சாரிடம் மறையாதானால்
திட்டமா யறுபத்தேழாய்ச் செப்பிடும் வயதென்றேதே. ()

ஓதிடு மஞ்சோனோடு உயிர்க்கடுங் கோட்கள்சேர்ந்தால்
சேதமென் றுரைத்தாரெட்டு செப்பிடுந்தரணிமீதே
நீதமா யுயிராமென்று நிச்சய முரைக்கலாகும்
வேதமாய்ச் சேய்வந்துற்றால் விதித்தனரஞ்சுதள்ளே. (௩௪௬)

வேறு.

அட்டமாதிபனும் அருணனும்புகரும் அம்புலிதாரிசேயோடு
திட்டமா யுயிர்க்குமூன்று ஆறெட்டிற்சேரவேபன்னிரண்டானால்,
சட்டமாயுதிக்குஞ்சாதகன்வயதோர்சாற்றினான்பத்தொன்றஞ்சா
யட்டமாதிபனு மருணனும்புகரும் அம்புலிகாரிசேய் மறையால்.

மறைவிலாதாகில் வந்திடுஞ்சேய்க்கு வகுத்தனர் ஆயுளைமதிக்
கக், குறைவிலாதிருப்பன் குடும்பயோக்கியனுங் குறித்தனரெண்ப
தொன்வயதோர், முறையுடன்கணித்தார் வயதுதன்விதியை முடி
த்தனர் மரணநாள்வரைக்கும், மறையவன் வழியாற்செல்வம் வந்
துதிக்கும் மதித்தனர் கணிதநூலாய்ந்தோர். (௩௪௮)

வேறு.

கரியவன் குசன்வீடேகக் கலைமறை புகர்சேயோடு
வருமுயிர் தனக்கு அஞ்சில் வந்திடச் சுபர்வீடாகத்
தருமுயிர்க் கதிபனெட்டோன் சாரிடம்பவர்வீடானால்
வருமுயிர் சேய்க்குமுப்பத் தஞ்சுடன் வயதென்றேதே. (௩௪௯)

காரிமா லிரவிபொன்னன் கருதுயிர்க் கோளனோடு
சூரியன் வீட்டிற்சேரச் சுபர்களே முன்பின்றேன்றக்
கூறுமாறெட்டோனஞ்சிற் குறுகிடந் தனிப்பானாகில்
காரிமால் தொகையால்மேலோர் கருதினர் வயதென்றேதே. ()

அட்டமாதிபனுங் காரிகேதோடு அமர்ந்திடக் காரிகேந்திரமால்
திட்டமாயுயிரோன் மால்புகருடனே சேரிடம்மறைவிலாதாகில்
மட்டுவார்குழலேசாதகன்வயதை வகுத்தனர்மேலவர்மொழியால்
திட்டமாயுரைக்கஅன்பதுநாலாய்செப்பிடுங்கணிதநூலாய்ந்தோர்.

மதிமகனுயிர்க்கோளோடு வருமிடம் மறையாதாகிற்
சதியுடன் காரியெட்டோன் சாரிடஞ் சுபர்வீடானல்
விதியுடன் உயிரிற்பாவர் விளங்கிடத் தனிப்பதானற்
பதிதனிற் பிறக்குஞ்சேய்க்குப் பகராயுள் முப்பத்தொன்றே. ()

அட்டமா திபனுங்கேதும் அருணன்வீ டதனிற்கூடத்
திட்டமா யுயிரோன்சாரி திங்களும் நட்பதானல்
கட்டிடுங் குருதிபொன்னன் கதிரவன்வீட்டிற்போனல்
சட்டமாய்ப் பிறக்குஞ்சேய்க்குச் சாற்றினு ரறுபத்தேழாய். ()

கரியவன் கதிர்வீடேகக் கதிரவன்பிலமாவானல்
வருமுயிர்க் கோளன்றுனும் வருமிட மறையாதாகிற்
சதியுடன் பாம்போடாகிற் சார்ந்திட மறைவதானற்
றுரிதமாய் நாற்பத்தாறுய்த் துணிவுடன் வயதென்றேதே. ()

மந்தனும மால்வீடேக மாலவன் மறைவீடாகப்
புந்திவீ டதனிலெட்டோன் பொருந்திடத் தனிப்பானுகிற்
சிந்தையா யுயிர்க்கோள்தானுஞ் சேரிடமறையாதாகில்
வந்துயிர் புகர்மாலாரல் மதிதொகை தயதென்றேதே. (௩௫௫)

அட்டமா திபனுங்கேதும் அருணனும் ஓர்வீடாகத்
திட்டமா யுயிரிற்காரி சேர்ந்திடந் தனிப்பானுகிற்
சட்டமா யஞ்சின்கோளுந் தரித்திட மால்வீடாகத்
திட்டமாய் வயதுஅஞ்சாய்ச் செப்பிடுஞ்சாதகற்கே. (௩௫௬)

அட்டமந்தன்னில்வெள்ளி அமர்ந்திடப்பவர்வீடாகத்
திட்டமாயுயிர்க்கோள்காரி சேர்ந்திடப்புகர்வீடுற்றால்
கட்டிடுமாரல்தானுங் கதிரவன் வீட்டில்வந்தாற்
சட்டமாய் வயதுநாலாய்ச் சாற்றிடுங்கணிதநூலே. (௩௫௭)

மிதுனலக் கினமேதோன்ற வெய்யவன் றுனுஞ்சுங்கன்
சதியுடன் மறையாதாகிற் சாரிடந் தானநாதன்
மதியுடனில்லஞ்சேர மந்திரி மாந்தியாம்பு
விதியுடன் ஒன்றுய்ச்சேர விளங்கிட அட்டமத்தில். (௩௫௮)

அட்டமந்தன்னிற் செவ்வாய் அமர்ந்திட அதனிற்கேது
திட்டமா யதற்குநாதன் சேரிடஞ்சுபர் வீடானுற்
சட்டமாயுதிக்குங் கோதை தரணியில் வயதுசாற்றத்
திட்டமா யெழுபத்தொன்று திறமுட னிருக்குமாதே. (௩௫௯)

வேறு.

அட்டமாதிபனும் வளருகேந்திரத்தி லமர்ந்திடப் பவரிருந்தி டுகில், திட்டமாயுயிரோன் கொடும்பவருடனே சேரிடமறைவிலா தாகில், நிட்டைமா லுடனே காரியுங்கூடிநின்றிடமறைந்திடாதாஞ் ல், சட்டமாய்ப்பிறக்குஞ் சேய்க்குமேவயது சதிருடன் நாற்பது வாமே. (௩௬௦)

வேறு.

மதிமகன் புகர்வீடேக மந்தனும் பிறைவீடாகச்
சதியுடன் மதிசேயோடு சாரிடஞ் சனிவீடாக
விதியுட னுயிர்க்குநாதன் வெய்யவன் மாந்தியோடு
அதியமா யுயிர்க்கீராறி லமர்ந்திட வருவதானுல். (௩௬௧)

வேறு

மிதுனலக்கினமாய்த் தோன்றிடவதனில்விளங்கிய லக்கினநா தன், சதியுடனுயிர்க்கு நாலினில்வருகச் சசிபுகர் காரியுமதனில், கெதிபெறவேழோன், உதயகேந்திரத்திற் கேதுசேயுடன் வருமா னுல், சதியுடனுதிக்குஞ் சாதகன்வயதைச் சாற்றினுரெண்பத்தொ ன்றுமே. (௩௬௨)

எண்பத்தொன்றுக வுரைத்தனர்கணித ரியல்புடன் யேழினிற் பாவர், தண்படயிருக்கில் ஆறுநாலெட்டிற்றுரமும் வருமெனமொ ழிந்தார், செண்பகநிறத்தாய் அரவுநாள்வருகிற்சேர்த்திடும் மங்கை யர்தனமும் மண்படப்போகும் சாதகன்றனக்கே வகுத்தனர் சோ திடநூலோர். (௩௬௩)

வேறு.

கரியவன் புகர்வீடேகக் கலைமறை மறையாதாகில்
வருமுயிர்க் கோளன்றுனும் வருமிடம் பவர்வீடுற்றுல்
சரியுடன் முக்கோள்தானுந் தனித்திடப் பிறந்தசேய்க்குத்
துரிதமாய் மரணவாழ்நாள் சொல்லினர் கரிவந்துற்றுல். (௩௬௪)

வந்திடுங் கரிவந்துற்ருல் மாய்ந்திடும் வயதென்ருேதே
சிந்தையாய் முக்கோளோடு சேர்ந்திடச் சுபர்வந்துற்ருல்
வந்திடி மிறைவன்நாளில் வகுத்தனர் கணிதநூலோர்
விந்தையாய் ஐம்பத்தஞ்சாய் விளங்கிடுந் தரணிமீதே. (ருசுரு)

அட்டமா திபனும்பொன்னும் அருணனும் புகர்வீடாகத்
திட்டமா யுயிரோன்காரி சேரிடஞ் சுபர்வீடானல்
சட்டமா யுதிக்குஞ்சேய்க்குச் சதிருடன் வயதென்ருேதத்
திட்டமாய் முப்பத்தாருய்ச் செப்பினர் கணிதநூலோர். ()

மேடமாய்த்தோன்றி லக்கினமுதிப்ப விளங்கிடும் லக்கினத்தி பன், நீடியயெட்டோன் காரியோடேகி நின்றிட ஆட்சிநட்பானல்,கூடிடுங்கோட்கள் பவரிலாதிடுகில் குறித்தனரவற்குமேமேலோர், ஓடிடும்வயது ஒன்பதஞ்சாக உரைத்தனர் கணிதநூல்விதியால்.()

கரியவன் யிறைவன் புகருகேதுடனே கதிரவன் வீட்டினில் வருமால், சரியுடனுயிர்க்கோ ளெட்டினேனுடனே சாரிடம்வளருகேந்திரமாய், வருமுயிர்தனக்கு அஞ்சினேன்மதியாய் வருமிடம் பவரிலாதிடுகில், தருமுயிர்வயதை வகுத்தனர்பெரியோர் சாற்றினுரெழுபத்தாறதனல். (ருசுஅ)

மாலவன்குருதி புகருகேதுடனே வருமிட மறைவிலாதிடுகில், நீலனுமுயிரோ னஞ்சினேனுடனே நின்றிடச்சுபர்க ளில்லானுற், சாலவேபிறக்குஞ் சாதகன்றனக்குத் தந்திடுங் கணிதநூல்விதியால்,மாலவன்குருதிபுகர் துகையாகவகுத்தனர்வயதெனநூலோர்.

கரியவ னுயிரிற்சேரக் * காரணம் பிலத்தப்பாக
வருமெட்டோன் குருதியோடு வந்திட வுயிர்க்குநாலில்
தருமுயிர் தனக்குயேழிக் றனித்திடப் பரிதிவந்தால்
துரிதமாய்ப் பிறந்தவன்றே துஞ்சிடும் பிறந்தசேயாம். (ருஎ0)

வேறு.

அட்டமாதிபனுங் காரியுமுயிரோன் அஞ்சினேன் ருனுமொன்ருகத், திட்டமாயுயிக்கு ஆறுமூன்றெட்டிற் சேர்ந்திடச் சுபமிலாதிடுகில். சட்டமாய்ப்பிறக்குஞ் சாதகன்றனக்கு சாற்றினுர்கணிதநூலாய்ந்தோர், திட்டமாய்வயது மூன்றுஆறதனிற் செத்திடும்பிறந்ததோர்சேயாம். (ருஎக)

* காரணன் லக்கினதிபதி.

அட்டமாதிபனுங் காரியுமோர்வீ டமர்ந்திடக் கேந்திரத்து
றுமால், திட்டமாயுயிரோன் உதையகேந்திரத்திற் சேர்ந்திடப்புக
ர்பவருடனே, சட்டமாயிறைவன் ஆரல்வீடதனிற் றனித்திடப்பிற
ந்தசேயதற்குத், திட்டமாய்வயது அன்பத்தஞ்சாகச்செப்பினார்சா
தகன்றனக்கே. (௩௭௨)

சாதகன்றனக்கு ரவிமதிகுருதி சதிருடன் பாம்புதன்திசையி
ல்,வேதமாயோகம்வருமெனக்கணிதர் விதித்தனர் பரிதிதன்திசை
யில்,ஓதினார்பிலமாய் அரசர்தன்யோகம் உரைத்தனர்குருதிநாள்வ
ரையும், சாதகன்றனக்குவெகுநிதிபூமிசார்ந்திடும் அன்னியதேசம்.

வேறு.

கரியவ னுயிர்க்கோளோடு கருத்துடன் பிலத்தப்பாகச்
சரியுட னெட்டோனஞ்சோன் சாரிடமறைவதானால்
வருமுயிர் தனக்குமேலோர் வகுத்தனர் வயதென்றேதே
குறிகிடும் பதிமூன்றாகக் கோள்வய துரைத்தார்மேலோர். (௩௭௩)

வேறு.

மதிபுகர்மால் கரிவீடாய்த் தரித்திடவேகரியும்
வரவவர்க்கு யீராறில் வந்திடவே தனிக்கச்
சதியுடனே சேயிறைவன் உயிர்க்கோளனுடனே
சாரிடமே மறையாமற் சுபர்வீடாய்வருமால்
விதியுடன்சேய் பிறந்திடும்நாள் யெழுபதனிற் றந்தை
விஷமுடனே மாய்ந்திடுவன் விளங்கு மன்யதேசம்
கதிபெறவேசாதகன்றன் பலனுமிதுவென்று
கணித்தனர்கள் யெழுபதென வயதெனவேமேலோர். ()

வேறு.

பீதகனு முயிர்க்கோளாய்க் கேந்திரமேவிடுகிற்
பின்முன்பு சுபர்வருகிற் சுபக்கிரகமதனால்
நீதியுடன் காரிமதி அஞ்சின்கோளுடனே
நின்றயிடம் மறையாமற் சுபர்மனைவந்திடுமால்
ஓதிடுவே னிப்படியே தோன்றிவருஞ்சேய்க்கு
உரைத்தனர்க ளதியோகம் உயர்வுடனேவாழ்வன
சாதகன்றன்மரணமது கணிதமொழிநாலால்
சாற்றினர்கள் காரிகுரு புகர்தொகையென்றேதே. ()

அட்டமா திபனும்பொன்னும் அம்புலிபுகர்பானோடு
திட்டமா யோர்வீடாகிச் சேர்ந்திட உயிர்க்கோளாட்சி
சட்டமாய்க்காரியேழிற் றனித்திடச் சுபர்வீடானல்
திட்டமாய்ப் புகர்மாலகாரி சேய்பரி தொகையென்றோதே. ()

ஓதிடும் வயதுநூலோர் உரைத்தனர் சாதகற்கு
வேதமாய் மொழியென்றோதி விதித்தனர் கணிதமாய்ந்தோர்
நீதமாய் அட்டமத்தில் நின்றிட அரவஞ்சேர்ந்தால்
சேதமா யேழுதள்ளித் திறமுடன் வயதுசாற்றே. (ஙஎஅ)

சாற்றவே அட்டமத்திற் சனிதனித் திடினுமானல்
ஏற்றமுன் னுரையிலஞ்சு யிசைவுடன் நாசங்காட்டுந்
தோற்றிட வுயிரிற்பாவர் தோன்றிடத் தனிப்பானுகில்
மாற்றிடும் வயதுபத்து மாயுமென் றுரைத்தார்நூலோர். ()

அட்டமா திபனும்பொன்னு மருணனுங் கரிசேயோடு
நிட்டைமால் புகர்வீடாகி நின்றிட மறையாதாகில்
சட்டமா யுதிக்குஞ்சேய்க்குச் சாற்றினு ரெழுபத்தேழு
அட்டமா திபனம்பொன்னு மருணனுங் கரிசேய்வேறும். ()

வேதமாய் மறைவதானல் விளம்பிடுங் கணிதநூலால்
நீதமாய்ப் புகர்சேயாண்டு நிகழ்த்தினர் வயதென்றோதே
ஓதிடுங் கரிசேய்பொன்னு முயர்வுடன் பிலமாவானல்
சாதகன் றனக்குஆயுள் சாற்றி னுரைம்பத்தெட்டே. (ஙஅக)

வேறு.

அட்டமாதிபனும் அட்டமந்தன்னி லமர்ந்திடக்கடும்பவருட னுய்த், திட்டமாயுயிரோன் காரிபொன்னோடு சேரிடஞ் சுபர்மனை றதனுற், கட்டிடும்வயது காரிமால்தொகையாய்க்கருத்துடனுரை த்தனர்நூலோர், திட்டமாயுயிரோன் சேம் வந்திடுகிற் சேதமாய ஞ்சுடனெழியும். (ஙஅஉ)

வேறு.

கரியவன் றன்வீடாகக் கலைமறை பிதிர்த்தானத்தில்
சரியுட னுயிர்க்குள்ளோனுஞ் சற்குரு புகரேயானல்
துரிதமா யெட்டோனஞ்சோன் சோமனும் பூமனுனல்
உருதியா யவன்றன்யாக்கை உரைக்கலா மறுபத்தொன்றில். ()

சூரியன் பெட்டின்கோளுந் தோன்றிடக் காரிவீடால்
சாருமக் கோளன்வாறித் தரித்திடச் சுபர்களோடு
கூறுயிர்க் கோளன்வாக்கிற் குறிகிடச் சுபரோடானால்
காரிபொன் புகர்நாளாகக் கருதினர் வயதென்றேதே. (௩அச)

ஓதிடுமிருபத்தொன்மே லுரைத்தனர்முயற்சிசெல்வம்
வேதமாய்ச் சமனுமென்று விதித்தனர் மறைநாள்மட்டும்
ஓதிடுங் கரிநாள்வந்தா லுரைத்தன ருயர்ச்சிபூமி
நீதமாய் வருமென்றேதி நிகழ்த்தினர் பலனுமற்பம். (௩அடு)

வேறு.

மிதுனமாய்த் தோன்றி லக்கினமுதிப்ப விளங்கிய லக்கினநா தன், உதயகேந்திரத்திற் புகர்பரிபாம்போ டுதித்திடக் கேதுபொ ன்மறையச், சதியுடன்காரி சொந்தவீடதனிற் றனித்திட முன் புபின்பவரால்,பதிதனிற்றேன்றுஞ் சாதகன்வயதுபகர்ந்தனரெழு பத்தொன்றதுவே. (௩அகூ)

அட்டமாதிபனுங் காரிசேயுயிரோ னமர்ந்திடிமறைந்திடாதி டுகில், திட்டமாய்மதியும் அட்டமந்தன்னிற் சேர்ந்திடத் தனித்தி டுமாகில்,சட்டமாய்த் தரணிதன்னிலே விளங்கச்சங்கரன்கணிதநூ ல்விதியால், திட்டமாய்வயது அன்பத்தெட்டாகச் செப்பினுர்சாத கன்றனக்கே. (௩அஎ)

சாதகன்றனக்குப் பாம்புபொன்காரி தங்கியதிசைதனில்யோ கம், வேதமாய் வருமென் றேதினர்பாம்பு விரைவுடன்மாலவன்வ ந்தால், போதவேயோகம் வெகுதிறமாகப் பொருந்திடும் பாம்பு நாள்வரையும்,ஓதினுரிறைவன் திசைவருமுதலே உரைத்தனர்வெ குநிதிக்குடையோன். (௩அஅ)

இறையவன்திசையில் ராஜயோக்கியமாய் இருநிதிபூமிக்ஷேத் திரங்கள், குறைவிலாதிருப்பன் குடும்பயோக்கியனுங் குறித்தனர் அரசர்சந்தோஷம்,மறையவன்திசைநாள் வகுத்தனர்நூலோர்வரு ங்கரி திசைவருமாகில், விரைவுடன்விஷத்தால் தத்தெனநூலோர் விதித்திடு மாய்ந்திடுமுடனே. (௩அகூ)

அட்டமாதிபனுங் காரிமாலுயிரோன் அருக்கனுமுதயகேந்திரமாய்த், திட்டமாய்மதியும் பத்தின்கோளுடனே சேரிடம்மறைந்திடாதிடுகில், சட்டமாய்த்தோன்றுஞ் சாதகன்றனக்குச் சாற்றினார் வுயதுயெண்பதுவாம், அட்டமாதிபனு முயிர்க்குளோன்மறைந்தா லறைந்தனர் வயதெழுபதுவாம். (௩௬௦)

அட்டமாதிபனுங் காரிமால்பரிதி அமர்ந்திட வுயிர்க்குயீராறில், திட்டமாயுயிரோன் பதிதன்கோளுடனே சேரிட மறைந்திடாதிடுகில், சட்டமாய்த்தோன்றுஞ்சாதகன்றனக்குச் சதிருடனிருபதுவயதாம், அட்டமாதிபனும் பத்தின்கோள் மறைந்தாலறைந்தனர் மூன்றுரைபாதி. (௩௬௧)

வேறு.

குருதிஉயிர்க் கோளாகிக் கரிமனைவந்திடுமால்
கோளனுயிர்தனிற் சேரச்சுபர்பவர் வந்திடவே
சுருதிஉயிர் தனக்காறில் மதிமகன்பாலோடு
தோன்றிட அக்கோடனையுஞ் சுபர்பவர்நோக்கிடுமால்
கருதிஉயிர் பிறந்திடுஞ்சேய் வயதெனவென்றோதே
கருதுபவர் அட்டமத்திற் கருத்துடன்தோன்றிடுமால்
அறுதியிவன் மரணமது உரைத்திடவென்றோத [ம்.
அறைந்தனர்கள் புகரருணன் அந்தணன்சேய்தொகையா

ஆரலுயிர்க் கோளாகிக்கேந்திர மெய்திடுமால்
அக்கோள்பொன் யெட்டோனும் அம்புலிமால்வீடால்
வீரமுடன் அஞ்சோனும் மாலுடன்சேர்ந்திடுமால்
விளங்குமக்கோள் தனைப்பாவர் விரைவுடன்வந்திடுமால்
தாரணியிற் பிறந்திடுஞ்சேய் வயதெனநூல்மேலோர்
சாற்றினர்கள் முப்பதுவாய் ஜல்தியில்மாய்ந்திடுவன்
சேருமொழி யிதுவெனவென் றோதினர்கள்நூலோர்
செப்பிடுமே யிப்பலனைத்தெரிந்துரை யென்றோதே. ()

காரிஉயிர் தனிற்சேர மாந்திபுகருடனே
கருதுமக்கோள் பிலமாகித் தனித்திடவே வருமால்
சூரியன்மா லுடன்சேர்ந்து சுபர்மனைவந்திடவே
தோன்றுமிடம் மறைந்திடவே சுபர்பவர்பார்வையினால்

சீருடனஞ் சினுக்கோள் மால்மதிவீடாகிச்
சேரிடமே மறைந்துதனித் திடினும் வருமாகிற்
கூறினர்கள் வயதுதொகை கணிதமொழிப்படியே
குறித்தனர்கள் காரிபுகர் மால்பரிதி தொகையே. (ருகூச)

அட்டமத்தோன் காரிஉயிர்க் கோளுடனே ஒன்றாய்
அம்புலிமால் வீடேகிப் புகர்குருநோக்கிடுமால்
திட்டமுட னஞ்சினுக்கோள் சூரியன்சேய்வீடாய்
தினகரனு மதிற்சேரச் சுபர்களும் வந்திடுமால்
சட்டமுடனிவ்விதமாய்ப் பிறந்திடுஞ்சேய்வயதைச்
சாற்றினர்கள் கணிதமொழிப் படியெனவேநூலோர்
திட்டமுடன் காரிபுகர் மால்பரிதிகுருதி
சேருதொகையெனமொழியச் செப்பிடுஞ்சேய்மரணம். ()

மால்பரிதி கேதுடனே சூரியன்வீடேகி
வரவவர்முன் பவர்வருகிற் சுபக்கிரகமதனால்
சீலமுடன் காரிஉயிர்க் கோளுடனொன்றாகிச்
சேரிடமால் வீடதுவாய் தரித்திடவேவருமால்
தூலமுடன் சேய்பிறக்கும் வயதெனவென்றோதத்
தொகுத்தனர்கள் காரிபுகர் மால்குருவுதொகையாம்
மால்பரிதி கேதுடனே மாலவன்வந்துற்றால்
மாய்ந்திடுவன் சேய்பரிதி மந்திரிநாள்தொகையாம். ()

மந்திரிசேய் காரிஉயிர்க் கோளுடனேவொன்றாய்
வருமுயிர்க்கு நாலதிலே வந்திடவேபவராய்
விந்தையுயிர் தனிற்கோளன் அட்டமத்தோனுடனே
மேவிடவே சுபர்வீடாய்ச் சுபர்வரினுமாகில்
வந்திடுஞ்சேய் வயதெனவே வேதமொழிக்கணிதர்
வகுத்தனர்கள் யெழுபதினால் மரணம்வருமாதே
மந்திரிசேய் காரிஉயிர் கோளுடனேமறைந்தால்
வகுத்தனர்கள் மால்பரிதி மதிதொகையென்றோதே. ()

காரிஉயிர்க் கோளுடனே மதிவீடேகிக்
கருதியக்கோள் கேந்திரமாய்ப் பவரோடானால்
சூரியன் மாலுடன்சேர்ந்து சுபர்வீடாகித்
தோன்றுமிட மறையாமற் றரிகதுமாகில்

சீருடன்முக் கோளுடனே பவர்வந்துற்றால்
செப்பிடுமால் கரிபுகர்பொன் சேருதொகைவயதோர்
காரிஉயிர்க் கோளுடனே மறைந்து நெடுநீசங்
கடும்பவர்வீ டுற்றிடவே அன்பதுயெட்டாயுள். ()

காரியுடன் மால்பரிதி பவர்மனைவந்திடவே
கருதியக்கோள் லக்கினக்கோள் சுபர்மனைவந்திடுமால்
வீரமுடன் காரிஉயிர்க் கோளனுமெட்டோனும்
விளங்கிடுங்கேந் திரமாகிப் பவர்வரினுமானால்
பார்தனில்வந் திடுஞ்சேய்க்கு வயதுயெனவோத
பரிதிதொகை யாகவெனப் பகருமொழிமாதே
சூரியன்மந் தனுமாலுஞ்சுபர் மனையில்மறைந்தால்
தோன்றிடுநாற் பதுமூன்றாய்ச் சொல்லுமெனவாயுள். ()

வேறு.

மந்தனும் புகர்வீடேக மதிமகன் அதனிற்சேரச்
சந்திரனெட்டோ னஞ்சோன்சாரிடம்மறைவதாகில்
விந்தையா யுயிர்க்கோள்கேது விளங்குகேந் திரமேயானால்
வந்திடுஞ் சேய்க்குஆயுள் வகுத்தனர் நாற்பத்தொன்றாய். (சஙு)

அட்டமந் தன்னிலாசா னமர்ந்திடச் சுபர்வீடாகத்
திட்டமா யுயிர்க்கோளாட்சி சேர்ந்திடச் சுபர்களோடு
சட்டமாய்க் காரியெட்டோன் சாரிடமறையாதாகில்
திட்டமா யிருபத்தஞ்சாய்ச் செப்பினர் சாதகற்கே. (சஙக)

வேறு.

சூரியனும் உயிரோனுங் கரிபொன்மாந்தி
தோன்றுமிட மறையாமற் கரிமனைவந்திடுமாற்
சாருமுயிர்க் கட்டமத்தோன் பவராகிப்புகருஞ்
சார்ந்திடக்கேந் திரமாகி சுபர்மனைவந் திடுமால்
கூறுமுயிர்ச் சாதகற்கு வயதறுபத் தொன்றாய்
குறித்தனர்கள் கணிதமொழிப் படியெனயென்றுரையே
காரிகுரு மாந்தியுடன் பவர்மனையாய் மறைந்தாற்
கருதும்வய திருபத்தஞ் சினிற் கண்டமாமே. (சஙஉ)

மாதவமாய்த் தோன்றிடுஞ்சேய் வயதிருபத்தொன்மேல்
வகுத்தனர்க ளுயர்ச்சிநிதி வரும்பலனென்றுரையே
வேதமதாய் அற்பபலன் தோன்றிடுமேசமனுய்
விதித்தனர்கள் கரிவரைக்கும் விளங்கிடுஞ்சாதகற்கு
ஓதிடவே கரிமுதலே பூமியினுற்பிலமா
யுறைத்தனர்க ளதிகபலன் உரைத்திடும்நூல்மொழியால்
நீதியுடன் பலன்சமனுய் நேர்ந்திடுமேசேய்க்கு
நிகழ்த்தினர் கணிதமொழி நூல்விதியென்றேதே. (சஅங)

காரிஉயிர்க் கோளுடனே புகரோடேகித்
கடும்பவர்வீடேகி அக்கோள் மறையாதாகிற்
சூரியன்மா லுடன்சேர்ந்து பவர்வீடேகித்
தோன்றுமிடம் மறையாமல் வருமேயாகில்
பார்தனிலே வருமுயிர்சேய் வயதெனவென்றேதப்
பகர்ந்தனர்கள் யெழுபத்தொன்பானெனவே பெரியோர்
சூரியன்மா லுடன்மறைந்து சுபர்வீடுற்றால் [ர்.
தொகுத்திடுமன் பதஅஞ்சாய்ச் சொல்லினர்மேல்நூலோ

சூரியனும் உயிரோனும் புகரும்ஒன்றாய்த்
தொல்பவர்வீ டேகியிக்கோள் மறையாதாகிற்
காரிபவ ருடன்சேர்ந்து பிலமாய்த்தோன்றக்
கருதுமெட்டோன் சுபராகித் தனிப்பானுகிற்
சீருடனே வருஞ்சேய்க்கு வயதுநூலோர்
செப்பினர்கள் யெழுபத்தொன் றாய்த்திறமென்றேதக்
கூறுமுயிர் தனிற்க்டுங்கோள் வருவதானுல்
கோள்வயது அறுபதெனக் கொடுக்குமாதோ. (சஅரு)

வேறு.

அட்டமாதிபனுங் காரியுங்குளிகன் அமர்ந்திடக் காரிவீடேகத், திட்டமாயுயிரோ னுரல்கேதோடு சேரிட மறைந்திடா திடுகிற் சட்டமாயஞ்சோன் அருணன் வீடதனிற்றனித்திடப் பிறந்தசாதகற்கு, திட்டமாய்வயது அறுபத்தஞ்சாகச்செப்பினர் கணிதநூல்விதியால். (சஅசு)

விதியுடன்பிறக்குஞ் சாதகன்றனக்கு விதித்தனர் பாம்புபொன்திசையில், சதியுடன்முயற்சி சகலமுஞ்சமனாய்ச் சார்ந்திடும்ராகு நாட்பாதி, பதிநிதிபூமி முயற்சிமேலாகப்பகர்ந்தனர் பொன்னவன் வந்தால், அதிகயோக்கியமாய்க் கணிதநூல்மொழியா லறைந்தன சாததன் பலனே. (சஎ)

வேறு.

அட்டமா திபனுங்கேது மம்புலி ஓர்வீடாகித்
திட்டமா யுயிரிற்பாவர் சேர்ந்திட உயிரோன்றானுஞ்
சட்டமாய்க் தாரியோடு தரித்திட மால்வீடானால்
திட்டமாய் வயதுஅன்பத் தஞ்செனச் செப்புமாதே. (சஅ)

மாதவர்மொழியாற் பொன்னன் வருந்திசை யேற்குமாகில்
நீதமா யுயிர்ச்சிமேலாம் நேர்ந்திடுஞ் சிவிகையோகம்
போதவே கரிநாள்வந்தால் புகழ்நிதி உயர்ச்சிமேலாம்
ஓதினர் சாதகற்கு உரைத்தனர் பலனென்றோதே. (சஙு)

வேறு.

சதியாக அட்டமத்தோ னுயிரோனுகிச் சாருமிடமறையாமற் சுபர் வீடாக, விதியாகக்காரியுடன்ரெண்டேழோனும் வெய்யவனு மாந்தியுடன் பரிம்மால்வீடால், மதியுடனீ ரஞ்சோனு முதயமேற வருஞ்சேய்க்குத் தரணிதனில் வயதுமேலோர், அதிவிதியால்புகர் குருமால் தொகையென்றோத அறைந்தார்கள் கணிதமொழியதனு லோதே. (சகஙு)

வேறு.

ஓதுமுயிர்ச் சாதகற்கு குருநாள்யோகம்
உரைத்தனர்கள் சமபலனு யுரைத்தார்மேலோர்
நீதியுடன் காரிவருந் திசையிற்செல்வம்
நேர்ந்திடுமே சமபலனும் மால்வந்துற்றால்
வேதமொழிப் படியாக உயர்ச்சிமேலாய்
விதித்தனர்கள் கரிநாளில் மதிவந்துற்றால்
ஓதிடுவன் பிலனுகப் பூமிசெல்வம்
உரைத்தனர்க ளற்பபலன் உரைக்கும் மாதே. (சகக)

வேறு.

அட்டமாதிபனும் ஆறுமேழோனும்அருக்கனுங்காரியும்உயிரோன், திட்டமாயோர்வீடேகியே பிலமாய்ச் சேரிட மறைந்திடா

திடுகில், சட்டமாய்த்தோன்றுஞ் சாதகன்வயதுசாற்றினு ரெழுபத ஞ்சாக, அட்டமாதிபனும் ஆறுமேழோனும் அருக்கனுங்கரிஉயிர் மறைந்தால். (சகஉ)

மறைந்திடுஞ்சேய்க்கு வகுத்தனர்வயது மால்குரு சேய்மதி தொகையாம், அறைந்தனர்பிலமாய் கணிதநூற்படியே அம்புலிதி சைதனில்யோகங், குறைந்திடாதெனவே குடும்பயோக்கியனுய்க் குறித்தனரரசர்சந்தோஷம், அறைந்தனர்பூமி நிதிபதிஉயர்ச்சிஅம் புலி திசைமுழுததனுல். (சகங)

அட்டமாதிபனுங் காரியுமதியும் .அருணனும் உதயகேந்திர மாய்த், திட்டமாயுயிரோனுரல் கேதொடு சேரிட மறைந்திடாதிடு கில், சட்டமாய்த்தோன்றுஞ் சாதகன்வயது சாற்றினுரறுபதொன் றதனுல், அட்டமாதிபனுங் காரிமால்மறைந்தால் அறைந்தனர்வய துநாற்பதுவாம். (சகஉ)

வேறு.

மதிமகனும் புகர்சேயும் மதிவீடேக
மதியிறைவன் மந்தனுமோ ரில்லமாகச்
சதியுடன்முக் கோளுடனே பவர்வந்தெய்தச்
சனிமாலும் புகர்சேயும் சாருமிடம்பிலமாய்
விதியுடனே பிறந்துவருஞ் சாதகனும்யோகம்
விதித்தனர்கள்கேசரியாம் யோகமெனவுரையே
பதியுடன்வந் திடுமுயிர்தன் மரணமொழியெனவே
பகர்ந்தனர்கள் மதிகாரி பார்க்கவன்மால் தொகையே.

காரிமதி புகர்மாலுங் கரிமனைவந்திடவே
கருத்துடனே அவன்றனக்கேழ் கதிரவன்வந்திடவே
மாரியுயிர் தனக்கோளன் கேந்திரமேவிடவே
வரவக்கோள் தனக்காறில் மந்திரிவந்திடுமால்
சீருடனே பிறந்திடுவான் செப்பிடுஞ்சே யுயிர்க்குத்
திறமுடன்மால் புகர்காரி சேய்மதியின்றெகையாம்
காரிமதி புகர்மாலும் மறைந்திடவேவருமால்
கருத்துடன் சேய்மால்கரியாய்க் காட்டும்வகைமரணம்.

வேறு.

அட்டமாதிபனுங் காரியமுயிரோ னஞ்சினேன் றானுமொன்
றாகத், திட்டமாய்வளரு கேந்திரமெய்திச்சேர்ந்திடச் சுபர்மனையா
னால், சட்டமாயுதிக்குஞ் சாதகன்றனக்குச்சதிருடன் மொழுபதே
ராயுள், அட்டமாதிபனுங் காரியமுயிரோன் அஞ்சினேன் வாக்கி
னில்வருமால். (சகஎ)

வருவதுமுயிர்க்குப் பத்திலேன்றானும் வந்திடப் பவர்மனை
யானால், பெருமறுபதின்மே லெட்டினிற் கண்டம் பேசிடவகுத்த
னர்கணிதர். தருதிருமுக்கோ ளுடன்வரப்பாம்புதரித்திடப்பிறந்த
சாதகற்கு, இருபதுவயது ரெட்டியாப்பதினே ழிசையுடனேதெ
னவுரையே. (சகஅ)

அட்டமாதிபனுங்காரிமாலருக்கன் அமர்ந்திடக் கேந்திரங்கு
ருமால், திட்டமாயுயிரோன்சுபரதாய்த்தோன்றிச்சேரிடஞ்சேய்பு
கர்வீடால், சட்டமாயஞ்சோன் பவருடன்மறைந்தாற் சார்ந்திடும்
யெழுபதாம்வயதே, அட்டமாதிபனும் பரிதிமால் மறைந்தாலறை
ந்தன ரன்பதெட்டாயுள். (சகக)

அட்டமாதிபனுங் காரியமுயிரோ னருக்கனும் பிறையுமொ
ன்றாகித். திட்டமாயோர்வீ டேகியேமறையாற் சேர்ந்திடுஞ் சாதக
ன்றனக்குச், சட்டமாய்வயது மால்புகர்தொகையாய்ச்சாற்றினார்க
ணிதநூலாய்ந்தோர் அட்டமாதிபனும்உயிர்க்குளோன்மறைந்தால்
அறைந்தனர் குருதிமால்தொகையாம். (சஉ0)

வேறு.

சோமனேடு மந்தனுக சுங்கனேடுகன்னியில்
நேமமாக யிடபவீடு நீசனுகப் பாவர்கள்
காமநாதனுலகமேறக் கன்னிவந்த ஆண்டினில்
நேமமாக ஒழியுமென்று நிகழ்த்தினார்கள் பாவையே. (சஉக)

வேறு.

மதிமக னுயிரோனுகி வரும் பவருடவே சேர்ந்து
சதியுட னுயிர்க்கிரண்டிற் றரித்திட யெட்டோன்நோக்க
விதியுட னஞ்சோன்காரி விரைவுடன் மறையுமாகிற்
பதிதனில் முப்பத்தொன்றுய்ப் பகர்ந்தனர் வயதென்றேதே. ()

மந்தனுங் குருவீடேக மந்திரி உயிர்க்கோளெட்டோன்,
வந்துமிக் கோட்கள்தானும் வளருகேந் திரமானுலுஞ்
சிந்தையாயட்டமத்திற் சேர்ந்திடப் பத்தோன்வந்தால்
சந்திரன் புகர்மால்காரி சதிருடன் தொகையேயாயுள். (சஉரு)

வேறு.

அட்டமாதிபனுங் காரியுமோர்வீ டமர்ந்திடக் கேந்திரத்துறு
மால், திட்டமாயுயிரோன் சுபரதாய்த்தோன்றிச் சேரிடம் பரிதி
மால்வீடால், சட்டமாயஞ்சோன் பரிதிமாலுடனே சாரிட மறைந்
திடுமாகில், திட்டமாய்வயது அறுபத்தொட்டாகச்செப்பினுர்சாத
கன்றனக்கே. (சஉச)

சாதகன்றனக்கு வயதுயிப்படியே சாற்றினுர் கணிதநூலாய்
ந்தோர், நீதமாயிறைவன் லக்கினத்தவனை நேர்ந்துமே நோக்கிடு
மானுல், வேதமாய்ப்பாம்பு யிறையவன்காரி விளங்கிய திசைவரு
மாகிற், போதவேமுயற்சி நோக்கிடும்பிலமாய்ப் பொன்னவன் தி
சைதனில்யோகம். (சஉடு)

இறையவன்காரி திசைதனிற்பிலமா யிசைவுடன் பூமிக்ஷேத்
திரங்கள், குறைவிலாதிருப்பன் அதிகயோக்கியமாங் குறித்தனர்
சாதகன்பலனை, விரைவுடன்காரி திசைதனில்யோகம் விதித்தனர்
மேன்மையாமுயற்சி, முறையுடனிறைவன்காரிதான்பலனைமொழி
ந்தனர் சாதகன்றனக்கே. (சஉசு)

காரிமாலுடனே உதயகேந்திரத்திற் கருத்துடன் சுபமிலாதி
டுகிற், சாருமெட்டோனும் அஞ்சுபத்தோனுஞ் சார்ந்திட வளரு
கேந்திரமாய்ச், சீருடனுதிக்குஞ் சாதகன்றனக்குச்செப்பிடும்அறு
பதாம்வயது, பார்தனில்யோகம் வயதுபத்தேழிற் பாக்கியம் நிக
ரெனமதியே. (சஉஎ)

மதியதாங்கணிதர் யோகமென்றுரைக்கவகுத்தனர்குருதிமா
ல்திசையிற், சதியுடன்சிவிகை யோகமென்றுரைக்கச் சாற்றினுர்
மேலவர்மொழியாற், கெதிபெறயிருப்பன் மரணநாள் வரைக்குங்
கேசரி யோகமென்றுரையே,துதிபெருங்குருதிமாலவன் திசையிற்
றோன்றிடுங்கெதிபெறவாழ்வன். (சஉஅ)

அட்டமாதிபனும் மறைந்திடப்புகரோ டமர்ந்திடப் பரிதி மாலுடனே, திட்டமாயுயிர்க்கோள் காரியோனுச்சஞ் சேர்ந்திடவ ளருகேந்திரமாய்ச், சட்டமாய்த்தோன்றுஞ்சாதகன்வயதோர்சாற் றினு ரெழுபதொன்றெனவே, திட்டமாயுயிரோன் மறைந்திடக் காரி சேரிட்டம் நீதமாய்வருமால். (சஉகூ)

வருமுயிர்சேய்க்கு வகுத்தனர்பிலமாய் வந்திடும்வயதறுபது வாந், தருமுயிர்தனக்கு அட்டமந்தனிலே தனித்திடக் கொடிய கோளுற்றால், வருவதுவயது அறுபதுதனிலே மாய்ந்திடுமாறென அறையே, தருமுயிர்தனிலே காரிவந்துற்றால் சார்ந்திடுவயதுநாற் பதுவாம். (சஙூ0)

அட்டமாதிபனும் உதயகேந்திரத்தி லமர்ந்திடச் சுபர்மனை யாகத், திட்டமாயுயிர்க்கோள் பாம்புடன்கூடிச் சேரிடம்வளருகே ந்திரமாய்ச், சட்டமாய்க்காரி கொடியகோளுடனேதரித்திடக்கேந் திரத்துறுமால், நிட்டைமால்புகரும் மறைந்திடத்தோன்றும் நின் றிடுஞ் சாதகன்றனக்கு. (சஙூக)

சாதகன்றனக்குக் கணிதநூல்மொழியாற் சாற்றினர்அறுபத் தெட்டாக, நீதமாய்வயதென் றோதினர்மேலோர்நிச்சயமாமென வுரையே, போதவேஅருக்கன் அஞ்சினோனுடனே பொருந்திடப் பஞ்சமம் வருமால், வேதமாய்ப்பாம்பு இறையவன்திசையில்விதித் தனர் வெகுபலன்மாதோ. (சஙூஉ)

மாதவர்மொழியாற் பாம்புநாள்வருமால் வந்திடுமுயற்சிபாக் கியமே, ஓதிடுமுயிரோன் திசைவருமாகில் உரைத்தனர் பூமிக்ஷேத் திரங்கள், நீதமாய்வருமென் றோதினர்பிலமாய் நேர்ந்திடும் பாக்கி யமுயற்சி, போதவேஅதிகந் திசைதனிற்பாதி புகட்டினர் சாதகன் பலனே. (சஙூங)

வேறு.

மந்தனு முயிர்க்கோளாகி வருமிடம் பிலமாவானால்
விந்தையா யுயிர்க்குயெட்டோன் விரைவுடன் மால்வீடேகிச்
சிந்தையாய்க் கருமநாதன் சேரிட மறைவதானால்
வந்திடும் வயது அன்பத் தொன்றென வளருமாதோ. (சஙூச)

மாதவர் மொழியாற்புந்தி வன்கொடி புகர்பான்நாளில்
போதவே அற்பமாகப் பொருந்திடுஞ் செல்வங்காட்டும்
ஓதிய புகர்நாள்காரி வுயர்வுடன் மறையோன்வந்தால்
சேதமாய்ப் பலன்கள்நாசம் செப்பினர் சாதகற்கே. (சஙரு)

சாதகன் றனக்குச்செல்வஞ் சார்ந்திடும் புகர்நாள்மாலோன்
நீதமாய் அற்பமாக நேர்ந்திடுஞ் செல்வமாதே
வேதமாய் அருக்கன்வந்தால் விதித்தனர் பூமிசெல்வம்
போதவே பரிநாள்மட்டும் புகழ்பெற வளருமாதோ. (சஙரு)

கரியவன் சேய்வீடேகக் கலைமறைமறைவதாக
வருமுயிர்க் கோளன்றானும் வருமிடம் மால்வீடுற்றால்
தருமுயிர்க் கட்டமத்தோன் சாரிடம் பரிதிவீடால்
வருமுயிர் சாதகற்கு வகுத்தன ரைம்பதாயுள். (சஙஎ)

அட்டமா திபனுஞ்சேயும் அஞ்சின்கோ ளுடனொன்றாகித்
திட்டமாய்க் காரிவீட்டிற் சேர்ந்திடக் காரியுச்சம்
சட்டமா யுயிரோன்றானுந் தனித்திடப் பிறந்தசேய்க்குத்
திட்டமாய் வயதுமால்பொன் சேய்பரி துகையொன்றேதே. ()

ஓதிடுங் காரிபுந்தி வுயர்வுடன் திசைவந்துற்றால்
வேதமாய் அதிகசெல்வம் விதித்தனர் சாதகற்குச்
சேதமாய்க் கொடியோன்வந்தால் செப்பிடுஞ் செல்வமெல்லாம்
போதவே நாசங்காட்டும் பொருந்திய புகர்நாள்யோகம். (சஙக)

பொருந்திய புகர்நாள்பாதி புகழ்விதி பூமியெல்லாம்
வருந்திடுங் கீர்த்திமானாய் வகுத்தனர் சாதகற்கு
அருந்திய செல்வநாசம் அருக்கன்வந் தேற்குமாகிற்
பொருந்திடும் பலனுமென்று புகட்டினர் சாதகற்கு. (சசஂ)

காரிமால் குருதிபொன்னன் கருத்துடன் யிக்கோளொன்றாய்ச்
சாருயிர் தனக்குப்பத்திற் றரித்திடப் பாவர்பார்க்கக்
கூறிய உயிரோன்றானுங் குறுகிட மறைவதானால்
ஆறுயி ரிருநாலேழில் அழிந்திடுந் தாணிமீதே. (சசஃ)

மாந்தியு முயிரிற்சேர வளருமலக் கினத்துநாதன்
சார்ந்திடக் காரிவீட்டிற் றரித்திட யெட்டோனோடு
சேர்ந்திடுங் காரிபுந்தி சேரிடம் பிலமாவானல்
ஏந்திளையாளேசேய்க்கு யிருபதை யிரட்டியாயுள். (சசஉ)

யிருபதே யிரட்டியாக யிசைவுடன் வயதென்றோத
வருமுயிர்க் கோளன்வந்தால் வாய்த்திடும் பூமியெல்லாம்
தருமெட்டோ னேற்குநாளிற் றரித்திடுங்காலில்ரோகம்
கருவிழிமான்போலுள்ள கண்ணினையுடையமாதே. (சசங)

சேருமலக் கினத்தின்கோளன் தினகரன் மாலோடேகிச்
சாருயிர் தனக்குஅஞ்சிற் றரித்திடக்காரியோடு
சீருடன் அட்டமத்தோன் சேய்புக ருடனொன்றாகி
ஒருயிர் தனிலேவந்தா லுரைத்தனம் வயதுசெப்பே. (சசச)

செப்பிய சாதகற்குச் சேர்ந்திடு மெழுபதாயுள்
முற்படி கோட்கடானும் முறையுடன் மறைவதானாற்
றப்பிய தெழுபதாயுள் சார்ந்திடும் பாதிநாசம்
செப்பிய சாதகற்குத் திறமுடன் வயதென்றோதே. (சசரு)

வேறு.

சுங்கனும்வெய்யோ னறினில்வருகச் சோமனும்அரவுடனே
ழிற், றங்கிடுமானும் அஞ்சினிற்றோன்றச் சவுரியம் மூன்றினிற் கு
றுக, மங்கலன்பொன்னன் சிகியவனுயிரில் மந்தனுர் மகனிரண்
டிடத்தில், இங்கிதமாகக் கன்னியுமுயிராய் இப்புவியதனில் வந்
தவற்கே.

வந்தவர்தமக்குச் சோதிடவிதியால் வருத்தனர்பெரியவர் தா
மும், தொந்தமாய்மனதில் வஞ்சகமுடையான் துலங்கிடும்போது
நிறத்தவனுய், விந்தையாயிளைத்த மெய்யுடையவனுய் விளங்கிடுஞ்
சாதகன்றனக்குப், பந்தமாய்த்துணைவர் தோடமுண்டாகும் பாடி
னர் கணிதவாக்கியமே.

கணிதவாக்கியத்தால்மேலவர்மொழியாற்கணித்தனர்தந்தை
க்கிகதாரம், வனிதையேயிரண்டு முதல் வரும்வழக்கு வகுத்தனர்

சாத்கன்பிந்தித், தனிமையாய்வருகும் அவட்குமேபுத்திரர் தந்திடு மிரண்டுதீர்க்கமுமாம், நனிதமாய்த்துணைவர் பலனிதுவாக நாட்டி னராகமநூலே. (சசஅ)

நூலவர்மொழியாற் சாதகன்றனக்கு நுகர்ந்திடும்மாதருகரு மஞ், சாலவேவருகும் மால்திசைபிற்கூர் தரித்திடும் நாளதிசாரங் காலமாய்வந் தயலூரினில்மரணங்காட்டினர் புத்திசைமுன்னிற், சி லமாய்த் தத்துபுத்திரன்வருவன் செப்புவர் சாதகன்றனக்கே. ()

செப்புவர்மேலோர் தத்துப்புத்திரன்றான் சேர்ந்திடும் நாளதி ன்மீதில், ஒப்புடன் புத்திரர் மூவர்வந்திடுவர் உகந்திடுமதிற்சம ஷ ணும், இப்புவியதனில் யிருந்திடுஞ்சிசுவில் யெய்திடுமாதருவொன் றும், தப்பிடாதிருந்த சாதகன்றனக்குச் சார்பினுல்மயக்கரோகமு மே. (சரு0)

மயக்கரோகமுமே வந்திடுஞ்சேய்க்கு மதித்தனர்கொடிதிசை பிற்கூர், தியக்கமாய்த்தாரம் வந்துமேசேருந்தெரிவையர் நடத்தை யுஞ்சமமாம், அயக்கமாய் மதியின்திசையதின் முடிவில் அமர்ந்திடு ஞ்சேய்திசைமுன்னுல், வயக்கமாய்த்தோன்றி யுதித்திடுஞ்சேய்க்கு வகுத்தனர் சோதிடப்பலனே. (சருக)

பலனெனவுரைத்த சாதகன்றனக்குப் பாய்புதன் றிசைவரும் முன்னுல், சலனமாய்விசனஞ் சாதகன்றனக்கு சாற்றினுர்வேதியர் தாமே, குலமதிசேய்க்கு சிகியவன்றானுங் குறிகிடா தத்திசைவிட் டுப், பிலமுடன்புகர்தான் வந்திடும் முன்னுல் பேணிடுந் தந்தையர் கருமம். (சருஉ)

வேறு.

அட்டமாதிபனுங் காரிசேயோடு அமர்ந்திட மறைந்திடாதிடு கில், திட்டமாயுயிரோன்பவருடன்கூடிச்சேரிடஞ் சுபர்மனையாகச், சட்டமாயஞ்சோன் உயிர்க்குநாலதனிற் றரித்திடப் பொன்னவன் மறைந்தால், திட்டமாய்வயது ஐம்பதுநாலாய்ச் செப்பிடுஞ் சாதக ன்றனக்கு. (சருங)

சாதகன்றனக்கு மாலவன்கேது சதிருடனஞ்சினேன் திசையி ல், வேதமாயோகம்வருமெனமேலோர்விதித்தனர்மேலவர்மொழி

யால், ஓதிடமஞ்சோன் திசைதனிற்குருதி வுயர்வுடனுள்வருமாகிற் பேதகமில்லை முயற்சிமேலாகப்பேணிடும் வெள்ளிநாள்வரையே.

வேறு.

சேரும் லக்கினக் கோளுடன் காரியுங்
கூறு மட்டமக் கோளுடன் பத்தினோன்
சாரு மோரில்ல மாகத் தரித்திடச்
சீருடன் வரும் சேய்வய தொன்றதே. (சடுடு)

வேறு.

சூரிய னுபிரோன்சுங்கன் தோன்றுமட்ட மத்தோனோடு
சாருயிர் தனக்கிரண்டிற் றரித்திடச் சுபர்கள்நோக்கச்
சீருட னுபிற்காரி சேர்ந்திடச் சுபரோடுற்றுற்
கூறினர் வயதுஅன்பத் தெட்டெனக் கொடுக்குமாதே. (சடுசு)

கரியவன் குருவீடேகக் கலைமறை கேந்த்ரமாகில்
வருமெட்டோ னுயிர்க்குளோனும் வருமிடம் மறையாதாகில்
தருமுயிர் தனக்குஆறில் தரித்திடப் புகர்மாலானால்
வருமுயி ரெழுபத்தெட்டாய் வகுத்தனர் வயதென்றேதே. ()

ஓதிடும் உயிரோன்காரி உயர்வுட னிக்கோளோடு
வேதமாய்ப் பவக்கோள் சேர்ந்தால்விதித்தன ரறுபத்தெட்டு
நீதமா யுயிராமென்றுநிச்சயம் உரைத்தார் மேலோர்
சாதகன் றனக்குயோகஞ் சார்ந்திடுங் குருதிவந்தால். (சடுஅ)

வந்திடுங் குருதிநாளில் வகுத்தனர் சமனும்யோகம்
சிந்தையாற் பாம்பிற்பாதி சேர்ந்திடு முயர்ச்சிசெல்வம்
வந்திடு நாசங்காட்டும் வருமுயிர்க் கதிபன்வந்தால்
விந்தையா யுயர்ச்சிசெல்வம் விதித்தனர் குருநாட்பாதி. (சடுகூ)

செப்பிடுஞ் சேய்க்குப் பாம்பு நாளதனிற்சேர்ந்திடும் பலன்ச மனுகும்; இப்படிப்பலனுய்க் குருபுதன் திசையி லியம்பினர்முன்னு ரைவருமால், தப்பிடாதெனவே மறையவன் திசைபின்சாய்ந்திடுஞ் சமபலனெல்லாந், துப்பிதழாய்கேள் கணிதநூல்விதியால் சொல்லி னர்மேலவர் மொழியே. (சகூ0)

வேறு.

மந்தனு முயிர்க்குளோனும் வள்ருகேந் திரத்திலேறச்
சந்திரன் பத்தினோனுஞ் சாரிட மறையாதாகில்
வந்துயிர் தனக்கு அஞ்சோன் மாதவன் புகரேயானுற்
சிந்தையாய்த் தோன்றுஞ்சேய்க்குச் செப்பினர் வயதுபத்தே. ()

கரியவன் மால்வீடேகக் கலைமறை பிலமாவானல்
வருமுயிர்க் கோளன்ருனும் மதிமகன் பான்கேதோடு
சரியுடன் உயிர்க்கிரண்டிற் றனித்திடப் பிறந்தசேய்க்கு
அறுபது வயதாய்நூலோ ரறைந்தனர் தரணிமீதே. (சகூஉ)

மாதவர் மொழிநூலாலே வகுத்தனர்கணிதநூலோர்
போதவே பரிதிநாளிற் பொருந்திய திசைமுன்பாதி
ஓதினுர் பலன்களெல்லாம் உயர்வுடன் நாசங்காட்டும்
போதவே அதிகசெல்வம் பொருந்திடும் குசநாள்மட்டும். (சகூங)

மட்டிடும் பாம்புநாளில் வகுத்தனர் பூமிசெல்வந்
திட்டமாய் நாசங்காட்டுஞ் செப்பினர் சாதகற்குச்
சட்டமா யன்யதேசஞ் சார்ந்திடு மோராண்டாகும்
திட்டமாய்க் கணிதநூலாற் றிறமுடன் யிருப்பன்மாதே. (சகச)

அட்டமாதிபனும்பொன்னும் அம்புதி கரிபானோடு
திட்டமா யோர்வீடேகிச் சேர்ந்திட முன்பின்சுத்தம்
நிட்டைமாலுடனே தீக்கோள் நின்றிடப் பிறந்தசேய்க்குச்
சட்டமாய் வயதுமுப்பத்தஞ்செனச் சாற்றுமாதே. (சகூரு)

வேறு.

மாதவர் மொழியாற்பொன்னன் வந்திடுந்திசையில்யோகம்
நீதமாய்ச் சிவிகையோகம் நேர்த்திடுந் திசைமுன்பாதி
வேதமாய்மொழியென்றேதி விளம்பினுர் சாதகற்குப்
போதவே திசைமுற்பாதி பொன்றிடுஞ் செல்வமெல்லாம். ()

வேறு.

அட்டமந் தன்னிற்பொன்னன் அமர்ந்திட அக்கோள்தானும்
திட்டமா யுயிர்கோளோடு சேர்ந்திடக் காரிவீடால்
சட்டமாய்க் காரிஉச்சந் தனித்திடப் பிறந்தசேய்க்குத்
திட்டமாய்வயது பத்தாய்ச் செப்பினுர் கணிதநூலால். (சகூ51)

அட்டமாதிபனும்பொன்னும் அமர்ந்திடக்குருவீடாகத்
திட்டமாயுயிரோன்காரி சேரி டமறையாதாகிற்
சட்டமாய்க் கருமநாதன் சற்குரு புகர்சேயானுற்
றிட்டமாய்ப் புகர்மால்திங்கள் சேருமத் தொகையாய்ச்சொல்லே

சொல்லிடும் வயதென்றேதிச் சூட்டினர் கணிதநூலோர்
வெல்விதிப் படியாற்பாம்பு விளங்கிய திசையிற்செல்வம்
நல்விதிப் படியாற்சேரும் நாடியே உயர்ச்சியோகம்
சொல்லுமத் திசைகள்மட்டுந் தோன்றிடுஞ் சமனுய்ப்போகும். ()

வேறு.

காரியுயிர்க் கோளுடனே புகர்வீடேகிக்
கருமக்கோ ளுடன்சேர்ந்து மறையுமாகிற்
சீருடனே உயிர்தனக்கு யெட்டின்கோளன்
திங்களுடன் ஒன்றுகி மறையாதாகில்
சாரிடவே உயிர்தனக்கு அஞ்சின்கோளன்
சசிமகன்பான் புகராகிப் பிலமாவானுல்
கூறினர்கள் வருஞ்சேய்க்கு வயதென்றேதக்
குறித்தனர்கள் அறுபதொன்று கொடுக்குமாதே. ()

மாதவநூல் கணிதமொழிப் படியிருபத்தொன்மேல்
வகுத்தனர்கள் சமபலனுய் உயர்ச்சிசெல்வம்
வேதமொழிப் படியாகக் குருநாள்மட்டும்
விதித்தனர்க ளிப்பலனுய்த் தரணிமீதே
நீதியுடன் காரிவருந் திசையிற்செல்வம்
நேர்ந்திடுமே அதிகபலன் உயர்ச்சியுண்டாம்
ஓதினர்கள் பிலமாகக் கரிநாள்மட்டும்
உரைத்தனரால் சாதகற்குப் பயனென்றேதே. (சஎக)

வேறு.

மந்தனுங் கேதோடொன்றுய் வருமிடம் மறைவீடாக
வந்திட அக்கோள்மூன்றில் வாய்த்திடப் பாம்போடேக
விந்தையர் யுயிரோனுறில் விளங்கிடத் தனிப்பானுகிற்
சிந்தையாய் வளருஞ்சேய்க்குச் செப்பினரன்பதாயுள். (சஎஉ)

வேறு.

அட்டமாதிபனுங் கேதுபொன்னுயிரோன் அமர்ந்திடவளரு
கேந்திரமாய், நிட்டைமால்காரி பத்தினோனுடனே நின்றிடங்காரி
வீடானல், சட்டமாய்வயது அறுபதுநாலாய்ச்சார்ந்திடுஞ்சாதகன்
றனக்கு, அட்டமாதிபனுங் கேதுபொன்னுயிரோன் அமர்ந்திட
மறைந்திடவருமால். (சஎகூ)

மறைந்திடயிக்கோள் பவர்மனையதனில் வந்திடச் சுபர்கள்
நோக்காதால், குறைந்திடும்வயது முன்னுரைதொகையிற் குறித்
தனர் பாதியென்றுரையே, அறைந்தனர்பிலமாய்க் கணிதநூல்விதி
யா லமந்திடுஞ் சாதகன்றனக்கு, உறைந்திடுங்கரிமா லுடன்மறை
ந்திடுமா லுரைத்ததிற்றுஞ்சிடும்பாதி. (சஎச)

வேறு.

கரியவனும் புகர்வீடாய் மறையோன்நோக்கக்
கருதுமிக்கோள் உயிர்தனக்கு முன்பின்னாக
வருமுயிரோன் சுபராகி உயிர்க்குநாலில்
வளர்ந்திடவே பத்தினுக்கோ ளுடன்வந்துற்றால்
தரும்வயதன் பதுயேழு பதினொன்றாகச்
சார்ந்திடுஞ்சே யவன்றனக்கு மரணங்காட்டும்
அருமறைநூற் படியாக வயதேழொன்றில்
அதிபதியாய் வருந்தந்தை கனவான்மாதே. (சஎடு)

மாதேகேள் வரும்வயது யீரெட்டாறில் வருமுயற்சிபதிகீர்த்
திவளரும்பூமி, ஓதிடுவன் தனவானாய் உயிர்ச்சிமேலாம்உதவிடுமே
பாம்புதிசை வரும்நாள்செல்வம், நீதியுடன் அரசர்புகழ் கீர்த்தியா
வன் நேர்பாம்பு திசைபாதி வளருமாகில், சோதிடநூற் படியாகச்
சிவிகையோகந் தோன்றிடுமே மறைவரைக்கும் உயர்ச்சிசேரும்.

சேருமென மறைதனதில் உயர்ச்சிதுஞ்சும் சேதம்வரும்மன
க்கவலை அரசர்கோபம், சாருமென மறைதிசையிற் கரிவந்துற்றால்
சார்ந்திடுஞ் சேயவன்றனக்கு உயர்ச்சிமேலாம், சீருடனே மறை
பாதி திசையிற்கீர்த்தி செப்பிடுமே பதிபூமி சிவிகையின்பங், கூறிடு

வேன் மேலோர்கள் கணிதவாய்மை குறித்தனர்கள் சாதகற்கு
வருமுறையைச்செப்பே. (சஎஎ

காரியுடன் மாலுயிரோன் ஓர்வீடேகிக்கருதிடக்கேந்திரமாகி
உதயமேறச், சூரியன் யெட்டோனுடனே கரிவீடாகத் தோன்ற
டவே உயிர்தனக்கு முன்பின்னுகக், கூறியதோர்பத்தினுக்கோள
ட்சியுச்சங் குறிகிடவே பவர்நோக்கச்சுபர்நோக்கில்லா, சீருடனே
ஆயுள்விதி கணிதமாய்ந்தோர் செப்பினர்முப்பத்தேழாய்த் தெரிய
ச்சொல்லே.

வேறு.

அட்டமத்திற் புகருடனே உயிரின்கோளும்
அருக்கனுமா லுடன்சேர்ந்து சுபர்வீடாகத்
சிட்டமுட னுயிர்தனக் கிரண்டாறெட்டிற்
சேர்ந்திடவே கரிவருகில் குருவும்பார்த்தால்
மட்டவிழ்சேர் பத்தினுக்கோள் ஆட்சியுச்சம்
வருமனைகேந் திரமாகிச் சுபர்நோக்குற்றால்
சட்டமுடன் வரும்வயது கணிதமாய்ந்தோர்
சாற்றினர் அறுபதெனத் தரணிமீதே. (சஎகூ

மாதவர்நூற் படியாகக் கணிதநூலோர்
வகுத்தனர்மே லோர்மொழியாய்த் தரணிமீதில்
ஓதிடுவன் உயிர்தனிலே அரவுமாந்தி
உறைந்திடவே பிலயானு லுரைமுன்சொன்ன
வேதன்விதிப் படியாக யீரேழொன்று
விளங்கிடுமுன் றொகையதனில ஒழியுமாதே
நீதியுடன் நாற்பதஞ்சு வயதென்றோதி
நிச்சயமாய்த் தமிழாய்ந்து கணிதஞ்செப்பே. (சஅ0

செப்பிடவே புகர்வருநாள் சமனுஞ்செல்வம்
சேர்ந்திடுமே பிலமாகப் பரிநாள்வந்தால்
ஒப்படியே யிச்சேய்க்குத் தனம்வந்தெய்தும்
உரைத்தபடி முன்பாக வளரும்பூமி

தப்பிடுமே மதிதிசையில் வருமுற்பாதி
சாய்ந்திடுஞ்சேத் திரம்பூமி தவறும்மாதே
அப்படியென் றெண்ணாதே மதிபிற்பாதி
யானதினால் கேஷத்திரமும் பூமிவரும் பிலமே. (சஅக)

வேறு.

அட்டமாதிபனுங் காரியுமோர்வீ டமர்ந்திடக்கேந்திரத் துறு
மால், நிட்டைமானுபிரோன் புகர்பதியுடனே நின்றிடம் - வாக்கு
மூன்றேழாய்ச், சட்டமாயுதய கேந்திரமதனிற் றனிததிடப் பொ
ன்னன் வந்துற்றால், திட்டமாய்வயது ஐம்பதுமூன்றாய்ச் செப்பி
னர் சாதகன்றனக்கே. (சஅஉ)

சாதகன்றனக்கு வயதுபத்தேழிற் சார்ந்திடும்உயர்ச்சிவந்தெ
ய்தும், ஓதினர்பிலமாய்ப் பதிநிதிபூமி உரைத்தனர் அரசனிற்றோ
ஷம், நீதமாயுயர்ச்சி வருமெனமேலாய் நின்றிடுங்காரிநாள்வரையு
ம், வேதநூற்படியா லுயர்ச்சியே பிலமாய் விதித்தனர் சாதகன்ற
னக்கே. (சஅங)

வேறு.

அட்டமத்தோன் கேந்திரமாய்ச் சுபர்களோடு
அமர்ந்திடவே பரிவீடாய்த் தரிக்கயிக்கோள்
திட்டமுடன் உயிர்க்கோளன் கரியனோடு
சேரயிவ ருடன்சுபர்கள் கேந்த்ரதிரிகோணம்
சட்டமுடன் சேய்கருமன் குருவினில்லஞ்
சாரயிவர் சேய்மரணம் யிருபத்தஞ்சோன்
அட்டமத்தோன் பாவருடன் மறையுமாகில்
அறைந்திடுமுன் தொகைவயதில் ஒழியும்பாதி. (சஅச)

சூரியன் வீடதனில்வரு மாயுள்நாதன்
தோன்றிடத்தன் னுடன்கருமக் கோளன்யேகக்
காரியிருந் திடுமதின்கோள் அருணனில்லங்
கனகனுடன் மறையாமற் பவர்கள்நோக்கப்
பாருயிர்க்கோள் புகராகிப் பவர்களில்லம்
பதிந்திடவே உயிர்பாழாய்ப் பவர்மூன்றுற்றால்
தாருலகி லிவன்மரணம் யெழுபதாகத்
தங்கியசேய் யெமபுரஞ்சென் றணுகுமென்றே. (சஅரு)

அணுகுமெனக் காரியுடன் பாவர்சேர
அவன்றனக்கு முன்சுபர்கள் பவர்கள்ஒன்றாய்
நணுகிடவே யிவன்மரணம் யெழுபதாயுள்
நாசமதில் நாலுடன்யேழ் யோகம்ஓது
துணிவுடன்முக் கோளுடனே உயிரின்கோளன்
தோன்றிடமுன் பவர்வருகில் உயிரில்யெக்கோள்
அணுகிடவே அறைந்தனர்முன் வயதில்ஆறு
அழியுமென வாகம நூல் வழியென்றோதே. (சஅசு)

சனியவன்றன் வீடதுவாய்த் தரிக்கயிக்கோள்
சாருயிர்க்குக் கேந்திரமாய்ச் சுபரில்லாதால்
புனிதமுடன் உயிர்க்கோளன் ஆரலாகி
பொருந்துமிடங் கேந்திரமாய்ச் சுபரொன்றாக
இனிதமுடன் சூரியன்கே துடனொன்றாகி
யெட்டினுக்கோ ளில்லமதிற் றரிக்கடயெட்டோன்
சனிதனக்கு மறைந்திடவே உயிர்க்கோள்பாதி
தனித்திடவே யெழுபதெனச் சாற்றுமாயுள். (சஅஎ)

சாற்றுமென ஆயுளெழு பதுபத்தாகச்
சார்ந்திடுமா கமப்படியாய்க் கணிதமோதும்
பாருயிர்க்கோள் சேயவனாய் மறையஆட்சி
பகர அவருடன்சுபர்கள் தரியாதானால்
கூறியதோர் யெழுபதனிலழியும்பத்து
குறித்தனர்சேய் நமபுரஞ்சென் றணுகுமென்று
ஆரியன்மே லாணையெனக் கணிதமாய்ந்தோர்
ஆகமசாஸ் திரப்படியே அறையலாமே. (சஅஅ)

வேறு.

மதிமகனுயிரோனாகி வளருகேந் திரத்தில்சேஞ்
சதிருடன்கரிபாம்போடு தரித்திட உடனொன்றாக
விதியுட னதற்குநாதன் விளங்கிடக் கரிவீடானாற்
பதிதனில் மரணம்ஐம்பத் தொன்பது பகருமாதே. (சஅகூ)

மாதவர்மொழியால்வெள்ளி மறைந்திட மாந்தியோடு
சீதமாய் மறைக்குநாளில் நின்றிட ஆட்சியானால்

வேதமாய்ப் புகரோன்நாளில் விளங்கிடப் பரிவந்துற்றால்
ஓதின மனைவியாலே உதித்திடு முயற்சிகூறே. (சகூ0)

கூறினர் முயற்சிமேலாங் குறித்தனர் தனங்கள்பூமி
சீருட னரசரின்பம் சேர்ந்திடும் புகழோனுவன்
ஆறிரு யெட்டோனஞ்சி லறைந்திடு வயதின்மேலாய்ப்
பாரினிற் றனவானுகிப் பகர்ந்தனர் சிவிகையோகம். (சகூக)

வேறு.

வருமுயிர்க்கோள் புகராகி மறையினில்லம் வ்ளருச்சமாகிட
வேமதியுமானுக், தருமுயிர்க்கோள்தனைக் கூடி தரிக்கஅக்கோள்சா
ருயிர்க்குக்கேந்திரமாய் தனிக்குமாகில், புரி குழல்சேர் கரியனொடு
கருமநாதன் புந்திமனைதரித்திடவே பொருந்துஞ்சேய்க்கு, அரும
ரைநூற் படிவிதியாற் கணிதமாய்ந்தோர் அறைந்தன ரைம்பது
யேழு அதனிலொன்று. (சகூஉ)

வேறு.

சந்திரனும் உயிர்க்கேழாய்ப் பவர்களில்லம்
சாரயிவர் கேந்திரமாய்ப் புகரொன்றுக
வந்துயிரில் மாந்திகரி வருமெட்டோனும்
வரஉயிர்க்கி ரஞ்சாங்கோள் மறையாதானுல்
சிந்தையுடன் தோன்றியசேய் வயதுமேலோர்
செப்பினர் நாற்பது ஆறுயேகமாகும்
விந்தையுடன் உயிர்க்கோளன் மறையுமானுல்
விளங்கியமுன் றெகைவயதில் ஒழியும்மூவேழ். (சகூங)

மதியுமுயி ரோனுகிக்கேந்திரத்தில் வாழ்க
மதிதனக்கு ஒன்றேழில் மந்திரிவந்திடுமால்
துதிஆரல் பத்தோனுஞ் சுபருடனேகூடித்
தோன்றுமிடம் பிலமாகிக் கேந்திரம்வந்திடுமாம்
சதியுடனே அட்டமத்தோன்காரி யரவுடனே
சாருமிட மறையாமற் பிறந்திடுஞ்சாதகற்கு
விதியுடன்சேய் காரிபுகர்சேது வருந்தொகையாய்
விதித்தனர்நூல் கணிதமொழிப் படியெனவென் றுரையே.

உரைத்திடுஞ்சா தகற்குவரும் உயிர்குருதன் திசையில்
ஓதிடுவன் யோகபலன் உலகதனிற்சமனும்
விரைத்திடுவன் குருதிசையில் நிதிபதிக்ஷேத்திரமாய்
விதித்தனர்கள் அற்பபலன் விதியுடன்வந்தணுகும்
முறைப்டிவந் தேகிவரும் நாற்பதுமேலபிதம்
முயன்றிடுஞ்சா தகற்குஅது மோசவிதம்வருமால்
உரைத்தனர்கள் கரிமாலும் வுயர்வுடன்மாய்ந்திடவே
உண்மையுடன் கணிதமொழி ஓதிடுநூலோர்கள். (சகூகூ)

வேறு.

மாலவன் பரதிகாரி மந்திரிபுகரோ டொன்றாய்ச்
சாலவே உயிருக்குயெட்டிற் றரித்திடப் பாவர்வீடால்
தூலமா யிக்கோள்தன்னைத் துணிவுடன் சுபர்நோக்குற்றால்
பாலகன் வயதுமூன்றிற் பாழ்படப் பிறக்கும்மாதோ. (சகூகூ)

புந்திசேய் காரியெட்டோன் பொன்னுயிர்க் கோளோடொன்றாய்
வந்திடும் உயிர்க்கீராறில் வந்திடப் பாவர்வீடால்
சிந்தையாய்த் தோன்றுஞ் சேய்க்குசெப்பினர் வயதுசெப்ப
விந்தையாய்க் குருநாட்பாதி விதித்தனர் தரணிமாதோ. (சகூஎ)

வேறு.

அஞ்சினில் மாலுங்கரியவனுக அருக்கனும் நான்கினிற் குறு
கத், தஞ்சமாயாறிற் புகரவனுட்சி சர்ப்பமும் யேழினிற் றோன்ற,
வஞ்சியேயெட்டிற் சேயவன்வருக வகுத்திடும் பொன்வியமாகக்,
கொஞ்சியேமதியுங் குளிகனும் லாபங்குறித்தனர் சிலையுயிராக. ()

சிலையுயிராகவந்திடுஞ் சேய்க்குற் சிகியவன் உயிரினிற்றோன்
றக், குலவியபலன்க ளுரைத்தனர்மேலோர் குருதிசையதனில் வந்
துதிப்பன், நலமுடன் மாலோன்றிசையதுயோகம் நல்கிடுஞ் சமம
துவாகப், பிலமுடன்கொடியோன் றிசையதுநடுவிற்பெற்றிடுந் த
த்துவந்தணுகும். (சகூகூ)

தத்துமொன்றாகும் புகர்திசைமுன்னில் சார்ந்திடுமரணமுண்
டாகும், இத்தலமதனிற் கரியவன்றிசையில்யெய்திடுஞ் சகோதரசு
பமும், கொத்துடன் துணைவர்சலனமுந் துணைவிகுறித்திடுமங்கலநா

சம், வித்தையும் பொன்னின் „றிசையதுவருமேல் விளங்கிடதக்க தென்றுரையே. (௫௦௦)

உரைத்தனர்மேலோர் சேயவன்றனக்குஉண்மையாய்க்கரிய வன்பிறகூர், விருத்தமாய்த்துணைவர் பிறந்திடுவார்கள் விளங்கிடும் மாலவன் றிசையில், கதித்திடுமொன்ரு மென்றுரைத்தனர்கள் கந்தனைத்துதித்திடத் துணைவர், குறித்தனர்தீர்க்கம் ஆண்களும்மூன் று கோதையர் மூன்றெனக்குறியே. (௫௦௧)

குறியென உரைத்த சாதகன்றனக்குக் கூறுவர் புத்திரபலனை மறியெனநால்வர் வந்திடுவார்கள் மதித்தனரிரண்டதிலற்பம், தறி யெனவொன்று சமமதாய் வருகுஞ்சார்ந்திடும்வயதுமுப்பதற்குள் சிறியெனத்தாரம் வந்திடும் நிறமுஞ் சிகப்பியும் வளர்த்தியுஞ் சம மே. (௫௦௨)

சமமெனவுரைத்த சாதகன்றனக்குச் சாற்றினர் பெரியவர் மொழியால், நிம்மதாய்ச் சேயோன் வளர்த்தியுஞ்சமமாம்நேர்ந்தி டுநிறங்கறுப்பதுவாம், தமமெனச்சாந்தன் மவுனவஞ்சகத்தன்சார் ந்திடும் வித்தையுஞ்சமமாம். அமர்ந்திடுமிவற்கு யிப்பலனுக அறை ந்தன ரந்தணர் மொழியே. (௫௦௩)

அந்தணர்மொழியால் வந்திடுஞ்சேய்க்குஅறைந்தனர் மாலவ ன்றிசையில், தொந்தமாயவன்றன்றிசை நடுவதனிற் சொல்லினர் தந்தைக்கேகருமம், விந்தையாயவன்றன்றிசையது பின்னுல்விதித் தனர் மாதுருகருமம், சந்ததமிந்தக் கணிதநூற்படியேசாற்றினன் சங்கரன்ருனே. (௫௦௪)

வேறு.

நீலனுமால் பார்க்கவனும் மதியெட்டொன்ருய்
நின்றிடங்கேந் திரமாகிச் சுபர்நோக்கில்லா
தூலமதாய் உயிர்க்கதிபன் பவராய்த்தோன்றி
தோன்றுமிடம் பவர்வீடாய்ப் பவர்சுபர்நோக்குற்ருல்
சாலவரு முயிர்தனக்கு யெட்டஞ்சோனுஞ்
சாருமிடம் பிலமாகி வளருஞ்சேய்க்கு
மால்மதிபொன் புகர்துகையாய் வயதென்ருேதி
வகுத்தனர் சாதகற்கு யிதுமரணமாதோ. (௫௦௫)

மாதுயிரோன் வயதிருப தின்மேற்செல்ல
வந்திடுமே பலவிதத்தாற் புகழுங்கீர்த்தி
நீதமுடன் அத்திசையிற் சமனும் செல்வம்
நேர்ந்திடுமே யாவருக்குங் கனவாணுவன்
ஓதிடுவன் காரிதனிற் பலனக ளற்பம்
உலகதனிற் சாதகற்கு உரைத்தார்மேலோர்
வேதன்விதிப் படியாக மாலோன்வந்தால்
வேண்டிய பேர்க்குப்காரம் விதித்தார் நூலோர். (கு0சு)

வேறு.

கரியவன் சேய்வீடேகக் கலைமறை மறையாதாகில்
வருமுயிர்க் கோளன்யெட்டோன் வருமிடஞ்சுபர் வீடாகத்
தருமுயிர் தனக்குப்பத்தோன் சாரிடம் புகர்மால்வீடால்
வருமுயிர் சேய்க்குஆயுள் வகுத்தனர் அறுபதாமே. (கு0எ)

அறுபதிவயதென்றோதி அறைந்தனர் சாதகற்கு
இருபது வயதின்மேலாய் இருநிதி உயர்ச்சிசெல்வம்
வருவது அதிகமாக வகுத்தன ரறுபதுக்கும்
மருவிலா திருப்பனென்று வகுத்தனர் கணிதநூலோர். (கு0அ)

பொன்னவன் உயிரோனுகிப் புகழ்மதி யுடனென்றாக
மின்னிய கருமந்தன்னில் விளங்கிடக் காரியெட்டோன்
நன்னிய பத்தோனுடு நவின்றிட மறையாதாகில்
சொன்னது வயதுஐம்பத் தேழெனத் தோன்றுமாதோ. (கு0கூ)

மாதவர் மொழிநூலாலே வகுத்தனர் பிலமாஞ்சேய்க்கு
வேதமா யிறைவன்நாளில் விதித்தனர் பூமிசெல்வம்
போதவே உயர்ச்சிமேலாய்ப் புகழ்பெற வாழ்வுமாகும்
ஓதினர் அதிகபாக்கியம் உரைத்தனர் யார்க்குமேலாய். (கு0க0)

அட்டமா திபனும்பத்தி லமர்ந்திடக் காரியோடு
திட்டமா யுயிர்க்கோள்நீசஞ் சேர்ந்திடப் பாவர்வீடால்
சட்டமாய்க் கருமநாதன் சாரிடஞ் சசிமால்வீடாய்த்
திட்டமாய் நடக்குஞ்சேய்க்குச் செப்பினர் முப்பத்தெட்டாய். ()

சந்திரன் உயிரோனுகச் சாரிடம் புகர்சேய்வீடாய்
வந்திடு முயிரோனேடு மால்கரி பத்தோன்வந்தால்
சிந்தையாய்த் தோன்றுஞ்சேய்க்குச் செப்பினர் புகர்மால்காரி
வந்திடுந் தொகையாயாயுள் வகுத்தனர் தரணிமாதே. (ருகஉ)

மாதுல னுகிவந்த வருமுயிர் சாதகற்கு
ஓதினர் பூமிசெல்வம் உயர்வுடன் நாசங்காட்டும்
வேதமாய் உயிரோன்வந்தால் விதித்தனர் கீர்த்திமானுய்
சேதமில் லமல்வாழ்வன் சேயவன் றனக்குமாதோ. (ருகங)

குருவுமே கரிவீடேகக் குறுகிட அதற்குநாதன்
வருமுயிர் தனிலேயேறி வந்திட யெட்டோன்பத்தால்
கருதியே அஞ்சோன்வெள்ளி கதிரவன் மால்சேயானுல்
குருதிமால் புகர்பொன்னுண்டாய்க் குறித்தனர் வயதென்றேதே.

ஓதிடு முயிர்க்குயெட்டில் உயர்வுடன் கரிசேய்மாலாய்ச்
சேதமாய் மறையுமாகிற் செப்பிய வயதிற்பத்து
போதவே நாசமென்று புகட்டினர் கணிதநூலோர்
ஓதினர் மதிபாம்பானுல் உயர்வுடன் கழியுமஞ்சே. (ருகடு)

அஞ்சினேன் திசையிற்செல்வம் அறைந்தனர் பிலமாய்ச்சேரும்
விஞ்சையா யுயர்ச்சிபூமி விதித்தனர் அதிகமாகத்
தஞ்சமாய் வாழ்வனென்று சாற்றினர் கணிதநூலோர்
அஞ்சினேன் திசையேயுற்றுல் அறைந்தனர் நாசம்பூமி. (ருகசு)

வேறு.

காரியுயிர்க் கோளுடனே குருவீடேகிக்
கருங்கொடியோன் புகருடனே காரியுடன்வருமால்
சீருடனே சேய்மதியு முயிர்க்கீராறிற்
சேர்ந்திடவே சுபர்நோக்கப் பவர்மனைவந்திடுமால்
மாறிடுஞ்சேய் உதித்திடுநாள் முப்பதனிற்றந்தை
வகுத்தனர்கள் தவவேடம்வந் திடுமென்றேதே
கூறுடனே பிதாவின்சொல் தடுத்திடுவானெனவே
குறித்தனர்கள் வயதுஅன்ப குருவுதொகைவுரையே. ()

குருவுதொகை வயதெனவே சோதிடநூலாய்ந்தோர்
குறித்தனர்கள்வருஞ்சேய்க்குகொடுமொழியென்றுரைமே
வருமுயிரோன் காரியொடு அட்டமத்தோனுடனே
வருமிடங்கேந் திரமாகிச் சுபர்மனைவந்திடுமால்
தருமுயிர்க்கஞ் சினிற்பவர்கள் தரித்திடவேசுபருஞ்
சாருமனை பிலமானால் சாற்றிடுவோம் ஆயுள்
அருமாரல் காரிமதி புகர்தொகையாமெனவே
அறைந்தனர்கள் கணிதமொழி நூலெனவென்றேதே.

ஓதுமொழி யிப்பலனாய் உற்பவிக்குஞ்சேய்க்கு
உலகதனிற் சொன்னவய துறுதியுடன்பாரே
நீதியுடன் காரிஉயிர்க் கோளுடனேயெட்டோன்
நின்றபிடம் பிலமாகிச் சுபர்மனைவந்திடுமால்
வேதமொழிப் படியெனவே உதித்திடுஞ்சேயாயுள்
விதித்தனர்கள் காரிபுகர் மால்தொகையாமெனவே
ஓதிடுவா ரிப்பலனாய்க் கணிதமொழிநூலோர்
உரகதத்து வயதெட்டில் உயர்வுடனே விஷத்தால்.

விஷமுடனே தீரவொரு சர்ப்பஞ்செய்து
விடையோன்றன் னாலயத்திற் சாந்திசெய்வாய்
வசமுயிர்க்கோ ளட்டமத்தில் வாய்த்திடவேகாரி
மதிமகனுஞ் சேய்புகரும் வந்திடக்கேந்திரமாய்
இசைவுடனே வருஞ்சுதர்க்கு குருதொகையால்ரெட்டி
யெனவயதென் றுரைத்தனர்க ளியற்றிய நூலோர்கள்
வசமுயிர்க்கோள் மதிமகன்சேய் புகர்காரிமறைந்தால்
வகுத்தனர்கள் வயதுஒன்று வந்திடுமென்றேதே.

மந்தனுயிர்க் கோளுடனே மால்வீடேகி
மறைந்திடஅக் கோளுடனே சுபர்வந்துற்றால்
சிந்தையுட னுயிர்தனக்கு யெட்டஞ்சோனுஞ்
சேருமிட மறையாமற் சுபர்பவர் நோக்கிடுமால்
வந்திடுலக் கினந்தனக்கிப் பத்தின்கோளன்
வருமிடங்கேந் திரமாகிச் சுபர்வீடுற்றால்
மந்தனுமால் வெள்ளிவரு திசையாண்டாக
வகுத்தனர்சா தகற்குபிது வயதென்றேதே. (ருஉக

ஒதுபிரோன் திசைமறைவன் வருநாள்செல்வம்
உரைத்தனர்கள் சமபலனாய் உரைக்கும்பொன்னில்
வேதன்விதிப் படியாக மறைநாள்முன்னில்
விதித்தனர்கள் உயர்ச்சிநிதி யுதவுமாதே
நீதமுடன் காரிதனில் தனத்திற்செல்வம்
நேர்த்திடுமே முன்னுறையா யாட்சிகாட்டும்
சேதமெனப் பின்னுறையாய்ப் பூமிசெல்வஞ்,
செப்பினர்சா தகற்குபிது திறமென்றோதே. (ருஉஉ)

வேறு.

அட்டமாதிபனுங் காரியுமுயிரோன் அமர்ந்திடக் கேந்திரம்
வருமால், திட்டமாயுயிர்க்குப் பத்து அஞ்சோனுஞ் சேரிடம்உதய
கேந்திரமாய்ச், சட்டமாய்த்தோன்றுஞ் சாதகன்வயது சாற்றினா
வயத்தேழாகுந், திட்டமாயுயிர்க்குப் பத்துஅஞ்சோனுஞ் சேரிட
மறைந்திடவருமால். (ருஉங)

வருமுயிர்சேய்க்கு வகுத்தனர்பிலமாய் மதிகரி புகர்தொகை
வருநாள், சரியுடன்வயதென் றோதினர்கணிதர் சாற்றினர் மேல்வி
ளிப்படியால்தருமுயிர்க்கோளன் யெட்டினோன்காரி சாரிடமறைந்
திடவருமால், குறிகிடும்வயதுமுன்னுரைபாதி குறித்தனர்சாதகன்
மனக்கு. (ருஉச)

அட்டமாதிபனுங் காரிஅஞ்சோனும் அம்புலி பத்தினோன்
உயிரோன், திட்டமாய்க்கோளன் ஓர்மனைபிலமாய்ச் சேர்ந்திட ம
றைந்திடாதிடுகில், சட்டமாய்த்தோன்றுஞ் சாதகன்வயது சற்குரு
புகர்தொகைரெட்டி, அட்டமாதிபனும் அஞ்சினோன்உயிரோன்
அமர்ந்திட மறைந்திடவந்தால். (ருஉரு)

வந்திடுஞ்சேய்க்கு வகுத்தனர்வயது மால்புகர் மதிகொடிதி
சையாய்த், தந்திடுந்தொகையென் றோதினர்கணிதர் சாற்றினர்
மேல் மொழிப்படியால், வந்திடுங்காரி மால்புகர்திசையில் வகுத்
தனர்பலனெலாம்அற்பம், முந்திடப்புகர்நாள் பாதிமேலாகி மொ
ழிந்தனர் சமபலன்மாதோ. (ருஉசு)

காரிஉயிர்க் கோளாகிக் கேந்திரம் வந்திடுகில்
கருதிமக்கோ ளுடன்சேயுங் கணக்கனும் பாம்புடனே
சாருமிடம் புகர்வீடாய்ச்சற்குருநோக்கிடவத்
தானதிபன் பவரோடே மறைந்திடவே சுபமாம்
கூறிடவே சேய்வயது கணிதமொழிப்படியால்
குறிந்தன்ரெண் பதுநாலாய்க் கூறினர்கள்பிலமாய்க்
காரிஉயி ரோன்மறைந்து சுபருடவீடுற்றால் கருதும்வய
தன்பதெட்டாய்க் காட்டினர் நூல்மொழியால். (ருஉஎ)

மொழியாகக் காரிதிசை மால்திசை வந்திடுகில்
மொழிந்தனராம் காரிதிசை முற்பாதிமோசம்
அழிவுவரும் மாதர்வழி பிதாவழியிற்கிலேசம்
அறைந்தனர்கள் காரிதிசை பிற்பாதிபிலமாம்
தெளிவதலால் பூமிநிதி சேர்ந்திடுமேபிலமாய்ச்
செப்பினர்கள் மாலவனிற் சேர்ந்திடுமே உயர்ச்சி
மொழியாகச் சமபலனுய் முற்பாதிவரையில்
மொழிந்தனர்கள் சாதகற்கு மூன்றுரையாய்ப்பலனே. ()

வேறு.

மந்தனும் பரிதியோடு வளருங்கேந் திரத்திலேற
வந்துயிர்க் கோளன்ருனும் மிறைந்திடச் சுபர்வீடாகச்
சிந்தையாய்க் குருமால்சேயும் சேரிடம் மறையாதாகில்
விந்தையா யன்பத்தொன்ருய் விதித்தனர் வயதென்ருேதே. ()

ஒதுயிர் தனக்குஅஞ்சில் உயர்வுடன்கொடியோன் வந்தாற்
சேதமா யேழுதள்ளித் திறமுடன் வயதென்ருேதே
போதவே அக்கோளோடு புந்திசெய் பரிவந்துற்ருல்
சாதகன் றனக்குமுப்பத் தொன்றெனச் சாற்றுமாதோ. (ருஙo)

மாதவர் மொழியால்மேலோர் வகுத்தனர் பிறக்குஞ்சேய்க்கு
ரீதமாய் வயதுபத்தில் நெடுவித விஷமாய்க்காட்டு
ஓதிடும் வயதுஒன்றில் உயர்வுடன் மாதாசாவாம்
வேதமாய் மொழியென்ருேதி விதித்தனர் கணிதமாய்ந்தோர். ()

வேறு.

அட்டமாதிபனுங் கேதுடன்கூடி அமர்ந்திடச் சுபர்மனையாகத்
திட்டமாய்க்காரி மதிபதியுடனே சேரிடங் கேந்திரங்குருமால்

சட்டமாயுயிரோன் பாவர்வீடேகித் தரித்திடப் பாவர்வந்திடுகிற்
றிட்டமாய்வயது பத்துநாலஞ்சாய்ச் செப்பினர் சாதகன்றனக்கு.

அட்டமாதிபனுங் காரியுமுயிரோன் அமர்ந்திட வளருகேந்திரமாய்; நிட்டைமாலஞ்சோன் உதையகேந்திரத்தில் நின்றிடச், சுபமிலாதானுல், மட்டுடன்வளருஞ் சாதகன்றனக்கு வகுத்தனர் வயதுஅஞ்சதினுல்; சட்டமாய்நடத்துங் கணிதனூற்படியே சாற்றினர் மேலவர்மொழியால் (ருகுகு)

வேறு.

அட்டமந் தன்னிற்சுங்கன் அமர்ந்திட உயிர்க்குநாதன்
றிட்டமா யக்கோளோடு தினகரன் மதிமாலேகச்
சட்டமாய்க் காரிசேஞ் சார்ந்திடப் பிலமாவானுல்
திட்டமாய் வயதுமுப்பத் தஞ்செனச் செப்புமாதோ. (ருகுச)

வேறு.

அட்டமாதிபனுங் காரிசேய்மாலும் அமர்ந்திட வளருகேந்திரமாய்த், திட்டமாயுயிரோன் பாவரோடொன்றுய்ச் சேர்ந்திடக்கேந்திரமாகிற், சட்டமாய்த்தோன்றுஞ் சாதகன்வயது சாற்றினுறுபதொன்றதனுற், றிட்டமாய்வயது யிருபதுமேலிற் சேர்ந்திடும்முயற்சி பாக்கியமே. (ருகுரு)

காரிசேய்அருக்கன் அட்டமாதிபனுங்கருதுகேத் திரந்தனில் வருமால், கூறுயிர்க்கோளன் கொடியகோளுடனே குறிகிட மால் மதிவீடால், சீருடன்சேய்க்கு வயதருபதுவாய்ச் செப்பினர்கணிவிதிப்படியால், காரிமால்பத்தோன்மறைந்திடவருமால் கருதினுர் வயது அன்பதினுல். (ருகுசு)

வேறு

கரியவன் சேய்வீடாகக் கலைமரை அவர்க்கீராறில்
வருமுயிர்க் கோளன்யெட்டோன் வருமிடஞ் சுபர்வீடாகத்
தருமுயிர் தனக்குப் பத்தோன் சாரிடமறையாதானுற்
கரியவன் புகர்மாலாண்டாய்க் கருதினர் வயதென்றேதே.(ருகுஎ)

அட்டமாதிபனும்பொன்னும் அமர்ந்திடச் சுபர்வீடாகத்
திட்டமா யுயிரோன்சேய்வீடதனிலே சேருமாகிற்

சட்டமாய்க் கரிமால்பத்தோன் சாரிடம் மறைவதானால்
திட்டமாய் வயதுநாலிற்செத்திடுஞ் சிசுவென்றோதே. (கு௩அ)

வேறு.

அட்டமாதிபனுங் காரியும் ஓர்வீடமர்ந்திடப்பவமிலாதிடுகிற்
றிட்டமா யுயிரோன் காரிவீடதனிற் சேர்ந்திட ஆரல்சூரியனால்,
சட்டமாயிறைவன் சொர்வீடதனிற் சார்ந்திடப் பிறந்தசாதகற்
குத், திட்டமாய்வயது ஐம்பதுநாலாய்ச் செப்பினர் தரணியில்மா
தோ. (கு௩கூ)

மந்தனும்புகரும் வருமுயிர்க்கோளும் வக்கிரன்பத்தினோன்
ஒன்றாய்,சிந்தையாயுயிர்க்குயெட்டின்கோளுடனேசேர்ந்திட ஓர்ம
னைமறையால், வந்திடுஞ்சேய்க்கு வகுத்தனர்வயது மால்புகர்காரி
பொன்றொகையாம், மந்தனும்வேராய் வரும்பவருடனே மறைந்
திடப் பவர்மனைவருமால். (கு௩o)

வருமுயிர்சேய்க்கு வகுத்தனவயது மால்புகர்மதிகொடிதொ
கையாய், சரியுடன்பிலமென் றோதியேகணிதர் சாற்றினர் மேல
வர் மொழியால், தருமுயிர்க்கோளன் பாம்பிணிற் சமனாய்ச் சார்ந்
திடு முயற்சிபாக்கியங்கள், வருமுயிர்க்கதிபன் திசைதனிற் பூமிவ
குத்தனர் உயர்ச்சிமேல்மதியே (கு௩௩)

மதியெனக்கணிதர் சாதகன்றனக்கு வகுத்தனர் உயற்சிமே
லாகச், சதியுடன்வருமென் றோதினர்பிலமாய்ச் சார்ந்திடு மிப்பல
னாக, விதியுடனஞ்சோன் உயிர்க்குநாலதனை விளங்கிடப் பாவர்
நோக்கிடுமால், பதிதனில்வளருஞ் சேயவன்வயது புகர்ந்தனர் ம
றைதொகைரெட்டி. (கு௩உ)

அட்டமாதிபனுங் காரியும்ஓர்வீடமர்ந்திடக் கேந்திரத்துறு
மால், திட்டமாயுயிரோன் பவருடன்மறைந்து சேரிடஞ் சுபர்மனை
வருமாகில், மட்டிடும்பரிமால் புகருசேயுடனே வருமிடம் வளரு
கேந்திரமாஞ், சட்டமாய்வயது யெழுபதெட்டாகச் சாற்றினர்
வருமுயிர்தனக்கு (கு௩௩)

வருமுயிர்தனக்கு வயதுமிப்படியே வகுத்தனர் கணிதநூலா
ய்ந்தோர், தருமுயிர்க்கதிபன் உயிர்தனைச்சேயைச் சார்ந்திடப் பா

வர்நோக்கிடுமால், குறுகிடுஞ்சேய்க்கு முன்னுரைவயதிற்குறித்த னர் பத்துநாலொழியும், சரியுடனுயிரைக் கோளனைச்சேயைச் சார்ந்திடச் சுபர்கள் நோக்கிடுமால். (௫௪௪)

வேறு.

ஓதயிர்க் கோளன்பான்வீ டுறைந்திடப் பவரோடொன்றாய்
வேதமா யிக்கோள்மூன்றில் விளங்கிடப் பிறந்தசேய்க்கு
நீதமா யறுபத்தொன்றாய் நிச்சய முரைக்கலாகும்
ஓதினர் பிலமாய்நூலோர் உரைத்தனர் யோகஞ்செப்பே (௫௪௫)

செப்பிடி லரவுபொன்னன் சேருமத் திசையில் யோகம்
முற்படி அறவுநாளில் மொழிந்தனர் சமனும்யோகம்
தப்பிடா தெனவேபொன்னன் சாருமத் திசையில் முன்பால்
செப்பிடு முயற்சிசெல்வஞ் சேர்ந்திடுங் குறைவிலாதான். (௫௪௬)

அட்டமா திபனுங்கேதும் அம்புலி யிக்கோளொன்றாய்த்
திட்டமாய்ச் சேய்வீடேகிச் சேர்ந்திடப் பிலமாவானுல்
சட்டமா யுயிரோன்காரி சாரிடம் மறைவதானுல்
திட்டமாய்த் தோன்றுஞ்சேய்க்குத் திறமுடன் வயதுநாலேழ். ()

வேறு.

குருவுடனே அட்டமத்தோன் மதிகேதோடு
குறுகிடக்கேந் திரமாகிப் பவர்வீடாக
வருமுயிரோன் சுபராகி உதயமேறி
வந்திடப்பாம் புடன்சேர்ந்து பிலமாவானுல்
தருமுயிரோன் றனக்குஒன்று நாலேழ்பத்தில்
தரித்திடப்பத்தோன் கரியுஞ் சசிவரு கேந்திரமாம்
வருமுயிர்சேய் வயதெனவே செப்பினர் நூல்கணிதர்
வகுத்தனர்மால் மதிபுகர்சேய்வருந்தொகையென்றுரையே.

உரையுமெனக் கேதுபுகர் திசையதனிற்பூமி
உயர்ச்சிபதி சமபலனுய் உரைத்தனர் நூல் மொழியோர்
விரைவுடனே புகர்திசையில் சூரியன்நாள்வருகில்
விதித்தனரோ ராண்டுவரை விளங்குபலன் சமனுய்

முறையுடனே புகர்மதிநாள் வருமுதலே பூமி
முயற்சிநிதி பிலமாக மொழிந்தனர்கள் பிலமாய்
குறையிலைதாய் சாதகன்றன் யோகமெனச்செப்பு
குறித்தனரால் கணிதமொழி கூறினர்கள் பெரியோர். ()

வே று.

காரிபொன் யெட்யோன் கலைமதி உயிரோன் கடும்பவக் கோட்களொன்றுகிச், சீருடன் சுபர்வீடுதயகேந்திரமாய்ச் சேர்ந்திடச் சுபர்கள்நோக்காதால், கூறிடுஞ் சேய்க்குக் கோள்வயதெனவே குருவுமால்* புகர்மதிதொகையாம்: காரிவீடுயிரோன் காரிமால்வீடாய்ச் கரந்திடக் கரிபுகர்வயதே. (ருரு○)

கரிபுகர்தொகையாய் வயதெனக்கணிதர் காட்டினர்மேலவர் மொழியால், சரியுடன்வயது பத்து அஞ்சதன்மேல் சார்ந்திடும் நிதிபதிபூமி, வருமெனப்பிலமாய் வகுத்தனர்சேய்க்கு வருநிதிபூமி வந்திடுமால், விரிகுழல்மாதே நிதியினுற்பிலமாய் விதித்தனர்சாதகன்றனக்கே. (ருருக)

சாதகன்றனக்குக் கணிதநூல்விதியாற் சாற்றினர்முன்னுரைப்படியே, வேதமாயுயிரைக் காரியைப்பாவர் விளங்கிடநோக்கிடுமாகில், ஓதினர்வயது முன்னுரையதனில் ஒழிந்திடும்பத்துயேழஞ்சு, நீதமாயுயிராய் நிச்சயத்துடனே நிகழ்த்தினர் சாதகன்உயிரே. ()

அட்டமாதிபனுங் காரியுமோர்வீடமர்ந்திடச் சுபர்மனைவருமால், திட்டமாயிரோன்வளருகேந்திரத்திற் சேர்ந்திட வுடனவர் பவராய்ச், சட்டமாயிறைவன் உதயகேந்திரத்திற் றனித்திடப்பிறந்தசாதகற்குத், திட்டமாய்வயது ஐம்பதெட்டாகச் செப்பினர்மேலவர்மொழியால். (ருருங)

மேலவர்மொழியாற் பிறந்திடும்சேய்க்கு விதித்தனர்பாம்பு பொன்றிசையில், சாலவேபூமி நிதிபதிஉயர்ச்சி சார்ந்திடும் அதிகயோக்கியமாய்ச், சூலமயிறைவன் திசைதனில்முன்னுற் றோன்றியமுன்பலன்நாசம், ஏலவேயிறைவன் பின்னுறையதனி லிருநிதிபூமிசேய்சமனும். (ருருச)

வே று.

கரியவன் புகர்வீடாகக கோளனும் உயிர்க்கோள்தானும்
வருமுயிர் தனக்கீராறில் வந்திடச் சுபமிலாதால்

தருமுயிர் தனக்குயெட்டோன் சாரிடம் பிலமாவானுல்
குறுகிடுஞ் சேய்க்குஆயுள் குறித்தனர் மறைநாள்ரெட்டி. (௫௫)

மறைதொகை ரெட்டியாக வகுத்தனர் பிறக்குஞ்சேய்க்கு
விரைவுடனஞ்சோனீசம் விளங்கிடப் பவரோடுற்றுல்,
முறையுடன் மால்சேய்ஆண்டாய் மொழிந்தனர்தரணிமீதே
குறைவுடன் உயிரைக்கோளைக் கொடும்டவர் நோக்குஞ்சேய்க்கு.

சேயவன் றனக்குஆயுள் செப்பினர் யீராறுக
மாயுமென் றுரைத்தார்மேலோர் வரும்விதி யான நூலால்
தூயமா யுயிரிற்பாவர் தோன்றிடப் பிறந்தசேய்க்கு
ஆயுள் நூல் பரிதிநாளாய் அறைந்தனர்தரணிமீதே. (௫௬)

வேறு.

பீதகனு முயிர்க்கோளாய்க் கேந்திரமெய்திடுகிற்
பின்முன்பு சுபர்வருகிற் சுபக்கிரகமதனுல்,
நீதியுடன் காரிபுகர் வீடேகித்தணிக்க
நின்றிடஅக் கோளனுமே நேர்த்திடக்கேந்திரமாய்
ஓதுமுயிர் தனக்கீரார் தானமதிற்பாம்பு
உரைந்திடஅட்டமத்தோனும் உகந்திடவந்திடுமால்
வேதன்விதிப் படியாகப் பிறந்திடுஞ்சேய்வயது
வெய்யவன்மால் காரிபுகர் விளங்குதொகை அறையே. ()

அறையுமெனக் கணிவிதத்தால் பெரியோர்கள்மொழியால்
அமர்ந்திடுஞ்சேய் வயதுபிலம் ஆரியன்சொற்படியால்
மறையவனு முயிர்க்கோளாய் மறைந்திடப்போய்ப்பவமாய்
மால்புகர்க்கு யீராறில் வந்திடுஞ் சாதகற்கு
முறையுடன்முன் னுரைத்திடு ஆண்டதனில்வருநாசம்
மோசமென நாலிரண்டு மூன்றுரெட்டிலொழியும்
விரைவுடனிப் படியாக உரைத்தனர்மேலோர்கள்
மேதினியிற சங்கரனூல் விளம்பிடுமென்றேதே. (௫௭)

ஓதுமெனக் காரிஉயிர்த் தானமதைநோக்க
உயிரதனுக் கெட்டோனை யுயர்பவர்நோக்கிடுமால்
சீதுடனே வருஞ்சேய்தன் மரணமெனத்தொகையைச்
செப்பினர்கள் காரிபுகர்தொகைய தனையுரையே

கோதில்குணக் காரிஉயிர்த் தானதிபன்வொன்றாய்க்
குறுகிடஆரெட்டில்வரும் தானமவர் பிலமாம்
சேதமென ஆயுள்விதி செப்பினர்நூலோர்கள்
தேரிந்தவிதம் முன்னுரையிற் சேதமெனப்பாதி. ()

வேறு.

அட்டமாதிபனுங் காரிபத்தோனும் அரவமும் ஓர்மனைமறையால், திட்டமா யுயிரோன் அட்டமாதிபனுஞ் சேர்ந்திடப் பவர்மனைவருமால். மட்டிடுஞ் சேய்க்கு வகுத்தனர்வயது மால்புகர் காரி பொன்தொகையாய்ச். சட்டமா யுயிரோன் அட்டமாதிபனுஞ் சாரிடம் ஓர்மனைமறைந்தால். (௫௬)

மறைந்திடுஞ்சேய்க்கு வகுத்தனர்வயது மதிமகன் கரிபுகர் தொகையாய், றுறைந்தனர்பிலமா யரவுநாட்கரியி லஞ்சுடும்அற்ப மாய்வருத்தம், துறந்தனர்கரிமால் திசையிரண்டதனிற் றோன்றிடும் அதிகக்ஷேத்திரங்கள், குறைந்திடாதெனவே குடும்பயோக்கியனுய்க் குறித்தனர்சாதகன்பலனே. (௫௭)

சாதகன்பலனைக் கணிதநூல்விதியாற் சாற்றினர் மேலவர் மொழியால். ஓதிடுமுயிர்க்கோ ளுறைந்தவீடதிபன் உயிர்தனைப்பாவர்நோக்கிடுமால். வேதமுன்னுரையிற் பாதிமாய்ந்திடவே விதித்தனர்வயதுயிப்படியாம், நீதமாயுயிர்க்கோ ளதிபனைப்பாவர் நேர்ந்திட வயதுபொன்தொகையாம். (௫௮)

வேறு.

அஞ்சினுக்குடையோன் தசத்தினேன் ஆறேன் ஆரல்தன் மனைதனில்வருகத், தஞ்சமாய்மூன்றிற் பொன்னவனிருக்கச் சவுரியும் நோக்குறுமாகில், கெஞ்சியசேயோன் பூருவமதனிற் குறித்திடும் பறையனுபுதித்து, விஞ்சையாய்மறையோன் றனைவதைபுரிந்தவிதத்தினுகமநூலே. (௫௯)

அஞ்சினில்மாலுங் கரியவன்மனையில் அமர்ந்திடக் கரியுமூன்றிடத்தில், தஞ்சமாயாறிற் பரியவன்சுங்கன் சர்ப்பமும் மதியுடனேழில், விஞ்சையாயுயிரிற் சேயவன்கொடியும் வியாழனுமொன்றதாய்ச்சேரக், கொஞ்சிய உயிருங் கன்னியாய்வருகுங் குழவிதன் பலன்களுமுரைப்பாம். (௬௦)

உரைத்தனர்பெரியோர் சாதகன்றானும் ஊனமாய்ப்பூருவம தனிற், றிருத்தமாய்வசியர் குலமதினுதித்துச் சேர்ந்திடுங்கோடி சொத்துளனாய், விருத்தமாய்மறையோன் மாதுமோகத்தால் விளங்கிடும் பிராமணன்றன்னை, மறித்திடுமிரண்டு விழிகளைக்கெடுப்பன் மாரணத்தொழில்விதியாலே. (டுகூசு)

விதியினாலென்ற சாதகன்றானும் விளங்கிடு மறையவன்றன்னைத், துதிபெரும்விழிக ளிரண்டையுங் கெடுத்துச் சொகுசுடனவன்மனையாளைப், பதியெனவடைந்து போகமுஞ்செய்து பாரினிலிச்செனனத்தில், கதியெனவணிகர் குலமதினுதிப்பன் காட்டினர் பூருவதோடம். (டுகூஎ)

பூருவதோடம் வந்திடும்விதியால் பொருந்திடும் யிளைத்தமெய்யுளனாய், நாரியரிணக்கஞ் செய்திடப்பிலனும் நல்கிடாதவனுமாய் மயக்கம்,பேருடனடையும் ரோசியாயசலூர்பெற்றிடு வாசனுமாகி சீரிலாச்சுகத்தை யடைகுவானெனவே செப்பலா மாகமநூலே.

ஆகமநூலாற் பூருவதோடம் அமர்ந்திடுஞ் செனனமேழ்வரைக்கும், சாகமாயதுவுந் தீர்த்திடவென்றாற் றரித்திடு மிச்செனனத்தில், தாகமாய்ப்பூவி லுயர்குலத்தவர்க்குச் சார்ந்திடுங் கன்னிகாதானம், ஏகவேசெய்து பரியவன்விரதம் இருந்திடிற்றோடமும் போமே. (டுகூகூ)

தோடமும் போகும் யினிவருஞ்செனனம் சொல்லினர்வணிகர்தன்குலத்தில்,நீடியபத்துநூறுமெண்பதுவாய்நேர்த்திடுஞ்செனனமுமாகிக், கூடியவசிய குலமதிற்செனனங் குறித்திடுங் கோடிநூறதுவாய், வாடியமறையோன் குலமதிற்செனனம் வகுத்தனராயிரமாதே. (டுஎ0)

மாதர்களரசே சாதகனதன்பின் மருவிடும் வன்னிலோகத்தில் நீதமாயடைவன் தந்தைதன்செனனம் நேர்ந்திடுங் கோடிநூறதுவாய், வேதியன்குலத்தி லுதித்தபின்னுலகில் விளங்கிடுமரசர்தன்குலத்தில். கோதிலாச்செனன மாகிநற்கதியிற் குறுகிடுவானெனயுரையே. (டுஎக)

வேறு.

பொன்னவனும் அஞ்சதனில் மதியும்மூன்றில்
புகர்கொடியும் ஆறதனிற் கரியீரஞ்சில்
நன்னயஞ்சேர் பரிசேயும் மாலும்யேழில்
நாட்டினர்கள் கடகமதுஉயிராய் வத்தாள்
இன்னிலத்திற் கரிமுடிவில்சாதகற்கு
யிசைவுடனே மரணமது வருகுமென்றே
சொன்னதுதான் தவறாது தாரமூன்று
சொல்லுவர்கள் சாதகற்குக் கணிதநூலால், (௫எஉ)

வேறு.

நூலவருரைத்த சாதகன்றனக்கு நுகர்ந்திடுஞ்சேய் திசைமுடிவில், சாலவவேமாதுர்கர்மமுண்டாகும்சாற்றினர்துணைவர்களில்லான், கோலமாய்ப்பொன்னன் றிசைதனிற்பரிசேய் குலாவியேவூனதிற்றந்தை, சாலவேவிண்ணோ நலகடைந்திடுவன்சாதகன் பலனிதுமாதே. (௫எஙு)

வேறு.

சதியாக அட்டமத்தோன் பாம்புயிர்க்கோளுடனே
சாருமிடம் மறையாமற் சுபர்மனைவந்திடுகில்
விதியாகக் காரிமதி யுடன்சேர்ந்துஅருணன்
வீடதுவந் தேகிடமால் வெய்யவனும் மறையால்
துதிஆரல் மால்பரிபொன் னன்புதனின் றொகையாய்த்
தோன்றிடுஞ்சா தகற்குயிது சொல்லினர்கள் நூலோர்
சதியாக அட்டமத்தோன் பாம்புடனேமறைந்தால்
சற்குருமால்புகர்பரிதி தருந்தொகையென்றோதே.(௫எச)

ஓதிடுவோம் பெண்மயிலே மேலவர் நூல்மொழியால்
உயர்குருதன் திசையதனி லுரைத்தனர்பாக்கியமால்
நீதியுடன் காரிதிசை வந்திடுநாள்முதலே
நேர்ந்திடுஞ்சேத் திரமாக நிதிபதியோக்கியமாம்
வேதன்விதிப் படியாகத் தோன்றிடுமிப்பலனாய்
விதித்தனர்மே லோர்கள்மொழி விளம்பிடுஞ்சாதகற்கு
ஓதமுயிர்க் கதிபனையும் உயிர்தனையும்மறையும்
உகந்திடவே சரிநோக்கும் வுரைவுடன்சாதகற்கு.(௫எரு)

உரைவுடன்சா தகற்குவய தோதினர்மால்பரியா
யுரைத்தனர்நூல் கணிதமொழிப் படியென மேலோர்கள்
விரைவுடனே அட்டமத்தோன் உயிர்க்கோளன் கரியும்
விளங்குமிக்கோ ளொன்றாகி யோர்மனையாய் மறைந்தால்
தன்றயிடைவந் துதித்தனனே மாயமெனக் கணிதர்
சாற்றினர்கள் சிசுதனக்கு சாரும்வயதெனவே
முறையுடன்முக் கோளனுமே கேந்த்ரதிரிகோணம்
முயன்றிடச்சா தகற்குவய தெழுபதெனவுரையே (௫எசு)

வேறு.

சூரியன் மாலோடொன்றாய்த் தோன்றிட வுதயமேறச்
சாருபிர்க் கோளன்மாறித் தனித்திடப் பவர்வீடாகச்
சீருடன் காரியெட்டோன் சேரிடம் புகர்வீடானாற்
கூறினர் அறுபத்தொன்றாய்க் குறித்தனர்வயதென்றாதே. ()

ஓதிடுஞ் சேய்க்குயோகம் உரைத்தனர் கரிநாள்வந்தால்
வேதமா யுயர்ச்சியூமி விதித்தனர் பிலமாய்ச் சொல்ல
நீதமாய்க் கரிநாள்மட்டும் நேர்ந்திடு மதிகபாக்கியம்
போதவே வருமென்றோதிப் புகட்டினர் பிறக்குஞ்சேய்க்கு. ()

சேயவன் றனக்குயோகஞ் செப்பினர் கணிதநூலோர்
தூயனுமுயிரின்கோளைத் துணிவுடன் பவர்நோக்குற்றால்
மாயுமென்றுரைத்தார்பாம்பில் வகுத்தனர் வயதுசாற்றச்
சேயவன் றனக்குநூலோர் செப்பினர் மரணமென்றே. (௫எசு)

வேறு.

மதிமகன்பானு உயிர்க்குளோனுடனே வருமிடஞ் சுபர்மனையாகச், சதியுடனெட்டோன் ஒன்றுநான்கேழாய்த் தரித்திடப்பாவர்வீடாக, விதியுடன்காரி சுபர்களோடேகி விளங்கிடப் புகர்மதிவீடால், பதிதனில்வயது அறுபதொன்றாகப் பகர்ந்தனர் சாதகன்றனக்கே. (௬௮o)

சாதகன்றனக்குப் பெரியவர்மொழியாற் சார்ந்திடு முன்னுரைதொகையில், வேதமாய்ப்பாம்பு உயிர்தனிற்பிலமாய் விளங்கிடகாரிநோக்கிடுமால், போதமுன்னுரைத்த அறுபத்தொன்றதனிற் பொன்றிடும் நாளுயேழ்வயதாம், ஓதினர்நலமாய் அய்யஞ்சுயெட்டிலுரைத்தனர் மேலவர்மொழியால். (௫௭௧)

மேலவர்மொழியாற் சாதகன்றனக்கு விதித்தனர் கணிததூற் படியே, சாலயெட்டோனைக் காரிநோக்கிடவே தனைபுமக்கோள் கள்நோக்கிடுமால், தூலமிப்படியே தோன்றுசேய்வயது சொல்லி னர் ஆறெட்டிற்போகும், சாலயெட்டோனுங் காரியொன்றுகித்த ரித்திட வோர்மனைமறையால். (கூஅஉ)

மந்தனுமுயிரோன் மறையவன்கேது வரும்புகர் உதயகேந்தி ரமாய், வந்திடுமுயிர்க்கு வரினுமட்டமத்தோன் வருமிடம் பவர்ம னைபகையாற், சுந்தரப்படியிற் பிறந்திடுஞ்சேய்க்குத் தோன்றிடும் வயதுயெண்பதுவாம், மந்தனுமுயிரோன் வருமிடங்குருதி வளர்ம னை தோன்றிடவருமால். (கூஅங)

வருமுயிர்சேய்க்கு வகுத்தனர்வயது மால்புகர் மதிகரிதொ கையாய்ச், சதியுடனுயிரோன் சாரிடம்பகையாய்த் தரித்திடயெட் டினோனுடனே, விரிகுழல்மாதே தோன்றிடுஞ்சேய்கு விதித்த னர் வெள்ளிமால்குருதி, பரியுடன்தொகையாய் மறைந்தனர் கணி தர் பண்புடன் வாய்மையென்றுரையே. (கூஅச)

வேறு.

சூரியன்மா லட்டமத்தோன் உயிரோன்காரி
தோன்றுமிக்கோள் மறையாமற் சுபர்வீடாகச்
சீருடனே உயிர்தனக்கு அஞ்சோன்பத்தோன்
சேரிடமே சுபர்வீடாய் உயிர்க்காறுற்றால்
கூரினர்சேய் கோள்வயது புகர்மால்காரி
குருவுமதி வருந்தொகையாற் கொண்டிடுநூல் மொழியாற்
காரிஉயிர்க் கோளுடனே உயிர்க்குமூன்றிற்
கடும்பவரோருடன்மறைந்து மதிக்கெட்டானால். (கூஅரு)

மதிதனக்கெட்டாகிடவே வருஞ்சேய்ஆயுள் [ரையே
வகுத்தனர்மால் புகர்மதிபொன் வருந்தொகை யென்று
சதியுடனே ரவிமதிசேய் திசைநாட்செல்வஞ்
சார்ந்திடுமே உயர்ச்சிநிதி சமனும்பூமி
விதியுடன் வந்தேகிடுமே தோன்றுஞ்சேய்க்கு
விளம்பினரால் பாம்புதிசை வரினுமாகிற்
பதிதனில்விட்டேகிடுமே பொருளாஞ்சேதம்
பகர்ந்தனரால் சேயலைச்சல் பகருமாதோ (கூஅசு)

மாதவராற் பாம்புதிசை மறைநாள்மட்டும்
வருமலைச்சல் பொருட்சேதம் வருமென்றேதே
வேதமெனப் பாம்புதிசை கரிநாள்வந்தால்
விதித்தனராற் சமபலனு யுதவும்பூமி
சேதமெனப் பாம்புவிடும் மறைநாள்வந்தாள்
சிலவுகொஞ்சம் பொருட்சேதம் சேருந்துன்பம்
ஓதிடுவன் சேய்தனக்கு அறைந்தார் நூலோர்
உதவும் விதிப்படியாக உரைக்குமாதோ (ருஅஎ)

மாலவனு முயிரோனுய்ச் சேய்புகர்வீடாகி
வரினுமுடன் பாவருமே வந்திடவே மறையால்
நீலனுமெட்டோனுடனே கொடியோன்மேவி
நின்றிடவே சுபர்வீடாய் உயிர்க்கிராருய்ச்
சாலவே உயிர்தனக்குப் பத்தேழோனுஞ்
சாருமிடம் பவர்மனையாய்ப் பவர்வந்துற்ருல்
தூலமுடன் வருஞ்சேய்க்கு வயதென்றேதத்
தொல்புகர்பொன் பாம்புவருந் தொகையாய்ச்செப்பே. ()

அட்டமாதிபனும் ஆறினேனுயிரோன்
அமர்ந்திட வோர்மனை மறையத்
திட்டமாய்க்காரி உயிர்க்கு முன்பின்னுற்
சேர்ந்திடச் சுபர்கள் நோக்கிடாதால்
நிட்டைமால் மதியும் மாந்தி கேதுடனே
நின்றிடப் புகர்க்கு யீராருய்
மட்டிடுஞ்சேய்க்கு வருங்கொடிமுழுதில்
மாய்ந்திடும் வரும்வயதுரையே (ருஅகூ)

வேறு.

காரிசெப் குளிகனென்ருய்க் கதிரவன் வீட்டிலேகச்
சீருடன் உயிர்க்கோளெட்டோன் சேருயிர்தனில்வந்தெய்தச்
சாருயிர்தனக்குப் பத்தோன் சாரிடம் மறையாதாகில்
கூறினர் கரிமால்சுங்கன் குருவுநாள்தொகையென்றேதே. (ருகூ

வேறு

ஓதிடுங் துகையா யாயுள் உரைத்தனர் பிறக்குஞ்சேய்க்கு
வேதமா யுயிர்க்கோ ளெட்டோன் மேவிடமறைவதானுல்

போதமுன் துரையில்யிரேழ் பொன்றிடும் வயதென்றோத
நீதமாய்க் கணிதமாய்தோர் நிகழ்த்தினர் பலன்றான்செப்பே. ()

செப்பிடும் பலன்தான்பாம்பு சேருயிர்க்காறோன்னுலும்
முற்படி யிருக்கோள் நாளில் மொழிந்தனர் சமனும் செல்வம்
யிப்படிவரு மென்றோதி யிசைவுடன் அறைந்தார் சேய்க்குத்
தப்பிடாதெனவே மேலோர் சாற்றினர்மறைநாள்மட்டும்.(நுகூ2)

சந்திரனெட்டோ ஞென்றாய்ச் சாரிடஞ் சேய்வீடாக
வந்துயிர்க் கோளன்காரி வருமிடம் மறையாதாகில்
சிந்தையாய் மதிக்குப் பத்தில் தினகரன் மால்கேதுற்றால்
விந்தையா யறுபத்தேழாய் விதித்தனர் தாணிமாதோ. (நுகூஈ)

மாதவர் மொழியால் மேலோர் வகுத்தனர் வயதுசெப்பே
ஓதிடுமுயிர்க்குயெட்டில் உயர்வுடன் தீக்கோள்வந்தால்
வேதமுன் உரையில்நாசம் விதித்தனர் யீராறென்று
சேதமாய் வயதாமென்றே செப்பினர் வருஞ்சேயோகம். (நுகூச)

வருமுயிர் சேய்க்குப்பூமி வகுத்தனர் சமனுஞ்செல்வம்
இருநிதி பூமிகாலி யிசைவுட னிரண்டேழஞ்சில்
தரும்வயதனிலே செல்வஞ் சார்ந்திடும் பிலமாய்ச்செப்பே
வருமெனக் கெணிதமாக வகுத்தனர் அதிகவாக்கால். (நுகூரு)

மதிமகன் யெட்டோன்கேது வரும்பரியுட னென்றாகச்
சதிருடன் உயிர்க்குமூன்றில் தரித்திடப் பவர்வீடாக
விதியுடனுயிர்க்கோள் கேந்த்ரம் விளங்கிடக் காரிமாந்தி
மதிமகனில்லஞ் சேர்ந்தால் மாய்ந்திடும் யிரேழாண்டில். (நுகூசு)

அட்டமாதிபனும் உதயகேந்திரத்தில் அமர்ந்திடக் கேதுமா லுடனே, திட்டமாயுயிரோன் காரியோ டொன்றாய்ச் சேரிடஞ் சுபர்மனைமறையால், மட்டிடுங்கருமத் ததிபனுஞ் சுபராய்வந்திடக் காரிபொன்வீடால், சட்டமாய் வருமால் தாணியிற் றோன்றுஞ்சா தகன்வயது ஒன்பதுவாம். (நுகூஎ)

லேறு.

காரியுயிர்க் கோளுடனே மதியோடொன்றாய்க்
கருதுமிக்கோள் மறையாமற் சுபர்வீடாகச்
சூரியன்மால் புகருடனே கருமநாதன்
தோன்றிடமே சுபர்வீடாய் உயிர்க்காறுற்றால்

சீருடன்தோன் றிடுஞ்சேய்க்கு வயதென்றேதச்
செப்பினர்மால் புகர்மதிசேய் தொகையாண்டாகக்
கூறினர்நூ லோர்கள்மொழிப் படியேசெப்பக்
குறித்தனர்சா தகற்குவரும் பலனைச்செப்பே. (ருகூஅ)

செப்பிடுஞ்சா தகற்குவரும் பலனென்றேதச்
சேருமுயிர்க் காறேன்றன் றிசைமுன்போனால்
முற்படிதோன் றிடுஞ்சேய்க்குப் புகர்பிற்பாதி
மொழிந்திடுஞ்சேத் திரபலன்தள் சமனாய்ப்போகுந்
தப்பிடவே பரிமதிநாள் திசைநாளெல்லாஞ்
சார்ந்திடுமே உயர்ச்சிநிதி சாருமாதே
துப்பிதழ்வாய் மொழிந்தனர்கள் பரிநாள்வந்தால்
தோன்றிடும்பாம் பதின்விஷத்தாற் றுயரம்மாதே.(ருகூகூ)

மாதவராற் சூரியன்றன் றிசைநாள்வந்தால்
வரும்விஷமாய்ப் பிலமாக மயக்கஞ்சேரும்
நீதியுடன் மறுதேசந் தனிலேபோகும்
நேர்பாம்பு விஷமதினாற் றுயரம்நீங்கும்
ஓதிடுவன் றிசைமுடிவில் தண்ணீராலே
உரைத்தனரால் வருந்துயரம் உடனேமாயும்
வேதன்விதிப் படியாகத் தோன்றுஞ்சேய்க்கு
விதித்தனர்நூ லோர்கள்மொழிப் படியாய்ச்சொல்லே. ()

சூரியன்மா லுயிரோனுங் குளிகனோடு தோன்றிடங்கேந் திர மாகிப்பவர்வீடாகக், காரியுந்தான் வீடதுவே தனிக்கயெட்டோன் கருதுபவர் வீடாகிமறையாதாகில், சீருடன்சேய் பத்தினுக்கோள் மதியோடொன்றாய்ச் சேரிடமே சுபர்வீடா யுயிர்முன்பின்னாற், கூறினர்சேய் வயதுபுகர் மதிமால்காரி குறுகியே அத்தொகையாய்க் கொடுக்கும்மாதோ. (கூ0க)

மாதவராற் சேய்பாம்பு குருநாள்காரி வருந்திசையிற் கனவானாய் வளரும்பூமி, ஓதிடுவன் பாம்புதிசை மறைநாளெல்லாம்உரைத்தனர்பாக் கியமாக உதவுஞ்செல்வஞ், சோதிடநூற் படியாகக் கனமேபூமி தோன்றிடுஞ்சேத் திரமாக வளரும்மாதே, சேதமெனக் காரிதிசை குறையுஞ்செல்வஞ் சேதம்வரும் அரசர்பயம்செப் புமேலோர். (கூ0உ)

வேறு.

அட்டமாதிபனும் உதயகேந்திரத்தில் அமர்ந்திடப் புகர்மதி யுடனே, திட்டமாய்க்காரி மதிதனக்காரிற் சேர்ந்திடச்சுபரிலா திடுகில், நிட்டைமாலுயிரோன் மாந்திபாலொன்றாய் நின்றிட உயிர்க் குயிராறாரிற், சட்டமாய்வயது ஐம்பத்தொன்றாகச் சாற்றினர் கணிதநூல்விதியால். (கூ0ங)

விதியுடன்சேய்க்குப் பாம்புபொன்றிசையில் விதித்தனர் பாக்கியம்பூரி, சதிருடன்பிலமாய் அறைந்தனர்தனமாய்ச் சார்ந்திடும் அதிகக்ஷேத்திரமாய்ப், பதிதனில்வருமென் றோதினர்கணிதர் பகர்ந்தனர் மறைநிசையதனிற், கதிபெறயிருப்பன் குடும்பயோக்கியனாய்க் கட்டினர் சாதகன்றனக்கே. (கூ0ச)

அட்டமாதிபனுங் காரிசேயுயிரோன் அமர்ந்திட உதயகேந்திரமாய்த், திட்டமாய்ப்பாம்பு பதிபுகருடனே சேரிடம் உயிர்க்கிரண்டானால், சட்டமாய்த்தோன்றுஞ் சாதகன் வயது சாற்றினர் கணிதநூல்விதியால், திட்டமாய்க்காரி மால்புகர்தொகையாய்ச்செப்பினர் மேலவர்மொழியால். (கூ0டு)

வேறு.

மாதேகேள் மறைஉயிர்க்கோ ளாகிமாலும்
வருங்கருமக் கோளனும்பான் வரயிவர்களொன்றாய்
சாதாவா யுயிர்தனக்கு மறையாமலிவர்கள்
சார்ந்திடவே சுபர்வீடா யிருந்திடக்கேந்திரமாய்க்
கோதேகே ளட்டமத்தோ னுயிர்க்குபயமதனிற்
குறுகிடவே வளருகேந் திரமதிலேவருமால்
மாதேகேள் தோன்றியசேய் வரும்வயதுமேலோர்
வகுத்தனரெண் பதுவாக மாய்ந்திடும்வாழ்நாளே. (கூ0கூ)

நாளெனவே தோன்றியதோர் நல்லுயிர்க்கொன்பானும்
நவின்றிடுமீ ரஞ்சோனும் நாடியிக்கோ ளொன்றாய்த்
தாழுறவே அட்டமமார் தானமதாய்வியத்திற்
சார்ந்திடவே யிவர்களவர் தங்கியசேய்வயது

சூழறமுன் சொல்லிபதோ றென்பதுவாழ்நாளிற்
றுஞ்சிடுமே பாதியெனச் சொல்லினர்நூல்மொழியால்
வாழ்வுடன்தோன் றிடுஞ்சேய்க்கு வயதிருஆர்மூன்றின்
வருந்திசைநாள் முதலெனவே வந்திடும்பாக்கியமாம். ()

பாக்கியஞ்சேத் திரம்பூமி பலிக்கும்வெகுபிலமாய்ப்
பகர்ந்தனர்க ளவருமதி பகர்மொழிவஞ்சகனுய்த்
தாக்கிடுவன் வருந்தனங்கள் சாரும்வெகுபிலமாய்ச்
சார்ந்தெவர்க்கு மீயாதான் தன்மொழிமேலாகும்
தீர்க்கமுடன் முப்பதுமூன் றுமீவயதுவரையுஞ்
செப்பினர்கள் பாக்யமெனச் சேருமதின்மேலாய்
பாக்கியங்கள் வரும்பூமி நாசமெனஅலைச்சல்
பதியைவிட்டு யேகிடுமே பகர்ந்தனர்நாற்பதுவே. (கூ0அ)

வேறு.

அட்டமந் தன்னிற்பத்தோன் அமர்ந்திட அதற்குநாதன்
திட்டமாய்க் கரிபாம்போடு சேரிடம் மறையோன்வீடால்
நிட்டைமா லுயிரோன்றானும் நின்றிடம் வாக்காறானல்
சட்டமாய் வயதுநாற்பத் தாறெனச் சாற்றுமாதே. (கூ0கூ)

மாதவர் மொழியாற்சேய்க்கு வயதுயி ரஞ்சுமேலாய்
ஓதினர் சமமாய்ப்பூமி உதவிடுந் தனங்க ளற்பம்
நீதமாய் வயதுமுப்பத் தொன்றுடன் வரையுஞ்செல்வம்
ஓதினர்சமமென்றோதி உறைத்தனர் கணிதமாய்ந்தோர். (கூக0)

ஆய்ந்திட உயிர்க்கோள்தன்னை அந்தணன் நோக்குமாகில்
சேர்ந்திடு முயிரோன்நாளிற் செப்பிய புகர்வந்துற்றால்
சார்ந்திடுந் தனங்கள்பூமி சம்பிரமம் அதிகசெல்வம்
கூந்தலாள்வரும் யோகத்தாற் குறித்தனர் செல்வஞ்சேரும். ()

சேருமே தனங்களின்பம் க்ஷேத்திரம் புகழோனுவன்
சாருமே பிதாவின்பூமிசார்ந்திடுஞ் சமமதாகுங்
கூறினர் கணிதமாய்ந்தோர் குறித்தனர் மரணமட்டும்
பாரினி லதிகசெல்வம் பாக்கிய வானென்றோதே. (கூகஉ)

வேறு.

அட்டமாதிபனும் அருக்கனுமுயிரோன் ஆயுள்காரகனுடன் கூடித், திட்டமாயுயிர்க்குமறைந்திடாதிவர்கள்சேரிடங் காரிவீடே

கச், சட்டமாய்க்கருமன் மறைந்திடநீசஞ் சார்ந்திடவுடன்பவர்தரி க்கக், கட்டிடுஞ்சேய்க்கு வயதுஐம்பதுவாய்க் கருதினர் மேலவர் மொழியால். (கூகரு)

மேலவர்மொழியாற் பிறந்திடுஞ்சேய்க்கு வெள்ளிமால்திசை யதுமுழுதுங், சீலமாய்ப்பூமி பாக்கியஞ்சமமாய்ச் சேர்ந்திடும் யிப் படி யதனாற், கோலமாய்மதிநால் முதலெனமுடிவு குறித்தனர் அ திகபாக்கியனும், சாலவேஆரல் திசைவருமுதலே சாய்ந்திடும் பூமி கள்சலனம். (கூகசு)

வேறு.

ஆரலுயிர்க் கோளாகிஉதயந்தன்னில் அமரவக்கோ ளுடன்ம தியும் ஆயுள்நாதன், சாருமிக்கோ ளொன்றுகித்தரிக்கப்பத்தோன் சந்திரன்றன் புதல்வனுடன் மாந்தியோடு, கூடுமிக்கோள்மாலவன் வீடதனிற்சேரக் குளிர்மதிவீ டதிற்புகரோன் குருகுமானால், பா ரதனி லிவன்மரணம் ஐம்பத்தஞ்சிற் பகருயிர்போய் நமபுரஞ்சென் றணுகுமென்றே. (கூகரு)

வேறு.

என்றெனவே தோன்றியசேய் வளருந்தெத்தா
யிருந்திடுவன் தந்தையர்தாய் கருமமேன்றான்
தொன்றுபுகர் திசையதனிற் சேருந்தத்து
தோன்றும்வழி யாலிவன்றன் வாழ்வுமென்றே
நன்றெனவே தோன்றியதொல் புகரின்நாளில்
நாடிடுமே வரும்பூமி தனங்களின்பங்
துன்றுபுகர் திசைவரையுஞ் சமமேவாகுந்
தோன்றிவரும் பூமியினாற் பலனைச்செப்பே. (கூகசு)

செப்பியதோர் சூரியன்நாள் திசைமுற்பாதி
சேய்தனக்கு வரும்பலன்கள் பூமிநஷ்டம்
தப்பியதோர் மனப்பீடை அலைச்சல்துக்கம்
சாற்றுமென முற்பாதி வரைக்கும்மேலாய்
முற்படியே வரும்பூமி தனங்கள்சேரும்
மொழிந்திடுவன் மத்தியநாள் வரினுமானாற்
செப்புமெனத் தோன்றியசேய் தனக்குபூமி
சேருமென வெகுபிலமாய்த் தரணிமாதே. (கூகஎ)

மாதேகேள் தோன்றியநாள் மதியின்நாளாய்
வருபரிகள் பொருள்லாபம் வளருமின்பம்
ஓதிடுவன் மனதுசல னங்களில்லான்
உரைத்தனர்க ளிதுகெணித விதியாமென்பார்
சேதமென ஆரல்திசை வரினுமானாற்
செப்பியதோர் வரும்பதிகள் பூமிகஷ்டம்
தீவிதனவே மொழிவசனம் உரையுமாகுஞ்
செப்புமெனச் சாதகன்றன் பலனைக்கூறே. (சுகஅ)

சந்திரனும் அட்டமமாய்த் தனிக்கஅக்கோள்
சற்குருசேய் மாந்திபுக ருடனொன்றாகி
வந்துபிர்க்கு உபயமதாய் ஆறீராறில்
வரவவர்க்கு நாலதிலேழ் கரிகேதாக
விந்தையுடன் உயிர்க்கோளன் மறைந்துநீசம்
விளங்கிடுஞ்சே யவன்றனக்கு வயதுமேலோர்
சிந்தையுடன் கெணிதபர லாகச்சேர்த்துச்
செப்பினரைம் பதுஉபயந் தொகையென்றேதே. ()

ஓதிடவே மால்கொடியோன் றிசையின்மட்டும்
உதவியுள்ள பாக்கியமும் பூமிசமமாகும்
நீதியுடன் புகர்திசையில் ஆரல்சேரும்
நேர்ந்திடும்வந் தபகாரம் முதலேசுங்கன்
வேதமாய் முடிவதுநாள் வரையுஞ்செல்வம்
விளங்கிடும் பாக்கியம்பூமி அதிகயோகம்
ஓதினர்கள் பிலமாக வாழ்வனென்றே
உரைத்தனர்பான் றிசைமுடிவும் பலன்களற்பம். (சுஉ0)

வேறு.

வில்லினிற்செனன முதித்திடக்கொடியோன் விளங்கிட மாந்தியுமதனிற், சொல்லிய உயிர்க்கோள் கருமனோ டொன்றாய்த்தோன்றிடம் புகர்மனையாக, நல்லுயிர்தனக்கு உபயவீடதனில் நல்கிட ஆயுள்காரகனும், தொல்புகர்சருமந் தனில்வரயெட்டோன் றோன்றிடஞ் சூரியன்வீடால். (சுஉக)

வீடினிலெட்டோன் தனித்திட அக்கோள் விளங்கிட, மறைந்திடுமாகில், நீறிறவரினும் தோன்றிடுஞ்சேய்க்கு நிச்சய மாமென

வயது, சூடினர்பிலமாய் ஐம்பதொன்னுபயம் சொல்லினர் கணித வாக்கியமாம், கூடியபயனை உரைத்திடநூலோர் குறித்தனா புகர் முதற்பரியில். (சுஉஉ)

பரியினுள்வரையும் பலன்சமம்பூமி பாக்கிய மின்பமுஞ் சமமாம், குறுகிடும்மதியின் பாதிநாள்வரையுங் குறித்தலர் பலனெலாமாயும், வருமதிற்பிடை பொருளழிகிலேசம் வந்திடும் பர்தியின்மேலாய், சரியுடன்பாதிமுதலெனப்பூமி சார்ந்திடுஞ் குருதிநாள் வரையும். (சுஉரு)

வரையெனப்பூமி தனச்சுகம்வரவு வகுத்தனர் பூமியாற் பலிதம், விரைவுடன்குருதி நாளினிற்பூமி விளங்கிடும் அதிகக்ஷேத்திரமாம், அறையென அதன்மேலரவுவந்திடுகில் அழிந்திடும் பூமிக்ஷேத்திரங்கள், குறைவுடனுகக் குறித்தனர் துன்பங்கொண்டிடுஞ்சாதகன்பலனே. (சுஉச)

வேறு.

அட்டமத்தோன் கேந்திரமாய் ஆரலோடு
அமர்ந்திடவே அட்டமத்திற் கொடியபாவர்
திட்டமுடன் உயிர்க்கோளன் மறையனுகிச்
சேர்ந்திடங்கேந் திரம்வளரத் தனிக்குமாகில்
சட்டமுடன் பஞ்சமவீ டதனிற்காரி
தனித்திடவே அதற்குடையோன் உபயந்தன்னிற்
கட்டினர்நல் லரவுடனே தரிக்குமானுற்
கருதிடச்சேய் வயதெனவே கணிதநூலோர். (சுஉடு)

நூல்மொழியால் ஆயுள்விதி அறுபத்தொன்று
நாலுமதில் மரணமெனக் கணிதவாய்மை
சீலமுடன் புகர்திசையின் பாதிமேலாய்ச்
செப்பியபான் றிசைவரையும் பூமிசெல்வம்
சாலவெனத் தோன்றிடுமே சமமதாகச்
சாருமதி முதற்குருதி வரையும்பூமி
தூலமுடன் வருந்தனங்கள் அதிகபூமி
தோன்றியதோர் பாக்கியங்கள் கணிதங்கூறே. (சுஉசு)

கூறுமெனத் தோன்றியசேய் தனக்குமேலோர்
குறித்தனர்கள் வெகுபலனை யுரைக்கலாகும்
சாருமென அரவுவருந் திசைமுன்பாதி
தன்னில்வெகு தனங்கள்மிகப் புகழ்தான்யேற்பன்
சீருடனே வெகுபூமி வளருமென்று
செப்பினர்கள் பாக்கியனாய்க் கணிதமாய்ந்தோர்
கூறினர்கள் தப்பாது யிதுவென்றேதிக்
குறித்தனர்கள் ஆகமநூல் வழியாமாதே. (சுஉஎ)

மாதேகேள் வருமுயிர்கோள் மாலோனாகி
வண்புகர்பா னுடன்கூடி நாலேழேகச்
சீதமுடன் அட்டமத்தோன் கரியனோடு
சேருதய கேந்திரத்திற் றரிக்குமாகில்
நீதமுடன் வருங்கரும னீரஞ்சஞ்சில்
நின்றிடவே உடனவர்கள் இருக்குமானால்
வேதமுடன் முப்பத்தஞ் சிரட்டியாயுள்
விதித்தனர்க ளாகமநூல் வழியாய்க்கேளே. (சுஉஅ)

கேளெனவே வருமுயிர்க்கோள் புகர்பானோடு
கெணிதமுட னுயிர்தனக்கு மூன்றுறெட்டிற்
றுழ்வுடனே தரித்திடவே சாருமாயுள்
சாய்ந்திடுமூ வேழுதள்ளி நிசமென்றோது
சூழுறவே அட்டமத்தோன் கரியவன்றானுந்
தோன்றுபகை நீசம்வரச் சுபர்நோக்கில்லா
யேழுடனேழ் தொகையிரட்டி வயதுதள்ளி
யிசைவுடனே கணிதமொழி யறைந்ததன்றே. (சுஉக)

வேறு.

அறைந்தனர்பிலமாய்ப் பிறந்திடுஞ்சேய்க்கு ஐம்பத்தெட்டா
யுளேபிலமாம், மறைந்திடுங்கரிமால் பரிதியோடொன்றாய் மறைந்
திட அதற்குநாதனுமே, குறைந்திடஉயிர்க்கீ ராறினிற் றனிக்கக்
குருதியும் மதியை நோக்கிடுமால், அறைந்தனர் சேய்க்கு முன்னு
ரைவயதில் ஆயுளுமிருபத் தொன்பதுவாம். (சுகூ0)

மதிமகன்புகரும் வக்கிரனுயிரோன் வருமிடம் உதயகேந்திர மாய், விதியுடனெட்டோன் கரியுடனென்ருய் விளங்கிட மதிமனை வருமால், சதியுடன்கருமத் ததிபனும்பொன்னுஞ் சாரிடம்பவர் மனைமறைந்தால், மதிமகன்புகர்சேய் மதிவருதொகையாய் வகுத்த னர் வயதுசாதகற்கே. (சுஙக)

சாதகன்றனக்குப் பாம்புநாள்முடிவிற் சார்ந்திடும் உயர்ச்சி பாக்கியங்கள், வேதமாய்வருமென் ருேதினர்பிலமாய் விளம்பிடுங் கணிதநூல்விதியால், ஓதிடுமறைநாள் திசைமுடிமட்டும் உரைத்த னர்பதிநிதிபூமி, நீதமாயுலகில் வருமெனசேய்க்குநிகழ்ந்திடும்மறை திசைமுழுதும். (சுஙஉ)

அட்டமாதிபனு மருணனும்புகரும் அம்புலி பொன்னுடனெ ன்ருய்த், திட்டமாயோர் வீடேகியேபிலமாய்ச் சேர்ந்திடப் பவர்ம னைவருமால், மட்டிடுங்கருமத் ததிபனுங்கரியும் வருமிடஞ் சூரிய ன்வீடால், திட்டமாய்ப்பிறக்குஞ் சாதகன்றனக்குச் செப்பினுர் வயது ஐம்பதுவாம். (சுஙங)

செப்பிடும்வயது ஐம்பதென்ருேதிச் செப்பினுர் கணிதநூல் விதியால், முப்படிகாரி வருமிடஞ்சுபமாய் முயன்றிடப் பவர்கள் நோக்காதால், செப்பிடுஞ்சேய்க்கு முன்னுரைவயதிற் சேதமாம் நாலெனவுரையே, தப்பிடாதெனவே பிறந்திடுஞ்சேய்க்குச் சாற்றி னுர் சங்கரன்வாக்கால். (சுஙச)

வேறு.

கரியவன் உயிர்க்கீராறிற் கலந்திட மாலோடொன்ருய்ப்
பரியுடன் உயிரோன்யெட்டோன் பகரிடம் மறையாதாகிற்
சரியுடன் பத்தோன்வீட்டிற் றரித்திடப் பிறந்தசேய்க்குக்
கரியவன் புகர்மாலாண்டாய்க் கருதினர் வயதென்ருேதே. ()

வேறு.

சதியாக அட்டமத்தோன் உயிரோனுகிச்
சதிதனக்கு மறைந்திடவே உதயமேற
விதியாகக் காரியுடன் கருமநாதன்
விளங்கிடக்கேந் திரமாகிச் சுபர்நோக்குற்ருல்

அதிபதியாய் மாலுடன்சேய் புகர்பொன்காரி
அம்புலிதன் வருந்தொகையாய் வயதென்றேதே
மதியாக அட்டமத்திற் பாம்பாகஅஞ்சோன்
மறைந்திடவே வருஞ்சேய்க்கு வகுத்தனரைம்பதுவாம்.

குருவுடனே அட்டமத்தோ னோர்வீடாகிக்
குறுகிடக்கேந் திரமாகிச் சுபர்வீடாக
வருமுயிரோன் றனக்காறிற் கரிசேயொன்றாய்
வந்திடவே யிக்கோட்கள் மதிக்கேழுற்றால்
தருமுயிர்க்கு அஞ்சோனும் உயிர்க்குமூன்றிற்
றனித்திடவே சுபர்வீடாய்ப் பவர்நோக்குற்றால்
குருவுடன்மால் மதியாண்டாய் வயதுசெப்பக்
குறித்தனர்சா தகற்குவிதி கொடுக்குமாதோ. (சுஙஎ)

மதிதனக்குக் கேந்திரத்திற் குருதியெட்டோன்
வருமுயிர்க்கோ ளுடன்சேர்ந்து உயிரோன்வீடால்
விதியுடனே காரிஉயிர் தனக்கேறாகி
விளங்கிடவே சுபர்நோக்க விளங்குமஞ்சோன்
சதிருடனே உயிர்தனக்கு யீராறுகித்
தனித்திடவே மதிதனக்கு மறையாதானால்
பதிதனில்வந் தேகிடுஞ்சேய் வயதுமேலோர்
பகர்ந்தன ரெண்பதுவாகப் பகரும்மாதே. (சுஙஅ)

மாதேகே ளட்டமத்திற் றீக்கோள்வந்தால்
வகுத்தனர்முன் றொகையதனில் மாயும்பத்தேழ்
ஓதிடுவன் வருஞ்சேய்க்குப் புகரோன்நாளில்
உரைத்தனர்பாக் கியம்பூமி உயர்ச்சிஅற்பம்
நீதியுடன் சூரியன்றன் திசைநாள்வந்தால்
நேர்ந்திடும்பாக் கியம்பூமி உயர்ச்சிமேலாம்
சோதிடநூற் படியாக மதிநாள்மட்டும்
சொல்லினர்க ளிவன்றனக்கு யோகஞ்செப்பே. (சுஙகூ)

வேறு.

மந்தனுங் கேதுமொன்றாய் மறைந்திடச் சுபர்நோக்கில்லா
வந்திட வுபிரோன்பொன்னும் வருமுயிர்க் கெட்டோனோடு
விந்தையா யோர்வீடாகி விளங்கிட மறையுமானால்
சந்திரன் பரிபொன்னாளாய்ச் சாற்றினர் வயதென்றோதே. ()

வேறு.

மதியுயிர்க்கோள் தானாகி உதயந்தன்னில்
வரவவர்க்குக் கேந்திரத்தில் மாந்தியெட்டோன்
சதியுடனே வளருமனை புகர்தன்னிலஞ்
சாரவக்கோ ளாட்சியுச்சந் தரிக்கப்பாவர்
துதிபெறவே உயிர்தனக்குக் கருமனோடு
தோன்றிடவே பன்னொன்றி லிருப்பாரானால்
விதியுடனே பிறந்திடுஞ்சேய் வயதுமேலோர்
விதித்தனர்மால் சேய்புகர்பான் றொகையென்றோதே. ()

ஓதுமென உயிர்தனக்கு ஒன்பான்வீட்டி
லுறைந்திடவே பாம்பதனிற் றரிக்கஅக்கோள்
மாதுபயந் தன்னில்வளர் யிவன்றன்யோகம்
வரவுயிர்க்கு நாளாங்கோள் திசைவந்துற்றால்
நீதியுட னிவன்றிசையிற் கருமநாளில்
நேர்ந்திடுஞ்சே யவன்றனக்கு உயர்ச்சிகாட்டும்
வேதமாய் வருமுயற்சி அரசரின்பம்
விளங்கிடும்பாக் கியனுகக் கணிதங்கூறே. (சுசஉ)

கூறுமெனப் புகர்திசையிற் கரிவந்துற்றால்
குறுகியசே யவன்றனக்குங் சிவிகையுண்டாம்
சாருமதில் வருமுயற்சி வளருமேலாய்
சார்ந்திடுமே யிதுகணிதந் தவறுதென்றார்
பாருயிர்க்கு உபயமென அதிபன்றானும்
பகர்திசைவந் திடுமாகிற் பாழாம்முன்சொல்
சீருடனே அவன்றிசையில் மனதிற்பீடை
சேயலைச்சல், பொருட்சிலவு கணிதஞ்செப்பே. (சுஙச)

செப்புமெனத் தோன்றுயிர்க்கோள் திசைவந்துற்றால்
சேய்தனக்கு வருமுயற்சி வளரும்மேலாய்ச்
சப்ரமஞ்சம் வருந்தனங்கள் புகழோனுகித்
தரணிதனில் வெகுபூமி சாருஞ்சொன்னேன்
முற்படிவந் திடுமதனி லரசரின்பம்
முழங்கியபாக் கியனுக வாழ்வான்றுனே
தப்பியசே யவன்றிசையில் முயற்சி துஞ்சும்
தாழ்வெனவே வரும்பலன்கள் தவறுமென்னே. (சுசச)

வேறு.

அட்டமத்தினிற் காரிபுகருடன்
திட்டலக்கினக் கோளொடுபத்தினேன்
சட்டமாகத் தரித்திடமால்வரை
எட்டுரெண்டு வயதுசென்றேகிடும். (சுசரு)

வேறு.

மாதெனவே லக்கினமா யுதிக்கமாந்தி வருங்கொடிய பாவருடன் வருகமாதோன், சீதமுடன் மறையமனை அதனிலேகிச் சேருமக்கோ ளுச்சம்வரத் தனிக்குமானுல், ஓதுமென உயிர்தனக்கீ ராறிற்காரி உறைந்திடவே மதிக்கிவன்றன் மறையாதாக, நீதியுடனு யிர்தனக்கட் டமக்கோளெட்டில் நின்றிடவே ஆயுள்விதி நிலையைக் கூறே. (சுசசு)

கூறுமெனத் தோன்றியசேய் தனக்குஆயுள்
கொள்ளுமென நாற்பத்தஞ் சிரட்டியொன்றில்
ஆரியன்மே லாண்டெனப் படியென்றேதி
அழிந்திடுஞ்சேய் ஆரியனே டுறையுமென்று
கூறினர்க ளாகமநூல் தெரிந்தமேலோர்
குறித்தனர்கள் வெகுபிலமாய்க் கணிதமாகச்
சீருடன்வே தாந்தநெறி தெரிந்துசொல்வன்
செப்பினர்க ளிதுதவறு தெனவென்றேதே. (சுசஎ)

வேறு.

கரியவன் உயிர்க்கீராறிற் கலந்திடச் சபர்வீடாக
வருமுயிர்க் கோளன்யெட்டோன் வருமிடம் மறையாதாகிற்

றருமுயிர் தனக்குப்பத்தோன் சசிமகன் சேயோடொன்றாய்
வருமிடஞ் சுபர்வீடானால் வகுத்தனர் வயதென்றோதே. (சுசஅ)

ஓதிடும் புகர்மால்காரி ஒளிர்மதி தொகையைச்செப்பே
வேதமாய்க் கணிதமாய்ந்தோர் விதித்தனர் பிறக்குஞ்சேய்க்குப்
போதவே குருநாள்வெள்ளி பொருந்திய திசைகளெல்லாம்
நீதமா யுயிர்ச்சிபூமி நேர்ந்திடுந் தனவான்மாதோ. (சுசகூ)

வேறு.

சூரியன்மா லட்டமத்தோன் உயிர்க்கோள்கேது
தோன்றுமிக்கோ ளாரலுடன் உதித்திடக்கேந்திரமாய்
காரியுடன் புகர்சருமத் தோனுடன்மூன்றோனும்
கருதுமிக்கோள் மறையாமற் சுபர்மனைவந்திடுமால்
சீருடன்தோன் றிடுஞ்சேய்க்குப் புகர்நாள்காரி
சேயவன்மால் திங்கள்வரும் சேர்ந்திடுஞ்சேய்வயதாம்
கூறிடவே காரியுந்தான் தனித்திடமேமறைந்தாற்
குருவுகரி புகர்வருநாள் திசைதொகையாயறயே. ()

அறையுமெனக் குருவுதிசை தனில்வருநாள்சமனாய்
அறைந்தனர்சே யவன்றனக்கு அற்பமெனப்பலன்தான்
விரைவுடனே காரிதிசை முன்னிடும்பாதியிலே
விதித்தனரால் உயர்ச்சிவரும் விளங்கிடுமேசமனாய்
முறையுடன்பிற் பாதிவர மொழிந்தனர்கள்பிலமாய்
முயற்சிநிதி பதிபூமி முதுமகன்நாள்வரையுங்
குறையிலதாம் யாவருமே கனமெனவேமதிக்கக்
குறித்தனர்சா தகற்குவரும் பலனெனவேஉரையே. ()

வேறு.

மந்தனும் பத்தோன்கேது வருமிடம் புகர்வீடாக [ருய்
விந்தையாயக் கோளெட்டோன் விளங்குபிர்க் கோளோடொன்
வந்துயிர் தனக்குமூன்றில் மறைந்திடப் பிறக்குஞ்சேய்க்குச்
சிந்தையாய்க் குருநாள்ரெட்டி செப்பினர் வயதென்றோதே. ()

ஓதிடுங் குருநாட்பாதி உரைத்தனர் சமனாய்ச்செல்வம்
வேதமாய் மறைபிற்பாதி விரித்தனர் முயற்சிகீர்த்தி

போதவே கணிதமாகப் புகட்டினாதிகசெல்வம்
ஒதினர் பிலமாய்நூலோர் உரைத்தனர் பிறக்குஞ்சேய்க்கு. ()

வேறு.

மறையவன்மால் காரிபரி உயிர்க்கோளெட்டேரன்
வரினுமிக்கோ ளொன்றாகி மால்வீடாக
விரைவுடனே உயிர்தனக்கு யிக்கோள்தானும்
விளங்கிடவே மறையாமற் சுபர்நோக்கில்லா
முறையுடன்தோன் றிடுஞ்சேய்க்கு வயதுசுங்கன்
முதுமகன்மால் மதிதொகையாய் அறைந்தார்நூலோர்
குறையிலதாம் புகர்பரிநாள் மதிசேய்பாம்பு
கூடியிக்கோள் திசைபலனைக் குறித்தார்மேலோர். ()

மேல்மொழியாய்ப் புகர்பரிநாள் மதிவந்துற்றால்
விளங்கிடயித் திசையதனில் விளங்குஞ்செல்வந்
தூலமதாய் அற்பபலன் பிலமாய்க்காட்டுந்
தோன்றிடுஞ்சேய் திசையதனிற் றுலங்குஞ்செல்வஞ்
சாலவெனப் பாதியின்மே லுயர்ச்சிசேரும்
சமபலனு யதிபதியிற் றரிக்கும்மாதே
கோலமதா யரவுதிசை யதனிற்செல்வங்
குறித்தனர்பாக் கியமாக உயர்ச்சிசேரும். (சுருரு)

சேருமெனப் பாம்புவருந் திசைமுற்பாதி
சேர்ந்திடுமே முயற்சிகளும் சமனுய்ப்போகும்
சீருடனே பிற்பாதி திசைநாளெல்லாம்
சேர்ந்திடுமே உயர்ச்சிநிதி சேருஞ்செல்வம்
சாருமென அத்திசையி லுயர்ச்சிதுஞ்சும்
சர்பபயம் மனக்கவலை தப்பாதாகும்
கூறினர்கள் மேலோர்கள் வருஞ்சேயோகங்
குறித்தனரிப் படியாகக் கொடுக்கும்மாதே. (சுருசு)

சதியாக அட்டமத்தோன் சுயராகிமறைந்து
சாருமனை பலமாகி யுடன்பாவர்தரிக்க
விதியாக உயிர்க்கோளன் சுபராகியுச்சம்
விளங்கிடவே உடன்பாவ ரொன்றாகிப் பிலமாய்த்

துதியாரல் வீடதனிற் காரிமதிபிலமாய்த்
தோன்றிடவே மறையாமற் சொல்லிடுஞ்சேய்வயது
மதியாரல் மால்பருதி வருங்காரிதொகையாய்
வகுத்தனரால் வரும்பலனை மாதவர்நூலுரையே. ()

மாதவர் நூற்படியாக வருங்கேதுபுகரில்
வரும்பலனே சமனுகவரும்பாதி வரையும்
ஓதிடுவன் புகர்நாளிற் பிற்பாதிபலனை
உரைத்தனரால் அற்ட'பலன் உ-தவிடுமேபிலமாய்ச்
சேதம்வரும் மனக்கவலை புகர்வரையுமேலோர்
செப்பிடவே பரிமதிநாள் சேர்ந்திடுமேபலனை
வேதன்விதிப் படியாக அறைந்தனர்கள்பிலமாய்
விளங்கிடுவன் சமனுக விதித்தனரால்கணிதர். (சுருஅ)

வேறு.

கதிரவன் மாலோடொன்ருய்க் கரியுடன்பவர்வீடாகிக்
தரிகிட உயிர்க்கோள்நீசம் சார்ந்திடக்கேந்திரத்தில்
விரிகுழல் மாதேயெட்டோன் விளங்கிடமறையாதானுற்
கரிபுகர் மதிஆண்டாகக் கரந்தனர் வயதென்ருேதே. (சுருகூ)

வேறு.

மதியுயிரோ ஞகிக்கேந் திரத்தில்வாழ்க
மதிதனக்கு மறையாமல் வன்புகரட்டமத்தோன்
சதியாகக் காரியுடன் ஒன்ருகியுயிர்க்குத்
தனக்காரிற் றரித்திடவே சற்குருநோக்கிடுமால்
துதியாரல் பரிவீடாய்த் தரித்திடவேயெட்டிற்
சுபர்பார்வை நோக்கிடவே தோன்றிடுஞ்சேய்வயது
விதியாக மால்குருசேய் மதிவருநாட்டொகையாய்
விதித்தனர்நூற்படியாக விளம்பிடுஞ் சாதகற்கு. ()

மதியுயிரோ ஞகிக்கேந் திரத்தில்வாழ்க
மதிதனக்கு மறையாமல் வன்புகரட்டமத்தோன்
சதியாகக் காரியுடன் ஒன்ருகிஉயிர்க்குத்
தனக்காறிற் றரித்திடவே சற்குருநோக்கிடுமால்

துதியாரல் கரிவீடாய்த் தரித்திடவேயெட்டிற்
சுபர்பார்வை நோக்கிடவே தோன்றிடுஞ்சேய்வயது
அதிபதியாய் மால்குருசேய் மதிசிகிநாட்டொகையாய்
அறைந்தனர்நூற் படியாக அரன்விதியென்றோதே. ()

ஓதிடுஞ்சே யவன்றனக்கு உயிர்க்கதிபன்திசையில்
உரைத்தனர்முற் பாதியின்மேல் உதவிடுஞ்சேத்திரங்கள்
வேதன்விதிப் படியாகச் சமபலனாய்வருமால்
விளங்குமுப்ப தினின்மூன்று வயதின்மேற்செல்வம்
நீதியுடன் தனவானாய்ப் பதிவருஞ்சேத்திரங்கள்
நேர்ந்திடும்நாற் பதுவரையும் நிச்சயமென்றுரையே
சோதிடநூற் படியாகப் பாம்புவருந்திசையிற்
றோன்றிடுஞ்சேத் திரம்பூமிசொல்லினர் நூலுரையே. ()

உரையெனவே பாம்புதிசை முற்பாதியதனில்
உரைத்தனர் பாக்கியம்பூமி உதவிடுமேபிலமாய்
விரைவுடனே கனவானாய் வாகனயோக்கியமாய்
விளங்கிடுவன் யாவருக்கும் விளம்பிடுஞ்சொற்றவறான்
முறையுடனே தாரமதாய் மனக்கவலைவருமால்
மொழிந்தன ரத்திசையதனில் முதுமகன்நாள்வருகில்
குறைவுடனே சர்ப்பபயந் தோன்றிடுமேபிலமாய்க்
குறித்தனரிப்படியாகக் கொண்டிடுஞ் சேய்பலனே. ()

மாலுயிர்க்கோள் மறைந்திடவே மதிக்கொன்றேழில்
வரயிவர் களுடன்கர்மக் கோளன்யேக
சீலமுடன் உயிர்தனக்கு வருமெட்டோனுந்
தினகானு முடன்கூடி உபயமேற
நீலனுடன் மாந்திமறை யிவர்களொன்றாய்
நின்றிடவே மதிதனக்கு மறையாதானால்
தூலமுடன் தோன்றியசேய் வயதுஐம்பத்
தொன்றுடன் ஆறொன்றுவருந் தொகையென்றோதே. ()

ஓதுமென மதிதனக்குப் பதினொன்றன்னில்
உறைந்திடக்கே துடன்புகரும் உதயம்வந்தால்
சீதமுடன் தோன்றியமால் திசையிலின்பம்
சேருமதில் வருமூயற்சி அரசர்பேட்டி.

நீதியுடன் வருந்தனங்கள் பொருள்கள்சேரும்
நிச்சயமாய் வருமுயற்சி பலமென்றோது
வேதமெனக் கேதுதிசை தனதிற்சேய்க்கு
விளங்குமென வருமலைச்சல் அதனின்மேலாய். (சுசுரு)

மேலெனவே வருமுயற்சி அரசரின்பம்
விளங்கியநாட் பாதியின்மேல் உறையுஞ்செல்வம்
சீலமுடன் வருமுயற்சி அதிகமேலாய்ச்
செப்பினர்கள் யிவன்றனக்குப் புகழுண்டாகுந்
தூலமுடன் புகர்தனதில் முயற்சிதுஞ்சுந்
தோன்றியநாள் திசைபதனிற் பரிவந்துற்றால்
சாலவென வருமுயற்சி சதமென்றோதி
சாஸ்திரநூற் படிவிதியைச் சதமென்றோதே. (சுசுசு)

இறையவனும் மாந்தியுடன் உதயந்தன்னில்
இருந்திடுங்கோ ளாட்சியுச்சந் தனிக்கயிக்கோள்
முறையுடனே மதிதனக்கு மறையக்கேந்திரம்
முதுமரைக்குங் கேந்திரமாய் வளருமாகில்
விறைவுடனே கரிநீசந் தனிக்கயெட்டோன்
விளங்கிடவே உடன்கூடி வரினுமானால்
அறையெனவே தோன்றியசேய் வயதுஐம்பத்
தொன்பதென அவன்மரணம் அழியுமென்றே. (சுசுஎ)

வேறு.

கரியவன் கருமன்கேது கருதுமிக்கோள்க ளொன்றாய்ப்
பரியவன் வீட்டிலேகப் பரியுமே உயிர்முன்னாகச்
சரியுடன் உயிர்க்கோளெட்டோன் தரித்திடநீ சங்கேந்திரம்
வருமுயிர் தகரேயானால் வகுத்தனர் வயதுசொல்லே. (சுசுஅ)

சொல்லவே கணிதநூலாய்த் தோகையெண் ஐம்பத்தாறு
நல்லுயிர் பிரியுமென்று நாடினர்கணித மாய்ந்தோர்
கொல்லையில் உயிர்க்குஒன்பான் தோன்றிடமறையவந்தால்
எல்லையில் வருஞ்சேயோகம் யியம்பினர் கணிதஞ்சாற்றே. (சுசுகூ)

சாற்றிய பூமியோகஞ் சமமதாய் மறையோனறில்
தோற்றிய மனதுபீடை தோன்றிடும் அலைச்சல்துக்கம்

மாற்றிய பூமிசெல்வம் வரும்பலன் சமமதாகும்
நாற்றிய கரிநாள்வந்தால் நவின்றனர் பலனைக்கூறே. (சுஎ0)

கூறிய கரிநாள்தொட்டுக் குறுகிய கொடியோன்மட்டும்
சாருமே அலைச்சல்பூமி சார்ந்திடும் பலன்களற்பம்
சீருடன் கரியில்சுங்கன் சேரநாள் முதலேபூமி
பாரினிற் றனங்களின்பம் பலித்திடுங் கரிநாள்மட்டும். (சுஎக)

வேறு.

பங்கமிலா துயிர்க்கோளன் மறையவனுமாகிப் பகருயிர்க்கா றெட்டதனில் யீராறிலேகச், சங்கையுடன் அட்டமத்தோன் உயிரில்உச்சம் சாரவவ ருடனெவர்கள் தரியாதாகப், பொங்குகரி வீட துவாய்ப் பதினொன்றன்னிற் பொருந்துமவ ருடன்கேதுதரிக்குமானுற், றுங்கமுடன் தோன்றியசேய்வயதுமுப்பத்தொன்றுடனொன்றுகவெனக் கணிதஞ்செப்பே. (சுஎஉ)

செப்புமெனத்தோன்றியசேய்தனக்குப்பூமி சேர்ந்திடுமேசமபலனுய் மறையனுளில், முற்படியே வரும்பலன்கள் சமமதாகும் மொழிந்தனர்கள் மறைதிசைமுன் பாதிமேலாய்த், துப்பிதழாய் வருமலைச்சல் பீடைகாட்டுந் தோன்றியசே யவன்றனக்குக் கணித நூலாய்ச், செப்பிர்னக ளிதுயெனவே நிசமென்றேதிச் செகதலத் திலவன்பலனைக் கணித்துச்சொல்லே. (சுஎங).

ஆரனுயிர்க்கோளாகி ஆட்சியுச்சம் அமர்ந்திடஅக் கோளுடனே அருணன்பொன்னும்,, சாரிடங்கேந் திரமாகச் சனியன்வீடால் தரித்திடவே சசிக்கிவர்கள் மறையுமாகிற், காரிதின கரனுடனே மாந்தியொன்றுய்க் கருதுயிர்க்கட் டமமாறு பதினொன்றுனல், பாருயிர்ச்சுத் தமுமாக வளருஞ்சேய்க்குப், பகர்வயது நாற்பது ஆறுபயஞ்சேரே. (சுஎச)

சூரியன்றன் வீடதனி லாயுள்நாதன் தோன்றியபத்தோனுடனே தரிக்குமாகிற், பாருயிரில் உயிர்தனக்கட் டமக்கோள்யேகப் பகருமவ ருடனுயிரோன் அதனிற்சேர்ந்தால், கூறியசே யவன்றனக்குக் கணிதமாய்ந்தோர், கொள்ளுமென முப்பதுநா லிரட்டியா

யுள் ஆரியன்மே லாணையெனப் படியென்றோதி ஆகமசாஸ்திரப் படியே அறையலாமே. (சுஎடு)

வேறு.

அட்டமத்தோன் கேந்திரமாய்ப் பவர்களோடு
அமர்ந்திடவே சுபர்மனையாய்த் தரிக்குமாகில்
நிட்டைபுரி உயிர்தனிலீ ராகவக்கோள்
நேராகக் கருமக்கோள் புதன்வீடேகச்
சட்டமுட னுயிர்தனக்கு அஞ்சதனிற்காரி
சார்ந்திடவே பிறந்திடுஞ்சேய் தரணிதன்னில்
திட்டமுடன் வயதெழுபத் தெட்டோன்றோதி
செப்பினர்கள் கணிதமொழி தேர்ந்தமேலோர். (சுஎசு)

மேலெனவே தோன்றுமெட்டோன் மறைந்துஆட்சி
விளங்கிடவே உடன்கொடியோ னதனிற்சேர்ந்தால்
தூலமெனச் சொல்லியமுன் வயதுதன்னிற்
சொல்லியயீ ரெட்டேழ்நால் வயதுதள்ளி
சீலமுட னைம்பதுஆ றுபயமென்று
செப்பினர்கள் வெகுதிறமாய்க் கணிதம்ஓது
சாலவே உயிர்க்கோளன் மறையுமானாற்
சாருமுன்சொல் வயதிருவேழ் தொலையுமென்னே. ()

சூரியனு முயிர்க்கோளாய்ப் பகைநீசத்திற்
றோன்றிடவே மாலுமதில் வருமெட்டோனும்
பாருயிர்க்கு வரும்பதினோன் தானமேகிப்
பகர்ந்திடவே வருஞ்சுபர்கள் நோக்காதாகில்
காரியுயிர்க் குபயமதிற் றனிக்கப்பத்தோன்
கருதுமொரு கோளுடனே தன்வீடுற்றால்
சீருடனே மதிபுகர்மால் குருதியாகக்
சேருமிக்கோள் மதிதொகையாய் வயதென்றோதே. ()

காரியுடன் பத்தினுக்கோ ளுதயமேறக்
கருதுமுத யக்கோளன் கரிவீடேகப்
பாருயிர்க்கட் டமக்கோளன் நீசமேறிப்
பகர்மதிகே துடன்கூடித் தரிக்குமாகிற்

சீருடனே விடைபுதயந் தோன்றுஞ்சேய்க்குச்
செப்பினர்கள் வெகுபரலாந் திரட்டிப்பார்த்துக்
கூறினர்கள் நாற்பதுநா லுபயமாயுள்
குறித்தனர்க ளாகமசாஸ் திரத்தினாலால். (சுஎசு)

நூலெனவே ஒன்பான்கோ ளுதயமேற
நுவலுமந்தக் கோளனுமே மாறியொன்பான்
சீலமுடன் வீடதனிற் றனிக்கவந்த
சேருமொன்பான் கோள்தனையே மறைநோக்குற்றால்
தூலமுடன் வயதிருபத் தொன்றின்மேலாய்த்
தோன்றுமென நாற்பதுஆர் வரையுஞ்செல்வஞ்
சாலவே வெகுபுகழோன் கீர்த்தியேற்பன்
சாருதனம் பூமிபதி உயர்ந்தவாழ்வோன். (சுஅ0)

மந்தனுட னெட்டாங்கோள் புகர்பான்பாம்பு
வளருமிக்கோள் கேந்திரமாய்க் கருமன்வீடாய்
விந்தயுடன் வருங்கரும னுயிரோனாகி
விளங்குயிர்க்கு மறையாமற் றரிக்குமாகில்
சிந்தையுடன் மாதுதயந் தோன்றுஞ்சேய்க்குச்
செப்பினர்க ளாயுள்விதி கணிதநூலாற்
சுந்தரமாய் முப்பதுயே ழிரட்டியாகச்
சோதிடசாஸ் திரப்படியாற் கணிதமோதே. (சுஅக)

சூரியனு முயிர்க்கோளாய்க் கரியனில்லம்
தோன்றிடவே அட்டமக்கோ ளுடன்வந்தெய்தப்
பாருயிர்க்கு வருங்கருமன் கரிவீடேகப்
பகர்கரியு முச்சும்வரத் தனிக்குமானாற்
கூறுமெனத் தோன்றியசேய் தனக்குஆயுள்
குறுகிடுமே பணிதிசைவந் தேற்குநாளிற்
சீருடனே மறைகரிநாள் திசையின்செய்கை
செப்புகிறேன் மறைதிசைதன் பலனைக்கேளே. (சுஅஉ)

கேளெனவே மறைதிசைநாள் முடிவுமட்டும்
கிளர்ந்தனர்கள் வருமுயற்சி சமனஞ்செல்வம்
சூழுறவே கரிதிசைவந் திடுகிலந்தத்
தொன்றுமதன் புத்தியினில் முயற்சிகஷ்டம்

வாழ்வெனவே தனதுபுத்தி அலைச்சல்காட்டும்
வளருமதி லச்சமதாய் முயற்சிகாட்டும்
தாழ்வுவரு தெனவேதன் தினமேலாகச்
சாருதிசை முடிவுவரை முயற்சியுள்ளோன். (சுஅங)

வேறு.

காரியு மறைந்துநீசங் கருதிய மால்பானோடு
சாரிட மாரல்வீடாய்த் தரித்திட உயிர்க்கோளுச்சம்
கூறிய யெட்டோன்கேது குறுகிட உபயஞ்சேர்ந்தால்
சீருடன் வயதுநாற்பத் தொன்றெனச் செலுத்துமென்றே. ()

வேறு.

கரியுயிரி லுச்சமுற உயிரின்கோளன் கருதுயிர்க்கு மறையா
மற் றனிக்குமாகில், வருமுயிர்க்கு வருங்கருமன் மறையோடொ
ன்றாய் மதிமகன்வீ டலதுமதி வீட்டிலேகத், தருமுயிர்க்கு அட்ட
மமே சுத்தமாகச் சார்ந்திடுஞ்சே யாயுளெண்பத் தாறஞ்சாகும்,
வருமுயிர்க்கட் டமந்தன்னி லாவோனுற்றால் வகுத்திடுமுன் னுயு
ளதில் மாய்ந்திடுமேமூவேழ். (சுஅடு)

மதிமகனு முயிர்க்கோளா யுதயமேறி மாந்திமறைபானரவு
கருமனோடு, சதிருடனே உயிரிலதுகருமமாதால் தரித்திடவேயிவ
ர்கள் தனைச் சுபர்நோக்கில்லா விதியுடனேகாரிமதி கொடியோனோ
டு விளங்குயிர்க்கு மறையாமற் றரிக்குமானால், அதிபதியாய் வய
தெழுபத் தொன்றதாக அறைந்தனர்கள் ஆரியன்மே லாணையா
மே. (சுஅசு)

அட்டமத்தோன் சேந்திரத்தில் மதிகேதோடு
அமரவக்கோ ளட்டமமார் வியத்திலேகச்
சட்டமுடன் வருமுயிர்க்கோள் மதிபுகரேயாகிச்
சாருயிரிற் பவருடனே தரிக்குமாகில்
திட்டமுடன் வருங்கரியன் தன்வீடாகிச்
சேர்ந்திடவே உடனொருகோள் தரியாதானால்
மட்டிடுஞ்சே யவன்றனக்கு ஆயுள்மேலோர்
வகுத்தனரைம் பத்தாறு வளருமாதே. (சுஅஎ)

அட்டமத்தோன் வருமுயிர்க்கா றதனிலேக
அதற்குடையோன் கேந்திரமாயுச்சமேறத்
திட்டமுட னுயிர்க்கோளன் மதிகேதாகிச்
சேருமுயிர்க் கஞ்சலது உபயமாகிச்
சட்டமுடன் மாந்திபுக ருடனொன்றாகித்
தரித்திடவே கருமனுமால் வீட்டிற்போனால்
மட்டிடுஞ்சே யவன்றனக்கு வயதுமேலோர்
வகுத்தனர்க ளெழுபதெனக் கணிதம்ஓது. (சுஅஅ)

ஓதிமென அட்டமத்திற கொடியபாவர் உறைந்திடவேமுல் பின்பு சுத்தமாகச், சீதமுடன் உயிர்க்கதிபன் அரவவெள்ளி செப்புமென மாந்தியுடன் றரிக்குமானால் வேதமெனச் சொல்லியதோ ரெழுபதாயுள் விளங்குமதிற் பத்துஅஞ்சு யேகந்தள்ளி, நீதியுடன் ஐம்பதுநாள் வயதென்றோத நிச்சயமாய் ஆகமநூற் சொல்லுந் தானே. (சுஅசு)

சந்திரனு மட்டமத்தோ னாகிப்பத்திற் றனித்திடவே அதற் குடையோன்சனிவீடேகி, வந்திடவே உடன்புகர்பான்றரிக்கஅந்த வருங்கரியு மாட்சியுச்சந்தனிக்குமாகிற், சுந்தரமாயுயிர்க்கோளனு தயமேறத் தோன்றியசே யாயுள்தொகை திரட்டிநூலால், சிந்தை யுடன் முப்பதுநால் கணிதமென்று செப்பினர்கள் செல்வமென வளருமாதே. (சுகூ0)

மாதேகேள் பாக்கியக்கோள் தனத்திலேற
வளருமந்தக் கோளுடனே புகர்மாலேகச்
சீதமுடன் தனத்தினுக்கோ ளொன்பான்வீட்டைச்
சேரும்விழிப் பார்வையினால் நோக்குமாகில்
வேதமுடன் மதிதனக்கு நாலிற்பொன்னன்
விளங்கிடவே வெகுநிதிபொன் புகழேயுள்ளோன்
நீதியுடன் வயதிருவே ழாண்டின்மேலாய்
நேர்ந்திடுமே வெகுயோகன் அதிகவாழ்வோன். (சுகூக)

வாழ்வெனவே வெகுமதிநேத் திரங்கள்பூமி வளருதனங்காலி யின்பம் சிலவின்மிக்கோள், தாழ்வுவரான் மரணம்வரை தவறுதா கும் சாஸ்திரநூல் வெகுஅறிவு கணிதவித்தை, சூழுமென வெகு

வரிசை சிவிகையின்பந் தோன்றுகரி பரிவளருந்தொகுத்தமாதோன், ஊழ்விதிநாற் படியெனவே கணிதமென்று உரைத்தனர்களாகமநூல் துறந்தமேலோர். (சுகூஉ)

வேறு.

அட்டமாதிபனு மருக்கனுமோர்வீ டமர்ந்திடமூன்றிடமாகத்திட்டமாயுயிரோன் கேந்திரமதனிற்சேர்ந்திடக் குருபுகருடனே சட்டமாய்மந்தன் ஆட்சியாய் ஆறிற்சார்ந்திடப்பிறந்தசாதகற்குத் திட்டமாய்வயது ஐம்பத்தெட்டேழாய்ச் செப்பினு ராயுளைத்திறமாய். (சுகூஙு)

அட்டமன்செவ்வாயுயிரின்கோள்கர்மன் அமர்ந்திடவேழினிலாகத், திட்டமாய்க்காரி யெட்டினில்நீசஞ் சேர்ந்திடப் புகருமே கூடிச், சட்டமாய்மதியு முட்சமாயிருக்கச் சார்ந்திடப்பிறந்தசாதகற்குத், திட்டமாய்வயது அறுபத்தஞ்சாகச்செப்பினர் சாதகன்றனக்கே. (சுகூசு)

மாலவனிரவி யரவுடன்நாலில் வந்திட யெட்டின்கோளிரண்டில், தூலமாய்க்காரி மாந்தியும்லாபந் தோன்றிடச்சேயுமாறிருக்கக் கோலமாய்க்கருமனுயிர்க்கு அஞ்சினிலே குறுகிடப் பிறந்தசாதகற்கு, ஏலவேவயது குருதிசை முதலாய் எய்திடுங்கேது நாள்வரையும். (சுகூரு)

அட்டமனிரவி மாலவன்புகரு மமர்ந்திடக் கருமகேந்திரத்தில், திட்டமாய்க்குடும்பன் காரியா யாறிற்சேர்ந்திடக் குருவுமெட்டாகச், சட்டமாயுயிரி லரவுமேதனிக்கச் சார்ந்திடப் பிறந்தசாதகற்கு, மட்டிலாவயது நாற்பத்தெட்டேழாய் மதித்தனர் பெரியவர் தாமே. (சுகூகூ)

அட்டமன்குருவா யுயிர்க்குமூன்றினிலே அமர்ந்திடயிரவுமாலரவுந், திட்டமாய்ச்சேயுஞ் சேர்ந்திடவேழில் திங்களுங் குடும்பமாய்த்தரிக்கச், சட்டமாய்க்காரி நாலிற்கேந்திரமாய்த் தனித்திடப் பிறந்தசாதகற்குச், திட்டமாய்வயது ஐம்பதுநாலாய்ச் செப்பினர் பெரியவர்தாமே. (சுகூஎ)

பொன்னவன்காரி அரவுடனுயிரிற் பூமனும்கேது மேழாகச் சொன்னதுபுகரு மாந்தியுமஞ்சிற் றோன்றிடமாலவன்சேர முன்ன நூலாய்ந்தோர் மொழிந்தனராயுள் மோசமில் ஐம்பதுநாலிற், றன்னவன்னியினுற் பீடையாற்கண்டம் தப்பினுர் புகன்திசைபாதி. ()

வேறு.

சதியாக அட்டமத்தோன் மால்புகரோ டாறிற்
சார்ந்திடவே சனியரவுமுயிர்தனிலே வருகில்
விதியாக வுயிரோனுங் கரிவீடாகி
விளங்கிடவே மதிதனக்குக் கர்மகேந்திரமாய்த்
துதியாரல் யிராறில் ஆட்சியதாய் மறையில்
சோமனுக்கு யிரண்டினிலே கேதுடனே பரிதி
பதியாக யிருந்திடவே பிறந்திடுஞ் சாதகற்குப்
பகர்ந்தனர்சள் வயதுநிலே பரிதிபுகர் கரிமால். (கூகூக)

வேறு.

அட்டமாதிபனுங் காரிவீடதனில் அமர்ந்திடச்சந்திரன்மாலுந், திட்டமாயெட்டிற் சேர்ந்திடக்கரியுந் திங்களுக் கெட்டதாய்வரினும், சட்டமாய்க்குருவும் ஆறினில்மறையச் சாற்றினு ருயிரினிற் கேதுந், திட்டமாய்வரினு மாயுளுந்தீர்க்கஞ் செப்பினுரஞ்சுபத்தெட்டாய். (எ00)

பொன்னவனுயிரோன் சேயுடன்கேதுபொருந்திடக்கர்மகேந்திரத்தில், சொன்னதுஉயிரின் பரிதிமால்புகருந் தோன்றிடக்காரியுமறையில், நன்னயமுடனேமதியுடன்மாந்தி நாடிடமாலவன்வீடாய், இன்னிலம்பிறந்த சாதகன்வயது இருபதுமுப்பது நாலே.

அட்டமன்குருவா யுயிர்க்குநாலதனில் அமர்ந்திட இரவிமால்மறையத். திட்டமாயுயிரிற் புகர்கரிகேதுஞ்சேர்ந்திடச் சேயுமே பார்க்கச், சட்டமாய்மதியும் பொன்னவன் வீடாய்ச் சார்ந்திடப் பிறந்த சாதகற்கு, மட்டிலாவயது ஐம்பத்தாறுக மதித்தனர் பெரியவர் நூலால். (எ02)

அட்டமன்மதியும் உதயகேந்திரத்தி லமர்ந்திடக் குருவுமே பார்க்கச், சட்டமாயுயிரோன் கருமனுங்கேதுஞ் சார்ந்திடபுகரு

டன் லாபம், திட்டமாய்க்குருவும் பாக்கியமதனிற் சேர்ந்திடக்கா ரியேழாகிற், சட்டமாய்வயது முப்பத்தேழாகச் சாற்றினர் திங்க ளொன்றுடனே.

(எ0ரு)

அட்டமன்மாலா யுயிர்க்குயிராறி லமர்ந்திட மறைந்திட வரி னுந், திட்டமாய்க்காரி உயிரிற்கேந்திரமாய்த் தீனகரன் குருபுகர் மாந்தி, சட்டமாய்லாப மதனிலேநீசம் சசியுமேயேழினிற் றிரித் தால், திட்டமாய்வயது குருதிசைவரைக்குஞ்செப்பினர்பெரியவர் தாமே.

(எ0ச)

அட்டமன்குருவாய்க் கேதுடனறிலமர்ந்திட நீசமாய்வரினுந் திட்டமாயுயிரி லிரவிமால்சனியுஞ் சேர்ந்திடக் கருமனுமூன்றால், சட்டமாய்ஒன்பான் வாக்கிலே தனிக்கச்சசியுமே நாலினில்நீசம், நட்டமாய்வயது இருபத்தெட்டாக நாடினர் புகர்திசைபோமே.

புகர்திசையதனிற் கிரகவாகனமும் பூவையர் மணமுடன்குழ வி, நிகரிலாதனமும் வாணிபமுதலாய் நிகழ்த்தினர் பெரியவர் நூ லால், தகரினேன்மதிக்குலாபமாய்த்தரிக்கிற் சகோதரர்ளகலகமே யுடையன், பகர்வதுநல்ல சுமுகனும்யோகன் பாவையர் கல்வியில் மயக்கன்.

(எ0சு)

அட்டமன்மதியாய்ப் பாக்கியமதனி லமர்ந்திட இரவிமால்புக ரும், திட்டமாயரவுஞ் சேர்ந்திடவஞ்சிற் செம்பொனும் உயிரினி ல்வருகச், சட்டமாய்க்காரி ஆட்சியாய்மூன்றிற் சார்ந்திடவந்த சா தகற்குத், திட்டமாய்வயது ஐம்பத்தெட்டுள்ளாய் செப்பினர் சாத கன்றனக்கே.

(எ0எ)

மதிமகன்வெள்ளி திங்கள்வீடதனில் மந்தனும் மாந்தியோடி ருக்கில், சதிருடனுபிரோன் பொன்னவனுகிச் சார்ந்திடயிரவிவீட தனில், விதியுடனெட்டோன் கர்மகேந்திரத்தில் விளங்கிடப் பிறந் தசாதகற்குப், பதிதனில்வயது நாற்பதுயெட்டிற் பகர்ந்தனர்திங்க ளார்திறமே.

(எ0அ)

அட்டமன்மதியா யுயிர்க்கிரண்டினிலே அமர்ந்திடக்காரிமூன் றுகத், திட்டமாய்க்கர்மன் புகருடன்கேது சேர்ந்திட மிலாபமாய்

ரினும், சட்டமாயுபிரோ னிரவியோடுபிர்க்குச் சார்ந்திடம்மற்ற
ந்திடுமாகில், மட்டிலாவயது குருதிசைவரைக்கும் மத்தித்தனர் பெ
ரியவர்தாமே. (எ0கூ)

அட்டமாதிபனும் பொன்னவன்வீட்டி லமர்ந்திடக் கருப்
கேந்திரமாய்த், திட்டமாயக்கோ ளரவுடன்கரிவீ டதனிலே சேர்
ந்திடவரினுஞ், சட்டமாயுபிரோன் அஞ்சின்கோளுடனே சார்ந்
திடவயதுமே கேளாய், திட்டமாய்ப்புகர்நாள் முதலுமேயாகச்சே
ர்ந்திடுங் குருதிசைபாதி. (எக0)

வேறு.

காரியுயிர்க் கோளாகி ஆட்சியுச்சங்
கருதிடவே பவர்சுபர்கள் கிரகமாகக்
கூறியதோ ரட்டமத்தோன் சுபர்களோடு
குறுகிடங்கேந் திரம்வளரத் தரிக்குமாகிற்
சாருமென உயிர்தனக்குக் கருமநாதன்
சாரிடந்தன் வீடதுவா யிருக்குமானாற்
சீருடன்தோன்றியசேய்க்கு ஆயுள்மேலோர்
செப்பினரெண் பதுபதினெண் செலுத்துமாதே. (எகக)

மாதேகேள் உயிர்க்கோளன் கரியன்நீசம்
வருமிடங்கேந் திரமாக வளரவக்கோள்
சீதமுடன் மறைந்திடவே ஆட்சியுச்சந்
சேர்ந்திடவே உடன்பவர்கள் தரிக்குமாகில்
நீதியுடன் அட்டமத்தோன் பகைநீசங்கள்
நின்றிடவே உயிர்தனக்கு மறையுமானால்
வேதமெனச் சொல்லியதோர் ஆயுள்முன்சொல்
விளங்குமதி லேம்பதுமே மொழியுமானே. (எகஉ)

மானேகே ளட்டமமுஞ் சமமதாக
வருமுயிரிற் பாம்புவர வருமுன்பின்னும்
தேனேகேள் சுபர்பவர்கள் தரிக்குமாகில்
செப்பியமுன் சொல்வயது அதனில்நாலே

ஊனவொரு மிதுகணிதர் உறையென்றோத
உலகில்மனி தர்க்கெனவே உரைக்கலாகுந்
தேனேகே ளட்டமத்திற் பாவர்சேரத்
தியங்கிடமுன் வயதுதனில் அழியும்பாதி. (எகஙு

அட்டமத்திற் குருவிருக்கக் கேந்திரத்தில் மந்தன்
அவர்க்கிரண்டில் வெய்யோனும் அம்புலிசுங்கனுமாய்த்
திட்டமதா யாட்சியுச்சஞ் சேர்ந்திடவே வரினுந்
தினகரனுக் கிரண்டினிலே திங்கள்மகன்அரவும்
சட்டமதாய் மாந்தியுடன் சார்ந்திடவேவாக்கில்
தனித்திடச்சேய் குருபார்க்கக் கேதுபுகர்வீடால்
திட்டமதாய் வயதுரைப்பேன் ஐம்பதுநாலதனில்
திறமான கண்டமது தீர்ந்திடிலேபிலமாம். (எகச

பிலமாகப் புகர்திசையிற் குருபுத்திகூடில்
பெருத்திடுமே வியாதியினாற் பிசகிடுமேஉயிர்தான்
தலமாக மதிதிசையிற் றான்போகும்வயது
தப்பிடா தறுபதுடன் யெட்டெனவேயாகும்
குலபூமி க்ஷேத்திரங்கள் குறையாமல்வாழ்வன்
கொடுத்திடுமே காரிதிசை கூடிடுமேபிதாவும்
நலமாக அரசர்தயவுடன் மேன்மைகீர்த்தி
நலமுடைய பாக்கியங்கள் நண்ணிடுவன்றானே. (எகரு

வேறு.

அட்டமன்பதியா யிரவிமாலுடனே அமர்ந்திட வுயிர்க்குஒ
பதனிற், றிட்டமாயுயிரோன் பஞ்சமமதனிற் சேர்ந்திட யெட்
னிற்புகராய்ச், சட்டமாய்க்காரி சேயுடன்பத்திற் சார்ந்திடப்பிற
தசாதகற்குத், திட்டமாய்வயது அறுபதுநாலாய்ச் செப்பினர்கண
தறுலாய்ந்தோர். (எகங

வேறு.

சூரியன்மா லட்டமத்தோன் புகரொன்றாகித்
தோன்றிடக்கேந் திரமாகிச் சுபர்நோக்கில்லா
காரியுயிர்க் கோளுடனே மதிக்கொன்பானிற்
கருதிடநல் லோர்வீடாய் இருக்குமாகிற்

சீருடனே மாந்தியுடன் அரவொன்றாகிச்
சேருமனை குருவீடாய்த் தரிக்கவந்த
கூறியசே யவன்றனக்கு வயதுமேலோர்
கொள்ளுமென ஐம்பதுநால் கணிதம்ஓதே. (எ௧எ)

ஓதுமென மதிவுயுர்க்குப்பதினொன்றன்னில்
உறைந்திடவே மறைவருகில் உயிரோன்நோக்க
நீதியுடன் பவர்வீடாய்த் தரிக்கப்பாம்பு
நேர்ந்திடுநாள் புகர்பாதி யோகஞ்சேரும்
வேதமதாய் வருமுயற்சி சமமென்றோதி
விதித்தனர்பொன் னவர்திசையிற் காரிபுத்தி
சோதிவெகு இருநிதியிஞ் சேர்வதோடு
தோன்றிடுமோ ரரசர்புகழ் வளரும்மேலாய். (எ௧அ)

மேல்மொழியால் மறைகரியிற் சிவிகையின்பம்
விளங்கிடுஞ்சேத் திரம்பூமி நிதிவந்தெய்துஞ்
சீலமுடன் மறைபாதி முயற்சி துஞ்சம்
சேர்திடுமே புகர்பாதி செல்வஞ்சேரும்
நீலன்வருந் திசையதனில் நிதியும்பொன்னும்
நேர்ந்திடுமே மனக்கவலை துயரமாகும்
தூலமுடன் தோன்றியசேய் பலனைமேலோர்
சொல்லினர்நூற் படியாகக் கணிதமாய்ந்தோர். (எ௧௯)

ஆய்ந்திடவே மறையிருந்தோ னுட்சியுச்சம்
அமர்ந்திடவே பிலமாகச் சுபரொன்றுனுற்
சார்ந்திடுமே முன்னுரைத்த சிவிகையின்பம்
தங்கியசேத் திரம்பூமி யோகம்மேலாம்
சேர்ந்திடவே மறையிருந்தோன் அதிபன்றானுஞ்
சேருமனை நீசபகை தனிக்குமானால்
மாய்ந்திடுமே மறைகரியில் முயற்சி துஞ்சும்
வரும்பலனைச் சமமாக அறையுமாலோ. (எ௨௦)

மாலுயிர்க்கோள் சூரியனும் ஓர்வீடாக
வந்திடக்கேந் திரமாகி மறைக்கேழ்பத்தில்
நீலனுட னட்டமத்தோ னொன்றாய்ச்சேர்ந்து
நின்றிடவே சுபர்வீடாற் றரிக்கப்பத்தோன்

சிலமுடன் உயிர்தனக்கு டிறையாதாகில்
செப்பினர்கள் முப்பதுநால் வயதுசாற்றே
மாலுயிர்க்கோள் தினகரனும் மறையுமாகில்
வகுத்தனர்முன் தொகைவயதில் மாயும்பாதி (எஉக)

காரிஉயிர்க்கோளுடனே குளிகன்வெள்ளி
கருதுமிக்கோள் மதிகேந்த்ரம் உயிர்க்குநாலு
சூரியன்மால் கேதுடனே உயிர்க்கெட்டோனும்
தோன்றுமிக்கோ ளுயிர்க்காறு மதிக்கொன்பாகச்
சீருடனே உயிர்தனிலே கருமநாதன்
சேர்ந்திடவே பவராகித் தரிக்குமானுற்
கூறினர்மால் சேய்புகர்பான் மதிபொன்னுளாய்க்
குறுகியசே யவன்றனக்கு வயதுசெப்பே. (எஉஉ)

வேறு.

அட்டமந்தன்னிற்சுங்கனமாந்திட வுயிர்க்கோளோடு
திட்டமாய்க் கருமநாதன் சேரிடங்காரிவீடால்
சட்டமாய்க் காரிபன்னோன் தானமாய்வளருமாகில்
மட்டிடுமைம்பத்தொன்றாய் வகுத்தனர் வயதென்றோதே. ()

ஓதவே வருஞ்சேயோகம் உண்டது கரிநாள்வந்தால்
வேதமாய்முயற்சி செல்வம் விளங்கிடு மதிகமேலாம்
நீதமாய்க் கரிநாள்மட்டும் நேர்ந்திடும் மிக்கபூமி
சாதகன் றனக்குமேலோர் சாற்றினர் கணிதமாய்ந்தோர். ()

வேறு.

அட்டமத்தோன் மாலுயிரோன் தசமநாதன்
அருக்கனுடன் காரியுமே யிவர்களொன்றாய்த்
திட்டமுடன் பத்தேழ்நா லுயிர்கடன்னிற்
சேர்ந்திடவே யிவர்மதிகேந் திரம்வந்துற்றால்
சட்டமுடன் தோன்றியசேய் வயதுமேலோர்
சார்ந்திடுமே யெண்பதுநால் தரணிமீதே
அட்டமத்தோன் மாலுயிரோன் கருமநாதன்
அருக்கனுடன் காரியுமே மறையுமானால். (எஉரு)

மறையுமெனத் தோன்றியசேய் வயதுமேலோர்
வகுத்தனர்முன் தொகைபாதி அழியுமென்றே
விரைவுடனே உதித்திடுஞ்சேய் தனக்குவெள்ளி
விளங்கியநாள் திசைமுடிவில் வளரும்பூமி
மூறையுடனே சமமாகச் சசிவந்துற்றால்
விளங்கியநாள் திசைவரையும் பலனைச்செப்பே
குறையிலதாம் பிறந்திடுஞ்சேய் பலனைமேலோர்
குறித்தனர்கள் நூற்படியாய்த் தரணிமாதே. (எஉசு)

மாதேகே ளிவன்றனக்கு மால்பொன்வெள்ளி
மந்தனும்பா னுதித்திடவே வளருநாதன்
நீதியுடன் பவர்வீடாய்ப் பகைநீசத்தில்
நின்றிடவே சுபர்பவர்க ளுடன்வந்துற்றால்
ஓதிடுமுன் தோன்றியகோள் வரினுமக்கோள்
உதவியநாள் திசைவருகில் மரணஞ்சேயாஞ்
சீதமுடன் பெரியோர்கள் உரையென்றோதி
செப்பியசா தகற்குபிது தெரிந்துசொல்லே. (எஉஎ)

அட்டமத்தோன் கேந்திரமாய்க் காரியில்ல
மமர்ந்திடவே அதற்குடையோன் மறைந்துஆட்சி
திட்டமுடன் சேய்மதியும் உடனொன்றுகிச்
சேர்ந்திடவே சுபர்நோக்க மறையுமாகில்
சட்டமுடன் குருமனையிற் சருமநாதன்
தனித்திடவே மறைகேந்த்ரந் தரிக்குமாகில்
நிட்டைபுரி மால்குருசேய் பரிதிநாளாய்
நிச்சயமாய்த் தொகையாக வயதென்றோதே. (எஉஅ)

ஓதிடவே தோன்றியசேய் பலனைமேலோர்
உரைத்தனராம் பாம்புதிசை உதவும்பூமி
நீதியுடன் சமமாக வளரும்பொன்னன்
நேர்ந்திடுநாள் முதலாக அதிகக்ஷேத்ரம்
வேதமாய்த் தோன்றிடுமே மிக்கசெல்வம்
வளங்கிடுமே பிலமாகத் தரணிமீதில்
சோதிடநூற் படியாகப் பலனைமேலோர்
சொல்லினரா மிப்படியாய்ப் பிறக்குஞ்சேய்க்கு. (எஉகூ)

மந்தனுங் கேந்திரமாகி உயுர்க்குநாலில்
வந்திடவே அதற்குடையோன் உயிர்க்குயேழில்
விந்தையுடன் சுபர்கூடித் தரிக்கயெட்டோன்
விளங்கிடவே ஆட்சியுச்சம் மறையப்பாவர்
சிந்தையுட னொன்றாகித் தரிக்கப்பத்தோன்
சேருமனை சுபர்வீடாய் உயிரின்கோளும்
வந்திடவே தோன்றியசேய் வயதுமேலோர்
வகுத்தன ரைம்பதுவாகக் கணிதஞ்செப்பே. (எகூ௯)

செப்பிடவே மறைகரியோன் றிசையிற்செல்வஞ்
சேர்ந்திடுமே சமமாகக் கணிதம்ஓதே
தப்பியதோர் மால்திசையி லுயருமின்பம்
சார்ந்திடுமே பதிபூமி வளரும்யோகம்
முற்படியே மால்திசையிற் பாதிமேலாய்
முன்னுரைத்த க்ஷேத்திரங்க ளதிகஞ்செப்பு
இப்படியே தோன்றியசேய் பலனைமேலோர்
யிசைவுடனே கணிதமொழி வகையாம்மாலே. (எகூக)

மாலுடனே அட்டமத்தோன் உயிரின்கோளன்
மந்தனும்பொன் சூரியனும் புகர்பத்தோனும்
சீலமுடன் கேந்திரமாய் வளரஅக்கோள்
சேருமனை ஆட்சியுச்சம் வளரக்கேந்த்ரம்
தூலமுடன் தோன்றியசேய் வயதுமேலோர்
சொல்லினரால் யெண்பதுநால் தரணிமீதில்
மாலுயிரோன் அட்டமத்தோன் கரிபொன்வெள்ளி
வருங்கருமத் தோன்பரியு முயிர்க்குமென்றார். (எகூஉ)

ஆறெனவே யீராறு பதினொன்றெட்டு
அமர்ந்திடயித் தானமதில் வளரயிக்கோள்
கூறெனவே சுபர்நோக்கா திருக்கவந்த
குறுகியசே யவன்றனக்கு வயதுமேலோர்
மாறெனவே யெண்பதுநால் கணிதந்தன்னில்
மரிந்திடுமே பாதியென்ன வரினுமாயுள்
சாறெனவே தோன்றியதோர் வயதுநூலோர்
சாஸ்திரவிதிப் படியாகக் கணிதஞ்செப்பே. (எகூங)

செப்பிடவே அட்டமமாய்க்கோடியபரவர்
சேர்ந்திடவே சுபர்நோக்க வளருமாகில்
முற்படியே தோன்றியசேய் வயதுமுன்சொல்
மொழியதனில் அய்யேழு வருடமாகும்
தப்பியதோ ருயிரதனிற் கொடியபாவர்
சார்ந்திடவே முன்னுரையில் மதியும்பாதி
துப்பிதழா யுதித்திடுஞ்சே யாயுள்மேலோர்
சொல்லினரால் தப்பாது தரணிமீதே. (எஙச)

வேறு.

அட்டமாதிபனும் உரயகோளுடனே அமிர்ந்திடச் சேய்மனை மறையால், திட்டமாய்க்கோளன் கருமனோடொன்றாய்ச் சேர்ந்திடக்கரிமனையாகிச், சட்டமாய்க்கரியு முடன்வரப்பிலமாய்ச் சார்ந்திடக்கேந்திரம்வருமால், மட்டிருஞ்சேய்க்கு வயதன்விதியை வகுத்தன ரைம்பதுமாதே. (எஙடு)

மாதவர்மொழிபாற் பிறந்திடுஞ்சேய்க்கு வகுத்தனர் பாம்பு நாள்பலனை, வேதமாயுரைக்கத் திசையில்முற்பாதி விளங்கிடும் பூமி க்ஷேத்திரங்கள், நீதமாய்ச்சமமாய் பலன்வருந்திசையில் நேர்ந்திடும் பாதியிற்பாதி, ஓதினர்மயக்கம் பொருளழிகிலேசம் உதவிடும் ராகுநாளுரையே. (எஙரு)

உரையெனக்குருநாள் தனதினிற் றுயரம் உதவியபொருட்களும்பூமி, விரைவுட னழிவு பலன்சமமாகும் விளங்கிய சாதகன்றனக்கு, அறையெனப்பிலமாய்த் தனதுநாள்முடிவு லறைந்தனர் அதிகக்ஷேத்திரங்கள், குறைவிலாதிருப்பன் குடும்ப யோக்கியனாய்க் குறித்தனர் கணிதநூல்விதியால். (ருஙஎ)

வேறு.

அட்டமத்திற் பாம்புடனே கரியொன்றாகி
யமர்ந்திடவே அதற்குடையோ னருணன்வீட்டில்
நிட்டைபுரி மாலுடனே பரிதியொன்றாய்
நின்றிடவே மதிகேந்திர மிவர்களாகத்
திட்டமுடன் உயிர்க்கதிபன் கருமனோடு
சேருமனை உயிர்தனக்கு யிராறுற்றால்
சட்டமுடன் தோன்றியசேய் வயதுமேலோர்.
சான்திர வாகமப்படியே கணிதங்கூறே (எஙஅ)

கூறுமெனப் பிறந்திடுஞ்சேய் பலனைமேலோர்
குறித்தனரால் வெள்ளிபரி மதியிற்செல்வம்
சாருமென அற்பபலன் தரணிமீதிற்
சார்ந்திடுமே தப்பாது கணிதவாய்மை
சேருமெனத் தோன்றியசேய் மரணமேலோர்
செப்பினர்கள் சந்திரனுள் திசையிற்காலம்
கூறினர்கள் பாதியென முடிவிற்றுஞ்சுங்
கொள்ளுமென ஆரியன்மே லாணைமாதே. (எகூ)

சந்திரனு மூபிர்க்கோளாய் மூன்றுரெட்டிற்
றனித்திடவே அதற்குடையோன் வளருங்கேந்த்ரம்
விந்தையுடன் கரிநீசம் சுபர்நோக்காமல்
விளங்கிடவே பவர்நோக்கத் தனிக்குமானுல்
சிந்தையுடன் உயிர்தனக்குக் கருமனுதன்
சேரிடமூன்று றெட்டுப் பன்னென்றுனுல்
வந்திடவே ஆரியன்மே லாணைசேய்க்கு
வகுத்தனரீ ரொன்பதுவாய் மரணமாதே. (எசo)

சூரியன்சேய் மாலுயிரோன் காரியில்லந்
தோன்றிடவே அதற்குடையோன் உயிர்க்கெட்டோனுந்
சாரிடமே ஆட்சியுச்சம் தரிக்கஅக்கோள்
சார்ந்தயிடங் கேந்திரமா யிருக்குமாகில்
கூறியபத்தோனுடனே சேர்ந்துஆட்சி
குளிர்மதிக்கு மறையாமல் வளருமானுல்
சீருடனே பிறந்திடுஞ்சேய்க் கெழுபத்தஞ்சு
சேர்ந்திடுஞ்சா தகற்குயிது வயதென்றோதே. (எசக)

ஓதுமெனப் பிறந்திடுஞ்சேய் கருமனுடு
உறைந்திடவே கொடும்பாவர் தரிக்குமாகில்
வேதமதாய்த் தோன்றியதோ ரெழுபத்தஞ்சில்
விதித்தனரேழ் மூன்றெனவே வயதுமாயுள்
நீதியுடன் வரும்வயது நிசமென்றோதி
நிச்சயமா யுதித்தவற்கு வயதுவோது
சோதிடமாய்ப் பாம்புகுரு கரியிலின்பஞ்
சொல்லினர்கள் வரும்பலனைக் கணிதஞ்செப்பே (எசஉ)

செப்பியதோர் பாம்புதிசை தனதிலின்பம்
சேர்ந்திடுமே வருமுயற்சி பொருள்கள்சேரும்
தப்பிடுமப் பணிதிசையில் வருமுற்பாதி
தனிலதிக பொருட்சிலவு உயர்ச்சிதுஞ்சும்
முற்படியா மரவுதிசை புகர்பொசிப்பில்
முயற்சிசமம்பாம்பு திசைமுடிவிற் பொன்றுந்
துப்பிதாழ் பொன்னன் வருந்திசையிற்பாதி
சொல்லதிகம் பொருளுயர்ச்சி வளருமேலாம். (எசஙு)

மேல்மொழியாம் பொன்னன்வருந் திசையிற்பாதி
விளங்கியநாள் முதல்சமமே மனதிற்பீடை
நீலன்வருந் திசைமுதலே அரசரின்பம்
நேர்ந்திடுமே பொருளதிகம் உயர்ச்சிமேலாம்
சீலமுடன் றோன்றியசேய் தனக்குப்பூமி
சேர்ந்திடுமே பிலமாகத் தாணிமீதில்
தூலமுடன் தப்பாது கணிதவாய்மை
சொல்லினர்கள் மேலோர்கள் துலங்கத்தானே. (எசச)

மாதேகேள் காரிகுரு கொடியகோளும்
வருமுயிர்கேந் திரமாகி வளரஅக்கோள்
நீதியுடன் மதிதனக்குப் பதினொன்றன்னில்
நின்றிடநட் பாட்சியுச்சம் வளருமானல்
வேதமதாய்த் தோன்றியதோர் குருவுகாரி
விளங்கியமுன் னுரைத்தபலன் உதவுமாதே
மாதேகேள் காரிகுரு கொடியகோளும்
மறைந்திடவே மதியுயிர்க்கு மறையுமானல். (எசரு)

மறையுமெனக் காரிகுரு கொடியகோளும்
வளருமனே நாதனுமே பகைநீசத்தில்
விரைவுடனே தனித்திடுமால் வளரவந்த
விளங்கியசே யவன்றனக்குக் குருவுங்காரி
முறையுடனே வருமுதலே அலைச்சல்துக்கம்
முயற்சியில்லான் வரும்பலனே உதவுமாதே
அறையெனவே பொருளழிவு பீடைநோய்கள்
அழியுமெனச் சாதகற்கு கணிதம்ஓதே. (எசசு)

வேறு.

ஆறினோன் உயிரோன்பாம்பு அமர்ந்திட வோர்வீடாகச்
சாரவே அக்கோள்பத்தில் தரித்திடக் குருகேதுற்றால்
கூறினர் காரிநாளில் குறுகிய தனதிற்பாதி
சாரவே மயக்கங்காட்டுஞ் சார்ந்திடும் ஓராண்டோதே. (எசஎ)

வேறு.

காரிஉயிர்க் கோளுடனே அருணன்வெள்ளி கருதியஅஞ்
சோனுடனே யிவர்களொன்றாய்ப் பாருயிர்க்கேந் திரமாக வளரு
மிக்கோள் பதியமணி சுபர்கிரகமிவர்களாகிக், கூரியசந் திரன்றனக்
கு மிவர்கள்கேந்திரம் குறுகிடவே அட்டமத்தோ னுதயம்வந்தால்
பாருயிர்விட் டேகிவிடும் அறுபத்தொன்றிற் பகருமென ஆகமநூ
ற்படியென்றோதே. (எசஅ)

வேறு.

கடகமாய்த்தோன்றி லக்கினமுதிப்பக் கருதியலக்கினநாதன்
திடமுடன்காரி யுடன்வரப்பாம்புசேர்ந்திடு மிவர்கள்கேந்திரமாம்,
விடமுடன்உயிர்க்குக் கர்மகோளுச்சம் விளங்கிடப் பிறந்தசாதகற்
குச், சடலம்விட்டேகுந் தரணியில்வயது சார்ந்திடும் அறுபதேழ்
மாதே. (எசகூ)

மாதவர்மொழியால் உதயகோள்காரி வருமிடம்மறைந்திடப்
பாம்பும், நீதமாயொன்றாய் இருந்திடயிக்கோள் நின்றிட நாதன்
கேந்திரமாய், ஓதிமுன்சொன்ன வகைதொகையதனில் ஒழிந்திடு
மெட்டுமேழஞ்சு, சாதகன்றனக்கு நாற்பதாறொன்றிற் சாய்ந்திடுங்
காலன்வந்திடுமாம். (எடுo)

அட்டமாதிபனு மாயுட்காரகனும் அருக்கனுங்கூடியோ ரில்
லந், திட்டமாயுயிர்க்கு மறைந்திடமதிக்குச் சேர்ந்திடம் யிவர்கள்
கேந்திரமாய், நிட்டைமாலுயிரோன் காரிவீடதனில் நின்றிடச்சுப
ர்கள் நோக்கிடுமால், சட்டமாய்க்கருமன் மதியின்கேந்திரமாய்த்
தரித்திடுஞ் சாதகன்வயது. (எடுக)

சாதகன்வயது நாற்பத்தேழொன்றிற் சாய்ந்திடுஞ்சேய் நமபு
ரத்தில், ஓதினர்கணித வாக்கியப்படியே உரைத்தனர் வேதநூலா

ய்ந்தோர், வேதமாயாவுதி சைவருந்தனதில் விளங்கியு சேயவன்ற னக்குச், சேதமாம்பொருள்கள் சகோதரநாசம்செப்பினர் மனது சஞ்சலமாம். (எருஉ)

சஞ்சலம்பிலமாம் மனதினிற்கவலை சார்ந்திடுந் தந்தையர்தன க்கு, அஞ்சவேதுன்பம் மைந்தனுற்சேதம் அழிந்திடு முயிர்ப்பொ ருள்பிலமாந், தஞ்சமாயரவு தனதினிற்கஷ்டஞ் சார்ந்திடுஞ் சாத கன்றனக்கு, விஞ்சையாயரவு குருவருமதனில் விளங்கிடு முயற்சி வந்திடுமால். (எருங)

வந்திடுஞ்சமமா யோகவாக்கியங்கள் வகுத்தனர் பாம்புமுற் பாதி, விந்தையாய்வரும்பின் பாதியிற்கஷ்டம் விளங்கிடும் பாதி யிற்பாதி, சிந்தையிலதிகம் உயர்ச்சிசந்தோஷஞ் சேர்ந்திடும் ராகு நாள்முடிவுஞ், சுந்தரப்படியாற் குருவருந்திசையிற் றுஞ்சிடுமுயற் சிசாத்கற்கே. (எருச)

வந்திடுங்காலன் பத்திடுமுயிரை வகுத்தனர் கணிதவாக்கிய மாய், முந்தியமறைபொன் றிசைவரும்முதலே முதுமகனெய்திடு ம்வரையும், விந்தையாய்வளரும் பாக்கியமதிகம் விளங்கிய பலன் சமமாகும், சுந்தரப்படியாற் காரிநாள்முதலே தோன்றிய பலன்வ கையுரையே. (எருரு)

உரையெனக்காரி திசைமுதற்பலனை யுரைத்தனர் சமமதாய் வளரும், விரைவுடன்தனங்கள் மனதுசஞ்சலங்கள் விளங்கிய நா ளெல்லாம்வளரும், அறையெனஉயிர்க்கார் தானக்கோள்சுபராய் அமர்ந்திடம் மறைந்திடப்பிலமாய், முறையெனரிபுவிற் கொடிய கோள்பிலமாய் முயன்றிடு முதுமகன்றிசையில். (எருசு)

முதுமகன்றிசையில் முடிவினிற்சேய்க்கு முந்தியநெடுவித ரோகம், விதமுடன்அணுகும் பிலமதாய்வளரும் விளங்கிய சாதக ன்றனக்குச், சதமெனப்பிலமாய்ச் சார்ந்திடும்ரோகந்தப்பிடும்வழி வகையுரையே, யிதமுடன்மறையோன் குருவினுற்றோஷம் யிணங் கிய சாபத்தாற்கூறே. (எருஎ)

கூறிடுமறைமோன் றனக்குநீபிலமாய்க் கூடியகன்னிகாதானஞ்
சாருமென்றுதவ அதுவழிபாவந் தப்பிடும் பாதியிற்பாதி
சீருடன்குருவால் தோஷம்நீவிலக்கச்செப்பிய பூமிதானங்கள் [கம்.
வீரியத்துடனே கொடுத்து நீதொலைத்தால் விலகிடும் நெடுவிதரோ

வேறு.

அட்டமத்திற் பாம்புடனே அருணன்பொன்னும்
அமர்ந்திடவே அதற்குடையோன் வளரஉச்சம்
சட்டமுடன் மதியுயிரோ ஞகிஆயுள்
தனில்வருங்கா ரகன்மனையிற் சுபர்களோடு
திட்டமுடன் மறையாமற் றரிக்கப்பத்தோன்
சேருமனை சுபர்விடாய்த் தனிக்குமானால்
கட்டியசே யவன்றனக்கு யெண்பத்தஞ்சிற்
காலன்வருந் தப்பாது கணிதங்கூறே. (எருகூ)

கூறியதோர் அட்டமத்தோன் மறையஆயுள்
குறுகிடுகா ரகனுடனே தரிக்குமானால்
பாருபிர்தோன் றிடுமுரைமுன் னெண்பத்தஞ்சிற்
பகர்ந்தனரேழ் நால்தொகையுங் குறையுமாயுள்
ஆறிருவேழ் நாள்தனில் மேல்முயற்சிசேரும்
அதில்வருமே பலன்சமமே அறையுமேலோர்
சீருடனே மறைதிசையில் ரோகமில்லான்
செப்பியநாள் பலன்சமனே தரணிமாதே. (எகூ0)

வேறு.

அட்டமாதிபனுங் காரியுமோர்வீடமர்ந்திட உயிர்க்குஒன்ப
துவாய், நிட்டைமாலுயிரோன் புகர்மதி அலரி நின்றிடம் உதய
கேந்திரமாய்ச், சட்டமாய்க்கருமன் உயிர்க்குயேழதனிற் றனித்தி
டச் சாதகன்றனுக்குத், திட்டமாய்வயது இருபதேழ்ரெட்டி செப்
பிய தொகையின் முன்சேரே. (எகூக)

சேரனத்தொகையாய்க் கணிதவாக்கியமாய்ச் செப்பிய சா
தகன்றனக்குக், கூறினர்உயிரோன் திசைவருமுதலே குறித்தனர்
முயற்சிவந்திடுமாஞ், சீருடனுயர்ச்சி அருணனுடபாதி செப்பினர்

அரசர்சந்தோஷம், பாருயிர்தனிலேபூமிக்ஷேத்திரங்கள்பகர்ந்தனர் அதிகபாக்கியனும். (எசுஉ)

வேறு.

சந்திரன் மாந்தியோடு சாருயிர் தன்னிற்சேர
வந்துயிர் நாலின்கோளன் மறைந்திடச் சுபர்வீடானால்
சிந்தையாய் வருஞ்சேயன்னை செத்திடும் இருநாலுக்குட்
சந்திரன் மறையவுச்சஞ் சாய்ந்திடும் வயதேழ்பத்தில். (எசுஙு)

வேறு

காரிமனை தனிலரவு உயிரின்கோளும்
கருதுமெட்டோ னுடன்கூடித் தரிக்கஅக்கோள்
பாருயிர்க்கு உதயமதிற் றனித்துநிற்கப்
பகலவன்மா லுடன்கூடி மறையுமாகிற்
சாருயிர்க்கோ ளாகிடவே கீர்த்திக்கீரிற்
றனித்திடவே யுயிரினுக்குக் கருமன்வந்தால்
கூறியசே யவன்றனக்கு மரணமோது
குருதிதிசை யந்தியமாங் கணிதஞ்செப்பே. (எசுச)

வேறு.

மறையவன் உயிரோனாகி வருங்கரி மால்பானோடு
விரைவுடன் சேய்வீடேகி விளங்கிடச் சுபர்நோக்கில்லா
முறையுடன் யெட்டோன்பத்தில் முயன்றிட மதிசேய்பார்த்தால்
அறையென வருஞ்சேயாயுள் அழிந்திடு மிருபத்தெட்டில். (எசுரு)

வேறு.

ஆரலுயிர்க் கோளாகி உதயமேறி
அமர்ந்திடவே வுடனொருகோள் சேரானாகச்
சாருமெட்டோன் கருமனுடன் புகரொன்றானாற்
சனிமனையிற் றரித்திடவே சனியென்றானும்
கூறுமுயிர்க் கேழதனில் வளரயெக்கோள்
குறுகிடவே ஆயளறு பதுவேயாகும்
பாருயிர்க்கோள் வியத்தில்வர வுயிரிற்பாம்பு
பகர்ந்திடவே மூன்வயதில் அழியும்யீரார். (எசுகூ)

வேறு.

மேடமாய்த்தோன்றி லக்கினமுதிப்ப விளங்கிய லக்கினநாதன்
வாடியஉயர்க்கி ராறினில்லது வருபஞ்ச மத்தினில்வருக

நீடியகாரி கொடியகோளுடனே நின்றிட வுச்சமாய்வளருங்
கூடியசேய்க்குக் குறிகிடும்வயது குறித்தனர் கொடிதிசைமுடிவில்

வேறு.

சூரியன்வீ டதிற்கரியன் யெட்டின்கோளன்
தோன்றுகொடி யோன்மாந்தியுடன் அக்கோள்
பாருயிர்க்கா றெட்டிலது தரிக்குமாகிற்
பகருபிரோன் மாலாகிப் புகர்வீடேகச்
சீருடனே வருங்கருமன் உயிர்க்குநாலிற்
சேர்ந்திடவே உயிரதனில் வருஞ்சேயுற்றால்
கூறுமெம புரமணுகும் பதினெண்கோளன்
குருதிதிசை முடிவதனில் மரணங்காட்டும். (எசுஅ)

அட்டமத்தோன் கரியுடனே சேய்வீடேகி
அமரஅக்கோ ளுயிர்தனக் கட்டமத்திலேகத்
திட்டமுடன் வருமுயிர்க்கோள் பரிபாம்போடு
சேருயிர்க்கு மூன்றலது யீராறேகச்
சட்டமுடன் விடைஉதயம் மதியுந்தோன்ற
சார்ந்திடுமே யவன்றனக்குக் கணிதநூலால்
அட்டமத்தோன் உடன்வரினு மக்கோள்நாளி
லந்தியத்திற் சேய்மரணந் தப்பாதென்றே. (எசுகூ)

வேறு.

மதிமகனும் உயிரின்கோ ளுதயமேற வருமறலி கேதுடன்கூ
டித்தரிக்குமாகிற், சதிருடனே அட்டமக்கோள் சனியனுகிச் சாரு
யிர்க்கா றதனில்வள ராரோன்நீசம், விதியுடனே வருங்கருமன்பதி
னொன்றேகி விளங்கிடவே யெக்கோள்கள் தரியாதானுல், அதிபதி
யாய் வயதெழுபது பயமென்று அரைந்தனர்கள் வெகுபரலாய்த்
திரட்டியோதே. (எஎ0)

ஓதுமென முப்பதுஆர் வயதுமேலா யுதவிடுமே வெகுதன
வான் அதிகபூமி, வேதமுடன் வெகுபுகழோன் வளருங்கீர்த்திவெ
குதீர்க்க னுரைமொழிசொல்மேலாமென்றே, நீதியுடன்வெகுஅர
சர் தயவுசேரும் நேருமனம் வெகுதீர்க்க னுயர்ந்தவாழ்வோன்,
சீதமுடன் வருராஜயோகனுகி செலுத்திடுவன் மரணம்வரை தவ
றுதென்றே. (எஎக)

அட்டமத்திற் கரியுடனே அலரியோடு அமரவக்கோள்மாலு டனே அமருமில்லந், திட்டமுடன் கேந்திரமாய்த் திரிக்கஅந்த செப்பியகோள் தனைப்பவர்கள் சுபர்கள்நோக்கச் சட்டமுடன்வருமு தயஞ்சிலைமீனுகச் சாருயிர்க்கோள் மாந்தியுடன் உயிரிற்சேர்ந்தால் மட்டிடுஞ்சே யவன்றனுக்கு வயதுமேலோர் வகுத்தனர்கலைம்ப தியேழுபயஞ்செப்பே. (எஎஉ)

வெய்யவனும் புகரவனும் யிரண்டிலாகா விளங்குபொன்னன் மதியுடனே யெட்டிற்றோன்றப், பையரவஞ் சேய்மூன்றிற் பதிந்து நிற்கப்பகர்கின்ற சேயவனுமாட்சியாகத், துய்யதொரு மாலவனும் உயிரில்லாகத், தோன்றிவர வியமதனிற் கரியுமாக, வையகத்தில் மாந்திசுபர் மனையில்வாழ்க வாழ்வுடனே குடமதனி லுதித்த பேர்க்கே. (எஎஙு)

வேறு.

உதித்திடுஞ்சேய்க்கு அரவுநாள்முதலாய் உயர்ந்திடுந் தனங்க ளுமிலாபும், பதித்திடுயோக பாக்கியஞ்செல்வம் பகர்ந்தனர் பொன்றிசைவரைக்கும், சதித்திடும்குருவின் றிசையதுபிற்கூர் சார்ந்திடுந் தத்துமுண்டாகும், விதித்திடும்கரியின் றிசையதுநடுவில் விளங்கிய மரணமென்றுரையே. (எஎச)

உரைத்தனர்மேலோர் சேயவன்முடிவில் உகந்திடும் அரவுபிற்கூரில், சரித்திடும்தத்தாம் பீடைகளாகும் சார்ந்திடும் நாகர்தன் வலமும், விருத்தமாவரினும் சுகமதுண்டாகும் விளங்கிடுஞ் சாதகன்றனக்கு, கருத்துடன்வித்தை புத்தியுமூர்க்கம் காட்டிடும் வஞ்சகனுவன். (எஎடு)

வஞ்சகக்குணத்த னுகியேயுதிப்பன் வாழ்வுடன்முந்தியதுணைவர், துஞ்சிடவரினும் ஏமனுக்கிறையாய்ச் சொல்லுவர் பிந்திமூன்றுகும், தஞ்சமாய்ச்சமமும் ஒன்றதிற்றிரமுஞ் சார்ந்திடும்பெண்துணைகுறுகும், வஞ்சியேபிந்தி வருந்துணைமூன்றில் வகுத்தன ராண்களுமிரண்டாம். (எஎசு)

இரண்டென வகுத்த சாதகன்றனக்கு எய்திடும் மாதுலனென்றும், திரண்டெனவரினும் அன்னைதன்பிதுர்க்குச்செப்பினர்தெத்தெனவருவன், காண்டமாய்சேயோன் திசையதுபிற்கூர் காட்டி

னர் அன்னைக்கே கடினம் முரண்டிடும் அரவின் றிசையதுநடுவில் முழங்கிடும் மாதுருகருமம். (எஎஎ)

கருமமென்றுரைத்த சாதகன்றனக்குக் காட்டினர் புத்திரர் ஐந்தாம், வருமமாயதனில் யிரண்டுமேசமமாய் வகுத்தனர் ஐந்தினிலாண்கள், பரணமாயிருவர் தீர்க்கமுமாவர் பதித்தனர்சேயவள் பிற்கூர், தருமமாய்த்தாரம் வந்துமேசேரும்சாற்றினராகமநூலே.

ஆகமநூலால் வந்திடுஞ்சேய்க்கு அறைந்தனர் பிதுருவின்றனக்கு மாகமாயரவின் றிசைகருமுன்னால் மதித்தனர் பீடையுங்கடினம், தாகவேகணிதர் சாதகன்றனக்குச் சாற்றினர் மேல்மொழியதனால், சாகவேயரவின் றிசையதுபிற்கூர் தந்தைக்கே கருமமுண்டாகும். (எஎகூ)

வீரியதனத்தோ னெட்டினோன்சேயாய் விளங்கிட வுயிரினிலன்னோன், கார்பொன்றனக்கு நவத்தினிலிருக்கக் கதிருடன்சேர நல்கலையுந் தேறியேபுகரோன் இல்லத்திற் சுபராய்ச்செழுங்கவிசேயுடன்நான்கில், நாரியர்தனத்தோன் பொன்று ராகுடனே ரவிமகனுடனுறநண்ணே. (எஅ0)

நண்ணுசேய்வயதில் யோகவான்பின்னே நாடியே தந்தை தாய்மரணம், எண்ணியகருமம்முடித்திடான் துணைவர்யில்லையாண் பெண்டுணைபகையான், வண்மையும்புகழான் அரசர்களுறவான்மனுத்தினிற் கவலையுள்ளவனே, திண்ணமாய்வயது ஐம்பத்தைந்தினிலேசேர்குவ னெமபுரந்தானே. (எஅக)

வேறு.

மாந்திமதி பகைவனிருந் ததிபதியான்சேயாய்
மையவனைச் சார்ந்துயிரில் மதியவன்றன்னிடத்தில்
சேர்ந்திடுவர் வாகனத்தோன் சாமிவெய்யோனுடனே
திரிகோணத் ததிபனுக்குஞ் சேய்தனக்கும்வாக்கில்
பாந்தமாதாய் உயிர்தனையும் மதியவனும்நோக்கப்
பாம்பிருந்த அதிபதியும் நீசமுறநான்கிற்
சாந்தகுண சவுரியவான் அரசர்கெருவிதனும்
தந்தையர்க்குமேலவனுந் தாட்டிகனென்றுரையே. ()

வேறு.

உரைப்பவர்சிசுக்கு அட்டமன்றிசையி லுற்றிடுமன்னையர்சிர
த்திற், கரப்பனீர்நோவாம் கண்டமும்விலகுங் கருதியதாய் வழிச
லனம், நிறைத்திடும்பிதிர்க்குயினத்தினிற்கலகம் நேசரும்பகைபவ
க்கேடு, துரைத்தனர்பயமுஞ் சாதகன்றனக்கு சுரத்துடன் அலைச்
சல்புண்கண்டம். (எஅங)

கண்டமும்விலகப் பாலனுர்உடுவிற் கதிரவ னுதித்திடும்வே
ளை, பண்டுளதலத்திற் பொன்னதாற்காகம் பகர்ந்தனர் வெள்ளியா
ற்கருடன், ரண்டுமேசெய்து நவத்தின்கோள்பூசை நல்கிடு சோடச
த்துடனே, மண்டலஞ்சரியாய் முடிந்தபின் வரைமேல்வரும்நதிக்
கரையின்மேல்யாகம். (எஅச)

யாகமேமூன்று தலத்தவர்மண்ணுஞ் சர்ப்பம்வாழ்புத்துமண்
ணதனுல், நாகம்போல்ஓமக் குழிசெய்துபடத்தில் நாடிய கருடனை
வைத்துக், காகம்வால்புரத்திற் காங்குசெந்துகிலுங் களபமும் நறு
மலர்புனைந்து, தேகம்வெண்சாவல் கருங்கிடாய் பெருங்காய் தேங்
குடன் பெலிசெய்யத்தினமே. (எஅரு)

தினத்தினிற்காகம் அஞ்சுமேவைத்து தீபதூபங்களுங் கொடு
த்து நினைத்தவர்பிறந்த லக்கினஞ்சொல்லி நெய்யினுல் ஓமமுஞ்செ
ய்ய, அனைத்தவன் கண்டம் விலகியே ஐம்பத்தாறுநாலேந்துடனிரு
ப்பன், கனதனமுடையோய் மேருவைச் செப்பைக் கலசத்தைப்
பழித்திடுமாதே. (எஅசு)

வேறு.

சுக்கிரனட் டமக்கோளாய்க் கரியனேடு தோன்றுயிர்க்கட்ட
மந்தன்னிற் றரிக்குமாகிற், றக்கதென வுயிர்க்கோளன் மறையனு
கிச்சாருதய கேந்திரத்திற் பவர்களோடு, தொக்குமெனத் தரித்தி
டவே தோன்றுஞ்சேய்க்குச் சொல்லியதோர் வயதெழுபதுபயமா
கும், திக்குமெனு முயிர்க்கோளன் நீசமேறிச் செப்பியதோர் பவ
ருடனே சேருமாகில். (எஅஎ)

சேருமென முன்னுரைத்த ஆயுள்தன்னில்செப்பினுமூவாறு
தள்ளி நிசமென்றேது, பாருயிர்க்கோள் நீசம்வரக் கரிபெட்டோ
னும் பகருமொரு கோளுடனே மறையுமானுற், சாருமென முன்

னுரைத்த ஆயுள்தன்னில் சாய்ந்திடு மூவேழுரெட்டிதொலையுமென்று, கூறினர்கள் கணிததமி ழாய்ந்தமேலோர் குறித்தனர்கள் வருஞ்சடையோனணையென்றே. (எஅஅ)

கடகமாய்த்தோன்றிலக்கினமுதிப்பக்கருதிய லக்கினநாதன், திடமுடனுயிர்க்கு ஆறினிலமரச்செப்பிய * ஐயிருகோளன், விடமதிற் றரிக்க விளங்கிடமுன்பின் விளங்கிய பாவர்வந்திடுக, நடமிடுங்காரி கேந்திரமதனில் நல்கிட நீசமாயவற்கு. (எஅகூ)

வருமெனவயது வகுத்தனர்புகர்மால் வக்கிரன் நாள்தொகையாக, அருமறைவிதியால் அறைந்தனர் பிலமாய் ஆகமநூற்படியாகத், தருமுபயக்கோள் தந்திடுந்திசையிற் சார்ந்திடும்பூமி கேந்திரங்கள், இருநிதிபூமி வளர்ந்திடுமெனவே யியம்பிய சாதகன்றனக்கு. (எகூ0)

அட்டமன்கரியா யிரவிமால்கேது அமர்ந்திடவுச்சமாயஞ்சில் திட்டமாய்க்குருவுஞ் சேயுடன்மாந்தி சேர்ந்திட வுயிர்க்கிரண்டதனிற், சட்டமாய்மதியுங் காரிவீடதனிற் சார்ந்திடப்புகருமே நீசம் திட்டமாய் வரினுங் குருதிசையதனிற் சேய்வரில் மரணமென்றுரையே. (எகூக)

அட்டமன்மாலாய் குருவுடன்உயிரில் அமர்ந்திடக்காரியுங்குளிகன், திட்டமாயுயிர்க்கு ஒன்பதில்வரினுஞ்சேயுமே யொன்றீன் கோள்நாலாய், சட்டமாய்க்கர்மன் மதிக்குகேந்திரமாய்த்தனித்திடப்பிறந்தசாதகற்கு, மட்டிடாதெட்டோன் றிசைமுதல்செவ்வாய் வரையெனமதித்தனர் வயதை. (எகூஉ)

மதித்தனர்வயதில் மதிதிசையதனில் வாய்த்திடும் பீடையுமதிகம், விதித்தனர்வயது நாற்பதிற்கண்டம் விளங்கிடும் வியாதியாலனேகம், துதித்தனர்பிலமாய்த் தோன்றிடுமென்று சொல்லினர் கணிதநூலதனுல், வகுத்தனர் சத்திகணபதிதன்னை வணங்கிடத் தீர்ந்திடும் பிணியும். (எகூங)

---

* ஐயிருகோளன் என்பதும் திங்களின்கோளன்என்பதும் பலன் ஒற்றுமையாயிருக்கும்.

வேறு.

சூரியனும் உயிர்க்கோளாய் உதயமேறித்
தொல்கருமக் கோளுடனே தரிக்குமானால்
சீருடனே அட்டமக்கோள் பதினொன்றேகிச்
சேர்ந்திடவே அதற்குடையோன் கரிசேயோடு
சாருயிர்க்கு உபயமதில் யீராறுகத்
தனித்திடவே கருமமதிற் பவர்வந்துற்றால்
கூறினர்க ளாயுள்தொகை நாற்பத்தொன்றிற்
குறிகிடுஞ்சேய் எமபுரஞ்சென்றணுகுமாதே. (எகூச)

கோலலது விடையலது உதயமாயக்
கோளனும்பான் மாந்தியெட்டோ னிவர்களோடு
சீல்முட னுயிரிலது யீராறேகிச்
சேர்ந்திடவே யிவர்கள்தனைச் சுபர்நோக்கில்லா
நீலனும்பான் வீடலது மால்வீடேகி
நின்றிடவே அட்டமத்தில் யெக்கோளுற்றால்
காலன்வரும் நாளெனவே யெட்டில்வந்த
கருதியகோள் திசைமுடிவில் மரணங்காட்டும். (எகூடு)

மதிதனக்குக் கேந்திரத்தில் வருமுயிர்க்கோள்காரி
வளருமெட்டோன் பத்துடையோன் வரயிவர்கள்தனிக்க
விதியுடனே மதியுயிரிற் றனித்திடவே வுதயம்
மின்னெனவே தோன்றியசேய் விளங்குமெனவயது
சதிருடனே அட்டமக்கோள் சார்திசைநாள்முடிவிற்
சாய்ந்திடுஞ்சே யெமபுரத்திற் சேர்ந்திடுமென்றோது
மதிதனக்கு முன்னுரைத்த கோள்மறைந்து தனித்தால்
மாய்ந்திடுமோர் தினமதனில் வகுத்தனர்கள் மேலோர்.()

கரியுடன்சேய் மாலுடனே யிவர்களொன்றாய்க்
கருதுதய கேந்திரத்திற் றரிக்குமாகில்
வருமுயிர்க்கோள் சூரியனும் யீராறெட்டில்
வந்திடவே அட்டமத்தோன் மறைந்துநீசம்
தருதுமென வருகருமன்நீசமுற்றால்
சாருமன்ப தாயுளஞ்சு கணிதம் ஓது
வருமுயிர்க்கோ ளட்டமத்தோன் பவரோடுற்றால்
வகுத்திடுமுன் னுபாதில் மாயும் யீரர். (எகூஎ)

சந்திரனும் மாந்தியுடன் உயிர்க்கெட்டோனுஞ்
சாரும்மிடங் கரிமனையாய்த் தரிக்க அக்கோள்
சிந்தையுடன் உயிர்தனக்கு யீரார்ருகிச்
சேர்ந்திடவே உயிர்க்கோளன் புகர்வீடாகப்
புந்தியுடன் பத்தினுக்கோள் புகரொன்ருகிப்
பொருந்திடக்கேந் திரமாகிச் சுபர்வீடானல்
வந்திடுஞ்சே யவன்றனக்கு நாற்பத்தொன்று
வகுத்தனர்கள் அவன்வயது தரணிமாதே. (எகூஅ)

மாதேகேள். தோன்றிடுஞ்சேய் வருநாள் தொட்டு
வகுத்தனர்பாக்கியம்பூமி வளருங்கோதே
நீதியுடன் குருவருநாள் வருமுற்பாதி
நேர்ந்திடுமே மனக்கவலை துயரம்பீடை
வேதன்விதிப் படியாக வருமென்ருேதி
விதித்தனர்பிற் பாதியிலே விளங்குஞ்செல்வம்
ஆதிமொழிப் படியாகக் கணிதமாய்ந்து
அறைந்தனர்கள் பிலமாக அவனிமீதே. (எகூகூ)

சூரியன்மா லட்டமதத்தோன் ஓர்வீடோகித்
தோன்றிடக்கேந் திரமாகிச் சுபர்வீடாகக்
காரியுடன் மதிஉயிரோன் புகருென்ருகிக்
கருதிடங்கேந் திரமாகிப் பவர்நோக்கில்லா
கூறிடுஞ்சே யவன்றனக்கு யெழுபதாயுள்
குறித்தனர்நூற் படியாகக் கணிதமாய்ந்தோர்
சூரியன்மா லட்டமத்தோன் மறையுமானுற்
ருேன்றிடுமைம்பதுவாக வயதென்ருேதே. (அ00)

ஓதிடவே அரவுடனே மாந்தியொன்ருய்
உதயம்வர அக்கோளைக் குருநோக்குற்ருல்
நீதியுடன் அரவுதிசை தனத்திற்ருெட்டு
நேர்ந்திடுமே உயர்ச்சிவரும் அரசரின்பம்
போகமெனப் பதிஉயர்ச்சிபூமிகீர்த்தி
புகழ்பெறவே வருமுயர்ச்சி அதிகமேலாம்
ஓதிடுவன் அரனுணை தப்பாதென்று
உரைத்தனர்பாம் பதின்திசைநாள்உயர்ச்சிகூறே. (அக0)

சூரியன்மா லட்டமத்தோன், புகரொன்றுகித்
தோன்றிடக்கேந் திரமாகி உதயந்தன்னில்
சாருயிர்க்கோ ளுடன்சேர்ந்து பவர்வீடாகித்
தரித்திடவே மதிதனக்கு மறையுமாகில்
காரியுச்சங் கேதுடனே உயிர்க்குமூன்றிற்
கருதிடவே தோன்றிடுஞ்சேய் வயதென்றேதக்
கூறினர்மால் கார்புகர் மதிநாளாகக்
குறித்தனர்நூற் படியாகத் தரணிமாதே. (அ௦உ)

மாதேகேள் தோன்றிடுஞ்சேய் வரும்யோகத்தை
வகுத்தனர்நூற் படியாகக் கணிதமாய்ந்தோர்
ஓதிடுவன் பாம்புவருந் திசைவந்துற்றால்
உரைத்தனர்பாக் கியம்பூமி உதவியின்பம்
நீதியுடன் தனவானாய்க் குருமூற்பாதி
நேர்ந்திடுமே பதிபூமி கீர்த்திசெல்வம்
வேத்மதாய்க் குருவருநாள் வரும்பிற்பாதி
விதித்தனரால் மனக்கவலை பொருள்கள்துஞ்சம். (அ௦ங)

துஞ்சியதோர் காரிவருந்திசைமுற்பாதி தோன்றிடுமே பொருள்வரவு வளரும்பூமி, தஞ்சமதாய் வரும்பதிகள் நிதிகள்பூமி சார்ந்திடுமே பிலமாகத் தரணிமீதில், விஞ்சையுடன் ராகுதனில் மறைவந்துற்றால் விளங்கியசே யவன்றனக்கு அரவுதத்து, துஞ்சிடுமே அதில்மயக்கம் பொருள்கள்சேதம் சோதிடநூற் படியாகக் கணிதமாய்ந்தோர். (அ௦ச)

மாலுயிரோன் சூரியனும் ஓர்வீடாக வந்திடவேமறைதனக்கு மறையாதாகிற், சீலமுடன்கரிகுளிகன் குருவீடேகிச் சேர்ந்திடவே மதிஉயிர்க்கு மறையாதானால், சாலவென உயிர்தனக்கு நாலேழ் பத்தில் தரித்திடவே யெட்டின்கோள் தனிக்குமாகில், சீலமுடன் பாலன்வய தறுபத்தெட்டுசெப்பினர்கள் சேய்மரணந்தரணிமாதே

மாதேகேள் அஞ்சினுக்கோள் திசையிலின்பம் வந்திடுமே பாக்கியனாய் வளரும்பூமி, ஓதிடுவன் மால்திசையில் உதவுஞ்சேய்க் குஉரைத்தனரால் வரும்பலனே சமமென்றேது, சேதமெனமனக்

கவலை கொடியோனுளிற் செப்பிடவே புகர்பாதி சேருந்துன்பம் சோதிடமாய்ப் பெரியோர்கள் கணிதவாய்மை தோன்றிடவே புகர்பாதி துயரங் போக்கும். (அ0கூ)

எட்டினேன்சனியாய் இந்துவினிடத்தி லிருந்திட யிந்துவுஞ் சேயைத், தொட்டுவெண்கவியைச் சூழ்ந்திடச்சாமி சூரியன் பகைவன்மாந்தியும்போய், இட்டமாயணைய யெட்டினேன்நோக்க இவர்க்கவர்நடுவிலே உடலோன், சட்டமாயிருக்கச் சாதகன்றனக்குச் சாற்றினேம் மத்திபவயதே. (அ0எ)

வயதெனுமாண்டு யிரண்டரை நாளுள் மயக்கிடும் சூதகன்றிசையும், பயமதாம் யீராறுண்டினிற் பிணியாம்பயங்கரம் மதிதிசை விடினும், அயருமாம்அன்னை ஆரலோன்திசையில் அரிட்டம்நோய் இருபதுயெட்டில், துயர்செயும்நாற்பா னறிலுங்கண்டம் துஞ்சுவன் ஐம்பதுமெட்டே. (அ0அ)

வேறு.

மந்தபவ னுதிபதி அமரமதியாக
மனைக்கோளின் சேயுடனே மருவிடவுமூன்றிற்
புந்தியெனச் சமிசாதனக் கேவியத்திலிருக்கப்
புதியமதி திசைவரினும் புகலுசுதன் கண்டம்
தந்தையும்தா யெனவெறுப்புச் சாதிகளிற்கேடு
தகைசுரங்கள் ரணபீடை தண்ணீராற்பயமும்
வந்திடுமாம் அனற்பயமும் சோர்நிலைச்சம்
மாதுருக்குப்பீடைவரும் வகைதெரிந்து விலகே. (அ0கூ)

ஆடதனிற் செனித்திட்வத் ததிபனும்நா லதனில்
அம்புலியில் லம்புகுந்து அவர்தமக்குக்கேந்த்ரம்
சாடியினேன் நோக்கமுற்று மால்புகர்பொன்பரியும்
தங்கிடவும் அடுத்திடத்தில் மாந்தியுறப்பத்தில்
நாடுதனத் தோனிருக்க வியத்தினிலாறதனில்
நற்சசியுங் கரும்பாம்பும் நண்ணிடஅங்கிஷத்தில்
தேடுகரி வர்க்கோத்மம் திங்களும்சொட்சேத்ரம்
சேய்துலையாய் மால்நீசம் சுரர்குருவுங்குடமாய். (அக0)

குடமதனில் யிருந்திடவும் புகராட்சியேறக்
கோதண்டஞ் சிகியுறவும் பரிகயலிற்சேரத்
திடமனவான் நல்யூகன் விநயபரன ஒளிவன்
தீர்க்கமொழிதந்தையரைத் தெய்வமதைப்பேணுன்
விடைபுருஷன் அரசர்செயுந்தொழிலதனுல் இறைவன்
மேலவனு மிவர் துணைவர் அதியோகன் பலவான்
அடமகவே செலுத்திடுவன் அன்பர்க்குபகாரி
அதியுறுதி சாதுரியன் அரசர்கள்யோகியனே. (அகக)

யோக்கியனும் அட்டமத்தோன் சர்மிதிசைவரினும்
உயர்வழக்கு யிழந்திடுவன் ஓரறிவுதந்தை
தாக்கிடுமாம் வழிச்சலனம் வேறுவெனக்காட்டும்
சஞ்சலமுந் தவறிவிடும் வைசூரி சுரப்பன்
நோக்கினிய பிணிசேரும் நுண்ணிடையாள் வசியம்
நுட்பபலன் தம்பிஅதில் துற்பலன்கள் கொடுக்கும்
வாக்கினுக்கு வாக்கினிலே உறையரவுநிசையில்
வளர்சுகமுந் துணைப்பேரும் மங்களமாயுரையே. (அகஉ)

மங்களமும் உரைத்திடுவோம் முன்னதிகபலனும்
வாய்ச்சாலன் பிதிர்பிணக்கு வழக்குகளை மதிக்கும்
சங்கையெனச் சேதமுண்டாம் பொருள்விரையப் தனத்தில்
சார்ந்திடவும்பாலன்வய திருபதினெண் மேலாய்
நிதிபெருகுந் தீரகுணன் அறந்தேடவல்லன்
நீதிவழு வான்கணவி மகதோஷ முடையான்
துதிபெருகும் வாகனங்கள் க்ஷேத்திரமேற்கிரகன்
தூயவயதறுபதெனச் சொல்லினர் மேலோர்கள். (அகங)

கவிகதிர்பகைவன் கதிர்மகனுடனே
கலந்திட அன்னவ னதனில்
யிவையினை மறையோன் அரவுவீக்ஷணிக்க
யிந்து லக்கினத்தினிற் பிலக்க
அவைதனைச் சுபர்கள் பவர்கள் நோக்கிடினும்
அஞ்சினிற் பவருற வதனேன்
உபயமுற்றதனில் வெய்யவனிருக்க
உரைத்தனர் வயதமத்திபமாம் (அகச)

மத்திபமெனவும் அட்டமாதிபனை மருவினர்திசைவ்டவரினும், பெற்றதாய்துணைவர் தாரநோய்பிதிர்க்கும் பிலத்திடுந் தனக்கு கண்டமதாம்; அத்திசையதனில் தநயரையழிப்பன் அன்னையர் தந்தையுஞ்சலனம், இத்திசை விடுமுன் சிகிகவிசனிக்கு யிணங்கியமகவுக்காம் யாகம். (அகரு)

யாகமேசுதனும் பிறந்திடும்உடுவில் அம்புலி உயருநாட்பானு வேதமாய்நடுவில் வந்திடும்வேளை வெள்ளிபொன் தங்கதாம்பூரம், நாகமாம்நாலும் உருஅஞ்சுசிரசால் ராகுடன் கேதுருசெய்து, ஏகமா யிவன்மை தாரத்தின்கையால் யீந்திடும் படியதைவாங்கே. (அகசு)

வாங்கியே நதியின் கரையின்மேற்புத்து மண்ணினுல்யாகமே வகுத்து, காங்குடன்வேள்ளை சிகப்புமாக்காவி கலையினு லரவுக்கா சனமாய்ப், பாங்குடனிருத்திப் பாலபிஷேகம் பலதுரைசுகந்தமு சாற்றி, நாங்கரவினுக்கும் மாந்தளிர்புனைந்து நாட்டிடும் காகமஞ்சமுதாம். (அகஎ)

அஞ்செனக்காகம் அரவுமுன்வைத்து யாகத்துக் காவின்நெய் ஓமம்,கஞ்சமாமலரின் தண்டுநூலுடனே காக்கையின்கூடதின்சமுதை, மிஞ்சியேயாகம் முடிந்தபின்காயம் வில்வக்காய் கருங்கிடாய் சாவல், மஞ்சள்நீராட்டிப் பெலிகொடுத்திடவும் மகவுண்டாம்கண்டம்போம்ஜெயமே. (அகஅ)

ஜெயமெனும் புகரின் திசைவரில்போகஞ் சொலுத்துவன்வாகனம்புரவி, நயமதாய்க்கிடைக்கும் நாரியரிணக்கம் நல்கிடப்பிரியனுமாவன், பயமுடன் இனத்தார் கண்டநோய்பிணியாம் பகர்ந்தனர் தந்தைதாய்மரணம், சுயம்பெருமகவுந் தழைத்துமேலோங்குஞ்சுங்கனுர் கடையிற் றுற்பலனே. (அகக)

பலமிகக் கொடுத்து இராஜயோக்கியனுய்ப் பவுசுடன் நல்லவனுகக், கலைபலவுணர்ந்த சாதுக்கள்பக்தன் கனஜன ரக்ஷகனெனவும், நிலவுமுன் திசையிற் கண்டமுமுண்டாம் நிலவுதன் திசையின் மேல்நடத்தி, குலைசெயுஞ்சேயோன் அதிரணசுரத்தாற் குதித்திடு மெய்யைவிட்டுயிரே. (அகo)

மதிதனக்குக் கேந்திரத்தி லுயிரோன்பாம்பு வந்திடவே சரி வீடாய் வளரலக்கோள், சதிருடனே கேதுகுரு வுடனென்றிசித் தரித்திடவே பரிவீடாய்ச் சசிக்குக்கேந்த்ரம், விதியுடனே சூரியன் மால் புகரெட்டோனும் விளங்கிடவே மறைவீடாய்த் தரிக்குமா கில், துதிபெறவேமால்புகர்சேய் பரிதிபொன்னன் தோன்றியநாள் தொகையாக வயதுசெப்பே. (அஉக)

செப்பிடக்கே ளுதித்திடுஞ்சேய் வரும்யோகத்தைச்
சேர்ந்திடுநாள் ராகுவருந் திசையிற்பாதி
முற்படியே வருமுயற்சி யதிகமேலாம்
மொழிந்தனரால் வரும்பலனே உயர்ச்சிதுஞ்சம்
துப்பிதழாய் பொன்னன்வரும் திசையிற்காரி
தோன்றியநாள் முதலாக யோகஞ்சேரும்
தப்பிடா திதுமுதலே தனவான்மேன்மை
சார்ந்திடுமே மறையின்வரை சாருஞ்செல்வம். (அஉஉ)

சாருமெனக் கரிதிசையில் தனதிற்செல்வம்
சார்ந்திடுமே அரசரின்பம் வளரும்பூமி
சீருடனே வருமுயற்சி அதிகமேலாய்ச்
சேர்ந்திடுமே வேண்டியபேர் புகழுண்டாகும்
கூறினர்கள் தப்பாது கணிதவாய்மை
குறித்தனரால் பதிபூமி வளரும்பாக்யம்
காரிவருந் திசைமுழுதும் அதிகயோகம்
கருதுமென யாவருக்குங் கனவான்மாதே. (அஉங)

காரியுடன் பத்தினுக்கோள் மறைவீடேகக்
கருதுமக்கோள் பாம்புடனே கரிவீடாகச்
சாருயிரோன் யெட்டின்கோள் சேயாயஞ்சில்
தரித்திடவே யிரவிபுகர் கேதுடன்வந்துற்றால்
கூறியதோர் தோன்றிடுஞ்சேய் வயதுமேலோர்
கொள்ளுமென ஐம்பதுயேழ் தரணிமீதில்
ஆரியனு ணைப்படியே மரணமென்று
ஆகமசாஸ் திரநூலால் அறிவித்தோமே. (அஉச)

அட்டமத்திற் கரியிருக்க அத்துடனேகேது
அமர்ந்திடவே அதற்குடையோன் அம்புலிவீடதனிற்
றிட்டமுடன் லக்கினத்தோன் பத்தின்கோளுடனே
சேரிடமே மறையாமற் சேர்ந்திடும்வீடதிபன்
சட்டமுடன் பரிவீடாய்த் தனித்திடவேமறைந்தால்
சார்ந்திடுஞ்சேய் ஆயுளெனச் சாற்றினர்நூல்மொழியால்
மட்டவிழ்சோர் நாற்பதுகால் ஒன்றெனவேவயதாய்
வகுத்தனர்நூற் படியாக வந்திடுஞ்சேய்யோகம். (அஉடு)

வந்திடுஞ்சேய் யோகமென வன்புகழோன்றிசையில்
மந்திரிநாட் பாதியின்மேல் வந்திடுமேமுயற்சி
சிந்தையுடன் புகர்வரையுஞ் சேர்ந்திடுமேபிலமாய்ச்
செப்பினர்கள் வரும்லாபம் செல்வமும்மேலாகும்
முந்தியதோர் ஆறின்கோள் தோன்றியநாள்மதியில்
மோசம்வரும் மனக்கவலை மொழிந்தனர்கள்துயரம்
விந்தையுடன் அஞ்சின்கோள் வந்திடுநாள்முதலே
விளங்கிடுமே கீர்த்திபுகழ் மேலெனவேபிலமாய். (அஉசு)

வேறு.

அட்டமாதிபனும் அட்டமந்தன்னில் அமர்ந்திடச் சுபர்கள் நோக்காதால், நிட்டைமாலுயிரோன் மாந்திபத்தோலும்நின்றிடம் ஓர்மனைமறையால், திட்டமாய்க்காரி பாம்புடனொன்றாய்ச்சேரிடம் உயிர்க்குப்பன்னொன்றாய்ச், சட்டமாய்வளரு மைம்பத்தஞ்சாயுள் சார்ந்திடுஞ் சாதகன்றனக்கே. (அஉஎ)

சாதகன்றனக்குக் குருகரிஅருணன் தங்கியதிசைகளின்பலனை வேதமாயுரைத்தார் சோதிடவழியால் விளங்கிடும் க்ஷேத்திரம்பூமி ஓதினரிவற்கு மரணநாள்வரையும் உதவிடும் அதிகபாக்கியங்கள் போதவேவருமென்றோதினர்பிலமாய் புகழ்பெரும்சாதகமிதுவே.

வேறு.

சூரியன்மா லுயிரோனும் ஓர்வீடேகித்
தோன்றுமிக்கோள் மதிகேந்த்ரம் வளரக்காரி
சீருடனே சுபர்வீடாய்க் கருமன்வீடாய்ச்
சேர்திடவே அதற்குடையோன் சேருமில்லம்

கூறிடவே மறைவீடாய் வளரயெட்டோன்
குறுகிடவே உடனுகித் தரிக்குமானுல்
ஆறிருநால் ரெட்டியெனத் தொகையதாக
அறைந்தனர்சே யவன்றனக்கு வயதென்றேதே. (அஉகூ)

ஓதிடவே உயிர்க்கோளன் தரிக்கும்நாதன்
உறைந்திடவே பவர்கூட மறையுமானுல்
சோதிடநூற் படியாகக் கணிதஞ்சொன்ன
தோன்றியமுன் றெகைவயதிற் றெலையும்மாதே
வேதன்விதிப் படியாகக் கணிதமாய்ந்தோர்
விதித்தனர்கள் தப்பாது தரணிமீதில்
ஓதிடவே ராகுகுரு திசையிற்செல்வம்
உதவிடுமே அற்மமெனப் பலனென்றேதே. (அஙo)

வேறு.

அட்டமாதிபனும் அரவுடன்புகரும் அமர்ந்திட நாலுமொன் பதுவாய்ச், சட்டமாயுயிரோன் சனியுடனென்றுய்ச் சாரிடம்மறை யன்வீடாக, மட்டிடும்மறையன் மறைந்திடஅவர்க்கேழ் வருமுயிர் க்கோளனுங் கரியாந், திட்டமாய்க்கருமன் தினகரனுடனே சேரி டம் மறைந்திடாதிடுகில். (அஙக)

மறைந்திடாதிடுகில் வருமனைசொந்தம் வளருங்கேந் திரமதா யிருந்தால், அறைந்தனர்வயது ஐம்பத்தெட்டாறில் அதிலுயி ரழி ந்திடும்யெனவே, துறந்தனர் மறையோன் றிசையினில் முயற்சி தோன்றிடுஞ் சமமெனவளரும், குறைந்திடுஞ்சமமாய்ப் பூமிக்ஷேத் திரங்கள் குறித்தனர் தனம்வருங்கூறே. (அஙஉ)

கூறியமறையோன் திசையிலந்தியமாய்க் குறுகிய சேயவன்ற னக்குச், சீருடன்முயற்சி அரசர்சந்தோஷம் சேர்ந்திடுங்கட்டுவன் சிவிகை,சாருமென்றுதவ யோகமேலாகுஞ்சார்ந்திடும்தனம்வரும் பூமி, பாரினிற்கனவான் அதிகக்ஷேத்திரனும் பகர்ந்தனர் தரணியி ல்மாதே. (அஙஙு)

மாதெனவெகுபேர் புகழ்ந்திடயோகம் வந்திடும் அதிகபாக்கி யனும், ஓதியதூங்கு சப்ரமம்சுகவான் உரைத்தனர் குடும்பகீர்த்தி

யனும், வேதமாய் ராஜலட்சுமிகாந்தன் விளங்குவன் கரிதிசைமுடி வும், நீதமாய்க்காரி திசைமுடிவதனில் நேர்ந்திடும் அரசர்தன்வெ குளி. (அசச)

வெகுளியால் முயற்சி துஞ்சிடுஞ்சேய்க்குவிளம்பிய அத்திசை முடிவில், தருமெனஉயர்ச்சிசார்ந்திடும்பிலமாய் சசிமகன்நாள்வரு ம்பாதி, ஜெகமதிலுயர்ந்த வாழ்வுடையோனும் சேர்ந்திடுமதில்வரு ந்தனங்கள், சுகமுளனாகத் தோன்றிடுமின்பஞ் சுகித்திடுஞ் சாதகன் பலனே. (அஙகு)

வேறு.

அட்டமத்தோன் மாலலது அலரிதிங்கள்
அமருமிக்கோ ளிவர்களிலே யெவரானாலும்
திட்டமுடன் கேந்திரமாய்ச் சுபர்கள்வீடாய்
சேர்ந்திடவே சேர்ந்திடும்வீ டதிபன்உச்சம்
சட்டமுடன் உயிரதனி லுயிரின்கோளன்
தனித்திடவே கரியனுந்தன் வீடேயானால்
நிட்டைபுரி மால்மதிசேய் பரிதிபொன்னன்
நேர்ந்திடுநாள் திசைதொகையாய் வயதுசெப்பே. (அஙசு)

வேறு.

செப்புமென அட்டமத்தோன் சேரும்நாதன் சேருமனைநீசப கை யாகுமானால், முற்படிசொல் லிடும்வயதி லழியும்யேழொண் மொழிந்தனர் சோதிடப்படியே கணிதமாகத், தப்புவதுமில்லை யெனத்தரணிதன்னிற் சாஸ்திரநூற்படிவிதியால் உரைக்குமேலோ ர், துப்பிதழாய் உயிர்தனக்குமீராறெட்டு தோன்றியஆர் மூன்றத னில் வரினுங்கோளன். (அஙஎ)

கோளெனவே வருங்கரிய னுகயெக்கோள் குருவுமவ ருடன் கூடித் தரியாதானால், தாளுறவே யிவன்றிசைநாள் முடிவில்சேயன் சாய்ந்திடுந் தப்பாதுயிதுகணிதவாய்மை, சூழுறவே அட்டமத்தோ ன்கரியனோடு தோன்றிடவே ஓர்மனையாய் மறையுமானால், யேழுட ன்நால் ஒன்றெனவே வயதென்றோதியியம்பினர்க ளிதுதவறுதென வென்றோதே. (அஙஅ)

சந்திரனு முயிர்க்கோளாய், சாரிடம்நாலுபயந்
தானமதிற் றனித்திடவத் தானதிபன்உச்சம்
வந்திடவே மாந்திஅரவுடன் பரிதியொன்றாய்
வருமிவர்கள் உயிர்தனக்கு மறையாமல்வருமால்
விந்தையுடன் அட்டமத்தோன் விளங்கியபத்தோனும்
விளங்குமிக்கோள் குருமனையாய் விளங்கிடக்கோளுச்சம்
சிந்தையுடன் தோன்றியதோர் சேயவன்றன்வயது
செப்பினரெண் பதுயெனவே சேர்ந்திடும்நூல்வீதியால்.

விதியாக அட்டமத்தோன் விளங்கியபத்தோனும்
விளங்குமிக்கோள் குருமனையாய் விளங்கிடவேஅக்கோள்
சதியாகநீசபகை யாகிடவே அவர்க்குச்
சாருமெக்கோள் சேராமல் சாரிடங்கேந்திரமாம்
அதிபதியா யிருந்திடிகி லறைந்திடுஞ்சேய்வயதில்
அழிந்திடுமீ ரேழெனவே ஆகமசாஸ்திரமாய்
விதியாக உரைத்தனர்கள் விளங்கியமேலோர்கள்
விதிதவறுதெனவேதன் விதித்தனர் சோதிடமாய் ()

சூரியனும் அட்டமத்தோனுகிமாலுந் தொல்மதிசேய் உடனி வர்கள் கூடியொன்றாய், பாரரியிற் கட்டமமா நீரிலேகிப் பகர்ந்தி டவே யிவர்கள்தனைச் சுபர்கள்நோக்க, சீருடனே உயிர்க்கோளன் மாந்திபத்தோன் சேருமிக்கோ ளுயிரிலது அஞ்சேழுற்றால், ஆரிய ன்மேல் ஆணைவிதிப்படியென்றோதி அறைந்தனர்கள் வயதறுபதே கம்ஓது. (அசக)

வேறு.

சனியுடனே அட்டமத்தோன் மறைவீடேகச்
சாருமறை சுபருடனே சசிவீடேறப்
புனிதமுட னுயிர்க்கோளன் மாலோனுகிப்
பொருந்தியசேய் பானரவு உடனென்றுகி
இனிதமுடன் உயிர்தனக்கு மூன்றுறெட்டி
லிருந்திடவே தோன்றியசேய் தனக்குஆயுள்
வனிதையேகேள் யிருபதுயேழ் ரெட்டியாக
வகுத்தனர்சேய் நயபுரஞ்சென் றனுகுமென்றே. (அசஉ)

மாலுயிர்க்கோள் தினகரனுங் கருமனோடு
வளருமிக்கோ ளுயிர்தனக்குப் பத்திலேகச்
சீலமுட னுயிர்தனக் கட்டமத்திலெட்டோன்
சேர்ந்திடவே உடனொருகோள் தரியாதாகத்
தூலமுடன் உயிர்தனக்கா றதனிற்காரி
தோன்றிடவே உயிரிடஞ்சுத் தமமதானால்
காலன்வரும் உலகமதிற் சேரஆயுள்
கருதுமென ஐம்பதுமொண் ணுபயமோதே. (அகரு)

வேறு.

காரியுடன் பத்தினுக்கோள் குருவீடேகக் கருதுமக்கோளட்டமமீராறிலேகப், பாருயிரில் மாந்திபுக ருடனொன்றாகிப் பகருகிரோன் அட்டமக்கோ ளுடனேசேர்ந்து, சாரிடங் கேந்திரம்வளர உயிர்சேயாகச் சார்ந்திடுஞ்சே யவன்றனக்கு வயதுமேலோர், கூறினர்க ளைம்பதுயேழ் பதினொன்றாகக்குறித்தனர்கள் ஆகமசாஸ்திரங்களோது. (அசச)

சுங்கனுயிர்க் கோளாகி வருமெட்டோனுந் தோன்றியமால் சூரியன்றன் னுடனொன்றாகித், தங்கிடமால்வீடலது மதியன்வீடாய்த் தரித்திடவே வருங்கருமன் நீசமேறத், துங்கமுடன் உயிர்தனக்கீராறிலேகத் தோன்றிடவே கரியனும்வந் திடினுமானால், பங்கமுறும் உதித்திடுஞ்சேய் வயதுமேலோர் பகர்ந்தனர் முப்பது யிரட்டி கணிதம்ஓது. (அசடு)

கரியுடனே மதியரவு வருமெட்டோனுங் கருதுயிரிற் கேந்திரமாய்த் தரிக்குமாகில், வருமுயிரோன் மாலோனுய் அலரியோடு வருமுயிர்க்கு மூன்றலது ஆறெட்டேகத், தருதுமென உயிர்தனக்குக் கருமநாதன் சாருமிடங் கரிமனையாய்த் தனிக்குமானால் அருமறைநூற் படிவிதியால் வயதென்றோத அறைந்தனர்கள் இருபத்தொன்றேகம் ஓதே. (அசசு)

அட்டமத்திற் சூரியன்மால் கரியோன்பத்தோன் அமர்ந்திடவே அதற்குடையோ னவ்வாறாகித், திட்டமுடன் உயிரின்கோளுடனொன்றாகிச் சேருயிர்க்கீராறிலதுஎட்டிலானால்,சட்டமுடன்தோ

ன்றியசேய் தனக்குஆயுள் சார்ந்திடுமோ ராண்டதனுள் நாசங்காட்டும், அட்டமத்தில் வருமுயிரோன் கருமன்யெட்டோன் அமர்ந்திடுஞ்சேய் அன்றீரவில் அழியுந்தேகம். (அசஎ)

மதிமகனு முயிர்க்கோளாய் ஆட்சியுச்சம் வந்திடவே ஓர்பவர்களுடனொன்றாகி, விதியுடனே அட்டமத்தோன் உதயமேறிவிளங்கிடவே மதிதனக்கு மறையாதாகச் சதிருட்னே மறையன்மனை அதனிற்காரி தனித்திடவே தோன்றியசேய் தனக்கு ஆயுள் அதிபதியா யிருபதுநா லிரட்டியாக அறைந்தனர்சேய் நமபுரம்சென் றணுகுமென்றே. (அசஅ)

சுங்கனுமட் டமக்கோளாய் வருமெட்டோனுந்
தோன்றுமிக்கோள் கரியன்மனை அதனிலேகத்
தங்குகரி உயிர்தனக்கு மறையாதாகித்
தரித்திடவே உடன்யெவர்கள் தரியாதாகத்
துங்கமுட னுயிர்தனக்குக் கருமநாதன்
தோன்றுயிர்க்குக் கேந்திரமா யெட்டிற்பாம்பு
தங்கிடவே தோன்றியசேய் தனக்குஆயுள்
சாருமிருபத் தெட்டை யிரட்டியோதே. (அசகூ)

சுக்கிரன்வீ டதிலுயிர்க்கெட் டாங்கோளேகித் தோன்றுமதியுடன்கூடி மறையாதாகத் தக்கதென உயிர்க்கோளன் கரியனாகிச் சற்குருவீ டதில்வளரக் குருவுஞ்சேர, தொக்குமென வருங்கருமன்பாவராகித் தோன்றுபவ ருடன்கூடி மறையாதானால், மைக்கருங்கண் விழியணங்கே வயதுகேளு வகுத்தனர்க ளைம்பதுயேழ்வளருமென்றே. (அடுஎ)

என்றெனவே உயிர்தனிலே அரவோனேக யெவ்வுயிர்க்கு கருமமதில் ஒருகோள்நின்றால், நன்றெனவே முன்னுரைத்தவயதிற் பத்துநாசமென வாக்கியமாய்த் திரட்டியோது, துன்றுயெட்டோன்பவக்கோளாய்ப் பவக்கோள்சேர்ந்தால் துஞ்சிடுமே முன்வயது பாதிபோகும், அன்றுமறை நூற்படியாற் கணிதமென்று அறைந்தனர்கள் தவறாது யெனவென்றோது. (அடுக)

காரிஉயிர்க்கோளாகி ஆட்சியுச்சம் கருதுமொருகோளுடனே தரியாதாக, வாருமுயிர்க் கட்டமக்கோள் பரிகேதோடு வருமுயிர் சேய் கோளலதுகருமத்தேகச், சாருயிர்க்கு வருங்கருமன்பதினொ ன்றெட்டில் தரித்திடவே மாந்திபுக ருடன்வந்துற்ருல், கூறுமெ னத் தோன்றியசேய்தனக்கு ஆயுள்கொள்ளுமென முப்பதுநாலெ ட்டிற் செப்பே. (அடுஉ)

சனியுடனே தினகரனு முயிரின்கோளுஞ் சாருமெட்டோன் கருமனுட னிவர்கள் ஒன்ருய் இனிதமுடன் மதிமனையிற் றரிக்க ஒக்கோள்யிந்துவ்மேகேந்திரமாய்த்தரிக்குமாகிற், புனிதமுடனத னில்வர அரவோனேகப் பொருந்துயிரு மாதெனவே தோன்றுஞ் சேய்க்குச், சனிதிசைவந் திடுமதனிற் காலனூர்க்குச் சார்ந்திடுவ னிவனுயுள் தவருதென்றே. (அடுங)

தேளுதைய மாகஅதிற் புகர்பொன்மாந்தி சேர்ந்திடவே தே ளுடையோன் சேருமில்லம், வாழுயிர்க்கட்டமமலதுபதினொன்றே கி வரினுமெட்டோன் பாம்புடனே சுபரிருக்குமாகில், சூழுறவே கருமனுமே பகைநீசத்திற்றேன்றிடவே காரிமதி வீட்டிலுற்ருல், ஊழ்விதிநூற் படியெனவே வயதுமேலோர் உரைத்தனர்கள் கரி திசைமுற் பாதிபோக்கில். (அடுச)

காரியுடன் அட்டமத்தோன் குருவீடேகக் கருதுமக்கோள்க ருமனுடன் மதிவீடாகப், பாருயிர்க்கோள் மாலோனுய்ப்புகர்பா னேடு பகருயிர்க்கு மூன்றலது பதினொன்ருகக், கூருமெட்டு சுத்த மதாயிருந்தபேர்க்குக் கொள்ளுமென வயதறுப தேகமாகுஞ், சி ருடனே அட்டமத்திற் கொடியபாவர் சேர்ந்திடவே கருமனுடன் பவர்கள் வந்தால். (அடுரு)

வந்திடுமுன் ஆயுளதில் மாயுமீரார்வரினுமொன்றுநாசமெனக் கணிதமோது, சிந்தையுடன் வருமுயிரோன் கரியெட்டோனுந் தி னகரனும் புகருடனேகூடவொன்ருய், விந்தையுடனுயிர்தனக்கு ஆ றெட்டாக விளங்குமித்தானத்தில் வரச்சுபர்நோக்கில்லாச், சுந்தர ஞ்சேர் விழியணங்கே பிறந்தசேயுந்துஞ்சிடுமே உபயதிங்கள்நாளி ற்போமே. (அடுசு)

தேளுதய மாகஅதிற் புகர்பொன்மாந்தி
சேர்ந்திடவே தேளுடையோன் சேருமில்லம்
வாழுயிர்க்கட் டமமலது பதினோன்றேகி
வரினுமெட்டோன் பாம்புடனே தரிக்குமாகில்
சூழறவே கரியனுமீ ரஞ்சிலேகைத்
தோன்றுமக்கோ ளாட்சியுச்சம் யிருக்குமானல்
ஊழ்விதிநூற் படியெனவே வயதுமேலோர்
உரைத்தனர்கள் மால்திசைவந் திடுகில்மாதே. (அருஎ),

புந்தி உயிர்க்கோளாகி ரவிகேதோடு பொருந்துதய கேந்திரத்திற் றரிக்குமாகில், வந்துயிர்க்கட் டமக்கோளன் குருதியாகிவருமுயிர்க்கா றதில்வளர ஆறோன்நீசம், சிந்தையுடன் வருங்குருவும் பதினொன்றெட்டிற் சேரவக்கோ ளுடனெவர்கள் தரியாதானல். சுந்தரமாய்த் தோன்றியசேய் வயதுமேலோர் சொல்லினர்கள் முப்பது ஆறிரெட்டிசெப்பே. (அருஅ)

பீதகனு முயிர்க்கோளாய்ச்சுபரோடொன்றாய் பேணுயிர்க்கு வருங்கருமத் தானமேறச், சீதமுடன் மீனுதய மதனிற்பாம்பு சேருகரி யுடன்கூடித் தரிக்குமாகில், வேதமுட னட்டமக்கோ ளுயிர்க்குநாலில் விளங்கிடவே மறையனுநோந் திடினுமானல் ஓதுமென முப்பதுமுன் னிரட்டியாயுள் உரைத்தனர்கள் கணிதமொழிப்படியென்றேதே. (அருகூ)

ஓதுமென வருமுயிர்க்கோள் மறைந்துபாவருடனிருக்கமனையதனில் மதியொன்றாக, நீதியுட னட்டமக்கோ ளதனைப்பொன்னன் நேருவிழிப்பார்வையினல் நோக்குமானல், வேதமுடன்முன்னுரைத்த ஆயுள்தன்னில் விதித்தனர்கள் பாதியென்றுகணிதமாய்ந்தோர், சோதிடசாஸ்திரப்படியே பரல்போட்டெண்ணி தோன்றியசேய் ஆயுள்விதி திரட்டிச்சொன்னன். (அகo)

அட்டமத்தோன் வருமுயிரிற் கருமனமாலும் அமர்ந்திடவே மானதுவாய்த் தரிக்குமாகில், திட்டமுடன் லக்கினக்கோள் மால் வீடேகிச் சேர்ந்திடவே உடன்ஒருகோள் தரியாதானல், சட்டமு

டன்தோன்றியசேயாயுள்மேலோர் சாஸ்திரநூற்படிவிதியாற்கணி தம்பார்த்துக், கட்டினர்களைம்பதுநால் யேகமென்றுகருதினர்கள் வெகுபரலாய்த் திரட்டிப்பார்த்தே. (அசுக)

சூரியனுமட்டமத்தோ ணுகிமாலுந் தோன்றுமதி யுடன்கூடி மறையாதாகப், பாருயிர்கோள் பாம்புடனே மறைவீடாகப்பகர்ந் திடவே அக்கோளன் கரிவீடேகிச், சாருயிர்க்குவருங்கருமன்ஆட் சியாகத்தனித்திடவே தோன்றியசேய் தனக்குஆயுள், கூறினர்கள் பதினோராங் கோள்திசையிற்றானே குறித்தனர்கள் தப்பாது தர ணிமீதே. (அசுஉ)

காரியுயிர்க் கோளாகிப் புகர்வீடாகக்
கருதுமக்கோள் கேந்திரமாய் மதிவீடேகிச்
சாருயிர்க்கு வரினுமெட்டோன் மால்தன்வீட்டிற்
சாரவவ னுடன்மதிமால் அரவோனுற்றால்
சீருடனே தோன்றியசேய் தனக்குஆயுள்
செப்பினர்கள் ஐம்பதஞ்சு தவறாதாகும்
பாருயிர்க்கோள் கேந்திரத்தில் நீசமுற்றாற்
பகருமைம்பத் தஞ்சதிலேழ் மாயுமென்றே. (அசுங)

அட்டமத்திற் கரியுடனே வரினுங்கேது
அமர்ந்திடவே அதற்குடையோன் உயிரின்கோளாய்த்
திட்டமுடன்சூரியன்மா லுடனொன்றாகச்
சேருமிடங் கரிமனையாய்த் தரிக்குமாகில்
சட்டமுடன் வருங்கருமன் பதினொன்றேகித்
தரித்திடவே மாந்திமறை யுடன்வந்தெய்தக்
கட்டியமாலுயிர்துலையாய்த் தோன்றுஞ்சேய்க்குக்
கருதுவய தைம்பதுயே ழாகுமென்றே. (அசுச)

மாலோனு முயிர்க்கோளய் உதயமேறி
வருமலரியுடன்கூடித் தரிக்குமாகில்
நீலனுமட் டமக்கோளாய் அலரிவீட்டில்
நின்றிடவே யெக்கோட்கள் தரியாதாகச்

சீலமுடன் வருங்கருமன் தகர்மீனேகச்
செப்புமெனத் தோன்றியசேய் வயதுகூறு
மாலவன்பொன் சேய்மனைக்கோள் மதிநாளாக
வளருமிக்கோள் திசைதொகையாய்க் கணிதமோது. ()

அட்டமத்தோன் வரும்புகராயிறைவன்கோளாய்
அமருமிடங் கரிவீடாய்த் தரிக்குமாகிற்
சட்டமுடன் வருமுயிர்க்குக் கருமந்தன்னிற்
சனிவருகச் சனியிருந்த வீட்டுநாதன்
திட்டமுடன் வரும்பவக்கோளுடனொன்றாகிச்
சேருயிர்க்கு நாலதனிற் றரிக்கப்பாவர்
மட்டிடுஞ்சே யவன்றனக்கு வயதுமேலோர்
வகுத்தனர்களைம்பதுமா றைந்து மோதே. (அகூகூ)

சனியுடனே அட்டமத்தோன் புகரொன்றாகிச்
சாருயிர்க்கோள் தனில்வளரச் சுபர்நோக்கில்லா
புனிதரும்லக் கினக்கோளன் மாலதாகிப்
பொருந்தியபான் கேதுடனே உயிர்க்கெட்டேக
இனிதமுடன் வருங்கருமன் உச்சமேறி
இராகுடனே ஒன்றாகித் தரிக்குமாகில்
சனிதிசைவிட் டேகியேதோர் மால்வந்துற்றால்
சாய்ந்திடுவ னவனாயு ளாகுமென்றே. (அகூஎ)

காரியுயிர்க் கோளாகிக் கொடியோனோடு
கருதுயிர்க்குப் பஞ்சமமாய்த் தரிக்குமாகில்
பாருயிர்க்கட்டமக்கோளன் நீசமேறிப்
பகருயிர்கோளுடன்கூடித் தரியாதாகச்
சாருயிர்க்கு வருங்கருமன் அரவோடொன்றாய்ச்
சாருமிடம் உயிர்தனக்குப் பதினொன்றானாற்
கூறுமெனத் தோன்றியசேய் தனக்குஆயுள்
குறித்தனர்கள் மால்திசைவந் தேற்றஅன்றே. (அகூஅ)

இரவியுயிர் மால்கூடி யிரண்டுதனிடத்தில்
இருந்திடவத் தானமது யெட்டதுவா யதிபன்
குருவுயிடத் திருந்திடவும் உடலதிபன்பொன்னுங்
குசன்றனக்கு நான்கிலுறக் குளிகனும் பஞ்சமத்தில்

அரவுடனேசனிகூடி அந்தணன் வீடமைய
அந்தணனும் லக்கினத்தை யதிபெலமாய்நோக்கத்
தெரியபுவி பிறந்தவர்க்கு மத்திபமாம்வயது
செப்புவோம் இப்பலனைச் செந்தமிழ்வல்லவரே. (அகூகூ)

கவியி னில்லஞ் செனித்திடவும் அதனவன்சேயிடத்திற்
கலந்திடஅன்னதனுமே கவிக்கெதிராட்சியதாய்
செவியதனில் அரவுசனி யிருக்கவர்க்குமூன்றில்
சிகண்டிதனைக் கலையனையத் திரும்பியிவர்பார்க்க
நவமதனிற் சிகியுறவன் னதனுடன்பரிதி
நண்ணிலக்கி னேசனுக்கு வாக்கதனிலிருக்க
அவையிடத்தோன் உயிர்க்கிரண்டி லிருக்கினும்பின்யோகன்
அங்கமதில் வாதகுணன் பண்பிலும் நல்லவனே. (அஎ0)

வேறு.

நல்லவனெனவும் நாவிலான்றந்தை ரண்டுமூன்றுண்டினுள் நசிக்கும், சொல்லுதவாதான் திடுக்கெனப்பகர்வான் தோகையர் மோகமுள்ளவனும், அல்லல்நோய்சோகை தங்குதலறையில் ஆண் குறி புண்யுரைகருவி, தொல்லையான்சுரமும் மகவுயிர்வதைக்குந் தோகையாற் கலகம்வந்தெய்தும். (அஎக)

எய்திடுமூன்றும்வயது முப்பதின்மேல் யின்பனுந்தனமெலாஞ்செலுத்தும், துய்யவெண்கிரகம் அணிபணிசேர்க்குந் துணைவரைக்காக்குமேலவனும், செய்தொழில்பலிதம் க்ஷேத்திரந்தழைக்கும் செல்வனுஞ் சயனசம்பரனும், தெய்வசாதனத்தால் அறம்விரும்புதலான் சோந்திடும் ஐம்பதுவயதே. (அஎஉ)

வேறு.

உதயமதற்குடையோனும் வெள்ளியென நான்கோன்
உறத்ததிபன் வாக்கிருக்க உடையவனும்ஒன்றாய்ப்
பதியுமிடம் மேதையில்லம் பொன்னவற்கு ஐந்திற்
பரிதிபகை யுடனிருக்கப் பத்துநவத்ததனில்
மதிகுருவும் யிருந்திடவத் ததிபதியுமிவரை
மாறிமதி பகைவனுட மதிமகனைநோக்கச்
சுதனெனவும் பிறந்தவர்க்கு ஆயுளறுபதுவாம்
தாயவுப காரியவன் சுகஜனரக்ஷகனே. (அஎஙூ)

ரட்சகனும் சுதன்துணைவர் அகன்றிடும்பின்யோகம்
ராஜகெரு விதன்சவுர்யன் வாகனமுள்ளவனும்
கெச்சிதன்சத் துருஜெயவன் கண்டம்வரும்விலகும்
கீர்த்திபெறும் ஆடவனுஞ் சாதகத்தோன்மைந்தன்
இச்சையுளன் தனர்தேட சபைக்குதவான்வஞ்சன்
இல்லறத்தின் மேன்மையினன் யின்பசுகபோகன்
பட்சமிலான் தாய்வழியிற் றந்தையனுள்செலுத்தான்
பலதுரையான் கணவிதுன்பம் பாலனுஞ்சோடியதே. ()

ஏழதற்கு உடையவனுஞ் சேயனுமாட்சியதாய்
இருந்திடத்துக் கேழதுவே உயிரெனவும்பாவர்
வாழவுமவ் விடத்தோனும் புகரெனவும்மாலும்
மார்த்தாண்ட னுடன்பகைவன் மருவிடஅன்னதன்
கோளருட னிளந்தாலும் குசன்திரிகோணத்திங்
கொடியவர்கள் நோக்கிடினுங்கோத்திரத்தோர்க்கெல்லாம்
ஆளியனும் யிவன்றுணைவர் மன்னர்புகழ்யோகன்
அனேகமனுக் காக்கவல்லன் அரசர்க்கெருவிதனே. ()

அரசர்கெரு விதனெனவும் அகத்தினினன்மார்க்கன்
அரிவையர்கள் விரகமிகும் அழகுகுணசீலன்
துரைகள்தரி சனஞ்சிவிகை வாகனசன்மார்க்கன்
தொடுத்திடுங்கா ரியஞ்செயிப்பன் துஷ்டரைச்சிட்சிப்பன்
இரவலர்கள் யீகையுளான் சாதகத்தோன்கணவிக்
கிடநடுவிற் கண்டம்வரும் யிணைபிரியான்சுகமாம்
நிறைபவுசன் மகவுளனும் ஞானிசெய்யுந்தொழிலான்
நீணிலத்தில் வயதுவும் ஐம்பதுடையோனே. (அஎசு)

அரவுசனி யுடனிருக்க அந்தணனுர் துறவில்
அன்னவனும் அலரிமகன் அமரமதிநடுவில்
இறையவனும் பவர்சுபரை அணைந்துபவர்யேழோன்
எட்டுளனை நோக்கயிவன் வயததுமத்திபமாம்
நிறைபவுசான் முப்பதுமேல் கனஜனரக்ஷகனும்
நிருபரென வுடன்பிறந்தோர் மேலதிகவாழ்வன்
பரவுபுகழ் சற்கீர்த்தி தரளநவமணிகள்
யணியணியுங் கணவிவரும் பாலருண்டாம்பலனே. ()

பலனெனவும் யேழதிபன் திசையில்வரும்பீடை
பாவுமதி யிருந்திடத்தோன் உடன்கூடுந்திசையில்
நலமனந்தம் பிதிர்மேலாம் தனதுசுகமணங்கள்
நடத்தியசந் ததியுதிக்கும் பிதிர்கர்மமுடித்துச்
சலனமிகும் கிளைவழியில் தனக்குமனப்பீடை
தனஞ்சேரும் விரையமுண்டாம் தன்துணையால்யோகம்
கலைதனக்கு ரெண்டிலுறும் திசைநடுவிற்பின்னோன்
கண்டம்வரும் விலகியன்னை காலகண்டமுரையே. (அஎஅ)

உரைத்திடுஞ்சா தகர்தனக்குங் கணவிசுதன் துணைக்கும்
உண்டெனவே நவகாண்டத் துரைத்திடுவேன்நிவர்த்தி
திரத்துடனே தெய்வநிஷ்டை பரிகாரம்செய்யில்
தீயபலன் விலகிடுமேல் செல்வமிகக்கொடுத்து
நிறைந்தசுக வாகனங்கள் பின்வரும்மேலவனும்
நிலவிருந்த அதிபதியான் திசையில்நலம்பின்னில்
கரைத்திடுமுன் காதலியை பித்தஅசிரணத்தால்
கடக்குமிவன் ஆவியுமே ஆக்கையுந்துஞ்சுமதே. (அஎகூ)

அட்டமத்தோன் சுக்கிரனு யுயிரின்கோளாய்
ஆரல்கொடி யோனுடனே கரிவீடேகத்
திட்டமுடன் கரியனுங்கேந் திரத்தில்நீசஞ்
சேர்ந்திடவே உடன்யெவர்கள் சேராதாகச்
சட்டமுடன் வருங்கருமன் மால்வீடேகி
தனித்திடவே தோன்றியசேய் தனக்குஆயுள்
நிட்டைபுரி மால்மதிசேம் புகர்நாளாக
நேருமிக்கோள் திசைதொகையாய் வயதுசெப்பே. ()

மந்தனுயிர்க்கோளாகி வருஞ்சேயோடு
வளருயிர்க்குப் பதினெண்கோள் வீட்டிற்சேரச்
சிந்தையுட னட்டமத்திற் கொடியோனேகச்
சேருமெட்டோன் மாலுடனே மறைவீடாக
விந்தையுடன் வருங்கருமன் கருமந்தன்னில்
விளங்கிடவே உடன்மறையுந் தரிக்குமானால்
விந்தையுடன் தோன்றியசேய் தனக்குஆயுள்
விளங்குயிர்க்கோள் திசைதனதில் முடிவிற்றுஞ்சும். ()

அட்டமன்கோள் சூரியனும், மாலோடொன்றால்
அமருயிர்க்கொன் பதுவலது ஆறிலேகச்
சட்டமுட னுயிர்க்கோளன் கரியனாகிச்
சாருயிர்க்குப் பதினோராந் தானமேகத்
திட்டமுடன் வருங்கருமன் மறையோடொன்றாய்ச்
சேருயிர்க்குக் கருமமது அலதஞ்சானால்
மட்டிடுஞ்சே யவன்றனக்கு வயதுகாரி
வருந்திசைமுன் பாதிஅந்தி கணிதங்கூறே. (அஅஉ)

கூறுமென முன்னுரைத்த உயிர்க்கோளோடு
குருதிவரச் சுபர்நோக்கா தாகுமாகில்
பாருயிர்க்கட் டமமதிலே கொடியோனேகப்
பகருமந்தக் கொடியோனைப் பவர்நோக்குற்றால்
சாருமெனத் தோன்றியசேய் வயதுமூன்றிற்
சாய்ந்திடுவ னிதுதவறு தாகுமென்று
ஆரியன்மே லாணையென்று பெரியோர்வாக்கால்
அறைந்தனர்க ளிதுதவறு தாகுமாதே. (அஅஈ)

அட்டமத்தில் வருமாலோன் தரிக்கஅக்கோள்
அம்புலிதன் னுடன்கூடி யுயிர்க்காறெட்டிற்
றிட்டமுடன் உயிர்க்கோளன் கரியனாகிச்
செப்பியசே யுடன்கூடி மறையாதாக
நிட்டைபுரிமாலுடனே கருமனென்றாய்
நேருயிர்க்கேழ் தனில்வளரத் தரிக்குமானால்
சட்டமுடன் தோன்றியசேய் தனக்குஆயுள்
சார்ந்திடுமே மூப்பதுநா லிரட்டியோதே. (அஅச)

எட்டுடையோன் வரும்புகராய் மதிபாம்போடு
யேகுமில்லம் மறைமனையா யிருக்குமாகில்
திட்டமுடன் உயிர்க்கோளன் மறையானாகிச்
சேருமிடம் ஆட்சியுச்சந் தரிக்குமாகில்
சட்டமுடன் வருங்கரியன் மூன்றாறெட்டிற்
சாரயெக்கோள் சேராம லிருக்குமானால்
நிட்டைபுரி மால்மதிபொன் புகர்நாளாக
நேருமிக்கோள் திசைதொகையாய் வயதென்றோதே. ()

சந்திரனு முயிர்க்கோளாய் நீசமேறித்
தனித்திடவே மறையவனும் நோக்குமாகில்
வந்துயிர்க்கட் டமக்கோளன் நீசமாகி
வருங்கொடியோனுடன்கூடி மறையாதாகச்
சிந்தையுடன் வருங்கருமன் உபயந்தன்னிற்
சேர்ந்திடவே உயிரதனில் மறையோன்வந்தால்
விந்தையுடன் தோன்றியசேய் தனக்குஆயுள்
விதித்தனர்கள் நாற்பதுஆ றுபயஞ்செப்பே. (அஅசு)

செப்புமென வயதிருவேழ் மூன்றின்மேலாய்
சேருதனம் பூமிபதி காலியின்பம்
தப்பியதோர் வளருதனங் குறைவில்லாதான்
சார்ந்திடுமே வாணிபமாய்ப் பெருகுஞ்செல்வம்
முற்படியே வரவரவே தனம்வந்தெய்தும்
மொழிந்தனர்கள் மரணம்வரை தவறுதாகுந்
துப்பிதழாய் யிதுகணித நூலென்றோதி
சோதிடமாய் வெருபரலாற் றிரட்டியோதே, (அஅஎ)

வாக்குடையோன் அஞ்சுடையோன்மாலதாகி
வளருபரி யுடன்கூடி மதிவீடேகத்
தீர்க்கமுட னிக்கோளை மறைசேய்நோக்கச்
செப்புமெனத்தோன்றியசேய் உரைசொல்வஞ்சம்
தாக்குமென யேகலபி தணிந்தசொல்லன்
சார்ந்திடுமே அனுசரிப்பி உரைசெய்யானும்
பாக்கியவா னறுபதுயே ழுபயம் ஆயுள்
பகர்வயது மேலாகி லதிகயின்பம். (அஅஅ)

வேறு.

மிதுனமாய்த் தோன்றிப் பாம்பதிலுதிக்கில்விளங்கியலக்கின நாதன், உதயகேந் திரத்திற் சுபருடன்வாழ்க உயர்ந்தவ னிரண்டு நான்கேழில், கெதிபெறஇருக்கில் அனுடஆயுள் கெணித்தனர் சோதிடவிதியால், சதிசெயுமாண்டு ஒருபதினாலாய்ச்சாற்றினார்தர ணியின்மீதே (அஅகூ)

வேறு.

அலவனிற் பிறக்கக்காரி யமர்ந்தவன் வாக்கிலேறப்
பலமுடன் மதியன்பத்திற் பதிந்திடப் பொன்னன்சாரில்
சலமுடன் பரிதிசுங்கன் தானநற் கிரகவீடால்
சிலைநுதல் மாதேகேளாய் செப்பிடு மெழுபத்தஞ்சே. (அகூ)

பாம்புடன் சனியுங்கூடிப் பகர்ந்தவன் வாக்குநாலேழ்
ஏம்பிட வொன்பான்பன்னொன் றெய்தியே நிற்பாராகில்
வாம்புய மாதேகேளாய் வருமவய தெழுபதின்மேல்
சாம்பமாந் தீரமென்று சாற்றினர் கணிதமாய்ந்தோர். (அகூக)

வேறு.

மாந்திசொந்த வீடாக லக்கினத்துக் குடையோன்
மால்கரியால் பகைநீச மெய்யாதே யிடுமால்
சேர்ந்தபஞ்ச மத்தோனுங் காரகனுமெட்டாந்
தீக்கோளு மேமறைக்கு மறையாதேயிடுகில்
மாந்தியுடன் வருஞ்சுபர்கள் பாவரில்லாதிருந்தால்
வஞ்சகத்தோன் தனயோக சாலியெனவகுப்பாய்
சாந்தணியுந் தனத்தாளே சோதிடத்திலதிகந்
தர்மபரி பூரணமா யறுபதிமூன்றுயுள். (அகூஉ)

காரிஜென்மந் தரித்திருக்க வாக்கோனெட்டோன்
கருதியபா வருமாகி யொன்றுநான்கில்
வீரியமா யிருந்திடவுஞ் செனனந்தொட்டு
விளங்குபஞ்ச தானமதிற் சுபரேகின்றால்
கார்குழல்மான் விழிமாதே தொண்ணூறுகும்
கருதுபஞ்ச மத்தினிலே பாவர்சேர்ந்தால்
சாரதியா யறுபதின்மேல் ரெண்டுசெல்லும்
சாதகணிப் பலனென்று சாற்றலாமே. (அகூங)

வேறு.

ஆயுள்காரகனே ரஞ்சினிலமர அலவனிற்செனித்திட அதனில், தீயரால்மாந்தி நட்புறுமாகிற்சென்மலக் கினத்தினோன்மதியன், தாயுளநாலேழ் ஒன்பதிற்பாவர்தன்னுடன்தரித்திட அவர்க்கு, மாயுளுமெழுபத்தொன்றுடனொன்று மறைந்திடிலவனியின்மாதே.

அட்டமாதிபனுங் காரியாய்மால்வீ டமர்ந்திட லக்கினநாதன்
திட்டமாயஞ்சோன் ஒன்பதிலுயிர்க்குச் சேர்ந்திடக் கரியிருந்திட
த்தோன், விட்டபஞ் சமத்தோன் கேந்திரமெய்தில் விளங்கிய ஆயு
ளின்தீர்க்கம், மொட்டிளங்கொங்கை பிறைநுதல்மாதே மொழிந்
திடோ ரறுபதுமஞ்சே. (அகூடு)

மாதேகேள் கரிவீட்டிற் பாவர்சுபர்கலந்து
வருமுயிரைற் கரியோனும் மறையாதவகையால்
வேதனவர் வீடாதல் உயிர்க்குமறையாதால்
விளங்குபஞ்ச மத்தோனும் பத்தினோனும்
தீதில்லா வீட்டிருக்கில் உயிர்க்குமறையாமற்
றிங்களுமே கேந்திரக்கில் செனித்திடுஞ்சேயவற்குத்
காதலியே வயதெழுப தாகுமெனப்பகர்வாம்
கனயோக சாலியெனக் கருதுவித்தையதிகம். (அகூசு)

அருக்கனுயிர் தனித்தாலும் அம்புலிநாலேழில்
அமரஇத்தா னத்தோர்கள் பவர்பகையுஞ்சுகமாய்
இருக்கவரி யோன்பகையா லுயிர்க்குமறையாதால்
யேந்திழையே நாலாங்கோள் நட்பாட்சியுச்சம்
தரித்தவனுந் தனித்திடவு மவன்றனக்கோர்நாலோன்
தருமனிவர் அவன்றனக்கு மறையாதெய்திடுமால்
திருக்கமழு மிருபதொன்பான் வொன்றதனிற்றையைச்
சேர்க்குமதின் மேலேகிற்செனித்த பிதாவொழியும். (

சேருதயத் தோன்பாவர் சுபரோடேகிச்
செல்பாவன் றனக்குபகை நீசமானுல்
நீறணியும் நுதலாளேயஞ்சோனெட்டோன்
நெடுஞ்சுபராய் உயிர்தனக்கு மறையாதாகில்
பார்சுபருங் கேந்திரத்திற் றனிக்குமானுல்
பதிவயது யெழுபதஞ்சு யென்றுசொல்வாம்
தீரமதி லொருவன்மறைந் திடுவனுகிற்
செப்புவய தறுபதொன்ப தொன்றுமானே. (அகூஅ)

லெக்கினத்தோ னவர்வீட்டிற்றனித்திருப்பானுகில்
நேர்சனியு மப்படியே பாவருடன்சேர்ந்தால்
மிக்சுகுரு மறையாதாலவர்தனிக்க வவற்கு
வியந்தனிலே யெட்டோனு லஞ்சோனுலிருக்கில்

தக்கதுலை முதல்மூன்று தனிற்செனிப்பாராகிற்
சாறும்வய தறுபதஞ்சு சாற்றிடலாமிகவே
அக்குருவுக் கைந்திலுற மாந்தியும்பாம்பானால்
அவன்வயது ஐம்பத்தஞ்சு பெனப்பகரலாகும். (அகூகூ)

மாந்திஉயி ரேகிடவும் லக்கனத்தின்கோளன்
மால்குருவால் மதியோடு சேர்ந்திடுவானாகில்
சேர்ந்திடவுங் கரிவீடால் கரியிருந்தயிடத்தோன்
சென்னமதற் கேமறையா திருந்திடுவனானால்
ஏந்திழையே அவன்வயது அறுபதுமூன்றுகுழ்
இதிற்பரிதி யுதித்திடுகி லவன்வயதோ ரெட்டுவ்
நேர்ந்திடுமா தாவொழியுந் துணைவருமேயேகம்
நீணிலத்தி லிவன்றனக்கு நிசுஷயமென்றுரையே. (கூ00)

வேறு.

பாம்புயிர்தரிக்க லெக்கினத்துடையோன் பஞ்சமமேழினிலி
ருந்தால், ஓம்புகர்மாலுங் கூடவக்கோளன் உயிர்க்கவன் மறைந்தி
டாதிருக்கில், சாம்பனுஞ்சுபரோ டேகித் கேந்திரித்தால் தன்வய
தறுபதெட்டாகுங், காம்பிளமுலையா யதுகடந்திடுகிற் கருதியதுதி
கையுங்கூட்டே. (கூ0க)

வேறு.

பாம்புயிரில் லக்கிணத்துக்கு டையோனுஞ்சுபராய்ப்
பதியகேந் திரமுறவத் தானத்துக்குடையோன்
காம்பிளையாய் பாவருமாய்ப் பகையில்லாவாயுட்
கதியோனாற் சுபமாக மறையாதா லுயிர்க்குச்
சாம்பனிருந் திடமதற்கா றட்டமத்தோன்வீடு
தரித்திடவும் நட்பாட்சியுச்சமதாயிடுகில்
ஆம்பல்புரி யோன்பதத்தா லவனுடையதீர்க்கம்
அறைந்திடுமோ ரெழுபதுடன் அஞ்சாகுமடவாய் (கூ0உ)

கருதுடற்கோ ளுயிர்க்கோளுங் காரகனுமொன்றாய்க்
கன்னியில்மீன் மிதுனமதிற் றோன்றுவரேயாகில்,
வருதிகளிற் கோளுடனே பாவரொன்றே கிடுமால்
வந்தவற்கோ ரறுபதுக்கு வகுத்திடலாமாயுள்

அருமாது தந்தையவர் கன்னியற்குக்கர்மம்
அவனியற்று மூன்றலது சதுரதொகையாகுங்
கருங்குழலா யவராலும் அனேகபொருளுதவுங்
காட்டுபிதிர் வழியாகுங் கற்றுணர்ந்த கண்ணே. (கூ0ங)

அரவுகரி சூரியன்மூன் றிருக்கவத்தா னத்தோன்
அவனுயிர்க்கு மறைந்திடுகில் தன்துணைவர்யாரும்
பரிதிகண்ட பிருளதுபோ லென்றுரைக்கலாகும்
பன்னுசுப ரிருந்திடுகில்யேக துணையியற்றுங்
கருவயதி லாறினுக்குள் அத்துணைவரிறங்குங்
காசினியி லறுபதுக்கு மவனிருப்பனென்றே
புருவதனு சினைப்பழிக்கும் மடமானேகேளாய்
பொங்குகடல் சூழுலகந் தனிலறைவாய்மானே. (கூ0ச)

வேறு.

மிக்கலக்கினத்தோன் பாவராய்நாலேழ் மேவிட யிருந்தயில்
லவனும், பக்குவசுபரா யுயிருங்கேந்திரமாய்ப் பதிந்திடச் சுத்தம
தாகில், இக்கவனுயிர்க்கு குருமறையாம லிருந்திட யியம்பிய சே
ய்க்குத், துக்கமில்லாம லுரைக்கலாமாயுள் துணிவுடன் யெழுபதி
னஞ்சே. (கூ0ரு)

வேறு.

காரக னுயிரின்கோளன் கருதிடஞ் சரவீடாகில்
நேரிடம் வேறுகோட்கள் நேர்ந்திடா திருக்கவெட்டோன்
பார்புக ழஞ்சோனெவ்வீடாகிலும் பவர்களானல்
வாரணிதனத்தா ளிக்கோள் சுற்றமா யெழுபத்தஞ்சாம். (கூ0சு)

அருணனு முயிர்க்கோளாகி யட்டமத் தருக்கனேடால்
பெருகுளி கனுமேவெய்தால் பேருயிர்க் காரகன்றன்
வருபகை யில்லமாகில் வருஞ்சுப ரேகுவானேல்
அருமதி கேந்திரித்தா லறுபத்தேட் டாகுமாயுள். (கூ0எ)

காரக னுயிரக்கோளன் கருதிடப் பகைவீடாகில்
காரகற் சூயிர்க்கைந்தாங் கோள் கதிர்குரு மறையாதாகில்
பாருயிர் முன்போலானல் பகரிடம் பவரெய்தாலும்
நேருயிர்க் கோளில்லாதால் நிசமறு பதுமேலொன்றே. (கூ0அ)

வேறு.

லெக்கினத்தோன் சுபராகிக் காரகன்றன்வீட்டில்
நேர்ந்திடுமத் தானத்தோ னவ்வீட்டிலிருந்தால்
துக்கமுள்ள காரிதனக் கேகுருவும்மறையா
தோய்ந்தவிடந் தனித்திருக்க முன்பின்னுற்சபரால்
பக்கமுடன் வயதுஅறுபத் தஞ்சுமூன்று
பகர்ந்திடலாந் திங்களுமோ ரொன்றெனவேபதியில்
மிக்கவுரைத் தனர்மேலோ ராகமத்தைத்தேர்ந்து
விளம்புநெறி புவிமீதில் அறைந்தனர்நற்றமிழால். (கூ0கூ)

மால்புகரும் மாந்திகரி யொருவீட்டிலிருந்தால்
மறையமனும் மகரம்கும்பமதிற் றோன்றுமானால்
தேடுமுயி ரவன்றீர்க்கந் தொண்ணூற்றஞ்சாகுஞ்
சேயதனிற் கூடிடுகில் யெழுபதெனச்செப்பு
சீலமதாய்ப் பாம்பதனி லுதித்திடுவாராகிற்
செப்புவயதெழுபதஞ்சு பஞ்சமந் திங்களுமாம்
வேல்விழியாய் சூரியனு மதிர்சேர்வானானால்
விளம்பிடலா மறுபதின்மேல் ஒன்பதவனுயிரே. (கூக0)

பஞ்சமக்கோ ளொன்பான்கோ ளுபிர்க்கோளுமொன்றாய்ப்
பதிந்தயிட முயிராகப் பஞ்சமசுத்தமத்தால்
கஞ்சமமால் தன்னிகருக் குடையவளே கேள்மின்
கருதிடுமா யுள்தீர்க்கம் யெழுபதென உரைப்பாம்
துஞ்சுமவன் தனவானே யாகுஞ்செட்டு
துணிவாக அன்னியரால் அனேகநிதியுதவும்
பஞ்சமபுத்திரருடனே யவனேகதாரம்
பயின்றிடுநீ சாஸ்திரத்தின் பயனறிந்தமின்னே. (கூகக)

வேறு.

ஆயுட்கா ரகனீராறில் அமர்ந்திடவலற்குநாளில்
நேயமாய்ப் பரிதிசுங்கன் நின்றிடப் புதனுங்கூடில்
வேயும்லக் கினத்துக்கஞ்சில் வியமதி பொன்னன்கூடிற்
காய்கனி நுதலாய்கேள்மின் கடுவய தறுபுத்தஞ்சே. (கூகஉ)

சேயுடன்மாந்திகூடில் தினகரன் வீடேயானல்
நேயமா வவற்குநாலில் நிகழ்மதி தனிப்பராகில்
தூயபாந் தூலகாயந் தொருவய வறுபதின்மேல்
மாயையாந் தத்துநீங்கி வளர்ந்திடும் வயதுமூன்றே. (கூகங)

வேறு.

குருவுபிரோ ணுடவும் மதிமறையாதானல்
குருவினுக்குக் கேந்திரத்தில் மதிதனிப்பாராகில்
வருமதிக்கு முன்பின்னும் பாவரில்லாதிருந்தால்
வளர்ந்தோன் சுபராக யிருந்திடுவன்றனக்குக்
கருவினிற்பாக் கியனுகும் அவனுயிரின் தீர்க்கங்
கலந்திடலா மறுபதொன்ப தாகுமெனப்பின்னும்
மருவுருவாந் தளகர்த்தனெனப்பேரேகிடைக்கும்
மறைந்திடுகி லம்புலியு மவனுயிரையறையே. (கூகச)

ஏரேறு வோன்பதத்தை வணங்கியுரைத்தனன்யான்
யேழிலைந்திற் பாம்பிருக்க வத்தானத்தோனும்
பார்சுபரா யாக்கைதனக் கேமறையா திடுமால்
பாரொன்பான் கோட்பாவ ருடன்சேருவானல்
வீரியமாம்புத்திரர்க்குக் கெடுதலுமேயாகும்
விளங்குபதி யரவதனி லெட்டாம்வாக்கியம்போல்
ஆரியராம் வேதியருக் கீய்ந்திடுவானுகில்
அவர்க்குபய புத்திரருண் டாகுமெனவுரையே. (கூகரு)

வேறு.

குருபகை யாக அந்தக் குருவினுக் கெட்டினுதன்
வருமுயிர் மறையுமாகில் மன்னுயி ருடையகோளன்
இருசுபர் வீடில்லாம லிவனுயிரஞ் சிற்பாவர்
வருகினும் பாம்பெய்தாலும் வயதுமூன்றதனிற்போமால். ()

சென்மலக்கி னத்தின்கோளன் திருகுருவாகிப்பன்னேன்
உன்னியோ ரொன்பானுகி லுறைந்தவர் முன்பின்பாம்பால்
சொன்னஅட் டமத்தோன்காரி தொல்லுயிர் கேந்திரித்தால்
இன்னுயிர் முன்பின்சுத்த மிருந்திடி லெழுபத்தொன்றே. ()

என்றிடுஞ் சொன்னகோட்க ளெவரெதுவீடுற்றாலு
மன்றொரு கோட்களாலு மாறிடு வனுக்குமேலாய்
நன்றறு பதுமேலைந்தோடு பயமும் நவிலலாகும்
அன்றிருகோட்களாகி லவன்வய தருபத்தொன்றே. (கூகஅ)

வேறு

லெக்கினேன்குருவா யவனுட்கன்காரிநேர்ந்திடக்கேந்திரமுறு
மால், தக்கவன்றனக்கு நிலவுகேந்திரத்திற் சார்வரால் மதிதனக்
கெட்டு, சுத்தமேயாகிற் சென்மமோரெட்டோன் சோதரர் வீட்டி
னிலிருந்தால், மிக்கவன்றனக்கோ ரறுபதுமென்றும் விளம்பலா
மாக்கையின்விரிவே. (கூகக)

வேறு.

ஆடுயிராய் லெக்கினத்தோன் பாவர்வீட்டி
லதிசுபரும் பாவருடன் யேகதானன்
தேடுயிரில் வருஷமதே ஞொன்பான் தன்னிற்
சேர்ந்திடவுங் காரகனுங் கூடுமானால்
மேடமுயிர் மதிகுருபான் மாலாய்த்தோன்றில்
விளங்குமவன் தீர்க்கமது அறுபதின்மேலஞ்சாம்
தேடுமுயிர் பூர்விகத்தில் பொருளெய்யாது
செப்பும்வய திருபதஞ்சி லதிகயோகம். (கூஉ0)

காரகன்லக் கினத்தோனாய்க் கேந்திரத்திலுறுமால்
காரகன்றன் னுடன்வேதன் சேர்ந்திருக்கத்தானன்
வார்குழலா யுயிர்க்குமறை யாதிருக்கிலவற்கு
வருந்தியகேந் திரத்தினிலே புகர்தனித்து யிருந்தால்
வீரியமா யட்டமத்தோன் சுபர்வீட்டிலேக
வீதியறுபத் தொன்பதனை விளம்பலாமவற்குப்
பார்புகழ காரகன்றன் னுடன்பாம்புசேர்ந்தால்
பகர்வயது ஐம்பத்தொன் பதுவெனவேபகரே. (கூஉக)

காரியவன் தந்தையிடம் கலக்கிலதற்கெட்டாய்க்
கதிபனும்போய் மால்புகருங் கலையிருந்தயிடத்தோன்
தேறியபாக் கியத்திருக்கச் சிகண்டிசனும்நோக்கச்
சென்மனுமே,ரெண்டிலுறச் செப்புமின்னேன்வயது

கூறுவோம்நாற்பதின்மேல் ரண்டில்தத்ததாகும்
குளிர்வாய்வு ரோகமதால் கண்டம்வந் துவிலகும்
பாரிலொரு சலணம்வரும் வாய்வுரணத்தாலும்
பகருவோம் யிவன்மரணம் அறுபதின்மேலாண்டே. ()

வேறு.

உடலிருந்ததிபன் சேயவனுக உயிரினேன்மையவனுகி, அட
ருமத்தனத்தோன் சித்தருநவத்தோன் அவருடனிருந்தவர்பார்த்
தோர், படருபாக்கியத்தி லிருக்கப்பொன்னேக்கப்பரவியகாவனம்
புகுந்தே, திடவலமிருகம் படவதைத்தூத்தி செயிப்பவன் ஆறு
பத்துடையோன். (கூஉரு)

வேறு.

வந்திடுமெய்க் குடையவனும் வாதகனுய்ப்பிலக்க
மறையோனும் அரவுடனே வந்திடஅன்னுதன்
புந்தியென அட்டமனும் உயிர்மெய்க்குமறைந்து
புகர்வீட்டில் அவ்விடத்தோன் பொன்னவலக்கினத்தில்
வந்திடவும் மாந்தியுடன் மதிநோக்கயிவரை
மாறியிவர் நோக்கிடவும் மதியினில்லஞ்சனியும்
அந்தயிடத் தமர்ந்துயிரோ னவன்றுரவைப்பார்க்க
அதியோக வாகனவன் அரசுபெறும்புவியான். (கஉச)

அரசுபெறும் புவியுளவான் கல்விகளிற்பிலவான்
ஆசையுள்ளான் தனந்தேடும் அகத்தினிலுள்ளவனே
வரிசைபெருந் துரககெச சிவிகையினுன்முன்னே
மதலையுள்ளான் பிறர்மனைக்கு மையல்தரும்மதரும்
பரிசைகளோ டுரவுசெய்யும் பதனகுணக்கபடன்
பவுந்தரநீ ரழிவுடனே பருத்தவிஷவீக்கம்.
குருதிசையின் பின்னிலுமே முன்னிலவனுயிரும்
குடிபோகும் ஆக்கைவிட்டுக் குதித்திடுமென்றுரையே. ()

வேறு.

புகரவனில்லஞ் செனித்திடஅதனிற்பொருமகன் அன்னவன்
மறையோன் அகமதிலிருக்க அந்தணன்நோக்க ஆரலோன் அஞ்சி
னில்லீலேன், மகவுடனுரைய மதியும்நான்கதனில். மாலவன்சேய்
தூரவேறி, சிகிபகையுடனே வாதகம்நோக்கச் சீறியஅரவும் யெட்
டுறவே. (சுஉசு)

எட்டுறத்துணைவ ராஜயோக்கியனும் யிரப்பவரெனவெறுப்பு டையான், கட்டியசூலை வாய்வுநோய்சிரநீர் கணவியுமகவுமே நாசம், வெட்டெனவுரைப்பன் மேன்மையான்விரகி விடங்கண்ணுள் வேர்படவாழ்வன், ஒட்டியகிளையால் அடிக்கொருகினைவு உரைவெறுப்பாமெனவுரையே. (கூஉஎ)

உரைப்பவன்தமக்கு ஆண்டுஒன்பதனுள் உயர்ந்திடுஞ்செல்வியிரெட்டுள், கரைத்துமெய்ப்பீடை தேசம்விட்டகலும் கதித்திடும் முப்பத்திரண்டுள், யிரப்பவர்கிளைக்ள் யேகமாய்ப்பின்னே யினஜன வெறுப்புவுட்பிணியன், சிரத்துநீர்ரணத்தாற்கண்டமும்விலகித் தேவர்கோன் திசைவரில்மரிக்கும். (கஉஅ)

நீலனில்லஞ் செனிக்க அதிற் பொன்னவனீசமதாய்
நின்றிடத்தோன் உச்சமதாய்க் கேந்திரத்திலிருக்க
வாலமதி தனுசிலுற மாலவனும்புகரும்
மதிதனக்கு நவத்திலுற மதிபகைவர்பத்தில்
நாலதிபன்சேயாகப் புகர்வீட்டில் மூன்றில்
நஞ்சிருக்கப் பவர்நோக்க நாதனுக்குஆறில்
சீலமுடன் கோளிருக்கப் பிறந்திடுஞ்சேயிழைக்குச்
செப்புவோம் வரும்வயது தீர்க்கமெனவுரையே. ()

வேறு.

உரைத்திடுஞ்சேயன் யோகவானெனவும் உடன்துணைப்பின்னதைஅழிக்கும், நிறைத்திடும்தந்தை பதியைவிட்டகலும் நிதிவாச் செல்வமுட்பயமும், கரைத்துமெய்வரச்சி யுணவதுசிறுத்துக் கவலையும் ஓர்வழிசிதறும், தரித்திடும்வயது மூன்றரைமேலாம் தந்தையும் தனமெலாஞ்செலுத்தும். (கூஙo)

புகரவனுயிரோன் பொருந்தியஅரவில் பொசித்திடுஞ் தனது ளுணதனில், தகையுமுட்பிணியும் சத்துருவிதர்ப்பம் தனம்வரச் சிலவுமேதாரம், பகையுடன்மணமாம் பந்துக்கள்சடவும், பலகலை தரிந்தவர்க் குறவும், மிகும்வெகுபூமிவேண்டிடும்பலிதம் விஷத்தினாற் பீடைவந்தெய்தும். (கூஙக)

குருதிலக்கினத்தில் ஜெனித்திட அதனேன் கோதையரில்லத் திலமர்ந்து, பரிதியின்மகனும் பளிங்கியோடிருக்க பாம்புமால்யிவ ர்களைச்சூழ, கருதியேசுதனும் ஜெனித்திடும்நாளிற் சுனம்பெறப் பவுசுமுள்ளவனாய், வரவரத்தேய்ந்து மறுத்தொருஅன்னை வசத்தி னில்வளங்குழிப்பலனே. (கூஙஉ)

பலனெனுந்தாரம் ரெண்டேனமுடிப்பன்பாலகன்முன்னவன் தனக்குப், பிலமிலாதிருப்பன் பெண்பெறும்பின்னல் பெத்திடும் ஆணதேயோகம், நலமிலையவற்கு காமநோய்ரணத்தால் நண்ணியே அஞ்சுவன்றேயோன், குலமெலாந்தன்னைப் பகைத்துமேயிருப்பன் கோதைதன்வயது மத்திபமே. (கூஙங)

மதியவன் பகைவன் மந்திரிபிடத்தில் வளங்கியஇல்லம் ரண் டதுவாய், அதிபனும்மதியி னிடத்திலுச்சனுமாய் அவர்க்கவர் மறைபடுமானால், கதிர்மகன்றனக்கு ஒழிபதாயிருக்கக் கபடனுந் தந்திரமுடையான், பதிதனில்வயது ஐம்பதுமாகும் பார்தவான் மேலவர்க்கன்பன். (கூஙச)

நேரிளதோன்றிற் கேந்திரமதனில் லெக்கினத்தோன்சுபரு டனே, சேரிடமக்கோளுயிர்தனக்கேகித் திருந்தியே மறைந்திடா திருக்கில், வாரணிமுலையாய் பாவருஞ்சேரில் வருமிடஞ் சுபருட வீடால், பாரதிலவற்கு அறுபதோடஞ்சும் பகரலா முயிரினிற் றீர்க்கம். (கூஙரு)

மாலவன்ரவிசேய் ராகுடன்கூடி வந்துகேந் திரமதிலிருக்க நீலனுங்குருவுந் தனமுடன்லாபம் நின்றிடப் புகர்மதிகேந்த்ரம் தூலமாம்வயது நாற்பதிற்கிவிகை துலங்கிய பிரமசன்யாசம் பாலனுக்கறுபத் தெட்டதில்வயதிற்பரகெதிமோக்ஷமுமடைவன்.

வேறு.

சுங்கனுமட் டமக்கோளா யுயிரின்கோளாய்த்
தோன்றியசேய் கேதுடனே கரிவீடேறச்
சங்கையுட னிக்கோட்க ளிருந்தயில்லோன்
சாருயிர்க்குக் கேந்திரத்தில் நீசமேறத்

துங்கமுடன் வருங்கருமன் மால்வீடேகித்
தோன்றிடவே யெக்கோட்கள் சேராதானால்
தங்குமெனத் தோன்றியசேய் தனக்குஆயுள்
சார்ந்திடுமே ஐம்பதுஆறுபயஞ்செப்பே. (கூஙஎ)

காரியுயிர்க் கோளாயக் கேந்திரமெய்திடினுங்
கருதுமெட்டோன் அஞ்சோனும் ஓரில்லமாக
நாரியிக்கோள் நட்பாட்சி யுச்சமானால்
நல்மதிக்குக் குருமறையா திருந்திட்டாலும்
கூறுயிரட்ட மஞ்சுத்த மெய்திபிருந்தாலும்
கோள்வயது அறுபதஞ்சு மேலுண்டாகும்
காரிமறைந் திடராசி பகைநீசங்கள்
கருதுமிக்கோ ளுடன்பலன்தான் ஐம்பதாயுள். (கூஙஅ)

வேதமாய் அட்டமத்தோன் மால்புகர்சூரியனால்
விளங்குமிலர் ஒன்றாக மறைந்திடாதிடுகில்
நீதமாய் யோரேழோன் சுபனாகியிடினும்
நிறைவிழியோன் அஞ்சோனும் நீலனுமொன்றாகக்
கோதாய்கே ளுயிர்தனக்கு ஒன்பதினில்வருமால்
குவலையத்தில் யிறப்பளவுமங் கலந்தட்டாது
தீதில்லா தவன்வயது அறுபதெனச்செப்பு
திறமுடனே யீரஞ்சிற் சேருமதுமணநாள். (கூஙகூ)

வேறு.

ஓதிடு மஞ்சோன்றானும் ஒன்பதஞ் சதனிற்சேர
நீதமாய்ச் சுபரும் பாபர் நின்றிட வக்கோளோடு
சேதமென் றுரைத்தாமஞ்சு திறமுடன் வயதென்றோதச்
சாதகன் மரணமட்டுஞ் சஞ்சலம் வளருமாதே. (கூசo)

அட்டமா திபனும்பத்தி லமர்ந்திட வதற்குநாதன்
திட்டமா யரவமோடு சேரிடஞ் சுபர்வீடானால்
சட்டமா யுயிர்க்குள்ளோதுந் தனித்திட மறையாதாகில்
திட்டமா யுதிக்குஞ்சேய்க்குத் திறமுடன் அறுபத்தஞ்சே. (கூசக)

ஓதுயிர் தானந்தன்னி லுயர்வுடன் குசன்வந்துற்றால்
நீதமா யறுபத்தொன்றாய் நிகழ்ச்சிய முரைக்கலாகும்

வேதமாய்க் கணவனில்லம் விரைவுடன் பதினேழுக்குள்
மாதவன் சேர்வதாகும்மங்கலம் மரணமட்டே. (கூசஉ)

வேறு.

அட்டமாதிபனுங் காரியுமருக்கன்அமர்ந்திடவுதயகேந்திரத்தில், திட்டமாயுயிரோன் மதியுடன்கிரகஞ் சேர்ந்திடப் பாவருஞ் சுபரும், சட்டமாயுதிக்கும் மங்கையர்தனக்குச் சதிருடன் பத்து மூன்றுக்குள், திட்டமாய்மரணம் விதித்தன ரென்று செப்பினர் கணிதநூலாய்ந்தோர். (கூசங)

வேறு.

சுங்கனு முயிர்க்குள்ளோனுந் துணிவுடன் சுபர்வீடாகப்
பங்கமாய் மதியுமந்தன் பத்திரண் டஞ்சொன்பானல்
கொங்கைதன் றுலையுந்தேகம் குறித்தனரறிந்தநூலோர்
இங்கிதத் துடனேபோகும்பிருபது முப்பத்தஞ்சில். (கூசஙு)

வேறு.

காரியுமுயிரோன் கலைமறையுடனே கதிரவன் வீட்டினிலே கச், சூரியன்மாலு மில்லமோரொன்றுய்த் தோன்றிடமுன் பினிற் சுபர்கள், கூறியஅட்டமந்தன்னிற்பாவர் குறிகிடுங்கன்னியர்தனக்குச், சூரியன்றிசையில் மங்கலம்வருமால் துணிவுடன் முப்பதோர் வயது. (கூசரு)

மதிமகனிறைவன் அம்புலிகரும மமர்ந்திட அட்டமந்தன்னில், சதியுடனுயிரோன் காரிபாம்போடு சார்ந்திட வுதயகேந்திரத்தில், விதிபுடனுதிக்கு மங்கையர்தனக்கு விதித்தன ரஞ்சுநாலொன்றில், அதிகமாய்க்கணவன் வருமெனவுரைத்தார்அரசர்தன் யோகமுமவளும். (கூசசு)

மதியுடன்புகரும் மாலுமொன்றுக வளருங்கேந் திரந்தனில்வருகச், சதியுடனுயிரோன் காரிபொன்னோடு சார்ந்திட அட்டமந்தன்னில், பதிதனிற்பிறக்கும் மங்கையர்தனக்குப் பகர்ந்தன ரறுபதாய்வயது, மதியுடதிசையில் மங்கலம்வருமே வகுத்தன ரதிக யோக்கியமாய். (கூசஙா)

அதிகமாய்வருவ னாரல்தன் திசையில் அன்னவன்றனக்குமே சிவிகை, சதியுட னிறைவன் திசைவருமட்டுந் தங்கிடுஞ் சிவிகை யோகமுமே, கெதிபெறியிருப்பன் மரணநாள் வரைக்குங் கேசரி யோகமென்றுரைத்தார், பதிதனிற்பிறக்கும் மங்கையற் தனக்குப் பகர்ந்தன ரதிகமாய்ப் பலன்கள். (கூகூஅ)

அட்டமாதிபனும் அருணனு மருக்கன் அஞ்சினேன்காரியு மொன்றாய்த், திட்டமாய்வளருங்கேந்திரமதனிற் சேர்ந்திடப்பாவ ர்கள்வீடால், மட்டிடுமேழில் மால்கரிகுருவாய் வந்திடுமங்கையர்த னக்குச், சட்டமாய்வயது யெழுபதொன்றாகச்சாற்றினர் பெரியவ மொழியால். (கூசகூ)

பெரியவர்மொழியால் பிறந்திடுஞ்சேய்க்குப் பீதகன்றிசைவ ரும்நாளில், கரியுடவூணில் கணவனும்வருமால் கட்டிடும்பரிமுதற் செல்வம், துரிதமாய்வந்த மங்கையர்தனக்குத் துணிவுடன் மங்கல நாசம், பெருகிடுமென்று முப்பதுநாளிற் பேசினர் சாதகிபலனே.

அட்டமமதனிற் பாம்புடன்காரி அருக்கனும் மாந்தியுமத னில், திட்டமாயேழிற் சேயுடன்மதியுஞ் சேர்ந்திடச் சுபர்கள் வீ டானற், சட்டமாயுதிக்குங் கன்னியர்தமக்குச் சதிருடன் மங்கல மேழில், திட்டமாய்வயது நாற்பத்தொன்றாகச் செப்பினர் கணித நூலாய்ந்தோர். (கூருக)

வேறு.

கெணிதநூற் படியேசொன்னேன் கேளவன்றானும்வந்தால்
துணிவுடன் கணவன்நாசம் தோன்றிடுஞ் சாதகற்கு
மணிமகப் பலன்களற்பம் வகுத்தனர் துணைவர்நாசம்
பணிதாய் மரணங்காட்டும் பகர்ந்தனர் பிலமாய்வாழ்வே. ()

பரிதியு முயிர்க்குள்ளோனும் பார்க்கவன் மதிமாலோடு
குருதிவீடதனிற்சேரக் குருவுமே மறைவதானால்
கருதியா யுதிக்குமங்கை களத்திரம் பிலமதாகச்
சுருதியாபைம்பத்தொன்றாப் துணிவுடன்உரைத்தார்மேலோர்.

வேறு.

மதிமகனஞ்சோன் காரியுமொன்றாய் வந்திட அட்ட மந்தன் னிற், சதிருடன்பெட்டோன் லக்கினனோடு சார்ந்திடப் பொன்ன

வன்வீட்டில், விதியுடன்பிறக்கும் மங்கையர்தனக்குவிதித்தனமைம் பதாய்வயது, மதியுடன்காரி யெட்டினேன் மறைந்தால் மதித்தன ரிருபதாயாயுள். (கூருச)

அட்டமந்தனிலே பாம்புசூரியனு மமர்ந்திடப்பாவர் வீடாக, நிட்டைமாளுடனே காரியுமுயிரோன் நின்றிட லக்கினந்தனிலே திட்டமாயிக்கோள் தனையுமேசுபர்கள் சேர்விழிப் பார்வையே யானால், சட்டமாய்ப்பிறக்குங் கன்னியர்தனக்குச் சதிருடன் நாற்ப தாம்வயது. (கூருரு)

வேறு.

மாலோனு முயிர்க்கோளாய்க் கேந்திரத்தில்வரினும்
வன்புகரோன் பவர்வீடாய் வந்திடவேமறைவாய்
நீலனொடு அட்டமத்தோன் கூடிடவேசுபர்கள்
நெடுந்தீயோர் சுபக்கிரகம் நின்றிடவேகிடினும்
கோலவிழிதோன்றுமது மாதுருடவயது
குவலயத்தில் யெண்பதுநால் தொகுத்திடுமேமரணம்
மாலோனும் நீசபகை யாகிடவே மறையில்
வகுத்திடுமே வயதுரையே மாலவனுள்வருமால். (கூருசு)

சூரியனும் பூமனுமாய் மேடமதிற்றோன்றச்
சுங்கனுந்தன் வீடதுவே சுபருடனேதரிக்கக்
காரியுந்தன் வீடதுவே தரித்திடவேபொன்னன்
கடகமதில் மதியுடனே கேந்த்ரதிரிகோணம்
ஆரிநுதற் கோதையுட தானமதில்மாந்தி
அமர்ந்திடவே யேழதனிற் கொடியரவம்வருமால்
பாரிவரும் நாள்முதலே கஸயோகசாலி
பாக்யமுதற் சேத்திரங்கள் வரவரவே பெருகும். ()

பெருகுமதிற் றாணிதனிற் பிறந்திடவேசேய்க்குப்
பெறுவிதமாய் அதியோகம் பேசினர்கள்பெரியோர்
குருவுகரி திசைதனிலே சிவிகைமுதல்வருமே
குறித்தனர்கள் அன்னைதனைக் கொன்றிடுவனுகில்
வருமுயிர்தன் றுணைகள்பிலன் மாயுமெனவுரைத்தார்
வருஞ்சேய்க்கு ஐம்பதிலே மாய்ந்திடுவன்தந்தை
பெருகுபுகழ் மரணமது வருமுயிரென்றுரைத்தார்
பேணிடுவன் ஐம்பதுநால் பேசினர்கள்பெரியோர். ()

மறையவன்நெஞ் சுறத்தோனும் அட்டமனுந்தசத்தில்
மனைக்கோளில் யில்லமுற அதிபனுங்கேந்திரத்தில்
நிறைமதிநின் றிடத்தோனும் நீலனெனப்பிலக்க
நிதிவாழ்வன் பலதுரையான் யாபாரப் பலிதன்
அறைகுவோம் யிவன்வயது முப்பதுமேரண்டுள்
ஐம்பதுமே நான்கதுக்குள் அவமிருத்தாற்பீடை
வரைகடறும் அறுபதினும் உள்மூலவாய்வு
வாந்தியினால் மதிமயக்கி மரித்திடுமென் றுரையே. ()

மதியினில்லஞ் செனிக்கஅதில் மழைக்கோளும்மாலும்
மறையவனும் அறவுறினும் அதற்குடையோனுடனே
கதிரவனு மவன்மகனுங் கலந்துயிர்க்குத் தனத்திற்
கதிரிடத்தி லிருந்திடவுங் கருஅரவஞ்சேயும்
அதிபலமா யிருந்துயிரை நோக்கிடஅன்னதன்
அங்கிஷத்தில் ஆதவனார் துரவுறமேல்யோகன்
நிதிபதியான் மிவன்வயது யீரேழுமேலாய்
நீள்புவியில் யாவருக்கும் புனிதனெனப்புகலே. (கூசு0)

வேறு.

புகலுவோங்கிளையை ஆதரித்துடுவான் புரத்தியர்நேசமுள்ளவனும், யிகலிருந்தாயும் ரெண்டெனவகுக்கும் யேகனுயிருப்பன் மேலவனும், அகமொடுஞாலம் காலிவாகனங்கள் அதிபதி யமைச்சர்போல் செலுத்தும், சுகம்அனுபவிப்பன் தோகையர் மோகன் சொகுசுளான் அறுபதுரைக்கும். (கூசுக)

மந்தபவனுதிபதி புகரெனலக்கினத்தில் மால்குருவுங் கொடியவனும் மதியினிடத்திருக்க, அந்ததிபன் அட்டமனை அணைந்து அவருடனே அலரியுற அவரிவரும் அடுக்கடுக்காய்வரினும், சந்திரன்நின் றிடத்ததையும் சாமியும்லக்கினத்தை சத்தமமுஞ் சேய் நோக்கச்சாதகற்கும்வயது, வந்ததவும் மத்திபமாம் மாந்தியிருந்ததிபன்வாக்கினேன் திசைவரினும்வந்திடுங் கண்டமதே. (கூசுஉ)

கண்டமாமெனவே உரைத்தனர்மின்னே கருதினேன் இருபதினெட்டில், அண்டவாய்வதனால் முப்பதுரெண்டில் அஸ்தியிற்காங்

கைபோல்பற்றும், பண்டுளோர்சலனம் தாய்தந்தைமரணம் பகர்ந்தனர் முப்பதுநாளுள், கொண்டசாதகற்கு நீரழிவதனுல் கொல்லுமாம் ஐம்பதினெட்டே. (கூசுங)

நவத்துலோன் யேழோன் லாபத்தோன்புகர்பொன் நண்ணிய அட்டமத்திலிருந்து, மகத்துயிரோற்கு அஞ்சினிலிருக்க மையவன் மறையப்பொன்வீட்டில், பவர்களும்பகையிற் பார்க்கவீற்றிருக்கப் பகருவோம் மத்திபவயசாய், அவதரித்திடுவான் யோகமேற்பலனும் அறைந்தனர் கணிதநூற்படியே. (கூசுச)

படியெனும்பதுயிருபதினெட்டுள் பகர்ந்தனர் முப்பதுரண்டில், அடியவள்பீடை யானசாதகற்கு மப்படிக் கண்டமுண்டெனவே, முடியுநாற்பத்து நாலுஐம்பதிலே முடுகுநோய் வினைகளும் வந்து, மடியவொண்ணுது அறுபதுவயதில் மரணமென் றுரைத்தனர்மேலோர். (கூசுரு)

ஆறினுக்குடையோன் யெட்டினேன்நவத்தோன் அலரியும் மதிமகன்மூன்றில், தேறியேவருகுஞ் சுபருமாய்க்கலந்து சிகண்டிசனில்லத்திலிருக்கக், கூறுவோம்வயது யீரொன்பான் முப்பான் ரண்டினுட் கண்டம்வந்தெய்துந், தேறுவான்யோகஞ் செலுத்தியே வாழுஞ் செல்வனென் றுரைத்தனர்தெரிந்தோர். (கூசுசு)

வேறு.

வளர்மதியி னில்லமதிற் அரவுமிருக்க
மாதாவுக் குடையோன்சேய் வீடுறைய அன்னேன்
தழுவுமிட மாலகத்தில் மனைக்கோள்விண்மணியும்
சத்தமத்தோ னுடனிருக்கத் தாரமிருவகையாம்
பழகுகுணன் இனியசொலன் பயிலதிகலயிலான்
பங்கமிலான் யிங்கிதலான் சங்கிதப்பிரியன்
அழகுடையான் வெகுபோகன் வயதெழுபதுடையான்
அரசர்புகழ் கண்ணனென அறைந்தனரின் றூலோர். ()

அட்டமத்திற் புகரிருக்கக் கேந்திரத்தில்அருணன்
அஞ்சேழு வொன்பதனில் ஆரல்கரிபானுந்
திட்டமாய் யுயிர்க்கதிபன் புகர்வீடேயாகத்
திங்கள்குரு மறையாகிப் பவர்களில்லமாகக்

சட்டமதாய் முதுமகனும் பாம்புடனேயிருந்தால்
சாற்றினர் கெணிவிதத்தால் பெரியோர்கள்மொழியால்
திட்டமுடன் மங்கலத்துக் கழிவுவருமென்றார்
திறமுடனே நாற்பதஞ்சு நால்தனிலேவொழியும். (கூசு அ)

ஒழியுமெனக் கெணிவிதத்தால் உரைத்தனர்கள்மேலோர்
ஒன்பதுநா லைம்பதனில் உரைத்திட்டார்வயது
அழிவுவரும் பாலகர்க்கு வரவரவேநாசம்
அதில்விலகும் மூன்றுதிரம் அறிவித்தார்நூலோர்
மொழிவுடனே வருங்கணவன் யோகமெனவுரைத்தார்
முப்பதஞ்சி லதியோகம் மொழிந்திட்டாரிவட்குத்
தெளிவுதலாய் வருங்கணவன் வீரியவானெனனும்
சேய்புருடன் உபயமதுஜெய மிகுவேற்கண்ணுய். (கூசுக)

அட்டமத்திற் குருவிருக்கக் குருவின்வீட்டில்
அரவமதி கரியுடனே யிருப்பதானுல்
நிட்டைபுரி மதிமகனுந் தன்வீடாக
ரெண்டினேன் கேதுடனே தனிப்பானுகில்
திட்டமுடன் உயிர்தனிலே வெள்ளிசேர்ந்தால்
திறமுடனே யிறப்பளவுஞ் செல்வமாகும்
சட்டமுடன் வயதுறைத்தார் கணிதநூலாற்
சதிருடனே அறுபதுநால் வயதுசாற்றே. (கூஎ0)

சாற்றிடவே வருங்கணவன் யோகஞ்சொல்வேன்
சற்குருதன் நிறமதுபோல் கணவன்சேரும்
மாற்றமுடன் அவன்றனக்கு நீரால்தத்து
மாயுமெனத் தெரிந்துரைத்தார் பெரியோர்வாய்மை
ஏற்றமுடன் வயதவற்கு அறுபத்தெட்டில்
யிசைவுடனே வருங்கணவன் நாசங்காட்டும்
பாத்திபர்போல் வாழ்வெனவே உரைத்தார்மேலோர்
பகர்மொழியால் அவள்கணவன் பாக்கியசாலி. (கூஎக)

கோதாய்கே ளட்டமத்தோன் சேய்புகர்மால்பொன்னன்
கூடியிக்கோ ளொன்றுகிக் குஜன்மதிமால்வீடாய்
மாதேகே ளட்டமமேழ் சுத்தமதாய்வருக
மாந்திகரி கொடுப்பாவர் வருமிடமேல்மறையால்

வேதாய்கே ளிப்படியே பிறந்திடுந்தன்கன்னி
விரைவுடனே யிருநாலுள் விதித்தனர்கள் மணநாள்
நீதான்கேள் மரணம்வரை மங்கலமேவளரும்
நிகழ்ச்சியமாய் எண்பதென நிகழ்த்தினர்கள்வயது. (கஎஉ)

மதிவீட்டில் மதியிருக்க உயிரோனுமொன்றாய்
வந்திடவே அவற்கிரண்டில் மால்கரிசேய்வருமால்
சதியுடனே யவற்குயெட்டிற் சற்குருகேதோடு
தரித்திடவே அக்கோளைச் சனிமதிமால்நோக்க
விதியுடனே யுதித்திடுந்தன் கன்னியுந்தன்கணவன்
விளங்கிடுவன் வெகுபாக்கியம் வேந்தர்நிகர்சதியாம்
அதிவிதியா லிப்படியே யோகமெனப்பின்னும்
அவன்வயது அஞ்சுபத்து அறிவுடனேவுரைத்தார். ()

மதிமகனு முயிரோனுய்க் கேந்திரமேவிடினும்
வரவவற்கு யேழ்தனிலே மதிபுகர்பொன்வருமால்
சதியுடனே கரிகேது ஆல்பரியுடனே
சாறுமிடம் பவர்மனையாய் மறைந்திடவேயிருக்கில்
விதியுடனே உதித்துவரும் கன்னியர்தன்மணநாள்
விதித்தனர்க ளிருமூன்று வயதுதனில்நடக்குங்
கெதிபெறவே வருங்கணவன் ராஜனெனமதிக்கக்
கெணிவிதத்தால் யிப்பலனை உரைத்தார்கள்மாதே. ()

மாதேகேள் வருங்கணவன் கேசரியாம்யோகம்
வகுத்தனர்கள் இப்பலனுய் வந்திடுமேவயது
கோதாய்கேள் கருவதனிற் பாக்கியமாந்தந்தைக்
குறித்தனர்கள் இப்பலனுய்க் கொண்டிடுமேபிலமாய்
வேதமொழி தவறுமல் உரைத்தனர்கள்கெணிதர்
விதியுடனே முப்பதெட்டாய் விதித்தனர்கள்வயதைச்
சாதகிதன் மரணம்வரை தனங்களிடுங்கையாள்
சாற்றினர்கள் பெரியோர்கள் மொழியெனவேஉரையே()

சூரியன்சேய் தொல்புகரோன் சூரியன்வீடேகித்
தோன்றிடமுன் பவனுகி உயிர்க்கோளன்பவனுய்க்
காரிமதி யுடன்சேர உயிர்க்கோளனுடனே
கருதுமுக்கோள் தனைச்சுபர்கள் கண்விழிப்பார்வையினுல்

சீருடன்சேய் பிறந்திடுவோர் ஆண்டதனிற்றந்தை
சேர்ந்திடுவன் பரதேசம் செப்புமெனவுரையே
கூறினர்கள் தந்தைபர தேசமதுசெல்வர்
குறித்தனர்கள் சேயொழியுங் குருசி வனுராணை. (கூஎசு)

வேறு.

மந்தனு முயிரிற்சேர வளரும்லக் கினத்துநாதன்
சந்திரன் ரவிபொன்னோடு சாரிடம் மறைவதாகில்
வந்துயிர் தனக்குமூன்றில் வக்கிரன் புகர்வந்துற்றால்
விந்தையாய் வரும்மாதற்கு விதித்தனர் வயதென்றோதே. (கூஎஎ)

ஓதிடும் வயதுநாற்பத் தஞ்சென உரைத்தார்மேலோர்
வேதமா யிராறொன்றில் விதித்தனர் கணவன்சேரும்
நீதமா யிருபத்தொன்றில் நேர்ந்திடும் புருடன்யோகம்
போதவே மரணமட்டும் பொங்கிடும் அதிகசெல்வம். (கூஎஅ)

காரியு மீறைந்துநீசங் கருதியபுகர்பாலோடு
சாரிட மறைவீடாகத் தரித்திட வுயிர்க்கோளுச்சம்
கூறியபெட்டோன் கேதுகுருகிட உபயஞ்சேர்ந்தால்
சீருடன் வயதுநாற்பத் தொன்றெனச் செலுத்துவீரே. (கூஎகூ)

வேறு.

அட்டமன்கரியாய் மாலவனுளனே அமர்ந்திடநீசமாயஞ்சில்,
திட்டமாய்க்குருவுஞ் சேயுடன்மாந்தி சேர்ந்திட வுயிர்க்குயெட்ட
தனில், சட்டமாய் மதியுங் கரிவீடதனிற் சார்ந்திடப் புகருமே
மீனந், திட்டமாய்வருனுஞ் சேய்திசையதனிற் செப்பினர் மரன
மென்றுரையே. (கூஅ0)

அட்டமன்புகராய்க் குருவுடன்ஊயிரில் அமர்ந்திடக் காரியுங்
குளிகன், திட்டமாயுயிர்க்குப் பத்திலே வரினுஞ் சேயுமே உயி
ரின்கோள்நாளாய்ச், சட்டமாய்க்கர்மன்மதிக்குகோணமதாய்தனி
த்திடப்பிறந்தசாதகற்கு, மட்டிலா தாறோன்திசைமுதற்செவ்வாய்
வரையென மதித்தினர்வயதை. (கூஅக)

மதித்தனர்வயதை கதிர்திசையதனில் வாய்த்திடும்பீடைகள
திகம், விதித்தனர்வயது ஆறெட்டிற்கண்டம் விளங்கிடும் வியாதி

யால்னேகந், துதித்தனர்பிலமாய்த்தோன்றிடுமென்றுசொல்லீனர் கணிதநூலத்னல், வகுத்தனர்சத்தி குமரவேள்தன்னைவணங்கிடத் தேய்ந்திடும்பிணியும். (கூஅஉ)

வேறு.

அட்டமத்தோன் கேந்திரமாய்க் குருதியொன்றாய்
அமர்ந்திடவே யதற்குடையோ னருக்கனேடு
திட்டமுடன் பவர்வீடா யுயிர்க்கொன்பானிற்
சேர்ந்திடவே கரிநீசந் தரிக்குமாகில்
சட்டமுடன் கேதுயிரோன் அருணனில்லஞ்
சார்ந்திடவே புகர்திசைநாள் தனதுவந்தால்
மட்டவிழ்சேர் மங்கலநாள் தரிக்குமங்கை
மாயுமென முப்பதுவாய் வரினுமாயுள். (கூஅங)

மந்தனும் யெட்டினேனும் வளருகேந் திரத்திலேறச்
சந்திர னுயிரோனுகிச் சாரிடம் பிலமாவானல்
வந்துயிர் தனக்கு அஞ்சோன் வருமிடம் உதயமானல்
சிந்தையாய் மாலோன் வந்தால் செத்திடும்வயதென்றேதே.(கூஅச)

ஓதுயிர்தனக்குநாலில் உயர்வுடன் குருவந்துற்றால்
வேதமாய்ப் பாம்புநாளில் விதித்தனர் உயற்சிஅற்பம்
போதவே குருநாள்வந்தால் புகழ்தன முயற்சிமேலாஞ்
சாதகன் றனக்குயோகஞ் சாற்றினர் மறைநாள்மட்டும்.. (கூஅரு)

விதியாக அட்டமத்தோன் சுபராகித்தோன்றி
வெய்யவன்வீடுற்றிடவே உயிர்க்கோளனுடனே
சதியாகக் காரிபுகர் வீடேகிப்பிலமாய்ச்
சாற்றிடவே மதிமகனும் மறையாமற்றனிக்க
மதியாகப் புகர்மறையா வருமாதர்மணநாள்
வகுத்திடுவார் வயதுபத்தார் வகுத்திடும் பாக்கியமாம்
நிதியாகத்தரணிதனில் அறைந்திடவேவயது
நிகழ்த்தினர்மால்காரிபுகர் கோர்ந்திடுஞ்சேய்தொகையாம்(

சதியாக அட்டமத்தோன் புகருடனேகூடிச்
சாருமிடம் மறையாமற் சுபர்மனையாய்வரவே
விதியாக உயிர்க்கோளன் கொடும்பாவருடனே
விளங்குமிடஞ் சுபர்மனையாய் மறைந்திடவந்திடுமால்

மதியேகேள் காரிஉயிர் தனக்கேழில்வருமால்
வருமாதர் மங்கள்நாள் மால்திசை வந்திடுகில்
விதியாக யிறப்பளவும் மங்கலந்தட்டாது
விதித்தனர்கள் பரிதிமதி குருவு தொகையுரையே.(கூஅஎ)

சூரியனும் மாலுடனே வோர்வீடேகித்
தோன்றுமிடம் பவர்வீடாய் உயிர்க்கெட்டாகக்
காரிசுபர் வீடேகி மறையாதாகில்
கருதுமக்கோள் தனைச்சுபர்கள் கண்விழிப் பார்வையினால்
கூறுமுயிர்க் கோளனுமெட் டோனுமதியுடனே
குறுகிடவே பவர்மனையாய்த் தரித்திடுஞ்சாதகற்குச்
சூரியனும் புகர்மாலும் மதிதிசைசேயாண்டு
தொகையெனவேசொல்லிடுவாய்மேலோர்கள்மொழியால்.

மாதேக ளேழோன்மால் நாலுயிர்க்கோளுடனே
வரினுமிடம் மறையாமற் சுபர்மனைவந்திடுமால்
கோதாய்க்கே ளட்டமத்தோன் சுபரோடுபாவர்
குறுகிடவே சுபர்மனையாய்ப் பவர்விழிபார்வையினால்
வேதாநீ அட்டமத்தில் வெள்ளிதனித்திடவே
விரைவுடனே வருமாதர் விதித்தனர்மங்கலநாள்
ஓதிடுவன் அட்டமத்தோன் றிசைதனிலென்றோத
உளமகிழவெகுநிதிக ளுரைத்தனர்மேலோர்கள். (கூஅகூ)

சூரியன்மால் காரியுடன் ஓர்வீடேகித்
தோன்றுமிடஞ் சுபர்வீடாய் மறையாமல் வருமால்
கூறுமுயிர் அட்டமத்திற் புகர்வரவே அக்கோள்
கொடியவனோ டுடன்சேர்ந்து சுபர்வீடாயிருக்கில்
சீருடனே அட்டமத்தோன் றிசைதனில்மங்கலநாள்
செப்பினர்கள் வருகணவன் சேர்ந்திடுமாண்டெனவே
கூறிடவே புகர்கரிமால் ஆரல்வருந்தொகையாய்க்
குறித்தனர்கள் வயதெனவே குறுகிடுஞ்சாதகற்கே.(கூகூ0)

வேறு.

மந்தனும்உயிரிற்சேர வளருங்கேந் திரத்துநாதன்
சந்திரன் ரவிபொன்னோடு சாரிடம்மறையாதாகில்

சிந்தையாய் உயிர்க்குமூன்றிற் சேர்ந்திடும் புகர்சேயானுல்
விந்தையா யீராறென்றில் விதித்தனர் கனவன்மாதே. (கூகூக)

மாதவர் கணிதநூலால் வகுத்தனர் யிருபத்தொண்மேல்
ஓதினுர் பூமிசெல்வம் உரைத்தனர் கணவன்யோகம்
போதவே அதிகமாகும் பொருந்திடும் அரவுநாளாய்
வேதமாய் நாற்பத்தாருய் விதித்தனர் வயதென்றேதே (கூகூஉ)

வேறு.

மதிமகனு முயிர்க்கோளய்ச் சேய்மறைவீடேகி
வரினுமுக்கோள் கரிபுகர்பான் வளர்கொடியோனுடனே
சதியுடனே உயிர்தனக்கு ஆறிருமூன்றெட்டாய்த்
தரித்திடவே மதிதனக்குச் சற்குருவொன்பதனில்
விதியுடன்மா தற்குவரும் மங்கலநாள்கருதில்
விதித்தனர்கள் பிலமாகி விளங்கிய நூல்மொழியாள்
அதிவிதியால் ஆயுள்விதி செப்பிடவேகணிதர்
அறைந்தனர்கள் பரிதிமதி பொன்றெகையென்றுரையே.

அட்டமாதிபனும் ஆயுள்காரகனும் அமர்ந்திட வுயிர்க்குயீரா றில், திட்டமாய் உயிர்க்கோள் மதிபனுயுச்சஞ் சேர்ந்திட மாந்தி பாம்புடனே, நிட்டைமால்கருமன் அலறியோடொன்றுய் நேர்ந்து யிர் தனக்கு யெட்டோன்முன், சட்டமாய்வளரும்மாதர்தன்வயது சார்ந்திடும் இருபத்தேழ்யிரட்டி. (கூகூழ)

முதுமகனும்உயிர்க்கோளும் எட்டின்கோளும்
முதியகரு மத்தோனும் ஓர்வீடேகிச்
சதியுடனே உயிர்தனக்கு நாலேழ்அஞ்சில்
தருகிடவே சுபர்வீடாய்ப் பவர்நோக்கில்லா
விதியுடனே வருமாதர் மணநாள்காரி
விளங்கிடவத் திசைதனிலே புகர்நாளுண்டாம்
மதியுடன் மங்கலம்நாசம் கரிநாள்போக்கில்
மாய்ந்திடுமே மாதருக்கு வயதைம்பத்தொன்றே. (கூகூடு)

வேறு.

அட்டமாதிபனுங் கேதுடன்கூடி அமர்ந்திடப் பவர்மனை யாகத், திட்டமாய்காரி மதிகதிருடனே சேரிடம் பணபரத்துறு

மால், சட்டமாய் உயிரோன் பாவர்வீடேகித் தரித்திடப் பாவர்வந் திடுகில், திட்டமாய்வயது பத்திரண்டென்று செப்பினர் சாதகன் றனக்கே. (கூகூசு)

ஓதினர்கள் மேலோர்கள் உரைத்தமொழியெனவே
ஒன்றுபத்து நாலதிலே உதித்திடுமேதாரம்
வேதமுடன் இருபதஞ்சில் தாய்மரணங்காட்டும்
விளங்குமிரு பத்திரண்டில் விதித்தனர்கள் தந்தை
சேதமென வுரைத்தனர்கள் மேலவர்கள்மொழியால்
சேய்வயது இருபதொன்றில் சேதமென்றார்தாரம்
நீதமுடன் பிறந்துவருஞ் சேயுடதன்பலனை
நிகழ்த்தினர்கள் யிப்பலனுய்நேரெனவே பெரியோர். ()

மதிதனக்குக் கேந்திரத்தில் குருவேகின்றால்
வரவவற்குக் கெஜமுடன்கே சரியாம்யோகம்
துதிபெருகோள் அரியாளி யதற்குமுன்னால்
தோன்றுகட கரிபோல வினைகளோடும்
அதிபதியாய் இவன்வயது யெழுபதுமட்டுண்டாம்
ஆகமசாஸ் திரவேத மாராய்வானென்னும்
பதியதனில் உரைத்திடலாம் யின்னம்வேண
பாக்கியங்கள் கொடுத்துநலம் பகருமாதே. (கூகூஅ)

மாதேகே ளிருவீடு ஓர்வீடாக
வரவவற்கு முன்பின்னுஞ் சுபரேநிற்கக்
கோதாய்கேள் யிருவீடுஞ் சுபர்வீடாயக்
கோளனுங்கேந் திரமாகிச் சுபர்வீடுற்றால்
வேதாய்கேள் தோன்றிடுஞ்சேய் வருநாள்தொட்டு
வேணநிதி க்ஷேத்திரங்கள் விளங்குந்தந்தை
மாதேகே ளிருவீடும் பவர்வீடாகி
வரினுமக்கோள் பவரோடு மறையுமாகில். (கூகூகூ)

மறையுமெனத் தோன்றிடுஞ்சேய் பலன்களெல்லாம்
வருஞ்சமனு யுதவிடுமே மாதேதந்தை
முறையுடனே பாக்கியமே சமனும்பூமி
மொழிந்தனர்கள் வயதுயிரு பதின்மேற்செல்வம்

விரைவுடனே சமபலனு யறைந்தார்மேலோர்
மேதினியிற் சாதகற்கு யிதுவிதியென்றேதே
மறைமதிசேய் திசைவருமால் பலன்மேலாகும்
வகுத்தனர்கள் பாக்கியமும் வருகுமேலாய். (கூ000)

சூரியனு முயிரோனுய்ச் சேய்புகர்வீடேகச்
சுங்கனுமால் வெள்ளியுடன் தொல்புகர்வீடாகக்
காரியுந்தான் கேதுடனே மதியோடொன்றுய்
கரியவன்மால் குருவீடாய் வருவதானுற்
சீர்பெறவே யுதித்துவருஞ் சேயுடதன்வயதைச்
செப்பினர்கள் பெண்பதொன்றுய்ச் சேருமுயிர்தனக்குப்
பாருலகி லிவன்றனக்கு மரணமதுவரைக்கும்
பகர்ந்தனர்கள் சிவியோகம் பலித்திடுமென்றேதே. ()

சாரதம்பாள் கிருபாகிடாக்ஷம்பெற்ற

சங்கராச்சாரியசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

ஆயுட்பாவகம்.

முற்றிற்று.